https://archive.org/details/@muthulakshmi_academy

# அஜய்ய விஜயீந்திரர்



ராஜா S. குருராஜாசார்யர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

Suyamee Raghavendra Krupashritham

Kamalesha Kusuma

Sahithya Samrajya - 158

# அஜய்ய விஜயீந்திரர்

*Author*

Sri Raghavendra Guruvamsha Bhooshanam

Saraswathi Kantabharanam

**Raja S Gururajacharya**

*Tamil Translation*

**V.S. Venkataramana Rao**

*Published by*

*Raja G. Sudheendhracharya*

**Sri Suyamee Raghavendra Research Centre**

Sahitya Samrajya Prakashana

Nanjangudu-Bangalore

**2019**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# Ajayya Vijayeendrar

*Authored by*
**Raja S Gururajacharya**

*Tamil Translation*
**V.S. Venkataramana Rao**

*Published by*
**Sri Suyamee Raghavendra Research Centre**
Sadhana, 213/D, 2nd B Cross, 2nd E Cross
Girinagar 1st Phase, Bangalore - 560 085
Ph : 99453 48633

Copy rights : Publisher

First Edition : 1995
Second Edition : 2014
Third Edition : 2019

Price : Rs. 200/- (Two hundred only)

Coverpage Design : **Gururaja**
**Driti Enterprise, Bangalore**

Printed at
**V.N. Printers**
Bangalore

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ಶ್ರೀಮೂಲರಾಮೋ ವಿಜಯತೇ



ಶ್ರೀಗುರುರಾಜೋ ವಿಜಯತೇ

ಶ್ರೀಮತ್ಪರಮಹಂಸ ಪರಿವ್ರಾಜಕಾಚಾರ್ಯ ಪದವಾಕ್ಯಪ್ರಮಾಣಪಾರಾವಾರಪಾರಂಗತ
ಸರ್ವತಂತ್ರಸ್ವತಂತ್ರ ಶ್ರೀಮದ್ವೈಷ್ಣವಸಿದ್ಧಾಂತಪ್ರತಿಷ್ಠಾಪನಾಚಾರ್ಯ
ಶ್ರೀಮನ್ಮೂಲರಘುಪತಿವೇದವ್ಯಾಸದೇವರದಿವ್ಯಶ್ರೀಪಾದಪದ್ಮಾರಾಧಕ
ಜಗದ್ಗುರುಶ್ರೀಮನ್ಮಧ್ವಾಚಾರ್ಯ ಮೂಲಮಹಾಸಂಸ್ಥಾನಾಧೀಶ್ವರರಾದ
ಶ್ರೀರಾಘವೇಂದ್ರಸ್ವಾಮಿಗಳವರಮಠದ ವೇದಾಂತಸಾಮ್ರಾಜ್ಯ ದಿಗ್ವಿಜಯವಿದ್ಯಾಸಿಂಹಾಸನಾಧೀಶ್ವರರಾದ
108 ಶ್ರೀಮತ್ಸುಶಮೀಂದ್ರತೀರ್ಥ ಶ್ರೀಪಾದಂಗಳವರ ಕರಕಮಲಸಂಜಾತರಾದ
108 ಶ್ರೀಮತ್ಸುಯತೀಂದ್ರತೀರ್ಥ ಶ್ರೀಪಾದಂಗಳವರ ವರಕುಮಾರಕರಾದ

# 108 ಶ್ರೀಮತ್ಸುಬುಧೇಂದ್ರತೀರ್ಥ ಶ್ರೀಪಾದಂಗಳವರು

## ಅನುಗ್ರಹ ಸಂದೇಶ

ಶ್ರೀಜಯನಾಮ ಸಂವತ್ಸರ ಉತ್ತರಾಯಣ ಗ್ರೀಷ್ಮ ಋತು ಜ್ಯೇಷ್ಠ ಮಾಸ ಶುಕ್ಲ ಪಕ್ಷ ಪಂಚಮಿ ಸೋಮವಾರ ದಿನಾಂಕ:02.06.14

ನಮ್ಮ ಶ್ರೀಮಠದ ಪೂರ್ವೀಕ ಗುರುಗಳಾದ ಹಾಗೂ ಶ್ರೀರಾಘವೇಂದ್ರಸ್ವಾಮಿಗಳವರ ಪರಮಗುರುಗಳೂ ಆದ, ಶ್ರೀವಿಜಯೀಂದ್ರತೀರ್ಥರು ಮಹಾಜ್ಞಾನಿಗಳು 64 ಕಲಾಪೂರ್ಣರೂ, ಆಗಿದ್ದರು 104 ಗ್ರಂಥಗಳನ್ನು ರಚಿಸಿ, ಸಾರಸ್ವತ ಪ್ರಪಂಚದಲ್ಲಿ ಒಂದು ದಾಖಲೆಯನ್ನು ನಿರ್ಮಿಸಿದ್ದರು. ಅಪ್ಪಯ್ಯ ದೀಕ್ಷಿತರಂತಹ ಮೇಧಾವಿ ವಿದ್ವಾಂಸರನ್ನು ಗೆದ್ದು ಅಜಯ್ಯರಾಗಿದ್ದರು. ಹೀಗೆ ತಾತ್ಕಾಲೀನ ಎಲ್ಲಾ ರಾಜಾಧಿರಾಜರುಗಳಿಂದ, ವಿದ್ವಾಂಸರುಗಳಿಂದ ಪೂಜ್ಯರಾದ ಇವರ ಬಗ್ಗೆ ಹೇಳುವುದು. ಬರೆಯುವುದು ಎಂದಾದರೆ, ಅದು ಅವರ ಅನುಗ್ರಹವಿದ್ದರೆ ಸಾಧ್ಯ ಎಂಬುವುದರಲ್ಲಿ ಎರಡನೇ ಮಾತಿಲ್ಲ. ಅಂತಹ ಶ್ರೀವಿಜಯೀಂದ್ರತೀರ್ಥರ ಚರಿತ್ರೆ ಮಹಿಮೆಯ ಪಾಂಡಿತ್ಯವನ್ನು ಸಾರುವ "ಅಜಯ್ಯವಿಜಯೀಂದ್ರರು" ಎಂಬ ಗದ್ಯಕಾವ್ಯವನ್ನು ನಮ್ಮ ಶ್ರೀಮಠದ ಪೂರ್ವೀಕ ಗುರುಗಳಾದ ಶ್ರೀಸುಯಮೀಂದ್ರತೀರ್ಥರ ಪೂರ್ವಾಶ್ರಮದ ಪುತ್ರರಾದ ವಿದ್ಯಾವಾಚಸ್ಪತಿ ರಾಜಾ ಎಸ್ ಗುರುರಾಜಾಚಾರ್ಯರು ರಚಿಸಿರುತ್ತಾರೆ. ಅಭೂತಪೂರ್ವ ವಾಕ್ಯ ರಚನೆಯಲ್ಲಿ ರಚಿಸಿದ ಈ ಕೃತಿಯು ಶ್ರೀವಿಜಯೀಂದ್ರತೀರ್ಥರ ಸಮಗ್ರ ಚರಿತ್ರೆಯನ್ನು ತಿಳಿಸುವುದರಲ್ಲಿ ಕೈಗನ್ನಡಿಯಂತೆ ಇದೆ. ಪ್ರಕೃತ ಇದರ 15ನೇಯ ಕನ್ನಡ ಆವೃತಿಯನ್ನು ಶ್ರೀಸುಯಮೀ-ರಾಘವೇಂದ್ರ ಪ್ರತಿಷ್ಠಾನದಿಂದ ಮುದ್ರಿಸಿ ಪ್ರಕಾಶನಗೊಳಿಸುತ್ತಿರುವುದನ್ನು ನೋಡಿದರೆ, ಇದರ ಜನಪ್ರಿಯತೆ ಎಷ್ಟಿದೆ ಎಂದು ತಿಳಿದು ಬರುತ್ತದೆ. ಹಾಗೇನೆ ಇದರ ತಮಿಳಿನ ಅನುವಾದವನ್ನು ವೆಂಕಟರಮಣರಾವ್ ಅವರು ಮಾಡಿರುತ್ತಾರೆ. ಅದರ 2ನೇ ಆವೃತ್ತಿಯನ್ನು ಹೀಗೆ 2 ಕೃತಿಗಳನ್ನು ಪ್ರಾತಃಸ್ಮರಣೀಯರಾದ ಶ್ರೀವಿಜಯೀಂದ್ರತೀರ್ಥರ 400ನೇ ವರ್ಷದ ಆರಾಧನಾ ಸಂದರ್ಭದಲ್ಲಿ ಬಿಡುಗಡೆಗೊಳಿಸುತ್ತಿರುವುದನ್ನು ಕೇಳಿ ತುಂಬಾ ಸಂತಸವಾಗಿದೆ. ಪ್ರಕಾಶಕರಾದ ರಾಜಾ ಜಿ ಸುಧೀಂದ್ರಾಚಾರ್ಯರಿಗೆ, ಹಾಗೂ ತಮಿಳು ಅನುವಾದಕರಾದ ವೆಂಕಟರಮಣರಾವ್ ಇವರಿಗೂ ಇಂತಹ ಸಾರಸ್ವತ ಸೇವೆಯಲ್ಲಿ ತೊಡಗುವ ಶಕ್ತಿಯನ್ನು ದಯಪಾಲಿಸಲೆಂದು ಅಸ್ಮದ್ಗುರ್ವಂತರ್ಗತ ಶ್ರೀಮದ್ರಾಘವೇಂದ್ರತೀರ್ಥ ಗುರ್ವಂತರ್ಗತ ಭಾರತೀರಮಣ ಮುಖ್ಯಪ್ರಾಣಾಂತರ್ಗತ ಶ್ರೀಮೂಲರಘುಪತಿ ವೇದವ್ಯಾಸದೇವರಲ್ಲಿ ಪ್ರಾರ್ಥಿಸುತ್ತೇವೆ.

ಇತಿ ನಾರಾಯಣ ಸ್ಮರಣೆಗಳು

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# Acknowledgement

It is needless to say that, by the supreme grace of Lord Hari-Vayu and Sri Raghavendra Yati, So too, by the blessing of the great patrons of our Research Center - Paramapujya Sri Suyamindratirtha, Sujayindratirtha, Sushamindra tirtha, Suyamindratirtha, Sujayindratirtha, Sushamindratirtha, Suyatindratirtha and Sri Subudhendratirtha who at present has adorned the Peetha - Our Research Institute has contributed many valuable works on Dvaita Vedanta to the world of Goddess Saraswati, Hence, let there be our devote pranamas to all these great personalities.

We prefer our salutations with firm devotion to Sri 108 Sri Subudhendratirtha who blessed us by publishing this book together with this message too, we offer the salutations to Sri Raja S. Gururajacharya who made Sri Vijayindratirtha, dwelling in the hearts thousands of devotees by contributing the work **"Ajayya Vijayindraru"** establishing grandeous personality of Vijayindratirtha.

All these good works are before the readless due to my great father Sri Raja, Shri Vendugopalacharya my father - Raja Shri Gururajacharya and younger father - Raja Shri Lakshminarayanacharya. Hence we offer our salutation to them.

Further, our heart - felt thanks to Sri Huli Pavamanacharya who translated **"Ajayya Vijayindraru"** into English, and made popular all over. So too our thanks Shri Vankataramanacharya who translated it into Tamil our thanks to Chalapathi of V.N. Printers, printed the Tamil version of the same, we hope, this work will be well received by all at large.

**Aradhana Mahotsava**
**of Sri Vijayeendra Theertha**
**(30-06-2019) Kumbhakonum**

Charana Sevaka of Gururajaru
**Sri Syyami Raghavendra**
**Samshodhana Kendra**
**Nanjanagud - Bangalore.**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# ரஸிக சைலியின் அழகு பொருந்திய க்ரந்தம் அஜய்ய விஜயீந்திரர்

(ஸ்ரீராஜா குருராஜாசார்யரின் "அஜய்ய விஜயீந்திரர்" க்ரந்தத்தை தக்ஷிண பாரதத்தின் பிரமுக கன்னடம் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்கள் விமரிசனம் செய்து பாராட்டியுள்ளன. இங்கு பெங்களூரின், "ப்ரஜாவாணி" நாளிதழ். 24-1-71 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று செய்துள்ள விமரிசனத்தை ஸஜ்ஜனர்களின் சந்தோஷத்திற்காக வெளியிடுகிறோம். -வெளியிடுபவர்)

நம் முன்னோர்களின் ஸாஹித்ய ரசனையில் வரலாறு சம்மந்தமான க்ரந்தங்களுக்கு அவ்வளவாகக் கௌரவம் கிடையாது. தார்மிக க்ஷேத்திரத்திலும் கூட மதப்ரவர்த்தக ஆசார்யரான ஸ்ரீசங்கர, ஸ்ரீராமானுஜ, ஸ்ரீமத்வர் முதலானவர்களின், "திக்விஜய காவ்ய"ங்கள், வரலாற்று விருத்தாந்தத்தை விட பக்தி உணர்வு மற்றும் தனி'''...வரின் புகழுக்கு அதிக மகத்துவம் அளிக்கின்றன. ஆயினும் ஒவ்வொரு சம்ப்ரதாயத்திலும், காலாகாலங்களில் மடாதிபத்யம் வகித்து, மக்களுக்கு தர்மநெறிச்செய்திகள் அனுப்பி, பாண்டித்யத்தைக் காண்பித்த மஹாத்மாக்களின் எண்ணிக்கை குறைந்ததல்ல. வேதாந்ததேசிகர், அப்பய்ய தீக்ஷிதர், விஜயீந்திர தீர்த்தர் முதலான இந்த் மஹானுபாவர்களின் உத்தம க்ரந்தங்கள் இன்றைக்கும் கிடைத்துள்ளன. உண்மை. ஆனால், அவைகளைப்படித்துப் புரிந்து கொள்ளும் பாண்டித்யத்திற்கு ஹானி ஏற்பட்டுள்ளது.

சாஸ்திர க்ரந்தங்களைப் பூர்ணமாக, நல்லமுறையில் படித்து ஆனந்தமடைய முடியாதவருக்கும் முன்காலத் தலைமுறையின் பண்டிதர்கள் அந்தந்த மஹான்களின் மகிமையை மனதில் படும்படி எவ்வளவோ புராணக்கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தனர்!


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அவைகளெல்லாம் இன்று, "[illegible]" என்னும் நிலைமைக்கு வருகின்றன. தொல்பொருளாராய்ச்சித் துறையினர் தாமிர சாஸனங்கள், கல்வெட்டுகள் விவரமாக எடுத்துக் காண்பித்திருந்தாலும் அவை சாதாரண மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஒவ்வொரு மடத்திலும் பரம்பரையாக வந்துள்ள தாமிர சாஸனங்கள், கல்வெட்டுக்கள் வித்வான்களுக்கும் கூடக்கிடைப்பது கடினமாயுள்ளது.

இப்பேர்ப்பட்ட விசேஷமான முந்தின நிலைமையில் இந்த க்ரந்தத்தை (அஜய்ய விஜயீந்திரர்) என்னும் க்ரந்தத்தைப் பார்க்க வேண்டும். பண்டிதச்ரேஷ்டரான க்ரந்தாசிரியர் அநேக வருஷங்கள் அத்யயனம், பாடம் கற்பித்தல், சிந்தனை, மற்றும் ஆராய்ச்சியின் பலனை ஒரு வசிகரமான, ரஸமான, வாழ்க்கை வரலாற்று உருவத்தில் கோர்வையாக இந்த மாபெரும் க்ரந்தத்தை வெளிக் கொணர்ந்துள்ளார். ஸ்ரீமத்வாசார்யரின் பரம்பரையில் ஸ்ரீவ்யாஸ ராஜருக்குப் பிறகு கி.பி.1517லிருந்து 1614 வரை தீர்க்காயஸுடன் வாழ்ந்த ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் இயற்றிய உன்னதமான கிரந்தங்களினாலும், காண்பித்த அதிசயச் செயல்களாலும் பண்டித-பாமரர் யாவரையும் ப்ரவசமடையச் செய்து, த்வைத சாம்ராஜ்யத்தை இடையூறின்றி ஸ்தாபித்தாரென்பது இந்த நூலின் முக்கிய விஷயமாக உள்ளது. இவர் கன்னடிகராயினும் தமிழ்நாட்டின் கும்பகோணத்தைத் தமது கார்யக்ஷேத்திரமாக்கிக் கொண்டிருந்தவர்.

இந்த க்ரந்தத்தில் பண்டிதர்கள் மாத்திரம் க்ரஹித்துக் கொள்ள முடிகின்ற கடினமானதும் வாதக்ரஸ்த கண்டனம்-மண்டனம் (ஸமர்த்தனம்) இவைகளுக்கு மாத்திரம் இடம் கொடுக்கவில்லை, லோக ரஞ்சகமான பற்பல க்ஷேத்ர தரிசனம், பகவத் ஸங்கீர்த்தனம், 64 கலைகளில் காண்பிக்கப்பட்ட திறமை, ராஜநீதி, விதவிதமான அற்புதங்கள், விதவிதமான வித்யாவைபவங்கள் முதலான விஷயங்களுக்கும் வேண்டிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் வரலாற்றின் கற்பனைத் திறனின் பலனாக பாத்திரங்களெல்லாம் உயிருடன் உருவம் எடுத்து நம் கண்முன்னால் சுற்றுவதைப்போலும் அறிமுகமானவர்களைப் போல் தோன்றுகின்றனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

இவைகளில் அநேக கட்டுக்கதைகளும் சேர்ந்திருக்கலாம். சில கற்பனைகள் வந்திருக்கலாம்; ஆனால், மூல பூதமான வரலாற்றுத் தத்வத்திற்கு தோஷம் எதுவும் வரவில்லை. அப்பய்ய தீக்ஷிதரைப் போன்ற மஹாபண்டிதர் தோல்வியுற்றாரென்று எழுதினால் யாரும் கோபமடைவதற்குக் காரணமில்லை. பண்டிதரின் வாக்யார்த்தத்தை அறிந்தவர்களுக்கு, வாதத்தின் வெற்றி-தோல்விகள் ஸித்தாந்தத்தின் குறைபாட்டை விட அதிகமாக வாதிகளின் ஸ்பூர்த்தி (inspiration) யைப் பொறுத்துள்ளது என்பது தெரிந்ததே. பண்டித வர்கத்தவர்களில் மாத்திரம் காணப்படும் எவ்வளவோ ஸ்வாரஸ்யமான சந்தர்ப்பங்களை இந்த க்ரந்தமானது தன்னுள் கொண்டிருப்பது ஒரு கடந்துபோன யுகத்தின் கலாச்சாரத்தின் வாயிலையே திறந்தாற்போலுள்ளது.

இதில் மனதைக்கவரும் விவரங்கள் உள்ளன; நமது நாட்டின் வெவ்வேறு தர்ம மார்க்கங்களின் முறை நீதிகளின் வர்ணனையுள்ளது. மதப்பற்று, ஆஸ்திகம், வாழ்க்கையின் நிஷ்டை-நியமங்களைக் கடைப்பிடிக்கும் நடைமுறையுள்ளது. நமது கலாச்சாரத்தின் மீது பெருமை கொள்ளுபவர் களெல்லோரும் அவசியம் படிக்கவேண்டிய க்ரந்தம். படிக்க ஆரம்பித்தால் முடியும் வரையில் கீழே வைக்க மாட்டார்களென்று நமக்கு நம்பிக்கையுள்ளது. கடந்ததை நிகழும் விஷயமாகச் சித்தரிக்கும் ஆசிரியரின் ரஸிக நடையே அப்படிப்பட்டது. இதிஹாஸத்தின் காதம்பரியின் ஸ்வாரஸ்யம், வேதாந்தவாத நீர்வீழ்ச்சியின் (ப்ரவாஹத்தின்) கோலாகலம் இரண்டும் ஒன்றாகி இந்த எழுபது அத்யாயங்க்ளைக் கொண்ட க்ரந்தத்திற்கு தனதேயான சோபையைக் கொடுத்துள்ளது.

கே. க்ருஷ்ணமூர்த்தி
(Dr. கேரளாபுரம் க்ருஷ்ணமூர்த்தி)



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# அஜய்ய விஜயீந்திரர்


| அத்யாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | இரண்டு மஹாயோகிகளின் சந்திப்பு | - 1 |
| 2. | த்வைத பீடம் மற்றும் விஷ்ணு தீர்த்தரின் சரித்திரம் | - 9 |
| 3. | விஷ்ணுதீர்த்தர் விஜயீந்திரராகத் திகழ்ந்தார் | - 14 |
| 4. | விஜயீந்திரரின் வெற்றி | - 15 |
| 5. | ஞானிகளின் சரஸ கோஷ்டி | - 21 |
| 6. | ஸ்ரீவ்யாஸ ராஜரின் ஹிதோபதேசம் | 25 |
| 7. | குரு-சிஷ்யர்கள் விடைபெறுதல் | - 29 |
| 8. | காஞ்சிபுர திக்விஜயம் | - 32 |
| 9. | கன்னட நாட்டின் திக்விஜயம் | - 41 |
| 10. | கோலாரில் ஸ்ரீ ஆஞ்சநேயர் ப்ரதிஷ்டை | - 42 |
| 11. | குரு-சிஷ்யர்கள் சந்திப்பு | - 45 |
| 12. | ஆமோத க்ரந்தந்திற்காக வ்யாஸ முனிவரின் ஆசீர்வாதம் | - 48 |
| 13. | குருஸேவையில் ஈடுபாடு | - 51 |
| 14. | ஸுரேந்திர தீர்த்தரின் இரண்டாவது தீர்த்தயாத்திரை | - 53 |
| 15. | வ்யாஸராஜர் வைகுண்ட ப்ராப்தி | - 55 |
| 16. | க்ரந்தம் இயற்றுதல், ஸஞ்சாரம் ஸுரேந்திரரின் வருகை | - 57 |
| 17. | திக்விஜய யாத்திரை | - 60 |
| 18. | தேவியின் அபயம் | - 62 |
| 19. | கும்பகோணத்திற்கு ப்ரயாணம் | - 64 |
| 20. | மந்திர சக்தியின் பெருமை | - 66 |
| 21. | சரித்திர ப்ரஸித்தி பெற்ற வாக்யார்த்தம் (வாத-விவாதம்) | - 68 |


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

22. விஜயலக்ஷ்மி விஜயீந்திரருக்கு அனுக்ரஹம் செய்தாள் - 93
23. சைவமடம் வசமாயிற்று, மற்றும் ஸகல ஆலயங்களுக்கும் அதிபதியாதல். - 100
24. ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு (இலக்கியத்திற்கு) விஜயீந்திரரின் நன்கொடை - 110
25. வித்யா பீடம் நிறுவுதல் - 113
26. ரத்னாபிஷேகம் - 121
27. மாந்திரீகன் சரணடைதல் - 134
28. அறுபத்தி நான்கு கலைகளில் வல்லமை - 142
29. டொம்பக் கூத்தாடியின் தோல்வி - 144
30. சிற்பகலைத் திறமை - 149
31. வேசியின் தோல்வி - 154
32. பௌத்தவாதிகளை வென்றது - 160
33. இந்திரிய நிக்ரஹத்தின் ரகசியம் - 168
34. ஜிதேந்திரிய விஜயீந்திரர் - 174
35. அற்புத கலா வல்லமை - 185
36. ஸாம்ராஜ்யத்தின் நலம் விரும்புபவர் - 192
37. ராமராஜருக்கு ஹிதோபதேசமும் மற்றும் விஜயநகரத்திலிருந்து புறப்பட்டுச் செல்லுதல் - 200
38. ரிஷபம் ஹனுமானானது - 209
39. ஸங்கீத கலைத்திறமை கானமார்த்தாண்டனின் தோல்வி - 217
40. பட்டோஜி தீக்ஷிதருடன் வாதமும் வெற்றியும் - 226
41. உடுப்பி யாத்திரை - 234
42. விஜயநகரத்தின் வீழ்ச்சி - 242
43. பட்டு நூல் நெசவாளியின் தோல்வி - 246
44. வித்வான்கள், பண்டித மணிகளுக்கு அண்டக்கலமளித்தல் - 251

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


45. விக்ரஹ நிக்ரஹரின் தோல்வி - 257

46. அப்பய்ய தீக்ஷிதருடன் சந்திப்பு - 265

47. முதல் கோணல் முற்றும் கோணல் - 268

48. வரலாற்றிலேயே பெயர்பெற்ற த்வைத - அத்வைத வாதம் - 275

49. த்வைத விஜய துந்துபி முழங்கியது - 316

50. ஸர்ப்பத்துடன் ஸரஸம் - 327

51. णत्वं परं बाधते । (ணத்வம் பரம் பாததே) - 337

52. வ்யாகரண சாஸ்திரத்தில் நிபுணத்வம் - 342

53. எதிர்காலத்தில் நிகழப்போகும் சம்பவத்தை முன்பே சொல்லும் திறமை - 355

54. ஸாரஸ்வத தர்ம பீட ஸ்தாபனாசார்யர் - 362

55. வைணிக விஜயம் (வீணைவாசிப்பில் வெற்றி) - 371

56. விஷம் குடித்து விஜயமடைதல் - 385

57. ஆகர்ஷண வித்தையில் திறமை - 400

58. அமானுஷ அற்புதம் (Miracle) - 408

59. புதிய ஜகத்குரு - 413

60. ராஜஸன்மானம்-வித்வஜ்ஜன ரக்ஷணை - 419

61. ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் நிர்யாணமும் (முக்தி) ஸுதீந்திர தீர்த்தரின் அபிவ்ருத்தி - 426

62. பண்டித போஷணம் (ஆதரவு) - 439

63. ப்ராரப்த கர்மபோகம் - 451

64. காலச் சக்கரம் சுழன்றது - 457

65. சிம்ஹகிசோர (இளஞ்சிங்கம்) - 468

66. நண்பகலிலேயே சூரியனை மறைந்தான் - 479

67. ஸ்ரீஸுதீந்திரருக்கு மஹா ஸமஸ்தானாதிபத்யம் - 495

68. விஜயீந்திரரின் உபதேசம் - 505




CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

69. அவதாரத்தின் ஸமாப்தி - 516

70. (உபஸம்ஹாரம்) முடிவுரை - 521

அனுபந்தம்-1 - 522

ஸ்ரீவிஜயீந்திரரின் தனிச்சிறப்பு

அனுபந்தம்-2 - 528

1. ஸ்ரீவிஜயீந்திரரின் காலம்
2. ஸ்ரீவிஜயீந்திரரின் கார்யக்ஷேத்ரம்
3. சமகாலத்திய பரவாதிகளும் பண்டிதர்களும்
4. சமகாலத்திய பீடாதிபதிகள்
5. அன்றைய ராஜ்யங்கள்
6. சமகாலத்திய அரசர்களும் சக்ரவர்த்திகளும்

அனுபந்தம்-3 - 533

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் நூல்கள்

அனுபந்தம்-4 - 543

1. ஸ்ரீவிஜயீந்திர கத்யம்
2. ஸ்ரீவிஜயீந்திர ஸ்தோத்ரம்
3. ஸ்ரீவிஜயீந்திர மஹிமாதர்சம் (தேவருநாமகளு)
4. ஸ்ரீவிஜயீந்திரருக்கு நினைவுச் சின்னத்தின் அவசியம்
5. புஸ்தக விஞ்ஞானம் (Bibliography)
6. 64 கலைகள் விவரம்
7. விஜயீந்திர அஷ்டோத்தரசத நாமாளி
8. விஜயீந்திரமங்களாஷ்டகம்



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



## பிரசுரகர்த்தரின் முன்னுரை

**श्रीमदानंदतीर्थीय सच्चावस्त्राच्छास्त्रायः।**
**श्रीमत्मरिकोनाम भाति प्रकटनालयः॥**

வெகுநாட்களாக ஸஜ்ஜனர்கள் வெகு குதூஹலத்துடன் எதிர்பார்த்திருந்த, பாரத கலாசாரத்தின் சின்னம் என்று பெயர் பெற்ற ஜகத்குரு ஸ்ரீமத்விஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் திக்விஜய பரம்பரையுடன் கூடின, மங்களகரமான அமர சரித உபந்யாஸரூபமான "அஜய்ய விஜயீந்திரரு" என்னும் நிகரற்ற மஹத்தான க்ரந்தத்திற்கும் நமது பிரசுர மந்திரத்தின் ஸ்தாபனத்திற்கும் மூல காரணரும், ஸாம்ராட் போஷகரும், பிரேரக சக்தியுமாகியிருந்த பரம பூஜ்ய மாபெரும் கீர்த்தி உள்ள ஸ்ரீமத் ஸுயமீந்த்ர தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் மஹா ஸமாராதனை மங்கள மகோற்சவ சந்தர்ப்பத்தில் அந்த மஹனீயரின் பரமப்ரீதிக்குறிய வரகுமாரரும், ஜகத்குரு ஸ்ரீமன்மத்வாசார்ய முக்யஸமஸ்தானாதிபதி ஸ்ரீராகவேந்தர ஸ்வாமிகளவரின் மடத்து வேதாந்த ஸாம்ராஜ்ய திக்விஜய வித்யா ஸிம்மாஸனாதீச்வரரும், வைதிக வித்யர ப்ரஸார பத்தராதரரும், நமது ப்ரகாசன மந்திரத்தின் ஸம்ராட் போஷகரும் ஆன பரம பூஜ்ய ஸ்ரீமத்ஸுஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் அம்ருதஹஸ்தத்தினால் ஆரம்பித்து ப்ரகாசனம் செய்து வித்வஜ்ஜனங்கள் மற்றும் தர்மாபிமானிகளுமான ஸஜ்ஜனருக்கு அளிப்பது பரமானந்தத்திற்குரியது. நமது ப்ரார்த்தனைப்படி இந்த மஹா க்ரந்தத்தைப் பிரசுரிக்க உத்தரவளித்து பிரசுரப்படுத்தி, நம்மீது பரமானுக்ரஹம் செய்துள்ள பூஜ்ய ஸ்ரீமத்ஸுஜயீந்த்ர தீர்த்த ஸ்ரீபாதங்களவருக்கு நமது அனந்த ப்ரணாமங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

ப்ரகாசன மந்திரத்தின் ப்ரதான பத்திரிகையான "பரிமள"த்தில் ஐந்தாறு வருஷகாலம் தொடர்ச்சியாக ஸ்ரீவிஜயீந்திர சரிதையை "वृंदमंदिर कंद" என்னும் பெயரினால் எழுதிக் கொண்டிருந்த வித்யா வாசஸ்பதி, வித்யாவைபவ, சிரோமணி, ஸாஹித்யாலங்கார கவிதிலக முதலிய விருதுகளைப் பெற்ற ஸ்ரீராஜாகுருராஜாசார்யர் பண்டிதர்கள், தார்மிகர்களின் கோரிக்கைப் பிரகாரம் அநேக



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வர்ஷகால ஆராய்ச்சி, விஷயப்ரமாண க்ரந்தங்கள் முதலியவைகளைத் தேர்ந்து எடுத்து பரிசிலனை செய்து அயராது உழைத்து ஸ்ரீமடத்தின் மற்றும் வேறு கிடைத்த எல்லா அத்தாட்சிகளின்படி விமரிசையுடன் இயற்றியுள்ள "அஜய்ய விஜயீந்திரர்" என்னும் இந்த மாபெரும் க்ரந்தம் வித்வத் ப்ரபஞ்சத்திற்குச் சிறப்பாக மாத்வ ஸாஹித்ய பொக்கிஷத்திற்கு அபூர்வ காணிக்கையாக உள்ளது என்பதை இந்தக் கிரந்தத்தைப் பரிசிலித்த வித்வன் மணிகளின், விமர்சகர்களின், ஸாஹித்யகர்த்தாக்களின் அபிப்ராயமாக உள்ளது. இப்பேர்ப்பட்ட உத்தம க்ருதியை நமது ப்ரகாசன மந்திரத்தின் புதிய மாலையான, "ஸு"யமீந்த்ரமாலா"வின் நான்காவது புஷ்பமாக ப்ரசுரிப்பதற்கு வாய்ப்பளித்து உபகாரம் செய்த ஸ்ரீயுத ஆசார்யருக்கு நாம் மிக்க நன்றியுள்ளவராக இருக்கிறோம்.

இடம்:

ஸ்ரீமந்த்ராலயக்ஷேத்ரம்,
புஷ்யக்ரு ஸௌம்ய
த்விதியா, தேதி:9-1-1970.

வித்வஜ்ஜன விதேயர்,

ப்ரசுரகர்த்தா,
ஸ்ரீபரிமளப்ரகாசனம் மற்றும்
ஆராய்ச்சி மந்திரம்.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீ குருராஜோ விஜயதே

# அஜய்ய விஜயீந்திரர்

## முகவுரை

வித்யாரத்னம் வித்யாபூஷண

திரு. ஆர்.எஸ். ராகவேந்த்ராசார்ய பஞ்சமுகி, M.A.,

தார்வாட்

ஸாக்ஷாத் நாராயணின் அவதாரமான ஸ்ரீ வேதவ்யாஸருக்கு க்ஞான காரியத்தில் ப்ரதமாங்கரான வாயு பகவானின் அவதாரரான ஸ்ரீமத்வாசார்யர் அன்யபாஷ்யகாரர்களின் விபரீத உபதேசத்தினால் அடங்கிக்கிடந்த பாதராயணரின் ஸித்தாந்தத்தை குருவின் ஆணைப்படி ப்ரம்ம ஸுத்ரங்களுக்கு பாஷ்யங்களை இயற்றி அபார்த்தங்களை நிராகரித்து பரிசுத்தமான வைதிக த்வைத ஸித்தாந்தத்தை ப்ரதிஷ்டை செய்தார். ஸ்ரீஹரி ஸர்வ குணபூர்ணன், ஸர்வோத்தமன், ஜகத்தின் ஸ்ருஷ்டி முதலிய அஷ்டகர்த்தா! அநந்தா நந்த அவதாரங்களினால் "स्वक्षे हि चेतन गणान् सुख दुःख मध्य संप्राप्रये तनुभृतां विहतिं ममेच्छन्" (म.ता.नि-1) என்ற பிரகாரம், அந்தந்த ஜீவனுக்கு யோக்ய கதியை கொடுத்து விஹாரம் செய்பவன். சேதனா சேதனாத்மகமான ஜகத்து தாரதம்யத்தினால் பாரமார்த்திக ஸத்யமாகி உள்ளது. ஸ்ரீஹரியே ஸர்வ ஜகந்நியாமகன். அவருடைய ப்ரஸாதத்தினால் பந்தனமாயுள்ள ஜீவர்கள் ஸம்ஸார பந்தனத்திலிருந்து முக்தரராவார்கள். அதற்கு பக்திதான் உத்தமமான ஸாதனம். இந்தப்ரமேயங்களினால் அபாதிதமான த்வைத ஸித்தாந்தத்தை உபதேசித்தார். அவர் இயற்றிய மூல முப்பத்தேழு க்ரந்தங்களின் கருத்தை அவருடைய சாக்ஷாத் சிஷ்யரான ஸந்யாஸிகளும் க்ருஹஸ்தாச்ரமிகளும் வெகு சிரத்தையுடன் ஜகத்தில் ப்ரசாரம் செய்தனர். க்ருஹஸ்தாச்ரமிகளில் ஸ்ரீ த்ரிவிக்ரம பண்டிதாசார்யரே முதலானவர், அக்ரகண்யர், ஸந்யாஸிகளில் ஸ்ரீபத்மநாப தீர்த்த, நரஹரி தீர்த்த, மாதவ தீர்த்த, அக்ஷோப்யதீர்த்தர் குருஸேவா நிரதர்களாய் ஜகத்தில் மத்வ ஸித்தாந்தத்தை ப்ரசாரம் செய்தனர். ஸ்ரீஅக்ஷோப்ய தீர்த்தரின் அன்புக்குப் பாத்திரரான சிஷ்யரான ஸ்ரீ ஜயதீர்த்த முனிபுங்கவர் ஆசார்யரின் க்ரந்தங்களுக்கு வ்யாக்யானங்களை எழுதி டீகாசார்யரென்று



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ப்ரஸித்தரானார். இவரது பரம்பரையில் நம் கதாநாயகரான ஸ்ரீவிஜயீந்திரர் கியாதி பெற்றார். அவருடைய பரம்பரையில் ஸ்ரீவிஜயீந்திரரின் ஸ்தானத்தை வம்சபரம்பரை அட்டவணையில் குறிப்பிடுவதற்காகக் கீழே கொடுக்கப்பட்ட பரம்பரை அட்டவணை கொடுத்துள்ளோம். (Chart)

https://archive.org/details/@muthulakshmi_academy






CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# Dedication

*Dedicated with great devotion at the Lotus feet of*

**SRI VIJAYEENDRA THEERTHA GURUSARVABHOUMARU**

*by*

**1008 SRI SUBUDENDRA THEERTHA SWAMIJI**

*His Holiness, the present pontiff of*

**Jagadguru Sriman Madhavacharya**

**Moola Maha Samsthanam**

**Sri Raghavendra Swamy Mutt, Mantralayam**

*in sweet memory of Aradhana of*

**SRI VIJAYEENDRA THEERTHA GURUSARVABHOUMARU**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



Sri Lakshmi Venikateshwara

3



Jagadguru Sri Manmadhvacharyaru

4



Sri Vyasarajaru

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

Sri Vijayeendra Theertharu

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

**Sri Sudheendra Theertharu**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

**Sri Raghavendra Theertharu**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# Samrat Poshakaru



Sri Suyameendra Theertharu

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# Samrat Poshakaru



**Sri Subudhendra Theertharu**

**Present Peetadhipathi of**

**Jagadguru Sri Manmadhwacharya Moola Mahasamsthanam**

**Sri Raghavendra Swamy Mutt**

**Mantralayam**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# Author



Sri Raghavendra Guruvamsha Bhooshanam

**Raja Sri Gururajacharya**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அறிவிப்பு:- ஸ்ரீமத்வாசார்யரின் சாக்ஷாத் சிஷ்யரான முதலாவது ஸ்ரீபத்மநாப தீர்த்தர், இரண்டாவது ஸ்ரீநரஹரி தீர்த்தர், 3வது ஸ்ரீமாதவ தீர்த்தர், 4வது அக்ஷோப்ய தீர்த்தர் ஸ்ரீமத்வாசார்யரின் பீடத்தையே முறையே வகித்தவர்கள்.

ஸ்ரீவித்யாதிராஜரின் சிஷ்யரான ஸ்ரீகவீந்திர தீர்த்தர் மற்றும் ஸ்ரீராஜேந்திர தீர்த்தர்களில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்துப் பரம்பரையில் ஸ்ரீகவீந்திரர் மூத்தவரென்றும் ஸ்ரீவ்யாஸராஜ மடத்தின் பரம்பரையில் ஸ்ரீராஜேந்திரர் மூத்தவரென்றும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீராமசந்திர தீர்த்தரின் மூத்த பட்டத்து ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தரின் பரம்பரையின் பிறகு ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மகிமையினால் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடம் என்றே ப்ரக்யாதி பெற்று ஸகலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது (கௌரவிக்கப்பட்டுள்ளது).

இந்த வம்சாவளியில் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தரின் வித்யா ப்ரசிஷ்யரான ஸ்ரீவ்யாஸராஜர், அவருடைய ஸமஸ்தானத்தின் ப்ரப்ர சிஷ்யரான ஸ்ரீஸுரேந்திரர் சமகாலத்தவர். பூர்வாச்ரமத்தில் பந்துக்கள். ஸ்ரீப்ரம்மண்ய தீர்த்தர், ஸ்ரீபாதராஜர் பூர்வாச்ரமத்தில் பந்துக்கள். ஸ்ரீவ்யாஸ்ராஜரினால் ஸ்ரீஸுரேந்திரர் மேதாவிகளான பால ஸந்யாஸி விஷ்ணு தீர்த்தரை மரியாதையுடன் பெற்று அவருக்கு ஸந்யாஸம், மந்த்ரமுத்ராதாரணம் முதலியவைகளையளித்து விஜயீந்திர தீர்த்தரென்று நாமகரணம் செய்தார். ஸ்ரீவிஜயீந்திரர் பாலஸந்யாஸி களாயிருந்து பால்யத்திலிருந்தே நிர்யாணமாகும் வரை அவர் இயற்றிய அற்புத க்ருதிகளை இந்த "அஜய்ய விஜயீந்திரர்" என்னும் க்ரந்தத்தில் கவிதிலக வித்யா வைபவ, நியாயவேதாந்த நிபுண, சிரோமணி, வித்வான், ஸ்ரீராஜா குருராஜா சார்யர் ப்ரமாண ஸஹிதம் நல்ல அழகான ஸாஹித்ய சைலியில் (நடையில்) வர்ணித்துள்ளார்.

**கால நிர்ணயம்:-**

ஆசார்யர், ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் கால நிர்ணயத்தை சாஸன-வாங்மயஸமஸாமயிக (அரசாட்சி, இலக்கிய காலங்களில்) அவ்வப்போது நடந்த சம்பவங்களைப் பரிசீலி த்து நல்ல கிரமப் பிரகாரம் சாஸ்திர மரியாதையில்


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

செய்துள்ளார். சில பண்டிதர்களில் கால நிர்ணய விஷயத்தில் அபிப்ராய பேதமிருந்ததினால் அதைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் எழுதுவது சம்மந்தமற்றதாகாது.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் மடாதிபதியாகி அதிகாரம் பெற்று ஸுரேந்திரரின் சிஷ்யரானார் என்று மேலே சொல்லியுள்ளோம். ஸ்ரீஸுதீந்திரருக்கு ஸுரேந்திரர் ஆச்ரமமளித்து அவரை விஜயீந்திரருக்குச் சிஷ்யனாக அளித்தார். ஸ்ரீவாதீந்திரரின், "अर्चागति रूप"த்தின் ஆதாரத்தைக் கொண்டு சொன்னது ஸந்தர்ப்பத்தை அனுஸரித்துள்ளது. இதனால் "विजयींद्र कराब्जोत्थ सुधीन्द्र" என்று சொன்னது உசிதமானது. மற்றும் மடத்தின் வழக்கத்தின்படி குருசிஷ்ய பரம்பரையில் விச்சேதமாயிற்று (break) என்னும் அபவாதத்திற்கு இடமேயில்லாமல் போயிற்று. கி.பி.1614ல் ஸ்ரீராமநவமி மஹாபிஷேக உற்சவத்திற்கு ஸ்ரீவிஜயீந்த்ர-ஸுதீந்த்ர இரு ஸ்வாமிகளின் தரிசனத்திற்கு வீணை திம்மண்ண பட்டரின் மருமகனான லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யர் 15-16 வருஷ வயதுடைய, அப்பொழுதே பண்டிதராயிருந்த, வெங்கடநாதாசார்யரை அழைத்துக்கொண்டு வந்திருந்தாரென்றும் இந்த வெங்கடநாதாசார்யரே பின்பு ஸ்ரீஸுதீந்திரரினால் ஆச்ரமம் பெற்று ஸ்ரீராகவேந்திர தீர்த்தரென்னும் நாமத்துடன் வேதாந்த ஸாம்ராஜ்யத்தையாண்டு லோக ப்ரஸித்தரானாரென்று க்ரந்தகர்த்தர் (நூலாசிரியர்) அபிப்ராயப்பட்டுள்ளார்.

இதனால் ஸ்ரீராகவேந்திர தீர்த்தர் விஜயீந்திரரை ஸாக்ஷாத்தாகக் கண்டிருந்தாரென்று புலப்படும். ஆகையால் அவர் தமது க்ரந்தங்களில் இரண்டு ஸ்ரீபாதங்களை "குருபாத"ரென்று கௌரவத்துடன் அழைத்திருக்கிறார். நூலாசிரியர், ஸுரேந்திரர் ஏறக்குறைய 98 வருஷங்கள், ஸ்ரீவிஜயீந்திரர் சுமார் 97 வருடங்கள், ஸ்ரீஸுதீந்திரர் 62 வருடங்களுக்கு மேல் வாழ்ந்தனரென்று சொன்னதை நிராகரித்து (refute) Dr. B.N. கிருஷ்ணமூர்த்தி சர்மா அவர்கள் மடம் மற்றும் கும்பகோணத்தின் பரம்பரையைப் பின்பற்றி ஸுரேந்திரர் 1539ல் நிர்யாணமாயிருக்க வேண்டுமென்றும், விஜயீந்திரர் 1539லிருந்து 1595 வரை பீடத்தை ஆண்டிருக்க வேண்டுமென்றும் நிர்ணயித்திருக்கிறார். இவர் ஸ்ரீவிபுதேந்திரரது சக ஆண்டு



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

1412 (கி.பி.1490)வருடத்திய தாமிரசாஸனத்தையும் ஸ்ரீவிஜயீந்திரரின் சக 1536 (கி.பி.1614) வருடத்திய தாமிர சாஸனத்தையும் நம்பத்தகுந்ததல்ல வென்று நிராகரித்திருக்கிறார். (A history of the Dwaita School of Philosophy and its literature, Vol. I.P. 276, I bid, Vol II, P.170) இந்த விஷயத்தில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் தாமிர சாஸனங்களைத் தனித்தனியாகப் பிரித்து (Classify) முதலிலிருந்து கடைசிவரை விமரிசித்து மற்ற ப்ரமாணங்களைக் கவனித்துத் தீர்மானிப்பது அவசியம். இதை இங்கு வெகு சுருக்கமாக விவரித்து நமது அபிப்ராயத்தைத் தெரிவிக்கிறோம்.

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடம் நஞ்சன்கூடில் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தரினால் ஆரம்பிக்கப்பட்டு ஸ்ரீவரதேந்திர தீர்த்தர் வரை அந்தந்த காலத்தரசர்கள், தனவான் பாளையக்காரர்கள் ஸ்ரீமடத்திற்குக் கொடுத்த பதினாறு தானமாகக் கொடுத்த தாமிர சாஸனங்கள் உள்ளன. இதற்கு விஜயீந்திரரின் அரவிலி மங்கலம் தாமிர சாஸனத்தைச் சேர்த்தால் இப்பொழுது மொத்தம் பதினேழு சாஸனங்களாகும். அவைகளின் மூல வடிவம், ஆங்கில மொழிபெயர்ப்பின் வரலாற்றுக் குறிப்புகளை மைசூர் ஆர்க்யாலஜி ரிபோர்ட்டுகளில் (Mysore Archeology Reports) (1917, Para III, 1944; பக்கம் 7.1.-158) கொடுக்கப் பட்டுள்ளன. அரிவிலிமங்கலம் தாமிர சாஸனம் Epigraphica Indica 12, பக்கம் 340-ல் ப்ரசித்தமாகியுள்ளது.

(தாமிர சாஸன பட்டியல் விவரம் அடுத்த பக்கத்தில் பார்க்கவும்)

இவைகளில் 11வது சாசனத்தில் குறைகளுள்ளன. குருகளின் பெயரைக் கொடுக்கும்பொழுது சில வாக்கியங்கள் விட்டுப்போயுள்ளன. இவை யோகீந்திரர் காலத்திற்குச் சரியாகும். பிறகு ஸுமதீந்திரரின் காலத்தில் ரங்கப்பனின் பேரன் உத்தம ரங்கப்பன் சக ஆண்டு 1621ல் தானம் செய்தது (13) சரியாகும். ஸ்ரீஸுரேந்திரர் சக ஆண்டு 1602-ல் உயிருடன் இருந்திருக்க முடியாது. ● மீதி சாஸனங்களைப் பற்றி மொழி, எழுதும் முறை, வர்ணனை, சிற்பிகளின் பெயர், இவைகளில் எதிர்ப்புக்கு இடமில்லை.

---

● ஸ்ரீயோகீந்த்ர சிஷ்யரான ஸ்ரீஸுரேந்திரரின் காலத்திற்கும் இது ஸரியாக உள்ளது. (பொருந்துகிறது). ஸ்ரீஸுரேந்திரரின் பெயர் ஸுதீந்திரரென்று விழுந்திருக்கலாம்.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# தாமிர சாஸனங்களின் விவரம்

| | 1 | 2 |
|---|---|---|
| எ. | தானம் செய்தவர் | தானம் பெற்றவர் |
| 1. | விஜயநகர ஸ்ரீகிருஷ்ணதேவராயர் | ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் |
| 2. | ஸ்ரீரங்கராஜ II | ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் மற்றும், விஜயீந்திரர் (विजयीन्द्र सतीर्थ्ये शिष्ये स्निग्ध तरायच । सुधींद्रतीर्थ श्रीपादगुरवे परमात्मने ॥ (C.C. 64-65) |
| 3. | ஸ்ரீரங்கராஜ II (அறிவிலிமங்கல தாமிர சாஸனம்) | ஸ்ரீவிஜயீந்திரர் |
| 4. | ஸ்ரீரங்கராஜ II | ஸ்ரீஸுதீந்திரர் |
| 5. | ஸ்ரீராமராஜ (மருமகன் ராமராஜனின் தாத்தா) | ஸ்ரீஸூரேந்திரர் |
| 6. | ஸ்ரீராமராஜ | ஸ்ரீஸுரேந்திரர் |
| 7. | ஸகல திருமலராய | வீரசைவ எம்மெ பஸவேந்த்ர |
| 8. | செவ்வப்ப (தஞ்சாபுரம்) | ஸ்ரீவிஜயீந்திரர் |
| 9. | செவ்வப்பனின் சகோதரர் சின்ன சவ்வப்ப நாயகர் | ஸ்ரீவிஜயீந்திரர் |
| 10. | செவ்வப்பனின் சகோதரர் சின்ன சவ்வப்ப நாயகர் | ஸ்ரீவிஜயீந்திரர் |
| 11. | செஞ்சி அரசனின் அதிகாரி வடையாரி ரங்கப் பகாளாக ஒடேயர் | ஸ்ரீஸுதீந்திரர் இந்த தானம் ஸ்ரீயோகீந்திரர் காலத்திற்குப் பொருந்துகிறது. |
| 12. | தொட்டதேவராய ஒடெயர் | ஸ்ரீராகவேந்திர தீர்த்தர் |
| 13. | சஞ்ஜயராஜனின் அதிகாரி ரங்கப்பனின் பேரன் உத்தம ரங்கப்பகாளாக ஒடெயர் | ஸ்ரீஸுமதீந்திரர். |

* ஸ்ரீ யோகீந்திரரின் சிஷ்யரான ஸ்ரீஸுரேந்திரர் ஆக இருக்கட்டும்.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

| 3<br>தானம் செய்த தினம் | 4<br>தான பத்திரம் எழுதிய சிற்பி, கவி, மற்ற அம்சங்கள் |
|---|---|
| சக ஆண்டு 1412, ஸாதாரண, வைசாக்யாம் (கி.பி.1490) | வீரணாசார்யனின் மகன் மங்கணா, ராஜன் உதயகிரி கோட்டையை வென்றிருந்தான். |
| | திக்விஜயராமனின் பூஜா காலத்தில் தானம் |
| சக ஆண்டு 1492; யுவ, ஆஷாட சு. ப்ரதமை துவாதசி A.D.1575 | வீரணாசார்யரின் மகன் கணபயாசார்ய விஜயீந்திர தீர்த்தரின் ஆக்ஞையுள்ளது. |
| சக ஆண்டு 1499 (கி.பி.1577) | வீரணாசார்யரின் மகன் கணபயாசார்ய. |
| சக ஆண்டு 1492, யுவ, மாக, ப.13 சிவராத்ரி, (கி.பி.1576) | வீரணாசார்யரின் மகன் மங்கணாசார்ய. |
| சக ஆண்டு, 1435, ஸ்ரீமுக, ராம நவமி, (கி பி.1513) | முன்பு ஸ்ரீவிஜயீந்திரருக்கு தானபத்திரம் கொடுத்ததை ஞாபகப்படுத்தியுள்ளது. (विपुद्रेंद्र यतींद्रेभ्यः प्रागेवार्यैः समर्पितं । |
| ஸ்ரீராமநவ அபிஷேகம் | ஒரே தாமிர பத்திரம் கிடைத்தது (அபூர்ண) |
| சக 1464, சுப க்ருத மாக, சு.14, குரு வாரம் February கி.பி.1543. | வீரணனின் மகன் வீரணாசார்ய * |
| சக 1502, விக்ரம, கார்த்திக சுத்த 15, கி.பி.1580. | ஸ்ரீவைஷ்ணவ தாதாசார்ய, ஸ்ரீவிஜயீந்திர, அப்பய்ய தீக்ஷிதர் ஆஸ்தான பண்டிதராயிருந்தது. |
| சக 1536, ராம நவமி அபிஷேகம் கி.பி.1614.<br>சக 1536, ராம நவமி அபிஷேக கி.பி.1614. | ராஜகோபாலனின் மகன் மன்னார்குடி த்யாகரார்ஜன்.<br>மஹாலிங்கனின் மகன் கும்பலிங்க எழுதியது. |
| ஆனந்தஸம்வத்ஸரம்<br>சக ஆண்டு 1602, ரௌத்ர, கபிலாஷஷ்டி, 1680. | ஸுரேந்திரர் 3 முறை பூப்ரதக்ஷிணம் செய்திருந்தார். |

* விஜயீந்திரர் சைவசந்நியாஸியை ஜயித்த சமயம் இந்தத்தாமிர சாஸனம் விஜய சின்னமாக வந்தது.

சக ஆண்டு 1585, சோபக்ருத்சுசி (ஆஷாட) சு.11, சந்த்ரவாரம்,=6 ஜுலை, 1662,

சக ஆண்டு, 1621, ப்ரமாதீ, பாத்ரபத, ப.30, சூர்யக்ரஹணம், ஹஸ்த நக்ஷத்திரம்=புதவாரம், செப்டம்பர் 13 1699.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
இன்னும் விஜயீந்திரரின் ஆட்சிக்காலம் சக ஆண்டு 1412 (கி.பி.1490) கிருஷ்ணராயனின் காலத்திற்கு (கி.பி.1509 முதல் 1530) சரியாவதில்லையென்று கேள்வி எழலாம். முதலில் கொடுக்க நிச்சயித்த தானபத்திரத்தை உதயகிரியை ஆக்ரமித்து வெற்றியடைந்த பிறகு அரசாங்கத்தின் கணக்கில் எழுதப்பட்டு முத்திரையிட்டிருக்கக்கூடும். சக 1435 இன் ஒரு ஸத்ய சாஸனத்தில் ஸுரேந்திரரின் தானத்தில் விபுதேந்திர தானபத்திரத்தில் ஆக்ஞையிருப்பதனால் விபுதேந்திரருக்குக் கொடுத்த தானம் கிருஷ்ணராயனின் காலத்தியதாகவே ஆகி இருக்க வேண்டும். நிச்சயிக்கப்பட்ட சாஸனத்தைப் பிறகு அனுகூலம் ஏற்பட்டபொழுது கொடுக்கும் உதாரணங்கள் சாஸனங்களில் யதேஷ்டமாகக் கிடைக்கின்றன.

ஸ்ரீவிபுதேந்திரர் ஸ்ரீமதாசார்யரினால் பதினோராவது தலைமுறையானதினால் கி.பி.1490, அவருக்குப் பொருந்தாததல்ல. ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் அப்பொழுது வயதானவராயிருந்திருக்க வேண்டும்; அதனால் அவர் பெரிய பண்டிதரான விபுதேந்திரரை விட்டு ஸ்ரீபாதராஜரிடம் படிக்கப்போகவில்லையென்றும் ஆக்ஷேபணை சரியானதல்ல ப்ரம்மண்ய தீர்த்தரும் ஸ்ரீபாதராஜரும் சித்தி பெரியம்மாவின் பிள்ளைகள், ஸ்ரீபாதராஜரும் மிகப்பெரிய பண்டிதர், குருவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவது தனிப்பட்ட ஒருவரின் விஷயம் (அவரவரின் விஷயம்) ஸுரேந்திரரும், விஜயீந்திரரும், ஸுதீந்திரரும், பெரிய பட்டம்-சிறிய பட்டம் என்ற முறையில் பீடத்தில் ஏகத்ரமிருந்ததால் (Joint Rule) அவருக்கு நீண்ட ஆட்சியைக் கொடுப்பது அனுசிதமல்ல. ஸ்ரீவிஜயீந்திரர் எம்மே பஸவராஜேந்திரரென்னும் வீர சைவ ஸந்யாஸிகளை பந்தயத்திற்குக் கட்டுப்பட்ட வாதத்தில் ஜயித்து, அவருடைய மடத்தின் தாமிர சாஸனத்தைத் தனதாக்கிக் கொண்டாரென்று சொன்னது உண்மையாக உள்ளது. சக 1464 அவருடைய சாஸனம் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் வசம் இருப்பதே அதற்கு சாக்ஷியாகும். அந்த சைவ வாதம் சக 1464 (கி.பி.1543)க்கப்புறம் நடந்திருக்க வேண்டும் என்று தானேஸ்பஷ்டமாகிறது.

இன்னும் சைவாக்ரணிகளான அப்பய்ய தீக்ஷிதர் விஜயீந்திரருக்கு முந்திய காலத்தில் இருந்ததினால், அவரிருவருக்குள்ளும் சாக்ஷாத்தாக வாக்யார்த்த விசாரமாகியிருக்காதென்று திரு.எம். மஹாலிங்க


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சாஸ்திரிகள் (J.O.R. Madras, 1929, PP.140-160) கை. அநந்தகிருஷ்ண சாஸ்த்ரிகள் (ந்யாயாம்ருதாத் வைதஸித்தி)க்ரந்தத்தின், பீடிகையில் தெரிவித்துள்ளார். இது முற்றிலும் தவறு ஏனென்றால் சிவப்ப நாயகனின் ஆஸ்தானத்தில் ஸ்ரீவிஜயீந்திரர், ஸ்ரீவைஷ்ணவ தாதாசார்யர், சைவாத்வைதி அப்பய்ய தீக்ஷிதர் த்ரேதாக்னிகளைப் போல் ஒன்றாகச் சேர்ந்து, "यत्सभायां मते स्वस्वं स्थापयंत:" தத்தம் மதத்தை ஸமர்த்தனை செய்து கொண்டிருந்தார்களென்று எழுதப்பட்டுள்ளது. வேலூரின்பக்கத்தில் அடெய-பாளையத்தின் ஒரு சாஸனத்திலிருந்து அப்பய்ய தீக்ஷிதர் கி.பி.1582ல் வாழ்ந்திருந்தாரென்று தெரிய வருகிறது. கி.பி.1596 இன் ஒரு சாஸனத்தில் (M.E.R. 1905, p.60) வரும் தீக்ஷிதர் அய்யகள் இவர் அப்பய்ய தீக்ஷிதரே ஆக வேண்டுமென்று தர்க்கம் செய்யப்பட்டுள்ளது. தீக்ஷிதர் ஸ்ரீவிஜயீந்திரருக்கு முன்பே இருந்தவரென்னும் விஷயத்தில் பரம்பரையும், கட்டுக்கதைகளும் நடைமுறையிலிருந்து வருகின்றன. தீக்ஷிதரின், "ஆத்மார்ப்பணஸ்துதி" என்னும் க்ரந்தத்தின் வ்யாக்யானத்தில் சிவானந்தயதிகள் கலியுகத்தின் 46-54ல், தீக்ஷிதர், ஜனித்தாரென்றும் அவர் 82 வருடங்கள் வாழ்ந்தாரென்றும் சொல்லியிருக்கிறார். இதை ஒப்புக்கொண்டால் அவரது ஜனனம் கி.பி.1553லும், மரணம் கி.பி.1615ல் என்று ஏற்படும். இது மேற்சொன்ன ஐதீகத்திற்கும் பரம்பரைக்கும், விரோதமாகும். விஜயீந்திரர் கி.பி.1614க்குப் பிறகு வாழ்ந்திருந்ததினால் அவர் அதற்கும் முன்பு காலமாகியிருக்க வேண்டும். இந்த ஆதாரங்களினால் ஸ்ரீவிஜயீந்திரருக்கு கி.பி.1470, ஸுரேந்திர-விஜயீந்திரருக்கு 98-97 வருடங்கள் ஆயுளும், ஸுதீந்திரருக்கு 62, நீண்டகாலம் கொடுப்பது வரலாற்று ப்ரமாணங்களுக்கு விரோதம் வராது. ஆகையால் நூலாசிரியர் நுட்பமான விமரிசையினால் நிர்ணயித்துள்ள கால அளவும் ஆமோதிக்கத் தக்கதாயும், ஆராய்ச்சியாளரின் உரைகல்லில் நிலைநிற்கும் (ஆராய்சியாளர்களில் பரீக்ஷயில் தேறும்) என்று தாராளமாகச் சொல்லலாம்.

விஜயீந்திரர் 64 கலைகளில் நிபுணராக மஹாயோகியாய் விளங்கினாரென்பதை ஆசார்யர் அநேக சம்பவங்களைக் காட்டி நிருபித்துள்ளார். இந்த க்ரந்தத்தில் மொத்தம் 70 அத்யாயங்கள் உள்ளன. அவைகளில் சிஷ்ய பரம்பரையில் நன்றாகக் கற்று கட்டுக்கதைகளின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ருவாந்தினால் நிலைத்து நடைமுறையிலிருந்த க்ரந்தஸஸூசிதமான அநேக சம்பவங்களைத் தேர்ந்தெடுத்து ஒன்று சேர்த்துக் கொடுத்து விஜயீந்திரரின் தனிச்சிறப்பிற்கும் அந்தக்காலத்தின் தத்வக்ஞானத்தின் சரித்திரத்திற்கும் அபூர்வமான சோபையைத் தந்துள்ளார். இப்பேர்ப்பட்ட உத்தம க்ரந்தத்தில் சிஷ்ய-பரம்பரை-ஐதீகங்களுக்கு உண்மையான இடத்தைக் கொடுத்து வரலாற்றை இயற்றியது கன்னட இலக்கியத்திற்கு இது ஒரு புதிய காணிக்கையென்று எண்ணலாம்.

நவத்வீபத்தின் தார்க்கிக சிகாமணி க்ருஷ்ண சர்மாவை (அத்யாயம் 4) விஜயநகரத்தில் தோல்வியுறச் செய்தது, காஞ்சியில் இரு ப்ரபல மீமாம்ஸகர்களை வென்றது (அத்-8); கோலாரில் மீமாம்ஸா பண்டிதரான மீமாம்ஸாசார்யர், தார்க்கிகரான க்ருஷ்ண்பட்டர், வீரசைவ மதத்தின் ஆராத்யர், இவர்களை வாதத்தில் வென்று, வாதவிஜயத்தின் அறிகுறியாக்ப் பெரிய விஜயமாருதியை (பெரிய ஆஞ்சநேயரை)க் கோலாரில் ப்ரதிஷ்டை செய்தது, (அத்.10) ஸ்ரீவ்யாஸராஜரின் நிர்யாணம் (அத்.15) கும்பகோணத்தில் லிங்கராஜேந்திரரை மந்த்ர சக்தியினால் தோல்வியுறச்செய்து, வேதப்ராமாண்யத்தை நிலைநாட்டி, சிவ ஸர்வோத்தமத்வத்தை கண்டித்து, விஷ்ணுஸ்ஸர் வோத்தமத்வத்தை ஸ்தாபித்தது (அத்.20), விஜயீந்திரருக்குச் சைவமடம், ஸர்வ தேவாலயங்களின் அதிபதியாக்கப்படுதல் (அத்.21-22) தஞ்சாவூரின் ப்ரபு செவ்வப்ப நாயகர், மதுரையின் விச்வநாத நாயகரினால் கௌரவம், (அத்.24), கும்பகோணத்தில் வித்யாபீடஸ்தாபனம் (அத்.25), விஜய நகரத்தில் ராமராஜனால் ரத்னாபிஷேகம் (அத்.26) மலையாள தேசத்து மாந்திரீகனை மோடியில் ஜயித்தது (அத்.27), விஜயீந்திரரின் 64 கலைகளில் நிபுணத்துவத்தைக் காண்பிக்கும் களக்கூத்தாடியை வென்றது (அத்.29) சிற்பகலை வல்லமை (அத்.30) பாண்டிய நாட்டு பாளையக்காரனான நரசிம்ம வீரராமன் என்னும் கலை வல்லுநரை ஜயித்தது, காம சாஸ்திரத்தில் வேசியின் தோல்வி (அத்.31) சைனாதேசத்திலிருந்து வந்த வைபாஷிக மாத்யமிக பௌத்தவாதிகளை வாக்யார்த்தத்தில் தோல்வியுறச் செய்தது (அத்.31), மலையாள நாட்டின் ப்ராம்மணர்கள் கபடத்தினால் விஜயீந்திரரின் இந்திரிய நிக்ரஹத்தைப் பரீக்ஷிக்க வேசியை அனுப்பினபொழுது விஜயீந்திரர் நிர்விகாரராய் நாராயண



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சப்தார்த்த நிர்வசனம் செய்து கொண்டு ஹரித்யான பரரானது (அத்.33,34) சிவபட்டனின் குயுக்தியை நிவாரணம் செய்தது, கும்பகோணத்தில் விநாயக ராமசந்த்ர ஜோஷியென்னும் ப்ரஸித்தி பெற்ற தங்கவேலைக் கலைஞனைக் கலையில் தோல்வியுறச் செய்தது, (அத்.35), (விஜயீந்திரர் தயாரித்த ஸ்ரீராம பதக்கம் ஜதை செய்யப்பட்ட பதக்கங்கள் ஸ்ரீராயர் மடத்தில் உள்ளது). விஜய நகரத்தில் ராஜ காரணத்தை விமரிசித்த ஸாம்ராஜ்யத்தின் நன்மைக்காக விஜயீந்திரர் குப்த சபையில் அரசனுக்கும், சேனாதிபதிக்கும், ராஜ்யத்தின் பக்தியுள்ள அரசு அதிகாரிகளுக்கும் ஒற்றுமையுடனிருக்கும் படி உபதேசித்தது, (அத்.36-37), கும்பகோணத்தில் சைவஸந்யாஸியின் சிஷ்யனின் கபட சூழ்ச்சியை முறியடித்து சாரங்கபாணி தேவாலயத்திற்கு அங்குள்ள ஸரோவரத்தின் மீது அதிகாரத்தை ஸ்தாபிக்க சைவர்கள் மோசத்தினால் ஸரோவரத்திற்குள் போட்டிருந்த நந்திவிக்ரகங்களை மந்த்ரஸித்தியினால் மாருதியின் உருவங்களாக மாற்றினது (அத்.38), உத்தரதேசத்தின் "கானமார்த்தாண்ட" னென்னும் விருதின் ஸங்கீதக்காரனை ஆச்சரியப்படத்தகுந்த விதத்தில் ஸங்கீத கலையில் தோல்வியுறச் செய்தது, (அத்.39). கர்னாடக சங்கீதத்திலும் பாடகனை ஜயித்து, "அம்ருதவர்ஷிணி" ராகம் பாடி உடனே மழை பெய்வித்தது, (அத்.39), பட்டோஜிதீக்ஷிதரை வ்யாகரண சாஸ்திரத்தில் வென்றது (அத்.40), உடுப்பியில் விஜயீந்திரருக்கு வாதிராஜர் அளித்த கௌரவம் மற்றும் இருயதிகளின் சம்பாஷணை அன்பு நிறைந்த நட்பு, வாதிராஜரால் அளிக்கப்பட்ட மடத்தில் பூஜை (அத்.41), உடுபியாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி வரும்பொழுது மார்க்கத்தில் விஜயநகரத்தின் வீழ்ச்சியைக் கேட்டு மனம் நொந்தது (அத்.42), காஷ்மீர தேசத்துப் பெயர் பெற்ற நெசவாளியை, பட்டு ஜரிகை பீதாம்பரத்தை நெய்து தோல்வியுறச் செய்தது. (அத்.42) கிருஷ்ண தேவராயனின் ஆஸ்தான வித்வானாயிருந்த வீணை கிருஷ்ணபட்டரின் மகனான கனகாசலபட்டர் கும்பகோணத்திற்கு விஜயநகர வீழ்ச்சிக்குப்பின் அநேக பண்டிதர்களுடன் விஜயீந்திரரிடம் சரண்புகுந்து அடைக்கலம் பெற்றது (அத்.44) கனகாசலபட்டரும் விஜயீந்திரரும் சிறுவயதில் கிருஷ்ணபட்டரிடம் வீணை கற்றிருந்தரென்னும் புது விஷயம் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. கும்பகோணத்தின் தேவாலயங்களை அழிப்பதற்காகத் தாக்க வந்த யவனர்களை



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மந்த்ர சக்தியினால் தலை வெடித்தது போல் செய்து https://archive.org/details/@muthulakshmi_academy விரட்டியது (அத்:45), கும்பகோணத்தில் அப்பய்ய தீக்ஷிதருடன் முதல் பேட்டி; ஆசு கவிதையில் தோல்வியுறச் செய்தது (அத்.47), அவருடன் வரலாற்று ப்ரசித்தி பெற்ற த்வைதாத்வைத வாக்யார்த்தம் (அத்.48); பேதம் ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமப்ரமாணங்களினால் ஸித்தமாகிறதென்று சொல்லி ச்ருத்யர்த்த விவரணையில் ந்யாய, வ்யாகரண, (மீமாம்ஸா சாஸ்திரங்களின் கோலாகலத்தினால் அப்பய்ய தீக்ஷிதரை நிருத்தரராகச் செய்தது (பதில் சொல்ல முடியாமல் செய்தது); ஸத்ர்யை வித்யயைக் கண்டித்து ஜீவ, ப்ரம்ம, ஜகத்து எல்லாம் பரமார்த்தஸத் ஆனது பரஸ்பரம் வேறாகியுள்ளன வென்றும் த்வைத ஸித்தாந்தத்தை ஆமோதித்தது (அத்.49), முரளி நாதத்தினால் பாம்பாட்டியின் கர்வத்தைக் கண்டித்தது (அத்.50), விஜயீந்திரரின் மந்த்ர பலத்தினால் கருடபக்ஷி வந்து பாம்பைக் கொத்திக் கொண்டு போன இடத்தில் தண்டத்தினால் கருடதீர்த்தத்தை நிர்மித்தது. (இப்பவும் ப்ரஸித்தமாயுள்ளது). நாராயண பதம் விஷ்ணுவின் ஸங்கேதமே, தவிர சிவனுக்குப் பொருந்தாது என்று அப்பய்ய தீக்ஷிதருடன் வாதத்தில் நிரூபித்தது. யோக பலத்தினால் அதைச் சிவபரமான அர்த்தம் செய்தால் "ண"த்வம் பொருந்தாது என்று வ்யாகரண ஸூத்ர, வார்த்தைகளின் ப்ரமாணங்களால் நிரூபித்தது; "ஸமானபதத்வ" மில்லாததனால், "அட்குப்வாம்" ஸூத்ரத்தினால் நகாரத்திற்கு, "ண"த்வம் வராது; "सुप्तिङन्तपदं" ஆகட்டும் "நிமித்தானதிகரண" இத்யாதி பாரிபாஷிக ஸமானபதத்வ பரிஷ்காரமாகட்டும் பொருந்தாது. ஆகையால் "पूर्वपदात् संज्ञायामगः" என்னும் சூத்ரத்தினாலேயே விஷ்ணு ஸங்கேதமென்று நாராயண பதத்தின் "ண"த்வத்தை ஆமோதிக்க வேண்டும். முதலியவைகளைச் சொல்லி அனுபவமும் நிறைந்த உத்தம வையாகரணரான தீக்ஷிதரை வியக்கச் செய்தது (அத்.51-52), இல்லாவிடில் "கந்தர்வ நகர", "ராமநாம" இங்கும் "ந" காரத்திற்கு "ண"த்வம் வர வேண்டியிருக்குமென்று அநிஷ்ட ப்ரஸஞ்ஜனே செய்தது.

கேரளதேசத்தின் "ஜ்யோதிர் மார்த்தாண்ட" ப்ரபஞ்சன சர்மாவை பவிஷ்ய புராணியில் திறமையுடன் ஜயித்தது (அத்.53), கௌடசாரஸ்வத ப்ராம்மணரின் பர்த்தகாலி பீடம், காசி பீடங்கள் ஸுரேந்திரரின் ஆணையின் பேரில் நடைமுறைக்கு வந்து விஜயீந்திரரின் சிஷ்யத்வத்தைப்


CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பெற்றது. (அத்.53-54), உத்தரதேசத்தின் வீணை வித்வானை தமது சிஷ்யரான திம்மண்ணாசார்யரினால் தோல்வியுறச் செய்து தமது வீணை வாசிக்கும் கலையின் நிபுணத்வத்தைக் காண்பித்தது (அத்.54) ஸ்ரீயவர்களினால் தோல்வியுற்று ஸ்ரீயவர்களிடம் சிஷ்யத்வம் பெற்றிருந்த தான்ஸேனின் வம்சத்தினரான ஸங்கீதக்ஞன் தோற்றுப்போனது, காசி தேசத்தின் கங்காதர பண்டிதர் அப்பய்ய தீக்ஷிதரின் எதிரில் விஜயீந்திரருடன் வாதம் செய்து தோற்று விஜயீந்திரரைக் கொல்லுவதற்காக விஷத்தைக் குடிக்கக் கொடுத்தபொழுது அதைக்குடித்து நரசிம்மஸ்வாமியைத் துதித்து ஜீரணித்துக் கொண்டது (அத்.56), மோசக்காரர்கள் ஸ்ரீயவர்களின் க்ரந்தங்களைப் பெட்டியுடன் களவாடிச் செல்ல அதை ஆகர்ஷண மந்த்ர சக்தியினால் ஆகாய மார்க்கமாகத் தானாகவே வரும்படி செய்தது (அத் 57) மாயிமாந்திரீகர்கள் ஸ்ரீயவரின் வயிற்றில் தண்ணீர் வரும்படி தன் வயிற்றிலிருந்த தண்ணீரை அவைகளின் மூலம் வெளிப்படுத்திய மாபெரும் அதிசயம் (அத்.57), சக ஆண்டு 1492 (கி.பி.1575)ல் ஸுரேந்திரர் மடத்தின் வித்வானான நாராயணாசார்யருக்கு ஆச்ரமம் கொடுத்து; ஸுதீந்த்ர தீர்த்தரென்று நாமகரணம் செய்து விஜயீந்திரருக்கு அவரை அர்ப்பித்து மடத்துப் பரம்பரையில் நியாஸவிச்சேதமானது என்ற அபவாதத்திற்கு இடமின்றிச் செய்தது (அத் 59) ஸ்ரீரங்கராயர் ஸுரேந்திரருக்குக் கிராமதானம் செய்ய அவர் அதை 50 வ்ருத்திகளாகப் பிரித்து, 7 வ்ருத்திகளை மடத்திற்கு வைத்துக் கொண்டு மீதி 43 வ்ருத்திகளை அக்ரஹாரங்களாகச் செய்து வித்வாம்ஸப்ராம்மணர்களுக்குத் தானம் செய்தது (அத்.60). ஸுரேந்திரர் சக ஆண்டு 1497 (கி.பி.1575)ல் 98 வர்ஷ பூர்ணாயஸ்ஸில் விஜயீந்திர்ருக்கும் ஸுதீந்திரருக்கும் உபதேசம் செய்து தாம் பரந்தாமத்திற்கு ப்ரயாணமானது (அத்.61) மேலே 30 வருட காலத்தில் அரசாங்க நிலைமை மாறியது. அப்பய்ய தீக்ஷிதர் ஸ்வர்க்கமடைந்தாரென்னும் செய்தி விஜயீந்திரருக்கெட்டிற்று. தம்முடன் வாதம் செய்யும் நிகரற்ற (ஜகத் ப்ரஸித்த) வாதி போய்விட்டானே என்று மனம் நொந்தார். ஸ்ரீஸுதீந்திரரின் திக்விஜயம், க்ரந்த மியற்றுதல் முதலியன சக 1536 (கி.பி.1614) அன்று ராமநவமி மஹாபிஷேக சமயத்தில் திம்மண்ணபட்டரின் மகனான 15-16 வருடத்திய பண்டித வேங்கடநாதர் தமது சகோதரியின் கணவரான லக்ஷ்மி நரசிம்மாசார்யருடன் மடத்திற்கு வந்து


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஸ்ரீவிஜயீந்திரரைத் தரிசித்தது. ஸ்ரீ ஸுதீந்திரர் ஸந்நிஹிதராய் வேங்கடநாதரே இனி பீடாதிபதிகளாக வேண்டுமென்று ஸ்ரீவிஜயீந்திரர் ஸுதீந்திரருக்கு ஆணை செய்தது, அவர் வேங்கடநாதரின் பூர்வஜன்மத்தின் விருத்தாந்தத்தைக் கேட்டு ப்ரஹலாதரே வ்யாஸராஜர், வ்யாஸராஜரே வேங்கடநாதர், இனி ஸ்ரீராகவேந்திர தீர்த்தராக வேண்டும் என்று தெரிவித்துத் தான் கி.பி.1614ல் பரந்தாமத்திற்கு எழுந்தருளினார். (அத்.69) 97 வருடத்திய பழுத்த வயோதிகத்தில் தமது அவதார ஸமாப்தியைச் செய்தார்.

இந்த விதமாக வித்யாவைபவ ராஜாகுரு ராஜாசார்யர் சுமார் 200 வருஷங்களின் தத்வக்ஞான அரசாங்க வரலாற்றை ஒன்று சேர்த்துத் திரட்டி இந்த அற்புதமான நூலில் விவரித்துள்ளார். இது வரலாற்று ஆராய்ச்சியாளருக்கு அநேகப் புதுவிஷயங்களைத் தெரிவிக்கின்றது. ஸ்ரீவ்யாஸ தீர்த்தர், ஸுரேந்திரர், விஜயீந்திரர், ஸுதீந்திரர் ஹம்பி, கும்பகோணம் முதலிய க்ஷேத்திரங்களில் வித்யாபீடங்களை நிறுவனம் செய்ததல்லாமல் அக்காலத்திய உத்தரபாரதத்தின், பரதேசத்தின், "ஜா, ஜா" என்னும் பதத்தினால் கர்வத்துடன் சஞ்சரித்துக் கொண்டிருந்த தார்க்கிக, மீமாம்ஸக, வையாகரண, பௌத்தவாதி, அத்வைதவாதிகளையும், சைவ பாசுபதவாதிகளையும் தோல்வியுறச் செய்து நிகரற்ற வாதமல்லராய் நின்று மத்வஸித்தாந்த பேரிகையை முழக்கினார். விஜயீந்திரர் அஜேயர் மட்டுமல்லாமல் அஜய்யரும் ஆகியிருந்தாரென்று அவருடைய அற்புத பராக்ரமங்களினால் நிருபணமாகிறது.

. இந்த க்ரந்தம் ஸாமான்ய ஜீவிய சரித்திர புஸ்தகமாக இராமல் பாரத நாட்டின் கலாச்சாரத்தின் அதி உன்னத நிலையின் எல்லையைத் தெரிவிக்கின்ற கண்ணாடியாக விளங்குகிறது. விஜயீந்திரர் ப்ரதிவாதமல்லரை ஜயிக்கும் சந்தர்ப்பங்களை வர்ணிக்கும் பொழுது ஆசார்யர் நல்ல இதமான முறையில் நுட்பமான விஷயங்களைத் தேர்ந்தெடுத்து அவைகளை கடினமான சாஸ்திர மரியாதையினால் ஆமோதித்துள்ளார் (Justify) "काव्यशास्त्र विनोदेन" என்றபடி இந்த க்ரந்தத்தைப் படிக்கின்ற பழக்கமுள்ளவர்களுக்கு ப்ரௌடசாஸ்திரங்களின் கடினமான (Complicated) ப்ரச்னைகைளின் பரிசயமும் உண்டாகும். ந்யாய, வ்யாகரண, மீமாம்ஸா, வேதாந்த, அலங்கார சாஸ்த்ர, ஸங்கீத சாஸ்திரங்களில் விஜயீந்திரர் பெற்ற ஜயபத்திரங்கள் கிரமப்படி முறையே நூலாசிரியர் அந்தந்த சாஸ்த்ரங்களிலிருந்த அதிகாரத்தை (திறமையை) தெரிவிக்கின்றனவென்று சுயமரியாதையுடனும்



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

கௌரவத்துடனும் நாம் மனமார கோஷிக்கிறோம். விஜயீந்திரர் மத்வஸித்தாந்த ப்ரதிஷ்டாபனா சார்யரென்னும் விருதை அர்த்தம் பொருந்தியதாகச் செய்திருந்தாரென்று காண்பிப்பதற்கு ஸகல சாஸ்திரங்களில் ஜய பத்திரிகைகளைப் பெற்று த்வைத வேதாந்தத்தின் ரசனை விஷயங்களின் வாக்யார்த்தங்களை விவரித்ததினால் வேதாந்த அப்யாஸம் செய்பவர்களுக்கு இது ஒரு சாஸ்த்ர க்ரந்தம் தான் என்று சொல்லத் தடையில்லை. அந்தந்த வர்ணனை பாகங்களைப் படிக்கும் பொழுது விஜயீந்திரர் செய்தவாக்யார்த்தங்களில் நூலாசிரியரான ஸ்ரீராஜா குரு ராஜாசார்யரே அவர் பக்கத்தில் நின்று வாக்யார்த்தத்தில் பங்கு கொண்டிருந்தாரோ என்னும்படித் தெரிகிறது. அவ்வளவு ஆழமாக உள்ளது அவரது சாஸ்த்ர பாண்டித்யம். அவ்வளவு மனோகரமாயுள்ளது அவரது வர்ணனை நடையின் செல்வாக்கு (திறமை).

ஆசார்யர் அந்த பாண்டித்யம் நிறைந்த எல்லா விஷயங்களையும் ஒன்று சேர்த்து இயற்றிய க்ரந்தத்தில் தாஸஸாஹித்யத்திற்கு மறுமலர்ச்சி உண்டாக்கியுள்ளார். ஸ்ரீஸுரேந்திரர், விஜ்யீந்திரர், ஸுதீந்திரர், தாஸ கூடத்திற்கு அளித்துள்ள மாபெரும் உபகாரம் இப்பொழுதுதான் நமக்குத் தெரியவருகிறது. விஜயீந்திர தீர்த்தரின் பரம்பரையில் யதிபுங்கவரான நரஹரி தீர்த்தர், வ்யாஸராஜரைப் போல விஜயநகர, தக்ஷிண தேசத்தின் ராஜ பாளையகாரருக்கு ராஜகுருகளாய் உபதேசகராயிருந்தா ரென்னும் சமாசாரம் இதிஹாஸத்தின் ஆதாரங்களினால் தெரிவித்துள்ளார். இப்பொழுது ப்ரஸித்தமாக உள்ள கௌடசாரஸ்வத பர்த்தகாலி ஜீவோத்தம மடம், மற்றும் காசி பீடங்கள் ஸ்ரீஸுரேந்திரரின் ஆணைப்படி ஸ்ரீவிஜயீந்திர சிஷ்ய பீடங்களென்னும் விஷயத்தை நுட்பமாகத் தெரிவித்துள்ளார். குரு-சிஷ்ய சந்திப்பு, வ்யாஸராஜ- கிருஷ்ணராயரின் ஸம்பாஷணை, புரந்தரதாஸ-கனகதாஸருடன் செய்த விநோதங்கள், ஸ்ரீவாதிராஜ-விஜயீந்திரரின் ஒன்றாக அத்யயனம் செய்தது, உடுப்பியாத்திரை மகிமை, தரங்கிணி ராமாசார்யர் அத்வைத ஸித்திக்கு கண்டனம் செய்வதற்குச் செய்த ஸாஹஸமான காரியம் முதலிய இந்தச் செய்திகளை வர்ணிக்கும் பொழுது இதுவரை வெளிப்படாத அநேக மடசம்ப்ரதாயங்களின் அறிய வேண்டிய விஷயங்களும் கிரமமாக வெளிப்பட்டுள்ளன. தத்வ விவேசனையில் வெவ்வேறு அபிப்ராயமிருந்த போதிலும் வ்யவஹாரத்தில் பரஸ்பரம் நட்புடன் பழகவேண்டும் உயர்ந்த எண்ணத்தைத் தாமிர சாஸனங்களின் ஆதாரம் மூலமாக விஜயீந்திர அப்பய்ய


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தீக்ஷிதர்களிலிருந்த நட்பை வர்ணித்தது நூலாசிரியரின் சுயநலமற்ற ஸ்வபாவத்தையும் (dispassionate View) உதாரஹ்ருதயத்தையும் தெரிவிக்கிறது.

இந்தப் புஸ்தகத்தின் பாஷை (நடை) எளிதாகவும், அழகாகவும், அறிவுறுத்துவதாகவும் உள்ளது. நடை அலங்காரமாகவும், பக்திக்ஞான பூர்வமாகவும் மனதைத் தொடும்படியாகவுமுள்ளது. வாசகர்களுக்குத் தாங்கள் சரத்ருது சந்த்ரிகையில் (நிலவுவெளிச்சம்) மல்லிகை வாஸனையினால் பரிமளிக்கும் தென்றல் காற்றின் சூழ்நிலையில் விஷ்ணு பாதத்திலிருந்து உற்பத்தியான புனிதமான கங்கா நதியில், படகில் அமர்ந்து விஹாரம் செய்த பரமானந்தம், இந்த அழகான உயர்ந்த கன்னட நூலைப் படிக்கும்பொழுது, அனுபவத்திற்கு வருகிறது. ஸ்ரீவிஜயீந்திரர் "அஜய்ய"ராக இருப்பதைப் போல பல முனைகளில் அடைந்த பாண்டித்யத்தினாலும், உதார மனோபாவங்களினாலும் இந்த நூலாசிரியர் "அஜய்ய"ராக இருக்கின்றாரென்று நாம் கௌரவத்துடன் அவரைப் பக்தி சிரத்தையுடன் வணங்குகிறோம்.

இப்படிப்பட்ட க்ருதிகள் மக்களின் ஞானத்தின் எல்லையை விஸ்தரித்து உயரும்படி செய்வதுடன் சாஸ்திரத்தின் ப்ரௌட க்ரந்தங்களைப் படிக்கும்படி தூண்டுகின்றன. இவ்வாறு அகண்ட பரவித்யா சேவையை தொடர்ந்து செய்துவரும் ஸ்ரீவித்யா வைபவ, ந்யாய வேதாந்த வித்வான், ஸாஹித்யாலங்கார ராஜா ஸ்ரீ குருராஜா சார்யருக்கு வித்தையைப் போற்றுபவர்களான, பாரதிய கலாச்சார ஆதரவாளர்கள், கௌரவிப்பவர்கள் மிகமிகக் கடன்பட்டவர்கள் (நன்றியுள்ளவர்களாக) உள்ளோம் என்று சொல்ல விரும்புகிறோம். ஆசார்யருக்கு ஸ்ரீவிஜயீந்திர ஸுதீர்ந்திர ராகவேந்திர குர்வந்தர்கத மத்வாந்தர்கத, வேத வ்யாஸரூபி மூலராமசந்திரஸ்வாமி அகண்ட ஆயுராரோக்ய, ஐச்வர்யங்களையும் அருள்பாலித்து, அவரால் இன்னும் அதிகமான க்ஞானகார்யமாகும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கொண்டு விடைபெறுகிறோம்.

பவமான ஸதன<br>தார்வாட் - 7,<br>10-12-1969 ஸௌம்ய,<br>மார்க சிர்ஷ, சுத்த-1<br>புதவாரம்.

வித்யாரத்னம் வித்யா பூஷணம்<br>**ராகவேந்த்ராசார்ய பஞ்சமுகி** M.A.,<br>இன்ஸ்டியூட், தார்வாட்<br>கார்யாத்யக்ஷய, கர்னாட இதிஹாஸ<br>ஸம்சோதக மண்டல, தார்வாட்



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# INTRODUCTION

BY

Vidya Vibhushana Sastranidhi Dwaita Vedanta Rasajna
**Dr.B.N.K. Sharma,** M.A., Ph.D., D.Litt.,
U.G.C. Professor of Sanskrit, Ruparel College, Bombay-16.

In 1959-60, my esteemed friend Raja S. Gururajacharya published a series of anecdotes on the life, personality, and achievements of Sri. Vijayeendra Tirtha, the illustrious exponent and post-Vyasaraya Champion of Madhwa Siddhanta. These anecdotes were partly historical and partly based on traditions and a constructive imagination had been brought to bear upon them aided by literary gleanings and epigraphic evidences relating to Vijayeendra's times. The work has been so well carried out in the 1959-60 issues of the PARIMALA, that I felt it deserved to be published in Book Form, as an eminently readable and illuminating biography of Sri Vijayeendra Tirtha. Accordingly, I made the suggestion to him and repeated it again in my History of Dwaita School of Vedanta and its literature (Vol.II.p.168). I am happy that Raja Gururajacharya has taken up my suggestion and acted on it and has given the Kannada-reading public a handsome and artistically thrilling biographical account of one of the most admirable personalities in the Renaissance of Indian Philosophy in S.India in the 16th Century.

The anecdotes brought together here highlight the many sided personality of Vijayeendra Tirtha as a Zealous debater, a profound scholar, an untiring controversialist, a keen humourist, a deep humanist, a thinker of the highest calibre, a polymath, a patron of arts, and an adept himself in all of them, a counsellor of royalty, a friend, philosopher, and guide of the Vijayanagar and Nayak rulers of Tanjore and Madurai. Sri Gururajacharya has also revised and enlarged some old materials and added some fresh matter, notably the side light he has tried to throw on Vijayeendra Tirtha's contact with the Gauda-Saraswata community and its pithas. I wish however that he had more fully



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
the materials given in the Appendix on the Gauda Saraswata Mathas in my History of Dwaita School Vol ii). A true biographer has to guard against any of his own predilections running away with the historical facts. *In the account of the circumstances in which Vijayeendra Tirtha came to be gifted by Vyasaraya to Sri Surendra Tirtha it is necessary to emphasise the point that the gift was in response to a request made specially by Surendra Tirtha, borne out by authenticated Suladi of Purandara Dasa SRI SURENDRANU PUTRABHIKSHAYA BEDE VIJAYEEN DRANU KARUNISI ..... In the end on the question of the dates of Vijayeendra's Pithadhipatya, the attempt made to follow the lead of the author of the GURUCHARITE is not only unsatisfactory but even self-contradictory.

In the Genealogical Tables of the Sri Raghavendra Swami Matha published by Bhimacharya Vadavi in 1930 the dates of demise of Surendra Tirtha and Vijayindra have been given as VIKARI (1539 A.D.) and MANMATHA (1595 A.D.) The Pandit tradition at Kumbhakonam has always held that Vijayindra passed away in MANMATHA (1595) this is the date of Vijayeendra's demise given by Dr. R. Nagaraja Sharma of Kumbhakonam in his introduction to his edn. of Raghuttama's Bhava Bodha. Dr.H.K. Vedavyasachar and Gururajacharya place Surendra Tirtha's visit to Vyasaraya and the incident of the gift of Vijayindra in 1513 A.D. The impression given by Gururajacharya is that Surendra Tirtha was quite a senior to Vyasaraya in age. Assuming that Surendra Tirtha was about 40 years old then, his birth date must be about 1473. If he should have died only in 1575, he should have lived for 102 years of which there is no tradition in the Mutt. If Vijayindra is taken to have been gifted in 1513 or even in 1526, at the age of 18 or 20, he would still have lived for more than a century, if we place his demise in 1614, as proposed by Gururajacharya. There is no tradition to that effect in Kumbhakonam. To place Surendra's

* The objections raised by Dr. Sharma regarding Surendra's and Vijayeendra's demise and Peethadhipatya and or points are answered by the author in his Prasthavana documentary and traditional evidences. Some of Dr. Sharma's points also answered by Sri R.S. Panchamukhi in his Munnudi.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

demise as late as 1575 would also cut short Vijayindra's period of Pithadhipatya to 39 years which goes against H.K. Vedavyasachar's claim that it extended for over half a century (p 161 GURUCHARITRE). These difficulties could only be avoided by agreeing to place the demise of Surendra Tirtha and Vijayindra in VIKARI and MANMATHA (1539 and 1595) respectively, as given in the geneo-chronological Tables of Bhimachar Vadavi (published 19 years before the GURUCHARITRE) and other sources. The proper explanation of Chinna Chevvappa Nayaka in Vijayindra's name in 1614 would be to take it that the grant was made out in the Pontifical period of Sudheendra himself and issued in the name of the departed Guru as a mark of respect to his memory.

Such a procedure is not uncommon. We have a parallel to this in another copper-plate grant preserved in the Sri Raghavendraswami Matha (noticed in Mys.Arch.Rep. for 1944, p 71) purporting to have been made by Emperor Krishna Deva Raya to Sri Vibudhendra Tirtha, in 1490 A.D. This is impossible as Krishna Deva Raya came to the throne only in 1509 and he could not have been a contemporary of Vibudhendra at all. This comes out also in which Vyasa Tirtha is made to trace Surendra Theertha's connection with Vibudhendra on p 9 of the present work. All these facts have been taken into account in my History of Dwaita School of Vedanta in fixing the dates of the Pontifical rule of Surendra Tirtha and Vijayindra Tirtha as 1504-39 and 1539-95, respectively. These dates still stand as the last word on the question.

The title of Gururajacharya's book Ajeya Vijayindraru is a fitting one to the mighty Vijayindra. I would only add an alternative to it Ajayya Vijayindraru emphasising the invincibility of Vijayindra more categorically KSHAYYA-JAYYAU SHKYARTHE (Panini vi.1,81) Sri Gururajacharya's work in 500 and odd pages is a tribute of affectionate regard and reference to one of the greatest luminaries in the firmament of Madhwa Siddhanta which appeared at a time, When the dark clouds of opposition were



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

gathering momentum and spreading fast in the horizon to observe the light of Tattva Vada, in times of grave distress and political tensions.

Vijayindra Tirtha was a Sarvatantra Swatantra, a master of the 64 arts, a winsome and magnetic personality (CHATURYAIKAKRTHI) and author of 104 works. In the eyes of his contemporaries he was verily an incarnation of Sri Madhwacharya come to reinforce his own Siddhanta against contemporary opposition.

स्वदर्शनोक्तदूषणं निराकरिष्णुरंजसा ।
जयीन्द्र योगिरूपतोऽवतीर्ण एय पूर्णधीः॥

(Appreciative verse at the end of Viji's MADHVADHVAKANTAKODDHARA. The town of Kumbhakonam, where he established his headquarters was in the heydays of its glory and golden age under the enlightened Nayaka rulers who were great patrons of art, religion, literature and philosophy. The city of Kumbhakonam ranked almost as the second capital of Thanjapura Rajya and bade fair to rival the city of the gods as a contemporary poet has described it in open admirations;

या कुंभघोणाभिधया सामिन्धे ।
पुरीं प्रपेदे पुनरुक्तनाकाम् ॥

It was a citadel of orthodoxy of culture and learning. The cream of Chola Mandala was concentrated in the intellectual life of the city of Kumbakonam and the state of Thanjavur. The Nayak Dynasty was connected by close marriage ties with the imperial house of Vijayanagar, Tanjavur and Kumbakonam were the replica of Vijayanagar in the cultivation of the art of dance, music, literature, Vedic studies and Darsanas. It was the age of Venkatamakhi, the author on Karnatic Music of Govinda Dikshita the accomplished Minister of the Nayakas, of Appayya Dikshita, the uncrowned monarch of Saiva Advaita systems and of Tatacharya, the sun of Visishtadwaita Darshan.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

It was in this climate of culture and plenitude that Vijayindra Tirtha found congenial soil for his labour of love in the cause of Sadvaishnava Ḍarshana. He saved Madhwa Siddhanta from a very real and serious threat of extinction in the South, in the 16th century. The followers of Madhwa have every reason to remain grateful to the memory of Vijayindra's illustrious personality, for all time. They cannot do so without knowing the true nature and magnitude of his labours in the service of the Siddhanta the range and sweep of his genious and intellectual dynamism and vigor and his scintillating scholarship in Shad-Darshanas, not to speak of his great powers as a yogin and how he used them for averting dangers to public peace and security whenever occasions arose (see p.256-61).

When the redoubtable Appayya Dikshita and Tatacharya drew him into philosophical controversies by their adverse criticisms of Madhwa's works, Vijayindra readily accepted their combined challenge and fought single handed to worst his adversaries and successfully repulsed them. The history of his triangular contests with his critics is a chapter by itself in the history of the school of Madhwacharya.

The Arivilimangalam grant of Sevvappa Nayaka of Tanjore to Vijayindra in 1577 A.D. pays a handsome tribute to his victories over the Advaita philosophers.

मायावादिमतोच्छेदकोलाहलभरोक्तये ।

It lands Vijayindra as the magestic Peacock sporting in sunny garden of Madhwa Siddhanta:

मध्वाचार्यमतोद्यानसंचरत्तरबर्हिणे ।

and as the full moon to the blue lotuses of scholars of different schools:

विजयीन्द्रयतीन्द्राय विद्वदिन्दीवरेन्दवे ।

With all that, Vijayindra was not a bigoted sectarian. He was the very essence and embodiment of catholicity of outlook. This is shown by his generous patronage of scholars of different


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
persuations (See p.418-19) and the uniformly friendly relations he maintained throughout his life with his greatest adversary in thought-Appayya Dikshita.

Kumbakonam is the city of temples, dedicated to Vishnu and Siva in equal strength and prestige and Vijayindra by common consent was in charge of all the religious institutions there. A few years ago there was a renovation of the Siva temple of Kumbheswara there, under the direction of Kamakoti Pitham. A copper plate was then unearthed in which it was found mentioned that Vijayindra Tirtha and his representatives had been placed in sole trusteeship of all the temples in the city. This was in deed a unique tribute to his personality as a "Visva-Mitra"-(Universal friend), a position which he maintained with remarkable good-will to all communities. I would only mention here a unique grant made to Vijayindra in the year 1624 A.D. by a very humble citizen of Kumbakonam, a non-brahmin labourer residing near Mahamakham tank of the town in which the pious donor refers to Vijayindra interms of highest reverence as comparable to Lord Venkateswara of Tirupati.

திருப்பதி வெங்கடாசலபதிக்குச் சமானமான ஸ்ரீவிஜயீந்திர உடையருக்கு.........!!

This makes it clear that Sri Vijayindra was as dear to the masses as he was to the classes and the intellectuals, a true yogi "Sarvabhootahite ratah" and therefore reverenced by all Kumbakonam holds his name and his memory in the deepest love and esteems to this day. I have seen with my own eyes the revered Sankaracharya of the Kamakotipitham at Kumbhakonam dismounting from his palanquin and walking a small distance near the entrance to the Mutt of Vijayindra and his Brindavan there, whenever he had occasion to pass through the Mutt of Vijayindra, while proceeding to visit his numerous disciples resident in the Solayappa Street further west.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

It is the life crowded with spectacular achievements of such an unforgettable personality who lent light and glory to one of the most brilliant periods in the history of South India in the golden age of the Vijayanagar and Post-Vijayanagar periods of Indian History that Raja Gururajacharya's learned works, "AJAYYA VIJAYINDRARU" portrays, with befitting eloquence and richness of detail.

My early days as a school boy were fortunate enough to be spent in the vicinity of Sri Vijayindra's Brindavanam at Kumbhakonam. I have felt the inspiration of his halo sustaining me in my field of activity and it is with the deepest sense of devotion. I take this opportunity afforded by my esteemed friend Raja Gururajacharya of associating myself with the present publication of the life of Sri Vijayindra Tirtha.

The "Vijayindra Gadya" appended here is taken from the pages of SUBHADRA DHANANJAYA NATAKA of Vijayindra's illustrious disciple and successor Sri Sudhindra Tirtha. It is a marvel of Sanskrit Gadya Kavya and is sure to be enjoyed by Sahrdayas, Vijayindra belongs equally intimately to Karnataka. He is the gift of Kamataka to Tamil Nadu. The publication of his life in Kannada is sure to be hailed and welcomed by the public of Karnatak as an inspiring contribution to KANNADA MEN OF LETTER SERIES.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


# பீடிகை

श्रीशमानम्य मध्वार्यं जयार्यं व्यास सद्गुरूम् ।
विजयींद्रं सुधींद्रंच राघवेंद्रं नमाम्यहम् ॥
वादींद्रं धीरसिंहं च कृतिँशीलं प्रतीश्वरं ।
सुयमींद्र गुरुं नौमि सर्वाभीष्ट शुभाप्तये ॥

ஜகத்தின் நன்மை, மறுமலர்ச்சி மேலும் கீர்த்தி, அன்பு மற்றும் சுகம் - அமைதி இவைகளுக்கு உடையவன், மூல காரணன் பகவந்தன். எல்லா தேசங்களின் தத்வம், தர்மம், மற்றும் கலாசாரங்களினுடைய இதயமே இது. இந்த ஒரு உத்தம தத்துவத்தை, மங்களகரமான உபதேசத்தை ப்ரபஞ்சத்தின் மக்களுக்கு அறிவித்த பெருமை பாரத நாட்டிற்கே உரியது. இந்த வைதிக உபதேசத்தினாலேயே வெவ்வேறு தேசங்களில் இவ்வாறான சிந்தனை ஆரம்பமாயிற்று. ஆகையால் ஜகத்திலுள்ள எல்லாவிதமான தத்வம் வித்யா-தர்மம்-கலாச்சாரம் மத உணர்ச்சி-நாகரிகம். சீலம், விதவித கலைகளுக்கும் தாய் வீடு பாரத நாடாகவிருந்தது. இங்கிருந்து தான் எல்லா நாடுகளுக்கும் அவை பரவின. இவ்வாறு நமது பாரததேசம் தெய்வீக உணர்ச்சி மற்றும் தத்வ அம்ருதத்தை எல்லா தேசங்களுக்கும் கொடுத்து ஜகத்குருவென்று சொல்லப்பட்டு இதுவரை எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பாரததேசத்திற்கு இப்பேர்ப்பட்ட மகத்துவம் வருவதற்கு இந்நாட்டின் மக்கள் ஏற்றுக் கொண்ட தத்துவம் ஆசரணை செய்த தர்மம், வளர்த்துக் கொண்டு வந்த கலாசாரங்களே காரணமென்னலாம். இவையெல்லா-வற்றிற்கும் அடிப்படை அபௌருஷேயங்களான வேதங்கள். இவை வேதங்களின் ஹ்ருதயத்தையறிய வேண்டுமேன்றே, உப்தேசிப்பதற்கே எல்லா சாஸ்திரங்கள் நடைமுறைக்கு வந்தன. இந்த ஸதாகமங்களின் உபதேசங்களின் ஸாரம் முழுவதையுமே ஸ்ரீபாதராயணர் "वेदशास्त्रात्परंनास्ति न दैवं केशवात्परं" என்னும் தம்முடைய அமிர்த வசனங்களினால் ஜகத்திற்கு எடுத்துச் சொல்லியுள்ளார். முக்தியோக்யர்களின் கடமையைத் தெளிவான பாஷையில் அதிகாரவாணியினால் "आलोढ्य सर्व शास्त्राणि विचार्य च पुनः पुनः । इदमेकं सुनिरूपन्नं ध्येयो नारायणस्सदा" என்று சொல்லியுள்ளார்கள்.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீபகவந்தனை, ஸ்ரீமந்நாராயணனை வேதங்களினால் தான் அறிய வேண்டும். "(सदाग मैक विज्ञेयः नान्यः पंथा अयनाय विद्यते)" ஸதாகமங்கள் ஸ்ரீநாராயணனை ஸகலத்திற்கும் மூல காரணனான, ஸர்வோத்தமனான, ஸ்வதந்த்ரனான, அநந்த கல்யாண குணராசியின் இருப்பிடமான், தோஷம் லவலேசமுமில்லாதவனான, ரமா, ப்ரம்ம-ருத்ரேந்திரர் முதலான ஸர்வதேவதைகளினாலும் உபாஸிக்கப் படுபவனான (பூஜிக்கப்படுபவனான) பரப்ரம்மமென்று கொண்டாடியுள்ளன (ओं अथातो ब्रह्म जिज्ञासा ओं) எல்லா சாஸ்திரங்களின் லக்ஷியம். அந்த பரப்ரம்மன் யாரென்றால் அவனுடைய லக்ஷணத்தை "ओं जन्माद्यस्य यतः ओं" என்று ஸகல ச்ருதிகளின் அர்த்தம் நிர்ணயம் செய்த ஸ்ரீநாராயணனே ஆன ஸ்ரீபாதராயணஸ்வாமி ப்ரம்ம ஸூத்ரங்களில் நிரூபித்துள்ளார். இந்த ஸூத்ரத்தில் சொன்ன பரப்ரம்மனின் லக்ஷணம் ஸ்ரீமந்நாராயணன் ஒருவனில் தான் உள்ளது என்று வேதம், அதை அனுஸரிக்கும் புராணாதிகளின் ப்ரமாணம் (அத்தாட்சி) உதாரணங்களுடன் ஜீவோத்தமரான, ஸ்ரீவாயுதேவரின் அவதாரரான ஸ்ரீமதானந்த தீர்த்த பகவத் பாதாசார்யர் தமது த்வைத பாஷ்யத்தில் ஸித்தம் செய்து கொடுத்துள்ளார்.

வேதங்களைப் பாகப்படுத்தி, வேதார்த்த நிர்ணாயக (நிர்ணயம் செய்தவர்)ரான, ப்ரம்ம மீமாம்ஸா சாஸ்திரப்ரவர்த்தகரான ஸ்ரீபாதராயணர் நிரூபித்துள்ள தத்வங்களை அவருக்கு மிகமிகச் சம்மதமான முறையில் எடுத்துக்காட்டியுள்ள ஒரே பாஷ்யக்காரர் ஸ்ரீமத்வாசார்யர் ஒருவரே தான்!

மூலத்தை வ்யாக்யானம் செய்பவர், விளக்கம் செய்பவர் எவ்வளவு உயர்ந்தவராயினும், மேதாவியாயினும், தேஜஸ்வியான பண்டித உத்தமனாயிருந்தாலும், அவருடைய விளக்கம் மூலத்திற்குச் சற்றேனும் விரோதமில்லாமலிருக்க வேண்டும். எந்த ஒரு தத்வத்தையும் சரியான முறையில் நிரூபிக்க வேண்டியிருந்தால், மூலகாரரினால் அதை அறிந்தால்தான் முடியும். அதாவது மூலகாரரிடமிருந்தே விளக்கம் பெற வேண்டும். அங்கு குரு-சிஷ்ய-சம்பந்தம் மிக அவசியம். இல்லாவிடில் மூலகாரரின் அபிப்ராயத்திற்கு விரோதமாக அர்த்தம் நிரூபணம் செய்ய வேண்டிய ஸந்தர்ப்பங்கள் தான் அதிகம். ஸ்ரீபாதராயணப்ரம்ம


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸூத்ரங்களின் மீது இயற்றப்பட்ட அத்வைதம் முதலிய பாஷ்யங்கள் இந்த வகையைச் சேர்ந்தவை. ஆனால் ஸ்ரீத்வைத பாஷ்யம் இந்த வகைகளைச் சேரவில்லை. இதற்குக் காரணம் இதுதான்; ஸ்ரீமன்மத்வாசார்யர் ப்ரம்ம மீமாம்ஸா சாஸ்திரத்தை இயற்றிய ஸ்ரீவேதவ்யாஸரின் சிஷ்யனாகி அவரிடமிருந்தே அந்த சாஸ்திரார்த்தங்கள் யாவையும் தெரிந்து கொண்டு அவருடைய ஆணையின்படியே, அவருக்குச் சம்மதமான முறையில் த்வைத பாஷ்யாதிஸர்வ மூலக்ரந்தங்களை இயற்றி-யிருப்பதினால் ஸ்ரீமத்வாசார்யரின் பாஷ்யம் ஸர்வஜீவர்களின் முக்கிய லக்ஷியமான ஸ்வஸ்வரூபானந் தாவிர்பாவ ரூபமான மோக்ஷஸாதன சாஸ்திரமென்று பெயர் பெற்று ஜகத்தின் ஸஜ்ஜனரின் நன்மை மற்றும் உய்விற்குக் காரணமாயுள்ளது.

லோகக்ஷேமத்தை விரும்பி எல்லா நல்ல ஜீவர்களை உய்விக்க உபதேசம் செய்பவர்கள் ஸத்ய வந்தராயிருக்க வேண்டும். ஸ்வயம் சக்திசாலிகளாயும், ஸர்வஜ்ஞரும் லோகக்ஷேமத்தை விரும்புபவர்களாகவும் இருக்க வேண்டும். அஞ்ஞானம், ஸந்தேஹம்,. ப்ராந்திரஹிதனாயிருக்க வேண்டும். அவர்கள் வஞ்சகர்களாக இருக்கக் கூடாது. யாதொரு பிரதியுபகாரத்தையும் எதிர்பார்ப்பவர்களாக இருக்கலாகாது. இந்த அவ்வளவு குணங்களும் ஸ்ரீமதாசார்யரிடம் இருந்ததினாலேயே அவர் ஜகத்குருகளெனப்பட்டார். அவர் ஜகத் ப்ராணர், ப்ராணருமான ஸாக்ஷாத் வாயு பகவான். இது பளித்தாதி ஸூக்தங்களினால் நிருபிக்கப்பட்டுள்ளது. சேதனப்ரபஞ்சத்தின் ஸகலமும் ஸ்ரீவாயு தேவனின் ஆதினத்திலுள்ளது. எல்லா ஜீவர்களுடைய இருக்கையும் அழிவும் யார் ஆதீனத்தில் உள்ளனவோ, அப்படிப்பட்ட வருக்குத்தம்மாலேயே ஜீவித்திருப்பவரினால் ஆக வேண்டியது எதுவுமில்லை.

ஆகையால் ஸர்வஜீவ நியாமகராய், ஜீவோத்தமரான, ஸ்ரீவாயு அவதாரிகளான ஸ்ரீமதாசார்யருக்கு ஜகத்தினால் ஆக வேண்டியது எதுவுமில்லை. ஸ்ரீஹரியின் ஸங்கல்பத்தின்படி ஜகத்தின் ஸுஜீவிகளின் உய்வும் க்ஷேமமுமே அவருடைய லக்ஷியமாகையால் கருணைக்கடலான அவர் உபதேசித்ததெல்லாம் மிகக்ஷேம



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

முண்டுபண்ணுவதாயும், ஐத்யத்தை அடிப்படையாகக் கொண்டதும், அத்தாட்சிகளைக் கொண்டதும், மூன்று காலங்களிலும் தவிர்க்க முடியாதவைகளாயும், வேதம், அதன் அர்த்தத்தை நிர்ணயிக்கும் ப்ரம்ம சூத்ரங்களுக்கு சம்மதமானவையும் ஆகியுள்ளன. இப்படிப்பட்ட மஹானுபாவரின் உபதேசங்கள் ஸகல ஸுஜீவிகளுக்கும் ஸம்ஸார பந்தனத்திலிருந்து விடுதலைக்குக் காரணமாக (மோக்ஷமடைவதற்கு) இருப்பதினால் ஸ்ரீமதாசார்யரின் வைதிக ஸத்வைஷ்ணவ ஸித்தாந்தம் இந்த ஜகத்தின் மக்களுக்கு மங்கள பரம்பரையை அளிக்க வல்லதாயுள்ளது.

ஸ்ரீமதாசார்யரின் இந்த உத்தம ஸித்தாந்த தத்வங்களை மேலே உயர்த்தி (uphold) அதை ப்ரசாரம், உபதேசம், அனுஷ்டானம் முதலியவைகளினால் ஸஜ்ஜனர்களை ஸ்ரீமதாசார்யாரின் சாக்ஷாத் சிஷ்யரான பத்மநாப-நரஹரி-மாதவ-அக்ஷோப்யதீர்த்தரே முதலான தலை சிறந்த ஞானிகள் காப்பாற்றினர். அவர்களுக்குப் பிறகு ஸ்ரீஇந்திராம்ச சம்பூதரான ஸ்ரீஜயதீர்த்த முனிகள் எல்லா த்வைத பாஷ்யங்களுக்கும் உத்தமமான வ்யாக்யானங்களை இயற்றி த்வைத ஸித்தாந்தத்தை பலப்படுத்தினார். ஸ்ரீடீகாக்ருத்பாதரென்று கியாதி பெற்ற ஸ்ரீமஜ்ஜய முனிகளின் ஸத்பரம்பரையில் வந்த ஸ்ரீகவீந்திர-ஸ்ரீராஜேந்த்ர தீர்த்தரின் பீடபரம்பரையின் ஸ்ரீராம-சந்திர-ஸ்ரீவிபுதேந்த்ர-ஸ்ரீபாதராஜ-ஸ்ரீவ்யாஸராஜ தீர்த்தர்கள் த்வைத ஸித்தாந்தத்தைத் தமது நிகர்ற்ற க்ரந்த-ரசனை, ப்ரசாராதிகளினால் ஜகத்தில் ப்ரகாசிக்கச் செய்து ஸஜ்ஜனருக்கு மாபெரும் உபகாரம் செய்தனர். இதைப் போலவே ஸ்ரீமதாசார்ய பரம்பரையின் இதர ஞானிச்ரேஷ்டர்களும் கிரந்தமியற்றுகை, ஸித்தாந்த ப்ரசாராதிகளினால் உபகாரம் செய்துள்ளனர். 16-17வது நூற்றாண்டில் இதர மதஸ்தர்கள் இந்தஸத்ஸித்தாந்தத்தின் மீது செல்லாத தோஷாரோபணம் செய்யத் திட்டமிட்டபொழுது ஸ்ரீமத்விஜயீந்திர-ஸ்ரீவாதிராஜ-ஸுதீந்திரதீர்த்தர் மற்றும் ஸ்ரீமன் மந்த்ராலய ப்ரபுகள் உலகம் போற்றும் உத்தம க்ரந்தங்களையியற்றி பரமதத்தினரின் ஸகல ஆரோபணங்களையும் நூற்றுக்கு நூறு கண்டனம் செய்து, அவரது எல்லாத் தாக்குதல்களிலிருந்தும் த்வைத ஸித்தாந்தத்தை ரக்ஷித்துப் போஷித்து, விருத்தி செய்து அது


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சூர்ய சந்திரர்களுள்ளளவும் வேரூன்றி நிலை நிற்கச்செய்தனர். இந்த மாபெரும் மகான்களின் உபகாரத்தை ஜகத்தின் மக்கள் என்றென்றைக்கும் மறக்கவே முடியாது.

ஸ்ரீமந்த்ராலய ஸ்ரீபாதங்களவரோ வேதத்ரய விவ்ருத்தி (वेदत्रय विवृत्ति) முதலான க்ரந்த ரத்னங்களை இயற்றி வேத மதத்தை மேலுயர்த்தினதன்றி எல்லாத்வைத பாஷ்ய வியாக்யானங்களுக்கும், வாஞ்சித உத்தமமான விளக்கங்களை (ஸூக்ஷ்மமான விளக்கம்) இயற்றி ஸ்ரீமதாசார்ய-டீகாக்ருத்பாத-ஸத்பரம்பரா-பாடப்ரவசன சம்ப்ரதாயங்களை நடைமுறையிற் கொண்டு வந்து, "டிப்பணாசார்ய சக்ரவர்த்திகள்" என்று எல்லோராலும் போற்றப்பட்டுள்ளார். அவராலேயே ஸ்ரீமன்மத்வ ஸித்தாந்தமென்னும் கற்பக விருக்ஷம் பலன்கொடுப்பதாயிற்றென்று புகழ்ந்து வைதிக ஸத்வைஷ்ணவஸித்தாந்தம் வளர்ந்து வந்துள்ள முறையை ஸ்ரீவாதீந்திர தீர்த்தர் "ஸ்ரீகுருகுணஸ்தவன" (श्रीगुरुगुणस्तवन)த்தில் அழகாக விவரித்துள்ளார்.

व्यासेन व्युप्त बीजः श्रुति भुवि भगत्पादलब्धांकुर श्रीः ।
प्रत्नैरीषत्प्रभिन्नोऽजनि जयमुनिना सम्यगुद्भिन्नशाखः ।

मौनीशव्यासराजादुदित किसलयः पुष्पितोयं जयीन्द्रा ।
दद्य श्रीराघवेंद्राद्विलसति फलितो मध्वसिद्धांतशाखी ॥

இவ்வாறு மஹிமை பொருந்திய ஸ்ரீமந்த்ராலய ப்ரபுகளுக்கு ப்ரேரக சக்தியாக, யாராலும் நிகழ்த்த முடியாத காரியங்களை அவரால் செய்விப்பதற்கும், ஜகத்திற்கு அவரை அளித்த மஹானுபாவரும், மந்த்ராலய ப்ரபுகளின் குருகளானவரும், நவப்ருந்தாவனத்தில் ஞானிகளின் மத்தியில் வீற்றிருப்பவர் ஸ்ரீஸுதீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர்கள். இப்படிப்பட்ட ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் குருபாதர், அவரை ஜகத்திற்களித்த மஹாமஹிமையுடையவரே கும்பகோணத்தில் விராஜமானரராயுள்ள ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர்கள். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரால் தத்வ சாஸ்திர ...ந்தங்களுக்கு, மத்வஸித்தாந்தத்திற்கு, மாத்வர்களுக்கு, ...பாக ஆஸ்திக மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கும், ...த்வாத்யயன சீலருமான ஸுஜன சமூகத்திற்கு ...யிருக்கும் உபகாரம் வர்ணிக்க முடியாதது. ...டைய மகிமை, விசேஷத்வங்கள், இந்த நூலின்



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஒவ்வொரு பக்கங்களிலும் வெளிப்படுகின்றபடியால் அதை நாம் இங்கு எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. மொத்தமாக ஸ்ரீவிஜயீந்திரதீர்த்தரினாலேயே இன்றைக்கும் த்வைத் ஸித்தாந்தம் நிலைத்துள்ளது என்று தாராளமாகச் சொல்லலாம்.

ஸ்ரீவிஜயீந்திரதீர்த்தரை அபரோக்ஷ க்ஞானிகள், "ಸೂರ್ಯ ಸುಗುಣಾರ್ಯ" (ஸூர்யஸுகுணார்ய) என்று பாராட்டியுள்ளார்கள். இது எழுத்துக்கெழுத்து ஸத்யம், ஸூர்யனினால் எவ்வாறு ஜகத்தோ, அவ்வாறே, விஜயீந்திரரினாலேயே மத்வஸித்தாந்த ஜகத்தென்னலாம். சூரியன் தனது ஆயிரக்கணக்கான கிரணங்களினால் உலகத்திற்கு வெளிச்சம் தந்து காப்பாற்றுவதைப் போல், இவரும் நூற்றுக்கணக்கான ஸ்வதந்த்ர க்ரந்த ரூப கிரணங்களினால் வைதிகப்ரபஞ்சத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். ஸூர்யனின் நிலை எவ்வாறு யுகயுகாந்தரமாக உள்ளதோ, அதைப்போலவே ஸ்ரீவிஜயீந்திரர் இயற்றிய க்ரந்தங்கள், மகிமைகளும், அவரது உபதேசங்களும் சாச்வதமாயுள்ளன.

இப்பேர்ப்பட்ட மஹா மஹிமரான விஜயீந்திர தீர்த்தர் யார்? எந்தக் காலத்திலிருந்தார்? அன்றைய நிலை எவ்வாறிருந்தது? அவர் அலங்கரித்த பீடம் எது? அவருடைய குருபாதர் யார்? அவர் இயற்றிய க்ரந்தங்கள் யாவை? அவர் காண்பித்த மகிமைகள் என்னென்ன? நாட்டிற்கும், ஸஜ்ஜனர்களுக்கும், மக்களுக்கும் அவரால் செய்யப்பட்ட உபகாரங்கள் யாவை? முதலிய விஷயங்களை அத்தாட்சிகளுடன், விமரிசையுடன், ஆராய்ந்து, அவரது அமர சரிதையை மக்களின் முன்பு வைக்க வேண்டுமென்னும் மாபெரும் இச்சையினால் இந்த நூலை இயற்றியுள்ளோம். ஸ்ரீவிஜயீந்திரரின் வாழ்க்கையை வெளிப்படுத்தி ப்ரகாசிக்கச் செய்ய இலக்கியம் யதேஷ்டம். இதுவரை நமக்குக் கிடைத்திருக்கும் எல்லாவிதமான ஸாஹித்யப்ரமாண நூல்களின் ஆதாரத்தின் பேரில்; முக்கியமாக "ஸ்ரீவிஜயீந்திர விஜய", "ஸ்ரீராகவேந்திர விஜய", "ஸ்ரீகுருகுணஸ்தவன", "ஸ்ரீராகவேந்திர மடத்தின் பூஜா நடைமுறை" "ஸ்ரீவிஜயீந்திர குரு ஸ்தோத்ரம்" ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் "ஷஹா அமல்" தஸ்தாவேஜுகள், தாமிர சாசனங்கள், அபரோக்ஷக்ஞானிகளின் பதங்கள், கவிதைகள், ஸுளாதிகள், வரலாற்று நிகழ்ச்சிகளைப் பற்றி வெளியான Epigraphica Indica, Aravidu Dynasty of Vijayanagaram, முதலான நூல்கள்,


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீமடத்தில் பரம்பரையிலிருந்து தெரிந்துள்ள, அத்தாட்சிகளுடன் கதைகள், கும்பகோண தேவாலயங்களில். த்ரிமதஸ்த வயோதிகர்கள் சொல்லும்-பரம்பரையினால் தெரிந்த கதா-பாகங்கள், இவையெல்லாவற்றையும் ஆதியோடந்தமாகப் பரிசீலனை செய்து, விமரிசித்து, "ஸ்ரீகுரு சரிதெ"யில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கால தேசங்களையனுசரித்து, உறுதிப்படுத்தி, ப்ராமாணிக புத்தியினால் இந்த நூல் இயற்றப்பட்டுள்ளது. கூடுமானவரையில் வரலாற்று நிகழ்ச்சிகளின் சூழ்நிலையிலேயே அந்தக் காலத்தவர்களை உபயோகித்துக் கொண்டு மூலத்திற்கு விரோதமில்லாமல் நூலை இயற்றியுள்ளோம் (மூலம்-Original).

ஸ்ரீவிஜயீந்திர விஜயம், ஸ்தோத்ரம் இதர நூல்களில் ஸ்ரீவிஜயீந்திரர் 64 கலைகளில் நிபுணராக இருந்தனரென்று விவரிக்கப்பட்டுள்ளது. அந்தக்ரந்தங்களில் தெரிவிக்கப் பட்டுள்ள ஸ்ரீவிஜயீந்திரரின் 64 கலை நிபுணத்வத்தை நாம் அந்தந்த சமய சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமாக கதை உருவத்தில் விவரித்துள்ளோம்.

இந்த நூலில் வரும் ஸ்ரீவிஜயீந்திரரின் வாக்யார்த்தங்களுக்கு அவர் இயற்றியுள்ள க்ரந்தங்கள் மற்றும் கண்டன க்ரந்தங்களிலுள்ள விஷயங்களைத் தான் விசேஷமாக உபயோகித்துக் கொண்டுள்ளோம். கிடைக்கின்ற இலக்கிய ப்ரமாணங்களின் ஆதாரத்தின் பேரில் ஸ்ரீவிஜயீந்திரரின் வாழ்க்கையில் க்ரமமாக நடந்திருந்த நிகழ்ச்சியை ஒட்டியே அவரது அமர சரிதையை 70 அத்யாயங்களில், "ஸ்ரீ அஜய்ய-விஜயீந்திரர்" என்னும் பெயரினால் இயற்றி ஆஸ்திகரான ஸஜ்ஜனங்களுக்கு அர்ப்பணித்துள்ளோம். குணங்களை க்ரஹிப்பவர்களும், வித்யையை ஆதரிப்பவர்களும் தாராளமனப்பான்மை யினருமான ஸஜ்ஜனங்கள் இந்தப் பெரிய நூலைப்படித்து ஆநந்தித்து, ஸ்ரீவிஜயீந்திர குருவர்யரின் அனுகிரஹம் நமக்கு ஏற்படும்படி ப்ரார்த்தனை செய்து கொண்டு இதைப்போல அநேக நூல்களை இயற்றுவதற்கு நம்மை ஊக்குவிப்பார்களென்று நம்பியுள்ளோம்.

**ஸ்ரீவிஜயீந்திரரின் கால நிர்ணயம்:-**

ஸ்ரீவிஜயீந்திரரின் காலத்தை நிர்ணயிக்கும்பொழுது அநேக விஷயங்களைக் கவனிக்க வேண்டி ஏற்பட்டது.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
ஸ்ரீவ்யாஸ ராஜர், ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர், ஸ்ரீவாதிராஜ தீர்த்தர், ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர், கிருஷ்ண தேவராயர்-இவர்களின் காலம் விஜயீந்திரரின் காலதேசங்களை விமரிசனம் செய்து எழுதியுள்ள பண்டிதர்களின் நூல்கள், Dr. B.N.K. சர்மா மற்றும் Dr. ஹுலி, கை வேதவ்யாஸாசார்யர் நிர்ணயித்துள்ள ஸ்ரீவிஜயீந்திரரின் கால நிர்ணயம் இவ்வெல்லாவற்றையும் சரியாக ஆலோசித்து நிர்ணயம் செய்ய வேண்டியதாயிற்று. பலவிதங்களில் விமரிசனம் செய்து, ஸ்ரீ மடத்தின் அத்தாட்சிகளுக்கு மற்றும் குரு சரிதைக்கு விரோதமில்லாதபடி கிடைக்கும் அத்தாட்சிகளை உபயோகித்துக் கொண்டு நாம் ஸ்ரீவிஜயீந்திரரின் காலத்தை கி.பி.1517லிருந்து 1614 வரையென்று நிர்ணயித்துள்ளோம். ஸ்ரீவிஜயீந்திரர் கி.பி.1517லிருந்து 1614 வரை ஏறக்குறைய 97 வருட நீண்ட காலம் வாழ்ந்திருந்தாரென்பது நமது நிர்ணயத்தினால் தெரியவருகிறது.

பீடாதிபதிகளின் காலத்தை மூன்று விதமாக விவரிப்பது வாடிக்கையாக உள்ளது. (1) பிறந்ததிலிருந்து ப்ருந்தாவனஸ்தராகும் வரை காலத்தைச் சொல்வது ஒரு க்ரமம் (2) பரமஹம்ஸாச்ரமம் பெற்றதிலிருந்து ப்ருந்தாவனஸ்தராகும் வரை காலத்தைத் தெரிவிப்பது இன்னொரு முறை (3) மஹா ஸமஸ்தானாதிபதிகளாகவிருந்த காலத்தைத் தெரிவிப்பது மற்றொரு கிரமம். நாம் இங்கு சொல்லியிருப்பது ஸ்ரீவிஜயீந்திரரின் ஜனனத்தி (1517 A.D.) லிருந்து ப்ருந்தாவனஸ்தராகும் வரை (1614 A.D.) காலத்தைத் தெரிவிப்பது.

நமது இந்த நிர்ணயத்திற்கு உறுதியான கீழ்க்கண்ட தாமிர சாஸனங்கள், கிரந்தங்கள் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் ஆச்ரம சமயம் முதலியவற்றை ஆதாரமாகவும் பிரமாணங்களாகவும் கொண்டுள்ளன.

1) கி.பி.1575ல் ஸ்ரீரங்கராஜன், விஜயீந்திரருடன் இருக்கையில் ஸுரேந்திரருக்குத் தானம் செய்த தாமிர சாஸனம்.

கி.பி.1576ல் ஸ்ரீரங்கராஜன் ஸுதீந்திர தீர்த்தருக்கு அளித்த கிராமதான தாமிர சாஸனம்.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

3) கி.பி.1577ல் ஸ்ரீரங்கராஜன் ஸ்ரீவிஜயீந்திரருக்கு உறுதிப்படுத்திக் கொடுத்த, "அரவிலிமங்கலம்" என்னும் கிராம தான தாமிர சாஸனம்.

4) கி.பி.1580ல் தஞ்சாவூரின் சிவப்ப (செவ்வப்ப) நாயகன் ஸ்ரீ விஜயீந்திரருக்களித்த கிராம தான தாமிர சாஸனம்.

5) கி.பி.1614 செவ்வப்ப நாயகனின் சகோதரனும், மன்னார்குடி ப்ராந்தியத்தின் அரசனுமான சின்ன செவ்வப்ப நாயகன் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருக்கு அளித்த 2 தான தாமிர சாஸனங்கள்.

6) ஸ்ரீ வாதீந்திர தீர்த்தர் இயற்றியுள்ள, "ஸ்ரீராகவேந்திர மடத்தின் பூஜாக்ரமங்கள்" என்னும் கிரந்தம்.

7) ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் அதிகாரம் பெற்ற குரு பரம்பரை சரித்திரத்தை விவரிக்கும் குரு சரித இவைகளின் ஆதாரத்துடன் ஸ்ரீவிஜயீந்திரரின் காலத்தை கி.பி.1517-1614 A.D. என்ற தீர்மானத்திற்கு வந்துள்ளோம்.

ஸ்ரீவித்யாபூஷணம் Dr.B.N. கிருஷ்ணமூர்த்தி சர்மா அவர்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் காலத்தை கி.பி.1519 (விகாரி)யிலிருந்து 1595 மன்மத வருடம் வரை என்று நிர்ணயித்திருக்கிறார். Dr. சர்மா அவர்கள் (1) ஸ்ரீவடவி பீமாசார்யர் அச்சிட்ட ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளவர்களின் மடத்தின் வம்சாவளி, (2) ஸ்ரீ ஸ்ரீவ்யாஸராஜரின் நிர்யாண காலம், (3) கும்பகோணத்தின் பண்டிதர்களின் பரம்பரையினால் நம்பமுடிகிறதென்று நினைப்பதாக உள்ள ஸ்ரீஸுரேந்திர-விஜயீந்திரர்களின் நிர்யாண வருஷங்கள், (4) Dr. R. நாகராஜ சர்மா அவர்கள் "भावबोध" (பாவபோத) கிரந்தத்திற்கு எழுதியுள்ள முன்னுரையில் ஏற்றுக் கொண்டுள்ள காலம் முதலியவைகளின் ஆதாரங்களினால் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் காலத்தை கி.பி.1539 (விகாரி) யிலிருந்து 1595 (மன்மத) வருடம் வரை என்று நிச்சயித்துள்ளார். Dr. Huli கை வேதவ்யாஸாசார்யர் ஸ்ரீவிஜயீந்திர தீத்தரின் காலத்தை A.D. 1575-1614 வரையென்று நிர்ணயித்துள்ளார்.

நமது நிர்ணயமும் (1517 A.D.-1614 A.D.) ஸ்ரீவிஜயீந்திர ஜனனவர்ஷத்திலிருந்து ப்ருந்தாவனஸ்தரான வருடம் வரையுள்ள காலத்தைத் தெரிவிக்கிறது. Dr. வேத


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
வ்யாஸாசார்யரின் காலதேச நிர்ணயம் ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்தர் மஹாஸமஸ்தானாதிபத்யத்தை ஆண்ட (கி.பி.1575-1614) காலத்தைக் குறிக்கிறது. ஆகையால் Dr. வேதவ்யாஸாசார்யர் மற்றும் நமது நிர்ணயங்கள் பரஸ்பரம் விரோதமாகக் காணப்பட்டாலும் உண்மையாக விரோதமாக விருக்கவில்லை.

Dr.B.N.K. சர்மா அவர்கள் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் கி.பி.1539ல் (விகாரி) நிர்யாணமானார் என்று தீர்மானித்து அங்கிருந்து ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் காலத்தை ஆரம்பித்து கி.பி.1595 வரையிலும் (மன்மத) என்று நிர்ணயித்துள்ளார். ஆனால் Dr. சர்மா அவர்கள் நிச்சயித்துள்ள ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் நிர்யாண காலம் (விகாரி) 1539 A.D. மற்றும் விஜயீந்திர தீர்த்தரின் நிர்யாண காலம் (மன்மத) 1595 A.D. என்பவை சரியல்லவென்று அநேக அத்தாட்சிகளினால் தெரிகின்றது. Dr. சர்மா அவர்கள் மேலே சொன்ன கால நிர்ணயத்தை விரோதமென்று சொல்லும் ப்ரமாணங்கள் இவ்வாறு உள்ளன.

1. ஸ்ரீசக 1497, யுவ ஸம். ஆஷாட சுக்ல ப்ரதம த்வாதசி ஸோமவாரம், தேதி 20-6-1575ல் (Mysore Arch Report 1944, Inscription No.21) பெனுகொண்டாவில் ஸ்ரீரங்கராஜன் ஸ்ரீவிஜயீந்திரருடன் இருக்கையில் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு, "நாவலூர்" அல்லது "ராமசந்திராபுரம்" என்னும் கிராமத்தைத் தானமாக அளித்துள்ளான். அந்த கிராமத்தை ஸ்ரீஸுரேந்திரர் 20 கியாதி பெற்ற பண்டித மணிகளுக்குத் தொழில் (உத்யோகம்) ஏற்படுத்தி தானம் செய்துள்ளார். இது தாமிர சாஸனத்திலேயே புகழப்பட்டுள்ளது. இதிலிருந்து ஸ்ரீஸுரேந்திரர் கி.பி.1575 வரை வாழ்ந்திருந்தாரென்பது நிரூபணமாகிறது. Dr. சர்மா அவர்கள் சொல்லுகிற ப்ரகாரம் ஸுரேந்திரர் கி.பி.1593 (விகாரி)ல் நிர்யாணமானாரென்று ஒப்புக்கொண்டால் உறுதிப்படுத்தும் இந்தத் தாமிர சாஸன ப்ரமாணத்திற்கு (அத்தாட்சிக்கு) விரோதமேற்படுகிறது.

2. ஸ்ரீசக 1497, யுவ ஸம், மாக க்ருஷ்ண த்ரயோதசி, 28-1-1576ல் ஸ்ரீரங்கராயன் ஹம்பியில் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு 5 க்ராமங்களைத் தானம் செய்து தாமிர சாஸனத்தைக் கொடுத்திருக்கிறான். (Mysore Arch.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

Report 1944 p.139 Note No.22)ல் அந்தக் கிராமங்கள் மடத்தின் அதிகாரத்திலிருந்தன. இதனால் ஸ்ரீஸுரேந்திரர் 1576ல் பரமஹம்ஸாச்ரமிகளாக இருந்தது வெளிப்படை. மற்றும் 1575ல் ஸ்ரீஸுரேந்திரர் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு ஆச்ரமம் அளித்து அவரை விஜயீந்திரருக்குச் சிஷ்யராக அர்ப்பணித்தது வெளிப்படையாக உள்ளது. Dr. சர்மா அவர்களின் நிர்ணயப்படி ஸ்ரீஸுரேந்திரர் 1539 A.D. (விகாரி)யில் நிர்யாணமடைந்தாரென்று ஒப்புக் கொண்டால், 1576 வருடத்தின் இந்தத் தாமிர சாஸனத்திற்கு விரோதம் வருகிறது.

3. ஸ்ரீவாதீந்திர தீர்த்தர் குரு பரம்பரை ப்ரதிமா முதலிய விஷயங்களை விவரிக்கும் பொழுது ஸ்ரீஸுரேந்திரர் ஸ்ரீவ்யாஸராஜரால் ஸந்நியாஸம் கொடுக்கப்பட்ட விஷ்ணு தீர்த்தரை (விஜயீந்திரரை) ஸ்வீகாரம் செய்து கொண்டதினால் ஸ்ரீமதாசார்ய பரம்பரையிலிருந்து தமது ஸமஸ்தானத்தில் அவிச்சின்னமாக (தொடர்ந்து) நடந்து வந்துள்ள ஆசிரமமளிக்கும் வழக்கம் விட்டுப்போய்ப் பரம்பரை பரம்பரையாக வந்த பழக்கம் தவறிவிட்டதென்ற அபவாதத் (அவச்சொல்)திற்கு ஆளாகக் கூடாதென்று ஸ்ரீவிஜயீந்திரறிந்த போதிலும் தாமே மற்றொருமுறை ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்குப் பரம்ஹம்ஸ ஆச்ரமத்தையளித்து அவரை ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருக்குச் சிஷ்யராக்கி ஒப்புவித்தாரென்று வெளிப்படையாக, "ஸ்ரீராகவேந்த்ர மடத்திய பூஜை க்ரமம்" என்னும் க்ரந்தத்தில் எழுதியுள்ளார்.

"सुरेन्द्रः संप्रदायास्त न्यासविच्छेद भीरुकः ॥
सुरेंद्रं न्यासयित्वा तं विजयीन्द्र करे ददौ ॥"

மேலே கொடுக்கப்பட்ட ப்ரபல ப்ரமாணத்தினால் ஸ்ரீஸுரேந்திரர் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு ஆச்ரமமளித்து ஸ்ரீவிஜயீந்திரருக்கு அர்ப்பித்தாரென்று நிரூபணமாவதினால், 1576 A.D.யின் தாமிர சாஸனம் ஸ்ரீஸுதீந்திரர் 1576ல் பரமஹம்ஸராயிருந்தாரென்பதை நிரூபிப்பதினால் 1575ன் தாமிர சாஸனம் 1575இல் ஸ்ரீஸுரேந்திரர் வாழ்ந்திருந்தாரென்பதை நிரூபிப்பதால் ஸ்ரீவாதீந்திர தீர்த்தரின் க்ரந்தத்தின் மேற்கூறிய ப்ரமாணம் அதை


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

உறுதிப்படுத்துவதினால் Dr. சர்மா அவர்களின் நிர்ணயப்படி ஸ்ரீஸுரேந்திரர் A.D.1539ல் ப்ருந்தாவனஸ்தரானாரென்று ஒப்புக்கொண்டால் ஸ்ரீஸுதீந்திரரின் காலத்தை கி.பி.1539 வரை பின்னுக்குத் தள்ள வேண்டி வந்து, ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் ஸ்ரீஸுரேந்திரரின், ஸ்ரீகுருராஜரின் கால தேசங்களுக்கு மற்றும் 1575, 1576வது வருஷத்திய தாமிர சாஸனங்களுக்கும், ஸ்ரீவாதீந்திர தீர்த்தரின் க்ரந்தம் முதலிய அநேக ப்ரமாணங்களுக்கும் விரோதம் வருகிறது.

ஸ்ரீமன் மத்வாசார்யரின் பட்டத்து சிஷ்யரான ஸ்ரீபத்மநாப-நரஹரி-மாதவ-அக்ஷோப்யதீர்த்தரின் சிஷ்யரான ஸ்ரீஜயதீர்த்தரின் வித்யா பீடத்தில் அவரது சிஷ்யரான ஸ்ரீவித்யாதிராஜரினால் ஏற்பட்டு ஸ்ரீகவீந்திர தீர்த்தர் மற்றும் ஸ்ரீராஜேந்திர தீர்த்தரின் பரம்பரையின் பீடாதீச்ரைத் தக்ஷிண பாரதத்தின் எல்லா ராஜா மஹாராஜாக்கள் கௌரவித்து வந்திருந்தார்கள். ஸ்ரீராஜேந்திர தீர்த்தரின் பரம்பரையின் ஸ்ரீவ்யாஸராஜகுரு ஸார்வ பௌமரை விஜய நகரத்தின் சக்ரவர்த்திகள் விசேஷ பக்தி-சிரத்தையுடன் கௌரவித்ததைப் போலவே ஸ்ரீகவீந்திர தீர்த்தரின் வித்யாபீடத்தின் ஸ்ரீஸுரேந்திர தீர்த்த யதிஸார்வ பௌமரையும் விசேஷமாக கௌரவித்து வந்தனர். அதன் பிரகாரமே கர்நாடக ஸாம்ராஜ்யாதிபதியான ஸ்ரீரங்கராஜனும் ஸ்ரீவிஜயீந்திரருடன் கூடியிருந்த ஸ்ரீஸுரேந்திரருக்கு 20-6-1575இல் கிராம தானம் முதலியவை மூலமாக கௌரவத்தையளித்து ஸ்ரீமதாசார்யரின் பீடத்தைக் கௌரவித்தனர்.

இதான ஆறு ஏழு மாதங்களுக்குப் பிறகு ஹம்பியில் 20-1-1576ல் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்குக் கிராமதானம் செய்து, ஸ்ரீஸுதீந்திரர் ஸுரேந்திரரிடமிருந்து ஆச்ரமம் ஸ்வீகரித்து ஸ்ரீவிஜயீந்திரரின் சிஷ்யராய் ஸ்ரீஸர்வஜ்ஞரின் மஹா பீடத்தில் விராஜமானராகப் போகும் அதிகாரம் பெற்ற பீடாதிபதிகளென்று ஒப்புக் கொண்டு கிராமதானத்தின் மூலம் கன்னட ஸாம்ராஜ்யத்தின் ஒப்புதலை அதிகாரம் பெற்றுத் தன்னுடைய பக்தி-கௌரவங்களை அர்ப்பித்து அறிக்கைவிடுத்தான். இது ஸ்ரீஸுரேந்திரர், ஸ்ரீவிஜயீந்திரர் இருக்கும் போதே ஸ்ரீஸுதீந்திரருக்கு ஆச்ரமம் கொடுத்து ந்யாஸம் விட்டுப் போகாமலிருக்கும்படி செய்ததற்கு கன்னட சக்ரவர்த்தியின் ஒப்புதல் மற்றும் சந்தோஷத்தையும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தெரிவிப்பதல்லாமல் "ஸ்ரீமத்ஸுரேந்திரயதிராட் பாணிபங்கஜன்மனாம். ஸர்வ தந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீவிஜயீந்திரார்ய யோகினாம் நிஜாந்தே வாஸினே மத்வ ஸித்தாந்தார்த்தோப தேசினே! ...... ராஜாதி ராஜ கோபுர கோடி கூடார்ச்சி தாங்க்ரயே ஸ்ரீஸுதீந்த்ர யதீந்த்ராய....."

श्रीमत्सुरेन्द्रयतिराद पाणिपंकजन्मनां । सर्वतंत्रस्वतंत्र श्री विजयीन्द्रार्य योगिनां । निजांतेवासिने मध्वसिद्धांतार्थोप देशिने....! राजाधिराज कोटीर कोटि कूटार्चितांघ्रये । श्रीसुधींद्र यतींद्राय......" என்னும் வ்யாக்யானத்தினால் தானம் செய்துள்ளதினால் ஸ்ரீஸுரேந்திரருக்குத் தானம் செய்த 5-6 மாதங்களில் ஸ்ரீஸுரேந்திரர் நிர்யாண மடைந்து அந்தப் பீடத்திற்கு உத்தராதிகளாய் ஸ்ரீஸுதீந்திரர் சிறியபட்டத்து அதிபதிகளாயிருந்தாரென்றும் வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. இதற்கு ஸ்ரீவாதீந்திரரின் "अर्चायति क्रम" என்பது உறுதியளிக்கிறது. Dr. சர்மாவின் நிர்ணயத்தை ஒத்துக்கொண்டால் இந்த எல்லா வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் மற்ற ப்ரமாணங்களுக்கும் விரோதம் வருகிறது.

4. ஸ்ரீசக 1499, தாது ஸம், ஆஷாட சுக்ல த்வாதசி கி.பி.1577ல் சக்ரவர்த்தி ஸ்ரீரங்கராஜன் தஞ்சாவூரின் செவ்வப்ப நாயக்கனின் மகன் ராஜகுமாரன் அச்யுதப்ப நாயகன் ஸ்ரீவிஜயீந்திரருக்குத் தானமாகக் கொடுத்திருந்த "அரவிலி மங்கலம்" அல்லது "அச்யுதப்ப ஸமுத்திரம்" என்னும் கிராமத்தை செவ்வப்ப நாயகனின் கோரிக்கைப்படி ஸ்ரீவிஜயீந்திரருக்குத் தானும் தானம் கொடுப்பதன் மூலம் கிராமதானத்தை உறுதிப்படுத்தி ஸ்ரீவிஜயீந்திரரின் விருப்பப்படி அந்தக் கிராமத்தை தொழில் (உத்யோக) அக்ரஹாரங்களாகப் பிரித்து 23 பண்டிதர்களுக்கு ஸ்ரீவிஜயீந்திரரினால் தானம் செய்வித்து அந்த விஷயத்தைப் புகழ்ந்து தாமிர சாஸனத்தை அளித்துள்ளான். (Mysore Arch. Report 1944 and Epigraphica Indica).

Dr. சர்மா அவர்களின் நிர்ணயத்தை ஒப்புக் கொள்ளும் பக்ஷத்தில் ஸ்ரீஸுரேந்திரருக்கு ஸ்ரீரங்கராயன் கொடுத்த 1575ம் வருடத்திய தாமிர சாஸனத்திற்கு விரோதம் வருகிறது. கி.பி.1539ல் (Dr. சர்மா அவர்களின் நிர்ணயப்படி) ஸ்ரீஸுரேந்திரர் ப்ருந்தாவனஸ்தராகியிருந்தால் 1575 A.D.யில்


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அவருக்கு ஸ்ரீரங்கராயன் கிராம தானம் செய்து தாமிர சாஸனம் கொடுக்க ஸாத்யமில்லை, ஸ்ரீரங்கராயனின் காலத்தை 1539 வரை பின்னால் தள்ளுவது சரித்திர ப்ரஸித்தமாயுள்ள அவனது கால நிர்ணயத்திற்குப் பாதகம் வருகிறது.

5. ஸ்ரீசக 1536, ஆனந்தநாமஸம், சைத்ர சுக்ல ஸ்ரீராமநவமி தின (9-3-1614) மஹாபிஷேக காலத்தில் சின்ன செவ்வப்ப நாயகன் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருக்கு ஒரு உத்தமமான நெல் விளையும் பூமி மற்றும் ஸ்ரீவிஜயீந்திர ப்ருந்தாவன ஸந்நிதியின் பக்கத்திலுள்ள தோட்டத்தைத் தானம் செய்து 2 தான தாமிர சாஸனங்களை அர்ப்பித்திருக்கிறான். (Mysore Arch. Report 1944, Inscription No.27, 28) அவை இப்பொழுதும் கூட ஸ்ரீ மடத்தின் சொத்தாக உள்ளது. Dr. சர்மா அவர்களின் நிர்ணயப் பிரகாரம் ஸ்ரீவிஜயீந்திரர் கி.பி.1595ல் ப்ருந்தாவனஸ்தரானாரென்று ஒப்புக் கொண்டபக்ஷத்தில் இந்த மஹா ப்ரமாணத்திற்கு விரோதம் வருகிறது. Dr. சர்மா அவர்கள் இந்தத்தான தாமிர சாஸனங்களை ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருக்குப் பிறகு அவர் மீதிருந்த பக்தியினால் அவர் பெயருக்கு எழுதி அவருடைய சிஷ்யருக்கு 1614ல் கொடுத்திருக்கலாம் என்று சொல்லும் சமாதானம் உசிதமானதாகத் தெரியவில்லை. அது மாத்திரமல்ல; அது ஸ்ரீவிஜயீந்திரர் 97 வருடங்கள் வரை வாழ்ந்திருந்தாரென்று பரம்பரையாக ஸ்ரீமடத்தில் தெரிந்துள்ள கதைக்கும் "குரு சரிதை"க்கும் விரோதமாகிறது. மற்றும் ஸ்ரீவிஜயீந்திரரின் தொடர்ந்து சிஷ்யராயிருந்த சின்ன செவ்வப்ப நாயகர் அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே தானம் செய்யாமல் அவருக்குப் பிறகு சிஷ்யருக்குக் கொடுத்தாரென்பது சரியென்று தோன்றவில்லை. மற்றும் தான தாமிர சாஸனத்தில், "....विजयींद्राख्य योगिने ॥ मठे नित्यान्नदानाय । मांत्रिभिर्विबुद्ध्यै स्साधं भार्याबंधुसमन्वितः। भूयसे श्रेयसे प्रादात्......"! அதாவது ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருக்கு மடத்தில் அனுதினமும் அன்னதானத்திற்காக மந்திரிகள், மற்றும் பத்னி, பந்து ஸமன்விதமாக அதிகமான கீர்த்தியுண்டாகட்டும் என்று தானம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

செய்தான் என்ற ப்ரத்யக்ஷ விஷயத்திற்கு விரோதமாவதினால் Dr. சர்மா அவர்களின் ஸமாதானம் சரியானது என்று சொல்லுவதற்கில்லை.

6. ஸ்ரீவடவீ பீமாசார்யர் 1930ல் வெளியிட்டுள்ள ராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் குரு பரம்பரையின் ஆச்ரம-நிர்மாண காலத்தைத் தெரிவிக்கும் குருவம்சாவளி ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்து அதிகாரம் பெற்ற குருவம்சாவளியல்ல. அதை வெளியிடும் பொழுது ஸ்ரீவடவி பீமாசார்யர் அச்சமயம் பீடாதிபதிகளாயிருந்த பூஜ்ய ஸ்ரீஸுவ்ரதீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவருடைய அனுமதி பெற்று அல்லது ஸ்ரீமடத்திலிருந்து பரம்பரையின் குருவம்சாவளி, அதற்குச் சம்பந்தப்பட்ட கால தேசங்களை வரவழைத்து அச்சிடவில்லை, (வெளியிடவில்லை) யாதலால் அதி அதிகாரம் பெற்ற குரு வம்ச பரம்பரையாகாது. ஆகையால் அதில் விவரித்துள்ள ஸ்ரீஸுரேந்திரரின் நிர்யாண விஜயீந்திர நிர்யாண காலங்கள், ஸ்ரீமடத்தின் குரு சரிதைக்கும், இதரப்ரமாணங்களுக்கும், தாமிர சாஸனங்களுக்கும் விரோதமாகியிருப்பதனால் அதை மூலமாக வைத்துக் கொண்டு நிர்ணயித்திருக்கும் காலங்களுக்கும் அதே விரோதம் வருகிறது.

7. Dr.R. நாகராஜ சர்மா அவர்களின் நிர்ணயமும் இதே வகையைச் சேர்ந்ததாகும்.

8. ஸ்ரீமடத்தின் வரலாறு, குரு பரம்பரையை எழுதும்பொழுது ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடாதீசராக விருந்த பூஜ்ய கீர்த்தி சேஷ ஸ்ரீஸுயமீந்திர தீர்த்தர் ஸ்ரீமடத்தில் மூல குரு வம்சாவளி, தஸ்தாவேஜுகள், தாமிர சாஸனங்கள், இதர ப்ரமாண க்ரந்தங்களை ஸாவதானமாகப் பரிசீலனை செய்து, வ்ரலாற்று ஆராய்ச்சி பண்டிதரினால் விமரிசித்து, ப்ரமாணங்களுக்கு அனுஸரணையாக, (பின்பற்றி) ஸ்ரீமடத்தின் அதிகாரம் பெற்ற குரு பரம்பரா சரித்தையான, "குரு சரிதை"யை எழுதும் படி செய்துள்ளார். அதில் விவரித்துள்ள கால தேசங்கள்


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அதிகாரபூர்வமானவை ஆகையினால் Dr. சர்மா அவரின் நிர்ணயத்தை ஒப்புக் கொண்டால் 'அதற்கு விரோதம் வருகிறது.

9. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் பரம்பரையில், ஸ்ரீமடத்தின் பண்டித பரம்பரையில் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் 98 வருடங்கள், ஸ்ரீவிஜயீந்திரர் 97 வருடங்களுக்கு மேல் வாழ்ந்திருந்தாரென்று நம்பிக்கையுள்ளது. ஸ்ரீவிஜயீந்திரரின் கால நிர்ணயம் செய்யும்பொழுது அந்த மடத்தில் அந்த மடத்தின் பண்டித பரம்பரையில் வழக்கத்திலுள்ள விஷயங்களை ப்ரமானமாக அங்கீகரிக்க வேண்டியதாக உள்ளது. கும்பகோணத்தில் சில பண்டிதர்களில் ஸ்ரீஸுரேந்திரர் 1539 A.D. (விகாரி)யிலும், ஸ்ரீவிஜயீந்திரர் கி.பி.1595 (மன்மத) வருடத்திலும் ப்ருந்தாவன ஸ்தரானாரென்ற நம்பிக்கை இருப்பதை ஆதாரமாகக் கொண்டு Dr. சர்மா அவர்கள் நிர்ணயித்திருக்கும் காலங்கள் ஸ்ரீமடத்தின் பரம்பரையின் நம்பிக்கைக்கு விரோதமாக உள்ளது.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் எல்லாவிதமான துரிதமான நடவடிக்கைகள், அதாவது பரவாதி திக்விஜயம், ஸித்தாந்த ஸ்தாபனம், 64 கலைகளில் திறமைகளைக் காண்பிப்பது, பாடப்ரவசனம், வித்யா பீடஸ்தாபனம், தீர்த்த க்ஷேத்ராடனம், சிஷ்யர்களை உய்விக்க தேச சஞ்சாரம், க்ரந்தமியற்றுதல், ராஜாதி ராஜர்களினால் கௌரவமடைந்தது முதலானவை ஏறக்குறைய 1540 இலிருந்து 1600 வரை இடையிலுள்ள காலத்திலிருக்கும் என்னும் எண்ணம்" இருப்பதினால் Dr. சர்மாவின் நிர்ணயப்படி ஸ்ரீவிஜயீந்திர காலத்தை கி.பி.1539லிருந்து 1595 வரை ஒப்பக்கூடுமாயினும் "ஸ்ரீகுரு சரிதை" மற்றும் தாமிர சாஸனம் முதலிய ப்ரமாணங்களுக்கு விரோதமாக இருப்பதினால் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் ஸத்பரம்பரை, கீர்த்தி கௌரவம் முதலியவைகளுக்கு Dr.சர்மா அவர்கள் ஸ்ரீ மடத்தின் ப்ரமாணங்களைப் பொருட்படுத்தாமல் செய்துள்ள நிர்ணயம் சரியல்லவாகையினால், அதை நாம் அங்கீகரிக்க இடமில்லை.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

Dr. கிருஷ்ணமூர்த்தி சர்மா அவர்கள் ப்ரக்யாதி வாய்ந்த பண்டிதரும், திறமை வாய்ந்த விமரிசகரும், உயர்ந்த நூலாசிரியரும், வரலாற்று ஆராய்ச்சியாளருமானவர். மஹா புருஷர்களின் கால தேச விஷயத்தில் அபிப்ராய பேதம் காணுவது இயற்கையே. அந்தந்தக் காலங்களில் கிடைக்கும் சான்றுகளை வைத்துக் கொண்டு, அதன்படி வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் விமரிசித்துக் கால தேசங்களை நிச்சயிக்கின்றனர். வருங்காலத்தில் சான்றுகள் கிடைத்தால் வேறொரு ஆராய்ச்சியாளர் முந்தின நிர்ணயத்தை மாற்றிப் புதிதாகக் காலத்தை நிர்ணயிக்கலாம். இது புதிதல்ல. அநேகப் புராதன கவிகளின், ஆசார்யரின், வீரபுருஷரின் கால தேசங்களின் விஷயத்தில் இன்னும் அபிப்ராய பேதங்களிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஒவ்வொரு வரலாற்று ஆராய்ச்சியாளரும் தமது நிர்ணயமே சரியென்று நிரூபிக்கின்றனர். அதுபோலவே நமது அன்புக்குரிய பெரிய நண்பரான Dr.B.N. க்ருஷ்ணமூர்த்தி சர்மா அவர்கள் தமது வாதத்தை உறுதிப்படுத்த விரும்புவது இயற்கையே.

Dr. சர்மா அவர்களின் நிர்ணயத்தை ஒப்புக் கொள்ளக் கூடாதென்ற பிடிவாதம் நமக்கு இல்லை. அவருடைய அநேக நிர்ணயங்களை நாம் மரியாதையுடன் காணுகிறோம். ஆனால் ஒரு மஹாஸமஸ்தானத்தின் அதிகாரபூர்வமான குரு பரம்பரையின் கால தேசங்களை நிர்ணயிக்கும்பொழுது அந்த ஸமஸ்தானத்தின் சம்பந்தமான சான்றுகளை ஒப்புக் கொண்டு அதை உறுதியாக்கி நிர்ணயிக்க வேண்டியது உசிதமாகும். அந்த ஸமஸ்தானத்தின் வரலாற்று முக்கிய சம்பவங்களை ப்ரகாசப்படுத்தும், அந்த பீடத்திற்குக் கௌரவமும், மகத்துவத்தை ஸ்பஷ்டமாகக் காண்பிக்கும் சான்றுகளையெல்லாம் தமது நிர்ணயத்திற்குப் பொருந்துவதில்லையென்னும் காரணத்தினால் பொருட்படுத்தாமாலிருப்பது கண்டு நடுநிலைமை வகிப்பது அந்தப் பரம்பரையைச் சார்ந்தவர்களுக்கு கௌரவமளிப்பதல்லதாகையினாலும், அந்தப் பரம்பரையின் மகத்துவத்தை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கும் சான்றுகளை ஆதாரத்துடன் உயர்த்திக்காட்ட வேண்டியது அவசியமான கடமையாவதினாலும் அநேக அத்தாட்சிகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள "குரு சரிதெ"யின் ஆசிரியரின் நிர்ணயத்தை நாம் இங்கு ஆமோதித்துள்ளோம்.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மேலே செய்யப்பட்ட விமரிசையினால் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் சான்றுகளுக்கு Dr. சர்மா அவர்களின் நிர்ணயம் வேறுபட்டதாயிருப்பதினால் Dr. வேதவ்யாஸாசார்யர் நிர்ணயித்துள்ளவை ஸரியானவை யென்று நிச்சயத்திற்கு வந்துள்ளோம் என்பது தெரியாம லிருக்காது. ஆகையால் ஸ்ரீஸுரேந்திரர் கி.பி.1575ல் நிர்யாணமானார். ஸ்ரீவிஜயீந்திரர் கி.பி.1571லிருந்து 1614 வரையிலும் வாழ்ந்திருந்தார் என்னும் நிர்ணயத்தை விரோதிக்கும், ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்தின் சம்பந்தப்பட்ட ப்ரபல சான்றுகள் புதிதாகக் கிடைக்கும் வரை ஸ்ரீஸுரேந்திரர் 1575இல் நிர்யாணமடைந்தார், ஸ்ரீவிஜயீந்திரர் கி.பி.1571லிருந்து 1614 வரை வாழ்ந்திருந்தார் என்னும் நிர்ணயத்தைச் சொல்ல விரும்புகிறோம்.

இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் வாழ்க்கையின் சில முக்கிய நிகழ்ச்சிகளின் காலங்களை இவ்வாறு சொல்லலாம். ஸ்ரீஸுரேந்திரரின் ஜனனம் கி.பி.1477. பரமஹம்ஸ ஆச்ரமம் பெற்றது 1504 A.D. விஜயநகரத்திற்கு முதல் விஜயம் 1513 A.D. இரண்டாவது முறை விஜயநகரத்திற்கு வந்து ஸ்ரீவ்யாஸராஜரிடமிருந்து ஸ்ரீவிஷ்ணுதீர்த்தரைப் பெற்றுக் கொண்டது கி.பி.1530 ஸ்ரீஸுதீந்திரருக்கு ஆச்ரமமளித்தது கி.பி.1575 நிர்யாணம் சக ஆண்டு 1497 யுவ ஸம். புஷ்ய சுக்லத்வாதசி (கி.பி.1575). அவ்வாறு ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் கி.பி.1504லிருந்து 1575 வரையில் 70 வருடங்கள் காலம் மஹா ஸமஸ்தானத்தைம் ஆட்சிபுரிந்து ஸ்ரீவிஜயீந்திரர் ஸுதீந்திரரினால் சேவிக்கப்பட்டு, ஸ்ரீவிஜயீந்திரருக்கு 1575ல் மஹா ஸமஸ்தானத்தை ஒப்புவித்து நாராயண த்யானத்திலீடுபட்டு அமரரானார்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் வாழ்க்கையின் முக்கிய சம்பவங்களை இவ்வாறு விபாகம் செய்து (Classify) விவரிக்கலாம்:-

ஸ்ரீவிஜயீந்திரர் ஜனனம் கி.பி.1517 ஸ்ரீவ்யாஸராஜர் விஷ்ணு தீர்த்தரென்னும் உபநாமத்தினால் அவருக்கு ஸந்யாஸ ஆச்ரமம் அனுக்கிரஹித்தது கி.பி.1525-26ல் ஏறக்குறைய (அவருடைய எட்டாவது வயதில்) ஸ்ரீவ்யாஸராஜரிடத்தில் வித்யாப்யாஸம் கி.பி.1522லிருந்து 1535 வரை ஸ்ரீவ்யாஸராஜர் ஸ்ரீஸுரேந்திரருக்கு பால


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
ஸந்யாஸிகளான விஷ்ணு தீர்த்தரை (பின்பு விஜயீந்திரர்) தானம் செய்தது 1530ல் (விஜயநகரத்தின் கிருஷ்ணதேவராயர் அந்த சந்தர்ப்பத்தில் இருந்தார் என்று "ஸ்ரீவிஜயீந்த்ர விஜயத்தில்" வருணித்துள்ளார்கள். கிருஷ்ணதேவராயர் 1530 A.D.யில் மரணமடைந்ததினால் சுமார் அதே சமயத்தில் ஸ்ரீவ்யாஸராஜரினால் ஸந்யாஸம் பெற்றிருந்த ஸ்ரீவிஷ்ணு தீர்த்தரை ஏற்றுக் கொண்டு தண்ட பல்லட முத்ராதாரணம், குருபதே சாதிகளினால் அவரை "ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த"ரென்னும் உபநாமத்தினால் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் 1530ல் தமது சிஷ்யராக ஆக்கிக்கொண்டார்) ஸ்ரீவ்யாஸராஜ நிர்யாணம் 1539.

ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருடன் புறப்பட்டு கும்பகோணத்திற்கு வந்து அங்கே வீரசைவஸந்நியாஸிகளை வாதத்தில் ஜயித்துப் பணயத்தின் ஷரத்தின்படி, "சைவ மடம்" அந்த மடத்திற்கு விஜயநகர அரசர் கொடுத்திருந்த தாமிர சாஸனம், பஸவனின் மணி, ஸர்வ தேவாலயங்களின் ஆதிபத்தியங்களையும் ஸம்பாதித்தது, சுமார் கி.பி.1545. கும்பகோணத்தில் கி.பி.1550ல் வித்யாபீட ஸ்தாபனம், விஜயநகரத்தில் மருமகன் ராமராஜர் ஸ்ரீவிஜயீந்திரருக்கு ரத்னாபிஷேகம் செய்து கௌரவித்தது, 1554-55 A.D. கி.பி.1564-65ல் உடுப்பியாத்திரை, அங்கு மித்ரரான ஸ்ரீவாதிராஜ தீர்த்தரினால் கௌரவம் மற்றும் மடம் ஸம்பாதித்தது, 1565 A.D.யில் விஜயநகரத்தின் வீழ்ச்சி ஸ்ரீஸுரேந்திரர் ஸ்ரீஸுதீந்த்ரருக்கு ஆச்ரமம் அளித்து அவரை ஸ்ரீவிஜயீந்திரருக்கு அர்ப்பித்தது 1575 A.D. ஸ்ரீஸுரேந்திரரின் நிர்யாணம் கி.பி.1575ல் புஷ்ய சுக்ல த்வாதசி கி.பி.1540லிருந்து 1600 வரை நூல்களியற்றுதல். ஸ்ரீஸுதீந்திரருக்கு மஹா ஸமஸ்தானத்தை அர்ப்பித்து ஸ்ரீவிஜயீந்திரர் ப்ருந்தாவனஸ்தரானது ஆனந்தநாமஸம். ஜ்யேஷ்ட க்ரு. 13 (கி.பி.1614).

இவ்வாறு ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் கி.பி.1517லிருந்து 1614 வரை 97 வருடங்கள் காலம் வாழ்ந்து 1530 இல் ஸ்ரீஸுரேந்திரரின் சிஷ்யராய், 1530லிருந்து 1575 வரை 45 வருட காலங்கள் குருஸேவையிலீடுபட்டிருந்து ஸ்ரீஸுரேந்திரரின் நிர்யாணத்திற்குப் பின் 1575லிருந்து 1614


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
வரை ஏறக்குறைய 39 வருடங்கள் ஸ்ரீஸுதீந்திரரால் ஸேவிதராய் மஹா ஸமஸ்தானத்தின் அதிபதிகளாக இருந்து 1614ல் ஸ்ரீஸுதீந்திரருக்கு மஹா சமஸ்தானத்தை வஹித்துக் கொடுத்து தம் 97வது வயதில் ப்ருந்தாவனஸ்தரானார்.

ஸ்ரீஸுதீந்திரரின் ஜனனம். சுமார் கி.பி.1561. ஸ்ரீஸுரேந்திரரால் ஸந்யாஸாச்ரமம் பெற்றது கி.பி.1575. 1575லிருந்து 1614 வரை 39 வருடகாலம் குரு ஸேவையில் ஈடுபட்டவராய் அவரது நிர்யாணத்திற்குப் பின் மஹா ஸமஸ்தானத்தின் அதிபதிகளாக ஆனது கி.பி.1614ல், ஸ்ரீஸுதீந்திரர் 1614லிருந்து 1623 வரை 9 வருட காலம் மஹாஸமஸ்தானத்தை ஆண்டு சுமார் 62 வ்ருஷங்கள் வரை வாழ்ந்து 1623ல் ஸ்ரீமந்த்ராலய ஸ்ரீபாதங்களவர்களுக்கு ஸந்ய்யாஸாச்ரமமளித்து, இரண்டு வருட காலம் அவரால் ஸேவிக்கப்பட்டு 1625ல் சுமார், நவப்ருந்தாவனத்தில் ப்ருந்தாவனஸ்தரானார். இதிலிருந்து ஸ்ரீஸுரேந்திரர் 98 வருட காலமும், ஸ்ரீவிஜயீந்திரர் 97 வருட காலமும், ஸ்ரீஸுதீந்திரர் 62 வருட காலம் பாரத பூமியில் விராஜமானர்களாக இருந்து தமது அகாத தவம், க்ஞானம், மகிமை முதலியவைகளினால் பரவாதி திக்விஜயம் ஸித்தாந்த ஸ்தாபனம், கிரந்தமியற்றுதல், லோகக்ஷேமம் முதலிய மாபெரும் காரியங்களைச் செய்து ஸஜ்ஜன சமூகத்தைக் காப்பாற்றி வந்தனரென்று நிரூபணமாகிறது.

ஸ்ரீவிஜயீந்திரரும் - ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரும் ஸமகாலத்தவரல்லவென்று ஒரு புதியவாதத்தை ஸ்ரீமஹாமஹோபாத்யாய அநந்தக்ருஷ்ண சாஸ்திரி முதலானவர்கள் ஆரம்பித்து, அந்த வாதத்திற்குச் சான்றுகளுடன் பதிலளித்து ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் "பேதவித்யா விலாஸ" (भेदविद्या विलास) க்ரந்தத்தின் பீடிகையில் ஸ்ரீவிஜயீந்திரர் ஸமகாலத்தவராக இருந்ததை சாஸனங்கள் மற்றும் இதர சான்றுகளினால் (அத்வைதிகளும் ஏற்றுக் கொள்ளுவதாயுள்ள ப்ரமாணங்கள்) ஆமோதித்திருப்பதினால் அந்த விஷயத்தை இங்கு விவரிப்பதற்கு விருப்பமில்லை.

ஸன்மான்ய மித்திரரான Dr. சர்மா அவர்கள் இந்தக் கிரந்தத்திற்கு எழுதியனுப்பியுள்ள ஆங்கில பூமிகா (Introduction) இது இப்பொழுது கிடைத்துள்ளது. ஸ்ரீஸுரேந்திரர் மற்றும் ஸ்ரீவிஜயீந்திரரின் நிர்யாண காலம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பீடாதிபத்ய காலங்களின் விஷயத்தில் உள்ள அபிப்ராய பேதத்தை அலசி ஆராய்ந்து நாம் நிர்ணயித்திருப்பதே Dr. சர்மா அவர்களின் ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் அளிப்பதால் அதை இங்கு மறுபடியும் விவரிப்பதை விரும்பவில்லை, ஆனால் Dr. சர்மா அவர்கள் வெளிப்படுத்தியுள்ள சில விஷயங்களுக்கு ஸமாதானம் அளிப்பது அவசியமென்று நினைக்கிறோம்.

"ஸ்ரீவிஜயீந்திர விஜய"த்தைப் பின்பற்றி நாம் கதையை இயற்றியுள்ளோம். விஜயீந்திர விஜயத்தில் ஸ்ரீவ்யாஸராஜர் ஸ்ரீஸுரேந்திரருக்கு ஸ்ரீவிஷ்ணு தீர்த்தரை (ஸ்ரீ ஸ்ரீபுரந்தரதாஸர், "ஸ்ரீஸுரேந்திரனு புத்ர பிக்ஷயபேடெ விஜயீந்திரன்ன கருணிஸி" (श्रीसुरेन्द्रनु पुत्र भिक्षय बेडे विजयीन्द्रन्नु ಕರುಣಿಸಿ) என்னும் ஸுளாதியில் சொல்லியுள்ள விஷயத்தைப் பற்றி ஆக்ஷேபணையாகட்டும், அதை மறைக்க வேண்டும் என்ற விருப்பமாவது இல்லை. ஸ்ரீபுரந்தரதாஸரின் ஸுளாதியின் விஷயமாக ஸ்ரீசந்திரிகாசார்யரின் மஹத்வ விஷயத்தில் Dr. சர்மா அவர்களுக்கு எவ்வளவு கௌரவம் உள்ளதோ, அது நமக்கும் உள்ளது.

விஜயீந்திர விஜயத்தில் அந்தக் கதையின் பாகம் இல்லாமல் அதிலுள்ளபடியே எழுதியுள்ளோம். இதனால் ஸ்ரீவ்யாஸ ராஜ குருவர்யரின் மகத்துவத்திற்கு எந்தக் குறையும் வராது. மேலும், ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீஸுரேந்திரர் இருவரும் பூர்வாச்ரம பந்துக்கள், அண்ணன் தம்பிகள், மற்றும் ஒரே மூலத்தின் இரண்டு புனித பீடங்களில் வந்தவர்கள், இருவரும் மஹா தபஸ்விகள், ஞானிகள், பரமமித்திரர்கள், ஸ்ரீ ஸுரேந்திரர் புத்ர பிக்ஷை கேட்டு ஸ்ரீவிஜயீந்திரரைப் பெற்றுக்கொண்டார் என்று எழுதியிருந்ததினால் ஸ்ரீவ்யாஸராஜரின் மகத்துவம் அதிகரிப்பது அல்லது ஸ்ரீஸுரேந்திரரின் மகத்வம் குறையும் என்னும் எண்ணம் சரியல்ல. ஸ்ரீவ்யாஸராஜரே ஸ்ரீவிஜயீந்திரரை ஸ்ரீஸுரேந்திரருக்கு கொடுத்தாரென்றால் அதனால் ஸ்ரீவ்யாஸராஜரின் கீர்த்தி கௌரவங்களுக்குக் குறையாகட்டும் (நஷ்டமாகட்டும்), ஸ்ரீ ஸுரேந்திரருக்குப் பெருமையாகட்டும் உண்டாவதில்லை. ஸ்ரீஸுரேந்திரர் சொல்லி ஸ்ரீவ்யாஸராஜர் கொடுத்திருக்கலாம், அல்லவா? அபரோக்ஷஜ்ஞானிகளான ஸ்ரீவ்யாஸராஜர் ஸ்ரீவிஜயீந்திரரின் பூர்வ ஜன்ம விஷயம், இப்பொழுது அவதரித்துள்ளதின்


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

காரணங்களைத் தெரிந்தவ[illegible] தானாகவே அவரை ஸ்ரீஸுரேந்திரருக்குக் கொடுத்துமிருக்கக்கூடும். முதலாவதை ஸ்ரீபுரந்தரதாஸர் ஸுளாதியில் சொன்னால், இரண்டாவதை விஜயீந்திர விஜயம் சொல்லுகிறது. இரண்டும் ஒன்றே, நாம் விஜயீந்திர விஜயத்தின்படி கதை ஸந்தர்ப்பத்தை விவரித்துள்ளோம் அவ்வளவுதான்.

2. ஸ்ரீஸுரேந்திரர் ஸ்ரீவ்யாஸராஜரைவிடப் பெரியவர் என்று நமக்கு அபிப்ராயமெதுவுமில்லை. ஸ்ரீஸுரேந்திரர் 1477 A.D.யில் பிறந்தவர். அவர் இரண்டாம் முறை விஜயநகரத்திற்கு வந்து ஸ்ரீவ்யாஸராஜரை பேட்டி கண்டபொழுது அவருக்குச் சுமார் 53 வயதாகியிருக்கக் கூடும். ஒரே ஸத்பரம்பரையின் இரண்டு திவ்ய பீடங்களில் வந்த க்ஞானிகளும், பந்துக்களுமான யதிவர்யரின் சந்திப்பு ஏற்பட்டபொழுது பரஸ்பரம் கௌரவிப்பது இயற்கையே அது ஸம்ப்ரதாயத்திற்கு விரோதமானதும்லல.

இந்த விஷயமும் "விஜயீந்திர விஜய"த்தின் ஆதாரத்தைக் கொண்டு விவரிக்கப்பட்டுள்ளது.

3. ஸ்ரீஸுரேந்திரர் விஜயநகரத்திற்கு கி.பி.1513ல் முதன்முறை வந்தபொழுது மருமகன் ராமராஜனின் தாத்தா ஸ்ரீகிருஷ்ண தேவராயனின் மஹாமந்த்ரி ராமராஜன் ஸ்ரீஸுரேந்திரருக்குக் கிராம தானம் செய்தான். ஸ்ரீஸுரேந்திரர் இரண்டாவது முறை கி.பி.1530ல் வந்தபொழுது ஸ்ரீவ்யாஸராஜர் ஸ்ரீவிஜயீந்திரரை ஸ்ரீஸுரேந்திரருக்கு ஒப்புவித்தார் என்பது நமது அபிப்ராயம்.

4. ஸ்ரீஸுரேந்திரர் - விஜயீந்திரர், ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்ரீஸுரேந்திரர் ஏக காலத்தில் பெரிய பட்டம், சிறியபட்டங்களில் அநேக வருஷங்கள் பீடத்தை ப்ரகாசிக்கச் செய்தனர். ஸ்ரீஸுரேந்திரர் 98 வருஷம், விஜயீந்திரர் 97 வருஷம், ஸுதீந்திரர் 62 வருஷம் வாழ்ந்திருந்தனர். விஜயீந்திரர் குருகளின் நிர்யாணத்திற்குப் பிறகு (1575 A.D.) 1614 வரை மஹாஸமஸ்தானத்தை 39 வருஷகாலம் ஆண்டார். 45 வர்ஷ காலம் சின்ன பட்டத்தை ஆண்டார். இரண்டும் சேர்ந்து 50 வருஷங்களுக்கும் மேல்பட்டு ஸ்ரீவிஜயீந்திரர் பீடாதிபதிகளாயிருந்தார். ஆகையால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

குருசரிதையில் Dr. வேதவ்யாஸாசார்யர் எழுதியிருப்பதற்கு விரோதமாகட்டும், நிஷித்தமாகவும் ஆவதில்லை.

5. ஶ்ரீஸுரேந்திரர் 98 வருடங்கள், ஶ்ரீவிஜயீந்திரர் 97 வருடங்கள் வாழ்ந்தது ஶ்ரீ மடத்தின் பரம்பரைக் கதைக்கும், பிரமாணங்களுக்கும் அனுஸரணையாக உள்ளது. யோகஸித்தரும், தபஸ்விகளும் ஆனவர்கள் நீண்ட காலம் வாழ்ந்ததில் அதிசயமொன்றுமில்லை. அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்திருந்தனரென்று சொன்னதனால் அது ப்ரமாணத்தை மீறின விஷயமொன்றுமில்லை. எத்தனையோ வருடங்கள் ஜீவித்திருப்பவர்கள் இன்று பாரத நாட்டில் அநேகருள்ளனர். க்ஞானம், தவம், யோகஸித்தியில்லாத நவீனர்களே எவ்வளவோ வருஷங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதை ப்ரத்யக்ஷமாகப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது ஆஜன்ம ப்ரம்ம சர்யத்தினாலும், யோக ஸித்தியினாலும் விளங்கிக் கொண்டிருந்த ஶ்ரீஸுரேந்திர-விஜயீந்த்ரரைப் போன்ற தபஸ்விகள் நீண்ட காலம் வாழ்ந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? மஹா தபஸ்விகளும் ஶ்ரீஸுரேந்திர விஜயீந்திர சமகாலத்தவருமான ஶ்ரீவாதிராஜ தீர்த்தர் 120 வருட காலம் வாழ்ந்திருந்தார். சமீபத்தில் உடுப்பி ஶ்ரீபுத்திகெ மடாதீசர் 100 வருஷங்கள் வாழ்ந்தார். Sir. M. விச்வேச்வரய்யா அவர்கள் 100 வருடங்கள் வாழ்ந்தார். அப்படியிருக்கையில் ஶ்ரீமடத்தின் பரம்பரையில் வந்த கதை, மற்றும் இதர சான்றுகளின் ஆதாரத்தின் பேரில் ஶ்ரீஸுரேந்திரர் கி.பி.1477லிருந்து 1575 வரை அதாவது 98 வருடகாலம் வாழ்ந்திருந்தார்; ஶ்ரீவிஜயீந்திரர் கி.பி.1517லிருந்து 1614 வரை ஜீவித்திருந்தார்; நாம் எழுதியுள்ளது மிகச்சரியானது என்று சொல்வதில் தடையில்லை. Dr. சர்மா அவருக்கு நமது மேற்சொன்ன விவரங்களிலிருந்து சமாதானமாகு மென்று நம்பியுள்ளோம்

ஶ்ரீவிஜயீந்திரரின் சரிதையில் அநேக அதிசயங்கள் (miracles) அதிமானுஷ மஹிமைகள் (Super human power) வர்ணிக்கப்பட்டுள்ளன. அதைப்பற்றிச் சில விஷயங்கள் சொல்வது உசிதமாகும்.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

எல்லா தேசங்களில், எல்லாக் காலங்களில் அநேக ஸாது மஹாத்மாக்கள் தோன்றி மறைந்துள்ளார்கள். அவர்களின் வாழ்க்கை அதிசயங்கள் அமானுஷிகமானச் செயல்களால் நிறம்பியுள்ளன. சிந்தனைக்கு எட்டாத சக்தி சாலியான பகவந்தனின் விசேஷ அனுக்ரஹத்திற்குப் பாத்திரரான மஹாத்மாக்கள் அதிசயம்-அற்புதங்களை பகவானிருப்பதை ஸ்தாபிப்பதற்கும், இந்திரியங் களுக்கப்பாற்பட்ட, மீறின வஸ்துக்களில் மக்களுக்கு நம்பிக்கை உண்டாக்குவதற்காகவே காண்பிப்பது இயற்கை. அணிமா முதலிய அஷ்டஸித்தி, மந்த்ரஸித்தி யோ்கஸித்திகளை அடைந்தவருக்கு அது ஒரு ஸாமான்யமான காரியம். பௌதிக விஞ்ஞான யுகமான இந்த நாட்களில் நமது பூர்வீகர்களின் மகத்துவத்தைப் பாரத நாட்டின் தத்வ, தர்மங்களை மறந்து அந்நிய நாட்டு தத்வ, தர்ம, கலாசாரங்களுக்கு அடிமைகளாகியுள்ள நவீனர்களுக்கு நமது பூர்வீக சக்தி, ஸாதனை மஹிமைகளில் நம்பிக்கை வராவிட்டாலும் அது ஸத்யத்தின் அடிப்படையான விஷயம் என்பதை மறப்பதற்கில்லை. விஞ்ஞானத்தின் பலத்தினால் சந்திர மண்டலத்திற்கு மனிதன் சென்று அங்கு காலடிவைத்தான் என்னும் விஷயத்தைத் தானே கண்ணால் காணாவிடினும் இன்று அதை எல்லோரும் நம்புகின்றனர். ஒவ்வொரு தெருக்களிலும் பாம்பாட்டிகள், களக்கூத்தாடிகள், யக்ஷிணிகாரர்கள், அற்ப மந்திர சக்தியின் பலத்தினால் அபூர்வமான, அதிசயமான வேலைகள் செய்து காண்பிப்பது; மனத் தத்வ கலைஞர்கள், வசீகரணக் கலைஞர்கள் (Hypnotist) பிறரின் மனத்திலிருப்பதைத் தெரிந்து கொள்வது, அவருக்குத் தெரியாமலேயே அநேக காரியங்களைச் செய்விப்பது, கண்ணெதிரில் காண்கிறோம். இவைகளெல்லாவற்றையும் நம்புகின்ற நவீனர்கள் (Modern Civilized Persons) தபஸ்விகளும், மந்திர ஸித்தி பெற்றவருமான நம் பூர்வாசார்யரின் அற்புதச் செயல்களின் மகிமையை அவசியம் நம்பக் கூடியதாக உள்ளன.

மனிதன் தனது மனதின் இச்சா சக்தியை (confidence) உணர்ந்து எச்சரிக்கையுடன் செயல்பட்டால், மேகங்களைப் போன்ற இயற்கைப் பொருள்களைக் கட்டுப்படுத்தி மேகங்களை ஒன்றாகச் சேர்ப்பது, கலைப்பது, மழை பெய்விப்பது, முதலான மகத்வம் பொருந்திய ஆச்சரியப்படத்தக்க காரியங்களைச் செய்ய முடியுமென்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மேற்கத்திய நாட்டின் அநேக மனோவிக்ஞான கேந்திரங்களின் (Psychology centres) கண்டுபிடிப்பினால் நிருபணமாகியுள்ளது: *Duke University-யின் Dr. Joseph B.Ryn. 1954-ல் Antaria -வின் Oralia monastery யில்; 1951ல் Mexico நகரத்தில் இதைப்போல், Dr. Ralph Alexander-ம் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் மேகங்களைச் சூழ்ந்து கொள்ளச் செய்வது, கலைப்பது; மழை பெய்விப்பது இந்தக் காரியத்தை மூன்று முறை வெற்றிகரமாகக் காண்பித்துள்ளனர். Dr. Ralph சில காலம் ப்ராணாயாமம் செய்து கண் இமை கொட்டாமல் மேகங்களைப் பார்க்க ஆரம்பித்து அவைகளைக் கட்டுப்படுத்தி, இந்த அற்புதத்தை அநேக பத்திரிகை நிருபர்கள், அரசு அதிகாரிகள், விஞ்ஞானிகள், ஆயிரக்கணக்கான மக்கள், பிரபல நகரப்ரமுகர்கள், இவர்கள் முன்னிலையில் செய்து காட்டி எல்லோரையும் ஆச்சரியத்திலாழ்த்தினார். இதை Reverend Allen Aprgaly என்பவர் கியாதிபெற்ற "psychology" பத்திரிகையில் எழுதி ஆமோதித்துள்ளார். விஞ்ஞானிகள் இந்த வித்தையை psychosisasis என்கின்றனர்.

இதிலிருந்த ஸ்ரீகிருஷ்ணன் ஸைந்தவவத காலத்தில் சூர்யனை மறைத்தது கட்டுக்கதையல்லவென்பதை விஞ்ஞானிகளே ஒப்புக் கொண்டுள்ளதாகும். ஜகஜ்ஜன்மாதி காரணனும் அசிந்த்ய அற்புத சக்தியுள்ளவனுமான ஸாக்ஷாத் பகவான் ஸ்ரீகிருஷ்ணனுக்கு சூர்யனை மறைப்பது எப்படி லீலாவினோதமோ, அதைப்போலவே அவனுடைய விசேஷ அனுக்ரஹத்திற்குப் பாத்திரரான யோகவித்தரும், மந்த்ரஸித்தரும், தபோநிதிகளுமானவர்களுக்கு அமானுஷ மஹிமைகளை நடத்திக்காட்டுவது சாதாரண காரியமென்று தைரியமாகச் சொல்லலாம். இதிலிருந்து மஹாமஹிமை பொருந்தியவரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் நிகழ்த்திய அற்புதமான அதிசய நிகழ்ச்சிகள் ஸ்ரீஸுதீந்திரர் ஒரு நொடிப்பொழுது பகலிலேயே சூரியனை மறைத்துக் காண்பித்தது, மற்றும் ஸ்ரீஸத்ய போத தீர்த்தர் இரவில் சூரியனைக் காண்பித்தது, நவீன விஞ்ஞானிகளின் நோக்கிலும் ஸாத்தியமென்பது வெளிப்படுவதினால்

---

*26-7-1964 அன்று "தாய் நாடு" பத்திரிகையில் "நவீன விஞ்ஞானம்" இதை சாதித்துள்ளது. க்ருஷ்ணனின் யோகமாயை "ஸௌர்யாஸ்த ரஹஸ்ய" என்னும் கட்டுரையில், இதைப்போல், "Psychology" பத்திரிகையிலும் இந்த விஷயம் ப்ரசுரமாயுள்ளது.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மேற்கத்திய விஞ்ஞானிகளின் பேச்சை வேத வாக்யமென்று கௌரவிக்கும் நமது நவீன இளைஞர்கள் நமது பூர்வீகரின் மஹிமைகளைத் தாராளமாக நம்பி இனிமேலாவது நமது பூர்வீகரின் அஸாதாரண ஸாதனைகள், சக்தி, திறமை முதலிய மகிமைகளில் நம்பிக்கை வைத்துப் பெருமையுள்ளவராக வேண்டுமென்று விரும்புகிறோம்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் அநேக கலை நிகழ்ச்சிகள் மற்றும் மகிமை பொருந்திய செயல்கள், நாராயண பூதம், விஜயீந்திரரின் சேவை கைங்கர்யத்தைச் செய்து நிகழ்த்திய அநேக அற்புதங்கள் முதலான கதா பாகத்தை இங்கு விவரிக்கப்படவில்லை. இந்த நூலின் இரண்டாவது பதிப்பாகும்பொழுது ஸ்ரீகுருவர்யரின் கிருபையிருந்தால் அவைகளைச் சேர்க்க முயற்சிக்கிறோம்.

ஜகத்குரு ஸ்ரீமன் மத்வாசார்யரின் முக்ய ஸமஸ்தானாதீசரும், ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் பவித்ர வித்யாபீடத்தை அலங்கரித்தவருமான, கீர்த்தி சேஷ, பரமபூஜ்ய ஸ்ரீமத்ஸுயமீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் உபதேசம், ஆசீர்வாத வசன பலத்தினாலேயே நாமே க்ரந்தத்தை இயற்றுவதற்கு சக்திபெற்றோமென்று சொல்வது பெருமையாக உள்ளது. அவரது ஆக்ஞைப்படியே ஸ்ரீபரிமள ப்ரகாசன மந்திரத்தின் முக்ய பத்திரிகையான, "பரிமள"த்தில் ஏறக்குறைய 5-6 வர்ஷகாலம் தொடர்கதையாக ஸ்ரீவிஜயீந்திரரின் சரிதையை ப்ரசுரித்து வந்தோம். அதைப்படித்து மகிழ்ந்து இன்னும் அதிக விஷயங்களைச் சேர்த்து, விமரிசையுடன் மறுபடியும் ப்ரசுரித்து க்ரந்தரூபமாக வெளியிட்டால் அநேக ஜனங்களுக்கு உபகாரமாயிருக்கும் என்று ஸ்ரீ ஸ்ரீபாதங்களவர் ஆக்ஞையிட்டார். அவரின் ஆணையை நிறைவேற்றி அவரது அம்ருத ஹஸ்தத்தினாலேயே வெளியிடவேண்டு மென்றிருக்கையிலேயே அந்த மஹான் நம்மை அகன்று ப்ருந்தாவனஸ்தரானதினால் அந்த பாக்யம் நமக்குக் கிட்டவில்லை. ஆயினும் இன்று நமது கண் முன்னில்லாமலே ப்ருந்தாவனத்தில் பிரகாசித்துக் கொண்டு ஸ்ரீகுருபாதரின் ஸேவையிலீடுபட்டுள்ள பூஜ்ய ஸ்ரீபாதங்களவர் இந்த க்ரந்த ப்ரசுரத்தினால் திருப்தியடைந்து நம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருப்பாரெதன்பதில் ஐயமில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

க்ரந்தத்தை எழுதினதைப் படிக்கச் சொல்லிக் கேட்டு, தவறுகளைத் திருத்தி, உபதேசம் செய்து, யோசனைகள் கூறி, ஸ்ரீமடத்தின் ரிகார்டுகளைப் பரிசீலிக்க வசதி செய்து கொடுத்து, ஸ்ரீவிஜயீந்திரரின் அகாத சரிதையை தாம் பரம்பரையாகக் கேட்டுத் தெரிந்து கொண்டவாறே நமக்கு உபதேசித்து இந்தக் கிரந்தத்தை எழுதச் செய்த அந்த மஹானின் பாத கமலங்களில் நமது சிரம் எப்பொழுதும் வந்தனம் செய்து கொண்டிருக்கும்படி நல்ல புத்தியை அவரே நமக்குக் கருணை கூர்ந்து காப்பாற்றட்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம். அவருடைய அன்பு மிக்கவரகுமாரரும், ராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் திக்விஜய வித்யாபீடத்தில் இன்று விராஜமானராயுள்ள நமது குருவர்யரான பரம பூஜ்ய ஸ்ரீமத்ஸு ஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர் இந்த க்ரந்த ரசனையினால் மகிழ்ந்து இதை வெளியிட உற்சாகப்படுத்தி, ப்ரசுரம் செய்ய அனுமதியளித்து, வெளியிட்டு நம்மை ஆசீர்வதித்துள்ளார். ஸ்ரீபூஜ்ய ஸ்ரீபாதங்களவரின் பாதாரவிந்தங்களில் நம் நன்றி கலந்த அனந்த நமஸ்காரங்களை அர்ப்பிக்கிறோம்.

"பரிமள"த்தில் "அஜேய விஜயீந்திர" என்னும் பெயரில் இந்தச் சரிதை ப்ரசுரமாகையில் அதைப்படித்து பரமானந்த பூர்ணராய் நம்மைப் பாராட்டி, க்ரந்த ரூபத்தில் வெளியிட அடிக்கடி உற்சாகம் கொடுத்த அன்புள்ள நண்பரான Dr. B.N.K. சர்மா அவர்களின் விருப்பத்தை இன்று நிறைவேற்ற குருராஜர் நமக்கு சக்தியளித்ததற்காக மகிழ்வுடன் Dr. சர்மா அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நம் வேண்டுகோளுக்கிணங்கி அநேக ப்ரமாண க்ரந்தங்களைப் பரிசீலனை செய்து விஷயங்களைச் சேகரிக்க வசதி ஏற்படுத்தித்தந்த மைசூரின் மத்திய சர்க்காரின் Epigraphic நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு நம் வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். நம் விருப்பப்படி கன்னட-ஆங்கில மொழிகளில் உத்தமமான முகவுரைகளை எழுதிக் கொடுத்து உபகாரம் செய்துள்ள நமது நன்மைவிரும்புவரான தார்வாட கன்னட ஆராய்ச்சி இலாகாவின் ஓய்வு பெற்ற டைரக்டரான வே.ஸ்ரீவித்யாரத்னம், வித்யா பூஷணம், ஆர்.எஸ். பஞ்சமுகி.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
M.A., மற்றும் பம்பாய் ரூபரேல் காலேஜின் ப்ரோபஸரான வித்யாபூஷணம், சாஸ்த்ர நிதி, Dr.B.N. கிருஷ்ணமூர்த்தி சர்மா, M.A., Ph.D., D.Litt., அவர்களுக்கு நம் அநேக நமஸ்காரங்கள். நமது வேண்டுகோளின்படி அநேக சித்ரங்களை அனுப்பி உபகாரம் செய்த ஸ்ரீமடத்தின் ஏஜென்டான ஸ்ரீ S. ராகவேந்திராசார்யருக்கும், கிரந்தத்தை அழகாக அச்சிட்டுக் கொடுத்த Phoenix Printing Company Private Ltd., இன் Managing Director ஆன ஸ்ரீயுத சந்திர சேகரரவருக்கும், பரிமள ப்ரகாசமாலாவின் ஸ்ரீசுயமீந்த்ர மாலாவின் நான்காவது புஷ்பமாக வெளியிட்ட நஞ்ஜன்கூடின் ஸ்ரீபரிமள சம்சோதன மற்றும் ப்ரகாசன மந்திரத்தவருக்கும் நாம் மிக்க நன்றியுள்ளவராக இருக்கிறோம்.

நமது க்ரந்தம் அச்சிடப்பட்டதெல்லாவற்றையும் படித்து, மகிழ்ந்து, ஊக்குவித்த பெரியவரான ஸ்ரீ ஆர். ஜயராமசார்யர், பூஜ்ய தமையனரான ஸ்ரீராஜா S. வேணுகோபாலாசார்யர், அன்புள்ள நண்பரான வித்வான் K. ஸ்ரீ நிவாஸா சார்யர், வித்வான் ஸ்ரீரித்தி வெங்கண்ணா-சார்யர் ஸ்ரீ C.L. நாராயணன் இவர்களுக்கு நம் வணக்கங்களைச் செலுத்துகிறோம், அன்புமிக்க ஸகோதரரான சி. ராஜா S. லக்ஷ்மி நாராயணாசார்யர், ஸ்ரீராஜா R. கிருஷ்ணசார்யர், ஸ்ரீ ராஜா R. ஸுக்ஞானேந்திராசார்யர், ஸ்ரீஹுலி வே. பவமானாசார்யர் இவர்களுக்கு நம் ஆசீர்வாதங்கள்.

இந்த க்ரந்தத்தில் வருகின்ற வாக்யார்த்த விசாரங்களை எழுதி, வாசித்துக் காண்பித்தபொழுது அதைக்கேட்டு மகிழ்ந்து, யோசனை கூறி, ஊக்குவித்து நம் குருகளான தீ-வித்வத்பூஷணம், துர்கம், பீமாசார்யர், தீ-வித்யாரத்னம் ஆசார்ய வெங்கோபாசார்யர், தீ-பண்டிதரத்னம், தொட்டபள்ளாபுரம், வாஸுதேவாசார்யர் முதலியவர்களை இங்கு நினைவு கூறுவது நமது கடமையென்று எண்ணுகிறோம்.

இறுதியாக "பரிமள"வில் ஸ்ரீவிஜயீந்திரரின் அமர சரிதையை வாசித்து நம்மை கௌரவித்து ஊக்குவித்த எவ்வளவோ ஜனங்கள் பரிமள வாசகர்களுக்கும் தாங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சேகரித்த "அஜேய விஜயீந்திரரு" (பரிமள வெளியீடுகளின் தொகுப்பு) (வால்யூம்) இதைப் பரிசீலித்து க்ரந்தரூபமாக எழுதுவதற்கு நமக்கு அளித்து உபகாரம் செய்த ப்ரீதிபாத்ரரான ஸ்ரீ S. சாமண்ணனவருக்கும் நமது அநேக நன்றி வணக்கத்தையளித்து, வித்வான்கள், தார்மிகர்கள், நம் இந்த நூலினால் மகிழ்ந்து ஊக்குவிப்பார்களென்று நம்பி, எல்லோருக்கும் ஸ்ரீஹரி வாயுகள், ஸ்ரீமத் விஜயீந்திர தீர்த்த குருஸார்வ பௌமர் ஸகலவித மங்களங்களை அருளிக்காப்பாற்றட்டும் என்று வேண்டிக்கொண்டு விடைபெறுகிறோம்.

முகாம்:
ஸ்ரீமந்த்ராலயம்,
ஸௌம்யஸம்,
புஷ்ய சுக்ல த்விதியை,
9-1-1970.

இப்படிக்கு,
வித்வஜ்ஜன விதேயன்,
ராஜா S. குருராஜாசார்யர்,
நூலாசிரியர்.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

## நன்றியறிவிப்பு

வைதிக வித்யைகள், இலக்கியம், லலித கலைகள், ஸ்ரீஹரி குரு பக்திகளுக்குப் பெயர் பெற்றது ஷாஷ்டிக வம்சம். அதில் ஸ்ரீவிஜயீந்த்ர குரு ஸார்வபௌமரின் விசேஷ அனுக்ரஹம், போஷணைக்குப்பாத்ரரான கும்பகோணத்தின் ''தவஸ'' என்னும் வம்சம் பல வித்வான்களால் பெருமையடைந்து நாட்டில் பிரசித்தியாகியுள்ளது. ஜகத்குரு ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பூர்வாச்ரம வம்ச ப்ரம்பரையில் வந்தவரும், பிறகு ஸ்ரீமதாசார்யரின் மஹாஸமஸ்தானத்தில் வீற்றிருந்து உலகம் போற்றுபவராகிய கீர்த்தி பெற்ற ஸ்ரீசுசிலேந்திர தீர்த்த ஸ்ரீபாதங்ளவர்கள் இந்த, "தவஸ" வம்சத்திற்கு தத்தாக வந்தவர் என்ற பிறகு இந்த வம்சத்தைப் பற்றி அதிகமாக விவரம் சொல்லத் தேவையில்லை.

ஸ்ரீசுசீலேந்திர தீர்த்தர் ஸ்ரீபாதங்களவரின் வம்ச பந்துக்களான இந்த வம்சத்தினரா ஸ்ரீதீ-ஸ்ரீரங்கம் சியாமாசார்யர் மிகப்புண்யம் செய்தவர். இவர் ஸ்ரீசுசிலேந்திரர், ஸ்ரீஸுவ்ரதிந்திரர், மற்றும் கீர்த்தி பெற்ற ஸ்ரீஸுயமீந்திர தீர்த்தரின் பரமானுக்ரஹத்திற்குப் பாத்திரராகி அந்த மஹானை சம்சேவித்து கிருதார்த்தரானார்.

ஸ்ரீசாமாசார்யருக்கு ஸ்ரீ.வி.எஸ். வெங்கடரமணராயர் மற்றும் ஸ்ரீ வி.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களும் சத்புத்திரர்கள். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியவர்கள் வம்சத்திய வித்யைகளில் நன்கு பயின்று கர்நாடக ஸங்கீத-ஸாஹித்யங்களில் அபாரமான பாண்டித்யம் பெற்று தென்னிந்தியாவின் சிறந்த சங்கீத வித்வான்களில் ஒருவரென்று ப்ரஸித்தியுள்ளவராயிருக்கிறார்.

ஸ்ரீ வி.எஸ். வெங்கட்ரமணராயர் மற்றும் ஸ்ரீ வி.எஸ். கிருஷ்ணமூர்த்தியவர்கள் ஸ்ரீகுருராஜரின் அந்தரங்கபக்தராய் பலவிதமாகச் சேவைகள் செய்து அனுக்ரகம் பெற்றிருந்ததைப் போல, கீர்த்தி வாய்ந்த ஸ்ரீஸுயமீந்திர தீர்த்தரின் விசேஷ அனுக்ரஹங்களுக்குப் பாத்ரராய் வெகு காலம் அவரைச் சேவித்து அவருடைய உபதேசானுக்ரஹங்களினால் கன்னட ஹரிதாஸ பந்தாவில் தீக்ஷை பெற்று இன்று தென்னிந்தியாவில் மாத்திரமல்லாமல்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
பாரதம் முழுவதிலும் சிறந்த கீர்த்தனைகாரரென்று பெயர் பெற்றுள்ளார். இவரது ஹரிகதைகளுக்கு தென்னிந்தியாவில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி அவர் கதைகளைக் கேட்டு மெய்மறந்து விடுகிறார்களென்றால் ஸ்ரீ வெங்கடரமண ராயரின் ஜனரஞ்சக ஹரிகதைகள் எவ்வாறு அவர்கள் மனதைக் கவர்ந்துள்ளன மற்றும் அவர் பாண்டித்யத்தின் மதிப்பு என்பது சொல்லத் தேவையில்லை.

"அஜய்ய விஜயீந்திரர்" என்ற நூலாசிரியர் இயற்றிய "கமலேச" என்ற நாமாங்கிதமான கன்னட ஸமஸ்கிருத கீர்த்தனைகளைத் தமக்கே உரிய இனிமையான குரலில் பாடி ஆயிரக்கணக்கான ஜனங்களை மெய்மறக்கச் செய்யும் ராயரவர்களின் உழைப்பே இன்று கமலேசரின் கீர்த்தனைகள் தென்னாட்டில் நன்கு ப்ரசாரமாய் ஜனங்கள் மனதைக் கவர வைப்பதும், அவைகளின் டேப்ரிகார்டு செய்யப்பட்ட Cassettes (கேஸட்கள்) வெளியிடப்பட்டு ஸங்கீத ரஸிகர்கள், ஸ்ரீகுருராஜரின் பக்தர்கள் பாடும்படியாகவும் ஏற்பட்ட சூழ்நிலைக்குக் காரணமாயுள்ளது என்று தைரியமாகச் சொல்லலாம்.

ஸ்ரீராயர் ஸ்ரீகுருராஜரின் அநேக ப்ருந்தாவன ஸந்நிதிகளின் அபிவ்ருத்தியும் அங்கங்கே ஸ்ரீகுருராஜருக்கு வெள்ளி ரதம் செய்யும் காரியங்களையும் வெற்றிகரமாகச் செய்துள்ளார். தமிழ்நாட்டில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஸ்ரீகுருராஜரின் பக்தராவதற்கு ஸ்ரீவெங்கடரமணராயர் அவர்கள் செய்த ஸ்ரீகுருராஜரின் மகிமை பற்றிய ப்ரசாரம் தான் காரணம் என்றால் தவறாகாது. ஸ்ரீகுரு ஸார்வபௌமரிடத்தில் அவருக்குள்ள எல்லையில்லாத பக்திபரவசத்தை அவரது ஹரிகதை நடக்கும் ஸமயங்களில் எல்லோரும் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டுள்ளனர்.

ஸ்ரீவெங்கட்ரமணராயரின் ஸத்புத்ரரான ஸ்ரீபரிமள ராகவேந்த்ரராயர் ஸ்ரீவைதிக ஸாஹித்யம், ஸ்ரீமாத்வ தத்வ ஞானப்ரசாரம், ஸ்ரீகுருராஜரின் ஸேவைகளினால் தமிழ்நாட்டில் ப்ரகப்ரசித்தி பெற்றிருக்கிறார். அவர் லக்ஷக்கணக்கில் பணம் செலவு செய்து ஒவ்வொரு வருடமும் அநேக பெரிய பெரிய ஹோமங்களைச் செய்வித்து வித்வான் ஸாத்விக ப்ராமணர்களுக்குத் தாராளமாக தானங்கள் அளித்து அவர்களை மகிழ்வித்து அவர்கள் ஆனந்தப்படுவதைக்கண்டு தானும் மகிழ்வதைக் கண்டு எல்லோரும் அவரை "கலாச்சார போஷகர் மற்றும் தார்மிக ரத்னம்" என்று பாராட்டுகின்றனர்.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

இப்பேர்ப்பட்ட ஸத்புத்ரரை பெற்றிருக்கும் வித்வான் ஹரிதாஸ ரத்னம், ஹரிகதா கேஸரி முதலிய விருதுகளைப் பெற்ற ஸ்ரீ வி.எஸ். வெங்கட்ரமணராயர் தம் வம்சத்தின் ப்ராசீனாசார்யரும், குல குருவர்யருமான ஸ்ரீஸுசீலேந்த்ர தீர்த்தரின் "வஜ்ர மஹோத்ஸவம்" நினைவு க்ரந்தமான "அஜய்ய விஜயீந்த்ரரு" என்னும் கன்னட க்ரந்தம் வெளியிடுவதற்கு முக்கிய காரணராக இருப்பது அவருடைய சொந்த குருபக்தியை எடுத்துக்காட்டுவதாகும். ஸ்ரீயுதராயர் இந்த க்ரந்தத்தின் தமிழாக்க நூலின் வெளியீட்டிற்காக அஸாதாரண முறையில் திரவியம் உதவி, பேருபகாரம் செய்துள்ளார். இவருடைய மாபெரும் உதவியில்லாமல் இந்த மாபெரும் நூல் வெளியிடுவது இயலாத காரியம். இவ்வாறு பேருபகாரம் செய்துள்ள ஸ்ரீ வி.எஸ். வெங்கட்ரமணராயரவர்கள், அவரது புத்திரர், குடும்பத்தினர் மற்றும் சகோதரர்களுக்கும் ஸ்ரீ விஜயீந்த்ர-ராகவேந்த்ர ஸுசிலேந்த்ர-ஸுயமீந்த்ர தீர்த்த குருவர்யர்கள் க்ஞான-பக்தி-ஆயுராரோக்ய, ஐச்வர்யம், பெரும் கீர்த்தியும் ஸகலவிதமான மங்களங்களும் அருளி ரக்ஷிக்க மனமார வேண்டிக் கொண்டு அவருக்கு நமது நன்றியைச் சமர்ப்பித்து மனமுவந்து ஆசீர்வதிக்கிறோம்.

மேலும் உதவிகள் செய்த ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்திகள் மற்றும் ஸ்ரீ சி. ராஜா V. ப்ரம்மண்ய தீர்த்தருக்கு நமது நன்றியுடன் கூடிய ஆசீர்வாதத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றும் அவர்களுக்கு ஸகல மங்களங்களையும் அருளும்படி ஸ்ரீவிஜயீந்திர-ராகவேந்திர-சுயமீந்திர-தீர்த்தரவர்க்ளை வேண்டிக் கொள்கிறோம்.

முதல் தடவையாகத் தமிழ் நாட்டின் பக்தகோடிகளுக்காக வெளியிட்டு அளிக்கும் இந்த மாபெரும் நூல்களை குருபக்தர்கள் வாசித்து ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் மற்றும் ஸ்ரீகுருராஜரின் மகிமைகளையும் அற்புதச் செயல்களையும் தெரிந்து கொண்டு அவரிடம் பக்தி செய்து அவருடைய கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாகி கிருதார்த்தராக வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
குருபாத சேவகர்
ராஜா S. குருராஜாசார்யரும்
ராஜா S. லக்ஷ்மி நாராயணாசார்யர்
ஸ்ரீபரிமள வித்யாமந்திர, நஞ்சன்கூடு.

யுவஸம்வத்ஸரா,
வைசாக சுக்ல
ஸ்ரீந்ருஸிம்ஹஜயந்தி
13-5-1995
பெங்களூர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# தமிழாக்கம் பற்றி நூலாசிரியரின் முகவுரை

திரு. C.V. வெங்கட்ரமணராவ் ஸ்ரீராகவேந்திர குரு ஸார்வ பௌமரின் மற்றும் ஸ்ரீ விஜயீந்திர தீர்த்த ஸ்ரீ பாதங்களவரின் பக்தர்.. ஆசாரம் அனுஷ்டானம் முதலியவைகளில் உறுதியான நம்பிக்கையுள்ளவர். நடைமுறையிலும் கூடுமானவரை ஆசரணம் செய்பவர். ஆங்கிலம், தமிழ், ஹிந்தி மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். மொழிபெயர்ப்பதில் மிக ஆர்வமுடையவர். சென்ற 10 அல்லது 15 வருடங்களாகப் பல கட்டுரைகள், த்வைத ஸித்தாந்த சம்பந்தமான தத்வங்கள், ஸந்தியாவந்தனத்தின் சிறப்பு இவைகளைக் கன்னட மொழியிலிருந்து தமிழாக்கம் செய்து வந்திருக்கிறார். "ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்ர ஸாரஸுதா", "ஸ்ரீ வாதிராஜ விஜயம்" இன்னும் கன்னட தத்வ வாதப்பத்திரிகையில் அவ்வப்போது வந்துள்ள ரஸமான கட்டுரைகள் முதலியவைகளையும் தமிழ் மொழியில் எழுதியுள்ளார். "நாமக்கல் மகிமை" என்னும் தமிழ்ப் புத்தகத்தைக் கன்னட மொழியில் எழுதியுள்ளார்.

இவர் சிங்க நல்லூர் (கோவை) (லேட்) ஸ்ரீ குருராஜாசார்யரின் பௌத்திரர். இவர் தந்தை C.R. வாசுதேவராவ் அவரும் ஸமஸ்கிருதத்திலும், கன்னடம், ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். இவருடைய மூத்த பெரிய தகப்பனார் கும்பகோணத்தைச் சேர்ந்த திரு.C.R. ஸ்ரீநிவாஸாசார்யர், அக்காலத்தில் சக்ரபாணி கோவிலில் கைங்கர்யம் செய்தவர். சுமார் 100 வருடங்களுக்கு முன் கும்பகோணத்தில் தாசில்தார் வ்யாஸராவ், தாசில்தார் மாதவராவ் இருவர்களும் நல்ல உதார குணமுடைய மாத்வ ஆஸ்திக சிகாமணிகள். அவர்கள் உதாரகுணத்துடன் சமஸ்கிருதம் கற்பவர்களுக்குப் பண உதவி மற்றும் எல்லா உதவிகளும் செய்து வந்துள்ளனர். அவர்களில் திரு.ராவ் அவரின் தந்தையாரும் அப்பேருதவி பெற்றவர். பகவானின் கேசவாதி 24 நாமங்களினால் 24 சாஸ்திரம் படித்த ப்ராம்மணோத்தமர்களுக்கு 24 வீடுகள் தானம் செய்துள்ளனர். மொழிபெயர்ப்பாளரின் மற்றொரு பெரிய தகப்பனார் அதே சமயத்தில் கோவையில் பிரசித்தி பெற்ற புராணீகராக விளங்கினார். அவர் பெயர் C.R. ஆனந்த தீர்த்தாசார்யர்.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வெங்கட்ரமணராவ் சென்னை மேற்கு மாம்பலத்தில் 13, குப்பைய செட்டித் தெருவிலுள்ள மத்வ சங்கத்தின் அங்கத்தினர். அதன் முதல் தலைவர் கும்பகோணம் தாசில்தார் மாதவராயரின் ஸத்புத்திரரான C.M.V. ஜயீந்திராசார். அவர் ஸ்வயம் கவி. நல்ல மத்வ தீக்ஷை பெற்றவர். கன்னடத்தில் (நாகரி லிபி) நூற்றுக்கணக்கான தேவரு நாமங்கள் இயற்றி "விஜயீந்திர் விட்டலன்" என்னும் நாமாங்கிதத்துடன் தமிழில் புத்தகம் வெளியிட்டுள்ளார். அவர் பல இடங்களில் ஜகந்நாத தாஸரின் ஹரிகதாம்ருத ஸாரப்ரவசனங்கள், பல ஊர்களில், பலமுறை செய்திருக்கிறார். அவரிடம் திரு.ராவ் சிஷ்யத்வம் வகித்து ஹரிகதாம்ருதஸாரம் கேட்டார்.

அதன் பலனாக மத்வ சாஸ்திரம் கற்க வேண்டும் என்ற அவா உண்டாயிற்று. அதற்கு அனுகூலமாக மத்வ சாஸ்திர வித்பன்னரான வடபழநி திரு.சேஷகிரிராவ் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, எந்தவிதமான ப்ரதிபலனை எதிர்பாராமல் ஆசார்யரின் க்ரந்தங்களைப் போதித்தார். ஸமஸ்கிருதம் நன்கு அறியாதவர்களுக்கும் அதனால் நன்மை ஏற்பட்டது. ஆனால் வெங்கட்ரமணராவ் அவர்களுக்குக் கன்னட மொழி கற்றால்தான் மத்வ சாஸ்திரம் கற்க முடியும், புரியும் என்ற நிலை ஏற்பட்டது.

அதற்கும் அனுகூலம் ஏற்பட்டது. மத்வ சங்கத்தின் போஷகரான திரு.V. சேஷகிரி ராவ் அவர்களின் தந்தை திரு.வாஸுதேவராவ் தனக்குக் கைவந்த சுலபமான முறையில் திரு. ராவ் அவர்களுக்குக் கன்னட மொழி கற்பித்தார். விரைவிலேயே கன்னடம் நன்கு கற்று ராவ் அவர்கள் எந்தப் புஸ்தகமும் படிக்கும் திறமை பெற்றார். சமஸ்கிருதம் மூலம் கற்க முடியாத க்ரந்தங்களை இவர் கன்னடம் மூலம் கற்றுணர்ந்தார்.

எனது மூலக்ரந்தமான "அஜய்ய விஜயீந்திரர்" என்ற கன்னட கிரந்தத்தைப் படித்த பிறகு வெங்கட்ரமணராவ் என்னை நேரில் சந்தித்து எனது கிரந்தத்தைத் தமிழில் எழுதும் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். நானும் எனது நூலைத் தமிழில் வெளியிட வேண்டுமென்ற விருப்பமுடையவனாயிருந்ததால் அதற்குச் சம்மதம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தெரிவித்தேன். திரு. ராவ் அவர்கள் 500 பக்கங்கள் கொண்ட எனது நூலை மூன்றே மாதங்களில் மொழி பெயர்த்து என்னிடம் வாசித்துக் காண்பித்தார்.

திரு.வெங்கட்ரமண ராவ் மொழி பெயர்த்துள்ள எனது க்ரந்தமாகிய "அஜய்ய விஜயீந்திரர்" என்னும் தமிழ் நூல் எனக்கு மிகத்ருப்திகரமாக உள்ளது. அது மாத்திரமல்ல என் மனதிற்கும் மகிழ்ச்சியை உண்டாக்கியுள்ளது. சிலர் மொழி பெயர்க்கும்பொழுது தனது கற்பனை அபிப்ராயங்களைச் சேர்ப்பது வழக்கம். ஆனால் திரு.வெங்கட்ரமணராவ் தமிழாக்கம் செய்துள்ள இந்த நூல் மூல வாசகம், மற்றும் மூல க்ரந்தத்தின் அபிப்ராயத்திற்குச் சற்றேனும் குறை ஏற்படாமல், மூல க்ரந்தம் சுத்தமாக் மொழி பெயர்ப்பாகியுள்ளது, என்பதை தமிழ் நாட்டின் வாசகப் பெருமக்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பில் மூல க்ரந்தத்தின் நடை, விவரங்கள், சிந்தனைகள், கதை இவையாவும் கோர்வையாகவும், தொடர்ச்சியாகவும் எழுதப்பட்டு வாசகர்களின் மெய் சிலிர்க்கும்படியான வகையிலுள்ளது. இதை வாசிப்பவர்கள் ஆனந்தக் கடலில் மூழ்குவார்கள் என்பதை நான் தைரியமாகச் சொல்ல விரும்புகிறேன். நேர்மையான எண்ணத்துடன் மொழி பெயர்த்துள்ள திரு. வெங்கட்ரமணராயரவர்களை இந்த ஒரு உத்தமமான காரியத்திற்காக என் மனப்பூர்வமாக நான் பாராட்டுகிறேன். இவர் எந்தவித ஆசை, விருப்பமுமின்றி இதொரு க்ஞானகார்யம் மற்றும் ஹரி வாயு குருகளினுடைய மற்றும் ஸ்ரீ விஜயீந்திர குருகளின் ஸேவையென்ற பாவனையுடன் எனது மூல க்ரந்தத்தை வித்வத் பூர்ணமாக தமிழாக்கம் செய்து கொடுத்ததற்காக நான் அவருக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

நமது "ஸ்ரீபரிமள சம்சோதன மற்றும் ப்ரகாசன மந்திர"த்தின் பொன் விழாவின் (Golden Jubilee) நினைவு க்ரந்தமாக வெளியிட்டுத் தமிழ் நாட்டின் ஆஸ்திக தர்மாபிமானிகளான குரு பக்தர்களுக்கு ஒரு வெகுமதியாக அளிக்க மகிழ்ச்சியடைகிறேன்.



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீஹரிவாயு குருகள் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த குரு ஸார்வபௌமரும், ஸ்ரீராகவேந்திர தீர்த்த குரு ஸார்வமௌமரும் திரு. வெங்கட்ரமணராயரவர்களுக்கு மேலும் மேலும் க்ஞான பக்தி வைராக்யம் ஆயுள் ஆரோக்யம் மற்றும் எல்லா மங்களங்களும் அருளுமாறும், இன்னும் அநேக நூல்களை இயற்றி க்ஞானப்ரசாரம் செய்வதற்கு வேண்டிய சக்திகளைக் கருணைகூர்ந்து அனுக்ரஹம் செய்யும்படி ப்ரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
குரு ராஜதாஸன்.
ஸ்ரீராகவேந்த்ர குரு வம்சபூஷண வித்யாதி
ராஜ, பண்டிதராஜ
**ராஜா எஸ். குருராஜாசார்யர்.**
பெங்களூர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

## மொழி பெயர்ப்பாளரின் சிற்றுரை

भक्तानां मानसांभोज भानवे काम धेनवे ।
नमतां कल्पतरवे, विजयीन्द्रगुरुं भजे ॥

பக்தானாம் மானஸாம் போஜ பானவே காம தேனவே
நமதாம் கல்பதரவே விஜயீந்த்ர குரும் பஜே.

பக்தர்களின் மனமாகிய தாமரையை மலரச் செய்யும் சூரியனைப் போன்றவரும், காமதேனு கற்பக வ்ருக்ஷம் போல் பக்தர்களின் மனோபீஷ்டங்களைப் பூர்த்தி செய்பவருமான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த குருபாதங்களை நமஸ்கரிக்கின்றேன்.

"அஜய்ய விஜயீந்திரர்" என்னும் நூல் கன்னட மொழியில் எழுதப்பட்டுள்ளது. ஸ்ரீராகவேந்த்ர குரு ஸார்வ பௌமரின் வம்சத்தில் அவதரித்த, பண்டித பூஷணம் ராஜா எஸ். குருராஜாசார்யர் அவர்கள் பல அரசாங்க தஸ்தாவேஜுகள், ரிகார்டுகள், கல்வெட்டுகள், தாமிர சாஸனங்கள், சரித்திரச் சான்றுகள், ஸ்ரீமடத்தின் பழைய க்ரந்தங்கள், ஓலைச்சுவடிகள், காவியங்கள் முதலிய சான்றுகளைத் தேடி ஆராய்ந்து அல்லும் பகலும் அயராது உழைத்துப் பல பெரியோர்களைக் கலந்து ஆலோசித்து, மாபெரும் முயற்சி செய்து இந்நூலை இயற்றியுள்ளார். இவர் பல விருதுகள் பெற்றுள்ள மாபெரும் அறிஞர். இவர் பெற்றுள்ள விருதுகள் இப்புத்தகத்தின் முதல் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. சிறந்த கவியாகையால் அவர் எழுதிய நடை வித்வன் மணிகளுக்கு விருந்தாகவும், ஆஸ்திகப் பெருமக்களுக்குப் புரியும்படியும் உள்ளது. ஆனால் கன்னட மொழியில் உள்ளதால் கன்னடம் தெரிந்தவர்களுக்குத்தான் அதைப்படித்து ரஸிக்க முடியும்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் கன்னட நாட்டில் அவதரித்த தேவாம்சம் படைத்த மஹான். ஆயினும் தமிழ் நாட்டில் கும்பகோண க்ஷேத்திரத்தில் (The Temple City) வந்து தங்கி, அதைத் தனது கார்யக்ஷேத்திர மையமாக ஆக்கிக் கொண்டு தன் வாழ்நாட்களின் பெரும் பகுதியைத் தமிழ் நாட்டிலேயே கழித்து 16வது நூற்றாண்டில் கும்பகோணத்தில் காவேரி நதி தீரத்தில் மாபெரும் ஸமஸ்கிருத மஹாவித்யாபீடம் நிறுவிப் பெரிய கட்டிடங்கள் கட்டுவித்து நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குத் தங்கிக் கல்வி பயிலவும், அவர்களுக்கு உணவு உடை மற்ற ஸகல வஸதிகளையும் தம் மடத்தின்



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
சிலவிலேயே ஏற்பாடு செய்து, மஹா வித்வன்னர்களை ஆசிரியராக நியமித்து மாணவர்களுக்குத் தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸா சாஸ்திரம், வேதாந்தம், ஜோதிடம், ஆயுர்வேதம் மற்றும் ஷட்தர்சன சாஸ்திரங்கள் கற்பிக்க ஏற்பாடு செய்து பல பண்டிதர்களைத் தயாரித்து, அவர்களுக்குப் பல இடங்களில் வேலைவாய்ப்பு, தொழில் முதலியன ஏற்பாடு செய்து கொடுத்து வித்வான்களைப் போஷித்து, அரச சபைகளில் ஆஸ்தான வித்வான்களாக நியமிக்க உதவி செய்து கௌரவித்து வந்தார். வித்யாபீடத்தில் த்ரிமதஸ்தர்களும் கல்வி பயின்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பாரத நாட்டின் வெவ்வேறு பாகங்களிலிருந்து மாணவமணிகள் வந்து கல்விபயின்று வந்தனர். அவ்வப்போது தேர்தல்கள் நடத்தித் தேர்ச்சி பெற்ற தகுதியுள்ள மாணவர்களுக்கு சம்பாவனை, விருதுகள் அளித்து கௌரவப்படுத்தினார் ஸ்வாமிகள். தனது தவத்தையே பாரத நாட்டின் குலாச்சாரம், ஸமஸ்கிருத மொழி, கலைகள், பாடப்ரவசனம், தர்க்கம், வாதவிவாதம் இவைகளுக்காக அர்ப்பணித்து ஸத்வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரம் செய்து எல்லோரையும் ஸன்மார்க்கத்தில் அழைத்துச் சென்றார். ஏன் அரசர்களுக்கும் உறுதுணையாக விருந்து, நல்லுபதேசம் செய்தது மாத்திரமல்லாமல் யவனர்கள் கும்பகோணத்தில் தேவாலயங்களையெல்லாம் அழிக்க முயன்ற போது தனது தவம், யோக சக்தியினால் எதிரிகளை ஓட ஓட விரட்டித் தேவாலயங்களைக் காப்பாற்றியுள்ளார். இன்றும் அவருடைய மகிமைகளைப் பற்றிப் பேசும் பெரியோர்கள் கும்பகோணத்திலுள்ளனர். இப்பேர்ப்பட்ட மாபெரும் பரோபகாரம் செய்த மஹானின் சரித்திரம் கன்னட மொழியில் இயற்றியுள்ளார் இந்நூலாசிரியர்.

இந்த மஹானின் மூல க்ரந்தத்தைத் தமிழில் எழுத வேண்டும், தமிழ் நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும், குறிப்பாக இந்தயதிச்ரேஷ்டரைப் பற்றித் தெரிந்து கொள்ளாத மாத்வ சமூகத்தினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் அடியேன் இதைத் தமிழில் மொழி பெயர்க்க முன்வந்துள்ளேன். நூலாசிரியரை நேரில் சந்தித்து அவரிடம் என் விருப்பத்தைத் தெரிவிக்க அவர் மனமுவந்து அனுமதியளித்தார்.

இதற்கு முன் கும்பகோணவாஸியான ஸரஸகவி பாகவத ரத்னம், அபிநவ சுகாசார்யரென்னும் விருதுகளைப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பெற்ற மஹனீயரான R. அப்பணாசார் B.A., L.T., "ராஷ்ட்ரபாஷா விசாரத்" அவர்களால் இந்த நூலின் சுருக்கம் 91 பக்கங்களில் அழகான, எளிய நடையில் தமிழில் எழுதப்பட்டுள்ளதை நான் படிக்க நேரிட்டது. அந்நூலின் முகவுரையில் அன்னார் இவ்வாறு எழுதியிருந்தார்: "என்னுடைய இந்த நூலை வாசித்த பிறகு பக்தர்களுக்குக் கன்னட மொழி கற்றுக் கொண்டாவது மூல க்ரந்தத்தைப் படித்து விட வேண்டும் என்ற அவா ஏற்படுமானால் என் முயற்சி வீண்போகவில்லை எனப் பரம திருப்தியடைவேன். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரிடம் மேலும் பக்தி அதிகரித்தால் பரம திருப்தியடைவேன்". அவர் எழுதிய நூலைப்படிக்கும் பொழுது உடம்பெல்லாம் புல்லரித்தது. அது என்னை மூல க்ரந்தத்தைப் படிக்கத் தூண்டியது. மொழியோ கன்னடம், மேலும் 500 பக்கங்கள் கொண்ட பொக்கிஷம், அதற்கு ஸ்வாமிகளே வழிகாட்டினார் என்று தான் சொல்ல வேண்டும்.

ஸமஸ்கிருத ஞானமில்லாமல் குருவின் எதிரில் உட்கார்ந்து மத்வஸித்தாந்தத்தின் "அ ஆ"வைக் கற்க ஆரம்பித்த சமயம் அது. ஒரு நாள் ஆசிரியரிடம் பாடம் கற்கும்பொழுது யாராவது கன்னடம் கற்றுக் கொடுத்தால் நன்றியுள்ளவனாக இருப்பேனெனச் சொல்லிக் கொண்டிருக்கையில் சங்கத்தின் போஷகரான ஸ்ரீ V. Seshagiri Rao, B.A., L.T. அவர்களின் தந்தையார் திரு.வாஸுதேவராவ் எனக்குக் கன்னடம் கற்றுக் கொடுக்க முன் வந்தார். அவர் புது முறையில் தன் அனுபவத்திற்கு வந்த முறையில் எழுத்துக்கள் கற்பித்தார். 15 நாட்களில் எழுத்துக்கள் முழுவதும் பாடமாகிவிட்டன. பிறகு கடும் உழைப்பினால் சிறு புத்தகங்கள், பெரிய புத்தகங்கள், ஸ்தோத்திரங்கள் பிறகு தத்வ வாதம், கீதா ஸாரோத்தாரம் முதலியவை கற்று ஏற்கனவே கற்றிருந்த ஹரிகதாம்ருதஸாரம் கன்னடத்தில் புத்தகம் வாங்கி முழுவதையும் படித்து மத்வஸித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்களை நன்கு அறிந்தேன். அஜய்ய விஜயீந்திரர் க்ரந்தத்தைப் படித்தேன். அது ஒரு காவ்ய க்ரந்தமாகவே எனக்குப் புலப்பட்டது. க்ரந்தகர்த்தரின் கவித்வம், கற்பனா சக்தி, சாஹித்யக்ஞானம், கோர்வையான நிகழ்ச்சிகளின் வர்ணனை இவைகள் அவரது பண்டித பூஷணத்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. அதில் நவரஸங்கள், அலங்காரங்கள், பழமொழிகள் தத்வங்கள் அபாரமாக உள்ளன. சுருக்கமாகச் சொல்லப்போனால் ஒரு ஊமையிடம்


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
வெல்லத்தைத் தின்னக் கொடுத்து எப்படியிருக்கிறது என்று கேட்டால் அவன் என்ன சொல்ல முடியும்? அது போல் தான் க்ரந்தத்தை ரஸித்தேனே தவிர அதைப் புகழ எனக்கு வார்த்தைகள் வரவில்லை.

500 பக்கங்களுள்ள இப்படிப்பட்ட நூலை 3 மாதங்களுக்குள்ளாகவே மொழி பெயர்த்து நூலாசிரியரிடம் எடுத்துச் சென்று மொழி பெயர்ப்பை அவருக்கு வாசித்துக் காட்டி அவர் திருப்தியடைந்தார். அதைப்பற்றி அவர் தனது முகவுரையில் விளக்கியுள்ளார். ஸ்ரீராகவேந்திர குரு ஸார்வபௌமர் கிருபையாலும் அவரது பரமாசார்யரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தராலும் இந்நூல் உருவானது. கும்பகோணம் R. அப்பணாசார்யர் அவர்களுக்குப் பரம திருப்தியளித்திருக்குமென நம்புகிறேன். இதற்கெல்லாம் மூல காரணம் எனக்குக் கன்னடம் கற்பித்த மத்வ சங்க வாசுதேவராவ் அவர்கள் என்பதை நான் சொல்லியே ஆகவேண்டும்.

இந்தத் தமிழ் நூலைத் தமிழ் நாட்டு ஆஸ்திக மணிகளும், தர்மாபிமானிகளும், தமிழறிந்த எல்லோரும் குறிப்பாக மாத்வமஹனீயர்களும் அன்புடன் வரவேற்பார்களென உறுதியாக நம்பி, அவர்கள் ஆதரவையும் ஆசியையும் கோருகின்றேன்.

இறுதியில் இந்த மஹத்தான காரியத்தைச் செய்ய எனக்கு உறுதுணையாக இருந்து என்னைப் பல விதத்தில் ஊக்குவித்து, உதவியளித்த மின்னூர் மணியம் மிராசுதார் S. ஸ்ரீநிவாஸராவின் த்வீதிய குமாரரும், ஸ்ரீராகவேந்திர குரு ஸார்வபௌமரின் பரம்பரையில் வந்த பீடாதிபதி ஸ்ரீஸுயமீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களின் பூர்வாஸ்ரம ஜேஷ்டபுத்திரர் ஸ்ரீவேணுகோபாலாச்சார்யரின் மருமகனுமான திரு. S. கிருஷ்ணமூர்த்தி ராவ், B.Com., அவர்களுக்கும், ஸ்ரீவேணுகோபாலாசார்யரின் சத்புத்திரரான ஸ்ரீ V. ப்ரம்மண்ய B.Com., அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

சுபம்.

இங்ஙனம்,

குருராஜரின் தாஸன்

C.V. வெங்கட்ரமணராவ்

(ராஷ்ட்ரபாஷா ப்ரவீண்)

சென்னை-87.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

**ஜகத்குரு ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் நான்காவது நூற்றாண்டு, ஸ்ரீசுயமீந்திர தீர்த்தரின் ஜன்ம சதாப்தி மற்றும் ஸ்ரீபரிமள ஸம்சோதன - மற்றும் ப்ரகாசன மந்திரத்தின் ஸ்வர்ணமகோற்சவம் (பொன் விழா)**

## விக்ஞாபனம்

ஜகத்குரு ஸ்ரீமத்வாசார்யரின் முக்கிய மஹாஸமஸ்தானாதீச்வரரான ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் வேதாந்த ஸாம்ராஜ்ய திக்விஜய வித்யா சிம்மாஸனாதீச்வரரான ப்ரம பூஜ்ய ஸ்ரீசுயமீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் ஆணை, உபதேசம், மற்றும் சாம்ராட் போஷகத்வத்தில் கி.பி.1945ல் ஸ்ரீநரசிம்ம ஜயந்தி மங்களகரமான் தினத்தன்று ஸதாபிதவான நமது ஸ்ரீபரிமள சம்சோதனம் மற்றும் ப்ரகாசன மந்திரத்தின் 50வது பிறந்த நாளும் (ஸ்வர்ணமகோற்சவம்) இதே யுவஸம்வத்ஸர, வைசாக சுக்ல ஸ்ரீந்ருசிம்ம ஜயந்தியன்று வைபவத்துடன் நிறைவேற்றப்படும் விஷயத்தை தர்மாபிமானிகளான ஸ்ரீகுருபக்தரிடம் நிவேதிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

நாம் நம்து வித்யா நிறுவனத்தின் பொன் விழாவை ஸ்ரீஹரி வாயு குருராஜரின் மற்றும் ஸ்ரீசுயமீந்திர தீர்த்தரின் ஆக்ஞைப்படி ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகளின் 4வது நூற்றாண்டு விழா, மற்றும் சுயமீந்திர தீர்த்தரின் ஜன்ம சதாப்தி விழாக்களுடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இந்த சுபவேளையில் இந்த மூன்று உற்சவங்களின் நினைவாக சுமார் 30 சமஸ்க்ருத, கன்னட, தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மராத்தி, இங்கிலீஷ் மொழிகளில் நூல்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ளோம்.

நாங்கள் வெளியிட்டுள்ள க்ரந்தங்களைப் பற்றி அஜய விஜயீந்திரர்-ஸ்ரீராகவேந்திர குருஸார்வபௌமர் என்னும் இரண்டு தமிழ் நூல்களை ஸ்ரீஹரி வாயு குருராஜரின் பக்தர்களுக்கு அளிக்க மகிழ்ச்சியடைகிறோம். இந்த நூல்களை நமது வேண்டுகோளின்படி ஸ்ரீ C.V. வெங்கட்ரமணராவ் (ராஷ்ட்ரபாஷா ப்ரவீண்) தமிழில் வெகு அழகாக மொழிபெயர்த்து உபகாரம் செய்துள்ளார். அதற்காக நாம் ஸ்ரீ C.V. வெங்கடரமணராயருக்கு நன்றியுள்ளவராகி நமது வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதுபோல் இந்த நூல்களை அச்சிட்டுக்


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

கொடுத்த சென்னை, தாம்பரம் விஜயா அச்சகத்தின் ஸ்ரீசுப்ப்ராயருக்கு நாங்கள் எங்களுடைய மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இதுபோல் இந்த இரண்டு நூல்களின் வெளியீட்டிற்குத் தாராளமாக திரவிய உதவியளித்து உபகாரம் செய்துள்ள சென்னையின் ப்ரஸித்த ஹரிகதா வித்வானும் நமது பந்துக்களுமான ஸ்ரீ வி.எஸ். வெங்கட்ரம்ணராவ் மற்றும் அவரது ஸத்புத்திரரான ஸ்ரீபரிமளராகவேந்த்ர ராயருக்கு நாம் மிக நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். அவரது உதவியினாலேயே இந்த நூல்களை வெளியிட்டுள்ள நாம் அவருக்கு நமது மனமார வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றும் மேல்கண்ட எல்லா மஹான்களுக்கும் ஸ்ரீஹரி வாயு விஜயீந்திர-ராகவேந்திர-சுயமீந்திரர் சகல நன்மங்களங் களையும் அருளட்டும் என்று வேண்டிக்கொள்கின்றோம்.

முக்கியமாகத் தமிழாக்கம் செய்துள்ள C.V. வெங்கட்ரமணராயரின் பரிசயத்தை நமக்குச் செய்து கொடுத்து இந்த இரண்டு நூல்களிளை மொழிபெயர்க்கச் செய்து அந்த பாகங்களை நம்மிடம் கொணர்ந்து வாசித்துக்காட்டி, அவைகளின் Xerox ப்ரதிகளைத் தயார்செய்து கொண்டு வந்து காண்பித்து இதற்காக மூன்று நான்கு முறைகள் ஆம்பூர்-மதராஸ்-பெங்களூர் வரை ப்ரயாணம் செய்து அழகாக அச்சிட்டுக் கொடுக்கும் அச்சகத்தினரை ஏற்பாடு செய்து கொடுத்து அச்சுவேலையை ஆரம்பிக்க, அநேகவித காரியங்களிடையே அவைகளை ஒத்திப்போட்டு, இந்த நூல் அச்சாவதற்கு வெகுவாக உழைத்து ஸ்ரீ குருராஜரின் சேவையெனப் பாவித்து மகிழ்ச்சியுடன் எமக்கு உதவிய நமது தமையனாரான ஸ்ரீராஜா S. வேணுகோபாலாசார்யரின் மருமகனான ஆம்பூரின் ஸ்ரீயுத S. கிருஷ்ணமூர்த்தியவர்கள் மற்றும் நம் தமையனாரின் புத்திரரான ஸ்ரீராஜா V. ப்ரம்மண்ய தீர்த்தர் இவர்களின் உதவிகளை நாம் என்றும் மறக்கமுடியாது. விருதுகளைப் பெற்ற ஸ்ரீயுத வி.எஸ். வெங்கட்ரமணராயர் தம் வம்சத்தின் ப்ராசினாசார்யரும், குலகுருவர்யருமான ஸ்ரீஸுசிலேந்த்ர தீர்த்தரின் "வஜ்ரமஹோத்ஸவ" நினைவுக்ரந்தமான" அஜய்ய விஜேந்த்ரரு" என்னும் கன்னட

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

க்ரந்தம் வெளியிடுவதற்கு முக்கிய காரணராக இருப்பது அவருடைய சொந்த குருபக்தியை எடுத்துக்காட்டுவதாகும். ஸ்ரீயுதராயர் இந்தக்ரந்தத்தின் தமிழாக்க நூலின் வெளியீட்டிற்காக அஸாதாரண முறையில் திரவியம் உதவிப் பேருபகாரம் செய்துள்ளார். இவருடைய மாபெரும் உதவியில்லாமல் இந்த மாபெரும் நூல் வெளியிடுவது இயலாதகாரியம். இவ்வாறு பேருபகாரம் செய்துள்ள ஸ்ரீ வி.எஸ். வெங்கட்ரமணராயரவர்கள், அவரது புத்திரர் குடும்பத்தினர் மற்றும் சகோதரர்களுக்கும் ஸ்ரீவிஜயீந்த்ர-ராகவேந்த்ர-ஸுசீலேந்த்ர-ஸுயமீந்த்ர தீர்த்த குருவர்யர்கள் க்ஞான-பக்தி-ஆயுராரோக்ய, ஐஸ்வர்யம், பெரும் கீர்த்தியும் சகலவிதமான மங்களங்களும் அருளி ரக்ஷிக்கட்டுமென்று மனமார வேண்டிக் கொண்டு அவருக்கு நமது நன்றியைச் சமர்ப்பித்து மனமுவந்து ஆசீர்வதிக்கிறோம்.

ஸ்ரீகுருராஜ பாதகிங்கரன்.
ராஜா ஸ்ரீ குருராஜாசார்யர்
நூலாசிரியர்.
பெங்களூர்.

நரசிம்ம ஜயந்தி
தேதி: 13-5-1995



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

## க்ரந்த சமர்ப்பணம்

ஜகத்குரு ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் நான்காவது நூற்றாண்டு, ஸ்ரீசுயமீந்திர தீர்த்தரின் ஜன்ம நூற்றாண்டு மற்றும் ஸ்ரீபரிமள ஸம்சோதனம் மற்றும் ப்ரகாசன மந்திரத்தின் பொன் விழாக்களின் நினைவிற்காக வெளியிட்டுள்ள "அஜய்ய விஜயீந்த்ரரு", "ஸ்ரீ ராகவேந்த்திர குருஸார்வபௌமர்" என்னும் இரண்டு தமிழ் நூல்களை ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜசாகார் யத்வாதி அமந்த்பிருத ப்ருந்த விபூஷிதரான ஸர்வ தந்த்ரஸ்வதந்த்ரரான ஸ்ரீமூலரகுபதி வேதவ்யாஸ ஸ்வாமிகளின் பாத பத்மாராதகரான ஜகத்குரு ஸ்ரீமன் மத்வாசார்யரின் வேதாந்த ஸாம்ராஜ்யாதீச்வரரான ஸ்ரீமத் விஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் மற்றும் ஸ்ரீமத் ராகவேந்திர குரு ஸார்வ பௌமரவரின் சரண கமலங்களில் மற்றும் அந்த மடத்தின் திக்விஜய வித்யா சிம்மாஸனாதீச்வரரான பரம பூஜ்ய ஸ்ரீமத் சுயமீந்த்ர தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் சரண கமலங்களில் பக்தி-சிரத்தையுடன் சமர்ப்பணம் செய்யப்படுகின்றது.

யுவநாம ஸம்வத்ஸரம்
வைசாகசுக்ல ஸ்ரீநரசிம்ம ஜயந்தி
பெங்களூர்.
தேதி 13-5-1995

ஸ்ரீபாதபாதகிங்கரன்
ராஜா S. குருராஜாசார்ய
மற்றும்
ராஜா S. லக்ஷ்மிநாராயாணாசார்ய
ஸ்ரீபரிமள்வித்யா மந்திரம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# அஜய்ய விஜயீந்திரர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

॥ श्री ॥

# அஜய்ய விஜயீந்திரர்

आचार्यः पवनोऽस्माकं आचार्याणीच भारती ।
देवो नारायण श्रीशः देवी मंगल देवता ॥

ஆசார்ய; பவனோஸ்மாகம் ஆசார்யாணீச பாரதீ !
தேவோநாராயணஶ்ரீச: தேவீ மங்கள தேவதா !!

भक्तानां मानसांभोजभानवे कामधेनवे ।
नमतां कल्पतरवे विजयींद्रगुरुं भजे ॥

பக்தானாம் மானஸாம் போஜபானவே காமதேனவே

நமதாம் கல்பதரவே விஜயீந்த்ர குரும்பஜே !!

இரு மஹா யோகிகளின் சந்திப்பு.

கர்நாடக ஸாம்ராஜ்யத்தின் ஸ்வர்ணயுகமென்று ப்ரஸித்தி பெற்ற காலம் கிருஷ்ணதேவராயனின் ஆட்சியின் பொற்காலம்.

தங்கள் பிதாமஹனான நான்முகனின் தரிசனம் செய்யும் இச்சையுடன் தேவகுருவே முதலானவர்களுடன் கூடிக்கொண்டு பரப்ரம்மத்தின் தரிசனத்திற்காக வாயிலில் காத்துக்கிடக்கும் சசீபதியான தேவேந்திரனைப் போல், ஶ்ரீவ்யாஸராஜயதிராஜரே! தமது தரிசனம் பெறுவதற்காக வீரநரபதி கிருஷ்ணதேவராயர் புரோஹிதர்களுடன் மடத்தின் வாயிலில் தனது குறிப்பிட்ட சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் என்று வாயில் காப்போன் யாரிடம் விக்ஞாபனம் செய்து கொண்டிருந்தானோ அப்பேர்ப்பட்ட ஶ்ரீவ்யாஸராஜ குருஸார்வபௌமர் விஜயநகரத்தின் ஒரு பெரிய அரண்மனையில் ராஜ வைபவத்துடன் ஶ்ரீமூல கோபாலகிருஷ்ணனின் பூஜையில் ஈடுபட்டிருக்கிறார். விஷ்ணுபக்தனும் ஶ்ரீ சந்தரிகாராயரின் சிஷ்யனுமான கர்னாடக மாதாவின் பதியான (கிருஷ்ணதேவராயர்) ஹரிவாஸர பூஜையைப் பார்த்துக் கொண்டு பக்திபாவத்துடன் கைகூப்பிக் கொண்டு அமர்ந்திருக்கிறார். அரசசபை அதிகாரிகள், நகரத்தார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மற்றும் வித்வத் ரத்னங்களும் வரிசை வரிசையாக அமர்ந்திருக்கின்றனர். ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர், ஸ்ரீவாதிராஜர், மற்றும் 24 பேர் எல்லா சிஷ்யர்களும் ஸ்ரீகளவருக்கு எதிரில் வலதுபுறம் அமர்ந்திருக்கின்றனர். ஸ்ரீபுரந்தர, கனகதாஸர்கள் இடது புறத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர். கண்ணிற்கும் மனதிற்கும் மகிழ்ச்சி அளிக்கும் அந்தப் பரம பவித்ரமான காட்சி வர்ணிக்க முடியுமா? வைபவத்துடன் பூஜை நிறைவேறியுள்ளது. அர்ச்சனை நேரம். ஸ்ரீவ்யாஸ முனிவர் தங்கமயமான துளசிக்குடலையை எடுத்துக் கொண்டார். துளசியைக் கையில் வைத்திருக்கிறார். ஆனால் என்ன ஆச்சர்யம்! அதை பகவானுக்கு ஸமர்ப்பிக்கவில்லை. அவருடைய வலப்பக்கத்தில் நின்றிருந்த ஸேவகனை ஒருமுறை பார்த்தார். பாவம் அவன் எதுவும் புரிந்து கொள்ள முடியாமல் திருதிருவென்று முழித்துக் கொண்டு உட்கார்ந்தான். ஸ்ரீவ்யாஸராஜர் "நிர்மால்ய"மென்றார். (ஒருமுறை பூஜையில் உபயோகிக்கப்பட்டதை நிர்மால்யம் என்கின்றனர்) புரந்தரதாஸர் சிரித்தார். கனகதாஸரும் கண்மூடிக்கொண்டு தானும் சிரித்து, "ஆம் நிர்மால்யம் தான், உண்மை" என்றார். அங்கேயே நின்று கொண்டிருந்த சந்தனம், துளஸி தயார் செய்பவன் "இல்லை மஹாப்ரபோ, சுத்தமாக மடியில் வனத்திலிருந்து நானே கொண்டு வந்திருக்கிறேன்" என்றான். ஸ்ரீகளவர்கள் தலை அசைத்துத் தோட்டத்தில் யாரிருந்தது? என்று வினவினார். "ஸ்வாமி, மன்னிக்க வேண்டும், யாரோ ஒரு சந்யாஸி உட்கார்ந்து தியானத்திலிருந்தார், தங்கள் சேவைக்குத் தாமதமாகக் கூடாதென்று நான் அவரைக் கவனிக்காமல் வந்துவிட்டேன் என்று தலை வணங்கி நின்றான் துளசி, சந்தனம் கொண்டு வரும் சேவகன், "உம், முட்டாள்தனம், பாக்யமில்லாதவன்" என்று சொல்லிவிட்டு, வேறு துளசியைத் தருவித்துப் பூஜையைச் சீக்கிரம் முடித்தார். தீர்த்தம், புராணபடனமான பிறகு ஸ்ரீகிருஷ்ணதேவராயர் ஸ்ரீகளவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவரைத் தரிசித்தார். "ஸ்வாமி, தாங்கள் துளஸியைப்பார்த்து "நிர்மால்யம் என்று சொல்லியருளினீர். தாஸர் சிரித்தார். ஸ்ரீகனகதாஸரோ தங்கள் வார்த்தையையே ஆமோதித்தார். எனக்கொன்றுமே புரியவில்லை, தயவுசெய்து விளக்கம் அருள வேண்டும்" என்றார். ஸ்ரீவ்யாஸமுனி புன்சிரிப்புடன், "ஏ ராஜா, நீ மிகுந்த புண்யம் செய்தவன், உன்னுடைய ராஜ்யம் இன்று ஒரு மஹா

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



தபஸ்வியின் பாத தூளியினால் பவித்ரமாகியுள்ளது. மானஸீக பூஜா செய்வதில் வித்பன்னரான அவர் துளஸிவனத்தையே ஸ்ரீஹரிக்கு அர்ப்பணித்து விட்டார். அதை நாம் அறிந்தோம். புரந்தரதாஸரும் கனகதாஸரும் தெரிந்து கொண்டனர். அதிருக்கட்டும், நீ இப்பொழுது அந்த மஹாமஹிமரை வரவேற்கத் தயார் செய். நாமும் வருவோம்" என்று சொன்னார். மஹாராஜாவிற்கு உண்டான மகிழ்ச்சி இவ்வளவு என்று சொல்ல முடியாது. சரி. கேட்க வேண்டுமா? ஸகல ராஜ மரியாதைகளும் வந்துவிட்டன. ஸ்ரீகளவர், அரசன் மற்றும் சிஷ்யர் கூட்டம் நகரத்தார்களுடன் நகரத்தின் எல்லையிலுள்ள தோட்டத்திற்கு விரைந்தனர்.

ரமணியமான தோட்டம். தோட்டத்தின் முன்புறம் "ஓம்" ப்ரணவம் அங்கிதமான கொடி பறந்து கொண்டிருக்கிறது. தோட்டத்தின் ஒரு பெரிய மரத்தடியில் மான் தோலின் மீது தேஜோமயமான ஒளி வீசும் முகத்தையுடைய முனி புங்கவர் த்யான மக்னராக வீற்றிருக்கிறார். ஸூர்யனின் மந்த கிரணங்கள் தேஜோமய சரீரமுடைய யதிகளின் மீது பட்டு அவரை நன்றாகக் காண உதவின. அமைதி நிலவும் சூழ்நிலை. அவர் சமீபத்தில் சிலர் புஸ்தகங்கள் பார்ப்பதில் ஈடுபட்டுள்ளனர். சிலர் யதிவர்யரின் பாதங்களின் அடியில் வீற்றிருக்கின்றனர். ராஜ மரியாதைகளுடன் வந்து கொண்டிருக்கும் ஸ்ரீசந்த்ரிகாராயரைக் கண்டு யதிவர்யரின் பரிவாரங்கள் ஆச்சரியத்துடன் அவரை விட்டு விலகி நின்றனர். த்யானத்திலீடுபட்டிருந்த யதிகள் கண் திறந்து சிரித்தார். ஸ்ரீவ்யாஸராஜர் யதிவர்யரை வந்தனம் செய்தார். யதிகளும் வந்தனை செய்து, "நம்மால் இன்று துளஸி நிர்மால்யமாகிவிட்டதனால் மூல கோபாலகிருஷ்ணனின் பூஜைக்குத் தொந்தரவாயிற்றென்று காணுகிறது" என்று ஸ்ரீவ்யாஸராயரிடம் விண்ணப்பித்துக் கொண்டார். வ்யாஸராஜரும் அரசனைப் பார்த்துப் புன்சிரிப்புடன் "தமது தரிசனத்தால் நான் தன்யனானேன்" என்று யதிகளைப் புகழ்ந்தார். இருவரும் மஹாத்மாக்கள். இருவர் கண்களிலிருந்தும் ஆனந்த பாஷ்பம் சொரிகிறது. தொண்டை ஆனந்தப்பெருக்கினால் பேச வராதபடி அடைத்தது. இந்த விலக்ஷமான காட்சியைக் கண்டு பக்தி பரவசத்தால் எல்லோரும் இரு யதிகளுக்கும் ஸாஷ்டாங்க நமஸ்காரம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

செய்கின்றனர். ஆஹா! இரு மஹான்களின் பேட்டி இனிமையான பந்து ப்ரேமை. நிர்மலமான, பவித்ரமான வாய்ப்பு. அதைப் பார்த்து ஆனந்தித்தவர்களே புண்யவான்கள்.

ஸ்ரீவ்யாஸ்ராஜர் கிருஷ்ணதேவராயருக்கு யதிகளைப் பற்றிய அறிமுகம் செய்வித்துக் கொண்டே, "ஸ்ரீமதாசார்யரின் மஹாபீடத்தில் வந்த ஜகத்ப்ரஸித்தமான வித்வத் சக்ரவர்த்திகளான ஸ்ரீவிபுதேந்த்ர தீர்த்தரின் உத்தமமானதும் பவித்ரமானதுமானதுவம் சத்தில் வந்த மஹா மஹிமையுடைய ஸ்ரீஸுரேந்த்ர தீர்த்தரே இவர். நம்முடைய பீடங்கள் அண்ணன் தம்பிகளின் பீடங்களாகும். அரசே! இந்த தபஸ்விகளின் பாத தூளிகளால் உனது ராஜ்யம் பவித்ரமடைந்தது, ஸ்ரீயவர்களை உனது தலைநகரத்திற்கு வருகைதரும்படி வேண்டிக் கொள்வாயாக" என்று சொன்ன உடனே பக்தியுடன் புளகாங்கிதனான கிருஷ்ணதேவராயர் ஸ்ரீயவர்களின் பாதாரவிந்தகளுக்குத் தலைவணங்கி கூப்பிய கரங்களுடன், "பகவன், பாதஸேவகனின் மீது தயை செய்ய வேண்டும், தாஸனின் வரவேற்பை ஏற்றுக் கொண்டு அருள்பாலிக்க வேண்டும்," என்று ப்ரார்த்தித்தான். ஸ்ரீஸுரேந்திரர், "நாமேவருவதாக உள்ளோம், மகிழ்ச்சி, ஸ்ரீசந்திகாராயரைப் போன்ற யதிச்சக்ரவர்த்திகளின் சிஷ்யனான நீ உண்மையாகவே பாக்யவான். எனது ஆராத்ய தேவதையான ஸ்ரீமூலராமன் உனது வரவேற்பு உபசாரத்தை ஏற்றுக் கொள்ளுகிறார். நட" என்று அருளினார். ஜனங்களின் பெருவெள்ளம், விதவிதமான அரசு மரியாதை விருதுகளுடன் தங்கப் பல்லக்கை இரண்டு யதிகளும் அலங்கரிக்க திருவீதி உலா ராஜ வீதிகளின் வழியாகப் புறப்பட்டு ஸ்ரீவ்யாஸராஜரின் மடத்தையடைந்தது. ஸ்ரீஸுரேந்திரர் முகாம் ஸ்ரீவ்யாஸராஜரின் மடத்திலேயே ஏற்பாடாயிற்று.

மறுநாள் த்வாதசி. யதீச்வரரிருவரும் ஒன்றாக அமர்ந்து ஸ்வாமி பூஜை செய்துள்ளனர். ஜனஸமூகம் மடத்தில் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் சுவாமியை வணங்கின பாவத்தில் அவரைக் கையில் பிடித்துக் கொண்டு சபையோருக்குக் காண்பித்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீமூலராமரின் தரிசனத்தினால் புளகாங்கிதமடைந்த ஸ்ரீபுரந்தர தாஸரின் வாயினின்று ராக ஸங்கீத வெள்ளம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பெருகிற்று. சபை நிசப்தமாயுள்ளது. காலத்தையொட்டிய ராகம். பிலஹரி ராகம் ஆலாபனம் தொடங்கிற்று. பக்தி கீதையொன்று ஆரம்பமாயிற்று.

ராகம்: பிலஹரி தாளம்-ஜம்பை.

இந்தின தின ஸுதினவாயிது (ப)
இந்திரேச மூலராம சந்த்ரன பதகமல கண்டு (அ.ப.)
ஸீதெய ஸஹ பூஜிஸி இக்ஷ்வாகு ந்ருபதிகித்தனு
ஆதனன்வய ந்ருபதிகளு ஸுப்ரீதியிந்த பூஜிஸி ரகு
நாத வேதகர்பகித்துமூர்த்திய பதகமல கண்டு (1)
கஜபதி பண்டாரதல்லி அஜகரகமலார்ச்சித பூ
மீஜெ ஸஹித ராமனிரலு நிஜ க்ஞானதி திளிது பேக
த்விஜர குருகளெனிப நம்ம ஸுஜன வந்தித நரஹரி முனி
ரஜனியல்லி தந்த ஸுலோஹஜ ப்ரதிமேயன்னு கண்டு (2)
அந்தவுள்ள மூலராமசந்த்ரன அதி பக்தியிந்த
வ்ருந்தாரக வ்ருந்த வந்த்யநெனிப நம்ம பவன
நந்தன குரு ஸ்ரீமதாநந்த தீர்த்தரர்ச் சிஸிதய
திந்த நிஜான்வயதொளிட்ட புரந்தரவிட்டலன ஸுரேந்த்ர
முனிப தந்து தோரலு (3)

கனகதாஸர் சிரித்துக்கொண்டே, "தாஸரே!, ஸ்ரீயவர்கள் அரசனுக்கு இந்த சதுர்யுக மூர்த்தியின் மஹிமையைத் தெரிவிக்க எண்ணியிருந்தார். தாங்கள் அதற்குள் அதை விவரமாகத் தெரிவித்தே விட்டீரே" என்றார், சந்த்ரிகாராயர், ஸுரேந்திரர், புரந்தர தாஸருக்கும் ஒரே சிரிப்பு. இந்த விசித்ரமான ஸந்தர்ப்பத்தைக் கண்டவர்கள் யார் பெரியவர், யார் மஹாத்மா என்று தெரிய முடியாதவர் ஆகிவிட்டனர். அரசன் திகைத்தான். ஸ்ரீவ்யாஸராஜர் தமது உபாஸனாமூர்த்தியாகிய ஸ்ரீமூலகோபாலகிருஷ்ணனையும் தமது ஸமஸ்தான ப்ரதிமைகளையும் எடுத்துக் காண்பித்தார். இந்த மஹான்கள் இருவரின் பூஜை, ப்ரேம ஸல்லாபங்களைக் கண்டு ஸாது ஜனங்களின் ஸமூஹம் பக்தியினால் ஆனந்த பரவசமடைந்து மெய் மறந்தனர். பூஜை முடிந்தது. தீர்த்தமும் எல்லோருக்கும் கொடுத்தாயிற்று. அதென்னமோ ஸுரேந்த்ரதீர்த்தர் மறுபடியும் மறுபடியும் விஷ்ணு தீர்த்தரைப் பார்த்து ஆனந்தமடைந்து கொண்டிருந்தார். எதையோ யோசித்துக் கொண்டிருந்தார். விஷ்ணு தீர்த்தரின் முகத்தில் இன்றென்னமோ விசித்ரமான ஒளி வீசிக்கொண்டிருந்தது. பக்தியுடன் கைகூப்பிக் கொண்டு அமர்ந்திருந்தார். த்வாதசி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பாரணை வேளை. ஹஸ்தோதகம் ஆக வேண்டும். ஸுரேந்திரர் என்னமோ மௌனமாக அமர்ந்திருந்தார். வ்யாஸராய ஸ்வாமி ஒருமுறை அந்தப் பக்கம் பார்த்தார். புரந்தரதாஸர், "மூலராமனுக்கு ஒரு மஹானின் மீது இன்று பார்வை விழுந்திருக்கிறது'', என்று சொல்லவும் ஸ்ரீவ்யாஸராஜர்-"ஸ்ரீகோபாலக்ருஷ்ணன் அதற்காகவே வளர்த்திருக்கிறான், கொடுக்கிறான்'' என்றார். விஷ்ணுதீர்த்தர், "ஆக்ஞையைச் சிரஸாவஹிக்கிறேன்" என்று சொன்னது தான் தாமதம், மௌனமாக அமர்ந்திருந்த ஸ்ரீவாதிராஜர் அன்புடன் விஷ்ணுதீர்த்தரின் முதுகைத் தட்டிக்கொடுத்து, "அப்படியானால் கண்டிப்பாக உடுப்பிக்கு வந்து ஸ்ரீகிருஷ்ணன் கொடுக்கும் மடத்தை நண்பர் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்'' என்று சொன்னார். ஸ்ரீஸுரேந்திரர், "மூலராமன் ப்ரீதியடைந்தான்'' என்று த்ருப்தியடைந்து பாரணையை முடித்துக் கொண்டார். நிறைந்திருந்த ஜனங்களுக்கு இது ஒரு நாடகம் போலவே தோன்றியது. ஒருவர் ஒன்று சொன்னால் மற்றொருவர் முன்பின் சம்பந்தமில்லாத இன்னொன்று சொல்லுவர். உண்மை! ஒருவரைக் காட்டிலும் ஒருவர் இணையற்ற பண்டிதர், மஹாத்மாக்கள், அபரோக்ஷக்ஞானிகள். இந்த மஹாத்மாக்களின் செயல்கள் ஒரு நாடகமாகத் தோன்றுவது அக்ஞானிகளுக்கு ஸஹஜமானது. ஆனால் ஒருவர் மனதை ஒருவர் அறிவது க்ஞானிகளுக்கு ஒரு நிமிஷ ரஸமான சம்பவம். இங்கு நாம் பரமாத்மாவின் வியாபகத்வத்தின் பெருமையைப் பார்க்க முடியும். ஆஹா! அப்பேர்ப்பட்ட அபரோக்ஷக்ஞானிகளைக் கண்ணாரக் கண்டவர்கள் எப்படிப்பட்ட பாக்யசாலிகள்!

போஜனம் முடிந்த பிறகு இரு ஸ்ரீபாதங்களவரும் ஆஸனங்களில் அமர்ந்த பிறகு கூடியிருந்த பண்டிதர்களும் மற்றும் நகரத்தவர்களும் ஸ்ரீகளவர்களுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "பூஜ்ய ஸ்ரீபாதங்களவரே, பாரணை காலத்தில் நிகழ்ந்த விசித்ரமான ஸம்பவம் நாங்கள் அறிய ஆவலாயிருக்கிறோம். ஸர்வக்ஞரின் ஸந்நிதானத்தில் இதை விக்ஞாபனம் செய்வதற்குப் பயமாயிருப்பினும், பக்தரான எங்களின் மீது தங்களுக்குள்ள கருணையை நினைத்து தைரியத்துடன் ப்ரார்த்தனை செய்ததற்கு எங்களை மன்னித்தருள வேண்டும். அந்த விசித்ர ஸந்தர்ப்பம், அதாவது தங்களுக்குள் பரிமாறிக் கொண்ட விவரங்களும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



பின்னால் நடக்கப் போகும் விஷயங்களுக்கும் விளக்கம் தந்தருள வேண்டும்'', என்று தாழ்மையுடன் வேண்டிக் கொண்டனர். ஸ்ரீசந்த்ரிகாராயர் புன்முறுவலுடன் அவர்களைப் பார்த்து பக்த சிகாமணிகளே, உங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளோம். சற்றுப் பொறுங்கள்; நமது ப்ரிய சிஷ்யனுக்காகக் காத்திருக்கிறோம், அவன் வந்த உடனே விவரிக்கிறோம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் தறுவாயில் கையில் தங்கக் கோலுடன் ஒருவன் வந்து கைகூப்பி ''ஜயமாகட்டும் மஹாஸ்வாமி, விஜயநகராதிபதி ஸ்ரீயவர்களின் தரிசனத்திற்காகக் காத்திருக்கிறார். உத்தரவாக வேண்டும்''. என்று விக்ஞாபித்தான். ஸ்ரீவ்யாஸராஜர் கண்ணசைக்க பாருபத்திகாரர் சென்று கிருஷ்ணதேவராயரை அழைத்து வந்தார். அரசன் இரு ஸ்வாமிகளை வணங்கி தூரத்தில் அமர்ந்த பிறகு ஸ்ரீசந்த்ரிகாராயர் தனது கம்பீரமானதும் இனிமையானதுமான வாணியினால் கீழ்க்கண்டவாறு சொல்ல ஆரம்பித்தார்.

''அரசே! தர்மாபிமானிகளே, நாம் இப்பொழுது நிரூபிக்கும் விஷயத்தைக் கவனமாகக் கேளுங்கள். போஜன காலத்தில் நடந்த ஆச்சரியகரமான பேச்சுக்களின் ரஹஸ்யத்தையறிய முடியாமல் சிலர் அதை விளக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டுள்ளனர். பராத்பரனான அந்த பகவந்தனின் லீலாவிநோதங்கள் அற்புதமானவை. அவன் பக்தரிடத்தில் காட்டும் கருணை, அனுக்ரஹமும் அவ்வாறே. இந்த ஜகத்தென்னும் நாடகமேடையின் சூத்ரதாரனாயிருக்கிறான் அவன். இந்த நாடகத்தில் அவன் ஆட்டிவைப்பதைப் போல் நாமும் ஆடத்தான் வேண்டும். அதுவே அவனது விருப்பம். "तेन विना तृणमपि न चलति" (தேன வினா த்ருணமபி ந சலதி) என்னும் ப்ரமாணத்தை-யனுஸரித்து அவனுடைய விருப்பத்தைத் தவிர வேறு எதுவும் நடக்காது. சிலபேரிடம் அவன் விசேஷமான அனுக்ரஹம் காட்டுகிறான். அப்படிப்பட்டவ்ரே அபரோக்ஷக்ஞானிக-ளென்பவர். அபரோக்ஷக்ஞானிகள் ஒன்று கூடும்பொழுது அந்தச் சந்திப்பு, அதன் ருசி, அனுபவம், அந்த ஆனந்தம் வர்ணனைக்கப்பாற்பட்டது. வர்ணிக்க முடியாதது. ஒருவர் மனதிலிருப்பதை இன்னொருவர் அறிய வல்லவர். மற்றவர் சொல்லுவதற்கு முன்பே தான் அதைச் சொல்லி விடுகிறார். இதைக்காணும் சாமான்யர்கள் இவர்களென்ன பித்தர்களா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இப்படி ஏன் ஸம்பந்தா ஸம்பந்தமில்லாமல் பேசுகின்றனர்? என்று நினைப்பது இயற்கை. ஆனால் அந்த சம்பாஷணையென்னும் ருசியான உணவின் ஆனந்தம் அவர்களுக்கு மாத்திரம் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு அது விளங்காது. இன்றைய விஷயத்தைப் பற்றியதும் அவ்வளவே. ஸ்ரீஸுரேந்த்ர தீர்த்தர் விஷ்ணுதீர்த்தரைத் தமது ஸமஸ்தானத்திற்குத் தேவையென்று விரும்பினார். ஸ்ரீதாஸரதை அறிந்து, "மூலராமனுக்கு ஒருவர் மீது பார்வை விழுந்திருக்கிறது" என்றார். நாம் விஷ்ணு தீர்த்தரை ஸ்ரீஸுரேந்திரருக்காகவே வளர்த்து ஸகல வித்யாபாரங்கதராக்கி (பண்டிதர்)னதினால், இந்த நல்ல ஸந்தர்ப்பம் கிடைத்ததற்காக ஸந்தோஷப்பட்டு "ஸ்ரீமூலகோபாலகிருஷ்ணன் கொடுக்கிறான்" என்றோம். ஸ்ரீவிஷ்ணுதீர்த்தரோ எனது அந்தரங்க சிஷ்யர், 64 கலைகளில் நிபுணர், பண்டிதர். எனது மனதை அறிபவர். ஆகையினாலேயே அவர் குருபக்தியைத் தெரிவித்து "आज्ञा शिरसा मान्य" (ஆக்ஞையைச் சிரஸாவகிக்கிறேன்) என்றார். தனது மனோபீஷ்டம் கைகூடும் என்று ஸ்ரீஸுரேந்திரர் மகிழ்ச்சியடைந்தார். ஸ்ரீவாதிராஜர் பின்னால் நடக்கப்போவதைச் சொன்னார். ஒரே விஷயத்தை எல்லோரும் அறிந்திருந்ததால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக ஒரே விஷயத்தை நிரூபித்தனர். மற்றவர்களுக்கு இது சம்பந்தா சம்பந்தமற்றதாகத் தானே தோன்றும்? அபரோக்ஷஞானிகள் ஒருமுறை ஒன்று கூடி இவ்வாறு நடப்பது இயற்கை. அதிருக்கட்டும், அரசே, உனக்கின்னேதாவது ஸந்தேஹமிருந்தால் கேட்பாயாக, விடைகொடுக்கின்றோம். "என்று ஸ்ரீவ்யாஸராஜ குருஸார்வபௌமர் சொல்லியருளவும் எல்லோரும் மிக ஆச்சரியத்தால் நிரம்பி மஹாத்மாக்களின் மஹிமைக்குத் தலை அசைத்து வெட்கத்துடன் தலைவணங்கி உட்கார்ந்தனர். கிருஷ்ண தேவராயர் ஆனந்தத்தினாலும் பக்தி பரவசனாகிப் புளகாங்கிதமடைந்து", பகவன், தாங்கள் சிஷ்யன் மீது அபாரமான கிருபை செய்துள்ளீர்கள். தங்கள் வாணி என்னை ஆனந்தஸாகரத்தில் மூழ்க வைத்துள்ளது. இப்படிப்பட்ட பவித்ரமான நிகழ்ச்சியில் பங்கேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்கு நானே தன்யனென்று பாவித்துக் கொள்ளுகிறேன். யதிச்ரேஷ்டரே, ஸ்ரீவிஷ்ணு தீர்த்தரை ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு அர்ப்பிப்பதாகவும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அதற்காகவே அவரைப் போஷித்து வளர்த்ததாகவும் சொல்லி அருள்புரிந்தீர். ஸ்வாமி, அவர் யார்? அவரைப்பற்றிய விவரம் எல்லாம் விஸ்தாரமாக விளக்க வேண்டும் என்று அடியேனுடைய தாழ்மையான, வேண்டுகோள்" என்று விக்ஞாபனம் செய்து கொண்டார்.

2. (द्वैत पीठ) த்வைத பீடம் மற்றும் விஷ்ணுதீர்த்தரின் சரித்திரம்:

ஸ்ரீசந்த்ரிகாராயர் புன்சிரிப்புடன் சொல்ல ஆரம்பித்தார். "நரேந்த்ரா, உனது கேள்வி சமயோசிதமானது. கேள் ஸ்ரீபவமான அம்சபூதரான ஸ்ரீமன் மத்வாசார்யரின் பீடத்தில் வந்த அண்ணன் தம்பிகளின் ஸமஸ்தானம் நம்முடையது என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு நமது அண்ணாவின் பீடத்தை, ஒரு மஹாதபஸ்வியும், தேஜஸ்ஸுடையவரும், ஜகத்தை வென்ற பண்டிதோத்தமர், மஹிமை படைத்தவரும், விரக்தரும் ஆன ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் என்ற யதிச்ரேஷ்டர் அலங்கரித்தார். அவர் மகிமை அபாரமானது. அவரது பாண்டித்யத்திற்கும், திறமைக்கும் நிகராக வேறு எந்த பண்டிதரும் இல்லையென்றே சொல்லலாம். ஸ்ரீபாதராயணரின் ஸுத்ரங்களின் பாவத்தை (கருத்தை) ஸ்ரீமதாசார்யரொருவரே எவ்வாறு தெரிந்து கொண்டாரோ, அதேபோல் ஸ்ரீஆசார்யரின் பாஷ்யத்தின் அர்த்தத்தை விவரித்தவர் ஸ்ரீ டீகாக்ருத்பாதர். அந்த ஸத்பரம்பரை ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்குக் கிடைத்தது.

ஸ்ரீவிபுதேந்திரர் ஸ்ரீஸர்வக்ஞர், டீகாசார்யர் இவர்களுடைய தத்வஸாரத்தை ஜகத்திற்கு போதித்துக் கொண்டு புண்ய பாரத பூமியில் ஸஞ்சாரம் செய்து கொண்டு ஸ்ரீஹரிஸர்வோத்தமத்துவம், வாயு ஜீவோத்தமத்வம், பஞ்சபேதம், தாரதம்யம் முதலான தத்வங்களுக்கு விரோதமான எல்லாவாதங்களையும் எழுத்துக்கெழுத்து கண்டித்து; பரவாதிகளென்னும் யானைகளுக்குச் சிங்கம் போல் "आ केरलं तथा सेतुमा गंग च हिमालयं निराकृताऽद्वैतश्चैवं विभुदेंद्र गुरुं भजे ।" (ஆகேரளம் ததா ஸேதுமா கங்க ச ஹிமாலயம் நிராக்ருதா அத்வைத சைவம் விபுதேந்த்ர குரும்பஜே) என்னும் சரமச்லோகோக்தியைப் போல் ப்ரதி தினம் வாதி திக்விஜயம் செய்து கொண்டு ப்ரபஞ்சத்தில் பிரசித்தி பெற்றார். அந்த மஹானுபாவர் தனது ஸகல வித்யா பாண்டித்யத்தையும், தனது குருகளான ஸ்ரீலக்ஷ்மி நாராயணயதிகளுக்கு (அதாவது ஸ்ரீ ஸ்ரீபாதராஜருக்கு) தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீஹரியின் ஸங்கல்பப்பிரகாரம் நாம் கர்நாடகத்தில் பிறந்தோம். ஸ்ரீமதாசார்யரின் தத்வத்தின் பாட பரம்பரையை ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தரினால் ஸ்ரீஸ்ரீபாதராஜரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்ததால் நாம் அவரிடம் வித்யா சிஷ்யனாய்ச் சேர்ந்து அவருடைய அனுக்ரஹத்தினால் முதலிலிருந்தே ஸத்சாஸ்திராப்யாஸம் செய்தோம். இன்று நாம் வித்யாஸிம்ஹாஸனத்தை அலங்கரித்துப் பிரஸித்தி அடைந்திருப்பது விபுதேந்திர தீர்த்தரினால் நமக்கு குருமூலமாகக் கிடைத்த வித்யையே காரணமாகும். அது இருக்கட்டும். நாம் வாதிகளை வென்று திக்விஜயம் செய்தது சிஷ்யர்களை உய்விப்பதற்காகச் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தோம். அப்பொழுது ஒரு கிராமத்தில் அந்த கிராமத்தின் தலைவனான வயது சென்ற ஒரு ப்ராம்மணன் ஒருவன் தனது மனைவியுடன் நமக்குப் பயபக்தி விசுவாசத்துடனும், மரியாதையுடன் நல்வரவேற்பு கொடுத்து நம்மை ஸந்தோஷமடையச் செய்தார். அவர் வேறுயாருமில்லை.

நமது வம்சத்தின் பந்துக்களான ஷாஷ்டிக வம்சத்தின் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த, "ஸ்வர்ண பண்டாரி" அல்லது "சின்ன பண்டாரி" வீட்டின் ஸ்ரீதுண்டிராஜரின் மூத்தமகனும் பிரஸித்தமானவருமான நரஹரிநாயகரின் (ஸ்ரீஜயதீர்த்தரின் தமையனார்) பேரன். நமது பாட்டனாரான வல்லபதேவனுக்கு ஸ்ரீதுண்டிராஜரின் புத்ரியைக்கொடுத்துத் திருமணமாயிருந்ததினால் அவருக்கும் நமக்கும் வம்ச சம்பந்தமான உறவு காரணமாக நமது சிஷ்யராகவே இருந்தார். நாம் சந்தோஷமடைந்து அவருக்கு "ஸுபுத்ர ப்ராப்திரஸ்து" (ஸத்புத்திர பாக்யம்) கிடைக்கட்டும் என்று ஆசீர்வாதம் செய்தோம். பாவம், அந்த வயோதிக தம்பதிகள் கண்ணீர் சொரிய, "ஹேமஹாத்மா, தயாநிதிகளே, நாங்கள் பாபிகள், துர்பாக்யசாலிகள், எங்களுக்கேது அந்தப் புண்யம்? ப்ரம்ம தேவன் அந்த யோகத்தை எங்கள் தலையில் எழுதவில்லையே பிரபு! வயோதிகத்தையடைந்து விட்டோம். வம்சம் நின்று போகும் காலம்வந்தாயிற்று", என்று சொல்லி நமது பாதங்களில் விழுந்து துக்கம் தெரிவித்தனர். நமக்கு அபரிமிதமான துக்கம் மேலிட்டது. ஒரு நொடி யோசித்தோம். "ஸ்ரீமூலகோபால கிருஷ்ணன் நம்மால் உங்களுக்கு ஆசீர்வாதம் கொடுக்கச் செய்து விட்டான். நம் வாயால் சொல்லும்படி செய்த அவன் அதை நடத்திக்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கொடுக்க வேண்டிய பொறுப்புள்ளவன் என்று தீர்மானித்து ஸ்ரீஹரியை ஸ்மரணை செய்து அந்த வயோதிக தம்பதிகளுக்கு மறுபடியும் ஆசீர்வதித்து "ஸ்ரீகிருஷ்ணன் நம் மூலமாகச் சொல்லியிருக்கிறான். அவனுடைய கருணையினால் எதுவும் முடியாதது இல்லை. நீங்கள் அஞ்சவேண்டாம். அனுக்ரஹமாகப் போகிறது. உமக்கு ஒரு புத்திரனல்ல, இரண்டு ஸத்புத்திரர்கள் பிறப்பார்கள். மூத்த மகனை மாத்திரம் நமக்குத் தந்துவிட வேண்டும். ஸ்ரீஹரியினால் உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்" என்று சொன்னோம். அந்த தம்பதிகளின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. மறுபடியும் மறுபடியும் பக்தியுடன் நமஸ்கரித்து நம் விருப்பப்படியே நடந்து கொள்வதாக வாக்குத் தந்தனர்.

பிறகு நாம் வேறு ப்ராந்தத்தில் ஸஞ்சாரத்திற்காகப் புறப்பட்டோம். சில வருஷங்களுக்குப் பிறகு, அந்தக் கிராமத்திற்கு மறுமுறை சென்றபொழுது அந்த வயோதிக தம்பதிகள் சிறப்பான முறையில் வைபவத்துடன் நம்மை வரவேற்று வீட்டுக்கு அழைத்துச் சென்று நம் பாதங்களின் மீது அழகான இரு பாலகர்களை அர்ப்பணம் செய்தனர். ஆஹா, ஸ்ரீஹரியின் லீலாவிநோதத்தை என்னவென்று வர்ணிப்பது! சொன்ன சொற்படி சொல்லி காட்டிய மஹாப்ரபுவின் பக்த வாத்ஸல்யத்தைப் பார்த்து நமக்கு ஆனந்தத்தினால் வார்த்தைகளே வரவில்லை. அந்தத் தம்பதிகள், "யதிச்ரேஷ்டரே, தங்கள் அனுக்ரஹம் எங்கள் மீது விசேஷமாயுள்ளது. என் வம்சத்தை உய்வித்த மஹாத்மரே, தமது வாக்கு ஸத்யமாயிற்று. இதோ, இந்த அழகான இரண்டு குழந்தைகளும் தங்களின் பிரஸாதத்தினால் கிடைத்தவை. அற்பரான நாங்கள் தங்களைப் போன்ற ஞானிகளுக்கு என்ன பதிலுதவி செய்யச் சக்தியுள்ளவர்கள்? "भूयिष्ठांते नम उक्तिं विधेम" (பூயிஷ்டாந்தே நம உக்திம் விதேம) என்ற ப்ரமாணப்படி நாங்கள் தங்களைப் பக்தியுடன் நமஸ்காரம் செய்யத்தான் சக்தியுள்ளவர்கள். குருதேவா, பெரியவனான இவன் விட்டலன், சிறியவன் குருப்ரஸாத். விட்டலனை ஏற்றுக்கொண்டு எங்களது பாரத்தைக் குறைத்துக் காப்பாற்ற வேண்டும் தந்தையே" என்று நமஸ்கரித்து வேண்டிக் கொண்டனர். ஆனந்தத்தினால் புளகாங்கிதமடைந்த நாம், "ஸ்ரீகிருஷ்ணன் சந்தோஷமடைந்துள்ளான். இந்தக் குழந்தையினால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ப்ரபஞ்சத்திற்கே மஹோபகாரமாக வேண்டியுள்ளது. நீங்கள் அவனைப் பற்றிய கவலையை விட்டுவிடுங்கள். அவன் ஸ்ரீஹரியின் குழந்தை. அவனைக் காப்பாற்றும் பொறுப்பு பகவந்தனுடையது". என்று அன்புடன் அவருடைய வரவேற்புபசாரத்தையேற்றுக் கொண்டு விட்டலனுடன் ஸஞ்சாரம் செய்யப் புறப்பட்டோம். அன்றிலிருந்து விட்டலன் நமது அன்புக் குழந்தையானான். அழகான விட்டலனைப் பார்க்கும் போதெல்லாம் நமக்கு ஸந்தோஷம் அதிகரிக்கும். நாம் அவனை மிக அன்புடன் வளர்த்து உபதேசித்தோம். அவனுக்குச் சௌளம், உபநயனம் முதலிய கர்மாக்களைச் செய்வித்து, ஆரம்பத்திலிருந்து தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸா, ஸாஹித்யம் முதலிய சாஸ்த்திரங்களையும், வேதாந்த சாஸ்திரத்தையும் அவனுக்குக் கற்பித்தோம். பிறகு அந்த விட்டலாசார்யனின் வைராக்யம், பக்தி, முதலியவைகளைக் கண்டு, அவனுக்கு ஸந்ந்யாஸம் கொடுத்து 64 கலைகளை உபதேசித்தோம். அந்த பால சந்யாஸியே இந்த விஷ்ணுதீர்த்தர்.

ஸ்ரீவ்யாஸராஜரின் வாக்கியங்களைக் கேட்டு சபையில் ஆச்சரிய ஆரவாரம் எழுந்தது. எல்லோரும் பரமாநந்தத்தில் மூழ்கினர். ஸ்ரீசுரேந்திரர் கண்ணினின்றோ ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டேயிருந்தது. ஸ்ரீவிஷ்ணு தீர்த்தரின் கண்களிலும் கண்ணீர் பெருகியது. ஸ்ரீவியாஸ முனிவர் அன்பினால் விஷ்ணுதீர்த்தரின் தலையைத் தடவி, "சபையோரே, இவர்யாரென்று அறிந்தீர்கள்?

विबुधेंद्र यतिर्धीमनद्यजातो पुनर्भुवि ।
सेवार्थं रामचन्द्रस्य समया परिपालितः ॥
क्लेशादिषु हंसेषुयो विष्णुरिति विश्रुतः ।
स एव विबुधेन्द्रश्च स मया यतिरूपधृक ॥

(श्री विजयीन्द्र विजय ।)

முன் நாம் நிரூபித்த அந்த விபுதேந்திரரே விஷ்ணுதீர்த்தராக அவதரித்திருக்கிறார். அதனாலேயே நாம் இவரை வளர்த்துப் போஷித்து அவரால் நமக்குக் கிடைத்த வித்யா (கல்வி)யை அவருக்கே தாரைவார்த்துக் கொடுத்துள்ளோம். நம் வித்யா குருகளான ஸ்ரீஸ்ரீபாதராஜரின் வித்யா குரு ஸ்ரீவிபுதேந்திரர். அதாவது நமக்குப் பரம குருவல்லவா? அதனால்தான் நாம் சொன்னது அவருடைய வித்யா (படிப்பு) அவருக்கே கொடுத்தோம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

என்று, இந்த சுப சந்திப்பிற்காக வெகு காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். இன்று நமது பொறுப்பு தீர்ந்தது. நாம் இன்று தன்யனானோம், க்ருதக்ருத்யனானோம் என்று சொல்லி அரசன் பக்கம் திரும்பி, "அரசே, இந்த ஸுரேந்திர தீர்த்தர் வேறு யாரோ என்று தெரிந்து கொள்ள வேண்டாம். இவர் நம் பெரியப்பாவின் பேரன். நம் வம்சத்தவரே ஆகியிருக்கிறார். இவர் ஸ்ரீவிபுதேந்திர மடத்திற்குப் பீடாதிபதிகளாய், அதனாலும் பரலோக பந்துகளே ஆகியுள்ளார். இவருக்கு நம்ம விஷ்ணு தீர்த்தரைக் கொடுக்க வேண்டுமென்பது ஸ்ரீஹரியின் சித்தம். அதையனுஸரித்து நாம் மிக்க மகிழ்ச்சியோடு இவருக்கு விஷ்ணுதீர்த்தரைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்." என்று சொல்லி, ஸ்ரீஸுரேந்திர தீர்த்தயதிகளைப் பார்த்து, "யதிவர்யரே,

अधीतो स मया सम्यक् तुर्याश्रममुपागतः ।
इदानीं स मया तुभ्यं दत्तो मम प्रियो धुनाः ॥
सुरक्षस्व सुतं कृत्वा त्वसुतोऽयं न संशयः ।
इत्युक्त्वा प्रददौ व्यासः सुरेन्द्राय सुतं स्वकम् ॥

தமது மனோபீஷ்டத்தை ஸ்ரீவேணுகோபால கிருஷ்ணன் நிறைவேற்றியிருக்கிறான். தங்களுக்காக ஸ்ரீவிஷ்ணு தீர்த்தரைக் காக்க வைத்திருந்தோம். தமக்காக அவரை ஒப்புவித்திருக்கிறோம். இப்பொழுது அவர் தமது புத்திரர். அவரைத் தமது ஸமஸ்தானாதிபதியாக்கி அனுக்ரஹியுங்கள். ஸ்ரீமூல சீதாஜானிக்கு மூலபைஷ் மிஜானியின் காணிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்", என்று தெரிவித்து ஸகல ஜனங்களின் ஜயகோஷத்தின் நடுவே ஸ்ரீவிஷ்ணுதீர்த்தரின் கையை ஸ்ரீஸுரேந்திரரின் கைத்தாமரையில் வைத்து

"विष्णुतीर्थ करे गृह्य सुरेन्द्रस्य करे ददौ ।
शिष्येष्वेतेषु सर्वेषु नानेव सदृशो मम ॥"

விஷ்ணுதீர்த்தகரே க்ருஹ்ய ஸுரேந்த்ரஸ்யகரே ததௌ
சிஷ்யேஷ்வேதேஷு ஸர்வேஷு நானேவ ஸத்ருசோமம.

எமது சிஷ்யர்கள் கூட்டத்தில் இவரைப் போன்ற உத்தம பண்டிதரும், ஸத்குணம் படைத்தவரும் குருபக்தி விசாரதரான சிஷ்யர் வேறொருவருமில்லை. இவரால் தமது ஸமஸ்தான்த்தின் கீர்த்தி எல்லா திக்குகளிலும் பரவப் போகிறது. இது ஸ்ரீஹரி சித்தம் என்று தழுதழுத்த குரலில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சொன்னார். மூன்று யதிச்ரேஷ்டர்களுக்கும் துக்கத்தினால் பேசமுடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் பெருகி ஓடிற்று. நாவெழவில்லை. ஒருவரையொருவர் அன்பினால் பார்க்கின்றனர். ஆஹா! அந்த அபூர்வகாக்ஷி, பவித்ரமான ஸந்தர்ப்பம்! அதைப்பார்த்தவர்களல்லவோ பாக்யசாலிகள்.

### 3. விஷ்ணு தீர்த்தர் விஜயீந்திரராகத் திகழ்ந்தார்.

மறுநாளன்று மத்வஸித்தாந்த சூரியனைத் தரிசிக்கவோ என்னவோ, ஸூர்ய பகவான் தனது ஆயிரம் கதிர்களைக் கணக்கற்றவைகளாக்கிக் கொண்டு விஜயநகரத்திற்குள் ஒளிவீசிக்கொண்டிருக்கிறான். வித்யாநகரத்தில் அன்று அமோகமான கோலாகலம். ஸ்ரீமத்வாசார்யரின் முக்கியமான ஸமஸ்தானத்திற்கு ஸ்ரீவிஷ்ணுதீர்த்தருக்கு ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் நிறைவேறப் போகிறதென்னும் செய்தியைக் கேட்டு ஜனங்கள் கூட்டங்கூட்டமாக அந்த விழாவைக் காணக் குதூகலத்துடன் வந்து கொண்டிருக்கின்றனர். கிருஷ்ணதேவராயரின் பெருமை சொல்லொணாதது. ஸகல அரசு மரியாதை வைபவங்களுடன் வந்திருக்கிறான். ஸ்ரீவ்யாஸராஜேந்திரர் மடத்தில் ஜனங்கள் நிரம்பி வழிந்திருக்கின்றனர். நகரத்தவர்கள், தர்பாரிகள், வித்வத் ரத்னங்கள், எல்லோரும் ஒன்று கூடியுள்ளனர். எங்கு பார்த்தாலும் ஒரே ஆனந்தம், உற்சர்கம் தான். ஸ்ரீவ்யாஸராஜ ஸ்வாமிகள் மற்றும் கிருஷ்ணபூபதியும் இதர ஸமூகத்தினரின் எதிரில் ஸ்ரீஸுரேந்திர முனிகள் சொல்லுகிறார்:

सुरेन्द्रस्तस्य प्रददौ भिक्षोर्दंड कमंडुलम् ।
मंत्रंदत्वा स्ववंशस्य कर्तारं कृतवान्मुनिः ॥
अथासौ. विष्णुतीर्थश्च विजयीन्द्रेति विश्रुतः ।
सुरेन्द्रस्य मुनेश्शिष्यो भूत्वा तम् परितोषयत्॥

ஸுரேந்த்ரஸ்தஸ்ய ப்ரததௌ பிக்ஷோர் தண்ட கமண் டுலம்
மந்த்ரம்தத்வா ஸ்வவம்சஸ்ய கர்த்தாரம் க்ருதவான் முனி:
அதாஸௌ விஷ்ணு தீர்த்தஸ்ச விஜயீந்த்ரேதி விச்ருத:
ஸுரேந்த்ரஸ்ய முனேச்சிஷ்யோ பூத்வாதம் பரிதோஷயத்,

ஸ்ரீவிஷ்ணுதீர்த்தருக்கு தண்டம், கமண்டலம், அளித்து மந்த்ர முத்ராதாரணம் செய்து, மந்த்ர உபதேசம் செய்வித்து ''ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர்'' என்னும் நாமம் சூட்டி, ஸ்ரீமத்வாசார்யரின் திக்விஜய. ஸிம்ஹாஸனத்தில் ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்தரை அமரவைத்து வேதாந்த ஸாம்ராஜ்யாபிஷேகம் நிறைவேற்றினார். விஜய பீரங்கிகள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


குண்டு முழங்கின. அப்பொழுது ஜனங்களின் ஸந்தோஷ ஆரவாரம், கைகொட்டுதல், மற்றும் ஜய ஜய கோஷங்களின் நடுவே, ஸ்ரீஸுரேந்த்ர தீர்த்தர் ஸ்ரீமூல ராமசந்திரர் முதலான ஸமஸ்தான விக்ரஹங்களடங்கிய பெட்டகத்தின் சாவியை, ஆசார்யரின் பரம்பரையாக வந்த வ்யாஸ பீடம், க்ரந்த ஸமூஹங்கள், வெள்ளி தண்டம், வெள்ளி மட்டும் தங்க அம்பாரிகள், இரு சித்ராஸனங்கள், வெண்கொற்றக்குடை, பகல் தீவட்டிகள், முதலியவைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார். ராஜா க்ருஷ்ணதேவராயர் அரசு மரியாதைகளையும், காணிக்கைகளையும் அர்ப்பித்து, க்ருதார்த்தனானான், பிறகு ஸபையோர் தத்தம் தகுதிக்குத் தகுந்தவாறு, ஸ்ரீமதாசார்ய பீடத்தை யலங்கரித்துக் கொண்டிருக்கும் புதிய ஜகத்குருவிற்கு காணிக்கை செலுத்தி புனிதரானார்கள். அந்த வைபவத்தைக்காண இரண்டு கண்கள் போதா. ஸ்ரீஸுரேந்திரரும் ஸ்ரீவ்யாஸ ராஜ ஸ்வாமிகளும் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரைக் கண் நிறையப் பார்த்து ஆனந்த மடைந்து கொண்டிருக்கும் பொழுது, கவிகள் உடனடிக் கவிதைகள் இயற்றி ஸ்ரீவிஜயீந்திரரைக் கொண்டாடத் துவங்கினர்.

ஒரு கன்னட கவி தனது கவி வன்மையைத் தெரிவிக்கும் வ்ண்ணம் சபையில் எழுந்து நின்று,

விருபவாதரு விகார போக்த।
விதிலிபி ஏனிது விஜயீந்த்ர। (பல்)
விதவித ஜனுமவ பொந்திதரூமேண்
விதிநுதநங்க்ரிய பஜிஸிதரு. (அ.ப)
விபுதேந்த்ரனுமேண் விட்டலார்யனே।
விஷ்ணுதீர்த்தனெந்தெநிஸிதெயோ।
விபவதி ஸிரி விஜயீந்த்ர நாதரு
விகார உளிது துஸோஜிகவோ. (சரணம்)।

என்று ஸாமர்த்தியத்துடன் வர்ணித்து நல்ல ராகத்துடன் பாடினான். ஜனஸமூகம் அதிக மகிழ்ச்சியுடன் கவிதையின் தாத்பர்யத்தை நினைத்து நினைத்து விஜயீந்திரரின் அபாரமான புகழைக் கண்டு மனமாரக் கொண்டாட ஆரம்பித்தனர்.

## 4. விஜயீந்திரரின் வெற்றி:

வேதாந்த ஸாம்ராஜ்யத்தில் பட்டாபிஷேகமாகி ஸ்ரீவிஜயீந்திரருக்குப் . புகழாரம் சூட்டி அவரைக் கொண்டாடிக் கொண்டிருக்கையிலேயே, "கர்நாடக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸிம்மாஸனாதிபதிக்கு ஜய ஜய" மஹாஸ்வாமி, நவதீபத்தைச் சார்ந்த கிருஷ்ண சர்மா மஹா பண்டிதர் வாதம் செய்வதற்காக வந்துள்ளார். உத்தரவாக வேண்டும்" என்று சேவகன் கிருஷ்ணதேவராயன் ஸமுகத்தில் விண்ணப்பித்தான். அரசன் மகிழ்ச்சியுடன் ஸ்ரீசந்த்ரிகா ராயரை வணங்கி, அந்த விஷயத்தைத் தெரிவித்து, உத்திரவிற்காக எதிர்பார்த்திருக்கையில், ஸ்ரீவ்யாஸ யதிகள் ஸ்ரீவிஜயீந்த்ரரை ஒருமுறை பார்த்துத் திருப்தி-யடைந்தவராய்ச் சிரித்துக் கொண்டு, "அரசே, இதென்ன யோகம் பார்த்தீரா? புதிதாக வேதாந்த ராஜ்யத்தில் பட்டாபிஷேகமான கையோடு இந்த சுப வாய்ப்பு ஏற்பட்டிருப்பதைப் பார்த்தால் ஆச்சர்யமுண்டாகிறது. ஹே, ராஜன், ஸ்ரீமதாசார்யருக்கு விஜயேந்திரரின் மீது எவ்வளவு அனுக்ரஹம் உள்ளது என்பது இப்பொழுது தெரிந்தது. தாமதமேன்? வரவழைப்பாயாக" என்று உத்தரவிட்டார்.

கிருஷ்ணதேவராயனின் தலை அசைத்துச் சம்மதம் தெரிவித்ததை அறிந்த சேவகன் சற்று நேரத்திலேயே தேஜஸ்வியான ஒரு ப்ராம்மணனை ஸபைக்கு அழைத்து வந்தான். கிருஷ்ணதேவராயர் அந்த ப்ராம்மணனுக்குத் தகுந்த வரவேற்பு உபசாரம் செய்து அவருக்கென்று ஆஸனம் ஏற்பாடு செய்து அதன் மீது அவரை அமரச் செய்த பிறகு சந்திரிகாராயரின் ஆக்ஞையின் பேரில் விஜயீந்த்ரர் "தத்வமஸி" என்ற மஹா ச்ருதி எவ்வாறு பேதபரமாயிருக்கிறது என்பதை வெகு கம்பீரமாக சாஸ்திர ஆதாரங்கள், யுக்திகள் மூலம் நிரூபித்திருப்பதை கிருஷ்ண சர்மா விஜயீந்திரரின் வாதத்தைக் கண்டனம் செய்வதில் வெற்றி முகம் காண முடியவில்லையோ அப்பொழுது விஜயீந்திரர் பேதத்தை அனுமோதித்து, பேதத்தை ஒப்புக்கொள்ளவில்லையானால், "பால், தண்ணீர், தாய்-தாரம்" இவைகளுக்கெல்லாம் வித்யாஸமே இல்லாமல் போக வேண்டியதாகும் என்பதாக நிரூபிக்க, ந்யாயசாஸ்திர வித்பன்னரான கிருஷ்ணசர்மா தர்க்க சாஸ்திர முறைப்படி விஜயீந்திரரின் வாத கூடக்ரமம் சொல்லிக் கொண்டிருக்கையில் க்ருஷ்ண சர்மா சாதாரண பண்டிதரல்ல வென்று அறிந்து விஜயீந்திரர் மிக்க மகிழ்ச்சியுடன் ஸ்ரீமதாசார்யரின் மஹாபீடத்தில் அமர்ந்த நாளிலேயே தமக்கு இப்படிப்பட்ட அஸாதாரண பண்டிதருடன் வாதம் செய்யும் வாய்ப்பு கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைந்து மிக்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


உற்சாகத்துடன் கிருஷ்ண சர்மாவுடன் வாதம் செய்ய ஆரம்பித்தார். தாம் மஹாபண்டிதரென்றும், தம்மை யாரும் வெல்ல முடியாதென்றும் கர்வத்தினால் அஹங்கார முடையவராயிருந்த கிருஷ்ண சர்மா ஸ்ரீவிஜயீந்திரருடைய ஒவ்வொரு சொல்லம்புகளினால் மறு உத்தரம் சொல்ல முடியாமல் தத்தளிக்க ஆரம்பித்தாலும் தைரியத்துடன் பலவிதமாக நியாய சாஸ்திரத்தில் ப்ரமாணங்களை எடுத்துச் சொல்லும்பொழுதே விளையாட்டாக புன்சிரிப்புடன் ஸ்ரீவிஜயீந்திரர் அவைகளெல்லாவற்றையும் ஒரே நிமிஷத்தில் கண்டனம் செய்தார்.

மறுபடியும் ப்ரமாணங்களைச் சொல்லி கிருஷ்ணசர்மா ஸ்வாமிகளின் வாதத்திற்கு உத்தரம் சொல்லாமல் இருந்துவிட்டு எழுந்து ஸ்ரீகளவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "பரமஹம்ஸ சக்ரவர்த்திகளே, நான் தோல்வியுற்றேன். ஸ்வாமி, பாரத தேசத்தில் எவ்வளவோ இடங்களில் பெரிய பெரிய பண்டிதர்களை வென்று நான் வெகு நாட்களாக ஸ்ரீவ்யாஸயோகிகளை வெல்ல வேண்டுமென்று உற்சாகத்தினால் இவ்விடம் வந்தேன். ஆனால் அவருடைய உத்தம சிஷ்யரானவர் தனது வாக் வன்மையின் முன்னால் என்னால் செயலற்றுப்போகும் நிலை ஏற்பட்டபொழுது அந்த மஹானுபாவரின் வித்வத்தானது எவ்வளவு உயர்ந்ததென்பது இப்பொழுது எனக்குத் தெரிய வந்தது. தம்மைப் போன்ற பண்டித சக்ரவர்த்தியை நானெங்கும் கண்டதில்லை. பக்ஷதரமிச்ரர், "यदधीतं- तदधीतं यदनधीतं नदप्यधीतं । पक्षधर एवक्षो नावेक्षि. विना नवीन व्यासेन", (யததீதம் தததீதம் யதனதீதம் ததப்யதீதம் பக்ஷதர ஏவக்ஷோ நாவேக்ஷி வினா நவீன வ்யாஸேன) என்று ஸ்ரீவ்யாஸயதிகளைக் கொண்டாடினாரென்பது ஒரு வதந்தி தான் என்று தெரிந்திருந்தேன். ஆனால் இன்று அது எழுத்துக்கெழுத்து உண்மை யென்பதைத் தம்முடன் வாதம் செய்து, மனத்தில் கண்டு கொண்டேன். எனது குற்றத்தை மன்னிப்பீராக", என்று வேண்டி பிறகு வ்யாஸராஜர், ஸ்ரீஸுரேந்திரருக்கும் நமஸ்காரங்கள் செய்து, "யோகிச்ரேஷ்டரே, தமது தரிசனத்தினால் இன்று க்ருதார்த்தனானேன்", என்று சொல்லவும், ஸ்ரீவ்யாஸராஜர், "பண்டிதோத்தமரே, உம்மைப்போல் வாதம் செய்யவல்ல

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வாதமல்லரை எங்கும் காணவில்லை. நமக்கு உண்மையாகவே உம்மைக்கண்டு மகிழ்ச்சி. உம்மைப்போன்றவர் கிடைப்பதரிது; ஸ்ரீஹரி ஸந்தோஷமடைந்தான்" என்று சொன்னார்.

இதற்குப் பிறகு ஸ்ரீவ்யாஸராஜர் சேவகரைப் பார்க்கவும் இங்கிதமறிந்த அவர் உடனே வந்து தட்டில் நிறைய தங்க நாணயங்களைக் கொண்டு வந்து கிருஷ்ண சர்மாவிற்களித்து, இரு சால்வைகளை அவருக்குப் போர்த்தினார். கிருஷ்ணசர்மா ஆனந்தமடைந்து அவைகளை ஏற்றுக்கொண்டார். உடனே சபையில், "அஜேய விஜேந்திரருக்கு ஜயமாகட்டும்" என்னும் ஜயகோஷம் செய்து கொண்டு ஜனங்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் வித்யா திறமையை கொண்டாடினர். ஸ்ரீஸுரேந்திரர் ஆனந்த பரவசராய் விஜயீந்திரரை அன்புடன் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். கிருஷ்ண தேவராயர் ஸுரேந்திரருக்கு வணங்கி வினயத்துடன் பக்தியுடனும், "தபோநிதிகளே தங்கள் ஸந்நிதியில் ஒரு விஷயம் விக்ஞாபனம் செய்ய சேவகன் ஆவலாயுள்ளேன், மன்னிக்க வேண்டும். புதிய யதிசக்ரவர்த்தி இன்று சதுர்யுக மூர்த்தியைப் பூஜை செய்வதைக்காண மனம் ஆவலுடன் உள்ளது. ஸ்வாமி ஸம்ப்ரதாயத்திற்கு விரோதமில்லையெனில் ஸேவகனின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்". என்று வேண்டிக் கொண்டான். ஸுரேந்திரர் மகிழ்ச்சியடைந்து, "அரசே, உனது வேண்டுகோள் உயர்ந்தது. ஸம்ப்ரதாயப்ரச்சினையே இங்கு எழுவதில்லை, ஸாம்ராஜ்யாபிஷேகத்தை குருவே நிறைவேற்றி சிஷ்யனுக்கு மந்த்ர முத்ராதாரணம், மந்த்ரோபதேசங்கள் முதலானவைகளைச் செய்து சிஷ்யனைக் கொண்டு பூஜை செய்வித்துப் பார்த்து ஆனந்திப்பதே ஸ்ரீமதாசார்யரின் மஹாபீடத்தின் ஸத்ஸம்ப்ரதாயம். நீ உசிதமானதையே விரும்பியுள்ளாய்; இன்று விஜயீந்திரரே பூஜிப்பார், சிந்திக்க வேண்டாம்". என்று புன்முறுவலுடன் அனுமதியளித்தார். "க்ருதார்த்தனானேன்" என்று அரசன் சொல்லுகையில், "அரசே, இன்று நமது பூஜையைச் சீக்கிரம் முடித்துவிட்டு, நாமும் ஸுரேந்திரரும் உட்கார்ந்து நமது விஜயீந்திரரின் பூஜா வைபவத்தைக்காண ஆவல் கொண்டுள்ளோம். இந்த நல்ல சந்தர்ப்பத்தை யாரும் இழக்க முடியாதல்லவா? என்று சந்திரிகாராயர் சொல்லிக் கொண்டிருக்கையில் வந்திமாகதர் மத்தியான வேளையைத் தெரிவித்து, கோஷித்தனர்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸபையைக் கலைத்து "ஸ்ரீசந்த்ரிகாராயருக்கு ஜயமாகட்டும்" என்னும் ஜயகோஷத்தின் நடுவே புன்சிரிப்பு முகத்துடன் ஸ்ரீவ்யாஸ முனிவர் ஸுரேந்திரர் விஜயீந்திரருடன் ஸபா மண்டபத்தினின்று புறப்பட்டனர்.

விசாலமான மடத்தில் இன்று ஜனக்கூட்டம் நிரம்பியுள்ளது. ஸ்ரீவிஜயீந்திரரின் முதல் முதலான ஸமஸ்தான பூஜையைக் கண்டுகளிக்கும் குதூஹலத்துடன் நான் முன்னே நீ முன்னே என்று ஜனங்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். பலவித வாத்யங்கள் முழங்குகின்றன. வேதாத்யயன பண்டிதர்கள் இனிமையான குரலில் பாராயணம் செய்து கொண்டிருக்கின்றனர். தாஸராயர் தம்பூரி பிடித்து அமர்ந்திருக்கிறார். தம்பூரியின் காதுக்கினிய நாதம் ரீங்காரம் செய்து கொண்டுள்ளது. புரந்தரதாஸர் ராகாலாபனம் செய்து கொண்டு பாடிக்கொண்டிருக்கிறார். கனகதாஸர் காலுக்குச் சலங்கை கட்டித் தன்னை மறந்து பரமாத்மாவின் விதவிதமான லீலைகளை பாவபூர்வகமாக அபிநயித்து நாட்டியமாடுகின்றார். சோபையுடன் விளங்கும் மண்டபம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. விசாலமான தங்க மண்டபத்தில் மூன்று படிகளுள்ள மணைகள் போடப்பட்டிருக்கின்றன. மேல் படியில் ஸ்ரீவிபுதேந்திரருக்கு ஸ்வப்னத்தினால் கிடைத்த 16 கைகள் கொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்ம ஸ்வாமி சோபித்துக் கொண்டிருக்கிறார். நடுவில் மஹா ஸமஸ்தானத்தின் முக்ய விக்ரஹங்களான ஸ்ரீமூல, திக்விஜய, ஜயராம விக்ரகங்கள் காணப்படுகின்றன. கீழ்பாகத்தில் படியில் ஸமஸ்தானத்தின் மற்ற ஸ்ரீஹரியின் நானாவித விக்ரஹங்கள் வீற்றிருக்கின்றன. ஸ்ரீவிஜயீந்த்ர யதிவரேண்யர் சுவாமியின் இடதுபுறம் அமர்ந்து பூஜையிலீடுபட்டுள்ளார். ஸ்ரீஸுரேந்திரர் ஸ்ரீசந்த்ரிகாராயர் வலதுபுறம் ஆஸனத்தில் வீற்றிருக்கின்றனர். தூரத்திலிருந்து கிருஷ்ணதேவராயர் தனது மருமகன் ராமராயனுடன் கைகூப்பி அமர்ந்திருக்கின்றான். ஆஹா! அது எப்படிப்பட்ட காட்சி! அதைப்போல் மஹாத்மாக்களின் ஒன்று சேர்க்கை கிடைக்குமா? அந்தக்காட்சியின் அழகே அழகு! அதை வர்ணிப்பதற்கியலுமா! அதை அனுபவிக்கத்தான் முடியுமே தவிர வாயால் வர்ணிக்க இயலாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பூர்ணசோபையுடன் பூஜை நடந்தேறியது. பீடாவரண பூஜை, கலச பூஜை, பஞ்சபாத்ர பூஜை, ஆவாஹனம், மண்டப பூஜை, அபிஷேகம், கந்தாக்ஷதை, புஷ்பம் துளஸிஸமர்ப்பணம், நைவேத்யம், மஹா நீராஜனம், குடை, சாமரம், விசிறி, தொட்டில் முதலியவைகள் ஸமர்ப்பணம், ரமா நைவேத்யம், ஹஸ்தோதகம், விஸர்ஜனம் முதலிய மஹா ஸமஸ்தான முறைப்படி அன்றே பட்டத்திற்கு வந்தயதிச்ரேஷ்டர் அனுஷ்டிப்பதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே மகிழ்ந்தனர். எல்லோருடைய கண்களும் மனமும் விஜயீந்திரர் பக்கமே உள்ளன. அவர் எப்படிப்பட்ட தேஜஸ்வியாயிருக்கிறார்! என்று புகழுகின்றனர். அவரின் பூஜை க்ரமம் எவ்வளவு அழகு! ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்வாமியைப் பெட்டியில் வைப்பதற்காக ஸ்ரீமூலராமனைக் கையில் பிடித்துக் கொண்டு பக்தி பரவசத்தினால் ப்ரார்த்திக்கிறார். கண்ணில் ஆனந்தக் கண்ணீர் சொரிகிறது. ப்ரார்த்தனை முடிந்தது. ஸ்ரீமூலராமனைச் சபையோருக்குக் காண்பிக்கிறார். வலதுகைச் சேவகன், "ஸ்ரீப்ரம்மதேவன் கரகமலங்களினால் பூஜிக்கப்பட்ட மூலராமர்" என்று பக்தர்களுக்குத் தெரியப்படுத்துகிறான். எல்லோரும் ஸ்வாமியையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கனகதாஸர் ஸ்ரீவ்யாஸயதிகளைப் பார்த்தார். ஸ்ரீவ்யாஸயதிகள் ஸ்ரீமூலராமரைப் பார்த்துக் கொண்டே ஒருமுறை ஆச்சரியத்தினால் திடுக்கிட்டதைப் போல் காணப்பட்டார். ஸ்ரீபுரந்தரதாஸர் அதைக் கவனித்து புன்முறுவல் செய்து கனகதாஸரைப் பார்த்தார். அவரும் சிரித்துக் கொண்டே தலையாட்டினார். மறுபடியும் ஸ்ரீவ்யாஸராஜரைப் பார்த்தார். ஆனால் அங்கு அவர் கண்டதென்ன? விசித்திரமான பார்வை அர்த்தத்தோடு கூடிய வணக்கங்கள்! கம்பீரமான முகத்தில் அறிய முடியாத உணர்ச்சிதென்படுகிறது. ஆசாஜ்யோதி அந்தக் கண்களில் மின்னுகிறது. தாஸர்களிருவரும் எதையோ நினைத்துக் கண்ணை மூடினர், கண்ணில் கண்ணீர் ததும்பியது எதற்காகவோ! யாருக்குத்தெரியும்? குருவின் முகத்தில் காணப்படும் அபூர்வமான உணர்ச்சியைக் கண்டு தாஸர் பக்கம் திரும்பி புன்னகை செய்தார் ஸ்ரீவிஜயீந்திரர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீஸுரேந்திரர் இவையெல்லாவற்றையும் கண்டு தமக்குத்தாமே ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார். இவை எதுவும் அறியாத ஜனங்கள் ஸ்வாமி தரிசனம் செய்து விட்டு பக்தியினால் வணங்கிக்கொண்டிருக்கின்றனர். ஸ்ரீமூலராமரை வணங்கி திக்விஜயராமர் முதலான விக்ரஹங்களையும் வணங்கி ஸ்ரீவிஜயீந்திரயதிகள், சுவாமி பெட்டகத்தை வலதுகைச் சேவகன் வெள்ளிப் பீடத்தில் அமர்த்தியதும், விஜயீந்த்ரயதிகள், "सुकृतं तिलमात्रतुल्य मीश क्रियते नैव मैययैक वत्सरेपि । अपितु क्रियते साघायपूगः प्रतियामं सकलेन्द्रियैर्मुकुंद ।" என்னும் பாபவிமோசன ஸ்தோத்திரத்தை அப்பொழுதே இயற்றிச் சொல்லிக் கொண்டே ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து பிறகு குருமார்களிருவருக்கும் வந்தனை செய்து அவர்களின் அனுமதி பெற்று தீர்த்தப்ரஸாதம் பெற்றுக் கொள்ள வந்த பக்தஸமூகத்தினருக்கெல்லாம் தீர்த்தப்ரஸாதங்கள் அருளி குருமார்களிருவருடன் கூடிக்கொண்டு மகிழ்ச்சியுடன் தத்வ விஷயங்களைச் சர்ச்சை செய்து கொண்டே பிக்ஷையை ஏற்றுக் கொண்டார். புதிய யதிகளின் பட்டாபிஷேக உற்சவம் காரணமாகக் கூடிய பத்துப்பன்னிரண்டு ஆயிரம் பிராமணர்கள் சுமங்கலிகள் முதலானோர்கள் பஞ்சபக்ஷ பரமான்னம் கூடிய உத்தமமான போஜனம், தாராளமாக தக்ஷிணைகள், தாம்பூலங்கள் வெகுவிமரிசையாக விநியோகிக்கப்பட்டு பரமத்ருப்தி-யடைந்த ஜனங்கள் விஜயீந்திரரைப் பற்றி பரஸ்பரம் புகழாரம் செய்து கொண்டே தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பும் காக்ஷிவெகு அழகாக இருந்தது.

## 5. ஞானிகளின் ஸரஸ கோஷ்டி:-

போஜனம் ஆன பிறகு சந்த்ரிகாராயர் ஸ்ரீஸுரேந்திரர், ஸ்ரீவிஜயீந்திரர் மற்றும் கனகதாஸர், புரந்தரதாஸர் யாவரும் ஏகாந்தமாக ஒரு கோஷ்டியாகத் தமக்குள் சர்ச்சை செய்வதில் ஈடுபட்டிருந்தனர். இருந்தாற்போல் கனகதாஸர் சிரிக்க ஆரம்பித்தார். ஸ்ரீவ்யாஸ முனிவர், "என்னப்பா கனகா, மிக்க மகிழ்ச்சியுடன் காணப்படுகிறாயே?" என்றார். தாஸராயர் புன்சிரிப்புடன் சொன்னார், "இல்லை மஹாப்ரபோ, விஜயீந்திரர். மூலராமரை எடுத்துக் காண்பித்தபொழுது அவரை எவ்வளவு நேரம் பார்ப்பது? அந்த முகபாவம் ஆசைநிறைந்த பார்வை, அதை நினைத்து நினைத்துச் சிரித்திருப்பனோ கனகன்?" என்றார். ஸுரேந்திரர்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



"அதிருக்கட்டும் தாஸரே, ஸ்ரீகளவர் மூலராமனைப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது ஒருமுறை ஆச்சரியத்துடன் திடுக்கிட்டாரே, அதைக்கவனித்தீரா!" என்று சொல்ல, "உண்மைதான் மூலராமன் நரஸிம்மனைப் போல் காட்சியளித்ததால் திடுக்கிட்டு ஆச்சரியமடைந்திருப்பரோ!" என்று புன்சிரிப்புடன், விஜயீந்திரர் சொல்லவும், சற்று கோபித்தவரைப் போல் நடித்து, "என்னப்பா, நீங்களெல்லாம் சேர்ந்து என்னைப் பித்தனாக்குகிறீர்களா? எனக்கொன்றும் புரியவேயில்லை" என்று ஒன்றும் தெரியாதவரைப் போல் சொன்னார் வ்யாஸராயர். கனகதாஸர் ஸ்ரீவ்யாஸராஜரின் பேச்சைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே, "ஹோ, ஹோ" ப்ரஹ்லாதப்பா, இது என்ன நடிப்பு! மூலராமன் நரசிம்ம ரூபத்தில் தமக்குத் தரிசனம் கொடுத்தார் என்று முந்தின சமாசாரம் நினைவிற்கு வந்ததப்பா, வ்யாஸப்பா", எனலும், "ஆம் நினைவுக்கு வராமலிருக்குமா? அதனால் தான் எங்கே மறுபடியும் ஹிரண்யகச்யபன் பிறப்பானோ, தாம் மற்றொரு முறை ஹரியின் ஸர்வவ்யாபகத்வம் மற்றும் ஸர்வோத்துமத்வத்தை ஸ்தாபித்து அதை நிரூபிக்க என்னவெல்லாம் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்குமோ என்று பயந்திருப்பார். அவ்வளவு தான்! இல்லையா? என்று வ்யாஸமுனிகளைக் கேட்கவும் சந்த்ரிகாராயர் கம்பீரமானமான தோற்றத்துடன், "ஸ்ரீபாதங்களவரே, தற்பொழுது, அந்த பயமில்லை! ஆனால் மறுபடியும் மறுபடியும் ஜன்மமெடுக்க வேண்டியிருக்கிறதே! என்று தான் பயந்தேன். உமக்கும் தெரிந்திருக்கும், முன்பே நான் விபுதேந்த்ரரே இந்த விஜயீந்திரர் அவதாரம் செய்திருக்கிறார் என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா! வருங்காலத்தில், "जितामित्र गुरुस्तस्य विजयींद्र मुनेः सुतः । पुरतो भविता नूनं रामार्चा पूजनेरतः ॥ सुधीन्द्र इतिविखयातो लोके स प्रथितो भवेत । तच्चिष्योऽहं भविष्ये वै जन्मानि यतिसत्तमः । राघवेंद्र इतिखयातो जनिष्ये रामकारणात"

ஜிதாமித்ர குருஸ்தஸ்ய விஜயீந்த்ரமுனே: ஸுத: புரதோபவிதா நூனம் ராமார்ச்சா பூஜனேரத: ஸுதீந்த்ர இதிவிக்யாதோ லோகே ஸ ப்ரதிதோ பவேத்! தச்சிஷ்யோ அஹம்பவிஷ்யே வை ஜன்மனி யதிஸத்தம: ராகவேந்திர இதி க்யாதோ ஜனிஷ்யே ராம காரணாத்."

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஜிதாமித்ரராயரே, ஸுதீந்த்ரரென்னும் உபநாமத்துடன் அவதரித்து விஜயீந்த்ரருக்கு சிஷ்யராகப் போகிறார். அந்த ஸுதீந்திரருக்கு சிஷ்யனாக நான், "ராகவேந்திர"னென்னும் நாமத்துடன் ஸ்ரீமூலராமனின் பூஜைக்காக அவதரிக்கப் போகிறேன்: நம்மப்பன் ஸ்ரீவாமனமூர்த்தி முன்பு என் கேள்விக்கு, "यच्चांतिमे-चांतिमे" என்று சொல்லியருளியிருக்கிறார். மூல ராமரைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது நரஹரி-வாமன ரூபத்தில் காட்சி கொடுத்து மறுபடியும் மூலராம ரூபத்தில் தரிசனம் ஆயிற்று. ஹரியின் ஆக்ஞை நினைவிற்கு வந்தது. ஸ்ரீமூலராமனின் பூஜை செய்து பிறகு அவனுடைய ஸந்நிதிக்குப் போக வேண்டுமென்பது தெரிந்தது. மறுபடியும் அவதரிக்க வேண்டுமே என்று கவலை கொண்டோம். என்ன செய்வது? நரஹரியின் விருப்பம்" என்றார். ''வ்யாஸப்பா, இதற்கு நீங்கள் கவலை கொள்ளலாமா? ஹரியின் உத்தரவு இருக்கும்பொழுது தாங்கள் என்ன செய்ய முடியும்? முன்புதானே ஜகதீச்வரனென்றறிந்து மதம்பிடித்த ஹிரணிய கசிபுவின் கர்வ பங்கம் செய்வதற்காகவும், ஸ்ரீஹரியின் வ்யாபகத்வத்தை நிரூபிப்பதற்காகவும், அப்பொழுது பிறந்திருந்தாய். அதைப்போல் இனிமேலும், "கடவுளே இல்லை, வேதாதிகள் பொய்க் கதைகள், புராணங்கள் சரியானவையல்ல, தர்மம், ஜாதி, மதங்கள் ம்னிதனின் கற்பனை, மனித சக்திக்கு மிஞ்சினது எதுவுமில்லை", என்று கலியுகத்தில் மதம்பிடித்த தர்மமற்றவர்களான அநேக ஹிரண்யகசிபுகள் பரமாத்மனின் அஸ்தித்வத்தையே (இருப்பதையே) தலைகீழாக்குகின்ற ஸந்தர்ப்பத்தில் அந்த ஹிரண்யகசிபுகளின் கர்வபங்கம் செய்வித்து, பகவந்தன் இருக்கிறான், வேதாதிகள் ஸத்யமானவை, ஹரிஸர்வதந்திரன், ஸ்வதந்திரன், ஜகஜ்ஜன்மாதிகாரணனென்னும் மஹாதத்வத்தை ஜகத்திற்குத் தங்கள் அகாதமான மகிமைகளின் மூலம் தெரிவிப்பதற்கு ஸந்தர்ப்பம் தானாக கிடைக்கும்பொழுது ஜகத்தின் உய்விற்காகக் காரணமாகப் போகும் தாம் யோசிப்பதைப் பார்த்துச் சிரிப்பு வருகின்றது. "வியாஸப்ப" என்று கனகதாஸர் சொல்லவும், புரந்தர தாஸராயர்,", இல்லை, கனகா நம்மப்பனின் சேவை 700 வருஷங்கள் ப்ருந்தாவனத்திலிருந்து கொண்டு தனது புண்யராசியை முழுவதும் சிலவழித்த பிறகல்லவோ கிடைக்கும்! அவ்வளவு நாட்கள் எவ்வாறு கழிப்பதென்று ஸ்ரீகளவர்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


யோசிக்கிறார். இது எனக்குத் தெரியாதா என்ன!" என்று சொல்லவும் விஜயீந்திரர், "ஆம் தாஸரே, அப்படியே எதற்காக மேலும் மேலும் புண்யம் செய்ய வேண்டும்? ஆகையால் அதைச் சிலவு செய்யும் வரை" அனுபவிக்கத்தான் வேண்டும், இல்லையா? என்று புன்னகை செய்தார்.

ஸுரேந்திரர் அன்புடன் விஜயீந்திரரைப் பார்த்து, "தாஸரே, பார்த்தீரா, ஹரியின் ஸங்கல்பம் எவ்வாறிருக்கிறது? யார் வித்யா பரம குருகளாக இருந்தாரோ அவரிப்பொழுது ஸ்ரீவியாஸராஜருக்குச் சிஷ்யரானார். •இப்பொழுது விஜயீந்திரருக்கு யர்ர் வித்யா குருகளாக இருந்தாரோ அவரே வருங்காலத்தில் ப்ரசிஷ்யராகப் போகிறார். (சிஷ்யரின் சிஷ்யர்) இதல்லவா லீலாவிசித்திரங்கள்!" எனலும் யாவரும், "ஆமாம், ஆமாம், என்று ஒப்புக்கொண்டனர். அப்பொழுது வியாஸராஜர்", இவ்வளவு போதும், இந்தச்சிறு பிள்ளைத்தனம்! என்று சொல்வதைப்போல", தாஸரே, நீங்கள் அவதரிக்கப்போகிறீரல்லவா? ''என்று புரந்தரதாஸரைக் கேட்டார். அவர் பயந்தவரைப்போல்", வேண்டாம், மஹாஸ்வாமி எனது காரியம் முடிந்துவிட்டது. தங்களுக்குத் தெரியாததா? நான் கண்டிப்பாக அவதரிக்கப் போவதில்லை? என்றார். ஸ்ரீவ்யாஸமுனிகள் கனக தாஸரைப்பார்த்து, ''என்னப்பா கனகா, உனது சமாசாரமென்ன?" என்று கேட்க, "ஆம் எனது ஸ்வாமி தாங்கள் ராகப்பனாகும் போது எனக்குக் கடுகு கொடுத்து உமக்கு சேவை செய்ய வேண்டாமா? ஆனால் அதுதான் கடைசியென்று அதை திரஸ்கரிக்கப் போவதில்லை.

என்ன செய்வதப்பா, பகவந்தனின் இச்சை. மறு ஜன்மம் வந்தாலென்னப்பா? பக்தி இல்லையா? வேத தர்மத்திற்கு விரோதமில்லாது நடந்து கொண்டு அந்த ஜகத்ஸ்வாமியை பஜித்தால் மோக்ஷம் கிடைக்குமல்லவா? ஜன்மம் எதுவாயிருந்தாலென்னப்பா? எப்படியும் மறுபடியும் பிறந்து தங்கள் சேவை செய்யத்தான் போகிறேன்" என்றார். எல்லாரும் சிரித்துக் கனகதாஸரைப் புகழ, வியாஸராஜர் கனகதாஸரின் முதுகைத் தட்டிக்கொடுத்து, "பாபு! கனகா, உனது தைரியம் பக்தி முதலியவைகளை மெச்சினோம். நாமெல்லோரும் ஸ்ரீஹரியின்தாஸர்கள். அவன் எப்படி ஆட்டிவைக்கிறானோ அவ்வாறு ஆடுவது ஒன்று தான் நம் கடமை. சரி அதிருக்கட்டும். ஸ்ரீஸுரேந்திரர் சிஷ்யனுடன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



நாளை திக்விஜயம் செய்யப்போகிறார். நீரே சொல்லும் தாஸரே, நமக்கு இப்பொழுது எவ்வளவு வருத்தமாயிருக்கும்? ஸுரேந்திரரைப் போல தபஸ்வியும் க்ஞானத்திற்கிருப்பிட-மானவருமான பரலோக பந்துவின் வியோகம் (பிரிவு) ப்ரிய சிஷ்யனின் பிரிவாற்றாமையினால் மனம் மிகவும் வியாகூலமாக உள்ளது. இந்த இரண்டு தினங்களும் நமக்கு ஸுதினம், இப்பேர்ப்பட்ட நாட்கள் கிடைப்பதரிது. ஸ்ரீமதாசார்யரின் இரண்டு மஹா ஸமஸ்தானங்களின் சம்மேளனம் (ஒன்று சேருவது) என்ன அவ்வளவு சுலபமா? அது யாருக்குக் கிடைத்தது? ஏதோ நம் விஜயீந்திரரின் காரணமாக இவையெல்லாம் கிடைத்தன. மிகப்ரியமான வஸ்துக்கள் நம்மை விட்டு அகலும் போது, நொடிப்பொழுதானாலும் கூட மிக்கவேதனையுடன் மனமொப்பிச் சேர்த்தோம்.

இந்த எண்ணங்கள் வெளியில் தெரியலாகா. உண்மை. ஆனால் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்குப்பிறகு நம் பக்தனொருவன் ஆங்காங்கு கிடைக்கும் விஷயங்களெல்லாம் ஒன்று சேர்த்து நமது இந்த ஏகாந்தமான சம்பாஷணையை எழுதி விடுவானோ என்னமோ? ஊம், எழுதினால் எழுதட்டும், கலியின் கல்மஷத்தினால் கெட்டுப்போன ஜனங்கள் பகவத் பக்தரின் மகிமை பற்றிய விஷயங்கள் என்னவென்று அறிந்து உய்யட்டும், விடுங்கள். தற்சமயம் நமது பொறுப்பு ஒன்றுள்ளது. அதை இப்பொழுது நடத்துகிறேன்". என்று சொல்லி ஸ்ரீவிஜயீந்திரரைத் தனதருகில் அமரவைத்து, அன்புடன் தலையைத் தடவிக்கொடுத்து இனிமையான மென்மையான வார்த்தைகளினால் அவருக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்தார்.

6. ஸ்ரீவ்யாஸராஜரின் ஹிதோபதேசம்:-

நம் அன்பு மிக்க யதிச்ரேஷ்டரே! நமது வாழ்க்கையின் ஒளி விளக்கான உமது பிரிவால் நமக்குச் சொல்லொணா வருத்தம் ஏற்படுகிறது. அதை எவ்வாறு வர்ணிப்பது? உத்தம சிஷ்யரே, இந்த ஜகத்தில் அதிப்ரியவஸ்துவைக் காட்டிலும் பெரியது எதுவுமில்லையென்று சொல்லுகின்றனர். ஆனால் அந்தப்ரிய வஸ்துவைத் தேர்ந்தெடுக்கும்பொழுது மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது அன்பின் நிலை உத்தமமானதாக இருக்க வேண்டும். அது அழியாததாக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இருக்க வேண்டும். அதுமாத்திரமல்ல. அது எல்லாவிதத்திலும் திறமையுள்ளதாயும், பரிபூர்ண மானதாயும், குற்றமற்றதாயும், ஆனந்தமயமானதாகவும் இருக்க வேண்டும். அதாவது அந்த அன்பிற்குப் பாத்திரமான வஸ்துவும் தன்னை அண்டியிருப்பவரை, அன்புக்குறியவனை, எல்லா விதங்களிலும் காப்பாற்றி அவனுடைய ஸாதனைகளை அனுஸரித்து, மங்களத்தைக் கொடுத்துக் கடைசியில் நிரந்தரமான் சுகத்தையருளி ரக்ஷிப்பது, அதே பகவந்தன். அதுபோலவே ஜீவரின் அன்புக்கு உத்தம பாத்திரன் பகவந்தன் என்று சாஸ்திரங்கள் பறை சாற்றுகின்றன.

ஆகையால் ப்ரீதியை (அன்பை) அழிவில்லாத, நினைத்துப் பார்க்க முடியாத அற்புத சக்தியுடையவனான, ஜகத்தின் ஸ்ருஷ்டிகர்த்தாவான ஸகல குணங்களினால் நிறைந்தவனான ஸ்வதந்த்ரனான அந்த ஸ்ரீமந்நாராயணனில் செலுத்தி அந்த மஹாமகிமையுள்ளவனை அடைவதற்காக நிரந்தரமாக முயற்சிப்பது புத்தியுள்ளவனின் லக்ஷணம். ஸ்ரீஹரியைக்காட்டிலும் உயர்ந்த மற்றும் அன்புக்குகந்த வஸ்து வேறு எதுவுமே இல்லை. இதை நாம் அனுபவத்தினால் மனத்தில் உணர்ந்துள்ளோம். மூன்று பிறப்பு எடுத்து அந்த பராத்பரனைச் சேவித்தோம். அவனைக் கண்ணால் கண்டோம். கொண்டாடினோம். இன்றும் கண்டுகொண்டிருக்கின்றோம். ஆயினும் அந்தப் பரமபுருஷனின், பரந்தாமனை அடைந்து சாஸ்வதமான ஸுகத்தையடைய இன்னொரு ஜன்மம் எடுக்க வேண்டியதாகியுள்ளது. பிறகு தான் நமக்கு அந்த பாக்யம் கிடைக்கப்பெறும். ஆனால் உமது விசேஷ புண்யத்தினால் இந்த இரண்டாவது பிறப்பிலேயே அது கிடைக்கும், ஆகையால் இந்த பஞ்சபூதங்களினாலான சரீரம் இருக்கும்பொழுதே நல்ல சிந்தனையாளராகி உலகத்திற்கு பகாரமாகும் செயல்களைச் செய்து கீர்த்திமானாக வாழுங்கள். நமது உபதேசத்தைப் பின்பற்றுங்கள், உமது அவதாரம் ஸாதாரணகாரியத்திற்காக ஏற்பட்டதல்ல. அதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அது மாத்திரமல்லாமல் ஸ்ரீமதாசார்யரைப் போலவே மகா உன்னதமான, நிரந்தரமான, ஹரிஸேவை உம்மால் நடைபெற வேண்டியுள்ளது. ஸ்ரீஸர்வக்ஞாசார்யரென்னமோ

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



வேதங்களின் உண்மையான அர்த்தத்தை ஸஜ்ஜனர்களை உய்விப்பதற்காகத் தெரிவித்து அனாதியானத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து ஜகத்திற்கு மகத்தான உபகாரம் செய்துள்ளார். நமது காலம் முடிந்து கொண்டு வருகிறது. நமக்குப் பிறகு அந்த மஹாதத்வத்தை ஆமோதித்து ஸ்தாபிக்க வல்லவர் உம்மைத்தவிர வேறொருவரும் இல்லை. நமது இந்த த்வைத ஸித்தாந்தத்தின் மீது மஹா சக்திவாய்ந்த போர் தொடங்கவிருக்கிறது.

அந்த மாயையின் புயல்ப்ரளய காலத்தின் சூராவளிக் காற்றைப் போல வீசி ஜகத்தையே அல்லோலகல்லோல மாக்கும் ஸந்தர்ப்பம் வரும்பொழுது அதை எதிர்த்து நிற்கும் திறமை உம் ஒருவருக்கு மாத்திரம் உண்டு. நீர் ஒருவரே அதை எதிர்க்கும் சக்திபடைத்தவர். அப்பொழுதுதான் நீர் தைரியமிழக்காதிருக்க வேண்டும், ஹரியின் பரதத்வம், பஞ்சபேதம், தாரதம்யம் முதலிய ஸத்தத்துவங்களின் ஸாரத்தைப் புனருஜ்ஜீவனம் செய்து (மறுமலர்ச்சி செய்து) சூர்ய சந்திரர்கள் உள்ளளவும் நமது ஹரியின் மதம் ஸ்திரமாக, ஆணித்தரமாக, நிலைக்கும்படி செய்யும் மஹத்தான பொறுப்பு உம்மீதுள்ளது. அந்த மஹத்தான கார்ய ஸாதனைக்கென்றே நாம் உமக்கு 64 கலைகளை உபதேசித்துள்ளோம். அது உமக்கு உதவியாக இருக்கும். ஆனால் 64 கலைகளில் ஒன்றான பரகாயப்ரவேசத்தை மாத்திரம் ஒரு நாளும் நீங்கள் செய்யவே கூடாது. ஸந்யாஸிகளுக்குகந்த காரியமல்ல அது. நமது இந்த ஹிதோப தேசத்தில் உமது கவனம் இருக்க வேண்டும். ஹரிவாயுகள் உம்மீது விசேஷ அனுக்ரஹம் செய்துள்ளனர். ஸ்ரீஸர்வக்ஞர் ஸதா வெற்றியை அருளிக்கொண்டே உமது இதய கமலங்களில் வசித்துக் கொண்டிருக்கிறார். உமக்கு நமது இதயபூர்வமான ஆசீர்வாதத்தின் வஜ்ரகவசமிருக்கும் பொழுது உம்மை எதிர்க்க வல்லவர் யாரும் இந்த ப்ரபஞ்சத்தில் இல்லவே இல்லை. வருங்காலத்திலும் பிறக்கப்போவதுமில்லை.

पूजयन् रामचंद्रं त्वं विचरस्य महीतले । जहिवादीन्
समस्तांस्त्वं कर्कशांस्तुर्क भाषणैः । ये येसमागतावत्स
त्वां जेतुं वाग्रणाजिरे। समस्त विद्या चतुरो भवत्वं मदनुग्र
हात् । परकाय प्रवेशं त्वं मा कुरुष्व न संशयः ।
इत्याशीभिर्जयीन्द्रार्यं अभिमंत्रयं सुहृष्टधीः"

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ப்ரிய விஜயீந்திரரே, ஸ்ரீமூலராமனின் பூஜை செய்து கொண்டு இந்த ஜகத்தில் எல்லாவிடங்களிலும் ஸஞ்சாரம் செய்து கொண்டு வாக்யுத்தத்திற்காக (வாதத்திற்காக) உம்மிடம் வரும் உன்மத்தர்களான ஸகல துர்வாதிகளை (எதிரிகளை) வெற்றி கொள்ளுங்கள். நமது அனுக்ரஹத்தினால் எல்லாவித்தைகளிலும் நிபுணராய் அஜேயராகுவீர் (ஜயிக்க முடியாத வல்லவராவீர்). பரகாயப்ரவேசத்தை மாத்திரம் செய்யக் கூடாதென்று மற்றொரு முறை சொல்ல விரும்புகிறோம். எல்லா தடங்கல்களையும் எதிர்த்து பாரத தேசத்தின் ஆதி அந்தமெங்கிலும் ஸ்ரீமத்வதத்வ ப்ரசாரம் செய்து விலைமதிக்க ஒண்ணாத க்ரந்தரத்னங்களை இயற்றி கீர்த்தியை அடைவீர். ஸ்ரீஹரி உமக்கு எப்பொழுதும் அங்கரக்ஷகனாகி இருப்பான். நமது ஆசீர்வாதம் உமக்கு நிரந்தரமாக இருக்கும்!

இவ்வாறு உபதேசம் செய்து ஸந்தோஷத்துடன் விஜயீந்திரரை ஆலிங்கனம் செய்து கொண்டார் வ்யாஸராஜர். இரு ஸ்ரீபாதங்களின் கண்களிலிருந்து துக்கமேலீட்டினால் கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. தொண்டை அடைக்கிறது. பேச நா எழவில்லை. ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்ரீசந்த்ரிகாராயரின் பாதங்களில் தலை வைத்துக் குழந்தைகளைப் போல் விம்மிவிம்மி அழுகிறார். இதைக்கண்டு ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர்; தாஸராயர் இவர்கள் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகிற்று. யார் யாருக்கு ஆறுதல் சொல்வது? எல்லோரும் அறிவாளிகள், ஞானிகள், மேலும் பகவத்பக்த சிகாமணிகள், இவ்வாறு சற்று நேரம் கழிந்தது. ஸ்ரீவ்யாஸராஜ யதிவர்யரே சற்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு சொன்னார், "வெகு நேரமாய்விட்டது. மாலை தீபாராதனை நடக்கவேண்டாமா? ஸ்ரீவிஜயீந்திரரின் தொட்டில் பூஜையைப் பார்க்க வேண்டுமென்றிருக்கிறது. தாஸரே, தமது சேவை நடக்கட்டும்" என்று சொல்லி எழுந்தார்.

ராத்திரி பூஜை விமரிசையாக நடந்தேறியது. விஜயநக்ர அரசரே முதலானோருக்கும் பக்தர்களுக்கும் புதிய யதிஸார்வபௌமரின் கையினால் பல மந்த்ராக்ஷதைப்ரஸாதம் கொடுத்தருளினார். இரவில் சந்த்ரிகாராயர் விஜயீந்திர் தீர்த்தர் அருகிலேயே அமர்ந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ஏகாந்தமாக (தனிமையில்) பேசிக்கொண்டிருக்கிறார். எவ்வளவு பேசினாலும் நிம்மதியில்லை. சிஷ்யனை எவ்வளவு பார்த்தாலும் திருப்தி இல்லை. இதல்லவா குரு சிஷ்ய பாவம்!

## 7. குரு, சிஷ்யர்கள் விடைபெறுதல்:

பொழுது புலரும் உஷா காலத்தில் ஸ்ரீவ்யாஸராஜ ஸுரேந்திரரின் அனுமதி பெற்று விஜயீந்திரர் சிஷ்ய மண்டலியுடன் துங்காநதிக்கு எழுந்தருளினார். பவித்ரதுங்கா நதியில் தண்டோதகப்ரோக்ஷணையினால் சிஷ்யர்களை யெல்லாம் பவித்ரம் செய்து அவர்கள் தாழ்ந்த குரலில் வேதாத்யயனம் செய்ய அனுவ்யாக்யானத்தைப் பாராயணம் செய்து கொண்டே மடத்திற்கு எழுந்தருளி ஆஸனத்தில் அமர்ந்தார். பிறகு காலை நியமங்களையும் ப்ரணவஜபத்தையும் முடித்து த்யானத்திலீடுபட்டுக் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருக்கிறார். சூர்யபகவான் தினகரன் தனது கிரணங்களினால் ஸ்ரீ விஜயீந்திரரை எதிர்கொண்டு வரவேறக வந்திருக்கின்றானோ என்பதைப் போல அவனின் ஒளிக்கதிர்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் தேகத்தின் மீது விழுவதினால், ஏற்கனவே அழகுள்ளவரும் தேஜஸ்வியாகவும் உள்ள அவரது முகம் விசித்திரமான காந்தியுடன் ப்ரகாசிக்கின்றது. இந்தக்காட்சி ஸ்ரீமதாசார்யரை நினைவூட்டுகிறது.

ஸ்ரீகள் த்யானத்திலிருந்து விழித்தார். தங்கக்கோல் தாங்கிய ஒருவன் மிகுந்த பயபக்தியுடன் நமஸ்கரித்து "மஹாஸ்வாமி, ஜய விஜயீபவ, இரண்டு ஸ்ரீபாதங்களவர்களும் கர்நாடக ராஜ்யாதிபதி க்ருஷ்ணதேவராயனும் வித்வான்களின் ஸமூகமும் ஸபா மண்டபத்தில் விடையனுப்பும் விழாவிற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். அங்கு எழுந்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டதும் சுறுசுறுப்பாக எழுந்திருந்து விஜயீந்திரர் ஸபா மண்டபத்தில் நுழைந்து காலடி வைத்தாரோ இல்லையோ வந்திமாகதர்கள் "ஜகத்குருவே, ஜய விஜயீபவ" என்று ஜயகோஷம் முழங்கினர். ஸ்ரீமத்வபீடாதிபதிக்கு ஜயமுண்டாகுக" என்று கோஷமிட்டனர். ஸபையோரனைவரும் எழுந்து நின்று ஸ்ரீகளவர்களை மரியாதையுடன் வரவேற்றனர், ஸ்ரீசந்த்ரிகாராயர் ஸமயோசிதமாகச் சில வார்த்தைகள் பேசிய பிறகு, ஸ்ரீஸுரேந்திர முனிகள் ஸ்ரீசந்த்ரிகாராயரின்

CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மரியாதை, பந்துவிடம் அன்பு, தனக்குக் கொடுத்த கௌரவமான வரவேற்பு முதலியவைகளை மனமாரப் புகழ்ந்து, கர்நாடகாதிபதியின் பக்திக்கு மெச்சிப்பேசினார். பிறகு விஜயீந்திரர் ஸூக்தி முறையில் சிறியதாயினும் இனிமையுடன் கூடிய சொற்பொழிவாற்றின பிறகு, ஸ்ரீவ்யாஸராஜரும் ஸ்ரீஸுரேந்திரரும் விஜயீந்திரரை ஆலிங்கனம் செய்து கொண்டு இரண்டு சால்வைகள், ரத்ன மாலை, பூமாலைகளை அணிவித்து மகிழ்ச்சியடைந்தனர். பரஸ்பரம் இந்த அன்பு நிறைந்த ஸல்லாபங்களைக் கண்டு ஸபையோர் ஆனந்தத்தில் மூழ்கினர்.

கிருஷ்ணதேவராயர் ஸ்ரீவிஜயீந்திரருக்கு அரசு மரியாதையுடன் காணிக்கைகளை அர்ப்பித்து கிருதார்த்தனானான். விடை கொடுக்கும் காலம் நெருங்கியது. மூன்று யதிகளுடைய கண்களிலும் கண்ணீர் ததும்புகிறது. கனகதாஸர், புரந்த தாஸர்கள் தேவரு நாமாக்கள் பாடுவதில் தன்னை மறந்துள்ளனர். விஜயீந்திரர் தனது யதீஸ்வர நண்பரான ஸ்ரீவாதிராஜரை ஆலிங்கனம் செய்து கொண்டார். ஸ்ரீவாதி ராஜர், "நண்பரை மறக்கக் கூடாது, உடுப்பிக்கு ஒருமுறை எழுந்தருளி, க்ருஷ்ண தர்சனத்தினால் க்ருதார்த்தராக வேண்டும்'', எனவும் விஜயீந்திரர் புன்னகையுடன் "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி ஸ்ரீசந்த்ரிகாராயரின் பாதங்களை நமஸ்கரித்து அவரது ஆசிர்வாதம் அனுமதிபெற்று, ஸ்ரீவ்யாஸராஜரை:-

ராகம்:- ஆனந்தபைரவி தாளம்:- ரூபகம்

யோகிவ்யாஸராயரெம்ப விசித்ரமேக
பேக விஷ்ணுபதவ தோரிஸுத்த பந்திதிகோ (பல்)

மாயி மதவெம்ப தாராமண்டலவ முஸுகுத்த
வாயு சுதியந்தெ கமிஸுத்தலி
ஹேய காமாதிகளெம்ப ரஜவனடகிஸுத்த
நாயகனுபேந்த்ரனாக்ஞேய படெது (1)

அங்கஜனய்யனே பரனெந்து குடி குடிஸுத்த
கங்களெம்ப. மிஞ்சனே நெ,ஹி லோகதி
ஹிங்கதே பரிவ அக்ஞான வெம்பகத்தலெய
பங்கிஸி ஸுரபதவ தோரிஸுத்த (2)

ஸிரியரஸன ஸம்யக்ஞானவெம்ப பைரிதே
பேருபிடே ஹரிகதெயெம்ப மளெகரது
நெரெ சிஷ்யமனவெம்ப தெரெதும்பிஸி கரகளெம்ப
கோடி ஹரிஸுத விஜயீந்த்ரன குரு (3)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



என்று கன்னட பதத்தினால் தோத்திரம் செய்து குருஸுரேந்திருடன், வெளிப்பக்கத்தில் தயாராக வெள்ளி அம்பாரியில் ஏறி அமர்ந்தார். ஜன ஸமூகம் ஜயகோஷம் செய்து கொண்டிருக்கின்றனர், அம்பாரி யானை முன்னால் புறப்பட்டது. ஸ்ரீசந்த்ரிகாராயர் நின்றிருந்தவாறே விஜயீந்திரரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். விஜயீந்திரர் அம்பாரியிலிருந்தவாறே மற்றொரு முறை குருகளை நமஸ்கரித்துக் கைகூப்பி அமர்ந்துள்ளார். ஏற்கனவே அறிவித்திருந்தபடி குருவும் சிஷ்யனும் மஹா ஸமஸ்தானத்துடன் நாகலாபுரக் கிராமத்திற்கு திக்விஜயம் செய்தனர்.

புதிய யதிச்சக்ரவர்த்தி குரு ஸுரேந்திரருடன் வரும் செய்தியை அறிந்திருந்த அரசனின் பிரதிநிதி ஜகத்குருகளை எதிர்கொண்டழைக்கக் காத்து நிற்கின்றான். ஆயிரக்கணக்கான ஜனங்கள் யதீச்வரரின் தரிசனத்தை எதிர் பார்த்துக் கொண்டு ஒன்று கூடியுள்ளனர். அதோ கேட்கிறது வாங்கா நாதம்! திக்விஜயம் முழங்கும் பெருஞ்சத்தம் ஆகாய மண்டலத்தையே பிளந்து கொண்டு ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. ஸ்ரீமதாசார்யரின் மஹா ஸமஸ்தானமென்றால் அது ஒரு சிற்றரசு என்றே சொல்லலாம். யானை, ஒட்டகம், குதிரை வீரர்கள், யாவரும் வருவது என்ன அழகு! அணி அணியாக வருகின்ற வண்டிக்ளின் காட்சி மனதுக்கு வெகு ரம்யமாக உள்ளது. வந்தது யதிவர்யர்களைச் சுமந்து வரும் அம்பாரி யானை! அதின் நடை எவ்வளவு கம்பீரம்! அசைந்து அசைந்து வரும் யானையைப் பார்த்தால் ஒருக்கால் ஜகத்தை வெல்லுபவரான ஜகத்குருவைச் சுமக்கும் பாக்யம் தனக்குக் கிடைத்துள்ளதே என்று ஆர்வமும் மகிழ்ச்சியிருக்குமல்லவா? ராஜப்ரதிநிதி யதிகளை அணுகி வரவேற்பளித்துப் பெரியதோர் வீட்டில் அவர்களுக்குத் தங்க ஏற்பாடு செய்தான். உயர்ந்த பீடத்தில் அமர்ந்த குரு-சிஷ்யர்கள் சிரித்த முகத்துடனமர்ந்துள்ளனர். பக்த மண்டலியை அன்போடு பார்த்து இடத்திற்குத் தகுந்தவாறு சிலவார்த்தைக்ள் பேசிவிட்டு எல்லோருக்கும் பலமந்திராக்ஷதை அருளினர். பிக்ஷைக்கு எல்லா ஏற்பாடுகளும் ஆகியுள்ளன. ஸ்நானம் முடிந்தது. ஸ்ரீமூலராமரின் பூஜை விமரிசையுடன் நடந்தேறியது. தீர்த்த ப்ரஸாதம், பூரிபோஜனம், யதிவர்யர்களின் பிக்ஷையேற்றுக் கொள்ளல் முதலியவை ஸாங்கோபாங்கமாய் நிறைவேறின.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மாலையில் வந்த ஸஜ்ஜனங்களுடன் க்ஷேம சமாசாரம், தத்வஸம்மந்தமான சர்ச்சையான பிறகு தர்மாபிமானிகளின் வேண்டுகோளின்படி ஸ்ரீயவர் உபதேசச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் முகத்தினின்று புறப்பட்ட திவ்ய வாணி க்ம்பீரமாக அநேகப்ரமாணங்கள், உதாரணங்களுடன் கூடியதாயிருந்தது. ஸ்ரீயவர்களின் முகத் தாமரையினின்று பவித்ரமான வாக்ப்ரவாஹம் புறப்பட்டுள்ளது. அந்த மஹாத்மரின் முகத்தினின்றும் பெருகும் சொற்பொழிவாகிய நதியின்னால் இன்று பவித்ரமடைந்தனர் கேட்ட ஜனங்கள். ஒரே மகிழ்ச்சி. இரவில் தீபாராதனை முடிந்த பிறகு நகரத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி நாகலாபுரத்தில் இரண்டு நாட்கள் தங்கி ஸ்ரீவிஜயேந்திரர் குருவினுடன் கூடி சஞ்சாரக்ரமத்தில் தக்ஷிணதேச திக்விஜயத்திற்குப் புறப்பட்டனர்.

8. காஞ்சிபுர திக்விஜயம்:-

விஜயீந்திர தீர்த்தரின் பாண்டித்யம் வாதம் செய்வதில் திறமை முதலியவை வெகு சமீபத்திலேயே பக்த ஜனங்களாலும் பண்டிதர்களாலும் புகழப்பெற்று கீர்த்தியும் பெற்று எங்கும் பரவியுள்ளது. ஸ்ரீவ்யாஸ குருஸார்வபௌமரிடமிருந்து விஜயீந்திரரை அடைந்த பிறகு ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் சிஷ்யர்களுடன் தக்ஷிணபாரத திக்விஜயத்தைக் கைகொண்ட வேளையின் பலனோ, ஸ்ரீஹரியின் அல்லது ஸ்ரீமதாசார்யரின் ஸங்கல்பமோ அல்லது ஸ்ரீவ்யாஸராஜர் ஸ்ரீவிஜயீந்திரரைத் தானம் செய்யும்பொழுது, "ஸ்ரீவிஜயீந்திரரினால் உமது பீடத்திற்கும், நமக்கும் அபூர்வ கீர்த்தி வரவிருக்கிறது. அவர் அஜேயராய் (வெற்றி வீரராய்) ஸ்ரீஸர்வக்ஞரின் ஸித்தாந்தத்தை வெகுவாக ப்ரசாரம் செய்யப்போகிறார்" என்று அருளிய வாக்கின் வல்லமையோ, எப்படியானாலும் சரி, அன்றிலிருந்து சென்ற இடங்களிலெல்லாம் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் வெற்றிவாகை சூடிக்கொண்டு விளங்குகிறார். அதைக் கண்டு ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு எல்லையற்ற பெருமை, மற்றும் ஆனந்தம்!

ஸ்ரீஸுரேந்திர-விஜயீந்திரர்கள் அநேக வருடங்கள் ஸஞ்சாரத்திலேயே ஈடுபட்டிருந்தார்கள். எல்லாவிடங்களிலும் ஆயிரக்கணக்கான ஆஸ்திக மக்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் தரிசனம், பாடப்ரவசனம், தர்மோபதேசம், அவர் செய்யும் மூலராமர் பூஜை காட்சி, தப்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


முத்ராதாரணம், தீர்த்தப்ரஸாதம், முதலியவைகளைப் பெற்றுப் புனிதரானார்கள். விதவிதமான சாஸ்திரங்களில் விஜயீந்திரருடன் வாதம் செய்ய வந்த அநேக பண்டிதர்கள் தோல்வியையே தழுவினர், ஸ்ரீயவர்களின் ஸமஸ்தானம் காஞ்சீபுரத்திற்குப் புறப்பட்டது.

காஞ்சீபுரம் தொன்றுதொட்டு வித்யாகேந்திரமாக (கல்வியறிவு மைய்யம்) விளங்கி வந்துள்ளது. அங்கு ஷட்தர் சனங்களில் அஸாதாரண பாண்டித்யமுள்ள சூரர்கள், மேலும் பண்டித ஜனங்கள் வசித்து வந்தனர். பாரத தேசத்திலேயே மஹா பண்டிதரென்றும், நூலாசிரிய ரென்றும் (க்ரந்தகர்த்தா) வாதமல்லரென்றும் மிகப் பெயர்பெற்ற ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரென்பவர் காஞ்சியில் வசித்து வந்தாரென்றபின் காஞ்சீபுரத்தின் மகத்துவம் எவ்வளவு என்று கேட்க வேண்டுமா? ஸ்ரீவிஜயீந்திரர் குருவுடன் காஞ்சியில் எழுந்தருளின சமயம் அப்பய்ய தீக்ஷிதர் காசிக்குத் தமது மகள் வீட்டிற்குச் சென்றிருந்தார். தீக்ஷிதர் ஊரிலில்லாவிட்டாலும் அவ்விடத்தியமற்ற பண்டிதர்கள் தங்கள் ஊரின் கீர்த்தி கௌரவத்தை விஜயீந்திரருக்குத் தெரிவித்தனர். ஒவ்வொருநாளும் அவருடன் வாதம் செய்ய ஆரம்பித்திருந்தனர். இதனால் ஸ்ரீவிஜயீந்திரர் பத்து மாத காலம் காஞ்சியில் முகாம் செய்ய வேண்டி வந்தது.

அத்வைத விசிஷ்டாத்வைதவாதிகள், தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸா, முதலிய சாஸ்திர கோவிதர்கள், விஜயீந்திரருடன் வாதம் செய்யலாரம்பித்தனர். ஒவ்வொரு நாளும் வாக்யார்த்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வாத விவாதங்கள் மிகச்சாந்தமான முறையிலேயே நடைபெற்றது. பத்து மாதங்களில் அநேகர் விஜயீந்திரரிடம் தோல்வியுற்றனர்.

இப்பொழுது நான்கைந்து தினங்களாக அதிப்ரஸித்த்ரான இருவர் மீமாம்ஸா பண்டிதர்களுடன் விஜயீந்திரர் வாக்யார்த்தம் நடத்தினார். இரண்டு மீமாம்ஸா பண்டிதர்களும் வெகு திறமையுடன் வாதம் செய்து கொண்டிருந்ததினால் வெற்றி-தோல்வியை முடிவு செய்வது மிகக் கடினமாயிற்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

இன்று வாக்யார்த்தம் ஆறாவது நாள். ஸ்ரீவரதாஜ ஸ்வாமி தேவா்லயத்தில் நூற்றுக்கணக்கில் பண்டிதர்கள், ஆயிரக்கணக்கான ஆஸ்திகப் பெருமக்கள் வாதத்தைப் பார்க்கக் குதூகலத்துடன் நிரம்பியுள்ளனர். மீமாம்ஸா பண்டிதர்கள் வெகு ஸாமர்த்யமாக வாதித்துக் கொண்டிருக்கின்றனர். விஜயீந்திரர் சிரித்த முகத்துடன் அவர்களுடைய வாதங்களைக் கண்டனம் செய்து கொண்டிருக்கிறார். தொடர்ந்து நடந்துள்ளது வாக்யார்த்தம். சுமார் ஒரு மணி நேரம் ப்ரமாணம், உதாரணங்கள் ஸஹிதமாக வெகு அழகான முறையில் மீமாம்ஸா பண்டிதர்கள் கோடி க்ரமங்களைச் சொல்லி, "ஸ்ரீகளவரே, இதற்குத் தாங்கள் ப்ரமாணத்துடன் உத்தரம் கொடுத்துச் சமாதானம் சொன்னதில் தாங்களே வெற்றியடைந்தவராவீர்" என்று சொல்லி வெற்றி தங்களுக்கே நிச்சயமென்னும் பாவனையுடன் வ்யங்க்யமாக நகைத்தனர்.

விஜயீந்திர தீர்த்தர் புன்னகையுடன், "ஸ்ரீவரதரா்ஜ ஸ்வாமியின் சித்தம் இருந்தால் எதுவும் அஸாத்யமல்ல. நாம் இப்பொழுது நீங்கள் என் முன் வைத்துள்ள விஷயத்தை முதலில் அனுவாதம் செய்து (விளக்கி) பிறகு அதைக் கண்டனம் செய்து ஸித்தாந்தத்தை முன் வைக்கிறோம். நடுவர் பிறகு கொடுக்கும் வாக்யார்த்த வெற்றியின் தீர்ப்புக்கு நாம் இருவரும் கட்டுப்பட்டவர்கள். ஆகலாகமல்லவா?" என்று சொல்லவும், ப்ரதிவாதிகள் தமது சம்மதம் தெரிவித்த பிறகு ஸ்ரீவிஜயீந்திரர் மீமாம்ஸா பண்டிதர்களின் பூர்வபக்ஷத்தை விளக்க ஆரம்பித்தார்.

சபை நிசப்தமாயுள்ளது. ஸ்ரீவிஜயீந்திரர் சுமார் ஒரு மணி நேரம் வரை பூர்வபக்ஷத்தை வெகு கம்பீரமான முறையில் விளக்கிப் பிறகு பூர்வபக்ஷத்தைக் கண்டனம் செய்ய ஆரம்பித்தார். விஜயீந்திரர் ஒவ்வொரு விஷயத்தையும் கண்டனமாக செய்து அதி அபூர்வமான ப்ரமாணங்களை உதாரணம் எடுத்துரைத்து, விலக்ஷணமான முறையில் திறமையுடன் ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்துள்ளார். பண்டிதர்கள், ஸபையோர், மத்யஸ்தக் குழுவினர், முதலானோர் மாத்திரமல்ல, ப்ரதிவாதிகளும் கூட ஸ்ரீயவர்களின் விசித்திர காந்தியையும், அற்புத பாண்டித்யமும், அற்புதமான விளக்கும் முறை, ப்ரமாணம், உதாரணம் காட்டும் முறைகளைக் கண்டு ஆச்சர்யத்தில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மூழ்கியுள்ளனர். ஸாக்ஷாத் ஸரஸ்வதி தேவியே பூமியிலிறங்கி வந்திருக்கின்றாளோ என்று சொல்லும்படி காணப்படுகிறார். ஸ்ரீவிஜயீந்திரர் கங்கா ப்ரவாஹம் போல் தங்குதடையின்றி விஜயீந்திரர் முகத்தினின்று புறப்படுகிறது வாக்ப்ரவாஹம். மெய்மறந்து மந்திரத்தால் கட்டுப்பட்டவர்கள் போல கேட்டுக் கொண்டிருக்கின்றனர் சபையோர். ஸ்ரீவிஜயீந்திரர் பூர்வபக்ஷத்தை முழுவதும் கண்டனம் செய்து ஸித்தாந்தத்தை நிலைநாட்டி அமர்ந்தார்.

சபையோர் நிச்சப்தமாக அமர்ந்திருக்கின்றனர். அப்பொழுதுதான் ஜனங்களுக்குத் தெரிந்தது விஜயீந்திரர் வாதத்தை முடித்தாரென்று. மத்யஸ்தக் குழுவினர் எழுந்தனர். பரஸ்பரம் சர்ச்சை செய்த பிறகு தமது தீர்ப்பை அளிக்க எழுந்துநின்றனர். ஸகலரும் தீர்ப்பை அறிவதற்காக ஆவலாக உள்ளனர். மத்யஸ்தக் குழுவின் தலைவர், "வாக்யார்த்தத்தில் விஜயீந்திர தீர்த்தர் வெற்றி பெற்றுள்ளார்" என்று அறிவித்தனர். ஜனங்கள் கைதட்டி ஆரவாரத்துடன் ஜயகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

ஸ்ரீவிஜயீந்திரர் மீமாம்ஸா பண்டிதர்களை விசேஷமாகக் கௌரவித்தார். சில முக்கியமான பண்டிதர்கள் மற்றும் நகரத்தினரும் விஜயீந்திரரைக் கௌரவிக்க அன்று மாலை ஸ்ரீவரதராஜ ஸ்வாமி கோவிலில் ஸபை கூட்டி அது விஷயமாக ஸ்ரீவிஜயீந்திரரை அனுமதி கோரினர். குருவரியர் ஆக்ஞை பெற்று பண்டிதரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். பிறகு தனது முகாமிற்குச் சென்றார்.

ஸாயங்காலம் 5 மணியளவில் ஸ்ரீவரதராஜ ஸ்வாமி கோவிலில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியுள்ளனர். காஞ்சி நகரத்தினர், பண்டிதர்கள், வெற்றி கொண்ட விஜயீந்திரரைக் கௌரவிக்க ஏற்பாடு செய்து கொண்டு ஸ்ரீயவரை வழிபார்த்துக் கொண்டு காத்திருக்கின்றனர். ஸுரேந்திரரைப் பின்பற்றிக் கொண்டு விஜயீந்திரர் ஸபைக்கு எழுந்தருளினார். முக்கிய பண்டிதர்கள் இரு ஸ்ரீபாதங்களவர்களையும் கௌரவத்துடன் வரவேற்று அழைத்து வந்தனர். மேடை மீது தயாராக வைக்கப்பட்ட பீடத்தில் குரு சிஷ்யர் அமர்ந்தனர். பகவத்ப்ரார்த்தனை ரூபமாகவேத கோஷத்துடன் சபை ஆரம்பமாயிற்று. பத்து பண்டிதர்கள் பேசி விஜயீந்திரரின் பாண்டித்யம், வாக்யார்த்தத்தின் சிறப்பு முதலான குணங்களை அன்றைய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வாத வெற்றியின் மகத்துவத்தையும் புகழ்ந்தனர். நகரத்தினர் சார்பாக ஓரிருவர் பேசி ஸ்ரீயவர்களின் தரிசனம், வாக்யார்த்தத்தைக் கேட்டதினாலும் தங்களுக்குண்டான மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

பிறகு வித்வான்களின் சமூகத்தினரனைவரும் நகரத்தினரின் சார்பாக ஸ்ரீயவர்களுக்கு ப்ரார்த்தனா பத்திரம் அளித்து, சால்வை ஜோடி, பழங்கள், புஷ்பமாலைகளைச் சமர்ப்பித்தனர். ஸ்ரீபாதங்கள் சால்வை ஜோடிகளை அன்று வாதம் செய்த மீமாம்ஸா பண்டிதர்களுக்கே போர்த்தி சிறப்பாக சம்பாவனைகள் கொடுத்துக் கௌரவித்து அனுக்ரஹித்தார். ஸபையோர் ஸ்ரீபாதங்களின் உதார குணம், வித்யாவிஷயத்தில் பக்ஷபாதமின்மை, இவைகளைக் கண்டு மகிழ்ச்சியடைந்து ஜயகோஷம் செய்தனர். பிறகு ஸ்ரீபாதர் ஸுக்த முறையில் சொற்பொழிவாற்றித் தம்மைக் கௌரவித்த எல்லோரையும் வாழ்த்தி ஆசீர்வதித்து பண்டிதக் கூட்டத்திற்குச் சம்பாவனைகள் அளித்து ஸகலருக்கும் பல மந்த்ராக்ஷதை அனுக்ரஹித்து மறுநாள் தான் மேலும் சஞ்சாரத்தைத் தொடரப் போவதாகத் தெரிவித்தார். சபையிலிருந்து புறப்பட்டு ஸ்வாமி தரிசனத்திற்காகக் கோவிலுக்கு விஜயம் செய்தார்.

கோவிலில் தம்பூரியின் இனிமையான ரீங்காரம் காதில் விழுந்தது, புரந்தரதாஸரின் அழகான தேவர நாமாவை மோஹன ராகத்தில் இனிமையான குரலில் யாரோ பாடுகின்றார். விஜயீந்திரர் சுற்றிலும் பார்த்தார். பக்கத்திலேயே தம்புராவைப்பிடித்துக் கொண்டு பாடிக்கொண்டு வருகிறான் ஒருவன். விஜயீந்திரரின் முகம் மலர்ந்தது. ஸ்ரீபுரந்தரதாஸரின் மகனான மத்வபதி விட்டலர் மூன்று நான்கு பேருடன் தன்னிடம் வருவதைக் கண்டு பரமாநந்தமாயிற்று. இரு ஸ்ரீபாதங்களவர்களுக்கும், மத்வபதி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். ஸ்ரீஸுரேந்திரர், "இவர் புரந்தரதாஸருடைய புத்திரரல்லவா?" என்று கேட்டார். விஜயீந்திரர் புன்னகை செய்து, "ஆம், அதோ பாருங்கள், இப்பொழுது நமஸ்கரித்துக் கொண்டிருக்கிறாரங்கே, அவர் யார் தெரியுமா? அவரே நம்முடன் ஸ்ரீகுருபாதரிடம் பாடம் கற்றுக் கொண்டிருந்த ராமாசார்யரு? என்று சொல்லி மத்வபதி மற்றும் ராமாசார்யரையும் கைகொடுத்து எழுப்பி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



க்ஷேமசமாசாரம் வினவினார். மத்வபதியும் ஸ்ரீராமாசார்யரும் ஸ்ரீபாதங்களின் வாத விஜயத்தினால் தமக்கான மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ராமாசார்யர் சிரித்துக் கொண்டே, "மஹா ஸமஸ்தானத்தின் அதிபதிகளான பிறகு ஏழையை ஸ்ரீபாதங்கள் எங்கு மறந்துவிடுவரோ என்றிருந்தேன். ஆனால் முந்தைய அன்பு அபிமானங்களும் இப்பவும் இருப்பதைக் கண்டு ஆனந்தமாயிற்று. ஸ்வாமி, மிகமிக ஆனந்தமடைந்தேன்!" என்று சொல்லவும் மத்வபதி சிரித்துக்கொண்டே, "உண்மை, குருச்ரேஷ்டரே, ராமாசார்யருக்காகியுள்ள மகிழ்ச்சியானது ஸ்ரீயவர்களின் குணகானரூபமான பதமாக வெளிப்படப்போகிறது, இன்னென்ன அத்தாட்சி வேண்டும்! இல்லையா ஆசார்யரே?" என்றார், ஸுரேந்திரர், "இதென்ன ராமாசார்யரின் இதயத்திலும் உமக்குப்ரவேசம் உள்ளதே? வ்யாஸராஜரின் சிஷ்யரானது ஸார்த்தகமாயிற்று" என்றார். ராமாசார்யர் மௌனமாகத் தலை குனிந்து நிற்க, விஜயீந்திரர் அவரைப் பார்த்து புன்முறுவல் செய்தார். மத்வபதி, "ஏன், ஆசார்யரே, நீங்கள் இப்பொழுது இயற்றிய விஜயீந்த்ர ஸ்துதியை நாம் கேட்கக் கூடாதா என்ன? ஊம், வெளிப்படட்டும் மஹிமாவர்ணன பரக்ருதி!" எனலும், ராமாசார்யர் ஸ்ரீவிஜயீந்திரரை வணங்கிப்பாட ஆரம்பித்தார்.

விஜயீந்திர குருராயர அனுதின
பூஜிஸிர்ஸ்ய முததி । (பல்)
யாசக பக்தர கல்பபோஜனாகி புட்டி
வ்யாஸ ராயரனுக்ரஹபடெது ஜகதிமெரெவ । (அ.ப)

முந்தே பூம்யனாகி புட்டுவாநந்த தீர்த்தர க்ரந்த களந்த
சந்தரிகாசார்யரிந்த திளிது நலிது லோகதொளுமெரெது ।।
ஸுந்தராங்க ஸ்ரீமூலராம சந்த்ரன சரணாரவிந்த ।
அந்ததிந்த பஜிஸுத்த பந்து கும்பகோணதி நிந்த (1)

பங்கஜ தரோத்தமனெம்போஸுதா மோதகளிந்த
ஹிங்கதே சிஷ்யரிகருஹுத ச்ருதிஸ்ம்ருதிகளிந்த கூடி ।।
சங்கிஸுதபருவ அத்வைத சங்கர கிங்கரா கரகள
பிங்கதி மத்வஸித்தாந்த தங்குசதிந்த ஸதெத (2)

சிலபக்தமன கமல பானுதேனுவாகி ஸேவகர
பாலிஸி ஸந்தான கொடுவ நோடி பேடி ஈடில்லதாங்கே।।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



இளியுத காஞ்சீபுரதா நெலதி சேஷசயனனாத
சலுவ வரதராஜன நோடி நலிது குணிதாடுவ ।। (3) *

விஜயீந்திரர் புன்னகையுடன் "ஹரிதாஸ ஸாஹித்யத்திலும் கூட நீங்கள் வல்லுனர் என்பது இப்பொழுது தெரியவந்தது! ஸந்தோஷம் என்றார். மத்வபதி, "உண்மைதான், ஸ்வாமி, வியாஸ முனிவரின் சிஷ்யரல்லவா?" எனலும், ஸ்ரீபாதங்கள், "உண்மை, உண்மை", என்று தலையை ஆட்டி வரதராஜர் தரிசனத்திற்குப் பிறகு எல்லோருடனும் முகாமிற்கு எழுந்தருளினார்.

இரவு தீபாராதனையான பிறகு குரு-சிஷ்யர் இருவரும் ஆஸனத்திலமர்ந்து பிறகு, மத்வபதி, ராமாசார்யர் இருவரும் வந்து நமஸ்கரித்து உட்கார்ந்தனர். லோகாபிராமமாக (லோக வ்யவஹாரங்கள்) பேச்சுகள் நடந்தபொழுது ஸ்ரீவிஜயீந்திரர் ராமாசார்யரைப் பார்த்து, "ஆசார்யரே, நீரும் மத்வபதிகளும், இங்கு எப்பொழுது வந்தீர்கள்? குரு பாதங்களவர் க்ஷேமமாயிருக்கின்றாரா? அவ்விடத்திய விசேஷ செய்திகள் என்ன?" என்று கேட்டார்.

ராமாசார்யர், "நாங்களிருவரும் குருபாதரின் ஆக்ஞையின்படி தம்முடைய தரிசனத்திற்காகவே வந்துள்ளோம். இந்த ஊரில் பத்து மாதங்களாக நாங்கள் தாங்கள் நடத்திய பரவாதி திக்விஜயம், வாக்யார்த்த விசாரங்களையும் வந்தவர் மூலம் கேட்டு குருபாதர் ஆனந்தம் அடைந்து ஆசீர்வதித்திருக்கிறார். மற்றும் தமக்குக் கொடுப்பதற்கு ஒரு ஸ்ரீமுகமும் கொடுத்தருளியுள்ளார். தம்மைத் தரிசிக்க அவர் மிக ஆவலுடனுள்ளார். சுமார் அநேக வருஷங்களாக தம்மைப்பிரிந்த குருபாதர் பலவீனராகியுள்ளார் வயோதிக நிலை, அதல்லாமல் காரியங்கள் அதிகம், அதனால் சக்தியற்றவராகியிருக்கிறார். தங்களைப் பார்க்கும் விருப்பம் அவருக்கு அதிகரித்துள்ளது. மற்றொரு முறை தம்மைக் கண்டு ஆனந்தமடையத் தவித்துக்

---

ஸ்ரீதரங்கிணி ராமாசார்யர் அநேக தேவரு நாமாக்களை இயற்றியுள்ள விஷயம் இந்த க்ருதியினால் தெரியவருகிறது. இந்த பதத்தைப் பரிசீலித்ததில் இதை ராமாசார்யர் காஞ்சியில் விஜயீந்திரரைத் தரிசனம் செய்த சமயம் இயற்றியிருப்பதாகக் கண்டு வருகிறது. "கும்பகோணதிநிந்த" என்று நிரூபித்திருப்பதனால் கும்பகோணத்தில் இயற்றியிருக்கலாமென்றும் தெரியவருகிறது. நாம் இதைக் காஞ்சியில் தர்சனமான ஸமயத்திலேயே உபயோகித்துள்ளோம். இதைத் தமது பழைய பத-பத்ய ஸுளாதிகளின் தொகுப்பிலிருந்து நமக்குக் கொடுத்துதவிய ஹரிதாஸ பூஷணம் ஸ்ரீ டி.கே.வேணுகோபால தாஸருக்கு நாம் நன்றியுள்ளவராயிருக்கின்றோம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கொண்டிருக்கிறார். அதற்காகவே நாங்களிருவரும் இந்த விஷயத்தை அறிவிக்க வந்திருக்கிறோம்", என்று சொல்லி ஸ்ரீமுகத்தை (கடிதம்) விஜயீந்திரரிடம் சேர்ப்பித்தனர். ஸ்ரீமுகத்தைச் சிரஸின் மீது வைத்து அதைப்படித்துப் பார்த்து ஸ்ரீபாதர் தனது குரு ஸுரேந்திரரிடம் ஸமர்ப்பித்தார்.

ஸ்ரீவ்யாஸ முனிகள் தம்மிடம் வைத்துள்ள அபரிமிதமான அன்பு, அவருடைய ஆதங்கம் உடல் நிலைமையைக் கேட்டு விஜயீந்திரருக்கு துக்கம் பொங்கி எழுந்தது. கண்களிலிருந்தும் தாரை தாரையாய்க் கண்ணீர் பெருகிற்று. தழுதழுத்த குரலில் குரு ஸுரேந்திரரைப் பார்த்து, "குருவர்யரே, குருபாதரின் தரிசனத்திற்கு நான் விரும்பித் தவித்துக் கொண்டிருக்கிறேன். ஒருமுறை போய்வர அனுமதிக்க வேண்டும்", என்று விக்ஞாபிக்கவும், கண்ணீர் ததும்பிய தமது கண்ணைத் துடைத்துக் கொண்டு, ஸுரேந்திரர், "அவசியம் போய்த்தான் வரவேண்டும்! ஸ்ரீவ்யாஸ யதிகள் உம்மைக் காண விரும்புவது இயற்கையே. ஆஹா, அவர் எப்படிப்பட்ட மென்மையான இதயமுள்ளவர்! உம்மீது அவருக்கு எவ்வளவு அன்பு! எனக்கே உம்மை ஒரு நொடிப்பொழுது விட்டுப்பிரிவது முடியாத காரியமாயிருக்கையில், உம்மை வளர்த்துப் போஷித்து, வித்யாவந்தராக ஆக்கி, உம்மீது தன் உயிரையே வைத்துக்கொண்டிருந்த அவருக்கு உமது பிரிவு, எவ்வளவு வேதனையைக் கொடுத்திருக்கும்! அவசியம் போய் வாருங்கள்", என்று அனுமதி கொடுத்தருளினார் குரு.

ஸ்ரீவிஜயீந்திரர் ராமாசார்யரைக் கேட்டார்; "ஆமாம் தம்மை ஒரு மஹத்கார்யத்திற்காக அல்லவா குருபாதர் அனுப்பியது; அது என்னவாயிற்று" மத்வபதிகள் கேள்விக்கு பதிலாக, "ராமாசார்யர் சென்ற பிறகு கார்யம் பலிக்காமலா போகும்? குருவர்யரே, தம்மை அழைப்பது அது ஒரு காரணமாகவே நடந்திருக்க வேண்டும்; இல்லையா, ஆசார்யரே?" என்றார். ஆசார்யர் சொன்னார்:- "ஸ்ரீகுருபாதர் மற்றும் தமது அனுக்ரஹத்தினாலும் வெற்றியுடன் திரும்பியுள்ளேன் ஸ்வாமி. ஆனால் ஆறு ஏழு வருடங்கள் மாறுவேஷத்தில் வாழ்ந்து காரியத்தை நிறைவேற்ற வேண்டியதாயிற்று. எந்தச் சமயம் ரகசியம் வெளிப்பட்டுவிடுமோ என்னும் பயம் - அன்ய மதத்தின் அறிகுறிகளையணிந்து வ்யவஹாரம் செய்து கொண்டு காலங்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு துக்கத்தையுண்டு பண்ணிற்று, ஆனாலும் ஸ்ரீ ஹரி வாயுகளின் அனுக்ரஹத்தினால் காரியத்தைச் சாதித்தேன் ப்ரபு" என்றார்.

விஜயீந்திரர் குருஸுரேந்திரரிடம் இவ்வாறு சொன்னார்:- மதுஸூதன ஸரஸ்வதி என்னும் அத்வைத பண்டிதர் ''ந்யாயாம்ருத''த்தைக் கண்டனம் செய்து, ''அத்வைத ஸித்தி'' என்னும் கிரந்தத்தை எழுதி, ''குருபாதருக்கு (ஸ்ரீவ்யாஸராயருக்கு) அந்த விஷயம் தெரிந்தால் நூற்றுக்கு நூறு தமது க்ரந்தம் கண்டனமாகுமென்ற பயத்தினால் ரகசியமாகவே வைத்துக் கொண்டிருந்த விஷயம், எப்படியோ அதையறிந்த வ்யாஸ முனிகள் அந்த க்ரந்தத்தைப் பெறுவதற்கு ராமாசார்யரை அனுப்பிய விஷயங்களெல்லாம் எடுத்துச் சொல்லி ராமாசார்யர் அந்த க்ரந்தத்தைப் பெற்றுக் கொண்டு வருவதில் வெற்றியடைந்தவரானபடியால், அத்வைதஸித்தி" யின் கண்டனத்திற்கு அனுகூலமான விஷயங்களை அறிவித்து மகத்துவமான காரியத்தைச் சாதித்த ராமாசார்யரைப் புகழ்ந்தார்.

மத்வபதி, "இங்கு சற்று கவனிக்க வேண்டும், பராக், ராமாசார்யர்" அத்வைத ஸித்தியைப் பெற்றுக் கொண்டு வந்திருப்பது மாத்திரமல்ல'' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே ஆசார்யர், "தாஸரே, சொல்லாதீர், வேண்டாம்", என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஸுரேந்திரர் சிரித்துக் கொண்டே'', அத்வைதஸித்தியின் கண்டனத்தை எழுதிக் கொண்டிருக்கிறார், இல்லையா?" என்றார், விஜயீந்திரர் கண்மூடிக்கொண்டு த்யானித்து புன்னகையுடன், "உண்மை, தரங்கிணி வெகு உத்தமமான முறையில் இயற்றப்பட்டு வருகிறது! எங்கே உமது மூட்டையிலுள்ள, ''தரங்கிணி''யை இங்கே கொடும், பார்க்கலாம், "எனவும், குரு-சிஷ்யர், தெரியாத ரகசிய விஷயத்தைச் சொன்னதைக் கண்டு, ராமாசார்யரும், மத்வபதியும் திடுக்கிட்டனர். மெய் சிலிர்த்தது, மயிர்க் கூச்சலெடுத்தது. ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று.

ராமாசார்யர் சொன்னார்:- "அபராதமாயிற்று, ஸ்வாமி, ஸதீர்த்தரென்று பெயர் பூண்டு நடந்ததற்கு மன்னிக்க வேண்டும். ஸ்ரீஸர்வக்ஞ பீடத்தில் அமர்ந்திருக்கும் மஹானுபாவரல்லவா குரு-சிஷ்யர்களான நீங்களிருவரும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மஹாமகிமையுடையவர்களுக்குத் தெரியாததுண்டா? வித்யா சக்ரவர்த்திகளான தம்முன் சொல்ல மனம் பின்வாங்கியது. மன்னிக்க வேண்டும். என்னவானாலும், நான் சிறியவன், அற்பன், தமது வ்யாக்யானத்தினாலேயே நியாம்ருதத்தின் மகத்துவம் ஜகத்தில் ப்ரஸித்தியடைய வேண்டுமென்று குருபாதரின் மகத்தான ஆசை. அதன்படிக்கே, இதோ அத்வைத ஸித்தியில் ஒரு நகலைத் தமக்கு அனுப்பியுள்ளார். காஞ்சீபுரத்தின் திக்விஜயத்தின் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் அதைத் தமக்கர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். "என்று சொல்லிப் பனை ஓலையிலெழுதப்பட்ட ஒரு கிரந்தத்தை விஜயீந்திரருக்கு அர்பித்துப் பிறகு தாம் எழுதிக் கொண்டிருக்கும், "தரங்கிணி"யின் சில பாகங்களை அவர் முன் வைத்தார்.

விஜயீந்திரர், "குருப்ாதரின் ஆக்ஞையைச் சிரேமேற் கொண்டிருக்கிறேன். அவரைத் தரிசிக்கும்பொழுது ந்யாயாம்ருத வ்யாக்யான. ரூபமும், அத்வைத ஸித்தியின் கண்டனமும் ஆன க்ரந்தத்தைக் காணிக்கையாகக் குருபாதருக்கு அர்ப்பிக்கிறேன்!'' என்று சொல்லி, "தரங்கிணி"யைக் குதூகலத்துடன் பார்க்க ஆரம்பித்தார். ஸுரேந்திர தீர்த்தர் ''வெகு நாட்களுக்குப் பிறகு சந்தித்திருக்கிறீர்கள். சற்று நேரம் பேச்சு வார்த்தைகளான பிறகு, நாம் இளைப்பாறச் செல்வோம்" என்றார்.

ஸ்ரீஸுரேந்திரர் சென்ற பிறகு, வெகுநேரம் ''தரங்கிணி''யைப் பார்த்து விட்டு விஜயீந்திரர் மகிழ்ச்சியடைந்து ராமாசார்யரைப் பார்த்து, "பலே, வெகு ரஸமாக நடந்துள்ளது கண்டனம்! ஆசார்யரே, உண்மையாக இது ஒரு அபூர்வமான க்ருதி ஆகப்போகிறது. ஸ்ரீகுரு ராஜரின் சிஷ்யராகிருந்ததற்கு ஸார்த்தகமாயிற்று. இது சரியான குருதக்ஷணை. ஆசார்யரே, மிக்க மகிழ்ச்சியடைந்தோம்!" என்று புகழ்ந்தார். ஸ்ரீகளவர்கள் தமது மீது காண்பித்த மரியாதை, அபிமானங்களைக் கண்டு, ர்ாமாசார்யருக்குப் பரமாநந்தமாயிற்று. சற்று நேரம் லோக விஷயமாகப் பேசிய பிறகு ஸ்ரீயவர்கள் இளைப்பாறச் சென்றார்.

9. கன்னட நாட்டின் திக்விஜயம்:-

மறுநாள் பூஜை, ஆராதனை, போஜனாதிகள் முடிந்த பிறகு விஜயீந்திரர் குருகளுடன் தனிமையில் பேச்சு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வார்த்தைகள் நடத்தி ஸ்ரீசந்திரிகாராயர் தரிசனத்திற்காகத் தான் போய் வரும் விஷயத்தில் சர்ச்சை செய்தார். சுரேந்திரர் சில காலம் காஞ்சியில் தங்கிவிட்டுப் பிறகு ராமேச்வர யாத்திரை முடித்துக் கொண்டு தான் மதுரைக்கு வந்து தங்குவதாகவும், விஜயீந்திரர் கர்னாடக தேசத்தில் சஞ்சாரம் மேற்கொண்டு வ்யாஸ முனிகளைத் தரிசித்துக் கொண்டு பிறகு சில காலம் அவருடன் இருந்து விட்டு மதுரைக்கு வந்து தம்முடன் சேர்ந்து கொள்ள வேண்டுமென்று அபிப்ராயப்பட்டார். விஜயீந்திரருக்குக் குருவின் இந்த முடிவினால் ஸந்தோஷமுண்டாயிற்று.

மத்வபதி ராமாசார்யர் இருவரையும் அழைத்துக் கொண்டு விஜயீந்திரர் தாம் குரு-சிஷ்யர்கள் தீர்மானத்தின் சம்பந்தமாகத் தெரிவித்து கூடியவரை சீக்கிரமே குருபாதரின் தர்சனத்திற்கு வருவதாகக் கடிதம் எழுதிக் கொடுத்து அந்த விஷயத்தைக் குருபாதங்களுக்கு அறிவிக்கும்படி தெரிவித்து இருவருக்கும் ஸன்மானங்களைக் கொடுத்துப் பல மந்த்ராக்ஷதையும் கொடுத்தனுப்பினார்.

பத்து தினங்களுக்குப் பிறகு விஜயீந்திரர் குரு ஸுரேந்திரரின் அனுமதி பெற்றுத் தனது பரிவாரத்துடன் கன்னட நாட்டின் திக் விஜயம் மேற்கொண்டு ப்ரயாணமானார்.

காஞ்சியிலிருந்து விஜயீந்திரர் ஸஞ்சாரத்திற்குப் புறப்பட்டு ஒன்றிரண்டு மாதங்களாயின. ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் மூலஸ்தானமான மைசூர் ராஜ்யத்திற்கு விஜயம் செய்துள்ளார். ஸ்ரீகளின் இந்த ஸஞ்சாரம் மின்னல் வேகத்தில் நடந்துள்ளது. போனவிடங்களிலெல்லாம் ஸ்ரீயவர்களுக்கு அபூர்வ வரவேற்பு கிடைக்கின்றது. ஸ்வாமியின் தரிசனம் மற்றும் உபதேசங்களினால் ஜனங்கள் புனிதராகின்றனர். விமரிசையுடன் சஞ்சாரம் தொடருகிறது.

## 10. கோலாரில் ஸ்ரீஆஞ்சநேயர் ப்ரதிஷ்டை.

ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்தர் கன்னட நாட்டில் மின்னல் வேக ஸஞ்சாரத்தைக் கைக்கொண்டு, ஒவ்வொரு கிராம, நகரங்களிலும் ஸ்ரீமதாநந்த தீர்த்த பகவத் பாதாசார்யரின் உயர்ந்த மதத்திற்கெதிராக வாதிக்க வந்த ப்ரதிவாதிகளுடன் வாக்யார்த்த விசாரத்தில் ஈடுபட்டுத் தனது நிகரற்ற பாண்டித்யம், வாதத் திறமை, ப்ரமாணம், உதாரணங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


முதலியவைகளாலும் பூர்வபக்ஷ கோடிகளை முற்றிலும் கண்டனம் செய்வதில் காட்டும் திறமையினாலும், ஸகலரையும் ஆனந்தமடையச் செய்து எளிதாகவே எல்லாவாதிகளையும் ஜயித்து வந்தார். இருந்தபோதிலும் மற்ற மத பண்டிதரிடம் மிக அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டார். ஸ்ரீயவர்களின் இந்த அபூர்வ குணம், அவருடைய வினயம், ஸாத்விக காந்தி, பரமதத்தினரிடம் காட்டும் சகஜமான பண்பைக் கண்டு பரவாதிகள் மகிழ்ச்சி கொண்டனர், ஸ்ரீயவரின் தாராள மனப்பான்மை, நல்ல பண்புகளுக்கு யாரும் போய் அவரை அணுகி அபாரமான கௌரவத்தைக் கொடுத்து வந்தார்கள்.

வாத விவாதம், வாக்யார்த்தங்கள் இவைகள் கோபம், தாபம், துவேஷம், அசூயை கடைசியில் கலகத்தில் முடிவதைக் கண்ட ஜனங்கள் 'வாத விவாதமென்றாலே பயப்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. ஆனால் இந்தப் புதிய யதிச்ரேஷ்டரான விஜயீந்திரரின் புதிய நியமங்களைக் கண்டு ஆனந்தமடைந்தனர். சிநேகம் நட்பு முதலியவைகளினால், அமைதியான சூழ்நிலையில் கம்பீரமாக நடைபெறும் விஜயீந்திரரின் வாதம் செய்யும் முறை ஜனங்களுக்கு வெகுவாகப் பிடித்திருந்தது. பரவாதிகளும் கூட விஜயீந்திரரின் பின்பற்றத்தகுந்த உதாரணத்தையே அனுசரிக்க ஆரம்பித்தனர். இதனால் ஸ்ரீவிஜயீந்திரரின் கீர்த்தி சீக்கிரத்திலேயே எல்லாவிடங்களிலும் பரவிற்று. வெவ்வேறு மதங்களில் நடந்துவந்த வாக்யார்த்தங்கள் நல்ல சிறந்த முறையில் நடைபெற ஆரம்பித்ததினால் வித்வஜ்ஜனங்கள், நகரத்தார்கள், பாமர ஜனங்கள் யாவருக்கும் பின்பற்றத் தகுந்த இந்த வாத-விவாத முறையை ஒரு புதுயுகத்தின் வாத விவாத முறையாக ஸ்ரீவிஜயீந்திரரால் தோன்றியுள்ளது என்று உள்ளம் பூரித்து ஸ்ரீயவர்களை பக்தி-கௌரவங்களினால் கொண்டாடினார்.

ஸ்ரீவிஜயீந்திரர் கன்னட நாட்டின் ஜனங்களை மூல ராமசந்திரரின் தரிசனம், தீர்த்தப்ரஸாதம், மந்த்ர முத்ராதாரண, மேலும் தத்வோப தேசங்களினால் அனுக்ரஹித்து த்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்டிக் கொண்டு கோலாருக்கு திக்விஜயம் செய்தார். அங்குள்ள அரசு அதிகாரிகள் ஊரின் பிரமுக கிருஹஸ்தர்கள், பண்டிதர்கள் ஸ்ரீயவர்களை கௌரவத்துடன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வரவேற்றுபசரித்தார்கள். ஒவ்வொரு நாளும் ஸ்ரீபாதருக்குச் சிஷ்யர்கள், பக்தர்கள், . பிக்ஷை செய்வித்து கிருதார்த்தரானார்கள்.

கோலாரில் ஸ்ரீபாதர் ஒரு மாத காலம் தங்கியிருந்தார். அச்சமயம் மீமாம்ஸா சாஸ்திர பண்டிதரான ஸுதர்சனாசார்யர் தர்க்க சாஸ்த்ர நிபுணரான, க்ருஷ்ண பட்டர், வீரசைவ மதத்தை ஆராதிக்கும் பக்தர்கள் முதலிய வாதிகளுடன் வாதம் செய்து எளிதிலேயே அவர்களைத் தோல்வியுறச் செய்வித்தார். இதனால் முதலிலேயே ஸ்ரீகளிடம் கௌரவம் மரியாதை வைத்துள்ளவர்களுக்கு இன்னும் அதிகமான கௌரவமும் மரியாதையும் உண்டாயிற்று.

ஸ்ரீகளவர் கோலாரின் ஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீயவர் வந்திருந்த ஞாபகார்த்தமாக, வாத விஜயத்தை, நினைப்பூட்டுவதின் நோக்கத்துடன் ஸ்ரீவிஜயமாருதியின் (ப்ராண தேவரு) கம்பீரமான விக்ரஹத்தை பெரும் கோலாகலத்துடன் ப்ரதிஷ்டை செய்தார். மற்றும் இந்த விஷயத்தை நிரூபிக்க ஒரு சாசனமும் ஸ்தாபித்தார். *பிறகு பிரயாணம் மேல் தொடர்ந்து.

ஸ்ரீயவரின் பரிவாரம் தும்கூருக்குச் சென்றது. என்னே ஆச்சரியம்! ஸ்ரீயவர்களை எதிர் கொண்டழைக்க, யானை, ஒட்டகங்கள், வண்டிகள், பச்சைக்குடை! விருது பாவலிகளுடன் வந்துள்ளன. ஸ்ரீவ்யாஸராஜ குருபாதரின் ஸமஸ்தானத்தின் எல்லா வைபவங்களுடன் கூடிய விருதாவலிகளுடன் ராமாசார்யர் புன்னகையுடன் வந்து ஸமர்ப்பித்தார். விருதாவலிகளுடன் தம்மை அவர் எதிர் கொண்டழைக்க வந்துள்ளதைக் கண்டு விஜயீந்திரருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. பெருமகிழ்ச்சி அடைந்தார். ராமாசார்யர், "மஹாஸ்வாமி, குருபாதர் உடுபியாத்திரை கைக்கொண்டு இங்கு எழுந்தருளியுள்ளார். தமது திக்விஜயம் இங்கு ஆகப்போகிறது என்றறிந்து, சிஷ்யோத்தமரை.

---

*விஜயீந்திரர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீவிஜய மாருதியை கோலாரில் இப்பொழுதும் காணலாம். இந்த ப்ராண தேவர் கோவிலில் சிலா சாசனத்தை முன் பாகத்தின் மண்டபத்தின் மேல் பக்கத்தில் காணலாம். இன்று ஜனங்கள், அந்த மாருதியைப் பெரிய ஆஞ்சநேயர் என அழைக்கின்றனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வரவேற்க என்னை அனுப்பியுள்ளார். தம்மைக்காண குரு பாதர் மிக உற்சாகத்துடன் காத்திருக்கிறார்.. எழுந்தருள வேண்டும், பராக்" என்று விக்ஞாபித்தார்.

## 11: குரு சிஷ்யர்கள் சந்திப்பு:

இந்த நற்செய்தி கேட்டு ஸ்ரீவிஜயீந்திரருக்கு ஆனந்தத்தினால் மெய்சிலிர்த்தது. வெகு நாட்களுக்குப் பிறகு குருபாதரின் தரிசனம் மறுபடியும் கிடைக்கிறதென்ற மகிழ்ச்சியினால் மெய்பூரித்தது. இது எப்படிப்பட்ட நல்ல வாய்ப்பு! விஜயநகரம் எங்கே? தும்கூர் எங்கே? தரிசனத்திற்காகத்தாம் அங்கே போவதற்குள்ளாகவே அவரே எதிர் கொள்வதற்காக ராமாசார்யரை அனுப்பியுள்ளனரே! கனவிலும் கூட நினைக்காதது நனவாகியுள்ளதே என்று ஸ்ரீவிஜயீந்திரருக்கு எங்குங்காணாத ஆர்வம் வந்துள்ளது. பல்லக்கிலமர்ந்திருந்தவர் ஒரேயடியாகக் கீழே குதித்தார். குருபாதரின் தரிசனத்திற்குப் பல்லக்கிலா போவது? எப்படிப்பட்ட அபசாரம் என்று தோன்றியிருக்கும் விஜயீந்திரருக்கு, கால்நடையாகவே பட்டண ப்ரவேசம் செய்யத் தீர்மானித்துப் புறப்பட்டார். வந்த ஜனங்கள் இந்த அதிசயத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். மஹாஸமஸ்தானாதிபத்யம், ஸகல வைபவங்களிருந்தும் குருவின் தரிசனத்திற்கென்று நடந்து செல்லும் இந்த குருபக்தியின் தைரியம் வேறு எந்த யதிகளுக்கு உண்டாயிற்று! இவரல்லவோ உண்மையான குரு ஸார்வபௌமர்! இவரல்லவோ உண்மையான வித்யா சிஷ்யர்! எத்தகையகுருபக்தி, எவ்வளவு வினயம், என்று ஜனங்கள் ஸ்ரீவிஜயீந்திரரைக் கொண்டாடத் தொடங்கினர். வாத்ய கோஷங்களுடனே ஸ்ரீயவர்களின் ஊர்வலம் ஸ்ரீவ்யாஸராஜ குருகளின் மடத்தினருகில் வந்தது. மஹாதேஜஸ்வியும் ப்ழுத்த விருத்தாப்யரான ஸ்ரீவியாஸராஜேந்திரர் விஜயீந்திரரை எதிர் கொள்ள ஓடோடி வந்து கொண்டிருக்கிறார், போர்த்தின சால்வை நழுவி விழுந்தபோதிலும் தெரியவில்லை.

சிஷ்யனைப் பார்க்க அவ்வளவு ஆத்திரம்! தூரத்தி லிருந்தே குருபாதரை விஜயீந்திரர் மலர்ந்த தாமரை போன்ற கண்களினால் பார்த்து மனதிலேயே வணங்கி தானும் ஓடினார். ஓடிவந்து ஸ்ரீவ்யாஸராஜர் விஜயீந்திரரை ஆலிங்கனம் செய்து கொண்டார். விஜயீந்திரர் இவ்வளவு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

நாட்கள் குருவைவிட்டுப் பிரிந்திருந்த பிரிவாற்றாமை மற்றும் இருந்திருந்தாற்போல் தரிசனமானதால், மகிழ்ச்சி! இவ்வாறு உணர்ச்சி மேலிட்ட இரு யதிகளுக்கும் அடுத்தாற்போல் என்ன செய்வது என்று தோன்றாமல் ஸ்ரீவ்யாஸராஜரின் பாதங்களின் மீது தலை வைத்து ஆனந்தக் கண்ணீரினால் குருவின் பாதங்களைக் கழுவினார். விஜயீந்திரரைக் கண்டு பொங்கிவரும் சந்தோஷத்தினால் கண்ணீர் சொரிய மென்மையான கைகளினால் விஜயீந்திரரின் உடம்பைத் தடவிக்கொடுத்து மறுபடியும் மறுபடியும் ஆலிங்கனம் செய்தார், வ்யாஸயதீந்திரர். ஜனங்கள் இந்த குரு சிஷ்யரின் கரைபுரண்டு ஓடும் அன்புப்ரவாஹத்தைக் கண்டு ஆச்சரியத்தினால் மூக்கின் மேல் விரலை வைத்துச் சித்திரப்பதுமைகளைப்போல் நின்றிருக்கின்றனர்.

சற்றுநேரம் கழிந்தது. வ்யாஸராஜர் புன்சிரிப்புடன், "மஹா ஸமஸ்தானாதிபதியான பிறகு, சிஷ்யர் எங்கே நம்மை மறந்துவிடுவாரோ என்றிருந்தோம். இப்பொழுது தாங்கள் அவ்வாறில்லாமல் என்றும் எமது ப்ரிய சிஷ்யராகவே இருக்கின்றீர். எவ்வளவு நாட்கள் ஆயின உம்மைப் பார்த்து! நமது அந்த வாயால் சொல்ல முடியாத துக்கம் இன்று பரிகாரமாயிற்று. வாருங்கள், உள்ளே போகலாம்", என்று வரவேற்றார். விஜயீந்திரர் சிரித்துக் கொண்டே, "அதற்காகவே என்னைப் பரீக்ஷிப்பதற்காகவே விருதாவளிகளனுப்பினீர்களா என்ன? சிஷ்யனைத் தாங்கள் பரீக்ஷிக்க ஆரம்பித்தால் என் கதி என்னவாகும்? பன்மையை உபயோகித்து என்னை ஏன் குருபாதர் கஷ்டப்படுத்துகிறீர்கள்? அதை நான் எவ்வாறு சகிப்பது? தமது அனுக்ரஹமில்லாமலிருந்தால் இன்று நான் ஸமஸ்தானாதிபதியாகி இருந்திருப்பேனா? இந்த வேடிக்கையேன்? என்று சொல்லிச் சிரித்த முகத்துடன் விடையளித்தார்.

"பரீக்ஷை செய்ததென்னவோ, உண்மை. ஆனால் பரீக்ஷையில் (ஸர்வப்ரதம) முதல்வனாகத் தேறிவிட்டாயப்பா, மகனே! உன்னைப்போன்ற உத்தம நடத்தையுள்ள சிஷ்யன் எனக்குக் கிட்டியது எனது புண்ய விசேஷம்! நீ என் சிஷ்யனாயினும் நீயென்றும் மஹாஸமஸ்தானாதிபதி, உண்மை, இரண்டு ஸமஸ்தானங்களிலும் வித்தியாசமில்லை. இவை அண்ணன் தம்பிகளின் மடம். ஆனாலும் உலக நோக்கில் நாம் நடந்து கொள்ள வேண்டாமா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



அதையனுஸரித்து உமக்குத் தகுந்தவாறு வரவேற்பு அளிக்க நாம் முற்பட்டோம். உம்மைக்கண்டு நமக்கு மிக்க மகிழ்ச்சியாகியுள்ளது. ஸ்ரீமூலகோபாலகிருஷ்ணனின் எதிரிலேயே ஸ்ரீமூலராமனுக்கு இன்று பூஜை உபசாரங்கள்" என்று சொல்லி விஜயீந்திரருடனே மடத்திற்கு எழுந்தருளி இருதயதிகளும் ஆஸனத்திலமர்ந்தனர்.

பிறகு வந்துள்ள வித்வான்கள், நகரத்தார்கள், அதிகாரிகள் முதலானோருக்கு விஜயீந்திரரைப் பரிசயம் செய்து வைத்தார், ஸ்ரீவ்யாஸராஜர். "தர்மாபிமானிகளே! விஜயீந்திரரைப் போன்ற வித்வன்மணிகள், உத்தம குணங்களுள்ளயதிகளைத் தரித்த நீங்களே பாக்யசாலிகள். இவரென்னமோ ஸாமான்யரல்லர். இதற்குள்ளேயே நூற்றுக்கணக்கான பண்டிதர்களை ஜயித்து கீர்த்தி அடைந்துள்ளார்''. என்பதாகச் சொல்ல, குருகள் தம்மைப்புகழ்ந்து கொண்டிருப்பதைக் கேட்ட விஜயீந்திரரின் முகம் வெட்கத்தினால் சிவந்தது! வினயத்துடன், "குருபாதரின் மஹானுக்ரஹத்துடன் அது ஸாத்யமாயிற்றே தவிர, அதில் எனது மகத்துவம் எதுவ்மில்லை" என்று விக்ஞாபனம் செய்தார். பிறகு வந்திருந்த ஜனங்கள் ஸ்ரீகளவரிடமிருந்து பலமந்த்ராக்ஷதை பெற்றனர்.

மத்தியானம் இரு ஸ்ரீபாதங்களவர்களும் தேவதார்ச்சன பூஜை ஆரம்பித்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் இந்த குரு சிஷ்யர்களின் பூஜை வைபவத்தைக் கண்டு மகிழ்ந்தனர். எல்லோருக்கும் தீர்த்த ப்ரஸாதமாயிற்று. பிக்ஷையை ஏற்றுக் கொண்டபிறகு தனிமையில் குரு சிஷ்யர்கள் இருவரும் கூடினர். எவ்வளவு நாட்களுக்குப் பிறகு இந்த சந்திப்பு! பரஸ்பரம் விஷயங்கள் பேசிப் பரிமாரிக் கொண்டிருக்கின்றனர். எவ்வளவு பேசினாலும் திருப்தியே இல்லை. தாம் மஹாஸமஸ்தானாதிபத்யத்தை ஏற்றுக் கொண்டு குருவிடம் விடைபெற்றுச் சென்றது முதல் வாதவிவாத வெற்றிக்ள் மற்றும் புது நட்பு மற்ற எல்லா விஷயங்களை ஸ்ரீவ்யாஸ ராஜரிடம் விக்ஞாபித்தார், ஸ்ரீவிஜயீந்திரர். குரு சிஷ்யரிருவரும் அன்பு நிறைந்த பேச்சுகளில் மூழ்கியிருக்கையில் ஸாயங்காலமானதை வாயில்காப்போன் தெரிவித்த் பின்தான் இருவரும் எச்சரிக்கை அடைந்தனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


## 12. "ஆமோத" க்ரந்தத்திற்காக வ்யாஸ முனிவரின் ஆசீர்வாதம்:

குரு வ்யாஸராஜர் ஸ்ரீவிஜயீந்திரருடன் ஸாயங்கால ஆன்ஹிகம் முடித்துக் கொண்டு தீபாராதனையை வெகு விமரிசையாக நிறைவேற்றினார். பிறகு ஸம்ப்ரதாயப்படி கர்நாடக வித்யா ஸிம்மாஸனத்தில் ஸ்ரீசந்த்ரிகாராயரும் திக்விஜய வித்யாஸிம்மாஸனத்தில் ஸ்ரீவிஜயீந்திரரும் அமர்ந்து தர்பார் நடத்தி எல்லோருக்கும் மந்திராக்ஷதையளித்த பிறகு ஸ்ரீவிஜயீந்திரர் ஆஸனத்திலிருந்து எழுந்திருந்து ஸ்ரீசந்த்ரிகாராயருக்கு வணங்கி வெள்ளிப் பெட்டியொன்றை ஸ்ரீவ்யாஸ முனிவரின் கையில் கொடுத்துச் சமர்ப்பித்தார். சந்திரிகாராயர் புன்னகை செய்து, "குரு தக்ஷிணையென்று காணுகிறது, ஒரே ஒரு க்ரந்தத்துடன் அது முடிந்துவிடுமா என்ன?" எனலும், பக்கத்திலே நின்றிருந்த கனகதாஸர்," இல்லை ப்ரபோ, "அத்வைத ஸித்தி"யைக் கண்டனம் செய்து, "ந்யாயாம்ருதலகு ஆமோத"த்தை கொண்டு வந்திருப்பது என்ன ஸாதாரண விஷயமா?" என்றார். புரந்தரதாஸர், "ஸ்ரீவிஜயீந்திரர் தமது சிஷ்யராயிற்றே மஹாப்ரபோ! ஒரே ஒரு க்ரந்தம் மாத்திரமா என்ன? மஹா ஸ்வாமிகளின் ப்ரீதிக்காக அவர் 104 ஸ்வதந்த்ர க்ரந்தங்களையே இயற்றப் போகிறார். இப்பொழுதே தமக்கு அர்ப்பணம் செய்வதற்காக, "சந்த்ரிகோதாஹ்ருத ந்யாயவிவரண"மும் இயற்றப்படுகிறது, என்று சொன்னார். குரு சிஷ்யரிருவரும் புன்னகை செய்தனர். ஜனங்கள் இந்த மஹனீயரான குரு ஒருவர் மனதிலிருப்பதை ஒருவர் அறிந்து பேசிக் கொள்வதைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினர். ஆஹா! அந்தப் பொற்காலத்தைத் துர்பாக்கியர்களான நாம் இனி காணப்போகிறோமா? கலிகாலத்தின் கல்மஷத்தினால் புத்திகெட்டுப்போனவர்களான இன்றைய நாஸ்திகருக்கு என்ன தெரியப்போகிறது? அந்த அபரோக்ஷ க்ஞானிகளின் ஒன்றுசேரும் ஸரஸஸல்லாப மகிமை அந்த இனிமையான நினைவொன்றே நமக்கு மிஞ்சியுள்ள பாக்யம்!

ஸ்ரீசந்த்ரிகாராயர் வெள்ளிப் பேழையினின்று பனை ஓலையிலெழுதப்பட்ட க்ரந்தத்தை வெளியே எடுத்துச் சற்று நேரம் படித்துப் பார்த்தார். விஜயீந்திரரின் க்ரந்தமெழுதும் திறமை, வல்லமை, யுக்தியால் வெல்லும் க்ரமம், விஷயஞானம், இவைகளைக் கண்டு சந்த்ரிகாராயருக்குப் பேச நா எழவில்லை. சந்தோஷம் தொண்டையை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அடைக்கிறது. ஆனந்தத்தினால் கண்ணீர் சொரிந்தது. ஆஸனத்திலிருந்து எழுந்து விஜயீந்திரரை ஆலிங்கனம் செய்து கொண்டு, "இன்று நாம் தன்யனானோம், நமக்கு இனி எந்தப் பயமும் இல்லை. ஸ்ரீமதாசார்யரின் தத்துவத்தை ப்ரசாரம் செய்து வரப்போகும் எல்லாத் தடைகள், பயம் இவைகளைப் பரிகாரம் செய்து ஆசார்யரின் மதம் அமரமாகும்படி செய்யும் தீரரான நீரிருக்கும் பொழுது எந்த ப்ரதிவாதிகளும் (துர்வாதியும்) நமது மதத்தின் மீது கைவைக்கமாட்டான். ந்யாயாம்ருதத்தின் கருத்தை ஸரியாகத் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தும் நமக்கு மிக்கப்ரியமான க்ரந்தமாக உள்ளது.

"ஆமோத" உண்மையாகவே நமக்கு "ஆமோதம்" கொடுத்துள்ளது. ஆமோதத்தினால் ஆமோதிக்காதவர் துர்பாக்யர்தான். மோத தீர்த்தரின் அனுக்கிரஹ வஞ்சிதரென்றே சொல்ல வேண்டும் அவர்களை. இன்று நமக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது. உம்மைப் போன்ற சிஷ்யரைப் பெற்ற நாமே தன்யரானோம். இல்லையா தாஸரே?" என்று புரந்தரதாஸரைக் கேட்கவும் அவர், "ஆம், மஹாப்ரபோ! விஜயீந்திரரைப் போல் சிஷ்யோத்தமர் உண்மையிலேயே வேறு ஒருவருமில்லை. ஸ்ரீகுருபாதரிடம் எத்தனை பேர் பாடம் கற்றிருக்கின்றனர்? ஆனால் விஜயீந்திரரைப் போல் ஒவ்வொரு க்ஷணமும், "குருபாதா: குருபாதா:" என்று தமது க்ரந்தங்களில் வாக்யமாக கௌரவப்படுத்திக் கொண்டு குரு பக்தியை வெளிப்படுத்துபவர் இவரைப் போல் வேறு எவருமில்லையென்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஸ்வாமி, இவரின் குருபக்தி இனிவரும் ஜனங்களுக்குப் பின்பற்றத் தக்கதாகும். குருவிடம் வித்தை கற்று வித்வானாகியிருந்தாலும் அந்த குருவையும் மிஞ்சின மஹா திறமையுள்ள வித்வாம்ஸர் தானென்று சொல்லிக் கொண்டு திரியும் ஜனங்கள் இனிமேல் தோன்றப் போகிறார்கள். யாருடைய அனுக்ரஹத்தினால் தாம் ஒரு மனிதனாகியுள்ளோம் என்பதை மறந்து குருபக்தி இல்லாதவராகி, அது மாத்திரமல்ல, குருவை நிந்தனை செய்பவராகிப் பித்தரைப் போல் திரியும் துர்மதிகளுக்கு ஸன்மார்க்கம் காட்டுவதற்கு நமது விஜயீந்திர குருவின் இந்த க்ரந்தங்கள் உதவுபவைகளாக உள்ளன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


குருவர்யரே! ந்யாம்ருதக்ரந்தம் செய்த வெற்றியை நிருபிக்கத் தாம் இயற்றியுள்ள, "விக்ஷிப்த ஸங்க்ரஹாத்க்வாபி" என்று பத்யத்தில் சொல்லியுள்ள, "அனுக்தகதனாத் க்வாபி" என்பதற்கு விஜயீந்த்ர முனிவர் எவ்வளவு ரஸமாக, சாஸ்த்ரீயமாக, அழகாக வ்யாக்யானம் செய்வதைக் கவனிக்க வேண்டும் ஸ்வாமி! ப்ராசீன ஆசார்யர்களின் கௌரவத்திற்குக் குறைவில்லாமல் தமது அமோகமான ஸாமர்த்தியத்தை எடுத்துக்காட்டித் தனது உணர்ச்சிகளை யெல்லாம் நன்றாக வெளிப்படுத்தியுள்ளார். இல்லையா குருதேவா? ஸ்ரீயவரின் ப்ரதிக்ஞா ச்லோகத்தின் சம்பந்தமாகச் சில பண்டிதர்கள் முணுமுணுக்கின்றனர் என்ற செய்தி கேட்டதே அவருக்கு விஜயீந்திரர் சரியாகப் பாடம் கற்பிப்பது போல உள்ளது. அவருடைய வியாக்யானம்! வருங்காலம் தமது பரம்பரைக்கு விஜயீந்திரர் தலைமை வகிக்கப்போகிறார் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பொழுதே காண்பிக்கிறது. விஜயீந்திரர் இயற்றித் தமக்கு அர்ப்பித்துள்ள இந்த "லக்வாமோத"மே இவ்வளவு பொருள் நிறைந்ததாக இருக்கும்பொழுது, இனி "குர்வாமோத, மத்வமாமோத", முதலியன எவ்வளவு மகத்துவபூர்ண வ்யாக்யானங் களாகலாம். விஜயீந்திரர் அதைச் சீக்கிரம் முடித்துவிட்டால், வித்வத் ப்ரபஞ்சத்திற்குப் பெரிய உபகாரமாக இருக்கும்." என்று சொல்லவும் ஸ்ரீவ்யாஸராஜர் புன்னகையுடன்," உண்மை, தாஸரே, நம் விஜயீந்திரரின் இந்த வ்யாக்யானம் நமது இதயத்தையே எடுத்துக்காட்டுவதைப் போலுள்ளது. "ஆமோத" எல்லாரும் ஏற்றுக் கொள்ளப்படும் க்ரந்தமாவதில் ஸந்தேகமில்லை. நாம் இனி கவலையற்றிருக்கலாம், இல்லையா தாஸரே!" என்று சொல்லவும், தாஸர் "ஆம், மஹாப்ரபோ" என்று ஆமோதித்தார்.

ஸ்ரீவ்யாஸராஜர், "இன்னென்ன; கனகா, க்ருஷ்ண தரிசனம் ஒன்றே பாக்கியுள்ளது, என்று சொல்ல, நாளைக்கு இங்கேயே நம் விஜயீந்திரரின் சந்திப்பு மற்றும் தமக்கர்ப்பித்த "ஆமோத"த்தின் நினைவாக ஸ்ரீவாயுதேவர் ப்ரதிஷ்டை நடக்கட்டும்'' என்றார். எல்லோரும் அதற்குத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பிறகு அன்றைய ஸபையின் கார்ய கலாபங்கள் முடிந்தன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



மறுநாள் ஸகல வைபவத்துடன் இரு ஸ்ரீபாதங்களவர்களும் தனித்தனியாக வாயுதேவரின் ப்ரதிஷ்டா மகோத்ஸவத்தை நிறைவேற்றித் தான தர்மங்கள் செய்து, ஆயிரக்கணக்கான ப்ராம்மண ஸுமங்கலிகளுக்கு பஞ்சபக்ஷபரமான்னத்துடன் போஜனம் செய்வித்தனர். ஊரின் நகரமக்கள், வித்வான்கள் எல்லோரும் இரண்டு ஸ்ரீபாதங்களவரின் மகிமையைக் கொண்டாடினர். மறுநாள் ஸாயங்காலம் ஸகல பரிவாரத்துடன் இரு ஸ்ரீபாதங்களவரும் உடுப்பி யாத்திரைக்குப் புறப்பட்டனர்.

## 13. குருஸேவையில் ஈடுபாடு:-

ஸ்ரீவ்யாஸராஜ விஜயீந்திர குருகளும் உடுப்பி யாத்திரைக்காக வந்ததினால் அவ்விடத்திய பக்தர்களின் கூட்டத்திற்குச் சொல்லொணா ஆனந்தம் உண்டாயிற்று. மத்வ ஸித்தாந்தத்தின் நிகரற்ற திக் கஜங்களென்று சொல்லப்படும் இந்த மஹான்களின் தரிசனத்தினால் ஜனங்கள் புனிதரானார்கள். இரண்டு ஸ்ரீபாதங்களின் வசனாம்ருத பானம் செய்து ஆனந்தத்தால் நிரம்பி இப்பேர்ப்பட்ட மஹாத்மரின் தரிசனம், வந்தனம், உபதேச அனுக்ரஹம் பெற்ற நாமே கிருதார்த்தர்களென்று உணர்ந்து, பாவித்து, பயபக்தியுடன் தங்கள் சேவையைச் செலுத்தி தன்யரானார்கள். அன்றைய தத்வோபதேசத்தை முடித்து இரு ஸ்ரீபாதங்களும், ஏகாந்தத்தில் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது, வாசற்காப்போன் ஒருவன் வந்து, குருமார்களை வணங்கி, "ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் அவர்களுக்கு ஸ்ரீகுரு ஸுரேந்திர தீர்த்தரிடமிருந்து பண்டிதரொருவர் செய்தியை எடுத்துக் கொண்டு வந்து தரிசனத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்" என்று விக்ஞாபனம் செய்தான். ஸ்ரீவிஜயீந்திரர் உடனே அவரை அழைத்து வரும்படி உத்தரவிட்டார். ஸ்ரீஸுரேந்திரரின் பரம ஆப்தரும், உத்தம பண்டிதருமான ஆசார்யரொருவர் வந்து இரு ஸ்ரீபாதங்களவர்களுக்கும் வந்தனம் செலுத்தி, ஸ்ரீஸுரேந்திரரின் ஆக்ஞாபத்திரத்தை ஸ்ரீவிஜயீந்திரரிடம் சமர்ப்பித்தார். குருவர்யரின் கடிதத்தைச் சிரஸின் மீது வைத்து விஜயீந்திரர் வாசித்தார். ஸ்ரீவிஜயீந்திரர் முகம் மலர்ந்தது. கண்களில் நீர்ததும்பியது. ஸ்ரீசந்திரிகாராயர் விஷயமென்னவென்று பண்டிதரை விசாரித்தார். "காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீபாதர் இங்கு வந்த பிறகு பெரிய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்வாமிகளின் தேகநிலை சற்று சரியாக இல்லை. இப்பொழுது பெரிய ஸ்ரீபாதங்களவருக்கு ஒரு மாதமாக தேகாரோக்யம் குறைந்துள்ளது. இப்பொழுது மிகவும் சக்தியற்றவராகி இருக்கிறார். ஸ்ரீஸ்வாமிகளைச் சந்திக்க மிக ஆவலுடன், ஆதங்கத்துடன் இருக்கிறார். எப்பொழுதும் ஸ்ரீயவரின் பெயரையே சொல்லிக் கொண்டிருக்கிறார், நிலைமை நம்பிக்கையூட்டுவதாக இல்லை. ஸ்ரீயவரைத் தானே கண்டு உடனே அழைத்துக் கொண்டு வரவேணுமென்று உத்தரவிட்டுள்ளார்". என்று சொன்னார்.

ஸ்ரீவ்யாஸ மஹாப்ரபு மிக வருத்தத்துடன் பெரிய ஸ்ரீபாதரின் தேஹாரோக்யம் பாதிக்கப்பட்டிருப்பதைக் கேட்டு துக்கமடைந்து, "ஸ்ரீகிருஷ்ண தரிசனத்திற்காக நாங்கள் ஒன்று சேர்ந்து போவதாக நிச்சயித்திருந்தோம். பரமாத்மாவின் இச்சை! இந்த சமயத்தில் ஸ்ரீபெரிய ஸ்வாமிகளின் அருகிலிருந்து அவரது சேவை செய்ய வேண்டியது உமது கடமை. நீங்கள் தாமதம் செய்யாமல் புறப்படத் தயாராகுங்கள்''. என்று விஜயீந்திரருக்குத் தெரிவித்தார். ஸ்ரீவிஜயீந்திரருக்கு மனதிற்கு அதிக துக்கம் உண்டாயிற்று. ஸ்ரீசந்திரிகாராயருடன் ஸ்ரீகிருஷ்ண தரிசனம் செய்ய வேண்டுமென்று, மிக்க உற்சாகத்துடனிருந்த அவருக்குப் பெரிய ஸ்ரீபாதருடைய தேஹஅஸௌக்ய விஷயம் தெரிந்து அந்த உற்சாகம் குறைந்து போயிற்று. ஒருபுறம் கிருஷ்ணதர்சனமாவதில் தடங்கல் ஏற்பட்டதே என்ற வருத்தம் இன்னொரு புறம் பெரிய ஸ்ரீபாதரைப் பற்றிய கவலை, அவரைக் காணவேண்டுமென்ற அவசரம். கடைசியில் குருசேவைதான் முக்யமென்றறிந்து, குரு தரிசனத்திற்காகப் புறப்பட்டார். ஸ்ரீசந்திரிகாராயரை விட்டுப் பிரிய வேண்டுமானால் உயிரே போகிற மாதிரி அவ்வளவு துக்கமுண்டாயிற்று. ஸ்ரீவ்யாஸராஜர் சீக்கிரமாகப் போய். அவ்விடத்திய சமாசாரங்களைப் பற்றித் தெரிவிக்க வேண்டும் என்று ஸ்ரீவிஜயீந்திரர் பொறுப்பை மற்றொரு முறை நினைவு படுத்திச் சொல்ல வேண்டியவைகளெல்லாம் சொல்லி அனுப்பினார்.

குருபாதரின் தரிசனம் செய்ய வேண்டுமென்னும் பேராவலுடன் ஸ்ரீவிஜயீந்திரர் பகல் இரவு என்பதைப் பாராமல் எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு வந்து ஒரு மாதத்தில் காஞ்சிக்கு வந்து சேர்ந்தார். சிஷ்யர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வந்த செய்தி கேட்டு மிக்க மகிழ்ச்சியுடன் இளைப்பாறிக் கொண்டிருந்த ஸ்ரீஸுரேந்திரர் வந்து விஜயீந்திரரை ஆலிங்கனம் செய்து கொண்டார். கண்களில் கண்ணீர் பெருகிற்று. விஜயீந்திரர் குருபாதர் மிக மெலிந்து மிகவும் தளர்ந்து போயிருப்பதைக் கண்டு மிக்க துக்கமடைந்தார். "மறுபடியும் தமது தரிசனம் ஆகுமோ ஆகாதோ என்று மிகவும் கவலையும் கலவரமும் அடைந்தோம். இனி பயம் எதுவுல்லை. மனம் நிம்மதியடைந்தது" என்பதாகச் சொல்லி ஸ்ரீஸுரேந்திரர் சிஷ்யரை வரவேற்றார்.

ஸ்ரீவிஜயீந்திரர் அன்றிலிருந்து, ஸ்ரீஸுரேந்திரருக்கு எந்தவிதமான சிரமமுமில்லாமல் எல்லாக் காரியங்களின் பொறுப்பைத்தானே நிர்வகித்துக் கொண்டு குருபாதரின் பாதசேவை செய்துகொண்டு ஏகாந்தத்தில் (தனிமையில்) குருகளிடமிருந்து அநேக உபதேசங்களைப் பெற்றுக் கொண்டு வந்தார். விஜயீந்திரர் வந்த பிறகு ஸ்ரீஸுரேந்திரரின் தேக நிலைமை குணமடைந்து வந்தது. நாள்தோறும் அவர் சக்திபெற்று வர ஆரம்பித்தார். முகத்தில் ஒளியும் காணவாரம்பித்தது. இரண்டு மூன்று மாதங்களில் முந்தினபடியே பூர்ண திடகாத்திரராகி மிக்க உற்சாகத்துடன் ஸ்வாமி, பூஜை ஆராதனாதிகள் முதலிய எல்லாக் காரியங்களையும் தானே நிர்வகிக்கவாரம்பித்தார். குருபாதர் பூர்ண சுகமடைந்தவரானது விஜயீந்திரருக்கு மிக்க மகிழ்ச்சியை உண்டு பண்ணிற்று. சுமார் நான்கைந்து மாதங்கள் எப்பொழுதும் குருவின் சேவை செய்து விஜயீந்திரர், ஸுரேந்திரரின் ஸம்பூர்ண பரமானுக்ரஹத்திற்கும், வித்வான்களின் கூட்டத்திற்கும், மடத்தின் வளர்ச்சியில் அக்கரை கொண்டவர்கள், சிஷ்யர்கள், முதலியவரின் விசேஷ கௌரவங்களுக்குப் பாத்திரரானார்.

## 14. ஸுரேந்திர தீர்த்தரின் இரண்டாவது தீர்த்த யாத்திரை:

ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்குத் தமது ஜீவிய காலத்தில் முக்கியமான லக்ஷியங்களில் முதலாவது ஸ்ரீமதாசார்யரின் மஹாஸமஸ்தானத்திற்கு மிகமிகத் திறமைசாலியான பட்டத்தின் அதிகாரியாக (வாரிசாக) ஒருவரைச் சம்பாதித்து அவர் மூலமாக மஹா ஸமஸ்தானத்தின் கீர்த்தி சூர்ய சந்திரர்களுள்ள வரை ஸ்திரமாக இருக்கும்படி செய்ய வேண்டுமென்பது. இரண்டாவது குறிக்கோள் என்னவெனில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

மூன்று முறை பாரததேசத்தை பூப்ரதக்ஷணம் செய்து சகல தீர்த்தக்ஷேத்ர யாத்திரை, ஸகல தேவாலயங்களிலுள்ள பரமாத்மனின் தரிசனம் செய்து புனிதராக வேண்டுமென்பது.

ஸ்ரீஹரி வாயு குருகளின் கருணையினால் முதலாவது லக்ஷ்யம் நிறைவேறி ஜகத் பிரஸித்தரான ஸ்ரீவ்யாஸராஜ தீர்த்தரைப் போன்ற பந்துகள், நண்பருமான யதிச்ரேஷ்டரின் தாராள மனப்பான்மையுடன் விஜயீந்திர தீர்த்தரைப் போன்ற மஹா தேஜஸ்வியும், பண்டித உத்தமரும், குருபக்த சிரோமணியுமான சிஷ்யர் கிடைத்தது. ஆஹா! எப்பேர்ப்பட்ட சிஷ்யர் ஸ்ரீவிஜயீந்திரர்! அவருடைய தன்மை எவ்வளவு உயர்ந்தது! 64 கலைகளில் மிகமிக வல்லுனர்! திறமைசாலி, பரவாதி பயங்கரர், அதாவது ப்ரதிவாதிகளின் சிம்மஸ்வப்னம் போன்றவர், க்ரந்தகர்த்தர், உத்தம குணங்களின் இருப்பிடம்! ஸ்ரீமதாசார்யபீட பரம்பரையைப் பெற்ற ஸத்ஸம்ப்ரதாய பாடப்ரவசன பரிபாலன, ப்ரசாரம் இவைகளினால் கட்டுப்பட்டவருமான விஜயீந்திரரைச் சிஷ்யனாக அடைந்து மஹாஸமஸ்தானத்தின் பீடாதிகாரிகளாகச் செய்து க்ருத க்ருத்யராய், மஹா புண்யசாலிகளென்றும், தன்ய ஜீவிகளென்றும் எல்லோராலும் கௌரவிக்கப்பட்டவராயிருந்தவர் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர், இவ்வாறு அவருடைய வாழ்க்கையின் லக்ஷியம் ஒரு முக்கியமான காரிய ஸாதனை செய்துவிட்டார். இன்னும் செய்ய வேண்டியது பாரதத்தின் (பூப்ரதக்ஷணம்), தீர்த்தக்ஷேத்திர யாத்திரை மாத்திரம் உள்ளது. அந்த விருப்பம் ஒருமுறை 10 வருஷங்கள் அவதியில் பாரததேசம் முழுவதிலும் ஸஞ்சாரம் செய்வதன் மூலம் பூர்ணமாகி இருந்தது. இன்னும் இரண்டு முறை யாத்திரை செய்தால் தனது இச்சை பரிபூர்ணமாகிவிடும்.

தேகாரோக்கியமில்லாமல் அந்த ஒரு மாபெரும் விருப்பம் எங்கு பூர்ணமாகாமல் போய்விடுமோ என்ற பயத்துடனிருந்த அவருக்கு ஆரோக்கியம் திருந்தி பூர்ண திடகாத்திரராயிருந்ததால் மறுபடியும் மனதில் ஆசை பிறந்தது. ஸ்ரீஹரிவாயுகளின் அனுக்ரஹத்தினால் இப்பொழுது அந்தப் பலிக்கும் ஸந்தர்ப்பம் கூடி வந்துள்ளது. இப்பொழுதே அதைச் செய்துவிட வேண்டுமென்றும் உறுதி அவர் மனதில் குடிகொண்டது. தினந்தோறும் அதே யோசனையிலிருந்த ஸுரேந்திரர் தனது பேரவாவை ஒரு நாள் தனிமையிலிருக்கும் போது தெரிவித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



விஜயீந்திரர் குருபாதரின் மஹத்தான உத்தேசத்தையறிந்து மகிழ்ச்சியடைந்தார். குருவென்னமோ உறுதியுடனும் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் இருக்கிறார். ஆயினும் பாரதத்தின் தீர்த்தக்ஷேத்திர யாத்திரையென்றால் ஸாமான்ய விஷயமல்ல. நான்கைந்து வருஷங்களாவது வேண்டும். அவ்வளவு நாட்கள் குருவைவிட்டு விட்டு இருப்பது எப்படி?தானும் குருகளுடன் பூப்ரதக்ஷிணத்திற்குப் புறப்படலாமென்றால் தக்ஷிணபாரதத்தில் இருந்து கொண்டு செய்ய வேண்டிய காரியங்கள் அநேகவிதமாயுள்ளன. ஸ்ரீமதாசார்யரின் ஸித்தாந்தம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஸித்தாந்தத்தின் மீது பரவாதிகள் சுமத்தும் தோஷா ரோபணங்களை முறியடித்து ஸகல இடங்களிலும் ஸித்தாந்தத்தின் தத்துவங்களை ப்ரசாரம் செய்ய வேண்டியுள்ளது. கிரந்தங்கள் இயற்ற வேண்டியது கட்டாயமாக உள்ளது. இந்த எல்லா விஷயங்களையும் விஜயீந்திரர் யோசித்து குருவிடம் தமது மனத்திலுள்ள அபிப்ராயத்தை விக்ஞாபித்தார்.

சிஷ்யர் சொன்னவைகளை ஜாக்கிரதையாகக் கேட்டு யோசித்து, ஸுரேந்திரர், "உண்மை, நீங்கள் சொன்னபடி நீங்கள் இங்கேயே இருக்க வேண்டியுள்ளது. இதற்காக நீங்கள் கவலைப்படக்காரணமில்லை. நம்மிருவரின் மனோபீஷ்டம் பூர்த்தியடைவதற்குத் தேவையான ஸமயமிருக்கிறது. நீங்கள் இங்கிருந்து கடமையை நிறைவேற்றுவதில் கண்ணாயிருக்கலாம். நாம் மற்ற பரிவார சிஷ்யர்களுடன் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்படுகிறோம். நாம் வரும் வரையில் மஹாஸமஸ்தானத்தின் பொறுப்பை நீங்களே ஏற்க வேண்டும். நாம் முடிந்தவரை சீக்கிரமாகவே வருகிறோம்" என்று சொன்னார்.

விஜயீந்திரர் குருகளின் உறுதியான முடிவைக் கண்டு குரு ஆக்ஞையைச் சிரஸில் ஏற்றுக் கொண்டார். நான்கைந்து தினங்களில் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் விஜயீந்திரருக்கு மஹா ஸமஸ்தானத்தின் பொறுப்பைத் தந்து சுபமுகூர்த்தத்தில் பரிவாரத்துடன் காஞ்சிபுரத்திலிருந்து தமது இரண்டாவது பூப்ரதக்ஷிணத்தைக் கைகொண்டார். விஜயீந்திரரை ஆசீர்வதித்து திக்விஜயம் செய்தார்.

## 15. வ்யாஸராஜர் வைகுண்ட ப்ராப்தி:

ஸ்ரீவிஜயீந்திரர் காஞ்சியிலிருந்து ஸஞ்சாரத்திற்குப் புறப்பட்டுத் திருப்பதிக்குச் சென்று ஸ்ரீநிவாஸப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பெருமாளைத் தரிசனம் செய்து பத்மஸரோவரத்தில் முகாம் போட்டுள்ளார். திருப்பதி மற்றும் பத்மஸரோவரத்தின் ஸ்ரீவைஷ்ணவர்கள், ஸ்மார்த்தர்கள், மாத்வர்கள் முதலானோர் ஸ்ரீவிஜய்ந்திரரின் பாண்டித்யம், தபச்சக்தி, மகிமைகளினால் சந்தோஷமடைந்து குருவர்யருக்கு வெகுவாகக் கௌரவமளித்தனர். பத்து நாட்களாக பத்மஸரோவரத்தில் முகாம் போட்டிருந்த ஸ்ரீயவர் ஒரு நாள் மத்யானம் சிஷ்ய மண்டலிக்கு மீமாம்ஸா சாஸ்திர பாடம் சொல்லிக் கொண்டு உட்கார்ந்திருந்தபொழுது பண்டிதரொருவர் வந்து வணங்கினார். ஸ்ரீயவர் பார்க்கிறார். சந்த்ரிகாராயரின் சிஷ்யர்களில் ஒருவரான வாஸுதேவாசார்யரே வந்திருக்கிறார். பார்த்து ஆனந்தமடைந்தார். க்ஷேமசமாசாரம் விசாரித்த பிறகு வாஸுதேவாசார்யர் விக்ஞாபித்தார்.

"தாம் இங்கு வந்த பிறகு ஸ்ரீயவர் ஸ்ரீகிருஷ்ண தரிசனத்திற்காக அங்கிருந்து புறப்பட்டு உடுப்பிக்கு எழுந்தருளினார். ஸ்வாமி எட்டு பத்து தினங்கள் ரஜத பீடத்தில் பெரிய உற்சவம் நடைபெற்றது. ஒவ்வொரு நொடியிலும் தம்மை ஸ்ரீபாதர் நினைத்துக் கொண்டார். பிறகு மறுபடியும் ஸஞ்சாரக்ரமத்தில் புறப்பட்டு விஜயநகரத்திற்கு திக்விஜயம் செய்தார். சில நாட்களாக ஸ்ரீபாதரின் தேகநிலைமை சரியாக இல்லை. தம்மை மற்றொருமுறை பார்க்கப் பேராவல் தெரிவித்துள்ளார். தம்மை அழைத்து வரும்படி தெரிவித்துள்ளார். அதற்காக என்னை அனுப்பியுள்ளார். அவசியம் தயவு செய்ய வேண்டும்," என்று விவரிக்கவும் ஸ்ரீவிஜயீந்த்திரர் குருகளின் ஆரோக்யத்திற்காகக் கவலையடைந்து மறுநாளே புறப்படுவதாக உறுதி செய்தார்.

ஸ்ரீவிஜயீந்திரர் ஸமஸ்தான சகிதம் விஜயநகரத்திற்கு எழுந்தருளினார். அப்பொழுது அச்யுதராயரின் ஆட்சிகாலம். அரசன் அச்யுதராயர், மருமகன் ராமராயரும் சிறப்பாக நல்ல மரியாதையுடன் ஸ்ரீகளை வரவேற்றுபசரித்தனர். ஸ்ரீசந்திரிகாராயரைத் தரிசித்தார் விஜயீந்திரர். குரு சிஷ்யரிருவரும் மிக்க மகிழ்ச்சியுடன் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டனர். ஸ்ரீவிஜயீந்திரர் பகலும் இரவும் இடைவிடாது ஸ்ரீவ்யாஸராஜருக்குச் சேவை செய்து ஸ்ரீசந்திரிகாராயரிடமிருந்து அநேக வேதாந்த விஷயங்களை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


உபதேசம் பெற்றார். வ்யாஸ முனிகள் விஜயீந்திரருக்கு த்வைத ஸித்தாந்தப்ரசாரம், வித்யா பீடஸ்தாபனம், பரவாதி விஜயம், கிரந்தமியற்றுதல், முதலான கடமைகளைப் போதித்து ஆசீர்வதித்தார். பால்குண க்ருஷ்ண சதுர்த்தியன்று சந்திரிகாராயர் தமது சிஷ்யரான ஸ்ரீநிவாஸ தீர்த்தருக்கு 'மஹா ஸமஸ்தானத்தை ஒப்புவித்துப் பேசிக்கொண்டிருக்கும் போதே நாராயண த்யானத்தில் ஈடுபட்டார். வைதிக ப்ரபஞ்சத்தின் பாக்ய சூரியன் அஸ்தமித்தான். மத்வ மதத்தின் கீர்த்தி கலசமே கீழே விழுந்தது. ஸ்ரீபுரந்தர தாஸராயர் கண்ணீர் விட்டுக் கொண்டே பாடினார், "சித்தை ஸித வ்யாஸராய" என்று. ஸ்ரீவிஜயீந்திரருக்கான துக்கம் வர்ணிக்க முடியாதது. கன்னட நாட்டரசன் குருகளின் இழப்பினால் கண்ணீர் விட்டழுதான். விஜயநகர ராஜதானியே துக்கத்தில் மூழ்கிக் கிடந்தது. விஜயீந்திரர் துக்கத்தையடக்கி, ஸ்ரீசந்திரிகாராயரின் பீடத்திற்கு வந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸ தீர்த்தருக்குப் பக்கபலமாக நின்று ப்ருந்தாவன ப்ரதிஷ்டை, மஹா ஸமாராதனை முதலானவைகளைச் சாங்கோபாங்கமாய் நிறைவேற்றி உதவியாயிருந்து அதை விமரிசையாக நிறைவேற்றினார்.

## 16. க்ரந்தமியற்றுதல், ஸஞ்சாரம் - ஸுரேந்திரரின் வருகை:

ஸ்ரீவ்யாஸகுருவர்யர் மறைந்த பின்னர் விஜயீந்திர தீர்த்தருக்கு ஜகத்தே சூன்யமாகக் காண ஆரம்பித்தது. வாழ்க்கையே ஸாரமற்றதானது. உற்சாகமே குன்றிவிட்டது. எந்த மஹானுபாவரின் மாபெரும் சக்தி விஜயீந்திரரை மஹானாகச் செய்து, அவருக்கு ஒரு தூண்டுகோலாக இருந்து நிகரற்ற காரியங்களை அவரால் செய்வித்ததோ, உதவி, போக்ஷணை, அன்பு இவைகளால் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்திருந்தாரோ, எந்தத்தபோ மூர்த்திகளின் புனிதமான கையினால் பரமஹம்ஸ ஆச்ரமம் பெற்று (ஸந்யாஸாச்ரமம்) ஸகல கலைகளையும் கற்று சிஷ்யமண்டலியில் முதலிடத்தைப் பெற்றாரோ, மற்றும் யாரின் அனுக்ரஹத்தினால் ஸர்வக்ஞ ஸமஸ்தானத்திற்கு ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் சிஷ்யராகி பீடாதி பதிகளாயிருக்கிறாரோ, ஸகலத்திற்கும் ஆதாரஸ்தம்பமாக இருந்தாரோ, அப்பேர்ப்பட்ட மஹா மஹிமையுள்ளவரான ஸ்ரீவ்யாஸராஜ குருஸார்வ பௌமரின் மறைவினால் விஜயீந்திரருக்கு எவ்வளவு துக்கமாயிருக்க வேண்டும்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

அவரது மனதின் மீது எப்படிப்பட்ட இடி விழுந்திருக்க வேண்டும் என்பதை ஊகிக்கத்தான் முடியுமே தவிர வர்ணிக்கவே முடியாது.

ஸ்வயம் துக்கத்தில் மூழ்கியிருந்த போதிலும், அதை அடக்கி ஸ்ரீநிவாஸ தீர்த்தருக்கு ஆறுதல் சொல்லி, அவருக்குப் பக்கபலமாக இருந்து கொண்டு மஹாஸமஸ்தானத்தின் காரியங்களின் பொறுப்பு சுமுகமாக நடந்து, ஒரு சகஜ நிலைமை வருமாறு செய்து ஸ்ரீவிஜயீந்திரர் விஜயநகரத்தை விட்டுப் ப்ரயாணத்தை மேற்கொள்ள நினைத்தார்.

கர்நாடக சக்ரவர்த்தி அச்யுத் தேவராயர், மஹா மந்திரி, ஸாம்ராஜ்ய நிர்வாகியான, மருமகனுமான ராமராயர் இவர்கள் விஜயீந்திரரை ராஜதானியில் இருந்து கொண்டு ஸாம்ராஜ்யத்திற்கு நன்மையையும் மேன்மையையும் தேடித்தர வேண்டும் என்பதாக வேண்டிக் கொண்டனர். ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்ரீ வ்யாஸராஜ குரு ஸார்வ பௌமரின் பட்ட சிஷ்யரான ஸ்ரீநிவாஸ தீர்த்தர் அந்த மகத்தான காரியத்தை நிர்வகிக்கும் திறமையுடையவரென்றும், ஸ்ரீகுருபாதர் தமக்கு அளித்திருக்கும் பொறுப்பை நிர்வகிக்க வேண்டியிருப் பதாலும், தாம் புறப்படுவது தவிர்க்க முடியாததென்று சொல்லி, அவரை ஒப்புவித்தார். வித்யாநகரத்திற்கு அடிக்கடி வந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று ப்ரார்த்தனை செய்த அச்யுத தேவராயர் மற்றும் ராமராயருக்கும் "அவ்வாறே ஆகட்டும்", என்று சொல்லி ஸ்ரீநிவாஸ தீர்த்தரை ஆலிங்கனம் செய்து விடைபெற்று வருத்தமான மனதுடன் ப்ரயாணத்தைத் தொடர்ந்தார்.

விஜயநகரத்திலிருந்து புறப்பட்ட ஸ்ரீபாதங்களவர் ஸஞ்சாரக் கிரமத்தில் துங்கபத்ரா தீரத்திலுள்ள மந்த்ராலயம் வந்து சேர்ந்தார். ஸ்ரீமந்த்ராலயம் விஜயநகர அரசரினால் முன்பு ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்குத் தானமாகக் கிடைத்திருந்தது. அங்கு வெகுகாலம் ஸ்ரீவிபுதேந்திரர் தபஸ்ஸிலிருந்தாரென்னும் விஷயம் ஸ்ரீஸுரேந்திர குருவர்யரால் அறிந்திருந்த விஜயீந்திரர் அங்கு சிலகாலம் தாமும் தங்க வேண்டுமென்று யோசித்தார். குரு ஸுரேந்திரர் பாரத பூப்ரதக்ஷிணையில் ஈடுபட்டிருந்தது, ஸ்ரீவ்யாஸராயர் பரந்தாமம் அடைந்துவிட்டதாலும் மனுஷ்யனுக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



இயற்கையாக ஏற்படும் மனவேதனை அடைந்து விஜயீந்திரருக்கு மந்த்ராலயம் ஏதோ ஒருவித அமைதியைக் கொடுத்தது. அவர் சில காலம் அங்கு தங்கியிருந்து தபஸ் செய்து ஸ்ரீமதாசார்யரின் "தசப்ரகரணங்களு"க்கு விளக்க உரை எழுதும் காரியத்தைத் தொடங்கினார். "தசப்ரகரண" டிப்பணிகளை அங்கு முடித்தார். இதனால் ஸ்ரீயவர்களில் புதிய சைதன்யம் (சக்தி) உண்டாகி ஸ்ரீவ்யாஸ முனிகளின் ஆக்ஞையை நிறைவேற்ற ஒரு உற்சாகம் ஏற்பட்டதென்று சொல்லலாம்.

ஸ்ரீயவர் மந்த்ராலயத்திலிருந்து புறப்பட்டு ஸஞ்சாரக்ரமத்தில் ஸ்ரீவ்யாஸ ஸமுத்திரத்திற்கு வந்து அங்கு சில காலம் வாஸம் செய்து விட்டு, அங்கும் சில க்ரந்தங்களை இயற்றினார்.

சில மாதங்களான பிறகு வ்யாஸ ஸமுத்திரத்திலிருந்து ஸஞ்சாரத்திற்குப் புறப்பட்டு ஸ்ரீயவர் தமது பூர்வீகரான ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தரின் சொந்த இடமான நஞ்சன்கூடிற்கு எழுந்தருளி அங்கு சிலகாலம் தங்கியிருந்து மைசூர் ராஜ்யத்தின் அரசனான மஹாராஜனால் கௌரவிக்கப் பட்டு, அங்கிருந்து ஸத்யமங்கலம் மார்க்கமாக தென் நாட்டிற்கு விஜயம் செய்து ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதரின் தரிசனத்தினால் மகிழ்ச்சியடைந்த ஸ்ரீகளவர் வெகுகாலம் அங்கு வாஸம் செய்தார். அங்கு அநேக வாதிகளுடன் பிரஸங்கம் நடைபெற்றது. ஸ்ரீகளவர் தமது பாண்டித்யத்தின் விளைவாக அவர்யாவரையும் ஜயித்ததினால் அவரது கீர்த்தி எல்லா இடங்களிலும் பரவிற்று.

ஸ்ரீகளவரின் வித்யா-தபஸ்ஸு, வாதம் செய்யும் திறமை, ஆகிய மகிமைகளைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற மதுரையின் அரசன் விஸ்வநாத நாயக்கர் (விஜயநகரத்தின் பிரதிநிதி) ஸ்ரீயவர்களை மதுரைக்கு வரவழைத்தான். அங்கு அரசனின் ஆஸ்தான வித்வான்களான வாதிகளை வென்ற விஜயீந்திரருக்கு மதுரை மாநகர அரசன் சிறப்பாக கௌரவம் செய்து பூமிகளைத் தானமாகக் கொடுத்தான்.

மதுரையில் விஜயீந்திரர் முகாம் போட்டிருந்த சமயத்திலேயே க்ஷேத்ராடனத்திற்காக யாத்திரையைக் கைக்கொண்டிருந்த ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் தமது

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இரண்டாவது பாரத பூப்ரதக்ஷிணத்தை முடித்துக் கொண்டு மதுரைக்குத் திக்விஜயம் செய்தார். அநேக வருடங்களாகப் பிரிந்திருந்த குரு-சிஷ்யர்களின் சந்திப்பினால் ஸ்ரீயவர்களுக்கு உண்டான மகிழ்ச்சி அபாரமானதும் வர்ணிக்க முடியாததுமானது. அது அனுபவித்தவருக்கே தெரிய முடியும்! ஸ்ரீஸுரேந்திரரின் மகிமையைத் தெரிந்திருந்த மதுரையின் அரசன் முன்பு ஸ்ரீஸுரேந்திரரைப் பலமுறை கௌரவப்படுத்தியிருந்தான். இப்பொழுது குரு சிஷ்யரிருவரையும் ஒரே சமயத்தில் சேவிக்கும் பாக்யம் கிடைத்ததற்கு அரசன் தானே பாக்கியவான் என்று பாவித்தான். குரு-சிஷ்யர் சில காலம் ராஜனின் விருந்தினராக இருந்து தங்களது உபதேசம் ஆசீர்வாதம் இவைகளினால் அனுக்ரஹித்தனர்.

ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் வருகையினால் விஜயீந்திரருக்கு உற்சாகம் அதிகரித்து அவரில் ஒரு புதிய சக்தி தோன்றிற்று. வாதிகளை வெல்லும் உற்சாகம் வலுத்தது. த்வைத ஸித்தாந்த ப்ரசாரம்-வாதி திக்விஜயத்திற்காகத் தஞ்சாவூருக்கு ப்ரயாணம் செய்ய வேண்டுமென்று தமது அபிலாஷையை குருவிடம் ப்ரார்த்தனை செய்து குரு ஸுரேந்திரருடன் ஸ்ரீபாதங்கள் தஞ்சாவூர் ராஜ்யத்திற்குத் திக்விஜயம் செய்தார்.

## 17. திக்விஜய யாத்திரை:

ஸ்ரீவிஜயீந்திரர் சென்றவிடங்களிலெல்லாம் ஜனங்கள் மரியாதையுடன் கௌரவித்து ஸ்ரீயவர்களின் தத்வோபதேசத்தினால் புனிதராகி வந்தனர். சிஷ்யனின் வைபவம், கீர்த்தியைக் கண்டு மனம் பூரித்தார் ஸ்ரீஸுரேந்திரர். கர்நாடக ஸாம்ராஜ்யத்தின் மண்டலாதிபதியான தஞ்சாவூர் அரசன் செவப்ப நாயக்கர் (சவ்வப்ப பூபதி) விஜயநகரதிபதியின் குருகளான ஸ்ரீவ்யாஸ முனிகள் ஸ்ரீவிஜயீந்திரரை ஸுரேந்திரருக்கு ஒப்புவித்த விஷயம், வேதாந்த ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம், வாதிகளை வென்ற விஷயம் முதலியவைகளை அறிந்து மகிழ்ச்சியடைந்திருந்தான். திடீரென்று ஸ்ரீஸுரேந்திரர் சிஷ்யருடன் தனது ராஜ்யத்தில் ஸஞ்சாரம் செய்து கொண்டிருப்பதைக் கேட்டு குரு-சிஷ்யர்களைத் தலைநகரத்திற்கு அழைத்து விக்ஞாபன பத்திரம் எழுதி புரோஹிதருடன் தெரிவித்தான். புரோஹிதர் தங்கியிருந்த முகாமிற்கு வந்து பத்திரத்தையும் காணிக்கையும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சமர்ப்பித்தார். ஸ்ரீயவர்கள் அரசனின் அன்பு பக்திக்கு மகிழ்ச்சி தெரிவித்து வருவதாகச் சம்மதம் தெரிவித்து ஸ்ரீமுகத்தை அனுக்ரஹித்து புரோஹிதரை அனுப்பினார்.

தஞ்சாவூரின் அரசன் நகரத்தை அலங்கரிக்க உத்தரவிட்டான். பற்பல விசித்திரமான முறையில் நகரை அலங்கரித்துள்ளனர். தோரணங்கள் எங்கு பார்த்தாலும் தொங்குகின்றன. அவைகள் ஊஞ்சலாடுவது ஸ்ரீயவர்களை வரவேற்பதைப் போல் காணப்பட்டது. அரசன் குருமார்களை வரவேற்றான். வானைப் பிளக்கும் ஜனங்களின் ஜயகோஷம் அன்று மஹாராஜா குருவர்யர்களுக்கு வரவேற்று உபசரித்து பிக்ஷை செய்து வைத்தான். தினந்தோறும் ஸ்வாமி பூஜை, பாடப்ரவசனங்களினால் நகர ஜனங்கள் புனிதராய் ஸ்ரீகளவர்களின் நிகரற்ற பாண்டித்யத்தினால் ஆனந்த பரவசராயினர். ஸ்ரீயவர்கள் தஞ்சாவூருக்கு விஜயம் செய்ததையறிந்து கும்பகோணத்தின் ப்ராம்மண சமூகத்திற்கு எல்லையில்லா மகிழ்ச்சி உண்டாயிற்று. அதற்குக் காரணமில்லாமலில்லை.

கும்பகோணத்தில் பத்து இருபது வருஷங்களாக மகா ப்ரபலமான ஸந்நியாஸி ஒருவர் தமது பாண்டித்யம், மந்திர சக்திகளின் விளைவாகத் தேவாலயங்களெல்லாவற்றிற்கும் தானே அதிபதியாகி ப்ராம்மணரெல்லோரையும் சைவர்களாக்கிக் கொண்டிருந்தார். அதைத் தடுக்கும் திறமை அவ்வூரிலுள்ளவருக்கு இருக்கவில்லை. சைவ ஸந்நியாஸிகளுடன் வாதம் செய்து அவரை ஜயித்தால் தான் அது முடியும் என்ற நிலை. ஸந்யாஸிகளின் எதிரில் நின்று வாதம் செய்து வெற்றி காணமுடியாது, அநேகர் சைவர்களாக வேண்டியதாயிற்று. அந்தக் காலத்து நியமம் அவ்வாறிருந்தது. வல்லமை பொருந்திய அந்த ஸந்யாஸிகளின் எதிரில் நிற்கும் தகுதியில்லாமல் அவ்வூரின் ஜனங்கள் மிகவும் நொந்து போயிருந்தனர். இப்பேர்ப்பட்ட சமயத்தில் ஸ்ரீவிஜயீந்திரர் வருகையால் ஜனங்களுக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் ஏற்பட்டதென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஸ்ரீவிஜயீந்திரரின் நிகரற்ற திறமை கேள்விப்பட்டுள்ள அந்த ஜனங்களுக்கு ஸ்ரீகளவரை கும்பகோணத்திற்குக் வரவழைக்க வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டது. ஆகம ப்ரமாணங்களைப் பின்பற்றும் நகரத்தினருக்குக் கும்பகோணம் சைவக்ஷேத்திரமாகிக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கொண்டிருப்பதைப் பார்த்துப் பார்த்து மனம் பதறிக்கொண்டிருந்தது. கும்பகோணத்திலுள்ள தார்மிகர்கள் கூட்டம் கூடி தங்கள் வருத்தத்தை ஸ்ரீவிஜயீந்திரரிடம் விண்ணப்பித்து வைதிக தர்மத்தைக் காப்பாற்றுவதற்காகக் கும்பகோணத்திற்கு அவரை வரவழைப்பதென்று தீர்மானித்தனர். புறப்பட்டது தார்மிக நியோக கோஷ்டி.

ஸ்ரீவிஜயீந்திரரின் தரிசனமாயிற்து. கண்ணீர் மல்கத் தங்களது அவல நிலையைத் தெரிவித்துக் கொண்டனர். ஸ்ரீயவர்களின் பாதத்தைப் பிடித்து "அபயம்" வேண்டிப் பிரார்த்தித்தனர். ஸ்ரீயவர்கள் ஏனோ பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தார். முகம் கம்பீரமாயிற்று. ஸ்ரீஸுரேந்திரர் சிஷ்யனின் முகபாவனையைக் கண்டு சிரித்த முகத்துடன், "புத்ர, கவலை எதற்காக? ஜயலக்ஷ்மி உன்னிடம் வசிக்கிறாள். அபயம் கேட்டவர்களின் மனோ பீஷ்டத்தை நிறைவேற்று, ஸ்ரீமூலராமன் திருப்தியடைவான்" என்று சொல்லிக் கும்பகோணத்திற்கு வருவதாக உறுதியளித்தார். ஜன ப்ரதிநிதிகளுக்குண்டான மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. ஸ்ரீகளவரின் வாத்ஸல்யத்திற்கும் கருணைக்கும் நன்றி தெரிவித்து விடைபெற்றுச் சென்றனர்.

விஜயீந்திரருக்குக் கும்பகோண நகர ஜனங்கள் விக்ஞாபனம் செய்து கொண்ட விஷயம் கேட்டது முதல் மனதிற்கு அதிக துக்கம் உண்டாயிற்று. ஸ்ரீசந்திரிகாராயரின் உபதேசம் நினைவிற்கு வந்தது. குருபாதரின் ஆக்ஞையை நிறைவேற்றும் வாய்ப்பு தானாக ஏற்பட்டுள்ளது. வைதிக மதம் நிலைநாட்ட வேண்டும். அந்த மஹா காரியத்தை நிறைவேற்றும் பொறுப்பு தன் மீது விழுந்துள்ளது. ஜனங்களுக்கு நம்பிக்கையளித்தாயிற்று. ஸ்ரீஹரி வாயு குருகளே அதை நிறைவேற்ற உதவியளிக்கப் பக்கபலமாக நின்று கீர்த்தியைப் பெற்றுத் தந்தருள வேண்டுமெனச் சிந்தித்தார் ஸ்ரீவிஜயீந்திரர்.

## 18. தேவியின் அபயம்:

இரவில் தீபாராதனையான பிறகு குருஸேவை செய்து விட்டுத் தனிமையில் உட்கார்ந்து த்யான நிஷ்டையிலமர்ந்துள்ளார். மனதில் ஸ்ரீஹரியின் உருவம் காணப்பெற்றது. கையோடு ஸ்ரீமதாசார்யரின் தரிசனமும் ஆயிற்று. ஸ்ரீசந்திரிகாராயர் தம்மைப் பார்த்துப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


புன்னகையுடன் ஆசிர்வதித்தாற்போலாயிற்று. அதே போல் இருந்தாற்போல் இதயமண்டலத்தில் ஒரு மின்னல் மின்னிற்று. மங்களம் அருளும் ஸாத்வீகமான தேஜோமயமான உருவம் ஒன்றுக் கண்ணிற்குத் தெரிந்தது. பார்த்துக் கொண்டே இருக்கிறார் விஜயீந்திரர். விசித்திரமான ஒளி வீசுகிறது, திவ்யமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தெய்வீக அழகுடைய மேனியுடன் தேவி ஒருவள் சிம்மவாஹனத்திலமர்ந்து, திரிசூலம் ஏந்திய கையுடன், கண்ணுக்கெதிரே தென்பட்டாள். விஜயீந்திரர் மனதில் யோசித்துப் பார்த்தார். அவள் யாராக இருக்கலாம் என்று நிகரற்ற ஒளியுடன் விளங்கும் நீலமேக காந்தியினால் சோபித்துக் கொண்டிருக்கும் அந்த தேவியின் முகம் சந்திரன் போல சாந்தமாக உள்ளது. அவளது புன்சிரிப்பு நிலவை நிந்திக்கின்றது. அப்படியிருந்தவாறே வணங்கினார் தேவியை. கேட்டார், "தாயே, நீயாரம்மா? என்று. தேவி புன்முறுவலுடன் பதிலளித்தாள்", புத்ரனே, யதிராஜனே, என்னை மங்களாம்பிகையென்று அறிவாயாக. எனது இதய தெய்வத்தின் (பரம சிவனின்) ஸ்வாமியையும் (விஷ்ணு பரமாத்மா) எனது ஸௌபாக்யத்தை விருத்தி செய்பவனான (விஷ்ணு)வைப் பூஜிக்கும் பரம பவித்ர ஆத்மாவான உன்னை ஆசிர்வதிக்க வந்துள்ளேன். குழந்தாய்! கும்பகோணத்திற்குப் போ, உனக்கு நாம் அபயமளித்துள்ளோம். யதிராஜா! நீ வெல்லத்தகாதவனாகி வைதிகமதத்தை நிலை நாட்டுவாயாக. நான் உனக்குப் பக்கபலமாக நின்று, உன்னை ரக்ஷிக்கிறேன். புத்திரனே! சிவ ஸந்யாஸியானவன் இந்திர ஜாலவித்தையில் வல்லவன். வாதத்தில் முதல் தரமானவன். அவனுக்கு எதிரில் ப்ராம்மண சமூகம் தலைதூக்கி நிற்க முடியவில்லை, யதீசா! உன்னைத் தவிர அவனை வெல்லுவதற்கு யாருமில்லையப்பா! மகனே, இதோ இந்த வெற்றி மாலையை ஏற்றுக் கொள்வாய்'' என்று தேவி தனது கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த சம்பக மாலையை விஜயீந்திரரின் கழுத்தில் போட்டு ஆசிர்வதித்தாள். அவ்வளவு தான், அந்த தெய்வீக உருவம் கண்மறைவாயிற்று.

விஜயீந்திரருக்கு மயிர்க் கூச்சலுண்டாயிற்று. கண்ணைத் திறந்தார். யாரும் காணோம். தன் கழுத்தைப் பார்த்துக் கொண்டார், பவித்ரமான சம்பகமாலை கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. ஆச்சரியமுண்டாயிற்று. தொண்டை யடைத்தது. ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பக்தியினால் மெய்சிலிர்த்தது. ஆஹா! என்னே கருணை! தேவிக்கு என்மீது! நானே பாக்யசாலி என்று பக்தியுடன் மனதினில் வணங்கினார். இந்த அபூர்வமான சம்பவத்தை குருவிடம் விக்ஞாபிக்க வேண்டுமென்று மனம் துடிக்கிறது. ஓடி வந்தார், குருவின் ஓய்வெடுக்கும் அறைக்கு! குரு ஸ்ரீஸுரேந்திரர் மான் தோலின் மீது அமர்ந்துள்ளார். விஜயீந்திரரைப் பார்த்து, "தேவியின் பரமானுக்ரஹத்தைத் தெரிவிக்கவா வந்தாய்? உனக்கு வெற்றி மாலை அளித்து ஆசீர்வதித்ததை நாமும் கண்டோம். அப்பா! இனி ஏன் கவலை? நீ புண்யசாலி. தேவியின் தரிசனம் பெற்றாய், கும்பகோணத்திற்குப் போய் வெற்றிவாகை சூடிவா", என்று அனுமதி கொடுத்தருளினார். குருசிஷ்யரிருவரும் அன்றிரவு இந்த விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே கழித்தனர். அருணோதயமாயிற்று. கும்பகோணத்திற்கு வருவதாக பாருபத்திதாரருடன் அவ்வூரின் ஜனங்களுக்குச் சொல்லி யனுப்பினார்.

## 19. கும்பகோணத்திற்குப் பிரயாணம் :-

இன்று கும்பகோணத்தில் தார்மிக மக்களுக்கு எங்குங்கண்டிராத ஆர்வம், உற்சாகம், விஜயீந்திரரை விமரிசையுடன் வரவேற்க எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றன. தெருத்தெருவாய் அலங்காரம் செய்துள்ளனர். ஸ்ரீவிஜயீந்திரரின் வருகை விஷயத்தைப் பற்றி ஆங்காங்கே மக்கள் ஒருவருக்கொருவர் ரகசியமாகக் காதோடு காதாகப் பேசிக் கொள்ளுகின்றனர். எங்கு பார்த்தாலும் ஒரே பரபரப்பு. ஜனங்களின் முகங்களில் ஏதோ வெற்றிக்குறி. இந்தக் கெடுபிடியில் ஸ்ரீயவர்கள் வரும் விஷயத்தைக் கேட்டு, சைவ ஸந்நியாஸியின் கும்பல் தம் குருவை ஜயிக்கவல்ல அரசன் எவனிருக்கின்றான் என கர்வத்தினால் ஜனங்களைப் பார்த்துப் பரிகசித்து சிரிக்கின்றனர். சைவ ஸந்நியாஸிகளுக்கும் இவ்விஷயம் தெரிந்து அவர் தமது வித்தையின் கர்வம் மற்றும் மந்திர சக்தியின் பெருமையினால் மதம் கொண்டு, "வரட்டும், பார்த்துவிடுவோம் ஒருகை! அவரையே ஜயித்து சைவராக்கிவிடுவோம்!" என்று தமது சிஷ்யர்களின் முன் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

இங்கு விஜயீந்திரர் குருகளின் ஆக்ஞையும் ஆசீர்வாதத்தையும் பெற்று சிறிய பரிவாரங்களுடன் கும்பகோணத்திற்கு திக்விஜயம் செய்தார். மக்கள் பக்தியுடன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வரவேற்று கிராம ப்ரதக்ஷிணமாக ஊர்வலம் செய்வித்தனர். பல்லக்கில் விஜயீந்திரர் ஒளிவீசும் தேகத்தினராய் வீற்றிருக்கிறார். சாந்தமூர்த்தியாகவும், கம்பீரமான முகபாவத்துடனும், விசித்திரமான முகக்களையுடன் சிரித்த முகத்துடனும், சரத்ருதுவின் சந்திரனை நிந்தனை செய்வதைப் போல் உள்ள முகத்துடன் காணுகிறார். "விஜயீந்திரரே, ஜயவிஜயீபவ" என்று, அவரைத் தரிசனம் செய்யும் போது ஜனங்கள் ஜயகோஷம் செய்து வரவேற்கின்றனர். ஒருவிதமாக ஜனங்களின் ஜயகோஷம் சாந்தமடைந்தது.

இனிமையான தம்பூராவின் நாதம் கேட்கிறது. ஜனங்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர். தீர்த்த யாத்திரைக்காகக் கும்பகோணத்திற்கு வந்த புரந்தரதாஸரின் மகனும் மற்றும் சிஷ்யரும், "குருபுரந்தரவிட்டல" நாமாங்கிதரான தாஸர் ஸ்ரீ விஜயீந்திரரைப் பார்த்து மெய் மறந்து பாடத்தொடங்கினார்.

விஜயீந்திர முனீந்த்ர ரெம்பாஸ்சர்யத
கஜேந்த்ர பந்ததே ஸுஜனரு நோடபன்னி (ப)

கலுஷவெம்ப பங்கவநீடாடி, வி
மல ஹரிபத தீர்த்தத ஜலபானமாடி
ஸலி மத்வ மதாம்பு தியொளு
நலிநலிது குணிதாடுதலி (1)

ரமேசன த்யானவெம்ப மதவேறி
மமதெளெம்ப கதளி சித்தேடாடி
விமல ஸ்ரீஹரிபதரஜ சிரதி தரிஸி
குமதகளெம்ப தருகள முரியுதலி (2)

குரு ஸுரேந்த்ர தீர்த்தரெம்ப
வரமாவடிகள ஆக்ஞெயொளித்து
குருபுரந்தர விட்டலன பக்தியெம்ப
ஸரபணியொளு நலிநலிதாடுதலி (3)

தாஸர் விஜயீந்திரரை நமஸ்கரித்தார். விஜயீந்திரரும் புன்னகை செய்தார். ஜனங்களெல்லோரும் பக்தியினால் மெய் மறந்திருக்கின்றனர். அந்த நிகரற்ற காட்சியைக் கண்ட ப்ரதிவாதிகளின் இதயம் சஞ்சலமடைந்தது. அந்த மஹாதேஜஸ்விகளுக்குத் தலைவணங்காதவர் எவர்? குருவின் ஊர்வலம் முகாமையடைந்தது. அன்று பூஜை விமரிசையாக நடந்தேறியது. இவையெல்லாவற்றையும் கேட்ட ப்ரதிவாதி ஸந்நியாஸிகள் கோபமடைந்தனர். "இவ்வளவு வைபவமா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmiacademy

வித்யையிலாகட்டும், மந்த்ர சக்தியிலாகட்டும் எனக்கு நிகரா அந்த சாமியார்? இருக்கட்டும். நாளை அவருடைய கர்வத்தை அடக்குகிறேன்" என்று சிஷ்யர்களை அழைத்து, "வாதத்திற்கு வரும்படி விஜயீந்திரருக்குச் சொல்லியனுப்புங்கள்", என்று சொன்னார். வாதம் செய்யுமிடம் கும்பேச்வரனின் ஸந்நிதியென்று தீர்மானமாயிற்று. விஜயீந்திரர் மகிழ்ச்சியுடன் வாதத்திற்கு வருவதாகத் தெரிவித்துப் பதில் சொல்லியனுப்பினார், ஆஸ்திகரெல்லோரும், இனியென்ன, தமது தொந்திரவுகளெல்லாம் பரிஹாரமாய்விடும் என்று மிக்க உற்சாகத்துடனிருந்தனர்.

ஊரில் வாத விஷயம் பரவி ஜனங்கள் என்ன ஆகப்போகிறதோ பார்க்க வேண்டுமென்று ஆர்வத்துடன் உள்ளனர். வாதத்தைப் பார்க்கும் குதூகலமுடைய ஆயிரக்கணக்கான ஜனங்கள் கும்பேச்வரனின் கோவிலில் நிரம்பியுள்ளனர். விசாலமான சபா மண்டபத்தில் பீடங்கள் போடப்பட்டுள்ளன.பண்டிதரெல்லோரும் கூடியுள்ளனர்.

## 20. மந்திர சக்தியின் பெருமை:

ஸ்ரீ விஜயீந்திரர் பல்லக்கில் குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட்டார். இதையறிந்த ப்ரதிவாதி ஸ்வாமிகளும் பல்லக்கில் புறப்பட்டார். இரண்டு சாலைகள் கூடுமிடத்திலேயே பல்லக்குகள் சந்தித்தன. ப்ரதிவாதி ஸ்வாமிகள் உட்கார்ந்திருக்கும் பொழுது விஜயீந்திர ஸ்வாமிகளை ஒருமுறை பார்த்தார். என்னமோ நினைத்தார். உடனே பல்லக்கிலிருந்து இறங்கி அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே அங்கேயே இருந்த குட்டிச்சுவரின் மீது புலித் தோலைப் போடச்செய்து அதன்மீது உட்கார்ந்தார். என்னே ஆச்சரியம்! சைவ ஸ்வாமிகள் உட்கார்ந்திருந்த சுவர் நடமாட ஆரம்பித்தது. சுவரே நடந்து வருகிறது. பெருமையுடன் அமர்ந்திருக்கிறார் ஸ்வாமிகள். வரிசையாக நின்றிருந்த ஜனங்கள் இந்த அற்புதத்தைக்கண்டு பயந்து கலக்கமுடன் நின்றிருக்கின்றனர். ஸ்ரீவிஜயீந்திரரும் பார்த்தார். ஒருமுறை புன்னகை செய்தார். பல்லக்கு சுமப்பவர்களைப் பல்லக்கை இறக்கும்படி ஆக்ஞாபித்தார். ஜனங்களெல்லாம் விஜயீந்திரர் பயந்துவிட்டாரோ என்ற ப்ரமையில் திறந்த கண் மூடாமல் நிற்கின்றனர். பல்லக்கு கீழே வைக்கப்பட்டது. ப்ரதிவாதிகள் அதைப்பார்த்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பயங்கர அட்டகாசம் செய்தனர். ஜனங்களின் முகம் வெளுத்தது. ஆச்சரியத்தின் மேலாச்சரியம்! என்ன விசித்திரம்? என்ன அதிசயம்! கீழேயிருந்த பல்லக்கு யாருடைய உதவியுமின்றி மேலே புறப்பட்டது. அதோ காற்றிலே வருகிறது பல்லக்கு! ஸ்ரீ விஜயீந்திரர் த்யானத்தில் மூழ்கி உட்கார்ந்திருக்கிறார் பல்லக்கில்! ஜனங்கள் திக்ப்ரமை பிடித்தவரைப்போல் நின்றிருக்கிறார்கள். பல்லக்கு ஆகாயமார்க்கத்தில் பறந்தது. ப்ரதிவாதி ஸ்வாமிகள் அமர்ந்த குட்டிச்சுவர் பூமியின் மீது நடக்கிறது. விஜயீந்திரரின் பல்லக்கு ஆகாயமார்க்கமாக சைவ ஸ்வாமிகளின் தலைக்கு மேலே வந்து கொண்டிருக்கிறது. ஆஸ்திக ஜனங்களுக்கோ எல்லையில்லா மகிழ்ச்சி, ப்ரதிவாதிகளின் இதயம் நடுக்கம் கொண்டது. முகம் கருத்தது. தெய்வீக தேஜஸ்ஸின் எதிரில் அஸுரதேஜஸ் என்றைக்காவது தலைதூக்கி நிற்கவல்லதா? இந்த அற்புதத்தை ஜனங்கள் பார்த்துக் கொண்டே விஜயீந்திரரைப் புகழ்ந்து ஜயகோஷம் செய்து ஆரவாரம் செய்தனர். இதல்லவோ ஹரிபக்தரின் மகிமை! 64 கலைகளில் வல்லுநரான பண்டிதரத்னத்திற்கு இது ஒரு அற்ப விளையாட்டு. அவ்வளவு தான்! ஜகத்குருவிற்கு முடியாத காரியம் ஒன்றுண்டா? என்று ஜனங்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கின்றனர்.

கும்பேச்வரன் கோவில் எதிரில் பல்லக்கு இறங்கியது. ப்ரதிவாதி ஸ்வாமிகளும் கோபத்துடன் சுவரிலிருந்து இறங்கி சபா மண்டபத்தில் தனக்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்த பீடத்திலமர்ந்தார். ஸ்ரீ விஜயீந்திரர் மலர்ந்த முகத்துடன் கோவிலுக்குள் ப்ரவேசித்தார். கோவிலை வலம்வந்து ஸ்ரீ கும்பேச்வரனைத் தரிசித்து, க்ஞான தாயகனும், மனோநியாமகனுமான சங்கரனின் அந்தர்யாமியான ஸங்கர்ஷண மூர்த்தியைத் துதித்துப் பிறகு ஸ்ரீ மங்களாம்பிகையைத் தரிசித்துப் பிறகு சபா மண்டபத்திற்கு எழுந்தருளினார். சபையோரனைவரும் எழுந்து நின்று குருவர்யரைக் கௌரவித்து பீடத்தை அலங்கரிக்குமாறு விக்ஞாபித்தனர். ஸ்ரீயவர்கள் புன்னகையுடன் ப்ரதிவாதி ஸன்யாஸிகளின் புறம் திரும்பி க்ஷேமலாபங்களை விசாரித்தார். அவர் "இதெல்லாம் என்ன? இந்த உபசாரப் பேச்சுகளால் என்ன ப்ரயோஜனம்? வாதம் தொடங்கட்டும்" என்றார். சரி; வாதவிதிகளின்படி வெற்றியின் தீர்ப்பை அளிக்கவல்ல மத்யஸ்தர்கள் (நடுவர் குழு) ஏற்பாடாயிற்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வாதம் தொடங்குமுன் சபதம் செய்ய வேண்டும் (ப்ரதிக்ஞை செய்ய வேண்டும்) என்றார் ப்ரதிவாதி ஸ்வாமிகள். ஸ்ரீயவர்கள் சம்மதித்தார். ப்ரதிவாதி ஸந்யாஸிகள் "வாதத்தில் நாம் தோற்றால், நமது மடத்தை, சிம்மாசனத்தையும் மற்றும் ஸகல தேவாலயங்களின் ஆதிபத்யத்தை (தலைமைப் பதவியை) உமக்கு ஒப்புவித்து க்ராமத்தையே விட்டுப்போய்விடுகிறோம்" என்று சபதம் செய்தார். ஸ்ரீ விஜயீந்திரர், "நாம் வெற்றியடைந்தால் நீங்கள் சொன்னபடி செய்வதோடு மேலும் நீங்கள் ஜனங்களைப் பலவந்தப்படுத்திச் சைவர்களாக மாற்றுவதை அடியோடு நிறுத்தவேண்டும். நாம் தோற்றால் வைஷ்ணவ சின்னத்தை விட்டுச் சைவராகி உமது சிஷ்யராவோம்", என்று சபதம் செய்தார். இருவரும் இந்த ஷரத்திற்கு ஒப்பினர். சபை ஜனத்திரளுடன் கூடிற்று. ஒரே அமைதி. மௌனம், வாதம் தொடங்கிற்று.

## 21. சரித்திரப் பிரஸித்தமான வாக்யார்த்தம் (வாத விவாதம்)

உயர்ந்த ஆஸனத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீ விஜயீந்திரர் நிசப்தமான சபையில் தீர கம்பீரமான குரலில் சைவ ஸந்நியாஸியான லிங்கரா ஜேந்திர ஸ்வாமிகளைக் கேட்டார், "தாங்கள் ஈச்வரனை ஒப்புக் கொள்ளுகிறீரா?

லிங்கராஜேந்திரர்:- ஒப்புக்கொள்ளுகிறேன்.

விஜயீந்திரர்:- ப்ரத்யக்ஷம், யுக்தி, மற்றும் சப்தம் (கண்ணால் காணுவது, உபாயம், வார்த்தை) இந்த மூன்று ப்ரமாணங்களில் எதனால் ஈச்வரனை நிருபிப்பீர்கள்?

லிங்க:- ஒருபொருள் உண்டாக வேண்டுமானால் புருஷ ப்ரயத்னம் அவசியம் வேண்டும். அதில்லாமல் எந்தப்பொருளும் உண்டாகா-தாகையால் கண்ணுக்குத் தெரியும்இந்த பூமி, தண்ணீர், காற்று, சூரியன், சந்திரன் முதலிய ஸகல பதார்த்தங்களும் ஒரு புருஷனின் பிரயத்தனத்தினால்தான் உண்டாயிருந்திருக்க வேண்டும். யாருடைய முயற்சியினால் இவைகள் உண்டாயினவோ, அவனே ஈச்வரன். பூமி முதலானவைகள் விசித்திர-

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



மாயிருப்பதனால் அதை ஸ்ருஷ்டித்தவன் விசித்ர சக்தி உள்ளவன். இவ்வாறு நாம் ஈச்வரனை யுக்தியினால் நிருபிப்போம்.

விஜ:- தாங்கள் சொன்னபடி ஈச்வரனை யுக்தியினால் எப்படி நிருபிப்பது முடியுமோ, அவ்வாறே அதே யுக்தியினால் ஈச்வரனில்லையென்று நிருபிப்பதற்கு முடியும்.

லிங்க:- யுக்தியால் ஈச்வரனில்லையென்று எவ்வாறு நிருபிக்க முடியும்?

விஜ: உதாரணமாகச் சொல்லுவதானால் இப்பொழுது நாம் உட்கார்ந்திருக்கும் இந்த கும்பேச்வரன் கோவிலை ஒரு புருஷனால் கட்டுவது முடிகின்ற காரியமா?

லிங்க:- ஒருவனால் இந்த பெருங்கோவிலைக் கட்டுவது எவ்வாறு முடியும்? அநேகரின் முயற்சியின் உதவிஇன்றி முடியவே முடியாது.

விஜ:- ஒரு கோவிலைக் கட்டுவது விசித்ர சக்தியுள்ள அநேகரின் முயற்சி அவசியம் வேண்டும். விசித்ர சக்தியுள்ள புருஷனால் கட்டுவது எப்படி முடியாத காரியமோ அதைப் போலவே இந்த பூமண்டலம் முதலான விசித்திர மஹாகாரியங்கள் ஒரு புருஷனால் நிர்மாணம் செய்வது முடியாத காரியம். இப்படியிருக்கையில் நீங்கள் யுக்தியினால் அல்லது ப்ரத்யக்ஷத்தினால் ஈச்வரனை எப்படி நிருபிப்பீர்?

லிங்க: எதுவும் சொல்ல முடியாமல் மௌனமாகி விட்டார். மறுபடியும் விஜயீந்திரர் கேள்வியைக் கேட்டார்?

விஜ:- ப்ரத்யக்ஷம், யுக்திகளினால் நிருபிக்க முடியாததால் சப்தப்ரமாணங்களினால் ஏன் ஈச்வரனை நிருபிக்கக் கூடாது?

லிங்க:- சப்தப்ரமாணங்களினால் என்ற உடனே நீங்கள் வேதத்தை முன் வைக்கிறீர். உமது மதம் வேதத்தைப் பின்பற்றிக் கொண்டுள்ளது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

எது உமது மதத்திற்கு மூல காரணமோ அந்த வேதங்களே ப்ரமாணம் அல்லாதவை யாதலால் உமது மதம் எவ்வாறு சரியானது?

விஜ:- எனது கேள்விக்குச் சரியான பதில் கூறாமல் வேறு வழியில் ஏன் போகிறீர்? இருக்கட்டும். அதை நாம் அங்கேயே விட்டுவிடுகிறோம். வேதங்கள் ஏன் ப்ரமாணமல்ல? (அத்தாட்சி அல்ல)?

லிங்க:- அந்ருதம் வ்யாகாதம், புனருக்தி ரூபமான தோஷங்கள் வேதத்தில் காணப்படுவதால் அது ப்ரமாணமாகாது. "अनृतं वचनं अप्रमाणं दृष्ठं यथा विप्रलंभकवांक्यं" எதுவும் பொய். அது வஞ்சகனது வாக்யத்தைப் போல அப்ரமாணமென்று லோகத்தில் காணப்படுகிறது, "अनृतश्च वेद:" வேதம் பொய். ஏனென்றால், "पुत्र काम: पुत्रेष्टया यजेत्" என்று வேதத்தில் சொல்லியுள்ளது. அது பொய் "पुत्रकामे ष्टयानुष्ठानेपि फलाऽनुफलब्धे: ।" வேதத்தில் சொல்லியிருக்கின்றபடி புத்ரகாமேஷ்டியைச் செய்தாலும் புத்ரோத்பத்தி ஆகாமலிருக்கும் த்ருஷ்டாந்தங்களிருப்பதனால் வேதம் பொய்.

"किंच व्याहतं चा प्रमाणं । यथा उन्मत्त वाक्यं" பரஸ்பரம் விரோதமான வாக்கியங்கள் பைத்தியக்காரனின் பேச்சைப் போல அப்ரமாணமென்று கண்டிருப்பதனால், பரஸ்பர வ்யாஹதமான (நிஷித்தமானது) வேதங்கள் அப்ரமாணம் (ப்ரமாணமல்ல). இதற்கு திருஷ்டாந்தமாகச் சொல்லுவதானால், வேதத்தில் "अदितेजुहोति अनुदिते जुहोति" முதலியவை வ்யாஹத வாக்யங்களுள்ளன. அதாவது ஸூர்யோதயமான பிறகு ஹோமம் செய் என்று ஒரு வேத வாக்யம் சொன்னால், மற்றொரு வேதவாக்யம் ஸூர்யோதயமாகும் முன்பே ஹோமம் செய் என்று சொல்வது. இவ்வாறு பரஸ்பர விரோதமான வாக்யங்களினால் கூடின வேதம் பரமாணமல்ல, மற்றும் "पुनरुक्तिश्चा प्रमाणं । पुनरुक्तिश्च वेदे" புனருக்தி வாக்யங்களுள் அப்ரமாணமென்று சாஸ்திரஸித்தமாகச் சொல்லப் பட்டுள்ளது. வேதத்திலும் புனருக்தி உள்ளது உதாரணமாக "त्रिप्रथवा मन्वाह त्रिरूक्तमां" அதாவது முதல் ரிக்கை மூன்று தடவை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



சொல்ல வேண்டுமென்று இந்த வாக்யம் நிரூபிக்கிறது. காரணம், வேதத்தில் अनृत व्याघात पुनरुक्ति களிருப்பதனால் வேதம் ப்ரமாணமானதல்ல. அது போலவே வேத மூலமான உமது மதமும் கூடப்ரமாணமல்ல.

இவ்வாறு பூர்வபக்ஷம் செய்து லிங்க ராஜேந்திர சைவ ஸ்வாமிகள் அட்டஹாஸத்தினால் விமர்சித்தார். ஸ்ரீவிஜயீந்திரர் ஸமாதானமாக எல்லாவற்றையும் கேட்டு புன்னகையுடன் தமது வாதத்தை ஆரம்பித்தார்.

விஜ: "तदिदमयुक्तं, தாங்கள் சொன்ன இந்த பூர்வபக்ஷம் சரியல்ல. ஏனென்றால்,"वेदमात्रं पक्षी कृत्य एत्यैर्हेतुभिः अप्रमाण्यं साध्यते? उत तदेकदेशं?" வேத ஸாமான்யத்தை (எல்லா வேதத்தையும் பக்ஷமாக வைத்துக் கொண்டு) ப்ரமாணமல்லவென்று நிரூபிப்பீரா? அல்லது வேதத்தின் ஒருபாகத்தை மாத்திரம் (வைத்துக்கொண்டா?)

லிங்க:- வேத ஸாமான்யத்தை பக்ஷமாக வைத்துக் கொண்டு அப்ராமாண்யத்தை நிரூபிப்பேன்.

விஜ:- "नाद्यः" உமது, முதலாவது பக்ஷம் சரியில்லை. "यथा कस्यचित् प्रत्यक्षस्य अनुमानस्य सत्यस्य प्रामाण्यं, एवं वेद स्यापि, अनृतादिभाग परिहारेण प्रामाण्योपपत्तेः ।" எப்படி ஏதோ ஒரு ப்ரத்யக்ஷத்திற்கும், ஏதாவது ஒரு அனுமானத்திற்கும் அந்ருதத்வ முதலியவைகளிருந்த போதிலும், அந்த ப்ரத்யக்ஷம் அனுமானங்களை மாத்திரம் விட்டுவிட்டு, வேறுப்ரத்யக்ஷ அனுமானங்களுக்கு ப்ராமாண்யம் வருமோ, அதேபோல், அந்ருதமான வேதபாகத்தை மாத்திரம் விட்டுவிட்டு, பாக்கி வேதங்களுக்கு ப்ராமாண்யத்தைச் சொல்லலாம்லலவா? "अन्यथाहेतूनां भागासिद्धि प्रसंगात्" அவ்வாறு சொல்லாவிட்டால், யுக்திக்கு தோஷம் வரும். ஆகையினால் வேத ஸாமான்யத்தை வைத்துக் கொண்டு அப்ராமாண்யத்தை நிருபிப்பேனென்று நீங்கள் சொன்ன வாதம் சரியல்ல.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தமது வாதத்தை அரை நொடியில் கண்டனம் செய்த ஸ்ரீவிஜயீந்திரரின் திறமைக்குப் பதில் சொல்ல முடியாமல் திகைத்து, லிங்கராஜேந்திரர் சற்றுயோசித்து, கடைசியில், "அது போகட்டும், வேதத்தின் சில பாகத்தை மாத்திரம் பக்ஷமாக வைத்துக் கொண்டு அப்ராமாண்யத்தை நிரூபிக்கிறேன். இதற்கு நீங்கள் என்ன சொல்லுவீர்கள்?" என்று சொன்னார்.

விஜ:- அது உசிதமல்ல. "द्वितीये, आस्तां विप्रतिपन्नो वेदभागः। संप्रत्तिपन्न वेदमीमांसा कथं अनुपपन्ना?" ப்ராமாண்ய விஷயத்தில் விவாதமுள்ள வேதபாகத்தின் சர்ச்சை வேண்டாம். ப்ரமாணம் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட வேதபாகத்தை ஏன் பரிசீலிக்கக் கூடாது?

லிங்க:- "अथ वेदत्वात् तस्यामि वेदभागस्य अप्रामाण्यं साधयामि।" ஸித்தமான வேதத்திலும் வேதத்வம் இருப்பதினால், "सर्वो वेदः अप्रमाणं, वेदत्वात्, पुत्रकामेष्टि "वाक्यवत्" என்று அனுமானத்தினால் வேதம் ப்ரமாணமல்ல வென்று நிரூபிப்பேன்.

விஜ: அது சரியல்ல. ஒரு ப்ரத்யக்ஷம், ஒரு அனுமானம், இவைகளுக்கு அப்ராமாண்யமிருந்தாலும் கூட, இதர ப்ரத்யக்ஷ அனுமானங்களுக்கு ப்ரத்யக்ஷத்வம், அனுமானத்வ ரூபமான யுக்தியினால் அப்ராமாண்யத்தை எவ்வாறு நிரூபிக்க முடியாதோ, அதைப்போலவே, வேதத்வரூப ஹேதுவினால் எல்லா வேதத்திற்கும் அப்ராமாண்யத்தை நிரூபிப்பது முடிவதில்லை. அப்படியல்ல என்று சொல்லும் பக்ஷத்தில், "अन्यथा सर्व प्रत्यक्षानुमान विलय प्रसंगः" லோகத்தில் ப்ரத்யக்ஷ அனுமானமென்னும் ப்ரமாணமே இல்லாமல் போக வேண்டியதாயிருக்கும். இது மாத்திரமல்ல. நீங்கள் சொன்ன "அந்ருதத்வ" ரூபமான "ஹேது" எப்படிப்பட்டது?

லிங்க:- "अर्थ व्यभिचारित्वमिति ब्रूमः" अर्थ व्यभिचारित्वं என்று சொல்லுகிறோம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


விஜ:- "एवंचेत् नन्विदमेव अप्रामाण्यमिति साध्या विशिष्टता" அவ்வாறு சொல்லும் பக்ஷத்தில், ஸாத்யபூதமான (நிரூபிக்கத்தகுந்த) அப்ராமாண்யம் "அர்த்தவ்யபி சாரித்வ ரூபமானதால், ஹேது மற்றும் ஸாத்யங்களுக்கு ஐக்கியம் ஏற்படுகிறது. இது அனுமான தோஷமானதால் நீங்கள் சொன்ன யுக்திகள் நிற்பதில்லை. அபௌருஷேயமான வேதத்தில் புருஷதர்மமான அக்ஞானம், விப்ரலம்பம் முதலான தோஷங்களுக்கு இடமில்லாததாய் ஸ்வத: ப்ரமாணபூதமான வேதத்தை மூலமாக வைத்துக் கொண்டு புறப்பட்ட எமது மதம் எவ்வாறு அப்ரமாணமாயிற்று!

லிங்க:- வேதங்கள் அபௌருஷேயமென்று எவ்வாறு நிரூபணம் செய்வீர்கள்?

விஜ:- வேதங்களுக்கு வேதம், ச்ருதி, த்ருஷ்டி, என்று பெயர்களுண்டு. அவைகளின் அர்த்தத்தைப் பரிசீலனை செய்தால் வேதங்கள் யாரொருவராலும் இயற்றப்பட்டவை அல்லவெ யென்பது ஸித்திக்கும் "वेद्यतइति वेदः, श्रूयत इति श्रुतिः दृश्यत इति दृष्टिः," அதாவது वेदः = தெரியப்பட்டது श्रुतिः = கேட்கப்பட்டது. दृष्टिः பார்க்கப்பட்டது,. என்று பொருள்படும். இதனால் வேதங்கள் க்ஞானிகளான ரிஷிகளினால் தெரியப் பட்டது, கேட்கப்பட்டது, பார்க்கப்பட்டது, என்று வெளிப்பட்டதால் "वेदास्ते नित्य विन्नत्वा चक्षुतयश्चाखिखिले श्रुतीः" என்ற ப்ரமாணத்தின்படி வேதம் தெரியப்பட்டதே (அறியப்பட்டதே) தவிர, இயற்றப்பட்டதல்ல, அதுபோலவே கேட்கப்பட்டது, பார்க்கப்பட்டதே தவிர யாராலும் இயற்றப்பட்டதல்லவென்று தெரிந்திருப்பதாலும் அபௌருஷேயமானது, மேலும் ப்ரமாண பூதமானதும் கூட, அத்தகைய் வேதத்தை மூலமாகக் கொண்ட எமது மதம் கூட உத்தமமானது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

இந்தவிதமாக ஸ்ரீ விஜயீந்திரர் அநேக யுக்திகளினால் ச்ருதி, ஸ்ம்ருதி, புராணம் மற்றும் ப்ரமாண உதாரணங்களினால் சைவ ஸ்வாமிகளின் வாதத்தை எழுத்துக்கெழுத்து கண்டனம் செய்து வேத ப்ரமாணத்தை நிலைநாட்டினார். சபையோரும் சாஸ்திரமறிந்த நடுவர்களும், நகரத்தார்களும் ஆனந்தம் நிறைந்தவராகி "விஜயீந்திரர் வாழ்க" என ஜயகோஷமிட்டனர். லிங்கராஜேந்திரர் பதில் சொல்லமுடியாமல் தலையைத் தொங்கவிட்டு அமர்ந்திருந்தார். நடுவர்கள் அன்றைய வாதத்தில் விஜயீந்திரரே வெற்றியடைந்ததாக சபையில் மூன்று முறை கோஷித்து, நாளை மறுபடியும் வாதம்தொடரும் என்று சொன்ன உடனே கும்பகோண நகரவாஸிகள் ஸ்ரீ விஜயீந்திரரைக் கொண்டாடித் தத்தம் வீடு திரும்பினார். ஸ்ரீ விஜயீந்திரரும் தம் சிஷ்யர்களுடன் தனது இருப்பிடத்திற்கு விஜயம் செய்தார்.

ஸ்ரீ விஜயீந்திரர் முதல் நாளன்று வெற்றியடைந்த விஷயம் வாக்சாதுர்யமும் காட்டுத் தீ போன்று எல்லாவிடங்களிலும் பரவிவிட்டபடியால் வேதமதாபி மானிகள் மிக்க உற்சாகத்துடன் இந்த வாத விவாதங்களைத் தாமும் பரிசீலிக்க வேண்டுமென்று மறுதினம் கும்பகோணத்திற்கு கும்பல் கும்பலாக புறப்பட்டு வந்து கொண்டிருக்கின்றனர். எங்கு பார்த்தாலும் இதே பேச்சு.

காலையில் 8 மணி இருக்கலாம். கும்பேச்வரன் கோவிலில் எள்ளு போட்டால் எள் தெறிக்காத அளவிற்கு ஜனத்திரள். சைவ ஸந்யாஸிகளான லிங்க ராஜேந்திரர் ஆஸனத்தில் வீற்றிருந்தார். ஸ்ரீவிஜயீந்திரர் வருவதையே ஜனங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஸ்ரீலிங்கராஜேந்திரரின் கூட்டத்தினரில் ஏதோ காதோடு காதாக ரகஸியப்பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. லிங்க ராஜேந்திரர் அந்தப்பக்கம் என்ன என்று கேட்பதைப்போல் பார்த்தார். அவருடைய சிஷ்யரில் சிலர் ஸந்நியாஸியின் அருகில் வந்து, "குருவே, நேற்றைய வாதத்தைப் பார்த்து நமது கூட்டத்தினருக்கு மனதில் கலவரம் உண்டாயிருக்கிறது". அந்த விஜயீந்திரர் மிக்கத் திறமைசாலி களென்று தோன்றுகிறது. அவருடைய வாதமுறையே ஒரு விசித்திரமானதாக உள்ளது. நம்மவர்களிலேயே சிலர் அவருடைய் வாக்கு வன்மையால் கட்டுப்பட்டு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மகிழ்ச்சியடைந்துள்ளனர். வல்லவரான அவரை வெல்வது முடியுமா என்று சந்தேகம் ஏற்படுகிறது. ஸ்வாமிகளே, இந்த அதிகப்ரஸங்கமான பேச்சுக்களுக்காக எங்களை மன்னித்தருள வேண்டும்! நமது வாழ்வு அல்லது தாழ்வு (அழிவு) இரண்டும் தங்கள் கையில் உள்ளன. நமது கௌரவத்திற்கு பங்கம் ஏற்படாமலிருக்கும் படி காப்பாற்ற வேண்டும், ப்ரபு!'' என்று வேண்டிக்கொண்டனர். லிங்கராஜேந்திரர் சற்று தளர்ச்சியடைந்தது போல் காணப்பட்டார்.

"ஸ்ரீவிஜயீந்திரரைப் போல் வாதத்தில் வல்லுநரான வாத வித்பன்னரை நானிதுவரையில் காணவில்லை. உண்மை. அவர் மந்த்ரவித்யையிலும் மஹா மேதாவி என்பது நேற்று நீங்கள் யாவரும் கண்டீர்கள். நேற்றைய தினம் நான் வேதத்திற்கு அப்ராமாண்யத்தை நிரூபிக்க முயற்சி செய்தது சரியாகவில்லை. நான் இன்று அவருடைய மதத்தை நூற்றுக்கு நூறு கண்டனம் செய்கிறேன். அவர் நிகரற்ற பண்டிதராக இருந்தபோதிலும் இன்றைய எனது வாதத்தின் முன்பு எதிர்த்து நிற்க மாட்டார். நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். சிவனின் கருணையினால் நாமே வெல்லலாம், மக்களே, அஞ்சாதீர்கள், ''என்று லிங்கராஜேந்திரர் சொல்லிக் கொண்டிருக்கையில் ஜயகோஷங்களுக்கிடையே ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் வந்து சிரித்த முகத்துடன் பீடத்தை அலங்கரித்தார். ஸபையோர், நடுவர்கள் மற்றும் பார்வையாளர்களும் வாதம் ஆரம்பமாகலாம் என அறிவித்தனர்.

ஸ்ரீலிங்கராஜேந்திரர் ஆணவத்துடன் ஸபையை ஒரு முறைபார்த்து ஸ்ரீவிஜயீந்திரர் பக்கமாகத் திரும்பிச் சொல்ல ஆரம்பித்தார் "अस्तुवा वेदस्य प्रामाण्यं तथापि भवन्मते अंगीकृतरीत्या विष्णोः जगज्जन्मादि कारणत्वं न संभवति । कुत इतिचेत् वेदे एव "एको रुद्रो न द्वितीयोऽवतस्थे शिव एव केवलः" इत्युक्त्वात्. परमशिव एव सकल जगज्जन्मादि कर्ता-न तु नारायणः ।"

அதாவது, - ஒருவேளை வேதத்திற்கு ப்ராமாண்யத்தை நாம் ஒப்புக்கொள்ளுவது இருக்கட்டும். ஆனால், உமது மதத்தில் நீங்கள் ஒப்புக்கொண்ட பிரகாரம் விஷ்ணுவிற்கு ஜகஜ்ஜன்மாதி காரணத்வம் வருவதில்லை. ஏனென்றால், "एको रुद्रो नद्वितीयोऽवतस्थे शिव एव केवलः" முதலான வேதங்கள் ஸ்ருஷ்டிக்கும் முன்பு இருந்த, மஹா தேவனே ஜகஜ்ஜன்மாதி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

காரணனென்று சொல்லுகின்றன. இதனால் ருத்ரதேவனுக்கே ஸர்வோத்தமத்வத்தைச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதாக ஆகுவதால், நாராயணன் ஸர்வோத்தமனல்ல. ஆதலால் அவனுக்குச் சர்வோத்தமத்வத்தை நீங்கள் சொல்வது சரியல்ல. வேதங்களில் மாத்திரமல்ல புராணம் முதலியவைகளிலும் கூட இதற்கு வேண்டிய அளவு ப்ரமாணங்கள் உள்ளன!!

ஸ்ரீவிஜயீந்திரர் கம்பீரமான தோற்றத்துடன் கேள்வி எழுப்பினார்.

நாராயணன் ஜகஜ் ஜன்மாதிகாரணனல்லவா? காரணனேதரனா? என்பதைச் சாவகாசமாக யோசிப்போம். முதலில் நீங்கள் புராணாதிகளில் ப்ரமாணங்கள் உள்ளன என்று சிவோத்தமத்வத்தைத் தெரிவிக்கும் புராணங்கள் யாவை என்று விவரமாகச் சொல்ல முடியுமா?

லிங்க:- கௌர்ம, லைங்க, சிவராத்ரி மஹாத்ம்யம் முதலிய புராணங்களில் வேண்டிய ப்ரமாணங்கள் உள்ளன.

விஜ:- எங்கே ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தை உதாரணம் கொடுங்கள்.

லிங்க:- மேற்கண்ட புராணங்களில், இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "தானே உத்தமரென்று பரஸ்பரம் விவாதம் செய்து கொண்டிருந்த ப்ரம்மா விஷ்ணுகளின் மத்தியில் மஹாலிங்கா காரமாக உற்பத்தியான ஸ்ரீருத்ரதேவன் ப்ரம்மா நாராயணனின் பலத்தைப் பரீக்ஷிப்பதற்காக தமது லிங்கத்தின் மூலம் மற்றும் மேல் பாகங்களைக் கண்டு வரும்படி ப்ரேரேபித்தார். ருத்ரதேவனின் உத்தரவின் படி ஹம்ஸ ரூபத்துடன் ப்ரம்மாவும், வராஹ ரூபத்துடன் விஷ்ணுவும் ஆகாயபாதாள மார்க்கமாக ப்ரயாணம் கைகொண்டனர். அவர்கள் எவ்வளவு தூரம் போனாலும் லிங்கத்தின் மூலம், உச்சி இவைகளைக் கண்டுபிடிக்க முடியாமல் ப்ரம்மா-நாராயணரிருவரும் திரும்பி வந்து, தங்களது இயலாமைக்காக வெட்கப்பட்டு நின்றனர்." இதிலிருந்து ப்ரம்மா-விஷ்ணுவைவிடச் சிவனே ஸர்வோத்தமன் என்று ஸித்திக்கவில்லையா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


விஜ: तदसत्, अयतार्थवाद (பொய்) உமது வாதம் மதிக்கத்தகுந்ததல்ல. நீங்கள் சொன்ன கதை லிங்காதி புராணங்களிலிருந்தாலும் அவைகள் தாமஸ புராணங்களாகையாலும் மேலான ஸாத்வீக புராண வாக்யங்களுக்கும் மற்றும் ச்ருதிகளுக்கும் விரோதமான அர்த்தத்தைத் தெரிவிக்கும் அந்தப்புராண வாக்கியங்கள் ப்ரமாணமாகமாட்டா.

லிங்க:- இது தாமஸம், இது ஸாத்விகம் என்று நீங்கள் சொல்லிவிட்டால் மாத்திரம் அதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. உமக்கு வேண்டாத விஷயங்களை நீங்கள் தாமஸம் என்று சொல்லுகிறீர். அதற்கு ப்ரமாணமென்ன?

விஜ:- புராணப்ரவர்த்தகரான ஸ்ரீபாதராயண தேவனே அதை நிர்ணயம் செய்திருக்கிறார். புராணங்களில் ஸாத்விக, ராஜஸதாமஸ பாகங்களிருந்து அவைகள் யாவையென்று சொல்லியுள்ளார். அந்தப் புராணங்கள் எவை என்று நிர்ணயித்துள்ளார்.

லிங்க: நீங்கள் வாயால் சொன்னால் அதை நாம் ஒப்புக் கொள்ளமாட்டோம். ப்ரமாணம் எடுத்துக்காட்டுங்கள்.

விஜயீந்திரர் தமது சிஷ்யரை ஒருமுறை பார்த்தமாத்திரத்தில் அவர் அவர் பக்கத்திலே இருந்த பனை ஓலைச்சுவடி க்ரந்தங்களை அவர் முன்பு சமர்ப்பித்துச் சற்றுவிலகி நின்றார். ஸ்ரீயவர்கள் இரண்டு புராண க்ரந்தங்களையெடுத்துப் படிக்க ஆரம்பித்தார்.

"वैष्णवं नारदीयंच तथा भागवतं शुभं । गारुडं च तथा पादमं वाराहं शुभ दर्शने । षडेतानि पुराणानि सात्विकानि मतानि वै ॥ ब्रह्लांडं ब्रह वै वर्तं मार्कंडेयं तथैव चा भविष्यद्वामनं ब्राह्मं राजसाति निभोध मे । मात्स्यं, कौर्मं तथा लैंगं/ शैवं स्कांदम् तथैव च । आगनेयं च षडेतानि त्तामसा निरयप्रदाः ।"

"அதாவது ஸாத்விக புராணங்கள்" ஆறு. 1. வைஷ்ணவம், 2. நாரதீயம், 3. பாகவதம், 4. காருடம், 5. பாத்மம், 6. வாராஹம்.

ராஜஸபுராணங்கள் ஆறு. 1. ப்ரம்மாண்டம் 2. ப்ரம்மவை வர்த்தம் 3. மார்க்கண்டேயம் 4. பவிஷ்யோத்தர புராணம் 5. வாமனம் 6. ப்ராம்ஹ்மபுராணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தாமஸ புராணங்கள் ஆறு. 1. மாத்ஸ்யம் 2. கௌர்மம் 3. லைங்கம் 4. ஸ்காந்தம் 5. சைவம் 6. ஆக்நேயம்.

இவ்வாறு ஸாத்விக, ராஜஸ, தாமஸ புராணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதைப்போலவே ஸ்ம்ருதி சாஸ்திரங்கள் கூட மூன்று விதம். இந்த வாதவிவாதத்தின் அர்த்தத்தை முடிவு செய்யும் யோக்யதையுள்ள நடுவர்கள், சபையோர்கள் இதை முதலில் தீர்மானம் செய்ய வேண்டும்.

ஸ்ரீயவர்களின் பேச்சைக் கேட்டு சபையோர் நடுவர்கள் ஸ்ரீயவர்கள் காண்பித்த வரிகளை யோசித்து தமக்குள் சர்ச்சை செய்து ஸ்ரீலிங்க ராஜேந்திரரைக் குறித்து, "நீங்கள் சொன்னபடி ஸ்ரீகளவர்கள் ப்ரமாணத்தைக் கொடுத்துள்ளனர். சாஸ்திரத்தின் ஆதாரத்தின் மேல் வாதம் நடந்திருக்கும்பொழுது அதனுடைய மரியாதையை மீறாமல் நடத்தும் பொறுப்பு நமது மீது உள்ளது. பக்ஷபாத மற்ற நாம் ஸ்ரீகளவர் காண்பித்த ப்ரமாணங்களினால் ஒருவிதமான தீர்மானத்திற்கு வந்துள்ளோம். நீங்களும் கூட அதை ஒப்புக் கொள்வீரென்று நம்பி இருக்கிறோம். ஸ்ாத்விக, ராஜஸ, தாமஸ புராண, சாஸ்திரங்களின் வாக்யம் நிர்ணயம் செய்யும்பொழுது ஸ்ாத்விக புராணங்களுக்கே நாம் அதிக மதிப்புக் கொடுக்கிறோம்" என்று சொல்லி, "வாதம் மேலே தொடரலாம்" என்று விஜயீந்திரரிடம் விக்ஞாபனம் செய்து அமர்ந்தனர்.

விஜ: "उद्धृतासि वराहेण कृष्णेन शतबाहुना । अपो वा इदमग्रे सलिल मासीत् । तस्मिन् प्रजापति र्वायुर्भूत्वाचरत्स इमामपश्यत् । तां वराहो भूत्वाऽहरत् ॥" முதலான ச்ருதிகளுக்கு விரோதமான உமது வாதம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இந்த ச்ருதியில் ஸகல பூத-பௌதிகாத்யாச்ரயமான பிருத்வியை, ஸ்ரீ விஷ்ணு காப்பாற்றியதாகத் தெரியவருகிறது. நீங்கள் நிரூபித்த பார்த்திவமான லிங்கமும் கூட ப்ருத்வியின் சம்பந்தப்பட்டதாயிருப்பதினாலும் உதாராதேயங்களில் ஆதாரமே ச்ரேஷ்டமென்று ஜகத்தில் ப்ரஸித்தமான காரணம், ப்ருத்விக்கு ஆதாரமான விஷ்ணு பார்த்திவ லிங்கத்திற்கும் ஆதாரமானவை ஆதலால் விஷ்ணு பார்த்திவ லிங்கத்தின் மூலம் உச்சி முதலி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



யவைகளை காணமுடியுவில்லையென்று சொல்வது சாஸ்திர விரோதமாகும். இதனால் எவ்வாறு சிவனின் ஸர்வோத்த மத்வம் ஸித்திக்கும்?

லிங்க:- நாம் நிரூபித்த புராணங்களில் அவ்வாறு சொல்லியிருப்பதனால் நாராயணன் லிங்கத்தின் மூலம்-உச்சி இவைகளை காணவில்லையென்று ஒப்புவதனால் என்ன தடை?

விஜ:- அவ்வாறு சொன்னால் விஷ்ணு ஸர்வக்ஞன் என்று சொல்லும் ச்ருதிகளுக்கு விரோதம் வருகிறது. "विचित्र शक्तिः" पुरुषः पुराणो नचान्येषं शक्तय स्वादृशास्युः" அதாவது ஸநாதனனான நாராயணன் விசித்ர சக்தியுள்ளவன். இதர தேவதைகளின் சக்திகள் அவனுடைய சக்திக்குச் சமானமாகாது.. இதே முதலான ஸ்ரீ ஹரியின் விசித்ர சக்தி முதலியவைகளைத் தெரிவிக்கும் ச்ருதிகளுக்கு விரோதமான கௌர்மம், லைங்கம், சிவராத்ரி மஹாத்ம்யம் முதலான புராண வாக்கியங்கள் ப்ரமாணமாகமாட்டா. அதனால் நீங்கள் அளித்த வாதம் ஸித்திக்காது. இதனால் ஸ்ரீ ஹரியே ஸர்வோத்தமனென்பது ஸ்தாபிதமாயிற்று.

இந்தவிதமாக ஸ்ரீவிஜயீந்திரர் சாமர்த்தியமாக சைவ ஸந்யாஸிகளின் வாதத்தை ச்ருதி-ஸ்ம்ருதி-புராணங்களின் ப்ரமாணங்களை உதாரணம் காட்டி, கண்டனம் செய்ய சைவ சந்நியாஸிகள் தமது வாதத்தை நிலைநிறுத்த முடியாமல் பதில் கூற முடியாமல் இருக்கவே, நடுவர்கள் வாதத்தின் இரண்டாவது நாளான இன்று விஜயீந்திரரே ஜயித்ததாகத் தீர்ப்புக் கூறினார்கள். உடனே சபையில் கோலாகலமுண்டாயிற்று. வெற்றியடைந்த ஸ்ரீயவர்கள் சபாஸ்தானத்திலிருந்து தனது இருப்பிடத்திற்கு எழுந்தருளினார். அன்றைய வெற்றியை ஸ்ரீமூல ராமசந்த்ர மூர்த்திக்கு அர்ப்பணம் செய்து வெகு விமரிசையுடன் பூஜை ஆராதனாதிகளை நிறைவேற்றி கும்பகோண வாஸிகளுடன் மறுநாள் வாத விஷயத்தைப் பற்றிப்பேசி அவரெல்லோருக்கும் விடைகொடுத்து அனுப்பித் தாமும் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இரண்டு நாட்களின் வாதத்தில் தோல்வியுற்ற லிங்க ராஜேந்திரரின் மனம் மிக வியாகூலமடைந்தது. அவருடைய கூட்டத்தவரோ செயலற்று உட்கார்ந்திருந்தனர். அற்ப புத்தியுள்ளவர்களைத் தன் வாதத்திறமையினால் வென்று கர்வங்கொண்ட லிங்க ராஜேந்திரருக்கு விஜயீந்திரரைப் போல ஜகத்தின் ஒரே வீரவாதிகளிடம் சிக்கித் தமது அஸாதாரணத் திறமையினால் ஜனங்களுக்கு ப்ரிய பாத்ரரானது அவருக்கு முகம் காட்ட முடியாமலாயிற்று. எந்த வகையிலாவது விஜயீந்திரரை வாய்பேச முடியாமல் செய்ய வேண்டும் என்று உறுதியுடன் மூன்றாவது நாள் வாதத்தை ஆரம்பித்தார்.

லிங்க:- நேற்று தினம் சிவ சர்வோத்தமத்தைச் சொல்லி நான் சொன்ன வாத்தை ஒரு முறையில் நீங்கள் கண்டனம் செய்தீர்கள். உமாபதியே பரனென்று அநேக புராணங்கள் பறைசாற்றுகின்றன. நீங்கள் சொன்ன ஸாத்விக புராணமென்னும் வராஹ புராணத்திலும் கூட சிவனே ஸர்வோத்தமனென்று நிரூபணமாகியுள்ளது. அங்கு ஜலந்தர வதம் செய்வதற்காக சுதர்சனத்தை அடைவதற்கு விஷ்ணு ஒவ்வொரு நாளும் ஆயிரம் தாமரைப் பூக்களினால் சிவனை அர்ச்சனை செய்து கொண்டு வருகையில், ஹரியைப் பரீக்ஷிப்பதற்காகச் சிவன் ஒருநாள் ஒரு தாமரைப்பூவை மறைத்துவிடவே, விஷ்ணு தனது கண் தாமரையையே கொய்து சிவனைப் பூஜித்தான். அதனால் திருப்தியடைந்த விஷ்ணுவிற்கு ப்ரத்யக்ஷமாகி சுதர்சனத்தையும் நேத்திரத்தையும் அனுக்ரஹித்தான். அன்றிருந்து ஹரிக்குப்புண்டரீ காக்ஷனென்னும் பெயராயிற்று. பிறகு சிவனால் அளிக்கப்பட்ட சுதர்சனத்தினால் விஷ்ணு ஜலந்தரனை ஜயித்தான்'' என்று சொல்லப் பட்டுள்ளது. சிவனே உத்தமனென்று உமக்கு ப்ரமாண பூதமான வராஹ புராணத்திலேயே இவ்வாறு சொல்லியிருக்கையில் நாராயணன் எவ்வாறு உத்தமனென்று சொல்லமுடியும்?

விஜ:- நீங்கள் தெரியப்படுத்திய விஷயம் லிங்க புராணத்தில் சொல்லியபடியே வராஹ புராணத்தின் பூர்வ கண்டத்திலும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



சொல்லப்பட்டிருக்கிறது உண்மை. ஸாத்வீக ப்ரமாண வாக்யம் ப்ரமாணமாயிருந்தாலும் பத்மபுராணம் முதலியவைகளில் ஸாத்வீக, ராஜஸ, தாமஸ பாகங்களிருப்பதைப் போல வராஹ புராணத்தின் பூர்வ் கண்டமும் தாமஸமென்று ப்ரஸித்தமாக இருப்பதனால் அந்த பாகத்தில் சொல்லும் விஷயம் மதிக்கத்தகுந்ததல்ல.

லிங்:- "உமது வாதத்திறமை என்ன? உமக்குத் தோன்றினபடி சொன்னவையெல்லாம் ஒப்புக்கொள்வதற்கு நாமென்ன முட்டாளா? இது வாதமா அல்லது கேலிக்கூத்தா? நடுவர்கள் இந்த விஷயத்தை நிர்ணயிக்கட்டும்" என்று கோபத்துடன் பேசவும் சபையில் கொஞ்சம் சலசலப்பு ஆரம்பித்தது. நடுவர்கள் விஜயீந்திரரிடத்தில் அதைப்பற்றி விக்ஞாபிக்க, அவர் அமைதியான முறையில் அவர்களின் ஸந்தேகத்தைப் பரிகாரம் செய்து வராஹ புராணத்தின் பூர்வ கண்டம் தாமஸமென்று சொல்லி ப்ரமாணத்தைக் காண்பித்தார். பிறகு அந்த விஷயத்தை லிங்கராஜேந்திரருக்குத் தெரிவித்து வாதம் தொடரலாமென்றார்.

விஜ:- இப்பொழுது நாம் காண்பித்த ப்ரமாணத்தினால் நாம் ஸத்யமே சொல்லியுள்ளோம். என்பது ப்ரதிவாதிகளான தமக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம். இருக்கட்டும், விஷ்ணு ஜலந்தரனை வதம் செய்வதற்காக சிவனிடமிருந்து ஸுதர்சனத்தைப்பெற்றது அயுக்தமானது. பொய்! வராஹ புராண வாக்யத்தை ப்ரமாணமாக அங்கீகரிக்கும் பக்ஷத்தில், "चरणं पावित्रं" (சரணம் பவித்ரம்) முதலிய ச்ருதிகளுக்கு விரோதமேற்படுகிறது. இன்னும், "स यथाकप्यासं पुंडरीकमेवाक्षिणे तस्योदित नामसहा वै सर्वेभ्यः पाप्यभ्य उदतिष्टनू" முதலிய ச்ருதிகளுக்கு விரோதமான "புண்டரீகாக்ஷத்வ" ப்ராப்த்யாதி" (पुंडरीकाक्षत्वप्राप्त्यादि) விஷயமும் அப்ரமாணம். ப்ரபலமான ஆகம ப்ரமாணவிருப்பத்தால் ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



லிங்க:- "அம்ருத மதன காலத்தில் (திருப்பாற் கடலைக் கடைந்த ஸமயம்) கால கூடவிஷம் (ஆலகால விஷம்) உற்பத்தியானபொழுது அதன் ஜ்வாலையைச் சஹிக்க முடியாமல் விஷ்ணு முதலானவரெல்லோரும் திக்கெட்டிலும் ஓடும்பொழுது விஷத்தின் ஜ்வாலை ஸகல லோகத்தையே தகித்து விடுமோ என்று பீதியினால் தேவதைகள் தத்தளித்துக் கொண்டிருக்கையில் சாக்ஷாத் ருத்ரதேவன் அந்த விஷத்தைக் குடித்து ஸகல லோகத்தையும் காப்பாற்றின மஹானுபாவர் அவரல்லவா பராத்பரர்!! விஜயீந்திரரே, இதற்கு என்ன பதில் கூறுவீர்? என்று பரிஹாஸம் செய்யவே, சற்றும் சஞ்சலமில்லாமல் புன்னகையுடன் விஜயீந்திரர் பதில் கூறினார்.

விஜ:- விஷ்ணு மந்த்ர ஜப மகிமையினால் விஷத்தைக் குடித்த ருத்ரதேவன் எவ்வாறு பராத்பர்ராக முடியும்? இதற்கு ப்ரமாணம் தேவையா? கேளுங்கள். "तम् दृष्ट्वाघोरसंकाशं प्रादुर्भूतं महाविषं । दयात्वा नारायणं देवं हृदये गरुडध्वजं ।" அதாவது:- "பாற்கடலைக் கடைந்தபொழுது உற்பத்தியான் அந்த பயங்கரமான காலகூட விஷத்தைப் பார்த்து ருத்ரதேவன் கருடத்வஜனான நாராயணனை இதயத்தில் த்யானித்து அதைக் குடித்தார்". இவ்வாறு ப்ரம்மாண்ட புராணத்தில் ப்ரமாணம் உள்ளது. மற்றும், "एन जीर्णच गरकं कंठस्थं च कंपालिनः । अंतरात्म धृतं तस्य हृदये गरुडध्वजं ॥" இவ்வாறு ப்ரமாணங்களிருப்பதினால் ஸ்ரீ ஹரியின் அனுக்ரஹத்தினாலேயே விஷம் குடித்தாரே தவிர ஸ்ரீருத்ரதேவன் தனது சக்தியினால் அல்லவென்று இதனால் வெளிப்படவில்லையா? இது மாத்திரமல்ல. "अप्रकाश्यमिदं देवि । गुह्याद्गुह्यतरं पदं । पुराहमद्भिमथने पदगेंद्र विषावहम् ॥ अवश्यं गरकं घोरं अभंजमृतं यथा" என்று சாக்ஷாத் महादेवरे மஹாதேவனே பார்வதி தேவிக்கு நிரூபித்த விஷயம் கருட புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. மந்த்ர சாஸ்திரத்தில் கூட, "अच्युतानंत गोविंद मंत्र तोऽप्सु शुभं परं । ओं नमस्संपुटी कृत्य जपनू विष घरोऽहरन् ।" என்று ப்ரமாணம் உள்ளது. "नामत्रय प्रभावाच्च विष्णोस्सर्व गतस्यवै । विषं तद भवज्जीर्णं लोक संहार

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ஸரண்" என்று புராணாந்தர வசனமுள்ளது. இவ்வளவு ப்ரமாணங்களும் ருத்ரதேவன் ஸ்ரீஹரியின் அனுக்ரஹத்தினால் விஷ மருந்தினாரென்பதை ஆமோதிக்கின்றன. இது மாத்திரமா என்ன? பாற்கடல் கடையும்பொழுது முதலில் விஷத்தைக் குடித்தவர் ஜீவோத்தமரான ஸ்ரீவாயு பகவான்! பிறகு மீதியிருந்ததை, ருத்ரதேவன் குடித்ததால் விஷம் குடித்த பெருமை வாயு தேவனைச் சேரும்.

லிங்க:- ஓஹோ! வாயு தேவனை வேறு கொண்டு வந்து விட்டீரா? உமது மதஸ்தாபனாசார்யருக்கு மகத்துவம் கொடுப்பதற்காக இந்த கட்டுக்கதையைக் கட்டி வெகு மனோரஞ்சகமாக வர்ணித்த உமது புத்தி சக்திக்கு நன்றி! உம். இருக்கட்டும்.

நீங்கள் இப்பொழுது சொன்னதற்கு ஒரு ப்ரமாணமாவது கொடுக்க முடியுமா?

விஜ:- நாம் ப்ரமாணம் (அத்தாட்சி) இல்லாமல் எதுவுமே சொல்லுவதில்லை. வெறும் வார்த்தைகளை வீசுபவர் நாம் அல்லவென்பது இன்னும் தமக்குத் தெரியாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். உமக்கு ப்ரமாணம் தேவை, இல்லையா கேளுங்கள்!- "वायु रस्मा उपा मंथत्त्विनिष्ट स्मा कुनन्नमा । केशे विषस्य पात्रेण यदुद्रेणापिबत्सह" என்ற ச்ருதி ஸ்ரீவாயுதேவரே காலகூட விஷத்தைக் குடித்தாரென்றும் விஷ சக்தியைப் பிழிந்து வாயுதேவன் கொடுத்த மீதி சொற்ப விஷத்தைக் குடித்த ருத்ரதேவன் நீலகண்டனானா ரென்று விளக்கமாகச் சொல்லுகிறது. இவ்வளவு மஹாப்ரமாணங்கள் இருக்கையில் அதற்கு விரோதமாக நீங்கள் சொல்லும் வாதம் ஸித்திப்பதில்லை. இன்னும் பாகவதம் முதலிய புராணங்களில் விஷத்தைக் குடித்து ருத்ரதேவன் நீலகண்டன் ஆனார் என்று நன்றாகச் சொல்லப் பட்டுள்ளது.. இதே புராணங்களில் விஷ பயத்தினால் பயந்து நாராயணன் ஓடிப்போய் விட்டானென்று சொல்லப்படவில்லையாதலாலும், ஹரியின் அனுக்ரஹத்தினால் விஷம் அருந்திய சிவன் எவ்வாறு ஜகஜ்ஜன்மாதி காரணனான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பரப்ரம்மனென்று சொல்லப்படுவான்? இவைகளினால் ஹரியே ஸர்வோத்தமனென்று ஸித்தித்தது.

லிங்க:- "நீங்கள் சொன்னதே ஸித்தாந்தமென்று நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். இவ்விதம் லிங்கராஜேந்திரர் கோபத்துடன் சொல்லவே,

விஜ:- ஒப்புக் கொள்ளத்தான் வேண்டுமென்று நாம் உம்மைக் கட்டாயப்படுத்தவில்லையே! ப்ரமாணங்கள் அவ்வாறு சொல்லுகின்றன. நாம் ப்ரமாணங்களை உதாரணம் கொடுத்துள்ளோம். தீர்மானம் சபையைச் சேர்ந்தது. நம் வாதம் சரியில்லையென்றால் நீங்கள் தாராளமாகக் கண்டனம் செய்து சிவசர்வோத்தமத்வத்தை ஸ்தாபிக்கலாம்.

லிங்க:- நாம் இப்பொழுது சிவோத்தமத்வத்தைச் சொல்லும் சில ப்ரமாணங்களைச் சொல்லுவோம்.

விஜ:- தாரளமாக.

லிங்க:- (1) திரிபுரத்தை வெற்றி கொண்ட சமயம் விஷ்ணு ப்ரம்மா முதலியவர்களை யுத்த வீரர்களாக்கிக் கொண்டு ருத்ரதேவனே த்ரிபுராஸுரர்களை ஸம்ஹாரம் செய்தார். "तेषामसुराणां तिस्रः पुर आसन् . क इमामशिष्यतीति रूद्र इत्य ब्रुवन्" முதலிய ஸ்ருதிகள் நாம் சொன்னவைகளை ஆமோதிக்கின்றன.

2. தக்ஷத்வரபங்க சமயம் பீதியினால் ஓடிக் கொண்டிருந்த விஷ்ணுவை சிவாவதார பூதனான வீரபத்ரன் ஜயித்தான்.

3. "सत्यं सत्यं पुनस्सत्यं उद्धृत्य भुजमुच्यते । वेदशास्त्रात्परंनास्ति न दैवं केशवात्परं" என்று ஸகல ரிஷி சபா மத்தியில் வேதவ்யாஸர் சொன்னபொழுது, அவருடைய புஜம் (ஸ்தம்பித்துவிட்டது)?

4. ஹிரண்யாஸுரனின் இரத்தம் குடித்ததினால் மதம் பிடித்த நரஸிம்மன் லோகத்தைக் கஷ்டப்படுத்தும் காரியத்தை ஆரம்பித்தபொழுது எல்லா தேவதைகளும் சிவனின் உத்தரவின்படி வீரபத்திரன் சரபனாய் நரசிம்மனின் பாதங்களைப் பிடித்துத் திருப்பவும் நரஸிம்மன் இரத்தத்தை வாந்தி செய்து பிறகு வீரபத்திரனிடம் மன்னிப்புக் கேட்கவும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இனிமேல் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டு ருத்ர தேவனிடத்தில். போய் நடந்த விஷயங்களை விக்ஞாபித்தான்.

5. ராவணனின் வதத்தினாலுண்டான பாப பரிஹாரத்திற்காக ராமன் ஸேதுவில் (ராமேச்வரத்தில்) லிங்கம் ப்ரதிஷ்டை செய்தான். இந்த உதாரணங்களினால் ஹரியைக் காட்டிலும் சிவனே ஸர்வோத்தமனென்று ஏற்படுகிறது.

விஜ:- இதுவரை நீங்கள் சிவ சர்வோத்தமத்வத்தை அறிவிக்கும் ஐந்து விஷயங்களும் ஸித்திப்பதில்லை. முதலாவதான த்ரிபுர விஜயம் என்ற விஷயத்தை முதலில் விமர்சிக்கிறோம். நீங்கள் சொன்னதைப் போல், "तेषामसुराणां तिस्रः पुरः आसन् ।"என்ற ச்ருதியில் விஷ்ணு முதலானவர்களை யுத்த வீரர்களாக்கி த்ரிபுராஸுரரைச் சிவன் ஜயித்தான் என்று தெரியவந்தாலும் விஷ்ணு சிவோபஸர்ஜனத்வம் இயற்கையல்ல.

லிங்க:- நீங்கள் சொல்லுவதற்கு ப்ரமாணமென்ன?

விஜ:- "अहं वृणे अहमेव पशूना मधिपतिरसानि," என்னும் ச்ருதியினால் ருத்ரதேவனின் பிரார்த்தனையை அனுஸரித்தே ஹரியின் வரத்தினால் கிடைத்ததென்று தெரியவரும். இன்னும், "ततो मां शरणं गत्वा प्रपेदेनिर्भयो भवान्" अहं देव शुक्रो भूत्वा त्रिपुरस्थाघातयं ॥" என்று கூர்ம புராணத்தில் சிவனைக் குறித்து நாராயணனின் வசனம் ப்ரமாணமாயுள்ளது. அதுபோல மஹாபாரத கர்ண பர்வத்தில், "विष्णुरात्मा भगवतो रुद्रस्यामिततेजसः । तस्माद्धनुर्ज संस्पर्श सविषेहे महेश्वरः ॥" என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது நாராயணனே விசிஷ்யருத்ராந்தர்யாமி ஆகி உள்ளான் என்று தாத்பர்யம் மற்றும், "अद्वितीयं यथामंत्रं तारकं ब्रह्म नामकं । जपित्वा विद्धिमाप्नोति सत्यं सत्यं वदाम्यहं ॥ इदमेव जपन्मन्त्रं रुद्र : त्रिपुर संहृतः ॥" என்ற ஸ்ம்ருதியும், "त्रिपुरं (ताशकः) जग्मिषः पूर्वं ब्रह्मणा विष्णुपंजरं शंकरस्य कुरु श्रेष्ठ रक्षणाय निरूपितं ॥" என்று மோக்ஷ தர்ம வசனங்கள் சொல்லுகின்றன. இதேபோல் பாகவதாதிகளிலும் ஹரியின் அனுக்ரஹத்தினாலேயே ருத்ரதேவன் த்ரிபுராஸுரர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

களை ஜயித்தானென்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு ப்ரமாணங்களிருக்கையில் அவைகள் ஹரியின் ஸர்வோத்தமத்வத்தை விளக்கியிருக்கும் பொழுது நீங்கள் சொன்ன வாதம் எவ்வாறு ஸித்திக்கும்?

லிங்க:- தக்ஷத்வரபங்க காலத்தில் விஷ்ணு தோல்வியடைந்தது உண்மைதானே?

விஜ:- தக்ஷயக்ஞத்திற்கு ஸ்ரீநாராயணன் போகவே இல்லாததினால் ஹரி தோல்வி என்பதற்கு இடமேயில்லை. சில தாமஸ புராணங்களில் தக்ஷயக்ஞத்திற்கு விஷ்ணு வந்திருந்தாரென்று சொல்லியிருந்தாலும் பாகவத புராணத்திற்கு விரோதமான அவ்வாக்யங்கள் ப்ரமாணமானவையல்ல. தக்ஷயக்ஞம்பங்க விஷயமாக முதலிலேயே அறிந்திருந்த ஸ்ரீஹரியும் சதுர்முகப்ரம்ம தேவனும் போகவில்லை என்று, "उपलभ्यपुरैवेत्तौ भगवानब्जसंभवः । नारायणस्य विश्वात्म न तपद्वरमे यतुः ।" என்னும் ப்ரமாணத்தினால் விளக்கமாகத் தெரிவதனால் உமது இரண்டாவது சிவசர்வோத்தம விளக்க ப்ரமையும் நிவாரணமாயிற்று. உமது மூன்றாவது விஷயத்தைப் பரிசீலிப்போம்.

"நாராயணனைவிட உயர்ந்த தெய்வமில்லை, வேத சாஸ்திரத்திற்கு மேலான சாஸ்திரம் எதுவுமில்லை" யென்று இரு கைகளையும் தூக்கிக் கோஷிக்கிறேன். இது ஸத்யம் என்று ஸகல ரிஷிகளின் ஸபை நடவே சொன்ன வேத வ்யாஸரின் புஜங்கள் அசைவற்று நின்றுவிட்டன, என்று நீங்கள் நிரூபித்த விஷயம் அவைதிக விஷயமாக உள்ளது. அது ஸ்காந்த புராண்த்தின் காசி காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஸ்காந்த புராணம் தாமஸ புராணமென்று முதலிலேயே நிரூபித்துள்ளோம். "अवैदिकत्रयंज्ञानं वासिष्ठं सूत्रसंहिता । काशीखंडं परित्याज्यं वैदिकस्य विरोधतः ॥" முதலிய பிரமாணமிருப்பதால் காசி காண்டம் அவைதிக விஷயத்தைப் பற்றியுள்ளதால் அது த்யாஜ்யம் (விடப்பட்டது). "समोवाच व्यासपराशर्यः" முதலான ஸ்ம்ருதியினால் ஸ்ரீபாதராயண வசனத்திற்கு ப்ராமாண்யமிருப்பதினாலும் அங்கு சொல்லப்பட்ட நாராயணனின் பரதத்வத்தைத் தெரிவிக்கும் வாக்கியங்களுக்கு ச்ருதியின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ஆதாரமிருப்பதனால் அவைகளுக்கு விரோதமான காசி காண்டத்தின் வாக்யம் ப்ரமாணமாகாது. ஆகையால் ஸ்ரீஹரியின் ஸர்வோத்தமத்வமே ஸித்திக்கிறது.

விஜ:- நரசிம்ம ஸ்வாமியை வீரபத்திரன் ஜயித்தான் என்று தாங்கள் நிரூபித்த நான்காவது பூர்வபக்ஷம் பொய்யானது. உசிதமற்றது.

லிங்க:- அதை எவ்வாறு நிரூபணம் செய்வீர்கள்?

விஜ:- ந்ருஸிம்மனை சிவனின் ஆக்ஞையின்படி வீரபத்ரன் ஜயித்தானென்பது உமக்கு ப்ரமாணமென்று நீங்கள் நிரூபித்த ஸ்காந்த புராணத்தில் விளக்கப் பட்டுள்ளது. ஸ்காந்த புராணம் தாமாஸபுராணமானதால் ப்ரமாணமாகாது என்று நாம் முன்னமே நிரூபித்துள்ளோம். இப்பொழுது நரஸிம்மனை ஜயித்தவர் யார்?

லிங்க:- வீரபத்ர தேவன்!

விஜ:- அவ்வாறிருந்தால், ப்ரமாணமென்று மதித்திருக்கும் சிவ புராணத்தின் கதியென்ன? சைவ புராணத்தில் ருத்ர தேவனே சரபராய் ந்ருஸிம்மனை ஜயித்தானென்று சொல்லப்பட்டுள்ளது. நரஸிம்மனை வென்றவன் ருத்ரனா? அல்லது வீரபத்திரனா? இருவரில் ஒருவர் என்று நீர் சொல்ல வேண்டிவரும். ருத்ரனென்றால் ஸ்காந்த புராணத்திற்கு விரோதமாகும். இது வெளிப்படை. இவ்வாறிருக்க சுத்தமான, விளக்கமான தாமஸமில்லாத, சரியாக விளக்கியுள்ள ப்ரமாணமென்று, ஸர்வ ஜனங்களுக்கும் ஸம்மதமான ஸாத்வீக ப்ரமாணங்களை நிரூபிக்காமல் எவ்வாறு உமது வாதத்தை ஆமோதிக்க முடியும்? அதல்லாமல் நரசிம்மனை வென்றவன் சிவனென்றாகட்டும், வீரபத்திரனென்றாகட்டும் எப்படி நிரூபிப்பீர்கள்?

விஜயீந்திரர் தமது புத்திக்கூர்மையினால், மஹா பண்டிதரும், வாதமல்லருமான லிங்கராஜேந்திரருக்கு அவரது விளக்கங்களிலேயே சந்தேகம் வரும்படியான முறையில் வாதம் செய்த திறமையைக் கண்டு லிங்கராஜேந்திரன் அயர்ந்து போய்ப் பதில்கூற

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


முடியாமலமர்ந்திருக்க சபையோர் விஜயீந்திரரின் வாதத்திறமை மற்றும் பேச்சுக்களாலும் ஆனந்த பரவசமடைந்து சாந்தமூர்த்தியான யதிகளை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டு மெய் மறந்து மௌனத்துடன் அமர்ந்திருந்தனர். விஜயீந்திரர் தனது வாதத்தை மேலே தொடர்ந்தார்.

விஜ:- ஹிரண்யாஸுரனின் இரத்தத்தைப் பருகினதினால் நரஸிம்மன் உன்மத்தனானான் என்று சொல்வதும், ஸகல லோக ஜனங்களையும் உபத்திரவப் படுத்தினான் என்றும் நிரூபிப்பது சாஸ்திர விரோதமாகும். மற்றும் சரியானப் ப்ரமாணமற்றது. "सर्वभूतस्थमेकं नारायणं कारणरूपं । शोक मोह विनिर्मुक्तं विष्णुं ध्यायन्न श्रीर्दधति ॥" அதாவது நாராயணனுக்கு சோகம், மோஹம் முதலியவைகளில்லையென்று ப்ரமாணங்கள் மிகத் தெளிவாக சொல்லப் பட்டிருக்கையில் நாராயணனுக்கு எந்த மோஹம் வந்தது? நரசிம்மன் ஸகல ஜனங்களுக்கும் உபகாரியென்று அநேக ப்ரமாணங்களுக்கு விரோதமாகியுள்ளது. என்னும் ச்ருதி வாக்கியங்கள் ஸ்ரீஹரி துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனத் திற்காகவே அவ்வப்போது அவதரிப்பேனென்று கோஷிக்கின்றனவே! லோக கண்டகனும் (லோ சத்ரு), தானே ஜகதீசனென்று அஹங்காரத்தினால் மதம்பிடித்து வெறிகொண்டு தனது பரம பக்தனான ப்ரஹலாதனின் விரோதியுமான துஷ்ட ஹிரண்யகசிபுவின் வதத்திற்காக அவதரித்து லோக கல்யாணத்தையுண்டுபண்ணின பரம மங்கள மூர்த்தியான ந்ருசிம்ம ஸ்வாமியை லோக உபத்திரவம் செய்பவன் என்று சொல்வது மஹா பெரிய குற்றமல்லவா? இந்த உமது வாதம் அநேக ச்ருதி, ஸ்ம்ருதி, புராணம், ப்ரமாணங்களுக்கு மிகமிக விரோதமானதால் உமது வாதத்தில் துளிகூட உண்மையில்லையென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். (வெளிப்படை) ஆகையால் இதைப்போலவே சரபனால் நரசிம்மன் மரணமடைந்தான் என்பதும் ஏராளமான ப்ரமாணங்களுக்கு விரோதமானது. "नृसिंहं तापनीय"த்தில், "येष देहांते तमसः परपंधाम प्राप्नुयात् । यत्र विरजो नृसिंहो

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


भासते तत्र उपासते तत्सदृशा मुनयः ।" அதாவது ஸ்ரீநரசிம்மன் எங்கு விராஜமானமாக இருக்கிறானோ அங்கு தாமஸத்திற்கு இடமே இல்லை. அந்தப் பரந்தாமத்தில், வைகுண்டத்தில் அவனிருப்பது வெளிப்படை. அப்பேர்ப்பட்ட நரசிம்மனுக்கு மரணம் முதலிய எந்தத்தாபத்ரயமும் இல்லாததினால் மரணத்தை மீறினவனான காலனுக்கே காலஸ்வரூபனான ஸ்ரீநரசிம்மனைச் சரபன் எவ்வாறு கொல்ல முடிந்தது?

இன்னும் சுபநியோப க்ரமத்தின் "नृसिंहस्य केवलं ज्योतिरेकमनाद्यंतं" முதலிய ப்ரமாணங்களில் சொல்லப்பட்டிருப்பதைப் போல ந்ருஸிம்மன் அநாதி மற்றும் அநந்தன் என்று தெரியவருகிறது. அனாதியும் அந்தமில்லாதவனுமானவருக்கு மரணமெங்கிருந்து வந்தது? அவனுக்குப் பிறப்பு இறப்பு இவைகளுண்டா? இவைகளெல்லாவற்றையும் யோசித்தால் நரஸிம்மன் சரபனால் ஸம்ஹரிக்கப்பட்டானென்பது ப்ரமாணமற்றது என்பது புலப்படும். இது மாத்திரமா என்ன? அநேக புராணங்களில் நரசிம்மனே சரபனை ஸம்ஹாரம் செய்தாரென்று ப்ரமாணங்களுள்ளன.

லிங்க:- உமது வாதம் விசித்ரமாயுள்ளது. எங்கே? ந்ருஸிம்ஹன் சரபனைக் கொன்றானென்பதற்குச் சில ப்ரமாணங்கள் உதாஹரணமாகக் கொடுங்கள் பார்ப்போம்.

விஜ:- ப்ரமாணங்களுக்கு ஒன்றும் குறைவில்லை கேளுங்கள்.

(1) "पतितं भीममत्युग्रं नृसिंहः शरभं रुषा । जघान निशितैस्तीक्ष्णैः नखैर्नखवरायुधः ॥ निहिते शरभे तस्मिन्मर्म शैदे मधुनिषूधनः । तुष्टयुः पुण्डरीकाक्षं देवाः देव वर्षग्रस्तथा" । (पद्मपुराण)

तात्पर्यः- தன் மீது யுத்தத்திற்கு வந்த க்ரூரனான சரபனை நரஸிம்ம ஸ்வாமி கூர்மையான நகத்தினால் ஸம்ஹாரம் செய்ததினால் ஸந்துஷ்டரான தேவதைகள் நரஸிம்மனை மகிழ்வித்தனர்.

(2) "निकृत्य बाहूरू शिरः वज्रकल्प मुखैर्नखैः मेरु पृष्ठे नृसिंहेन शरभश्चाथ सोपऽतत ।"(वामन पुराण)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தாத்பர்யம்:- நரசிம்ம ஸ்வாமி சரபனை வஜ்ரத்தைப் போன்ற நகங்களினால் சம்ஹாரம் செய்து மேருமலையின் பாகத்தில் வீழ்த்தினார்.

(3) "सचंचुपंचाननमष्टपादं.......... विदार्य च नृसिंहस्तं हिरण्यकशिपुं यथा" என்னும் கூர்ம புராணம் இதே அர்த்தத்தை விவரிக்கின்றது.

(4) सतमभ्यागतं दृष्ट्वा नृसिंहः शरभं रुषा । नखैर्विदीर्णयामास हिरण्य कशिपुंयथा ॥" (आग्नेय पुराण)

தாத்பர்யம்:- தன்னுடன் யுத்தத்திற்கு வந்த சரபனை நரஸிம்மன் ஹிரண்யகசிபுவை எப்படி சம்ஹரித்தானோ அதுபோல நகங்களினால் பிளந்தான். இவ்வாறு நரசிம்ம ஸ்வாமி சரபனை சம்ஹாரம் செய்தாரென்று புராணங்கள் சொல்லுகின்றன. இது மாத்திரமல்ல.

(5) "हरिं हरंत मनुयंति देवाः विश्वस्येशानं वृषभं मतीनां" என்னும் ச்ருதியினால் ஈசான சத்பிதனான ருத்ரனை நரசிம்மன் (ஹரி) பகவான் ஸம்ஹாரம் செய்தாரென்று வெளிப்படையாகும்.

"विश्वस्य" விச்வஸ்ய என்பதில் "प्रथमार्थे षष्टे (विश्वे)" விச்வே தேவா: ஈசானம் ருத்ரம், ஹரந்தம்: ஸம்ஹரந்தம், ஹரிம்-நாராயணம், என்று ச்ருதியின் அர்த்தம்.

அதாவது: விச்வே தேவதைகள் ஈசான சப்தத்தினால் அறியப்படும் சிவனை ஸம்ஹாரம் செய்த ஹரியை அனுஸரித்துப் போவார்கள் என்று தாத்பர்யம். அதாவது ஹரியைப்பின் பற்றுவார்கள்.

லிங்க:- ஸ்வாமிகளே! தமது வ்யாக்யான முறை ருசிகரமாக உள்ளது. அந்த ச்ருதிக்கு நீங்கள் சொன்ன பிரகாரம் ஏன் அர்த்தம் செய்ய வேண்டும்?

ஹரிம்-நாராயணம், ஹரந்தம்-ஸம்ஹரந்தம், ஈசானம்-ருத்ரம், விச்வே தேவா: அனுயந்தி, என்றால் நாராயணனை ஸம்ஹரித்த ருத்ரனை விச்வே தேவதைகள் பின்பற்றுகின்றனர் என்று ஏன் அர்த்தம் செய்யக்கூடாது?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


விஜ:- அப்படி அர்த்தம் செய்தால் மற்ற ச்ருதி-ஸ்ம்ருதிகளுக்கு விரோதமேற்படுகிறது. "ब्रह्माणमिदं रुद्रं च यमं वरुणमेव च । निहत्य हरते यस्मात्तस्माद्धरिरिहोच्यते," என்னும் ஸ்ம்ருதியைப் போல ப்ரம்ம ருத்ராதிகளை ஸம்ஹரிப்பதே ஹரி சப்த ப்ரவ்ருத்தி நிமித்தமென்று அர்த்தமாவதால் நீங்கள் சொன்னபடி அன்வயம் செய்யமுடியாது. சரியாகாது.

லிங்க:- அப்படியானால், "ஹரந்தம்" என்னும் பதத்திற்கு ப்ரயோஜனமென்ன?

விஜ:- ஹரி என்ற பதம் ரூடிமாத்ரமல்ல, ஆனால் மஹாயோக வித்வத்ரூடியினால் ஹரி என்ற பதம் விஷ்ணுவைச் சொல்லும் பதம் என்று தெரிவிப்பதற்காகவே "ஹரந்தம்" என்னும் பதப்ரயோகம் இருப்பதினால் இந்த உமது ஆக்ஷேபம் சரியாவதில்லையால் மேலே நிரூபித்த ச்ருதி ஸ்ம்ருதிகளுக்கு விரோதமான உம் வாதம் ஸித்திக்காது. இதிலிருந்து நரசிம்மனை வீரபத்ரனாகட்டும், ருத்ரனாகட்டும் ஜயித்தானென்னும் உங்கள் வாதம் உண்மையல்ல.

லிங்க:- "ஸேதுவில் (ராமேச்வரத்தில்) லிங்கப்ரதிஷ்டையை ராமசந்திரன் செய்தானென்பதையாவது ஒப்புக் கொள்ளுவீரா அல்லது அதுவும் அப்ரமாணம் தானா? என்று கர்ஜித்தார்.

விஜ:- சேதுவில் ராமசந்திரன் லிங்க ப்ரதிஷ்டை செய்த மாத்திரத்தினால் சிவனுடைய உத்தமத்துவம் ஆகட்டும், ஹரியின் தாழ்மையையாவது நிரூபித்ததாக ஆகிவிடாது.

லிங்க: கூர்ம புராணத்தில் ராமர் ராவணனை வதம் செய்வதினால் உண்டான ப்ரம்மஹத்யாபாப பரிஹாரம் செய்து கொள்ள லிங்க ப்ரதிஷ்டை செய்த விஷயம் கொஞ்சம் விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு தேவதையைப் பிரதிஷ்டை செய்து வரம்பெற வேண்டுமானால் அந்த தேவதை அவனைவிட உத்தமனென்று தெரியும்மென்றாவதில்லையா? ராமன் லிங்கப்ரதிஷ்டை செய்து பூஜை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


செய்ததினால் நாராயணனேயான ஸ்ரீராமனைக் காட்டிலும் சிவனே ஸர்வோத்தமன் என்று ஸித்திக்கிறது!

விஜ:- முன்னொரு சமயம் ருத்ரதேவனுக்கு வரம் கொடுத்திருந்ததினா்லும் சிவனுடைய வேண்டு கோளின்படியே தான் லிங்கப்ரதிஷ்டை மற்றும் பூஜைகளை ஸ்ரீராமசந்திரன் செய்திருப்பதினால் நீங்கள் சொன்ன பிரகாரம் ப்ரமாணமிருந்தாலும் ஹரி ஸர்வோத்தமத்வத்திற்கு இதனால் கெடுதல் ஒன்றும் இல்லை. பக்த பராதீனனான ஹரி "अहप्यग्रवतारेषु त्वां च रुद्र महाबल । तामसां मोहनार्थं पूजयामि युगे युगे ।'' என்று ருத்ரதேவனுக்கு வரம் கொடுத்திருப்பதினாலும், "अन्यदेवं वरंदेहि.......... मर्त्योभूत्वा भवानेंव मम साधय केशव । मां भजस्व च देवेश । वरं मत्तो ग्रहाणच ॥ एनाहं सर्व. भूतानां पूज्यात्पूज्यतरोऽभवं । देवक्षयीतिरेषु मानुषत्वमुपेमिवान् । त्वामे वाराधमिष्यामि ममत्वं वरदोभव ।" என்பதாக வ்ராஹ புராணத்தில், ருத்ர கீதையில் மற்றும் கூர்ம புராணத்திலும் கூட சிவனின் ப்ரார்த்தனையின் பேரில் ஹரி வரமருளிய காரணத்தினால், கிருஷ்ணாவதாராதிகளிலும் கூட அர்ஜுனனுக்குத் தேரோட்டும் சேவையைச் செய்தது போல சரணார்த்திகளிடம் தனக்குள்ள அன்பைக்காட்டும் பொருட்டு ராமாவதார காலத்திலும் சேதுவில் லிங்கப்ரதிஷ்டை பூஜை முதலியவைகளைச் செய்த ஸ்ரீஹரிக்கு ஒருபொழுதும் தாழ்வு வருவதில்லை. மற்றும் ஹரியின் பரதத்வத்திற்கு அதனால் குறைவில்லையென்பது தீரயோசிக்கும் பெரியோர்களின் பொறாமையில்லாத நோக்கமுடையவர்களுக்குத் தெரியாமலிருக்காது. விஸ்வாமித்திரர், அகஸ்த்யர், பரத்வாஜர், வசிஷ்டர் முதலானோர்களுக்குச் செய்த நமஸ்காரத்தைப் போல லிங்க ப்ரதிஷ்டை, வரம்பெறுவதானவை களை நடித்துக்காட்டிய ஸ்ரீஹரியினுடைய ஸர்வோத்தமத்திற்கு ஹானி உண்டாவதில்லை.

இது மாத்திரமல்லாமல் "न कर्मणा वर्धति नो कनियान् । स एष सर्वभूतांतरात्माऽपहत पाप्मा दिव्यो देव एको नारायणः ।" नमां कर्माणि लिंपंति न मे कर्मफले स्पृहा" முதலிய ச்ருதி ஸ்ம்ருதிகள் நாராயணனுக்குப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



புண்யபாபம் ஒட்டுவதில்லை என்று தெரிவிப்பதால் ப்ரம்ம ஹத்யா பாப, சம்மந்தமே ஸ்ரீராமசந்திரனுக்கு வருவதில்லை என்றிருக்கையில் உமது வாதத்தினால் எந்தவிதத்திலும் ஹரிஸர்வோத்தமத்வத்திற்கு இழுக்கு ஏற்படாது இவைகளினால் ஸ்ரீ ஹரியே ஜகத்ஸ்ருஷ்டி கர்த்தாவானவனும், சுதந்திரனும், குணபூர்ணனுமான பராத்பர பரம் பொருள் என்று ஸித்தித்ததென்றாயிற்று.

விஜயீந்திரர் தங்குதடையின்றி ஜயிக்கப்படாமல் மதுரமான கம்பீரமான வாணியினால் விதவிதமான ப்ரமாணங்களை உதாரணமாகக் காட்டித் திறமையுடன் லிங்க ராஜேந்திரரின் வாதத்தைக் கண்டனம் செய்யவும் ஸபையோரனைவரும் ஆனந்தத்தை வெளிப்படுத்தி மனதார விஜயீந்திரரைத் துதிக்கவாரம்பித்தனர். லிங்கராஜேந்திரன் தமது வாதத்திறமை, பாண்டித்யம், இவை விஜயீந்திரர் முன் எதிர்க்க முடியாது போனாலும் சற்றுகூட மனம் தளராமல் மறுபடியும் பிடிவாதத்துடன் பல ப்ரமாணங்களைக் தொடுத்துக் கொண்டு வாதத்தை மறுபடியும் தொடர அவருடைய எல்லா வாதங்களையும் விளையாட்டாக என்பது போல விஜயீந்திரல் எளிதில் கண்டனம் செய்து தமது வாதத்தை ஆமோதித்துக் கொண்டிருந்தார். இவ்வாறு எட்டு நாட்கள் வாதம் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் வெற்றி (ஜயலக்ஷ்மி) மாலை விஜயீந்திரருக்கே கிடைத்தது. அற்புதமான அந்த விவாதத்தைக் கேட்ட ஆயிரக்கணக்கான ஜனங்கள் விஜயீந்திரரின் வாக்வன்மையைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தனர். வாதத்தின் கடைசி தினமான ஒன்பதாவது நாள் தஞ்சாவூரின் மஹா ராஜா ஸ்ரீஸுரேந்திரருடன் கும்பகோணத்திற்கு, விஜயீந்திர-லிங்கராஜேந்திர-வாக்யுத்தத்தின் விறுவிறுப்பைப் பார்க்க வருகிறார்களென்னும் செய்தி எல்லா இடங்களிலும் பரவிற்று. ஊரில் இதே பேச்சு. வாதத்தில் கேட்ட விஷயங்களைப் பற்றிய பரஸ்பரம் சர்ச்சை மேலும் எங்கு பார்த்தாலும் விஜயீந்திரர் புகழ் பரவிற்று.

## 22. விஜயலக்ஷ்மி விஜயீந்திரருக்கு அனுக்ரஹம் செய்தாள்:

### (விஜயீந்திரர் வெற்றிவாகை சூடினார்)

தஞ்சாவூரரசன் ஸ்ரீஸுரேந்திரருடன் கும்ப கோணத்திற்கு வந்தது வாக்யார்த்தத்திற்கு மேலும் களை

CC-0..In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

கட்டியது எனலாம். நகரத்தினர்களின் குதூகலம் அபாரமாயிற்று. வாதவிவாதத்தின் நாட்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டபடி இன்று விவாதத்தின் கடைசி நாள். வாதத்தில் ஜயலக்ஷ்மி யாருக்கு மாலை சூட்டுவாள்? என்ற விஷயத்தில் தர்க்க-விதர்க்கங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஸ்ரீவிஜயீந்திரரே வெற்றிவாகை சூடுவார் என்று சிலர் சொல்லுகின்றனர். லிங்கராஜேந்திரர் பக்ஷத்தைச் சார்ந்தவர்கள் இன்றுவரை நடந்த வாத்தில் விஜயீந்திரர் கை உயர்ந்திருக்கலாம். ஆனால் இன்று நமது குருகளின் வாதத்தின் முன் விஜயீந்திரர் எதிர்த்து நிற்கமாட்டார் என்று வீரியம் பேசிக்கொள்ளுகின்றனர். வெற்றி-தோல்வி பரமாத்மாவின் வசமானது! நம்முடைய கலகத்தினால் என்ன ப்ரயோஜனம்! "स्पष्टमग्रे भविष्यति ।" என்று சில ஸாதுஸ்வ பாவமுடையவர்கள் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். கும்பகோணத்தின் ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு வீட்டிலும் இதே பேச்சு.

காலையில் ஏழுமணி. இரண்டு ஸ்ரீபாதங்களவரும் காலை அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அமர்ந்திருக்கின்றனர். தஞ்சாவூர் மஹாராஜா செவ்வப்ப நாயக்கர் வினயத்துடன் கைகூப்பிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். அநேக பண்டிதர்கள் நிரம்பியுள்ளனர். மஹாராஜனின் விக்ஞாபனத்தின்படி ஸ்ரீவிஜயீந்திரர் அன்று வரை நடந்த வாத விவாதத்தின் விஷயத்தை விவரித்தார். ஸ்ரீஸுரேந்திரரும் மஹாராஜரும் எல்லாவற்றையும் கேட்டு மகிழ்ந்தனர். தங்கக்கோலுடன் வாயில் காப்போன் ஒருவன் வணங்கி விக்ஞாபித்தான்! "யதிச்சக்ரவர்த்திகளே, ஜயமாகட்டும்! கும்பேச்வர தேவாலயத்தில் இன்றைய வாதத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் தயாராகியுள்ளன. பெரிய ஸ்ரீபாதங்களவருக்கும் தங்களுக்கும் தனி ஆஸனங்கள் ஏற்பாடாகியுள்ளன. நகரத்தார்கள், நடுவர்கள் ஸ்ரீயர்வகளின் வருகைக்காக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக இவ்வூர் பிரமுகர் ஒருவர் வந்து தெரிவித்துள்ளார். திக்விஜயம் செய்தருள வேண்டும், பராக்!" என்றான்.

இரண்டு யதிவர்யரும் எழுந்து புறப்பட ஆரம்பித்தனர். ஸ்ரீஹரியின் லீலாவிநோதங்களை இனிமையான குரலில் பாடிக்கொண்டே ஸ்ரீபுரந்தர தாஸரின் புத்திரரான குரு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



புரந்தரவிட்டலதாஸர் வந்து, "நேரமாயிற்று, புறப்படவேண்டும் பராக்! என்று சொல்லவே, இரு ஸ்வாமிகளும் பல்லக்கில் அமர்ந்தனர்.

மஹாராஜா திவ்யமான குதிரை மீது அமர்ந்து புறப்பட்டார். ஊர்வலம் கும்பேச்வரன் கோவிலையடைந்தது. நகரத்தார் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர், கோவிலில் வாதத்தைப் பார்க்கும் ஆவலுடன் ஜனஸமூகத்தைக் கண்டு அரசன் ஆச்சரியமடைந்தான். அதே சமயம் சிவசந்யாஸிகளும் வருகை தந்தார். எல்லோரும் தங்கள் தங்கள் இருக்கையை அலங்கரித்தனர்.

ஸபையோரில் ஒருவர் எழுந்து பேச ஆரம்பித்தான் - "வணக்கத்திற்குரிய ஸ்ரீபாதங்களவர்களே! லிங்க ராஜேந்திரரே, ஆஸ்திகரே, இன்றை தினம் நமக்கு ஒரு மஹா பெரிய நாள் என்று சொன்னால் அது தவ்றாகாது. ஸ்ரீவிஜயீந்திரரின் தயவினால் மஹாதபஸ்விகளும், வித்யா விசாரதரும் பூஜ்யருமான பெரிய ஸ்வாமிகளின் தரிசனம் பெறும் பாக்யம் நமக்குக் கிடைத்துள்ளது. நம்மை ஆளுகின்ற மஹாப்ரபு பண்பாடு, தர்மப்ரசாரம், தர்ம ஸம்ரக்ஷணை முதலிய காரியங்களில் எவ்வளவு சிரத்தை கொண்டுள்ளார் என்பதற்குத் தானே இவ்விடத்திற்கு திக் விஜயம் செய்து இந்த வாதவிவாதத்தைப் பார்ப்பதில் பங்கெடுத்துக் கொள்வதே அத்தாட்சியாக உள்ளது. இது நமக்கெல்லாம் பெருமையை அளிக்கின்றனது. உங்கள் யாவருக்கும் கடந்த எட்டு நாட்களாக ஸ்ரீலிங்க ராஜேந்திரரைப் போல வாதமல்லருக்கும் ஸ்ரீவிஜயீந்திர யதிவர்யருக்கும் இடையே நடந்து வரும் வாதவிவாதம் தெரிந்ததே. இன்று முன்பு ஏற்படுத்திய நிபந்தனைப்படி வாதத்தின் கடைசி நாள். இன்று வாதம் ஒரு தீர்மானத்திற்கு வருமென்று எதிர்பார்த்து வாதம் ஆரம்பிக்கலாமென விஞ்ஞாபிக்கவே ஜனங்கள் கரகோஷத்தின் மூலம் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். சபையோரின் சார்பாக இருபக்கத்தினரையும் வேண்டிக்கொள்ளுகிறேன் எனத் தெரிவித்தான்.

லிங்கராஜேந்திரர் சிரித்துக் கொண்டே ஆணவத்துடன் நடுவர்கள் இன்றே வாதத்தின் கடைசி நாள் என்று அறிவித்தது ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது. பரமசிவனின் தயவினால் இன்னும் வெகு நாட்கள் வாதிக்க

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வல்லவன் என்னும் தைரியம் எனக்குள்ளது. ஸம்பூர்ணமாக நாம் பதிலே சொல்ல முடியாமற்போகும் நிலைமை வரும்வரை தீர்ப்பு எவ்வாறு கூற முடியும்? ஸ்வாமிகளே, நடக்கட்டும் வாதம்! என்று கோபத்தினால் ஹுங்காரம் செய்தார். விஜயீந்திரர் சிரித்த முகத்துடன் வாதத்தைத் தொடங்கினார். அதற்குள் சைவ ஸந்நியாஸிகள் நடுவில் குறுக்கிட்டு அந்த வாதத்தைக் கண்டனம் செய்யத் தொடங்கினார். விஜயீந்திரர் அதற்குச் சமாதானம் சொல்லித் தமது வாதத்தை ஆமோதித்துப் பேசுகையில் மறுபடியும் லிங்கராஜேந்திரர் உரக்கப்பேசத் தொடங்கினார். சபையில் சலசலப்பு ஏற்பட்டது. நடுவர்கள் குறுக்கிட்டு சபைவிதிகள், வாதக்ரமங்களின் நிபந்தனைகளை நினைவூட்ட வேண்டி வந்தது. இருந்தபோதிலும் லிங்கராஜேந்திரர் அதைப்பொருட்படுத்தவில்லை. இதுவரை கிரமப்படி வாதித்துக் கொண்டிருந்தவர் திடீரென்று இவ்வாறு விதண்டவாதத்திலிறங்கவும் காரணமென்னவாயிருக்கலாம் என்று ஜனங்கள் ஆச்சரியப்படலாயினர். சபையில் ஒரே கோலாகலம்! நிலைமை மோசமாகுமென்றறிந்த ஸ்ரீவிஜயீந்திரர், ஸபையோரை நோக்கி எல்லோரும் அமைதியுடன் வாதத்தைக் கவனிக்க வேண்டுமென்றும், சபையின் கௌரவத்தை மீறினால் இதுவரைக்கும் நடந்த வாதவிவாதம் வீண் என்றும் ஸ்ரீஹரியினனுக்ரஹத்தினால் எதற்கும் பயமில்லை யென்பதாகச் சொன்னார், சபைமறுபடியும் அமைதியாயிருந்தது.

சைவ ஸந்யாஸிகள் லேசுபட்டவரல்ல. நல்ல வாத வல்லநர். ஆனால் தோல்வியின் பயத்தினால் மதிகெட்டு விதண்டாவாதத்திலிறங்கினார். விஜயீந்திரர் சாந்தகுணம் சமாதானத்தைப் பார்த்து தமது. காரியத்திற்கு வெட்கி, முறைப்படி வாதத்தை ஆரம்பித்து தமது பக்ஷஸ்ாதனைக்கு அபூர்வமான ப்ரமாணங்களை உதாரணம் காட்டி மிகவும் அழகான தமது வாதத்தை சபை முன் வைத்தார். லிங்கராஜேந்திரனின் வாத க்ரமத்தைக் கண்டு ஸ்ரீவிஜயீந்திரரே தலையாட்டினார். பிறகு விஜயீந்திரரின் வாக்சாதுர்யம் ஆரம்பித்தது. சைவஸந்நியாஸியானவர் வாதத்தைத் தானே மறுபடி விளக்கி அதைக் கண்டனம் செய்ய ஆரம்பித்தார். அதற்குள் சமயம் ஆகிவிட்டபடியால் அன்றைய வாதத்தை அங்கே நிறுத்த வேண்டியதாயிற்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


குருகளுடன் தனது இருப்பிடமடைந்து தேவதார்ச்சனை முடித்து பிக்ஷை ஏற்றுக்கொண்டார். மறுநாளும் விவாதம் நல்ல வேகத்துடன் நடைபெற்றது. இருவரும் மஹாபண்டிதர்கள், திறமைசாலிகள் 9வது நாள் முற்றுப்பெற வேண்டியவாதம் 10வது நாளும் முடியவில்லை. வாதத்தின் ரஸிகத் தன்மையினால் தஞ்சாவூரரசன் செவ்வப்ப நாயகன் வாதம் முடியும் வரை இருந்தே பிறகு போவதென்று தீர்மானித்தான். மாலையில் லோகாபிராமமாக பேசிக்கொண்டிருக்கையில் மஹராஜா நமஸ்கரித்து, "பூஜ்ய ஸ்ரீபாதங்களவரே, தமது வாதத் திறமையைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன், நாளை ஸ்ரீபாதங்களவரு வெற்றியடை .தைக் கண்டு ஆனந்தமடைவதற்காக மனம் ஆவலுடனிருக்கிறது. அனுக்கிரஹிக்க வேண்டும்!! என்று வேண்டினார். விஜயீந்திரர் குருவின் .முகத்தைக் கேள்வி கேட்பது போல் பார்த்தார். ஸ்ரீஸுரேந்திரர், "அரசே, உனது விருப்பம் நாளை நிறைவேறும்". என்றும், விஜயீந்திரர் ஆக்ஞையை சிரஸாவகிக்கிறேன். ஸ்ரீமூலராமன் நாளை அரசனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வார்" என்று சொல்லவும் யாவரும் மகிழ்ச்சி யடைந்தனர்.

அருணோதய காலத்தில் பவித்ரமான காவேரியில் முழுகி ஸ்நானம் செய்து தனது இருப்பிடமடைந்து காலை அனுஷ்டானங்களை முடித்து ப்ரணவஜபத்தில் த்யானத்தில் அமர்ந்திருந்த விஜயீந்திரரைக் கண்டு ஸுரேந்திரர் ஆனந்தமேலிட உட்கார்ந்திருக்கின்றார். சூர்ய பகவான் கீர்த்தியுடன் உதயமாகிக் கொண்டிருக்கிறான். ஸஹஸ்ர கிரணனென்று பெயருள்ள ஆதவன் தன் பொன்மயமான கதிர்களை விஜயீந்திரர் மீது வீசுவதைக் கண்டால் வெற்றிபெறுங்கள் என்று விஜயீந்திரருக்குத் தனது கரங்களின்னால் (கதிர்களினால்) கைகொடுத்து வாழ்த்துகிறானோ என்று தோன்றுகிறது. குரு புரந்தரதாஸர் இனிமையான உதயராகத்தைப் பாடிக்கொண்டு விஜயீந்திரர் முன் ஸ்ரீஹரியின் மகிமையை வர்ணித்துக் கொண்டிருக் கிறார். ஹரியின் த்யானத்தில் ஈடுபட்டிருந்த யதிகள் கண் திறந்தார். மஹார்ராஜன் வந்திருப்பதை வாயிற்காப்போன் அறிவித்தான். அரசன் நமஸ்கரித்து அமர்ந்தான். வாதத்திற்கு அழைப்பு வந்தது. எல்லோரும் தயாராயுள்ளனர். பரிவாரத்துடன் குருவர்யர்கள். கும்பேச்வரன் ஸந்நிதிக்குச் சென்று மங்களாம்பிகையின் ஸந்நிதியை அடைந்தனர்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

திவ்யாலங்கார பூஷிதளான சிம்மவாஹினி அபயஹஸ்தத்தைக் காண்பித்துக் கொண்டு புன்முறவலுடன் கூடிய முகத்துடன் நின்றிருக்கிறாள். தேவிக்கு விஜயீந்திரர் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து நின்று கொண்டு ப்ரார்த்தனை செய்கிறார். தேவியின் குணங்களை பற்பலவாறு வர்ணித்துக் கொண்டே பக்திமேலீட்டினால் தொண்டை அடைக்கவே, கைகூப்பி நின்றிருக்கும் விஜயீந்திரரைப் பரிவாரம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அன்று விஜயீந்திரரின் முகத்தில் ஏதோ ஒரு அபூர்வ ஸாத்வீக களை (காந்தி) பொங்குகிறது. விசித்ரமான காந்தி! ஸுரேந்திரர் சிரித்துக் கொண்டே சொன்னார், "மகனே தஞ்சாவூருக்கு வந்து உன்னை வரவேற்ற தேவி இன்னும் ஏன் தயைபாலிக்கவில்லையென்று சிந்திக்கிறாயா? இதோ, தேவி அனுக்ரஹிக்கிறார்!" என்றார். சுற்றியிருந்த ஜனங்கள் விஷயம் இன்னதென்று அறியாமல் மெய்மறந்து நிற்கின்றனர். முழிக்கின்றனர். இதென்ன ஆச்சரியம்! தேவியின் கழுத்தில் சோபித்துக் கொண்டிருந்த மல்லிகை மாலை விஜயீந்திரரின் கழுத்தில்! போட்டவர் யார்? ஸுரேந்திர தீர்த்தர் மஹாதபஸ்விகள். தேவியின் அனுக்ரஹத்தை எப்படி அவர் அறிந்தார்? என்றெல்லாம் ஜனங்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மஹாராஜா இந்த அற்புதத்தைக் கண்டு அயர்ந்து போனார். அங்கேயே இருயதிகளுக்கும் சாஷ்டாங்கமாக பாதங்களில் விழுந்தார் விஜயீந்திரர் தேவியின் கருணைக்குப் பாத்திரா? குருபாதரின் ஆசீர்வாதத்தின் பலனிது" என்று மகிழ்ச்சியுடன் தேவியை வந்தனை செய்து, குருவின் பாதங்களின் மீது சிரஸை வைத்து நமஸ்கரித்தார். அன்பு மிகுதியினால் ஸுரேந்திரர் விஜயீந்திரரை ஆலிங்கனம் செய்து கொண்டார். இதைக் கண்டு எல்லோரும் எல்லையில்லா ஆனந்தமடைந்தனர். சபா மண்டபத்தில் நுழைந்து தங்கள் ஆஸனங்களில் அமர்ந்தனர் இரு ஸ்ரீபாதங்களும்.

வாதம் ஆரம்பித்தது. ஸ்ரீலிங்கராஜேந்திரரின் பூர்வ பக்ஷங்கள் யாவற்றையும் ஒன்றுவிடாமல் விஜயீந்திரர் கண்டனம் செய்ய ஆரம்பித்தனர். சைவ சந்யாஸிகளும் எவ்வளவு திறமையுடனும் ரசிக்கும்படியாக வாதம் செய்தாலும், விஜயீந்திரர் அவை யாவற்றையும் வெகு எளிதில் ஒவ்வொரு வாக்கியத்தினாலேயே கண்டனம் செய்து வந்தார். இந்த வாக்-யுத்தத்தை பார்த்துக் கொண்டு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



சபையோர் சித்திரப் பதுமைகளைப் போல் அமர்ந்திருந்தனர். அன்றைய தினம் விஜயீந்திரர் காண்பித்த வாதத்திறமையைக் கண்டு லிங்கராஜேந்திரன் பிரமித்தார். முகம் குறுத்தது. உடம்பு வியர்க்க வாரம்பித்தது. நாக்கு வறண்டது. சைவ சந்யாஸிகளின் சீடர்கள் மெதுவாக ஒவ்வொருவராக நழுவிவிட்டனர்.

லிங்கராஜேந்திரர் இன்று எனது அவஸ்தை முடிந்தது என உணர்ந்தார். தனது வித்யா திறமைகள் வீணாயின. என்ன செய்வது என்று தெரியாமல் தலை வணங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். லிங்கராஜேந்திரர் சபையில் ஒருவருக்கொருவர் ரகசியமாகப் பேசத்தொடங்கினர். கால்மணி நேரமாயிற்று. அரைமணி நேரமாயிற்று. சைவ ஸந்யாஸி தலை தூக்கவில்லை. ஸபையோர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஸ்ரீவிஜயீந்திரர் தமது வாதத்தை முடித்துக் கொண்டு கம்பீரமான வாணியில் சொல்லவாரம்பித்தார். ''பண்டித பூஷணரான லிங்கராஜேந்திரரே, இதுவரை தங்களது எல்லா பூர்வ பக்ஷங்களுக்கும் ஸூக்தரீதியில் சமாதானம் சொல்லி யுள்ளோம். சிவ ஸர்வோத்தமத்வம் ஸ்தாபிக்க நீங்கள் சொன்ன எல்லாவாதங்களும் சரியானவையல்லவென்று எடுத்துக்காட்டியுள்ளோம். இன்னும் உமது வாதங்கள் எதுவும் நிற்கவில்லை. முதலிலிருந்தே நாம் சொன்ன பிரகாரம் ஸ்ரீஹரியின் ஸர்வோத்தமத்வ வாதத்தை உறுதிப்படுத்த அநேக ப்ரமாணங்கள் உதாரணம் கொடுப்போம்.

வேதம், ஸ்ம்ருதி, புராணம் முதலியவைகள் பரப்ரம்மத்தையே புகழுகின்றன. அந்த பரப்ரம்மனே ஸ்ரீமந்நாராயணன். அவர் நினைத்துப் பார்க்கமுடியாத அற்புத. சக்திபடைத்தவர். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளுக்கு காரணமானவர். ஸகல குணபூர்ணன், ஆனந்தமயனும் அவனே. ஸகல வேத சாஸ்திரங்களினால் முக்யமாகத் தெரியப்பட்டவன் ஸ்ரீஹரி. "यतो वा इमानि भूतानि जायंते येन जातानि जीवंति यत्प्रयंत्यभिसंविशंति तद्वि जिज्ञासस्व तद्ब्रह्म"। "भीषास्मद्वातः पवते भीषोदेति सूर्यः ।" भीषास्मादग्नि श्चेंद्रश्च, मृत्युर्धावतिपंचमः" ॥ वेदैश्च सर्वैरहमेववेद्यः ॥ "अग्निर्वै देवानामवमो विष्णुः परमः । "एको नारायण आसिन्नब्रह्मानेशानः ।" नारायणा द्ब्रह्मा जायते नारायणाद्रुद्रो जायते" । "भक्तः परतरं (नान्य त्किंचिदस्तिधनंजय" । "वेदेरामायणे चैव, पुराणे भारते तथा ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

आदावंते च मध्ये च विष्णुः सर्वत्र गीयते" । "आलोड्य सर्वशास्त्राणि विचार्य च पुनः पुनः । ..दमेकं सुनिष्पन्नं ध्येयोनाररयणः सदा । முதலான வேதஸ்ம்ருதி புராணங்கள் ஸ்ரீஹரியே ஸர்வோத்தமனென்று பறைசாற்றுகின்றன.

லிங்கராஜேந்திரரே! நீங்கள் மஹா பண்டிதர் ப்ரபலமான வாதமல்லர். மேலும் புத்திக் கூர்மையுள்ளவரும் ஆவீர். உமது சக்தியை மீறி சிவமதத்தை ஆமோதிக்க வாதித்துள்ளீர்கள். ஸத்ய விசாரத்தை விட்டுவிலகி ப்ரமாணத்திற்கு ஒவ்வாத உமது வாதம் நிற்காமற்போனது உமது புத்தி அல்லது திறமையற்ற தன்மையல்ல. அந்த வாதமே ஸரியில்லாததினால் அது எதிர்த்து நிற்கவில்லை. நீங்கள் கவலைப்படாதீர்கள். நாம் இதுவரை தங்களைப் போன்ற வாதமல்லருடன் வாதம் செய்ததில்லை. உம்முடன் நடந்த வாதப்ரஸங்கத்தினால் நமது மனதிற்கு மிக உல்லாஸமாயுள்ளது. ஸ்ரீஹரி உமக்கு மங்களம் புரியட்டும்.

நடுவர்களுக்குண்டான மகிழ்ச்சி சொல்ல முடியாதது, விஜயீந்திரரின் ஈடு இணையற்ற வாக் வன்மைக்கு வசமாகி ஸ்ரீவிஜயீந்திரரே விஜயசாலிகளானாரென்று மூன்று முறை சபையில் கோஷமிட்டனர். லிங்கராஜேந்திரர் எழுந்து ஸ்ரீவிஜயீந்திரருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "தோல்வியுற்றேன்" என்று அறிவித்தார்.*

## 23. சைவ மடம் வசமாயிற்று மற்றும் ஸகல ஆலயங்களுக்கும் அதிபதியாதல்:

விஜயீந்திரர் நமஸ்கரித்து நின்ற சைவ சந்நியாஸிய வரை கையைப்பிடித்து கௌரவப்படுத்தி பரிவாரங்கள் பக்கம் ஒருமுறை திரும்பினார். இங்கிதமறிவதில் நிபுணரான ஸமஸ்தானத்தின் தர்மாதிகாரி உடனே ஒரு வெள்ளித்தட்டில் ஜோடி ஜரிகை சால்வை கொண்டுவர ஸ்ரீயவர் லிங்கராஜேந்திரருக்குப் போர்த்தினார். அவரைச் சேர்ந்தவர்கள் யாவரும் விஜயீந்திரரின் நல்ல மனதிற்கும், உதார குணத்திற்கும், எருமை பஸவ பிருதாங்கிதரான

*ஸுரேந்திரர் சிஷ்யரின் வெற்றியினால் ஆனந்தத்தினால் நிரம்பி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். அப்பொழுது ஜனங்கள் செய்த ஆரவாரம், "அஜேய விஜயீந்திரருக்கு ஜய்" என்ற மகிழ்ச்சி ஆரவாரம் ஆகாயத்தையெட்டினதைப் போல் காணப்பட்டது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



லிங்கராஜேந்திரருக்கு நா எழவில்லை. யதீச்வரரின் அன்புமிக்க உதார குணத்தைக் கண்டு அவர் மனம் இளகியது. கண்ணீர் கண்களிலிருந்து பெருகிற்று.

விஜயீந்திரர் புன்னகையுடன் எருமை பஸவாங்கிதமான விருதுகள் பெற்ற லிங்கராஜேந்திரரே! தம்மைப் போன்ற உத்தம பண்டிதர் கிடைப்பது மிகக் கடினம். அரிது. உமது பாண்டித்யத்திற்கு நாம் மிகமிக மகிழ்ச்சியடைந்தோம். எமது வித்யா பீடத்தின் வழக்கப்படி உம்மை கௌரவித்துள்ளோம் தவிர, வேறொன்றுமில்லை" என்று சில உபசார வார்த்தைகள் சொன்னார். பிறகு வாதம் ஆரம்பத்தில் சபதம் எடுத்துக் கொண்ட விஷயத்தை நடுவர்கள் சைவ ஸந்நியாஸிக்குத் தெரிவித்தனர். உடனே லிங்கராஜேந்திரர் அமர்ந்திருந்த சிம்மாஸனத்திலிருந்து எழுந்து விஜயீந்திரரைப் பார்த்து எனது சபதத்தின்படி நடக்க நான் தயாராக இருக்கிறேன். இதோ இந்த சிம்மாசனம் தம்முடையது. கும்பகோணத்தின் ஸகல தேவாலயங் களுக்கெல்லாம் தாமே அதிபதி. இதோ தேவாலயங்களின் பூட்டு சாவிகள். ஸ்வாமி! இவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் நமது மடமும் தங்களைச் சேர்ந்ததே. மடத்திலுள்ள எல்லா சொத்துக்களுடன் தம்மிடம் ஒப்பித்து விட்டேன். நான் இனி இந்த நகரத்தை விட்டுப் புறப்படுகிறேன். இனிமேல் ஏற்பாடுகள் ஆகும் வரை ஊரின் வெளிபாகத்திலுள்ள மண்டபத்தில இருக்க அனுமதி அளிக்க வேண்டும். தம்மைப்போன்ற உத்தம குணவானானவரும், உதாரகுணம் படைத்தவருடன் வாதிட்டு தோல்வியடைந்த போதிலும் எனக்குக் கௌரவமென்றே கருதுகிறேன். என்றெல்லாம் சொல்லி, மடம், தேவாலயங்களின் சாவிகளை முத்திரைகளையும் விஜயீந்திரரின் பாதத்தில் சமர்ப்பித்தார். ஸபையோர் கைதட்டித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

ஸ்ரீவிஜயீந்திரர், "தமது மடத்தை எனது ஸ்வாதினத்தில் எடுத்துக்கொள்ள வருத்தத்துடன் சம்மதிக்க வேண்டி யுள்ளது. ஆனால் மடத்திலுள்ள ஸகல சொத்துக்களை நீங்கள் எடுத்துச் செல்லலாம். ஆனால் வெற்றியின் நினைவுச் சின்னமாக நீங்கள் உபயோகித்துக் கொண்டிருந்த மணியையும் மற்றும் விஜயநகர அரசன் உமக்குக் கொடுத்து"

* (Mysore Arc. Report 1944 P.103. Inscription No.25)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தாமிர சாஸனத்தையும் மாத்திரம் நாம் எடுத்துக் கொள்ளுவோம். நீங்கள் பாக்கி பொருள்களை எடுத்துக்கொண்டு புறப்படலாம்'' என்றார். லிங்கராஜேந்திரரும் விஜயீந்திரரின் நல்ல குணங்களை மனதாரப் புகழ்ந்து, உத்தரவு பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

ஜனங்களின் குதூகலம், உற்சாகம், ஆநந்தம் இவைகளுக்கு எல்லையேயில்லை. மறுபடியும் மறுபடியும் விஜயீந்திரருக்கு ஜயம் என்னும் ஜயகோஷம் செய்ய ஆரம்பித்தனர். ஸ்ரீஸுரேந்திரருக்கான மகிழ்ச்சி சொல்லொணாதது. தஞ்சாவூர் அரசனான செவ்வப்ப மஹாராஜா எழுந்து நின்று ஸ்ரீபாதங்களை வணங்கி, ''யதிச்சக்ரவர்த்திகளே; தம்மைப் போன்ற மஹா மகிமையுள்ள வித்வன் மணிகளின் பாத ஸ்பர்சனத்தினால் நமது ராஜ்ய மக்களின் பாபம் விலகிற்று. தம்முடன் பேசி எனது நாக்கு பவித்ரமாயிற்று. எனது வாழ்க்கையில் இப்பேர்ப்பட்ட அற்புதமான வாதவிவாதங்களைக் கேட்டதே இல்லை. நாம் இப்பொழுது கும்பகோணம் மாத்திரமல்ல; எனது ராஜ்யத்தின் மக்களெல்லாருடைய சார்பாக ப்ரார்த்திக்கிறேன். மங்கள மூர்த்தியான குருச்ரேஷ்டரே! தாங்கள் பரமானுக்ரஹம் செய்து கும்பகோணத்திலேயே வசிக்க வேண்டும். மற்றும் இன்றைய விஜய உற்சவம் காரணமாக நாம் அளிக்கும் வரவேற்பையும் மற்றும் காணிக்கையையும் ஏற்றுக் கொண்டு அனுக்ரஹம் செய்ய வேண்டும்,'' என்றார்.

''கர்நாடக ஸாம்ராஜ்யத்தின் படையைக் கன்னியாகுமரிக்கு நடத்திச்சென்று யுத்தத்தில் வெற்றிவாகை சூடித்திரும்பி வரும் ஸ்ரீவிட்டலராயர் இன்று இங்கு வந்துள்ளார். என்ற செய்தி இப்பொழுது தான் தெரியவந்தது. ஸ்ரீராமராயருக்கு ப்ரியபாத்திரரான தமது இந்த விஜயத்தை அறிவிக்கும் ஊர்வலத்தை நிறைவேற்ற வேண்டியுள்ளது. கருணையுடன் அனுமதி கொடுத்தருளுமாறு வேண்டுகிறேன்.'' என்று அறிவிக்கவும் ஜனத்திரள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். விஜயீந்திரர் குருக்களைத் திரும்பிப்பார்த்தார். ''ஸ்ரீமூலராமனின் சித்தம், அரசனின் கோரிக்கையை சிஷ்யோத்தமர் நிறைவேற்றலாம்'' என்று ஸுரேந்திரர் அனுமதி கொடுத்தருளினார். விஜயீந்திரர்,'' ராஜேந்திரா! உனது விருப்பம் போலாகட்டும்'' என்றார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ஸ்ரீவிஜயீந்திரர் தனது குருபாதரைப் பின் தொடர்ந்து செல்ல, இருவரும் கும்பேச்வரனின் தரிசனத்திற்குச் சென்றனர். அங்கு அர்ச்சகர் முதல் மரியாதையை ஸ்ரீயவர்களுக்குச் செலுத்தி மேலும் ஸ்ரீயவர்களின் அனுமதிப்படி இனிமேல் நடப்பதாக வாக்களித்தனர். பிறகு ஸ்ரீமங்களாம்பிகையின் தரிசனமாயிற்று. அங்கு விஜயீந்திரர் தேவியைப் பலவாறு துதித்து தேவாலயத்தின் தலைவாசலுக்கு எழுந்தருளினார். தஞ்சாவூர் அரசனின் ஸகல ராஜமரியாதைகள், விருதுகள் பாவலிகள் தயாராக உள்ளன. யானைகள், ஒட்டகம், குதிரைகள் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வரிசைவரிசையாக நின்றிருக்கின்றனர். கன்யாகுமரியிலிருந்து திரும்பி வந்துள்ள கன்னட சேனை தயாராகி நின்றிருந்தது. சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட வெள்ளி அம்பாரியைச் சுமந்து கொண்டு யானைத் தயாராக நிற்கிறது. எங்கு பார்த்தாலும் ஜனங்களின் கூட்டம் வாத்தியங்களின் முழக்கங்கள் இனிமையான குரலில் வேதபாராயணம் நடந்துள்ளது. செவ்வப்பநாயகர், ஸ்ரீவிட்டலராயருக்கு ஸ்ரீவிஜயீந்திரரின் தரிசனம் செய்து வைத்தார். க்ஷேம லாபங்களான பிறகு ராஜ பக்தி பாவத்துடன் கையைப்பிடித்து இரண்டு ஸ்ரீபாதங்களவர்களை அம்பாரியில் அமர்த்தச் செய்யவும், ஸ்ரீஹரி ஸ்மரணை செய்து கொண்டு ஸ்ரீபாதங்களிருவரும் அம்பாரியிலமர்ந்தனர்: துத்தூரி, வாங்கா, கொம்பு சங்கநாதம் முதலியவைகள் முழங்கின. யதிச்சக்ரவர்த்திகளைச் சுமந்து ராஜ தோரணையில் அம்பாரியானை நிதாமனமாக நடைபோடுகிறது. எங்கு பார்த்தாலும் "அஜேய விஜயீந்திரருக்கு ஜயமாகட்டும்" என்ற கோஷம்! கும்பகோணத்தின் தேவலயாதிபதிக்கு ஜயமுண்டாகட்டும் "என்ற கோஷமும் முழங்கிற்று. மேலும் வைதிக மதஸ்தாபனாசார்யருக்கு ஜயமுண்டாகட்டும்" என்று முழங்கினர். கும்பாபுரத்தின் ஒவ்வொரு வீதிகளிலும் நகர மக்கள் ஸ்ரீபாதங்களின் குணகானம் செய்து கொண்டு புஷ்பவ்ருஷ்டி செய்கின்றனர். ஸுமங்கலிகள் வீடுதோறும் ஸ்ரீபாதரவர்களுக்கு ஆரதி எடுக்கின்றனர். எங்கு பார்த்தாலும் ஒரே ஜன நெருக்கம், கோலாகலம், ஒவ்வொருவர் முகத்திலும் வெற்றிக்குரல் வயதான வைதிகர்கள் ஸமாதானமான மூச்சு விடுகின்றனர். எவ்வளவு உற்சாகம்? இதற்கென்ன காரணமிருக்கலாம்? உண்மை எருமை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmiacademy

பஸவாங்கிதமிருதுள்ள லிங்கராஜேந்திரர் வைதிக மதத்தின் பெயரில்லாமல் செய்து விட்டதலாலல்லவா? இந்த ஸனாதன வைதிகமதமே அழிந்து போய்விடுமோ என்ற பயத்துடனிருந்த ஆஸ்திக ஸனாதனிகளுக்கு லிங்கராஜேந்திரரை வாதத்தில் வென்று வேத மதத்தை ஸ்தாபித்ததினால் விஜயீந்திரரிடம் எவ்வளவு பக்தியும் கௌரவமும் உண்டாயிருக்க வேண்டும்! அதனால்தான் இவ்வளவு உற்சாகம்!!

ஊர்வலம் சைவ மடத்தை நெருங்கிற்று. அங்கு ஒருமுறை ஜயகோஷங்கள் எழுப்பப்பட்டன. சைவ மடத்தை ஸ்ரீயவர்கள் தன் வசமாக்கிக் கொண்டார். பிறகு கும்பேச்வரனின் ஆலய முன் பாகத்தில் ஒரு பெரிய உயர்ந்த மேடையில் இரு யதிகளுக்கும் ஆஸனம் ஏற்பாடு செய்யப்பட்டது. விஜயீந்திரர் அமருவதற்கு முன் வாயிற்காப்போன் சைவ ஸந்நியாஸிகளின் பீடத்தைக் கீழே போட்டு அதன் மீது ஸமஸ்தானத்தின் பீடத்தை வைத்தான் இரண்டிற்கும் மேல் அமர்ந்தார் யதீந்திரர். சபை கூடும் இடம் ஜனங்களினால் நிரம்பி வழிந்தது. வெண் கொற்றக் குடையின் கீழ் திக்விஜய வித்யா பீடத்தில் வீற்றிருக்கும் விஜயீந்திரயதி ராஜரைப் பார்த்தால், இந்திரனின் தர்பாரில் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்துள்ள ப்ருஹஸ்பதி ஆசார்யரோ என்று தோன்றுகிறது! என்ன கம்பீரமான தோற்றம்! அவருடைய சிரித்த அழகான முகம் எவ்வளவு மனோகரமாயுள்ளது! தங்கமயமான தேகக்காந்தி! அந்த அழகை ஸ்ரீகளணிந்துள்ள காஷாய வஸ்திரம் ஒளிவீசச் செய்கிறது. விசாலமான கண்கள் மின்னுகின்றன. ஸாத்வீக ஒளி வீசுகின்ற முக கமலத்தின் மங்களமயமான உருவத்தைப் பார்த்தால், அதன் மனது தானே உல்லாஸமடையாமலிருக்குமா? சபை அமைதியாக உள்ளது. ஒரு ப்ராம்மணோத்தமர் எழுந்து நின்று குருபாதரை வணங்கி பேச ஆரம்பித்தார்.

"ஆஸ்திகர்களே! மதாபிமானிகளே! இன்று நமது கும்பாபுரத்தின் ஜனங்களுக்குப் புனிதமான நாள். வைதிக மதத்தின் வரலாற்றில் இன்றைய நாள் உற்சவங்கள் முதலிய நிகழ்ச்சிகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படத் தகுந்தனவாகும். லிங்கராஜேந்திரன் தமது வித்யா மற்றும் மந்திர சக்தியின் வல்லமையினால் ஸனாதனமான ஹிந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



மதத்தின் வைதிக தத்வத்தையே அடியோடு பெயரில்லாமல் அழித்துவிட முயன்றார். நம்மில் பண்டிதர்கள் என்னமோ குறைவாக இல்லை! ஆனால் சைவ ஸந்நியாஸிகளின் எதிரில் அவர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

அவரை வாதத்தில் ஜயிக்க எண்ணி எவ்வளவு பேர் தோல்வியடைந்து சைவராகவில்லை? வேத மதத்தைப் பின்பற்றுபவர்கள் எவ்வளவு பேர் லிங்கராஜேந்திரரின் பயத்தினால் நமது கிராமத்தைவிட்டே போகவில்லை? நமது த்ராவிட தேசத்தில் இனி வேதமதமே நிற்காதோ என நாம் பயப்படவில்லையா? அவையெல்லாம் இன்றைக்கும் நமது இதயத்தில் ஊறிப்போயிருக்கின்றன. "यदा यदा हिधर्मस्य ग्लानिर्भवति भारत । अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहं" என்ற தெய்வவாக்கை ஸத்யமென்று நிரூபிக்கவே என்பது போல நாம் செய்த புண்ணியத்தினால் ஸ்ரீவிஜயீந்திர குருவரேண்யர் தஞ்சாவூருக்குத் திக்விஜயம் செய்துள்ளார் என்று அறிந்து நமக்கு உண்டான மகிழ்ச்சியை வர்ணிக்க இயலாது.

கும்பகோணத்தின் பெரிய மனிதர்களெல்லோரும் விஜயீந்திரரைச் சரணடைவது என்று தீர்மானித்து, ப்ரதிநிதிக் குழு மகஜர் ஒன்றை ஸ்ரீபாதருக்கு அனுப்பினார்கள். அவர்களின் தலைவனாக நான் போனேன் என்று சொல்ல எனக்கு பெருமையாக உள்ளது. ஸ்ரீயவர்கள் நம்து அவல நிலையைக் கேட்டு இங்கு வந்து வாதம் செய்யச் சம்மதித்தார், வாத விஷயம் நிச்சயமாயிற்று. அன்றைய தினம் ஸ்ரீகளவர் காண்பித்த தவத்தின் சக்தியின் மகிமையை யாராவது மறக்கமுடியுமா? அன்றே நாங்கள் முடிவு செய்தோம்; வேத மதத்தின் வெற்றி உறுதியென்று! ஒன்பது நாட்கள் வர்தமென்று தீர்மானமானது பதினோரு நாட்களாயின. ஒவ்வொரு நாளும் குருவர்யர் வெற்றி கொள்ள ஆரம்பித்தார். அது எப்படிப்பட்ட வாக்யார்த்தம்! எப்படிப்பட்ட போட்டி! என்றும் கண்டும் கேட்டுமறியாத ஸ்ரீயவர்களின் வாதத்திறமை நம்மை ஆநந்தத்தில் மூழ்கவைத்தது. பகவந்தனின் அனுக்ரஹத்தினால் குருவர்யர் லிங்கராஜேந்திரரை வாதத்தில் முற்றிலும் பதில் சொல்ல முடியாமல் செய்துவிட்டார். வேதமதத்தின் மரியாதை காப்பாற்றப்பட்டது. அதனை நிலைநிறுத்தினர். நம்மை யாளும் மஹாராஜர் இவ்விடம் வந்து இந்த விஜய உற்சவத்தை நிறைவேற்றியது நமக்கு மிக்க மகிழ்ச்சிகரமான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விஷயமாயுள்ளது. தபஸ்விகளான பெரிய குருகளின் தரிசனத்தினால் நம் ஊரின் ஜனங்கள் புனிதரானார்கள். நாமெல்லோரும் தலைநிமிர்ந்து நடமாடும்படி செய்த இந்த மஹானுபாவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? ஆனால் நான் நமது வைதிக மண்டலியின் சார்பாக ஸ்ரீகளவர்களுக்கு, "भूयिष्ठां ते नम उक्तिं विधेम" என்ற சாஸ்த்ர வசனப்ரகாரம் நமது இதய பூர்வகமான நன்றியை நமஸ்கார ரூபமாக அர்ப்பிக்கின்றோம். என்று சொல்லி ஸ்ரீயவர்களுக்கு புஷ்பமாலை, ஜோடி சால்வைகளை காணிக்கையாக, அர்ப்பித்தனர். ஜனங்கள் தங்களது மகிழ்ச்சியை விஜயீந்திரருக்கு ஜயகோஷம் மூலம் தெரிவித்தனர்.

சவ்வப்ப நாயக மஹாராஜர் எழுந்து நின்று விஜயீந்திரனின் குணங்களைப் புகழ்ந்து விலைமதிப்பில்லா பண நிதி, தங்கம், வஸ்திரம் முதலியவைகளை அர்ப்பித்துத் தனது பக்தியைத் தெரிவித்து அமர்ந்தார். பிறகு விஜயநகர விட்டலராயர் எழுந்து, "ஸ்ரீரர்மராஜப்ரபுவின் பரம அன்புக்குப் பாத்திரரான ஸ்ரீகளின் இந்த திக்விஜயம் கன்னட சாம்ராஜ்யத்திற்கே பெருமையளிக்கும் விஷயமாக உள்ளது. அதற்காக நம்மெல்லோரின அனந்த நமஸ்காரங்கள்" என்று சொல்லி, அமர்ந்தார். பிறகு நகரத்தார்கள், பண்டிதர்கள் தத்தம் தகுதிக்கேற்றவாறு ஸ்ரீகளவருக்குத் தங்கள் பக்தி புஷ்பங்களால் அஞ்சலி செலுத்தினர். பிறகு நகரத்தினர் ஒருவர் எழுந்து, ஸ்ரீயவர்கள் உபதேசச் சொற்பொழிவாற்ற வேண்டுமென்று வேண்டினார். சபை நிசப்தமாயிற்று. தீர கம்பீர வாணியில் ஸ்ரீபாதர் பேசத்தொடங்கினார்.

தர்மாபிமானிகளே! அரசே! உமது உற்சாகம் பக்தி முதலியவற்றைக் கண்டு நமது இதயம் மகிழ்ச்சியால் நிரம்பியுள்ளது. நம்மிடத்தில் நீங்கள் காட்டும் அன்பு நம்மைப் பேச முடியாமல் செய்கிறது. நீங்கள் சொன்ன எல்லா விஷயங்களுக்கும், ஸ்துதிக்கும் நாம் பாத்திரரல்ல. இவையெல்லாம் (ஸ்ரீஸுரேந்திரரைக் காட்டி) நமது குருபாதங்களைச் சேர்ந்தவை. குருபாதர் நம்மை இந்த மஹா பீடத்தில் அமர்த்தினதாலல்லவோ இவைகளெல்லாம் நடந்துள்ளன! இவையெல்லாவற்றிற்கும் குருபாதருடைய பாதானுக்ரஹமே காரணம் என்று நாம் உறுதியாக நம்பியுள்ளோம். இப்பொழுது நாமென்னமோ உங்களுக்கு அப்படிப்பட்ட பரோபகாரம் செய்யவில்லை! நமது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கடமையின் ஒரு அம்சத்தை நிறைவேற்ற. மாத்திரம் முயற்சித்திருக்கிறோம் என்று சொல்லலாம். வாதவிவாதம், மத ஸ்தாபனம், இவை இந்த வித்யாபீடத்தின் முதல் கடமை! நமது கடமையை நிறைவேற்றிய நம்மை இவ்வளவு தூரம் கௌரவித்திருப்பது உங்கள் உதாரகுணமும் மற்றும் வைதிக மதத்தில் உங்களுக்குள்ள அபிமானத்தையும் ஈடுபாட்டையும் காட்டுகிறது. அதைக்கண்டு நமக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது.

வைதிக மதத்தை நாம் ஸ்தாபித்தோம் என்று நீங்கள் சொல்வது நம்மிடத்தில் நீங்கள் வைத்திருக்கும் பக்தியின் உச்சவரம்பைக் காட்டுகிறது. வேதமதத்தை ஸ்தாபித்தவர் அல்லது ஸ்தாபிப்பவர் நாமல்ல! அது அனாதியானது, அமரமானது. அதை அழிக்க முயற்சி தன்னையே அழிக்கும் முயற்சியே தவிர வேறில்லை. கலியின் வேகத்தினால் ஜனங்களில் அனாதியான இந்த வேத மதத்தில் நம்பிக்கை குறைந்து வரும் போதெல்லாம் பகவான் அவதாரம் செய்து அதை மறுபடியும் ஸ்தாபிக்கிறான். அதுபோலவே அன்றிருந்து இன்றுவரை இது நடந்து வந்துள்ளது. நமது வைதிக தத்துவங்களின் மீது தாக்குதல் விசித்ரமாயுள்ளது. பலவிதமாக உள்ளது. அப்படிப்பட்ட காலங்களிலெல்லாம் ஸ்ரீசங்கராசார்யர், ஸ்ரீராமானுஜாசார்யரைப் போன்ற மஹான்கள் அவதரித்து அதைக் காப்பாற்றிக் கொண்டு வந்துள்ளார்கள்.

பரலோகத்தில் நம்பிக்கையில்லாமல், கேவலம் இஹலோக சுகம் ஒன்றே நிரந்தரமானது, விஷய சுகங்களே வாழ்க்கையின் குறி, அதுவே நமக்கு எல்லாம் என்று தெரிந்து அழிவின் பாதையைப் பின்பற்றுபவரை எச்சரிக்கை செய்து அவர்களை நல்ல மார்க்கத்தைப் பின்பற்றச் செய்யும் பொறுப்பு மஹாத்மாக்களான ஸாது-துறவி மேலும் பாகவதோத்தமரின் மீது உள்ளது. அதனால் தான் அப்படிப்பட்ட ஒரு ஆபத்துக் காலத்தில் ஸ்ரீஹரியின் பரமானுக்ரஹத்திற்கு பாத்ரரான ஸ்ரீவாயுதேவன் ஸ்ரீமத்வாசார்யரென்னும் பெயருடன் அவதரித்து, பரதத்வ விஷயத்தில், சந்தேகத்தால் பீடிக்கப்பட்ட ஸஜ்ஜனங்களுக்கு பரமார்த்த ஸத்தத்வத்தையும் அதன் ரகசியத்தையும் தெரிவிக்க அநேக மதங்களைக் கண்டித்து வேத புருஷனும், வேதத்தைப் பாகங்களாக்கின ஸ்ரீபாதராயண

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்வாமியிடத்திலேயே அனாதியான வேத மதத்தின் ஸத்தத்வை அத்யயனம் செய்து பூத-பவிஷ்யத்-வர்த்தமான (நிகழ்காலம், சென்றகாலம், வருங்காலம்) காலங்களில் அழிவேயில்லாத ஜீவர்களை உய்விக்க உண்மையான மார்க்கத்தைக் காண்பிக்கும் வைதிகத்வைத மதத்தை ஸ்தாபித்து பாரதீய ஜனங்களின் மீது அபாரமான அனுக்ரஹம் செய்துள்ளார்.

அந்த மஹானுபாவரின் பீடத்தில் பரம்பரையாக வந்துள்ள தகுதி குருபாதராயரான ஸ்ரீசந்திரிகாராயர் மற்றும் நம் ஸ்வகுருகளின் அனுக்ரஹத்தினால் நமக்குக் கிடைத்துள்ளது. அதற்கு நாம் கிருதார்த்தராக உள்ளோம். குருபாதரின் ஆசீர்வாதம் அனுக்ரஹ விசேஷத்தின் கவசம் அணிந்து நாம் ஜகத்திற்கு சவால் விடுக்கிறோம். ஜகஜ் ஜன்மாதி கராணனான, இந்திரியங்களால் அறிய முடியாத வஸ்து ஒன்று உள்ளது. அந்த வஸ்து தான் ஸ்ரீஹரி. அவனுடைய வியாப்தி, சிந்தனைக்கெட்டாத அற்புத சக்திகளை அசைத்துப்பார்க்க, எதிர் யாராவது இருந்தால் எமது முன்வந்து நிற்கட்டும்! நாம் அப்படிப்பட்டவருக்கு ஸ்ரீஹரி இருப்பதையும், அவனது அபார மகிமையையும் காண்பித்து அவரை ஒப்புக் கொள்ளும்படி செய்யத் தயாராயிருக்கிறோம். பாரத நாட்டின் எந்த சாஸ்த்ரத்திலாகட்டும் பதினான்கு வித்யைகளிலாகட்டும், வந்து நம்முடன் யார் வேண்டுமானாலும் வாதம் செய்யலாம். 64 க்லைகளின் மந்த்ர வித்யையின் சக்தியால், சாஸ்திரங்களின் பலத்தினால் நாம் நமது வைதிக மதத்தின் மகத்துவத்தை ஸ்தாபிக்கத் தயாராக உள்ளோம்.

இப்பொழுது நம்மை இன்று கௌரவித்த உங்களுக்கு ஸ்ரீமூலராமனான ஸ்ரீஹரி ஸகல மங்களங்களும் கொடுத்தருளட்டும் என்று ப்ரார்த்திக்கிறோம். என்று சொல்லி ஸ்ரீவிஜயீந்திரர் ஓய்வு எடுத்துக்கொண்டார்.

ஜனங்கள் மந்திரத்தின்னால் கட்டுப்பட்டவர் போல் உட்கார்ந்திருக்கின்றனர். அந்த தெய்வீகக் காந்தி, சற்றும் தளராத ஸ்ரீபாதரின் முகத்தாமரையினின்று புறப்பட்ட அம்ருதமயமான சொற்பொழிவினால் மனதில் ஆநந்த அலைகள் வீசிக் கொண்டிருக்கின்றன. ஸுரேந்திரரின் மனதிற்கு உண்டான சந்தோஷத்தை யார்தான் வர்ணிக்க முடியும்? தஞ்சாவூர் அரசன் செவ்வப்பநாயகர் ஆநந்தக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



கண்ணீர் ததும்பிய கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்துநின்று குருகளை நமஸ்கரித்து அமர்ந்தார். பிறகு சபை கலைந்தது. ஸ்ரீகளவர் மடத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

அதற்குள் ஸாரங்கபாணி முதலிய தேவாலய அர்ச்சகர்கள் வந்து இரண்டு ஸ்ரீபாதங்களவர்களை வணங்கி தேவாலயங்களுக்கு விஜயம் செய்து போக வேண்டுமென ப்ரார்த்தித்தனர். ஸ்ரீஸுரேந்திரர் சிஷ்யரைப் போய் வரும்படி ஆக்ஞாபித்துத் தாம் பல்லக்கில் ஸ்ரீமடத்திற்கு எழுந்தருளினார். நகரத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி விஜயீந்திரர் அம்பாரியிலமர்ந்து ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி தேவாலயத்திற்கு விஜயம் செய்து அம்பாரியிலிருந்து கீழே இறங்கி ஆலயத்திற்குள் ப்ரவேசித்தார்.

ஸ்ரீசாரங்க பாணியின் எதிரில் நின்று ஸ்ரீயவர்கள் பக்தியுடன் ஹரியின் பல அவதாரங்களை ஸ்தோத்திரம் செய்தார். அர்ச்சகர்கள் ஸ்ரீயவர்களுக்கு முதல் மரியாதையைச் செலுத்தினர். ப்ரஸாதத்தை ஏற்றுக்கொண்டு ஸ்ரீயவர் மற்ற தேவாலயங்களுக்கும் விஜயம் செய்தார். ஸ்வாமி தரிசனத்தினால் த்ருப்தியடைந்தார். அவரது ஊர்வலம் சைவமடத்தருகே வந்தது. ஜனங்கள் வரிசையாக நின்று ஸ்ரீயவர்களுக்கு ஜயகோஷம் எழுப்பி பொரியை அவர் மீது அர்ப்பித்து தங்களது பக்தியைத் தெரிவித்தனர்.

தம்பூராவின் ச்ருதி ரீங்காரம் செய்யச் சங்கராபரணராக ஆலாபனை காற்றினிலே அலைபாய விஜயீந்திரர் ஒருமுறை பார்த்தார். யார் பாடுகிறாரென்று காலுக்குச் சலங்கை கட்டி தம்பூரா ச்ருதி மீட்டுக்கொண்டு குருபுரந்தர தாஸர் பாதி கண் மூடின நிலையில் பக்தி பரவசமாகிப் பாடுகின்றார். விஜயீந்திரர் புன்னகை செய்தார். தாஸர் கண்களைத் திறந்து ஸ்ரீபாதங்களைப் பார்த்துப் பாடவாரம்பித்தார்.

ராகம்:- சங்கராபரணம். தாளம்-ஜம்பை

விஜயீந்திர யதிய நாகண்டே முதகொண்டே
விஜயடங்குஹூமிஸி கஜவேறி பருதிப்ப (பல்)

நிஜதி லிங்கண்ணன கெலிது மடவனுபடேது
ஸுஜனரபய பரிஹரிஸுத மெரெயுவ (அ.பல்)

ஹரியே பரனெம்பன ஸர்வ சாஸ்த்ர கோவிதன
தரணீசனுக வ்யாஸ முனிய வித்யா ஸுதன

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸுகமுனியாஸ்தான ராஜன வரதேஜன
அகளங்க மஹிம ஸிரி ஸுரேந்த்ரன குவரன (2)

சௌஷஷ்டி கலேகளரிதவன மாயிபீகரன
ஸ்ரீசகுரு புரந்தர விடலன்ன ப்ஜிபன்ன (3)

தாஸர் மெய் மறந்து பாடுகிறார். ஜனங்களும் ஆனந்த பரவசராகக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். விஜயீந்திரர் அம்பாரியிலிருந்து இறங்கினார். மங்கள வாத்யங்கள் முழங்கின. வித்வான்கள் வேத கோஷம் செய்து கொண்டிருக்கின்றனர். சைவ மடத்தின் வாயிலில் ஸுமங்கலிகள் மங்கள கீதையைப் பாடி ஆரதி எடுத்தனர். வயதான ப்ராம்மணர் ஒருவர் கைகொடுத்து ஸ்ரீயவர்களை மடத்திற்குள் இட்டுச்செல்ல சிரித்த முகத்துடன் குருவர்யர் உள்ளே பிரவேசித்தார். ஸ்ரீஸுரேந்திரர் ஓடிவந்து சிஷ்யரை ஆலிங்கனம் செய்து கொண்டார். குருசிஷ்யரிருவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. பேச நா எழவில்லை. மகிழ்ச்சியினால் கண்களில் நீர் ததும்பியது. இந்த குருசிஷ்யரின் அன்பைக் கண்ட ஜனங்களுக்கு மயிர்க்கூச்சலுண்டாயிற்று. கடைசியில் ஸ்ரீஸுரேந்திரர் எப்படியோ ஒருவாறு கண்களைத் துடைத்துக் கொண்டு, "வத்ஸ (புத்ர) இன்று நாம் தன்யரானோம்! உம்மைப் போன்ற சிஷ்யனை அடைந்த நாம் பாக்யசாலி. ஸ்ரீமதாசார்யர் ஸதா உமக்கு மங்களமுண்டாகச் செய்வார். விஜயத்தை அறிவிக்கும் பொருட்டு நாம் இன்று பெற்ற இந்த மண்டபத்திலேயே இன்று தேவ பூஜை நடக்கட்டும்" என்று ஆக்ஞாபித்தார். விஜயீந்திரர் வியத்துடன் "ஆக்ஞை" என்று பதிலுரைத்தார்.

## 24. ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு (இலக்கியத்திற்கு) விஜயீந்திரரின் நன்கொடை:

இனிய குரலில் வேத பாராயணம் நடைபெறுகிறது. வைதிக வித்வான்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் மஹாஸமஸ்தானத்தின் பூஜையைச் சிரத்தையுடனும் பக்தியுடனும் பார்த்துக்கொண்டு அமர்ந்துள்ளனர். மஹாராஜாவிற்காக ஏற்பாடு செய்துள்ள இடத்தில் தஞ்சாவூரரசன் செவ்வப்ப நாயகர் கைகூப்பி உட்கார்ந்திருக்கிறார். ஸ்ரீமூலராமரின் பூஜை கிரமமாகவும் விமரிசையுடனும் நடைபெற்றது. பாகவதர்கள் தாரதம்யத்தை அனுஸரித்து பக்தி கீதைகளைப் பாடுகின்றனர். மஹா நீராஜனமாயிற்று. மந்த்ரபுஷ்பங்களைக் கையில் எடுத்துக் கொண்டு ஸ்ரீவிஜயீந்திரர் ப்ரார்த்தனை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


செய்யத் தொடங்கினார். ஜனங்கள் நிசப்தமாக அமர்ந்திருந்தனர். விஜயீந்திரர் அன்றைய வெற்றியை மூலராமசந்திரனுக்கு அர்ப்பணம் செய்தார். ஹரிதாஸ மார்க்கத்தி ஒளி தருவதைப் போல ஹரிதாஸ மார்க்கத்தின் போடிகரும் ஸ்தாபகருமான ஸ்ரீவ்யாஸ முனிகளின் ப்ரிய சிஷ்யரான ஸ்ரீவிஜயீந்திரர் வாயினின்று இருந்தாற்போல் ஸுளாதி ஒன்று புறப்பட்டது.

அடதாளம்

பரபொம்ம ஹரியு தா நரருபவ தாளித
நரனாத தசரதன வரதேஹதலவதரிஸி
ஸிரிராமனெம்ப புண்ய நாமதிந்த மெரெவுத்திரே
ஹருஷதிந்த லீலே கைது கரெயபந்தகெளிகன

உருயக்ஞ விக்னவனு பரிஹரிஸுவுதகாகி பரபொம்ம
பரிதந்து விக்னவனு பரிஹரிஸித முனிவரன
ஹருஷதிந்த பரமானந்த சரதிய லோலாடிஸித
ஸிரிவிஜயீந்திரராய ஹொரெயலெம்ம நாவாக (1)

மட்டியதாளம்

ஈதனெந்து யக்ஞத விக்னவ பரிஹரிஸுவ
பூதமஹாத்புதரந்திஹ ரக்கஸர
வீதபயனாகி கொல்லுவதெந்தோ
பூதளகச்சரி விஜயீந்திரராமன சரிதா
பூத மஹாத்புதரந்திஹ (2)

ரூபகம்

ஜனகனெம்ப ஜனபதிய மனெகெ ஹோகி
ஜானகிய மனகே ஹருஷவப்பந்தெ
ஜனபத கைவாரு ஸித்திரெமனகெ
அணகவாடி சிவன தனுவ முறித விஜயீந்திரராம
மனகே ஹருஷவப்பந்தே (3)

ஜம்பை தாளம்

இவனாபகனே இவன முனிகளூதவரெல்ல மனதி
பாவிஸி கான தெம்புதரியா எலேரமணி
புவனபாவன நாம ஸிரி விஜயீந்த்ர ராம
ராம எனதி பாவிஸி (4)

த்ரிபுடைதாளம்

ராம ஜானகிய மதுவெயாகி பருவாக பரசு
ராமனெதிரிஸி அவனபில்ல னேரிஸி மெரெத
ராமனெதிரிஸி ச்யாமலாங்க விஜயீந்த்ர
ராம பாலகனே ஹோளா ராமனெதிரிஸி (5)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


### அடதாளம்

நூஸலலி கண்ணுபடெதவன கெலிதே
அஸுளெயெந்து பெங்கொண்டு கந்தள காய்தெ
குஸுரி ஜவகொந்தெ பாணதிந்த நிமிஷதி
அஸனுவிக்ரம விஜயீந்த்ர ராம ஜகதொளு (6)

### ஏகதாளம்

உரவண்ணிஸி பஹ தாடகிய மஹா
கரகள நிமிஷதி கத்தரிஸுயெந்து
ஹிரியரு பேளலெதிரு பேளதேதாயி
கரகள (அஸுரெய) கடிது விஜயீந்திரராம
ஸரஸிஜாஸனவினுதஸிரி மூல ராம (7)

### ஜதெ

லோகா பிராம ஸத்குணதாம
லோககைபூம விஜயீந்திரராம *

வெகு அர்த்தபுஷ்டியுள்ள அழகான ஸுளாதியைக் கேட்டு ஸகலரும் ஆச்சரியமும் ஆநந்தமடைந்தனர். ஸ்ரீஸுரேந்திரர் புதிதாக சிஷ்யரால் இயற்றப்பட்டு மூலராமனுக்கு ஸமர்ப்பித்த ஸுளாதியைப் புகழ்ந்து மகிழ்ச்சியடைந்தார். பக்கத்திலமர்ந்திருந்த ஆசார்யரொருவர் குரு புரந்தரதாஸரைப் பார்த்து, "குரு பாதரின் சிஷ்யரல்லவா?" என்றார். குருபுரந்தரதாஸர் சிரித்து, "ஆமாம், ஆமாம், அதிலென்ன ஆச்சரியம்!" என்றார். ஸ்ரீயவர்கள் ஸ்வாமியை பெட்டியில் எடுத்து வைத்தார். பிறகு எல்லோருக்கும் தீர்த்தம் பிரஸாதம் விநியோகமாயிற்று. செவ்வப்ப நாயகர் வெற்றி விழாவிற்காக கும்பகோணத்திலுள்ள ப்ராம்மண ஸுவாஸிநிகளெல்லோருக்கும் பஞ்ச-பக்ஷபரமான்ன போஜனம் ஏற்பாடு செய்தார். ஆயிரக்கணக்கானவர் அறுசுவையுண்டியால் திருப்தியடைந்து ஸ்ரீயவர்களின் குணகானம் செய்து கொண்டு தத்தம் இல்லங்களுக்குச் சென்றனர். வித்வான்களும் மற்றும் இஷ்டமித்திரர்களுடன் அமர்ந்து இரு ஸ்ரீபாதங்களும் பிக்ஷை ஏற்றுக் கொண்டனர்.

---

* ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்தர் தமது வித்யா குருவான வ்யாஸராஜரைப் போலவே ஹரிதாஸ ஸாஹித்யத்தை வளர்ப்பதற்கு அநேக பத-பத்ய ஸுளாதிகளை இயற்றி கன்னட ஹரிதாஸ மார்க்கத்தைப் போஷித்திருக்கிறார். ஸ்ரீவிஜயீந்திரர் க்ருதிகளில் சிலவை மாத்திரம் கிடைத்துள்ளன. அவருடைய க்ருதிகளெல்லாம் கிடைத்தால் அவை தாஸ மார்க்கத்தின் வளர்ச்சிக்கு உபகாரமாயிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. - நூலாசிரியர்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பிறகு செவ்வப்ப நாயகருக்கு தீர்த்த ப்ரஸாதம் அருளி போஜனத்திற்குச் செல்ல விடையளித்து ஓய்வு எடுத்துக் கொள்ளச் சென்றனர்.

## 25. வித்யா பீடம் நிறுவுதல்:

ஸ்ரீவிஜயீந்திரர் கும்பகோணத்தில் ஸமஸ்கிருத வித்யாபீடம் ஸ்தாபிக்கும் விஷயம் எல்லா இடங்களிலும் ப்ரசாரமாயிருந்ததினால் அந்தப் பெருவிழாவில் பங்கேற்க வித்வான்கள், பண்டிதமணிகள், வித்யாபிமானிகளான நகரத்தார்கள், தார்மிகர்கள் கும்பகோணத்திற்கு வந்து கொண்டிருக்கின்றனர். ஊரின் மக்களுக்கு மிகக் கொண்டாட்டம். கும்பகோண நகரம் விஜயீந்திரரினால் ஒரு வித்யா கேந்திரமாகப்போகிறதென்றும், மகிழ்ச்சியினால் ஜனங்கள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். எங்கு பார்த்தாலும் உற்சாகம், குதூகலம் ஜனங்களில் பரவியுள்ளது. ஸ்ரீகளவர் வந்துள்ள எல்லாப் பண்டிதர்களுடனும், மாணவர் களுடனும், தார்மிகர்களுடனும், சிரித்த முகத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்.

தஞ்சாவூரரசன் செவ்வப்பநாயகர், விஜயநகரத்தின் ராஜப்ரதிநிதி, மதுரை விச்வநாத நாயக்கரின் ப்ரதிநிதி முதலானோர் வந்துள்ளனர். தனது ராஜ்யத்தில் வித்யாபீடம் நிறுவப்பட்டு அதனால் பாரத நாட்டில் தனது கீர்த்தி வளருமென்று மகிழ்ச்சியினால் செவ்வப்ப நாயகர் வித்யாபீடத்திற்காக எல்லாவித உதவிகளும், பணமும் அளித்து, தானே மேற்பார்வை செய்து விழா வெற்றிகரமாக நடைபெற முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்.

கும்பேச்வரன் தேவாலயத்தின் பக்கத்து வீதியையும், சைவ மடத்தையும், காவேரி நதியின் விசாலமான வனத்தை மாந்துளிர் தோரணங்களினால் அழகாக அலங்கரித் துள்ளனர். ஸ்ரீயவர்களின் மடமே வித்யா பீடத்தின் நடுநாயகாகவும், அக்கம்பக்கத்திலுள்ள கட்டிடங்கள், காவிரிக்கரை வனத்தை, வெவ்வேறு சாஸ்த்ரங்கள் கற்பிக்கும் வகுப்புகளாகவும், பண்டித மணிகள், மாணவர்கள் இவர்களின் விடுதிகளாகவும் செய்ய ஏற்பாடாகியுள்ளது.

மடத்தின் முன்பக்கத்தில் ஸர்வ மூலக்ரந்தங்கள், டீகா-டிப்பணி க்ரந்தங்கள், வெவ்வேறு சாஸ்திர க்ரந்தங்கள், ஸ்ரீவேதவ்யாஸர், ஆசார்ய, டீகாக்ருத்பாத, விஜயீந்திர,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வ்யாஸராஜர் முதலியவர்களின் சித்திரங்களினால் அலங்கரித்து, விமரிசையாக அலங்கரிக்கப்பட்ட அம்பாரியைச் சுமந்து யானை ஊர்வலத்திற்குத் தயாராக உள்ளது. முன் பக்கம் ஸ்ரீகளுக்காகப் பல்லக்குத் தயாராக உள்ளது. பண்டிதர்கள், மாணவமணிகள் இனிய குரலில் வேதம், ஸங்கீதம், மத்வவிஜயக்ரந்த பாராயணம் செய்து கொண்டிருக்கின்றனர். பண்டிதக் குழாங்களுடன் ஸ்ரீஸுரேந்திரர் விஜயீந்திரருடன் வந்து வேதவ்யாஸருக்கு கற்பூராரதி எடுத்து உற்சவத்தை ஆரம்பித்துப் பிறகு விஜயீந்திரர் பல்லக்கிலமர்ந்த உடனே வாத்யங்கள் முழங்க ஜயகோஷங்களிடையே உற்சவ ஊர்வலம் புறப்பட்டது. வழியெல்லாம் ஜனங்கள் பொரி, புஷ்பங்கள் இறைத்துள்ளனர். சுமங்கலிகள் ஆரதி எடுக்கின்றனர். விமரிசையுடன் விழா ஊர்வலம் நகரத்தின் முக்கிய வீதிகளின் வழியாக வலம் வந்து ஸ்ரீமடத்தை வந்தடைந்தது. ஸ்ரீபாதங்கள் பல்லக்கிலிருந்து இறங்கி ஆரதியெடுத்த பிறகு வேத வ்யாஸரை உள்ளே கொண்டு வந்து ஆடம்பரமாக அலங்கரித்த மேடை மீது பீடத்திலமர்த்தினர். ஸ்ரீஸுரேந்திரரும் விஜயீந்திரரும் த்யாராக உள்ள ஆஸனத்தில் அமர்ந்து பிறகு தஞ்சாவூர் அரசன் மற்றும் ராஜ ப்ரதிநிதிகள், வித்வான்கள் முதலான யாவரும் அவரவர்களுக்கென்று ஏற்பாடான இருக்கைகளில் அமர்ந்து பிறகு சபையின் நிகழ்ச்சி நிரல் தொடங்கிற்று.

வேத கோஷம், தெய்வ வணக்கங்களானதும் ஸ்ரீயவர்களின் ஆக்ஞைப்படி முக்கியமான பண்டிதரொருவர் எழுந்து நின்று, பாரத நாட்டின் சிறப்பு வித்யா கலைகளின், விஷயம், வித்யா முந்தின வித்யா பீடங்களின் விஷயம், விஜயநகரத்தில் ஸ்ரீவ்யாஸராஜர், சக்ரவர்த்தி கிருஷ்ண தேவராயரின் தந்தையின் ப்ரார்த்தனைப்படி ப்ரார்த்தனை செய்து இதுவரை வெகு கீர்த்தியுடன் நடந்து வந்துள்ள ஸமஸ்கிருத பல்கலைக்கழக விஷயம், ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் ஸ்ரீவியாஸராஜர் ஆக்ஞைப்படி கர்னாடகத்தின் ஸாம்ராஜ்யத்தின் மஹா மண்டலாதிபதி தக்ஷிணபாரதத்தின் வீரபராக்ரம தஞ்சாவூரின் மஹாராஜர், "வித்யா"வின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ள செவ்வப்ப நாயக்கரின் ஸகல உதவியினால் அன்று ஆரம்பிக்கப்போகும் வித்யாபீடத்தின் விஷ்யம், அங்கு பாரதத்தின் ஸகல சாஸ்திரங்களிலும் அத்யயனம் நடைபெற

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் ஸ்ரீஸுரேந்திர-விஜயீந்திரர்களின் கல்வியறிவு, தவம், முதலிய அநேக விஷயங்களை நிரூபித்துச் சொற்பொழிவாற்றினர். ஸபையோர் தமது மகிழ்ச்சியைக் கரகோஷம் மூலம் தெரிவித்தனர்.

ஸ்ரீஸுரேந்திரருக்கு வணங்கி ஜயகோஷத்தினிடையே விஜயீந்திரர் வித்யாபீடத்தை ஆரம்பித்து வைத்து கம்பீரமான வாணியில் சொற்பொழிவாற்றினார்.

''வித்வன்' மணிகளே, தர்மாபிமானிகளே, எமது வாழ்க்கையில் இன்றைய தினம் மிகமிக மங்களகரமானதும், மகத்தான தினமுமாக உள்ளது. தக்ஷிண பாரதத்தின் தஞ்சாவூரின் வரலாற்றில் இது ஒரு புதிய அத்யாயம் ஆரம்பமாகி உள்ளது. அது எல்லா ஸஜ் ஜனங்களுக்கும் சிறப்பாக இந்த ராஜ்யத்தின் ஜனங்களுக்கு மிக்க பெருமைப்படத்தகுந்த விஷயமென்றால் ஆச்சரியமொன்று மில்லை. இப்படிப்பட்ட ஸரஸ்வதி பீடத்தை ஆரம்பிப்பது நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. குருபாதர் ஸ்ரீவ்யாஸ முனிகள் விஜயநகரத்தில் ஸ்தாபனம் செய்த பல்கலைக்கழக விஷயம் நமது மூத்த பண்டிதர் இப்பொழுது தான் உங்களுக்குத் தெரிவித்துள்ளார். அந்த மஹாபீடத்தில் அத்யயனம் செய்த புண்யவான்களில் நாமும் ஒருவர். ஸ்ரீநிவாஸ தீர்த்தரும், நாராயணயதிகள் சமீபத்தில் ரகூத்தம தீர்த்தர் முதலான பல பண்டிதோத்தமர்களான மஹான்கள், ராமாசார்யர், கனகாசலாசார்யர் முதலான மஹா பண்டிதர்கள் மற்றும் ஆயிரக்கணக்கானவர்கள் தேச விதேசத்திய பண்டிதர்கள் ஸ்ரீவ்யாஸராஜரின் ''குலபதித்வ''த்தில் (பல்கலைக்கழக வேந்தர்) அங்கு அத்யயனம் செய்து பெயரும் பெருமையுடைந்துள்ளனர்.

கீர்த்தியின் சிகரத்தைத் எட்டிய குருபாதர் பாரதத்தின் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை வித்யா பீடங்களை ஸ்தாபித்து அவை இப்பொழுதும் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்தத் தென்னாட்டில் வித்யாபீடம் ஸ்தாபிக்கும்படி நமக்கு ஸ்ரீவ்யாஸபகவான் ஆக்ஞாபித்திருந்தார். சில தவிர்க்க முடியாத காரணங்களினால் அது இதுவரை நடத்த முடியவில்லை. இன்று நாம் அந்த மகத்தான காரியத்தை நிறைவேற்றுவது ஒருவிதத்தில் மகிழ்ச்சியையும், மற்றொருவிதத்தில் வருத்தமும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

உண்டாகிறது. குருபாதரின் ஆக்ஞையை நிறைவேற்றுவதனால் சந்தோஷமும், இந்த மஹத்தான காரியத்தை ஸ்ரீவ்யாஸராஜரின் கண்ணெதிரில், அவர் தலைமையில் நடத்தும் பாக்கியம் நமக்கு இல்லாமற்போனதற்கு வ்ருத்தமும் உண்டாகிறது. இன்று அந்த மஹானின் ஸாந்நித்யம் இங்கு இருப்பதாகவே நமது பாவனை. பூஜ்ய குருவர்யரவர்களின் தலைமையில் அவரது ஆசிர்வாத வசனங்களுடன் நாம் இந்தக் காரியத்தை நடத்திக் கொண்டிருப்பதினால், அவரிருப்பதாகவே நாம் உணர்கிறோம்.

இந்த வித்யா பீடத்தில் வேதங்கள், வேதாங்கங்கள், சந்தஸ், வ்யாகரணம், மீமாம்ஸா, ஜ்யோதிஷம், தர்க்கம், காவியம், நாடகம், அலங்காரம், புராணம், தர்ம சாஸ்திரம், வேதாந்தம் முதலியஸகல சாஸ்திரங்கள் யாவும் அத்யயனம் செய்யலாம். இங்கு ஸேவை செய்வதற்காக முன்வந்துள்ள மற்றும் வரவிருக்கும் வித்வான்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் நாம் வரவேற்பளிக்கிறோம். ஆசிரியர்களுக்கு, மாணவர்களுக்கு வஸதி, துணிமணிகள், போஜனம், சம்பளம் முதலிய ஸகல வஸதிகளையும் ஏற்பாடு செய்யப்படும். அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் வந்து இந்த ஸரஸ்வதி பீடத்தை அடைந்து கிருதார்த்தர்களாக வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

ஆஸ்திகர்களே, வித்யாபீடத்தைப் போன்ற மகா பெரிய நிறுவனத்தை நடத்திச் செல்ல எவ்வளவு உதவிகளில், நிதி தேவையென்பது என்பதை நான் தனியாகச் சொல்லத் தேவையில்லை. இந்த மஹாத்தான காரியத்திற்கு நமது ஸமஸ்தானத்தின் பொக்கிஷத்திலிருந்து வரும் வருஷ வருமானத்தில் பாதியை மகிழ்ச்சியுடன் தருகிறோம் என்று தெரிவிக்க மகிழ்ச்சியடைகிறேன். கொடை வள்ளல்கள், கல்வியில் ஊக்கமுள்ளவர்களுமான நம் தஞ்சாவூரின் அரசர் வித்யாபீடத்தின் போஷகரும் ரக்ஷகருமான பொறுப்பை ஏற்கத் தயாராகவிருப்பதை ஸபையோருக்குத் தெரிவிப்பது நமக்குப்பெருமையளிக்கின்றது. இதைப்போல் மற்ற அரசர், மஹாராஜர்களாலும், தனவந்தர்களாலும் விசேஷ உதவி கிடைக்குமென்று நம்பிக்கை நமக்குள்ளது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



இந்த வித்யாபீடத்தின் ஆசிரியர் வேலைக்கு வெவ்வேறு சாஸ்திரங்களின் பண்டிதரான அநேக பண்டிதர்களை இப்பொழுது தெரிவிக்கப்படும். இன்னும் அநேக பண்டிதர்களை நியமிக்க உள்ளோம். சுமார் 300 ஜனங்கள் மாணவர்கள் இங்கு அத்யயனம் செய்ய முன்வந்துள்ளார்கள். இன்னும் அதிகமாக மாணவர்கள் வந்தால் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

கர்நாடக சக்ரவர்த்தியான ஸதாசிவராயர் மற்றும் ஸாம்ராஜ்ய நிர்வாகியான, மருமகன் ராமராயர், நம் ப்ரிய சிஷ்யரான செவ்வப்ப நாயகரின் வேண்டுகோளின்படி இந்த வித்யாபீடத்தின் வேந்தராக பூஜ்ய குருபாதரான ஸுரேந்திர தீர்த்தரும், உபகுலபதி (துணைவேந்தராக நாமும் பாதராயணரின் சேவை செய்ய ஒப்புக் கொண்ட விஷயத்தை உங்கள் முன்பு சொல்லுவதில் மகிழ்ச்சியடைகிறேன் (ஜயகோஷம், கைதட்டல்) விஜயநகரத்தின் சக்ரவர்த்தியின், ராமராயரின், செவ்வப்பநாயகரின், மதுரையின் விச்வநாதநாயகரின் மற்றும் முக்கியமாக வித்வான்கள் மாணவர்கள் மற்றும் தர்மாபிமானிகளின் உதவியாலும் ஒத்துழைப்பினாலும் நமது இந்த வித்யாபீடம் தேசவிதேசங்களில் ப்ரஸித்தியடையச் செய்ய நாம் முயற்சிக்கிறோம். ஸ்ரீமூலராமசந்த்ர ஸ்வாமியின், ஆசார்யரின் டீகாக்ருத்பாதர்-வ்யாஸராஜர் இவர்களின் அருளால் நமது இந்த முயற்சி வெற்றிபெறும் என நம்பியுள்ளோம். பாடப்ரவசனங்கள் சீக்கிரமே ஆரம்பமாய்விடும். இன்றைய உற்சவத்தில் உதவி செய்து ஒத்துழைத்த எல்லோருக்கும் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமியும், மனோ நியாமகருமான ஸ்ரீகும்பேச்வரரும் மங்களம் புரியட்டும்" என்று சொல்லி விடைபெற்று ஓய்வு எடுக்கச் சென்றார். சபையோர் மகிழ்ச்சியுடன் ஜயகோஷமும், கைகளைத் தட்டியும் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பிறகு குலபதிகளான ஸ்ரீஸுரேந்திரல் ஸுக்த சொற்பொழிவு செய்தபிறகு கூட்டம் கலைந்தது. அநேக காரண மனப்பான்மையுடையவர்களான நகரத்தினர் வித்யா பீடத்திற்குப் பணம் கொடுத்து உதவமுன்வந்தனர். அநேகர் நிலங்களைத் தானமாகக் கொடுத்தனர். பணம், பொன் முதலியவைகள் கொடுத்து ஸ்ரீகளவரின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரரானார்கள். செவ்வப்ப நாயகர் அநேக பூதானம், பணம், பொன், ஆபரணம் முதலியவைகளைக் கொடுத்து

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கிருதார்த்தனானான். மதரை, விஜயநகர் அரசர் இவர்கள் அனுப்பிய காணிக்கைகளை ராஜ ப்ரதிநிதி ஸ்ரீயவர்களிடம் ஸமர்ப்பித்தார். தஞ்சாவூரரசன் வித்யாபீடம் ஸ்தாபிக்கப்பட்ட இட விஷயத்தைத் தெரிவித்து தேசத்தின் நாலாபக்கங்களிலுள்ள அதிகாரிகளுக்கு ஆக்ஞா பத்திரங்கள் அனுப்பினார். அன்றைய வைபவம், ஜனங்களின் மகிழ்ச்சி! இவைகளைக் கண்ணாரக் கண்டவரே பாக்யசாலிகள்!

மத்தியானம் ஸுரேந்திரர் மஹாஸமஸ்தான பூஜையை வைபவத்துடன் நிறைவேற்றினார். ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஸந்தர்ப்பணை, தக்ஷிணை முதலியவைகள் நடந்தேறின. மாலையில் வித்யாபீடத்தைச் சம்மந்தப்பட்ட விஷயங்களைக் கவனிப்பதில் ஈடுபட்ட விஜயீந்திரர் அநேக பண்டிதர்களுடனும், ஆப்தர்களுடனும், வித்யாபீடத்தில் நலம் விரும்புவோருடனும் சர்ச்சை செய்து ஸாயங்கால தீபாராதனைக்குப் புறப்பட்டார்.

தூபம், தீபம், வாத்யங்களின் முழக்கம், பாராயணங்களுக்கிடையே விஜயீந்திரர் தீபாராதனை செய்து மஹா நீராஜனம் செய்து, மந்த்ர புஷ்பங்கள் அர்ப்பித்து, த்யானத்திலீடுபட்டுள்ளார். பாகவதர்கள் தொட்டில் கீதம் பாடினர். ஸ்ரீயவர்கள் புதிய தோர் க்ருதியொன்று இயற்றிப் பாடினார்.

சந்திரராமனராணி ஸீதெயமுக ....
தந்தகே ஸோது லஜ்ஜெயிந்த ராத்ரி சரனாத (பல்)

பாரதி மொதலாத ஸதியரக்ஷிகுமுத
கோரிகெ பிரியேராஜித சகோர
பாரவார வெம்ப....
வாரிஜமுகிய ஆநந்த சரதியுக்கெ

நூஸலிலோப்புவ கஸ்தூரி திலக கலங்க
ஹொஸ் முத்தினொலி வரஹாரத
குஸுமதாரெகளாகெ ஆகிரண லோகங்களு
நஸுநகு பௌதிங்களாகே நகெகிடாயிதெந்து (2)

நந்தமூருதி விஜயீந்திர ஸ்வாமி ராம
சந்த்ர, ஸீதேய முகதொளு முகவா
ஸந்திஸெ, உபராகதி, போல்வ ஈர்வரஹாரா
மந்தாகினீயமுனா எந்தாக அமரரு மீயே (3)

உவமை-உருவகம், வஸ்தூத்ப்ரேக்ஷாதி அலங்காரங்கள் (அணிகள்) அர்த்தாலங்காரம் அழகாக சொற்களமைத்தல் லலித பதவிந்யாஸங்களுடன்கூடியதும் பலபொருள் தரும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மிகரஸமான ஸ்ரீயவர்களின் புதிய க்ருதியை மெச்சி பண்டிதர்களும் கவிகளும் ஆநந்தமடைந்து ஸ்ரீயவர்களைப் புகழ்ந்தனர். ஸ்ரீயவர்களிடமிருந்து யாவரும் பலமந்த்ராக்ஷதை பெற்றுச் சென்ற பிறகு ஸ்ரீஸுரேந்திரர் விஜயீந்திரர்களிடம் விஜயநகர ராஜப்ரதிநிதியுடன் சவ்வப்ப நாயகர் வந்து, வணங்கி அமர்ந்த பிறகு ஸ்ரீயவர்கள் புன்முறுவலுடன் "மஹாராஜர் விசேஷ செய்தி ஏதோ கொண்டு வந்துள்ளதாகத் தெரிகிறது. விசேஷமென்னவென்றார்.

சவ்வப்ப நாயகர், "ராஜ ப்ரதிநிதியவர்கள் தங்களை விஜயநகரத்திற்கு அழைப்பு விடுக்க வந்திருக்கிறார்" என்று சொல்லவும், ராஜ ப்ரதிநிதி, "உண்மை, ஸ்வாமி, ராமராயர் தாங்கள் அவசியம் சில தினங்கள் மாத்திரமாவது தலைநக்ரத்திற்கு எழுந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டுள்ளார். தங்களுடன் கூட இருந்து அழைத்து வரவேண்டுமென்று சொல்லியுள்ளார். அனுக்ரஹம் செய்ய வேண்டும்" என்று விக்ஞாபித்தார்.

ஸ்ரீவிஜயீந்திரர் ராஜப்ரதிநிதிகளின் கையைப் பிடித்துக் கொண்டு புன்சிரிப்புடன், குருவர்யரைப் பார்த்துக் கொண்டே, "குருபாதரவர்களே, இந்த ராஜ ப்ரதிநிதிகள் மஹாபண்டிதர் இவர் பெயர் அம்பலராமராயரென்பது வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த இவர் மஹா கவிகளும் ஆவார். இவர் "சம்பூபாரத"த்திற்கு, விரிவுரை இயற்றியுள்ளார். விஜயநகரத்தின் ராஜ காரியங்களில் முக்கிய நிர்வாகி" என்று சொல்ல ஸுரேந்திரர் மகிழ்ந்து அவரை ஆசீர்வதித்தார்.

ஸுரேந்திரர் சிஷ்யரைப் பார்த்து, "விஜயநகருக்கு அவசியம் போய்வரவேண்டும் வித்யாபீடத்திற்கு அதனால் வித்யாபீடத்திற்கு மிக்க ஸகாயமேற்படும். உம்முடைய கீர்த்தியும் நிரந்தரமாகவும் அழியாமலும் இருக்கும்" என்று புன்னகை செய்தார். விஜயீந்திரர், "ஆக்ஞையைச் சிரஸாவஹிக்கிறோம்" ஆனால் வித்யாபீடத்தின் ஏற்பாடுகள் செய்யாமல், அதை ஒரு க்ரமத்திற்குக் கொண்டுவராமல் ஏவ்வாறு புறப்படுவது? இன்னொரு மாதத்திற்குள் புறப்படுவது அனுகூலமாக இருக்கும். ராஜப்ரதிநிதி அம்பலராமராயரே, ஸதாசிவராயரிடமும், ராமராஜரிடத்தில் இவ்விஷயத்தைத் தெரியப்படுத்துங்கள். அவசியம் வருவோம் "என்று சொல்லி அவருக்கு ஸமஸ்தானத்தின் கௌரவத்திற்குத் தக்கமுறையில் காணிக்கை அளித்துப் பல

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மந்த்ராக்ஷதையளித்தார். சக்ரவர்த்திக்கும், ராமராஜருக்கும், இரண்டு ஸ்ரீபாதங்களவர்களும் காணிக்கைகளும், பிரஸாதங்களும், பலமந்த்ராக்ஷதைகளும் கொடுத்தனுப்பினர். சவ்வப்ப நாயகர் மந்திராக்ஷதை பெற்றுக் கொண்டுத் தனது இருப்பிடம் சென்ற பிறகு குரு-சிஷ்யர்கள் ஓய்வு பெறச் சென்றனர்.

வித்யா பீடத்தில் முறையாக பாடப்ரவசனம் ஆரம்பமாயிற்று. 200-300 மாணவர்கள் வெவ்வேறு சாஸ்திரங்களில் அனுபவிகளான வித்யா பீடத்தின் பண்டிதர்கள் பாடப்ரவசனங்கள் நடத்தி வந்தனர். தர்க்கம், மீமாம்ஸா, வ்யாகரண, வேதாந்த சாஸ்திரங்கள் ப்ரௌடகிரந்தங்களின் பாடத்தை ஸுரேந்திரர் விஜயீந்திரர்கள் மடத்திலேயே தானே கற்றுக் கொடுக்கின்றனர். காலையிலும் மத்யானத்திலும் பாட க்ரமம் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. அனுதினமும் வெவ்வேறு ஊர்களிலிருந்து மாணவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து வித்யாபீடத்தில் சேர்ந்து கொண்டிருக்கின்றனர். வித்யாபீடம் ஆரம்பமாய் ஒன்றிரண்டு மாதங்கள் கழிந்திருக்கலாம். வித்யா பீடத்திற்கு அனுகூலமாகும்படி பழைய குருகுல பாணியில் குடிசைகள், நிலையான கட்டிடங்கள் தயாராகின்றன. வித்யாபிடத்தை ஆரம்பித்த சுபமுகூர்த்தத்தின் பலனோ அல்லது ஸ்ரீமதாசார்யரின் அனுக்ரஹ பலமோ அல்லது குரு-சிஷ்யரின் தவத்தின் பல ஸித்தியோ அதன் செலவு, வளர்ச்சி முதலியவைகளுக்கு வேண்டிய பணம் வசூலாகி எந்தக் கவலையுமின்றி வித்யாபீடத்தின் காரியங்கள் வஸ்தியுடன் நடைபெறுகிறது.

ஸ்ரீவிஜயீந்திரர் வித்யா பீடத்தின் பொறுப்பை குருவிடம் ஒப்புவித்துவிட்டு அவர் உத்தரவு பெற்று வேண்டிய சிறிய பரிவாரத்துடன் விஜயநகரத்திற்கு ஒரு சுபமுகூர்த்தத்தில் ப்ரயாணத்திற்குத் தயாரானார். அதே சமயத்தில் இருந்தாற்போல் சவ்வப்ப நாயகர் தனது சகோதர சின்ன சவ்வப்ப நாயகருடன் ஸ்ரீகளவரின் சமூகத்திற்கு வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "பூஜ்யபாதங்கள் விஜயநகரத்திற்குப் புறப்படும் விஷயமறிந்து ஸ்ரீயவர்களுக்கு விடைகொடுத்து ஆசீர்வாதம் பெற ஓடோடி வந்தோம். நமது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தம்பிக்கு விவாஹம் நிச்சயமாகியுள்ளது. ஸ்ரீயவர்களின் ஆசீர்வாதத்தைப்பெற அவரும் வந்துள்ளார். அனுக்ரஹிக்க வேண்டும்," என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

ஸ்ரீயவர்கள் புன்னகையுடன் சிரஞ்சீவியின் திருமண மங்கள மஹோற்சவம் விமரிசையாக நடைபெறும், மேலும் மறுபடி திரும்பிவரும் பொழுது தஞ்சாவூரின் யுவராஜா பிறப்பார்! அந்த மங்கள மஹோத்சவம் (நாம கரணம்) நடைபெறும்பொழுது நாமே வந்திருப்போம். தஞ்சாவூரின் பாக்யம் உதயமாகப் போகிறது, "அரசே, நீ மிகுந்த பாக்யசாலி. உங்கள் வம்சம் ஜகத்தில் விசேஷமான கீர்த்தியை அடையும். நாம் போய் வருகிறோம். உமக்கு மங்களமுண்டாகட்டும்" என்று விடைகொடுத்தார். "ஸ்வாமி, அனுக்ரஹம் பெற்றோம்'', என்று நமஸ்கரித்த ராஜ சகோதரர்களுக்கு பல மந்த்ராக்ஷதை அருளி ப்ரயாணம் தொடங்கினார்.

## 26. ரத்னாபிஷேகம்:

கும்பகோணத்திலிருந்து விஜயநகரத்திற்கு ப்ரயாணம் கைக்கொண்ட விஜயீந்திர தீர்த்தர் சஞ்சார க்ரமப்படி பேட்டி காணவந்த கிராமம், புரம், நகரம், தலைநகரம் முதலியவைகளில் அந்தந்த எல்லையின் அரசாங்க அதிகாரிகள் ஸ்ரீகளவர்களுக்கு, ராமராஜரின் உத்தரவுப்படி விமரிசையுடன் கௌரவத்துடன் சிறப்பான வரவேற்பு, உபசரிப்பு, பிக்ஷை முதலியவைகள் செய்வித்து மகிழ்வித்தனர். ராஜ குருவிற்கு மாத்திரம் செலுத்தப்படும் இந்த மரியாதையைத் தமக்கு அளிப்பதைக் கண்டு ஸ்ரீயவர்களுக்கு அபரிமித மகிழ்ச்சி! கர்நாடக ஸாம்ராஜ்யத்தின், பட்டாபிஷேகமில்லாத சக்ரவர்த்தி எனப்போற்றப்படும், மருமகனான ராமராஜனின் குருபக்தி, தம்மிடம் வைத்திருக்கும் விசேஷ அன்பைக் கண்டு இதயம் பூரித்தார்.

ஸ்ரீயவருக்கு விஜயநகரத்தில் ஸ்ரீவ்யாஸராஜரின் போஷணையில் தான் வளர்ந்த முந்தின ஒவ்வொரு கொடியும் ஞாபகம் வர ஆரம்பித்தது. வ்யாஸராஜரிடம் வந்து கொண்டிருந்த ரமாரமண கிருஷ்ண தேவராயருடன் இளம் வயதுள்ள அச்யுதராயர், மருமகன் ராமராயர் மற்றும் மஹாமந்திரி அப்பாஜியவர், வந்து கொண்டிருந்தது, வ்யாஸராஜரிடம் கிருஷ்ணதேவராயர் - அப்பாஜி இருவரும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பேச்சுவார்த்தைகள் நடத்தும்பொழுது, ராமராஜர், அச்யுதராஜர்கள் தம்முடன் பொழுதுபோக்குவது, தாம் அவ்வப்போது செய்யும் தர்க்கம் வாக்யார்த்தங்களை அவர்களுக்குச் சொல்லும் பொழுது அவர்கள் ஆச்சரியத்தினால் தம்மைப் புகழ்ந்தது, தாம் தமாஷுக்காக அவர்களைப் பார்த்து, "இப்பொழுதென்னமோ என்மீது மிக்க அன்பு, நம்பிக்கை, பக்தி செலுத்துகிறீர்கள்! ஆனால் வருங்காலத்தில் பெரியவர்களான பிறகு ஸாம்ராஜ்யத்தை ஆளும் போது இந்த ஏழை சன்யாஸியின் ஞாபகம் இருக்குமோ இராதோ! யாருக்குத் தெரியும்? நானென்னமோ உங்களிருவரிடம் இதே மாதிரி நம்பிக்கையும் நன்றியும் இறுதிவரை வைத்திருப்பேன்" என்று சொல்லிச் சிரித்தபொழுது அவர்கள், "இல்லை பாலயதிகளே, நாங்கள் என்றென்றும் தம்மை மறக்கவே மாட்டோம். பாருங்கள், ஸார்வபௌமரான வ்யாஸயதிகளை மறந்து விட்டோமா? அவரிடம் எவ்வளவு பக்தியுடன் இருக்கிறோம்! நாங்களும் தங்களிடம் பக்தி சிரத்தையுடன் தான் நடந்து வருகிறோம். தாங்கள் மாத்திரம் எங்களுக்கு உபதேசங்களை அனுதினமும் செய்தருள வேண்டும். அனுக்ரஹம் செய்ய வேண்டும்."என்று சொல்லி அடம்பிடித்துத் தம்மிடம் வாக்குறுதி பெற்றதும், எப்பொழுதாவது அப்பாஜி இந்த ஸரஸ ஸல்லாபப் பேச்சுகளை மறைந்து நின்று கேட்டு கிருஷ்ணதேவராயர் எதிரில், "பாருங்கள் மஹாப்ரபு! வருங்காலச் சக்ரவர்த்தி, வருங்கால மஹாமந்திரி, வருங்கால் குருவுடன் இவ்வாறு அன்புடன் நடந்து கொள்ளுகின்றனர்" என்று சொல்லச் சக்ரவர்த்தி குருபாதர் அப்பாஜியவரின் பேச்சை மெச்சி சிரித்துக் கொண்டிருந்தது, இந்த எல்லா ருசிகரமான நினைவுகளும் ஸ்ரீயவர்களின் மனதில் படம் பிடித்துக் காட்டினதுபோல் தோன்றின.

அத்துடன் ஸ்ரீகிருஷ்ணதேவராயரின் மறைவு, அப்பாஜிராயரின் மரணம், அச்யுதராயரின் மறைவுகளும் நினைவுக்கு வந்து மனதிற்கு மிக வருத்தமுண்டாயிற்று. அச்யுதராயரின் மறைவிற்குப் பிறகு ஸாம்ராஜ்ய சிம்மாசனத்தின் அதிகாரத்தை அடைய நடந்த அவர்களுக்குள் கலகம், கபடம், சிறிய பெரிய புரட்சிகள், அப்படிப்பட்ட விஷயங்களில் நிலைமையில் கன்னட சாம்ராஜ்ய உள்நாட்டுக் கலகங்களினால் சின்னாபின்னமாகாமல் பார்த்துக் கொண்ட ஸாம்ராஜ்ய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சிம்மாஸனத்திற்கு ஸதாசிவராயரை அதிபதிகளாகச் செய்து, ஸாம்ராஜ்யத்தின் நன்மையைக் கோரின் மருமகன் ராமராஜரின் சக்தி, திறமை, ராஜதந்திரம், ஸாமர்த்யங்களும், நினைவுக்கு வந்தன. ஸ்ரீயவர் ராமராயர் பால்யத்தில் சொன்னபடியே தம்மிடம் விசேஷ கௌரவம் வைத்து, பக்தியினால் நடந்து கொண்டு வருவதை நினைத்து ஆனந்தமடைந்தார்.

ஸ்ரீபாதங்களவர் சீக்கிரமாகவே, ஸஞ்சாரம் செய்து கொண்டு கன்னட நாட்டைத் தமது பாததூளிகளினால் புனிதமாக்கிக் கொண்டு, ஆங்காங்கு துர்வாதிகளை வென்று, பக்த ஜனங்களை உபதே சாம்ருதத்தினால் புனிதராக்கிக் கொண்டு விஜயநகரத்திற்கு வந்து ஆனே கொந்தியில் முகாம் செய்தார்.

தலைநகரத்தில் நுழைவதற்கு முன்பு குருபாதரின் ப்ருந்தாவன தரிசனம் செய்ய விரும்பி நவப்ருந்தாவனத்திற்கு வந்து பவித்ரமான துங்கா நதியில் நீராடி ஸ்ரீசந்திரிகாராயரின் ஸந்நிதிக்கு வந்து குருபாதருக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கைகூப்பி நின்று பக்தி பரவசமாகி ஆநந்தபாஷ்பம் பெருக்கி நாதழுதழுக்க ஸ்தோத்ரம் செய்கையில் ப்ரிய சிஷ்யரின் வருகையினால் த்ருப்தியடைந்த ஸ்ரீவ்யாஸயதிகள் சிஷ்யருக்கு வரம்கொடுக்கின்றாரோ என்பது போல ப்ருந்தாவனத்தின் மேலிருந்த பூமாலை நகர்ந்தது. ஸ்ரீயவர்கள் மகிழ்ச்சியுடன் தமது வருகை மற்றும் விஜயநகரத்தில் நடைபெறப்போகும் பல நிகழ்ச்சிகள் குருவர்யருக்குச் சம்மதமென்றறிந்து வெகுவாகக் குருவைத்துதித்து அன்று அங்கேயே ஸமஸ்தான பூஜையை நடத்தி குருவிற்கு ஹஸ்தோதகம் ஸமர்ப்பித்து ப்ராம்மண சுவாஸினிகளுக்கு அறுசுவையுண்டியளித்தார்.

ஸ்ரீவிஜயீந்திரரின் வருகையையறிந்த ராமராஜர் தலைநகருக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று ப்ரார்த்தித்து ப்ரதி நிதியை அனுப்பினார். ராஜப்ரதிநிதியின் வேண்டுகோளை மதித்து ஸ்ரீயவர்கள் மறுநாள் தலைநகர் வருவதாகச் சொல்லி அவரை அனுப்பினார். இரவில் தீபாராதனைகளை முடித்து ஓய்வு பெற்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

காலையில் காலை அனுஷ்டாங்களை முடித்துக் கொண்டு சிஷ்யர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கிறார் ஸ்ரீயவர்கள். ஸகல அரசு மரியாதைகளுடன் ராஜ ப்ரதிநிதி ஸ்ரீகளவர்களுக்கு வணங்கித் தலைநகருக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். ஸ்ரீகளவர் பரிவாரத்துடன் புறப்பட்டுத் தயாராக இருந்த வெள்ளி அம்பாரியில் ஏறி அமர்ந்தார். வாத்யங்கள் முழங்க, விஜய கோஷங்களிடையே அம்பாரியானை தலைநகரை நோக்கிப்புறப்பட்டது.கர்நாடக ஸாம்ராஜ்யத்திற்கு ராஜகுருவாக விளங்கிய கன்னடக் கண்மணியாக இருந்த ஸ்ரீவ்யாஸராயரின் ப்ரிய சிஷ்யர், வந்துள்ள விஷயமறிந்து, நகரத்தார்கள், பண்டிதர்கள், ஆயிரக்கணக்கான மக்களும் கோட்டையின் வாயிலில் ஸ்ரீகளவர்கள் தரிசனத்தை எதிர்பார்த்தவர்களாக காத்துக்கொண்டு நிற்கின்றனர். மருமகன் ராமராயர், முக்கிய அரசு அதிகாரிகள், சேனாதிபதியுடன், ஸ்ரீகளவர்களை எதிர்கொண்டழைக்க உற்சாகத்துடன் நின்றிருக்கின்றனர். ஸ்ரீகளவரின் ஊர்வலம் வந்து சேர்ந்த உடனே ஜனங்கள் ஜயகோஷம் செய்து தங்கள் தமது ஆநந்தத்தை வெளிப்படுத்தினர். ராமராஜன் சிரித்த முகத்துடன் ஸ்ரீகளவர்களுக்குத் தலை வணங்கி வரவேற்றான்.

ஸ்ரீகளவர்களின் ஊர்வலம் வைபவத்துடன் கோட்டைக்குள் ப்ரவேசம் செய்து ராஜ வீதிகளின் வழியாக அரண்மனையைச் சமீபித்தது. சக்ரவர்த்தி ஸதாசிவராயரே ஸ்ரீகள்வர்களுக்கு வரவேற்புத்தரக் காத்துக் கொண்டு நின்றிருந்தாரென்றால் அந்த வரவேற்பின் வைபவத்தைக் கேட்கவும் வேண்டுமா என்ன? சிரித்த முகத்துடன் ஒளி வீசும் மூர்த்திகளான ஸ்ரீவிஜயீந்திரர் தரிசனத்தால் யாருக்குத்தான் ஆநந்தமாகாமலிருக்கும்? ஸ்ரீகளவர் அம்பாரியிலிருந்து இறங்கிய உடனே ஜனத்திரள், "விஜயீந்திரருக்கு ஜய்" என கோஷமிட்டனர். ர்ாமராஜன் ஸ்ரீகளவர்களை நமஸ்கரித்துச் சக்ரவர்த்தி ஸ்தாசிவராயரைப் பரிசயம் செய்வித்தான். ஸதாசிவராயர் ஸ்ரீகளவர்களுக்குப் புஷ்பமாலை அணிவித்து வணங்கினான். ஸ்ரீகளவர், "சக்ரவர்த்திகளே! நலமா? அரசாட்சி முறைப்படி ப்ரஜைகளின் மகிழ்ச்சி ஏற்படும்படி நடைபெறுகிறதா?" என்று கேட்கவும், வினயத்துடன் சக்ரவர்த்தி," குருவர்யரின் அனுக்ரஹத்தினார், எல்லாரும் நலம். பூஜ்யராமராயரின் அமோகமான புஜபலத்தினால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸாம்ராஜ்யம் இடையூறுகளில்லாமல் ப்ரஜைகளின் மனதிற்குப் பிடித்த முறையில் நடைபெறுகிறது. பூஜ்யபாதரான தமது தரிசனத்தினால் நான் தன்யனானேன்", என்று சொன்னார்.

ராமராயர் சிரித்த முகத்துடன் ஸ்ரீகளவர்களை வணங்கி, "பூஜ்ய குருபாதரின் தரிசனத்தினால் நான் க்ருதார்த்தனானேன். தமது பாத தூளியினால் கன்னட நாட்டுத் தலைநகரம் புனிதமடைந்தது. ஸ்ரீகளவருக்குச் சிஷ்யன் மீது ஏன் இவ்வளவு பராமுகம்! மஹாஸந்நிதானத்தின் யாத்திரைக் குழு இங்கு வருவதை முதலிலேயே தெரிவித்திருந்தால், இன்னும் அதிக ஸேவை செய்வதற்கு அனுகூலமாயிருந்திருக்கும். கன்னட நாட்டின் சார்பாக ஸ்ரீகளவர்களை வரவேற்க மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன் என்று தெரிவித்தான்.

ஸ்ரீபாதர் புன்னகையுடன், "கர்நாடக சாம்ராஜ்யத்தின் மஹாமந்திரிகளே, ராஜ்ய பரிபாலனத்தின் நிர்வாகியுமான ராமராஜர் தமது பால்ய காலத்தில் செய்த வாக்குறுதியை மறவாமல் இன்றைக்கும் அதே அன்பைச் செலுத்துகிறாரென்பது நமது சஞ்சாரக்கிரமத்தில் ஒவ்வொரு நாளும் அனுபவத்திற்கு வந்துள்ளது. மகிழ்ச்சி! என்று சொல்லவும், ராமராஜன் புன்னகையுடன், "பால்யத்தின் அந்த நினைவு இன்னும் ஸ்ரீபாதருக்கிருப்பது ஆச்சரியம்! உண்மை. குருபாதரின் சிஷ்யரல்லவா? தயவு செய்து எழுந்தருள வேண்டும் மஹாஸ்வாமி" என்று விண்ணப்பித்தான். ஸதாசிவராயர் ஸ்வாமிகளுக்கு கைகொடுத்து, ஜயகோஷங்களுக்கிடையே ஆஸ்தானமண்டபத்திற்கு அழைத்துச் செல்ல, ராமராயர் அறிவுரையின்படி சக்ரவர்த்தி ஸ்ரீயவர்களை அலங்கரிக்கப்பட்ட சிம்மாஸனத்தின் மீது அமரச்செய்து க்ஷேம சமாசாரம் பரிமாறிக் கொண்ட பிறகு ஸ்ரீபாதரவர்களுக்குப் பாத பூஜை செய்து மங்களகரமான ஸிம்மாஸனத்தில் அமர்த்தினர்.

ராமராயர் எழுந்து நின்று, சபையோரை நோக்கி, "மஹாஜனங்களே, கன்னட நாட்டின் புண்யத்தினால் ஸ்ரீபாதங்களவர் இங்கு திக்விஜயம் செய்துள்ளார். ஸ்ரீயவரின் க்ருபாதரான ஸ்ரீவ்யாஸ மூனிந்திரர் கன்னட நாட்டிற்கு எப்படிப்பட்ட உபகாரம் செய்துள்ளனர் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். 'கன்னடம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
ஸாம்ராஜ்யத்தின் கீர்த்தி எல்லா தேசங்களிலும் பரவக் காரணமாயிருந்த எனது மாமனாரான மஹாகீர்த்திமானான சக்ரவர்த்தி ஸ்ரீகிருஷ்ண தேவராயர் குஹயோகத்தினின்று தம்மையும் கன்னட நாட்டையும் காப்பாற்றி ராஜ குரு ஸ்ரீவ்யாஸ முனீந்திரருக்கு ரத்தினாபிஷேகம்* செய்து நன்றிக்கடனைச் செலுத்தின விஷயம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஸ்ரீஸதாசிவராயர் ஸாம்ராஜ்யத்திற்கு அதிபதியான பிறகு அப்பேர்ப்பட்ட ஒரு உத்தம காரியத்தைச் செய்து கன்னட ஸாம்ராஜ்யம் தொந்தரவின்றிக் காப்பாற்றப்படும்படி செய்ய வேண்டுமென்று பேராவல் நமக்கு வெகு நாட்களாக இருந்தது. நமது பாக்யத்தினால் அந்த நல்ல வாய்ப்பு இன்று நமக்குக் கிடைத்துள்ளது என்று தெரிவிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

"மஹா ஜனங்களே, சக்ரவர்த்தி ஸதாசிவராயர் அன்று ஸ்ரீகிருஷ்ணதேவராயர் ஸ்ரீவ்யாஸ முனீந்திரருக்கு ரத்னாபிஷேகம் செய்ததைப்போல் ஸ்ரீவ்யாஸ ராஜஸார்வ பௌமரின் அன்பிற்குகந்த சிஷ்யரும், நம் ராஜ்யத்தின் க்ஷேமத்தை விரும்பி வரும், மஹாபண்டிதருமான வரும், பாரத நாட்டில் இன்று தனக்கு நிகரற்ற வாதமல்லரென்றும் கீர்த்திபெற்றவரும், ஸகல கலைகளிலும் ஜயிக்கப்பட முடியாத வல்லமையுடையவரும் மற்றும் நமக்குப் பரம பூஜ்யரும் குருவுமான ஸ்ரீவிஜயீந்திரயதி ஸார்வபௌமருக்கு இன்று ரத்னாபிஷேகம் செய்வித்து நம்மெல்லோரையும் மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று மஹாப்ரபுகளிடம் வேண்டிக் கொள்ளுகிறேன்" என்று சொன்னார்.

ஸதாசிவராயர் எழுந்து நின்று கைகூப்பி, "அன்பிற்குறிய கன்னட பந்துக்களே, ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரைப்போல் மஹாத்மாவை ஸேவிக்கும் வாய்ப்பு கிடைத்ததற்கு நாமே பர்க்யவானென்று நம்பியுள்ளோம். ஆனால் கர்நாடக ஸாம்ராஜ்யத்தை இன்று தமது புஜபலபராக்கிரமத்தினால் காப்பாற்றிக் கொண்டு, நம்மை சிம்மாசனத்திலமர்த்தி எப்பொழுதும் நமது நன்மையைக் கோருகின்ற நமக்கு பூஜ்ய தந்தைக்குச் சமானமாயுள்ள

---

* 1. Epigraphica Indika, Vol. XII

2. சோமநாத கவியின் "ஸ்ரீவ்யாஸ யோகி சரிதம் "सकिल कृष्णमही पलः स्वयमेव करकमलेनादाय कनक कुंभं ।" इमं भगवंतं व्यासतापसं, आदरा न्मणि भिरभिषेकतुमारभत ॥"

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கர்நாடக ஸாம்ராஜ்ய நிர்வாகியும் மஹா மந்திரியுமாக உள்ள ஸ்ரீராமராஜரே நமது சார்பாக அந்த மஹா காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பூஜ்யராமராஜர் நமது விருப்பத்தை நிறைவேற்றுவாரென்று நம்பியுள்ளேன்" என்று சொல்லவும், சபையோர் பலத்த கரகோஷத்தினால் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் ராமராஜரைப் பார்த்துப் புன்னகையுடன் சக்ரவர்த்தியைப் பார்த்து, "ஸார்வ பௌமரே, நாம் எது வேண்டாமென்றிருந்தோமோ, அதனால்தான், இங்கிருப்பது, இங்கு வருவது எல்லாவற்றிற்கும் பின் வாங்கினோமோ அதே இன்று, வந்து சேர்ந்துள்ளது! ஸ்ரீகுருபாதரைப்போல் ரத்னாபிஷேகம் செய்து கொள்ளத் தகுதி நமக்கில்லை. ஆனாலும் ஸார்வபௌமர், அன்புள்ள ராமராஜரின் அன்புக்குக் கட்டுப்பட்டு, விருப்பமில்லாத போதிலும், ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. நேற்று குருபாதரைத் தரிசனம் செய்யும்பொழுது இன்று நடைபெறும் நிகழ்ச்சி அவருக்குச் சம்மதமென்று ஸூசகம் நமக்கு ஏற்பட்டது. ஆனால் ரத்னாபிஷேகம் போன்ற அபூர்வமான அஸாதாரணமான கௌரவத்தை நாம் அடைய வேண்டுமென்று குருபாதரின் உத்தரவு என்பது இப்பொழுது தெரிகிறது. பூஜ்ய குருபாதரின் ஆக்ஞை என்று மதித்து, இந்த மஹாபெரிய காரியத்திற்குச் சம்மதம் கொடுக்க வேண்டியுள்ளது. பரமாத்மனின் ஸங்கல்பத்தை யார் தான் மீற முடியும்?" என்று பதில் கூறினார்.

ராமராஜர் ஸ்ரீகளவரின் சமீபம் வந்து, "பால்ய சமயத்தில் நான் சங்கல்பம் செய்திருந்த விருப்பம் இன்று நிறைவேறுகிறது. மஹாஸ்வாமி! நினைவிருக்கிறதா? என்று மெதுவாகக் காதில் போட்டான். ஸ்ரீயவர், "உம், ஆகட்டுமப்பா! உன்னிஷ்டப்படி செய்", என்று புன்னகை செய்தார்.

அதே வேளையில் பண்டிதர்களின் கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து நின்று, "ஸ்ரீபாதங்களவரே, இந்த ராமராஜரென்னவோ பாரதநாட்டில் தம்மைப் போன்ற பண்டிதரில்லையென்று தமக்கு ரத்னாபிஷேகம் செய்வதாகவும், சொன்னார். மகிழ்ச்சி ஆனால் தாங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இன்று தர்க்க சாஸ்த்திரத்தில் என்னை ஜயிக்காமல், தமக்கு அந்த அற்புதமான மரியாதை செல்லாது, இதற்குத் தாங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்" என்று கேள்வி எழுப்பினார்.

ராமராஜர், சக்ரவர்த்தி, மேலும் பண்டிதர்களும் கூட அந்தப்பண்டிதரின் அஹங்காரத்தைக் கண்டு வியந்தனர். ஸ்ரீகளவர் அக்கேள்விக்கு பதில் சொல்வதற்கு முன்பே சபையிலமர்ந்திருந்த ஆஸ்தான பண்டிதரான ஸ்வயம்புகவி ஸ்ரீயவர்களிடம் போட்டியிட வந்த அந்த வாதியின் போட்டி முயற்சியைக் கண்டு சிரித்து எழுந்து நின்று சொன்னார். "ஸ்வாமி தர்க்க சாஸ்திரிகளே! ஏன் வீணாக முயற்சி செய்ய முன் வருகிறீர், ஸ்ரீவிஜயீந்திரரின் மகிமை உமக்குத் தெரியாதொன்று தோன்றுகிறது. கேளுங்கள்:-

"ये ते कर्कशतर्कशास्त्र निपुणाश्यादभाश्च मीमांसका: ।
वेदांतोपनिषत्पुराण कुशलायै र्निर्जिता वाग्रणे ।
तत्तादृग्विजयींद्र संयमीवरं त्वं जेतुमुज्जृंभसे ।
शक्त: किंवत रे । त्यजाशु कुमतिं तं वादिसिंहं भज ॥

அதாவது:- யார் கரடுமுரடான தர்க்க சாஸ்திரத்தில் நிபுணரோ, வ்யாகரணம், மீமாம்ஸா, வேதாந்தம், உபநிஷத்து, புராணம் முதலியவைகளில் யார் திறமைசாலிகளோ, அவர்களெல்லோரும், எவரால் வாக்-யுத்தத்தில் (வாதத்தில்) தோல்வியடைந்தனரோ, அப்படிப்பட்ட மஹா பிரஸித்திபெற்ற கலையரசரான ஸ்ரீவிஜயீந்திர யதிச்ரேஷ்டரை நீ ஜயிப்பதாகச் சவால் விடுகிறாயா? நீ அவரை செல்ல வல்லவனா? ஐயோ பாவம்! இதோ பார், சீக்கிரம் உனது கெட்ட புத்தியை விட்டுவிடு! மஹாமகிமையுடைய வாதிசிம்மமான யதிச்ரேஷ்டரை வணங்கு, துதிசெய்!" என்று அப்பொழுதே இயற்றிய கவிதை மூலம் அவனுக்கு நல்ல உபதேசத்தைச் சொல்லி முடிக்கும் தறுவாயில், அம்பலராமராய கவியரசர், எழுந்து நின்று அப்பொழுதே விஜயீந்திரரின் மகிமையை நிரூபிக்கும் கவிதை பாடினார். இதோ:-

"वादसंगर कलाविशारदा:
न्यायशाब्दनयशास्त्र कोविदा: ।
चोऽपि पक्षधर मिश्रपूर्वका: ।
तेनमंति विजयींद्र देशिकम् ॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


यस्य वागमृत भाजनं सुराः ।
यत्पदाब्ज शरणा नृपा बुधाः
यत्कटाक्ष सफली कृताशयाः
तन्मुनींद्र विजये जहि मोहम् ॥"

அதாவது:-யார் வாத கலையில் வல்லுநரோ, தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸா முதலிய சாஸ்திரங்களைக் கசடறக்கற்ற பண்டிதரோ, அப்பேர்ப்பட்ட பக்ஷதரமிச்ரரே முதலான மஹாபண்டதர் கூட ஸ்ரீவிஜயீந்திர பிக்ஷுகளை பக்தியுடன் வணங்குகிறார். தேவதைகள் வாக்யாம் ருதத்திற்குப் பாத்ரராக உள்ளனரோ; அரசர்கள், பண்டிதமணிகள் எவரின்பாத கமலங்களில் சரணமடைந் துள்ளனரோ, மற்றும் யாரின் கிருபாகடாக்ஷத்தினால் தங்கள் மன விருப்பங்கள் நிறைவேறினவோ, அத்தகைய முனீந்த்ரரை ஜயிக்க விரும்பும் உனது மோகத்தை விட்டுவிடு" என்றார்.

கவிகளின் வர்ணனையும் உபதேசங்களையும் கேட்டு கோபமடைந்து அந்த வாதி, "ஸ்ரீகளவர் அஜேயராக விருக்கலாம், மஹாபண்டிதராகவும் இருக்கலாம். மற்றும் மஹாத்மாவுமாக இருக்கலாம். ஆனால் என்னை ஜயித்தால் தவிர அவர் என்றைக்கும் ரத்னர்பிஷேகத்திற்கு அருகதையுள்ளவராகமாட்டார்? என்று சொன்னார்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் சிரித்த முகத்துடன், "தத்வ சூடாமணி பட்டாசார்யரின் சிஷ்யரும், நவத்வீப வாஸிகளுமான உம்முடன் வாதம் செய்ய நாம் மகிழ்ச்சியடைகிறோம் தடை ஏன்? ஆரம்பமாகட்டும், உமது பூர்வபக்ஷம்" என்றார். தமது விருத்தாந்தங்களெல்லாம் அறிந்தவரென்று ஸ்ரீகளவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட உடனே அந்த அந்த வாதி பண்டிதருக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. ஸ்ரீகளவர் மஹாத்மரென்பது தெரிந்துவிட்டது. இருந்த போதிலும் அவர் தனது தைரியத்தை இழக்காமல் அபூர்வமான ஓலைச்சுவடிகளில் மிகக்கடினமான ஒருபாகத்தில் ஒரு விஷயத்தைத் தேர்ந்தெடுத்து பூர்வபக்ஷமாரம்பித்தார். ஸ்ரீயவர்கள் விளையாட்டோ என்று சொல்லும்படி பதில் கூறினார். ப்ரதிவாதி மகா திறமைசாலி. பலவிதமாக "கோடிக்ரமங்களை"ச்சொல்லி வெகு திறமையுடன் வாதம் செய்தார். ஸ்ரீயவர்கள் சாதுர்யமாக அவரது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



"கோடிக்ரமங்களை"க் கண்டனம் செய்து விட்டார். இறுதியில் ஸ்ரீயவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், அந்தப் பண்டிதர் மெதுவாக எழுந்து நின்று ஸ்ரீகளவர்கள்ள வணங்கி, மஹாஸ்வாமி! தாங்கள் அஜேயரே, அதில் ஸந்தேஹமே இல்லை! எனது குற்றத்தை மன்னிக்க வேண்டும்", என்று விக்ஞாபித்து, ராமராஜரைப் பார்த்து, "மஹாப்ரபோ, இனி ரத்னாபிஷேகம் நிறைவேறுவதற்கு எந்தத் தடையுமில்லை. இத்தகைய மஹானுபாவரை கௌரவித்துக் கொண்டிருக்கும் தாங்களே தன்யர்!" என்று சொல்லி அமர்ந்தார். சபையோர் ஜயகோஷங்கள் செய்து விஜயீந்திரரின் வெற்றியைக் கொண்டாடினர்.

ராமராஜனின் ஆணைப்படி முதலிலேயே தயாராக வைக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள், ரத்தினம், வைரம், வைடூரியங்கள் நிரம்பிய தங்கத் தட்டுகளை சால்வைகள், பீதாம்பரம், வஸ்திரங்கள் முதலியவற்றைக் கொண்டுவந்து சிம்மாஸனத்தில் எதிரில் வைக்கப்பட்டன. சக்ரவர்த்தி ஸதாசிவராயர் புரோஹிதர் சொற்படி லக்ஷ்மி பூஜை செய்து பழம், புஷ்பங்களை நிவேதனம் செய்து, ஆரதி எடுத்து கைகூப்பி நின்று ஸ்ரீபாதங்களவருக்கு ரத்னாபிஷேகம் செய்ய வேண்டுமென்று ராமராயருக்கு ஆணையிட்டார்.

வாத்யங்கள் முழங்க, ஸங்கீதம் நாட்டியங்களுக்கிடையே, பண்டிதர்கள் வேத கோஷம் செய்ய, புரோஹிதர் மந்திரம் சொல்லி கார்யங்களின் கிரமத்தையும் சொல்ல வித்வத் சிரோமணிகள் மற்றும் ஸகல ஜனங்களின் முன் சக்ரவர்த்தியின் ஆணைப்படி மிக்க மகிழ்ச்சியுடன் ராமராஜ மஹாராஜன் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த குருஸார்வ பௌமகிக்கு ஸங்கல்ப பூர்வமாக விலைமதிப்பில்லா தங்க ஆபரணங்களினால் ரத்னாபிஷேகம்* செய்து, விலையேறப் பெற்ற காணிக்கைகளையும் அர்ப்பித்து புஷ்பமாலை, நவரத்ன மாலை, முத்து மாலைகளையும் ஸ்ரீயவர்களின் கழுத்தில்

---

1. Sources of Vijayanagaram History.
2. "विद्वद्दरोस्माद्विजयींद्र योगी
   विद्यसु ह्यास्यतुलप्रभावः ।
   रत्ना भिषेकं किलरामराजात्
   प्राम्याग्रय जक्ष्मी नकृता ग्रहारान् ॥" श्रीराघवेंद्र विजयः ।
3. Epigraphica Indica
4. Aravidu Dynasty of Vijayanagaram.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



அணிவித்து ஆநந்த பாஷ்பம் சொரிய, "மஹா ஸ்வாமி, பூஜ்ய குருச்ரேஷ்டரே, இன்று தன்யனானேன்; க்ருதார்த்தனானேன்" என்று ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து ஸதாசிவ ஸார்வ பௌமர் ரத்ன மாலைகளைச் சமர்ப்பித்து நமஸ்கரித்தார். ஜனங்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து ஜயகோஷம் செய்தனர், வெற்றியைக் காட்டும் பீரங்கிகள் குண்டுகளை வெடித்தன. எல்லோருக்கும் எல்லையற்ற மகிழ்ச்சி, உற்சாகம், எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம். இவைகளைக் கண்டவரல்லவோ புண்யம் செய்தவர்கள்!

ஜயகோஷங்கள், கைதட்டல்கள், கோலாகலம் இவைகள் நின்று அமைதி நிலவிற்று. பந்தி-மாகதர்கள் (விருதாவளிகள் கோஷிப்பவர்கள்) அதாவது அரசர்களைப் புகழ்ந்து அறிமுகப்படுத்துபவர்கள் "ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராட் ராஜாதிராஜ, பதவாக்யப்ரமாண பாராவார பாரீண, யமநியமாஸன, ப்ராணாயாம ப்ரத்யாஹாரத்யான தாரணஸமாத்யஷ்டாங்க யோகானுஷ்டான கரிஷ்ட, ஸர்வ தந்த்ரஸ்வதந்த்ர, ஷட்தர்சனா சார்யவர்ய, சதுஷ் ஷஷ்டி கலா பாராவார பாரீண சேகர, நாஸ்திக குலதிமிர நிராகரண ஸஹஸ்ரகிரண, ஆஸ்தி கதர்சன ஸம்ரக்ஷண நிபுண, துர்வாதி மத்த மாதங்க கர்வதலன பஞ்சானன, அனிதரஸாதாரண க்ருதிகரணதிகந்த விச்ராந்த கீர்த்தி சந்த்ரிகா விராஜித, நிகிலயதிவர ஸம்ஸேவ்யமான பாத பங்கஜ, கர்நாடக ஸாம்ராஜ்யா தீச்வராக்ஞயா ஸ்ரீமத் ராமராஜ ஸார்வபௌமானுஷ்டித ரத்னாபிஷேக விசோபித மஹாமஹிம, ஸ்ரீமத் வைதிக ஸத்வைஷ்ணவஸித்தாந்த ப்ரதிஷ்டாபனா சார்ய, ஜகத்குரு ஸ்ரீமன் மத்வா சார்ய முக்ய மஹா ஸமஸ்தான பூர்வாதி மடீய வித்யா ஸிம்ஹாஸனாதிச்வர, ஸ்ரீமத் ரகுநந்தன தீர்த்த ஸ்ரீபாத கரகமல ஸஞ்ஜாத, ஸ்ரீமத் ஸுரேந்திர தீர்த்த ஸ்ரீபாதவரகுமாரக, ஸ்ரீமத்விஜயீந்த்ர தீர்த்த யதிஸார்வ பௌம ஜயஜய" என்பதாக புகழாரம் சூடிய ஸேவகர்கள் ஸ்ரீயவர்களின் விருதுகளைக் கோஷித்தனர்.

பிறகு சக்ரவர்த்தியின் ஆக்ஞைப்படி ராமராயர் ஸ்ரீயவர்களுக்கு அனேக பூமிகள், கிராமங்களைத் தானம் செய்து கிருதார்த்தனானார். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் ரத்னாபிஷேகத்தினால் கிடைத்த விலைமதிப்பில்லா ரத்தினங்களையும் தங்க ஆபரணங்களையும் சபையிலிருந்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அநேக பண்டிதர்களுக்குத் தாராளமாக அருளி மீதியிருந்தவைகளை கிராமத்திலிருந்து கிடைக்கும் உற்பத்தி பொருள்களையும் கும்பகோணத்தின் வித்யாபீடத்திற்காக வினியோகிக்கப் போவதாகத் தெரிவித்து ராமராஜர் அளித்த பூமி ஆஸ்திகளில் சிலவற்றை சாஸ்திர பாரங்கதரான பண்டிதர்களுக்கும் மற்றும் ச்ரோத்ரிய ப்ராமணர்களுக்கு அக்ரஹாரங்களைக் கட்டுவித்து தானம் செய்வதற்கு விநியோகிக்க வேண்டுமென்று ராம்ராஜனுக்கு *ஆக்ஞாபித்தார்.

ஸ்ரீகளவரின் உதார புத்தி, ஸூய நலமின்மை, கலை, வித்யா வளர்ச்சியில் அக்கரை, வித்வான்களை ஆதரித்து ரக்ஷிக்கும் கருணை, முதலிய மஹா உத்தமமான, உயர்ந்த குணங்களைக் கண்டு சக்கரவர்த்தி, ராமராஜர், மற்றும் சபையோரும் ஆச்சரியமடைந்து மனமாரத் துதித்தனர். கவிகள் இந்த் மகோற்சவத்தை, ஸ்ரீவிஜயீந்திரரின் மஹா மகிமையையும் கவிதைகள் இயற்றி வர்ணித்து மகிழ்ச்சியுடன் பாடி நர்த்தனம் செய்தனர். பிறகு ஸ்ரீகளவர் ஸூக்தரீதியினால் பதில் சொல்லி வித்வத் பூர்ண உபதேசத்தைச் செய்தருளினார்.

கன்னட அரசனின் வேண்டுகோளின்படி அன்று அரண்மனையிலேயே மஹா ஸமஸ்தானத்தின் பூஜை நிறைவேறிற்று. ஸ்வாமி தரிசனத்தால் அரசன் கிருதார்த்தனானார். ஆயிரக்கணக்கான ப்ராம்மண சுமங்கலி களுக்குத் தீர்த்த ப்ரஸாதம் விநியோகம் செய்த பிறகு அறுசுவையுண்டியும் ஸம்பாவனைகளும் அளிக்கப்பட்டன.

ராமராஜரின் ப்ரார்த்தனையின்படி ஸ்ரீகளவர்கள் அவருடைய அரண்மனையிலும் சில நாட்கள் பூஜை ஆராதனை நிறைவேற்றி ஸ்ரீவ்யாஸ ராஜரின் மடத்தில் சுமார் 15-20 தினங்கள் வரை முகாம் செய்து தங்கினார். ஒவ்வொரு நாளும் ஸ்வாமி பூஜை, பாடப்ரவசனம், வித்வத் கோஷ்டிகள் நடந்தன. ஒவ்வொருநாளும் ராமராஜர் வந்து பூஜை ஆராதனைகளில் பங்கேற்று வந்தார். அதே சமயத்தில் ஸ்ரீகளவர் தாம் இயற்றிய, "ஸ்ரீவ்யாஸராஜ விஜயம்" மஹா காவ்யத்தை பண்டிதர்கள் கூட்டத்தில் வெளியிட்டார்.

---

"रत्नाभिषेकं किल रामराजात् प्राप्याग्र्य लक्ष्मीनकृताग्रहारान्" श्री राघवेंद्र विजयः

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


உயர்ந்த வித்வான்கள், கவிகள், அந்த உத்தமமான காவ்ய க்ரந்தத்தைப் பரிசீலனை செய்து ஸ்ரீயவர்களின் காவியமியற்றும் திறமையை மனமாரத் துதித்தனர். ஸ்ரீகளவர்கள் வித்வான்கள், நகரத்தார்கள், விசேஷமாக ராமராஜரின் அன்பு மிக்க வேண்டுகோளின் பேரில் மற்றும் சில தினங்கள் தலைநகரிலிருந்து விட்டு, வித்வான்கள், கவிகள் முதலியவர்களுக்கு விசேஷ சம்பாவனைகளைக் கொடுத்தருளிக் கும்பகோணத்திற்கு ப்ரயாணம் செய்ய ஏற்பாடுகள் செய்தார். தலைநகரிலேயே தங்கியிருந்து அனுக்ரஹிக்க வேண்டுமென்று ராமராஜர் வெகுவாக வேண்டினார். ஸ்ரீகளவர்கள் கும்பகோணத்தில் ஸ்தாபித்துள்ள வித்யாபீடத்தின் மகத்துவத்தையும், அங்கு தாம் இருந்தாக வேண்டிய அவசியத்தையும் தெரிவித்து, ஓய்வு கிடைக்கும் போது மறுபடியும் வந்து சில மாதங்கள் வரை தலைநகரில் இருப்பதாக ஆறுதல் சொல்லி பரிவாரத்துடன் விஜயகரத்திலிருந்து ப்ரயாணத்தைத் தொடர்ந்தார்.

கும்பகோணத்திற்குச் சீக்கிரமே போய்ச் சேரவேண்டுமென்று அவசர ப்ரயாணத்தை ஏற்றுக் கொண்டிருந்தாலும் விஜயநகர அரசன் ஸ்ரீகளவர்களுக்கு ரத்னாபிஷேகம் செய்வித்த விஷயம் எல்லாவிடங்களிலும் பிரசாரமாயிருந்ததால், ஆங்காங்கே பக்தர்கள் ஸ்ரீயவர்களைத் தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் சில தினங்களாவது விஜயம் செய்யுமாறும், உபதேசங்களினால் தங்களை உய்விக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டதின் பேரில், கும்பகோணம் போய்ச்சேருவது தாமதமாயிற்று.

இவ்வாறு நான்கைந்து மாதங்கள் காலம் ஸாவகாசமாகச் சஞ்சாரம் செய்து விஜயீந்திரரின் பரிவாரம், ஸ்ரீரங்கத்தை அடைந்தது., அங்கு தங்கியிருக்கையில் ஸ்ரீகள்வருக்கு ராமேச்வர யாத்திரை செய்ய வேண்டுமென்ற அவா உண்டாயிற்று. ஆகையால் ராமேச்வர யாத்திரையை மேற்கொண்டார். ஸேது யாத்திரை வாதிதிக் விஜயாத்திரையாக அமைந்தது. ஒவ்வொரு நாளும் வாதிகளுடன் வாதம் செய்து அவர்களை வாதத்தில் தோல்வியுறச் செய்து வந்தார். ராமேச்வரத்தில் ஸேது ஸ்நானம், பிந்து மா்தவ ராமலிங்கேச்வர தரிசனம் செய்து,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


குருவர்யர் திருப்தியடைந்தார். அங்கு, சைவ ஸர்வஸ்வ கண்டனம் "என்னும் சிறிய நூலை இயற்றி பரமாத்மாவிற்கு அர்ப்பணித்தார்.

ராமேச்வரத்திலிருந்து கன்யாகுமரிக்குச் சென்று அங்கு சில தினங்கள் தங்கி அநந்த பத்மநாப ஸ்வாமி தரிசனத்திற்காக அனந்த சயனத்திற்கு (திருவாங்கூர்) எழுந்தருளி, அங்கு ஸ்வாமி தரிசனத்தினால் புநிதராய் "விஷ்ணுபாரம்ய" என்ற க்ரந்தத்தை இயற்றி ஸ்ரீஹரிக்கு அர்ப்பித்தார். அவ்விடத்திய அரசன் உதய மார்த்தாண்ட வர்மன் ஸ்வாமிகளை கௌரவத்துடன் அரண்மனைக்கு அழைத்துச் சிறப்பான வரவேற்பளித்து, காணிக்கைகள் செலுத்தி, அவர் அனுக்ரஹத்தைப் பெற்றான்.

## 27. மாந்திரீகன் சரணடைதல்:

ஒரு நாள் ஸ்ரீகளவர்கள் கிரந்தங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கையில், வாயில் காப்போன் வந்து, "ஸ்வாமி, மலையாள மாந்திரீகனொருவன் தமது தரிசனத்திற்காக வந்திருக்கிறான்", என்று விண்ணப்பித்து ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி, அவனை உள்ளே அழைத்து வந்தான். சிவப்புக் கண்ணுடைய ஆஜானுபாஹுவான அந்த மாந்திரீகனைப் பார்த்தால் எப்படிப்பட்டவனும் பயந்துவிடுவான். ஸ்ரீகளவர் ஒருமுறை தலைநிமிர்ந்து பார்த்தார். அவன் மார்தட்டி நின்று, "விஜயீந்திர தீர்த்தர் என்பது நீங்கள் தானே? கும்பகோணத்தில் சைவ ஸந்நியாஸியை வென்று, எல்லா வித்தைகளிலும், யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்று பறைசாற்றியவர் நீங்கள்தானே? நானொரு மந்திரவாதி. என்னோடு போட்டியிட்டு நான் வைக்கும் மோடியை எடுக்க முடியுமா? தைரியமிருந்தால் எடுங்கள் பார்க்கலாம். முடியாது போனால் ஜயபத்திரிகை (நான் ஜயிக்கப்பட்டேன் என்னும் கடிதம்) எழுதிக்கொடுங்கள்", என்று ஆர்ப்பாட்டம் செய்தான்.

ஸ்ரீகளவர்களின் முகம் கம்பீரமாயிற்று. அவனைப்பார்த்து, "ஸ்ரீஹரியின் கிருபையினால், இதுவரை அப்பேர்ப்பட்ட ஒரு சம்பவம் நடைபெறவில்லை. ஊம், ஆகட்டும். நாளைய தினம் இந்த வீட்டிற்கு முன்புறம், வெட்ட வெளியில் போட்டி நடக்கட்டும். நாம் தயாராக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


உள்ளோம்," என்று தெரிவித்தார் மந்திரவாதி, "சரி, நாளை எனது திறமையைக் காட்டுகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டுச் சென்றான்.

மந்திரவாதியுடன் போட்டியிடும் விஷயம் காட்டுத் தீ போல் ஊருக்குள் பரவிவிட்டது. அரசாங்க அதிகாரிகள் வந்து அது விஷயமாக விசாரித்தனர். ஸ்ரீகளவர் சவாலை ஏற்றுக் கொண்டிருப்பது உண்மையெனத் தெரிய வந்தது. அதிகாரிகள் ஏதோ யோசித்துக் கொண்டிருப்பதை அறிந்து ஸ்ரீயவர்கள் "அதிகாரிகளே, பயப்பட வேண்டிய காரணம் எதுவுமில்லை. எளிதில் அவனை வென்று விடுவோம். போட்டிக்கு வேண்டிய ஏற்பாடுகளாகட்டும்", என்று அவர்களுக்கு உத்தரவிட்டு அனுப்பினார்.

"ப்ரபலமான மந்திரவாதியுடன் போட்டியிட்டு உயிருடன் பிழைத்தவரே இல்லை! அப்படிப்பட்டவனுடன் ஏன் ஸ்வாமிகள் போட்டியிட ஒப்புக்கொண்டார்? ஸ்ரீகளவர்கள் ஒப்புக் கொண்டாரென்றால், அவரெப்படிப்பட்ட மஹாத்மாவாக இருக்க வேண்டும்?" என்று பலவாறாக ஜனங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தனர். ஊருக்குள் என்னமோ இதே பேச்சு! எங்கு கண்டாலும் இந்தப் பேச்சுதான்! மத்தியானவேளையில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக ஸ்ரீயவரின் இருப்பிடத்திற்கு எதிரில் வெட்டவெளியில் நிறைந்தனர். அதிகாரிகள் தகுந்த ஏற்பாடுகள் செய்து மந்திரவாதிக்குத் தனது மோடி வேலையை ஆரம்பிக்கும்படி தெரிவித்தார்கள்.

மந்திர்வாதி மிக அட்டகாசத்துடன் மோடிக்கு வேண்டிய ஸாம்க்ரிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கிறான். ஸ்ரீகளவர் சரியான சமயத்தில் வந்தார். ஜனங்கள் உற்சாகத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மந்திரவாதி பல் கோடுகளை வட்டவடிவமாக வரைந்து நடுவில் ஒரு எலுமிச்சம் பழத்தை வைத்திருக்கிறான். அதற்குக் குங்குமம் பூசியிருக்கிறான். சிவப்பு பூக்களினால் அலங்க்ரித்திருக்கிறான். செம்மஞ்சக் குழம்பு சுற்றிலும் கொட்டியிருக்கிறான். காட்சி பயங்கரமாக உள்ளது.

மந்திரவாதி சபையோரை நோக்கி, "நான் இப்பொழுது வைத்திருக்கும் மோடி அதி பயங்க்ரமானது. ஏழு கோடுகளைத் தாண்டிப்போய், நடுவிலுள்ள எலுமிச்சம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பழத்தை (மோடியை) எடுத்துக்கொண்டு வரவேண்டும். ஒவ்வொரு கோட்டைத்தாண்டும் போது நெருப்பு, சூலம், பாம்புகள் வந்து மோடியை எடுக்க வருபவன் உயிரையே குடித்துவிடும்! அப்படி ஒருவேளை அதிலிருந்து தப்பித்துக் கொண்டு உள்ளே புகுந்து விட்டாலும் கூட மோடியைத் தொட்ட உடனே மனிதன் இறந்துவிடுவான். இதில் ஜயிப்பது என்றால் யமனுடன் போராடி, ஜயிப்பதாகும்! பாவம், வேதாந்த உபதேசம் செய்வதை விட்டு, இந்தயதிகள் இந்தக் காலனின் கவளமாகுவதற்கு விரும்புகிறாரோ எனக்கென்னமோ புரியவில்லை! இந்த ப்ராம்மண ஸந்நியாஸிகள் என்னதான் செய்ய முடியும்? இது மோடி! வாக்யார்த்தமல்ல!! உம், முடியாவிட்டாலும் சரி. ஜய பத்திரிகை எழுதிக் கொடுத்து விட்டால் சரி. உயிர் பிழைக்கலாம். என்ன சொல்லப் போகிறீர்கள், ஸ்வாமிகளே?" என்று கடோரமான குரலில் கலகலவெனச் சிரித்தான். ஜனங்கள் அவனுடைய படாடோபத்தைக் கண்டு பயமடைந்தனர்.

ஸ்ரீகளவர் புன்னகையுடன், "அதிகாரிகளே, ஸபையோர்களே! அவன் தனது பெருமையை வெகுவாகச் சொல்லிக் கொண்டதைக் கேட்டீர்கள். இப்பொழுது நாம் பேசுவதைச் சற்று கேளுங்கள். துர்தேவதை அல்லது பிசாசு சக்திகளின் உபாஸனையினால் மிகவும் பயங்கரமான மார்க்கத்தைப் பின்பற்றி தேசத்திற்கு, சமூகத்திற்கு ஒரு முள்ளைப்போல் நமது பண்பாட்டின் கௌரவத்திற்கே கேவலநிலைமையைத் தருகின்ற இவனை ஸன்மார்க்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதே நமது நோக்கம். இந்த மந்திரவாதியை நாம் ஜயிப்பதற்கு ஒரு கஷ்டமும் படவேண்டியதில்லை! நமது சிஷ்யரிலொருவனே மோடியை எடுத்து இவனை ஜயிக்கப் போகிறான். நமது தேவதேவோத்தமனின் மகிமையை மோடியை எடுக்கும் திறமையை நீங்கள் இப்பொழுது காணுவீர்கள். நமது சிஷ்யன் மோடியை எடுத்த பிறகு மந்திரவாதியானவன் நமது சவாலை எதிர்க்கட்டும்", என்று சொல்லி பக்கத்தில் நின்று கொண்டிருந்த பரிவாரத்தின் பக்கம் பார்த்து, பீமாசார்யனென்னும் வாலிபனை அழைத்து அவனுக்கு மந்திரத்தினால் பவித்ரம் செய்யப்பட்ட ஜலத்தைத் தெளித்து "பீமஸேனா, தைரியமாகப் போய் மோடியை எடு", என்று ஆக்ஞாபித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பீமஸேனன் ஸ்வாமிகளை நமஸ்கரித்து, தைரியத்துடன் முன்னால் போனான். ஜனங்கள் மூச்சுகூட விடாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மந்திரவாதி பயங்கரமாக மந்திரம் ஜபித்துக் கொண்டு, "ஹ்ராம், ஹ்ரீம், சண்டி, சாமுண்டி" என்றெல்லாம் கூச்சலிட்டுக் கொண்டு கையிலிருந்த தட்டிலிருந்து சாம்பலை பீமஸேனன் மீது வீசினான். முதல் கோட்டைத் தாண்டி பீமஸேனன் மேலே அடுத்த கோட்டில் நுழைந்ததைப் பார்த்த ஜனங்கள் ஆச்சரியமடைந்தனர். மந்திரவாதி கோபமடைந்து, "ஜை பைரவி" என்று உரக்கச் சொல்லிக் கொண்டே பலமுறை சாம்பலை மேலே வீச ஆகாய மார்க்கத்திலிருந்து நெருப்பு விழ ஆரம்பித்தது. ஜனங்கள் கலவரமடைந்து ஆரவாரம் செய்தனர். என்ன ஆச்சரியம்! நெருப்பு பாலாக மாறி பீமஸேனனுக்கு அபிஷேகமாயிற்று!

பீமஸேனன் தைரியம் உற்சாகத்துடன் நான்காவது கோட்டைத் தாண்டினான். மந்திரவாதி பல்லைக்கடித்துக் கொண்டு, பயங்கரமாக சாம்பலை வீசிக்கொண்டே, செம்மஞ்சக் குழம்பையும் தெளித்துக் கொண்டே மந்திரம் ஜபிக்கத் தொடங்கினான் பீமஸேனன் ஐந்தாவது கோட்டின் பக்கத்தில் போன உடனேயே ஒரு பெரிய பாம்பு சீறிக்கொண்டு அவன் உடலின் மீதி ஏறிவந்தது. சபையோர் நிசப்தமாக பயமடைந்து பார்க்கிறார்கள். ஸ்ரீயவர்கள் கண்ணை மூடி த்யானம் செய்தார். இதென்ன ஆச்சரியம்! எங்கிருந்தோ ஒரு கருடன் வந்து பாம்பைத் தூக்கிக் கொண்டு பறந்தோடிவிட்டது! ஜனங்கள் ஆச்சரியத்தில் மூழ்கி கரகோஷம் செய்தனர், ஸ்ரீகளவரின் முகத்தில் புன்முறுவல் பூத்தது!

மாந்த்ரீகனின் முகம் கோபத்தினால் சிவந்தது. மந்திரம் ஜபித்துக் கொண்டேயிருக்கிறான். சாம்பலை வீசி எறிந்து கொண்டேயிருக்கிறான், ஆறாவது கோட்டில் கால்வைத்த பீமஸேனன் ஹ்ருதயத்தில் ஒரு கூர்மையான சூலம் வந்து குத்தியது. ஜனங்கள் பயத்தினால் நடுங்கிப் போய்விட்டனர். ஸ்ரீகளவர் கையில் மந்த்ராக்ஷதையெடுத்து வீசி எறிந்து த்யானம் செய்தார். பீமஸேனனின் இதயத்தைக் குத்தின சூலம் புஷ்பமாலையாக மாறியது! ஜனத்திரள் மகிழ்ச்சியினால் சுவரில் எழுதின சித்திரம் போல் இந்த அற்புதத்தைப் பார்த்துக் கொண்டே ஸ்ரீயவரின் ஆழ்ந்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சக்தியையும், திறமையையும் கொண்டாடத் தொடங்கினர். பீமஸேனன் ஏழாவது கோட்டை எளிதில் தாண்டி எலுமிச்சம் பழத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். மந்திரவாதியின் முகம் வெளுத்தது. உடல் பயத்தினால் நடுங்கிற்று. ஆயினும் ஏதேதோ மந்திரங்களை ஜபித்துக் கொண்டு ஆர்பாட்டம் செய்து கொண்டிருக்கிறான். அதனால் எதுவும் பலிக்கவில்லை. பீமஸேனன் மோடியைக் கொண்டு வந்து ஸ்ரீயவர்களின் பாதத்தினருகில் வைத்து நமஸ்கரித்தான். அவர் இடது காலால் தொட்டார். ஜனங்கள் மகிழ்ச்சி பீறிட்டு ஸ்ரீகளவருக்கு ஜயகோஷம் செய்து ஆரவாரம் செய்தனர். மேலும் அவரது மகிமையைக் கொண்டாடினர். விஜயீந்திர குருபாதர் மந்திரவாதியை அழைத்து, "என்னப்பா, உனது சவாலை ஏற்று நாம் வெற்றியடைந்தோம். இப்பொழுது எமது சவாலை ஏற்று வெற்றிபெற உனக்கு சக்தி இருந்தால் உன்னுடைய இந்த எலுமிச்சம் பழத்தையே எடு பார்க்கலாம்" என்றால். மந்திரவாதிக்கு ஸ்வாமி, தாம் யாரோ தேவாம்சராக் இருக்க வேண்டும்! இந்தத் தென்னாட்டில் எனது மோடியை எடுக்கும் தீரவீரன் வேறுயாரும் இருக்கவில்லை. உமது சிஷ்யனாலேயே எளிதாக அதை எடுத்ததைக் கண்டு நான் திக்ப்ரமை அடைந்து செயலற்றுப் போனேன். உண்மையாகவே தாங்கள் ஸகல கலைகளிலும் நிகரற்றவர்தான், ஆம்! நான் தங்களைச் சரணடைகிறேன் காப்பாற்ற வேண்டும், "என்று வேண்டிக்கொண்டு நமஸ்கரித்தான், ஸ்ரீயவர்கள் அவனுக்கு புத்திமதிகளைச் சொல்லி", இனிமேல் இப்படிப்பட்ட பாவ கார்யங்களைச் செய்யாதே. ஸன்மார்க்கத்தைப் பின்பற்றுவாயாக. பர்மாத்மா உனக்கு மங்களத்தைச் செய்வார்". என்று ஆசிர்வாதம் செய்து போதுமான திரவியம்! மந்திராக்ஷதை முதலியன அளித்து அவனை அனுப்பினார். ஸ்ரீகளவர்களின் தாராள குணம், நற்குணம், மந்திர சக்தியின் மகிமை முதலிய உத்தம குணங்களைக் கண்ணாரக் கண்டு ஜனங்கள் அவரைக் கொண்டாடிச் சென்றனர். ஸ்ரீகளவர் இருப்பிடத்திற்கு வந்து ஸ்நானானுஷ்டாங்களைப் பூர்த்தி செய்தபிறகு ஸ்ரீபத்மநாப ஸ்வாமியின் தரிசனம் செய்து அன்றைய வெற்றியைப் பரமாத்மாவிற்கு அர்ப்பணித்தார். மறுநாள் பரிவாரத்துடன் கும்பகோணத்திற்குப் ப்ரயாணத்தைத் தொடர்ந்தார். ஸஞ்சார க்ரமத்தில் தஞ்சாவூருக்கும் எழுந்தருளினர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தஞ்சாவூரில் 10 நாட்களாகப் பெரிய உற்சவம் நடைபெறுகிறது. மஹாராஜாஸ்ரீ சவ்வப்ப நாயகருக்கு புத்திரப் பேறாகியுள்ளது. ராஜ்யத்தின் யுவராஜா பிறந்துள்ளான். ஜனங்கள் அபார மகிழ்ச்சி, உற்சாகம் நிரம்பியுள்ளனர். விஜய நகரத்தின் கீர்த்தி பெற்ற சக்ரவர்த்தி அச்யுத தேவராயரின் நாத்தனாரான ஸ்ரீமதி மூர்த்தாம்பிகேதான். சவ்வப்ப நாயகரின் பட்டத்து ராணியாதலால், விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் மஹா மாண்டலீகர்களில் சவ்வப்ப நாயகரின் பதவியும் கௌரவமும் பெரியது. அதனால்தான் மஹா ராணி மூர்த்தாம்பிகைக்கு யுவராஜன் பிறந்ததினால் இவ்வளவு விமரிசையாக ப்ரஜைகள் உற்சவத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

இப்பேர்ப்பட்ட சமயத்தில் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் தஞ்சாவூருக்கு விஜயம் செய்திருப்பதினால் அவர் வரவையறிந்த மஹாராஜா மிக்க மகிழ்ச்சியோடு ஸ்ரீகளவர்களை வரவேற்று உபசரித்து ராஜ அரண்மனையில் முகாம் ஏற்பாடு செய்தான். பூஜாராதனை, பிக்ஷை முடிந்த பிறகு தனிமையில் ஸ்ரீகளவர் அமர்ந்திருக்கையில் சவ்வப்ப நாயகர் வந்து வணங்கி அமர்ந்தார்.

ஸ்ரீகளவர்கள் புன்னகையுடன், "யுவராஜா பிறந்த சுபசமாசாரம் அறிந்து மிக்க மகிழ்ச்சி. மஹாராஜாவின் கீர்த்தியை வளர்க்கப்போகும் புத்ரரத்னத்தின் நாமகரணம் சந்தர்ப்பத்தில் நாம் இங்கிருப்போம் என்று தெரியாது. மிக்க மகிழ்ச்சி. நீங்கள் உண்மையில் பாக்யசாலி", என்று ஆசி அருளினார்.

மஹாராஜர் பக்தி-சிரத்தையுடன் கைகூப்பி ஆனந்தக் கண்ணீர் சொரிய, "குருச்ரேஷ்டரே இவையெல்லாம் தங்களது அனுக்ரஹத்தின் பலன்! தாங்கள் விஜயநகரத்திற்கு விஜயம் செய்யும் மார்க்கத்தில், என்மீது பரமானுக்ரஹம் செய்து, "யுவராஜர் பிறக்கும்பொழுது வருவோம்" என்று பவிஷ்யவாணி சொல்லி அருள் புரிந்தீர்கள்! தபஸ்விகளும் மஹா மகிமையுமுள்ள எனது ஸ்வரூபத்தை உய்விக்கும் குருச்ரேஷ்டரும், தஞ்சாவூரின் நன்மையையும் மங்களத்தையும் விரும்பும் எனது குருபாதரவர்களின் பவிஷ்யவாணி என்றைக்காவது பொய்க்குமா? மஹாஸ்வாமி! நாளை யதினம் நாமகரண மஹோத்சவ காலத்தில் தமது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பாததூளியின்னால் அரண்மனையைப் புனிதமாக்கிப் பாதபூஜையை ஏற்றுக் கொண்டு யுவராஜ குமாரனையும், மஹாராணியையும் ஆசீர்வதிக்க வேண்டும் ப்ரபோ" என்று விக்ஞாபித்தார்.

ஸ்ரீகளவர்க்ள், "ராஜேந்திரர், உன் விருப்பம் போல் ஆகட்டும், அவசியம் வருகிறோம். யுவராஜாவுக்கு "அச்யுத" என்று நாமகரணம் செய்ய வேண்டுமென்பது நமது விருப்பம். விஜயநக்ரத்தினது மற்றும் உனது வம்சத்தின் சம்மந்தத்தைக் காட்டுவதாக உள்ளது இந்தப்பெயர். தோஷமற்றவனாக, ஜகத்தில் கீர்த்தி பெற்று அமரனாகப் போகிறான் குமாரன்! எல்லாவற்றிற்குமேல் விஷ்ணு பக்தனான நீ ஸ்ரீஹரியின் பெயரை ராஜகுமாரனுக்குச் சூட்டுவது மிகப் பொருத்தமாகவும் உள்ளது. என்று சொல்லவும் அரசன் மகிழ்ச்சியினால், "குருபாதரின் ஆக்ஞையைச் சிரஸாவஹிக்கிறேன்" என்று வாக்களித்தான்.

சற்று நேரம் பேச்சு வார்த்தைகள் ஆன பிறகு அரசன், "மஹாஸ்வாமி ஸ்ரீராமராஜர் தமக்கு கௌரவம் கொடுத்து கிருதார்த்த விஷயம் அறிந்து மிகமிக மகிழ்ச்சி அடைந்தேன். விஜயநகரத்தின் பெருமைக்கு அது காரணமாகும் என்பது என நம்பிக்கை. ஸ்ரீபாதங்களவர் கன்னட ஸாம்ராஜ்யம் மற்றும் நமது ராஜ்யங்களுக்கும் மங்களமுண்டாகும்படி இதேபோல் அனுக்ரஹித்துக் கொண்டிருக்க வேண்டும்" என்று விண்ணப்பித்து உத்தரவு பெற்றுப் புறப்பட்டான்.

அரண்மனையில் யுவராஜரின் நாமகரண மகோற்சவம் வெகு விமரிசையாக வைபவத்துடன் நிறைவேறியது. ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரை பிருதாவளிவாத வைபவங்களுடன் வரவேற்றுப் பாத பூஜை செய்து திரவியம், ஆபரணங்களைக் காணிக்கையாக அர்ப்பித்து சவ்வப்ப நாயகர் கிருதார்த்தனானார். சாஸ்திர முறைப்படி ஹவன-ஹோமம் முதலியவை நடந்த பிறகு ஸ்ரீகளவர்களின் ஆக்ஞைப்படி ராஜகுமாரனுக்கு அச்யுதப்ப நாயகர் என்று பெயரிடப்பட்டது. ஸ்ரீகளவர் ராஜகுமாரனுக்குப் பீதாம்பரம், சால்வை, ஸ்ரீகோபால கிருஷ்ண ப்ரதிமையோடு கூடிய முத்துமாலையும், ராஜ தம்பதிகளுக்கு காணிக்கை அன்பளிப்பாகக் கொடுத்து, அனுக்ரஹித்து ஆசீர்வாதம் செய்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



அன்று அரண்மனையில் ஸ்ரீகளவர்கள் வைபவத்துடன் ஸ்ரீமூலராமருக்கும் பூஜாராதனைகள் நடத்தினார். மாலையில் மஹாராஜரையும், ராஜ குடும்பத்தினர்களையும், ஆசீர்வதித்து கும்பகோணத்திற்குப் புறப்பட்டார். ப்ரிய சிஷ்யரின் வருகையினால் ஸ்ரீஸுரேந்திரருக்கு அபார ஸந்தோஷமுண்டாயிற்று. அவர் அன்பு மேலிட்டு வாத்ஸல்யத்துடன் சிஷ்யரை ஆலிங்கனம் செய்து கொண்டார். விஜயீந்திரர் குருபாதருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து தாம் கும்பகோணத்திலிருந்து புறப்பட்டதிலிருந்து நடந்த விருந்தாந்தங்களை ஆதியோடந்தமாகத் தெரிவித்தார்.

ரத்னாபிஷேகத்தைப் போன்ற அபூர்வ கௌரவத்தைப் பெற்று, பண்டிதர்களுக்கு அக்ரஹாரங்களை ஏற்பாடு செய்து கொடுத்து நன்மதிப்பைப் பெற்றுத் திரும்பிவந்த சிஷ்யோத்தமரைக் கண்டு ஸுரேந்திரருக்கு மிக்ப்பெருமையர்கவிருந்தது. இப்பேர்ப்பட்ட சிஷ்யரைப்பெற்ற தாமே தன்யரென்று அவர் பெருமையடைந்தார். விஜயீந்திரர் விஜயநகருக்குச் சென்றதிலிருந்து கும்பகோணத்தில் நடந்த விஷயங்கள், வித்யாபீடத்தைப் பற்றிய விஷயங்கள், நூற்றுக்கணக்கான மாணவர்கள் புதிதாக வந்து சேர்ந்திருப்பது, பாடரவசனங்கள் வஸதியாக நடைபெறுவது முதலான ஸகல சமாசாரங்களையும் விஜயீந்திரருக்குத் தெரிவித்து, "தற்பொழுது தாம் வந்து விட்டீர்கள், என்மீதிருந்த பொறுப்பு விட்டது" என்று சொல்லி வெகுநேரம் சிஷ்யருடன் பேசிக்கொண்டிருந்து, பிறகு இரு ஸ்வாமிகளும் ஓய்வு பெறச்செய்தனர்.

விஜயீந்திரர் கும்பகோணத்திற்கு வந்து ஒன்றிரண்டு மாதங்களாயின. ஸம்ஸ்க்ருத வித்யாபீடத்தின் நிகழ்ச்சிகள் நல்லமுறையில் நடந்து கொண்டிருந்தன. ஸுரேந்திர தீர்த்தருக்கு மற்றுமொருமுறை தீர்த்தக்ஷேத்திர யாத்திரை செய்ய வேண்டுமென்ற அவா ஏற்பட்டது. விஜயீந்திரரிடம் அவர் தமது விருப்பத்தைத் தெரியப்படுத்தினார். விஜயீந்திரர், "குருபாதரே, தாங்கள் தீர்த்தயாத்திரை செய்து விட்டு வந்து இன்னும் இரண்டு வருஷங்கள் கூட ஆகவில்லை, அதற்குள் புறப்பட வேண்டுமா? தமது ஸேவையிலிருந்து மற்றொருமுறை வஞ்சிக்கப்பட வேண்டியிருக்குமே! இன்னும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஒன்றிரண்டு வருஷங்களான பிறகு புறப்படலாமல்லவா? என்று விண்ணப்பிக்கவும் ஸுரேந்திரர் இவ்வாறு சொன்னார், "தேகம் சாசுவதமானதல்ல, தேகத்தில் சக்தியுள்ளபொழுதே, உறுதி செய்யப்பட்ட புண்ய காரியங்களைச் செய்து முடிப்பது புத்திசாலிகளின் அறிகுறி. உமது கீர்த்திக் கொடியானது நாளுக்கு நாள் மேன்மையின் சிகரத்தை எட்டிக் கொண்டிருக்கிறது. அதனால் எனக்கு மட்டற்ற உற்சாகம் உண்டாகிறது. மேலும் சக்தியையும் அளித்து வருகிறது, பகவந்தனின் கிருபையால் இரண்டுமுறை பூப்ரதிதக்ஷிணம் முடித்து விட்டோம். இன்னொருமுறை அந்த மாபெரும் காரியத்தை நாம் பூர்த்தி செய்வதால் நமது வாழ்க்கையின் லக்ஷியங்களெல்லாவற்றையுமே நிறை வேற்றியதாகும். இப்பொழுதே அந்தக்காரியத்தைச் செய்ய வேண்டுமென்று ஸ்ரீஹரி வாயுகளின் ப்ரேரணையாகி யுள்ளது. நீங்கள் வித்யாபீடத்தின் வேந்தர் பதவிப் பொறுப்பை ஏற்று இந்தப் பரம பவித்ரமான காரியத்தை நடத்துவதற்கு நமக்கு அனுகூலம் செய்து தர வேண்டும்".

விஜயீந்திர தீர்த்தர் குருபாதரின் ஆக்ஞைக்குப் பதில் கூற முடியாமல் சம்மதித்தார். ஸ்ரீஸுரேந்திரர் பாரத நாட்டின் பூப்ரதக்ஷிணம் இடையூறின்றி நடைபெறத்தானே ஜ்யோதிஷ சாஸ்திரப்படி ஆலோசித்து உத்தமமான முகூர்த்தத்தையும் உறுதி செய்தார். ஸுரேந்திரர் சுபமுகூர்த்தத்தில் வித்யாபீடத்தின் பொறுப்பை சிஷ்யரிடம் ஒப்புவித்துவிட்டு வேண்டிய அளவுக்கு சிஷ்யர்களை அழைத்துக்கொண்டு மூன்றாவது பாரத பூப்ரதக்ஷிணைக்காக கும்பகோணத்திலிருந்து ப்ரயாணத்தை மேற்கொண்டார். ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள், பக்தர்கள், மித்திரர்கள், ஸ்ரீவிஜயீந்திரர் தலைமையில் குருபாதருக்கு மங்களமுண்டாகப் பிரார்த்தித்து விடைகொடுத்தனுப்பினார்.

## 28. அறுபத்தி நான்கு கலைகளில் வல்லமை

ஸ்ரீவிஜயீந்திரர் மீது மிகப்பெரிய பொறுப்பு விழுந்தது. ஸ்ரீமதாசார்யரவரின் ஸத்ஸித்தாந்தத்தின் மீது அநேக புத்திசாலிகள் சுமற்றும் தோஷங்கள், குற்றங்களை யுக்தியுடன் பரிகாரம் செய்து, அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவம், மீமாம்ஸகர்கள் முதலிய புத்திக்கூர்மையுள்ள ப்ரபலவாதிகளுடன் மோதி அவரெல்லோரையும் வாதத்தில் வென்று த்வைத

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸிந்தாந்தமென்னும் ஸ்ரீநருஸிம்ஹஸ்வாமியின் மூன்று கண்களைப் போலுள்ள, "சந்த்ரிகா, ந்யாம்ருத, தர்க்கதாண்டவம்" முதலிய கிரந்த ரத்னங்களை இயற்றி ஸித்தாந்தத்தை அலங்கரித்து ஸ்ரீமத் வ்யாஸராஜயதி ஸார்வபௌமரவர்கள் ப்ருந்தாவனஸ்தரானார் என்று அறிந்த பிறகு, அவரிருக்கும் காலத்தில் அவரது நிகரற்ற பாண்டித்யம், திறமை, தேஜஸ்ஸுகளை எதிர்க்க முடியாமல் பயத்தினால் உள்ளே அடங்கிக் கிடந்து மூலைகளிலிருந்த வாதிகள் அவர் பரமபதம் அடைந்த பிறகு, ஒவ்வொருவராக வெளியே வந்து த்வைத ஸித்தாந்தத்தின் மீது நாலா பக்கங்களிலிருந்தும் தாக்குதலைத் தொடங்கினார்கள்.

இந்த எல்லாவிதப் புயல்களையும் தைரியமாக எதிர்த்து நின்று மத்வஸித்தாந்தத்தின் மகத்துவத்தை எடுத்துகாட்டுவதற்காக வந்த ஸந்தர்ப்பம் எளிதானதா என்ன? அன்று மஹானுபவரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் இருந்திராவிட்டால் இன்றுவரை நமது மத்வ மதம் பிழைத்திருந்திருக்குமா? என்னும் ஸந்தேகம் ஆராய்ச்சியாளர்களுக்கு வராமலிருப்பதற்கில்லை. அவரைத் தவிர வேறு யாராலும் அன்றைய ஆபத்தான நிலைமையிலிருந்து நமது மதத்தைக் காப்பாற்ற முடியவே முடியாதென்று சொல்வதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அதற்கு ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் 104 வெல்வதற்கரிய க்ரந்தங்களே *சாக்ஷியாக உள்ளன."

இன்று மாத்வர்கள் முத்திரை கோபி சந்தனத்தை அணிந்து கொள்ளுகிறார்கள் என்றால், அது ஸ்ரீவிஜயீந்திரரனுக்ரஹத்தினால்தான். யாராவது

---

"चातुर्यैकाकृतिर्यश्चतुरधिक शतग्रंथरत्न प्रणेता" - श्री गुरुगुणस्तवनं ।

1. चतुः षष्टि कलाविद्या पूर्णोऽयमिति वंदिभिः ।
राजमार्गे घोष्यमानं श्री मध्वमतवर्धनं ॥ (श्री विजयींद्रस्तोत्रम्)

2. चतुः षष्टिकला विद्या जुषे विद्वन्महोपुषे ।
जयीन्द्रज्योतिषे कुर्या वंदनानि यशोजुषे ॥ (श्री राघवेंद्र विजयः)

3. स्फुट विदित चतुःषष्टि विद्याविशेषः । (श्री गुरुगुणस्तवनं)

4. गणनातीत महात्म्यो विजयीन्द्र यतीश्वरः ।
चतुः षष्टि कला पूर्णोऽस्तुजीवमुक्तं करोतुमाम् ॥ (विजयींद्रस्तुतिः)

5. Arividu Dynasty of Vijayanagaram - by Heras)

6. Sources of Vijayanagar History.

7. Epigraphia Indica Vol. XII P. 345.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீமதாசார்யரின் ஸச்சாஸ்திர வ்யாஸங்க, பாடப்ரவசனம் செய்து கொண்டிருக்கிறார்களென்று பெருமைப்பட்டால் அதற்குக் காரணமானவர் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர்! அந்தப் புண்யமெல்லாம் ஸ்ரீவிஜயீந்திரரைச் சார்ந்தது என்பது நிர்விவாதமான விஷயம்! அதாவது விவாதத்திற்கப்பாற் பட்டது. ஆகையால் ஸச்சாஸ்திர வ்யாஸங்கம் செய்பவரெல்லோரும் மற்றும் அவர் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் கூட விஜயீந்திரரின் அனுக்ரஹத்தினால் உபஜீவிகளாயுள்ளனர் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. இந்தக் காரணத்தினால் ஸகலரும் அவருக்கு என்றும் நன்றியுள்ளவராக இருக்க வேண்டும். இதைப் பரிசீலித்தபொழுது மாத்திரம் அவர் செய்துள்ள மகத்தான காரியம் அறிந்து கொள்ள முடியும்.

ஓரிடத்தில் வெவ்வேறு வாதிகளுடனே வாதிக்க வேண்டி வந்தால், மற்றொரிடத்தில் ராஜவீதிகளில் புகழாரம் செய்யும் பாடகர்கள்; "சதுஷ்ஷஷ்டி கலாபாரீண சேகரர்" " ஸ்ரீவிஜயீந்த்ர குருஸார்வபௌம ஜய ஜய" என்று கோஷம் செய்து கொண்டிருந்த தமது விருதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. ஸ்ரீவிஜயீந்திர சது ஷஷ்டி கலாபாண்டித்யத் (64 கலா வல்லுநர்)தின் வைபவத்தைக் கேட்டு பலதேசங்களிலிருந்து அநேக கலைகளில் நிபுணர்கள் ஸ்ரீவிஜயீந்திரரை வென்றுவிட வேண்டுமென்று பேராவலுடன் கும்பகோணத்திற்கு ஓடிவர ஆரம்பித்தனர். நிலைமை இப்படியிருந்தும் ஸ்ரீவிஜயீந்திரர் பயப்படவில்லை. எல்லாவிதமான வாதிகளையும் சிரித்த முகத்துடனேயே விளையாட்டாக எதிர்த்து வந்தார். இதைக்கண்டு, "எப்படிப்பட்ட தைரியமப்பா இவருக்கு" என்று ஆச்சரியத்தில் மூழ்கினார்கள் கும்பகோணவாசிகள்!

## 29. டொம்பக்கூத்தாடியின் தோல்வி (தொம்பரர்: களக்கூத்தாடி)

ஒருநாள் மத்தியான வேளை சிஷ்யர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் வெள்ளிக் கோலேந்திய வாயில்காப்போன் ஒருவன் வந்து ஸ்வாமிகளின் பக்கம் வந்து, "ஜய விஜயீந்திர பராக்," உத்திரதேசத்திலிருந்து மிகப் பெயர்பெற்ற களக்கூத்தாடி ஒருவன் ஸ்ரீகளவர்களின் தரிசனத்திற்காக வந்திருக்கிறான் மஹாஸ்வாமி. ராஜா மஹாராஜாக்களின் சபைகளில் தனது கலா விநோதங்களைக் காண்பித்து அநேக வெகுமதிகளைப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பெற்றிருக்கின்றானாம்! தனது கலையில் தான் ஜயிக்கப்பட முடியாதவன் (invoicible) என்று சொல்லிக் கொள்ளுகிறான். ஸ்ரீகளவர்கள் 64 கலைகளில் நிபுணரென்பதைக் கேட்டு இங்கு வந்திருக்கிறானாம். ஸ்ரீகளவர்கள் அனுமதியை எதிர்பார்த்து நிற்கின்றான்'' என்று விக்ஞாபித்தான். ஒருமுறை புன்னகை செய்து விஜயீந்திரர் சிஷ்யர்களைப் பார்த்து, தமாஷாக, "உம், ஆரம்பமாயிற்றோ கலைத்திறன் யுத்தம்! ஹரி சித்தம், ஆகட்டும்". என்று களக்கூத்தாடியை அழைத்து வருமாறு வாயில்காப்போனுக்கு உத்தரவிட்டார்.

வாயில்காப்போன் கூத்தாடியை அழைத்து வந்து ஸ்ரீக்ளவரின் முன் நிறுத்தினான். அந்தக் கலைஞன் ஸ்ரீகளவரை வந்தனை செய்து, ''தாங்கள் ஸந்நியாஸி என்பதால் நமஸ்கரிக்கிறேன். நான் உங்களை மனப்பூர்வமாக நமஸ்கரிக்க வேண்டுமானால்.* நான் தோற்றுப்போனால் தங்களை மனமார வணங்குவேன். நீங்கள் தோற்றால் எனக்கு ஜயபத்திரிகை எழுதித் தரவேண்டும்" என்று சொல்லவும், அங்கிருந்தவர் யாவரும் அவனுடைய அஹங்காரத்தைக் கண்டு, திகைத்தனர். ஸ்வாமிகள், "ஏகலைஞனே, என்னைக் கலைகளில் ஜயிக்க வந்தவர்களில் நீ மூன்றாவது பேர்வழி வெற்றி-தோல்விகள் எவரொருவர் கையிலுமில்லை. ஆகட்டும். சந்தோஷம் ஸ்வாமியின் கிருபையினால் நம்மால் முடிந்ததைச் செய்வோம். நாளை நடுப்பகலில் கும்பேச்வரஸ்வாமி சந்நிதானத்திற்கு எதிரில் உள்ள மைதானத்தில் உனது வித்தையைக் காண்பிக்கலாம். அங்கேயே நாமிருவருடைய போட்டியும் ஆகட்டும். நீ போய் வா" என்று விடைகொடுத்து அனுப்பினார்.

களக்கூத்தாடியானவன் விஜயீந்திரரை ஜயிக்க வேண்டுமென்று வந்துள்ள சமாசாரமும் மற்றும் அவரிருவருடைய வெற்றி-தோல்வியின் பரீக்ஷை நடைபெறப் போகிறதென்ற செய்தியும் காற்றோடு காற்றாக எல்லாவிடங்களிலும் பரவிற்று. கும்பகோணவாஸிகள் ஸ்ரீவிஜயீந்திரர் மற்றும் களக்கூத்தாடியின் கலை வல்லமையைப் பார்க்க வேண்டுமென்று குதூகலத்துடனும் உற்சாகத்துடனும் நான் முன்னே நீ முன்னே என்று கும்பேச்வரர் தேவாலயத்திற்கெதிரில் கூட்டம் கூட்டமாக வந்துள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் தமக்குள்ளேயே

* என்னை எனது கலையில் வெல்ல வேண்டும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சர்ச்சை செய்து கொண்டிருக்கின்றனர். கும்பகோண நகரவாசிகளுக்கு ஸ்ரீவிஜயீந்திரரின் பாண்டித்யம், திறமை, மகிமைகள் தெரிந்திருந்த போதிலும் களக்கூத்தாடியுடன் நடக்கும் கலைப்போட்டியில் விஜயீந்திரரின் திறமையை பார்த்து ஆனந்திக்க வேண்டுமென்று எல்லோரும் உற்சாகத்துடனிருக்கின்றனர். அரசாங்க அதிகாரிகள் ஊரின் பிரமுகர்கள் முன்வரிசையில் அமர்ந்துள்ளனர். ஸ்ரீவிஜயீந்திரருக்காக ஒரு உயர்ந்த ஆஸனம் தயாராக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கூத்தாடி தனது கூட்டாளிகளுடன் கலையை நிரூபிக்க வேண்டிய பொருள்களுடன் தயாரான நிலையில் கர்வத்துடன் நின்றிருக்கிறான். ஒவ்வொருவரும் விஜயீந்திரரின் வருகையையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீவிஜயீந்திரர் பல்லக்கில் வந்திறங்கினார். ஸ்வாமிகள் தனது இருக்கையில் எழுந்தருளி புன்னகையுடன் கூடியுள்ள நகரவாஸிகளையும் அதிகாரிகளையும் பார்த்து கம்பீரமான குரலில் இவ்வாறு சொன்னார், "அதிகாரிகளே, நகரவாசிகளே, முன்பு ஒருமுறை இதே இடத்தில் நாம் சைவ ஸந்நியாஸிகளை வென்றபொழுது நீங்கள் யாவரும் நமக்கு அளித்த சன்மான விழாவில் எந்தக் கலையிலாகட்டும் யார் வேண்டுமானாலும் நம்முடன் போட்டியிடலாம் என்று ஸவால்விட்ட விஷயம் உங்கள் எல்லோருக்கும் நினைவிருக்கலாம். அதானபிறகு அநேக வாதிகளுடன் வாக்குவாதம் செய்து ஸ்ரீஹரியின் அனுக்ரஹத்தினால் நாம் வெற்றிவாகை சூடியது உங்களுக்குத் தெரிந்த விஷயம் தான். ஆனால் இந்த மாதிரிக்கலையில் நம்முடன் போட்டியிடவந்த இந்தக்களக் கூத்தாடியானவன் மூன்றாவதானவன். முதலில் சைவ ஸந்யாஸி இந்திர ஜால வித்தையிலும், அநந்த சயனத்தில் மலயாள மாந்திரீகனும் மோடி வித்தையிலும், போட்டியிட்டனர். இப்பொழுது இவன் வந்துள்ளான். நாம்விட்ட சவாலை நாம் காப்பாற்றிக் கொள்ளத் தயாராக உள்ளோம். இவன் முதலில் தனது கலைத் திறமையைக் போட்டி காண்பிக்கட்டும். பிறகு நமது ஆகட்டும். புத்திசாலி களான நீங்களே வெற்றி-தோல்வியைப் பக்ஷபாதமின்றி முடிவு செய்யுங்கள்.

கூத்தாடி தனது கலையைக் காண்பிக்க ஆரம்பித்தான் முதலில் சில வேடிக்கைகளைக் காண்பித்த பிறகு ஒரு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விசித்திரமான முறையில் தனது சரீரத்தை வளைத்துக் காண்பித்தான். எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கினர். கயிற்றின் மேல் நடப்பது, பெரிய கம்பத்தின் மேலேறி அங்கு பற்பல அற்புதமான வித்தைகளைக் காண்பிப்பது முதலான அற்புதக் கலா விமரிசனம் செய்தான். ஜனங்கள் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தனர். விஜயீந்திரரும் அவனுடைய வித்தைகளைப் பார்த்து மெச்சினார். தனது கலைகளைக் காண்பித்த பிறகு அவன் விஜயீந்திரரின் அருகில் வந்து, "ஸ்வாமி, எனது வித்தைகளைக் காண்பித்துள்ளேன். இப்பொழுது நான் செய்து காட்டிய வித்தைகளில் ஏதாவது ஒன்றை நான் செய்து காட்டியபடி தாங்கள் செய்தால் தாங்கள் வெற்றியடைந்ததாக நான் ஒப்புக் கொள்ளுகிறேன் என்று விக்ஞாபனம் செய்தான்.

ஸ்ரீவிஜயீந்திரர் அதிகாரிகளைப் பார்த்து - "இந்தக் கலைஞன் நல்ல புத்திமான். மற்றும் அவனது கலையில் அவன் நன்கு உழைத்துப் பழகியிருக்கிறான். அதில் சந்தேகமில்லை. ராஜாதிராஜர்களால் சன்மானிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்துக் கொள்கிறான். ஆனால் அவன் செய்து காட்டிய வித்தைகள் அந்த வெகுமதிகளையடையத் தகுதியானவை என்று நமக்குத் தோன்றவில்லை. கயிற்றின் மீது நடப்பது ஸாதாரண வித்தை அதையே நாம் இப்பொழுது வேறு முறையில் செய்து காண்பிப்போம். அதற்குத்தகுந்த ஏற்பாடுகளை நீங்கள் செய்துதர வேண்டும்!" என்று சொல்லி அவர்கள் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னார். அதைக்கேட்டு அவர்கள் மிக்க ஆச்சரியத்தினால் பிரமித்து ஸ்ரீயவர்களின் உத்தரவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் தைரியமில்லாமல் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர்.

கும்பேச்வரனின் தேவாலயத்தின் கோபுரத்திலிருந்து ஸாரங்கபாணி தேவாலய கோபுரத்தின் வரையில் பூக்கட்டுவதற்கு உபயோகிக்கும் மெல்லிய வாழைநாருகளை ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்துக்கட்டி ஒரே கயிறாக ஆக்கப்பட்டு இரண்டு கோபுரங்களுக்குமிடையே தொங்கவிடப்பட்டது. இந்த விசித்திரத்தைக் கண்டு ஜனங்கள் மாத்திரமல்ல, கூத்தாடியும் திக்ப்ரமையடைந்தான். ஸ்ரீயவர்கள் ஆஸனத்திலிருந்து எழுந்து நடந்து கும்பேச்வரன் கோவிலின் கோபுரத்தின் மேல் ஏறி நின்றார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஜனங்கள் மூச்சுக்கூட விடாமல் அந்த விசித்திர கலையை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே ஸ்ரீவிஜயீந்திரர் கும்பேச்வரரின் கோபுரத்திலிருந்து ஸாரங்கபாணி கோவில் கோபுரம் வரை கட்டியுள்ள மெல்லிய வாழை நாரின் மீது பாதுகையணிந்து கொண்டு விளையாட்டாக நடக்கிறார்! கூத்தாடி அதைக்கண்டு நடுங்கிப்போய்விட்டான். ஜனங்கள் சித்திரத்தில் வரையப்பட்ட பதுமைபோல் அசையாமல் அமர்ந்திருக்கின்றனர். ஸ்ரீயவர்கள் ஸாரங்கபாணி கோவில் கோபுரத்தையடைந்து அங்கிருந்து மறுபடியும் கும்பேச்வரனின் கோபுரத்திற்கு நாரின் மீதே நடந்துவந்தார். கையால் தொட்டால் அறுந்துபோகும் தூரத்தில் கண்ணுக்குத் தெரியாதபடி அவ்வளவு மெல்லியநாரின் மேல் ஸ்ரீகளவர் நடந்து கொண்டிருந்தால், எந்தவிதமான ஆதாரமுமில்லாமல் ஆகாயமார்க்கத்தில் நடப்பது போன்று காணுகிறது! ஜனங்களுக்கு மகிழ்ச்சியும் ஆச்சரியமும் உண்டாகி அளவுக்கு மீறிவிட்டது! விஜயீந்திரருககு ஜய், விஜயீந்திரருக்கு ஜய் என்ற ஜய கோஷம் வானைப்பிறந்தது. அணிமா முதலான அஷ்ட ஐச்வர்யங்களைப் பெற்ற, 64 கலைகளிலும் நிபுணத்வத்தை அடைந்து மஹாத்மாவான ஸ்ரீவிஜயீந்திரருக்கு வாழை நாரின் மீது நடப்பது ஒரு பெரிய காரியமா என்ன? மஹாத்மாக்களின் ஒவ்வொரு செயல்களும் நம்மைப் போன்ற பாமரர்களுக்கு அற்புதம்தான்!!

புன்னகையுடன் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் கீழே இறங்கி வந்து ஆஸனத்திலமர்ந்து கூத்தாடியைப் பார்த்தார். பாவம்! அவன் கிடுகிடுவென நடுங்கிக் கொண்டிருக்கிறான். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டுகிறது. முகம் கருத்துவிட்டது. முகமே விகாரமடைந்தது. கண்ணீர் ஆறாகப்பெருகுகிறது. ஓடிவந்து ஸ்ரீயவர்களின் பாதங்களில் விழுந்து, "மஹாஸ்வாமி மஹா அபராதம் செய்துவிட்டேன், நானல்ல எனது அபராதத்தை மன்னித்துக் காப்பாற்ற வேண்டும். தாங்கள் செய்து காண்பித்த அற்புதச் செயலைக் கண்டு நான் மெய்மறந்து விட்டேன். தமது புகழைக் கேள்விப்பட்டிருந்தேன். இன்று தமது மகிமையைக் கண்ணாரக்கண்டேன். நான் உங்கள் அடிமை. அனுக்ரஹிக்க வேண்டும்" என்று மறுபடியும் நமஸ்கரித்து நின்றான். ஸ்ரீகளவர் மகிழ்ச்சியுடன் அவனுக்கு அநேக வெகுமதிகளைக் கொடுத்து ஆசீர்வதித்து, மடத்திற்கு எழுந்தருளினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


## 30. சிற்பகலைத் திறமை:

நரசிம்ம வீரராமன் என்பவன் பாண்டிய நாட்டில் பாளையக்காரர்களில் ஒருவன் அவ்வளவு பெயர் பெற்றவனில்லையென்றாலும் அநேக கலைகளில் மாத்திரம் பெயர்பெற்றவன். சிற்ப சாஸ்திரத்தில் அவன் நிபுணன். உலோக சிற்பம் அவனுக்குக் கைவந்த கலையாகும். அவன் செய்த "தாண்டவ மூர்த்தி", "பவானி", "ஷண்முகன்" முதலிய விக்ரஹங்கன் உத்தமமான கலைச் செல்வங்களாக நாட்டில் பெயர் பெற்றிருந்தன. ஆனால் தேசத்தில் தனக்குச் சமானமான கலைஞரில்லையென்ற மமதை, அஹங்காரம் அவனில் குடி கொண்டிருந்தது. தன் கலையை யாவரும் அவசியம் புகழ வேண்டும். புகழாதவர்களை எவ்வாறாவது வென்று அவமானப்படுத்தி வந்தான்.

ஸ்ரீவிஜயீந்திர யதிகளினால் அநேகவாதிகள் போட்டியில் தோல்வியடைந்திருந்தார்களல்லவா? அவர்களில் சில மோசக்காரர்கள் ஸ்ரீவிஜயீந்திரருக்கு அவமரியாதை செய்யத்தான் வேண்டும் என்று த்வேஷம் மற்றும் கபடத்தினால் நரஸிம்ம வீரராமனிடம் சென்று ஸ்ரீவிஜயீந்திரரைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமான குறைகளைச் சொல்லி அவனைத் தூண்டிவிட முயற்சி செய்தனர்.

நரஸிம்ம வீரராமன் அவர்கள் பேச்சைக் கேட்டுச்சிரித்து, "எவ்வளவிருந்தாலும் அவர் ஒரு சந்நியாஸி பூஜிக்கத் தகுந்தவர், அவருடன் நமக்கேன் போட்டி? என்று அலக்ஷியமாகச் சொன்னான். விஜயீந்திரத்வேஷிகளுக்கு இந்தப் பதிலினால் சமாதானமாயிற்றா என்ன? மேலும் மேலும் வீரராமனுக்கு கெட்ட போதனை செய்து, இதமாகவும் வினயமாகவும் பேசி அவன் மனதை மாற்றவாரம்பித்தனர். மஹாப்ரபு, அவர் ஸந்நியாஸியாய் ஸந்நியாஸிகளைப் போலிருந்தால் நன்றாயிருக்கும் சாஸ்திரார்த்தங்களில் வாதிக்கட்டும்; வாதிகளை ஜயிக்கட்டும். அது நியாயம். அது அவருடைய கடமை. ஆனால் ஜகத்தில் எந்தக்கலையிலும், யார் வேண்டுமானாலும் தம்முடன் போட்டியிடலாம் என்று ஏன் சவால்விட வேண்டும்? இவர் என்ன ஸகல கலா வல்லுநரோ? யாரோ அநாமதேயங்கள் இவரிடம் தோற்றதற்கே, தம்முடன் போட்டியிட ஜகத்தினிலே வேறு ஒருவருமில்லையென்னும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கர்வமெதற்கு? பிரசித்திபெற்ற தாம் சிற்ப சாஸ்திரத்தில் கரைகண்டவராகியுள்ளீர்கள். தம்மை அவர் வெல்ல முடியுமா? தாங்கள் அவருடைய கர்வத்தை அடக்காவிட்டால் நமது நாட்டிற்கே அவமானம்! தாங்கள் சும்மா இருந்தால் நாங்கள் எவ்வாறு அதைப் பொறுத்துக் கொண்டிருப்பது? தாங்கள் அவரது கர்வத்தை அடக்கத்தான் வேண்டும், மஹாஸ்வாமி'' என்றெல்லாம் புகழ்ந்து த்வேஷிகள் வீரராமனுக்குக் கோபமூட்டினர்.

முதலிலேயே மஹா கர்வமுள்ளவனும் மதத்தினால் அகங்காரம் கொண்டுள்ள அவனுக்கு துவேஷிகளின் பேச்சினால் கோபம் அதிகரித்தது. "உம், அப்படியா விஷயம், அந்த ஸந்யாஸிகளின் கலை எப்படிப்பட்டதென்பதை பரீக்ஷித்தே தீருவேன்: நாளைக்கே கும்பகோணத்திற்குப் புறப்படுகிறேன். அந்த ஸ்வாமிகளின் கர்வத்தை அடக்காமல் நான் திரும்பப் போகிறதில்லை. இது ஸத்தியம்" என்று சொன்னான். விஷமிகள் தங்கள் காரியம் ஸாதித்ததென்று சந்தோஷத்துடன் போனார்கள்.

ஸ்ரீவிஜயீந்திரர் சித்ராஸனத்தில் அமர்ந்து கூடியிருந்த சிஷ்யர்களுக்கு ஸ்ரீஹரிஸர்வோத்த மத்துவத்தைப் பற்றி உபதேசம் செய்து கொண்டிருக்கிறார். வாயிற்காப்போன் வந்து ஸ்ரீகளவர்களை வணங்கி விக்ஞாபனம் செய்தான், ''மஹாஸ்வாமி, யாரோ பாண்டிய நாட்டிலிருந்து ஸ்ரீயவர்களைத் தரிசிக்க விரும்பி வந்து நிற்கிறான்", என்றதும் ஸ்வாமிகள் சிரித்து அழைத்துக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

நரஸிம்ம வீரராமன் உள்ளே வந்து ஸ்வாமிகளைப் பார்த்தான். ஸ்ரீயவர்கள் பாளையக்காரரே வரவேண்டும், எமது உபாஸ்ய மூர்த்திகள் இருவரின் சுபநாமத்துடன் விளங்கும் நரஸிம்ம வீரராமரே, எழுந்தருள வேண்டும், என்று புன்சிரிப்புடன் வரவேற்றார். வீரராமன் திகைத்தான். ஆச்சரியத்துடன் ஸ்ரீகளவர்களை மற்றொருமுறை பார்த்தான். கண்ணியமான உருவம், கற்றறிஞரின் முகபாவம், ஒளிவீசும் பார்வையுள்ள ஸ்வாமிகளைப் பார்த்து வீரராமன் ஆனந்தங் கொண்டான். தனது பெயர் முதலியவைகளைச் சொல்லி வரவேற்ற ஸ்வாமிகள் ஸாதாரணமானவரல்ல, மஹாதபஸ்விகளாக இருக்க வேண்டும் என்று அறிந்து பக்தியுடன் வந்தனம் செய்தான். ஸ்ரீகளவர்கள் நல்ல

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கீர்த்திவானாக வாழ்வாய்", சிற்ப கலையில் நம்முடன் போட்டியிட வந்துள்ள உன்னை, "வெற்றியடைவாய்" என்று ஆசீர்வதிக்க முடியாததற்காக வருந்துகிறோம். நீ உத்தமக் கலைஞன், உண்மை, ஆனால் நீ வந்த கார்யத்தில் வெற்றி கிடைக்காது. அதனால்தான் "கீர்த்தி சாலியாக வாழ்வாய்" என்று ஆசீர்வதித்தோம்"; என்று சொல்லியருளினார்.

வீரராமன் ஸ்ரீயவர்களின் மகிமையை அறிந்து கொண்டான். எதிர் காலத்தைச் சொன்ன ஸ்வாமிகள் அபரோக்ஷக்ஞானிகள் என்று அறிந்து இப்பேற்பட்ட மஹாத்மாவின் தரிசனம் பெற்ற நானே பாக்யசாலி என்று பாவித்துக் கொண்டான். இருந்தபோதிலும் தன்னுடைய கலையில் அவனுக்கு மிக்க பெருமை. ஸ்வாமிகள் எவ்வளவு பெரிய மஹானாயிருந்தாலும், தன்னைப் போட்டியில் வெல்ல மாட்டாரென்று அவன் நம்பினான். வீரராமன் ஸ்ரீயவர்களுக்கு நமஸ்கரித்து, "யதிச்ரேஷ்டரே, தமது தரிசனத்தால் புனிதனானேன். தாம் சொல்லியபடியே சிற்பகலையில் தம்முடன் போட்டியிடவே வந்துள்ளேன். நாளையதினம் அது பரீக்ஷிக்கப்படலாமல்லவா? என்றான். ஸ்ரீகளவர் சம்மதித்தார்.

மறுதினம் குறிப்பிட்ட நேரத்தில் வீரராமன் தனது வேலையாட்களுடன் தனது கலைச் செல்வங்களை எடுத்துக் கொண்டு ஸ்ரீமடத்தின் சபாமண்டபத்திற்கு வந்து விக்ரஹங்களை ஸ்வாமிகளின் முன்பு வைத்து, "ஸ்வாமி இதோ இந்த நடராஜர், பவானி, ஷண்முகன் விக்ரகங்கள் நான் வடித்தவைகள். தாங்கள் இதைப் பரிசீலித்து இதற்குச் சமானமான விக்ரஹத்தையே செய்து காண்பித்தால், தாங்கள் வெற்றியடைந்ததாக ஒப்புக் கொள்வோம். இதற்குத்தாங்கள் சம்மதிக்கிறீர்களா? என்று கேட்டான். அவனது பதுமைகள் உண்மையிலேயே மிக அழகாகவும் கலாபூர்ணமாகவுமிருந்தன. ஸ்ரீயவர்கள் அதைப்பார்த்து மிக்க மகிழ்ச்சியடைந்து, "பாளையக்காரரே, நீர் உண்மையான கலைஞர்" என்று புகழ்ந்தனர்.

வீரராமன் ஸ்வாமிகளின் புகழ்ச்சியினால் ஆனந்தம் அடைந்து, "பூஜ்யரே, தாங்கள் ஒரு கலைப்பதுமை செய்து காண்பிப்பீரா? என்று மற்றொருமுறை கேட்டான். விஜயீந்திரர் உடனே பக்கத்திலுள்ள மெழுகுக் கட்டியை எடுத்துக்கொண்டு, துளஸிகாஷ்டத்தை (உலர்ந்த துளஸிக்குச்சி)க் கையில் எடுத்து சிரித்துக் கொண்டே, "நீர் விக்ரஹம் தயார் செய்ய வேறுவேறு தேவையான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பொருள்களை உபயோகிக்கிறீரல்லவா! ஆனால் நாம் இந்த துளஸியின் குச்சியினாலேயே நமது கலா வல்லமையைக் காண்பிப்போம்" என்று காரியத்திலிறங்கினார். ஸ்வாமிகள் சுறுசுறுப்பாக வேலைசெய்யத் தொடங்கினார். மெழுகெல்லாம் உருவமெடுத்தன. சுமார் 4-6 மணிநேரத்தில் 16 நாட்களில் செய்ய வேண்டிய வேலையைச் செய்து முடித்தார். மிக அழகானதும் சிறந்தவைகளுமான சிற்ப சாஸ்திர விதிகளின் படி ராமர், கிருஷ்ணர், மங்களாம்பிகை, பூவராஹ மூர்த்தி, இவையாவும் எல்லோருடைய கண்களையும் மனதையும் வசீகரம் செய்ய ஆரம்பித்தன. வீரராமன் யதீந்திரரின் கலைத்திறமையைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கி நின்றான். செயலற்றுப்போனான். ஸ்வாமிகள் விக்ரஹங்களை வீரராமனுக்குக் கொடுத்தார். ஆஹா! எவ்வளவு அழகு! எப்பேர்ப்பட்ட கலா பூர்ணமான விக்ரஹங்கள் இவைகள்! பூவராஹமூர்த்தி ஒன்றே போதுமானது! ஸ்ரீயவர்களின் அபாரமான கைத்திறனைக் காண்பிப்பதற்கு வராஹ ஸ்வாமியின் கோரைப்பல்லின் மீது சிறிய தலையுடன் பூதேவி அமர்ந்திருக்கிறாள். சிறியதாயிருந்தாலும் பதுமையின் ஒவ்வொரு அவயவங்கள் தெள்ளத்தெளிவாக மட்டுமல்ல, அழகாகவும் அமைந்துள்ளன. இந்தக்கலைச் செல்வங்களைப் பார்த்துக் கொண்டேயிருக்கையில் வீரராமனின் கண்ணிலிருந்து கண்ணீர் பெருகி ஓடிற்று. யதிகளின் பாதங்களில் விழுந்து, "மஹாப்ரபோ, தாங்கள் ஜயிக்கப்பட முடியாதவர், அஜேயர், தங்களை நிகர்க்க இந்த பரதக் கண்டத்தில் எவரும் இல்லை. நான் ஜயிக்கப்பட்டேன். என்னை அனுக்ரஹிக்க வேண்டும்", என்று வேண்டிக் கொண்டு, ஸ்ரீகளவரைச் சரணடைந்தான். கூடியிருந்த ஜனங்கள் யாவரும் ஸ்ரீயவர்களின் திறமை, கலைவல்லமையைக் கண்டு ஜயகோஷம் செய்து அவரைப்புகழத் தொடங்கினார்கள்.

விஜயீந்திரர் வீரராமனின் தலைமீது தமது அபயஹஸ்தத்தை வைத்து, "வீரராமா, நேற்றைய வரை நீ அபூர்ணனாக இருந்தாய். இன்று உனது கர்வத்தை விட்டு பூர்ண கலைஞனாகிவிட்டாய். உனக்கு வெற்றி உண்டாகட்டும்" என்று கௌரவித்து ஆசீர்வாதம் செய்து அருளினார். வீரராமன் ஆனந்தத்தினால், "ஸ்வாமி, நான் இப்பொழுது பாக்யசாலியானேன். துளஸிகாஷ்டத்தைக் கொண்டு இத்தகைய அற்புத கலைக்களஞ்சியங்களைச் சிருஷ்டி செய்த தமது திறமைக்கு நான் தலைவணங்குகிறேன்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கலைப்பதுமைகள் என்னை ஜயித்ததின் நினைவுச் சின்னங்களாக எப்பொழுதும் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்பது எனது விருப்பம்'', என்று சொல்லவும், ஸ்ரீகளவர் புன்னகை செய்து, ''காய்ச்சி உருக்கின உலோகங்களினால் வார்த்து பதுமைகளைத் தயாரிக்க நமக்கு வருமோ வராதோ என்று பரீக்ஷிப்பதற்காக இந்த வேண்டுகோளா? உம். நாளைய தினம், அதையும் செய்து காண்பிப்போம்'' என்றார்.

வீரராமனின் ப்ரார்த்தனைப்படி மறுநாள் தாம் தயாரித்த விக்ரஹங்களின் வார்ப்பு அச்சுகளைத் தயார் செய்து தாமிர உலோகத்தினால் வார்ப்படம் செய்து மிக அழகான ப்ரதிமைகளைத் தயாரித்தார் ஸ்ரீவிஜயீந்திரர்.

ஸ்ரீகளவர்களின் அஸாதாரணமான திறமைகளைக் கண்டு ஜனங்களும் வீரராமனும் ஸ்ரீகளவருக்குப் புகழாரம் செலுத்தினார்கள்.

ஸ்ரீவிஜயீந்திரயதிராஜர் அப்பொழுது வடித்த சிலைகள் தவிர அநேக பகவன் மூர்த்திகளைத் தமது கையாலேயே நிர்மாணம் செய்தார். அவைகளில் முக்கியமானவை இந்த எல்லாப்ரதிமைகளும் இன்றுகூடக் கும்பகோணத்தில் ஸ்ரீமடத்தில் பூஜிக்கப்படுகின்றன. - யோக நரசிம்மன், ராமர், சீதா, க்ருஷ்ணர், ஸாரங்கபாணி, சக்ரபாணி, பூவராஹர், மங்களாம்பிகை, அனுமான், முக்யப்ராணர், கருடன், பாகவத ஸப்தமகஸ்கந்தத்தைத் தெரிவிக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் ஸப்தமூர்த்திகள், இவைகளைத்தவிர அநேக மஹா மந்த்ரங்களைத் தெரிவிக்கும் பகவன் மூர்த்திகளை நிர்மித்து, ஸ்ரீவிஜயீந்திர குரு ஸார்வ பௌமர் தனது நிகரற்ற கலைத் திறமையை வெளிப்படுத்தினார். கும்பகோண வாஸிகள், கலைஞர்கள், ராஜப்ரதி நிதிகள் ஸ்ரீகளவர்களின் ஸர்வ வித்யா பாண்டியத்தைக் கண்டு பிரமித்து அவரைப் புகழ்ந்தனர். நரசிம்ம வீரராமன் ஸ்ரீகளவர்களின் பக்தனாகி ஸ்ரீகளவர்களுக்கு அநேக பூமிகளைத் தானம் செய்து அவருடைய அனுக்ரஹத்தைப் பெற்றான்.

ஸ்ரீவிஜயீந்திர த்வேஷிகளான விஷமிகள் தமது காரியம் வெற்றி பெறாமல், மறுபடியும் விஜயீந்திரர் வெற்றிவாகை சூடினதையறிந்து த்வேஷ புத்தியைவிட்டு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீகளவரின் சரண்புகுந்து அவரால் கௌரவிக்கப் பட்டனர்.

## 31. வேசியின் (தேவதாசி) தோல்வி:

கும்பேச்வரனின் கோவிலில் அன்று விசித்திர ஜன நெருக்கம். மஹா சிவராத்திரியானதால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் )ஸ்ரீமஹாதேவரின் தரிசனத்திற்காக வந்து போய்க் கொண்டிருக்கின்றனர். ப்ரதோஷகாலத்தின் முதல் ஜாமப்பூஜைக்காகக் கும்பகோணத்தின் ஸகல தேவாலயங்களின் அதிபதியான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர் ஸகல வைபவத்துடன் அங்கு வருகை தந்துள்ளார். துதிபாடுபவர்கள் ஸ்ரீஹரியின் புனித சரித்திரத்தைக் கானம் செய்து கொண்டிருக்கின்றனர். வேத வித்யா பண்டிதர்கள் இனிய குரலில் ஸாம கானம் செய்து கொண்டிருக்கின்றனர். ஸ்ரீகளவர் பக்தி பாவத்தில் மூழ்கினவராய் பாதிக்கண் மூடிய நிலையில் ஸ்ரீகும்பேச்வரனெதிரில் கைகூப்பி நின்று நமக, சமகங்களை இனிமையான குரலில் பாராயணம் செய்து கொண்டு இருக்கிறார். 11வது முறை ருத்ராபிஷேகம் முடிந்தது. ஸ்ரீயவர்களுக்கு முதல்மரியாதை செலுத்தி அர்ச்சகர்கள் வணங்கினர்.

ஸ்வாமிகளின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர்! சமீபத்திலிருந்த பண்டிதர்கள் மற்றும் ஆஸ்திகர்களெல்லோரும் ஸ்ரீகளவர்களின் முகத்தில் காணப்படுகின்ற விசித்ர காந்தியைக்கண்டு ஆச்சரியமடைந்து கொண்டிருக்கையில் அவர் பக்கத்திலிருந்து ஒரு பண்டிதர் மனதிற்குள்ளேயே "ஸ்வாமிகளின் ருத்ரதேவனின் ப்ரார்த்தனை இன்று ஏனோ ஒரு புது மாதிரியாக உள்ளதே! இவ்வளவு மனத்தை வயப்படுத்தி, அபரோக்ஷ க்ஞானியான ஸ்வாமிகள் எதை வேண்டி ப்ரார்த்திக்கிறார்? என்று ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

விஜயீந்திர ஸ்வாமிகள் கண் திறந்து அந்தப் பண்டிதரின் பக்கம் பார்த்து சிரித்துக் கொண்டே, "என்ன, சர்மா அவர்களே! நானின்று ஏன் ஸ்ரீபரமேச்வரனை இவ்வளவு ஆழ்ந்த சிந்தனையுடன் தியானம் செய்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கின்றேன் என்று யோசித்துக் கொண்டிருக்கிறீரா? நாளை நாம் பரீக்ஷிக்கப்படப் போகிறோம்! அதில் நமது கௌரவத்தைக் காப்பாற்றும் பொறுப்பு மஹாதேவனுக்கல்லவா உள்ளது? அதற்காகவே ப்ரார்த்தனை செய்து கொண்டிருக்கிறோம்'' என்று சொல்லவும், தான் மனதில் நினைத்ததைத் தெரிவித்த ஸ்ரீபாதரின் மகிமையைக் கண்டு, பாவம், பண்டிதர் பயந்தார். தாழ்மையுடன் நமஸ்கரித்து, ''மன்னிக்க வேண்டும் ப்ரபோ, ஸர்வக்ஞரின் சித்தத்திற்குத் தெரியாத விஷயம் யாது? இன்றென்னமோ ஸ்வாமிகளின் ப்ரார்த்தனைக்ரமம் எனக்குப் புதுமாதிரியாகக் காணப்பட்டதனால் மனதில் அவ்வாறு எண்ணினேன் மஹா ஸ்வாமி. நாளை ஏதோ பரீக்ஷை நடைபெறப் போகிறதென்று தெரிவிக்கப்பட்டது. அதன் ரகசியம் எனக்கு அறிய முடியவில்லை. ஸ்வாமிகளைப் பரீக்ஷிக்க யார் வந்திருக்கிறார்களோ? என்று வேண்டினார்.

ஸ்ரீபாதர் புன்முறுவலுடன், ''இன்னும் சற்று நேரத்தில் நீங்கள் அதைத் தெரிவித்து கொள்ளுவீர்கள்'' என்று மாத்திரம் சொல்லி ஸ்வாமிகள் ஸ்ரீமடத்திற்குப் புறப்பட்டார். புகழாரம் செய்யவும் சேவகர்கள், ஸ்ரீபாதங்களவரின் விருதுகளைப் புகழ்ந்து கொண்டே, ''ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர, ஜகத் பிரஸித்திபெற்ற மஹாமஹிம, ஸகலகலா வல்லவரான விஜயீந்திர குரு ஸார்வபௌமர் வருகிறார்! என்று கோஷம் செய்ய அங்கேயே போய்க் கொண்டிருந்த ஒரு அழகி முன்னால் வந்து புகழுகின்ற சேவகர்களை நிறுத்தி, ''ஸகல கலாவல்லவர்'' என்று கோஷமிடலாகாதென்று சொல்லவும், பக்கத்திலிருந்த ஜனங்களெல்லோரும் இதென்னவென்று ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருக்கையில் அந்த அழகி முன்னால் வந்து ஸ்ரீபாதரை வணங்கினாள். தம்முடன் வந்துகொண்டிருந்த சர்மாவைப் பார்த்து ஸ்ரீபாதர் சிரித்து, ''பார்த்தீரா, சர்மா, நாம் கோவிலில், ''என்ன சொன்னோம்? இதோ, நம்மைப் பரீக்ஷிக்க வந்திருக்கிறாள் இந்த பெண்மணி! என்று சொல்லவும், பண்டிதர் ஆச்சர்யத்துடன் அவளைப் பார்த்து எதுவும் தெரியாமல் விழித்து நின்றனர். அந்தப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பெண்மணி மற்றொருமுறை ஸ்வாமிகளை வணங்கி, "மஹாஸ்வாமி, நானொரு தேவதாஸி, தாங்கள் ஸகல கலாவல்லவர், யார் வேண்டுமானாலும், தம்முடன் எந்தக்கலையிலும் போட்டியிடலாம் என்று ஸவால்விட்டிருப்பதாகக் கேள்வி. என்னுடைய கலையில் என்னை ஜயிக்காமல் தாங்கள் எப்படி ஸகலகலா வல்லவராக முடியும், ஸ்வாமி, தாங்கள் என்னை வெல்ல வேண்டும், இல்லாவிடில் அந்தவிருதை இன்றிலிருந்து விட்டுவிட வேண்டும், என்று சொன்னாள். கூடியிருந்த ஜனங்கள் அந்த சுந்தரியின் ஆணவப்பேச்சைக் கேட்டு, கோபத்தினால் அந்த இளம் பெண்ணை மனதில் தோன்றியவாறு நிந்தனை செய்தனர்.

ஸ்ரீபாதங்களவர் எல்லோரையும் அமைதியுடனிருக்கும்படி சைகை செய்து, கம்பீரமான தோற்றத்துடன். "நாளை மாலையில் ஸ்ரீமடத்துக்கு வருகையில் உனது சவாலுக்கு பதில் கிடைக்கும்" என்று சொல்லி அந்த அழகியை அனுப்பிவிட்டு ஸ்ரீமடத்திற்கு எழுந்தருளினார். ஸ்ரீபாதரின் சிஷ்யர்கள் மற்றும் பண்டிதர்கள் ஸ்ரீபாதர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு. ஸ்வாமிகள் ஏன் இவ்வாறு பதில் சொன்னார்? தேவதாஸியுடன் போட்டியா? அவளுடன் ஸந்நியாஸியான ஸ்வாமிகள் போட்டியிட்டு ஜயிப்பது எப்படி? ஸ்ரீபாதரிடம் இதை எப்படிக் கேட்பது? என்றெல்லாம் மனதில் யோசித்துக் கொண்டிருக்கையில், ஸ்ரீபாதங்களவர், "வித்வான்களுக்கு நமது வார்த்தைகளைக் கேட்டு, ஸந்தேகமும் ஆச்சரியமும் உண்டாகக்கூடும். ஸ்ரீமூலராம சந்திரஸ்வாமி அனுக்ரஹத்தினால் உங்களுடைய எல்லா ஸந்தேகங்களுக்கும் பதில் ரூபத்தில் ஒரு அற்புதத்தை நீங்களே காணப்போகிறீர்கள். கவலை வேண்டாம்! என்று விடைசொல்லி தீபாராதனைக்கு எழுந்தருளினார்.

ஸ்ரீமடத்தில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடிவிட்டனர். ஸ்ரீமடத்தின் க்ஞான மந்திரத்தில், ஸ்ரீபாதங்கள் மான் தோலின் மீது அமர்ந்து க்ரந்தங்களைப் புரட்டிப்பார்த்துக் கொண்டு அதிலேயே கண்ணும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கருத்துமாகி உள்ளார். வெள்ளிக் கோல் ஏந்தின வேலையாள் கதவின் பக்கம் நின்றிருக்கிறான். ஸ்ரீபாதர் சற்று நேரம் கழித்து அவனையழைத்து ஒரு பூச்செண்டை அவனிடம் கொடுத்து, "நம்மைப் பரீக்ஷிக்க வருகின்ற அந்த தேவதாஸியின் வயது புஜத்தின் மீது இந்தப் பூக்கொத்தினால் அடித்துவிட்டுவா'' என்று உத்திரவிட்டார். வாயில் காப்போன் ஸ்ரீபாதங்களின் உத்திரவைக்கேட்டு ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே நின்றுவிடவும், ஸ்வாமிகள், எதுவும் யோசிக்கவேண்டாம், நாம் சொன்னபடி செய்து விட்டுவா", என்று சொல்லவும், வாயில்காப்போன் அவரை வணங்கி புறப்புட்டு விசாலமான ஸ்ரீமடத்தின் முற்றத்தில் வந்து நின்றான்.

சற்று நேரத்திற்குப்பிறகு நான்கைந்து இளம்பெண்களுடன் அந்த அழகான தேவதாஸி ஸ்ரீமடத்திற்கு வந்தாள். கூடியிருந்த ஜனங்கள் இனி என்ன நடக்கப்போகிறதோ என்று குதூகலத்துடன் அறிய ஆவலாயிருக்கின்றனர். தேவதாஸி வாயில் காப்போனைப் பார்த்து, "ஸ்வாமி, ஸ்ரீபாதங்களவரெங்கே? எனது சவாலுக்கே இன்று இங்கு பதில் தருவதாக நேற்று சொல்லியிருந்தாரல்லவா? நான் காமசாஸ்திரத்தில் பெரிய பண்டிதை என்னை உமது ஸ்வாமி ஜயிக்க முடியுமா?" என்று மதம் பிடித்தவளைப் போல தளுக்கு மினுக்குகளுடன் சிரித்துக் கொண்டே கேட்கவும் வாயில் காப்போன்", அழகியே, ஸ்ரீபாதங்களைப் போட்டிக்கு சவால்விட்ட உனது அஞ்ஞானத்திற்காக நான் நொந்து கொள்ளுகிறேன் கேள். நான் ஸ்ரீபாதருடைய ஒரு சாதாரண தாஸன் சேவகன். முதலில் எனது இந்தத் திறமையைப் பார்", என்று சொல்லி ஸ்ரீபாதர் கொடுத்த பூச்செண்டினால் தேவதாஸியின் வலது புஜத்தின் மீது அடித்தான்.

என்ன ஆச்சரியம்! மதம் பிடித்தவளாய் கர்வத்தினால் வந்திருந்த அந்த அழகி புயல்காற்றில் சிக்கிய கொடியைப்போல் நடுங்கி ஏதோ ஒரு வெளிப்படுத்த முடியாத ஆனந்தத்தை அனுபவிப்பவ்ளைப் போல் மூடின கண்களுடன் மெய் மறந்தவளைப்போல் கீழே விழுந்து விட்டாள். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. பெருமூச்சு விட்டுக்கொண்டு உடம்பை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வளைத்துக்கொண்டு விழுந்திருக்கும் அவளைப்பார்த்து ஜனங்கள் கலவரமடைந்துள்ளனர். சற்றுநேரம் கழிந்தது. திருப்தியுள்ள முகத்துடனும் வெட்கத்துடனும் அந்த அழகி மெதுவாக எழுந்திருந்து நின்றிருந்த வாயில் காப்போனுக்குக் கைகூப்பி, "அப்பா, இந்த ஜகத்தில் இப்படிப்பட்ட ஆச்சரியம் உண்டா? இன்றைய தினம் நான் கண்ணால் கண்டு கேட்டறியாத அனுபவத்தினால் மகிழ்ச்சியடைந்தேன். ஸ்ரீபாதரின் தாஸனென்று சொல்லிக்கொள்ளும் உமது ஒரு புஷ்பத்தினடியினாலேயே தோல்வியுற்ற நான் மஹாமகிமையுடைய க்ஞானிகளுக்கெல்லாம் அரசனான ஸ்ரீபாதருடன் போட்டியிட வந்ததற்கு வெட்கமடைந்துள்ளேன். தபஸ்விகளுக்குப் பெரிய குற்றம் இழைத்துவிட்டேன். தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டுமென்று என் சார்பாக அவரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும்". என்று சொல்லி பச்சாதாபப்பட்டு வருத்தத்துடன் கண்ணீர் விட்டு ஸ்ரீபாதரின் இன்னொரு தாஸன் வந்து, "வாயில்காப்பவனால் வெட்கமடைந்த நீ பச்சாத்தாபமடைந்ததையறிந்து கருணாமூர்த்தியான ஸ்ரீபாதங்கள் உனக்கு அனுக்ரகம் செய்துள்ளார். இதோ பல மந்த்ராக்ஷதையைப் பெற்றுக்கொள். நீ உனது சொந்த புத்தியினால் ஸ்ரீபாதங்களைப் பரீக்ஷிக்க வந்தவளல்ல. விஷமிகளினால் ஏவப்பட்டு ஸ்ரீபாதங்களை இருதலைக்கொள்ளி எறும்பைப்போல நிலைக்குக் கொண்டு வந்து அவரை, ஜயிப்பதற்கு வந்திருக்கிறாய் என்பதை ஸ்ரீபாதங்கள் அறிந்துள்ளார். இனிமேலாவது இவ்வாறு ஸாதும்ஹாத்மாக்களைப் பரீக்ஷிக்கப்போகாதே" என்று மந்திராக்ஷதையைக் கொடுக்கவும் தேவதாஸி வெட்கத்தினாலும் பயத்தினாலும் தலைகுனிந்தாள்.

ஜனங்கள் யாவரும் ஸ்ரீபாதரின் மகிமையைக் கண்டு புகழ ஆரம்பிக்கவும் தேவதாஸி கூடியிருந்த ஜனங்களின் பக்கம் திரும்பி, "கேளுங்கள் ஸ்வாமி, ஸ்ரீபாதங்களவர் மஹாக்ஞானி. ஜயிக்கப்பட முடியாதவர், ஸகலகலாவல்லவர் என்பதை மந்த புத்தியான எனக்கு இன்று காண்பித்துக் கொடுத்து எனது அக்ஞானத்தை நீக்கி ஞானோதயத்தை உண்டாக்கினார். நான் ஸ்ரீபாதருடன் போட்டியிட்வாகட்டும், ஜயிக்க வேண்டுமென்றாகட்டும் விரும்பியிருக்கவில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீபாதங்களின் மஹாமகிமை, பாண்டித்யம், கல்வி ஞானம், ஸகல கலாவன்மை, ஸகலவாதிகளையும் ஜயிக்கவல்ல திறமைகளைப் பார்த்து ஸகிக்க முடியாது, துக்கத்தினால் இந்த ஊரின் சிலவிஷமிகள் என்னைத்தூண்டிவிட்டு என்னை ஸ்ரீபாதருடன் போட்டியிட அனுப்பியிருந்தனர். ஸ்ரீபாதர் காமசாஸ்திரத்தில் என்றைக்கும் போட்டியிடுவதில்லை, தோற்றுவிடுவார். அப்பொழுது அவரது அஜேயத்வம் முதலிய கீர்த்திக்கு (Fame and invincibility) பங்கம் விளையும். அதனால் தங்களுக்கு ஆநந்தமுண்டாகும் என்று பாவம்! அந்த மூடர்கள், நம்பினாரென்று தோன்றுகிறது. அந்த ஜனங்களில் வலையில் சிக்கி நானும் ஸ்ரீபாதங்களுடன் போட்டியிட வந்து பாவியானேன். ஸகலமுமறியவல்ல ஸ்ரீபாதர் தமது சிஷ்யனின் மூலமே கேவலம் ஒரு புஷ்பத்தினால் அடிபட்டு எனது சவாலுக்குப் பதிலடி கொடுத்துத் தன் களங்கமற்ற கீர்த்தியையும் கௌரவத்தையும் தக்கவைத்துக் கொண்டதுமாத்திரமல்ல, ஜகத் குருகளான ஸ்ரீகளவர்கள், கேவலம் இஹ போகங்களிலேயே உழன்று கிடக்கும், ஸாரமற்ற ஸம்ஸார பந்தனத்தில் உழலுகின்ற எனக்கு ஞானோதயமாகும்படி செய்து எனது மஹா பெரிய குற்றத்தை மன்னித்து அனுக்ரஹித்துள்ளார். இதல்லவா மஹாத்மாக்களின் குணம்! குற்றம் செய்பவர்களை மன்னித்து அவர்களுக்கு உய்விக்கின்ற மார்க்கத்தைக் காண்பித்துக் கொடுத்துக் காப்பதே மஹாத்மாக்ளின் லக்ஷணம். ஸ்ரீபாதரின் ஆக்ஞைப்படி நான் இனிமேல் ஸாது-ஸந்யாஸிகளைப் பரீக்ஷிக்கப்போகமாட்டேன். அது மாத்திரமல்ல; இனிமேல் நான் ஞான-பக்திவைராக்ய ஸாதனைகளுக்காக முயற்சி செய்கிறேன். இப்பேர்ப்பட்ட பூஜிக்கத் தகுந்த குருபாதரை அடைந்த நீங்களே தன்யர்கள் உங்கள் யாவருக்கும் எனது வந்தனங்கள் என்று சொல்லி ஸ்ரீமடத்திலிருந்து தேவதாஸி புறப்பட்டுச் சென்றாள்.

கூடியிருந்த ஜனங்களெல்லோரும் இந்த அதிசய நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைந்து தங்கள் இல்லங்களுக்குச் சென்றனர். பண்டித சர்மா அவர்களும் ஸ்ரீகளவரின் மஹிமையைக் கண்ணாரக் கண்டு ஆனந்தமடைந்து அவரிடம் சென்று வணங்கி, "மஹாப்ரபோ, ஸர்வக்ஞரான தாங்கள் அற்பரான

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

எங்களுக்கு தமது மகிமை அடிக்கடி காண்பித்தாலும்; மறுபடியும் அஞ்ஞானிகளாகவே உள்ளோம். எங்களுக்கு சன்மார்கத்தைக் காண்பித்து அனுக்ரஹிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொள்ளவும் ஸ்ரீபாதங்கள் புன்னகை செய்து; "ஸ்ரீ ஹரியின் சித்தம், சர்மா, அவனது கைப்பொம்மைகளான நாம் என்னதான் செய்ய முடியும்? அவன் விருப்பப்படியே நடக்கும். நேற்று நீங்கள், "ஏன் அவ்வாறு ப்ரார்த்தனை செய்கிறீர்" எனக் கேட்கவில்லையா? ஒரு பெண்மணி காமசாஸ்திரத்தில் போட்டியிட வந்தால், நாம் என்ன செய்வது? காமாரியான (மன்மதனின் எதிரியான)வனும் மனோ நியாமகனானவனுமான அந்த முக்கண்ணனிடமல்லவோ சரணமடைய வேண்டும்? அதன்படி நாம் அவரைப் பிரார்த்தனை செய்வோம். அவர் அனுக்ரஹித்தார்" எனலும், சர்மா தலையாட்டி ஆம் என்று, "காமாரியின் பிதாவான மூலராமமார்ச் சகரான தங்களுக்கு அஸாத்யமான காரியம் எது?" என்று சொல்லி ஸ்ரீபாதங்களுக்கு நமஸ்கரித்து வீட்டுக்குப் புறப்பட்டார்.

## 32. பௌத்த வாதிகளை வென்றது:

ஸ்ரீவிஜயீந்திரரின் நிகரற்ற பாண்டித்யத்தின் கீர்த்தி தேசதேசாந்தரங்களில் பரவினதின் பலனாக நானாவித கலைகளில் கீர்த்திவாய்ந்த அநேக பண்டிதர்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் தரிசனம் பெறவேண்டி, அவருடன் வாதம் செய்து அவரை வெல்ல வேண்டுமென்றும் தங்களது வித்வத்தின் வல்லமையைக் காண்பித்து கௌரவமடைய் வேண்டுமென்றும் பாரத தேசத்திற்கு வரத்தொடங்கினர். எல்லா பண்டிதர்களையும் ஸ்ரீவிஜயீந்திரர் ஜயித்து தமது, "அஜேய" (Invinible) என்ற விருதை மெய்யாகவே நிரூபித்துக் கொண்டிருந்தார். அது மாத்திரமல்ல, அவரவர்கள் தகுதிக்குத் தக்கபடி கௌரவப்படுத்தி, மரியாதை செய்து தனது தாராள மனப்பான்மையைக் காண்பித்து எல்லோருடைய அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரரானார்.

பாரத நாட்டை விட்டு என்றோ வெளிநாடு சென்ற பௌத்த மதத்தினர்கள் மஹாபண்டிதர் அநேகர் மறுபடியும் பாரத நாட்டில் பௌத்த மதப்ரசாரம் செய்யச் சரியான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீவிஜயீந்திரரின் கியாதி அவர்களைச் சும்மா இருக்க விட்டவில்லை. பாரத நாட்டில் எல்லாக் கலைகளிலும் அஜேயரெனப்படும் ஸ்ரீவிஜயீந்திரரை எந்த வகையிலாவது ஜயித்துவிட்டால், பௌத்த மதத்தைப் பாரத நாட்டில் மறுபடியும் நிலைநாட்டி வேரூன்றச் செய்துவிட உதவியாயிருக்குமென சீனா தேசத்திலிருந்து சில நிகரற்ற பண்டிதர்கள் ஹிந்து தேசத்திற்கு வந்து தஞ்சாவூரின் மஹாராஜாவினால் கௌரவப்படுத்தப்பட்டுத் தங்களுடன் வாதிக்கப் பண்டிதர்களை வரவழைக்கக் கோரினார்கள். ராஜாவின் ஆஸ்தானத்தில் அநேக பண்டிதர்களுடன் வாதம் நடந்தது. சீனா தேசத்துப் பண்டிதரின் எதிரில் தஞ்சாவூரின் பண்டிதர்கள் நின்று வாதாட இயலவில்லை. மஹாராஜா சவ்வப்ப நாயகருக்கு யோசனை செய்ய ஆரம்பித்தார். இதுதான் சமயம் என்று உணர்ந்து சீனப்பண்டிதர்கள் மஹாராஜாவிடம் விக்ஞாபனம் செய்தனர்-"மஹாப்ரபோ, யாரோ விஜயீந்திரரென்னும் யதிகள் ஸர்வ வித்யாப்ரவீணராகக் கும்ப கோணத்திலிருப்பதாக கேள்விப்பட்டோம். அவர் எங்களுடன் வாதம் செய்து ஜயிக்க முடியுமா?"

மஹாராஜாவிற்கு மிக்க மகிழ்ச்சியுண்டாயிற்று. விஜயீந்திரரின் பெயர் கேட்ட மாத்திரத்தில், மனதிற்குத் தைரியம் வந்தது. கவலைவிட்டது. சீனாப் பண்டிதருடன் கும்பகோணத்திற்கு ஓடினான் தஞ்சாவூர் மன்னன். ராஜ ப்ரதிநிதியை ஸ்ரீபாதரிடம் அனுப்பினான். ஸ்ரீவிஜயீந்திரர் மத்தியானத்தில் பாடப்ரவசனம் செய்து கொண்டு அதில் தன் கவனம் முழுமையும் செலுத்திக் கொண்டிருக்கிறார். ராஜப்ரதிநிதி ஸ்ரீகளவர்களை வணங்கி "குருபாதரவர்களே, தஞ்சாவூரின் கீர்த்தி கௌரவங்களைக் காப்பாற்றும் பொறுப்பு இப்பொழுது தங்களின் மீது உள்ளது. சைனா தேசத்திலிருந்து பௌத்த மதத்தினரான சில பண்டிதர்கள் ஆஸ்தான பண்டிதர்களை வாதத்தில் தோல்வியுறச்செய்து விட்டனர். தம்முடன் வாதம் செய்ய குதூகலத்துடன் மஹாராஜருடன் வந்திருக்கின்றனர். மஹாப்ரவுகளின் ஸந்நிதானத்தில் விஷயத்தைத் தெரிவித்து வரும்படி என்னை அனுப்பியுள்ளார் என்று விக்ஞாபனம் செய்தான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

குருபாதர் புன்னகையுடன், "மிக்க மகிழ்ச்சியடைந்தோம். எப்படிப்பட்ட இனிய விஷயம்! ஸ்ரீமூலராமனின் கருணை உள்ள வரையில் மஹாராஜா் கவலைப்படத் தேவையே இல்லை. அந்தப் பண்டிதர்களை அழைத்துவரலாமென்று அவருக்குத் தெரிவியுங்கள்" என்று சொல்லவும், ராஜப்ரதிநிதி சந்தோஷமடைந்து, சவ்வப்ப நாயகரிடம் சென்று இந்த விஷயத்தைத் தெரிவித்தார். ப்ரபு மிக்க மகிழ்ச்சியோடு பண்டிதர்களுடன் ஸ்ரீமடத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீகளவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். விஜயீந்திரர் அரசரை வரவேற்று, பண்டிதர்களுடன் க்ஷேம சமாசாரம் விசாரித்து விட்டு உட்கார வைத்தார். ஸ்ரீயவர்களின் அற்புதமான தேஜஸ்ஸையும் காந்தியையும் கண்டு சைனா தேச பண்டிதர்கள் வியந்தனர், மகிழ்ந்தனர். நமஸ்காரம் செய்யாமல் உட்கார்ந்த அவர்களைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கச் செய்தது விஜயீந்திரரின் திவ்யதேஜஸ். பண்டிதர்களைப் பார்த்து ஸ்வாமிகள், "மிக்க மகிழ்ச்சி, பௌத்த மதத்தைச் சேர்ந்த வைபாஷிக, ஸௌத்ராந்திக, யோகாசார்ய, மாத்யமிகரென்னும் நான்கு பக்ஷத்தவர்கள் வந்திருக்கிறீர்கள். பாரததேசத்தில் உமது மதத்தை மறுபடியும் ஸ்தாபிக்க வேண்டுமென்று பேரவாவுடன் நம்மை ஜயிக்க மிகமிக உற்சாகத்துடன் இருப்பதாக அறிகிறோம். ச்ரிய: பதியின் விருப்பம் எதுவோ, பார்க்கலாம்! என்றார். பண்டிதர்கள் ஆச்சரியத்தினால் திகைத்தனர். தங்களுடைய மனதிலுள்ள எண்ணத்தை இந்த யதிகள் எவ்வாறு அறிந்தார் என்பதே அவர்களுக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. "நமது மனதிலிருப்பதைத் தாங்கள் எவ்வாறு சொன்னீர்கள்? என்று கேட்கவும்", ஸ்ரீஹரியின் கிருபையினால் என்று மாத்திரம் குருபாதர் சொன்னார். வாத விஷயம் அறிந்து நூற்றுக்கணக்கான ஜனங்கள் மடத்திற்கு விரைந்தனர். வாத நிபந்தனை, நியமங்கள் இவைகளுக்கு இரு பக்கத்தவரும் சம்மதித்த பிறகு புத்த மதத்தைச் சார்ந்த வைபாஷிக மதத்தைப் பின்பற்றும் பண்டிதர் முதலில் வாதத்தை ஆரம்பித்தார்.

வைபாஷிகர்:- ப்ரமாணம் த்விவிதம், ப்ரத்யக்ஷம், அனுமானம் சேதி! ப்ரமாணம் இரண்டேவிதங்கள். ப்ரத்யக்ஷமென்றும் அனுமானமென்பதும். கந்தம், ரஸம், ரூபம், ஸ்பர்சரூபமான ஸூக்ஷ்ம க்ஷணிகபதார்த்தங்களே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பாரமாத்திகமானவை. இவைகளல்லாமல் ஸ்தம்பம், வ்ருஷ்காதி ஸகல ஜகத்தும் அதில் கல்பனை செய்யப்பட்டவை. ஞானம் ஸ்வப்ன ஞானத்தைப் போல் ஸாகாரமானது (உருவம் உள்ளது) வெளிப்படையாக உள்ள பதார்த்தங்கள் ப்ரத்யக்ஷமாகக் காணுகின்றன. ஞானம் கூட அரித்த, சம்பந்தமில்லாமல் காணப்படாததினால், ஸகலமும் க்ஞானாத்மகமென்று ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதினால் ஸ்தம்பமே முதலிய பதார்த்தங்கள் பேத புத்தியும் பாதிக்கப்பட்ட விஷயமான காரணத்தினால் ஞானத்தைத் தவிர மீதியாவும் மித்யா (பொய்)

விஜயீந்திரர்:- ப்ரமாணங்கள் இரண்டுதான் என்று சொல்லுவது சரியல்ல. ப்ரத்யக்ஷம் அனுமானங்களைப் போல் ஆகமமும் (வேதம்) ப்ரமாணம் என்று ஒப்புக் கொள்ள வேண்டும்.

வை.ப.:- ஆகமம் எவ்வாறு ப்ரமாணம் ஆகும்?

ஸ்ரீ.வி.:- ஆகமம்த்தை ப்ரமாணமென்று சொல்லா விட்டால் வ்யாஹதி வருகிறது.

வை.ப:- அது எப்படி?

ஸ்ரீ.வி:- ஆகமம் அப்ரமாணமென்னும் வாக்கியம் ப்ரமாணமா, அப்ரமாணமா?

வை.ப:- ப்ரமாணமென்றால்....?

ஸ்ரீ.வி:- ப்ரமாணமென்றால் ஆகம ப்ரமாண்யதா ஒப்புக் கொள்ள வேண்டும். அப்ரமாணமென்றால் வ்யாஹதி வருவதில்லையா?

வை.ப:- அப்படியானால் அப்ரமாணமென்கிறேன். இதற்கென்ன சொல்வீர்கள்?

ஸ்ரீ.வி:- (சிரித்து), "அப்ரமாணமென்றால் ஆகமம் ப்ரமாணமென்றே ஒப்புக் கொண்டதாக ஆயிற்று! அது நமக்கு இஷ்டாபத்தி விரும்பின ஆபத்து. மறுபடியும் அப்ரமாணமென்றால் வ்யாஹதி காரணம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஆகமம் ப்ரமாணம். அதிலும் ஆகமம் அபௌருஷமானதால் (யாவற்றிலும் இயற்றப்படாததால்) புருஷதோஷ நிபந்தன தேசங்கா, களங்கமற்றதுமான வேதம் ப்ரமாணமென்று அங்கீகரிக்க வேண்டும் "वाचा विरूप नित्यया, नित्ययाऽनित्यया स्तौमि" முதலிய வேத வாக்யங்களினாலும் வேதத்திற்கு ப்ரமாண்யம் ஸித்திக்கின்றது. என்பது முதலிய அநேக யுக்தி, ப்ரமாணங்களினால், வேத ப்ரமாண்யத்தை நிரூபித்து விஜயீந்திரர் வாதத்தைத் தொடருங்கள் என்றார்.

ஸ்ரீ.வி:- இன்னும் நீங்கள் சொல்வதைப் போல் ரூபாதிகளில் ஸ்தம்ப வ்ருக்ஷாதிகள் கல்பனை செய்யப்பட்டவை சொல்வது யுக்திக்குச் சரியில்லை. அவ்வாறு ஒப்புக் கொள்ளும் பக்ஷத்தில், "हृदयं मे त्वय्यर्पयामि" இத்யாதி "प्रत्यभिज्ञान"ம் recognition கூடாது. போகும் உமது மதத்தில் தர்சன (பார்ப்பது) ஸ்பர்சன (தொடுவது) விஷயமான रूपस्पर्शाश्रय (ரூபஸ்பர்சாச்ரய) பதார்த்தங்கள் வேறாக இருப்பதால் प्रत्यभिज्ञ உசிதமாகாது.

வை.ப:- அது எப்படி? रूपस्पर्शाश्रय (ரூபம், ஸ்பர்சம்) ஸமுதாயங்கள் ஒன்றாகையால் கூடுகிறது.

ஸ்ரீ.வி:- क्षणिकत्व पक्षத்தில் ஸமுதாயம் வெவ்வேறாகையால் प्रत्यभिज्ञाம் கூடுவதில்லையாகையால் ரூபாதிகளினால் அதற்கு ஆச்ரயபதார்த்தங்கள் வேறானவையென்று அங்கீகரிக்கத்தான் வேண்டும். இன்னும் ஞானம் உருவத்துடனுள்ளது என்பது சரியல்ல.

வை.ப:- அது ஏன் சரியில்லை என்று சொல்வீர்கள்?

ஸ்ரீ.வி:- அவ்வாறு சொல்வதற்கு ப்ரமாணமில்லை. அர்த்தத்தை க்ரஹிப்பது க்ஞானத்தின் ஸ்வபாவமாகையால் அதை விட்டு க்ஞானம் ரூபமுள்ளது என்பது ஸாத்தியமில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வை.ப:- क्षणिक स्वलक्षण விஷயகமான ப்ரமாணம்மே "निर्विकल्पक" ப்ரமாணம் "विकल्पोवस्तुनिर्भासा दसुवादादु पल्वः । तस्यां"

यद्रूपभाभाति बाहमेकमिवार्थतः ॥ व्यावर्तमिवं तिस्तत्वं परिक्षानंगभावतः" இத்யாதி ப்ரமாணத்தினால் வைகல்பத்திற்கு ப்ராமாண்யம் ஸித்திக்கும்.

ஸ்ரீவி:- अनैकांत्यादि தோஷ தூஷிதமான காரணத்தினால் விகல்பம் ப்ரமாணமாகாது. ஸர்வ .லோக ப்ரஸித்தமான निर्बाधமான प्रत्यभिज्ञाज्ञान விரோதம் வருவதினால் க்ஷணிக பதார்த்தத்தை ஒப்புவது யுக்தியுக்தமல்ல.

வை.ப:- "सेयं दीपकलिका" முதலான प्रत्यभिज्ञा ப்ரகாரம் "सएवायं घटः" .முதலிய प्रत्यभिज्ञानं கூட सादृश्य विषयकமென்று சொல்லுவதினாலேயே நிர்வாஹமாவதினால் க்ஷணிகத்வத்தை அங்கீகரிக்கக் கூடாது?

ஸ்ரீ.வி:- ஒரே வஸ்து விஷயம் என்று சொல்வதில் பாதகம் இல்லை. ஆகையால் प्रत्यभिज्ञ ஸாத்ருச்ய விஷயகமென்று சொல்வது சரியல்ல. மற்றும் क्षणिकत्वपक्षத்தில் புண்ய பாயாதிகர்த்தன் அதனுடைய பலனை அனுபவிப்பவன் வேறொருவனாயிருப் பதினால் "कृतहान अकृत कल्पनादि" தோஷம் வருவதாக க்ஷணிகத்வபக்ஷம் சரியானதல்ல.

இவ்வாறு ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் தனது தங்குதடையில்லாத வசனங்களினால் புத்திக் கூர்மையுடன் வாதம் செய்து வைபாஷிக மதத்தைப் பின்பற்றுபவரான பண்டிதரை பதில் கூற முடியாதபடி செய்தார். ப்பாவம்! அந்தப் பண்டிதர் விஜயீந்திரரின் வாக் ப்ரவாஹத்தின் முன் நிற்க முடியாமல் தவித்தார். குனிந்த தலையைத் தூக்கவேயில்லை. சபையோர் ஸ்ரீவிஜயீந்திரரின் வாக் வல்லமைக்கு வியந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இதனால் கோபமடைந்த மாத்யமிக மதவாதியான பண்டிதர் முன்வந்து வாதத்தைத் தொடங்கினார்.

மாத்யமிக:- ஸர்வ க்ஞரான புத்தரால் இயற்றப்பட்டதே ப்ரமாணம் அவர் சொன்ன क्षणभंग, प्रत्यक्षार्थ भंग, बाह्यार्थ भंग, धर्म धर्मि भावभंग மே முதலானவை பிக்ஷுபாதப்ரஸாரமாத்ரம். எல்லாம் சூன்யமென்பதே பௌத்த மதரகஸ்யம். அதுதான் சரியானது. "अहमिदं जानामि" என்றெல்லாம் ज्ञातृ, ज्ञेय, ज्ञान ரூபமாகக் காணப்படும் அர்த்தஸமூகம் सत्, असत्, सदसदुभय, सदसदनुभयकोटियில் சேராது என்று பௌத்த யுக்திகளினால் ஸித்தமாயுள்ளதால் निःस्वभाव "नसन्नासन्न सदसन्न चाप्यनुभयात्मकं । चतुष्कोटि विनिर्मुक्तं तत्वं माध्य मुका विदुः ॥ बुद्ध्या विविच्यमानानां स्वभावोनावधार्यते । अतो निरभिलाप्यास्ते निः स्वभावाश्च दर्शिताः ॥ இதே நமது மத प्रक्रिया: மற்றும் ஜகத்தில் சிரேஷ்டமானது.

ஸ்ரீ.வி:- எல்லாமே சூன்யமென்று சொல்லும் மாத்யமிக மதம் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததல்ல. அது ச்ரேஷ்ட மதமென்று நீங்கள் சொல்வது சரியில்லை. எல்லாமே சூன்யமென்று சொல்வது ஸகல ப்ரமாணங்களுக்கும் விரோதமானது. யுக்தி விரோதத்தினால் ஸகலமும் சூன்யமென்று சொல்வதானால் சூன்ய விஷயத்திலும் யுக்தி விரோதத்தைச் சொல்வதற்கு ஸாத்யக் கூறுகளிருப்பதினால். உமது சூன்யத்வம் சித்தமாகாததாக வேண்டியதாயிற்று. சூன்யம் ஒன்றே தத்வம், அதினால் மற்றது வேறானது பொய்யென்று சொல்வதற்கு ப்ரமாணமில்லை. மற்றும் சூன்யத்தினால் ஜகத்து உண்டாவதென்பது சரியில்லை भावरूपकारणத்தினாலேயே காரியம் உண்டாவது லோக ஸித்தமாக உள்ளதே தவிர அபாவத்தினால்லல.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


माध्यमिक घटादि प्रागभावத்திற்கு घटादि காரணத்வம் தெரிந்ததாகையினால் அபாவம் (இன்மை) காரணமாக்லாகலாமல்லவா?

ஸ்ரீ.வி:- ப்ரமை ஏற்பட்டிருக்கிறது. நாம் அபாவத்தை (இல்லாமையை காரண ஸாமான்ய மல்லவென்று சொல்வதில்லை. ஆனால் உபாதான காரணமல்லவென்று சொல்லுவோம். प्रागभाव (முன்னில்லாமலிருப்பது) முதலியவைகளைக் குறித்து உபாதான காரணமல்ல வில்லையா? ஸகலமும் சூன்யமென்று சொல்லும் பக்ஷத்தில் உமது பக்ஷத்தைச் சாதிப்பதற்கு ப்ரமாணமில்லாமலிருப்பதினால் உமது மதத்தின் சூன்யத்வம் ஸித்திப்பதில்லை.

இவ்வாறு ஸ்ரீவிஜயீந்திரர் அநேக யுக்தி ப்ரமாணங்களினால் வாதித்து மாத்யமிக மதத்திய பண்டிதரை வென்று, பிறகு "ஸௌத்ராந்திக" மற்றும் "யோகா சார்ய மதத்தைச் சேர்ந்த வித்வான்களை சாமர்த்தியத்தினால் பதில் கூற முடியாமல் ஆக்கின உடனே சபையோரனைவரும் ஏக காலத்தில் விஜயீந்திரஸ்ரீயும் வைதிக தர்மத்தைப் புகழ்ந்து ஜயகோஷங்கள் எழுப்பினர். செவ்வப்ப நாயகனின் முகம் மலர்ந்தது. தனது ஆஸ்தான கௌரவத்தைக் காப்பாற்றின ஸ்ரீயவர்களுக்கு பக்தியுடன் நமஸ்கரித்து, "தன்யனானேன் மஹாப்ரபோ!" என்றான். சீனா தேசத்திய பண்டிதர்கள் ஸ்ரீயவரின் பாதத்தில் விழுந்து, "ஸ்வாமி தம்மைப் போன்ற பண்டிதோத்தமரை நாங்கள் எங்கும் கண்டதேயில்லை. தங்களது கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறோம். அது இப்படி உண்மையாளதென்று கண்டு கொண்டோம். நமது புத்திக்குறைவினால் நாங்கள் தோல்வியுற்றோம்" என்று விக்ஞாபித்தனர்.

ஸ்ரீவிஜயீந்திரர் புன்னகையுடன், "நீங்கள் உத்தம பண்டிதர்கள்தான். அதில் சந்தேகமில்லை. நீங்கள் தோல்வியுற்றது புத்திக்குறைவினாலல்ல. ஆனால் உங்கள் மதத்தின் பலவீனத்தினால்தான்". என்று சொல்லி அவர்களுக்கு உத்தமமான முத்து மாலை, கம்பளங்கள், முதலியன அளித்துக் கௌரவித்து மேலும் தஞ்சாவூர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அரசன் மூலமாகவும் பலவாறு கௌரவித்தார். இதனால் திருப்தியடைந்த பண்டிதர்கள் ஸ்ரீயவர்களின் வித்யாபக்ஷபாதமின்மை, தாராள மனப்பான்மை, முதலிய நற்குணங்களைப் பாராட்டி ஸ்வாமிகளின் உத்தரவு பெற்றுத் தமது நாட்டிற்குத் திரும்பினர். தஞ்சாவூரரசன் ஸ்ரீயவர்களுக்கு மறுபடியும் நன்றி தெரிவித்து வணங்கித் தலைநகரத்திற்குத் திரும்பினான்.

## 33. இந்த்ரிய நிக்ரஹத்தின் ரகசியம்:

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் வேசியை ஜயித்தாரல்லவா? அந்தச் செய்தி எல்லாவிடங்களிலும் பரவி ஜனங்கள் ஸ்வாமிகளின் அபார மகிமையைப் பாராட்ட ஆரம்பித்தனர், ஸ்ரீகளவர்களின் இந்தக் கீர்த்தியைச் சகிக்காமல் அவரிடம் துவேஷம் கொண்டிருந்த சில எதிரிகள் மலையாளத்திலிருந்து ஸ்ரீவிஜயீந்திரரைப் பரீக்ஷிக்கவும், அவருடைய கீர்த்திக்கும் மகிமைக்கும் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்னும் கெட்ட நோக்கத்துடன் கும்பகோணத்திற்கு வந்தனர். இவ்வாறு வந்தவர்களில் சிலர் குருபாதரின் இந்த்ரிய நிக்ரஹ சக்தியைப் பரீக்ஷிக்க. வந்திருந்தால், மற்றும் சிலர் எவ்வாறாவது ஏதாவது செய்து விஜயீந்திரரை ஜயிக்கத்தான் வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருந்தனர்.

ஒருநாள் மத்தியானத்தில் விஜயீந்திர தீர்த்தர் தத்வோபதேசம் செய்து கொண்டிருந்தார். ஜனக்கூட்டம் ஸ்ரீகளவரின் அபார பாண்டித்யம், விளக்கும் முறை, வாக்வன்மை, தெளிவாகவும், அழகாகவும் விஷயங்களை எடுத்துச் சொல்லும் கம்பீரம் இவைகளினால் பரவசமடைந்து அவர் வாயினின்று வரக்கூடிய வசனாம்ருதத்தை அருந்திக் கொண்டிருக்கின்றனர். இதே சந்தர்ப்பத்தில் ஒரு மலையாள தேசத்திய அந்தணன் சபைக்குள் நுழைந்து விஜயீந்திரரை வணங்கி பின்வருமாறு விக்ஞாபித்தான்:

ப்ராம்மணன்:- ஸ்வாமி, யதிவரேண்யரே, 64 கலைகளில் தாம் பாரங்கதர், (நிபுணர்) மேலும் அநேக சாஸ்திரங்களில் நிகரற்ற திக்கஜங்களையெல்லாம் ஜயித்திருக்கிறீரென்றும், கேள்விப்பட்டோம். அது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


உண்மைதானா அல்லது பொய்யா என்னும் கேள்வி இப்பொழுது வேண்டாம். ஆனால் தாங்கள் வேசி ஒருத்தியை அவளுடைய கலையில் ஜயித்தீர் என்பதைக் கேட்டு எனக்கு துக்கமும் விபரீதமான ஆச்சரியமுண்டாகியுள்ளது. இது உண்மையா?

ஸ்ரீகளவர்:- புன்னகையுடன், "ஐயா, நீ சொல்வதெல்லாம் உண்மை, அதற்கு ஸ்ரீகாமாரியின் (சிவபெருமானின்) மற்றும் நமது உபாஸனா மூர்த்தியான ஸ்ரீமூலராமசந்திரருடைய கிருபைதான் காரணம்.

ப்ராம்மணன்:- (சிரிப்புடன்) வேசியை ஜயித்ததற்கும் ஏகபத்னி விரதம் பூண்ட ஸ்ரீராமனே காரணமோ? ஆஹா! இல்லை ஸ்வாமி, பார்த்தால் தாங்கள் ஸந்யாஸிகளாயிருக்கிறீர்கள்; வெறும் ஸந்யாஸிகளல்ல, மஹாபீடாதிபதிகள்! அது மாத்திரமல்ல; பாரத நாட்டின் ப்ரஜைகளை ஸன்மார்க்கத்தில் அழைத்துச் சென்று, பண்டிதர்களாக்கும் வித்யாபீடத்தின் குலபதி (வேந்தர்) ஆக இருக்கிறீர்! அப்படிப்பட்ட தாங்கள் வேசியை ஜயித்தேன் என்று ஒப்புக்கொள்ளுகிறீர். இது எப்படிப்பட்ட ஆச்சரியம்! போகட்டும். இந்த்ரிய நிக்ரஹம் என்பது லேசான விஷயமா என்ன? அல்ல சுலபமானதா? இதைக்கேளுங்கள்-

विश्वामित्रपराशर प्रभृतयः वातांबु पर्णाशनाः ।
तेजपि स्त्री मुखपंकजं सुललितंदृष्ट्वैव मोहंगताः ॥
शाल्यन्नं सघृतं पयोदधियुतं भुंजंति ये मानवाः ।
तेषामिंद्रिय निग्रहो यदिभवेद्विंध्यः प्लवेत् सागरे ॥

இந்த ஜகத்தில் மஹா தபஸ்விகளென்று பிரசித்தி பெற்றவரும், காற்று, இலை, தண்ணீர், இலைகள் முதலியவற்றைத் தின்று கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த உக்ரமான தபஸ்விகளான விச்வாமித்திரர், பராசரர், முதலான ரிஷிகளே அழகுள்ள, வசீகரமான மங்கையரின் முகங்களைப் பார்த்த மாத்திரத்தில் மோஹிக்கப்பட்டு விட்டார்கள் என்று புராணாதிகள் பறைசாற்றுகின்ற நிலையில், மேலும் புஷ்டி தருகின்ற அன்னம், வெண்ணையுருக்கிய நெய், நிறைய பாதாம் பருப்பை அரைத்துக் கலக்கப்பட்ட பால், பாலேடுடன் கூடிய தயிர் மற்றும் பலவித பழங்களையும் உண்கிற தம்மைப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

 https://archive.org/details/@muthulakshmi_academy


போன்றவர் இந்த்ரியங்களை நிக்ரஹம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் உண்மையாகவே சமுத்திரத்தில் விந்திய மலை மிதக்கிறது! இன்று நம்பமுடியுமா? என்று சொல்வதையும் நம்ப வேண்டியதுதான்! இது நடக்கிற காரியமா?

சபையோரெல்லோரும் ப்ராம்மணனின் இந்த மதம் பிடித்த வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், சாந்தமான முகத்துடன் ஸ்ரீகளவர் புன்னகை செய்து இவ்வாறு கூறினார்:-

ஐயா, ப்ராம்மணனே, நீ மிகவும் ரஸமான விஷயத்தைச் சொல்லுகிராயே, உனது அபிப்பிராயத்தில் இந்திரிய நிக்ரஹம் ஆகாரத்தின் மூலம் தான் என்று உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது, இதைக்கேள்:-

सिंहो मदद्विरद मस्तक मांस भोजे ।
संवत्सरस्य कुरुते रतिमेकवारं ।
पारावतः खलु शिलाशकलानि भुंक्ते
कामी भवत्यनु दिनं वद कोऽत्र हेतुः ॥

போஷக்கான ஆகாரம் உட்கொள்வதனால் இந்திரிய நிக்ரஹம் செய்ய முடியாது; விச்வாமித்திரர், பராசரரைப் போன்ற, காற்று, ஜலம், இலைகளைப் புசித்து, ஜீவித்திருந்த தபஸ்விகளுக்கே இந்திரிய நிக்ரஹம் அஸாத்யமென்றாயிற்று! என்று சொன்ன பிறகு உத்தமமான அறுசுவை உண்டிகளை உட்கொள்ளும் எங்களைப் போன்றவர்களுக்கு இந்திரிய நிக்ரஹம் எவ்வாறு முடியும் என்று நீ எண்ணுகிறாய் போலும்! இந்திரிய நிக்ரஹம் ஆகாரத்தைப் பொருத்தல்ல!! இதற்கு வேண்டிய திருஷ்டார்தங்களை நாம் காண்பிக்க முடியும். இதைக்கேள். மதம்பிடித்த யானையில் மத்தகத்திலுள்ள இரத்தம் மாமிசங்களையே தின்று ஜீவிக்கும் சிங்கம் ஒரு வருஷத்தில் ஒரே ஒருமுறைதான் பெண் சிங்கத்துடன் சேருகிறது! ஆனால் கல், மண்ணைத் தின்று ஜீவிக்கும் புறா ஒவ்வொரு நொடியும் காமியாகவுள்ளது!! ஆகாரமே இந்திரிய நிக்ரஹம் அதாவதுஜயத்திற்குக் காரணமென்றால் மதயானையின் மத்தகத்திலுள்ள ரத்தமாமிசம் எவ்வளவு புஷ்டியுள்ள உணவு. அதைப்புசிக்கும் சிங்கத்திற்கு எவ்வளவு காமம் இருக்க வேண்டும். இப்படியிருந்தாலும் கூட அது வருஷத்திற்கொருமுறை தான் ரதியை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அனுபவிக்கிறது! மண், கல் இவைகளைத்தின்னும் புறா ஏன் ஒவ்வொரு நொடியும் ரதியில் ஈடுபடுகிறது? இதற்குக் காரணம் என்னவென்று உன்னால் சொல்ல முடியுமா? ஆகையால் மனிதன் இந்திரிய நிக்ரஹம் செய்வதற்கு ஆகாரமே காரணமல்ல. மனம்தான் காரணம்! பரிசுத்தமான மனதிருந்தால், திடமான மனமிருந்தால், ஆசையைக் கட்டுப்படுத்தினால், இந்திரிய நிக்ரஹம் ஸாத்தியமே! ஆகையால் நீ சொன்ன விஷயம் ஏற்கத் தகுந்ததல்ல, உசிதமல்ல. ஸ்ரீ ஹரி, ஹர, குருவர்யரின் அனுக்ரஹத்தினால் நாம் இந்திரியங்களை ஜயித்திருப்பதினால் நம்மை எந்தப் பெண்ணும் தன் வசப்படுத்த மாட்டாள். அது போலவே நாமும் வேசியை ஜயித்தோம்.

குருவர்யர் மிக உசிதமாகவும் மனம் ஒப்பும்படி சொன்னதைக் கேட்டு மலையாளி ப்ராம்மணன் ஸ்ரீகளவரின் திறமை, வாக்குவன்மை, அபூர்வமானதேஜஸ்ஸுகளைப் பார்த்து மலைத்துப் போய், அவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "ஸ்வாமி, யதிச்ரேஷ்டரே, நான் குற்றம் செய்தேன், தம்மைப் போன்ற ஞானிகளைப் பரீக்ஷிக்க வந்தேன். தாங்கள் எனது அஞ்ஞான இருளை நீக்கிவிட்டீர். எனது குற்றத்தை மன்னித்து, என்னை ரக்ஷிக்க வேண்டும்" என்று ப்ரார்த்திக்கவும் ஸ்வாமிகள் ஆநந்தமடைந்து; "நம்மை நீ பரீக்ஷித்தாய் என்று மனதிற்கு வருத்தமில்லை. இவையெல்லாம் போகட்டும், என்று சொல்லிவிட்டு நமது இந்திரிய நிக்ரஹத்தைப் பரீக்ஷிக்க கேரள நாட்டு அழகிகளுடனே வந்துள்ள உமது தோழர் எங்கே? என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

ப்ராம்மணன் ஸ்ரீயவர்களின் பேச்சைக் கேட்டு திடுக்கிட்டான். நாம் வந்த விஷயம் ரகசியமானதாயிற்றே! இவரைப் பரிக்ஷிக்க யுவதிகளை அழைத்து வந்துள்ள விஷயம் இவர் எவ்வாறு அறிந்தார்? ஆகையால் இவர் லேசானவரல்ல. பூத, பவிஷ்ய. வர்த்தமானங்களை, (சென்ற, எதிர்கால, நிகழ்கால, விஷயங்களை) அறிந்த அபரோக்ஷ க்ஞானிகளாயிருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு அவருக்கு மறுபடியும் வணங்கி "ஸ்வாமி, பரம ரகஸ்யமான விஷயத்தைத் தாங்கள் சொன்னதினாலேயே தமது பெருமை வெளிப்படுகிறது. எங்களை மன்னிக்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வேண்டும், உண்மைதான், தங்களைப் பரீக்ஷிக்க எனது கூட்டத்தினரநேகர் கேரள நாட்டிலிருந்து அழகான யுவதிகளை அழைத்து வந்துள்ளனர் என்று தெரிவித்ததும் சபையோர் ஆச்சரியத்திலாழ்ந்தனர்.

ஸ்வாமிகளின் பக்கத்திலிருந்து வாயில் காப்போனை அழைத்து, "வெளியில் சில ஜனங்கள் ப்ராம்மணர்கள் நின்று கொண்டிருக்கின்றனர். அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு வா'' என்றார். வெள்ளிக் கோலேந்திய வாயில் காப்போன் சற்று நேரத்திற்கெல்லாம் ப்ராம்மணர்களை அழைத்து வந்தான். அவர்களைக் கண்டு முதலில் வந்த ப்ராம்மணன் ஸ்ரீகளவர்களின் ஞானதிருஷ்டியைக் கண்டு மலைத்தான். ஸ்ரீயவர்கள் சிரித்துக் கொண்டே, ''ப்ராம்மணரே, உங்களை வரவேற்கிறேன். மலையாள நாட்டிலிருந்து நம்மைப் பரீக்ஷிக்க வேண்டி வெகு சிரமப்பட்டு வந்துள்ளீர்கள். மகிழ்ச்சி வாருங்கள் பரீக்ஷை எப்பொழுது? என்று கேட்டார்.

ப்ராம்மணர்கள் முன்னால் வந்து ஸ்ரீகளவருக்குக் கைகூப்பி, "யதீச்வரரே, உண்மை. தாங்கள் சொன்ன பிரகாரம் தான் நாங்கள் வந்திருக்கிறோம். ஆனால் அதைத்தாங்கள் எவ்வாறு அறிந்தீர்களோ எமக்குத் தெரியவில்லை. அநேகமாக (ப்ராம்மணனை)க் காட்டி எங்கள் கூட்டத்தாராகிய இவர் சொல்லியிருக்கலாம்" என்று சொல்லவும் அந்த ப்ராம்மணன் எழுந்து நின்று, "மித்திரரே, நான் சொல்லவில்லை, இவர் மஹாத்மா, இவரே நீங்கள் வந்திருப்பதைத் தெரிவித்து உங்களை வரவழைத்தார். இவரைப் பரீக்ஷை செய்ய வந்த நான் தோற்றுப்போனேன்'' என்று சொல்லவும் அந்த ப்ராம்மணர்கள் உற்சாகத்துடன் ஸ்ரீவிஜயீந்திரருக்கு நமஸ்கரித்துக் கேட்டனர்:- ஸ்வாமி, யதிபுங்கவரே, (முனிபுங்கவரே) இந்த ஜகத்தின் ஜனங்களெல்லோரும் தங்களை ஹனுமான், பீஷ்மாசார்யரைப் போன்ற ஜிதேந்திரியர்கள் (இந்திரிய நிக்ரஹ முள்ளவர்கள்) என்று சொல்லுகின்றனர். நீங்கள் ஜிதேந்திரியர் எப்படி ஆனீர்கள்? ஜிதேந்திரியராகியிருந்தால், வேசியைக் காம

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கலையில் எவ்வாறு ஜயித்தீர்கள்? எங்களுக்கு உண்டாயிருக்கும் இந்த சந்தேகத்தைப் பரிகாரம் செய்ய முடியுமா? *

விஜயீந்திரர்:– ஏ ப்ராம்மணர்களே! நீங்கள் விஷயத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிகிறது. நானே நேராக வேசியைக் காம கலையில் ஜயித்தேன் என்று தெரிந்து கொண்டீர்களா? இல்லை. ஸ்ரீஹரி, ஹரன், குருவாயு பகவான்களின் அனுக்ரஹத்தினால் நாம் அவளை ஜயிக்கும் உபாயத்தையறிந்து நமது சேவைகள் மூலமாக புஷ்பத்தினால் அவளை அடித்ததினாலேயே அவளை ஜயித்தோம். இந்த விஷயத்தையாரோ உங்களுக்கு விபரீதமாகத் தெரிவித்துள்ளனரென்று தெரிகிறது.

நாம் ஜன்மத்திலிருந்தே ப்ரம்மசாரிகள், ஜிதேந்திரியர்களாக உள்ளோம். ஸ்த்ரீகளின் அங்கத்தைத் தொட்டாலும் கூட எமது அங்கம் இளகுவதில்லை. உலகத்தில் பெண்கள் அக்நி குண்டத்திற்கு சமமானவளென்றும், புருஷர்கள் நெய்ப் பாத்திரம் போன்றவர்களென்றும் நம்பப்படுகிறது. ஆனாலும் அது நம்மிடத்தில் மாத்திரம் நேர்விரோதமாக உள்ளது. அது நமக்குப் பொருந்துவதில்லை. இது ஸத்யம்".

மற்றொரு சிவபட்டனென்றும் ப்ராம்மணன் மத்தியில் குறுக்கிட்டு ஸ்ரீகளவர்களை, "ஸ்வாமி, ஆஜன்ம ப்ரம்மசாரிகளான தாங்கள் அனுபவிக்கர்த விஷயத்தில் எவ்வாறு ஜயமடைந்தீர்கள்? என்று சொல்லவும் ஸ்ரீகளவர் பக்கத்திலிருந்த பாருபத்திதாரரை அழைத்து ஒரு வெள்ளிப் பாத்திரத்தைத் தருவித்து, அதை வாயில் காப்பவன் கையில் கொடுத்து அவனுடைய காதில் ஏதோ

---

विद्वांसः ब्राह्नणास्सर्वेह्यब्रुवन् हंसपुंगवं । श्रुणुत्वं वचनं हंस ह्यस्माकं यतिपुंगव ॥ वदंति लोकाः निखिलाः हनुमद्भीष्म संन्निभः । भवानिति महाभाग कथं त्वं विजितेंद्रियः ॥ जितेंद्रियस्त्वं यदिचेत् त्वया वेश्या जिता कथं? । अतस्त्वं विजयींद्रार्यास्माकं शंकां तिवारय ।

इत्युक्तस्यैः प्राह सर्वानहं जन्मजितेंद्रियः। योषिदंग स्पर्श नेपिन योऽगम् द्रवते द्विजाः ॥ अग्निकुंडसमानारी घृतकुंभ समः पुमान् । तथापि चायंधर्मो में नास्ति विप्राश्च वैधृवं ॥

- श्रीविजयींद्र विजयः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சொல்லி சிரித்துக் கொண்டு அந்த ப்ராமணனை நோக்கி, "ஐயா, இன்னும் இரண்டு தினங்களில் உனது கேள்விக்கும் ப்ரத்யக்ஷப்ரமாணத்துடன் பதில் கொடுக்கிறோம்" என்று சொன்னார். அந்த ப்ராம்மணன் அதற்குச் சம்மதித்தான்.

ஸ்ரீகளவர் வாக்கியங்களை ஒப்புக்கொள்ள மறுத்து மலையாள ப்ராம்மணர் இவ்வாறு சொன்னார்," யதிபுங்கவரே தாங்கள் சொல்வதை நாங்கள் கண்ணாரக் கண்டால்தான் நம்புவோம். உமக்குத் தைரியமிருந்தால் சொல்லுங்கள் நாங்கள் பத்துப் பன்னிரண்டு அழகான சுந்தரிகளை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்கள் ஸகல கலாவல்லர்கள் பண்டிதர்கள், மற்றும் எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்விப்பதில் நிபுணர்கள். தாங்கள் போட்டியிடத் தயாராயிருந்தால் எல்லோரெதிரிலும், 'அவர்கள் தமக்கு அப்யஞ்ஜனம் செய்விப்பார்கள். சற்றேனும் சஞ்சலமற்ற மனதுடன் தாங்கள் அந்தப் பரீக்ஷையில் தேறிவிட்டால்தான் நாங்கள் தங்களை ஜிதேந்த்ரியரென ஒப்புவோம்!

விஜயீந்திரர் அவர் பேச்சைக் கேட்டு, "ஸ்ரீஹரியின் சித்தம், ப்ராம்மணரே, ஊம், அதுவும் ஆகிவிடட்டும். நாளைக்கே நடக்கட்டும் உமது பரீக்ஷ நாம் தயாராயுள்ளோம்" என்று சொன்னார்.

### 34. ஜிதேந்த்ரிய விஜயீந்திரர்:-

காலையில் அனுஷ்டாங்களை முடித்துவிட்டு தியானத்திலாழ்ந்து ஸ்ரீவிஜயீந்திர ஸ்ரீபாதங்களவர்கள் அமர்ந்திருக்கையில் வாயில் காப்பவன் வந்து விக்ஞாபனம் செய்தான்:- ''மஹாஸ்வாமிக்கு ஜயமாகட்டும், ஸ்ரீபாதங்களைப் பரீக்ஷிக்க மலையாள தேசப்ராம்மணர்கள் அநேக அழகிகளுடன் ஸ்ரீமடத்திற்கு வந்துள்ளனர். ஸ்வாமிகளைத் தரிசிப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். உத்தரவாக வேண்டும், ஸ்வாமி!

ஸ்ரீகளவர், ''ஸ்ரீஹரியின் சித்தம், போ, நாம் வருகிறோம்'' என்று சபாங்கணத்திற்கு (முற்றம்) எழுந்தருளினார். முந்தின தினம் ஸ்ரீகளவர்களின் இந்த்ரிய நிக்ரஹ சக்தியைப் பரீக்ஷிக்க மலையாளி ப்ராம்மணர்கள் வந்த செய்தி, இன்று ஸ்வாமிகளை அவர்கள் பரீக்ஷிக்கப் போகிறார்கள் என்ற விஷயம் ஜனங்கள் மூலம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பரவியிருந்ததால், சுவாமிகளின் இந்தப் புதிய அற்புதத்தை (Miracle)க்காண ஸ்வாமிகள் தோல்வியடைந்து விடுவாரோ என்னமோ, அவ்வாறு நடந்து விட்டால் அதைப் பார்த்து மகிழலாமென்ற எண்ணமுள்ளவர்களும், என்று பலவாறு எண்ணிக்கொண்டு பலவகையான ஜனங்கள் ஸ்ரீமடத்தில் ஒன்று கூடியுள்ளனர்.

ஸ்ரீவிஜயீந்திரர் சபா நடக்கும் முற்றத்திற்கு விஜயம் செய்த உடனே எல்லோரும் எழுந்து மரியாதையுடன் வணங்கினர். மலையாள ப்ராம்மணர்கள் ஸ்ரீகளவருக்கு நமஸ்கரித்து, "ஸ்வாமி, இந்த யுவதிகள் தங்களது ஸாமர்த்தியத்தினால் தங்களை மோஹிப்பார்கள். தாங்கள் உண்மையிலேயே இந்த்ரிய நிக்ரஹமுள்ளவரானால், சற்றேனும் சஞ்சலமில்லாமல் (அவர்கள் வலையில் சிக்காமல்) பரீக்ஷயில் தேறிவிட்டால் நாங்கள் தங்களை மஹாத்மாவாக ஒப்புவதில் யாதொரு தடையுமில்லை" என்றனர். ஸ்ரீகளவர் புன்முறுவலுடன், "ஆகட்டும், ஸ்ரீஹரியின் அனுக்ரஹமிருக்கும் வரை நமக்கு பயமில்லை. உம், நடக்கட்டும் உமது பரீக்ஷ," என்று சொல்லி பாருபத்திதாரரின் முகத்தைப் பார்த்ததும், ஸ்ரீகளவரின் அபிப்ராயத்தை அறிந்த அவன் மிகமிக மெல்லிய இளம் துளிர் வாழையிலையை ஸ்ரீகளவர்களிடம் கொடுத்தான். ஜனங்களெல்லாம் இதென்னவென்று பார்த்துக் கொண்டிருக்கையில் ஸ்வாமிகள் வாழை நாரை அரை நாணாகக்கட்டி அந்த மெல்லிய, தொட்டால் கிழிந்து போகக்கூடிய வாழையிலையையே கௌபீனமாக (கோவணமாக) அணிந்து ப்ராம்மணர்கள் பக்கம் திரும்பி, "வெறும் துணியினாலான கோவணத்தினால் நமது இந்த்ரிய நிக்ரஹம் சாமர்த்யம் உங்களுக்கு தெரியாது. அதனால்தான் இந்த இளம் துளிர் வாழையிலையைக் கோவணமாக அணிந்துள்ளோம். உங்கள் பரீக்ஷ உங்களுக்கு எளிதாக இருக்குமல்லவா? என்று புன்னகை செய்தார். மலையாள ப்ராம்மணர்களும், நிறைந்துள்ள ஜனங்களும் மனோ திடத்தைக் கண்டு வியந்தனர். மலையாள ப்ராம்மணர்கள் ஸ்வாமிகளைச் சுலபமாக ஜயிக்கலாமென்று ஆலோசித்து, தாங்கள் அழைத்து வந்துள்ள ஸுந்தரிகளுக்கு ஸ்வாமிகளின் மனம் தங்களை நாடும் விதத்தில் அபயங்கனம், செய்விக்க உத்தரவிட்டனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மனத்தை வசீகரிக்கும் ஆபரணங்களாலும் துணிமணிகளாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டிருந்த இளங் கன்னியர்களான அந்தக் கேரள தேசயுவதிகள் ஸ்ரீவிஜயீந்திரரை எல்லோர் முன்னிலையிலும் பீடத்தில் உட்காரவைத்து, பலவாறு அங்கபங்கங்களினால் யதிச்ரேஷ்டரின் மனதைக் கவர முயற்சித்துக் கொண்டே இனிமையான குரலில் கானம் செய்து கொண்டு விஜயீந்திரருக்கு அப்யங்கனம் செய்விக்கத் தயாரானார்கள்.*

எல்லோரையும் மோகிக்கவல்ல அந்த ஸுந்தரிகளின் எந்தக் குலுக்கு மினுக்குகளுக்கும் காமலீலைகளுக்கும் வசீகரிக்கும் முயற்சிகளுக்கும் விஜயீந்திரர் மனம் மயங்கிவிடவில்லை! அந்த அழகிகளால் அவ்வரைத் தம் வசப்படுத்த முடியவில்லை! ஆஜன்ம ப்ரம்மசாரியாகவும், தேஜஸ்வியாகவும், காமமற்றவராகவும், மகாமகிமையுள்ளவருமான அந்த முனிபுங்கவர் இந்த அழகிகளின் ஸரஸஸல்லா பங்களுக்கு (அதாவது காமக் கலையின் ஸகல திறமையுள்ள குலுக்கு மினுக்கல்களுக்கும்) பலியாவாரா என்ன? சற்றேனும் சலிக்காத மனோதிடம்,சாந்தமான முகமும், ஸாத்வீக தேஜஸ்ஸினால் சுகப்ரம்மத்தைப் போல் காட்சியளித்த அந்தத் தபோ மூர்த்தியைப் பார்த்து ஜனத்திரள் ஒரே குதூகலத்துடன் இருக்கின்றனர். அந்த மோஹனாங்கிகள் ஸ்ரீகளவரின் மனதைக் கலைக்க முயற்சித்துக் கொண்டிருந்தால் ஸ்ரீவிஜயீந்திரயதிபுங்கவர் ஸ்ரீமூலராம சந்திரனின் பாதங்களில் தமது மனதை நிலைநிறுத்தி ஸ்ரீஹரியைத் தியானித்துக் கொண்டே ஸ்ரீநாராயண சப்தார்த்தத்தை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

"நாராயணன் என்ற சொல்லின் நிஷ்பத்தி (பதம் பிரிப்பது) எப்படி? நாராயண சப்தார்த்தமென்பது என்ன? ஏன் நாராயண சப்தம் ருத்ராதிகளுக்கு ஏன் பொருந்துவதில்லை? நாராயணன் என்ற சொல்லுக்கு, அரா: ந. பவந்தீதிநாரா: அதாவது இங்கு (நயெ)

---

*अथते विजयींद्रार्य परीक्षार्थं द्विजोत्तमाः । नार्यस्सं प्रेषयामासु स्तैलाभ्यंगे च कर्मणि । तानार्यस्सुकुमार्याश्च श्यामाः पंकजलोचनाः । दिव्यगंधवहास्सर्वाश्चल च्छोणीपयो धरां: ॥ लोलकुंडल कर्णाश्च निष्कंठश्चस्युवाससः गलत्पुष्प सुकेशाश्च मुक्तामाल विभूषिताः । यासां मुखं तुलयितुं चंद्रमा इवलक्ष्यते । तास्समा गत्य हंसेंद्र पीठे संस्थाप्य सादरम् । गायंत्यः मधुरालापाः ननृताश्चाप्सरोपमाः ॥

- श्री यिजयींद्र विजय ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


விரோதவாச மாகையால் தோஷவிருத்த குணங்களென்று பொருள். "நாராணாம் அயன: நாராயண:" என்றால் குணபூர்ணனென்று பொருள்: "அரணாம் அயன: அராயண:, அராயணோ நபவ தீதி நாராயண: "என்றால் தோஷவிதூரன் (ரஹிதன்) என்று பொருள். "நாரா: அபௌருஷேயத்வாத் புருஷதோஷ நிபந்தனதோஷ சூன்யா: வேதா: க்஌ப்ததாஸம்மந்மதன ததாச்ரயத்வாத்" அத வா "நாரா: வேதா: தேஷாமிதம் நாரம் வேத ஜன்யக்ஞானம், விஷயதா சம்பந்தேன ததயனத்வாத் நாராயண:" என்றால் அபௌருஷேயமானதால் புருஷதோஷ நிமித்தக அப்ராமாண்ய காரணதோஷ மில்லாமலிருப்பதனால் ப்ரமாணதமமான வேதங்களினால் தெரியப்பட்டவனும், அதாவது வேதத்திலிருந்து! பிறந்த ஞான விஷயத்தையும், மற்றும் "நாரா: முக்தா:, கம்யதா சம்பந்தேன் தேஷாமயனத்வாத்". அதாவது முக்தர்க்ளால் அடையப் பெறுபவனும் முதலான நாராயணனென்ற சொல்லிற்குப்ரம்ம மீமாம்ஸா சாஸ்திரங்களால் தெரிவிக்கப்பட்ட அர்த்த சதுஷ்டயமும் (ப்ரம்ம மீமாம்ஸா சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் நான்கு அர்த்தங்களையும்) மற்றும் ப்ராணதேவனுக்கு ப்ரீத்யாஸ்ப்தனும் என்றெல்லாம் அநேக அர்த்தங்கள் நாராயண சப்தத்தினால் வெளிப்படுகின்றன!

இங்கு, "நாராயணம் அயனம்" என்று பதச்சேதம் செய்தால் ஸமாஸத்தில், "பூர்வபதாத்ஸங்ஞாயாமக:" அதாவது முந்தின பதத்திலிருக்கும் நிமித்த (காரண)த்தினால் பரமான (இரண்டாவதாக உள்ள) உத்தர பதத்திலிருக்கும் "அயனம்" என்ற பதம் (घटक) கடகமான "ந"விற்கு நாராயண சப்தம் விஷ்ணுவிடத்தில் ரூடமாயிருப்பதால் "ண" என்பது வருவதால் நாராயண சப்தம் நிஷ்பத்தியாகிறது. அப்படியே நாராயண சப்தத்திற்கு ருத்ராதிகளில் ரூடியில்லாமலிருப்பதால், ருத்ராதிகளைச் சொல்லுகிறோம் என்று சொன்ன பக்ஷத்தில் "அயன" சப்தமான (கடகமான) "ந"விற்கு "ண" வராமல், "நாராயண" என்றாக வேண்டியிருக்குமே தவிர, "நாராயண" என்றாவதில்லை யாதலால் "நாராயண" சப்தம் அஸாதாரணமாக ஹரியையே அறிவிக்கிறது இப்பேர்ப் பட்ட மகிமையை அடைந்திருக்கும் ஸ்ரீமூலராமாபின்ன

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



(மூலராமனிலிருந்து வேறுபடாதவனான)னான ஹே நாராயணா! எனக்கு, ஞானம், பக்தி, வைராக்யம் முதலியவைகளை அளித்து உத்தாரம் செய்ய வேண்டும் ஸ்வாமி" என்று த்யானத்தில் ஈடுபட்டிருக்கிறார் ஸ்ரீவிஜயீந்திரர்.

அப்ஸர ஸ்த்ரீகளோ என்று சொல்லும்படியான குயிலினுமினிய குரலில் பாடிக்கொண்டு, கிளியைப்போல கொஞ்சிக்கொஞ்சிப் பேசுகின்ற, மயிலைப்போல நெளிந்து நெளிந்து நடனமாடிக் கொண்டு, ம்ருக நயனிகளான (மான் விழிகளான), அந்தக் கேரளநாட்டின் மடக்கொடிகள், கவர்ச்சிகரமான தங்களின் கடாக்ஷ வீக்ஷத்தினாலும் (கடைக் கண்பார்வைகளாலும்) புன்முறுவலாலும், எல்லோரின் மனதையும் வ்சப்படுத்தவல்ல தங்களது ச்ருங்கார பாவங்களால் (ஸரஸஸல்லாபங்களினால், ஸ்ரீவிஜயீந்திரருக்கு எண்ணை தேய்த்துக் கொண்டு, அவரது மனதைச் சஞ்சலப்படுத்த வெகுவாக முயற்சித்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீவிஜயீந்திர முனிபுங்கவர் மூடின இமைகளுடன் தமது ஹ்ருத் கமல நிவாஸியான, ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸ்தல நிவாஸியான, சதுர்புஜ மூர்த்தியான, ஸ்ரீலக்ஷ்மி ஆலிங்கிதனான, கோடிமின்னலை ஒத்த காந்தியுடன் கூடிய, சந்திரனைப் போன்ற தாபத்தைப் பரிகாரம் செய்பவனுமான, ஜகத்வ்யாபகனுமான பரமாத்மாவை நிர்மலமான மனத்தினால் த்யானம் செய்யத் தொடங்கினார். [1]

தங்களது காமம் நிறைந்த வசீகரமான மன்மத லீலைகளினால் சற்றேனும் விகாரத்தை அடையாத யதிச்ரேஷ்டரைப் பார்த்து, ஆச்சரியத்தினால் மலையாள யுவதிகள் மறுபடியும் யதீச்வரரை வசியம் செய்ய அபரிமிதமானவாஸனைத் தைலங்களினால் பற்பல விதத்தில் மோஹித்து அவருக்கு எண்ணை தேய்க்க ஆரம்பித்தனர். [2]

---

1. तदा श्री विजयीन्द्रार्यः राम पादार्पिता शयः । नारायण पदस्यार्थ परोभूदयतिसत्तमः । निमीलिताक्षः हृत्पद्म संस्थं विष्णुं चतुर्भुजम् । श्रीवत्सवक्षसं लक्ष्म्या समालिंगित वक्षसं तटित्कोटि प्रतीकाशं चन्द्र वच्छीतलं हरिम् । चिंतयामास मनसा निर्मलेनांतरात्मना ।

श्री विजयीन्द्रविजयः ।

2. तास्तदाऽक्षुद्र मनसं विजयीन्द्रं निरीक्ष्यच । पुनश्चक्रुः । प्रयत्नं च अभ्यंगनं....... यतीन्द्रायचक्रुः । मोहयितुंयतिं । तथापि न चल शिचत्तं विजयीन्द्रस्य योगिनः ॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மறுபடியும் தம்மை மோஹிக்கச் செய்ய அந்தத் தாமரை விழியினர்கள் புத்தியீனத்தைக் கண்டு புன்னகையுடன் ஸ்ரீபாதங்கள்வர் விசாரமற்ற மனதுடன் ஸ்ரீஹரியை பஜித்துக் கொண்டே தமது மனதைச் சாக்ஷாத் மன்மத மன்மதனான நந்தகோபாலனின் பாதார விந்தங்களிலும் தனது திருவாயால் பராத்பர தத்துவத்தை அருளிக் கொண்டும், கண்ணினால் ஸ்ரீஹரியின் நானாவித அவதாரங்களைக் கண்டு கொண்டும் காமத்தைத் தேசகால, குணங்களினால் பிரிக்கப்பட முடியாத ஸ்ரீபகவந்தனின் பஜனையிலும், புத்தியை நான்குவிதமான நாசங்களற்றவனாகையால் அக்ஷர சப்தவாச்யனான பரப்ரம்மனின் ஞானத்திற்குச் சாதனமான க்ாரணத்தினால் முக்கியமாகப் பரவித்யாவான "ரிக்" முதலிய வேதாந்த விஷயத்திலும், அதாவது வேதத்திற்குப் பரமமுக்யார்த்தம் எது? முக்யார்த்தம் எது? லக்ஷ்யார்த்தம் எது? ரிக் வேதார்த்த விசாரம் செய்வதிலும், வேதப்ரதிபாத்யனானதினால் கோவிந்த சப்தவாச்யனான பரமாத்மாவின் பாதகமலங்களில் அர்ப்பணம் செய்யப்பட்ட சந்தனம், துளஸி இவைகளை முகர்வதில், க்ராணேந்திரியங்களையும், தமது சிஷ்யர்கள் இனிய குரலில் அத்யயனம் செய்து கொண்டிருக்கும் வேதங்களைக் கேட்டுக் கொண்டிருப்பதை ச்ரவணேந்திரியங்களை (காதுகள்)யும், தமது ரஸனேந்திரியமான நாவை மத்வ சாஸ்திரத்தைத் தூஷிப்பவர்களை நிராகரித்து த்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பதிலும் நிலைநிறுத்தி, விஞ்ஞானமென்னும் வாளினால் அகங்காரம், பொறாமை இவைகளை அறுத்தெறிந்து சலனமேயில்லாத (விகாரமற்ற) மனத்துடன் அமர்ந்துள்ள, அக்னி ஜ்வாலையைப் போல் சாந்தியுடன் விளங்கும் யோகிகளால் வணங்கப்படும் पदपाशो जரான ஸ்ரீவிஜயீந்திரர் மனம் லவலேசமும் விகாரமடையவில்லை.[3]

3. "तस्मिन्कालेच योगींद्रमनः कृष्ण पदांबुजे । वाचस्तत्वार्थ गणने नेत्रे विष्णु निरीक्षणे । कामंच वहा भजने । बुद्धिं वेदार्थवर्तिनीम् । गोविंद पाद संस्थायाः तुलस्यागंध धारणे । घ्राणं चकार योगीन्द्रः श्रवणे श्रुति गोचरे । रसनं मध्वशास्त्रार्थ भूषणे मदमत्सरे । विज्ञानकल्पा छित्वा वभौ ज्वालाग्नि सन्निभः ॥"

- श्री विजयींद्रविजयः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அப்பொழுது அமோகமான ஒளிவீசும் ஸ்ரீபாதங்களவரைப் பார்த்துப் பயமடைந்து அந்த அழகிகள் ஸ்ரீபாதங்களின் அசையாத உறுதியான, எங்குங் கண்டிராத இந்திரிய நிக்ரஹ சக்தியினால் மிரண்டுபோய் ஸ்ரீபாதங்களவரைச் சரண்புகுந்து தங்களது குற்றத்தை மன்னிக்கும்படிப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினர்.[4] கூடியிருந்த ஜனங்கள் யாவரும் ஸ்ரீயவர்களின் இந்த மகிமையைக் கண்டு ஆனந்த பரவசமடைந்து, "ஜிதேந்திர விஜயீந்திரர் வாழ்க" என்று ஜயகோஷம் செய்தனர்.

தாங்கள் ஸ்ரீபாதங்களவரைப் பரீக்ஷிக்க முயற்சித்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று கேரள அழகிகள் ப்ரார்த்தனை செய்தனர். விஜயீந்திரர் காஷாய வஸ்திரம் அணிந்து, வாழையிலைக் கோவணத்தை அவிழ்த்து மலையாளி ப்ராம்மணர்களிடம் கொடுத்துச் சிரித்துக் கொண்டே, "ஹே, ப்ராம்மணர்களே, இதோ நாம் அணிந்த கோவணத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள். இப்பொழுதாவது உங்களுக்குச் சமாதானமாயிற்றா? என்று கேட்கவும், ஸ்ரீயவர்களின் கோவணத்தை அவர்கள் யாவரும் பரீக்ஷித்து ஸ்ரீபாதங்களவரின் அகாதமான இந்திரிய நிக்ர்ஹ சக்தியைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கி, ஸ்ரீயவர்களின் மஹா மஹிமையை அறிந்து, பயபக்தியுடன் அவரது பாதகமலங்களில் சிரந்தாழ்த்தி வணங்கி, "மஹாப்ரபோ, எங்களது குற்றத்தை மன்னிக்க வேண்டும். தாங்கள் ஞானம், பக்தி, வைராக்யத்தின் இருப்பிடம். உலகம் போற்றும் மகிமையுடையவர். ஜிதேந்த்ரியர், ஸகல வித்யாப்ரவீணர். தங்களது திக்கெல்லாம் பரவிய கீர்த்தியைக் கேட்டிருக்கின்றோம். இன்றும் கண்ணாரக் கண்டோம்''. விஜயீந்திர ஸமோலோகே நபூதோ, ந.பவிஷ்யதி" இது ஸத்யம். அஞ்ஞானிகளான எங்கள் கண்களைத் திறந்தீர்கள். ஞானப்ரகாசத்தை அளித்தீர்கள். ஸ்வாமி, யதிச் சக்ரவர்த்திகளே, எங்களை மன்னித்து அனுக்ரஹிக்க வேண்டும்'' என்று பலவாறு ஸ்ரீபாதங்களவரை வேண்டினர்.

ஸ்ரீவிஜயீந்திரர் மகிழ்வுடன், ''ப்ராம்மணர்களே, நீங்கள் நம்மை பரீக்ஷித்தீர்கள் என்று நமக்குக்

---

4. संस्थिता रूपवत्यस्तास्तैलाभ्यंगन कर्मणि दृष्ट्वा । विभावसु निर्भसंत्रस्ता ......... योषितः अथ प्रणे पुस्तास्सर्वाः हंस भीत्या भयान्विताः ॥ - श्री विजयीन्द्रविजयः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கோபமில்லை. ஸ்ரீஹரியின் சித்தப்படி இப்படி ஆகவேண்டுமென்று இருந்ததென்றே நம் அபிப்ராயம். அது நடந்துள்ளது.

எல்லாக்கலைகளிலும் யார் வேண்டுமானாலும் போட்டியிடலாமென்று நாம் ஸவால் விட்டிருந்தால் இப்படிப்பட்ட அநேக ப்ரச்சினைகளை நாம் எதிர்பார்க்க வேண்டியதாகவே உள்ளது. நாம் அதை மகிழ்ச்சியுடன் வரவேற்போம். ஆனால் உங்களுக்கு எமது ஒரு ஹிதோபதேசம். கேளுங்கள், நம்மைப் பரீக்ஷித்த மாதிரி மற்ற சாது மஹாத்மாக்களைப் பரீக்ஷிக்கப் போகாதீர்கள். அது உங்களுக்கு நல்லதல்ல" என்று உபதேசித்தார்.

கூடியிருந்த ஜனங்களெல்லோரும் ஸ்ரீபாதங்களவரின் திக்விஜயத்தினால் மகிழ்ச்சி மிகுதியால் மனமார ஸ்வாமிகளைக் கொண்டாடத் தொடங்கினர். "ஸ்வாமி, யோகிச்ரேஷ்டரே, ஜகத்தில் உண்மையாகவே தமக்குச் சமமானவர் வேறு யாருமில்லை. விபாண்டகரின் புத்திரரான ரிஷ்யச்ருங்கர் பெரிய மஹான், ஜிதேந்த்ரிய, ஸ்த்ரீகளால் சூழப்பட்டிருந்தபோதிலும் சற்றேனும் விகார புத்தி ஏற்படவில்லையென்று புராணங்களில் படித்துள்ளோம். இன்று அந்தக் கதையை நேரில் பார்ப்பது போலேயே உணர்கிறோம். எங்களது பார்வையில் தாங்கள் ரிஷ்யச்ருங்கரைவிட உத்தமர். ஸ்ரீஹனுமான், ஸ்ரீபீஷ்மாசார்யார் இருவருக்கும் சமமாக உள்ளீர்கள். லோகத்தில், "**बलवानिंद्रिय ग्रामो विद्वांसमपिकर्षति**" என்று பழமொழி உண்டு. அது ஸத்யமென்று சொல்கிறார்கள். தாங்கள் இன்று அவ்வாக்கியத்தைப் பொய்யாக்கிக் காட்டிவிட்டீர்கள். சற்றும் சலிக்காத தமது மனம், அற்புத ஜிதேந்திரியத்வம் அனிதர ஸாதாரண மஹாத்மியங்களைப் பார்த்தால், தாங்கள் ஸ்ரீஹரியின் பூர்ண அனுக்ரஹத்திற்குப் பாத்திரரானவர். ஜகத்தை உய்விப்பதற்காகவே அவதரித்த தேவதாச்ரேஷ்டரென்று நாங்கள் பாவிக்கிறேம். ஸ்வாமி, யதிபுங்கவரே, ஸ்ரீஹனுமான் முன்பு 100 யோஜனை விஸ்தீர்ணமுள்ள சமுத்திரத்தைத் தாண்டினதாகக் கேட்டிருக்கிறோம். தாங்களோ எல்லையேயில்லாத (காம) சமுத்திரத்தைத் தாண்டியிருக்கிறீர். ஸ்ரீபீஷ்மாசார்யர் யுத்தத்தில் இவ்வளவு சத்துருக்களை ஜயித்தாரென்று கணக்கிட்டுள்ளனர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஆனால் தாங்கள் வாதயுத்தத்தில் கணக்கற்ற வாதிகளை அநேக வகையில் ஜயித்திருக்கிறீர்கள். முனிபுங்கவரே, இந்த ப்ராம்மணர்களின் குற்றங்களை மன்னித்து இவர்களை உய்விக்க வேண்டும் மஹாஸ்வாமி! என்றெல்லாம் வேண்டினார்கள்.

இதே சமயத்தில் அன்று மத்தியானம் ஸ்ரீகளவர்கள் வேசியை ஜயித்த விஷயமாக ஆக்ஷேபம் தெரிவித்த சிவபட்டநாயக ப்ராம்மணன் ஸ்வாமியின் எதிரில் வந்து அவருக்கு வணங்கி, "ஸ்வாமி, எனது கேள்விக்கு இன்று உத்தரம் கொடுப்பீர்களா? என்றான்.

ஸ்ரீபாதங்கள் சிரித்துக் கொண்டு, "உங்களுக்குச் சமாதானம் வேண்டுமா, ப்ராம்மணரே? வாருங்கள், இப்பொழுதே தங்கள் ப்ரச்சினைக்குத் தீர்வு காணுவோம்" என்று அந்த சிவபட்டனை அழைத்துக் கொண்டு மடத்தின் புழக்கடைப் பக்கத்திற்கு அழைத்துச் சென்றார். கூடியிருந்த ஜனங்களெல்லாம் இது என்ன சமத்காரம் (அற்புதம்) என்று தாங்களும் பின்தொடர்ந்தனர். அங்கேயே உள்ள மலத்தொட்டியில் (கழிப்பறையில்) போட்டிருந்த வெள்ளிப் பாத்திரத்தை ஆட்களைக் கொண்டு எடுக்கச் செய்து அதைக் கழுவிச் சுத்தம் செய்வித்துக் கொண்டுவரச் செய்து (இரத்த வர்ணம் சிவப்பு நிறமாகியிருந்த அந்த வெள்ளிப் பாத்திரத்தை அவருக்குக் காட்டி ஸ்ரீவிஜயீந்திரர்; வெள்ளி வெள்ளை நிறமாக இருக்க வேண்டும். இது சிவப்பு வர்ணமாக ஏன் ஆகியுள்ளது, சொல்லுங்கள் பார்க்கலாம்"[1] என்று கேட்கவும், அதைப் பார்த்து சாஸ்திரத்தின் வாயிலாக விமரிசித்து புத்திமானான அந்த சிவபட்டன் வெள்ளிப் பாத்திரம் சிவப்பு நிறமான காரணத்தைச் சொன்னான். "ஸ்வாமி, விஷ்டம் (மலம்) ஆம்லரஸம் கலந்துள்ளது (நெல்லிரஸம்) அதனால் வெள்ளை நிறமுள்ள இந்த வெள்ளிப் பாத்திரமானது நெல்லிக்காயின் ரஸம் சம்பந்தப்பட்டதினால் சிவப்பு நிறமாகிவிட்டது.[2] உடனே

1. "विष्टकूपे विद्यमानं पात्रपादायदर्श्य च । रजत शुक्लवर्णचरक्त वर्ण कथंवद ॥"
2. इत्युक्ते यतिनाथेन वाक्यं श्रुत्वा निरीक्ष्य तत् । विमृश्य शास्त्र मार्गेण रक्त वर्णस्य कारणं विप्रस्तस्मै मुनींद्राय ह्यवददबुद्धिमान द्विजः ॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்வாமிகள் புன்னகையுடன், "ஓகோ, அப்படியா மலம் நெல்லிக்காய் ரஸமென்று உமக்கு எப்படித் தெரிகிறது? அதை ரஸபரீக்ஷைக்காக ருசிபார்த்தீரா என்ன?

ஜனங்களெல்லோரும் சுவாமிகளின் இந்த அற்புதமான வாக்கியத்தைக் கேட்டு வியந்தனர். ஸ்ரீகளவருடைய வார்த்தைகளைக் கேட்டு சிவபட்டர் சொன்னார். "अहं शास्त्र विचारेण ब्रुवे विष्टरसंभुवे," ஸ்வாமி, ரஸத்தை அறிவதற்கு அதை ருசி பார்க்கவேண்டிய காரணமெதுவும் இல்லை. சாஸ்திர ஆராய்ச்சி செய்து விஷ்டம் (மலம்) அம்ல (நெல்லிக்காய் ரஸம்) ரஸத்துடன் கூடியதென்று சொல்ல முடியும். அதன் பிரகாரம் நானும் சொல்லியிருக்கிறேன்" என்று சொல்லவும், சுவாமிகள், துஷ்ட மனத்தினால் தமது கீர்த்திக்கு களங்கம் உண்டாக்குவதற்காக அந்தக் கேள்வியைக் கேட்ட அந்த சிவபட்டனைப் பார்த்து, "நம் கலாசாஸ்திரத்தை ஆராய்ந்து, அந்த வேசியை ஜயித்தோம். நீங்களே இப்பொழுது சொன்ன மாதிரி சாஸ்திர த்ருஷ்டியில் விஷ்டம் (மலம்) அம்ல (நெல்லிரஸம்) என்றும் அதை ருசிபார்க்காமலே தெரிவிக்க முடியும் பொழுது, வேசியைக் காம கலா சாஸ்திர ரீதியில் ஜயிக்க முடியாதா, என்ன? கேளுங்கள், இங்கு கூடியுள்ள ஜனங்களெல்லோருக்கும் தெரிந்திருக்கிறது அவளை நாம் எவ்வாறு ஜயித்துள்ளோம் என்பது நமது சிஷ்யன் மூலமாக கேவலம் புஷ்பத்தினால் அடித்ததினால் அந்த வேசியை நாம் ஜயித்தோம். அவளுடன் சம்பந்தமில்லாமலேயே நாம் எப்படி அவளை ஜயித்தோம் என்று நீங்கள் ஆக்ஷேபித்தீர்கள்! அதற்கு இப்பொழுது இந்த வெள்ளிப் பாத்திரம் சிவப்பு நிறமான காரணத்தைக் கண்கூடாகச் செய்து காட்டியதினால் நீர் சமாதானமடையலாமல்லவா? த்ருப்தியாகலாமல்லவா? அல்லது இன்னும் சந்தேகமிருக்கின்றதா? என்று கேட்கவும், எதுவும் பதில் சொல்லத்தோன்றாமல் அந்த சிவபட்டன் மௌனமாகிவிட்டான். வெகு புத்திசாலித்தனத்துடன் அற்புதமாக அவனது வாக்கியத்தினாலேயே அவன் வாயை மூடி வைத்த ஸ்ரீகளவர்களை ஜனங்கள் புகழ்ந்தனர்.

---

3. "तवस्नमूधे स पुनिवाहाणं दुष्ट भाषणं । कला शास्त्र विचारेण मया वेश्या जिता खलु । एवं तेन पुनीं द्वेण विमुखो ब्राह्मणोऽभवत ॥"

- श्री विजयींद्रविजयः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீவிஜயீந்திரரை தூஷித்த சிவபட்டனுக்கு குருவின் சாபம் எங்கு கிட்டிவிடுமோ என்ற பயத்தினால் கூடியிருந்த பண்டிதர்கள் அவனை ஸ்ரீபாதங்களின் பாதங்களின் மீது விழச்செய்து, ''இவனை அனுக்ரஹிக்க வேண்டும் மஹாஸ்வாமி'' என்று வேண்டிக்கொண்டனர்! மற்றும் குருவர்யரின் குணகானம் செய்யத் தொடங்கினார்கள்.

''க்ஞானி ச்ரேஷ்டரே தாம் ஹனுமான் மற்றும் பீஷ்மாசார்யரைப் போல பால ஸந்நியாஸிகளாகி இருக்கிறீர்கள். பாலப்ரம்மசாரிகளும் கூட இதில் எள்ளளவு கூட சந்தேகமில்லை. ஸ்வாமி, த்ரேதாயுகத்தில் ராமதூதரான ஸ்ரீஹனுமான் லங்காபுரியில் ராவணனுடைய அரண்மனையில் அலங்கோலமான உடைகளுடன் தூங்கிக்கொண்டிருந்த ஸ்த்ரீகளைப் (நழுவின உடைகளுடன்) பார்த்தும் கூட அவரது மனம் சஞ்சலமடையவில்லை. (விகாரமடையவில்லை) மற்றும் பெண்களைப் பார்த்ததினால் ஹனுமானுடைய ப்ரம்மசர்ய விரதத்திற்கு எந்த தோஷமும் உண்டாகவில்லை. இன்றைக்கும் அவரை பால ப்ரம்மச்சாரியென்றே ஞானிகள் வர்ணித்துள்ளனர், வர்ணிக்கின்றனர். த்ரேதாயுகத்தில் வாயு புத்ரரான ஹனுமர்னொருவரே நியத ப்ரம்மசாரிகளென்று பிரஸித்தி பெற்றுள்ளார். யதிஸார்வபௌமரே, தாங்களும் கூட அவருக்குச் சமானமானவரே. இது மாத்திரமல்ல. த்வாபரயுகத்தில் ப்ரம்மசாரிகளென்று கீர்த்திபெற்றார். ஸ்ரீகிருஷ்ண பக்தரான பீஷ்மாசார்யர் தாங்களும் கூட அவரைப் போலவே நைஷ்டிக ப்ரம்மச்சாரிகள். மஹாப்ரபோ, ஹனுமான், மற்றும் பீஷ்மாசார்யரைப் போலவே, அழகுமிக்க ஸ்த்ரீகளின் தர்சனத்தினாலும் மற்றும் ஸ்பரிசனத்திலும் கூட சற்றேனும் விகாரபுத்தி ஏற்படாத திடமனதையுடைய தாங்களும் ஆபால ப்ரம்மசாரிகளே (அதாவது பால்யம் முதல் ப்ரம்மச்சாரிகள்) ஜகத்தில் இது பறைசாற்றப்படத்தகுந்த விஷயமாகியுள்ளது'' என்றெல்லாம் பலவாறு ஸ்ரீபாதங்களைப்

1. ब्राह्मणाः ब्राह्मणं स्थाप्य विजयींद्रस्य पादयोः । प्रार्थयामासु रव्यग्राः पुनरेनं यतीश्वरम्"

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



புகழ்ந்து[2], அந்தப்ராம்மணர் தங்கள் எல்லோரையும் காப்பாற்ற வேண்டும் என்னும் தூஷித்தவரின் குற்றத்தையும் மன்னித்து அவரையும் ரக்ஷிக்க வேண்டுமென ப்ரார்த்தனை செய்ய ஸ்ரீபாதங்களவரினால் அனுக்ரஹிக்கப்பட்டனர்.

அந்த ப்ராம்மணர்களின் நடுவிலிருந்த பண்டிதனொருவன், "ஸ்வாமி, தங்களுக்கு இவ்வளவு உறுதியான இந்திரிய நிக்ரஹ சாமர்த்தியம் மற்றும் பாண்டித்யம் இவைகளிருப்பதற்கும், அநேக கலைகளில் அநேக வாதிகளை தாங்கள் ஜயிப்பதற்குக் காரணம் சதுர்முகப்ரம்மனால் பூஜிக்கப்பட்ட சதுர்யுக மூர்த்தியான ஸ்ரீமூலராமசந்திரரின் பூஜை செய்வதின் பலனென்று நான் நம்புகிறேன். மற்றும் ஸ்ரீமதாசார்யரினால் பூஜை செய்து கொள்ளப்பட்ட ஸ்ரீதிக்விஜயராமரின் பூஜாபலனென்று நம்பியுள்ளேன். இந்த மஹாவிக்ரஹங்களை ஆராதிக்கின்றஹே, யதிபுங்கவரே, தாங்கள் எங்களை அனுக்ரஹியுங்கள்" என்று ப்ரார்த்தித்தார்.

ஸ்ரீவிஜயீந்திர யதீச்வரர் அந்த எல்லா ப்ராம்மணர்களுக்கும் தப்த முத்ராதாரணம் செய்து தமது சிஷ்யர்களாக்கிக் கொண்டு அனுக்ரஹித்தருளினார்.[3]

## 35. அற்புத கலாவல்லமை (artistic skill)

விதவித்மான கலைகளில் போட்டியிட்ட கலைஞர்களை அநாயாசமாகத் தோல்வியுறச் செய்த ஸ்ரீவிஜயீந்திரரை ஏதாவது ஒரு கலையிலாவது தோல்வியுறச் செய்ய வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு அந்த நல்ல வாய்ப்பிற்காகக் காத்திருந்த த்வேஷிகளுக்கு அகஸ்மாத் சதாராவைச் சேர்ந்த ரத்தினக்கல் வேலையில் நிபுணன் எனப்பெயர் பெற்ற

---

2. आबाल ब्राह्मचारी त्वं हनुमद्भीष्मसन्निभः । त्रेतायां रामदूतस्य लंकायां च हनुमतः ॥ दशास्यसदने स्त्रीणां सुप्तानां च निरिक्षणात् । नांमवद्व्रत लोपश्च ब्रह्मचारीतिवं विदुः ॥ एक एव हनूमांस्तु त्रेतायां वायु नंदनः नियत ब्रह्मचारीतिप्रमीतो रामकिंकरः । तथैव द्वापरे भीष्म प्रथितः कृष्ण किंकरः । अस्मिन् कलियुगे हंसवंसंदर्श नान्यथा ॥ स्पर्शनाद्पजीवानां हनूमानिव निश्चलः । आबाल ब्रह्मचारीति विशेषय निरंतरं ।

- श्री विजयींद्रविजयः ।

3. "एतन्माहात्म्यमतुलं मूलरामार्चनोद्भवं । तथैव ग्रब्वरामार्चापूजा वैभव संभवं । मेने मुनींद्र । सततं मां पालय कृपा कर इत्युक्तः प्रणनामाथ पुनः पुनरुदार धीः । तप्तचक्रांकिताः कृत्वा तान् विप्रान् ब्राह्मणं. वरम्" ॥

- श्री विजयींद्रविजय :

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


விநாயக ராமசந்த்ர ஜோஷி என்பவன் கும்பகோணத்திற்கு வந்தது தங்கள் கார்யத்தைச் சாதித்துக் கொள்ள நல்ல வாய்ப்பாக ஏற்பட்டது. திறமை மிக்க கலைஞனான ஜோஷி அந்த ஜனங்களினால் தூண்டப்பட்டு ஒரு நாள் ஸ்ரீவிஜயீந்திரரைத் தரிசனம் செய்து தனது கலையில் தன்னுடன் போட்டியிட அழைத்தான். ஸ்ரீகளவர்கள் மகிழ்ச்சியுடன் சம்மதித்து மறுநாளிலிருந்து இருவரும் ஏதாவது ஒரு ஆபரணத்தைத் தயாரிக்க வேண்டுமென்று அப்பொழுதிருந்த நகரத்தின் முக்யஸ்தர்கள், ரத்தினக்கல் வியாபாரிகள், திறமையுள்ள பொற்கொல்லர்கள் இவர்கள் முன்னிலையில் உத்தமக் கலைஞர் யாரென்பதை முடிவு செய்யவேண்டும் என்பதாக நிர்ணயிக்கப்பட்டது.

இந்தச் செய்தி ஊருக்குள் பரவிக் கும்பகோணத்தின் முக்கியமான ரத்ன வியாபாரிகள், அவர்களிடம் பணிபுரியும் பொற்கொல்லர்கள், நகரத்தினர் யாவரும் வந்து ஸ்ரீகளவரிடமிருந்து விஷயத்தையறிந்து இருவரும் ஆபரணம் தயாரிக்க வேண்டிய ஸகல ஆயுதங்களையும் வஸதிகளையும் தாங்கள் சேகரித்துக் கொடுத்து ஆபரணம் தய்ாரான பிறகு தீர்ப்புக்கூறுவதாக உறுதியளித்துச் சென்றனர்.

மறுநாள் நடுப்பகலில் எல்லாக் கலைப் பொருள்களுடன் வினாயக ராமசந்த்ர ஜோஷி குறிப்பிட்ட நேரத்தில் ஸ்ரீமடத்திற்கு வந்து சேர்ந்தான். வாக்குறுதியளித்தபடி ரத்தின வியாபாரிகளும், தொழிலாளிகளும், நகரத்தினரும், வந்தனர். நடுவர்கள் விருப்பப்படி முக்யஸ்தரான 10-12 பேர்கள் மாத்திரம் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மடத்திற்கு வெளியே நூற்றுக்கணக்கான ஸ்ரீகளவர்களின் புதிய கைத்திறனைக் (தங்க நகைவேலை) கண்டு ஆனந்திப்பதற்காக வந்திருந்தால் .-. ஸ்ரீயவர்கள் தோல்வியுறுவதைக் கண்டு ஆநந்தமடைய த்வேஷிகள் அங்குமிங்குமாகச் சுற்றிக் கொண்டிருந்தனர். எல்லோருக்கும் ஸ்ரீபாதங்களவரின் மகிமை நன்கு தெரிந்திருந்தாலும் ரத்தின வேலை செய்வதில் அவர் வெற்றியடைய முடியுமா? என்று சந்தேகமுண்டாயிருந்தால் அது இயற்கைதான். மொத்தத்தில் ஜனங்கள் குதூகலத்துடன் மடத்தினருகில் கூடியுள்ளனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மடத்தில் போட்டிக்குத் தேவையான பொருள்கள் தயாராயுள்ளன. ஸ்ரீகளவர் மடத்தின் பண்டக சாலையிலிருந்து வைரம், வைடூர்யம், மற்றும் ரத்தினம், சிவப்புக்கல், பச்சைக்கல் முதலான கற்களும் (Crystal) தங்கமும் வரவழைத்துத் தனக்கு வேண்டியவைகளை வைத்துக் கொண்டு ஜோஷிக்கு வேண்டிய கற்கள் தங்கம் முதலியவைகளைக் கொடுத்தபிறகு ரத்ன வியாபாரிகள் கற்களைப் பதிப்பதற்குத் தேவையான பொருள்களைக் கொண்டுவந்து கொடுப்பதாகச் சொன்னபிறகு இருவரும் தங்கள் வேலையில் இறங்கினர்.

நடுவர் கூட்டத்தினருக்கு ஸ்ரீபாதங்களவர் ஸகலகலா ப்ரவீணர் என்று அநேகமுறை நேரில் அறிந்திருந்தும், ரத்தினம், தங்கம் முதலியவைகளைக் கொண்டு நகைகள் செய்யும் பொற்கொல்லர் கலையில் நிபுணத்வம் உண்டோ என்றும் சந்தேகம் அவர்களைப் பாதித்துக் கொண்டிருந்தது. ஸ்ரீகளவர்கள் அநேக நாட்களாக, ஏன் வருடங்களாக வேலை செய்து அனுபவம் பெற்ற கைதேர்ந்த பொற்கொல்லனைப் போல் ஸூக்ஷ்ம திருஷ்டியுடன் (tactfulness) தங்கத்தை உருக்கி அதைத் தகடாக அடித்ததைக் கண்டு அவர்கள் சந்தேகம் விலகிற்று. அது மாத்திரமா? எல்லையற்ற ஆச்சரியமும் ஸ்ரீகளவர்களிடம் பக்தி, கௌரவமும் உண்டாயின. அவர்களுடன் வந்திருந்த திறமை வாய்ந்த பொற்கொல்லர்களின் முகத்தில் புன்னகை ததும்பியது. ஸ்வாமிகள் வெற்றியடைவாரென்ற விஷயத்தில் தைரியம் உண்டாயிற்று.

விநாயக ராமசந்திர ஜோஷியும் நல்ல மேதாவி உத்தமக் கலைஞன் தான். ஒரு சாதாரண ஸந்நியாஸிகள் நகைகள் செய்து அதுவும் தன்னுடன் போட்டியிட்டு எங்கே வெற்றிபெறப் போகிறார்? என்ற தைரியத்துடன் போட்டியிட வந்திருந்தான் அவ்வளவுதான்! ஸ்ரீகளவர் அனுபவசாலியான கலைஞரைப் போல் காரியத்தில் இறங்கியிருப்பதைக் கண்டு வியப்படைந்தபோதிலும் வெற்றி தனக்கே என்று நம்பி தானும் காரியத்திலீடுபட்டான். சுமார் 3-4 மணி நேரங்கள் வேலையானபிறகு அன்றைய வேலையை நிறுத்திவிட்டு, மறுதினம் தொடருவதென்று தீர்மானித்து இருவரும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

செய்து கொண்டிருக்கும் பொருள்களை வெவ்வேறாக பெட்டிகளில் வைத்துப்பூட்டி அதை நடுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பிறகு ஸ்வாமிகள் மாலை தீபாராதனைக்கு எழுந்தருளினார்.

ஏறக்குறைய ஏழெட்டு நாட்களாக ஸ்ரீபாதங்களவர் மற்றும் ஜோஷி ஒவ்வொரு மத்தியானமும் 3-4 மணிநேரம் நகை செய்யும் காரியத்திலீடுபட்டிருக்கின்றனர். ஜோஷி ஓரிடம் ரத்னபதக்கத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றான். ஸ்ரீகளவரும் ஒரு பதக்கத்தைத்தான் தயாரித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அதன் இறுதிவரை யாருக்கும் தெரியாத வண்ணம் நடுவர்களுக்குச் சொல்லி அதைத் தனியாகப் பெட்டியில் வைத்து அவரிடம் ஒப்படைத்து வருகிறார். பதக்கத்தின் தங்க வேலைப்பாடு செய்து கட்டடம் கட்டி கற்களைப் பதிக்க வேண்டிய கட்டம் வரை வந்துள்ளது. இருவருடைய வேலையும் ஸ்ரீகளவர் இரண்டு மூன்று தினங்களாக . கற்களை வைத்துக் கொண்டு தனிமையிலமர்ந்து ஏதோ விசேஷமாக வேலைப்பாடு செய்து கொண்டிருந்து அன்றையதினம் அதை முடித்து கற்களைப் பதிக்க ஆரம்பித்துள்ளார். பதிக்கும் வேலை முடிந்தால் பதக்கம் செய்து முடித்ததாகும். சீக்கிரமாக பதக்கம் செய்யும் வேலை நடந்துள்ளது.

பதக்கம் தயாரிக்க ஆரம்பமாகிப் பன்னிரண்டாவது நாள் காலையில் பதினொரு மணியிருக்கும்.. இன்று தங்க வேலைப்பாட்டுக் கலைத் திறனில் சிறந்தவர் யார் என்னும் தீர்ப்பு செய்யவேண்டிய நாள். நூற்றுக்கணக்கான ஜனங்கள் ஸ்ரீமடத்தில் சேர்ந்துள்ளனர். ஜோஷி தான் தயாரித்த ரத்ன பதக்கத்திற்கு மெருகேற்றி அதைப் பச்சை வெல்வெட் பெட்டக்த்தில் (சூர்யகாந்திப் பட்டினாலான பெட்டகம்) வைத்து நடுவர்களிடம் ஒப்படைத்தான். ஸ்ரீவிஜயீந்திரர் தான் தயாரித்த பதக்கத்திற்கு மெருகேற்றி நீல (வெல்வெட்) பெட்டகத்தில் வைத்து அதை நடுவர்களிடம் ஒப்புவித்து, "நம் குருபாதரான ஸ்ரீவ்யாஸ முனீந்திரரிடம் நாம் கற்ற 64 கலைகளில் இப்பொழுது தான் . போட்டியிட்டு ஸ்ரீஹரியின் . கிருபையினால் வெற்றியடைந்துள்ளது நீங்கள் அறிந்ததே. ஆனால் 64 கலைகளின் விஷயத்தில் அநேக கலைகளில் நமது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


திறமையைக் காட்டும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இப்பொழுது பகவதனுக்ரஹத்தினால் தங்க வேலைப்பாட்டுக் கலையில் எமது திறமையைக் காண்பிக்க இந்த ஜோஷியவரின் அழைப்பு நமக்கு வாய்ப்புக் கொடுத்துள்ளது. அதற்காக நாம் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் இருவர்களின் கலையின் நிலைமையை இந்த நகைகளைப் பரீஷித்துத் தீர்மானம் செய்து பாரபக்ஷமற்ற எண்ணத்துடன் தீர்ப்புக் கூற வேண்டும் என்று சொல்லி சபா மண்டபத்திற்கு எழுந்தருளினார்.

ஸ்ரீமடத்தின் சபா மண்டபம் ஜனத்திரளால் நிரம்பி வழிந்துள்ளது. ஸ்ரீகளவருக்காகத் தயாராயுள்ள பீடத்தில் அவர் அமர்ந்தபிறகு எல்லோரும் ஸ்வாமிகளுக்கு வணங்கி அமர்ந்தனர். நடுவர்களும், ரத்ன வியாபாரிகளும் திறமைவாய்ந்த பொற்கொல்லரும், நகரத்தினரும், பத்து பதினைந்துபேர் தனிமையில் இருவரும் தயாரித்த பதக்கங்களை நன்றாகப் பரீக்ஷைசெய்து சபா மண்டபத்திற்கு வந்து அங்கு ஸ்ரீபாதங்களவருக்கெதிரில் தயாராக வைக்கப்பட்டிருந்த பீடத்தின் மீது இருவரும் தயாரித்த பதக்கங்களை எல்லோரும் காணும்படி வைத்துவிட்டு அமர்ந்தனர்.

பிறகு ப்ரமுகரான ரத்தின வியாபாரியொருவர் எழுந்து நின்று, "மஹா ஜனங்களே! பூஜ்ய ஸ்ரீபாதங்களவரும் மற்றும் ஜோஷியவரும் செய்துள்ள நவரத்ன பதக்கங்களில் உத்தமமானது எதுவென்பதைத் தீர்மானம் செய்யும் பொறுப்பு எங்கள் மீது விழுந்துள்ளது. ஏறக்குறைய 12 நாட்களாக பத்து பதினைந்து நடுவர்களின் எதிரில் ஸ்ரீகளவரும் ஜோஷியவ்ரும் இந்த நகை தயாரிக்கும் கார்யத்தில் ஈடுபட்டு இன்றைய தினம் வேலையை முடித்து தீர்ப்புக்காக எங்களிடம் ஒப்புவித்துள்ளார்கள். நாங்கள் அவைகளை நல்லமுறையில் பரீக்ஷித்து இப்பொழுது தீர்ப்புக்கூறத் தயாராக வந்துள்ளோம். இருவரும் தயாரித்த பதக்கங்களில் ஒன்று மிகமிக உத்தமமாயுள்ளது. கலைத்திறன் நிரம்பியுள்ள அந்த அற்புதமான பதக்கத்தை நீங்கள் யாவரும் பார்த்து ஆனந்தப்படுவீர்கள்.

"கலாபிமானிகளே, விநாயக ராமசந்த்ர ஜோஷியவர்கள் ஸதாராவைச் சேர்ந்த திறமை வாய்ந்த நவரத்ன கலைஞர். 30 வருஷங்களாக அநேக தங்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

நகைகளையும், ரத்ன நகைகளையும் தயாரித்து மிகப் பெயர் பெற்றிருக்கிறார். ஒவ்வொரு நாளும் அதுவே அவருடைய தொழிற் திறமையானதால் ரத்னபதக்கத்தைத் தயாரித்ததில் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் ஏதுமில்லை. ஆனால் பூஜ்ய ஸ்ரீபாதங்களவர்கள் அனுபவமுதிர்ந்த தொழிலாளியைப்போல் உத்தமமான பதக்கத்தைத் தயாரித்தது மாத்திரம் உண்மையில் ஆச்சரியகர மானதுதான். அது மாத்திரமா? இருவரும் தயாரித்த தங்கப் பதக்கங்களில் ஸ்ரீபாதங்களவருடையதே அதி உத்தமமானதாயுள்ளது என்று தெரிவிப்பது பரம மகிழ்ச்சிக்குரிய விஷயமாகியுள்ளது. ஸ்ரீகளவர்கள் அதைத் தயாரிப்பதில் காண்பித்துள்ள திறமை (talent)களைப் பற்றிச் சொல்வதற்கு உசிதமான வார்த்தைகளே எனக்குக் கிடைக்கவில்லை. அந்தப் பதக்கம் ஸாதாரணமான பூலோகவாஸியினால் தயாரிக்க முடியாத வகையில் அவ்வளவு மனோகரமாயுள்ளது. மேலும் கலைத்திறமை நிரம்பியுள்ளதாகவுமுள்ளது. அற்புதமான அந்தப் பதக்கத்தை தேவ சிற்பிதான் தயாரிக்க வல்லவன் என்று தான் நான் சொல்ல முடியும். ஸ்ரீகளவரின் தங்கவேலைப்பாட்டுத் திறமையைக் கண்டு நாங்கள் ஆச்சரியப்படுகிறோம். எங்கள் அனுபவசாலியும் கைதேர்ந்த தொழிலாளிகளும், "இந்தவிதமான பதக்கம் தயாரிக்கும் திறமை காணவே முடியாது" என்று மனமாரப் புகழ்ந்துள்ளனர்! ஸ்ரீகளவர்கள் தயாரித்துள்ள இந்தப்பதக்கம் வெறும் ரத்தினங்கள் பதித்த பதக்கம் மாத்திரமல்ல; அதில் சுவாமிகள் பகவந்தனையே நமது கண்ணெதிரில் நிறுத்திவிட்டார்! தமது ஆராத்ய தேவதையான ஸ்ரீராமசந்திர, சீதா, லக்ஷ்மண ஸ்வரூபத்தைச் சிகப்புக் கற்களால் பதித்துவிட்டார்!

ஜனங்கள் மகிழ்ச்சி மிகுதியால் ஸ்ரீயவர்களைப் போற்றி ஜயகோஷம் செய்து கொண்டிருக்கையில் ரத்ன வியாபாரிகள் இவ்வாறு சொன்னார்கள். "மூன்று நான்கு தினங்களுக்குமுன் ஸ்ரீகளவர்கள் கற்களுடன் தனிமையாக வேலை செய்து கொண்டிருந்தார். அது என்ன சொல்லுவது என்பது எங்களுக்குப் புரியவில்லை. ஸ்ரீராம, சீதா, லக்ஷ்மண விக்ரஹங்களைத் தயாரிக்கக் கற்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தாரென்பது இந்தப் பதக்கத்தைப் பார்த்தபிறகு தான் எங்களுக்கே புரிந்தது.

In Public Domain, Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மஹா மகிமையுள்ள ஸ்வாமிகள் தமது தெய்வீக சக்தியை ரத்னாபரணம் தயார் செய்யும் திறமையை ஸ்ரீராமபதக்கத்தின் மூலமாக நமக்குக் காண்பித்துக் கொடுத்திருக்கிறார். ஸ்ரீகளவர்களின் இந்தக்கலைச் சின்னம் அசாதாரணமானது. உத்தம தங்க ஆபரணக்கலைஞரான விநாயக ராமசந்த்ர ஜோஷியவர்கள் மஹாமஹிமரான ஸ்ரீகளவர்களால் தோல்வியடைந்தது அவருக்கு அது ஒரு பூஷணம் (ஆபரணமே தவிர கௌரவக் குறைவென்று என்று நாங்கள் பாவிக்கவில்லை. ஜோஷியவர்களின் கலாக்ருதியைப் பார்த்து அவரே எங்கள் வார்த்தைகளை ஆமோதிப்பாரென்று எங்களது உறுதியான நம்பிக்கை. எவ்வாறாயினும் ஸ்ரீகளவர் இந்தக்கலையிலும் வெற்றியடைந்து தமது "அஜேயர்" என்னும் விருதை நிரூபித்துவிட்டாரென்று சொல்லி மகிழ்ச்சியடைகிறோம். ஸ்ரீகளவரை குருவாகப் பெற்ற நாங்களே போற்றத்தகுந்தவர்கள் என்று சொல்லி அமர்ந்தனர்.

விநாயக ராமசந்த்ர ஜோஷி ஸ்ரீகளவர்கள் தயாரித்த ஸ்ரீராமபதக்கத்தைக் கையிலேந்திப் பார்வையிட ஆரம்பித்தான். அவன் முகத்தில் புன்னகை ஒளிவீசிற்று. கண்களில் நீர் ததும்பியது. ஜோஷி நா தழுதழுத்த குரலில், "குருபாதரே, தமக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்; உண்மை, நடுவர்கள் சொன்னபடி உமது இந்தப்பதக்கம் அபூர்வமாயுள்ளது. நிகரற்றதாயுமுள்ளது! மேலும் கலைத்திறன் பூர்ணமாக உள்ளது. தெய்வீகமான இந்த ஆபரணத்தைக் கண்டு நான் வியப்படைந்துள்ளேன். தம்மைப் போன்ற மஹானுபாவருடன் போட்டியிட்டுத் தோல்வியுற்றாலும், அது எனக்கு உண்மையாக ஒரு கௌரவமென்றே நான் கருதுகிறேன். உமது அனுக்ரஹம் இந்தப்பாமரன் மீது இருக்கவேண்டுமென்று நமது போட்டியின் அறிகுறியாகத் தாங்கள் இந்த இரு பதக்கங்களையும் தினந்தோறும் ஸ்ரீமூலராமனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்பது எனது கோரிக்கை" என்று சொல்லி வணங்கினான்.

ஸ்வாமிகள் ஜோஷிக்கு விசேஷ மரியாதை செய்து, பல மந்த்ராக்ஷதை அளித்து அனுக்ரஹித்து, "ஜோஷியவர்களே, உமது ப்ரார்த்தனைப்படியே இந்த இரண்டு பதக்கங்களையும் இன்றே சுவாமிக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



அர்ப்பிக்கிறோம்!* என்று சொல்லி மஹா ஸமஸ்தான பூஜைக்கு எழுந்தருளினார். ஜனங்கள் ஸ்ரீயவர்கள் தயாரித்த ஸ்ரீராமபதக்கத்தைப் பார்த்து மகிழ்ந்து ஸ்ரீகளவரின் மஹிமையைப் புகழ்ந்து தத்தம் இல்லங்களுக்குச் சென்றனர். பாவம், ஸ்ரீயவர்களின் தோல்வியைக் காணத்தவித்துக் கொண்டிருந்த த்வேஷிகள் ஏமாந்து போய்த் திரும்பினர்.

## 36. ஸாம்ராஜ்யத்தின் நலம் விரும்புபவர்:

கர்நாடக ஸாம்ராஜ்யத்தின் நலம் கோருபவரும்; தனது குருவர்யரும் ஆப்தருமான ஸ்ரீவிஜயீந்திரரை, ஸாம்ராஜ்யத்தின் வளர்ச்சியின் பாதையில் முட்கள் முளைத்த பொழுதெல்லாம் (அதாவது ஆபத்து ஏற்படும் பொழுதெல்லாம்) தன்னுடன் அழைத்துக் கொண்டு அல்லது தானே அவரை நேரில் போய்ப்பார்த்து, அவருடன் நட்பு கொண்டு அவருடைய யோசனைகளைக் கேட்டு, அவர் காண்பித்த சன்மார்க்கத்தில், - அவரது யோசனையின்படி நடந்து வந்துள்ளான் மருமகன் ராம்ராஜர். அதுபோலவே அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததினால் தேசத்தின் நன்மைக்காக அவருடைய கிதோபதேசங்களைப்பெற விஜயநகரத்திற்கு அழைப்பு விடுத்துத் தனது பிரதிநிதியைச் சிப்பந்திகளுடன் ஸ்ரீகளவர்களை அழைத்துவர, வித்யாபீடத்தின் வருஷாந்திர விழா சமயத்தில் வந்து சேரும்படி விக்ஞாபனக் கடிதத்துடன் அனுப்பினான்.

சென்ற மூன்று நாட்களாக கும்பகோணத்தில் ஸம்ஸ்கிருத வித்யாபீடத்தின் 12வது வருடாந்திர விழா மிக்க வைபவத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாரத நாட்டின் பூபிரதக்ஷிணைக்காக எழுந்தருளியிருந்த ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் அதே சமயத்தில் பரிவாரத்துடன் வெற்றியுடன் தீர்த்தயாத்திரையை முடித்துக் கொண்டு, அங்கு வந்திருந்ததினால், உற்சவத்திற்கு விசேஷ களை கட்டியது. ஏறக்குறைய ஏழெட்டு வருட காலம்.

*ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் தயாரித்த ஸ்ரீராம பதக்கம் மற்றும் ஜோஷி தயாரித்த ரத்ன பதக்கங்கள் இப்பொழுது கூட ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்திலுள்ளது. ஆயிரக்கணக்கான ஜனங்கள், பக்தர்கள், இன்றைக்கும் விசேஷ தினங்களில் அந்தப் பதக்கங்களைக் கண்டு மகிழ்கின்றனர். ஆசிரியர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


விலகியிருந்த குரு-சிஷ்யர்களின் அந்த மறு சந்திப்பானது காணவேண்டிய காட்சி! இரண்டு ஸ்ரீபாதங்களவரும் வெகுகாலமான பிரிவைப் போக்கிப் பேரானந்தமடைந்தனர். பரஸ்பரம் பேச்சுகள், நிகழ்ச்சிகளைப் பற்றி சர்ச்சை செய்து மகிழ்ச்சியடைந்து குரு-சிஷ்யர்கள் உற்சாகத்தோடு உற்சவத்தில் கலந்து கொண்டு எல்லோரையும் மகிழ்வித்தனர். வருஷாந்திர உற்சவத்தின் அங்கமான பேச்சுப்போட்டி, வெவ்வேறு சாஸ்திரங்களில் பண்டிதர்களின் ஆலோசனை கோஷ்டி, கருத்தரங்குகள், கவியரங்கு, மாணவரின் மாநாடு, எழுத்தாளர்களின் மாநாடு, உடனடிக் கவிதை இயற்றும் போட்டி, அந்த்யாக்ஷரிப் போட்டி, (அதாவது, ஏதாவது ஒரு ச்லோகம் அல்லது கவிதையின் கடைசி எழுத்திலிருந்து ஆரம்பிக்கும் அடுத்த கவிதையைச் சரியாகச் சொல்லும் வித்யா), ஸமஸ்கிருதத்தில் உரை நிகழ்த்தும் போட்டி, சிறந்த ஸமஸ்கிருத நாடகப் போட்டி; ப்ரஹஸநாபிநயப் போட்டி (அதாவது காவ்யமய, ஹாஸ்யரஸம் நிறைந்த சிறுநாடகப் போட்டி) சங்கீதம், ஹரிகதை, பண்டிதர்களின் உரை நிகழ்த்தும் நிகழ்ச்சி, வெகு விமரிசையாக நிறைவேறி, வெவ்வேறு சாஸ்திரங்களின் பரீக்ஷையில் தேறினவர்களுக்கு வித்வான் முதலிய பட்டமளிப்பு விழா, சம்பாவனை (ரொக்கப் பரிசு) மூத்த பண்டிதர்களுக்குப் புகழாரம், சம்பாவனை அளிப்பது முதலிய நிகழ்ச்சிகள் நிறைவேறின.

உற்சவம் முடியும் சமயம் விஜயநகர ராஜ்யத்தின் பிரதிநிதி வந்து சக்ரவர்த்தி ஸதாசிவராயர், ஸாம்ராஜ்ய மஹாமந்திரி ராமராயரும் அனுப்பின வித்யாபீட வருடாந்திர திருவிழாச் செய்தி-காணிக்கைகள் ஸ்ரீகளவர்களிடம் சமர்ப்பித்தார். தஞ்சாவூராசன் சவ்வப்ப நாயகரின் ராஜகுமாரன் அச்யுதப்ப நாயகனுடன் வந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருக்கு ராஜகுமாரன் அச்யுதப்ப நாயகனினால் அநேக கிராமங்களைத் தானம் செய்வித்து தாமிர சாஸனம் எழுதிக்கொடுத்து க்ருதார்த்தனானான். *

---

* Etigraphica INDICA, Vol. XIII

Mysore Arch. Report, 1947

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருடைய மற்றும் விஜயீந்திர தீர்த்தருடைய அனுக்ரஹ பாஷணங்களுடன் (அருளுரைகளுடன்) உற்சவம் முற்றுப்பெற்றது.

மறுதினம் குரு-சிஷ்யர்கள் தனிமையில் சில ஆப்தர்களுடன் கூடி லோகா பிராம வார்த்தைகள் (ஜனங்கள், சமூக நன்மை) பேசிக்கொண்டு அமர்ந்திருக்கையில் விஜயநகரத்தின் பிரதிநிதி வந்து நமஸ்கரித்து ராமராஜரனுப்பின விக்ஞாபனக் கடிதத்தை ஸ்ரீயவர்களுக்கு அர்ப்பித்தான். விஜயீந்திரர் கடிதத்தைப் படித்துப் பார்த்து குருபாதருக்கு அளித்தார். ஸுரேந்திரர் கடிதத்தைப் படித்து இவ்வாறு சொன்னார். "இது எப்படிப்பட்ட விதியின் விளையாட்டு! குரு-சிஷ்யர்கள் சிலகாலமாவது ஒன்றாயிருப்பது விதிக்கு விருப்பமில்லையென்று தோன்றுகிறது. பெரும்பாலும் இந்த குரு-சிஷ்யர் அன்பைக்கண்டு சஹிக்காமல் இடையிடையே குரு-சிஷ்யர்களைப் பிரித்து விடுவதுதானோ விதியென்று சொல்லப்படுவது! உம்! சிஷ்யோத்தமருக்கு என்னமோ பட்டத்திற்கு வரப்போகும் சக்ரவர்த்தியினிடமிருந்து அழைப்பு வேறே வந்துள்ளது! (தனது அன்பை வெளிப்படுத்துகிறார்) எமது க்ஷேத்திர யாத்திரையின் சந்தர்ப்பத்தில் ஏழெட்டு வருடகாலம் வித்யாபீடத்தின் பொறுப்பையேற்றுப் பாட ப்ரவசனம், பூஜாராதனை, வாக்யார்த்தம், பரவாதி திக்விஜயம், க்ரந்தமியற்றுதல், கலைப்போட்டிகள் முதலிய தொடர்ச்சியான நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு, இரவும் பகலும் உழைத்துள்ள உமக்கு நாம் வந்ததினால் சொற்பகாலமாவது ஓய்வு கிடைக்கும்படி செய்ய யோசித்துள்ளோம். ஆனால் பகவத் ஸங்கல்பம் வேறாக உள்ளது. அஸாதாரணக் காரியங்களைச் செய்வதற்கென்றே அவதரித்த சிஷ்யோத்தமருக்கு ஓய்வுக்கு இடமெங்கே! ஸ்ரீஹரியின் சித்தம்! ராமராஜரின் கடிதத்தைக் கவனித்தால் இப்பொழுது தலைநகரத்தில் நீங்கள் இருக்கவேண்டியது அவசியமாயுள்ளது. இன்றைய தக்ஷிண பாரதத்தை நுட்பமாகப் பரிசீலித்தால் ஸனாதன தர்ம கலாச்சார ஸத்பரம்பரைக்குப் பெரிய தாக்குதல் ஏற்படுமோ என்று கவலைப்பட வேண்டியுள்ளது. பரமாத்மாவின் விருப்பப்படி யாவும் நடைபெறுமாயினும், தேச

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நலனுக்காக ஸமாதான தர்மத்தை ரக்ஷிப்பதற்காக நமது கடமை மிகப்பெரியதாக உள்ளது என்பதை மறக்க முடியாது.

"அன்புள்ள விஜயீந்திரரே, தக்ஷிண பாரதத்தின் மாத்திரமல்ல, ஸமஸ்த பாரதத்தின் எதிர் காலம் இன்று கர்நாடக ஸாம்ராஜ்யத்தின் நாகரிகத்தைப் பொறுத்துள்ளது. நீங்கள் இப்பொழுது தேசத்தின் நலனுக்காகத் தலைநகரத்திற்குப் புறப்படுவது தவிர்க்க முடியாததாகிறது. கவலையின்றி நீங்கள் சென்று வாருங்கள். இங்கு வித்யாபீடத்தின் பொறுப்பை நான் சமாளித்துக் கொள்ளுகிறேன்!

ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் ஒவ்வொரு வாக்கியமும் விஜயீந்திரருக்குப் புதிய உற்சாகம் ஊட்டியது, குருபாதரின் சொற்களின் உண்மையையறிந்து ராஜப்ரதிநிதிக்கு விஜயநகரத்திற்கு வருவதாக உறுதியளித்தார்.

ஒரு சுபமுகூர்த்தத்தில் குருவர்யரின் அனுமதி பெற்று அவரிடமிருந்து விடைபெற்று சிறிய பரிவாரத்துடன் ராஜ ப்ரதிநிதியுடன் புறப்பட்டு சீக்கிரமாகவே பயணத்தை மேற்கொண்டு விஜயநகரத்திற்கு எழுந்தருளினார். அங்கு ஸ்ரீபாதங்களவர்களுக்கு என்றும் கண்டிராத வரவேற்பளித்து, மரியாதை செய்தான், ராமராஜர், ஸ்ரீபாதர் ராமராஜர் ஏற்பாடு செய்திருந்த அரண்மனையில் முகாம் செய்தார். ஒவ்வொரு நாளும் அநேக பண்டிதர்கள், நகரத்தார்கள், ராஜகாரிய நிபுணர்கள் வந்து ஸ்ரீபாதரைத் தரிசித்துப்போக ஆரம்பித்தனர்.

ஸ்ரீகளவர் தலைநகருக்கு வந்த 8-10 தினங்களான பிறகு ஒருநாள் ராமராஜர் ஸ்ரீபாதரிடம் வந்து வெகுநேரம் பேசி சாம்ராஜ்யத்தின் தற்பொழுதுள்ள நிலைமையைத் தெரிவித்து," குருச்ரேஷ்டரே, சாம்ராஜ்யத்தின் சூழ்நிலை இப்பொழுது ஒன்றிரண்டு வருடங்களாக மோசமாகிக் கொண்டு வருகிறது. கன்னட நாட்டின் நன்றிமிக்க ஸேவகர்கள், சாம்ராஜ்யத்தின், மண்டலாதிபதிகள், சேனாதிபதிகள், சேனாவீரர்கள், மற்றும் ராஜ்யத்தின் ப்ரமுக அரசாங்க அதிகாரிகள் நகரவாஸிகளிலும் இந்நாட்களில் ராஜ்யத்தின் நலனில் அக்கறை குறைந்து கொண்டு வந்துள்ளது. என்னிடத்திலும் அவர்களுக்கு,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

முன்பு இருந்த நம்பிக்கை, நன்றி, சிரத்தை குறைந்து கொண்டு வருவதைப்போல் காணுகிறது. நானும் சக்ரவர்த்தி ஸதாசிவராயரைக் கைப்பொம்மை போல் ஆட்டிவைக்கிறேன் என்பதாகக் கூச்சல்கள் ஆங்காங்கு கேட்கின்றன. ஸாம்ராஜ்யத்தின் நலன் விரும்புகிறவர்களில் சிலருக்கு என்னிடம் நல்ல உறவு இல்லை. அதற்கு என்ன காரணமென்பது தெரியாமலிருக்கிறது. ராஜ்யத்தின் நலனுக்கு எதிரிகள் அதிகரித்து வருகின்றனர்: கன்னட நாட்டின் உதயத்திலிருந்தே எதிரிகள் உள்ளனர். அவர்கள் இப்பொழுதுள்ள சூழ்நிலையைத் தங்களுக்குச்சாதகமாக்கிக் கொண்டுவருகின்றனர். இதனால் சாம்ராஜ்யத்திற்குத் தீமையுண்டாவது உறுதி இப்பொழுது ஒற்றுமை, நம்பிக்கை, ஒத்துழைப்பு இவை தவிர்க்க முடியாதவை. மிகமிக அவசியம். இந்த மாபெரும் காரியத்தைச் சாதித்து தேசத்தின் நாகரீகத்தை நிலைநிறுத்தத் தாம் ஒருவரே திறமைசாலிகள். ஆகையால் தான் தங்களை வரவழைத்துச் சரணடைந்துள்ளேன். கன்னட நாட்டிற்கே நன்மை உண்டாகுமாறு தாங்கள் வேண்டிய திட்டம் தீட்டுமாறு ப்ரார்த்திக்கிறேன், என்று மிக அக்கறையுடன் சொன்னான்.

ராமராயனின் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டு விஜயீந்திரருக்கு மிக்க வருத்தமேற்பட்டது. ராமராயரை இனிமையான வார்த்தைகளினால் தேற்றி, ஸாம்ராஜ்யத்தின் நலனின் அக்கறையுள்ளவர்களைக் கூட்டி அவர்கள் எல்லோருக்கும் உபதேசம் செய்து தேச நலனைக் காப்பாற்ற தாம் முயற்சி செய்வதாக உறுதியளித்தார். ராமராயர் சீக்கிரத்தில் அரசாங்க அதிகாரிகளையும், நலனை விரும்புவோரையும் கொண்ட சபையைக் கூட்டுவதாகத் தெரிவித்துச் சென்றான்.

ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகளின் மடத்தில் விஜயநகர ப்ரமுக ராஜாங்க அதிகாரிகளின் சபை கூடியுள்ளது. ஸ்ரீவிஜயீந்திரர் இந்த ரகசிய சபையைக் கூட்டியதன் காரணத்தை அறிய ஜனங்கள் மிக ஆவலாயுள்ளனர்.

ஸ்ரீபாதங்களவர் ராமராயரின் முன்னிலையில் சாம்ராஜ்யத்தின் நலனை விரும்புபவரெல்லோரையும் பார்த்து, "கன்னட நாட்டின் வீரர்களே, மற்றும் நலன் காக்கும் நல்லோர்களே, சாம்ராஜ்ய மேலதிகாரியான

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ராமராயரினால் இவ்விடத்திய நிலைமையை அறிந்து நாட்டின் நலத்தின் உத்தேசத்தினால் உங்கள் எல்லோருக்கும் நமது ஹிதோபதேசங்களைக் கூறுவதற்காக உங்கள் யாவரையும் இங்கு அழைத்துள்ளோம். எமது பேச்சுக்களை ஜாக்கிரதையான மனதுடன் கவனமாகக் கேட்டு நாட்டின் மறுமலர்ச்சிப் பணிகளில் பங்கு கொண்டு கீர்த்தியடையச் செய்யவேண்டும்" என்று சொல்லி பிறகு ஸ்ரீபாதங்களவர்கள் கன்னட ஸாம்ராஜ்யத்தின் மகத்துவம், அதைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இவற்றைவிவரித்து, சமாதன தர்ம, ஸத்ஸம்ப்ரதாயம், கர்நாடகத்தின் பெருமை வாய்ந்த பரம்பரை நிலைநின்று தேசத்திற்கு சுபமும் சுபிக்ஷமும் ஆகவேண்டுமானால் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமை, தியாகங்களின் அறிவை எல்லோர் மனதிலும் பதியும்படி செய்து பிறகு மிக்க அக்கரையுடன் இவ்வாறு சொன்னார். "தர்மசீலரான கன்னட வீராதி வீரர்களே, எந்த ஒரு நாடும் நல்ல முறையில் வாழ வேண்டுமென்றால், நாட்டின் கலாச்சாரம், தர்மம், நாகரீகம், கலை, தத்வம், ஸம்ப்ரதாயங்கள் நிரந்தரமாக நிலைக்க வைத்து ஒளிபெறச் செய்து ஜனங்களின் ஸர்வவிதமான முன்னேற்றத்தையும் அடையச் செய்து, ஜகத்தில் மேன்மையை அடைய வேண்டுமானால் மாடுகள், பசுக்கள் இவைகளைக் காப்பாற்றுதல், பண்டிதர்கள் பாமரர்கள், வீரதீரர்களின் ஸேவை, தேசபக்தி, தேசத்திற்காகத் தியாகம் மிகமிக அவசியம். உள்நாட்டுக் கலகம் இருக்கவே கூடாது. பரஸ்பரம் அன்பு, சகோதர பாவம், கீழ்ப்படிதல் அத்தியாவசியமானவை. புரட்சி மனப்பான்மை அழிந்து சாந்தி, அமைதி, ஜீவனம் லக்ஷியமாக இருக்க வேண்டும். நாட்டின் ஆதாரத் தூண்கள் எனப்படும். ப்ரமுக அரசு அதிகாரிகள், சேனாதிபதி, மந்திரிசபையினரும் ப்ரஜைகளும் எந்தக்காரணத்தினால் உண்டாயிருக்கும் மனஸ்தாபத்தினால் த்வேஷம், வெறுப்பு இவைகளைத் துறந்து தேசரக்ஷணத்திற்கு தேசத்தின் முன்னேற்றத்திற்காகத் தோளோடு தோள் கொடுத்துப் போராட வேண்டும், உழைக்க வேண்டும். அதாவது அந்த நாடு தங்கத்தின் இருப்பிடமாகி, ஜகத்தில் ஆதர்சமான (Model) ராஜ்யமென்று கருதப்பட்டு கீர்த்தியடைந்தது என்ற இந்த நோக்கத்துடன் இதுவரை உங்களுக்குள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பரஸ்பரம் தோன்றியிருக்கும் மனஸ்தாபங்களை விட்டு நீங்கள் யாவரும் ஸாம்ராஜ்ய நிர்வாகியான ராமராஜருக்கு அன்புக்கரங்களைக் கொடுத்து ஸகலவிதத்திலும் பக்கபலமாக இருந்து தேசத்தின் நன்மையைச் சாதிக்க வேண்டுமென்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

தேசம் நமது வசம் நிலைநிற்பதற்காக நீங்கள் பணிவுடன் உழைக்காவிடில் இன்னும் அசட்டையாக இருந்தால் ஸாம்ராஜ்யத்திற்குத் தீமை ஏற்படலாம். கன்னட சாம்ராஜ்யத்தின் மண்டல அதிகாரிகளாக இருந்து உள்ளுக்குள்ளேயே வெறுப்பு கொண்டிருக்கும் மதுரையின் பாண்டியர்கள், சோழர்கள், காஞ்சியின் அரசரும், கேரள-திருவநந்தபுர அதிபதிகளும் மற்றும் ஹிந்து மதத்தின் கடும் விரோதிகளான பாமினி ஸுல்தானும் ஏதாவது ஒருவகையில் சுதந்திரராய் விஜயநகர சாம்ராஜ்யத்தின் அழிவிற்காக ஆத்திரமும் அவசரப்பட்டுக் கொண்டிருக்கின்றனரென்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. சில வருடங்களுக்கு முன்பு பாண்டிய, சோழ, திருவாங்கூர் அரசர்களுக்கு நம்மவரான மங்கமநாயகரைப் போன்ற தேசத்ரோகிகள், தேசவிரோதிகளுக்குப் பக்கபலமாக இருந்து சாம்ராஜ்யத்தின் அமைதியைக் கலைத்துப் புரட்சியை ஏற்படுத்தியபொழுது ஒருபக்கம் ராமராஜ வெங்கடாத்ரியும், வேறொரிடத்தில் தஞ்சாவூரின் சவ்வப்பநாயகரும்-மங்கம நாயகரின் மகனான விச்வநாத நாயகரே முதலானோர் தேசபக்தரான வீரபுங்கவர்கள் எவ்வளவு உழைத்து கலவரத்தை ஒடுக்கி விஜயநகரத்தின் கீர்த்தியையும் கௌரவத்தையும் காப்பாற்றவேண்டி வந்தது என்பதை நீங்கள் யாவரும் இவ்வளவு சீக்கிரம் மறந்திருக்க மாட்டீர்கள். ப்ரதாபருத்திரதேவனின் வம்சத்தினர் தனக்கேற்பட்ட தோல்வியின் அவமானத்தைப் போக்கிக் கொள்ள இன்னும் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆதில்ஷா முதலான சுல்தான்களின் விஷயமென்னவோ உங்களுக்கு அன்றாடம் அனுபவத்திற்கு வந்துள்ள விஷயம். இப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலையில் கலகம், புரட்சி இவை புகைய ஆரம்பித்தால், பரஸ்பர மனஸ்தாபம் ஏற்படுமானால் கன்னட மாதாவின் கதியென்ன? இன்று நீங்கள் யாவரும் ஒன்று கூடி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ராமராஜருக்குப் பக்கபலமாக நின்று தேசத்தைக் காப்பாற்றும் மங்கள காரியத்தில் பங்கு கொள்ள வேண்டும். இல்லாவிடில்,... அப்பப்பா! எதிர்காலத்தை நினைத்தால் எமது உடல் நடுங்குகிறது! ஸ்ரீவித்யாரண்யர் பொன் நதியைப் பெருக்கிப் பாயவைத்து ஸ்தாபித்த ஸ்ரீவ்யாஸ ப்ரபுகிருஷ்ண தேவராயருக்குத் தனது தவத்தையே தாரைவார்த்து எல்லா விதங்களிலும் முன்னேற்றத்தின் சிகரத்தை எட்டி விளங்கச் செய்த நமது கர்நாடக சாம்ராஜ்யம் தன் பெயரைச் சொல்லிக் கொள்ளக்கூட முடியாதநிலைமை வந்துவிடும்!! ஸ்ரீஹரி-பம்பாபதி அந்தநிலைமையை உண்டாக்காமலிருக்கட்டும். நமது இந்த ஹிதோபதேசத்தை நன்றாகப் பரிசீலித்து உங்களுடைய கடமை என்ன என்பது மனதில் படுகிறதோ அதுபோல் நடந்து கொள்ளுங்கள். கன்னட சாம்ராஜ்யத்தின் கீர்த்திக்கொடிக்குக் களங்கம் வராமல் நடந்து கொள்ளவும், உங்களுக்கு ஸ்ரீஹரி, ஸ்ரீவிருபாக்ஷஸ்வாமி மங்களமுண்டாக்கட்டும்.

ஸ்ரீயவர்களின் ஹிதோபதேசம் எல்லோர் மனதிலும் பதிந்து புதிய உணர்ச்சியைத் தோற்றுவித்தது. ஸ்ரீகளவர்கள் உபதேசம் கன்னட வீரரர்களின் மெய்சிலிர்க்க வைத்தது. தேசபக்தியினால் உடல்பூரித்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கி எல்லோரும் ஸ்ரீகளவர்களுக்குத் தலைவணங்கி ராமராஜருக்குப் பக்கபலமாக இருந்து ஸாம்ராஜ்யத்திற்காக உயிரையே அர்ப்பணிக்கத் தாங்கள் தயாராயிருப்பதாக உறுதி மொழியளித்து ஸ்ரீகளவர்களின் ஆசிபெற்றுச் சென்றனர்.

ராமராஜர் எது முடியாத காரியமென்று நினைத்திருந்தானோ, அதை ஸ்ரீகளவர் அதை வெற்றிகரமாகவும் வெகு எளிதிலும் நிறைவேற்றி ஒரு அற்புதத்தையே நிகழ்த்திவிட்டார் என்று இதயபூர்வமாக குருபாதருக்குத் தனது நன்றியை அர்ப்பித்து உத்திரவு பெற்று அரண்மனைக்கு ஏகினான்.

ஸ்ரீவிஜயீந்திரர் தர்மாபிமானிகளுடைய மற்றும் சக்ரவர்த்தி சதாசிவராயருடைய மற்றும் ராமராயருடைய ப்ரார்த்தனைக்கிணங்கி விஜயநகரத்தில் ஏறக்குறைய இரண்டு வருடங்கள் தங்கி ஒவ்வொரு நாளும் தேவ பூஜாராதனை, தார்மீக ப்ரவசனங்கள் தேசநலத்திற்காக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மந்திராலோசனை முதலிய காரியங்களிலீடுபட்டு நாட்டின் முன்னேற்றத்திற்காக தமது தவம், கலை முதலியவற்றைத் தாரைவார்த்து ஸகலரின் கௌரவத்திற்கும் மரியாதைக்கும் பாத்திரரானார்.

## 37. ராமராஜருக்கு ஹிதோபதேசமும் மற்றும் விஜய நகரத்திலிருந்து புறப்பட்டுச் செல்லுதல்:

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் கர்நாடக ஸாம்ராஜ்யத்திற்குச் செய்த உபகாரம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் 10-20 வருஷங்களின் சாம்ராஜ்யத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பரிசீலிப்பது அவசியமானது.

சக்ரவர்த்தி கிருஷ்ணதேவராயருக்குப்பிறகு ஸாம்ராஜ்ய பட்டத்திற்காக நடந்த கலவரங்கள் கபட சூழ்ச்சிகள், உட்பூசல்கள், தக்ஷிண தேசத்தின் எல்லையான சிங்களம், திருவாங்கூர், மதுரை, கேரளநாடுகளின் மண்டலாதிபதிகள், சிற்றரசர்களுடைய புரட்சிக்கலகங்கள், சென்னையில் பரங்கிகள், தெற்கில் போர்ச்சுக்கீஸியர்கள், பீஜப்பூர், கோல்கொண்டா, அகமத் நகரத்தின் நிஜாம்ஷா, முதலான சுல்தான்கள், பலமடைந்து வந்து கொண்டிருக்கையில் ஒருவிதத்தில் அவர்கள் கொடுத்து வந்த உபத்ரவங்கள், படையெடுப்பு, ஸாம்ராஜ்யத்தின் பிரமுகராக இருந்த ஸகல திருமல, ஹுச்சதிருமல, மங்கம நாயகர், முதலான சுயநலவாதிகளின் கபட சூழ்ச்சிகள், பட்டத்தைப் பிடிப்பதற்காகச் செய்த ஸாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து நழுவும் முயற்சி-இவைகளின் முந்திய நிலையின் - இடைக்காலத்தில் (அதாவது நிலைமாறும் தறுவாயில் transition) சக்ரவர்த்தி சத்துருக்களின் வசமாகாமலிருக்க காப்பாற்றுவதற்காகவும், நிலைமையைச் சீர்திருத்தவும், மருமகன் ராமராஜர் தமது அண்ணனின் மகன் விட்டலதேவ மஹாராஜன், விஸ்வநாதநாயகன், இக்கேரியநாயகன், சவ்வப்பநாயகர் இன்னும் சகோதரரான திருமலராயர் வெங்கடராயர் இவர்களின் உதவியினால் செய்த, சேவை முதலிய ப்ரதாபங்களை விமரிசிக்கும்பொழுது, அப்படிப்பட்ட ராமராயருக்கு ஆப்தநண்பராயிருந்து ஸமயோசித உபதேசம் யோசனைகளினால் உற்சாகப்படுத்தி கன்னட நாட்டிற்காக ஸ்ரீவிஜயீந்திரர் செய்துள்ள உபகாரம், தாரைவார்த்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தவப்பலன்களை அறிந்து அவர் வகித்திருந்த ஸ்தானத்தை அறிந்து ஆனந்தமுண்டாகிறது. நிகரற்ற ஸாம்ராஜ்ய சேவை!

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் விஜயநகரத்தில் வசித்திருந்த ஏறக்குறைய இரண்டு வருஷகாலத்தில் ஸாம்ராஜ்யத்தின் காரியங்களை நிர்வாகம் செய்யும் பொறுப்பை ஏற்று மருமகன் ராமராஜருக்கு மந்திரிமார்கள்-சேனாதிபதி முதலான தேசத்தின் பணிவுள்ள சேவகர்கள் ஸ்ரீகளவர்களின் உபதேசத்தைக் கவனத்தில் வைத்துக் கொண்டு தங்கள் முழுமையான பக்கபலத்தை அளித்ததால் நாட்டில் அமைதி நிலைத்து அரசாட்சி நிர்வாகம் ராமராஜருக்கு எளிதாயிற்று. ஆனால் சமீபத்தில் நான்கைந்து மாதங்களாகச் சூழ்நிலை மறுபடியும் களங்கமடையத் தொடங்கிற்று. ராமராஜரின் அதிகாரத்தின் கடுமை, அவசர நடவடிக்கை, பிடிவாதத்தின் பலனாக மறுபடியும் மந்திரிகள், ஸாம்ராஜ்ய நலன் காப்போர், தங்கள் பேச்சு எடுபடாததினால், ராஜ்யபாரம் செய்யும் விஷயத்தில் அக்கரை கொள்ளாமலிருக்கத் தொடங்கினர். ஸாம்ராஜ்யத்தின் நலன்தோரும் மூத்தவர்களும் ஆப்தர்களும் சொல்லும் யோசனைகளைக் கூடச் சில சமயங்களில் ராமராயர் மீறி நடந்ததாலும், தமது பிடிவாதத்தை நடைமுறையில் நடத்திக் காட்டுவதாலும் பரஸ்பரம் விரோதம், மனஸ்தாபம் இவைகளின் விஷம் எங்கும் பரவ ஆரம்பித்தது. இந்த நிலைமைக்குக் காரணமில்லாமலில்லை.

ராமராயர் ராஜ்யத்தை இழந்திருந்த பீஜப்பூர் இப்ராஹிம் ஆதில்ஷாவின் மகன் ராஜகுமாரன் ஆலி அதில்ஷாவிற்குத் தஞ்சம் கொடுத்து அவனுக்காக அஹமத் நகரம் முதலான இதர சுல்தான்களுடன் யுத்தம் செய்து ஆலி ஆதில்ஷாவிற்காக ராஜ்யம் பெற்றுத் தந்ததினால் விஜயநகர-பாமினி ராஜ்யங்களுக்கிடையே உண்டாயிருந்த அமைதிக்குப் பங்கம் விளைந்தது. ராஜகுமாரன் ஆலி ஆதில்ஷாவிடம் புத்திரனைப்போல் அன்புவைத்து அவனுக்காக யுத்தம் செய்து அவனை பாமினி சுல்தானாக்கி ராமராஜர் "யவன ராஜ்யஸ்தாபனாசார்ய" என்ற விருது பெற்றது விஜயநகரத்தின் ஸாம்ராஜ்ய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நிஷ்டரான மூத்தவர்களுக்கு சம்மதமாக இருக்கவில்லை. தெருவில் போகும் பிச்சைக்காரனுக்கு விருந்தளித்ததைப் போலாயிற்றென்றும், பிறகு இதன் பலன் பாம்பிற்குப் பால் வார்த்ததைப் போலாகுமென்று அவர்களின் வாதம். அதுமாத்திரமல்ல. பாமினி ராஜ்யங்களுக்கும், விஜயநகரத்திற்கும் இருந்த துவேஷம் பக்ஷபாதமற்ற நிலையில் (mentral) இரண்டு மதங்களில் அமைதி நிலவும்பொழுது யவனர்களின் கலகத்தில் விஜயநகரம் பங்குகொண்டது உசிதமல்ல என்று அவர்களின் அபிப்ராயமாயிருந்தது. ராமராஜரின் பிடிவாதத்தை எதிர்த்து அவரால் ஒன்றும் செய்யமுடியாதாகையால் மனஸ்தாபம் வெறுப்புப் புகைய இடம் ஏற்பட்டது.

சமீபத்தில் நாட்டின் துர்பாக்கியத்தினாலும், விதியின் விபரீத விளைவினாலும், ராமராஜர் ரணதுல்லாகான் என்னும் முஸ்லீம் வீரனுக்கு விசேஷ உற்சாகம் கொடுத்து விஜயநகரத்தின் சேனையின் ஒரு தனிப்படையின் அதிபதியாக்கியிருந்தார். ரணதுல்லாகான் சேனையில் தன்க்கு வேண்டிய ஆயிரக்கணக்கானவர்களை படைவீரராக்கிச் சேர்த்துக் கொண்டு தன்னிஷ்டப்படி நடந்து கொண்டான். முஸ்லிம் படைவீரரின் கூட்டம் தலைநகரில் அதிகாரம் வகித்து இருப்பது சாம்ராஜ்யத்திற்கு ஆபத்தென்றும் ரணதுல்லாகானை நீக்கவேண்டுமென்றும் கீழ்ப்படிதலுள்ள அரசாங்க ஊழியர்களின் வேண்டுகோளை ராமராயர் அலக்ஷியம் செய்து ரணதுல்லகானிடத்தில் அதிக நம்பிக்கைகளை வைக்க ஆரம்பித்ததினால் சாம்ராஜ்யத்தின் எல்லா நலம் விரும்புபவர்களுக்கும் மனஸ்தாபத்திற்குக் காரணமாயிற்று.

இவ்வாறு அரசாங்க அதிகாரிவர்க்கம், மந்திரி சபையோர், சேனாவீரர்கள், நெருங்கிய நண்பர்கள் இவர்கள் எல்லோரிடத்திலும் ராமராயரின் பிடிவாதத்தினால், துவேஷம், வெறுப்பு, மனஸ்தாபம் இவை உண்டாக ஆரம்பித்தது. நாலாபக்கத்திலும் இவையெல்லா செய்திகளும் விஜயீந்திரரின் கவனத்திற்கு வந்தன. ராமராஜரும் அடிக்கடி அவரிடம் வந்து அவரைத் தரிசித்துப் போய்க்கொண்டிருப்பவர் ஓரிரு மாதங்களாக வரவில்லை. ஸ்ரீகளவர் சொல்லியனுப்பும் பொழுது ராஜ்ய கார்யத்தின் பளுவினால் வரஇயலவில்லையெனச் சாக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சொல்லி விட்டார். அச்சமயத்தின் நிலைமையைக் கவனித்து ஸ்ரீவிஜயீந்திரர் கன்னட நாட்டின் எதிர்கால விஷயத்தைப் பற்றி கவலைக்குள்ளானார். தாம் இரண்டு வருஷங்களில் அங்கிருந்து சாதித்த காரியங்கள் பயனற்றுப்போய் மறுபடியும் அமைதிச் சீர்குலைவு ஏற்படும் அபாயம் சூழ்வதைக் கண்டு வாளாவிருப்பது நாட்டின் நலத்தின் நோக்கத்தினால் உசிதமல்ல என்றறிந்து ஸ்ரீகளவர் ராமராஜருக்கு புத்திமதி சொல்லிப்பார்த்து அது பலிக்காவிடில் தலைநகரைவிட்டு கும்பகோணத்திற்குப் புறப்படுவதென்று உறுதிகொண்டு தமது சிஷ்யரும், ஆப்தரும், ஆஸ்தான மஹா பண்டிதருமான கனகாசலபட்டர் மற்றும் ராமராஜரின் தம்பியான திருமலராயரையும் ராமராஜரிடம் அனுப்பி, தமது தரிசனத்திற்கு வரவேண்டுமென்றும், அதற்கு அவருக்கு அவகாசமில்லாவிட்டால் தாமே வருவதாகவும் சொல்லி யனுப்பினார்.

எவ்வாறு, ராமராயர் மஹாதீர புருஷராக, தாராள மனதுடையவராக சாம்ராஜ்ய காரியத்தில் தனக்கு நிகரற்ற நிபுனராக இருந்தாரோ அதுபோலவே நல்ல தர்மாத்மாகவும், கலை கல்வியின் போஷகராயும், விஷ்ணு பக்தராகவும் மேலும் ஸ்ரீவிஜயீந்திரரின் அதிப்ரிய சிஷ்யராகியுமிருந்தார். ஸ்ரீகளவரின் ஆணையை சிரமேற்கொண்டு நடந்து வந்தவர். ஆனால் கன்னட மக்களின் துர்பாக்கியத்தினாலோ, விதியின் விபரீதப் போக்கினாலோ, அல்லது பகவத் சங்கல்பத்தினாலோ, தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்ற பழமொழிப்படி, தான் செல்லும்வழி தவறென்று தெரிந்திருந்தும், ஏதோ ஒரு தீய சக்தியின் தூண்டுதலினால், அதன் வலையில் சிக்கி, சிந்தனா சக்தியை இழந்து சாம்ராஜ்யத்தின் நலனைக் கோருபவரெல்லோருடைய விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டார். ஸ்ரீகளவரிடம் வந்து தமது தவறுகளை ஒப்புவிப்பது அவரது ஆத்மாபிமானம் (Self respect) குறுக்கே நின்றுவிட்டது. இவ்வாறாக ஸ்ரீகளவர் சொல்லி யனுப்பியிருந்தும் ராஜ காரியங்களில் ஈடுபட்டிருப்பதனால் சில நாட்களில் வந்து ஸ்ரீகளவர்களைத் தரிசிப்பதாகத் தம்பி திருமலராயர் மற்றும், கனகாசலா சார்யர் மூலம் சொல்லியனுப்பினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ராமராஜர் நடந்து கொண்ட முறையினால் ஸ்ரீகளவர் மனம் வேதனையடைந்தது, ஓரிரண்டு மணி நேரங்கள் தனிமையில் பகவத்யானத்தில் மூழ்கினார். முனிபுங்கவர். தியானம் கலைந்த உடன் ஸ்வாமிகள் முகம் பிராசித்தது. கண்ணிலிருந்து இரண்டொரு கண்ணீர்த்துளிகள் உதிர்ந்தன. ''ஸ்ரீஹரிசித்த'' என்று பெருமூச்சுவிட்டு வெளியே வந்து மடத்தின ஸர்வாதிகாரியை அழைத்து, ''நாளை இங்கிருந்தது கும்பகோணத்திற்குப் புறப்படவேண்டும். ப்ரயாணத்திற்கு சகல ஏற்பாடுகளும் ஆகட்டும்'' என்று ஆணையிட்டார்.

காலையில் எட்டு மணி ராமராஜரின் ராஜமாளிகை முன்பாக ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் பல்லக்கு வந்திறங்கியது. ஸ்ரீகளவர் பல்லக்கிலிருந்து இறங்கி வெள்ளிக் கோல் பிடித்த ஸேவகனுடன் அரண்மனையில் நுழைந்து ராமராஜனுடைய மந்திராலோசனை அறைக்கு வந்தார். நான்கைந்து முஸ்லீம் சர்தார்களு (படைத்தலைவர்கள்) டனும் மற்றும் ரணதுல்லாகானுடனும் சிரிப்பு பரிகாசப் பேச்சுக்கள் பேசிச் சிரித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் அமர்ந்திருந்தார் ராமராயர். இருந்தாற்போல் திடீரென்று ஸ்ரீகளவர்கள் வருகையைக் கண்டு கலங்கினான். முகம் வெளுத்தது. உடனே எழுந்து யவனப் படைவீரர்கள், ரணதுல்லாகான் முதலியவரை அனுப்பிவிட்டு ஸ்ரீபாதங்களுக்கு வணங்கி சற்றுநேரம் தலைகுனிந்து நின்றான். பிறகு ஸ்ரீகளவர் நின்றிருப்பதைக் கவனித்து தூதனை அழைத்து பீடத்தைத்தரவழைத்து உட்காரும்படி ப்ரார்த்தித்தான்.

ஸ்ரீகளவர் பெருமூச்சுவிட்டுக் கொண்டே நின்றபடியே, ''ராமராஜரே, நாம் இப்பொழுது கும்பகோணத்திற்குப் புறப்பட்டுள்ளோம். கோவத்ஸ ந்யாயத்தின்படி (பசு கன்றைத்தேடி வருகை) உம்மைக் கண்டு விட்டுப் போக வந்திருக்கிறோம்'' என்றார்.

ராமராஜன் தளர்ந்து, "என்ன இது குருச்ரேஷ்டரே? நீங்கள் திடீரென்று இவ்வாறு புறப்படுவதேன்? சொல்லி யனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே'', எனவும், துக்கத்துடன் சிரித்து, ஸ்ரீபாதங்களவர், ''நீங்கள் தற்சமயம் சாம்ராஜ்யத்தின் கிரீடம் தரிக்காத சக்ரவர்த்தி யாகியிருக்கிறீர்!! சாம்ராஜ்யத்தின் மஹாபெரிய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பொறுப்பைச் சுமந்துள்ள உமக்கு அவகாசம் எங்கே உள்ளது? அதல்லாமல் நமது சிஷ்யர் உம்மிடத்தில் வந்ததில் தவறெதுவுமில்லை'' என்று சொல்லவும் ராம்ராஜன், ''ஸ்ரீகள்வர்கள் என்னிடத்தில் வெறுப்படைந்திருப்பது போல் தோன்றுகிறது'' அப்படிப்பட்ட குற்றம் ஏதாவது நான் செய்திருந்தால் மன்னிக்க வேண்டும்" என வேண்டினான்.

ஸ்ரீபாதங்களவர் சற்று மௌனம் சாதித்துப் பிறகு ராமராயரைப் பார்த்து, "ராமராஜரே, நீங்கள் கர்நாடக சாம்ராஜ்யத்தின் நிர்வாகி. நீங்கள் நாட்டின் நலனுக்காக இரவும் பகலும் உழைத்திருக்கிறீர். இது உண்மைதான். ஆனால் சில நாட்களாக உமது போக்கில் மிகப்பெரிய மாறுதலை நாம் கண்டுள்ளோம். அதற்காக வருந்துகிறோம். நீங்கள் எந்த நோக்கத்துடன் நம்மை வரவழைத்துக் கொண்டீரோ, ஸ்ரீஹரி கிருபையினால் அந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றிவிட்டோம், அப்பொழுதே நாம் புறப்பட விரும்பியிருந்தோம். நீங்கள் நாட்டின் நாகரீகம், அமைதி, ரக்ஷணை, ஆட்சியாளர்களுடன் நட்புக்கொண்டு சாம்ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காக, விருத்திக்காகச், சிலகாலம் நாமிருந்து போக வேண்டுமென்று வற்புறுத்தியதன் பேரில் இரண்டு வருடகாலம் நாம் இங்கு நிலைத்திருந்தோம். ஆனால் சமீபத்தில் இங்குள்ள சூழ்நிலையைக் கவனித்தால் நாம் செய்தகாரியம் வெற்றி பெறவில்லையென்று நமக்குத் தெரியவந்தது. அதனால் மிக்க துக்கமுண்டாயிற்று. நீங்கள் தமது சிஷ்யராயிருப்பதினாலும், கன்னட சாம்ராஜ்யத்தின் க்ஷேமத்திற்காகவும் உமக்குச் சில நற்போதனைகளைச் சொல்லிவிட்டு ப்ரயாணத்தைத் தொட ர நிச்சயித்து இங்கு வந்துள்ளோம். நமது கடமையைச் செய்வது அவசியம். ஆகையால் நாம் இப்பொழுது சொல்லுவதை மனதில் கொண்டு சன்மார்க்கத்தில் நீங்கள் செல்லவேண்டும். அதனால் உமது முக்கியமாக சாம்ராஜ்யத்தின் மங்களமுண்டாகும். இல்லாவிட்டால்... (பெருமூச்சுவிட்டு) கர்நாடக சாம்ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிய ஆபத்து ஏற்படும்!!

ஸ்ரீகள்வர்கள் சோகம் நிறைந்த முகத்துடன் மேலும் சொல்ல ஆரம்பித்தார், "ராமராஜரே, "अवश्य मनुभोक्तव्यं कृतं

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கர்ம ஶுபாஶுபம்" என் மற வாக்கியத்தின்படி நாம் செய்த நன்மை தீமைகளின் பலனை அனுபவித்தே தீரவேண்டும், "हितं मनोहारि च दुर्लभं वचः" என்னும் மஹாகவி பாரவியின் வசனத்தை நீங்கள் இப்பொழுது நன்றாக ஆராய்ந்து பார்த்து மனதில் பதித்துக் கொள்ளவேண்டும். ஸத்யம் எக்காலத்திலும் மிகக்கடுமையாக உள்ளது (Truth is always bitter) தேசத்தின் இல்லை, பிரஜைகளின் முன்னேற்றத்தை விரும்பும் ஒருவன் அவன் எவ்வளவு பெரியவனாயினும் சரி, மஹாத்மாவாக இருக்கட்டும், உயர்ந்த பதவியிலி ருந்தாலும் சரி, அல்லது மகாசூரவீரனாக வாளின் முனையினால் ஜகத்தையே ஆளுபவனாயினும் சரி,அவன் என்றைக்கும் ஸத்ய மார்க்கத்தினால் விலகவே கூடாது! அவ்வாறு நடந்தால்தான், அவனது பதவி, மானம், கௌரவங்கள் நிலைக்கும். இல்லையேல் ஸத்யநாமக பரமாத்மா அவனை என்றும் மன்னிக்க மாட்டான்!! ஸத்யம்-தர்மம் இரண்டிலிருந்து தவறியவன் அவசியம் அதோகதியை அடைவான். வீழ்வான். "धर्म एव हतो हंति धर्मो रक्षति रक्षितः ।" தர்மத்தை அழித்தால் அது தன்னை நாசப்படுத்தினவனை அழித்துவிடும். தர்மத்தைக் காப்பாற்றினவனை ஸதாகாலமும் தர்மம் ரக்ஷிக்கும். இது கடுமையான ஸத்யம். இது இன்றைய வசனமல்ல. ஆயிரக்கணக்கான வருஷங்களாக அனுபவத்திற்கு வந்துள்ள மந்த்ரத்ரஷ்டாக்களின் (அதாவது மந்த்ரத்தைக் கண்ணாரக் கண்ட மஹான்களின்) அமரவாணி. உமது நன்மைக்காக நாம் சொல்லும் வார்த்தைகளினால் உங்களுக்கு துக்கமுண்டாகலாம். ஆயினும் (கர்த்தவ்யம்) (கடமைக்குக் கட்டுப்பட்டு, உமது, ஏன், க்ஷேமமாக நாட்டின் நலனைக்கோரி எதையும் மூடிமறைக்காமல் இப்பொழுது சொல்லித்தான் ஆகவேண்டி வந்துள்ளது. நல்ல இளம்வயதில் (இளமையில்) காமத்தின் வசப்பட்டு முட்டாள் தனத்தினால் ஏது சரி, எது தவறு என்று யோசியாமல் இன்றைக்கு 30 வருடங்களுக்கு முன்பு நீங்கள் செய்த அதர்ம காரியம் உமது மூலமாக ஸாம்ராஜ்யத்திற்கே விபத்தைக் கொண்டு வந்து ஒரு மோசமான பரம்பரைக்கு வித்திட்டதாக ஆகியுள்ளது. அன்று நீங்கள் விதர்மியும், விஜாதியையும், சேர்ந்த யவன யுவதியை மோகித்து அவளுடன் கலந்தீர். வைதீக விதியைப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


புறக்கணித்து ஸனாதன தர்மத்தைக் கேவலப்படுத்தி அன்னிய ஜாதிக்காரியுடன் தொடர்பும் உறவும் கொண்டு தர்மத்ரோஹியானீர். அதன் பலனே இன்றைய நிலைமை. உம் ஒருவருடைய பாபத்தின் பலனை விசாலமான கன்னட நாட்டின் பிரஜைகள் வருங்காலத்தில் அனுபவித்து, கலகம் என்ற கடலில் மூழ்கும் ஆபத்தான் நிலை. வந்துள்ளது. அந்தத் தீயநாள் வராமல் தடுக்க நமது தபஸ்ஸையே உமக்காக தாரைவார்த்தோம். இதுவரை ஸ்ரீஹரி உம்மையும் நாட்டையும் காப்பாற்றியுள்ளார். ஆனால் விதி எழுதினதை (தலையெழுத்தை) அழிப்பது யாரால் முடியும்? அதன் பிரகாரம் உமக்கு இந்த மாதிரி விபரீத புத்தியுண்டாயிருக்கிறது. ஸாம்ராஜ்யத்தின் நலனைக் கோருகின்ற மூத்தவர்களை அலக்ஷியம் செய்து, நாட்டுக்கு அழிவுண்டாக்கும் சத்ருக்களுக்கு ஆதரவளித்து அவர்களே ஹிதம் செய்பவர்களென்று நம்பி மோசம் போய்க் கொண்டிருக்கிறீர். உமது போக்கு சரியல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. ரணதுல்லாகானுக்கு நீர் கொடுத்துள்ள கௌரவம், பதவி தெருவில் போகும் பிச்சைக்காரனுக்கு விருந்தளித்தது போலாகும். இது நம் ஒருவர் ப்ரச்சினையல்ல. ஸமஸ்த கர்னாடகம் இருப்பதா, அழிவதா என்ற ப்ரச்சினையாக உள்ளது. இப்பொழுதாவது நீங்கள் புத்தியை உபயோகித்து, மந்திரி சபையோர், ஆப்த ஜனங்களின் மந்திராலோசனைக்கு மதிப்புக் கொடுத்து அவர்களெல்லோருடைய யோசனைப்படி ராஜ்யத்தை ஆளுவீரானால் க்ஷேமமாகும், இல்லாவிடில் இந்த ரணதுல்லாகானே ஸாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு மஹா சிற்பியாகி லக்ஷக்கணக்கான கன்னட வீரர்களின் தியாகம், ஸ்ரீவித்யாரண்யர், ஸ்ரீவ்யாஸராஜரின் தவப்பலன் ஸாளுவநரஸ நாயகர், ஸ்ரீகிருஷ்ண தேவராயரின் அயரா உழைப்பினால் ஜகத்தில் இன்று தலைதூக்கி நின்று கன்னட ஜனாங்கத்தின் கீர்த்திக்கொடியைப் போல் திகழ்கின்ற விஜயநகர ஸாம்ராஜ்யம் என்ற பெயரே இல்லாமல் போய்விடும். எச்சரிக்கை! எதிர்காலத்தை நினைத்து நமது உடல் நடுக்கம் கொள்ளுகிறது, தொண்டை அடைக்கிறது; நாம் இதற்கு மேல் இன்னும் எதுவும் சொல்ல விரும்பவில்லை. "भवितव्यं भवत्येव" பகவத்ஸங்கல்பம் எதுவோ அதன்படி நடக்கட்டும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீயவர்களின் சொற்களைக் கேட்டு ராமராஜரின் முகம் வெளுத்துவிட்டது. முகமே மாறிவிட்டது. உடல் நடுங்க ஆரம்பித்தது. 30 வருஷங்களுக்கு முன் தான் செய்த அக்ரமம் யாருக்குமே தெரியாததென்று நம்பியிருந்த அதர்ம நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தவர் போல் ஸ்ரீவிஜயீந்திரர் சொன்னதினால் பயத்தினால் நடுக்கங்கொண்ட ராமராஜர் உத்வேகமடைந்தான். அவன் ஒரு நொடி யோசித்தான். தான் செய்த காரியம் தப்பென்பது புரிந்தது. பச்சாத்தாபத்தினால் மிக்க வேதனையடைந்து கண்ணீர் பெருக ஸ்ரீயவர்களின் பாதத்தின் மீது விழுந்து, "மன்னித்தருள வேண்டும் குருதேவா, மன்னித்தருள வேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்தான்.

ஸ்ரீபாதர், "பகவான் உனக்கு நல்ல புத்தியை அருளட்டும். நாம் போய் வருகிறோம்" என்று சொல்லி அவனுடைய பதிலை எதிர்பாராமலேயே ஸ்ரீகளவர் புறப்பட்டு பல்லக்கில் அமர்ந்து ப்ரயாணத்தைத் தொடர்ந்து நவபிருந்தாவனத் தீவிற்கு வந்து குருவ்யாஸ முனீந்திரரின் தரிசனம் செய்து விஜய நகரத்தின் ஸம்ரக்ஷணைக்காகப் பிரார்த்தனை செய்து புறப்படலானார். திருமலராயன் அவசர அவசரமாகச் சில சாம்ராஜ்ய நிஷ்டரான ஆப்தர்களுடன் வந்து ஸ்ரீகளவருக்கு நமஸ்கரித்து ஆசீர்வாதம் பலமந்த்ராக்ஷதை பெற்று விஷயங்கள் யாவையும் ஸ்ரீகளவரிடமிருந்து தெரிந்து கொண்டு சாம்ராஜ்யத்தின் நன்மையைக் கோரித் தங்களது எதிர்காலக் கடமைகள் என்னவென்று விக்ஞாபிக்கவும், ஸ்ரீகளவர் அவர்களெல்லோரையும் ஆசீர்வதித்து, "நாட்டின் எதிர்காலம் பயங்கரமாயுள்ளது. பகவத் ஸங்கல்பத்திற்கு எதிராக ஒன்றும் நடைபெறாது. உமது கடமையில் அலக்ஷியம் செய்யாமல் நடந்து கொள்ளுங்கள். பகவான் விட்டவழி நடக்கும். பிறகு திருமலராயரே, மூன்று நான்கு வருடங்களுக்குப் பிறகு நீங்கள் உங்கள் குடும்பத்தவர், அவர்களின் குடும்பத்தையும் விஜயநகரத்திலிருந்து வேறு இடத்திற்கு அனுப்பி விடுங்கள். பிறகு பகவதனுக்ரஹத்தினால் மங்களமுண்டாகும்" என்று சொல்லி அருளி வருத்தத்துடன் விஜயநகரத்திலிருந்து தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


### 38. ரிஷபம் ஹனுமானானது:

ஸ்ரீவிஜயீந்திரயதிவர்யரின் மகிமை ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இது அனேகருக்குப் பொறுக்கவில்லை. இப்படிப்பட்டவரில் ஒருவர் ஸ்ரீவிஜயீந்திரரால் முன்பு தோல்வியடைந்த சைவஸந்யாஸிகளான லிங்கராஜேந்திர சிஷ்யர். விஜயீந்திரரிடம் தோல்வியுற்ற ஸ்ரீலிங்கராஜேந்திரர் கும்பகோணத்தைவிட்டு மைசூர் தேசத்திற்குச் சென்று அங்கு வசித்தார். அவருடைய சிஷ்யரொருவர் மாத்திரம் கும்பகோணத்தின் வெளிப்புறங்களில் த்ன் இருப்பிடம் செய்து கொண்டார். விஜயீந்திரர் வெற்றி மேல் வெற்றியால் அவர் மனம் புழுங்கிக்கொண்டிருந்தது. எதுவும் செய்யத் திறமையற்று அவர் தன்னுள்ளே குறைபட்டுக் கொண்டிருந்தார். ஸ்ரீகளவர்களின் திறமை அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவர் வாதத்திலாயினும் சரி, கலையிலானாலும் சரி, எந்தவித்தையிலும் ஜயிக்க முடியாதவரென்றும் நேரிலும் கண்டவர். அதனால் ஏதாவது ஒரு வழியில் ஸ்வாமிகளவரின் முகத்தைக் களங்கப்படுத்த வேண்டும் தக் சமயத்தை எதிர்பார்த்துப் பதுங்கியிருந்தார். அந்த வாய்ப்பைத் தானாக உண்டாக்கித் தமது சூழ்ச்சி வலையை வீசினார்.

கும்பகோணத்தின் ஸகல தேவாலயங்களின் மேற்பார்வையும் ஸ்ரீவிஜயீந்திரரிடம் இருந்ததால் தேவாலயங்களின் நிர்வாகம் வெற்றிகரமாக நடந்து வந்தது. ஸ்ரீகளவர்களின் நிகரற்ற பாண்டித்யம், மஹாத்ம்யம், தபோசக்தியின் பலன், மற்றும் இதர மதங்களில் சகிப்புத் தன்மையின் பலனாக அவருக்கு த்வைத, அத்வை, விசிஷ்டாத்வைத யதிகளிடம் நட்புறவு வளர்ந்து வந்தது. எல்லோரும் பரஸ்பரம் நட்பு சகோதர பாவத்துடன் அண்ணன் தம்பிகளைப் போல் நடந்து கொண்டனர். இவ்வாறு சூழ்நிலை அமைதியாயிருப்பதைக் கண்டு பொறுக்காமல் சைவ சந்நியாஸிகளின் சிஷ்யர்கள் முதலில் அத்வைத விசிஷ்டாத்வைத மதத்தினருக்குள் கலகத்தின் விதை விதைத்தனர். தாங்கள் விதைத்த இந்த விஷ விதை வலுத்து மரமாகி சீக்கிரமே பலனளிக்குமென்று அவர்கள் நம்பினார்கள். இதன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



பல்லாக ஸ்ரீவிஜயீந்திரரின் கீர்த்திக்கும் களங்கம் வருமென்றும் அவருடைய முகம் பங்கப்படுத்தப் படுமென்றும் நினைத்தனர்.

கும்பேச்வரன் மற்றும் சாரங்கபாணி தேவாலயங்களின் நடுவில் ஒரு குளம் உள்ளது. அது கும்பேச்வரன் கோயிலுக்கு முன்பக்கத்திலும் சாரங்கபாணி கோவிலின் பின்பக்கமுமாக உள்ளது. தொன்றுதொட்டு அது ஸாரங்கபாணி கோவிலைச் சேர்ந்தது. அதன்படியே நடைமுறையிலும் இருந்து வந்தது. சைவ ஸந்யாஸிகளின் சிஷ்யரின் சூழ்ச்சியினால் விஷயம் தெரியாத கும்பேச்வரனின் கோயிலைச் சேர்ந்த சில சேவகர்கள் அந்தக்குளம் கும்பேச்வர தேவாலயத்தைச் சேர்ந்தது என்றும் கோவிலுக்கு முன்னாலுள்ள குளத்தின் மீது தங்களுக்குத் தான் உரிமை என்று மெதுவாக ஏற்றுக்கொள்ள முடியாத வாதத்தை ஆரம்பித்தனர். முதல் முதலில் வேலையாட்கள் அர்ச்சகர்களில் ஆரம்பமான இந்தக்கலகம் படிப்படியாக வலுவடைந்து அந்தந்த மதத்திய ஜனங்கள் வரை பரவிற்று. அத்வைத விசிஷ்டாத்வைதிகளில் பெரிய வாக்குவாதம், த்வேஷம், வெறுப்பு முதலியன உண்டாயின. இது ஒரு சாதாரண வ்யவஹாரமென்று ஸ்ரீவிஜயீந்திர நடுநிலைமை வகித்தார். அந்த விவாதம் கடைசியில் ஸ்ரீகளவர்கள் வரைவந்து விட்டது. அவர் ஸகல தேவாலயங்களுக்கும் மேற்பார்வையாள அதிகாரியும், அதிபதியும் ஆகியிருந்ததினால் இரண்டு தரப்பினரும் அவரிடம் குற்றச்சாட்டுகள் செய்தனர். ஸ்ரீயவர்கள் சமாதானமாக எல்லோரின் குற்றச்சாட்டுகளைக் கவனமாகக் கேட்டு இருவருக்கும் சமாதானம் சொல்லி,"இத்தகைய மிகச்சிறிய அற்ப விஷயங்களுக்காக கலகம் செய்யலாகாது. குளத்தின் வழக்கினால் மதக்கலவரமென்ற தீ பற்றிக்கொள்ளும். அது என்றிருந்தாலும் ஆபத்தானது. ஆதிகாலம் முதற்கொண்டு குளம் ஸாரங்கபாணி கோவிலைச் சேர்ந்தது. அதை நீங்களெல்லோரும் அறிவீர்கள். ஆயினும் நாம் இருவருடைய நலனை உத்தேசித்து அந்தக் குளத்தை இரு கோவில் சொந்தக்காரர்களும் உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்று இப்பொழுது தீர்ப்பளிக்கின்றோம். இதனால் எந்தக் கெடுதியும் இல்லை. இனிமேலும் இதன்படியே நடக்க வேண்டும்! என்று உத்தரவளித்தார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இருதரப்பினரும் ஸ்ரீயவர்களின் பக்ஷபாதமற்ற புத்தியையும் உதாரகுணத்தையும் கண்டு மகிழ்ச்சியுடன் ஸ்ரீகளவர்களைக் கொண்டாடி விடைபெற்றுச் சென்றனர்.

தாங்கள் விதைத்த விஷவிதை அங்கேயே அழிந்து போனதைக் கண்டு சைவ சந்நியாஸிகளின் சிஷ்யர்களுக்கு எல்லையற்ற வேதனை உண்டாயிற்று. வேறொரு வழியில் விஜயீந்திரருக்கு அக்கௌரவத்தை உண்டு பண்ணத் தீர்மானித்து அவர்கள் கும்பேச்வர தேவாலயத்தின் பரிசாரகர்களுக்கு மறுபடியும் துர்போதனை செய்தார்கள். "நீங்கள் எத்தகைய மூடர்கள்! விஜயீந்திரரின் பேச்சில் மயங்கிவிட்டீர்களே! அவர் சாணக்கியர். தனது காரியத்தைச் சுலபமாகச் சாதித்துக் கொண்டு உங்களை மோசம் செய்து விட்டார். அவர் என்ன இருந்தாலும் விஷ்ணு பக்தரல்லவா? அவருக்கு வைஷ்ணவ மதஸ்தரிடம் அன்பிருப்பது இயற்கை. மேலாகப் பார்த்தால் உங்களுக்கெல்லாம் நன்மையே செய்திருப்பதாகத்தான் தோன்றும். ஆனால் அந்தக்குளம் ஸாரங்கபாணி கோவிலுக்கு சேர்ந்தது என்பதை சுலபமாக ஸ்தாபித்துவிட்டார். புத்தியில்லாத நீங்கள் உங்கள் உரிமையை இழந்து விஜயீந்திரரின் கிருபாபிக்ஷைக்கு கை நீட்டினீர்கள். இருவருக்கும் சமமான உரிமையை அவர் அளித்தனரென்று மகிழ்ச்சியடைந்துள்ளீர்கள். அந்தக்குளம் உண்மையிலேயே உங்களுடையது. இந்த விஷயத்தை நமது குருநாதர் எத்தனையோ முறை எனக்குத் தெரிவித்திருக்கிறார். அந்தக் குளத்தில் ஏராளமான சைவ சின்னங்களுள்ளன. உமது வாதத்தை அதன் மூலமாக நீங்கள் நிரூபிக்க வேண்டும். வேண்டுமானால் மறுபடியும் விஜயீந்திரரிடம் குற்றம் சாட்டுங்கள். குளத்தில் சைவ சின்னங்களிருப்பதனால் அது உங்களது தான் என்று சவால்விடுங்கள். பரீக்ஷை நடக்கட்டும் என்று அடம்பிடியுங்கள். உமது பேச்சிற்கு விஜயீந்திரர் அவசியம் ஒப்பமாட்டார். அப்பொழுது தெரியவரும் உமக்கு அவருடைய உண்மையான ஸ்வரூபம்! பொது ஜனங்களின் சார்பாகப் பரீக்ஷை நடக்கட்டும். அதில் சைவ சின்னங்கள் கிடைத்தால் அந்தக் குளம் உங்களுடையதே. அதுதான் நியாயமான வழி. நீங்கள் இப்பொழுதே. விஜயீந்திரரி...

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


போய் சவால் விடுங்கள்" என்றெல்லாம் மனோரஞ்சகமாக அவருடைய மனதை உறுதிப்படுத்தி மறுபடியும் வழக்கை வளர்த்தனர்.

பாவம் அர்ச்சகர்கள் சைவ சந்நியாஸிகளின் சிஷ்யரின் பேச்சை உண்மையென நம்பி ஸ்ரீகளவரிடம் சென்று குளத்தைத் தங்களுக்கு அளிக்க வேண்டுமென்று வாதித்தனர். ஸ்ரீயவர்கள் புன்னகையுடன் சொன்னார்; "ஐயா இவ்வாறு நீங்கள் பிறர் சொல்லும் பேச்சைக்கேட்டு நம்புவீர்களென்று நாம் நினைக்கவில்லை. அமைதியான சூழ்நிலையைக் கெடுப்பதற்காக த்வேஷி ஒருவன் முயற்சித்திருப்பதை நாம் அறிவோம். உங்களுக்குக் குளத்தின் உரிமைப் பெற்றுத்தருவதல்ல அவனது நோக்கம். மதவிரோதாக்னியைப் பரப்புவது அவனது லக்ஷியம். அவனுடைய குருவை நாம் ஜயித்துவிட்டதால் நம்மீது பழிதீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற துராசைக்குப் பலியாகி அவன் உங்கள் மூலமாக நமக்கு அகௌரவத்தை உண்டாக்கத் திட்டமிட்டு இந்தக் கபட நாடகத்தை நடத்தியுள்ளனர். நான் சொல்வதைக் கேளுங்கள். நமக்கு இருதரப்பினர் மேலும் ஒரேவிதமான க்ஷேமம் உள்ளது. இதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இப்படியிருந்தும் நாம் பாரபக்ஷம் செய்துள்ளோம் என்று சந்தேகத்தை அந்தத்வேஷி உங்களில் மூட்டியிருக்கிறான். அவனுடைய கெட்ட போதனைகளுக்குச் செவிசாய்த்து நீங்கள் மறுபடியும் இங்கு வந்துள்ளதைக் கண்டு நமக்கும் வருத்தமும் ஆச்சரியமும் உண்டாகியுள்ளது. உமக்கு அவனது பேச்சில் நம்பிக்கையுள்ள பக்ஷத்தில் நாளைய தினம் அந்தப் பரீக்ஷை நடந்து விடட்டும் நாளைய பரீக்ஷையில் நீங்கள் தோற்றால் பிறகு இனிமேல் கண்டிப்பாக அந்தக் குளத்தின் மீது எந்தவிதமான உரிமையும் கொண்டாட முடியாமற் போய்விடும். யோசித்துப் பாருங்கள். ஸ்ரீஹரி உங்கள் எல்லோருக்கும் நல்ல புத்தியை அருளட்டும். அநாவசியமாக மத்வேஷத் தீயை மூட்ட முயற்சிக்காதீர்கள். நீங்கள் இனி செல்லலாம். நாளைக் காலையில் பரீக்ஷை நடக்கும்", என்று சொல்லி விடை கொடுத்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வந்த ஜனங்கள் ஸ்ரீயவர்களின் பேச்சைக் கேட்டு வெட்கமடைந்தனர். தாங்கள் தவறு செய்துவிட்டோமோ என்று சந்தேகம் உண்டான போதிலும், அதற்காக வருந்தினாலும், அடுத்த நொடியிலேயே சைவ சந்நியாஸிகளின் சிஷ்யரிடம் போய் நடந்தவற்றைத் தெரிவித்தனர். தங்கள் காரியம் கைகூடிவிட்டதென்று அவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். "பலே! இது தான் இப்பொழுது சரியான வழி. நாளை உங்களுக்கு வெற்றி நிச்சயம். எங்கள் குருநாதரின் பாத சாக்ஷியாகச் சொல்லுகிறேன். அந்தக்குளம் நாளையிலிருந்து உங்களுடையதாகிவிடும்", என்று சொல்லியனுப்பி சைவ சந்நியாஸிகளின் சிஷ்யர்கள் அன்றிரவோடு இரவாக தமது கூட்டத்தாருடன் குளத்தையடைந்து முதலிலேயே தாங்கள் தயாராகக் கொண்டு வந்த ஆயிரக்கணக்கான கல்லினாலான லிங்கங்கள், வ்ருஷபங்களையும் குளத்தில் போட்டு மறுநாள் விஜயீந்திரர் அவமானப்படுவது உறுதியென்று மகிழ்ச்சியுடன் தங்களது இருப்பிடத்திற்குத் திரும்பினர்.

காலையில் குளத்தினருகில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நிரம்பியுள்ளனர். இருதரப்பினரும் தங்களுக்குள் சர்ச்சை செய்து கொண்டிருக்கின்றனர். சைவ சந்நியாஸிகளின் சீடர்கள் தங்கள் நண்பர்களுடன் ஒன்றும் தெரியாதவர்கள் போல அங்கு வந்து நின்றிருக்கின்றனர். இனியென்ன? ஸ்வாமிகள் வரப்போகிறார். பரீக்ஷைநடக்கப்போகிறது. அவர் கவர்வ பங்கமாகி அவருடைய கீர்த்திக்குக் களங்கம் உண்டாகப் போகிறதென்று மனப்பால் குடித்துக்கொண்டு ஆனந்த நடனம் செய்து கொண்டிருக்கின்றனர். ஸ்ரீவிஜயீந்திரரின் பல்லக்கு வந்து சேர்ந்தது. இரண்டு தரப்பின் பிரமுகர்கள் வந்து ஸ்ரீகளவர்களை வணங்கி வரவேற்றனர். சுவாமிகள் புன்னகையுடன் ஒரு பிடிமந்த்ராக்ஷதையைக் குளத்தில் போட்டார். சைவ சந்நியாஸிகளின் சீடர்கள் "ஓகோ, இதென்ன மோசக்கார விளையாட்டைத் தொடங்கியுள்ளார் இந்த ஸ்வாமிகள்! மந்த்ராக்ஷதையை ஏன் போட வேண்டும்? உம். பாவம், மந்த்ராக்ஷதையென்ன செய்யும்? அக்குளத்திலில்லையா நமது நந்திகேச்வரன் நம்மைக்காப்பாற்ற? என்று தம்முள் சிரிக்கலானார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீஸ்வாமிகள் கம்பீர முகபாவத்துடன் நிறைந்துள்ள ஜனங்களைக் குறித்துப் பேசலானார்." தர்மாபிமானிகளே! சிறிய விஷயம் ஒன்றிற்காக த்வேஷிகளின் சூழ்ச்சியால் அன்புடன் வாழும் த்வைத-அத்வைத-விசிஷ்டாத்வைத பந்துக்களிடையே வெறுப்பு, விரோதம் ஏற்படும் சந்தர்ப்பம் வந்துள்ளது. நாம் அதை ஒரு வகையில் மத்யஸ்தம் செய்தி அமைதியை நிலைக்கச் செய்துள்ளோம். ஆனால் இப்பொழுது மறுபடியும் துவேஷிகளின் சூழ்ச்சிக்குப் பலியாகிச் சிலர் இந்தக்குளம் விஷயத்தில் தீர்ப்பாக வேண்டும் என்று அடம்பிடித்துள்ளனர். கும்பேச்வரன் கோவிலின் பரிசாரகரே முதலானவர்கள் உண்மையில் தங்களுக்குச் சொந்தமில்லாத இந்த குளம் தங்களுடையதென்று உரிமை கொண்டாடி அதற்கு வேண்டிய சின்னங்கள் உள்ளனவென்றும் பொது ஜனங்களின் முன்னிலையில் பரீக்ஷை நடக்க வேண்டுமென்றும் நம்மை வேண்டியுள்ளனர். அதன்படியே நாம் இப்பொழுது இங்கு வந்திருக்கிறோம். உங்கள் எல்லோருக்கும் தெரிந்தபடி இது ஸாரங்க பாணியின் கோவிலைச் சேர்ந்தது. நாம் விரோதம் வெறுப்பு இவை வேண்டாமென்று இரு தரப்பினருக்கும் சமமான அதிகாரம் அளித்துள்ளோம். இப்பொழுதாவது எமது பேச்சை நம்பி அதன்படிக்கு நடந்தால் இரு பக்கத்தார்களுக்கும் நலம். பரீக்ஷை நடக்கத்தான் வேண்டுமென்றால் அதில் உண்டாகும் தீர்ப்பை மதித்து நடந்துகொள்ள வேண்டிவரும். இதற்கு உங்கள் அபிப்ராயம் என்ன? என்று சொல்லவும், சைவ சந்யாஸிகளின் சிஷ்யர்கள் ஆணவத்துடன் முன்னால் வந்து, "என்ன ஸ்வாமீ, வெறும் இனிமையான பேச்சினால் என்ன ப்ரயோஜனம்? பரீக்ஷை நடக்கட்டும். அப்பொழுது இது யாருக்குச் சொந்தமென்பது? என்றனர்.

ஸ்ரீகளவர் சிரித்துக் கொண்டே, "உமது விருப்பம் நிறைவேறப்போவதில்லையென்று தெரிவிக்க நாம் வருந்துகின்றோம்" என்று சொல்லி, இருதரப்பினர் சார்பில் சில பேர்களைக் குளத்தில் மூழ்கி ஏதாவது சின்னம் கிடைத்தால் மேலே எடுத்துவரச் சொன்னார். அதன்படி நான்கைந்து பேர்கள் குளத்தில் மூழ்கி கையில் கிடைத்தவற்றை எடுத்துக்கொண்டு மேலே வந்தனர். ஜனங்களெல்லாம் ஆவலுடன் அது என்னவென்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பார்த்தனர். ஹனுமான், சாலிக்ராமங்கள்!! இருதரப்பினரும் கொண்டு வந்த சின்னங்கள் யாவும் ஹனுமான் சாலி க்ராமங்களே!! சைவ சந்நியாஸியின் சிஷ்யர்கள் தங்கள் கண்களைத் தாங்களே நம்ப முடியவில்லை" மறுபடியும் தேடுங்கள்" என்று ஆக்ரோஷத்துடன் சத்தம் போட்டனர். ஸ்ரீயவர்கள் புன் சிரிப்புடன் "ஆகட்டும்" என்றார். பத்து பன்னிரண்டு மறுபடியும் தண்ணீரில் மூழ்கித்தேடியும் அங்கு கிடைத்தவை ஹனுமானும் சாலிக்கிராமங்களே!

சைவ சந்யாஸிகளின் சிஷ்யரின் முகம் கருத்தது. கையைப் பிசைந்து கொள்ளவாரம்பித்தனர். இதென்ன ஆச்சரியம்! தாங்களே முன்தினம் ராத்திரியில் தங்கள் கைகளினாலேயே லிங்கங்கள், நந்திகளைக் குளத்தில் போட்டு வந்துள்ளனர். ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக்கணக்கில்! ஆயினும் ஒன்றாவது லிங்கமாகட்டும், நந்தியாகட்டும் கிடைக்கவில்லையே! எல்லாம் ஹனுமான் விக்ரஹங்களும் சாலிக்கிராமங்களே! விஜயீந்திரரின் கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்கவந்த அவர்களது ஆசை ஈடேராமல் தங்களுக்கு அவமானமேற்பட்டதைக் கண்டு துக்கமிகுதியினால் அவர்கள், "இந்த ஸ்வாமிகள் ஏதோ மோசம் செய்துள்ளார், அநியாயம் செய்துவிட்டார்" என்றனர்.

விஜயீந்திரர் புன்னகையுடன், "அண்ணன் தம்பிகளைப்போல அன்புடன் வாழ்ந்திருந்தவர்களிடையே த்வேஷ விதையை விதைத்தவர் யார்? மோசம் செய்தவர் யாரென்பதை இதோ இப்பொழுது பேசின சைவ சந்நியாஸியின் சிஷ்யரே சொல்லுகிறார். ஜனங்களெல்லோரும் கேளுங்கள் என்று அந்த சைவ சந்நியாஸியின் சிஷ்யரைச் சற்று நேரம் நோக்கிவிட்டுப் பிறகு மந்திராக்ஷதையை அவர்மீது போட்டார். என்ன ஆச்சரியம்! மகுடியின் இனிய குரலுக்கு மயங்கின பாம்பைப்போல் சைவ சந்நியாஸியின் சிஷ்யர் ஓடோடி வந்து, சொல்ல ஆரம்பித்தார்," இதற்கெல்லாம் காரணம் நாங்கள் தான். எங்கள் குருநாதனை இந்த ஸ்வாமிகள் ஜயித்துவிட்டார்! எங்கள் மடத்தைத் தன்வசமாக்கிக் கொண்டார். அந்த அவமரியாதையை குருநாதர் மறந்தாலும் நான் மறக்கவே இல்லை. இவருடன் வாதத்தில் போட்டியிடுவது முடியாத காரியம். எவ்வாறாவது இவரை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஜயித்து அகௌரவப்படுத்த வேண்டுமென்று சூழ்ச்சியினால் நானே இந்த குளத்தைப் பற்றிய வழக்கை ஆரம்பித்து வைத்தேன். ஸ்ரீகளவர் இருதரப்பினருக்கும் கலகமாகக் கூடாதென்று இருவருக்கும் சம உரிமையை வழங்கி அதைப்பரிகாரம் செய்தார். எனது முயற்சி தோல்வியடைந்தது. என்னால் ஸஹிக்க முடியவில்லை. மறுபடியும் நானே இந்தப் பரீக்ஷையை நடத்தத் தூண்டினேன். நேற்று இரவு ஆயிரக்கணக்கான லிங்கங்களையும் நந்திகளையும் என் கையினாலேயே கொண்டு வந்து குளத்தில் போட்டேன். இன்று பரீக்ஷித்தபொழுது அது கிடைத்துவிடும், விஜயீந்திரர் அவமானமடைவார் என்று நம்பியிருந்தேன். ஆச்சரியம்! கேவலம் ரஹஸ்யமாக நான் செய்த இந்தத் தந்திரம் இவருக்கு எப்படித் தெரிந்ததோ அந்த சிவனே அறிவார். நான் போட்ட நந்தி, லிங்கங்களெல்லாம் ஹனும-சாலி க்ராமங்களாகிவிட்டனவே!! இதென்ன இந்திர ஜாலமோ நானறியேன். என்னவானால் என்ன? எனது காரியம் வெற்றிபெறவில்லை. நான் தோற்றுப்போனேன்" என்று யமதண்டத்தைத் தலைமீது சுமந்தவனைப் போல் ஒரே மூச்சில் சொல்லி நலிந்து போய்நின்றார்.

குற்றத்தைத் தானாகவே ஒப்புக் கொண்டேனென்பதே சைவ சந்நியாஸியின் சிஷ்யருக்குக் கடைசிவரைத் தெரியாத பிரச்சினையாகிவிட்டது. தமது காரியத்தைச் சாதிக்க முடியாததால் அவரங்கிருந்து ஓடிவிட்டார். ஜனங்கள் யாவரும் ஸ்ரீயவர்களின் அபரோக்ஷ க்ஞானம், மகிமை திறமைகளைப் பாராட்டினர்.கும்பேச்வர தேவாலயத்தின் பரிசாரகர் முதலானோர் ஸ்வாமிகளின் பாதத்தில் விழுந்து தங்கள் அபராதங்களை மன்னித்தருளுமாறும், குளம் ஸாரங்கபாணி கோவிலைச் சேர்ந்ததென்றும், கோஷிக்குமாறு வேண்டினர். ஸ்ரீகளவர் அவரெல்லோருக்கும் நல்ல புத்திமதிகளைச் சொல்லி இனிமேல்இந்த மாதிரி மதத்துவேஷம் செய்யாமல் எல்லோரும் சகோதரர் போல் நடந்து கொள்ளும்படி ஆணையிட்டார். ஜனங்கள் "அஜேய விஜயீந்திரருக்கு ஜயமுண்டாகட்டும்" என்று ஜயகோஷம் செய்தனர். ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் சிஷ்யரின் மூலம் நடந்த வித்யா கௌரவங்களை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


## 39. சங்கீத கலைத்திறமை (கான மார்த்தண்டனின் தோல்வி)

பரம மங்களமான "ந்யா ஸுதா"வை காவேரி நதியின் முற்றத்தில் காணப்படும் மண்டபத்தில் ஸ்ரீவிஜயீந்த்ர யதிபுங்கவர் சிஷ்யர்களுக்குப் பாடப்ரவசனம் செய்து கொண்டு அமர்ந்திருக்கிறார். சிஷ்ய ஜனங்கள் குருமுகமாகத் தங்குதடையின்றிப் புறப்படும் பரிசுத்தமான வாக்ப்ரவாஹத்தில் ஈடுபட்டு புனிதராகிக் கொண்டிருக் கின்றனர். ஜீவர்களின் உண்மையான லக்ஷ்யமான முக்தியின் மார்க்க சாதகமான ஸ்ரீமதா நந்ததீர்த்த பகவத்பாகரின் த்வைத சித்தாந்த தத்வங்களை ஸ்ரீடீகாசார்யர் (ஜயதீர்த்தர்) எவ்வாறு ஹ்ருதயங்கமாக நிரூபித்துள்ளாரென்பதை வெகு ரஸமாக ப்ரவசனம் செய்து கொண்டு ஸ்ரீஜயதீர்த்தரின் ஹ்ருதயத்தின் கருத்தை உள்ளது உள்ளபடியாக வர்ணனை செய்து கொண்டிருக்கும் குருகளின் நிபுணத்துவத்தைக் கண்டு (Mastery) சிஷ்ய கோடிகள் ஆனந்த பரவசமாகி அமர்ந்திருக்கின்றனர். பாடம் முடிந்தது. ஸ்ரீகளவர் இனி மடத்திற்குப் புறப்பட வேண்டும், அவ்வளவு தான். அதற்குள் ஸ்ரீமடத்தின் சேவகன் ஒருவன் ஓடோடி வந்தான். ஸ்ரீயவர்கள் மந்தஹாஸத்துடன்," ஓகோ என்ன இவ்வளவு அவஸரம்? வடநாட்டின் பாடகன் வந்திருக்கும் செய்தி சொல்லவோ? எனலும், பாவம், அந்த சேவகன் ஆச்சரியமடைந்து அப்படியே நின்றுவிட்டான். ஸ்ரீகளவர்களின் தபஸ்ஸின் சத்தியைப்பற்றி அவனுக்கு முன்பே அநேகமுறை தெரிந்திருந்தும் கூட சங்கீத வித்வானின் வருகையைத் தெரிவிக்கும் முன்பே ஸ்ரீகளவர் அதைச் சொன்னதைக் கண்டு ஆச்சரியப்பட்டு மெய்சிலி ர்த்து நின்றான். பக்தியுடன் ஸ்வாமிகளுக்குத் தலை வணங்கி நமஸ்கரித்து "ஸர்வக்ஞ ஸந்நிதானத்திற்கு எது தான் தெரியாத விஷயம்? மடத்தின் அதிகாரிகளின் உத்திரவின்படி தங்களுக்கு விக்ஞாபிக்க குதூகலத்துடன் ஓடிவந்தேன். பராக்" என்று விண்ணப்பித்தான்.

ஸ்ரீபாதங்களவர் சிஷ்யருடன் மடத்திற்கு வந்தார். மடத்தின் ஸர்வாதிகாரி ஸ்ரீகளவர்களுக்கு வணங்கி, "யாரோ தான்சேன் என்னும் பிரத்திபெற்ற சங்கீத வித்வானின் சிஷ்யனாம், ஸ்ரீகளவரின் 64 கலா

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வல்லமையைக் கேள்விப்பட்டுக்கான கலையில் போட்டியிட வந்துள்ளானாம். ஸ்ரீபாதங்கள் தயவுசெய்து எழுந்தருள வேண்டும்" என்று அறிவிக்கவும் ஸ்வாமிகள் எல்லாவற்றையும் பொறுமையுடன், கவனமாகக்கேட்டு, "நாளை மத்தியானம் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி சந்நிதியில் போட்டி நடக்கட்டும். வந்துள்ள பாடகருக்கு எல்லா வஸதிகளையும் செய்து கொடுத்து மரியாதை செய்யுங்கள். காலையில் அவரை நம் தர்சனத்திற்கு அழைத்து வாருங்கள்'' என்று ஆணையிட்டார். ஸ்ரீகளவர்களின் ஆணைப்படி பாடகருக்குச் சகல வஸதிகளையும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டன.

காலையில் 8 மணி அளவில் ஸ்ரீவிஜயீந்திரர் திக்விஜய பீடத்தில் அமர்ந்து வந்த வித்வான்கள், நகர ப்ரமுகர்கள் மற்றும் பக்தர்கள் கூட்டத்தினருக்குத் தரிசனம் கொடுத்து பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருந்தார். ஸ்ரீமடத்தின் அதிகாரி வடநாட்டுப் பாடகரை அழைத்து வந்தார். பாடகருக்கு சுமார் 30 வயதிருக்கலாம். மிகக் காந்தியுள்ளவனாக இருக்கிறான். வெகு தாழ்மையுடன் வந்து ஸ்ரீகளவரை நமஸ்கரித்து உட்கார்ந்தான். ஸ்வாமிகள் மகிழ்ச்சியுடன் அவனை வரவேற்று, "உமது வருகையால் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். உம்மைப் போன்ற ஸரஸ்வதி புத்திரனுடன் போட்டியிடுவது நமக்கு மகிழ்ச்சி தரவல்லதாயுள்ளது. உமது குருவான தான்சேனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறோம். கான தேவதை அவருக்கு ப்ரத்யக்ஷம் என்று ஜனங்கள் கோஷித்துள்ளனர். அத்தகையவரின் சிஷ்யரென்று பிறகு கேட்கவும் வேண்டுமா? இன்று மத்தியானம் உமது கலையை நிரூபித்துப் ,போட்டியிடலாம்'' என்று உத்தரவு கொடுத்தார்.

பாடகன் ஸ்ரீகளவர்களின் இனிய குரலினால் மகிழ்ந்து விக்ஞாபனம் செய்தான், "குருவர்யரே! தமது நிகரற்ற பாண்டித்ய கீர்த்தி ஒளியானது வடநாட்டிலும் வீசியுள்ளது. தமது மகிமை கேட்டிருக்கிறேன். இன்று தம்முடைய தரிசனத்தினால் புனிதனானேன். மஹாத்மாவான தம்முடன் போட்டியிடுவது அபராதமென்று நான் அறிந்திருக்கிறேன். எனது நாட்டின் பாடக மணிகளின் கட்டாயத்தின்மேல் இங்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வந்துள்ளேன். 64 கலைகளில் யார் வேண்டுமானாலும் வந்து போட்டியிடலாம் என்று தாங்கள் ஜகத்திற்கே சவால்விட்டதனால் எனது கலையில் தம்முடன் போட்டியிடுவது தவறாகாதென்று உணருகிறேன். சுவாமிகளின் தாராள மனப்பான்மையினால் அதற்கு சந்தர்ப்பம் கொடுத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீகளவர்கள் அவனுடைய குணத்திற்கும், குரு பக்திக்கும் மெச்சி மனமார ஆசிர்வதித்து, "இவ்வளவு தூரம் வந்துள்ள நீங்கள் சதுர்யுக மூர்த்தியான ஸ்ரீமூலராம சந்திரரின் தரிசனம் செய்து கொண்டு ப்ரஸாதம் பெற்றுப் போகலாம். உங்களுக்கு நன்மை உண்டாகும்" என்று ஆசிர்வதித்து அனுப்பினார்.

ஸ்ரீஸுரேந்திரதீர்த்தர் ஸ்ரீரங்கத்திற்கு திக்விஜயம் செய்திருந்ததினால் ஸ்ரீவிஜயீந்திரரே பூஜாராதனை முதலியவைகளை நிறைவேற்றினார். பாடகன் ஸ்ரீமூலராமரின் தரிசனத்தினால் கிருதார்த்தனானர்ன். தீர்த்தப்ரஸாதம் விநியோகமான பிறகு எல்லோருக்கும் போஜனம் ஆயிற்று. அதற்குப் பிறகு மட்டத்தின் மேலதிகாரி பாடகருக்குத் தீர்த்தப்ரஸாதம் அளித்தார்.

ஸாரங்கபாணி ஸ்வாமி கோவிலில் அநேக வித்வான்கள், பாடகர்கள், நகரப்ரமுகர்கள், அதிகாரிகள் யாவரும் கூடியிருந்தனர். விதவிதமான பக்கவாத்யங்களுடன் சிஷ்யர்களுடன் உத்தரதேசப் பாடகர் தயாராக அமர்ந்திருக்கிறான். ஜனங்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் வரவை நோக்கியுள்ளனர். எல்லோருக்கும் விசேஷ குதூகலமாயுள்ளது. ஸ்ரீவிஜயீந்திரர் சது: சாஸ்திரங்களில் பாண்டித்யத்தை நிருபித்து அநேகவாதிகளை வென்றிருக்கிறார் உண்மை. சைவ சந்நியாஸிகளுடன் வாதத்திற்கு வரும்பொழுது ஆகாச மார்க்கமாக பல்லக்கியில் விஜயம் செய்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்தியுள்ளார். அதுவும் உண்மை. களக்கூத்தாடியை, மோடி என்ற மந்திரவாதியை மற்றும், தங்கவேலை நிபுணர்களை விசித்திரமாக வென்று தனது நிபுணத்துவத்தை நிரூபித்துள்ளார். இதுவரை ஸ்ரீகளவர்கள் பெருமை யாருக்கும் தெரியவில்லை. காரணமிதுதான்; சங்கீதக் கலையில் இதுவரையில் ஸ்ரீகளவரின் பெருமை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. கர்நாடக ஸங்கீதத்திற்கு விசேஷ உற்சாகமும் உதவியும் அளித்துள்ள சோழதேசத்தில் ஸ்ரீகளவர்கள் ஹிந்துஸ்தானி ஸங்கீத வித்வானுடன் போட்டிக்கு நின்றிருக்கிறார்! விஜயீந்திரரிடம் பக்தியுள்ள ஜனங்களுக்கெல்லாம் என்ன ஆகுமோ என்று பயம், கலவரமடைந்துள்ளனர். ஸ்ரீவிஜயீந்திரரை வெறுக்கின்ற ஜனங்கள் அங்கு இல்லாமலில்லை. எப்படியாவது விஜயீந்திரர் தோல்வியடைந்தால் சரி, போதும்; அதனால் திருப்தியடையலாமென்று யோசித்துக் கொண்டிருக்கின்றனர், அந்தக் கூட்டத்தினர்கள், இது ஒரு விசித்திர சூழ்நிலை. விதவிதமான ஜனங்கள் தங்களுக்குள் பரஸ்பரம் தோன்றினபடி பேசிக்கொண்டிருக்கின்றனர். ஸ்ரீயவர்களில் பல்லக்கு பரிவாரத்துடன் வந்து சேர்ந்தது. எல்லோரும் எழுந்து நின்று மரியாதையுடன் வரவேற்றனர். சிரித்த முகத்துடன் ஒளிவீசுகின்ற மூர்த்தி ஸ்ரீவிஜயீந்திரர் கம்பீரமாக நடந்து வந்து சித்ராஸனத்தை அலங்கரித்தார்.

போட்டிவிதிகள் நிச்சயமான பிறகு, முதலில் வடநாட்டுப் பாடக நிபுணன் பாடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. பாடகன் பாட ஆரம்பித்தான். உத்தமமான குரல், இனிமையாகப்பாடிக் கொண்டிருக்கிறான். தோடி, பைரவி, ராகங்களைத் தங்குதடையின்றி ஆலாபனை செய்து ஒன்றிரண்டு பதங்களைப் பாடினபிறகு பாடகன் மாலகம்ஸராகத்தை (மால்கோஸ் ஆரம்பித்தான். வட தேசத்து மாலகம்ஸராகம் கர்நாடகம் இசையில் ஹிந்தோளமெனப்படுகிறது. ராகத்தை விஸ்தாரமாக ஆலாபனை செய்து கொண்டிருக்கிறான். விசித்திர முறையில் "ஆ"காரங்களை, வர்ணித்துக் கொண்டிருக்கிறான். ஜனங்கள் யாவரும் மெய்மறந்து, "ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தில் இவ்வளவு மகிமை இருக்கின்றதா என்ன? என்று வியந்து அவனைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். ஸ்ரீகளவர் அவனுடைய ஸங்கீதத் திறமையைக் கண்டு மகிழ்ச்சியுடன் மெச்சி தலை ஆட்டிக் கொண்டிருக்கின்றார்.. ஆலாபனை ஆயிற்று ஒரு பதத்தைப் பாடி முடித்து ஸ்ரீகளவர்கள் பக்கம் பார்த்து, "நானிப்பொழுது பாடியதைத் தாங்கள் பாட முடியுமா?" என்றான். ஸ்ரீயவர்கள் புன்னகையுடன், "வெகு உத்தமமான முறையில் பாடினீர். ஆனந்தமடைந்தேன். உமது

CC0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


விருப்பப்படி நாம் அதைப்பாடிக் காட்டுவோம்" என்று பக்கவாத்யக்காரர்களுக்கு சமிக்ஞை செய்தார். ஸ்ரீயவர்களின் கானத்திறமையை அறிவதற்காக அதிக ஆவலுடன் நிசப்தமாக அமர்ந்துள்ளனர் சபையோர்கள். இரண்டு தம்பூராக்களின் ஸ்ருதியின் ரீங்காரம் எங்கும் வியாபித்து ஜனங்களின் மனதை ஆகர்ஷித்துள்ளது. "மாலகம்ஸ" ராகத்தையே ஆரம்பித்தார்! என்ன ஆச்சரியம்! ஒருமுறை கர்நாடக பாணியில் ஆலாபனை செய்தால் மற்றொருமுறை உத்தராதிபாணியில் ஆலாபனை செய்து கொண்டிருக்கிறார். எப்பேர்ப்பட்ட இனிமையான குரல்! எவ்வளவு ப்ரியமாக உள்ளது! அந்த ஆலாபனம் ஒரேமாதிரியில்லாமல் இனிமையாக மாறுதல்களுடன் மனதை வசீகரிக்கும் ஏற்றம் இறக்கம் (Ups and downs). அலையலையாக ஸ்ரீயவர்களின் முகத்தினின்று ஹிந்தோளராக வாஹினி புறப்படுகிறது. யாவரையும் மெய்மறக்கச் செய்தது. ஹிந்துஸ்தானி க்ரமத்தில்பாடும் பொழுது "மாலகம்ஸ" ராகம் ஸ்ரீயவர்களின் நாபிக்கமலத்திலிருந்து புறப்படும்பொழுது தீர-கம்பீர-மேக த்வனியை வெட்கம் கொள்ளும்படியாக ப்ரவஹிக்கிறது!! உத்தராதி பாடகன் தன்னைத்தானே மறந்து, "அற்புதம்! அற்புதம்!" என்று பாராட்டி மகிழ்ச்சியுடன் ஆட ஆரம்பித்தான். அவனது சிஷ்யர் கூட்டம், இதென்னபாண்டித்யம்! இவர் சாமானியரல்லர். சாக்ஷாத் கான ஸரஸ்வதியே பாடுவதைப் போலுள்ளது என்று வியந்து அமர்ந்துள்ளனர். வாத்யகாரர்கள் ஸ்வாமிகளுடன் வாசிக்க இயலாமல் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். சிரித்த முகத்துடன் அவர்கள் பக்கம் கருணையுடன் பார்த்து ஆலாபனையை முடித்து ஸ்ரீமதாசார்யரை ஆனந்த முகுந்த அரவிந்த நயன, ஆனந்த தீர்த்த பராநந்தவார" என்னும் த்வாதச ஸ்தோத்ரத்தின் ஸ்ரீஹரி ஸ்துதியைப்பாடி இடையே தம்முடைய சொந்த முறையில் "ஸங்கதி" மற்றும் ஸ்வரங்களைப்பாடி முடித்தார்.

"கான மார்த்தாண்டன்" என்ற பட்டத்தினால் ப்ரசித்திபெற்ற அந்த ஸங்கீத வித்வான் தனக்கு மிகப்ரியமானதும் நன்கு பயின்ற ஒரு ராகத்தினால் ஸ்வாமிகளை ஜயிக்க வேண்டுமென்று முதலிலேயே நிச்சயம் செய்து கொண்டிருந்தபடி ஸ்ரீகளவர்களின் கானம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


முடிந்த உடனேதான் மறுபடியும் பாடுவதாகச் சொல்லவும் ஸ்வாமிகள் புன்னகையுடன், "கான மார்த்தாண்டரே! உமக்கேன் சிரமம்? எந்த ராகத்தினால் நம்மை ஜயிக்க யோசிக்கிறீரோ, அதையே நீங்கள் பாடும் க்ரமப்படியே, எமது க்ரமத்திலும் பாடிக் காண்பிக்கிறோம், கேளுங்கள்" என்று "ஜயஜய வந்தி" ராகத்தைப் பாடத் தொடங்கினார். அந்த ராகத்தைக் கேட்டவுடனேயே பாடகன் திடுக்கிட்டான். ஸ்ரீகளவர்கள் தனது க்ரமப்படியே விதவித பாணியில் பாடுவதைக் கேட்டு முகம் களையிழந்தது. வெளுத்துப்போயிற்று! ஸ்ரீகளவர் தன்னை மீறின திறமையுடன் பாட ஆரம்பித்தபொழுது அவன் உடல் வியர்த்தது. ஒரு அழகான பாடலைப்பாடி உத்தராதி க்ரமத்தில் ஸ்வர விந்யாஸம் செய்தபிறகு பயத்தினால் நடுங்கினான். "இவர் ஸாமநியரல்லர், மஹாதபஸ்விகள் இப்படிப்பட்டவருக்கு நான் எப்படிப்பட்ட அபசாரம் செய்தேனே?" என்று பச்சாத்தாபமடைந்து ஸ்ரீயவர்களின் பாதத்தை நமஸ்கரித்து பக்தியினால் புளகாங்கிதமடைந்து, "வித்யா சக்ரவர்த்திகளே, நான் மஹா அபராதம் செய்துள்ளேன். தமது பாண்டித்யத்தின் முன்பு, ஞானத்தின் முன், நான் அற்பன், மஹாத்மாவான தம்முடன் போட்டியிடும் தகுதி எனக்கில்லை! எங்களது ஹிந்துஸ்தானி க்ரமத்தில் புதுப்பாடம் தம்மிடம் தான் கற்றுக்கொண்டேன். தங்களைப் பார்த்தால் எனது குருநாதனின் நினைவு வருகின்றது. அவர் சங்கீதக் கலையினால் அநேக அதிசயங்களைக் காண்பித்துள்ளார். தாமும் அதைப்போலவே ஏதாவது அதிசயத்தைக் காண்பித்தால் ஸம்பூர்ணமாகத் தங்களைச் சரணாகதியடைந்து ஜகத்தில் தங்களுக்கு நிகரில்லையென்று பறைச்சாற்றுவேன். தயவுசெய்ய வேண்டும்" என்று விக்ஞாபித்தான்.

ஸ்ரீபாதங்கள் ஒரு நொடி யோசித்து சங்கீத சக்ரவர்த்தியென்று பெயர்பெற்ற தான்சேன் "தீபக்" ராகத்தைப்பாடி அதிசயம் நிகழ்த்தினாரென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதையே நீ இப்பொழுது ஸ்ரீஹரியின் கிருபையினால் காண்பிக்க முயற்சிக்கிறோம்" என்று சொல்லி பெரிய "ப்ரணதி" (கமலம்)யில் எண்ணை மற்றும் திரியையும் போட உத்திரவிட்டார். ஒரு நொடிப்பொழுதில் ஸ்வாமிகளின் ஆஜ்ஞைப்படி தீபம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தயாராயிற்று. ஸ்வாமிகளின் முகம் கம்பீரமாயிற்று. ஏதோ ஒரு வெளிப்படாத உணர்ச்சி-விசித்திர ஒளியினால் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறார் ஸ்வாமிகள். "தீபக்" ராகத்தைப் பாட ஆரம்பித்தார் பிரபு. மந்த ஸ்வரத்தில் "விளம்ப" கதியில் ஆரம்பமான ராகாலாபனை எல்லோரையும் ஆனந்தத்தில் மூழ்கச் செய்து மேலும் அற்புதமான ஆலாபனையை எட்டியது. வரவர "த்ருதகதி"க்கேறிற்று (துரிதகாலம்) கங்கையின் மேலெழும் அலைகளைப் போல ராகம் புறப்பட்டது. மதுரமானராக அலை எல்லா இடங்களிலும் பரவி சபையோரை ஏதோ ஒரு அற்புத தெய்வ லோகத்திற்கு அழைத்துக் கொண்டு போய் மெய்மறக்கச் செய்துள்ளது. ஆச்சரியம்! பரமாச்சரியம்!! திடீரென்று, இருந்தாற்போல் தீபத்திலுள்ள திரி குபீலெனத் தீப்பற்றிப் பிரகாசமாக எரிந்து ஜ்வலிக்க ஆரம்பித்தது. பாடகன் இந்த சாமர்த்தியத்தைக் கண்டு பிரமித்துப் போனான். "ஆச்சரியம், அற்புதம்!" என்று சொல்லிக்கொண்டே ஜனக்கூட்டம் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி ஸ்ரீகளவர்களுக்கு ஜயகோஷம் செய்து பாராட்டினார்கள். உத்தராதிப் பாடகன் கண்ணினின்று ஆனந்தக் கண்ணீர் ஆறாகப்பெருகிற்று. "இது எப்பேற்ப்பட்ட பாண்டித்யம்! இந்த ஸ்வாமிகளுக்குத் தெரியாத வித்தையே இல்லையென்று தோன்றுகிறதே? நமது குருநாதனை மீறின் நிபுணத்வம் காண்பித்த இந்த மஹானுபாவர் யாரோ தேவதையாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இத்தகையத் திறமை எவ்வாறு ஸாத்யமாகும்?" என்று ஆனந்தத்தால் பாராட்டி ஆனந்த்மேலீட்டினால் ஸ்ரீகளவரின் பாதத்தின் மீது தலைவைத்து "தன்யனானேன், ஜகத்ப்ரபோ" தமது அமோகமான ஸங்கீத சக்தியைப் பரிசிலித்து எல்லையற்ற மகிழ்ச்சியினால் நிறைந்து என்னால் பேசமுடியவில்லை. நா எழவில்லை ப்ரபோ; நான் தங்கள் அடிமை, என்னை உய்வித்து ஆசீர்வதிக்க வேண்டும். தங்களுக்குச் சமமானவர் இந்த பூமியில் தாம் ஒருவரேதான்" என்று ப்ரார்த்தனை செய்யவும் ஸ்ரீபாதங்கள் அவனைச் சமாதானப்படுத்தி அபயமளித்தார். சபையில் எங்கு பார்த்தாலும் எல்லோரும் ஸ்ரீகளவரைப் பாராட்டி அவர் மகிமையை வர்ணிப்பவ்ராகவே இருந்தனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



இவ்வாறு ஜனங்கள் ஆச்சரியமடைந்து பாராட்டிக் கொண்டிருக்க ஜனக்கூட்டத்திலிருந்து ஒருவன் முன்னால் வந்து, "ஸ்வாமிகளே, மன்னிக்க வேண்டும். கர்நாடக ஸங்கீதத்தின் களஞ்சியம் என்று சொல்லப்படும் விஜயநகரத்தின் ஆஸ்தான பண்டிதனான நான் ஜீவித்திருக்கும்வரை, "உமக்குச் சமமானவர் வேறுயாருமில்லை" என்று உத்தரதேசப்பாடகன் கான மார்த்தாண்டன் சொன்னதை ஒப்புக்கொள்வது முடியாத காரியம்" கர்நாடக ஸங்கீத முறையில் என்னைத் தாங்கள் ஜயித்தால்தான் அந்தப் பாராட்டும் விருதும் தங்களுக்குரித்தாகும். இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?" என்று ஸவால் விடவும் ஜனங்களெல்லோரும் ஆச்சரியத்தினால் அவரின் தைரியத்தைமெச்ச ஆரம்பித்தனர்.

ஸ்ரீகளவர் மிக்க மகிழ்ச்சியுடன், "ஸ்ரீஹரி எவ்வளவு தயாமயன், நாம் இன்னொரு முறை கர்நாடக ஸங்கீத வித்வானுடன் போட்டியிடும் சிரமம் வேண்டாமென்று அந்த நல்லவாய்ப்பைக் கொடுத்திருக்கிறானல்லவா? பரமாத்மனின் இச்சை எப்படியோ அவ்வாறேயாகட்டும். இப்பொழுதே உம்முடன் போட்டியிட நாம் தயாராயுள்ளோம். நடக்கட்டும் உமது பாண்டித்ய நிருபணம்" என்று பதில் சொல்லவும், அந்த விஜயநகர ஆஸ்தான சங்கீத வித்வான், "மஹாஸ்வாமி, நான் பாடவேண்டுமென்று இங்குவரவில்லை. தமது சக்தியைப் பரீக்ஷிக்க இங்கு வந்துள்ளேன். இன்று காண்பித்த அதிசயத்தை கர்நாடக முறையினால் காண்பித்தால் அப்பொழுது தாம் உண்மையாகவே பெரியவர் என்று ஒப்புவேன்" என்று சொல்லவும் ஸ்ரீகளவர் புன்னகையுடன் "ஸங்கீதத்தினால் கல்லைக் கரைக்க வேண்டுமா? மந்தமாருதத்தை வரவழைக்க வேண்டுமா? அகாலமான இந்த வேளையில் மழைவரும்படி செய்ய வேண்டுமா? உமக்கிஷ்டமானதைத் தெரிவியும்" என்றார்.

சங்கீத வித்வான் ஸ்ரீகளவருக்கு வணங்கி, "இன்று கர்நாடக முறையில் பாடி தாங்கள் சொன்னபடி செய்யக்கூடியவர் ஒருவருமில்லை என்று ஜனங்களின் எண்ணமாயிருக்கிறது, எனக்கும் அதே சந்தேகம் உண்டாயிருக்கிறது. மழையைத் தாங்கள் பெய்ய வைத்தால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


எனது கற்பனை தப்பென்று ஒப்புக் கொள்ளுகிறேன்" என்று விஞ்ஞாபனம் செய்தான். உடனே ஸ்ரீஸ்வாமிகள், "அம்ருதவர்ஷிணி" ராகத்தைப்பாட ஆரம்பித்தார். ஒரு நாழிகையாயிற்று. ஜனங்கள் யாவரும் சித்திரப் பதுமைகள் போல் உட்கார்ந்திருக்கின்றனர். ஸ்ரீகளவர் மெய்மறந்து பாடிக்கொண்டிருக்கின்றார். பளிச்சிடும் ஆகாயத்தில் எங்கிருந்தோ கார்மேகம் வந்து மூடிக்கொண்டது. இடி மின்னல்கள் ஆரம்பமாயின!! திடீரென்று தாரைதாரையாக மழை பெய்ய ஆரம்பித்தது. அதிசயம்!! ஸ்ரீகளவர் பாட்டை நிறுத்தினார். மழையும் நின்றுவிட்டது.

கும்பகோணத்தின் ஜனங்களுக்கு இன்று ஆச்சரியத்தின் மேலாச்சரியம்! என்றும் கண்டு கேட்டறியாத அதிசயத்தை கண்டு கொண்டிருக்கும் தங்கள் கண் காது சரியாக இருக்கின்றனவா என்ன? இது என்ன கனவோ நினைவோ என்று சபையோர் ஆச்சரியப்பட்டனர். சங்கீத வித்வான் ஸ்ரீகளவருக்கு சாஷ்டாங்கமாக விழுந்து, "தந்தையே, நானின்று தன்யனானேன்! கர்நாடக ஸங்கீத. வித்வான்களுக்கு வந்த அபகீர்த்தியைப் போக்கிய தாங்கள் சாக்ஷாத் சரஸ்வதி தேவியின் வர புத்ரரென்பதில் சந்தேகமில்லை. கர்நாடக சங்கீதத்தின் பெருமையைக் காண்பித்து இன்று சங்கீதத்திற்கே தாம் இருப்பிடம் என்று சொல்லப்படுவீர். இதை ஜகத்திற்கு தமது மூலமாகக் காண்பிக்கட்டும் என்றே நானிங்கு வந்திருந்தேன். மஹாமஹிமரான ராஜகுரு வ்யாஸப் பிரபுகளின் சிஷ்யரும் வீணை கிருஷ்ணபட்டரின் பந்துக்களும் அவரிடமே பால்யத்தில் ஸங்கீதத்தைப் பயின்றவரும், சதுஷ் ஷஷ்டி கலாவல்லவருமான (64 கலை வல்லவர்) தங்களுக்கு முடியாதது உண்டா என்ன? விஜயநகரத்தில் தமது அநேக கலை நிபுணத்வத்தைக் கண்டு தம்மிடத்தில் குருபக்தி செய்கின்ற எனக்குத் தங்கள் மகிமை தெரியும். ஆயினும் கர்நாடக ஸங்கீதமே பாரதீய சங்கீதத்தின் மூலம் (ஆதாரம்) இந்த ஸங்கீதத்தின் செல்வாக்கினால் எதுவானாலும் சாதிக்க முடியும் என்பதை ஜனங்களுக்குத் தெரிவிப்பதே எனது ஆசையாக இருந்தது. ஆனால் அந்த அற்புத சக்தி இன்று நம்மவர்களில் மறைந்து போய்க் கொண்டிருக்கிறது. இந்தச் செயல் இன்றைய நிலைமையில் தம்மைப்போன்ற அவதார புருஷர்களால் தான் ஸாத்யமென்று நம்பி அதற்காகவே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

இங்கே வந்த எனக்கு தாங்கள் இன்று ஹிந்துஸ்தானி ஸங்கீதக் கலையில் வெளிப்படுத்திய அதிசயத்தைக் கண்டு பரமானந்தமானது. கர்நாடக ஸங்கீத ரீதியிலும் அதைக் காண்பிக்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்றே இந்த தந்திரத்தைச் செய்தேன். நான் செய்தது அபராதமானால் மன்னிக்க வேண்டும். குருதேவா தங்களுக்கு எனது ஆனந்தமான வணக்கங்கள்! என்று சொல்லி அங்கு இருக்காமல் அந்த சபையிலிருந்து மறைந்து போனான்.

உத்தரதேசத்து வித்வான் பாடகன், "ஸ்வாமீ, தாங்கள் எனது குருதான்சேனை மீறின மஹானுபாவர் தமது தரிசனத்தினால் நான் கிருதார்த்தனானேன். உத்தரவானால் போய் வருகிறேன்" என்று நமஸ்கரித்தான். ஸ்ரீகளவர் அவனுக்கு விசேஷமாகப் பணம், பொன், வஸ்திரம், ஆபரணங்களைக் கொடுத்தருளி பல மந்திராக்ஷதை கொடுத்து ஆசிர்வதித்து அனுப்பி ஜனங்களின் ஜயகோஷங்களுக்கிடையே ஸ்ரீமடத்திற்கு எழுந்தருளினார்.

## 40. பட்டோஜி தீக்ஷிதருடன் வாதமும் வெற்றியும்:

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் மேன்மையைக் கேள்விப்பட்டு இவர் உண்மையில் அப்படிப்பட்ட பண்டிதர் தானா? அவர் யாரும் ஜயிக்கப்பட முடியாதவரா, என்ன, விதவிதமான சாஸ்திரங்கள்; கலைகள், இவருக்கு இவ்வளவு தூரம் நிபுணத்துவம் எவ்வாறு வந்துள்ளது? என்றெல்லாம் அநேக பரவாதிகள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தனர். இம்மாதிரி ஜனங்களில் காஞ்சிக்ஷேத்திரத்தில் வாஸம் செய்து கொண்டிருந்த ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரென்று ஒருவர்.

ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் ஸாமான்யரல்லர். அஸாதாரண பண்டிதர். வாக்யுத்தத்தில் (வாதம் செய்வதில்) அனுபவம் முதிர்ந்த மஹாமல்லர். கிரந்தம். இயற்றுவதில் மஹாமேதாவி. ராஜா மஹாராஜாக்களினால் மரியாதை செய்யப்பட்டவர். மேலும் நல்ல பெயர் பெற்றவர். அத்வைத மதஸ்தாபனாசார்யரான ஸ்ரீசங்கராசார் யருக்கடுத்தபடி எவ்வாறு ஸ்ரீவித்யாரண்யரினால் பிரக்யாதி பெற்றதோ, அவ்வாறே ஸ்ரீவித்யாரண்யருக்கடுத்தபடியாக ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரே அந்த மதத்திற்கு ஆதாரஸ்தம்ப மெனக் கருதப்பட்டார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அப்பய்ய தீக்ஷிதர் மஹா உழைப்பாளி ஸ்ரீகண்ட மதஸ்தாபனாசார்யரென்னும் விருது அவருடையதாகும். இவ்வாறு பிரக்யாதி பெற்றவரான தீக்ஷிதர் ஸ்ரீமத்வ மதத்தின் மீது அநேக தோஷங்களை ஆரோபித்து, கிரந்தங்கள் இயற்றி கும்பகோணத்திற்கு ஸ்ரீவிஜயீந்திரருக்கு அனுப்பி, த்வைமதஸ்தாபகரான விஜயீந்திரர் அதற்கு என்ன சமாதானம் சொல்லுவாரென்று தெரிந்து வர ஒரு ப்ரதிநிதியை அவரிடம் அனுப்பினார். ஸ்ரீவிஜயீந்திரர் அப்பய்ய தீக்ஷிதர் த்வைத சித்தாந்தத்தின் மீது ஆரோபணம் செய்யப்பட்ட தோஷங்கள் சரியல்லவென்று, ஸ்ரீபாதராயண ஸ்வாமிகளுடைய அபிப்ராயத்தையே ஸ்ரீமத்வாசார்யர், பிறகு டீகாராயர், முதலியவர் தங்களுடைய பாஷ்யம், மற்றும் டீகா (வ்யாக்யானம்)களிலும் விவரித்துள்ளாரென்றும் மிக்க கம்பீரமான வசனங்களினால் ஆமோதித்து தீக்ஷிதரின் க்ரந்தத்தை எழுத்துக்கெழுத்து கண்டனம் செய்து ஒவ்வொரு க்ரந்தத்திற்கும் பதில் க்ரந்தம் எழுதியனுப்பினார். அப்பய்ய தீக்ஷிதர் விஜயீந்திரரின் க்ரந்தரசனாத்திறமை, ப்ரதிபாதன க்ரமம் (ப்ரமாண மூலம் ஆமோதிக்கும் விதி) மேலும் அற்புத ரசனாசைலி (Style),களைக் கண்டு, ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார். அதை மெச்சினார். இவ்வாறு இருவருக்கும் கிரந்தம் மாற்று கிரந்தங்கள் மூலம் அறிமுகமேற்பட்டது. ஆனால் நேருக்குநேர் வாதவிவாதம் செய்து ஒருவரையொருவர் எதிர்க்கும் வாய்ப்பு ஏற்படவில்லை.

ஸ்ரீவிஜயீந்திரருடன் வாதம் செய்ய வேண்டுமென்ற விருப்பம், ஆர்வம் இவைகளென்னமோ உண்டாயின. அப்பய்ய தீக்ஷிதருக்கு! இவ்வித நிலையில் வ்யாகரண சாஸ்திரத்தில் நிகரற்றவரென்று கருதப்பட்ட ஸ்ரீபட்டோஜி தீக்ஷிதருடன் திடீரென்று கலந்து பேச வேண்டிய சந்தர்ப்பம் வந்து சேர்ந்தது. பேச்சோடு பேச்சாக ஸ்ரீவிஜயீந்திரரின் பாண்டித்யம், வாதத்திறமைகளின் விஷயமாகச் சர்ச்சை நடந்தது. பட்டோஜி தீக்ஷிதர் த்வைத பாஷ்யகாரரான ஸ்ரீமத்வாசார்யர் மற்றும் டீகாசார்யர் தங்களுடைய க்ரந்தங்களில் வ்யாகரணப்ரக்ரியைகளை (யுக்தி, விதிகள்) சரியாக அறியாமல் தவறு செய்துள்ளாரென்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அதைக் கண்டித்து தாம், "தத்வ கௌஸ்துப" (तत्वकौस्तुभ) என்னும் கிரந்தம் எழுதியிருப்பதாயும், வாதத்தில் விஜயீந்திரரைத் தான் ஜயிக்க முடியுமென்று சொல்லி அப்பய்ய தீஷிதருக்குத் தமது க்ரந்தத்தைக் காண்பித்தார். தீக்ஷிதருக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாயிற்று. அந்த க்ரந்தத்தைப் பார்த்து த்ருப்தியடைந்து விஜயீந்திரரின் வாதத்திறமையைப் பரீக்ஷிக்க இது நல்ல சுப சந்தர்ப்பமென்று நினைத்து பட்டோஜி தீக்ஷிதரைப் பாராட்டி உற்சாகமூட்டி கும்பகோணத்திற்குப் போய் விஜயீந்திரரை ஜயித்து வரும்படி சொல்லியனுப்பினார். பட்டோஜி தீக்ஷிதரின் கும்பகோணப்ரயாணம் தொடங்கியது.

கும்பகோணத்தில் விஜயீந்திர ஸ்வாமிகளின் மடத்தில் இன்று பெரிய வைபவம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் மடத்திற்கு வந்து போய்க் கொண்டிருக்கின்றனர். வித்வத் சபை கூடியுள்ளது. தர்க்க, மீமாம்ஸா, வேதாந்த சாஸ்திரங்களில் அநேகமானவர்கள், பண்டிதர்கள், பரீக்ஷை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் மற்றும் அவரது ப்ரிய சிஷ்யரான ஸ்ரீவிஜயீந்திரர் சித்ராஸனத்தில் வீற்றிருக்கின்றனர். பண்டிதரநேகர் வாக்யார்த்த விசாரம் செய்து கொண்டிருக்கின்றனர். ஓரிடத்தில் அநேகமானவர்கள், வித்வாம்ஸர்கள் க்ருபாதிருஷ்டி தம்மீது எப்பொழுது விழுமோ, தாம் எப்பொழுது ஸ்ரீகளெதிரில் தமது பாண்டித்யத்தின் பெருமையைக் காண்பித்து ஸ்ரீகளவரின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரராகப் போகின்றோமோ என்று ஆர்வத்துடன் காத்துக் கொண்டு அமர்ந்திருக்கின்றனர்.

இவ்வளவு வைபவத்திற்குக் காரணமென்ன? வைபவம் நிறைந்த மஹாசபையின் நோக்கம என்னவாயிருக்கலாம்? அன்று ஸ்ரீத்வைத பாஷ்யங்களுக்கு டீகா இயற்றி ஸ்ரீமத்வ மதத்தின் விசேஷத்வத்தை ப்ரகடனம் செய்து, "ஸர்வஜ்ஞ கல்பர்" என்று லோகத்தில் பெயர்பெற்ற ஸ்ரீஜயதீர்த்த குருபாதரின் ஆராதனை மஹோத்வம் ஸ்ரீமடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஸ்ரீடீகாசார்யரின் வித்யாபீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவிஜயீந்திரர் குருபாதர் ஸ்ரீசுரேந்திர தீர்த்தரின் ஆணைப்படி ஸம்ப்ரதாயப்படி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீடீகாக்ருத்பாதரின் புண்யதிவஸத்தை விசேஷமுறையில் நடத்திக் கொண்டிருந்தார் என்று சொன்னால் கேட்கவும் வேண்டுமா அதன் வைபவம்? அதனாலேயே இவ்வளவு ஜனங்கள் வித்வத் வித்யார்த்திகள் வந்து நிரம்பியுள்ளனர். அதனால் தான் இவ்வளவு வைபவம்!!

சஹனாய், டமாரம் இவைகளின் ரீங்காரம் காலை சபைக்கூட்டம் முடிந்ததென்று தெரிவித்தது. மூத்த ஸ்வாமிகள் மஹா ஸமஸ்தானத்தின் பூஜைக்காக ஸ்நானத்திற்குப் போகவேண்டும். அதற்குள் வெளியே ஏதோ கோலாகலம் கேட்டதும் ஸ்ரீகளவர்கள் அங்கு தமது பார்வையைச் செலுத்தினார். ஜனக்கூட்டத்தில் வழி ஏற்படுத்திக் கொண்டு வெள்ளி தண்டத்துடன் ஒருவன் வந்து இரண்டு ஸ்வாமிகளுக்கும் வணங்கினான். கேள்வி கேட்பதைப் போல் அவனை ஸ்வாமிகள் பார்த்தார். வாயில்காப்பவன் விக்ஞாபித்தான்-"ஜயுஜய பராக்! மஹா பண்டிதரொருவர் வாதம் செய்ய வந்திருக்கிறார், மஹாஸ்வாமி. இப்பொழுதே வாதம் நடக்க வேண்டுமாம். அனுமதிக்காக வெளியில் காத்துக் கொண்டு நிற்கிறார்" என்று விண்ணப்பிக்கவும், ஸ்ரீகளவரின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. தேஜஸ்ஸு நிறைந்த கண்களில் ஒளி வீசின. மந்தஹாஸத்துடன் ஒரு முறை எழுந்து "இது எப்பேர்ப்பட்ட யோகம், ப்ரிய சிஷ்யர் டீகாராயரின் ஸேவை செய்யும் புண்யம் எப்படிப்பட்டதாயுள்ளது. வெகு நாளாக உண்டான விருப்பம் அவருடைய புண்ய தினமான இன்றே பூர்ணமாகும் சந்தி வந்துள்ளதே! தன்யன், ஸ்ரீடீகாக்ருத்பாதரே, தமது பாத சேவகரான நாமே தன்யர்!! என்று உணர்ச்சி வசப்பட்டு ப்ரகடனம் செய்து வாயிற்காப்பவனைப் பார்த்து, "தாமதமேன், போய் மரியாதையுடன் அவரை அழைத்துவா, வாதம் ஆன பிறகே பூஜை! என்று பார்த்து புன்னகை செய்தார். விஜயீந்திரர், "குருபாதரின் ஆணையைச் சிரஸாவஹிக்கிறேன்" என்று சொன்னார்.

சபையோரனைவரும் தீக்ஷிதரின் வருகையை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பரம்மதேஜஸ்ஸுடன் விளங்கும் பட்டோஜி தீக்ஷிதர் சிஷ்ய சமூகத்துடன் சபையில் நுழைந்து உபய ஸ்ரீகளவரை நோக்கி நடந்தார். விஜயீந்திரர் தீக்ஷிதரை மகிழ்ச்சியுடன்

CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வரவேற்றார். ஸ்ரீகளவரெதிரில் வந்து நின்றார் தீக்ஷிதர். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு ஸ்வாமிகளின் தபச்சக்தி, அற்புத தேஜஸ், தீக்ஷிதரை நமஸ்கரிக்கத் தூண்டியது. தீக்ஷிதர் ஸ்ரீவிஜயீந்திரரின் காந்தியைக் கண்டு ஆனந்தமடைந்தார்.

பரஸ்பரம்க்ஷேமலாபங்கள் விசாரித்த பிறகு மகிழ்ச்சியுடன் ஸ்ரீகளவர்கள், "எழுந்தருள வேண்டும் பட்டோஜி தீக்ஷிதர் அனுப்பியுள்ளாரென்று தோன்றுகிறது. மகிழ்ச்சி அமருங்கள்" என்றார். தீக்ஷிதரும் சிஷ்யர்களும் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்தனர். அப்பய்ய தீக்ஷிதர் அனுப்பினாரென்பது இவருக்கு எப்படித் தெரிந்தது? என்ற ஆச்சரிய உணர்ச்சி அவர்கள் முகத்தில் காணப்பட்டது.

தீக்ஷிதர் சிரித்துக் கொண்டே புருவத்தை நெறித்து "ஸ்ரீகளவர்களின் கீர்த்தியானது எங்கும் வியாபித்துள்ளது. அது என்னை இங்கே வரும்படி செய்தது. தேசத்தில் பரவியிருக்கும் அந்தக் கீர்த்தியின் உண்மையைப் பரீக்ஷிக்கத்தான் வந்துள்ளேன். பரீக்ஷை ஆகலாமல்லவா?" என்றார். ஸ்ரீகளவர் சிரித்துக்கொண்டே தமாஷாக, "நாம் உமது கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறோம். பரீக்ஷிக்கும் ஆவல் எனக்கும் அநேக நாட்களாக இருந்தது. அநேகமாக இன்று அது முடிக்கலாமல்லவா? சரிதானே! என்றார்.

தீக்ஷிதர் ஸ்ரீகளவரின் பேச்சைக்கவனித்து, "ஸ்வாமி களவர்கள் ஒருவேளை என்னைக் களக்கூத்தாடி, ஸங்கீத வித்வான், அல்லது மாந்திரீகன் என்று கருதுவதாகத் தெரிகிறது! என்னோடு வாதம் செய்வது அவ்வளவு எளிதல்ல!! இதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மேல் தொடர்வது நல்லது" என்று பரிகாசமாகச் சொல்லி அமர்ந்தார்.

ஸ்ரீயவர்கள் சிரித்துக்கொண்டே பதில் சொன்னார், "தீக்ஷிதரே, வெற்றி தோல்விகள் ஈச்வரனதீனம். நமக்கு கூத்தாடி, வ்யாகரண பண்டிதர், பாடகன், ஷட்சாஸ்திர பாரங்கதன் இவர்கள் யாவரும் ஒன்றே! எல்லா வாதிகளையும் ஒரே வகையாகக் காணுவது நமது ஸ்வபாவம்!! வெறும் பேச்சினால் என்ன ப்ரயோஜனம்? வாதம் தொடங்கட்டும்" "स्पष्टमग्रे भविष्यति" என்றார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீக்ஷிதர்:- "ஓஹோ! அப்படியா? வெகு சந்தோஷம். உமது பேச்சிருக்கட்டும் கேளுங்கள். உமது மதப்ரவர்த்தகாசார்யர் மற்றும் டீகாசார்யர் இருவரையுமே கண்டனம் செய்து இந்த க்ரந்தம் எழுதியுள்ளேன். இதற்கு நீங்கள் என்ன சொல்ல முடியும்? என்று சொல்லி "தத்வ கௌஸ்துப" நூலை ஸ்ரீயவர்களின் முன் வைத்தார். ஸ்ரீகளவர்கள் ஆர்வத்துடன் அந்த நூலைப் பார்த்து," உமது கிரந்தத்தில் சொல்லியிருக்கும் தோஷங்கள் எதுவும் நமது மதத்தில் கிடையாது. எங்கள் பாஷ்யகாரர் மற்றும் டீகாசார்யரையும் கண்டிக்கும் ஒருவர் இன்னும் பிறக்கவேயில்லை. உமது நூலில் நீங்கள் ஆரோபணம் செய்துள்ள தோஷங்களை நிரூபிக்க முடியுமா என்று கேட்கவும் இருவருக்கும் உடனே வாக்குவாதம் ஆரம்பமாயிற்று.

தீக்ஷிதர்:- உமது டீகாசார்யர் ப்ரமாண ஸஹிதம் ஆமோதித்திருக்கும் விஷயங்களிருக்கட்டும். அவருடைய பதப்ரயோகங்களே சரியானவையல்ல. ஸாமான்யமாக அவர் எல்லாவிடத்திலும் உசிதமல்லாத பதங்களையே ப்ரயோகம் செய்துள்ளார்.

விஜயீந்திரர்:- டீகாசார்யர் எங்கும் அவ்வாறு உபயோகிக்கவில்லையே!

தீக்ஷிதர்:- "जयतीर्थोऽपि प्रायेण अपशब्दान प्रायुक्त तथाच तत्व प्रकाशिकायां" स्वांतध्वांततिकृंतनं" इत्युक्तं निकर्तनं इतियुक्तं" ஸ்வாமி! ஒவ்வொன்றாகச் சொல்லுகிறேன். கேளுங்கள். உமது ஜயதீர்த்தர் ஸாமான்யமாக அபசப்தங்களை ப்ரயோகம் செய்கிறார். உதாரணமாக அவருடைய "தத்வப்ரகாசிகா"வை எடுத்துக் கொள்ளுவோம். அதில் "स्वांतध्वांत निकृंतने" என்பதாக ப்ரயோகம் செய்திருக்கிறார். "निकृंतने" என்பது சரியல்ல. "कृतीछेदने" என்ற தாதுவின் நிஷ்பன்னமான பதம் "निकर्तने" என்றாக வேண்டும். ஆகையால் உமது ஜயதீர்த்தர் அபசப்தப்ரயோகம் செய்கிறாரென்பது இதிலிருந்து வெளிப்படவில்லையா.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விஜயீந்திரர்:- நீங்கள் சொல்வது சரியல்ல. ஸ்ரீடீகாக்ருத்பாதரின் ப்ரயோகம் அஸாதுவாதமானதுமல்ல. "एकेनरख निकृंतनेर" என்ற ச்ரௌதப்ரயோகமுள்ளது... இதல்லாமல் "विरह निकृंनत कुंतमुखा कृतिकेतक दंतुरिताशं" என்று ஜயதேவகவி "गीत गोविंद" த்தில் ப்ரயோகம் செய்திருக்கிறார். "कृत छेदने" என்னும் வேறொரு தாதுவினால் "निकृंतने" என்னும் பதம் நிஷ்பன்னமாகுமென்ற விஷயம் வ்யாகரண சாஸ்திர நிபுணர் என்னும் தங்களுக்கு தெரியாமலிருந்தது ஆச்சரியகரம். நாம் மேற்சொன்ன சமாதானத்தை தாங்கள் 'சரியாகப் பர்யாலோசனை செய்தால், 'தமது ஆக்ஷேபத்திற்குத் தேவையேயில்லையெனும் அம்சம் தெரியாமலிருக்காது.

ஸ்ரீகளவர்களின் சமாதானத்தைக் கேட்டு பட்டோஜி தீக்ஷிதர் எதுவும் சொல்ல முடியாதவரானார். ஸ்ரீவிஜயீந்திரரை ஜயிக்க வந்த அவருக்கு ஸ்ரீகளவரை எப்படியாவது பதில் 'சொல்ல முடியாதபடி செய்ய வேண்டுமென்று பிடிவாதம் உண்டாயிற்று மறுபடியும் கோபத்தால் கர்ஜித்தார்.

பட்டோஜி:- உம் போகட்டும் விடுங்கள், உமது டீகாசார்யர் அபசப்தத்தை ப்ரயோகித்துள்ள இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள். ஜயதீர்த்தர் "गंगासंगेन नैर्मलयं रथ्यादिभर्लभ्यते य था" என்று தமது க்ரந்தத்தில் எழுதியிருக்கிறாரல்லவா? இங்கு "रत्यादिभः" என்று ப்ரயோகித்திருப்பது அஸாது.இங்கு "ऋकपूरब्धूः पथामानक्षे" என்னும் சூத்ரத்தினால் ஸமாஸாந்த ப்ரத்யய வருவதனால் "रथ्यापाभि" என்று சொல்லியிருப்பது தப்பு. இதற்கு நீங்கள் என்ன சமாதானம் சொல்லுவீர்கள்?

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


விஜயீந்திரர்:- தீக்ஷிதரே, தமது வாதம் சரியில்லை. ஏனென்றால் பாணினி ஆசார்யர் அந்த ஸூத்திரத்தினாலேயே ஸமாஸாந்த ப்ரத்யயமானது அநித்யமென்று தெரிவித்திருக்கிறார். எவ்வாறென்றால் "ऋक्पूरब्धूः पथमानक्षे" என்று ப்ரயோகம் செய்யாமல் "ऋक्पूरब्धूः पथा" என்று ப்ரயோகம் செய்திருப்பதினால் ..... ஸமாஸாந்த ப்ரத்யயம் அநித்யமென்று சித்தியாவதனால் "स्यादिभिः" என்ற பதத்தை ஸ்ரீடீகாசார்யவர்கள் ப்ரயோகித்திருப்பது அதிஸமஞ்ஜஸமானதும் (உசிதமானதும்) மற்றும் ஸாதுவானதுமாக உள்ளது.

ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகள் இவ்வாறு ஸமாதானம் சொல்லவே தீக்ஷிதருக்கு எதுவும் சொல்லத் தோன்றவில்லை. பதில் சொல்லமுடியாமல் போயிற்றே என்று கவலைகொண்டார். ஸ்ரீவிஜயீந்திரர் மற்றும் சொன்னார் பட்டோஜிதீக்ஷிதரே! தாங்கள் பெரிய பண்டிதர். கேவலம் தத்வத்திற்காக நீங்கள் போராட வந்திருக்கிறீர்கள் என்பதை நாம் அறிவோம். வ்யாகரண ரீதிப்படி நம்ம த்வைத ஸித்தாந்தத்தின் மீது உமது தோஷாரோபணங்கள் பலிக்காது என்னும் விஷயம் இப்பொழுது உமக்கு மனம் அஸமாதானமாயிருப்பது போதும். உமக்கு இன்னும் எந்த ஸந்தேகம் வந்தாலும் நாம் ஸமாதானம் சொல்லுவோம்.

தீக்ஷிதர்:- "இப்பொழுது நீங்கள் சொன்ன விஷயங்களினால் த்ருப்தியடைந்துள்ளேன். ஈச்வரனிச்சை இருந்தால் இன்னொருமுறை சந்திப்போம்" என்று சொல்லி ஸ்ரீகளவருக்கு வணங்கி புறப்பட்டுப்போனார். ஸ்ரீஸுரேந்திரர் ப்ரிய சிஷ்யரின் அற்புதத் திறமையை, வாத சாமர்த்தியம் கண்டு ஆனந்தித்து அன்றைய மஹாஸமஸ்தான பூஜையை அவரே நடத்த வேண்டுமென்று ஆக்ஞாபித்தார். ஸகலரும் ஸ்ரீகளவரின் வாதத்திறமையைப் பாராட்டி ஸ்ரீடீகாரார்யர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

க்ரந்தங்களை ஆமோதித்து விஜய சாலி களான விஜயீந்திரரைப் பாராட்டி ஜயகோஷம் செய்தனர்.

ஸ்ரீவிஜயீந்திர குருவர்யர் பூஜாகாலத்தில் அன்றைய வாத வெற்றியை ஸ்ரீமூலராமருக்கு அர்ப்பணம் செய்து வைபவத்துடன் புண்யதினத்தை நடத்தி வித்வான் மாணவர்களுக்கு விசேஷ சம்பாவனையை அனுக்ரஹித்தார்.

## 41. உடுப்பி யாத்திரை:

ரஜதபீடபுரத்தில் இன்று என்றும் கண்டிராத வைபவம்! ஜனங்களின் ஆரவாரம், உற்சாகத்திற்கு எல்லையேயில்லை. கிராமத்தின் எல்லையிலிருந்து ஆரம்பித்து ஸ்ரீகிருஷ்ண மடத்தின் வரையில் சப்பரங்கள், மாவிலைத்தோரணங்கள், கொடிகளாலும் நகரம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஸ்திரீகள், குழந்தைகள், வயது முதிர்ந்தோர் முதலானோர் எல்லோரும் உற்சாகத்துடன் ஆடிப்பாடிக்கொண்டு இருக்கின்றாரென்றால் ஏதோ ஒரு பெரிய திருவிழா இருக்குமல்லவா? ஸ்ரீவாதிராஜய தீச்வரரின் பரம மித்திரரும் ஸ்ரீமதாநந்த தீர்த்த பகவத்பாதாசார்யரின் மஹாபீடாதிபதிகளுமான ஸ்ரீவிஜயீந்திர குரு ஸார்வ பௌமர் ஸ்ரீகிருஷ்ண தரிசனத்திற்காக உடுப்பிக்கு திக்விஜயம் செய்துள்ளார். ஸ்ரீவாதிராஜருடைய பரம மித்திரரின் வருகை என்றால் கேட்க வேண்டுமா? ரஜத பீடபுரமே ஸ்ரீகளவர்களின் வரவேற்புக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. ஸ்ரீவாதிராஜரின் ஆணைப்படி ஸகல ஏற்பாடுகளும் ஆகிவிட்டன. ஸ்ரீகிருஷ்ண மடத்திலிருந்து புறப்பட்டது ராஜ வைபவங்களோடு கூடிய வரவேற்புக்குழு. யானை, குதிரை, ஒட்டகம், மகர தோரணம், கொடிகள் வெள்ளி, தங்கப்பல்லக்குகள், பூர்ண கும்பம், விதவிதமான வெண்கொற்றக் குடை சாமரங்கள், டமாரம், ஷஹனாயி மங்களவாத்யங்கள் வேத கோஷங்களுடன் ஸ்ரீமடத்தின் அதிகாரிகள் ஸ்ரீவிஜயீந்திரரை வரவேற்க புறப்பட்டார். ஸ்ரீகிருஷ்ண மடத்திலிருந்து கிராம எல்லை வரையில் ஜனங்கள் நிரம்பி வழிகிறார்கள். கிராம எல்லையில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அலங்கரிக்கப்பட்ட "ஹஸுருவாணி" மண்டபத்தில் எல்லோரும் தயாராக ஸ்ரீகளவர்களின் வருகையையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

அதோ கேட்கிறது வாங்காவின் இனிய நாதம் கூடியுள்ள ஜனங்கள் யாவரும் கெடுபிடியினால் பார்த்துக் கொண்டிருக்கையில் வந்து சேர்ந்தது. ஸ்ரீவிஜயீந்திரரின் பல்லக்கு! எல்லாவிதமான புகழ் பாடுபவர்களுடன் போவிகளின் மதுரமான கானத்துடன் வெகு கம்பீரமாக வருகின்ற பல்லக்கைப் பார்த்தால் சாக்ஷாத் தேவேந்திரனே விமானத்திலேறி வருவதைப்போல் ப்ரமை உண்டாகிறது. ஜனங்களெல்லோரும் உற்சாகத்தினால் ஸ்ரீவிஜயீந்திரருக்கு "ஜயஜய" ஸ்ரீவாதிருக்கு "ஜயஜய" என்று ஜயகோஷம் செய்து கொண்டிருக்கின்றனர். ஸ்ரீகிருஷ்ணமடத்தின் அதிகாரிகள் ஸ்ரீவிஜயீந்திரரை ஸகல வைபவங்களுடன் எதிர்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ப்பணித்த பூமாலையை ஸ்ரீவிஜயீந்திரருக்கு அணிவித்தனர். எல்லோரும் பொரி புஷ்பங்களை ஸ்ரீகள்வர்களுக்கு அர்ப்பித்துக் கொண்டிருக்கின்றனர். மஹா கோலாகல ஆரவாரத்துடன் ஸ்ரீகளவரின் ஊர்வலம் புறப்பட்டது. கம்பீரமான தோற்றம், தெய்வீக சிரித்த அழகான முகத்துடன் காணப்படும் ஸ்ரீகளவர்களின் தரிசனத்தினால் மகிழ்ச்சியடைந்த ஜனங்கள் ஒவ்வொரு நொடியும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு வீதிகளிலும் பெண்டிர் ஹாரத்தி எடுத்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீகள்வரின் பல்லக்கு கிருஷ்ண மடத்தை நெருங்கிற்று.

ஸ்ரீகிருஷ்ண மடத்தின் முன்பக்கத்தில் அதிகக் காந்தியுடன் விளங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீவாதிராஜர் மற்ற ஏழு மடாதிபதிகளுடன், நக்ஷத்திரங்களிடையே அழகுடன் ப்ரகாசிக்கும் சந்திரனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீகளவரின் முகத்தில் புன்னகை மலருகிறது. ஸ்ரீகள்வர் உற்சாகத்துடன் முன்னால் வந்து கொண்டிருக்கின்றார். ஸ்ரீவிஜயீந்திரரின் பல்லக்கு திக்விஜயம் செய்தது. டமாரம், மங்கள வாத்தியங்கள் முழங்கின. ஜனங்கள் புஷ்பங்களைத் தூவிக்கொண்டிருக் கின்றனர். ஸ்ரீவாதி ராஜ ஸ்ரீபாதங்களவர் விஜயீந்திரரின் கழுத்தில் புஷ்பஹாரம் அணிவித்து ஸ்ரீவிஜயீந்திரரை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்டார். ஸ்ரீவிஜயீந்திரர் மறுபடியும் மறுபடியும் ஸ்ரீவாதிராஜ தீர்த்தரை ஆலிங்கனம் செய்து கொண்டிருக்கிறார். இருமஹானுபாவரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது, மெய்சிலிர்க்கின்றது. ஆனந்தம் மேலிட்டுத் தொண்டை அடைக்கிறது. பேசநா எழவில்லை. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றிருக்கின்றனர். அந்த அபூர்வக் காட்சியைக் கண்டு எல்லோர் கண்ணிலிருந்தும் கண்ணீர் பெருகிற்று. "ஆஹா, இது எப்பேர்ப்பட்ட நட்பு! எப்படிப்பட்ட இன்பமான பந்துத்வம்! எத்தகைய களங்கமற்ற அன்பு! இவர்களல்லவோ மஹாத்மாக்கள்!! இத்தகைய காணமுடியாத காட்சியைக் கண்ட நர்ம் தான் பாக்யசாலிகள்", என்று ஜனங்களெல்லோரும், மனமார உணர்ச்சியை வெளியில் பிரகடனம் செய்தனர்.

"ஸ்ரீமூலராமாராதகருக்கு நல்வரவு! ரஜதபுரபீடம் இன்று உண்மையாகவே ரஜதபீடபுரமாயிற்று. 25 வருஷங்களுக்குப் பிறகு மித்திரரின் மறு தரிசனம் கிடைத்துள்ளது. ஸ்ரீகிருஷ்ண மடம் தம்முடையதென பாவிக்க வேண்டும். அஷ்டமட பீடாதிபதிகளும் தங்களை அன்புடனும் மரியாதைகளுடனும் வரவேற்கிறோம்," என்று வாதிராஜ ஸ்ரீசரணர் சொன்னதும் ஜனங்கள் கைதட்டு ஆரவாரம் செய்தனர். விஜயீந்திர "பரம மான்ய மித்திரரின் தரிசனத்தினால் எனது மனம் ஆனந்தத்தினால் நிரம்பியுள்ளது. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் அனுக்ரஹத்தினால் மறுபடியும் தங்களைக் காணும் நல்ல வாய்ப்புக் கிடைத்தது" என்று சொல்லவும், ஸ்ரீவாதிராஜர் ஸ்ரீவிஜயீந்திரருக்கு மற்ற ஏழு மடாதிபதிகளை அறிமுகம் செய்து வைக்கவும், எல்லா மடத்தினரின் ப்ரேமாலிங்கனங்களை ஏற்று க்ஷேம சமாசாரம் வினவி எல்லோருடனும் ஸ்ரீகிருஷ்ணமடத்திற்குள் ப்ரவேசித்தார். அதி சுந்தரமான மஹத்வம் பொருந்திய ஸ்ரீகிருஷ்ண மடத்தில் ஸ்ரீபாதங்களவர்கள் ப்ரவேசித்து எல்லா யதிகளுடன் கிருஷ்ண சந்நிதானத்திற்கு வந்து நின்றார். ஸ்ரீஹரியின் தரிசனத்தால் ஆனந்த பரவசராகி கைகூப்பி நின்றிருக்கின்றார். பக்தி பரவசத்தினால் கண்ணிலிருந்து நீர் பெருகிக் கொண்டிருக்கிறது. தயிர் மத்தும், கயிற்றையும் பிடித்த (மந்தானதாமகரன்) ஸ்யாமசுந்தரன், நந்தகுமாரனின்

CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்வரூபத்தைப் பார்த்து பக்தியினால் ஸ்தோத்திரம் செய்து கொண்டிருக்கிறார். சிரித்துக் கொண்டே ஸ்ரீவாதிராஜ ஸ்ரீசரணர் "என்ன, மித்திரச்ரேஷ்டர் எதிர்கால துர்மதவாதிகளை முறியடிக்கும் செய்தியை மாதவேசனான கிருஷ்ணனிடம் ப்ரார்த்திக்கிறீர் போலிருக்கிறது. ஸ்ரீக்ருஷ்ணன் அந்த சுயஸந்தோஷத்தை உமக்குக் கொடுப்பதற்காகவே இங்கு தங்களை வரவழைத்திருக்கிறார்" என்லும் ஸ்ரீவிஜயீந்திரர் "ப. லோகபந்துகளான தாம் நமக்காக ஸ்ரீகிருஷ்ணனிடம் ப்ரார்த்தித்துக் கொண்டே அன்பைக் காட்டிக் கொண்டிருக்கையில் எதுதான் முடியாத காரியம்?" என்று புன்னகை செய்து ஸ்ரீகிருஷ்ணனுக்காகக் கொண்டு வந்திருந்த விலையேறப்பெற்ற ஆபரணம், பணம், பொன், வஸ்திரம் முதலியவைகளை அவரிடம் அர்ப்பித்தார்.

ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனமான பிறகு ஸ்ரீவாதிராஜர் விஜயீந்திரருக்கு மடாதிகாரிகளினால் பாதபூஜை செய்வித்து வேண்டிய அளவு கௌரவமளித்தார். ஸ்ரீவிஜயீந்திரர் அஷ்டமடாதீசர்களுக்கு ஸ்ரீமடத்தின் திவானவர்களால் பாதபூஜை செய்வித்து விசேஷ மரியாதையை செய்தார். சற்று நேரம் லோக விசாரங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீவாதிராஜர் சொன்னார் "மூத்த ஸ்ரீகளவர்களுடன் வருவீர்களென்றிருந்தோம். அவர் க்ஷேமமா?" விஜயீந்திரர்:- "பூஜ்ய ஸ்ரீபாதங்களவர்களை என்னுடன் அழைத்துவர வேண்டுமென்று வேண்டினேன். ஆனால் வித்யா பீடத்தின் நிர்வாகத்திற்கு இடைஞ்சல் ஏற்படுவதால் நான் மாத்திரம் போய்வர வேண்டுமென்று ஆணையிட்டார். அவருக்கென்ன, மஹானுபாவர். உட்கார்ந்திருந்த இடத்திலேயே கிருஷ்ணனைக் கண்டு மகிழ்கிறார்! என்றார். வாதிராஜர் சிரித்துக்கொண்டே "ஆமாம், ஆமாம், விஜயநகரத்தில் அந்த அனுபவம் ஏற்பட்டதல்லவா? மானஸபூஜா துரந்தரருக்கு முடியாத காரியமுண்டா?" என்றார். பிறகு தேவதார்ச்சனைக்கு எழுந்தருளச் செய்தார்.

ஸ்ரீகிருஷ்ண மடத்தில் விசேஷமான ஒரு இடத்தில் ஸ்ரீவிஜயீந்திரர் மூலராமரின் பூஜை செய்துள்ளார். எதிர்புறத்தில் வரிசையாக அஷ்டமடாதிபதிகள்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பூஜாராதனையைத் துவங்கியுள்ளனர். இந்த காணக்கிடைக்காத சந்திப்பு, பூஜாராதனையின் வைபவத்தைப் பார்க்க ஜனங்கள் கும்பல் கும்பலாக வருகின்றனர். அன்பு மயமான சூழ்நிலையில் நிர்மலமான மனதுடன் பகவதராதனை நடைபெறும்பொழுது அதைக் கண்டு எந்த பக்தன் பக்திமேலீட்டினால் மெய்மறக்காமலிருப்பான்? வைபவத்துடன் பூஜை நிறைவேறியது.

பரஸ்பரம் பீடாதிபதிகள் தத்தம் ஆராத்ய தேவதைகளைத் தரிசனம் செய்து தரிசனம் செய்வித்து ஆனந்தமடைந்து கொண்டிருக்கிறார்கள் ஸ்ரீவாதிராஜயதீச்வரர் ஸ்ரீவிஜயீந்திரரை ஸ்ரீகிருஷ்ணரிடம் வரும்படி சொல்லி அனுப்பினார். ஸ்ரீகிருஷ்ணபூஜை செய்து ஸ்ரீவிஜயீந்திரர் கிருதார்த்தரானார். இப்படிப்பட்ட அஸாதாரணமான மரியாதையை ஸ்ரீவாதிராஜர் தமக்குக்கொடுத்ததை நினைத்து நினைத்து ஸ்ரீவிஜயீந்திரர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கிறார். தொண்டை அடைக்கிறது. ஸ்ரீவாதிராஜரை அன்பினால் ஆலிங்கனம் செய்து கொண்டு, ''இன்று க்ருதார்த்தனானேன். மித்திரரின் உபகாரம் மறக்கவே முடியாதது!'' என்று சொல்லவும், ''ஸ்ரீகிருஷ்ணனின் ஆக்ஞை! மஹாஸமஸ்தானத்திற்குச் செல்லத்தக்க கௌரவம் செலுத்தப்பட்டுள்ளது. இதில் நம் பங்கு ஒன்றுமில்லை! ஸ்ரீமதாசார்யர் தங்களால் விசேஷ சேவை ஏற்றுக்கொண்டிருக்கிறார். த்வைதஸித்தாந்தத்தின் இதிஹாஸத்தில் தமது பெயர் சூர்ய சந்திரர்களுள்ளவரை நிலைநிற்கத் தகுந்ததாயுள்ளது'' என்றார். ஸ்ரீவிஜயீந்திரர் புன்னகையுடன், ''இப்பொழுது தாங்கள் சொன்னதெல்லாம் நமக்கு எப்படியோ அப்படியே தமக்கும் பொருத்தமானவை. மித்ரரே, தாங்கள் மறக்கக்கூடாது. ஸ்ரீமதாசார்யர் மதம் தமது அகாத பாண்டித்யம், தபஸ், மஹிமைகளினால் விசேஷ களையுடன் வளர்ந்து வருவதை யாரும் மறக்க முடியாது இல்லையா? என்றார்.

பக்கத்திலிருந்த பண்டிதரொருவர் சிரித்து "இருவரும் ஒரே குருபாதரிடம் கற்றவர்களல்லவா? அதுபோலவே பேச்சிலும் ஒருவரும் தோல்வியடைய இடமேயில்லை! ஸ்ரீவியாஸமுனிகள் இங்கு இப்பொழுது இருந்திருந்தால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

எவ்வளவு சந்தோஷப்பட்டிருந்திருப்பார் ப்ரிய சிஷ்யர்களின் ப்ரேம ஸல்லாபங்களைக் கேட்டு!" என்று சொல்லவும் இரண்டு ஸ்ரீபாதங்களவரும் புன்னகை செய்தனர். பிறகு ஸ்ரீவாதிராஜ ஸ்ரீசரணர் ஸ்ரீவிஜயீந்திரரின் கையைப்பிடித்து ஸகலமானவர்களுக்கும் தீர்த்தப்ரஸாதம் கொடுத்துத் தயாராக வைக்கப்பட்டிருந்த ஆஸனத்தை நோக்கி நடந்தனர்.

பரஸ்பரம் ஸாமர்த்தியமாகப் பேசிக்கொண்டே பக்த்ர்களுக்குத் தீர்த்தம் கொடுக்கும் இந்தயதிகளின் நெருங்கிய நட்டைபைக்கண்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டனர். உசிதமான முறையில் இருவருடைய பிக்ஷை நடந்தேறியது. ஆயிரக்கணக்கான ப்ராம்மணர் சுமங்கலிகளுக்கு அறுசுவையுண்டியளிக்கப்பட்டது.

மாலையில் பெரிய சபை கூடினது. ஸ்ரீவாதிராஜயதிகள் ஜனங்களுக்கு ஸ்ரீவிஜயீந்திரரை அறிமுகம் செய்து வைத்து, "நாம் வித்யாத்யயனத்திற்காக ஸ்ரீகுருபாதரான ஸ்ரீசந்திரிகாசார்யரிடத்தில் வசித்திருந்தபொழுது விஷ்ணுதீர்த்தரென்று சொல்லப்பட்ட இந்த மஹானுபாவரின் ஸ்நேகம் நமக்குக் கிடைத்தது. நமது நட்பு எந்த ஒரு உத்தேசத்தைக் கொண்டோ அல்லது பணம் காசு முதலிய வைபவங்களின் ஆசையினாலோ ஏற்பட்டதல்ல! அது ஸ்ரீமதாசார்யரின் ப்ரேரணைப்படி இதயபூர்வகமாக உண்டான நட்பு. அது தானாகவே பலமடைந்து வளர்ந்து ஒருவரையொருவர் பிரியாமல் இருக்கும் நிலைக்குப் போய்விட்டது! இந்த யதிகள் ஸ்ரீகுருபாதரின் உயிருக்குச் சமானமானவர். தனக்குப்பிறகு த்வைத ஸித்தாந்த ஸ்தாபனம் நம்மிருவரைச் சேர்ந்ததென்று குருபாதர் சொல்லிக் கொண்டிருந்தது இன்னும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

பால சந்யாஸிகளாயிருந்த இவருக்கும் ஸ்ரீமதாசார்யரின் திக்விஜய பீடத்தில் அமரும் சுபயோகம் கிடைத்தது. அந்த அபூர்வக் காட்சி நமது மனச்சுவரில் அழியாமலிருக்கின்றது. அன்றே நாம் ஸ்ரீகளவருக்குத் தெரிவித்திருந்தோம், "ரஜத பீடபுரத்திற்கு எழுந்தருளி ஸ்ரீகிருஷ்ணதர்சனம் செய்ய வேண்டும்" என்று அந்தப் பேச்சு நடந்து இன்று 25 வருஷங்களுக்கு மேலாகிவிட்டன. இன்று அந்த சந்திப்பு கிடைத்துள்ளது. நம்மிருவர்களின்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

உறுதியான, உண்மையான நட்பின் அடையாளமாக இந்தத் திருவிழா த்வைத மதத்தின் சரித்திரத்தில் நிலைநிற்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீவிஜயீந்திரர் என்னவோ ஸாமான்யரில்லை. 64 கலைவல்லவர். ஈடு இணையில்லாத வாதமல்லர். ஷட்தர்சனாசார்யர், வாதமல்லரான சைவ சந்நியாஸிகளையும் இன்னும் மற்ற பௌத்த முதலான அவைதிக வாதிகளையும், பட்டோஜி தீக்ஷிதரையும் ஜயித்து நமது மதத்தைக் காப்பாற்றியவர் இவர். இத்தகைய மஹா மகிமையுள்ளவரின் தரிசனத்தினால் நீங்கள் புனிதரானீர்கள். ஸ்ரீயவர்களினால் பூஜிக்கப்படும் ஸ்ரீ மூலராமனுக்கு நமது அற்ப காணிக்கை அதாவது நூதனமான அவருக்காகவே நாம் நிர்மாணம் செய்துள்ள மடத்தைத் தானமாக மூலராமனுக்கு நாளை அர்ப்பிக்க உள்ளோம். ஸ்ரீகளவர் அதை ஏற்று நம்மை சந்தோஷமடையச் செய்வாரென்று நம்பியுள்ளோம்" என்றார். ஜனங்களெல்லோரும் கரகோஷம் செய்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்ரீவாதிராஜரின் அகாத அன்பைக் கண்டு ஊமையைப்போல் அமர்ந்திருக்கிறார். இருந்தாலும், கடைசியில் ஒருமுறை பேசினார். "யதிவர்யரே! தர்மாபிமானிகளே, ஸ்ரீபாதங்களவர் நம்மிடத்தில் காண்பித்துள்ள ப்ரேமையினால் நமக்குப் பேசவே நா எழவில்லை. ஸ்ரீகளவர்களுக்கு நாம் நன்றியுள்ளவராயிருக்கின்றோம். ஸ்ரீமதாசார்யரின் சத்தத்வங்களை ப்ரசாரம் செய்வதற்காக மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இதில் இப்படிப்பட்டவர் மாத்திரம் தத்வப்ரசாரம் செய்ய உரிமையுள்ளவர்கள். மற்றவர்கள் அதிகாரமில்லாதவர்கள் என்று யாரும் நிர்ணயம் செய்யவில்லை. அப்படி நிர்ணயம் செய்யும் அதிகாரம் யாருக்கும் இல்லை! ஸ்ரீமதாசார்யரின் அபிப்ராயமும் அதுவல்ல!! எல்லாபீடங்களும் ஸ்ரீமதாசார்யரின் பீடங்களே எல்லோரும் ஸ்ரீமத்வசாஸ்திர ப்ரவசன நிபுணர்களே! வெவ்வேறு தேசங்களில் வருங்காலத்தில் த்வைத ஸித்தாந்தத்தின்மீது வரக்கூடிய தோஷாரோபணங்கள், தாக்குதல்கள் இவைகளை எதிர்த்து வைதிக மதத்தை நிலைநாட்ட வேண்டியது அவசியமான கடமையானதினாலும், ஒருவரால் எங்கும் இந்த மஹத்காரியம் செய்ய முடியாது விஷயம் என்று

CC0 - In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அறிந்துதான் ஸர்வஜ்ஞரான ஸ்ரீமதாசார்யரவர்கள் அநேகபீடங்களை ஸ்தாபித்துள்ளார். இது ஒவ்வொரு பீடாதிசரின் மனதில் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும். இதற்கு விபரீதமாக பாவனை இருந்தால் அப்பொழுது அது ஸ்ரீமதாசார்யருக்கு துரோகமென்றே ஏற்படும்!

ஸ்ரீமத்வ மதம் ஒருவரின் சொத்தல்ல. அதற்கு உரிமையுள்ளவர்கள் துராக்ரஹ மற்றவர்களும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்கள், ஸ்நேஹமய இதயமுள்ளவர்கள். ஜிதேந்திரியர்கள் (இந்த்ரிய நிக்ரஹம் செய்தவர்கள் முதலான ஞானிகள், இன்று இங்கு கூடியுள்ள யதிச்ரேஷ்டர்கள் யாவரும் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இப்பொழுது பாருங்கள். இதுவரை நம்மைப் புகழ்ந்த மித்ரரான ஸ்ரீவாதிராஜய்திவர்யர் ஸாமான்யரா என்ன? "युक्तियुक्ते" என்பதை யார் தான் ஸ்ரீகளவர் விஷயத்தில் கௌரவம் செலுத்தாமலிப்பான்? ஸ்ரீத்வைத மதத்திற்கு வந்த எப்படிப்பட்ட ஆபத்துக்களையும் (கண்டங்களையும்) பரிகாரம் செய்தவர் இந்த மஹானுபாவர். எப்படிப்பட்ட துர்வாதிகளை ஜயித்து நம் மதத்தை ரக்ஷித்தவர் இவர்! ஸ்ரீமதாசார்யரின், ஸ்ரீஹரியின் விசேஷானுக்ரஹ மில்லாதிருந்தால் இந்தக்காரியம் முடிந்திருக்குமா? தத்வ சாஸ்த்ர ப்ரவசனா சார்யரல்லவா இவர்! இவரல்லவா தத்வப்ரசாரகர்! ஆதலால் கீழ்த்தரமான (mean) விஷயங்களை மனதில் கூட நினைக்காமல் எல்லா குருபீடங்களிலும் சமமாக பக்தி செய்து உயர்வை அடைவது உங்கள் எல்லோரின் கடமை! எமது மித்ரர் இந்த சுப சந்தர்ப்பத்தின் ஞாபகார்த்தமாக ஸ்ரீமூலராமருக்கு அளித்த மடத்தை மரியாதையுடன் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று தெரிவிக்க மகிழ்ச்சியடைகிறோம். நம்மிடத்தில் இவ்வளவு அஸாதாரணமான அன்பைக்காட்டிய நமது பந்துக்களான அஷ்டமடாதிபதிகளுக்கு நாம் நன்றியுள்ளவராக இருக்கின்றோம். ஸ்ரீஹரி உங்கள் யாவருக்கும் மங்களமுண்டாக்கட்டும்" என்று உபதேசித்தருளினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீகளவரின் சமயோசிதமான உபதேசத்தினால் ஜனங்கள் வெகுவாக மகிழ்ச்சியடைந்தார்கள். அஷ்டமடாதிபதிகள் ஸ்ரீகளவர்களின் பொறாமையற்ற மனம், தாராள மனப்பான்மையையும் கண்டு பரமானந்தமடைந்தனர்.

மறுநாள் ஸ்ரீகளவர் ஸ்ரீவாதிராஜ தீர்த்தருக்கு கொடுத்த மடத்தை ஏற்றுக்கொண்டு அங்கேயே மஹாஸமஸ்தான பூஜை நிறைவேற்றினார். தாங்கள் இயற்றிய, "भेदविद्या विलास" "न्यायामृत आमोद" முதலான க்ரந்தங்களை ஸ்ரீகிருஷ்ணனுக்கர்ப்பித்தார். ஏழு நாட்கள் மஹா வைபவத்துடன் உற்சவம் நடந்தேறியது. எல்லா மடாதிசர்களிடமிருந்து விடைபெற்றுப் போகமுடியாமல் வருந்திக்கொண்டிருந்த மான்ய மித்திரராத ஸ்ரீவாதிராஜரைச் சமாதானப்படுத்தி அவர் அனுமதி பெற்று ஸ்ரீகளவர் பிறகு கும்பகோண நகரத்திற்குப் பிரயாணத்தை மேற்கொண்டார். *

## 42. விஜயநகரத்தின் வீழ்ச்சி (The downfall of Vijayanagar)

ஸ்ரீவிஜயீந்திரதீர்த்தர் உடுப்பியிலிருந்து புறப்பட்டு கும்பகோணத்திற்கு வரும் நடுவழியில் பயங்கரமான ஒரு செய்தி ஸ்ரீகளவருக்குக் கிடைத்தது. தங்களுக்குள் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொண்டிருந்த பாமினி சுல்தான்கள் யாவரும் ஒன்று சேர்ந்து விஜயநகரத்தை அழிக்கும் சூழ்ச்சி செய்து ஒன்று சேர்ந்து விஜயநகரத்தின்மீது தாக்கியுள்ளனரென்றும் யுத்தம் மிக பயங்கரமாக நடந்து கொண்டிருப்பதாகவும் செய்தி கேட்டு ஸ்ரீகளவரின் முகம் சாந்தியிழந்தது. எதிர்காலத்தின் பயங்கர சித்திரம் அவரது கண்முன்னால் தோன்றி அபார துக்கத்தையுண்டுபண்ணிற்று.

வைதிக தர்மம், தத்வ சாஸ்திரம், கலாசாரத்தின் ரக்ஷணைக்காகவே ஸ்ரீவித்யாரண்யரின் தவத்தின் பலனாக ஸ்தாபிக்கப்பட்டு ஸ்ரீவ்யாஸ யதீந்திரரின் தவத்தின் பலனாக வித்யா, கலை, தன-தான்ய சம்பத்துகளின்

---

* अथासौ संचरन्नुर्वी रौप्यपीठमगाद्यतिः । तत्र हंसो वादिराजो श्रुत्वा प्राप्तं जयींद्रकं । आहूय बहुमानेन वासयामास सदनि ॥ स्वमठं वादिराजेनस्थापयद्विजयींद्रकः ॥ विजयींद्र मठं लोके प्रथितं रौप्यपीठके । वादि राजो जयींद्रश्च व्यासशिष्योयतीश्वरौ । उभौ समानकालीनावुभौ वादींद्र वारणौ ॥ स वादिराजो मतिमन्मान यामास तं तत्र । [illegible] ॥

- श्री विजयींद्र विजयः

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

இருப்பிடமெனப்படும். கன்னட ப்ரஜைகளின் பெருமையின் சாம்ராஜ்யத்திற்கே வந்து சேர்ந்துள்ள விபத்தைக் கேட்டு ஸ்ரீகளவரின் மனம் நடுக்கம் கொண்டது. கண்ணீர் சொரிந்தார். தாம் விஜயநகரத்தை விட்டு வரும்பொழுது ராமராஜனை எச்சரித்துச் சொன்ன பவிஷ்யவாணி உண்மையாகப் பலித்துவிடுமோ என்னும் பயம் சூழ்ந்து கொண்டது. பழைய சம்பவங்களெல்லாம் ஸ்ரீகளவரின் மனதில் ஒவ்வொன்றாகச் சுழல ஆரம்பித்தன.

விஜயநகரத்திற்கு வரவிருக்கும் விபத்தை மனத்தில் நினைத்து நான்கைந்து வருடங்களுக்கு முன்பு சாம்ராஜ்யத்தின் நலனைக் கோரித் தாங்கள் தலைநகரத்தில் இரண்டு வருடகாலம் நிலைநின்று ஸாம்ராஜ்ய நிர்வாகியும் தமது ப்ரிய சிஷ்யனுமாயிருந்த மருமகன் ராமராஜன், சக்ரவர்த்தி ஸதாசிவராயரை அதிகாரமற்றவராக்கி, மன்மானியாக ஆட்சிசெய்து வந்ததினால் தான் அவரது நடத்தையைக் கண்டித்து புத்திமதி சொன்னது உபயோகப்படாததால் ஏமாற்றமடைந்து ராஜ்யத்தை விட்டுக் கும்பகோணத்திற்குப் புறப்பட நிச்சயித்துக் கடைசிமுறையாகச் சில நல்ல புத்திகளைச் சொல்லவேண்டுமென்று ராமராஜனிடம் சென்று அவனுக்கு எதிர்காலத்தில் வரவிருக்கும் விபத்தை எச்சரித்து ஹிதோபதேசம் செய்து கும்பகோணத்திற்குத் திரும்பின விஷயம் எல்லாம் நினைவுக்குவர ஆரம்பித்தன.

தக்ஷிண பாரதத்தின் எதிர்காலம் நிலைப்பதா அழிவதா என்பது விஜயநகரத்தின் கௌரவத்தைப் பொறுத்ததாயிற்று. ஸ்ரீவிஜயீந்திரர் ராமராஜனின் வேண்டுகோளின்படி ஸாம்ராஜ்யத்தின் கௌரவத்திற்காகத் தலைநகரில் சுமார் இரண்டு வருஷங்கள் தங்கியிருந்து அந்தக் காரியத்தில் ஆரம்பித்திருந்தார். தை ராமராஜரின் பிடிவாதத்தனத்தினால் அரசாங்க வட்டாரத்தில் இடைஞ்சல்கள், தொந்தரவு, மனஸ்தாபம், துவேஷம், அருவருப்பு இவைகளுண்டாயின. ஸ்ரீகளவரின் சரியான காலத்தில் செய்த முயற்சிகளினால் அது தற்காலிகமாக பரிகாரமாயிருந்தாலும் மறுபடியும் உபத்திரவங்கள் ஏற்பட்டன. ஸாம்ராஜ்யத்தின் கீழ்ப்படிதலுள்ள எஜமான பக்தியுள்ளவர்களும் நன்மை விரும்புபவர்களும் கொடுத்த யோசனைகளைப் புறக்கணித்து ராமராஜன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

ரணதுல்லாகானே முதலான யவன பக்ஷத்தினரின் சேனா வீரர்களை ஸாம்ராஜ்யப்படையில் சேர்த்தது, பீஜாப்பூரின் ஆதில்ஷாவிற்கு அடைக்கலம் கொடுத்து அவனுக்காக யுத்தம் செய்தது, முதலிய காரணங்களினால் சாம்ராஜ்யத்திற்குப் பெரிய ஆபத்துண்டாகுமென்ற நன்மைகோருபவரின் வாதத்தை ராமராஜன் புறக்கணித்து மனம் போனபடி நடந்து கொண்டபடியால் தலைநகரின் சூழ்நிலை குழப்பமடைந்திருந்தது.

ஸ்ரீகளவர் நிலைமையை நன்றாகப் பரிசீலித்து ஞான த்ருஷ்டியினால் வருங்காலத்தில் கன்னட ஸாம்ராஜ்யத்திற்கு வரவிருக்கும் பெரியவிபத்தை அறிந்து அதை ஸூக்ஷ்மமாகத் தெரிவித்து, எச்சரிக்கை செய்து புத்திமதி சொல்லியும் ராமராஜர் அந்த விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தாமலிருந்ததினால், அவனொருவன் தவறினால் இன்று அதன் தீயபலனை விசாலமான தக்ஷிணபாரதத்தின் ஜனங்களெல்லோரும் அனுபவிக்க வேண்டி வந்ததற்காக ஸ்ரீகள்வர் மறுபடியும் மனம் நொந்து கொண்டார்.

ராமராயர் நல்ன் விரும்புபவரின் சொற்களை நிராகரித்து எந்த ரணதுல்லாகானை ஆப்த நண்பனென்று நம்பி அவனுக்குச் சலுகை கொடுத்திருந்தானோ, எந்த பீஜப்பூரின் ஆதில்ஷாவின் ராஜகுமாரனிடம் மகனைப்போல் அன்பு செலுத்தி, தேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அவனுக்கு அடைக்கலம் கொடுத்து அவனுக்காக மற்ற பாமினி சுல்தான்களுடன் யுத்தம் செய்து மறுபடியும் ஷாஹி சிம்மாஸனத்தில் அவனை அமர்த்தினானோ, அதே ஆதில்ஷா மற்றும் ரணதுல்லாகானே விஜயநகரத்துடன் இன்று நடந்து கொண்டிருக்கின்ற கோரயுத்தத்தில் ராமராஜனுக்கு விரோதமாக முக்ய எதிரிகளாக உள்ளனர் என்ற செய்தியைக் கேட்டு நன்றிகெட்ட நம்பிக்கைத் துரோகிக்கு ராமராஜன் செய்த உதவி பாம்புக்குப் பால் வார்த்ததைப் போலாயிற்றே என்று ஸ்ரீகளவர் துக்கமடைந்தார்.

ஸ்ரீகளவர்கள் அதி வேகமாக ப்ரயாணம் மேற்கொண்டு கும்பகோணத்திற்கு வந்தார். ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் ப்ரிய சிஷ்யரை அன்போடு வரவேற்றார். மாலையில் தனிமையாக பேசிக்கொண்டிருக்கையில் ஸ்ரீஸுரேந்திரருக்கு விஜயீந்திரர் விஜயநகரத்துடன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பாமினி சுல்தான்கள் தொடுத்திருக்கும் போரைப் பற்றி அறிவித்தபொழுது ஸ்ரீஸுரேந்திரர் பெருமூச்சுவிட்டு, "அந்தக்கெட்ட செய்தி நமக்கும் தெரிந்தது. உமது உடுப்பி திக்விஜயம் விஷயம் தெரிந்து மகிழ்ந்திருக்கும்பொழுதே சவ்வப்ப நாயகர் ஒரு ராஜப்ரதிநிதியுடன் இந்த யுத்தச் செய்தியைத் தாங்களும், யுவராஜா, அச்சுதப்ப நாயக்கர், சின்னசவ்வப்ப, மதுரையின் விச்வ நாதநாயக்கரே முதலானவர்கள் சேனையுடன் விஜயநகரின் ரக்ஷணைக்-காகப் புறப்பட்டிருக்கும் செய்தியைச் சொல்லி யனுப்பியிருந்தனர். முந்தாநாள் வந்த செய்தியின்படி யுத்தம் பயங்கரமாக நடக்கிறதென்றும், பகவதனுக்ரஹத்தினால் தான் இந்த ஆபத்திலிருந்து தப்பவேண்டுமே தவிர, வேறு வழியில்லையென்று தெரிகிறது. ஸ்ரீஹரி சித்தத்திற்கு வந்தபடியாகட்டும். நாம் நமது கடமையை நிறைவேற்றவே வேண்டும். நாளையிலிருந்து விஜயநகரின் வெற்றிக்காக விசேஷ பூஜாராதனை ஜப தபாதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று சொன்னார்.

குரு சிஷ்யரிருவரும் வெகு நேரம் அதே விஷயம் பேசிக்கொண்டு இருந்து மறுதினத்திலிருந்து ஸ்ரீமடத்திலும் கும்பகோணத்தின் ஸகல தேவாலயங்களிலும் விசேஷ பூஜாராதனைகளை நடத்த வேண்டுமென்று தீர்மானித்தனர்.

நான்கைந்து நாட்கள் கழிந்தன. ஸ்ரீவிஜயீந்திரர் எதற்காகப் பயந்திருந்தாரோ, "விஜயநகரம் வீழ்ந்தது" என்ற அந்த கெட்ட செய்தி வந்தேவிட்டது. தஞ்சாவூரின் ராஜாங்க அதிகாரியொருவன் வந்து இரண்டு ஸ்ரீபாதங்களவர்களை நமஸ்கரித்து துக்கம்மேலிட்ட முகத்துடன் கண்ணீர்விட்டுக் கொண்டு ஆயிரக்கணக்கான போர் வீரர்களுடன் "ரக்கஸதங்கடி" மஹாயுத்தத்தில் ராமராஜர் மரணமடைந்த விஷயத்தைக் கேட்டு வெற்றியின் வெறியினால் வெறிபிடித்த யவனப்படை பேயாட்டம் ஆரம்பித்து தலைநகரைக் கொள்ளையடித்து நாசப்படுத்துவதாகவும், சக்ரவர்த்தி ஸதாசிவராயரைப் பத்திரமான ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்வதற்காக ராமராஜரின் சகோதரரான திருமலைராயர், வெங்கடராயர் இருவரும் அவருக்குப் பக்கபலமாக தஞ்சாவூரின் சேனையுடன் சிவ்வப்பநாயகர் போயிருக்கிறார்களென்றும் விக்ஞாபித்தான்.

(c) Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விஜயீந்திரர் ஒருமுறை, "ஸ்ரீஹரி" என்று கண்ணை மூடி உட்கார்ந்தார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி ஓடிற்று, "ஐயோ! வைதிக தர்மரக்ஷக ஸாம்ராஜ்யம் வீழ்ந்துவிட்டதே? கன்னடிகரின் ஜயிக்க முடியாத தலைநகரம் அழிந்துவிட்டதே? தக்ஷிண பாரதத்தின் மிக சக்திவாய்ந்த சாம்ராஜ்யம் சின்னாபின்னமாகிவிட்டதே? ஐயோ! ராமராஜரே! நமது உபதேசப்படி நீ ஏன் நடக்கவில்லை? கடைசியிலும் உனது புத்தியின்மையினால், நீயும் அழிந்து ஸாம்ராஜ்யத்தையும் அழித்துவிட்டாயே?" என்று வருந்த ஆரம்பித்தார். ஸ்ரீஸுரேந்திரர் சிஷ்யருக்குச் சமாதானம் சொல்லி, "பரமாத்மாவின் ஸங்கல்பமே இவ்வாறிருக்கும்பொழுது யாரால் என்ன செய்ய இயலும்? உமது கடமையை நீர் செய்திருக்கிறீர். என்று உமது பேச்சை மீறின ராமராஜன் உமது ஹிதோபதேசத்தை அலக்ஷியம் செய்தானென்பதை நினைத்தபொழுது விதி எழுதின எழுத்து எவ்வளவு பலம் பொருந்தியது என்பது வெளிப்படுகிறது. ஸ்ரீஹரி சித்தப்படியாகட்டும். நீங்கள் ஸமாதானப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றெல்லாம் சொல்லிச் சமாதானப்படுத்தினார்.

ஒவ்வொரு நாளும் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் விஜயநகரச் சக்ரவர்த்தி ஸதாசிவராயர், திருமலராயர், மற்றும் சவ்வப்ப நாயக்கர் முதலானோர்களின் க்ஷேமம், அவர்களுடைய நல்ல காலத்திற்காக. விசேஷ பூஜாராதனைகளையும் ப்ரார்த்தனைகளையும் நடத்தி வந்தார். ஏறக்குறைய ஒரு மாதங்கழிந்த பிறகு ஸதாசிவராயர் முதலானோர் எந்த அபாயமுமில்லாமல் தலைநகரத்திலிருந்து தப்பினாரென்றும்,. சவ்வப்பநாயகர் திருமலநாயக்கருடைய பராக்ரமம், வேகம் தந்திரம் முதலியவைகளினால் இந்தக் காரியம் முடிந்ததென்றும் சுபசெய்தி ஸ்ரீகளவர்களுக்குத் தெரிந்தது. இரு ஸ்ரீகளவர்களும் இந்த நற்செய்தியைக் கவனமாகக் கேட்டு வெகுவாக சந்தோஷமடைந்தனர்.

## 43. பட்டுநூல் நெசவாளியின் தோல்வி:

கும்பகோணத்தில் ஸ்ரீவிஜயீந்திர குருவர்யரின் மடத்தில் இன்று விசேஷ ஜனத்திரள்! காஷ்மிரத்தைச் சேர்ந்த ஒரு நெசவாளி ஸ்ரீவிஜயீந்திரரின் கியாதியைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தனது கலையில் ஸ்ரீகளவர்களை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஜயிக்கவிரும்பி வந்திருக்கிறான். பாரத நாட்டில் பீதாம்பரம் தயாரிப்பதில் பெயர்பெற்ற காஷ்மிரத்தில் தான் உத்தம கலை வல்லுநர் என்று கீர்த்திபெற்ற அவன் காஷ்மீரத்திலிருந்து போட்டியிட வந்துள்ளான். ஸ்ரீபாதங்களவர்கள் போட்டி நடத்த அனுமதி கொடுத்துள்ள விஷயத்தை அறிந்தும் ஸ்ரீகளவர்களின் இந்தப் புதிய மகிமை மற்றும் திறமையைப் பார்ப்பதற்காக ஜனங்கள் ஸ்ரீமடத்திற்கு விரைந்து கொண்டிருக்கின்றனர். நெசவுக்குத் தேவையான ஸகல சாமான்களுடனும் கலைஞன் ஸ்ரீமடத்தின் விசாலமான தாழ்வாரத்தில் தயாராக நின்று கொண்டிருக்கின்றான். சபையோர் புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டே அங்கு வந்து கொண்டிருந்த ஸ்ரீவிஜயீந்திரரைக் கண்டு எழுந்து நின்று ஜயகோஷம் செய்தனர்.

ஸ்ரீகளவர் ஆஸனத்திலமர்ந்த பிறகு கலைஞன் ஸ்ரீபாதருக்கு வந்தனம் செய்து இவ்வாறு விக்ஞாபனம் செய்தான். "ஸ்வாமீ! யதிச்ரேஷ்டரே, ராஜாதி ராஜர்களுக்கெல்லாம் பட்டுப்பீதாம்பரம் தயாரித்துக் கொடுத்து விசேஷமான வெகுமதிகளையும், கௌரவமும் பெற்ற நான், "ஸூத்ர" (நெசவுத்தொழில்)த்தில் தங்களுடன் போட்டியிட வந்துள்ளேன். தாங்களோ ஸந்நியாஸிகள், பெரிய பண்டிதர், இப்பேர்ப்பட்ட தங்களுடன் போட்டி உசிதமல்ல. எனக்கு இதுதெரியும். ஆனால் எந்த ஒரு கலையிலும் யாராயினும் சரி, என்னுடன் போட்டியிடவரலாம்". என்று தாம் சவால் விட்டிருக்கிறீர்கள். அப்படியிருப்பதால் எனது கலையில் தாங்கள் ஜயிக்கத்தான் வேண்டும். ஸந்நியாஸிகளான தங்களுக்கும் இந்தக்கலைக்கும் வெகுதூரம்! இதென்ன சாஸ்த்ரார்த்தமா? இந்தக்கலைக்குக் கைத்திறனே அதிகமுக்கியமானது. இது ஒரு அற்புதமான கலை. இதில் நிபுணனான என்னோடு போட்டியிட்டுத் தாம் தோற்றுவிட்டால் ஸந்நியாஸிகளை அவமானப்படுத்தின பாவம் எங்கு வருமோ என்று அஞ்சுகிறேன். ஆகையால் ஸ்ரீஸ்வாமிகள் இப்பொழுதாவது நன்கு யோசித்து மேற்கொண்டு காரியத்திலிறங்குவது உத்தமமல்லவென்று எனது தாழ்மையான வேண்டுகோள்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீகளவர்:- ஐயா! நீ ஒரு உண்மையான கலைஞனாக இருக்கலாம். அதிலும் அந்தக்கலையில் நிபுணனாகவும் இருக்கலாம் ஆனால், ''கிணற்றுத்தவளை'' என்ற வசனப்படி உள்ளது உனது பேச்சு. உலகத்தில் வேறு கலைஞர்களே இல்லையென்று நீர் நினைப்பது போல் தெரிகிறது. நாம் ஸந்நியாஸிகளானதினாலேயே கலைஞனாக இருக்கக்கூடாது என்று நிர்ப்பந்த மொன்றும் இல்லையல்லவா? ஸ்ரீஹரியின் அனுக்ரஹத்தினால் வெற்றிபெறுவோ மென்று நம்பியுள்ளோம். அதைப்பற்றி இப்பொழுது ஏன் வாக்குவாதம்? காண்பி உனது கலைத்திறமையை!

கலைஞன்:- ஸ்வாமி! நானென்னமோ எனக்குத் தோன்றினதைச் சொன்னேன். இதற்குப் பிறகு தங்களின் சித்தம். இதோ, எனது கலைத்திறமையைக் காண்பிக்கிறேன் பாருங்கள்.

இவ்வாறு சொல்லி காஷ்மீரத்தின் கலைஞன் பட்டு நூல்களைச் சேகரித்துக் கொண்டு வெகு சாமர்த்தியமாக ஒரு பீதாம்பரத்தை நெய்து ஸ்ரீகளவர்களின் முன்பு கொண்டு வந்து வைத்தான். சபையோர்களில் ஒருவர் எழுந்து வந்து காஷ்மீரக் கலைஞன் தயாரித்த பீதாம்பரத்தை விரித்து ஸ்ரீகளவர்களுக்குக் காண்பித்துப் பிறகு சபையோர்களுக்குக் காண்பித்தான். ஸ்ரீகளவர்கள் சந்தோஷப் பட்டு; "பலே! அற்புதமான நெசவு! இவன் உண்மையாகவே கியாதிபெற்ற கலைஞனே தான்! என்று அவனைப் பாராட்டினார். சபையோரும் அவனை மனமாரப் புகழ்ந்தனர்.

ஸ்ரீகளவர்:- (சபையோரைப் பார்த்து) "இதுவரையில் நீங்கள் இந்தக் காஷ்மீர வாஸியின் கலைத்திறனைக் கண்டு மகிழ்ந்தீர்கள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நாமிப்பொழுது ஸ்ரீஹரியை ஸ்மரணம் செய்து நம் கலைத்திறனைக் காட்டுகின்றோம்" என்று சொல்லி எழுந்து நின்று நெசவுத் தறியின் பக்கம் சென்றார். ஸ்ரீயவர்களின் உத்தரவின்படி அவருக்குத் தேவையான பல வர்ணங்களுள்ள பட்டு நூல்களை, ஜரிகை முதலியவைகளை அவருடைய சிஷ்யர்கள் கொண்டு வந்து வைத்தனர்.

ஸ்ரீகளவர்:- (புன் சிரிப்புடன் கலைஞனைப் பார்த்து) ஐயா, உனது இந்தத்தறியிலேயே எமது கலையைக் காண்பிப்போம். இதற்கு உனக்குத் தடை எதுவும் இல்லையே?

கலைஞன்:- (நமஸ்கரித்து மகிழ்ச்சியுடன்) ஆகலாம் மஹாஸ்வாமி.

பிறகு ஸ்ரீபாதங்களவர் நெய்யத் தொடங்கினார். ஸ்ரீபாதங்களவரின் கை மற்றும் விரல்கள் விசித்திரமாக விளையாட அரம்பித்தன. அதைப்பார்த்த உடனேயே கலைஞன் ஆச்சரியத்துடன் ஸ்தம்பித்தான். ஜனங்கள் யாவரும் ஸ்ரீகளவர்களின் இந்தப் புதிய கலைத்திறமையை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். விஜயீந்திர குருபாதங்களவர் மிகத் திறமையுடன் பல வர்ணங்களான பட்டு நூல், ஜரிகைகளைச் சேர்த்து வெகு சாமர்த்தியமாகவும், அற்புதமாகவும் பீதாம்பரத்தை நெய்ய ஆரம்பித்துள்ளார். ஒரு மணிநேரம் கழிந்தது. இரண்டு மூன்று நான்கு மணிநேரங்களும் கழிந்தன. ஒரே மாதிரி நடந்துள்ளது ஸ்ரீபாதங்களவரின் கலாபூர்ணமான நெசவுவேலை! காஷ்மீரத்தின் நெசவாளி ஆச்சரியத்தில் மூழ்கி நின்றிருக்கிறான். ஸ்ரீகளவர்கள் மலர்ந்த முகத்துடன் ஒரு சிறிய பீதாம்பரத்தை நெய்து முடித்து சபையோருக்குக் காண்பித்தார். ஆஹா! எவ்வளவு கவர்ச்சிகரமாயுள்ளது பீதாம்பரம்! சிவப்பு, நீலம், பச்சை, ரோஜாவர்ணம், மஞ்சள் வர்ணங்களாலன பட்டு கலாத்மகமான நெசவு வேலைப்பாடு! ஜரிகையாலான திறமைவாய்ந்த சித்திரம் பூக்களின் வேலைப்பாடு, மிகசிறப்பான முறையில் செய்யப்பட்டுள்ளன. உடல் பாகத்தின் நடுவில் ஸ்ரீலக்ஷ்மி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நரசிம்ம ஸ்வாமி ப்ரஹலாதனுக்கு அபயமளிக்கும் ஜரிகைச் சித்திரம்! நிரந்தரமாக ஸாதாரணமான ஸ்ரீகளவர்களின் திறமையை எடுத்துக்காட்டும் அந்த பீதாம்பரத்தைப் பார்த்துச் சபையோர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். காஷ்மீரக் கலைஞனோ தன் கண்ணைத் தானே நம்பமுடியாத வனானான்! ஸ்ரீகளின் இந்தப் பீதாம்பரத்தின் முன் தனது பீதாம்பரம் மிகச்சாதாரணமானதென்று உணர்ந்து ஸ்ரீகளவர்களின் அஸாதாரணமான திறமையை மெச்சி மகிழ்ந்தான். அவன் கண்ணினின்றும் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. ஸ்ரீகளவரின் பாதத்தில் விழுந்து பக்தியுணர்ச்சியுடன் விக்ஞாபித்தான்-மஹா ஸ்வாமி தாங்கள் மனுஷ்யரல்ல! இது மனுஷ்யரால் முடியாத காரியம். ஸ்வாமி எனது வாழ்க்கையிலேயே இத்தகைய அதிசயத்தை நான் கண்டதில்லை. தாங்கள் தேவதாவாக இருக்கவேண்டும். குருவர்யரே, தமது இந்தக்கலை எங்கே? பாமரனான நானெங்கே? தமது மகிமையை அறியாது போட்டியிட வந்த எனது குற்றத்தை மன்னித்து அனுக்ரஹிக்க வேண்டும். தாங்கள் கீர்த்தியைப்போல ஸகல கலைகளிலும் ஜயிக்கப்பட முடியாதவர். இது உண்மை.

உடனே சபையோர் ஸ்ரீபாதங்களவரின் மகிமையைப் பாராட்டி ஜயகோஷம் செய்தனர். ஸ்ரீகளவர்கள் காஷ்மீர்க் கலைஞனுக்கு விசேஷ சம்பாவனைகளளித்து கௌரவித்து ஆசிர்வதித்தார்.

கலைஞன்:- (ஸ்ரீயவர்களை வணங்கி) மஹாஸ்வாமி, தம்மிடம் இந்தப் பாமரனின் ஒரு வேண்டுகோள். தாங்கள் கருணை காட்டி இந்த பீதாம்பரத்தை எனக்கு அருள வேண்டும். எங்கள் தேசத்தில் தங்களது திறமையை நான் காண்பிக்க விரும்புகிறேன். ஸ்ரீபாதங்களவர் மகிழ்ச்சியுடன் தாம் நெய்த பீதாம்பரத்தை அவனுக்குக் கொடுத்தருளிய பிறகு அவன் ஸ்ரீயவரின் அனுமதி பெற்று ஊர் சென்றான். சபையோரெல்லாரும் ஸ்ரீயவர்களின் குணத்தைப் பாராட்டித் தங்கள் இருப்பிடம் சென்றனர்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


## 44. வித்வான்கள் பண்டிதமணிகளுக்கு அடைக்கலமளித்தல்:

மறுநாள் ஸ்ரீமடத்தில் ஸ்ரீ அநந்தபத்மநாப வ்ரதமான்தால் விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீகளவர்கள் ஸ்ரீ ஹரி ஸர்வோத்தமத்வத்தை ப்ரதிபாதனம் செய்யும் தத்வ உபந்யாஸம் செய்து கொண்டு சபையில் வீற்றிருக்கிறார். அநேக பண்டிதர்கள், வித்வான்கள்; மாணவமணிகள் மேலும் பக்த ஸமூகத்தினரும் ஸ்ரீகளவர்களின் வசன அமுதத்தை அருந்தி கொண்டு "ஆனந்தத்தால் பூரித்துக் கொண்டிருக்கின்றனர். இதே சமயம் அபார தேஜஸ்வியான 40 வயதுள்ள ப்ராம்மண உத்தமர் பத்து வயது அழகு நிறைந்த பாலகனுடன் சபைக்குள் நுழைந்தார். அவரைத் தொடர்ந்து பத்துப் பன்னிரண்டு பண்டிதர்கள் ப்ரவேசம் செய்து ஸ்ரீபாதங்களுக்கு வணங்கினர்.

ஸ்ரீபாதர்:- (புன்னகையுடன்) வரவேண்டும், கனகாசலா-சார்யரே, எவ்வளவு வர்ஷங்களாய் விட்டன தம்மைப் பார்த்து! இந்த லக்ஷணமுள்ள பாலகன் உமது குமாரனோ?

ப்ராம்மணோத்தமர்:- (கனகாசலாசார்யர்) கைகூப்பி மஹாஸ்வாமிகளின் ஞாபக சக்தி அஸாதாரணமானது! ஏழை சிஷ்யன்ன மறக்கவில்லை. அது எனது மஹாபாக்கியம். உண்மை, இந்தப்பாலகன் எனது குமாரன் திம்மண்ணாசார்யன்.

ஸ்ரீகளவர்:- (மகிழ்ச்சியுடன்) எப்படிப்பட்ட வசனம் கனகாசலாசார்யரே? உம்மை, அதிலும் எமது குருபாதரான ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் பூர்வாச்ரம பந்துக்களும், எனது ஆப்தநண்பருமான உம்மை எவ்வாறு மறக்க முடியும்? விஜயநகரத்தின் வீழ்ச்சியே உங்கள் வருகைக்குக் காரணமாயிருக்கலாமல்லவா?

கனகாசலர்:- (துக்கத்தினால் பெருமூச்சுடன்) "அன்று விஜயநகரத்தில் ராமராஜருக்கு ஹிதோப தேசம் செய்து எச்சரித்தும் கன்னடிகரின் துர்ப்பாக்யத்தினால் எச்சரிக்கையாக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இருக்கவில்லை. விழிப்புடன் இருக்க வில்லை", "हितं मनो हारिच दुर्लभंवचः" என்னும் மஹாகவி பாரவியின் வசனம் எவ்வளவு சத்தியமான பலனைக் கொடுத்துவிட்டது? ராமராஜரின் விஷயத்தில் தாம் அன்று மனம் நொந்து விஜயநகரத்தை விட்டுவிட்டு வந்த பிறகு ஸாம்ராஜ்யத்தின் நிலைமையே மாறிவிட்டது. அன்று தாங்கள் வெகுவாக மனவேதனையடைந்து கன்னட ஸாம்ராஜ்யத்திற்கு வரப்போகும் அபாயத்தைத் தெரிவித்து எச்சரிக்கை செய்து சொல்லிய சொற்களின்படியே கடைசியில் உண்மையாகவே நடந்து விட்டதே ஸ்வாமி! குருவர்யரே! கன்னடிகர்களின் துரதிர்ஷ்டத்தினால் தாளேகோடி (ரக்கஸதங்கடி) யுத்தத்தில் கர்நாடக ஸார்வ பௌமரும் தம்முடைய சிஷ்யனுமான மருமகன் ராமராஜ ப்ரபுவும் மரணமடைந்தார், யவனரின் தாக்குதலினால் ஜகத்ப்ரசித்தமான கன்னட சாம்ராஜ்யம் சின்னாபின்னமடைந்தது. ஸ்ரீவித்யாரண்யரினால் ஸ்தாபிக்கப்பட்டு, ஸ்ரீவ்யாஸராஜ குரு ஸார்வபௌமரால் அதி உன்னத சிகரத்தையெட்டி வித்யா, கலை, ஸம்பத்து, பராக்ரமத்தினால் தாயின் ஸ்தானத்தை வகித்த ப்ரபஞ்சத்திலேயே வலிமை மிக்க சாம்ராஜ்யமென்று கியாதிபெற்ற விஜயநகரம் இன்று பெயர் சொல்லிக் கொள்ளவும் முடியாத நிலைக்கு வந்துவிட்டது. இருந்த இடமே இல்லாமலாகிவிட்டது. ஆயிரக்கணக்கான வித்வான்கள், கலைஞர்கள், அஸஹாயராகி விட்டனர். அவர்களின் நிலைமை கவலைக்கிடமாகியுள்ளது. அந்தப் பாழடைந்த ஊரில் அவர்களைக் கேட்பாரேயில்லை ஸ்வாமி! அவர்களைப் போலவே நானும் ஸஹாயமில்லாதவனாயிருக்கிறேன். அதனாலதான் ஸர்வஜ்ஞபீடத்தில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அடைக்கலம் தேடி பத்துப்பன்னிரண்டு பண்டிதர்களுடன் வந்திருக்கிறேன். மஹாஸ்வாமிகள் எங்களெல்லோரையும் காப்பாற்ற வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்" என்றிவ்வாறு கூறி ஸ்ரீயவர்களை நமஸ்கரித்தார். ஸ்ரீகளவரின் கண்களிலிருந்து துக்கம் நிறைந்த கண்ணீர் பெருகிற்று. மனம் குமுறிற்று. மனம் நொந்து இவ்வாறு சொன்னார்.

ஸ்ரீகளவர்:- ஸ்ரீஹரி சித்தமே இவ்வாறிருக்கையில் யாரென்ன செய்ய முடியும்? "दैव विनातृणमपिनचलति" தலைவிதி யாரை. விட்டது? முன்காலத்தில் எவ்வளவோ ராஜாதி ராஜர்கள், மஹா சாம்ராஜ்யங்கள், காலனின் கவளத்தில் சிக்கித் தூள் தூளாகிவிட்டன. முன்னேற்றம் வீழ்ச்சி இயற்கையானவை. கன்னடிகரின் துர்பாக்யத்தினால் கர்நாடக ஸாம்ராஜ்ய லக்ஷ்மி மறைந்து விட்டாள். நமது குர்வர்யரின் அன்புக்கு கந்த ஸாம்ராஜ்யம் மறைந்தது. ஹரியின் இச்சையே இவ்வாறுள்ளது. இல்லா விட்டால் எந்த மஹாபராக்ரம சாலியான ராமராஜ ஸார்வபௌமனின் பெயரைக் கேட்டாலும் பாரதத்தில் மாத்திரமேன், மற்ற தேசங்களிலும் ஏதிரிகள் கிடுகிடு வென்று நடுங்கிக் கொண்டிருந்தார்களோ, எந்த ப்ரபு வெல்ல முடியாதவரென்று பெயர் பெற்றிருந்தானோ, அப்படிப்பட்ட ராமராஜர் யவனர்களின் தாக்குதலில் மரணமடைவதா? உம்! இனி கன்னட ராஜ்யம் வேறொருவிதத்தில் ஸ்தாபனமாகி ஜகத்தில் கீர்த்தியடைந்தது! இருக்கட்டும். கனகாசலாசார்யரே, நீங்கள் யோசனை செய்ய வேண்டியது ஒன்றுமில்லை, ஸ்ரீமூலராமர் நமக்கு எப்பொழுதும் உதவியாயுள்ளவர். இது உமது சமஸ்தானம்! ஸ்ரீமடத்தில் தாம் இந்தப் பண்டிதர்களுடன் சுகமாக வசிக்கலாம். தங்களைப் போன்ற

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பண்டிதர்களால் கும்பகோண வித்யா பீடத்திற்கு மேலும் களை காந்தி உண்டாகும்.

கனகாசலர்:- (வணங்கி) ஸ்ரீபாதங்கள்வரின் அனுக்ரஹ பூர்ணமான உதாரகுணத்துடன் கொடுத்த அபய வசனங்களினால் நான் தன்யனானேன் ஸ்வாமி.

ஸ்ரீகளவர்:- (புன்னகையுடன்) ஆசார்யரே, பல வர்ஷங்களாகிவிட்டன உங்கள் வீணை வாசிப்பு கேட்டு. உமது தந்தை கிருஷ்ணாசார்யர் கன்னட ரமாரமணநான கிருஷ்ணராய மஹாப்ரபுவிற்கு வீணைக் கலையைக் கற்பித்துக் கொண்டிருந்தார்.* அப்பொழுது நாம் இன்னும் சிரியவர். குருபாதர் ஸ்ரீவ்யாஸராஜரிடம் அநேக தடவைகள் சொல்லி அவருடைய வீணை கானத்தைக் கேட்டு . மகிழ்ந்திருக்கிறோம். உமது தந்தையின் வீணை வாசிப்புத் திறமையைக் கண்டு ஆனந்தமடைந்த குருபாதர் (வ்யாஸராஜர்) நமக்கும் அவரைக் கொண்டு வீணை வாசிக்கக் கற்பித்திருந்தார். நீங்கள் நம்முடன் என்னோடு வீணை பழகிக்கொண்டிருந்தீர், உமது வீணை வாசிப்பின் திறமையைக் கண்டது அப்பொழுதே அல்லவா? எப்படியிருந் தாலும் இன்று ஸ்ரீ அனந்த பத்மநாப விராதமாயுள்ளது. பூஜா வேளையில் உமது கலையைக் காண்பிக்கலாம். குமாரன் திம்மண்ணனுக்கும் வீணை கற்றுக் கொடுத்திருக்கிறீரா என்ன?

கனகாசலர்:- (சங்கோசித்து) மஹா ஸ்வாமிகள். முன்பு கலையைக் காண்பிக்கவல்ல திறமை எனக்கு எங்கே? ஸகல கலா வல்லவரான தங்கள் முன்பு அற்பனான எனது வித்தை

---

उपदिश्य सकृष्ण भूवरालेर्निजगांधर्व कलां कलामगृण्हात ।
यन मौक्तिक [illegible] पूर्वं [illegible] गुरुदक्षिणा [illegible] ।
- श्री राघवेंद्रविजय ।

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சோபிக்குமா என்ன? நேற்றைய தினம் ஸ்ரீகளவர் நெசவாளிக் கலைஞனைச் சுலபமாக வெற்றிகொண்ட விஷயம் கேட்டு ஆனந்தமடைந்தேன். ஸ்ரீஹரியின், ஸ்ரீபாதரின் கீர்த்தி சேஷரான ஸ்ரீவ்யாஸராஜரின் பூர்ணானுக்ரஹத்திற்குப் பாத்திரரான ஸ்ரீகளவரின் கீர்த்திக்குத் தங்குதடை உண்டா என்ன? ஸ்வாமி, சிரஞ்சீவி குமார திம்மண்ணனுக்கு வீணாவாதனக் கலையை பயிற்சி செய்வித்திருக்கிறேன். காவியம், நாடகம், அலங்கார சாஸ்திரங்களிலும் போதுமான அளவு உழைத்திருக்கிறான். இன்னும் தர்க்கம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களின் பாடம் கற்றுக்கொடுத்து அவனை முன்னுக்குக் கொண்டு வரும் பொறுப்பு ஸ்ரீகளவர்களைச் சார்ந்தது. ஸ்ரீகளவர்கள் அனுமதியின் பேரில் பூஜா சமயத்தில் நாங்களிருவருமே எங்கள் வித்தையைச் சந்நிதியில் சமர்ப்பிக்கிறோம்.

ஸ்ரீகளவர்:- மிக்க மகிழ்ச்சி! திம்மண்ணனின் விஷயம் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை? அவன் மஹா பண்டிதனாக ஆனபிறகு சமஸ்தானத்திற்கு அஸாதாரணமான சேவை செய்வான். நாமே அவனுக்கு ஸ்வயம் அத்யயனம் செய்வித்து அவனுடைய பொறுப்பை ஏற்றுக் கொள்வோம்.

கனகாசல:- (ஆனந்த பரவசராய்) "धन्योऽस्मि कृतकृत्योऽस्मि" என்று சொல்லி குமாரன் திம்மண்ணனுடன் மறுபடியும் ஸ்ரீகளவருக்கு நமஸ்கரித்தார். பிறகு சபை முடிந்து ஸ்ரீகளவர் பூஜைக்கு எழுந்தருளினார்.

ஸ்ரீமூலராமர் பூஜை மற்றும் ஸ்ரீஅனந்தபத்மநாபனின் பூஜை ஸம்பிரதாயப்படி ஸ்ரீகளவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேவதரிசனத்திற்காக வந்து கூடியுள்ளனர். கனகாசலாசார்யரும் குமாரன் திம்மண்ணனும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீகளவர்களுக்கு எதிரிலமர்ந்து வீணை வாசித்துக் கொண்டிருக்கின்றனர். தந்தை மகன் இந்த ஜோடி வீணாவாதனம் எல்லோரையும் ஆனந்த பரவசத்திலாழ்த்திற்று. மோஹனம், கல்யாணி, தன்யாஸி, காம்போதி முதலிய ராகங்களில் கீர்த்தனைகளை வாசித்தார்கள். பிறகு குமார திம்மண்ணன் மாத்திரம் "பைரவி" ராகத்தை ஆலாபனம் செய்து கொண்டிருக்கிறான். குமாரனின் கைவிரல்கள் அதிவேகமாக வீணையின் தந்திகளின் மீது விளையாடுகின்றன. விசேஷமாக, விஸ்தாரமாக பைரவி ராகாலாபனம் ஆகியுள்ளது. மிக இனிமையாக பைரவி ராகம் அலையலையாக ஒலிக்கின்றது. ஆலாபனம் ஆகித்தானம் வாசிக்க ஆரம்பித்தான். ஆஹா! என்னவிசித்திரம்! எவ்வளவு மனோஹரமாயுள்ளது! கருணாரஸமே உருவமெடுத்து வந்ததைப் போலிருக்கிறது. தானம் முடிந்தது. பல்லவி ஆரம்பமாயிற்று. அர்த்த கம்பீரமுடனும் அழகானதாகவும் உள்ள பல்லவி! ஸ்ரீராமசந்திரனையே வர்ணிக்கும் பல்லவி. சங்கதிகள், மூர்ச்சனம், ஸ்வரவிந்யாஸம், மனோஹரமாயுள்ளன. பத்தேவருஷமுள்ள பாலகன் வீணை வாசிப்பதைக் கண்டால் ஸாக்ஷாத் ஸரஸ்வதி தேவியின் பூர்ண அனுக்ரஹத்திற்குப் பாத்ரனானவனைப் போல் உள்ளது. சிறிய வயதுள்ள பாலகனுக்கு இவ்வளவு மஹா பாண்டித்யமா? என்று ஜனங்கள் ஆச்சரியத்தில் மூழ்கியுள்ளனர். அந்தப்பாலகனின் பாண்டித்யம், கானத்தின் இனிமை நிரம்பியுள்ள ஜனங்களை ஏதோ ஒரு உலகத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் சஞ்சரிப்பதைப் போல் செய்துள்ளது! ஜனங்கள் யாவரும், ஆனந்தம் மேலீட்டினால் கைதட்டி ஆரவாரம் செய்தனர். குமார திம்மண்ணன் வீணையைக் கீழே வைத்துவிட்டு ஸ்ரீகளவர்களை வணங்கினான்.

பூஜையான பிறகு தீர்த்தப்ரஸாதம் கொடுத்த பிறகு ஸ்ரீகளவர்கள் பிக்ஷை ஏற்றுக் கொண்டு குமாரதிம் மண்ணனை அருகில் அமரவைத்து அவன் தலைமீது அபயஹஸ்தம் வைத்து, "குமாரா, உனது வீணை வாசிப்புத் திறமை நிகரற்றதாயுள்ளது. ஸரஸ்வதி தேவி உனக்கு ப்ரத்யக்ஷமாகியுள்ளாள். உங்களது வம்சத்திற்கே உன்னால் அழியாத கீர்த்தி உண்டாகப்போகிறது. எமக்கு

CC0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அத்யாநந்தமாகியுள்ளது. நீ இன்னும் எனக்கு அன்பிற்குறிய சிஷ்யனாகி இருக்கின்றாய்'' என்று சொல்லி குமார திம்மண்ணனை ஆசீர்வதித்தார். ஜனசமூகம் கனகாசலாசார்யரையும், குமார திம்மண்ணனையும் பாராட்டி ஸ்ரீயவர்களின் உதாரமான சரணாலயத்தில் அவர்கள் கீர்த்திவளர வாழ்த்தினர்.

விஜயநகரத்தின் அரசனின் ரக்ஷணையிலிருந்து தப்பி வந்த அநேக வித்வான்களுக்கும், கவிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் அடைக்கலம் அருளி வித்யாபீடத்தின் வெவ்வேறு துறைகளில் அவர்களை ஆசிரியராக நியமித்து வேலை கொடுத்தார். ஸ்ரீகளவர்களின் தாராளமான அடைக்கலம் கிடைத்ததால் பண்டிதர்கள் கவலையின்றி ஸ்ரீவித்யாபீடத்தில் மனமார சேவை செய்யலாயினர். ஸ்ரீரங்கத்தில் தவத்திலீடுபட்டிருந்த மூத்த குருபாதரான ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் ப்ரிய சிஷ்யரின் இந்த உதார ஸ்வபாவத்தை அறிந்து ஆனந்தமடைந்து தமது மகிழ்ச்சியை கடிதத்தின் மூலம் விஜயீந்திரருக்குத் தெரிவித்தார்.

## 45. விக்ரஹநிக்ரஹகரின் தோல்வி

விஜயநகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு மருமகன் ராமராஜனின் சகோதரரான திருமலமஹாராஜா, வேங்கடாத்ரி மற்றும் ஸாம்ராஜ்ய நலனின் பக்தரான மண்டலாதிபதி தஞ்சாவூரின் செவ்வப்ப நாயகர், அச்சுதப்ப நாயகர் (செவ்வப்ப நாயகரின் மகன்), சின்ன செவ்வப்பநாயகர் முதலானவர்களின் கூட்டு உதவியினால் சக்ரவர்த்தி ஸதாசிவராயரையும், அந்தப்புர ஸ்த்ரீகளையும் பத்திரமான இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்து, அவர்களின் பாதுகாப்பிற்குத் தான் நின்று, செவ்வப்ப நாயகனைத் தஞ்சாவூருக்கு விடைகொடுத்தனுப்பிச், சின்னசெவ்வப்ப மற்றும் அச்சுதப்பநாயகரை ஆங்காங்கு சிறியதாக்குதலில் ஈடுபட்டிருந்த் யவனர்களை அழிக்க அனுப்பினார்.

சின்ன செவ்வப்ப நாயகர், அச்சுதப்ப நாயகர் தங்களுடைய வெற்றிசேனை புறப்பட்டுக் கன்னட நாடு, திராவிட நாடுகளில் கொள்ளை, கொலை, முதலிய அட்டகாஸங்களை விளைவித்துக் கொண்டிருந்த மதவெறி கொண்ட யவன வீரர்களைப் பின் தொடர்ந்து போய்ப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பாதிசேனையைப் பெயரில்லாமல் செய்துவிட்டனர். அழித்தனர். தஞ்ஜாவூரின் படையின் தாக்குதலை எதிர்க்க முடியாமல் யவனரின் செத்துப்பிழைத்த படை தப்பி ஓடிவிட்டது.

இந்தத் தோல்வியின் பழியைத் தீர்த்துக்கொள்ள, மீந்துள்ள ஆயிரக்கணக்கான யவனப் படை வீரர்கள் ஒன்றிரண்டு படைத்தலைவருடன் ரகசியமாகப் புறப்பட்டு தஞ்சாவூர் பிராந்தியத்தில் நிலைத்திருந்தனர். தலைநகரில் மஹாராஜா மற்றும் படைவீரர்களில்லையென்ற விஷயத்தை ரகசியமாக அறிந்த யவனர்கள் தேவாலயங்களின் இருப்பிடமான கும்பகோணத்தையே தங்கள் பழி வாங்கும் முதல் இலக்காக வைத்து இரவோடிர்வாக திருட்ர்களைப் போல கும்ப கோணத்தினுள் புகுந்து தாக்கினர்.

யவனரின் தாக்குதலினால் ஹிந்து மதம், கலாச்சாரம், பண்பு, முக்கியமாக ஹிந்துக்களின் ஜீவ நாடியைப் போலுள்ள புனிதமான கோவில்களுக்குப் பெரிய ஆபத்து வந்துள்ளது. தேவாலயங்களின் கதி என்னவாகுமோ என்று ஜனங்கள் திகிலடைந்து உட்கார்ந்திருந்தனர். எங்கு பார்த்தாலும் குழப்பம். அராஜ்கம், அமளி, கூச்சல், ஸ்த்ரீகள், சிறுவர்கள், குழந்தைகள், முதியோர்கள், உயிர் மற்றும் மானத்தின் பயத்தினால் கண் தெரியாமல் தத்தம் வீடு வாசல்களைப் பத்திரப்படுத்திவிட்டு உட்கார்ந்திருக் கின்றனர். எங்குபார்த்தாலும் அராஜகம் தலைவிரித் தாடுகிறது.

நகர பாதுகாப்பின் படை மிகக்குறைவாக உள்ளது. இந்தப்படை... ஆயிரக்கணக்கான யவன வீரர்கள் எவ்வாறு தடுத்து நிறுத்த முடியும்? உதவிக்குத் தஞ்சாவூரிலிருந்து படை வருமென்ற உறுதியும் இல்லை. சுற்றுமுற்றிலும் கலகக்காரர்களின் கலகத்தை அடக்குவதற்குப் படையுடன் மஹாராஜா தானே போயிருக்கும் செய்தியறிந்த கும்பகோணத்தின் ப்ரமுக நகரவாஸிகள் உதவியற்றவராகி உட்கார்ந்திருக்கின்றனர். தேவாலயங்களின் அர்ச்சகர்களின் யோசனைப்படி அவர்கள் மந்திராலோசனை நடத்தி கும்பகோணத்தின் பாதுகாப்பிற்கு ஸ்ரீவிஜயீந்திர குருவரேண்யரிடம் சரணடைவதென்று நிச்சயித்து ஸ்ரீமடத்திற்கு ஓடினார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

ஸ்ரீவிஜயீந்திரர் சாந்தமூர்த்தியாக அமைதியுடன் மலர்ந்த முகத்துடன் அமர்ந்திருக்கிறார். பாவம், ஸ்ரீகளவர்களுக்கு வெளியே நடந்துள்ள அமளி, கலகம் மேலும் வந்துள்ள விபத்தே தெரியாதோ என்பது போலக் காணப்படுகிறது! நக்ரத்தினர், அர்ச்சகர்களும் வந்து ஸ்ரீயவர்களின் காலில் விழுந்து "அபயம் குருதேவா, அபயம்" என்று முறையிட்டனர்.

ஸ்ரீகளவர்:- நீங்கள் வரச் சற்று தாமதமாகிவிட்டது. யவனர்கள் நகரத்தைச் சுற்றி வளைத்த உடனே நம் ஞாபகம் வரவில்லையென்று தோன்றுகிறது. இருக்கட்டும். நகரம் மற்றும் தேவாலயங்களின் பாதுகாப்பிற்காகத் துக்கித்து வந்தீர்களா? என்று சிரித்தார்.

ப்ரமுகரொருவர் வந்து வணங்கி, "மன்னிக்க வேண்டும். அபராதமாயிற்று. ஸர்வக்ஞருக்குத் தெரியாத விஷயம் எதுவுமில்லை. மஹாஸ்வாமி, அநாதைகளான எங்களை இந்த விபத்தினின்று காப்பாற்ற வேண்டும். புனித தேவாலயங்களின் புனிதத்தன்மையைக் காப்பாற்றுங்கள். பகவான் மூர்த்திகளுக்கு அபாயமேற்படாமல் ரக்ஷிக்க வேண்டும். ஸ்வாமி, இதுவரை தாங்கள் எவ்வளவோ அற்புதங்களை நிகழ்த்தியுள்ளீர்கள். தமது மஹாத்மியத்தில் எங்கள் யாவருக்கும் நம்பிக்கையிருக்கிறது. அதனாலேயே சரணாகதர்களாகி வந்திருக்கிறோம். கும்பகோணத்திற்கு வந்த இந்த ஆபத்தை நீக்கிக் காப்பாற்றுவது தங்களால் தான் முடியும்! அபயம் தந்து காப்பாற்ற வேண்டும் மஹாப்ரபோ" என்று முறையிட்டனர்.

விஜயீந்திரர் புன்னகை செய்து, "நகரத்தார்களே ஆசார்யர்களே, வைதிகஸநாதன தத்வ தர்மங்களைக் காப்பாற்ற ப்ரசாரம் செய்யும் பொருட்டே வாழ்க்கையை அர்ப்பணித்த நமக்கு நமது ராஜ்யம், புனித தேவாலயங்களின் பாதுகாப்பு கடமையேயாகும். அந்தக் கவலை நமக்கில்லையா என்ன? நீங்கள் பயப்பட வேண்டிய காரணமில்லை. நீங்கள் வந்து வேண்டிக்கொள்வதற்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

முல்.பே அந்த வேலை ஆரம்பமாகியுள்ளது. நீங்கள் கவனிக்கவில்லையா? நகரத்தில் யவனக் குதிரைவீரர்கள் தேவாலயங்களில் நுழையாமல் ஜனங்களைத் தாக்காமல் வெறுமனே ஓடிக்கொண்டிருப்பதை . நீங்கள் கவனிக்கவில்லையா? பாவம்! பயந்து போயிருந்த நீங்கள் அதைச் சரியாக் கவனித்திருப்பதற்கில்லை. கவலைகொள்ள வேண்டாம். இன்னும் இரண்டு நாழிகைகளில் அவர்கள் யாருக்கும் அபாயம் விளைவிக்காமல் ஊர்களைச் சுற்றி சும்மா நகரத்தைச்சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

ஸ்ரீயவர்களின் மகிமையினால்தான் அவர்கள் அவ்வாறு வீணாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார்களென்று அறிந்து ஸ்ரீகளவரின் மஹா சக்திக்கு வியந்து ஸாரங்கபாணி கோவிலின் அர்ச்சகர்கள் தாழ்மையுடன், "ஸ்வாமி! யவனர்கள் இன்னும் இரண்டு நாழிகைகள் ஊர் சுற்றிக் கொண்டிருப்பார்களென்று தெரிவித்தீர்கள்" ஆனால்.... பிறகு அவர்கள் தேவாலயத்திற்குள் புகுந்தால் என்ன செய்வது? என்று விண்ணப்பித்தனர்.

ஸ்ரீ-பயப்படுவதற்கு எதுவுமில்லை. ஆசார்யரே, ஸ்ரீஹரியின் தயவினால் கோவில்களுக்கு எந்த ஆபத்தும் வரமாட்டாது. இந்த ஒரு இரவு யவனர்களைத் தடுத்துவிட்டால் போதும். நாளைக் காலையில் மஹாராஜா தானே படையுடன் தேவாலயங்களின் பாதுகாப்பிற்கு ஓடிவந்து விடுவார்! ஸ்ரீகளவர் இவ்வாறு சொல்லவும் அர்ச்சகர்கள் ஆச்சரியம் கவலையுடனும் வியாகூலத்துடனும், "என்ன ஸ்வாமி தாங்கள் சொல்வது? கலகக்காரர்களை ஒடுக்குவதற்காகப் போன தஞ்சாவூரரசர் எவ்வாறு நாளை இங்குவர முடியும்? அதல்லாமல் நாளைக்காலை வரையில் தேவாலயத்தைக் காப்பாற்றுவது எப்படி? என்று விக்ஞாபனம் செய்தனர்.

ஸ்ரீகளவர்:- நாளை கண்டிப்பாக மஹாராஜா வருவார். சேனையும் வரும். நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அதுவரைக் கோவில் களின் பாதுகாப்புப் பொறுப்பு நம்முடையது. எல்லோரும் சென்று வாருங்கள்" என்று சொல்லி ஸ்ரீமடத்தின் உக்ராணம் (சாமான் கிடங்கை) நோக்கி நடந்தார். ஜனங்கள் எல்லோரும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஆர்வத்துடன் அவரைப் பின் தொடர்ந்தார்கள். ஸ்ரீகளவர், "பாருங்கள், தேவாலயங்களின் பாதுகாப்பிற்காகத் தயாராக வைத்திருக்கும் எமது ஆயுதத்தை! என்று ராசிராசியாகக் கிடக்கும் தேங்காய்களைக் காண்பித்துப் புன்னகை செய்தார். நான்கைந்தாயிரம் தேங்காய்கள் உக்கிராணத்தில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் ஆச்சரியத்துடன், "ஸ்ரீகள்வர் ஏன் இவ்வாறு சொல்லுகிறார்? ஒருவேளை பரிஹாஸம் செய்கிறாரோ?" என்று சந்தேகித்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீகளவர், இன்னும் ஏன் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? இந்தத் தேங்காய்கள் எப்படி ஆலயங்களைக் காப்பாற்றும் என்றா? கண்டிப்பாக, சந்தேகம் வேண்டாம். இவைகள் நாம் சொன்னபடி யவனர் கோயிலுக்குள் வராதபடி தடுக்கும். இங்கு கவனியுங்கள். இவைகளை எல்லாக் கோவில்களுக்கும் எடுத்துச் செல்லுங்கள். ராஜகோபுரத்தின் முன்பு இவைகளை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருங்கள். யவன சேனை நுழைந்ததும் இவைகளை உடையுங்கள். அதாவது யவனர்கள் பின்வாங்குவார்கள். கோவில் காப்பாற்றப்படும். நமது வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து நாம் இப்பொழுது சொன்னபடி செய்யுங்கள். இந்த விபத்து நீங்கிவிடும்." என்று சொல்லி தேங்காய்களைக் கையினால் தொட்டு அவைகளை மந்திரித்தார்.

ஸ்ரீகளவர்களின் மகிமையை யறிந்த கும்பகோணத்தின் நகரத்தினர் மற்றும் அர்ச்சகர்களும் ஸ்ரீயவர்களின் ஆணையின்படியே வண்டி வண்டியாகத் தேங்காய்களையேற்றிக் கொண்டு போய்க் கும்பேச்வரன், சாரங்கபாணி சக்ரபாணி, ராமர் கோவில்களின் ராஜகோபுரத்தின் முன் அவைகளைச் சேகரித்துத் தயாராக உட்கார்ந்திருந்தனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீகளவர் சொன்னபடியே இரண்டு நாழிகை கழிநதது. ஆரம்பமாயிற்று யவனர்களின் தாக்குதல் "दीन, दीन" என்று கத்திக்கொண்டு, "अल्लाहो अकबर" என்று யவனக்குதிரை வீரர்கள் ஸாரங்கபாணி கோவிலுக்குள் நுழைந்தனர். ஜனங்கள் எல்லோரும் ஆரவாரம் செய்யத் தொடங்கினர். கூர்மையான வாள்களை ஏந்திய யவனர்கள் ராஜகோபுரவாயில் சமீபம் ஓடிக்கொண்டிருக்கையில் ஜனங்கள் தேங்காய்களை உடைக்கவாரம்பித்தனர். ஆச்சரியம்! ஆச்சரியம்! ஒவ்வொரு தேங்காயை உடைக்கும் போதெல்லாம் யவனப்படையினர் தலை வெடிப்பதைப் போலாகி பெரிய புயல்காற்றில் சிக்கிய வாழை மரங்கள் எவ்வாறு கீழே விழுந்து உருளுமோ அப்படி யவன வீரர்கள் நிலத்தில் விழுந்து உருண்டனர்!! இந்த விசித்ரக் காட்சியைக் கண்ட மற்ற வீரர்கள் பயத்தினால் பின்வாங்கிவிட்டனர். தலை உடைந்தவரைப் போல் கீழே விழுந்த வீரர்கள் சற்று நேரங்கழித்து மெதுவாக எழுந்து உயிருக்குப் பயந்து அழுது கொண்டு மனம் போனபடி ஓட ஆரம்பித்தனர். அற்புதமான ஸ்ரீகளவரின் புதிய அதிசயத்தைக் கண்டு ஜனங்கள் ஆச்சரியம், ஆனந்தம் மேலிட்டு ஸ்ரீயவர்களைப் புகழ ஆரம்பித்தார்கள்.

இதேபோல இதர தேவாலயங்களுக்கும் போய் நுழைய முயற்சித்த யவனர்களுக்கும் அதே அனுபவமேற்பட்டது. அவர்கள் "இதென்ன அதிசயம், மாயை" என்று தங்களுக்குள் சர்ச்சை செய்து கொண்டே, அபிமானம், கோப-தாபங்களால் மறுபடியும் மறுபடியும் தேவாலயங்களை அழிப்பதற்காகத் தாக்குதல் நடத்தி மற்றும் தலை உடைந்தது போல் ஆவதும் நிலத்திலுருளுவதுமாய் பயம், ஏமாற்றம் ஆனதும் பின் வாங்கிவிட்டனர். கர்வத்துடன் நடைபோட்டுக் கொண்டிருந்த யவனர்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாயிற்று. ஆச்சரியமென்னவென்றால் தேங்காயை உடைத்ததும் தங்கள் தலை இரண்டாக வெடித்ததைப் போல் ஆகிப் பொறுக்க முடியாத வலியேற்பட்டு நிலத்தில் விழுந்து உருளுவதைப் போலானாலும் உயிருக்கென்னமோ

*இன்று கூட கும்பகோணத்தில் ஸாரங்கபாணி கோவிலின் பழுத்த முதியவரான அர்ச்சகர் இந்த அதிசயத்தை வர்ணிப்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். - நூலாசிரியர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஆபத்து ஏற்படவில்லை. யவனரின் தாக்குதலைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஆனால் அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடாது. தேவாலயங்களின் புனிதத் தன்மையையும் காப்பாற்ற வேண்டும், இந்த ஒரு நோக்கத்துடன் ஸ்ரீபாதங்களவர் தமது தவத்தின் சக்தியினால் கும்பகோண வாஸிகளை அனுக்ரஹித்திருப்பதைக் கண்டு எல்லோரும் ஸ்ரீபாதரின் அபாரமான உபகாரத்தையெண்ணியெண்ணி மகிழ ஆரம்பித்தனர். இதே போல் இரவு முழுவதும் கழிந்தது.

மறுநாள் காலை ஏழெட்டு மணியிருக்கும். வாங்கா, கொம்புகள் ஊதுகின்ற ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது. ஜனங்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, "हरहर महादेव जयधरणी वराह" என்னும் வெற்றி முழக்கம் செய்து கொண்டு நான்கு அல்லது ஐந்து ஆயிரம் ஆயுததாரிகளான படை வீரர்களுடன் ஸாக்ஷாத் தஞ்சை மன்னரே வெற்றி உற்சாகத்தினால் கும்பகோணத்திற்கு வந்தார். நுண்ணறிவால் கும்பகோணத்தின் நிலையை அறிந்து கோபாவேசத்துடன் மஹாராஜா யவனரைத்தாக்க சேனைக்கு ஆணையிட்டுத் தான் சேனையை நடத்திச் சென்றார். தஞ்சையின் அபாரசேனையைக் கண்டதும் யவனர் படை பயந்து கும்பகோணத்திலிருந்து ஓட ஆரம்பித்தது. மிஞ்சின ஆயிரக்கணக்கான வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். ஒரு துளி இரத்தம் சிந்தாமல் தஞ்சைப்படை வெற்றியடைந்தது. கும்பகோணத்திற்கு வந்த விபத்து நீங்கிற்று.

வெற்றிவிழாவிற்காக இன்று ஸாரங்கபாணி கோவிலில் பெரிய கூட்டம் கூடியுள்ளது. ஸ்ரீவிஜயீந்திரர் எழுந்தருளியிருக்கிறார். எல்லோருடைய முகமும் ஆனந்தம் மேலிட்டினால் மலர்ந்துள்ளது. சபையில் அநேகர் உரை நிகழ்த்தி யவன சேனை தாக்கவந்த விஷயம், தாங்கள் ஸ்ரீபாதங்களவரிடம் அடைக்கலம் புகுந்தது, ஸ்ரீபாதர் அனுக்ரஹித்தது, யவனர் படை தேவாலயங்களை அழிக்க வந்த சமயம் நிகழ்ந்த அதி ஆச்சரிய சம்பவங்கள் இவைகளை விவரித்து ஸ்ரீஸ்வாமிகள் இன்று மஹாராஜா சேனையுடன் அவசியம் வருவார் என்ற பவிஷ்யவாணி சொன்னது. அதன்படியே மஹாராஜர் வந்தது, ஹிந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஜனங்களின் மீது விஜயீந்திரர் காட்டிய கருணை அதை ஜனங்கள் ஒருக்காலும் மறக்கமுடியாது, என்று எல்லா விவரங்களையும் நிரூபித்தார்.

எல்லாவற்றையும் கவனித்துக் கேட்ட தஞ்சாவூரரசன் ஆச்சரியத்துடன் ஆனந்தத்துடனும் எழுந்து நின்று ஸ்ரீயவர்களுக்கு வணங்கி, "ஸ்ரீபூஜ்ய பாதங்களவர்கள் நம்மீது அடிக்கடி அனுக்ரஹம் செய்து வருகிறார். நமது நாட்டின் கீர்த்தி-கௌரவங்களைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறார். இந்த மஹோபகாரத்திற்கு நாமும் நமது ப்ரஜைகளும் பதிலாக எதுவும் செய்ய முடியாதவர்கள்! ஸ்ரீகுருபாதங்களவர்களே, நேற்று தஞ்சாவூரிலிருந்து பத்து பன்னிரண்டு மைல் நெடுஞ்சாலையில் கலகக்காரர்களைத் தண்டிக்க நாங்கள் படைகளுடன் போயிருந்தோம். கலகக்காரர்கள் தலைமறைவாகி விட்டனர். நாங்கள் முகாம் போட்டிருந்தோம். ஆனால் என்ன ஆச்சரியம். எங்களுக்குத் தெரியாதபடி ஏதோ ஒரு பலமான சக்தி எங்களை இழுத்து வந்தது. கும்பகோணத்திற்கு வந்த பிறகே எங்களுக்கு உணர்வு வந்தது! எங்கு வந்திருக்கிறோம்? ஏன் வந்திருக்கிறோம்? என்பதை அறிந்து கொள்வதற்குள் யவனர் படை கண்ணிற்குத் தென்பட்டது. நுண்ணறிவால் எல்லா விவரங்களும் தெரிந்தன. உடனே நாங்கள் யவனர் மீது பாய்ந்தோம். ஆனால் அவர்கள் ஓடிவிட்டனர். சிலர் கைதானர்்கள். இவைகளெல்லாம் யோசித்தால் இவையெல்லாம் தமது மகிமையென்று இப்பொழுது தெரிந்தது. குருவர்யரே! ஒருவேளை 64 கலை வல்லுநரான தாங்கள் ஆகர்ஷணக் கலையினால் எங்களை இங்கு இழுத்து வந்து விட்டீரென்று எனது உறுதியான நம்பிக்கை. இல்லாவிடில் நாங்கள் இப்பொழுது இங்கு வந்திருக்கமுடியவே முடியாது! ஆஹா, ஸ்வாமி; தாங்கள் ஒரு சொட்டு ரத்தம் சிந்தா வண்ணம் இந்த விபத்தை விலக்கி பரமானுக்ரஹம் செய்துள்ளீர்கள். தங்களுக்கு நாங்கள் என்ன பிரதியுபகாரம் செய்ய முடியும்? "भूयिष्ठां ते नम उक्तिं विधेम" என்றபடி எங்களது பக்தி நிரம்பிய நமஸ்காரத்தை மாத்திரம் தங்களுக்கு அர்ப்பணம் செய்ய முடியும். க்ருபை செய்ய வேண்டும் ப்ரபோ" என்று ஸ்ரீயவர்களுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy


ஸாரங்கபாணி கோவில் அர்ச்சகர்களும், பண்டிதர்களும் விஜயீந்திரருக்கு நமஸ்காரம் செய்து, "ஸ்வாமி இன்று நம்மெல்லோருக்கும் பரம புண்யமான தினம். எங்கள் நாலாயிர திவ்யப்ரபந்த கர்த்தரவர்களுக்கு மோக்ஷமளித்த தினம். இந்த விசேஷ நாளில் தேவாலயத்தில் மஹாமரியாதை அவருக்கும் எங்கள் ஜீயரவர்களுக்கும் நடந்து வந்து கொண்டிருந்தது. எங்களின் ஜீயரவர்களின் யோசனைப்படி இன்று தேவரீர் தேவாலயங்களைக் காப்பாற்றியுள்ளதால் அந்த மஹா மரியாதையை இன்றிருந்து ஸ்ரீயவர்களுக்கு ஸமர்ப்பித்து எங்கள் பக்தியைக் காண்பிக்க நாங்களெல்லோரும் விரும்புகிறோம். தாங்கள் தயவு செய்து அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் ஸ்வாமி" என்று பிரார்த்திக்கவும் எல்லோருடைய அபிப்ராயப்படி அந்த மரியாதையை ஸ்ரீயவர்கள் ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்வாமி ஸந்நிதியில் ஏற்றுக் *கொண்டார். ஸ்ரீவிஜயீந்திரயதி சந்திரருக்கு ஜயமாகட்டும், தர்மரக்ஷகருக்கு ஜயமாகட்டும் என்று வாயாரப்புகழ்ந்து ஜயகோஷம் செய்தனர்.

இதைப்போலவே ஸ்ரீயவர்கள் மற்ற தேவாலயங்களுக்கும் விஜயம் செய்து சுவாமி தரிசனம் செய்து ஸ்ரீ மடத்திற்கு திக் விஜயம் செய்தார். தஞ்சாவூர் நரேசர் ஸ்ரீயவர்களின் அனுமதி பெற்று சேனையுடன் தஞ்சாவூருக்குப் புறப்பட்டார்.

## 46. அப்பய்ய தீக்ஷிதருடன் சந்திப்பு:

கும்பகோண நகரத்தில் இன்று விசேஷ கோலாகலம் ஜனங்களின் ஆரவாரத்தைப் பார்த்தால் ஏதோ ஒரு அபூர்வ விஷயமிருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு தெருக்களிலும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து ரகஸ்யமாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமில்லாமலில்லை!

ஆம், விஜயீந்திரரின் அஜேயத்வத்தின் கடைசி பரீக்ஷையோ என்னும் போல அஸாதரண மஹானொருவர் இன்று கும்பகோணத்திற்கு வரப்போகிறாரென்னும் செய்தி

---

* இன்றும் கும்பகோணத்தில் முதல் மரியாதை ஸாரங்கபாணி தேவ ஸ்தானத்தில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் மடத்திற்கு அளிக்கப்படுகிறது. - நூலாசிரியர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பரவியுள்ளது. அந்த மஹாபுருஷர் யார்? ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர்! ஆஹா யாருடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் கியாதிபெற்ற மஹா பண்டிதரும் கூட பயப்படுவாரோ அந்த அப்பய்ய தீக்ஷிதேந்திரரே கும்ப புரத்திற்கு இன்று வருகை தரவிருக்கிறார்.

வேதவேதாந்த மஹா பண்டிதரும் தத்வ சாஸ்த்ரத்தில் நிகரற்ற கீர்த்தி படைத்தவருமான ஸ்ரீதீக்ஷிதரவர்கள் கும்பகோணத்திற்கு வரக்காரணமென்ன? ஜகத்திற்கு ஸ்ரீவிஜயீந்திரர் விடுத்த சவாலே காரணமாகி யிருக்கலாமல்லவா? இப்பொழுது பார்க்க வேண்டும் ஸ்ரீவிஜயீந்திரரின் வாதத்திறமையை! தீக்ஷிதரை ஸ்ரீயவர்கள் எதிர்க்கவல்லவரா? வாதத்தில் ஜயித்துத் தமது "அஜேய" ரென்னும் விருதை ஸ்ரீஸ்வாமிகள் தக்க வைத்துக் கொள்ள முடியுமா? ஸ்ரீவிஜயீந்திரரின் அவருடைய நாமம் நிலைப்பது அல்லது அழிவதன் தீர்ப்பு ஆக வேண்டிய காலம் வந்துள்ளது..இந்த இரு மஹான்களும் அஸாதாரண ஞானிகள் (alert and well-informed) "गगनं गगनाकारं सागरस्सागरोपमः" என்றபடி உள்ளவர்கள் அதாவது ஆகாசத்திற்கு நிகர் ஆகாசமே, கடலுக்கு நிகர் கடலே என்றது போல, ஸ்ரீவிஜயீந்திரரும் தீக்ஷிதேரந்திரரும் சமமானவர்கள். இவர்களுடைய வாதயுத்தத்தைப் பார்க்கும், கேட்கும் பாக்யம் நமக்குக் கிடைக்குமோ? என்றெல்லாம் ஜனங்கள் பரஸ்பரம் சர்ச்சையிலிறங்கியுள்ளனர். அதனால்தான் நகரத்தில் இவ்வளவு ஆர்வம், குதூகலம்.

ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதேரந்திரர் ஸாமான்யமான வரல்லர், அத்வைத மதஸ்தாபனாசார்யரான ஸ்ரீசங்கராசார்யர் மற்றும் ஸ்ரீவித்யாரண்ய முனிகளுக்குப் பிறகு அத்வைத வாதத்தில் ஸ்ரீ தீக்ஷிதரைப் போல் மஹா திறமைவாய்ந்த பண்டிதர் வேறுயாருமில்லையென்றால் ஆச்சரியப்படுவதற்கே இல்லை. தீக்ஷிதரின் வித்யா பலவகைகளில் போற்றப்பட்டது. 62 கலைகளில் நிபுணர் ஸ்ரீதீக்ஷிதர். அத்வைத மதத்தை அதிஸூக்ஷ்ம திருஷ்டியினால் காப்பாற்றிக் கொண்டு வந்த கீர்த்தி தீக்ஷிதருக்குக் கைவந்தகலை. அநேக க்ரந்தங்களை இயற்றித் தமது மதத்தை ஆமோதிப்பதில் ஸ்தாபிப்பதில், வெகுவாக முயற்சித்த மஹானுபாவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


எல்லாவற்றிற்கும் மேலாக, "சைவாத்வைத மதம்" என்னும் ஒரு புதிய சித்தாந்தத்தை ஸ்தாபித்தவராகி "சைவாத்வைத மத ஸ்தாபனாசார்ய"ரென்னும் விருதைப்பெற்று கீர்த்திபெற்றவர். தீக்ஷிதர் ஜீவ ப்ரம்ம ஐக்யபரமான அத்வைத சித்தாந்தத்திற்கு சிவஸர்வோத்தமத்வத்தைப் பொருந்தும்படி செய்த திறமைமிக்கவரார். அவர் வாதத்தில் மஹா நிபுணர். விசித்திரத் திறமை படைத்தவர். நியாயம், மீமாம்ஸா சாஸ்திரங்களில் எல்லோரைவிட ஒருபடி மேலானவர்; நல்ல உழைப்பாளி. நல்ல ஆசாரவிசாரங்களில் நிஷ்டர். தீக்ஷிதர் தமது பாண்டித்யத் திறமையினால் கர்நாடக ஸாம்ராஜ்யாதிபதியான விஜயநகரத்தின்[1] வெங்கடபதிராயர்! சின்ன திம்ம, கவெல்லூருநாயகர், சின்னபொம்ம, தஞ்சாவூரின் சவ்வப்பநாயகர் அச்யதபூபாலர், பாண்டிய நாட்டதிபதி முதலான தக்ஷிண பாரதத்தின் ராஜ மஹாராஜாக்களினால் கௌரவிக்கப் பட்டவராயிருந்தார். ஸ்ரீதீக்ஷிதர், "குவலயாநந்த, யாதவாப்யுதய வ்யாக்யா, சிவார்க்கமணி தீபிகா" முதலிய க்ரந்தங்களை மேற்சொல்லப்பட்ட ராஜாக்களின் போஷகத்தினாலேயே (பண உதவியினாலேயே) இயற்றிப் பல்லக்கில் சஞ்சரிக்கின்ற பரமஹம்ஸாச்ரமத்தினருக்கு உசிதமான மஹா மரியாதையைச் சம்பாதித்த மஹானுபாவர். இப்பேர்ப்பட்ட ஸ்ரீதீக்ஷிதேந்திரர் கும்பகோணத்திற்கு வருகிறாரென்ற பிறகு உற்சாகத்திற்கு என்ன குறை?

சைவ ஸந்நியாஸியான ஸ்ரீலிங்கராஜேந்திரரை ஸ்ரீவிஜயீந்திரர் ஜயித்தபிறகு ஸ்ரீவிஜயீந்திரரை வாதத்தில் ஜயிக்கத் திறமையில்லாமல் தமது மதத்தின் மீதுள்ள அன்பையும் சிரத்தையையும் இதயத்திலேயே மூடிவைத்துக் கொண்டு துக்கப்பட்டுக் கொண்டே ஸ்ரீஸ்வாமிகளைப் பழிவாங்குவதன் பொருட்டு வாய்ப்பை எதிர்நோக்கி அநேக மஹான்களுக்கு இன்று எங்குமில்லாத மகிழ்ச்சியுண்டாயிற்று. ஒருவேளை இந்த மஹானுபாவரின் அயராத முயற்சி மற்றும் பிரார்த்தனைகளின் பல ஸ்வரூபமாகவே ஸ்ரீதீக்ஷிதருடைய வருகை காரணமாக இருக்கக் கூடுமல்லவா? தீக்ஷித-விஜயீந்திரருக்கு அவரவர்களுடைய க்ரந்தங்களின் மூலமாக

1. Mysore Archaeological Report 1944 No.26.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அறிமுகமாயிருந்த போதிலும் த்வைத சித்தாந்த தூஷகரான தீக்ஷிதரின் க்ரந்தங்களைக் கண்டித்து த்வைத மதத்தைப் புகழ்ந்து க்ரந்தங்கள் இயற்றி [2]. ஸ்ரீவிஜயீந்திரர் தீக்ஷிதருக்கு அனுப்பியிருந்தார். இப்பொழுது நேருக்கு நேர் வாதவிவாதம் செய்யும் வாய்ப்பு வந்துள்ளது.

ஸ்ரீவிஜயீந்திரயதிச் சக்ரவர்த்தியின் மஹாதேஜஸ்ஸின் முன்னால் நிற்கின்ற தகுதியில்லாததினால் துக்கமடைந்திருப்பவர்களுக்கே அத்வைத தத்வ பண்டித நிபுணர் தம்முடைய தத்துவத்தை ஸ்தாபிக்கத் தகுதியுள்ள தீக்ஷிதர் வருகிறாரென்ற பிறகு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாயிருக்க வேண்டும்! அதனாலேதான் தீக்ஷிதரின் வரவேற்பிற்காக ஆர்வத்துடன் ஊருக்கு வெளியில் ஒன்றிரண்டு மைல்களிலிருந்தே வைபவத்துடன் தீக்ஷிதரை அழைத்துவர எல்லா ஏற்பாடுகளும் செய்துள்ளனர் அவரது மதாபிமானிகள்.

ஊருக்கு வெளியிலுள்ள தோப்பின் நடுவில் தீக்ஷிதரின் வருகையை எதிர்நோக்கியிருக்கையில் உத்தமமான பல்லக்கில் அமர்ந்து தீக்ஷிதரின் ஊர்வலம் வந்து சேர்ந்தது. தீக்ஷிதரின் பக்தர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டிருப்பதைப் போலவே வாங்கா, கொம்பூதும் ஓசை ஒன்று கேட்டது. இதென்னவென்று ஜனங்கள் அங்குமிங்கும் பார்த்திருக்கையில் ஸ்ரீவிஜயீந்திர குருராஜர் பல்லக்கில் வருவது தெரியவந்தது. ஆர்வத்துடன் எல்லோரும், "இதென்ன சந்திப்பு!" என்று பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஸ்ரீயவர்களின் பல்லக்கு வந்தேவிட்டது. தீக்ஷிதரின் பல்லக்கும் ஸ்ரீயவர்களின் பல்லக்கும் எதிரெதிரில் நின்றன.

## 47. முதல் கோணல் முற்றும் கோணல்.

ஸ்ரீவிஜயீந்திரரின் வாதத்திறமை, சாஸ்திர பாண்டித்யங்களைக் கேள்விப்பட்டுத் தெரிந்திருந்த ஸூக்ஷ்ம திருஷ்டியும் நிபுணத்வத்தையும் பெற்றிருந்த தீக்ஷிதர் ஸ்ரீயவர்களை காவ்யாலங்கார சாஸ்திரங்களில் இப்பொழுது ஜயித்துவிடுவது என்று யோசித்து, நகரத்தார்களை வரவழைத்து இவ்வாறு சொன்னார்.

2. वादी हयप्पय्य इति विश्रुत .......। चकार बहु संख्याकान् ग्रंथानप्पयदीक्षितः । तज्जिगाय यतिश्रेष्ठः स्वयं ग्रंथान् चकार ह । विजयींद्र कृतैर्ग्रंतैस्यद्ग्रंथास्ते निराकृताः।

श्री विजयींद्रविजयः

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
"ஸ்ரீவிஜயீந்திரர் மஹாஸமஸ்தானாதிபதி. நாம் மதஸ்தாபனாசார்யர்; யாராவது ஒருவர் பணிந்தால் கௌரவம். ஆகையால் திறமை விஷயத்தில் யார் யாருக்குப் பணிய வேண்டுமென்பதை நிர்ணயம் செய்ய வேண்டும். இப்பொழுது வாதம் தேவையில்லை. கொஞ்ச காலத்திற்குள் அது முடிவது நடக்காத காரியம். இவைகளெல்லாவற்றையும் யோசித்து நமக்கு ஒரு உபாயம் தோன்றுகிறது. இப்பொழுது பிரச்னையைத் தீர்க்க அதுவே சுலபமான வழி. எப்படியிருந்தாலும் நாம் இப்பொழுது ஒரு வனத்தில் நடுவே இருப்போம். இந்த வனத்தையே ஒரு அனுஷ்டுப் சந்தஸ்ஸில் இருவரும் வர்ணிக்க வேண்டும். நாம் பாதி ச்லோகத்தில் முதலில் வர்ணிப்போம். பிறகு ஸ்ரீயவர்கள் வர்ணிக்கட்டும். எங்கள் இருவர்களின் கவிதையில் யாருடையது ப்ராஸங்களுடன் கூடி ஸ்வாரஸ்யமாகவும் உள்ளதோ அப்படிப்பட்டவருக்கு இன்னொருவர் பணிய வேண்டும்! இதற்கு ஸ்ரீயவர்கள் சம்மதித்தால் நமக்குத் தடையொன்றுமில்லை. இப்பொழுது ப்ரச்னை அதனால் எளிதாகத் தீர்மானமாகிவிடும்" என்று சொல்லவும் நகர ப்ரமுகர்கள் ஸ்ரீவிஜயீந்திரரிடம் சென்று ஸ்ரீதீக்ஷிதரின் அபிப்பராயத்தை விக்ஞாபித்தார். தீக்ஷிதரின் தந்திரத்தை அறிந்த ஸ்ரீயவர்கள் புன்னகை செய்து அப்படியே ஆகலாம் என்றார்.

இந்த விஷயம் நொடிப்பொழுதில் கூடியிருந்த ஜனங்களெல்லோருக்கும் தெரிந்தது. மஹா பண்டிதரான மஹான்களின் முதல் சந்திப்பின் வெற்றி தோல்வியை அறியும் ஆர்வத்துடன் எல்லோரும் மௌனமாக நின்றிருந்தனர். வனத்தை உடனடி கவிதையியற்றி தீக்ஷிதர் வர்ணித்தார்:-

"अस्त्यरण्यं तरण्यंघ्रि सरण्यंतर्धि पातपम्"

அதாவது இந்த வனம் சூர்யகிரணங்களின் மார்க்கத்தை மறைக்கும் ஆகாயத்தை யளாவிய அடர்த்தியான மரங்களினால் சோபிக்கிறது" என்று தீக்ஷிதரின் கவிதையின் தாத்பர்யம். ஆஹா! எவ்வளவு அழகான பதப்ரயோகம்! எவ்வளவு இனிமை! ஸ்வபாவோக்தி, காவ்யலிங்க, அனுப்ராஸம் முதலிய சப்தாலங்காரங்களினால், மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் தீக்ஷிதரின் கவிதையைக் கேட்டு ஜனத்திரள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
மகிழ்ந்தனர். தீக்ஷிதர் வெற்றி தமக்கே என்று புன்னகை மலர்ந்து கர்வத்துடன் உட்கார்ந்து விஜயீந்திரரின் பதில் கவிதையைக் கேட்க ஆர்வத்துடனிருக்கின்றார்.

காவ்யம், கவிதையியற்றுவதில் நிபுணரான ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரின் கவிதையைப் பூர்த்தி செய்யும் கவிதையை இயற்ற வல்லரோ ஸ்ரீவிஜயீந்திரர் என்று நகரப்ரமுகர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே ஸ்ரீவிஜயீந்திரரின் முகத்தாமரையென்னும் மேடையிலிருந்து காவ்ய ரமணியே நடமாடிக்கொண்டு ஒய்யாரமாக நாட்டியமாடிக் கொண்டு வருகிறாளோ என்று நினைக்கும்படியாக ருசிகரமான கம்பீரமான காவ்ய மகிமை ஸ்ரீயவர் முகத்தினின்று புறப்பட்டது!

"दरी सुप्त झुरीदत्त परीरंभ सरीसृपम्" அதாவது, "புற்றில் படுத்திருக்கும், பெண் பாம்பு மென்மையான இன்பம் தரும் ஆலிங்கனத்தினால் சுகமடையும் ஆண் பாம்புகளின் கூட்டத்தினால் வனம் சோபிக்கிறது." ஸ்ரீவிஜயீந்திரரின் காவ்ய சாதுர்யம் எப்படிப்பட்டது? ஆஹா! எப்படிப்பட்ட கம்பீரமான சைலி (Style), எவ்வளவு ரஸம் நிறைந்த வர்ணனை! எப்படிப்பட்ட ரஸபாவம்! ஜன சமூகம் ஸ்ரீயவர்களின் கவிதையைக் கேட்டு தாங்கள் முன்பு எப்பொழுதும் கேட்டறியாத ஸ்ரீயவர்களின் கவிதைத் திறமையை அறிந்து வியப்புடன் நின்றிருந்தனர். ஸ்ரீதீக்ஷிதரைப் பின்பற்றுபவர்களின் முகம் வியர்த்தது. ஸ்ரீதீக்ஷிதர் தம் காதைத் தாமே நம்பாமல் மனமுடைந்தார்.

காவியம், நாடகம், அலங்காரங்களில் நிபுணரான அநேக பண்டிதர்கள் இருவர்களின் கவிதைகளை விமரிசித்தார்கள். ஸ்ரீதீக்ஷிதரின் கவிதையில் 1. அரண்யம் 2. தரணி 3. ஸரணி என்று மூன்று ப்ராஸங்கள் உள்ளன. வர்ணனை ஜடங்களைப் பற்றியே உள்ளது. ஸ்ரீவிஜயீந்திரரின் கவிதையில் 1. தரீ 2. ஜுரி, 3. பரீ 4. ஸரீ என்னும் நான்கு ப்ராஸங்கள் உள்ளன! ஸ்ரீயவர்களின் வர்ணனை சேதனபரமாகவும் ஸ்வரஸமும் ஆகியுள்ளது என்று தீர்ப்புக் கூறி இருவர் கவிதைகளில் தன்மைப்பற்றியும் தமது அபிப்ராயத்தைக் கூறினர். கூடியிருந்த ஜனங்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் புதிய காவ்யத் திறமையின் பலனாக புத்துணர்ச்சியடைந்தனர். மேலும் "விஜயீந்திர குருஸார்வபௌமருக்கு ஜயஜய" என்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஜயகோஷம் எழுப்பி ஆரவாரம் செய்தனர். "प्रथमे कवले मक्षिकापातः" முதல் கோணல் முற்றும் கோணல்" என்றபடி முதலிலேயே இப்படி ஆயிற்றே என்று மோசக்காரர்களுக்கு வருத்தமேற்பட்டது. (ஸ்ரீயவர்களின் த்வேஷிகள் ஏமாந்து போனார்கள்).

நற்குணம் படைத்தவரும், பிறர் நல்ல குணங்களை மதிப்பவருமான தீக்ஷிதர் பல்லக்கிலிருந்து இறங்கி ஸ்ரீவிஜயீந்திரதீர்த்தர் பக்கம் வந்து அந்த தேஜப்புஞ்ஜரான யதிகளைப் பார்த்தார். சிரித்த ஆனந்தமய ம்னோஹரமான அழகான ஜயீந்திரரின் ரூபத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து மகிழ்ச்சியுடன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து விண்ணப்பித்தார்:- "எனது ப்ராஸத்திற்கு ஒன்றை அதிகமாக்கிச் சொன்னீர். காவியத்திலும் தாம் ப்ரவீணரென்று முதலிலேயே தெரிந்திருந்தால் இதற்கு வாய்ப்பே கொடுத்திருக்க மாட்டேன். மகிழ்ச்சி! விஜயீந்திரரென்னும் தமது பெயர் ஸார்த்தகமாயிற்று. எப்படி இருந்தாலும் தாங்கள் பரமஹம்ஸ ஆஸ்ரமத்தைச் சேர்ந்தவர். இதோ எனது நமஸ்காரத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார்.

ஸ்ரீயவர்கள் சிரித்துக் கொண்டே, "உமது நமஸ்காரத்தை நாம் இப்பொழுதே ஏற்றுக் கொள்ளப்போவதில்லை" என்றார். ஸ்வாமிகளின் வார்த்தையின் ரகசியத்தையறிந்த தீக்ஷிதர் தமாஷாக, "அப்படியானால் நமஸ்காரத்தை திருப்பிக்கொடுப்பீரா?" எனலும் "दत्तापराध" செய்யலாமா? என்று புத்திசாலித் தனமாக ஸ்ரீயவர்கள் பதில் சொன்னார். சாமர்த்தியமாகத் தமது வாயை அடைத்த ஸ்ரீயவர்களின் திறமைக்கு வியந்து தீக்ஷிதர் சிரித்துக்கொண்டே, "இருக்கட்டும், இருக்கட்டும், இப்பொழுது நான் பதில் சொல்ல முடியாதபடி செய்துவிட்டீர். பரமேச்வரனின் கிருபையிருந்தால் பிறகு பார்க்கலாம். உமது சைலியை (Method)! என்லும் ஸ்ரீயவர்கள், "மிக்க மகிழ்ச்சி!" ஆகட்டும், நாளைக்கே நமது மடத்திற்கு வரத் தமக்கு அழைப்பு வருகிறது" என்று விடைகொடுத்தார்: தீக்ஷிதர் ஸ்ரீயவர்களின் பல்லக்கு போக வழி விட்டார். ஸ்துதி பாடகர்கள்:-

"योनित्यं पदवाक्य मानसरणी संशीलनालंकृताः
तेषामेव करोति या प्रतिपदं

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

संतोष मा कर्णनात् ॥
याचानेक विनेय षट्पदततेः संफुल्ल मल्ली समा ।
सैषावाक् विजयींद्रसंयमिमणे
ज्ञानार्थि भि स्सेव्य तां ॥"

என்று விருதை கோஷித்திருக்கையில் ஸ்ரீயவர்களின் ஊர்வலம் முன்னால் சென்றது. பிறகு ஸ்ரீதீக்ஷிதர் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஊர்வல வைபவத்துடன் கும்பகோண நகரத்திற்குள் ப்ரவேசித்தார்.

சிஷ்யனின் பிக்ஷையை ஏற்று கும்பகோணத்திற்குத் திரும்பிய ஸ்ரீவிஜயீந்திரருக்கு முந்தின தினம் ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதருக்குக் கும்பபுரியின் நகரத்தினர் பண்டிதச்ரேஷ்டரான அப்பய்ய தீக்ஷிதரை நகரத்தினர் சிறப்பான முறையில் வரவேற்றுள்ளனர் என்று அறிந்து மகிழ்ச்சியடைந்தனர்.

முன் தினம் தான் தீக்ஷிதருக்குத் தெரிவித்தபடி விஜயீந்திர ஸ்ரீபாதங்களவர் சுவாமி தரிசனத்திற்கு வர வேண்டுமென்று தீக்ஷிதருக்கு அழைப்பு விடுத்தார். வெள்ளிக் கோலேந்திய ஸ்ரீமடத்தின் பாருபத்திகாரர் தீக்ஷிதரின் முகாமிற்குச் சென்று ஸ்ரீயவர்களின் வேண்டுகோளைத் தெரிவித்து தீக்ஷிதரை ஸ்ரீமடத்திற்கு வரவேண்டுமென்று மரியாதையுடன் அழைத்தார். தீக்ஷிதரும் மகிழ்ச்சியுடன் வருவதாகத் தெரிவித்துத் தனது சிஷ்யர்களுடன் பல்லக்கில் அமர்ந்து மடத்திற்கு எழுந்தருளினார்.

மடத்தின் வாயிலில் பல்லக்கை விட்டிறங்கி தீக்ஷிதர் வரும்பொழுது ஸ்ரீமடத்தின் தர்மாதிகாரி மற்றும் வித்வான்கள் மரியாதையுடன் தீக்ஷிதரை வரவேற்று மடத்திற்குள் அழைத்துக் கொண்டு போனார்கள். ஸ்ரீமூலராமரின் பூஜையில் ஆழ்ந்திருந்த ஸ்ரீவிஜயீந்திரருக்கு வந்தனம் செய்து உட்கார்ந்தார். தீக்ஷிதர் ஸ்ரீயவர்கள் சிரித்த முகத்துடன் தீக்ஷிதரின் வருகையினால் தனக்குண்டான மகிழ்ச்சியைத் தெரிவித்தார். கிரமப்ரகாரம் பூஜை வைபவத்துடன் நிறைவேறியது. தீர்த்தம் உட்கொண்டு ஸ்ரீயவர்கள் ஆஸனத்திலமர்ந்து தீக்ஷிதருடைய க்ஷேம சமாசாரம் விசாரித்தார். ஸ்ரீகளவரின் நல்லெண்ணம், உதாரகுணத்தை அறிந்த தீக்ஷிதர் லோக சமாசாரங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பற்றிப் பேசிக் கொண்டு ஸ்ரீயவர்களின் புத்தி சாமார்த்தியத்தைப் பரீக்ஷிக்க மெதுவாகப் பேச்சின் போக்கை மாற்றினார்.

தீக்ஷிதர்- (சிரித்துக்கொண்டே) ஸ்ரீயவர்களின் பேட்டியானது மிக்க மகிழ்ச்சி தரும் விஷயம் ध्वांतरे ।(த்வாந்தரே!) (மாத்வ "माध्व" என்னும் வார்த்தையில் "ध्व" (த்வ, என்னும் எழுத்து கடைசியிலிருப்பதனால் ध्वांतर என்றால் மாத்வரென்று அர்த்தம். மற்றொரு அர்த்தம்: ध्वांतर என்றால் இருட்டு. இந்த ध्वांत "பதத்தை" ஆவ்ருத்தி செய்து கொள்ள வேண்டும். (இரண்டு தடவை சொல்ல வேண்டும்.) அந்த ஸமாஸத்தில் மற்றும் "த்வ" என்று பிரித்தால் இருட்டை நாசமாக்குவது. ப்ரகாசம் என்றர்த்தம். அதாவது தேஜஸ்ஸுள்ளவரென்று கருத்து) தமது தொடர்பால் கண் மூடிக்கொள்ளுகிறது!

வி:- (புன்சிரிப்புடன்) உண்மை தீக்ஷிதரே! மத்வ சூர்யரின் தாபத்தினால் அர்த்தம் (स्म अर्थः स्मार्त) ஸ்மார்த்தர்களுக்குக் கண்மூடிக்கொள்ளுவது இயற்கை தானே?

இதிலிருந்து பரஸ்பரம் பரிசயம் (அறிமுகம்) ஓர் அளவு ஆயிற்றென்று ஆகிறது. தீக்ஷிதர் தாம் இயற்றின, "मध्व मुखमर्दन" (மத்வமத வித்வம்ஸன) என்னும் க்ரந்தத்தை ஸ்ரீயவர்களின் முன் படித்தார். ஸ்ரீயவர்கள் கடைசிவரைப் பேசாமல் தலையாட்டிக் கொண்டே உட்கார்ந்திருந்தார். கடைசியில் தீக்ஷிதர் சொன்னார்:-

"तथा प्यानंदतीर्थीयं मत मग्राह्यमेवनः ।
यत्र वैदिकमर्यादा भूयस्याकुलतां गता ।"

அதாவது:- எந்த மத்வ மதத்தில் வைதிக (வேத சம்பந்தமான) மரியாதையானது வெகுவாக உல்லங்கனம் செய்யப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஆநந்த தீர்த்தரின் மதம் நமக்கு அக்ராஹ்யம்தான் (ஏற்றுக் கொள்ளப்படாதது தான்) என்று சொல்லி, "இது ஸ்ரீயவர்களுக்குச் சம்மதந்தானே?" என்று கேட்டார்.

வி:- (புன்னகை செய்து) ஒரு அனுஸ்வாரத்தை, (அம்) எடுத்துவிட்டால் நமக்குச் சம்மதம்தான். தீக்ஷிதரே! அதாவது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


"तथाप्यानंद तीर्थीय ! मतमग्राहा मेव नः ।
यत्र वैदिक मर्यादा भूयस्या कुलतां गाता ॥"

இதைக்கேட்ட தீக்ஷிதர் குழப்பமடைந்தார். ஒன்றும் தெரியாமல் விழித்தார். கூடியுள்ள பண்டிதர்கள் ஆச்சரியமடைந்தனர். ஸ்ரீயவர்களின் சொற்களின் பொருள் இதுதான். "आनंदतीर्थीयं" என்பதில் அனுஸ்வாரத்தை எடுத்துவிட்டால் (அதாவது யம் यं என்னும் எழுத்தின் மேலுள்ள "ம" என்ற எழுத்தை நீக்கிவிட்டால் तीर्थीय "தீர்தீய" என்றாகிறது. அதனால் "आनंदतीर्थीय ।" என்று ஸ்ரீவிஜயீந்திரரைப் பார்த்துச் சொல்வதாக ஆகிறது. அப்பொழுது தீக்ஷிதரின் ச்லோகத்தின் தாத்பர்யம் இவ்வாறாகிவிடும். ஆனந்த் தீர்த்திய! மத்வ மதத்தைச் சார்ந்த ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரே! यत्रः எந்த அத்வைத மதத்தில், वैदिकमर्यादा வேதத்தின் நியம கௌரவங்கள் அதிகமாக आकुल ताम्‌गताः आकुलित ஆகியுள்ளதோ, கெட்டுள்ளதோ அதாவது எந்தமதமானது ச்ருதிக்கு விரோதமாயுள்ளதோ, அப்படிப்பட்ட नः நமது, मतं அத்வைத மதம், अग्राहामेवः ஏற்கப்படமாட்டாது.

தன்னுடைய ச்லோகத்தினாலேயே தன்னைக் கண்டித்த ஸ்ரீவிஜயீந்திரரின் சாதுர்யம் (Talent) சமத்காரங்களைக் கண்டு வியப்படைந்து தீக்ஷிதர் ஸ்ரீயவர்களைப் பார்த்து சிரித்தார். இவ்விருவருடைய ஸரஸ-விநோதமான வாத க்ரமத்தைக் (humorous discussion) கண்டு ஜனங்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

தீக்ஷிதர்: மஹாஸ்வாமி, இதுவரை மர்யாதை நிமித்தம் பேச்சு வார்த்தைகள் நடந்தன. இன்னும் ஸ்ரீபாதங்களவருடன் சற்று சண்டை போடவேண்டுமென்று விருப்பமாயுள்ளது, இல்லையா? தாங்களென்ன சொல்லுகிறீர்?

வி:- (உற்சாகத்துடன்) வெகுநாளைய நமது விருப்பம் இன்று நிறைவேறுவது போலுள்ளது. தீக்ஷிதரே சண்டைபோட வேண்டுமென்று அபிலாஷை நமக்கும் வெகு நாட்களாக இருந்தது. ஆனால் சரியான உஸ்தாது (மல்யுத்த வீரர்) கிடைக்கவில்லை. கும்பேச்வரனின் தேவாலயத்தில் இன்று மாலை அகாடா (अखाड़ा) (குஸ்திமேடை) ஏற்பாடாகட்டும் சரிதானே?

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீ:- (ஸ்ரீயவர்களின் பேச்சைக் கேட்டு சிரித்துக் கொண்டே)'' எனது வலிமையான பிடிகளைச் சமாளிக்கத் தயாராக இருங்கள்", என்று சொல்லித் தமது சம்மதத்தைத் தெரிவித்து ஸ்ரீயவர்களின் உத்தரவு பெற்றுச் சென்றார்.

## 48. வரலாற்றிலேயே பெயர் பெற்ற த்வைத-அத்வைத வாதம்:

மாலையில் நான்கு மணியளவில் ஸ்ரீகும்பேச்வரனின் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான ஜனத்திரள் கூடியுள்ளனர். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர்-ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரின் வாதம் ஆரம்பமாக உள்ளது. இதுவரை நடந்த வாதங்களுக்கும் இன்றைய வாதத்திற்கும் மிக்க வித்தியாசமுள்ளது. ஸ்ரீவிஜயீந்திரருடன் சமானமான ஜோடியாக வாதம் செய்ய வல்ல மஹா பண்டிதர் ஸ்ரீதீக்ஷிதர். ஸ்ரீதீக்ஷிதரை ஜயித்து த்வைத சித்தாந்தத்தின் வெற்றிக் கொடியைப் பாரததேச முழுவதிலும் பட்டொளி வீசிப்பறக்கச் செய்யும் வல்லமையுடைய மஹாவாதமல்லரும், வித்வன்முகுடமணி என்றால் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த குரு ஸார்வபௌமரே! அதைப்போலவே இன்றைய வாதத்திற்கு இவ்வளவு பெருமை! இரண்டு தரப்பினர்களின் பலாபலங்களின் தீர்ப்பு ஆகவேண்டிய காலம். நூற்றுக்கணக்கான பண்டிதர்கள் தேசவிதேசங்களிலிருந்தும் இப்படிப்பட்ட அரியவாய்ப்பை இழந்துவிடக் கூடாதென்று வாதத்தைப் பார்த்துக்கேட்கும் ஆர்வத்துடன் கும்பகோணத்திற்கு வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றனர். ஸ்ரீவ்யாஸராஜயதிச் சக்ரவர்த்திக்குப் பிறகு ப்ரபலமான வாதிகளை வாதத்தில் வென்று த்வைத சித்தாந்தத்தைக் காப்பற்றும் ஸந்யாஸிகளிருந்தால் அது ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரொருவரே என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாயிருந்ததினால் பத்துப்பதினைந்து வருஷகாலம் ஸ்ரீமத்வ மதத்தின் மீது வெவ்வேறு மதத்தைச் சேர்ந்த மஹா பண்டிதச்ரேஷ்டர்கள் தூஷித்து தூஷணை, நிந்தனை செய்து சுமத்திய தோஷாரோபணைகளை தீரரைப்போல் எதிர்த்து மத்வ மதத்தின் ராஜமார்க்கத்திலிருந்த பெரிய முட்களை வேறுடன் அறுத்தெறிந்த மஹானுபாவர் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரொருவரே என்பதை கண்ணாரக்கண்டு கும்பகோணத்தின் வாஸிகள் ஸ்ரீவிஜயீந்திர அப்பய்ய தீக்ஷிதரின் வாதத்தின் பலனை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மிக்க ஆர்வத்துடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். அப்பய்ய தீக்ஷிதரை விஜயீந்திரர் ஜயித்துவிட்டால் ஜகத்தில் விஜயீந்திரருக்கு சமானமானவர் வேறொருவரு!மில்லையென்பது நிரூபணமாகிவிடுமென்பதினால் ஜனங்கள் பரஸ்பரம் சர்ச்சை செய்து கொண்டிருக்கின்றனர். விசிஷ்டாத்வைத மதத்தின் ஜகத்ப்ரஸித்த பண்டிதராத ஸ்ரீதாதாசார்யரே முதலான ப்ரசித்த பண்டிதரை சபையின் அதிபராகத் தேர்ந்தெடுத்து வாத நியமங்கள் சட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டு பிறகு வெகு நேரமாக 2எதிர்பார்த்துக் கொண்டிருந்த வரலாற்றுப் பெயர்பெற்ற வாக்யுத்தம் ஆரம்பமாயிற்று!!

தீக்ஷிதர்:- பேத ஸாமான்யமே ப்ரமாணமானதல்லவென்ற பிறகு, பேதத்தின் உள்பேதங்களான (தத்விசேஷங்களான) ஜீவ-பரமேச்வராதி பேதங்கள் எவ்வாறு ப்ரமாணங்களெனப் படும்?

விஜயீந்திரர்:- அது எப்படி தீக்ஷிதரே! பேதம் ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் இவை மூன்றினாலல்லவோ அறியப்படும்?

தீ:- ஸ்ரீயவர்கள் ஒருவேளை, "भेदधिक्कार" க்ரந்தத்தை பார்த்திருப்பதற்கில்லை.

வி:- தெரியும். ஷட்சாஸ்திரங்களில் நிகரற்ற பண்டிதரான நரசிம்மாச்ரம முனிகளினால் இயற்றப்பட்டதல்லவா அது? உமது குருகளென்ற பிறகு கேட்கவேண்டுமா? க்ரந்தம் மிக உன்னதமானது. ஸ்ரீகுருபாதரான ஸ்ரீசந்திரிகாராயரின் அனுக்ரஹத்தினால் அந்த க்ரந்தம் நூற்றுக்கு நூறு கண்டனமாகியுள்ளது. எமது "भेदविद्याविलास" என்ற க்ரந்தத்தை நீங்கள் பார்க்கவில்லையென்று தெரிகிறது. (ஒரு சிஷ்யனைக் கூப்பிட்டு, "भेद विद्याविलास"த்தைத் தரவழைத்து தீக்ஷிதருக்கு அளித்து) தீக்ஷிதரே! இந்த க்ரந்தத்தைப்பாரும். உமது கேள்விகளுக்கெல்லாம் இதிலேயே உத்தரம் உள்ளது.

தீ:- (க்ரந்தத்தைப் பார்த்து குழப்பமடைந்து) ஸ்ரீயவர்களுக்குத் தெரியாத விஷயமே இல்லையென்று தோன்றுகிறதே? இருக்கட்டும். தமது

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


க்ரந்தத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அதில் "नाहमीश्वर"என்னும் ப்ரத்யக்ஷம் ப்ரமையானதால் பேதவிஷயத்தில் ப்ரத்யக்ஷம் ப்ரமாணமாகாது.

வி:- அதேன் ப்ரமையாகும்? காரணம்?

தீ:- இந்த ப்ரத்யக்ஷம் கண்கள் முதலிய பஹிரிந்திரிய ஜன்யமாக மாட்டாது. அதாவது நமது ஸ்தூலமான இந்திரியங்களினால் ஆகாது. ஆத்மவிஷயத்தில் அவைகளுக்குச் சக்தியில்லை. ப்ரமாணாந்தர ஸஹகாரியான மனஸ்ஸு ப்ரமாணமே ஆகமாட்டாது. வேறு க்காரணமில்லாமலிருப்பதால் அந்த ப்ரத்யக்ஷம் ப்ராந்தி, ப்ரமை.

வி.- தீக்ஷிதரே! மனம் ப்ரமாணாந்தர ஸஹகாரி யானதினால், ப்ரமாணமல்லவென்ற உமது வாதம் சரியானதல்ல. ரூபாதிப்ரத்யக்ஷம் உண்டாக வேண்டுமானால் சக்ஷுஸ்ஸஹகாரியான மனஸ்ஸு புகையைப் போல நெருப்பின் அனுமானத்தில் ப்ரமாணமாவதனால் உமது வாதம் சரியல்ல.

தீ:- ஸ்ரீயவர்கள் சற்று கவனிக்க வேண்டும். எந்த தர்மத்தினால் எதுவும் ப்ரமாண ஸஹகாரியோ, அது அதே தர்மத்தினால் ப்ரமாணமாகமாட்டாது. சக்ஷுரிந்திரியத்திற்கு (கண்ணிற்கு) ஆலோகத்வம் (வெளிச்சம்) தர்மத்தினால் ஸஹகாரியானாலும் வன்ஹிவ்யாப்யத்வ தர்மத்தினால் (நெருப்பின் வியாப்தி) ப்ரமாணமாகலாம் இதில் என்ன தோஷம்?

வி:- (புன்சிரிப்புடன்) தீக்ஷிதரே, மனஸ்தர்மத்தினால் ப்ரமாண ஸஹகாரியனாலும்கூட, மனஸ் இந்த்ரியத்வரூபமான வேறு தர்மத்தினால் ப்ரமாணமாகலாம் ஆகையால் இந்தப்ரத்யக்ஷம் மனோஜன்யமானதினால் உமது ஆக்ஷேபம் எப்படிப் பொருந்தும்?

தீ:- ஜீவ-ஈச்வர பேதம் இயற்கையானதல்ல. உபாதி சம்மந்தமானது "यथाह्ययंज्योतिरात्मा विवस्सर्वानापोभिन्ना बहुधैको नुगच्छे उपाधिना क्रियते भेदरूपो देवक्षेत्रेष्वेदमज्जो अयमात्ता" என்னும் ச்ருதி இந்த அர்த்தத்தையே சொல்லுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

**வி:-** நீங்கள் சொன்ன வேத வாக்யம் உமது வாதத்திற்குப் ப்ரமாணமாகமாட்டாது. இந்த ச்ருதிவாக்யம் பரப்ரம்மனின் பேதம் ஔபாதிகமென்று சொல்லுகிறதே த்விர ஜீவ-பரமாத்மபேதம் ஔபாதிகமென்று தெரிவிப்பதில்லை. அதனாலேயே தேவ-ஆத்ம இத்யாதி பதங்கள் அங்கு ப்ரயோகப்படுத்தப்பட்டுள்ளன.

**தீ:-** அப்படியானால் "कार्योपाधिरयंजीवः कारणोपाधिरीश्वरः ।" என்ற வாக்கியத்தின் நிலை என்ன?

**வி:-** கார்யமென்றால் க்ருதி ஸாத்யபலமென்று அர்த்தம். கார்யோபாதி என்றால் க்ருதிஸாத்ய பலனை நிமித்தமாகக் கொண்டு ப்ரவர்த்திப்பவன் ஜீவன் காரணோபாதியென்றால் ஜீவனிலிருக்கும் புண்யாதிகளை நிமித்தமாக்கிக் கொண்டு ப்ரவர்த்திப்பவன் ஈஸ்வரன் என்று அந்த வாக்கியத்தின் அபிப்ராயம்.

**தீ:-** உபாதி என்ற சொல்லுக்கு நிமித்தம் என்று அர்த்தம் கண்டு வந்துள்ளதா என்ன?

**வி:-** "अध्ययनोपाधिनात्रस्थीयते" என்றதில் உபாதி என்றபதம் நிமித்தம் என்ற அர்த்தமுள்ளது. ஆகையால் நீங்கள் சொன்ன பிரகாரம் ஜீவ-ப்ரம்மனின் பேதம் ஔபாதிகமாக மாட்டாது, மற்றும் அந்த பேதம் ஔபாதிகமென்றால் உபாதியினால் உண்டானது என்று சொல்லப்படுவதில்லை. ஏனென்றால் நீங்கள் அவ்வாறு ஒப்பவில்லை. உபாதி நாசத்தினால் பேதம் நஷ்டமாகிறதென்றும் அர்த்தமல்ல. அவ்வாறு சொல்வதற்கு ப்ரமாணமில்லை.

**தீ:-** ஆச்சரியம்! ஸ்ரீயவர்கள் இங்கு சற்று கவனிக்க வேண்டும். "विभोदंजनंके ज्ञाने नाशमात्यं तिकंगते । आत्मनो ब्रंहमणो भेदमसंतं कः करिष्यति? आमुक्तेर्भेद एवस्याज्जीवस्य च परस्यच । मुक्तस्य च न भेदोऽस्ति भेद हेतोरभावतः ।" இத்யாதி ஸ்ம்ருதிகள் நமது வாதத்திற்கு ப்ரமாணங்களாயிருக்கும்பொழுது ஸ்ரீயவர்கள் ப்ரமாண் மில்லையென்று சொன்னது சரியல்ல.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வி:- தீக்ஷிதரே! "विभेदजनके" என்னும் ஸ்ம்ருதிக்கு நீங்கள் சரியாக அர்த்தம் தெரிந்து கொண்டிருந்தால் இவ்வாறு சொல்லியிருக்கமாட்டீர்கள்.

தீ:- அப்படியா என்ன? அதற்கு என்ன அர்த்தமோ அதைத் தாங்களே சொல்லலாம்.

வி:- விபோதரென்றால் பேத விரோதி அபேதமென்று அர்த்தம். தஜ்ஜனகே-அபேத க்ஞாபகம், அத்யந்தமாகி நாசங்கதேஸதி-நாசமாகையில், ஆத்மனா-ஜீவனால் ப்ரம்மண:-ப்ரம்மனுக்கு, அத்யந்தம்-இல்லாமலிருக்கும் அபேதம்-ஐக்யத்தை க-எவன், கரிஷ்யதி-தெரிந்து கொள்கிறான்? இவ்வாறு அந்த ஸ்ம்ருதிக்கு அர்த்தம் இன்னும் "ஆமுக்தே" என்னும் ஸ்ம்ருதி கடக பேதமென்ற சொல் புத்தி பேதபரமானது. ततश्च आमुक्तेः முக்திவரையிலும், जीवस्य परस्य च ஜீவன் மற்றும் ஈச்வரனுக்கு भेदः பரஸ்ப்ரம் விரோதமான புத்தியும், स्यात् உண்டு. भेद हेतोः விரோதமான புத்திக்குக் காரணமான ராகாதி தோஷங்கள், अभावात् இல்லாமலிருப்பதினால், मुक्तस्य: முக்தனுக்கு (தத்வ சாக்ஷாத் காரமுள்ளவனுக்கு) भेदाः பரஸ்பர விருத்தபுத்திம், नः இல்லை என்று தாத்பர்யம்.

தீ:- இங்கு பேதமென்ற பதம் புத்திபேத பரமாக உள்ளது என்று ஏன் சொல்ல வேண்டும்?

வி:- "सोऽश्नुते सर्वान्कामान्सह ब्रह्मणा विपश्चिता" என்று யுக்தியிலும் பேதமுண்டென்று ப்ரமாணமிருப்பதினால் அது பேத ஸாமன்ய போதகமாவ்தில்லை. அந்தக் காரணத்தினால் புத்திபேத பரமென்றே சொல்ல வேண்டும்.

தீ:- "नाहमीश्वरः"ன்று ப்ரத்யக்ஷம் அனாத்மாஹங்கார விசிஷ்டனுக்கு பேதத்தை விஷயப்படுத்துவது. நிருபாதிகாத்மருக்கு விஷயீகரிப்பது இல்லை.

வி:- க்ஞான ஸுகாத்யாச்ரயத்வத்தினால் ப்ரதீதமான அஹம் சப்தார்த்தனானவன் அனாத்மனென்பது உசிதமல்ல. ஆகையால் எந்த பாதகமும் இல்லாததானதினால், நீங்கள் சொன்னபடி ப்ரத்யக்ஷம் "ப்ரமை"யில்லாத காரணத்தினால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஜீவ-பரமாத்ம பேதம் ப்ரத்யக்ஷப்ரமாணத்தினால் அறியப்படத் தகுந்ததினால் அப்ரமாணிகமாக மாட்டாது.

இவ்வாறு வெகு ரஸமாக வாதம் நடந்து கொண்டிருக்கையில் சபைத் தலைவர் வெகு நேரமாய் விட்டபடியால் வாதத்தை மறுநாளைக்குத் தொடர வேண்டுமென்று இருதரப்பினரிடம் விக்ஞாபனம் செய்ததினால் அன்றைய சபை ஒத்தி வைக்கப்பட்டது.

மறுநாள் காலை மணி 8. தத்வ சாஸ்திர ப்ரபஞ்சத்தில் மிக முக்கியமானதும் வரலாற்றுப் பெயர் பெற்றதுமான ஸ்ரீவிஜயீந்திர-ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர்களின் வாதம் இன்று விசேஷ காம்பீர்யத்துடன் ஆரம்பித்தது. முந்தின நாளின் ஸாராம்சத்தை சபைத் தலைவருக்கு நடுவர்கள் எடுத்துச் சொன்ன பிறகு வாதம் தொடர்ந்தது. ஸ்ரீவிஜயீந்திர-அப்பய்ய தீக்ஷிதர் வாதவிவாத சமாசாரம் தெரிந்து தேசவிதேசங்களிலிருந்து பண்டிதர்கள், நகரத்தார்கள் வெகு ஆர்வத்துடன் வந்து கூடிக்கொண்டிருக்கின்றனர். ஸ்ரீகும்பேச்வரன் கோவிலில் நெருக்கமான ஜனக்கூட்டம். ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகள் வாதத்தைத் தொடங்கி இவ்வாறு சொன்னார்.

வி:- தீக்ஷிதரே! நேற்று ஜீவேச்வர பேதத்தை ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினால் நிரூபித்தோம். அதைப்போலவே அனுமானமும்- ஜீவேச்வர பேதவிஷயத்தில் ப்ரமாணமாக இருக்கிறது. "जडादिरिक्तोर्थः ब्रह्मधर्मिक भेदप्रतियोगी, परिच्छिन्न त्वात् असर्वज्ञत्वा द्वा घटवत् ।" ஜகத்தில் அற்ப ஸ்தலத்தில் இருக்கும் (பரிச்சின்னமான) மண்பாண்டம் ப்ரம்மத்திடத்திலுள்ள பேதப்ரதி யோகியாயிருப்பதனாலும், அதைப்போல் ஜடத்திலி ருந்து வேறான அஹம் (நான்) என்னும் ப்ரதீதியில் (ஞானத்தில், காணும் வஸ்துவும் கூட பரிச்சின்னமாக விருப்பதினால், ஜீவன் ப்ரம்மத்திலிருக்கும், பேத ப்ரதியோகி என்று ஸாதனை செய்ய ஸாத்யம் இருப்பதனால் ஜீவன் மற்றும் ஈச்வரனுக்கு பேதம் இருக்கிறது என்று அனுமானத்தினால் நிரூபிப்போம்.

தீ:- ஸ்ரீயவர்களே, இங்கு வ்யாவ ஹாரிக பேதத்தைப் பற்றிச் சொல்ல விரும்பினதினால் ஜீவேச்வரருக்கு வ்யாவஹாரிக பேதத்தை நாம் ஒப்புவதினால் ஸித்த

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸாதன தோஷம் வருவதில்லையா? மற்றும் இங்கு பேதத்தில் ஸ்வக்ஞானாபாத்யத்வம் (தனது க்ஞானத்தினால் பாதிக்கப்படாமல் இருக்கும்) ஸ்ரீபவிசேஷணத்தைப் போட்டு) பாரமார்த்திக பேதத்தை ஸாதிக்கின்றேனென்று நீங்கள் சொன்னால், இங்கு ஸ்வ என்னும் பதத்தினால் ஜீவனென்று அழைக்கப்படும் கர்த்ருரூப ஆத்மனென்று விவக்ஷா செய்தால், இப்படிப்பட்ட ஆத்ம க்ஞானாஅபாத்ய பேதமென்றால் வ்யாவஹாரிகபேதமாவதால் முன்பு நிரூபித்தபடி ஸித்த ஸாதன தாதோஷம் வருகிறது. இன்னும் "ஸ்வ" என்னும் பதத்தினால் அகண்டநான சிதாத்மனை (நிர்குணப்ரம்மம்) விவக்ஷா செய்தால், ஸர்வ பதார்த்தமும் அவனுடைய க்ஞானத்தினால் பாதிக்கப்படுவதாக இருப்பதினால் "ஸ்வக்ஞானஅபாத்யரூப" விசேஷணமே (அடைமொழியே) அப்ரஸித்தமாகி व्याप्यत्वाऽसिद्धि வருவதில்லையா?

ஸ்வாமிகளவரே! இதுமாத்திரமல்ல. இந்த அனுமானத்திற்கு ஜடத்துவம் உபாதியாகிறது. ஜடத்வமென்றால் அப்ரகாசமென்று தாத்பர்யம். அதனால் இதற்கு முன் சொன்ன ஸாத்ய யுக்தமான வஸ்துவில் ஜடத்வமிருப்பதினால் ஸாத்ய வ்யாப்யத்வம் வருகிறது. பக்ஷனான ஸ்வப்ரகாசனான ஆத்மனில் அஸ்வப்ரகாசம் (ஜடத்வம்) இல்லையாதலால் ஸாதனா அவ்யாபகத்வமும் வருகிறது! ஆகையால் ஜடத்வம் உபாதி. நீங்கள் சொன்ன அனுமானம் இவ்வளவு தோஷம் நிறைந்துள்ளதினால் அனுமானம் ஜீவேச்வர பேதவிஷயத்தில் அதெப்படி ப்ரமாணமாக முடியும்? இதே விஷயத்தையே எமது ப்ராசீனாசார்யர் ஸங்க்ரஹமாக இவ்வாறு சொல்லியுள்ளார்.

"सिद्धसाध्यत्वतो भेदो व्याप्यत्वासिद्धतोऽथवा
बाधाज्जड त्वोपाधित्वान्नानुमानस्य गोचरः ।"

ஸ்ரீ:- (புன்னகையுடன்) தீக்ஷிதரே! வெகு மகிழ்ச்சி. எவ்வளவு அழகாக நிரூபித்திருக்கிறீர்கள்! பொய்யான ப்ரபஞ்சத்தைக் கட்டிக்கொண்டு வாதம் செய்கின்ற இந்தத் திறமையைப் பார்த்தால் உண்மையர்க ஆச்சரியமாகாமலிராது!! நீங்கள் இப்பொழுது சொன்ன ப்ரகாரம் ஆரோபித

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸாத்யாதிகளினுடைய "விவக்ஷ" (உத்தேச அர்த்தம்)த்தினால் தோஷம் சொன்னபக்ஷத்தில் எல்லாவிடங்களிலும் கூட ஆரோபித ஸாத்யத்வத்தை ஒப்புக்கொண்டிருப்பதனால் எல்லா அனுமானத்திலும் "ஸித்தஸாதனதா" வரவேண்டியிருந்தது! இதைப்போலவே பாத ரூபதோஷமும் இல்லாமல் போக வேண்டியிருந்தது.

தீ:- அது எப்படி ஸ்வாமி!

ஸ்ரீ:- பாதத்திற்கு உதாரண ஸ்தலம் "ஹ்ரத"த்தில் வன்ஹிஸாதக அனுமானம் தானே? (மடுவில் நெருப்பு இருக்கிறது என்று ஸாதிக்கும் யுக்தி). ஹ்ரதத்திலும் ஆரோபித மானவன்னி இருப்பதினால் வன்ஹ்ய பாவம் ஹ்ரதத்தில் இல்லாமல் பாதரூப தோஷமே இல்லையென்றாயிற்று. இன்னும் பேதத்தில் ஸ்வ स्वज्ञान्याऽबाध्यत्वरूप(க்ஞான்யா அபாத்ய்த்வரூப) விசேஷணம் (அடைமொழி) போடுவதினால் எந்த தோஷமும் வருவதில்லை.

தீ:- முன்னமே நாம் ஸித்தஸாதன்தா தோஷத்தை நிரூபித்துள்ளோமே!

ஸ்ரீ:- "ஸ்வ" என்னும் பதத்தினால் உமக்குச் சம்மதமான ப்ரம்மனையே "விவிக்ஷா" செய்வதினால் (விரும்புவதனால்) எந்த தோஷமும் இல்லையே! இது மாத்திரமல்ல; ப்ரதியோகிக அபாவங்களின் மத்தியில் ஒன்று பொய்யானால் இன்னொன்று சத்யமாக வேண்டிய காரணம் ஜீவ-ப்ரம்மனின் பேதம் பொய்யானால் அவர்களின் அபேதம் பாரமார்த்திக (உண்மையாகி)மாய் ப்ரம்மனுக்கும் ஜடத்வம் வரவேண்டியிருக்கும்.

தீ:- ஜடத்வரூப உபாதிதோஷம் ஜாகருகமாயிருக்கும் பொழுது உமது வாதம் எப்படி சரியாகும்?

ஸ்ரீ:- இப்படி ஏன் சொல்லுவீர் தீக்ஷிதரே, ஜீவ-மற்றும் பரமாத்மாவிற்கு பேதத்தை ஒப்பாதிருக்கையில், "இவன் ஸர்வ ஜ்ஞன்" "இவன் ஸர்வஜ்ஞன்லல" என்ற வ்யவஹாரமே கூடாமல் போக வேண்டியிருக்கும் என்னும் பாதகயுக்தி இருப்பதனால் மேற்சொன்ன ஹேது (அனுமானம்)விற்கு ஸாத்ய வ்யாப்யத்வ

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

நிஸ்சயம் வந்த பிறகு ஸாத்யவ்யாப்ய பரிச்சின்னத்வா அவ்யாபகத்வமான ஜடத்வம் ஸாத்யா அவ்யாபகமாவதினால் ஸத்ப்ரதி பக்ஷாதிரூப தோஷங்களுக்கு ஸாதகமாயிருப்பதினால் நீங்கள் சொன்னபடி ஜடத்வம் உபாதியாகமாட்டாது. இவ்வாறு ஆனபிறகு நிர்தோஷமான நாம் சொன்ன அனுமானம் ஜீவஈச்வரரின் பேத விஷயத்தில் ப்ரமாணமாவதில்லையா?

தீ:- (எதுவும் சொல்லத் தோன்றாமல்) அது அப்படியே இருக்கட்டும் விடுங்கள்! தாங்கள் ஜீவ ஈச்வ்ரருக்கு பேதம் உள்ளது என்று தானே சொல்லுகிறீர்.?

"ஸ்வாமிகளே" எங்கே பார்க்கலாம். அதை எந்த யுக்தியினால் நிரூபிப்பீர்?"

ஸ்ரீ:- (புன்னகை செய்து) ஆஹா! ஆகலாம். நீங்கள் விரும்பியதைப் போல் ஜீவேச்வர பேதத்தை நாம் நிரூபிக்கும் யுக்தியை விளக்குகிறோம். கவனமாகக் கேளுங்கள்! "विमतः संघध्वंसः, स्वप्रतियोगितावच्छेदका वच्छिन्न आधार प्रतियोगिक प्रतियोगिज्ञानाबाध्यभेदवन्निष्ठः, संघध्वंसत्वात् सम्मतवत्" என்னும் இந்த அனுமானம் மற்றும் "जीवः स्वज्ञानाबाध्य संसारद्वं साधिकरणप्रतियोगिक भेद वान्, पदार्थत्वात्, "घटवत्" என்னும் இந்த அனுமானங்கள் (யுக்திகள்) ஜீவர்களுடைய பரஸ்பர பேத விஷயத்தில் ப்ரமாணங்களாயுள்ளன.

தீ:- ஜீவர்களுக்கு ஔபாதிகபேதத்தை ஒப்புவதனால், தாம் சொன்ன அனுமானத்திற்கு ஸித்தஸாதனம் வருவதில்லையே?

ஸ்ரீ:- தீக்ஷிதரே, ஸ்வக்ஞானாபாத்யத்வ விசேஷணத் தினாலேயே உமது சந்தேஹம் நிவாரணமாக வில்லையா? மற்றும் நிருபாதிகபேதத்தை ஒப்பாவிடில் சைத்ர மைத்ரர்களுக்கு ஸுகானுஸந்தான மற்றும் தத்பாவங்கள் கூடாமலே போய்விடும்!

தீ:- அப்படி ஏன் சொல்லுகிறீர்கள்? ஸ்வாமி. உபாதி பேதத்தினால் ஒருவனுக்கு ஸுகானுஸந்தான மற்றும் தத்பாவங்கள் கூடலாமல்லவா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீ:- கரசரணாதி உபாதிகள் மற்றும் பால-யுவ சரீராதி உபாதிகள் வேறாக இருந்தாலும் ஒருவனுக்கு அனுஸந்தானமே லோகத்தில் கண்டுவரும் காரணத்தினால் நீங்கள் சொன்னது அப்ரயோஜகமல்லவா?

தி:- (சற்று கோபத்துடன்) வெகு நன்றாயிருக்கிறது உமது வாதம்!

"பால-யுவாதி சரீரங்கள் வெவ்வேறா என்ன? அல்லவே? "सएवायंचैत्रपुत्रः" என்னும் प्रत्यभिज्ञ (ஸ்ம்ருதி மூலம் உண்டாகும் ஞானம்) இருப்பதினால் மேலும் ஒருவனுக்கு அநேக தேகங்கள் ஒரே காலத்தில் வருவதில்லை. க்ரமமாக தேகம் வருவதென்று சொல்ல வேண்டும் பூர்வ சரீரம் அழிந்த பிறகு உத்தர சரீரத்திற்கு ப்ராப்தி சொல்ல வேண்டும். (உத்தர சரீரம் வருகிறதென்று சொல்ல வேண்டும். முந்தின சரீரத்திற்கு நாச சாமக்ரிகளே இல்லாமலிருக்கையில் பூர்வ சரீரமே நஷ்டமாகு வதில்லையாதலால் உத்தர சரீரோத்பத்தி கூடுவதில்லை.

ஸ்ரீ:- பால-யுவாதி சரீரங்கள் வேறு வேறாக இருந்த போதிலும் அவைகளிலிருந்து வேறுபட்ட வஸ்து அவைகளில் இருக்கின்ற ஆத்மன் ஒருவனே. ஆகையால் ப்ரத்யபிஜ்ஞ்ஞை கூடலாம். ஆகையால் தான் "नाहं बालः किंतु युवा" (நான் சிறுவனல்ல ஆனால் இளைஞன்) என்ற ஞானம் வ்யவஹாரங்கள் கூடும்.

தி:- பூர்வ சரீரத்தின் நாசக ஸாமக்ரி எது?

ஸ்ரீ:- உத்தர சரீரோத்பாதக ஸாமக்ரியே பூர்வ சரீர நாசகமானது.

தி:- அப்படியானால் உத்தர சரீரத்தில் ப்ராம்மண் யாதிகள் எவ்வாறு உசிதமாகும்?

ஸ்ரீ:- ஸ்ருஷ்டி முதலின் காலத்தின் ப்ராம்மண்யத்தைப் போல, விச்வாமித்ர ப்ராம்மண்யத்தைப் போல ஸமஞ்ஜஸமாகும். யுவக சரீரம் மற்றும் பால சரீரமும் ஒரே உபாதானத்தினால் பிறந்தவை என்ற பிறகு தோஷம் ஏன்?

தி:- இந்த இரண்டு சரீரங்களுக்கும் ஒரே உபாதனம் என்று எவ்வாறு சொல்விர்?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீ:- "यद्द्रव्यं, यद्द्रव्यध्वंस जन्यं तद्द्रव्यं तद्द्रव्योपादानोपादेयं" என்னும் வ்யாப்தி ந்யாயசாஸ்திர நிபுணரான தமக்கு அறியாத விஷயமல்ல! ஆதலால் தீக்ஷிதரே, யுவக சரீரம் பால சரீரத்வம்ஸகமானதால், பாலசரீரோபதானோ பாதேயமென்று அங்கிகரிக்க வேண்டும்.

மத்தியானம் நான்கு மணிக்கு மறுபடியும் வாக்யார்த்தத்திற்குத் தயாராகி வந்த ஸ்ரீபாதங்களவர் சிரித்த முகத்துடன் ஆஸனத்தில் உட்கார்ந்து ஸ்ரீதீக்ஷிதரைப் புன்சிரிப்புடன் பார்த்தார். தீக்ஷிதரும் புன்சிரிப்புடன் தமாஷாக ''மத்வமத வித்வம்ஸனம்" என்றைக்கு ஆகும் என்றார். ஸ்ரீயவர்கள் சிரித்து சமத்காரமாக "अप्पय्य कपोल चपेटिका" ஸித்தமாகாமல்-என்று சொல்லவும் பக்கத்திலிருந்த சபைத் தலைவர் இந்த ஸரஸ வாக் யுத்தத்தைக் கண்டு சிரிக்கவாரம்பித்தார். சற்று நேரங் கழித்து வாதம் மேலே தொடர்ந்தது.

தீ:- ஸ்ரீபாதங்களவரே, "यद्द्रव्यं, यद्द्रव्यध्वंसजन्यं, तद्द्रव्यं तद्द्रव्योपादानोपादेयं" என்னும் வ்யாப்தியின்படி யுவக சரீரம் பால சரீரத்வம்ஸகமானதினால் பால சரீரோபாதானோ பாதேயமென்று அங்கீகரிக்க வேண்டுமென்று தாங்கள் காலையில் சொன்னீர்கள். ஸ்வாமிகளே, தாங்கள் சொன்ன அனுமானம் நிர்தோஷமாக மாட்டாது. (தோஷரஹிதம்ாகாது) ஏனென்றால் த்வம்ஸா ப்ரதியோகி தேவ தத்தாஹமனுபவ விசேஷ்ய "ध्वंसा प्रतियोगि देवदत्ताह मनुभव विशेष्यः, भौतिकारिक्त यज्ञदत्ताह मनुभवविशेष्य प्रतिं योगिक अनौपा दिक भेदवान्न, कार्याकारणातिरिक्तस्वे सति अहमनुभव विशेष्य त्वत्वात् यज्ञदत्तवत्" அதாவது நஷ்டமாகாமலிருக்கும் தேவதத்தனே நானென்னும் அனுபவத்திற்கு விசேஷ்யமே பக்ஷம், பூதவிகாரத்திலிருந்து வேறுபட்ட யக்ஞ தத்தனே நானென்னும் அனுபவம் விசேஷ்யமான வஸ்துவினால் ஔபாதிகபேதாபாவமே ஸாத்யம், யக்ஞதத்தனே த்ருஷ்டாந்தம். இந்த அனுமானத்தினால் ஜீவருக்கு உபாதி நிமித்தமாகாத பேதாபாவம் ஸித்திப்பதினால் இந்த அனுமானபாதம் வருவதனால் உமது அனுமானம் நிர் தோஷமாகாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீ:- (தீக்ஷிதரின் அனுமான க்ரமத்தைக் கண்டு மகிழ்ந்து தலையாட்டிக்கொண்டு) "பேஷ், தீக்ஷிதரே, பேஷ்!! வெகு திறமையுடன் அனுமானம் கற்பனை செய்து பாதம் சொல்லியுள்ளீர்! ஆனால் உமது கற்பனை செய்யப்பட்ட அனுமானம் சரியாவதில்லை".

தீ:- அது எப்படி?

ஸ்ரீ:- தேஹாதிகள் "அஹம்" (நான்) என்ற அனுபவத்தில் விசேஷ்யமாகாது. ஆகையால் பாதம் வருவதில்லை என்ற பிறகு, பக்ஷகோடியில் த்வம்ஸாப்ரதி யோகித்வம் விசேஷண வ்யர்த்தம், மற்றும் உமது அனுமானம் ஔபாதிகமானது.

தீ:- உபாதி எப்படி வருகிறது?

ஸ்ரீ:- பௌதிகாதிரிக்த இத்யாதி ஸாத்ய யுக்தமான யக்ஞதத்தனில் யக்ஞதத்தீய ஸவகாத்ய புவானதிகரண ஸ்வரூப தர்மமிருக்கிறது. பக்ஷமான தேவதத்தன் நானென்னும் (தேவதத்தோஹம்) விசேஷ்யவஸ்துவில் அந்த தர்மமில்லாமலிருப்பதால் ஸாத்ய வ்யாபகத்வேஸதி ஸாதனாவ்யாபகத்வாத் யக்ஞதத்திய ஸுகாத்யபாவன திகரணத்வம் உபாதி ஆவதில்லையே?

தீ:- (கோபம் மற்றும் ஆச்சரியம் கலந்த குரலில்) விசித்திரமாக உள்ளதே ஸ்வாமி, உமது வாதம்! ஸ்ரீகளவரே! இது எப்படி உபாதியாகும்? யக்ஞதத்தனிலும் அவனுடைய சரீரத்தை விட்டு அவச்சேதக ப்ரவேசத்தினால் , யக்ஞதத்தனுடைய ஸுகாபாவமே இருப்பதினால் ஸாத்யாவ்யாபகத்வம் வருவதில்லையே?

ஸ்ரீ:- (புன்னகையுடன்) அமைதியாக யோசியுங்கள். தீக்ஷிதரே! எந்த அவச்சேதத்தினால் ஸாத்ய முள்ளதோ அந்த அவச்சேதத்தினால் உபாதி இருக்க வேண்டியதால் யக்ஞதத்தனிடம் அவனுடைய சரீராவச்சேதத்தினால் ஸாத்யமும் உண்டு. உபாதியுமுண்டாகையினால், ஸாத்ய்வ்யாபகத்வமே வருவதால் அது உபாதியாகலாம். மற்றும் நாஹம் யக்ஞதத்த, "नित्यो नित्यश्चेतनानां, एको बहूनां यो विदधाति कामान्" இத்யாதி ப்ரமாணங்களினால் உமது அனுமானமே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பாதிக்கப்படுவதால் உமது அனுமானபாதம் நமது அனுமானத்திற்கு வருவதில்லை என்பது யோசனையுள்ளவரான உமக்குத் (அதாவது விஷயம் தெரிந்த உமக்கு) தெரியாமலிருப்பது ஆச்சரியம்தான்!

ஸ்ரீகளவரின் நிகரற்ற திறமையினால் மகிழ்ந்து தீக்ஷிதர் எதுவும் சொல்லாமல் ஆலோசனையில் ஆழ்ந்து, உட்காரவும், ஸபையிலிருந்த பண்டிதோத்தமர்கள் எல்லோரும் விஜயீந்திர யதிச் சக்ரவர்த்திகளின் இந்தப் புதிய வாதத்தின் சைலியை (முறை)க் கண்டு ஆச்சரியத்தினால் இனி என்ன நடக்குமோ என்று ஆர்வத்தினால் எதிர்பார்த்திருக்கையில் ஸ்ரீவிஜயீந்திரர் தமது வாதத்தை ஆமோதித்து மேலே தொடர்ந்து இவ்வாறு கூறினார்.

ஸ்ரீ:- தீக்ஷிதரே! பேத விஷயத்தில் ஆகமமும் ப்ரமாணம்.

தீ:- (தலை நிமிர்ந்து ஸ்ரீயவரைப் பார்த்து) அது எது?

ஸ்ரீ:- "द्वासुपर्णा सयुजासखाय" "य आत्मनेतिष्ठन्" "अजोह्येके जूषमाणोनुशेते जहात्येनां भुक्तभोगामजोन्यः," यथेश्वरश्च जीवश्च सत्यभेदौ परस्परं नत्वेवाहं जातुनासं नत्वं न त्वं नेमे जनाधिपाः, इत्यादि" ச்ருதி-ஸ்ம்ருதி முதலியனவும் "ओं भेदव्यपदेशाच्चान्यः ॐ," ओम् शारीरश्चो भयोपिहि भेदे नैनम धीयते ओं, ओम् पृथुगुपदेशात् ओम्." முதலிய ஸூத்ரங்களும் பேதத்திற்கு ப்ரமாணங்கள்.

தீ:- ஸ்ரீபாதங்களவரே, தாம் சொன்ன இந்த ச்ருதிகள் பேதத்தை அனுவாதம் செய்வோம். அவ்வளவே தவிர தீர்ப்புக் கூறமாட்டோம் என்ற பிறகு இந்த ச்ருதிகளெவ்வாறு பேதத்திற்கு ப்ரமாணமாக முடியும்?

ஸ்ரீ:- (புன்சிரிப்புடன்) என்ன தீக்ஷிதரே! இவ்வாறு சொல்லுகிறீர்? ப்ரத்யக்ஷத்தினால் யக்ஞதத்த தேவதத்த பேதம் ஸித்தித்தாலும் ஜீவ ஸாமான்யரின் பேதம் ஸித்திப்பதில்லையாதலால் இன்னொரு ப்ரமாணத்தினால் பொருந்தக்கூடியது (प्रमाणांतराप्राप्त) பேதத்தை உறுதிப்படுத்துவதாலும் மற்றும் வர்த்தமானமாத்ர வஸ்துவைக் கிரஹிக்கும் ப்ரத்யக்ஷம் காலத்ரய கடிதமான காலத்ரயாபாத்ய,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பேதத்தை க்ரஹிப்பதில் ஸமர்த்தமாவதில்லை யாதலாலும் உபநிஷன்மாத்ரகம்யனான (உபநிஷத்தினால், மாத்திரம் தெரியப்படும்) ஈச்வரனின் பேதம், ஈச்வரதார்மிக பேதமும், சாஸ்த்ராபேக்ஷயில்லாத ப்ரத்யக்ஷாதிகளினால் ஸித்திப்பதில்லை யாகையாலும் நாம் சொன்ன ச்ருதிவாக்யங்களுக்கு அனுவாதகத்வம் கூடுவதில்லை.

தீ:- இருக்கட்டும். இந்த வாக்யங்கள் உபாதிநிமித்தக (ஔபாதிக) பேதத்தை ஸ்தாபிக்கின்றன. ஆகையால் நமக்கு எவ்வாறு ஹானி எற்படும்?

ஸ்ரீ:- பேதம் ச்ருதிதாத்பர்ய விஷயமாகையினால் ஔபாதிகமாகாது.

தீ:- பேதம் ச்ருதியினால் நிஷித்தமானபடியினால் ச்ருதி தாத்பர்யவிஷயமாகமாட்டாது.

ஸ்ரீ:- தாங்கள் சொன்னபடி ஒப்புக் கொண்டால் "அலக்ஷணம்" இத்யாதி வாக்யங்களினால் "ப்ரம்மம்" நிஷித்தனாகையால் அவனும் கூட ச்ருதி தாத்பர்ய விஷயமாகாமல் போகவேண்டியதாயிற்று. தீபுமர்த்தஸாதனமாகாமலிருப்பதினால் பேதத்தில் ச்ருதிக்கு தாத்பர்யமில்லையென்று இது மாத்திரமல்ல,"उदरमंतरं कुरुतेऽथ तस्य भयं भवति" "मृत्योस्समृत्युमा नोप्ति य इह नानेव पश्यति, अथ योऽन्यां देवता मुपास्ते अन्यो सावनन्योऽहमस्मीति न स वेदमथा पशुः" முதலிய வாக்யங்களினால் பேதக்ஞானியின் நிந்தை கேட்கப்படுவதினால் பேதம் ச்ருதி நிஷித்தமானதால் தாம் சொன்னபடி பேதம் ச்ருதி தாத்பர்ய விஷயமாகமாட்டாது.

ஸ்ரீ:- "पृथुगात्मानं प्रेरितारं च मत्वाजुष्टस्तस्तेना मृतत्व मेति," "जुष्टं यदा पश्यत्यन्यमीशं" "वैलक्षण्यं तयोर्ज्ञात्वा मुच्यते बध्य तेऽन्यथा, भेदघ्ट्याभिमानेन निस्संगेनापि कर्मणा" முதலில் ச்ருதி-ஸ்ம்ருதிகளினால் ஜீவேச்வரருடைய பேதக்ஞானம் புமர்த்த ஸாதனமென்று உறுதியாயிருப்பதனால் பேதம் ச்ருதி நிஷித்தமாக மாட்டாது.

தீ:- அப்படியானால் உதாரணம் செய்த பேத நிந்தரரூபமான வாக்யங்களின் கதியென்னவாகும்?

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீ:- "उदरमंतरं कुरुते" என்னும் வாக்யம் ஜீவேச்வர பேதம் பொய் என்று அறிந்தவனுக்கு பயமுண்டு என்று உறுதிப்படுத்துகிறது. "मृत्योस्स मृत्युमाप्नोति" என்ற வாக்யத்திற்கு, यः -எவன், इह-இங்கு, नानेव- அற்பமான (अलीकमेव) मभेदं -பேதத்தை, पश्यति - தெரிந்து கொள்ளுகிறானோ, सः - அவன், मृत्योः - மரணத்தினால், मृत्युं - அநிஷ்டத்தை (மரணத்தை), आप्नोति - அடைகிறான். இவ்வாறு அர்த்தமானதினால் அதுகூட பேதத்ந்தை நிந்திப்பதில்லை. உண்மையில் இந்த வாக்யம் ஈச்வரன் மற்றும் அவனது குணம் முதலியவைகளுக்கு பேதம் தெரிந்து கொண்டவர்களுக்கு அநிஷ்டமுண்டென்று தெரிவிப்பதால் அந்த பாதகமும் இருப்பதில்லை.

தி:- "अथयोऽन्यां देवता मुपास्ते" என்னும் வாக்யம் தெளிவாக பேதக்ஞானியை நிந்திப்பதில்லையா?

ஸ்ரீ:- தீக்ஷிதரே! அவஸரம் ஏன்? சற்று ஸாவதானமாக யோசியுங்கள். தாங்கள் சொன்ன வாக்யத்திற்கும் அர்த்தத்தை விவரிப்போம். கேளுங்கள். अन्यः - ஈஸ்வரனின்றும் வேறுபட்டவனான, यः - எவன், अन्यां - ஜீவலக்ஷணமான, देवतां - தேவதையை, अन्योसौ - ஈச்வரன் மற்றும் நானும் ஒன்று என்று, उपांस्ते - உபாஸிக்கிறானோ, सः - அவன் नवेद यथापशुः - என்று இந்த வாக்கியத்திற்கு அர்த்தம். மற்றும் यः -எவன், अन्यां - பரதேவதையான, விஷ்ணுவிலிருந்தும் வேறான, देवतां - தேவதையை, उपास्ते - உபாஸனை செய்கிறானோ, सः - அவன் नवेदयथापशुः । என்று அர்த்தமாகின்றபடியால், பரமாத்மாவை விட்டு அந்யதேவதா உபாஸகன் நிந்தாபரமானது. இந்த வாக்யமானதால், இந்த வாக்யம் பேத க்ஞானியின் நிந்தாபரமாகமாட்டாது!

தி:- அந்ய தேவதா உபாஸனை எங்கு நிந்திக்கப்பட்டிருக்கிறது?

ஸ்ரீ:- "वासुदेवं परित्यज्य योऽन्यं देवमुपासते तृषितो जान्हवीतीरे कूपं खनति दुर्मतिः ।।" என்னும் "ब्राह्मण" வாக்யம் இதற்கு ப்ரமாணமாக உள்ளது. அதாவது யாரொருவன் வாஸுதேவனான விஷ்ணுவை விட்டுவிட்டு வேறு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

தேவதையை உபாஸிக்கிறானோ அவன் கங்கா நதிக்கரையில் கிணறு தோண்டி அந்த ஜலத்தினால் தாகம் தீர்த்துக்கொள்ளும் அக்ஞானியைப் போலாவான். அம்ருதமான பவித்ர கங்கையைத் திரஸ்காரம் செய்து கிணற்றைத் தோண்டி ஜலம் குடிப்பவன் துர்மதிதானே!

தீ:- பேதம் ஔபாதிகமானதனால் பொய்யென்று முன்பே சொல்லியிருக்கிறேனல்லவா?

ஸ்ரீ:- "सत्ययोवमनु विश्वेमदंतिराति देवस्य गृणतो मघोनः, "सत्यात्मा सत्योजीवः," "सत्यं भिदा सत्यं भिदा मैवारुवण्यो मैवा रुवण्यो मैवारुवण्यः। முதலான ச்ருதிகளினால் பேதம் பாரமார்த்திகமானதென்று ஸித்திப்பதனால் பேதம் ஆகம ப்ரமாண ப்ரமிதமென்று நாம் சொன்னது யுக்திக்குகந்தமாயுள்ளது.

ஸ்ரீபாதங்களவரின் நிகரற்ற வாத சைலியினால் ஆனந்தமடைந்த ஸ்ரீ தீக்ஷிதர் ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தார். சபைத்தலைவர் நேரமதிகமாகி விட்டபடியால் அன்றைய வாதத்தை அங்கேயே நிறுத்திக்கொண்டு மறுநாள் தொடரலாமெனத் தீர்மானித்தார்.

நன்றாக நடந்து கொண்டிருக்கும் ஸ்ரீவிஜயீந்திர அப்பய்ய தீக்ஷிதரின் வர்க்யார்த்தம் இன்று வெகு சாதுர்யத்துடன் தொடருமென்று நம்பி பண்டிதர்கள், நகரத்தினர், மிக்க ஆர்வத்துடன் அந்த நல்ல வாய்ப்பினை இழந்துவிடக் கூடாது என்று கும்பேச்வரன் கோவிலில் முதலிலேயே நிறைந்து விட்டனர். ஸ்ரீவிஜயீந்திரர் மற்றும் ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரும் குறிப்பிட்ட நேரத்தில் தத்தம் ஆஸனங்களில் அமர்ந்த பிறகு ஸ்ரீ தீக்ஷிதர் தமது வாதத்தைத் தொடர்ந்து இவ்வாறு சொன்னார்.

தீக்ஷிதர்:- ஸ்ரீபாதங்களவர்களே, நாம் சொல்லும் மித்யா என்றால் அஸத்து என்று பொருள் அல்ல, அதற்கு வ்யாவஹாரிகை என்று பொருள். எமது மதத்தில் தத்வம் மூன்று வகை. பாரமார்த்திக தத்வம், வ்யாவஹாரிகதத்வம், ப்ராதி பாஸிக தத்வம் என்பவை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


1. எதனால் பாத்ய (பாதக க்ஞான விஷயம்) மாகாமல் இருந்ததற்குப் பாரமார்த்திக தத்வமென்கின்றனர். த்ருஷ்டாந்தம் ப்ரம்மம்.

2. ப்ரம்ம க்ஞானத்தினால் மாத்திரம் பாத்யமாவது வ்யாவஹாரிக தத்வம் என்பது. திருஷ்டாந்தம்-ஜகத்து 3 ப்ரம்மக்ஞான மல்லாத க்ஞான பாத்யம், ப்ராதிபாஸிக தத்வம் திருஷ்டாந்தம் சுக்தி ரஜதம் (முத்துச் சிப்பியில் காணும் வெள்ளி) இதன் பிரகாரஞ் நாம் ஜகத்திற்கு வ்யாவஹாரிக தத்வத்தை ஒப்புக்கொண்டிருப்பதனால் தாங்கள் நேற்றைய தினம் சொன்னவாறு ச்ருதி விரோதம் வருவதில்லை.

ஸ்ரீகளவர்:- (புன்முறுவல் செய்து) தீக்ஷிதரே! வ்யாவஹாரிக தத்வமென்றால், "प्रतिपन्नोपाधौ त्रैकलिकविषेध प्रतियोगित्वं" என்று உமது அபிப்ராயம் அல்லவா? இவ்வாறு சொன்னால் தானிருந்த இடத்தில் (தனக்கு இருப்பிடமாகத் தெரிந்த இடத்திலும்) காலக்ரமத்திலும் இருப்பதில்லை என்றும் அர்த்தம். வேறு இடத்தில் இல்லாமலிக்கும் ப்ரதிபன்னோபாதியில் இல்லாதிருக்கும் வஸ்துவும், அஸத்திலேயே கடைசியில் முடியும். அதற்காகவே நமது பரமமித்ர, ஸதீர்த்தருமான ஸ்ரீவாதிராஜ தீர்த்தர் "யுக்தி மல்லிகா" க்ரந்தத்தில் "व्यावहारिकतोक्तिस्तु सन्नाम्नाच्छादनं परं, अमंगलस्य वारस्य यथा मंगलवारता ।" என்று நிரூபணம் செய்துள்ளார். நமது மித்திரரின் "युक्तिमल्लिका" தம்முடைய த்ருஷ்டி பதத்திற்கு இன்னும் விழுந்திருக்காதல்லவா தீக்ஷிதரே!

தீ:- (சிரித்துக் கொண்டு) ஸ்ரீவ்யாஸ தீர்த்தரின் பட்டத்தின் சிஷ்யரான, தங்கள் இருவரின் விஷயம் மற்றும் கிரந்தங்களைப் பார்க்காதிருந்தால் நான் எப்படி அத்வைத வித்யாசார்யரென்று அழைக்கப்படுவது? ஸ்ரீயவரே, "तत्वमसि, नेहनानास्ति किंचन, अहं ब्रहमास्मि" முதலிய ச்ருதி விரோதமிருப்பதினால் பேதவாக்யம் எவ்வாறு ப்ரமாணமெனப்படும்?

ஸ்ரீ:- இதென்ன தீக்ஷிதரே, அந்த ச்ருதி வாக்யங்களும் கூட முன்பு சொன்னபிரகாரம் ஸாவகாசமாவதில்லையா.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தீ:- ச ச, அப்படியாவதில்லை, இந்த ச்ருதி வாக்கியங்களுக்கு நவீன தாத்பர்யமே கொடுப்பதில்லையாததால் இந்த ச்ருதி வாக்யம் நிரவகாசமானது. "தத்வமஸி" வாக்யத்தில் तत् என்ற பதம், त्वं என்ற பதமும் லக்ஷ்யார்த்த பூதமான चित् பதார்த்தத்திற்கு ஐக்யத்தை போதிக்கப்படுவது. "तत्वमस्यादि वाक्यं च तादात्म्य प्रतिपादने, लक्ष्यौ तत्वं पदार्थौ द्वौ उपादाय प्रवर्तते" என்ற ப்ரமாணம் இதே அர்த்தத்தைக் கொடுக்கிறது என்ற பிறகு இந்த வாக்ய விரோதம் வருவதனால் ஸாவகாசமான பேதச்ருதி பலமற்றதாய்விடும்.

ஸ்ரீ:- "तत्" என்ற பதம் "त्वं शब्दार्थ भूत" மான ஸர்வஜ்ஞத்வ அல்பஜ்ஞத்வரூப விருத்தாகார பரித்யாகம் அவிவக்ஷாவினாலோ? அநித்யத்வத்தினாலோ அல்லது மித்யாத்வத்தினாலோ? முதலாவது பக்ஷம் கூடுவதில்லை. தீக்ஷிதரே; விருத்தாகாரத்தை நீங்கள் விவக்ஷா செய்யாமலிருப்பதினால் அதற்கு ஹானியில்லாததினால் ஐக்யம் கூடாது. न द्वितीयः இரண்டாவதும் சரியல்ல. விருத்தாகாரம். அநித்யமாவதனால் விருத்தாகாரம் நாசமான்பிறகு ஐக்யப்ராப்தியாவதனால்.... "तत्वं भविष्यसि" என்று சொல்ல வேண்டிவரும். न तृतीयः நிர்தோஷ ச்ருதி ஸாக்ஷி சித்தங்களான ஸர்வஜ்ஞத்வம் அல்பஜ்ஞத்வரூப விருத்தாகாரங்களுக்கு மித்யாத்வம் கூடுவதில்லை, ''தத்வமஸி'' என்னும் வாக்யம் ப்ரத்யக்ஷஸித்த ஜீவனை உத்தேசித்து ப்ரம்மத்வத்தை விதிப்பதோ? இல்லாவிட்டால் இருவரையும் அனுவாதம் செய்து ஐக்யத்தை விதிப்பதோ? नाद्यः ப்ரத்யக்ஷத்தினால் ஜீவன் ப்ரம்மனிலிருந்து வேறுபட்டவன். ஸித்திப்புதினால் ஜீவனுக்கும் ப்ரம்மத்வத்தைச் சொன்னால் ப்ரத்யக்ஷ விரோதம். न द्वितीयः ச்ருதியும் ஸர்வஜ்ஞத்வாதி குண கணங்களினால் நிறைந்து ப்ரம்மனையே ஸ்தாபிப்பதால் ஜீவனிலிருந்து வேறுபட்டவனாக ப்ரம்மனை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகையினாலேயே மூன்றாவது பக்ஷமும் ஸரியானதல்ல.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



இதே விஷயத்தைத் தான் ஸ்ரீமதாசார்யர் "ஸ்ரீமதனுவ்யாக்யன"த்தில் - "सर्वज्ञादिगुणं जीवादभिन्नं ज्ञापयति श्रुतिः । ईशं तामुपजीव्यैव वर्तते ह्यैक्य वादिने ॥" उपजीव्य विरोधेन नाशास्तन्मानताभवेत् என்று அருளியுள்ளார். ஸகல சாஸ்திர பண்டிதரான தீக்ஷிதரே! இன்னும் வேறு தோஷத்தை நிருபிப்போம், கேளுங்கள். "वसंतादिभ्यष्टक्" என்ற இடத்தில், "साहचर्यात्ताच्छब्दयं भविष्यति, वसंतसहचरितं अध्ययनं वसंतः" என்னும் மஹாபாஷ்ய வசனானுஸாரமாக ஜீவனுக்கு ப்ரம்மஸஹசர்யம், "द्वासुपर्णा" முதலிய ச்ருதி ஸித்தமாயிருப்பதினால் ஜீவர்களில் ப்ரம்மனைப் போதிக்கின்ற "தத்" சப்தப்ரயோகம் கூடலாம். "पदविधिः" என்பதில் ஸமர்த்த பதாச்ரிதமான விதி ஸமர்த்த என்று சொல்லப்பட்டிருக்கையினால், ஆச்ரிதத்தில் ஆச்ரயவாசக பதத்திற்கும், "इग्यणस्संप्रसारणं" என்னும் மஹாபாஷ்ய வசனத்தை அனுஸரித்து ஜன்யத்தில் ஜனக சப்தத்திற்கும் வ்யவஹாரம் இருப்பதினால் பரமாத்மாச்ரிதனான, பரமாத்ம ஜன்யனான, ஜீவனின் அப்படிப்பட்ட "தத்" சப்தப்ரயோகம் புக்திக்குகந்ததல்லவே?"

தீ:- (ஸ்ரீயவர்களின் ஆனுவாத க்ரமத்தைப் பார்த்து வியந்து) ஸ்ரீபாதங்களவரே! ஜீவன் ப்ரம்மாச்ரித என்னும் விஷயத்தில் ப்ரமாணம் என்ன?

ஸ்ரீ:- "सर्वाः प्रजास्सदायतने सन्मूलास्सोम्येमास्सर्वाः प्रजाः" என்னும் ச்ருதி இதற்குப் ப்ரமாணம்.

தீ:- அப்படியானால் "தத்" சப்தத்திற்கு முக்யார்த்தத்தை விட்டு விட்டதாக ஆகாதா?

ஸ்ரீ:- (புன்சிரிப்புடன்) தீக்ஷிதரே, நீங்கள் "तत्त्वं" என்னும் இரண்டு பதங்களுக்கும் முக்யார்த்தத்தை விட்டுவிட்டு, அமுக்யார்த்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கையில் நாம் ஒரு பதத்திற்கு மாத்திரம் முக்யார்த்தத்தை விட்டுவிட்டதினால் நஷ்டமென்ன? உண்மையில் அந்தர்யாமியிலேயே சப்தத்திற்கு முக்யவ்ருத்தி இருப்பதினால் நாம் எந்தப்பதத்திற்கும் அமுக்யவ்ருத்தியை ஏற்றுக் கொள்ளுவதில்லை. ஆகையினால் ஏமது பக்ஷத்தில் எந்த தோஷமும் காணப்படுவதில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தி:- அது எப்படி ஸ்வாமிகளே? "अहं ब्रह्मास्मि" என்னும் ச்ருதி விரோதம் வந்துதான் தீருமல்லவா?

ஸ்ரீ:- முன்பு சொன்னபடி ப்ரம்ம ஸாஹசர்யம் (ஸங்கம்) இருப்பதினால் "அஹம்" சப்தார்த்த ஜீவனில், "ப்ரம்ம" சப்தப்ரயோகம் தப்பாகமாட்டாதல்லவா? என்ற பிறகு பதத்வயம் லக்ஷணாவைவிட ஒரு பதம் லக்ஷணாஸ்வீகரிப்பது (ஏற்றுக் கொள்ளுவது) உசிதமானதாகையினால் இந்த வாக்யம் ஐக்ய போதகமாகாது (ஐக்கியத்தைச் சொல்லுவதாக ஆகாது).

தி:- "सहोयवैतत्परमं ब्रह्मवेद ब्रह्मैव भवति" என்னும் நிரவகாசப்ரமாண விரோதம் வருவதில்லை! இதற்கென்ன சொல்லப்போகிறீர் ஸ்வாமி?

ஸ்ரீ:- இந்த ச்ருதி கடகமான (श्रुतिघटक)முதலாவது "ப்ரம்ம" சப்தம் பரப்ரம்ம பரமானது இரண்டாவது "ப்ரம்ம சப்தம்" "बृहजाति जीव कमलासन शब्दराशिषु ।" என்னும் ப்ரமாணப்படி ஜீவபரமானது. तथा च यः எவன் परमं ब्रह्म वेद - பரப்ரம்மத்தைத் தெரிந்து கொள்ளுகிறானோ, सः - அவன் ब्रह्मैव भवति -- ஜீவனாகிறான் என்று அர்த்தம். "संपूज्य ब्राह्मण्यं भक्त्या शूद्रोऽपि ब्राह्मणो भवेत्" என்னும் बृंहितत्व रूप ப்ரம்மசப்தார்த்தம் உள்ளவனாவான் என்று அர்த்தமாவதினாலும் நீங்கள் சொன்ன ச்ருதி ஸாவகாச ச்ருதியாதலால் பேத ச்ருதிக்கு எந்தப் பாதகமும் வருவதில்லை. ஆகையால் நீங்கள் சொன்ன "तत्त्वमसि" வாக்யார்த்தம் ஸரியானதல்ல.

இந்த மாதிரி ஸ்ரீவிஜயீந்திர ஸ்ரீபாதங்களவர் காண்பித்த ச்ருதியின் அர்த்தவிவரணத் திறமையைக் கண்டு மகிழ்ந்து பாராட்டின ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் மறுபடியும் ஸ்ரீகளவரின் புத்தி சாதுர்யத்தையும் பரீக்ஷிக்க வேண்டுமென்று மேலும் தம் வாதத்தை ஆரம்பித்து. ஐக்யம் தெள்ளத்தெளிவாக ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறதல்லவா? என்று கேட்டார்..

ஸ்ரீ:- (சிரித்து) தீக்ஷிதரே, "அத்வைத்", "ஏகீபாவ" ("अद्वैत" "एकी भाव")என்னும் பதம் வந்திருக்கும் எல்லா இடங்களிலும் நீங்கள் சித்தாந்தத்திற்கு அதைப் பொருந்தும்படி செய்யும் உமது அபிப்ராயமான

CC0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



நிபுணத்வத்தைக் கண்டு நமக்கு ஆனந்தமாயுள்ளது. ஆனால், உமது அபிப்ராயம் கூடுவதில்லை. "एकी भाव" என்றால் ஸ்வரூப ஐக்கியம் என்பது அர்த்தமல்ல.

தீ:- அப்படியானால் வேறு என்ன அர்த்தமென்பதை விளக்குவீரா?

ஸ்ரீ:- மகிழ்ச்சியுடன்! கேளும், தீக்ஷிதரே, "अविरोधश्च साद्दश्यमेकदेश स्थिति स्तुथा एकीभाव प्रोक्तो नूकी भावः स्वरूपतः" இந்த வசனத்தையனுசரித்து "एकी भाव" மென்றால் स्थानैक्य மற்றும் मत्यैक्यமுமாகும். அதாவது ஒரே இடம், ஒரே மதம் (அபிப்ராயம் என்றாகும். "साद्दश्य" மென்றும் (சமம்) என்றும் பொருள்படும். இப்பொழுது பாருங்கள். "एके भूता नृपास्सर्वे पांडवं ववृषुश्शरैः," "अस्मिन् ग्रामे महाजना एकी भूताः," "कीटो भ्रमरेण एकी भूतः" முதலிய ப்ரயோகங்களுள்ளன. இங்கு தாங்கள் சொன்னபடி அர்த்தம் செய்வதற்கு முடிவதில்லை. அது சரியாகவராது. இல்லையா? ஐக்யம் "प्राक सिद्ध" மானதால் अभूततद्भावार्थक च्विप्रत्यय கூடுவதில்லையாதலால் ஜீவப்ரம்ம ஐக்யம் அபிப்ரேதமானதல்லாததால் எந்த விரோதமும் வருவதில்லை. இந்த "ऐक्यान्यथानुपपत्ति"யினால் ஜகத்திற்கு மித்யாத்வத்தை (பொய்)ச்சொல்வது சரியில்லை.

ஸபையிலுள்ள பண்டிதர்கள் ஸ்ரீயவர்களின் வாத முறைக்குத் தலையாட்டி ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகையைக் கண்ட தீக்ஷிதர் சற்று கோபமடைந்தவரைப் போல் தெரிந்தது.

தீ:- ஸ்வாமிகளே, ஜக்ன்மித்யாத்வம் ப்ரமாணமென்று நிச்சயிக்கபட்ட விஷயம். ஆகையால் ஜீவேச்வரருக்கு ஐக்கியத்தைச் சொன்னால் பாதகமில்லை.

ஸ்ரீ:- அந்த ப்ரமாணங்கள் ஸாவகாசமானவை.

தீ:- "यत्रत्वस्य सर्वमात्मै वाभूत तत्केन कं पश्येत" என்னும் ச்ருதி நமக்கு ப்ரமாணமாக உள்ளது. அர்த்தத்தை விளக்குகிறேன் கேளுங்கள்: यत्रபல விசேஷத்தில், முக்திகாலத்தில், अस्य-நிஷ்பன்ன தத்வக்ஞானியான மனுஷ்யனுக்கு (சம்பூர்ண தத்வக்ஞானி) सर्व-எல்லாமே, आत्मै वाभूत-நிர்விசேஷ ப்ரம்மனொருவனே (உத்தமோத்தம ப்ரம்மன்)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இருப்பதாக ஆயிற்று. (பாக்கியிருப்பதாக ஆயிற்று) तत्र-அப்பொழுது, असौ-க்ஞானியானவன் केन-எந்த ஸாதனத்தினால்; कं - எந்த விஷயத்தை, पश्येत என்பதாக மேற்கண்ட ச்ருதி ப்ரம்மனைத் தவிர வேறான ஸமஸ்த பதார்த்தங்களை நிஷேதம் செய்திருப்பதனால் ஜகன் மித்யாத்வம் விஷயத்தில் இந்த வாக்யம் ப்ரமாணமாக உள்ளது.

ஸ்ரீ:- இந்த ச்ருதி முக்தியில் ப்ரம்மனைத் தவிர ஸகலமும் நிஷேத பரமாக மாட்டாது. ஏனென்றால், "परंज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते, स उत्तमः पुरुषः सतत्र पर्येति, जक्षन् क्रीडन् रममाणः स्त्रीभिर्वा यानैर्वा ज्ञातिभिर्वा मनसैव कामान् पश्यन् रमते, य येते ब्रह्मलोके सदापश्यंति सूरयः" "न पश्यो मृत्युं पश्यति," "शोकातिगो मोदते स्वर्गलोके" இவையெல்லா ச்ருதிகளிலும் முக்தரின் க்ரீடாதி வ்யாபாரங்கள் மற்றும் அவைகளின் ஸாதனங்களின் உண்மை வர்ணிக்கப்பட்டுள்ளன.

தீ:- ஸ்ரீயவர்களே! நீங்கள் சொன்ன வாக்கியங்கள் ஜீவன் முக்திபரங்கள் அல்லது ஸகுண முக்தி பரமானவைகள். நான் உதாரணமாகக் கொடுத்த "यत्रस्वस्य" என்ற வாக்யம் பரம முக்தி பரமானது. ஆகையால் விரோதமெதுவும் வருவதில்லை.

ஸ்ரீ:- உதாரணமாகச் சொன்ன ச்ருதி வாக்யங்கள் ज्ञेयब्रह्म प्रकरणाधीन வைகளானதினால் பலன் கொடுக்கும் பரம முக்திபரமானவைகளே தவிர மற்ற முக்தி பரமானவைகளல்ல.

தீ:- (சிரித்துக்கொண்டே) "தர்சபூர்ணமாஸப்ரகரண"த்தில் சொல்லியுள்ள பூஷானுமந்த்ரண மந்த்ரத்தைப் போல, ப்ரம்ம ப்ரகரணத்தில் உத்தமமான இந்த வாக்கியங்கள் ஸகுண முக்தி பரமானவைகஸாகலாமல்லவா, ஸ்ரீகளவர்களே?

ஸ்ரீ:- (மந்தஹாஸமாக) இந்தக் கற்பனை முக்தித் வைவித்யாதீனமாதலால் அன்யோன்யாச்ரயம் வரும், இல்லையா தீக்ஷிதரே! "ओं संपद्य विहाय स्वेनशब्दात् ओं अनावृत्तिश्शब्दात् ओं" என்று பாதராயணர் ஸகுண முக்தியையே உபஸம்ஹாரம் செய்திருப்பதனால் முக்தித்வை வித்யமென்பது சரியல்ல.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தீ:- "इदं सर्वं यदयमात्मा" என்ற ச்ருதி மித்யாத்வத்தில் ப்ரமாணம், ஜடாஜடங்களுக்கு ஐக்யம் கூடுவதில்லையாகையினால் ப்ரம்மனைவிட்டு மற்றவையாவும் பொய் என்று அந்த ச்ருதியின் தாத்பர்யம்.

ஸ்ரீ:- "सर्वेषु भूतेष्वेतं" என்று ச்ருதியிருப்பதினால் "ஸர்வம் ஜலம்லவணம்" என்றபடி ஸர்வவ்யாப்தியினாலும் "सहिसर्वस्य कर्ता" என்று ச்ருதியிருப்பதினால் "आयुर्वै घृतं" "ब्राह्मणोऽस्य मुखमासीत्" என்றபடி தன்னிமித்தத்வத்தாலும், "न ऋते त्वत्क्रियते किंचनारे" என்னும் ச்ருதியிருப்பதனால் "आदित्यो यूप" என்றபடி ஸாரூப்யத்தினாலாயினும் சரி "इदं सर्वं यदयमात्मा" என்றதில் ஸாமானாதிகரண்யம் உபபன்னமாவதால் ஸர்வ ப்ராமாண்ய பாதிதமான "यः पुरुषः सःस्थाणुः" என்றபடி எது ஸர்வத்வேன ப்ரமிதமோ அது ஆத்மனில் அத்யஸ்தமென்று பதத்வயலக்ஷணம் ஸரியானதல்ல. மஹா பாஷ்யத்திலும் கூட "अंतरेणापिनिमित्तं निमित्तार्थो गम्यते तद्यथा आयुर्वैघृतं" முதலிய வகைகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. பாரதத்திலும் கூட "पुरुषए वेदं सर्वं भूतं भव्यं भवच्चयत् यत् इत्युच्चते तदीयत्वान् तु सर्वस्व रूपतः" என்றும், கீதையில் "सर्वं समाप्नोषिततो असिसर्वः" என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. காரணம் இந்த வாக்யம் மித்யாத்வ விஷயத்தில் ப்ரமாணமாகாது.

தீ:- அது போகட்டும் விடுங்கள் ஸ்ரீயவர்களே! "इन्द्रो मायाभिः पुरुरूप ईयते" என்ற இந்த ச்ருதி மித்யாத்வத்தில் ப்ரமாணமாயுள்ளது. இங்கு ப்ரபஞ்சத்திற்கு மாயாக்ருதத்வ வர்ணனையினால் மித்யாத்வம் வர்ணிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ:- (சிரித்துக்கொண்டே) मायाभिः என்று பரமாத்மனின் விசித்ர சக்திகளையும் அதனால் மத்ஸ்யம் முதலான அநேக ரூபங்களை வர்ணிக்கும் இந்த ச்ருதி மித்யாத்வத்தை எவ்வாறு போதிக்கும் தீக்ஷிதரே!

தீ:- ஸ்வாமி, மாயா என்ற பதத்திற்கு சக்திவாசத்வம் ப்ரஸித்தமில்லையென்பது தங்களுக்குத் தெரியாதா? என்ன?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீ:- "तान्यज्ञस्य मायया" முதலிய இடங்களில் மாயா பதத்திற்கு சக்தி என்ற அர்த்தத்தில் ப்ரயோகமிருக்கிறது. தீக்ஷிதர் மறந்ததைப் போல் காணுகிறது! அஞ்ஞானத்தினால் ஈச்வரனுக்கு வியாதி वियदादि பஹுரூபத்தைச் சொன்ன பக்ஷத்தில் "रूपं रूपं प्रतिरूपो बभूव," अयं वै हरयो यं वैदशच सहस्राणि च" என்றும் முன் சொல்லப்பட்ட வாக்ய விரோதம் வருகிறது. அங்கு முதலில் சொன்ன ஜீவாக்ய ப்ரதிபிம்பங்களைக் குறித்து பிம்ப பூத பகவத் ரூபங்களையே அங்கு ரூபசப்தத்தினால் ஸ்ம்ருதி மூலம் பெற்ற ஞானம் இருப்பதினாலும் மேலே ஹரிசப்தவாக்யம் விஷ்ணுரூபங்களுக்கு दशत्वादिना தசத்வாதீனா பஹுபாவங்கள் வர்ணிக்கப் பட்டிருப்பதினாலும் விரோதம் வருகிறது.

தீ:- அதுபோகட்டும் "यस्मात्परं नापरमस्ति किंचित्" "अतोऽन्यदार्थं" என்ற ச்ருதிகள் மித்யாத்வ விஷயத்தில் ப்ரமாணங்கள். இங்கு பரப்ரம்மனிலிருந்து வேறுபட்ட வஸ்து இல்லையென்று நிஷித்தமாயிருக் கிறது. இதற்கென்ன சொல்லுகிறீர்கள்.

ஸ்ரீ:- தீக்ஷிதரே, ஸாவதானமாக அந்த ச்ருதியை அர்த்தம் செய்து கொண்டால் அது உமக்கு ஸாதகமல்ல வென்பதை நீரே கண்டு கொள்ளலாம்.

தீ:- (கோபித்து) அந்த ச்ருதிக்கு எப்படி அர்த்தம் செய்ய வேண்டும் தாங்களே சொல்லலாம்.

ஸ்ரீ:- ச்ருதியின் அர்த்தம் இவ்வாறுள்ளது. यस्मात् - எந்த பரப்ரம்மனைக் காட்டிலும், परं - உத்தமமான வஸ்து, न - இருப்பதில்லை. "नतत्समश्चाभ्यधिकश्च दृश्यते" "पुरुषान्न परं किंचित् वासुदेवात्परं नास्ति" முதலிய ச்ருதி-ஸ்ம்ருதிகள் இருப்பதினால் இந்த மாதிரி அர்த்தம் சொல்ல வேண்டும். अपरं - अपकृष्ट வஸ்து (நீசவஸ்து) अस्ति இருக்கிறது. तत् -அது, किंचित् -அற்பம் என்று அர்த்தம் - உமது பக்ஷத்தில் न அனுஷங்கம் செய்ய வேண்டும். "अतो अन्यदार्थं" - என்னும் ச்ருதிருக்கு अन्यत् - வேறான ஜகத், आ - சொற்ப ऋतं -உண்மை அதாவது மித்யா என்று அர்த்தம் செய்வது ஸரியானதல்ல.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தீக்ஷிதரே, இங்கு அந்தர்யாமி ஸத்யனானபடியினால் "एतत्"சப்தத்தினால் ப்ரக்ருத அந்தர்யாமி விவிக்ஷித மானதனாலும், "ब्राह्मणादन्यमान्य," "समानमिति रच्छेदेन" முதலியவைகளில் ப்ரக்ருத ஸஜாதீய அன்யபரத்வமே அன்ய-பதத்திற்குக் கண்டுவருவதால், ப்ரம்மனிலிருந்து வேறுபட்ட ஜீவஜாதம் -துக்கமுடையது என்று ஜீவ-ப்ரம்மரின் பேதத்திற்கு ஸ்தாபிக்கப்படுகிறது. ஜீவனைவிட்டு வேறு யாருக்கும துக்கப்ரஸக்தி இருப்பதில்லை. "आर्तिः पीडाधनुः कोप्यो" என்று अभिधान (சப்த சக்தி, நிகண்டு) இருப்பதினாலும், "आर्तो जिज्ञासुः" என்று ஸ்ம்ருதி இருப்பதினாலும், அர்த்த பதத்திற்கு துக்க வாசகத்வம் நடைமுறையிலிருப்பதாலும் இந்த வாக்யம் "ஜகந்மித்யாத்வம்" (உலகம் பொய்) விஷயத்தில் எவ்வாறு ப்ரமாணமாகும்?

வெகு நேரமாய்விட்டபடியால் நடுவர்களின் விக்ஞாபனத்தின்படி வாக்யார்த்தம் மறுநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அத்வைத வித்யாசார்யரான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திரர் முந்தின நாளின் விஜயீந்திர குருவர்யரின் வாத சாமர்த்தியத்திற்கு வியப்படைந்து ஸ்ரீயவர்களின் வாதத்திறமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தாலும் இன்றைய வாதத்தில் ஸ்ரீவிஜயீந்திரரை ஜயிக்க வேண்டுமென்று பிடிவாதத்துடன் தனது வாதத்தை ஆரம்பித்தார்.

தீ:- "प्रपंचो यदि विद्येत निवर्तेत न संशयः माया मात्र मिदं द्वैतं अद्वैतं परमार्थतः, विकल्पो विनिवर्तेतकल्पितो यदि केनचित् उपदेशादयं वादो ज्ञाते द्वैतं न विद्यते" என்று ச்ருதியில் த்வைதம் மாயாமாத்ர கல்பிதம், அத்வைதம் பாரமார்த்திகமானதென்று சொல்லியிருப்பதினால், ஜகத்ஸத்யத்வம் மற்றும் பேதங்கள் பாரமார்த்திகத்வம் (முக்தி ஸாதகம்) எவ்வாறு நிசசயிக்கப்பட முடியும்?

ஸ்ரீ:- (புன்னகையுடன்) தீக்ஷிதரே, தாங்கள் சொன்ன இந்த வேத வாக்யம் உமக்கு ஸாதகமாகாது. ஆனால் நம் பக்ஷத்திற்குச் சாதகமாக உள்ளது.

தீக்ஷிதர்:-(பரிகாசமாக) என்ன ஸ்ரீயவர்களே, எப்படி அவ்வாறு சொல்லுகிறீர்! ப்ரபஞ்சம் கற்பனை செய்யப்பட்டது. த்வைதம் மாயாமாத்ரமானது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அத்வைதம் பாரமார்த்திகமென்று ஸ்பஷ்டமாகத் தெளிவாக உறுதிப்படுத்தும் அது எவ்வாறு உமக்குச் சாதகமாகும்?

ஸ்ரீ:- முதலாவது ச்லோகத்தில், "भेदं सत्योमाधिकृत" என்று பாஸ்கரர் சொல்லுவதை நிராகரித்து இரண்டாவது ச்லோகத்தில் "मायावाद प्राप्त" பேதத்திற்கு ஆரோபணம் செய்ததை நிராகரித்து பேதத்திற்கு அனாதி ஸத்யம் உறுதிப்படுத்தப்படுவது, "तदैक आहुः" என்னும் ச்ருதியில் பௌத்த மதத்திலிருந்து ப்ராப்தமான அஸத்காரினத்வத்தை நிராகரித்து, "सदेव" என்னும் வாக்கியத்தில் ஸத்யம் ஸமர்த்திக்கப்பட்டுள்ளபடி இங்கும் மாயாவாதத்தினால் சொல்லப்பட்ட பேதத்திற்கு ஆரோபிதத்வத்தை நிராகரித்து பேதத்திற்கு அனாதி ஸத்யம் உறுதி செய்யப்படுகிறது.

தீ:- (கோபத்துடன்) இவ்வாறு சொன்னால் தெரிவதெப்படி? தயவுசெய்து தெளிவாக ச்ருதியின் அர்த்தத்தை விவரியுங்கள்.

ஸ்ரீ:- (மந்தஹர்ஸத்துடன்) "प्रपंचो भेद पंचकः" என்னும் வெவ்வேறு ப்ரமாணங்களை யனுஸரித்து இங்கு "ப்ரபஞ்ச" பதமானது பேத பஞ்சகப்பரமானது. ततश्च प्रपंचः-भेद प्रपंचः, यदि विद्येत-उत्पद्येत - உண்டாகிறதோ. तर्हि - அப்படியானால், निवर्तेतः முடிய வேண்டும் (முக்தி) மோக்ஷத்திலும் கூட பேதமுண்டென்று ச்ருதிகள் சொல்வதினால், பேதம் ஸமாப்தி ஆகுவதில்லாதது. ஆகையால் பேத ப்ரபஞ்சம் அனாதியானது.

தீ:- (சிரித்து உடனே)""विद्येत" என்ற பதம் "उत्पद्येत" என்னும் அர்த்தத்தை எப்படிப் போதிக்கும் ஸ்வாமி? சக்திக்ராஹக ப்ரமாணமெது? விளக்கம் தேவை.

ஸ்ரீ:- (ஆச்சரியம் தெரிவித்து) இதென்ன தீக்ஷிதரே, வையாகரண கேஸரிகளென்று பெயர்பெற்ற நீங்களே இப்படிச் சொல்வது ஆச்சரியமாக உள்ளது. "विद सत्ताय" என்று தாது பாடமிருக்கிறதே? உற்பத்தியென்றாலும் அஸ்தித்வமென்றாகுமா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தி:- "विद" தாதுவிற்கு உற்ப்த்தியென்று அர்த்தமிருந்தாலும் எங்கும் அது ப்ரயோகம் காணுவதில்லையாகையாலும் "शंवर" என்னும் பதத்திற்கு "उदक" (தண்ணீர்) என்று அர்த்தமிருந்த போதிலும் "यमुनाशंवर" என்னும் ப்ரயோகம் எவ்வாறு சரியானதல்லவோ, அதைப்போலவே இதுவும் சரியில்லாததாகவேண்டும்.

ஸ்ரீ:- "तेन भूतिषु कर्तृत्वं प्रतिपन्नस्य वस्तुनः प्रयोजन क्रिया माहुः भावनां भावनाविदः" என்று भाव नार्थाधिकरण वार्तिकத்தில் "उत्पद्यमानस्य" என்று சொல்லாமல் "भूतिषु कर्तृत्वं प्रतिपन्नस्य" என்று சொல்லியிருப்பதினால் भूधातुவிற்கு उत्पत्तियில் ப்ரயோகமுள்ளவாறு विदधातुவிற்கும் கூட उत्पत्ति உத்பத்தியில் ப்ரயோகம் ஸாத்யமாகலாமல்லவா? இது மாத்திரமல்ல "विद्लाभे" என்று धातु பாடமிருப்பதினால் "विद्येते" என்பதற்கே "उभेत" என்று அர்த்தம். उत्पत्ति என்றால் ஆத்மலாபமே ஆனதால் "विद्येत" என்னும் பதத்திற்கு "उत्पद्येत" என்று நாம் அர்த்தம் சொன்னது மிகமிகச் சரியானது.

தி:- विदधातु ப்ரஸித்தமான अस्तित्वार्थकமென்று சொன்னால் உசிதமாகாதில்லையா?

ஸ்ரீ:- அவ்வாறு சொன்னால் எது உள்ளதோ அது சமாப்தி ஆக வேண்டும் என்று சொல்ல வேண்டிவரும். அவ்வாறு சொல்வது முடியாது. ஆகாசத்திற்கு உற்பத்தி உண்டு. ஆனால் நிவ்ருத்தியில்லை. व्यभिचार (ஸந்தேகம்) வருவதனால் आपाद्य आपादकங்களுக்கு வ்யாப்தி கூடுவதில்லை.

தி:- निवृत्तिप्रयोजकत्वेन சொல்லப்பட்ட अस्तित्वं ச்ருதி விஹிதமாகையால் व्याप्यपेक्षा இருப்பதில்லை.

ஸ்ரீகளவர்:- "नहय त्रानोयाचा" என்று "यत्र अन्नयाचा भावः तत्र अष्टगृहेतान्यवत्वाभावः" என்று शावरभाष्य टीकाराणक என்று சாபர்பாக்ஷ்யத்தில் ச்ருதி விஹதஹேதுவிற்கு வ்யாப்தி நிரூபித்திருப்பது தாங்கள் அறியாத விஷயமில்லை. நீங்கள் சொன்னபடி செய்தபக்ஷத்தில் அது வீணாக வேண்டியிருக்கும். காரணம் ச்ருதி விஹிதமானாலும் வ்யாப்தி அபேக்ஷிதமானது. अस्वित्वार्थकत्वे आपाद्य

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


आपादकங்களுக்கு வ்யாப்தி கூடுவதில்லையாததினால் "विद्येत" என்னும் பதத்திற்கு "उत्पत्ति" என்று அர்த்தம் செய்வதே உசிதமானது.

தீ:- எப்படி ப்ரம்மன் உபாதி க்ருதனல்லவனாதலினால் ஸ்வதந்த்ரனோ அப்படி பேதமும் உபாதி நிமித்தகமாகாமலிருந்தால் ஸ்வதந்த்ரமோ?

ஸ்ரீ:- அதற்கு முந்தின்வாக்யம் தத்பரமாயுள்ளது.

தீ:- ஸ்வாமி! அதற்கும் சற்று அர்த்தம் விவரிக்க வேண்டும், பார்க்கலாம்!

ஸ்ரீ:- த்வைதம்-பேதவர்க்கம் मायामात्रं ஈச்வரனின் இச்சைக்கு அதீனமானது. "विष्णोरिच्छावचस्त्वात्तु मायामात्रं" என்னும் ச்ருதி இவ்விஷயத்தில் ப்ரமாணமாக உள்ளது. முன்பு "स्वप्नमायासरूपेति", "सृष्टिरन्यैर्वि कल्पित" என்று ஐந்த்ரஜாலிகத்வத்தை மதாந்தரமென்று சொல்லி, "इच्छा मात्रं प्रभोस्सृष्टि:" என்று इच्छा अधीनत्वपक्षं ஸ்வமதமென்று ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தீ:- "अद्वैतः सर्वभावानां" என்னும் ச்ருதியினால் நிச்சயிக்கப்பட்ட அத்வைதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுவது?

ஸ்ரீ:- தீக்ஷிதரே! எந்தெந்த அர்த்தத்தில் பஞ்சபேமீ விபக்தி என்பதை நாம் என்னவோ உமக்குக் கற்றுத் தர வேண்டியதில்லை! இப்பொழுது பாருங்கள்- "प्रासादात् प्रेक्षते" என்ற வாக்யமுள்ளது. இதில், "प्रासादात्" என்னும் பதத்திற்கு "प्रासादाधिरुह्य" அதாவது ப்ரஸாதத்தை ஏறி (மாடி ஏறி) என்று எவ்வாறு அர்த்தம் செய்ய வேண்டுமோ அதைப்போலவே! "ल्यब्लोपे कर्मण्यधिकरणे च" முதலான வார்த்திகமிருப்பதனால் "स्वतंत्रमपेक्ष्य" மென்று परमार्थतः என்னும் பதத்திற்கு அர்த்தம் செய்யவேண்டும். இங்கு ஸ்வதந்த்ர "वस्त्वपेक्षया अद्वैत" மென்றர்த்தம். அதாவது ஸ்வதந்த்ர வஸ்து அத்வைதமென்னும் தாத்பர்யம் (அபிப்ராயம்) த்தினால் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

தீ:- "परमार्थ" என்னும் பதத்திற்கு मिथ्या என்ற பதத்தின் எதிர்ப்பதமான தாத்விக என்ற அர்த்தத்தில் रूढि இருப்பதனால் ஸ்வதந்த்ரமென்று எப்படி அர்த்தமாகும்?

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீ:- "स्वतंत्रे परमार्थाख्यि" என்ற ஸ்ம்ருதி இருப்பதனால் परमार्थ மென்றால் ஸ்வதந்த்ரமென்னும் அர்த்தம் உசிதமாயுள்ளது.

தீ:- ஸ்ரீகளவர்களே! இவ்வாறு பாரி பாஷிக அர்த்தம் கொள்ளுந்தல் எங்காவது காணப்படுகிறதா என்ன? पारिभाषक - सांकेतिक ।

ஸ்ரீ:- (சிரித்துக்கொண்டு) இதென்ன தீக்ஷிதரே, தாங்கள் இப்படி ஏன் கேள்விகேட்டுக் கொண்டிருக்கிறீர்? உமது முக்ய சாஸ்திரமான வ்யாகரண சாஸ்திரத்தில், "अणूनद्या" "आडागम लक्षणकार्य" செய்யும்பொழுது, "नदी" பதத்தினால் ப்ரஸித்தமான கங்கை முதலிய நதிகளை எற்றுக்கொள்ளாது "यूस्त्रयाख्यौ नदी" என்று பரிபாஷிதமான ஈகாராந்த, ஊகாராந்த ஸ்த்ரீலிங்கஸ்தமான "லீ" "வனீ" முதலிய பதங்களை ஏற்றுக்கொள்வதிருப்பதனால் பாரிபாஷிகார்த்தக்ரஹணம் சாஸ்திரஸித்தமான தென்றாகிறதில்லையா என்ன?

ஸ்ரீவிஜயீந்திர யதிவர்யர் வ்யாகரண சாஸ்திரத்தில் ப்ரபலமானவரென்று பெயர்பெற்ற அப்பய்ய தீக்ஷிதருடன் வியாகரண சாஸ்திர ரீதியில் த்வைதா த்வைத சித்தாந்தங்களில் வருகின்ற பதங்களில் அர்த்தநிர்ணயம் செய்ய ஆரம்பித்ததைக்கண்டு வாதத்தைப் பார்க்க வந்த சபைத்தலைவர், பண்டிதோத்தமர்களும் மிக்க ஆர்வத்துடன் வாத விவாதத்தைக் கேட்டுக் கொண்டே இன்றைய வாதத்தில் என்ன ஆகுமோ பார்க்க வேண்டுமென்று வியாகூலத்துடன் நிச்சப்தமாக அமர்ந்துள்ளனர். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் ஸ்ரீயவர்களின் ஸர்வ சாஸ்திர ப்ரவீணத்வத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து ஸ்ரீவிஜயீந்திரரை வ்யாகரண சாஸ்திரத்தில் பரீக்ஷிக்க வேண்டுமென்று நிச்சயித்துப் புன்னகையுடன் கேள்வி கேட்டார் - ஸ்ரீயவர்களே, தங்களுடன் சற்று வ்யாகரண சாஸ்திரத்தில் மோதிப்பார்க்க வேண்டுமென்று மனதில் விருப்பம் உண்டாகிறது!

ஸ்ரீ:- (புன்சிரிப்புடன்) தீக்ஷிதரே, உங்களுக்கு எந்த சாஸ்திரத்தில் என்னுடன் மோத வேண்டுமென்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விருப்பமோ அதற்கு நாம் சித்தமாயிருக்கிறோம். ஸ்ரீஹரியின்னுக்ரஹமிருந்தால், உமது வ்யாகரண சாஸ்திரத்தின் முடிச்சுகளை (Problems) எதிர்ப்போம், நடக்கட்டும். ஏன் தாமதம்?

தீ:- (ஸ்ரீயவரின் ஹாஸ்ய ஸ்வபாவத்தை மெச்சி) அப்படியானால் கேளுங்கள், ஸ்ரீயவர்களே, தாங்கள் சொன்னபடி செய்தால், नदीभिश्च என்னும் ஸூத்ரத்திலும் கூட, "நதீ" பதத்தினால் லௌகிக நதீ என்று ஏற்றுக் கொள்வது சரியல்லதாக வேண்டுமே?

ஸ்ரீ:- (மந்தஹாஸத்துடன்) असतिबाधे என்று விசேஷணம் (அடைமொழி) சேர்த்தால் போகிறது, அல்லவா தீக்ஷிதரே, "नदी भिश्च" என்பதில் பன்மை பாதகமிருப்பதினால் பாரிபாஷிக அர்த்தத்திற்கு க்ரஹணமில்லை (ஏற்க முடியாது) "कृत्रिमा कृत्रिमयोः कृत्रिमे कार्यसंप्रत्ययः" என்னும் நியாயம் தமக்குத் தெரியாத விஷயமொன்றுமில்லை! மீமாம்ஸா சாஸ்திர கோவிதரான தமக்கு அந்த சாஸ்திரத்தின் உதாரணத்தை நிரூபிக்க விரும்புகிறோம்.

தீ:- (உற்சாகத்துடன்) மிக்க மகிழ்ச்சி நிரூபிக்கலாம்.

ஸ்ரீ:- ஸ்ம்ருதி பாதத்தில் ப்ரஸங்கயுக்தமான "यववराहाद्यधिकरण" நியாயத்தைச் சற்று யோசிப்போம் யவவராஹாதி பதங்கள் லோகத்தில் தானியவகை. காகம் முதலியவைகளுக்குப் பிரஸித்தமானாலும் "वसंते सर्वसस्यानां जायतेपत्रशा तनां मोदमानाश्च तिष्ठंति यवाः कणिश शालिनः ॥" என்னும் ஸ்ம்ருதியினால் "यव" பதத்திற்கு தீர்க்கத்தில் ப்ரயோகம் கண்டு வருவதனால் "यवमयश्चरुर्भवति" என்னும் வாக்யத்தினால் "வராஹ" பதத்திற்கு ஸூகர பதத்தில் ப்ரயோகம் கண்டு வருவதினால், "वाराह उपादानं हा उपमंचते वैतसे कटे प्राजापत्यान् संचिन्तेति" என்ற விதி வாக்யத்தில் "வராஹ" பதத்தினால் ஸூகரத்தை ஏற்றுக் கொள்வதென்று நிர்ணயித்திருப்பதினால் शास्त्रे शास्त्री यार्थस्वैव ग्रहणं என்பதை அங்கீகரிக்க வேண்டியதாகையால் ஸ்ம்ருதி ஸித்தமான ஸ்வதந்த்ரமென்னும் அர்த்தம் பரமார்த்த பதத்திற்கு யுக்தியுக்தமாயுள்ளது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தி:- (ஸ்ரீயவர்களின் பாண்டித்யத்தின் அற்புதத்தைப் பார்த்து ஆனந்தமடைந்து) குருவர்யரே! "स्मार्थपरिभाषा स्मार्थव्यवहार एवोपयुज्यते" स्मृतिसिद्ध" பரிபாஷை ஸ்ம்ருதிவ்யவஹாரத்திலேயே உபயோகமாகிறது. "यूस्त्रयाख्यौ नदी" என்பதில் அது கண்டு வந்திருப்பதினால் சில இடங்களில் விசேஷ ப்ரமாண பலத்தினால் ஸ்ம்ருதி ஸித்த பரிபாஷையினால் ச்ருதியின் அர்த்த நிர்ணயம் கண்டு வருகிறது. உண்மையில் அப்படிப்பட்ட விசேஷ ப்ரமாணம் எதுவும் கண்டு வருவதில்லையல்லவா.

ஸ்ரீ:- विप्रतिपन्न (प्रमाणित) இந்த வாக்கியத்தில் "பரமார்த்த" பதத்தினால் योगवृत्ति யினால் ஸ்வதந்த்ர லக்ஷண வஸ்து அறியப்படுவது சரி உசிதம்.

தி:- "अक्षरैरेव बुध्यंते समुदाय प्रसिद्धिषु । अर्थभानोपसंहरादि तराविप्रवृध्यथ ॥" என்னும் வார்தி கோக்தியின்படி சக்தியின் ஸ்தானீயமான ஸமுதாய சக்திரூபமான ரூடியானது வாக்யஸ்தானியமான அவ்யயவப்ரஸித்த ரூபமான யோகத்தைக் காட்டிலும் ப்ரபலமானதென்று "रथकाराधिकरण"த்தில் சொல்லியிருப்பதினால் இங்கும், ரூடார்த்தமான தாத்விக வஸ்துவே "பரமார்த்த" பதத்தினால் சரியென்று சொல்வது அதிக யுக்தமானதல்லவே?

ஸ்ரீ:- தாத்வீகத்திலும் "कल्पत" அவயவ சக்தியினாலேயே நிர்வாஹமாகின்றபொழுது ஸமுதாய சக்தியைக் கற்பனை செய்விப்பது உசிதமற்றது. ஏனென்றால் அவயவங்களுக்கும் அவசியம் சுயநலத்தில் சக்தியைச் சொல்லத்தான் வேண்டும். அப்படிச் சொல்லா விட்டால்-அவசயவப்ரஸித்தி, ஸமுதாயப்ரஸித்தி என்னும் விபாகமே வியர்த்தமாக வேண்டியிருக்கும்!

தி:- ஸ்வாமி தாங்கள் சொல்கிறபடியானால் "रथकाराधिकरण" த்தில் சொல்லப்பட்ட ரூடி (रूढि) रूढिप्रावल्य भंग மானது வர வேண்டியிருக்கும்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீ:- (மந்தஹாஸத்துடன்) வெவ்வேறு ப்ரமாணங்களினால் முன்பு ஸாக்ஷாத்ஞானம் ஆகியுள்ள, அவயவார்த்தம் சூன்யார்த்தத்தில் பிரயோகமிருந்தால், அங்கு लब्धात्मकமான रूढ़ियும் ப்ரபலமும் வார்திகத்திலேயே "अस्त्ववयवार्थेषु योऽन्यत्रार्थे प्रयुज्यते । तत्रानन्यगतित्वेन समुदायः प्रसिध्यति ।।" என்று நிருபிக்கப்பட்டுள்ளது. "प्रोक्षणीष्वर्थसंयोगात्" என்னும் அதிகரணத்தில் दर्शपूर्ण मासप्रकरण प्रोक्षणीरा पोश्नीयात् (प्रोक्षणीरा सादयेत्) என்பதில் சொல்லப்பட்ட "प्रोक्षणी" என்ற பதம் संस्कार शब्द மா? அல்லது यौगिकமா என்று சந்தேகம் வந்தால் उत्पवनादि संस्कृतமான ஜலத்தில் ப்ரயோகம் காணப்படுவதனால் "ஸம்ஸ்கார" பதம் என்றும் "प्रोक्षणीभिरुद्वेजितात्" என்று ஸமஸ்க்ருத ஜலத்தில் ஜாதிமாத்ரத்தினால் ப்ரயோகம் கண்டிருப்பதினால் ரூடியினால் ஜாதி சப்தமென்று பூர்வபக்ஷம் வந்தால் "प्र" உபஸர்கமுள்ள (Prefix) "व्यक्षसेचने"என்னும் धातुவிற்கு "ल्युट्" प्रत्यय (Suffix) மேல் ङीप प्रत्यय विवक्षा செய்வதினால் நிஷ்பன்னமான (சித்தமான) प्रोक्षणी பதத்திற்கு प्रकृष्टसेचनक्रिया करणरूप योगத்தினாலேயே ஜலத்திலும் ப்ரயோகம் கூடுவதினால் கற்பனை செய்வது உசிதமல்ல. ஆனால் "யோக"மே என்று சித்தாந்தம் செய்திருப்பது உங்களுக்கும் தெரிந்த விஷயமே ஆகி இருப்பதினால், தீக்ஷிதரே இதுபற்றி இன்னும் அதிக விவரம் வேண்டியதில்லையென்று நமது அபிப்ராயம்.

வெகு நேரமாகி விட்டபடியால் அன்றைய வாதத்தை அங்கேயே நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று சபையோர் வேண்டிக் கொண்டதற்கிணங்க வாதத்தை அங்கேயே நிறுத்திவிட்டு ஸ்ரீயவர்கள் தீபாராதனைக்கு எழுந்தருளினார்.

நிறைந்த வித்வத் சபையில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் விஜயீந்திர தீர்த்தருடன் நடந்துள்ள தமது முன் தினத்திய வாதத்தைத் தொடர்ந்து வாக்யார்த்தத்தை ஆரம்பித்து இவ்வாறு சொல்ல ஆரம்பித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீ:- ஸ்ரீயவர்களே! रूढि கற்பனையைக் காட்டிலும் योगமே உசிதமென்று நேற்று தாங்கள் சொன்னீர்கள். தாங்கள் சொன்னபடியாவதானால், यथाकथं चित् योगवृत्तियானது எல்லா இடத்திலும் சம்பவிப்பதினால் रूढिயை அங்கீகரிப்பது அனுசிதமாகையால், "असत्स्वं वयवात्तेषु" என்னும் வாக்யம் அயுக்தமாக வேண்டியதாயிற்று.

ஸ்ரீ:- அது ஏன் தீக்ஷிதரே! அதே वार्तिक த்திலேயே "भावेतां यदि वृक्षस्य वाजिकर्णौ कथंचन अदृष्टां समुदायस्य कः शक्तिं जातुकल्पयेत् ॥ अश्वकर्णवाच्य" மான வ்ருக்ஷ விசேஷத்தில், अश्वकर्ण பதத்திற்கு योगवृत्ति அனுசிதமாகையால் அங்கு रूढि शक्तिயை ஏற்றுக் கொள்வதென்று சொல்லப்பட்டிருப்பதினால் உண்மையில் சமுதாய சக்தி ஏற்றுக் கொள்ளுவதாகையினால் रूढिயை ஏற்பது அனுசிதமானது.

தீக்ஷிதர் ஸ்ரீயவர்களின் வாதத்திறமையைக் கண்டு அதியாச்சரியம் அடைந்து ஸ்ரீயவர்களுக்கு ஸகல சாஸ்திரங்களிலும் உள்ள நிகரற்ற அஸாதாரணமான பாண்டித்யத்தைக் கண்டு அவருடைய விருது அவருடைய குணங்களுக்கும் அர்த்தத்திற்கும் பொருத்தமானதென அறிந்து ஆனந்தமடைந்து ஸ்ரீயவர்களின் நிகரற்ற அனுவாத க்ரமத்தையும் அபூர்வமான தர்க்க விதர்க்கத் திறமையைக் கண்டு ஆனந்தமடைந்து பரமானந்தத்தினால் தலை ஆட்டிக்கொண்டு மனமார குருவர்யரைப் பாராட்டி வர்தத்தை மேலே தொடர்ந்தார்.

தீ:- குருவர்யரே, "परमार्थमेवासौ वदति" என்பதில் பரமார்த்தமென்னும் சொல்லினால் अबाधित அர்த்தமே தெரியப்படுவதினால் योग रूढि இரண்டு வ்ருத்திகளினால் தாத்விகமே இங்கும் "பரமார்த்த" பதத்தினால் விவக்ஷிதமென்று சொல்லுவது உசிதமல்லவா?

ஸ்ரீ:- சீர்தூக்கிப் பார்க்கையிலும் முன் சொன்ன வாக்யத்தினாலும் விரோதம் வராமல் அர்த்தம் சொல்வதே சரியாகையால் பரமார்த்தம் என்னும் சொல்லிற்கு "स्वतंत्र" (ஸ்வதந்த்ரம்) என்னும் அர்த்தமே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

யுக்திக்குகந்தாயுள்ளது. "अद्वैतः सर्वभावना" என்ற வாக்யத்திற்கு ஸர்வ பாவங்களின் நடுவில் अयं -இவன், अद्वैतः - अद्वितीयः स्वतंत्र னென்று ஸித்திப்பதே தவிர ஸர்வபாவங்களின் அஸத்வம் ஸித்திப்பதல்லவென்று நீங்கள் முதலில் உதாரணம் கொடுத்த ச்ருதிவாக்யம் உமது பக்ஷத்திற்கு ஸாதகமாயில்லாமல் உங்களுக்குப் பாதகமாகவும், நமது பக்கத்திற்கு ஸாதகமாகியும் இருக்கிறது.

தீ:- ஸ்வாமி, இந்த ச்ருதியிலுள்ள "ப்ரபஞ்ச" பதம் விச்வ விஸ்தாரகவாசகமானது. "पंचदशकौ वर्गे व" என்ற பாணினி ஸூத்திரத்தினால் நிஷ்பன்னமான இந்தப் பதத்தினால் பொதுவாக பஞ்சகங்களின் வர்க்கம் அர்த்தமாகிறதே தவிர பேத பஞ்சகமென்று அது எப்படி அர்த்தமாகும்?

ஸ்ரீ:- (புன்னகையுடன்) "पंचनां वर्गः पंचः प्रकृष्टासौ पचश्व प्रपंचः" இவ்வாறு பதவிக்ரஹம் செய்தால் பஞ்ச சப்தார்த்தத்தில் प्रकृष्टत्व विवक्षा செய்தவாராயிற்று. அந்த ப்ரக்ருஷ்டத்வம் தான் மோக்ஷ ஸாதனக்ஞான விஷயத்வ ரூபமானது. "पृथुगात्मानं प्रेरितारं चमत्वा," "वैलक्षण्यं तयोर्ज्ञात्वा पुच्यते बद्धतेऽन्यथा" இவைகள் முதலிய ச்ருதி வாக்யங்களில் மோக்ஷ ஸாதன க்ஞான விஷயத்வம் நிச்சயிக்கப்பட்டிருப்பதினாலும், "माया मात्रमिदं द्वैतं" என்னும் அடுத்த வாக்யத்தில் பேத வாசகத்வைத பதம் ப்ரயோகத்திலிருப்பதனாலும் ப்ரபஞ்ச பதத்தினால் பேத பஞ்சகமே விவக்ஷிதமானதனால் பேத பஞ்சகம் அனாதியும் மற்றும் ஸத்யமென்று நிரூபித்திருப்பதினால், தீக்ஷிதரே! தாங்கள் சொல்லுகின்ற ஜீவ-ப்ரம்ம ஐக்யம் ப்ரமாணத்திற்கு விரோதமாயுள்ளது.

வெகு எளிதில் தீக்ஷிதரின் பூர்வ பக்ஷங்களை எல்லாவற்றையும் விளையாட்டாகவே கண்டனம் செய்து ஜீவ-ப்ரம்மனின் பேதத்தை நிலை நாட்டின ஸ்தாபித்த ஸ்ரீயவர்களின் திறமை, சாமர்த்தியங்களைக் கண்டு, சபைத்தலைவர் ஆச்சரியமடைந்து ஸ்ரீபாதங்களைப் பாராட்டத் தொடங்கினர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீ:- (வேறு வழியில் ஸ்ரீயவர்களை ஜயிக்க விரும்பினவராய்) "एकमेवाद्वितीयं ब्रह्म" முதலிய ச்ருதிகளில் "அத்விதீய" பதம் முதலானவைகளினால் வேறொருவரில்லையென்று (த்வீதிய ஸாமான்யத்தை) நிஷேதம் செய்யப்பட்டிருப் பதனால் ச்ருதியினாலேயே "மித்யாத்வம்" ஸித்திக்கிறது.

ஸ்ரீ:- தீக்ஷிதரே! சொற்களுக்கு திடீரென்று தோன்றும் அர்த்தத்தைச் சொல்லக் கூடாது.

தீ:- (சற்று பிகுவுடன் Reserved) ஏன் அவ்வாறு சொல்லக்கூடாது?

ஸ்ரீ:- சாவதானமாகக் கேளுங்கள் தீக்ஷிதரே, "आज्यैः स्तुवते" என்று சொல்லும் வாக்கியத்திலுள்ள आज्य பதத்திற்கு நெய்கள் என்று அர்த்தமாய் "पंचदशाज्यैः" என்னும் குணவாக்ய ரூப மீமாம்ஸை கூடவேயில்லை. எப்படியென்றால் "पंचदशाज्यानि भवंति" என்ற வாக்கியத்தில் பதினைந்து (பஞ்சதச) எண்ணிக்கை விசிஷ்டமான விதி ஆஜ்ய விதானம் கூடுவதில்லை. விசிஷ்டத்தை விதானம் செய்தால் கௌரவம் வரும். ஆகையால் "ஆஜ்ய" என்னும் பதார்த்தத்தை அனுவாதம் செய்து எண்ணிக்கையென்று நியமம் செய்யவேண்டும் என்ற பிறகு ஸ்தோத்திரத்தில் நெய் வராமலிருக்க घृतத்தின் விளக்கம் கூடுவதில்லை யாகையினால் ஸ்தோத்திரத்தை அனுவாதம் செய்து எண்ணிக்கையென்று விதிக்க வேண்டும். आज्य பதத்திற்கு ஸ்தோத்ர வாசகத்வம்தான் இது நிர்ணயமாவது என்று குணவாக்யபர்யாலோசனையினால் (ஒருவஸ்துவின் குணத்தைப் பரீக்ஷித்து) "ஆஜ்ய" பதம் நாமதேயமென்று ஸித்தியாகிறது. நீங்கள் சொல்லுகிறபடி அகஸ்மாத்தாகத் தோன்றும் அர்த்தமே பதத்தின் அர்த்தமானால், இது பொருந்துவதில்லை. ஆகையால் அகஸ்மாத்தாகச் செய்யும் அர்த்தம் பதத்தின் தாத்பர்யம் என்று சொல்லக் கூடாது. "सर्वाणि हवा भूतानि आकाशादेव समुत्पद्यन्ते" என்னும் வாக்யத்திலுள்ள ஆகாச என்ற பதம் அகஸ்மாத் செய்யும் அர்த்தத்தினால் பூதாகாசபரமாய்க் காணப்பட்டாலும் பரோவரீயஸ்த்வாதி லிங்கங்களால் பரமாத்ம

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பரமென்று "आकाशस्तल्लिंगात्" முதலிய அதிகரணங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. "अंधोमणिमविंदत्" என்ற வாக்யத்திலும் தெரிய வேண்டும்.

தீ:- இருக்கட்டும். இங்கு "आपाततः" प्रतीति மானது எது? மற்றும் தாத்பர்யம் விஷயார்த்தம் எது? என்பவைகளைச் சொல்ல வேண்டும்.

ஸ்ரீ:- அவசியம் சொல்லுகிறோம் கேளுங்கள் தீக்ஷிதரே. "अंधोमणिमविंदत् तमनंगुलिरावयत् ॥" सोऽग्रीवः प्रत्य मुंचत तमजिह्वा असश्चत ॥" முதலிய ச்ருதிகளுக்கு மேலாகப் பார்த்தால் குருடன் கண்ணினால் மணியைப் பார்த்து, விரலில்லாதவன் கோர்த்து, கழுத்தில்லாதவன்தான் அதை அணிந்து, நாக்கில்லாதவன் புகழ்ந்தான்" என்பதாக அர்த்தமாகின்றது. இது நடக்காத காரியம். லோகத்தில் கண்ணிருப்பவனே பார்த்து, விரல்களிருப்பவனே கோர்த்து, கழுத்துள்ளவன்தான் அணிந்து, நாக்குள்ளவன் புகழ்வது நிருபணமாகி யுள்ளது. ஆகையால் கண், விரல், கழுத்து, நாக்கு இல்லாதவர் பார்ப்பது முதலான காரியங்களைச் செய்வது முடியாத காரியமாகையினால், அவ்வாறு அர்த்தம் செய்யக் கூடாது. யோசித்தால் இந்த ச்ருதிக்குச் சரியான அர்த்தம் கிடைக்கும். ஆகையால் திடீரென்று தோன்றும் அர்த்தத்தையே சொல்லலாகாது.

தீ:- (பரிகாசமாக) மிக்க மகிழ்ச்சி! எங்கே அந்த ச்ருதிகளின் அர்த்தம் எதுவோ அவைகளை விளக்கலாமே!

ஸ்ரீ:- अनंगुलिः - விரலினால் ஸூசிக்கப்பட்ட ப்ராக்ருத தேஹமில்லாதவனான, பகவந்தன், तं அந்த ஜீவனை, आवयत् சம்சாரத்தினால் நன்றாகக் கட்டினான். अजिह्व - பரமாத்மாவின் அதீன ஜிஹ்வா (நாக்குள்ள) ஒருவனான ஜீவன் அந்த பரமாத்மனை, असश्चतः ஸ்தோத்திரம் செய்தான். பிறகு अंधः பூர்வத்தில் பகவத்க்ஞான சூன்யனான ஜீவன், मणिं - முக்கியமான பரமாத்மனை, अविंदत् - தெரிந்து கொண்டான். अग्रीवः - ப்ராக்ருதமான கழுத்து முதலியன இல்லாத

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பகவந்தன் प्रत्यमुंचत: இந்த ஜீவனை, சம்சாரத்தினின்று விடுவித்தான். தீக்ஷிதரே! இது அந்த ச்ருதிக்கு பாதகமற்ற அர்த்தம்.

தீ:- மணி என்ற சொல் ப்ரதான வாசகமென்னும் விஷயத்தில் "शक्तिग्राहक प्रमाणं" எது?

ஸ்ரீ:- "मणिर्मुखं प्रघोनं चेत्युत मस्य वचो भवेत्" என்னும் अभियुक्त வசனத்தைத் தாங்கள் கேட்டதில்லையா தீக்ஷிதரே? आपातप्रतीतार्थத்தையே அர்த்தம் செய்தால் "इतिहासपुराणभ्यां वेदंसमुपबृंहयेत्" "बिभेत्यल्प श्रुताद्वेदेमामयं प्रचलिप्यति" "कश्चंदसां योगमावेद धीरः कोधिष्ण्यां प्रतिवाचं पपाद" முதலிய ஸ்ம்ருதி ச்ருதி விரோதம் வருகிறது. இது மாத்திரமல்ல, சாஸ்திரத்திற்கு லக்ஷணத்தைச் சொல்லப் புறப்பட்ட சபரஸ்வாமியும் கூட பாஷ்யத்தில் - "शास्त्रंहि शब्द विज्ञानादसन्नि कृष्टेऽर्थे विज्ञानं" என்றும் மற்றும் "विरुद्ध वत्प्रतीयंते आगमा यत्र वै मिथः । तत्रदृष्टानसारेण तेषामर्थोन्ववेक्ष्यत ॥" என்று சொல்லியிருப்பதினால் ப்ரமாணத்திற்கு விரோதமான அர்த்தத்தை ஸஹசப்த விவிக்ஷிதமென்று சொல்லலாகாது. प्रकृत संघट:, "घटपटौ भिन्नौ" என்னும் ப்ரத்யக்ஷ விரோதம் வருவதினால் தாங்கள் விவக்ஷா (அர்த்தம்) செய்த அர்த்தம் அந்த ச்ருதிக்கு ஸரியாகப்பொருந்துவதில்லை.

தீ:- "घटपटौ भिन्नौ" என்னும் ப்ரத்யக்ஷம் "सर्वं खल्विदं ब्रह्म" என்னும் வாக்கியத்தினால் உண்டாகின்ற ஐக்ய க்ஞானத்திற்கு பாதகமாகமாட்டாது. ஏனென்றால் घटपट भेदावगाहि ப்ரத்யக்ஷம் தனக்கும் ஐக்ய க்ஞானத்திற்கும் பாதகமாகமாட்டாது. ஏனென்றால் பேதத்தை க்ரஹிப்பதில்லை. பேத க்ஞானத்தில் விரோதிதர்மிகள் விஷயமாக வேண்டும். பேதங்களைப் பரிசீலிப்பவனின் ப்ரத்யக்ஷத்தில் தானாகட்டும் ஐக்ய க்ஞானமாகட்டும் விஷயங்களாக இல்லாததினால் பேதத்தில் பரிசீலிப்பவனின் ப்ரத்யக்ஷமும் தனக்கும் ஐக்ய க்ஞானத்திற்கும் பேதத்தை விஷயமாகச் செய்யமாட்டாது என்ற பிறகு பாதகமில்லையாதலால் "सर्वं खल्विदं ब्रह्म" என்னும் ச்ருதி அவைகளுக்கு ஐக்யத்தை விஷயமாகச் செய்யும். ततश्च घटपट भेदावगाहिप्रत्यक्ष தன்னைக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

காட்டிலும் வேறான (ஸ்வாபின்ன) ஐக்ய க்ஞானத்தைப் பாதிக்காது. ஆகையால் निबार्ध மான(ச்ருதி) ஸர்வா த்வைதத்தில் ஸமாப்தியாகும்.

ஸ்ரீ:- (தீக்ஷிதரின் வாதத்திற்குத் தலையாட்டி) தீக்ஷிதரே घटपट भेदावगाहिप्रत्यक्षा ப்ரத்ய்க்ஷத்திற்கும் श्रौत्रैक्य க்ஞானத்திற்கும் தான் பேதத்தைக் கிரஹிக்காதிருந்தாலும் வேறு க்ஞானம் விஷயமாக்கப்படலாமல்லவா!

தீ:- அந்த க்ஞானத்திற்கும் ஐக்கிய க்ஞானத்திற்கும் பேதத்தை உக்தி ரிதியில் வேறு க்ஞானமே விஷயமாக்கப்படவேண்டுமென்று சொல்ல வேண்டும். ஆனால் அனவஸ்தா வருவதினால் கடைசியில் ஓரிடத்தில் விச்ராந்தி (ஓய்வு) சொல்ல வேண்டும். அந்த அந்த்யக்ஞானத்தில் அவகாசமுள்ள மேலே சொன்ன ச்ருதி ஸர்வைக்ய்த்தை போதிக்க ஸமர்த்தமாகும். அதுபோலவே "सुदूरधावव श्रांता त्रांध बुद्धि परंपरा निवृत्तावद्वयाम्नायैः पर्ष्णि ग्राहै र्विजीयत ॥" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸ்ரீயவர்களே! ப்ரத்யக்ஷ விரோதம் எவ்வாறு வரும்?

ஸ்ரீ:- "नेहनानास्तिकिंचन" என்னும் ச்ருதி प्रत्याक्षादि प्रसक्त பேதத்தை நிஷேதிப்பதென்று கேட்க வேண்டும் ஏனென்றால் அப்ரஸக்தமானதற்கு நீஷேதம் கூடுவதில்லை அதைப்போலவே எங்கெங்கு அத்வைத ச்ருதி வருகிறதோ அங்கெல்லாம் அதைவிட முதலில் ப்ரத்யக்ஷம் பேதத்தை க்ரஹிக்கிறதாகையால் இரவில் க்ராம ஸம்ரக்ஷகனின் வீட்டில் திருடனுக்கு எப்படி அவகாசமிருப்பதில்லையோ, அதுபோல "नेहनानास्ति किंचन" என்னும் வாக்கியத்தினால் நிஷேதமான பேதம் ப்ரஸஞ்சகமானதால் ரோந்துக்காரனைப் போல் விழிப்புடன் இருக்க பேதபஹாரித்வேன திருடனைப் போலிருக்கும் அத்வைத ச்ருதிக்கும் அவகாசமாகாது: "प्रत्यक्षा त्रसक्त चेदप्रसक्तनिषेधता । श्रुतीस्यात्तत्प्रवृत्तं चेत्तद्बाधः सुस्थिरश्रुयतेः ॥" என்று சொல்லியிருப்பதை தீக்ஷிதர் கவனிக்க வேண்டும்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



தி:- अप्रसक्त प्रतिषेधமென்றால் அர்த்தமென்ன? அப்ரஸித்த ப்ரதியோகித்வம் (ப்ரதியோக ப்ரஸித்தி இல்லை) என்று அர்த்தமோ? அல்லது அப்ரயோஜனத்வம் ப்ரயோஜனமில்லை) என்றர்த்தமா?. முதலாவது பக்ஷம் கூடுவதில்லை. வேறு இடத்தில் ப்ரஸித்தமான பேதத்வேன உபஸ்திதமான பேதத்திற்கு ப்ரதியோகி அனுயோகி பாவத்தினால் (ப்ரச்னகர்த்தா) வேறு இடத்தில் நிஷேதம் கூடலாம். இன்னும் அனர்த்த விவ்ருத்தி ரூபமான ப்ரயோஜனமிருப்பதினால் இரண்டாவது பக்ஷம் சரியல்ல என்றபிறகு அப்ரஸக்த ப்ரதிஷேதமென்றால் அர்த்தமென்ன ஸ்வாமி?

ஸ்ரீயவர்கள்:- ச்ருதி செய்யும் நிஷேதம் அந்த அதிகரணத்தில் ப்ரஸக்தமாயிருக்க வேண்டுமென்ற நியமமிருக்கின்றது. ஏனென்றால் ப்ரஸக்தியில்லாமல் நிஷேதம் செய்தால் அப்ராமாண்யம் வரும். ஆகையினால் தான் "अभागि प्रतिषेधात्" என்னும் ஸூத்ரத்தில் "नपृथिव्यामग्निश्चेतव्यो नांतरिक्षे नदिवे" என்றும் வாக்யத்தில் அந்தரிக்ஷத்தில் அக்நிசயன ப்ராப்தியில்லை யாதலால் அங்கு அதை நிஷேதிப்பதாகுவதில்லை ஆகி "नांतरिक्षे" என்னும் வாக்யத்தில் ப்ராமாண்யத்தை ஆக்ஷேபித்திருக்கின்றனர். அப்படிச் செய்யாதிருந்தால் ப்ருத்வியில் ப்ரஸக்தவாத அந்தரிக்ஷத்தில் நிஷேதம் கூடலாமானதால் அந்த வாக்யத்திற்கு ப்ராமாண்யாக்ஷேபம் தப்பாகும்! ஆகையால் நிஷேதத்திற்கு அந்த அதிகரணத்திலேயே ப்ரஸக்தி வேண்டியிருப்பதினால் அப்ரஸக்த ப்ரதிஷேதம் சரியல்ல.

தி:- ஸ்ரீபாதங்களவரே! முன்பு நான் சொன்ன "सर्वं खल्विदं ब्रह्म" என்னும் ச்ருதியும் ஸர்வாத்வைதத்தில் சமாப்தியாகும் என்பதற்கு என்ன பாதகம் (தடை)?

ஸ்ரீ:- இங்கு கேளுங்கள், அத்வைத ச்ருதிக்கு ஸர்வ மித்யாத்வத்தில் தாத்பர்யமா? அல்லது அபேதத்திலுள்ளதோ? இல்லையேல் பேத நிஷேதத்தில் தாத்பர்யமா? ஆத்யபக்ஷம் கூடுவதில்லை. அத்வைத ச்ருதிகளில் ஸர்வ ஜகதந்த:

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy.

https://archive.org/details/@muthulakshmi_academy


பாதியானதினால் நிஜமாக ஸ்வரூபத: மித்யையாயினும் வ்யாவஹாரிக தத்வ மிருப்பதினால் எவ்வாறு ப்ரமாத்வத்தை அங்கிகாரம் செய்து அந்த விஷயமான அத்வைதத்திற்கு அபலாபமில்லையோ அதுபோல பேத க்ஞான ரூபமான சரம க்ஞானம் கூட ஸர்வ ஜகதந்த: பாதியாகையினால் ஸ்வரூபத: மித்யாவானாலும் வ்யாவஹாரிக ஸத்வமிருப்பதினால் ப்ரமாத்வம் வரக் கூடுமாகையால் தத்விஷய பேதாலாபம் சரியல்ல.

தீ:- க்ஞான மித்யாத்வத்தினால் விஷய மித்யாத்வத்தைச் சொல்வதில்லை. அப்படிச் சொன்னால் அத்வைத க்ஞானத்தில் வ்யபிசாரம் வரலாம். ஆனால் ச்ருதியே த்வைத மாத்ரத்திற்கு மித்யாத்வத்தை போதனம் செய்கிறது. என்ற பிறகு என்ன தோஷம்?

ஸ்ரீ:- (புன்னகையுடன்). தீக்ஷிதரே, நமது அபிப்ராயத்தை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை. ப்ரத்யக்ஷம் முதலானவைகளால் எங்கும் த்வைதம் க்ரஹிக்கப்படுவதால் எங்கும் ச்ருதி அத்வைதத்தை போதிக்காது! எந்த சரமக்ஞானத்தில் ப்ரத்யக்ஷம் முதலியவைகளினால் த்வைதம் போதிக்கப் படுவதில்லையோ அங்கு ச்ருதி அத்வைதத்தை போதிக்கிறதென்று சொன்னாலும் உமது விவக்ஷா (விளக்கம்) ஸித்திக்காது. ப்ரத்யக்ஷம் முதலியவைகளால் த்வைதம் பேதத்தை கிரஹித்த கட முதலியவைகளில் முதன் முதலில் அத்வைத ஆகமங்களுக்கு ப்ரவ்ருத்தியில்லாதிருந்தாலும் கூட சரமக்ஞானத்தில் ப்ரவ்ருத்தி உண்டென்று எவ்வாறு சொல்லுகிறீரோ, அதைப்போலவே கட முதலியவைகளிலாகட்டும், ப்ரம்மனிலாகட்டும், ஸத்யக்ஞானாதி வாக்யத்தினாலாயினும், வேறு ப்ரமாணத்தினாலாகட்டும் தத்வம் கிரஹிக்கப்படுவதோ அங்கு "इदं वा अग्रे नैवकिंचनासीत्" என்னும் ச்ருதியினால் அஸத்வம் போதிக்கப்பட முடியாமலிருந்தாலும், மானாந்தரத்தினால் ஸத்வமுள்ளதென்று கிருஹிக்கப்படாத கடாதிகளின் தத்வக்ராஹகமான தத்வ க்ஞானம் முதலிய வாக்யத்தில் பாதகம் இருப்பதில்லையாதலால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அஸத்வத்தை க்ரஹிக்கட்டும். அவ்வாறே கடாதிகளில் ப்ரம்மனிலும் அஸத்வத்தை க்ரஹிக்கட்டும் என்ற தோஷம் வருகிறது.

தீ:- இருக்கட்டும். இரண்டாவது பக்ஷத்தில் தோஷமென்ன?

ஸ்ரீ:- த்வைத் ப்ரத்யக்ஷ பாதகமான அத்வைத க்ஞானத்திற்கு பாத்யமான த்வைத ஞானத்தினால் ஐக்ய வாக்யத்திற்கு பேத வாக்யத்தினால், ஐக்யத்திற்கு பேதத்தினால் பாரமார்த்திக பேதமில்லா திருந்தாலும் வ்யாவஹாரிக பேதத்தினால் மாத்திரம் த்வைத க்ஞான பாதகத்வத்தைப் போல, பாதகமான ப்ரத்யக்ஷ க்ஞானத்திற்கும், பாத்யமான ச்ரௌத க்ஞானத்தினால் பாரமார்த்திக பேதமில்லை யென்றாலும் வ்யாவஹாரிக பேதமிருப்பதினால், அத்வைத க்ஞான பாதகத்வம் கூடலாமாகையால், மேற்சொன்ன தோஷங்கள் மற்றும் இன்னும் தோஷராசிகள் ஜாக்ருதமாயுள்ளதால் நீங்கள் உதாரணம் செய்த ச்ருதி ஜகன் மித்யாத்வ விஷயத்தில் ப்ரமாணமாக மாட்டாது.

வாத விவாதம் இவ்வாறு நல்ல முறையில் பூர்ணமாக நிறைவேறியதும் சபைத் தலைவர் அதிக நேரமாய் விட்டதென்று தெரிவித்ததினால் இரண்டுவாதிகளும் வாதத்தை அங்கேயே நிறுத்திக் கொண்டனர். சபையோர் மஹா வாதமல்லரான விஜயீந்திர-அப்பய்ய தீக்ஷிதர் இவர்களின் வாதத்திறமையைப் பற்றித் தங்களுக்குள்ளேயே சர்ச்சை செய்து கொண்டு சென்றார்கள்.

அன்றிரவில் ஸ்ரீமடத்தில் தீபாராதனையான பிறகு ஸ்ரீயவர்களின் அபிமானிகளான கும்பகோணத்தின் அநேக பண்டிதர்கள், நகரவாஸிகள் ஸ்ரீயவர்களுக்கு வந்தனம் செய்து "மஹாஸ்வாமி, க்ஷமிக்க வேண்டும்! தீக்ஷிதருடன் வாதமாரம்பமாய் பத்துப் பதினைந்து தினங்களாகி விட்டன. ஆயினும் வாதம் ஒரு நிலையில் நிற்கும் அறிகுறி காணப்படவில்லை. தீக்ஷிதரை ஜயிக்க ஸ்ரீயவர்கள் ஏன் மனம் வைக்கவில்லையோ அற்பரான எங்களுக்கு அது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தெரியாமலிருக்கிறது. ஸர்வக்ஞ ஸந்நிதியில் அதிகம் விக்ஞாபனம் செய்ய பயமாயுள்ளது. பூஜ்யபாதரே, ஸ்ரீதீக்ஷிதரை சீக்கிரமே ஜயித்து ஸ்ரீமத்வ சித்தாந்தத்தின் மஹாமார்க்கத்தை நிஷ்கண்டகமாகச் (இடையூறில்லாமல்) செய்து எங்களெல்லோரையும் உய்விக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்" என்று மிக்க ஆர்வத்துடன் விக்ஞாபனம் செய்து கொண்டனர்.

ஸ்ரீயவர்கள் மந்தஹாஸத்துடன் தமாஷாக, "ஓஹோ, கும்பகோணவாஸிகளுக்கு மற்றொரு திக்விஜயம் அவசியமானதாயுள்ளது போலும்! அதாவது நாமே தோல்வியுறுவோமென்று பயமாயுள்ளதோ? ஸ்ரீமடத்தின் அபிமானிகளான உங்களுக்கு இப்படிப்பட்ட கெட்ட கற்பனைகள் தலைக்கேறினதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. தீக்ஷிதரை ஜயிப்பது சாமான்யகாரியமா என்ன? மதம்பிடித்த யானையை அநேக உபாயங்களினால் பழக்கி வசப்படுத்திக் கொள்ளத் தானே வேண்டும்? இதுவரை மதயானையை அநேக வழிமுறைகளினால் பழக்கி வந்துள்ளோம். ஸ்ரீமூலராமரின் கிருபையிருந்தால் எதற்கும் குறைவில்லை. நாளை எவ்வாறிருந்தாலும் குருபாதரான ஸ்ரீசந்திரிகாராயரின் மஹாஸமாராதனையல்லவா? யாருடைய அனுக்ரஹத்தினால் நாம் இன்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறோமோ அவருக்குச் சிஷ்யரின் காணிக்கை அர்ப்பிக்க வேண்டாமா? ஸ்ரீமூலராமசந்திரர், ஸ்ரீமதாசார்யர், ஸ்ரீடீகாக்ருத்பாதர், இவர்கள் நாளை தீக்ஷிதரை ஜயித்து அதையே காணிக்கையாக ஸமர்ப்பிக்கும் சாமர்த்யத்தை நமக்குக் கருணை புரிந்துள்ளார்! சிந்திக்க வேண்டாம். நாளை த்வைத விஜயதுந்துபி முழங்கும்! என்று அருளிக் கண்ணை மூடிக்கொண்டு த்யானத்திலாழ்ந்தார்.

## 49. த்வைத விஜய துந்துபி முழங்கியது

ஸ்ரீசந்திரிகாராயரின் மஹாஸமாராதனை ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் தலைமையில் கும்பகோணத்தில் மிக வைபவத்துடன் நடந்தேறியது. மத்தியானம் மூன்று மணி. ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்ரீமூலராமரை தியானித்து ஸ்ரீமதாசார்ய ஸ்ரீடீகாக்ருத்பாதர், ஸ்ரீசந்திரிகாராயர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இவர்களுடைய வரை படங்களைச் சேர்த்து, வேண்டிய சகாக்களுடன் வெள்ளிப் பல்லக்கில் ஸ்ரீகும்பேச்வரனின் தேவாலயத்திற்கு விஜயம் செய்தார். ஸ்ரீயவர்களின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு ராஜகோபுரவாயிலில் நின்றிருந்த ப்ரமுக நகரவாசிகள் ஸ்ரீயவர்களுக்குப் பூமாலையை அணிவித்து வரவேற்றுபசரித்தனர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஜயகோஷம் செய்து கொண்டிருக்கையில் ஸ்ரீயவர்கள் கோவிலுக்குள் ப்ரவேசித்து வாதமண்டபத்திற்கு வந்து ஆஸனத்திலமர்ந்தார். ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரும் சிஷ்ய பரிவாரங்களுடன் தயாராகவுள்ளார்.

ஸ்ரீயவர்களைப் பார்த்து ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் புன்னகை செய்து சொன்னார்:- தீ:- ஸ்வாமி, இன்று அத்வைத விஜயம் ஆகியே தீரவேண்டும்! தங்களுக்குச் சம்மதந்தானே?

ஸ்ரீ:- (புன்சிரிப்புடன்) இன்று நமது உத்தேசமும் அதே ஆகியுள்ளது. ''அத்வைத விஜய''மென்னவோ ஆகத்தான் வேண்டும்! ஆனால் அந்த "அத்வைத விஜய"த்திற்கு நமது விளக்கம் வேறு விதமாயுள்ளது. ''அ'' -அதாவது ''அ'' காரவாச்யனான ஸ்ரீமந்நாராயணன், த்வைத-எந்த த்வைதத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறானோ, விஜய-அப்படிப்பட்ட ஸ்ரீமன் மத்வ மதத்தின் விஜயம் இன்று ஆகத்தான் வேண்டும்! தீக்ஷிதரே, உமது வாயில், உம்மிடத்தில் அந்தர்யாமியாயிருக்கும் நமது ஆசார்யரே (வாயுதேவன்) அந்தச் சொல்லைச் சொல்ல வைத்திருக்கிறார் என்ற பிறகு இன்று த்வைத விஜயமாகத்தான் வேண்டுமல்லவா?

சபைத் தலைவர், வ்யாவஹார சாதுர்யத்துடன் ஸ்ரீயவர்கள் தீக்ஷிதர் வாயைக் கட்டின முறையைக் கண்டு பாராட்டுகையில் தீக்ஷிதரும் ஸ்ரீயவர்களின் சமயோசித புத்திக்குத் தலையாட்டி, "ஸ்ரீயவர்களே, தாமதமேன், நடக்கட்டும் த்வைதாத்வைத விஜயத்தை நிர்ணயிக்கும் இறுதி வாக்யுத்தம்!" என்று முழுங்கிக்கொண்டு, சிரித்துக் கொண்டே வாதத்தை ஆரம்பித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தீ:- ஸ்ரீகளவரே! பாரமார்த்திக ஸத்வம், வ்யாவஹாரிக ஸத்வம், ப்ராதி பாஸிக ஸத்வம் என்று நமது மதத்தில் ஸத்வம் மூன்று விதங்கள் எந்த க்ஞானத்தினால் बाध्य மாகா்மலிருக்க (अबाध्य) பாரமார்த்திக ஸத்வமென்று பெயர். ப்ரம்ம க்ஞானத்தினால் மாத்திரம் बाध्य மாவது வ்யாவஹாரிக ஸத்வம். ப்ரம்ம க்ஞானத்தை விட்டு வேறு க்ஞானம் "बाध्य" மானதை ப்ராதிபாஸிக ஸத்வமென்கிறோம். என்ற பிறகு பேதம் வ்யாவஹாரிகமென்று சொல்வதினால் ச்ருதி விரோதம் வருவதில்லையாகித் தங்களின் அபிப்ராயம் ஸித்திப்பதில்லையல்லவா!

ஸ்ரீ:- கேளுங்கள் தீக்ஷிதரே, "यो वेदनिहितं गुहायां परमे व्योमन् । सह ब्रह्मणा विपश्चिता," "तदाविद्वान पुण्यपापे विधूय निरंजनः परमं साम्य मुपैति, ईशमाश्रित्य तिष्ठंति मुक्तास्संसार सागरात् । यथेष्ट भोग भोक्तारो ब्रहांता उत्तरोत्तरं," "ओं जगद्व्यापरा वर्ज्यं ओं," முதலான ச்ருதி, ஸ்ம்ருதி, ஸூத்ரங்களைப் பரிசீலித்தால் மோக்ஷத்திலும் பேதம் உண்டென்று தெரியவரும் என்பதினால். மாயாவை மீறின மோக்ஷத்தில் மாயாமயத்வரூபமான வ்யாவஹாரிகத்வம் கூடுவதில்லை யாகையினால் பேதம் வ்யாவஹாரிகமென்று சொல்லும் தங்களுடைய வாதம் ஸரியானதல்ல. நீங்கள் சொல்லும்படி பேதம் வ்யாவஹாரிகமென்று ஒப்புக்கொண்டால் அதை விளக்கும் வேதத்திற்கு அப்ராமாண்யம் வரவேண்டியிருக்கும்.

தீ:- ப்ரத்யக்ஷ ப்ராப்தமான பேதத்தைப் போதிக்கும் ச்ருதி (துர்ப்பலம்) பலமில்லாதது.

ஸ்ரீ:- ப்ரத்யக்ஷ விரோதமான ,ஐக்யத்தைப் போதிக்கும் காரணத்தினால் ஆகமம் துர்ப்பலம்.

தீ:- ஆகமம் ப்ர்த்யக்ஷத்திற்கு விரோதமில்லாத ஐக்யபரமென்று சொல்லுவோம். காரணம். அது ப்ரபலமாகலாம்.

ஸ்ரீ:- தீக்ஷிதரே, ப்ரத்யக்ஷாப்ராப்த காலத்ரயத்தினால் மான பேத பரமானதினால் பேத வாக்யம் ப்ரபலமானது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீ:- (சற்று கோபத்துடன்) ஐக்யத்தை நிரூபிக்கும் வேதம் நிஷேதமானதாகையால் ப்ரபலமாகலாமல்லவா!

ஸ்ரீ:- ஸாவதானமாகக் கேளுங்கள் தீக்ஷிதரே! பேதத்தை நிரூபிக்கும் ஆகமம் ஐக்யத்தை நிஷேதம் செய்யும் வாக்யமானதால் அதே ப்ரபலமானதல்லவா? இதல்லாமல் நிரவகாசமான பேதவாக்யம் ஸாவகாசமான ஐக்யாகமங்களைக் காட்டிலும் ப்ரபலமானது. அதன்படியே ஸ்ரீமதாசார்யர் "அனுவ்யாக்யான"த்தில் "स्वातंत्रेच विशिष्टत्वे स्थानमत्यैक्ययोरपि । सादृश्ये चैक्यवाक् संयक् सावकाशा यथेष्टतः ॥ अवकाशोज्यिता भेदश्रुतिर्नाति बला कथं"? என்று சொல்லியுள்ளார்.

தீ:- ஸ்ரீயவர்களே, சற்று இங்கு கவனிக்க வேண்டும்! ஜீவாத்மன் அணுவாகமாட்டான். ஏனெனில், ஸர்வ சரீர வ்யாபி சுகம் துக்கம் முதலிய ப்ரத்யக்ஷம் அவனுக்கு வராமல் போயிற்று! மற்றும் மத்யம் பரிமாணம் (அளவு) உள்ளவனுமாக மாட்டான். அப்படியானால் அநித்யமாக வேண்டியிருக்கும் ! என்ற பிறகு அவனை, "விபு" என்று சொல்லவேண்டும். ஆகையால் அப்படிப்பட்ட ஜீவனில் "अहमिहास्मि" (நான் இங்கு இருக்கிறேன்) என்னும் பிரதீதியில் காணும் பரிச்சேதம் (பாகம்) இயற்கைக்கு விரோதமானதால் தத்விசிஷ்ட ஜீவன் (உபாதி ஸஹிதம்)கையால் அவனுடைய பேதம் ஔபாதிகமானதால் வ்யாவஹாரிகமானதே! இதற்குத் தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

ஸ்ரீ:- (சிரித்துக்கொண்டு) தீக்ஷித்ரே, ஜீவன் परिच्छिन्नत्व மானது. அது எப்படி ஔபாதிகமாயிற்று? ஜீவன் அணுவாகையினால் ஸங்கோச விகாஸ ரூப அவயவ்வோபேதாந்த: கரண நிமித்தக ஸம்பந்தத்தினால் சரீரவ்யாபி சுக துக்கம் முதலியவைகளான ப்ரத்யக்ஷம் பொருந்தும். ஆகையால் உமது வாதம் சரியல்ல.

தீ:- (கோபத்தினால்) அப்படியானால் "नित्यः सर्वगतःस्थाणुः" என்னும் வாக்யத்திற்கு என்ன கதி?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீ:- ஜீவராசிகள் எல்லாவிடங்களிலும் வ்யாபித்திருப்பதினால் அந்த வாக்யத்திற்கு தத்பரத்வத்தைச் சொல்லுகிறோம். அல்லது "नित्ये सर्वगते विष्णौ अणु जीवो व्यवस्थितः" என்னும் ச்ருதியை அனுசரித்து ஸர்வகதமான விஷ்ணுவினிலிருப்பதால் सर्वगतस्थனும் மற்றும் அணுவாகியிருப்பதனால் सर्वगतस्थश्चासौ अणुश्च என்னும் விக்ரஹத்தினால் இந்த அர்த்தம் வருவதால் எந்த अनुपपत्ति (யுக்திக்கு எதிராக)-வும் இருப்பதில்லை.

ஸ்ரீவிஜயீந்திரயதிவர்யரின் வாதத்தைக் கேட்டு தீக்ஷிதருக்கு எதுவும் சொல்லத் தோன்றாமல் சற்று நேரம் மௌனம் சாதித்து உட்கார்ந்திருந்தார். சபைத் தலைவர் மற்றும் பண்டிதர்குழாம் மூச்சுகூட விடாமல் இனி என்ன ஆகுமோ என்று ஆர்வத்துடன் காதுகளை நிமிர்த்தி உட்கார்ந்திருக்கின்றனர். தீக்ஷிதர் ஒருமுறை சுற்றிலும் பார்த்து நிலைமையை அறிந்து உடனே சமாளித்துக் கொண்டு அஸமாதானம் மற்றும் பிடிவாதத்துடன் மறுபடியும் வர்தம் செய்ய ஆரம்பித்தார்.

தீ:- ஸ்ரீகளவரே, ஆகட்டும், என்னை ஜயித்துவிட்டேன் என்று நினைக்க வேண்டாம். எனது இந்த வாதத்தைச் சற்றுக் கவனியுங்கள், "यथाह्ययं ज्योतिरात्मा विवस्वान्नापोभिन्ना बहुधैकोनु गच्छन् । उपाधिना क्रियते भेदरूपो, कार्योपाधिरयंजीवो कारणोपाधिरीश्वरः । कार्य कारणता भिन्नो पूर्णबोधोऽवशिष्यते" முதலிய ச்ருதிகளிருப்பதினால் அவைகளினால் பேதம் ஔபாதிகமென்று ஸித்திக்கின்றது.

ஸ்ரீ:- (புன்னகையுடன்) தீக்ஷிதரே, உமது இந்த வாதம் மிகப்பழையது! முன்னமே இதற்கு நாம் பதில் சொல்லியுள்ளோம், அவஸரத்தில் தீக்ஷிதர் மறந்திருக்கலாம். இருக்கட்டும். "சர்வித சர்வண"மாயினும் உமது மனதின் திருப்திக்காக மறுபடியும் பதில் கூறுகிறோம். கேளுங்கள்— "यथाह्ययं" என்னும் ச்ருதியினால் ஸித்தி ஆகுவது என்ன, இது ப்ரம்மனில் ஸ்வதந்த்ராபேதம் ஔபாதிகமென்று நிருபிக்கிறது. ஆகையினால்தான் பரம முக்யவ்ருத்தியினால் ப்ரப்ரம்மனை நிருபிக்கும் "देव

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


आत्म'' முதலான சொற்கள் அங்கு சொல்லப்பட்டுள்ளன. "कार्यो पाधिरयं जीवः" என்னும் வாக்யத்திற்கு ஜீவபாவ "अविद्याकार्य अंतः करणो पाधिक, ईश्वर" பாவம் கார்ண ரூப अविद्योपाधिक முதலிய அர்த்த பரத்வம் கொடுப்பதில்லை. அனாதியான ஜீவபாவத்திற்கு सादियான अंतः करणो पाधिकत्वம் பொருந்தாது. மற்றும் अंतःकरण सूक्ष्मावस्थाவும் அவித்யாரூபம்தானா? அல்லது வேறா? (भिन्न) ஜீவ-ஈசருக்கு ஏகோபாதிகத்வம் வருவதனால் பேதம் கூடாமற்போயிற்று காரணம் முதலாவது பக்ஷம் சரியில்லை; இரண்டாவது பக்ஷம் யுக்தமல்ல. (கூடுவதில்லை) ஏனென்றால் "षडस्माकमनादयः" என்னும் உமது ப்ராசீன ஆசார்யஸ்யரின் உக்திக்கு விரோதம் வருகின்றது.. ஆகையால் பேதம் வ்யாவஹாரிக மென்று நீங்கள் சொல்லும் மதம் யுக்தியுக்தமல்ல.

தீ:- (கிண்டலாக) இல்லை ஸ்வாமி, வ்யாவஹாரிக பேதத்தை ஒப்புக் கொள்வதனால் உங்களுடைய சொத்து நஷ்டமாய்விடுமா என்ன?

ஸ்ரீ:- (சிரித்துக்கொண்டு) எமது சொத்திற்கு எந்த நஷ்டமும் இல்லை தீக்ஷிதரே. இல்லாத விஷயத்தை எப்படி ஒப்புவ்து? தீக்ஷிதரே, இங்கு கேளும், ப்ரத்யக்ஷம் அனுமானம், ஆகமம் முதலியவைகளினால் சித்தமான (நிர்ணயிக்கப்பட்ட) பேதபாரமார்த்திகத்துவத்தை ஒப்புக் கொள்ளுவதினால் உமது சொத்து எதுவும் போவதில்லையே! ஒப்புக் கொள்வதனால் உமக்கு உண்டாகும் நஷ்டமென்ன? இது மாத்திரமல்லு. அவ்வாறு செய்வதினால் தாங்கள், "ஸத்யவாதி" என்றும் ப்ராமாணிகரென்றும் பெயர் பெறுவீர்கள்!

தீ:- (அட்டகாசத்துடன்) ஒஹோ! இதென்ன? ஸ்ரீயவர்கள் மெதுவாக என்னை பேதவாதியாக்க முயற்சிக்கிறீர் போலிருக்கிறீரே! ஸ்ரீபாதங்களவரே, தாங்கள் சொன்னதை ஒப்பமாட்டேன். ஏனெனில், மோக்ஷத்தில் பேதமிருப்பதினால் பேதம் வ்யாவஹாரிகமாகாது என்னும் வாதம் சரியல்ல. "विभेदजनके ज्ञाने नाशमात्यंतिके गते । आत्मनो ब्रह्मणो भेदमसंतंकः करिष्यति आविभुक्तेस्तु भेदस्याज्जीवस्य च परस्य च ॥ ततःपरं न

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

भेदोऽस्ति भेद हेतोरभावतः" முதலான வாக்யங்கள் முக்தியில் பேதத்தை நிராகரிக்கின்றன. ஸ்ரீகளவரே, இதற்கு உமது பதிலென்ன?

ஸ்ரீகளவர் ஒருமுறை கண்ணை மூடினார். அவதாரத்ரயரான ஸ்ரீ ஸ்ரீமதாசார்யர், ஸ்ரீடீகாராயர், ஸ்ரீசந்திரிகாசார்யர்கள் மந்தஹாஸத்துடன் அபய ப்ரதானம் கொடுப்பதைப் போல் ஸ்ரீயவர்களுக்குத் தெரிந்தது. ஸ்ரீயவர்களின் முகத்தில் ஒரு ஒளிவீசிற்று. முகம் மலர்ந்தது. முகத்தில் சாந்தமான ஸாத்வீக ப்ரகாசம் காணப்பட்டது. பக்தியினால் இதயம் நிறைந்தது. உடனே கண் திறந்து புன்னகை செய்தார். இமை கொட்டாமல் ஜனங்களெல்லோரும் ஸ்ரீ பாதங்களையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர் முகத்தினின் வாக்ப்ரவாஹம் நழுவி வெளிவந்தது கம்பீரமாக.

ஸ்ரீ:- தீக்ஷிதரே, நாம் இப்பொழுது சொல்லுவதைப் பொறுமையான சித்தத்துடன் கவனியுங்கள். தாங்கள் சொன்ன வாக்யங்கள் தங்களுக்கென்னமோ சகாயம் செய்யப்போவதில்லை. அதன் அர்த்த விளக்கம் செய்கிறோம், கேளுங்கள் - "विभेद-भेद விரோதி, (अभेद), तज्जनकें ज्ञाने अत्यंतिकं नाशंगते सति, आत्मनः = ब्रह्मणः, असंतं = अभेदं कः करिष्यति?" அதாவது - பேத விரோதியான அபேதத்தை உண்டாக்கும் ஞானம் அத்யந்திகமாய் நாசம் அடையும்பொழுது ஜீவன் மற்றும் பரமாத்மா இருவர்களுக்கும் இல்லாமலிருக்கும் அபேதத்தை யார் உண்டாக்குகிறார்கள்? இது நீங்கள் உதாரணமாகச் சொன்ன ச்ருதியின் தாத்பர்யம். மற்றும் "आयुक्तेः भेदएव स्यात्" என்னும் வாக்கியத்தில் சொல்லப்பட்ட பேதம் என்ற பதம் ஸ்வரூபபேதபரமானதல்ல. அது புத்திபேதபரமானது ததஸ்ச யுக்தி பர்யந்தமாய் ஜீவேச்வரருக்கு விருத்த விஷயகமதியானது, முக்தியான பிறகு ராகத்வேஷாதிகளில்லாதிருப்பதினால் ஜீவன் வ்யாவஹாரிகமென்று நிருபணமாகாது. மற்றும் பேதத்திற்கு பாதக बाधक முண்டென்றால் பேதமே அஸத்தானதால் அதற்கு औपाधिकत्वम் சொன்னது சரியல்ல. बाध மில்லையென்றால் सद्वैत मत பங்கம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வருகிறது. ஆகையினால் பேதம் வ்யாவஹாரிகம் என்று சொல்வது உசிதமல்ல. "व्यावहारिक तोक्तिस्तुस्वर्थति पदमंजरीं । बाधश्चेदस्ति तदर्थर्थोतास्ति तैवेतिकिं तया । बाधश्चेनास्ति तेशास्त्रं नास्ति त्यैवेति किंतया ।" என்று अभियुक्त (ப்ரதிவாதம்) வசனமிருப்பதினால் உமது வாதம் முன்னால் சொல்லப்பட்ட தோஷங்களுடன் கூடியவைகளாதலாலும், பேதம் வ்யாவஹாரிகமென்றும் பக்ஷம் அஸாதமானதால் பேதம் பாரமார்த்திகம்தான் என்று ஸித்திப்பதினால் ஜகன் மித்யாத்வத்தை, ஜீவ ஈச்வரனுக்கு ஐக்யத்தைச் சொல்லும் உமது இந்த வாதம் மிகமிக துர்பலமும், ப்ரமாணத்திற்கு விரோதமானதும் ஸுத்ரகாரரின் அபிப்ராயத்திற்குமாறானது என்பது நிருபணமாகிறது.

இவ்வாறு தங்குதடையின்றி ஸகல ப்ரமாணங்களுடன் உதாரணம் கொடுத்து அதிகார வாணியினால் மிக்க சாதுர்யமாக வாதித்து ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரின் எல்லா கோடிகளுக்கும் பதில் சொல்லி தமது மதத்தை ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த குருவர்யர் விளையாட்டாகவே ஸ்தாபிக்கவே, தீக்ஷிதர் எதுவும் சொல்லத் தோன்றாமல் மறுபடியும் மறுபடியும் தமது குருவான ஸ்ரீந்ருஸிம்ஹாச்ரம முனிப்ரகிதை, "भेद धिक्कार"மற்றும் தான் இயற்றிய "मध्वमत मुखमर्दन, शिवतत्वविवेक" "शिवकर्णामृत" முதலான கிரந்தங்களின் வாதத்தையே சொல்ல முயற்சித்த பொழுது ஸ்ரீயவர்கள் புன்னகையுடன் அவைகள் யாவையும் முன்பே கண்டனம் செய்யப்பட்டவை என்பதைத் தமது "पर तत्व प्रकाशिका" "श्रुति तात्पर्य कौमुदी" "श्रुत्यर्थसार" "भेदविद्या विलास," "वाग्वैखरी," "तत्वमाणिक्यपेटी" "अद्वैत शिक्षा" முதலிய க்ரந்த ரத்னங்களின் வாக்யங்களை உதாரணம் கொடுத்து அனிதர ஸாதாரண வாக் சைலியினால் ஸ்ரீதீக்ஷிதரின் ஸமஸ்த வாதங்களை நிராகரித்து த்வைத தத்வத்தின் மஹத்வத்தை உயர்த்தி தமது வாதத்தை வெற்றிகரமாகி முடித்தார்.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் ஸ்ரீயவர்களின் வித்யா திறமை, வாதத்திறமை, உதார குணம் முதலியவைகளைக் கண்டு மகிழ்ச்சியுடன் எழுந்து நின்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீயவர்களுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "மஹாஸ்வாமி, நமது மதமென்னவோ மிகப்பெருமையுள்ளது. ஆனால் எனது புத்தி அற்பமானதினால் தங்கள் வாதத்திற்கு தற்சமயமென்னமோ உத்தரம் கொடுக்க முடியாமலுள்ளது. தங்களைப் போன்ற நிகரற்ற லோகப்ரஸித்தமான வாதமல்லருடன் இத்தனை நாட்களாவது போட்டியிட்டேனல்லவா என்று மனதிற்கு திருப்தி! அதுவே போதும். எப்படியிருந்தாலும் தாங்கள் பரமஹம்ஸ ஆச்ரமத்தவர், பூஜ்யரே இதோ ஒரு நமஸ்காரம் செய்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்", என்று சொல்லி சிரித்துக் கொண்டே நமஸ்கரித்தார்.

சபைத்தலைவர் ஸ்ரீயவர்களே விஜயசாலியானார் என்று கோஷித்த உடனே சபையோரின் ஆரவாரம் எல்லையை மீறியது, "அஜேய விஜேந்திரருக்கு ஜயமாகட்டும்! த்வைத சித்தாந்த ஸ்தாபகருக்கு ஜயமாகட்டும்!! ஸ்ரீமத்வ சிம்மாஸனாத்யக்ஷருக்கு ஜயமாகட்டும்" என்று ஜயகோஷம் வானைப் பிளந்தது. ஸ்ரீயவர்களின் விஜயத்தினால் பண்டிதர்களுக்கும் கும்பகோண வாஸிகளுக்கும் ஆனந்தம் பொங்கிற்று.

ஸ்ரீபாதங்களவர் தீக்ஷிதரைக் கைபிடித்து மெதுவாக எழுப்பி, "தீக்ஷிதரே, தம்மைப்போன்ற அஸாதாரண பண்டிதரை நாம் இதுவரைக் கண்டதில்லை. உமது பாண்டித்யம், திறமைகளைக் கண்டு நமக்கு மிக்க மகிழ்ச்சி. தாங்கள் மதி துர்பலம் என்று சொன்னது சரியல்ல. ஸ்ரீவித்யாரண்யரைப் போல் ஜகத் பிரஸித்த பாண்டித்யம் உம்முடையது! ஆனால், உமது மதத்தின் துர்பலத்தினால் நீங்கள் நிருத்தரராக வேண்டியதாயிற்று! உம்மைப்போன்ற உதாரமான வித்வன்மணியுடன் வாதம் செய்வது நமக்கு மிகமிக ஆனந்தத்தை அளிப்பது! என்று சொல்லியருளி தீக்ஷிதருக்கு ஜதை சால்வை போர்த்தி முத்து மாலை முதலானவைகளை அணிவித்து கௌரவித்தார். சபையோர் ஸ்ரீபாதங்களவரின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இந்தப் பெருந்தன்மை மற்றும் உதாரகுணம், வித்யா பாரபக்ஷமின்மையைப் பார்த்து ஸ்ரீயவர்களைப் பெரிதும் பாராட்டினார்கள்.

ஸ்ரீபாதங்களவர் புன்முறுவலுடன் தமாஷாக, "என்ன தீக்ஷிதரே, நம்முடன் மோத வேண்டும் என்று ஆசையாக உள்ளது, புதுப்புது பிகு (பிடிவாதங்களை)க் காண்பிக்க மனத்தில் வந்துள்ளது," என்று வாத ஆரம்பத்தில் நீங்கள் சொன்னது நினைவுள்ளதா? இப்பொழுது உமக்குத் திருப்திதானே? என்றதும், தீக்ஷிதர் சிரித்துக்கொண்டே, "ஸ்ரீபாதங்களின் ஞாபக சக்தி அஸாதாரணமானது! மோதலில் தோற்றாலும் மேலெழுப்பின இந்தத் தமது தாராள மனப்பான்மைக்கு எனது நன்றிகள்! என்று சொல்லி சபையோரைப் பார்த்து, ''சபைத்தலைவரே, ஸ்ரீவிஜயீந்திர. தீர்த்தரைப் போன்ற மஹாத்மரைக் கும்பகோணத்தில் நிலைநிறுத்திக் கொண்டுள்ள நீங்களே பாக்யவான்கள். புண்யசாலிகள்! இவரென்ன ஸாமான்யரா என்ன ஜகத்தினில் என்னுடன் வாதம் செய்யவல்ல ஸரியான பண்டிதரே இல்லையென்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்த எனது கர்வத்தை இவர் எளிதாகப் பரிகாரம் செய்து விட்டார்! பாருங்கள், "पुनरवतीर्ण एष पूर्णधीः" த்வைத மதத்தை ஸ்தாபித்த அந்த ஸ்ரீமதாசார்யரே இவர் ரூபமாக மறுபடியும் அவதரித்திருக்க வேண்டும்! இல்லாவிட்டால் இந்தப் பாண்டித்யம், திறமை, சாதுர்யம், யாருக்கு முடியும்? என்று சொல்லி ஸ்ரீயவர்களைப் பாராட்டவும் மகிழ்ச்சியினால் சபையோர் ஜயகோஷம் செய்தனர்.

ஸ்ரீயவர்கள் கம்பீரமாக, "தீக்ஷிதர் அப்படிச் சொன்னது அவருடைய ஸௌஜன்யம் மற்றும் நம்மிடத்தில் வைத்துள்ள அன்பைக்காட்டுகிறது. நாமெங்கே, ஸ்ரீமதாசார்யரெங்கே? அவருடைய தாஸரின் தாஸன் நாம். மஹாத்மாக்களைச் சமமாகச் சொல்வது மஹாபாபம். மஹா அபராதம் என்று சொல்லி தீக்ஷிதரைப் பார்த்துத் தமாஷாக, "தீக்ஷிதரே,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அவ்வாறு சொல்லி மெதுவாக நம்மை அத்வைதியாகச் செய்ய வேண்டுமென்று சொன்னீரா என்ன?'' என்றார். ஸ்ரீயவரின் பேச்சின் உட்கருத்தையறிந்த தீக்ஷிதர் சிரித்து," அப்படியல்ல, ஸ்வாமி, நானென்னமோ ஆசார்யரே நீங்களென்று சொல்லவில்லையே! அந்த ஸ்ரீமதாசார்யரே மறுபடியும் அவதரித்துள்ளார்" என்று சொன்னேன் அவ்வளவுதான். இங்கே பாருங்கள் எங்களில் சிலருக்கு ஸ்ரீசங்கர பகவத்பாதரே தாங்கள், ஸ்ரீவித்யாரண்யரே தாங்கள் என்றால் உடல் பூரித்துப்போகும். அவ்வாறே தங்களையும், "அபிநவ ஆசார்யர், அபிநவ டீகாக்ருத்பாதர், அபிநவ சந்திரிகாசார்யர்" என்றால் தங்கள் உடல் பூரிக்குமோ பார்க்கலாமென்று பரிக்ஷித்தேன், "दासोऽहं" என்று தாங்கள் சொன்னதால் இதிலும் நான் நிருத்தரனாக வேண்டியதாயிற்று! இருக்கட்டும். என்மீது முழு அன்பிருக்க வேண்டும்'' என்று சொல்லி மற்றொருமுறை ஸ்ரீயவர்களுக்கு நமஸ்கரிக்கவும் ஸ்ரீயவர்கள் தீக்ஷிதரைக் கௌரவித்து ''அபிமானத்திற்கென்ன தீக்ஷிதரே, எப்படி இருந்தாலும் நீங்கள் இன்னும் கும்பகோணத்தில் நிலைத்திருக்கப் போகிறீர்கள். ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டிருப்போமல்லவா?" என்றார். தீக்ஷிதர் ஆனந்தமும் ஆச்சரியமும் அடைந்து "ஸ்ரீயவர்கள் என்னை மாத்திரமல்ல; என் மனதையும் ஜயித்துவிட்டீரே! என் மனதின் அபிப்ராயத்தைத் தாம் அறிந்தது ஆச்சரியம்! ஓஹோ! 64 கலை வல்லுநராயிற்றே தாங்கள். மறந்துவிட்டேன், மன்னிக்க வேண்டும் (சிரித்து) இனி சிவபூஜைக்கு நேரமாயிற்று உத்தரவானால் போய் வருகிறேன்" என்று சொல்லவும். ஸ்ரீயவர்கள் சிரித்துக் கொண்டே. ''ஸ்ரீமூலராமனின் தீபாராதனைக்கும் எமக்கும் நேரமாயிற்று. போய் வாருங்கள் தீக்ஷிதரே, உமக்கு மங்களமுண்டாகட்டும்'' என்று விடைகொடுத்து ஜனங்களின் ஜயகோஷத்திற்கு இடையே ஸ்ரீபாதர். மடத்திற்கு எழுந்தருளினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


## 50. ஸர்ப்பத்துடன் சரஸம்!

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் ஸதீர்த்தரான ஸ்ரீவாதிராஜ தீர்த்தரின் மடத்தின் பண்டிதரான ஸ்ரீஹயக்ரீவாசார்யர் காசி யாத்திரை முடித்துக் கொண்டு உடுப்பி மார்க்கமாகக் கும்பகோணத்திற்கு வந்து ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் தரிசனம் செய்யும் விருப்பத்துடன் ஸ்ரீமடத்திற்குப் போய்க் கொண்டிருக்கும்பொழுது தமது பழைய மித்திரரான ஸ்ரீலக்ஷ்மி நாராயணாசார்யரைக் கண்டு ஆனந்தத்துடன் பேசினார்.

ஹய:- ஓஹோ! என்ன இது லக்ஷ்மி நாராயணாசார்யரே! அவஸரத்தில் எங்கு புறப்பட்டிருக்கிறீர்?

லக்ஷ்மீ:- (ஹயக்ரீவாசார்யரைப் பார்த்து ஸந்தோஷத்துடன்) இது எப்பேர்ப்பட்ட வாய்ப்பு! ஹயக்ரீவாசார்யரே, தங்கள் தரிசனமாகாமல் வெகு நாட்களாய்விட்டன. இதென்ன இங்கு திடீரென்று வருகை?

ஹய:- (பரஸ்பரம் க்ஷேமலாபங்கள் விசாரித்த பிறகு) காசியாத்திரைக்குப் போயிருந்தேன். ஊருக்குப் போகுமுன் விஜயீந்திரரின் தரிசனம் செய்து கொண்டு போகலாமென்று வந்திருக்கிறேன். அதிருக்கட்டும், இதென்ன இவ்வளவு ஜனங்கள் மிக அவஸரமாக ஓடிக்கொண்டிருக்கின்றனர்? ஸ்ரீகளவருக்கும் அப்பய்ய தீக்ஷிதருக்கும் வாதம் நடைபெறுகிறதென்று கேள்விப்பட்டேன். இன்னும் வாதம் தொடருகிறதா என்ன?

லக்ஷ்மீ:- (ஆச்சரியத்துடன்) உமக்குத் தெரியாதா? ஸ்ரீயவர்கள் தீக்ஷிதரை ஜயித்து இப்பொழுது ஒருமாதமாயிற்று!

ஹய:- (மகிழ்ச்சியுடன்) ஆனந்தம்! எப்படிப்பட்ட சுபசெய்தி! அப்படியானால் அஜ்ஜயரென்னும் ஸ்ரீயவர்களின் விருது

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நிலைத்துவிட்டதாயிற்று! தயவு செய்து அந்த விஷயத்தைச் சற்று விவரியுங்களேன்.

லக்ஷ்மீ:- (வாதவிவாதம் மற்றும் விஜயீந்திரரின் விஜயம் முதலிய விஷயங்களை ஆதியோடந்தமாகத் தெரிவித்து) ஜகத் ப்ரஸித்தரான ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதேந்திரரை விஜயீந்திரர் ஜயித்த அன்று அதென்ன வைபவம்! எப்படிப்பட்ட வெற்றி விழா நடந்ததென்று தெரியுமா? தஞ்சாவூரின் மஹாராஜா ஸ்ரீயவர்களின் பக்தரென்னும் விஷயம் உமக்குத் தெரிந்தே உள்ளது. ஸ்ரீயவர்களின் திக்விஜயத்தைக் கேட்டு மஹாராஜா ஸ்வயம் கும்பகோணத்திற்கு வந்து வெற்றிவிழா ஏற்பாடு செய்தார். ஸ்ரீரங்கத்தில் தபோநிரதராயுள்ள மூத்த ஸ்ரீபாதங்களான ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் ப்ரிய சிஷ்யரின் இந்த திக்விஜயத்தைக் கேட்டு ஆனந்தித்து ஆசீர்வாத ஸ்ரீமுகம் அனுப்பியிருந்தார். அன்று அது எப்படிப்பட்ட ஊர்வலம், எவ்வளவு ஜனங்கள், அப்பப்பா! அது இன்னும் கண்ணுக்கு முன் நடப்பது போலிருக்கிறது. ஸ்ரீயவர்களுக்கு அபூர்வ காணிக்கைகளை அர்ப்பித்து மஹாராஜர் ஸ்ரீயவர்களைக் கௌரவித்தார்.

ஹய:- (மகிழ்ச்சி மிகுதியுடன்) ஸ்ரீசந்திரிகாசார்யரின் பட்டத்தின் சிஷ்யரல்லவா? மஹானுபாவர். இங்கு ஸ்ரீவிஜயீந்திரர் அங்கு ஸ்ரீசந்திரிகாராயரின் இன்னொரு சிஷ்யரான நம்ம ஸ்ரீவாதிராஜர். இந்த மஹானுபாவர்கள் இல்லாதிருந்தால் மாத்வர்களான நமது கதி என்னவாயிருந்திருக்குமோ அந்த உடுப்பி ஸ்ரீகிருஷ்ணனே அறிவான்! உம். பிறகு?

லக்ஷ்மீ:- அஸாதாரண வாதமல்லரான ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரை ஜயித்ததினால் ஸ்ரீமத்வமதம் ஸர்வமார்க்கம் எளிதாயிற்று. அதென்னமோ

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


உண்மை. ஆனால், இந்த திக்விஜயத்தின் வெற்றி கீர்த்தி ஒளியானது தேசம் முழுவதிலும் பரவியிருந்ததினால் ஸ்ரீயவர்களுக்கு ஓய்வு என்பதே இல்லாமல் போயிற்று.

ஹய:- அதேன் அப்படி?

லக்ஷ்மீ:- இல்லை ஸ்வாமி. தீக்ஷிதரை ஜயித்தாரென்ற பிறகு தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸா முதலிய ஆஸ்திக புத்திக் கூர்மையுள்ள பண்டிதர்கள் லலிதகலை முதலிய வெவ்வேறு கலைஞர்கள் ஸ்ரீய்வர்களைப் பரீக்ஷை செய்ய, அவரை ஜயிக்க தேசாந்த்ரங்களிலிருந்து ஒவ்வொரு நாளும் வந்த வண்ணம் இருக்கின்றனர். அப்படி இருக்கையில் ஓய்வு ஏது?

ஹய:- (ஆர்வத்துடன்) அப்படியானால் ஸ்ரீயவர்கள் எல்லோருடனும் போட்டியிட்டாரா என்ன?

லக்ஷ்மீ:- என்ன சொல்வது அந்த அதிசயத்தை? ஸ்ரீயவர்கள் எல்லோரையும் விளையாட்டாகவே ஜயித்துவிட்டார்! ஸ்ரீய்வர்களின் வித்தைக்கு எதிரில் நிற்க முடியுமா இவர்கள்? இப்பொழுது ஒரு மாதமாக இதே நடந்து கொண்டிருக்கிறது ஸ்வாமி. பாருங்கள் ஜனங்கள் அவசர அவசரமாக ஓடிக்கொண்டிருக்கின்றார்களென்பதை நீங்கள் கேட்டீர்களல்லவா? இன்று ஸ்ரீயவர்களுக்கு பாம்புப்பிடாரன் ஒருவன் சவால் விட்டிருக்கிறான். அதற்குத்தான் இவ்வளவு கடுபிடி! தெரிகிறதா ஸ்வாமி.

ஹ1:- (ஆச்சரியத்துடன்) என்ன? பாம்பாட்டியுடன் போட்டியா?

லக்ஷ்மீ:- அதேன் அவ்வளவு ஆச்சரியப்படுகிறீர்? சதுஷ் ஷஷ்டி கலைகளில் (64 கலைகளில்) பலவித வித்தைகளில் யார் வேண்டு மானாலும் வந்து போட்டியிடலாம் என்று

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீயவர்கள் சவால் விட்டிருந்தாரல்லவா? பாம்புடன் விளையாடுவது ஒரு கலையல்லவா? அதனால் அந்த வித்தையில் நிபுணனென்று இவன் போட்டியிட ஆந்திரதேசத்திலிருந்து வந்திருக்கிறான். தான் சாமானிய பாம்பாட்டியல்ல; என்றும், தன்னை இதுவரை இந்தவித்தையில் ஜயித்தவர் ஒருவரும் இல்லை என்றும் சொல்லிக்கொள்ளுகிறான். வாருங்கள், ஸ்ரீயவர்களின் புதிய கலைத்திறனை நாம் காணலாம்!

பண்டிதரிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டு ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி கோவிலின் முற்றத்தை நோக்கி வந்தனர். அப்பொழுதே ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடியுள்ளனர். அட்டைக் கருப்பு நிறமுள்ள, கிருதாமீசையுடன் பார்ப்பதற்கு அவன் பயங்கரமான தோற்றமுடையவனாக இருந்தான். அவன் ஒரு முரடன். மார்தட்டிக் கொண்டு தன் கூட்டாளிகளுடன் நின்றிருந்தான். அநேக பாம்புப் பெட்டிகளை வரிசையாக வைத்துள்ளான். தனது பராக்ரமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறான். ஜனங்கள் ஆர்வத்துடன் ஸ்ரீயவர்களின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு தங்களுக்குத் தோன்றினவாறு பேசிக்கொண்டிருக்கின்றனர்.

நான்கைந்து சிஷ்யர்களுடன் ஸ்ரீவிஜயீந்திரரின் வாஹனம் வந்து சேர்ந்தது. ஜனங்களெல்லோரும் ஸ்ரீயவருக்கு ஜயகோஷம் எழுப்பினர். மிகக்கம்பீரமான முகபாவத்துடன் காணப்படும் ஸ்ரீயவர்களின் ஒளிவீசும் உருவத்தைச் சற்று நேரம் இமை கொட்டாமல் பார்த்து பாம்பாட்டி முன்னால் வந்து ஸ்ரீயவருக்கு வணங்கி அட்டகாசமாக மார்தட்டி சிரித்துக் கொண்டு, "ஸ்வாமி, நமஸ்காரம், 64 கலைகளில் தாம் ப்ரவீணரோ? தாங்கள் என்னை என்னுடைய வித்தையில் ஜயிக்க முடியுமா? தாங்கள் ஸந்நியாஸி, நான் அல்ல. ஆயினும் எனது வித்தையில் எனக்கு நிகர் யாருமில்லை. தம்முடன் போட்டியிடுவதற்கு நான் லாயக்கில்லாதவனாயிருக்கலாம். ஆனால் தாங்கள் சவால் விட்டிருப்பதினால் நான் வந்திருக்கிறேன். என்னைத் தாங்கள் ஜயிக்கமாட்டீர்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தயவு செய்து உமது சவாலை வாபஸ் வாங்கிக்கொண்டால் நான் புறப்பட்டுப் போய்விடுகிறேன்'' என்ன சொல்லுகிறீர்கள்? என்று கேட்டான்.

ஸ்ரீவிஜயீந்திரர் புன்னகையுடன், "ஐயா, வெறும் பேச்சினால் ப்ரயோஜனமென்ன? உனது வித்தையைக் காண்பி!'' என்று சொன்ன உடனே கோபத்துடன் பாம்பாட்டி முறைத்துப்பார்த்து, "ஓஹோ! அப்படியா? என்னவோ ப்ராம்மணன், மேலும் ஸந்நியாஸிகளாயிற்றே! உமக்கு என்னால் அபாயம் வரக்கூடாதே என்று சொன்னால் மிக்க கர்வங்கொள்ளுகிறீரே! பாம்புடன் விளையாடுவது என்றால் வேதாந்த சர்ச்சை என்று எண்ணுகிறார், என்ன? என்னிடமுள்ள சர்ப்பங்களைப் பிடியில் வைத்துக்கொள்ள வேண்டுமானால் (வசப்படுத்த வேண்டுமானால்) அபாரத்துணிவு வேண்டும் ஸ்வாமி, இதோ பாருங்கள் நமது நாகராஜனை, நான் ஆட்டி வைக்கிறேன். என்னைப்போலவே தாங்களும் ஆட்டிவைக்க வேண்டும். இது என்னுடைய முதல் சவால்", என்று சொல்லி ஒரு பெட்டியிலிருந்த ஒரு பாம்பை வெளியே விட்டு மகுடியை ஊத ஆரம்பித்தான். பாம்பு மகுடியின் ஓசைக்குத் தகுந்தபடி ஆட ஆரம்பித்தது. சற்று நேரமானபிறகு மகுடியை விஜயீந்திரர் முன் வைத்து கர்வத்துடன், ''உம், ஆகட்டும் தமது கலையைக் காண்பியுங்கள்", என்று சொன்னான்.

ஸ்ரீயவர்கள் ஒருமுறை சிரித்து தமது சிஷ்யனைப் பார்த்தார். ஸ்ரீயவர்களின் இங்கிதத்தையறிந்து அவன்தான் கொண்டு வந்திருந்த குழலை ஸ்ரீயவருக்குக் கொடுத்துவிட்டு நின்றான். அவர் குழலைப்பிடித்ததைப் பார்த்து பாம்பாட்டி கலகலவென்று சிரித்துக் கொண்டு கேலியாக, ''இதென்ன ஸ்வாமி, குழலைப் பிடித்திருக்கிறீர்கள்? இதென்ன சங்கீத சபையென்று நினைத்தீரா என்ன? இது பாம்பு விளையாட்டு ஸ்வாமி! பாம்பு விளையாட்டு! பாம்பை ஆட்டி வைப்பதற்கு வேண்டியது மகுடி! புல்லாங்குழல் அல்ல! என்று சொல்லவும் ஸ்ரீயவர்கள் புன்னகை செய்து, "உண்மை, உன்னைப் போன்ற ஸாதாரண காளிங்கக்ரீடகனுக்கு (பாம்பாட்டிக்கு) வேண்டியது மகுடி, ஆனால் காளிங்க மர்த்தகனின் புத்ரரான நமக்கு வேண்டியது முரளி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmiacademy

(புல்லாங்குழல்)" என்று சொல்லவும் கோபத்துடன் அவன், "இவ்வளவு கர்வமா? வெறும் பேச்சினாலென்ன ப்ரயோஜனம்? நடக்கட்டும் உமது விளையாட்டு" என்று பரிகசிக்கவும் ஜனங்களெல்லோரும் மேலே என்ன நடக்குமோ என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீயவர்கள் முரளி வாசிக்க ஆரம்பித்தார். ஆஹா! கவர்ச்சிகரமான நாதம் முரளியிலிருந்து புறப்பட்டு வருகிறது. ஸர்ப்பம் வேணுநாதத்திற்கு வசீகரமாகி விசித்திரமான முறையில் ஆடுகிறது. கால்மணி நேரம் கழிந்தது, அரைமணி நேரமாயிற்று. ஸ்ரீயவர்கள் முரளிவாதனத்தை நிறுத்திவிட்டு "இனிமேல் என்ன" என்றார். ஜனங்கள் ஸ்ரீயவர்களின் புதிய கலைத் திறனைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பாம்பாட்டி பார்த்தான் ஸ்ரீயவர்களின் திறமையை இவர் ஸாமான்யரல்லர் என்றறிந்து கொண்டு மறுபடியும் பரீக்ஷிக்கத் தயாராகி, "ஒரு சாமான்ய சர்ப்பத்தை ஆட்டிவைத்ததினால் என்னை ஜயித்துவிட்டதாக நினைக்க வேண்டாம். இதோ இப்பொழுது நான் விடும் பாம்பு மிகக் கொடூரமானது. இதைப்போல் என்னிடம் அநேக சர்ப்பங்கள் உள்ளன . என்னிடம் ஒவ்வொரு ஸர்ப்பமும் ஒவ்வொருவிதமான ஓசைக்கு (நாதத்திற்கு மாத்திரம்) ஆடும். அகஸ்மாத்தாக வேறு விதம் நாதம் செய்தால் உடனே அவர் கதி முடிந்ததுதான். இந்த சர்ப்பங்கள் அநேக வருஷங்களாக எனது பயிற்சியினால் தயாரானவை. இவைகளை ஆடவைப்பதற்குத் தயாராக இருக்கிறீர்களா? என்று கர்வத்துடன் கேட்டான். ஸ்ரீயவர்கள் "ஐயா, நீ மிக்க கர்வத்துடன் பேசுகிறாய். இங்கு கேள். நீ ஒவ்வொருமுறை ஒவ்வொரு பாம்பை அதற்கு வேண்டிய நாத வாதனத்தினால் ஆட்டி வைக்கும் திறமையுள்ளவனாகத் தோன்றுகிறது. இது என்ன மஹா பெரிய காரியமல்ல; இதில் சொல்லிக்கொள்ள வேண்டிய அப்படிப்பட்ட திறமை எதுவுமில்லை! நமது கலையைக் காண்பிக்க நாம் தயாராக உள்ளோம். கேள், நீ மஹா கொடூரமானவை களென்னும் சர்ப்பங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக மொத்தமாக விடு. நாம் அவைகளையெல்லாவற்றையும் ஒரே சமயத்தில் ஆடச்செய்கிறோம். உம் தாமதமென்ன? விடு, பார்க்கலாம்! என்று உத்தரவிட்டார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஜனங்களும் பாம்பாட்டியும் ஸ்ரீயவர்களின் வசனங்களைக் கேட்டு ப்ரமித்தனர். பாம்பாட்டி இவ்வாறு கூறினான், "ஸ்வாமி சிறுபிள்ளைத்தனம் செய்யாதீர்கள், இவை அதிதுஷ்ட சர்ப்பங்கள். நான் வேறுவேறு நாதம் செய்துதான் அவைகளைத் தயாரித்திருக்கிறேன். தாங்கள் அவைகளெல்லாவற்றையும் விடும்படி சொல்லுகிறீர்களே? இப்பொழுதாவது தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள், அநியாயமாகக் கெட்டுப்போகாதீர்கள்" என்று சொல்லவும் ஸ்ரீயவர்கள், "என்னைக் காப்பாற்றும் பொறுப்பு ஸ்ரீஹரியைச் சேர்ந்தது, அதற்காக நீ ஏன் கவலைப்படவேண்டும்? விடு, உனது சர்ப்பங்களை" என்று சொல்லவும் பாம்பாட்டி, "அப்படியா, சரி உமது விருப்பம். பிறகு நான் எச்சரிக்கை செய்யவில்லையென்று தூஷிக்க வேண்டாம்" என்று சுமார் ஏழெட்டு சர்ப்பங்களை வெளியில் எடுத்துவிட்டான். பார்க்கப் பயங்கரமான மிகப்பெரிய அந்த ஸர்ப்பங்களைக் கண்டு ஜனங்கள் பயந்து மூச்சுக்கூட விடாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீயவர்கள் முரளியைக் கையில் பிடித்து நாகஸ்வரத்தை வாசிக்க ஆரம்பித்தார். விதவிதமான அதி இனிமையான முரளிநாதம் எல்லோரையும் மோஹிக்கின்றது. ஆஹா, எப்பேர்ப்பட்ட சித்ரவிசித்ர ஸ்வர இணைப்புகள்! மனதையே ஆகர்ஷணம் செய்யும் தேனினுமினிய மனோஹரமான நாத அலைகள் ஸ்ரீயவர்களின் குழலிலிருந்து அலை பாய்ந்து கொண்டிருக்கிறது. என்ன விந்தை! எழெட்டு ஸர்ப்பங்கள் வெவ்வேறு ரீதியில் ஆட ஆரம்பித்தன. ஸ்ரீயவர்களின் நாகஸ்வரத்தின் வாசிப்பில் அநேக ராகமாலிகைகளை ஆலாபனம் செய்கிறார். அதற்குத் தக்கபடி ஸர்ப்பங்கள் ஆடுகின்றன. ஜனங்கள் ஏதோ மந்திரத்திற்குக் கட்டுப்பட்டதைப் போல் நின்றிருக்கின்றனர். இந்த அதிசயத்தைக் கண்டு பாம்பாட்டிக் திக்குத் தெரியாதவனைப்போல் விழித்தான். தனது கண்களைத் தானே நம்ப முடியவில்லை. "இது என்ன கனவா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறான். "இது எப்படிப்பட்ட தெய்வீக வேணுவாதனம்! ப்ரபஞ்சத்தில் இத்தகைய விசித்திரமும் உள்ளதா? ஆச்சரியம்! இவரைப்போன்ற கலை வல்லுநர் வேறுயாருமில்லவே இல்லை! வெவ்வேறு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விதமாக நான் தயாரித்த ஸர்ப்பங்கள், எனக்கு ஒவ்வொரு வேளை எதிர்க்கும் இந்தப் பாம்புகள் இவருடைய இசைக்கு இதற்கு முன் என்றும் கண்டிராத முறையில் ஆடுகின்றனவே" என்று அளவற்ற ஆச்சரியத்தில் மூழ்கினான்.

ஸ்ரீயவர்கள் முரளி வாசிப்பதை நிறுத்தினார். ஸர்ப்பங்கள் செயலற்று அப்படியே படுத்தன. ஜனங்களின் மகிழ்ச்சி எல்லையை மீறிவிட்டது! மகிழ்ச்சி ஆரவாரம் வானைப்பிளக்கிறது. ஸ்ரீயவர்கள் மந்தஹாஸத்துடன் பாம்பாட்டியின் பக்கம் திரும்பி, "என்னய்யா, போதுமா கலைத்திறமை காண்பித்தது? இன்னும் காண்பிக்க வேண்டுமா? இருக்கட்டும் நீ இப்பொழுது இவைகளில் ஏதாவது ஒரு சர்ப்பத்தை எழுப்பி நிறுத்து பார்க்கலாம்" என்று சொல்லவும் அவமானத்தினால் எரிச்சலுடனும், கோபத்துடனும் மகுடியைப்பிடித்து வாசிக்கப் போனான். என்ன ஆச்சரியம்! மகுடியிலிருந்த நாதமே வரவில்லை!! வரவேயில்லை! திக்ப்ரமையடைந்தான் பாம்பாட்டி! ஸ்ரீயவர்கள் சிரித்துக்கொண்டே, "என்னய்யா, மகுடி வந்தாயிற்றா? இன்னும் ஏதாவது உண்டா? என்றார்.

"ஸ்வாமி தாங்கள் மந்திர சக்தியினால் ஏதோ செய்து எனது மகுடியை மூடிவிட்டீர்கள். இருக்கட்டும். இதனால் தாங்கள் என்னை வென்றதாக ஆகாது. என்னிடமுள்ள மஹாக்ருஷ்ண ஸர்ப்பத்தை ஜயித்த பிறகல்லவா அந்தப்பேச்சு. இது மிகமிகக் கொடூரமானது. இது மகுடி அல்லது முரளி நாதத்திற்கு மயங்குவதல்ல. அது வெளியே வந்த உடன் நான் காண்பிப்பவரைக் கடித்துவிடும். அதனிடமிருந்து தாங்கள் தப்பிப்பது முடியவே முடியாத காரியம். இதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? யோசித்துச் சொல்லுங்கள்" எனவும் ஸ்ரீயவர்கள், "உம், அந்த பரீக்ஷையும் ஆகிவிடட்டும். விடு உனது க்ருஷ்ண சர்ப்பத்தை என்று சொல்லி சிஷ்யனின் கையிலிருந்து தமது தண்டத்தை எடுத்துக்கொண்டு ஒரு வட்டம் வரைந்து தண்டம் பிடித்து நின்றுகொண்டார்.

ஸ்ரீயவர்களின் துணிச்சலைக் கண்டு ஆச்சரியப்பட்டாலும் தானெங்கே தோற்றுப்போய் விடுவேனோ என்ற பயம் மற்றும் கோபத்தினால் பற்களைக் கடித்துக்கொண்டே பெரிய கூடையொன்றி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


லிருந்து மஹா ஸர்ப்பத்தை வெளியே விட்டு ஸ்ரீவிஜயீந்திரர் பக்கம் சுட்டிக்காட்டினான். சுமார் இரண்டு மூன்று பாகங்கள் (குறைந்தது 10 அல்லது 12 முழம்) நீளமுள்ள கருப்பான அந்தக் காளிங்கனைப் பார்த்த ஜனங்களெல்லோரும் பயந்து பின்வாங்க ஆரம்பித்தனர். அந்தக் கருநாகம் வெகு கோபத்துடன் படமெடுத்துக் கொண்டு சீறிக்கொண்டு ஸ்ரீவிஜயீந்திரருடைய பக்கம் நுழைந்தது. ஜனங்கள் ஆரவாரம் செய்யத் தொடங்கினார்கள். ஸ்ரீபாதக்ளவர் அமைதியுடன் நின்றிருக்கிறார். வெகு ஆவேசமாக உள்ளே நுழைந்த ஸர்ப்பம் ஸ்ரீயவர்கள் வரைந்த வட்டத்திற்குப் பக்கத்தில் வந்து திடீரென்று நின்றது. முன்பு போக முடியாமல் கோபத்துடன் படமெடுத்துத் தாக்கிக் கொண்டிருக்கிறது. வட்டத்தைச் சுற்றிலும் மின்னல் போன்று சுற்றி வருகிறதே தவிர உள்ளே நுழைய முடியவில்லை. ஜனங்கள் இந்த அற்புதத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பாம்பாட்டி பைத்தியம் போலானான். திசை தெரியாமல் விழித்தான். முகம் கருத்தது. உடல் நடுங்குகிறது. சித்திரப் பதுமை போல் நின்றிருக்கிறான். க்ருஷ்ண ஸர்ப்பம் சுற்றிச்சுற்றிக் கடைசியில் சாந்தமாகப்படுத்துவிட்டது. ஜனங்களின் மகிழ்ச்சி எல்லையை மீறிவிட்டது.

ஸ்ரீயவர் பாம்பாட்டியை அழைத்து, ''உனது கலைக்காட்சி முடிந்ததல்லவா? பார். இப்பொழுது இந்த ஸர்ப்பத்தையே உன் பக்கம் அனுப்புகிறேன். நீ அதிலிருந்து தப்பித்துக்கொள் பார்க்கலாம்'' என்று சொல்லி தண்டத்தினால் ஸர்ப்பத்தைப் பாம்பாட்டியின் பக்கம் நகர்த்தினார். ஓஹோ! இதென்ன இந்த சாமர்த்தியம். சாந்தமாக இருந்த ஸர்ப்பம் புஸ்புஸ் என்று சீறிக்கொண்டு கோபத்துடன் பாம்பாட்டியிருந்த இடத்தில் நுழைந்தது. பாம்பாட்டி என்னென்னமோ முயற்சிகள் செய்து பார்த்தான். சர்ப்பம் அவனைத் துரத்துகிறது. பாம்பாட்டியின் கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன. உடல் வியர்த்தது. உயிருக்கு ஆபத்தினால் பயந்து ஓடிவந்து ஸ்ரீயவர்களின் பாதங்களின் மீது விழுந்து, ''ஸ்வாமி, என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று ஓலமிட்டான். ஸ்ரீயவர்கள் கருட மந்திரத்தை ஜபித்தார் என்ன ஆச்சரியம்! எங்கிருந்தோ ஒரு பெரிய கருடபக்ஷி பறந்து வந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பாம்பாட்டி மீது பாயப்போகும் ஸர்ப்பத்தைக் கொத்திக்கொண்டு பறந்தோடிவிட்டது. எல்லோரும் ஸ்ரீயவரின் அகாத மஹிமையைப் பாராட்டிக் கொண்டே, ''அஜேய விஜயீந்திரருக்கு வெற்றி'' என்று ஜய கோஷமிட்டனர்.

பாம்பாட்டி ஸ்ரீயவர்களுக்கு மறுபடியும் வணங்கி, ஸ்வாமி, தாங்கள் மஹானுபாவர். ஸர்வ வித்யாபரவீணர். நான் மிகமிக அற்பன். தங்களுடன் போட்டியிட வந்து பெரிய அபராதம் செய்தேன். என்னை மன்னித்து என் உயிரைக் காப்பாற்றிய தங்களுக்கு அடிமை. தங்களது வித்யாசாமர்த்தியத்தைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். தமக்கு நிகரான கலா நிபுணர் இல்லவே இல்லை என்னலாம். எனது அபராதத்தை மன்னித்துக் காப்பாற்ற வேண்டும்" என்று கண்ணீர் விட்டு ப்ரார்த்தித்தான். ஸ்ரீயவர்கள் பாம்பாட்டியைச் சமாதானப்படுத்தி அவனுக்கு விசேஷவெகுமதிகள் அளித்து அனுப்புமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டார். கையிலிருந்து தண்டத்தினால் தான் வரைந்த வட்டத்தின் நடுவில் அடித்தார். தண்ணீர் நிலத்திலிருந்து ஊற்று (Fountain) குபுகுபு என்று வர ஆரம்பித்தது. இதென்ன அற்புதமென பார்த்துக் கொண்டிருந்த ஜனங்களிடம்" இது நமது வெற்றியின் அறிகுறி, நாம் வரைந்த வட்டத்தில் பயமிருக்கட்டும். இது உத்தமமான கிணறாகும். *இதற்கு "கருட தீர்த்தம் என்று பெயர் வைத்துள்ளோம். இதில் எப்பொழுதும் த்ண்ணீர் இருக்கும். இந்த ஜலத்தைப் பருகினால் ஸகல வயிற்று உபத்திரவங்களும் நீங்கும்" என்று சொன்னார்.

ஸ்ரீயவர்களின் கலைத்திறமை பாம்பாட்டியை ஜயித்ததெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஹயக்ரீவாசார்யர், லக்ஷ்மி நாராயணாசார்யர் இருவரும் ஸ்ரீயவர்களை வந்து நமஸ்கரித்து, "மஹா ஸ்வாமி, நாங்கள் என்றும் கண்டு கேட்டறியாத அற்புதத்தைக் காண்பித்தீர்கள். ஸ்ரீயவருக்குத் தெரியாத வித்தையே இல்லையென்று தோன்றுகிறது. மத்வ மதரக்ஷணைக்காக பற்பல வழியில் முயற்சி செய்து கொண்டிருக்கும் தங்களுக்கு எங்களது ஆனந்தமான நமஸ்காரங்கள்" என்று சொல்லி ஸ்ரீயவர்களைப் பாராட்டினார்கள். ஸ்ரீயவர்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ஹயக்ரீவாசார்யரை அடையாளம் கண்டுபிடித்து மரியாதையுடன் பேசி அவரெல்லோரையும் அழைத்துக் கொண்டு ஸ்ரீமடத்திற்கு எழுந்தருளினார்.

### 51. णत्वं परं - बाधते (ணத்வம் பரம்பாததே!)

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த குரு ஸார்வபௌமர் ப்ராதரான்ஹிகங்களை முடித்துக் கொண்டு த்யானத்திலீடுபட்டு அமர்ந்திருந்தார். அநேக பண்டிதர்கள், மாணவர்கள், மற்றும் கௌரவமுள்ள க்ருஹஸ்தர்கள் யாவரும் ஸ்ரீயவர்களின் தரிசனத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தனர். இதே நேரத்தில் ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதேந்திரர் ஸ்ரீபாதங்களவரின் தரிசனத்திற்காக வந்தார். வெகு நாட்களுக்கப்புறம் தீக்ஷிதர் வந்திருப்பதைக் கண்டு ஸ்ரீமடத்தின் அதிகாரிகள் அவரை மரியாதையுடன் வரவேற்றனர். புன்னகையுடன் தீக்ஷிதர் ஸ்ரீயவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கே வந்து நின்றார். ஸ்ரீகளவர் தியானம் கலைந்தது. தீக்ஷிதர் வந்திருப்பதைக் கண்டு புன்னகை செய்தார். தீக்ஷிதர் ஸ்ரீபாதரவர்களுக்கு நமஸ்கரித்தார். ஸ்ரீயவர்கள் "நாராயண" என்று ஆசிர்வதித்தார்.

தீ:- (உட்கார்ந்து தமாஷாக) பரம சிவாதிரிக்தமான வேறு வஸ்துவே இல்லாமலிருப்பதனால் (சிவனே ஸர்வோத்தமனாக இருக்கையில்) தாங்கள் "நாராயண" என்றது சரியல்ல.

ஸ்ரீ:- தீக்ஷிதரே, "பரமசிவ" வாச்யனான "நாராயணன்" இருப்பதினால் நாம் ஆசிர்வதித்தது உசிதமே. இருக்கட்டும். இதென்ன மிக அபரூபதர்சனம்?

தீ:- சற்று ஸ்ரீயவர்களுடனே வாக் யுத்தம் செய்து சில சந்தேகங்களையெல்லாம் பரிகாரம் செய்து கொள்வதற்காக வந்துள்ளேன்.

ஸ்ரீ:- மிக்க மகிழ்ச்சி! நாரயுணன் ஸமர்த்தனாகியுள்ளார். உமது ஸந்தேஹம் என்ன?

---

*க்ருஷ்ண ஸர்ப்பத்தை கருடபக்ஷி வந்து கடித்துக்கொண்டு பறந்துபோன இடத்தில் அதன் ஞாபகார்த்தமாக ஸ்ரீவிஜயீந்திரர் தண்டத்தினால் "கருட தீர்த்தம்" நிறுவினார். கும்பகோணத்தில் நரசிம்ம ஸ்வாமி கோவிலினருகே இந்த கருட தீர்த்தமுள்ளது. இன்றும் இந்த இதிகாஸ வரலாறு அங்குள்ள ஜனங்களால் சொல்லப்படுகிறது.

In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீ:- (சிரித்துக்கொண்டு) நாராயண சப்தவாச்யனான பரம சிவனே சமர்த்தன்ஆனதினால் மற்றும் பரம சிவனிலிருந்து வேறுபட்ட வேறு வஸ்துவே இல்லாமலிருக்கையினால் நாராயணன் எவ்வாறு சமர்த்தனானான்?

ஸ்ரீ:- (புன்னகையுடன்) ஓஹோ! தீக்ஷிதருக்கு இன்று நாராயணனின் மீது கண் விழுந்துள்ளது போலிருக்கிறது! இன்றைய வாக்யார்த்தத்திற்கு "நாராயணனே" விஷயமாவது போலிருக்கிறதே! தீக்ஷிதரே, பரம மங்களகரமானதால் பரமசிவ வாச்யனும், நாராயணாதி சப்தவாச்யனும் ஆன நமது ஸ்ரீமூலராமர் ஸமர்த்தனாயிருக்கிறார்.

தீ:- ஸ்ரீயவர்களே, சமர்த்தனென்றால் ஸர்வோத்தமனென்று அறியவேண்டும். மோக்ஷ ஸாதன க்ஞான விஷயமான மற்றும் ஜகத்காரணமான வஸ்து எதுவோ அதுதான் ஸர்வோத்தமமானது. இதற்கு தங்களுக்குத் தடையொன்றுமில்லையே?

ஸ்ரீ:- ஓஹோ! நமக்கு இது பரம சம்மதமானது.

தீ:- சரி, அப்படியானால் பரமசிவனே ஸர்வோத்தமனென்று தாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனென்றால் "एको रुद्रो न द्वितीयोवतस्थे," "न सन्नचासच्छिव एव केवल:" முதலிய உபநிஷத்வாக்யங்களினால் சிவன் ஜகத்காரணனென்று தெரியவருகிறது. அப்படியிருக்கையில் சிவன் ஸர்வோத்தமன். அவனல்லவா சமர்த்தன் ஸ்வாமி?

ஸ்ரீ:- (சிரித்துக்கொண்டு) ஏன் தீக்ஷிதரே, அவ்வளவு அவஸரம்? "नारायणो वा इदमग्र आसीत्" முதலிய ச்ருதிகளிருப்பதினால் நாராயணன் ஒருவன் தான் ப்ரளய காலத்திலிருந்தவனென்று அர்த்தமாவதனால் அவனே ஜகத்காரணன்?

தீ:- (பரிஹாஸமாக) ஸ்ரீயவர்களே, இங்கு கவனிக்க வேண்டும்; தாங்கள் சொன்ன ச்ருதியில் நிருபிக்கப்பட்ட பதம் சிவனைத் தெரிவிக்கிறது! நாம் இவ்வாறு நிருபிக்கிறோம் "नारायणशब्दः शिवपरः शिववृत्तिधर्मानवच्छिन्न [illegible] शिवशब्दवत्" சிவ என்ற

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பதத்தில் சிவவ்ருத்தி "धर्मावच्छिन्न प्रतिपाद कत्व" மிருக்கிறது. சிவ பரத்வமும் இருக்கிறது. ஆகையால் "நாராயண" என்னும் பதத்தில் शिववृत्ति धर्मावच्छिन्न प्रतिपाद कत्व மிருப்பதினால் "நாராயண" பதத்திற்கு சிவ பரத்வத்தை. ஸாதிக்கிறோம். இவை முதலிய ப்ரமாமணமிருப்பதனால் நாராயண சப்தம் சிவபரமாகலாமல்லவா ஸ்வாமி?

ஸ்ரீ:- தீக்ஷிதரே, தாங்கள் சொன்னது சரியாகாது. நாம் இனி நிரூபிக்கும் க்ரமத்தினால் நாராயண சப்தத்திற்கு சிவபரத்வம் அஸம்பாவிதமானது. ஆகையால் பாதிதமாவது. இந்த அனுமானம் பக்ஷமான நாராயணன் என்ற பதத்தில் சிவவ்ருத்தி தர்மாவச்சின்ன ப்ரதி பாதகத்வரூபமான ஹேது இருப்பதில்லை. ஏனென்றால் நாராயண சப்தத்திற்குக் கேவலம் ஜலசாயித்வம் (ஸமுத்திரத்தில் சயனித்திருக்கை) ப்ரவ்ருத்தி நிமித்தமல்ல. ஆனால் ப்ரளய காலத்தின் ஜலத்தில் சயனித்திருக்கையே ப்ரவ்ருத்தி நிமித்தமானது. "नारायणो इदमग्र आसीत् न ब्रहमानशंकरः" முதலான ப்ரமாணத்தினால் சங்கரன் ப்ரளய காலத்தில் ஜலத்தில் சயனித்திருக்க வில்லையென்று ஸ்பஷ்டமாவதினால் (தெள்ளத் தெளிவாவதினால்) (சிவனில் அந்த ஜலத்தில் சயனித்திருக்கும் ரூபதர்மம் பாதிக்கபடுவதனால்) சிவவ்ருத்தி தர்மாவச்சின்ன ப்ரதிபாதகத்வம் நாராயண சப்தத்தில் இல்லாமலிருப்பதினால் அஸித்தி (असिद्धि) மற்றும், "नारायण शब्दः न शिव परः, शिवान धिकरणकाल वृत्यर्थ प्रतिपाद कत्वात्, यः यदतधिकरण कालवृत्यर्थ प्रतिपादकः सः तत्परो न यथा घटानधि करण काल वृत्ति घटध्वंस प्रतिपादक घटध्वंस शब्दो न घटपरः" எந்த வஸ்து இல்லாமலிருக்கும் காலத்திலிருக்கும் வஸ்துவை போதிக்கும் சப்தம் அந்த வஸ்துவை போதிப்பதில்லை. தீக்ஷிதரே! இங்கு சற்று யோசியுங்கள். "घट" இல்லாமல் இருந்த காலத்தின் "घटध्वंस बोधक" சப்தம் घटத்தைப் போதிக்கிறதோ? (घट- மண் பானை) இல்லை. அதைப்போலவே சிவன் இல்லாமலிருந்த ப்ரளய காலத்திலிருக்கின்ற விஷ்ணுவைத் தெரிவிக்கும் நாராயண சப்தம் என்றைக்காவது சிவனைப் போதிக்கின்றதோ? தாங்களே சொல்லுங்கள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

இவ்வாறு ப்ரதிபக்ஷானுமானமிருப்பதினால் ப்ரகரண அஸமம் வரும் காரணத்தினால் தாங்கள் சொன்ன அனுமானத்தினால் நாராயண சப்தம் சிவபரமென்று ஸாதிப்பது முடியாதது. இது மாத்திரமல்ல விச்ரவஸ்ஸினுடைய அபத்யமென்னும் அர்த்தத்தில் நிஷ்பன்னமானவைகள் வைச்ரவண, ராவண சப்தங்கள். तथा च-वैश्रवण (कुबेर) वृत्तियार विச்ரவஸ்ஸினுடைய अपत्यत्वरूप धर्मावच्छिन्न போதகமான ராவண சப்தம் வைச்ரவணனை போதிக்க வேண்டியதாயிற்று.

தீ:- (சற்று அஸமாதானத்துடன்) பலே! ஸ்ரீபாதங்களின் வாதக்ரமம், ப்ரதிபாதனாக்ரமம் மிக்க வித்வன் மனோரஞ்ஜகமாக உள்ளது. ஸ்ரீயவர்கள் நிக்ரற்ற வாதமல்லரென்று முன்னமே நான் ஒப்புக்கொண்டு விட்டேனல்லவா? அதிருக்கட்டும். இத்துடன் எனது வாதம் முடியவில்லை. ஸ்ரீபாதங்களிங்கு கவனிக்க வேண்டும்.

ஸ்ரீ:- ஆகட்டும். அதென்ன, சொல்லலாம்.

தீ:- நாராயண சப்தத்திற்கு சிவபரத்வம் அஸம்பாவிதமென்று சொன்னீர்கள். ஏன் அஸம்பாவிதம் என்பதை தயவு செய்து எடுத்துச் சொல்ல வேண்டும்.

ஸ்ரீ:- "पूर्वपदात्संज्ञायामगः" என்னும் பாணினி ஸூத்ரத்தினால் "नारायन" என்னும் शब्दघटकமான "न" காரத்திற்கு "ண"காரம் வருகிறது. संज्ञाயில் न காரத்தினால் व्यवधानமிருந்தால் வருவதில்லை என்று இந்த ஸூத்திரத்தின் அர்த்தம். இப்பொழுது நாராயண சப்தத்திற்கு சிவனின் संज्ञा இல்லாமலிருப்பதினால் "ண" காரம் வராமல் "नारायन" என்றே ஆகவேண்டியிருக்கும்! ஆகையினால் "नाराण" சப்தத்திற்கு சிவபரத்வம் அஸம்பாவிதமானது.

தீ:- (சிரித்துக்கொண்டு) 'न' "ந"காரத்திற்கு 'ण' காரத்தை விதிக்கும் ஸூத்ரம் அது ஒன்று மாத்திரமல்ல, ஸ்ரீயவர்களே! வேறு ஸூத்ரத்தினால், 'ण' "ண" காரத்தை நாம் எடுத்துக்காட்ட முடியும்.

ஸ்ரீ:- மிக்க சந்தோஷம்! அது எந்த ஸூத்ரம்?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீ:- (அதிக கர்வத்துடன்) "अट्कुप्वाङ्.नुम्व्यवायेऽपि" என்னும் ஸூத்ரத்தினால் 'ண' "ண" காரம் வருகிறது. வ்யஸ்தகளான கூடுமானவரை சேர்ந்துள்ள சமானபதத்தில் अट् कवर्ग, पवर्ग, आङ् नुम्, இவைகளினால் व्यवधान வ்யவதானமிருந்தாலும் (विच्छेद) தாலும் रेफ, ष காரங்களினால் பரமான "ந" न காரத்திற்கு ण कार "ண" வருகிறது என்று இந்த ஸூத்ரத்திற்கு அர்த்தம் ஸமானபதமான "நாராயண" பதத்திலிருக்கும் "ர" காரத்தினால் பரமான "ன" காரத்திற்கு ப்ரத்யாஹார வர்ணங்களினால் வ்யவதானமிருந்தாலும் "ண" காரம் வருவதினால் நாராயண சப்தத்திற்கு சிவபரம் ஏன் அஸம்பாவிதமாகும்? சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்ரீ:- தீக்ஷிதரின் வாதத்திற்குத் தலையாட்டிப் புன்னகையுடன் பலே! தீக்ஷிதரே, வெகு நாட்கள் சிரமப்பட்டு முயற்சி செய்து நமது நாராயணனைக் கபளீகரம் செய்வதற்குத் திட்டமிட்டு இங்கு வந்திருக்கிறீர்கள். பாவம்! உமது இச்சை பூர்த்தியாகப்போவது இல்லை என்று நமக்கு மிக வருத்தமாயுள்ளது.

தீ:- (ஆர்வத்துடன்) அது ஏன் மஹாஸ்வாமி!

ஸ்ரீ:- உமது முயற்சி நிஷ்பலமானதினால்! கேளும். "நாராயண" என்பதில் 'नार" ஒரு பதம், "अयन" மற்றொரு பதம். அதன் பிறகு அது ஸமானபதமாகாது. ஆகையால் "ந"காரத்திற்கு "ண" த்வம் எப்படி வருகிறது?

தீ:- (சற்று யோசித்து"सुप्तिङ.तं वदं, सुबंद तिङंत" மானது பதமான்தினால் நாராயண சப்தத்தின் மீது "सुप" प्रत्यय மிருப்பதினால் விசிஷ்டமே பதமானதால் நாராயண சப்தம் ஸமான பதமாக முடியும்.

ஸ்ரீ:- தீக்ஷிதரே அப்படி விவக்ஷா (தாத்பர்யம் சொல்ல) செய்ய விரும்பினால் "रामनाम गंधर्व गानं" முதலான பதங்களிலுள்ள "न" காரத்திற்கும் "ण" த்வம் வரவேண்டியிருந்தது! அதற்காக निमित्रानधिकरण निमित्ति मत्पदाघटितत्व ரூபமான பாரிபாஷிக ஸமான பதத்வத்தை பரிஷ்காரம் செய்ய வேண்டும். நிமித்தமான रेफानधिकरण निमित्त 'न' कार முள்ள நாம बान पदघटित

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மானதால் சொல்லப்பட்ட (ஸமானபதத்வம்)"राम नाम गंधर्वगारं" என்னும் பதத்தில் இல்லாமலிருப்பதினால் "ண" காரம் வருவதில்லை என்று சொல்ல வேண்டும். ப்ரக்ருத நாராயண பதத்திலும் நிமித்தமான रेफ मिल्லாமல் இருந்த நிமித்தியான "ந" காரமுள்ள अयन पद घटिकமானதினால் तदघटितत्व रूप समान पदत्वம் नारायण பதத்தில் இல்லாமலிருப்பதினால் தாங்கள் சொன்ன ஸூத்திரத்தினால் "न" காரத்திற்கு "ण" காரமானது வராது. அவ்வாறானதால் நாம் சொன்ன ஸூத்ரத்தினாலேயே வரவேண்டும். சிவனில் நாராயண சப்தத்திற்கு संज्ञे இல்லாதிருப்பதினால் "ण" காரம் வருவதில்லையால் நாராயண சப்தத்திற்கு சிவபரத்வம் அஸம்பாவிதம்.

அந்த சமயம் ஸ்ரீமடத்தின் பூஜா வேளையை அறிவிக்கும் பேரிகை, ஷெனாய் ஓசை கேட்க ஆரம்பிக்கவே, தீக்ஷிதர் மெதுவாக எழுந்திருந்து, "பாவம், ஸ்ரீயவர்களுக்குப் பூஜாகால்மாயிற்று. ஸ்வாமி, "णत्वं एवं बाधते" (இந்த "ண" காரம் மிகவும் பா்திக்கிறதில்லையா!) இருக்கட்டும். ஸ்ரீயவர்கள் இப்பொழுது பூஜைக்கு எழுந்தருளலாம். மாலையில் மறுபடியும் வருகிறோம். என்று சொல்லி ஸ்ரீயவரிடம் விடைபெற்று புறப்பட்டார். சபையில் இருந்த வித்வான்களின் கூட்டம் ஸ்ரீயவரின் திறமை, சாமர்த்தியம், வாதத் திறமைக்குத் தலையாட்டிக் கொண்டு அவரைப் பாராட்டினார்.

## 52. வ்யாகரண சாஸ்திரத்தில் நிபுணத்வம்

அக்ஷயத்ருதியா அன்று ஸ்ரீமடத்தில் விஜயீந்திர ஸ்வாமிகளால்வெகு சிறப்பாக மூலராமரின் பூஜை நிறைவேறியுள்ளது. வழக்கம்போல் ப்ரதர்சனத்திற்காக தேசதேசங்களிலிருந்து வித்வான்கள், மாணவர்கள், கவிகள், பாடகர்கள், பக்தர்கள் வந்து கூடியுள்ளனர். வித்யாமடத்தில் அன்றைய வைபவமே வைபவம்! காலையில் ஏழெட்டு மணியிருக்கும் வித்வத் ஸபை நடைபெறுகிறது. ஆஸனத்திலாரூடராயிருக்கும் ஸ்ரீவிஜயீந்திர யதி சக்ரவர்த்திகள் சிரித்த முகத்துடன் பண்டிதர்கள் வாக்குப் போட்டி, கவிகளின் ஆசு கவிதை (உடனுக்குடன் இயற்றும் கவிதை)ப் போட்டிகளைக் கவனித்துக் கொண்டே அமர்ந்துள்ளார். வெவ்வேறு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சாஸ்திரங்களில் வாக்யார்த்தங்கள் நடைபெற்று கவிபுங்கவர்களின் போட்டி வெகு ரஸமாக நடந்து கொண்டிருக்கின்றது. ஆச்சரியமென்னவென்றால் எல்லாக் கவிகளும் அன்றென்னவோ, "நாராயண"னைப்பற்றியே விதவிதமான முறையில் அர்த்தம் நிறைந்த ஸரஸ கவிதைகளை சப்த-அர்த்தம் முதலிய பல அலங்கார வ்ருத்தங்களில் (சப்தாலங்காரம்-அர்த்தாலங்காரங்கள்) இயற்றி சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீயவர்களுக்கு ஏதோ ஞாபகம் வந்தது. தமது இடம் வலப்பக்கங்களில் ஒருமுறை பார்வை செலுத்தினார். குருபுரந்தர தாஸர் புன்னகையுடன் ஸ்ரீயவரிடம் விக்ஞாபித்தார்-"மன்னிக்க வேண்டும் மஹாஸ்வாமி, அவர் வரவில்லை" என்று சொல்ல ஸ்ரீயவர்கள் சிரித்து; "யார் வரவில்லை தாஸரே?" என்றார் . தாஸர், இதென்ன மஹாப்ரபோ, தாஸனைப் பரீக்ஷிக்கின்றீர்களா? கவிகள் இன்று இவ்வளவு வகைகளில் யாரை வர்ணித்துக் கொண்டிருக்கின்றனரோ அந்தச் சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் ஸ்ரீயவர்கள் யாரை ஞாபகப்படுத்திக் கொண்டீரோ அவரே வரவில்லை ஸ்வாமி!" என்று சொல்லவும் ஸ்ரீயவர்களின் புன்னகையுடன் "தாஸரே, என்ன இது. நமது ஹ்ருதயத்திலும் தாங்கள் புகுந்து விட்டீரா?" என்றார். தாஸர், "தமது பாத சேவகனல்லவா? தமது ஸாந்நித்யப்ரபாவம் ஸ்வாமி" என்றார். கூடியிருந்த பண்டிதர்கள், இதென்ன சமத்காரம், ஒன்றும் புரியவில்லையே என்று வியப்படைந்து விஷயம் தெரிய வேண்டும் என்ற பாவத்துடன் பார்த்தனர். ஸ்ரீயவர்கள், "தாஸரே, நமது பண்டித ஸமூகத்திற்கு நமது இந்த நடிப்பு விசித்திரமாகத் தோன்றுவதைப் போலுள்ளது. பாவம், பஹிரங்கமாகச் சொல்லிவிடுங்கள்" எனலும் தாஸர் வினயமாக இவ்வாறு கூறினார்" இன்று கவிகள் "நாராயண" "ன" வைப்பற்றி கவிதை இயற்றியுள்ளதைக் கேட்டு ஸ்ரீயவர்களுக்கு தீக்ஷிதரின் நினைவு ஏற்பட்டது. அவர். வந்திருக்கிறாரோ இல்லையோ என்று இடம் வலப்பக்கங்களைப் பார்த்தார். ஸ்ரீயவர்களின் அபிப்ராயத்தையறிந்து நான் "வரவில்லை" ஸ்வாமி என்றேன். ஸ்ரீதீக்ஷிதருக்கும் ஸ்ரீயவர்களுக்கும் நடந்த "நாராயண சப்தம்" விஷயத்தின் வாக்யார்த்தம் தங்களுக்கெல்லாம் தெரிந்ததுதானே? அதின்னும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

முடியவில்லை. இன்று அதைப்பூர்த்தி செய்ய வேண்டுமென்று ஸ்ரீயவர்களின் விருப்பம் இருப்பதாகத் தெரிகிறது. அவ்வளவுதான்! ஜனங்களெல்லோரும் மஹாத்மாவான தாஸரின் தகுதியைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். ஸ்ரீயவர்கள் பாருபத்திதாரரைப் பார்த்து விசேஷ உற்சவங்களில் ஸாதாரணமாக பங்குகொள்ளும் தீக்ஷிதர் இன்றென்னமோ வரவில்லை. நமது நாராயணஸ்மரண பூர்வகமாக அவருக்கு அழைப்பு அனுப்புங்கள் என்று உத்தரவிட்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் தேஜஸ்வியான தீக்ஷிதர் மந்தகாஸத்துடன் வந்து ஸ்ரீயவர்களுக்கு வணங்கி ஸ்ரீயவர்களின் வாத அழைப்பு வெகு சாதுர்யமானதாக இருந்தது ஸ்வாமி. அன்று மாலையில் வருகிறேனென்று பாதியில் வாதத்தை நிறுத்திவிட்டுப் போனவன் இரண்டு மாதங்களாகியும் வரவில்லையென்று "நாராயணஸ்மரணை" மூலம் என்னுடைய "நாராயண சப்தார்த்த"விஷயமான வாதத்தை நினைவுப்படுத்தின ஸ்ரீயவரின் யுக்திக்கு எனது நன்றிகள்" என்றார்.

ஸ்ரீ:- (புன்சிரிப்புடன்) சிச்சி. அப்படியல்ல தீக்ஷிதரே. விசேஷ தினங்களில் வரும் தாங்கள் வரவில்லையென்று சொல்லியனுப்பினோம்.

தீ:- (சிரித்துக்கொண்டு) ஆமாம், ஆமாம், என்னிடத்தில் தங்களுக்கு அபாரப்ரியமுள்ளது. ஆனால் நாம் வராதிருந்தாலும் தேடி வரவழைத்து பலியாக்கும் யுக்தியை நான் அறிவேனா? ஸ்வாமி, காசிக்குப் போயிருந்தேன் வரமுடியவில்லை. இப்பொழுது வந்திருக்கிறேன்.

ஸ்ரீ:- நிஜமாக தீக்ஷிதரே, நீங்களில்லாவிட்டால் நமக்கென்னமோ வெறுப்பாயிருக்கிறது. உம்மைப்போன்ற உத்தமமான பண்டிதருடன் பேசுவது நமக்கு மகிழ்ச்சிதருவது. நீங்கள் இல்லாத வித்வத் சபைக்கு சோபையுள்ளதா என்ன? நீங்களே சொல்லுங்கள்?

தீ:- உண்மை. உண்மை. நம்மைப்போன்ற பண்டிதரை ஒரு நாளைக்கு ஒருவரை ஜயிக்காமலிருந்தால் தங்களுக்கு ஏது சமாதானம்? தங்களுக்கு எவ்வளவு ஆசையப்பா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஒரு பண்டிதரும் உம்மிடம் தோற்காமல் இருக்கக்கூடாதென்பது தான் உமது இச்சை! இருக்கட்டும். அது அப்படி இருக்க, உமது "நாராயணன் என்ன சொல்லுகிறான் ஸ்வாமி?"

ஸ்ரீ:- (சிரித்து) "णत्वं परं बाधते" என்று யோசித்துக் கொண்டே தீக்ஷிதர் அன்று போனார். இப்பொழுதாவது அவரது கவலை பரிகாரமாயிற்றோ இல்லையோ என்று விசாரிக்கும்படித் தூண்டுகிறான் நமது நாராயணன்!

ஸ்ரீயவர்களின் சாமர்த்தியமான பேச்சைக் கேட்டு சபைத்தலைவர் மற்றும் உள்ளவர்களும் புன்னகை செய்தனர். தீக்ஷிதரும் சிரித்தார்; எப்படியிருந்தாலும் வ்யாகரண சாஸ்திரத்தை அனுசரித்து வாக்யார்த்தம் ஆரம்பமாகியுள்ளது. இந்த சமயத்தில் தனது வ்யாகரண சாஸ்திர பாண்டித்ய பலத்தினாலாவது, அஜய்யரெனப்படும் இந்த விஜயீந்திரரை ஜயித்தே ஆகவேண்டும். அதாவது தமக்கு நிகரற்ற கீர்த்திவரும். எவ்வாறாயினும் தமது அபிலாஷை நிறைவேறும்படி செய்ய முயற்சிக்க வேண்டுமென்று மனதில் யோசித்து தீக்ஷிதர் உற்சாகத்துடன் வாதத்தை ஆரம்பித்தார்.

தி:- (ஆணவத்துடன்) குருவர்யரே, எனக்கு இனி "ண" த்வத்தின் பயமில்லை!

ஸ்ரீ:- (ஆச்சரியமடைந்தவரைப் போல்) உம், அப்படியா? அப்படியானால் தாங்கள் இப்பொழுது நாராயண பதவாச்யன் சங்கரனே என்று வாதிப்பீரென்று தோன்றுகிறது. இல்லையா தீக்ஷிதர்வாள்?

தி:- (பெருமையுடன்) உண்மை ஸ்வாமி, கேளுங்கள் "णत्व" "ணத்வ" மிருப்பதனால் நாராயண சப்தம் சிவபரமாக இல்லையென்று தாங்கள் தெரிந்து கொண்டுள்ளதாகத் தெரிகிறது. அப்படியல்ல. நாராயண சப்தத்தில் சிவபரத்வமிருந்தாலும் "ணத்வம்" வரலாம்.

ஸ்ரீ:- அது எப்படி?

தி:- அது இப்படி:- "उत्तर पदत्वेचा पदादि विधौ प्रत्यय लक्षण प्रतिषेधः" என்ற "वार्तिक" முள்ளது. உத்தர பதத்திற்கு "पदत्वव्यपदेश" த்வத்தை விவக்ஷா செய்தால் प्रत्यय लक्षण

Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

प्रतिषेधः - அதாவது - ப்ரத்யய ஆச்ரித கார்யத்தைச் செய்யக்கூடாது. பதாதி கார்யம் செய்யும்பொழுது प्रतिषेदமில்லையென்று அதன் அர்த்தம். லுப்தமான ப்ரத்யய பதத்தை ஆச்ரயமாக்கிக் கொண்டு கார்யம் செய்வது வருவதில்லையாதலால் "நாராயண" என்பதனுடைய "ஆயன" சப்தம் "सुबंत" மாகவில்லையாகையால், "पद" மெனப்படமுடியாது. அப்படி இருக்கையில் "நிமித்தவத்வர்த்தினுடைய "अघटितत्वरूप समान पदत्व"ம் "नारायण" பதத்தில் வருவதினால் முன் சொன்ன ஸூத்ரத்தினால் "णत्व" வருமாதலால் நாராயணபதம் ருத்ரபதமாகலாமல்லவா? ஸ்ரீயவர்கள் இதற்கு என்ன பதில் சொல்வீர்கள்?

ஸ்ரீ:- தீக்ஷிதரே, உமது இந்த வாதமென்னமோ அழகாகக் காணப்பட்டாலும் இவ்விடத்தில் இப்பொழுது சரியாகாது.

தீ:- அது ஏன் சரியாவதில்லை ஸ்வாமி?

ஸ்ரீ:- அப்படிச் சொல்லுவதானால், உமது இதே நியாயத்தினால் "रामनामगर्भ गान" முதலிய இடங்களிலும் கூட "ந" காரத்திற்கு "ண" காரம் வரலாமல்லவா? இந்த अतिप्रसक्तिயை எப்படிப் பரிஹாரம் செய்வீர்கள்?

தீ:- (புன்னகையுடன்) "क्षुभ्नादिषच" "एषुणत्वं न स्यात" என்னும் ப்ரமாணமுள்ளது. क्षुभ्नादि गण पठितமான சப்தங்களில் "ண" காரத்திற்கு ணத்வம் வருவதில்லை. இது ஆக்ருதிகணமாதலால் இந்த "राम नाम" முதலிய சப்தங்களை அந்த கணத்தில் சேர்த்தாலாயிற்று "णत्व प्रसक्ति"யே இல்லையே? ஆகையால் எந்த அதிப்ரஸக்தி முதலான தோஷமுமில்லாமலிருப்பதனால் योगवृत्ति விவக்ஷா செய்தாலும் கூட ணத்வம் "णत्वं" வரக்கூடுமாகையால் நாராயண சப்த வாச்யன் நம் ருத்ரனே ஆனதாக ஆயிற்று.

ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் வ்யாகரண சாஸ்திரத்தில் பெற்றுள்ள பாண்டித்யம், வாக்ஸரணி திரத்தில் பெற்றுள்ள பாண்டித்யம், வாக்ஸரணி (பத்ததி) உபபாதனாசைலி (நிருபணம் செய்யும் முறை) மற்றும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வாதத்தை அலங்கரித்த திறமைகளைக் கண்டு சபையோர் ஆச்சரியத்தினால் இதற்கு ஸ்ரீயவர்கள் என்ன சொல்வரோ என்று ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருக்கையில், ஸ்ரீயவர்கள் தீக்ஷிதரின் திறமையையும், வித்வத்பூர்ண வாதத்தையும் கேட்டுத் தலையாட்டி மனப்பூர்வமாக தீக்ஷிதரைப் பாராட்டி புன்னகையுடன் கம்பீரமாக பதில் சொன்னார்.

ஸ்ரீ:- சற்று தப்பினீர் தீக்ஷிதரே! ஸூத்ர "घटक" மான ஸமான பதத்திலிருக்கும் பதசப்தத்தினால் "सुबंत" மென்றுவிவக்ஷா செய்யக்கூடாதென்பது வ்யாகரண சாஸ்த்ர நிபுணரான தங்களுக்குத் தெரியாததா?

தீ:- (சற்று அவமானமடைந்தவரைப் போல) அதேன் ஸ்வாமி விவக்ஷா செய்யலாகாது?

ஸ்ரீ:- ஏனென்றால், "गंधर्वगानं" என்றதில் निमित्ता नधिकरण निमित्तवत्वத்தின் "अघटितत्वरूप" ஸமான பதத்வமிருப்பதினால் "णत्व"ம்வர வேண்டியிருந்தது! மற்றும் "हर्यभिमानी," "भार्गव भगनी" முதலான இடங்களிலிருக்கும் "मौन-भगनी" சப்தங்களுக்கு "उत्तर पदत्वेच"கும் என்னும் "वार्तिक"த்தினால் "पदत्व"ம் நிஷித்தமானபடியால் उक्तपद अघटितत्वरूप समान पदत्वம் வருவதினால் "णत्व" வரவேண்டியதாயிற்று! ஆகையால் தீக்ஷிதரே, பத சப்தத்தினால், "सुबंत" மென்று விவக்ஷா செய்வது முடியாததாய் निमित्ता नधिकरण निमित्वत्वदघटितत्व மே நாராயண பதத்தில் வருவதால் ततदघटितत्वरूप समान पदत्वம் இல்லையாதலால் ணத்வம் வருவதில்லை. அந்தக்காரணத்தினால் நாராயண சப்தம் சிவபரமாக மாட்டாது. रूढियோ வருவதேயில்லை! "पूर्वपदात" முதலிய ஸூத்ரத்தினாலும் கூட "ணத்வம்" வராது. ஏனென்றால் எந்த வகையிலும் நாராயண சப்தம் சிவபரமாக மாட்டாது.

ஸ்ரீயவர்களி ன் வ்யாகரண சாஸ்திரம், பாண்டித்யம், திறமையையும், தீக்ஷிதருடைய வாதத்தை எளிதாக நிவாரணம் செய்த திறமையைக் கண்டு சபையோர் ஆனந்தத்தில் மூழ்கினர். மேலே என்ன வாதம் நடக்கப் போகிறதோ என்னும் ஆர்வத்துடன் நிசப்தமாக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சபையோர் அமர்ந்துள்ளனர். ஸ்ரீயவர்கள் தமது வாதத்தை அநாயாஸமாகப் பரிகாரம் செய்ததைக் கண்ட தீக்ஷிதர் வ்யாகூலமடைந்து தளராமல் உத்ஸாகத்துடன் வாதத்தைத் தொடர்ந்தார்.

தீ:- ஸ்ரீயவர்களின் வாதத்திறமைக்கு நான் உண்மையில் மகிழ்ச்சி கொண்டேன் ஸ்வாமி. இங்கு சற்று கவனிக்க வேண்டும் "निमित्तवत्वदभिन्न पदवृत्तित्वा भावः समान पदत्व" என்று இவ்வாறு பரிஷ்காரம் செய்கிறேன். இதற்குத் தங்கள் அபிப்ராயமென்ன?

ஸ்ரீ:- (தலையாட்டி) உம், தொடருங்கள், தமது வாதம் முடியட்டும். பிறகுதான் நமது அபிப்ராயம்!

தீ:- சரி, அப்படியானால் கேளுங்கள், "राम नाम गंधर्व गार" முதலியவைகளிலுள்ள "ந" காரத்திற்கு "ணத்வம்" வருவதில்லை. "ந" காரம் एकपदवृत्तियானாலும், रेफ என்னும் "निमित्तवत्वदभिन्न नाम पदवृत्ति" ஆகையினால், அந்தவிதமான पदवृत्तित्वा भाव रूप समान पदत्वம் இருப்பதில்லையாதலால், "ந" காரத்திற்கு ணத்வம் வருவதில்லை "पूणः" என்பதில் "ந" காரத்திற்கு இப்படிப்பட்ட ஸமான யதத்வம் இருப்பதினால் "णत्व"ம் வரக்கூடும். ஸ்ரீபாதங்களவரே இதில் என்ன தோஷம்?

ஸ்ரீ:- அவ்வாறு சொல்லும் பக்ஷத்தில், தீக்ஷிதரே, "पूर्व पदात्संज्ञायामगः" என்னும் ஸூத்ரமே வ்யர்த்தமாக வேண்டிவரும்!! दूरिव नासिका यस्य என்னும் விக்ரஹத்தினால் दुणसः என்று ஸமஸ்தபதமாகும். "नासिका" சப்தத்திற்கு வந்திருப்பதினால் नसादेश இங்கு மேலே சொன்ன ஸூத்ரத்தினால் "ந" காரத்திற்கு ணத்வத்தைச் சொல்லவேண்டும். ஆனால் தாங்கள் விவக்ஷா செய்த ஸமானபதத்வம் "दुणसः" என்பதிலிருப்பதினால் "अटकुप्वाङ्नुं व्यवायेऽपि" என்னும் ஸூத்ரத்தினாலேயே "ணத்வ" வரக்கூடுமானதினால் முன்பு சொன்ன ஸூத்ரம் வ்யர்த்தமாக வேண்டிவருமென்ற காரணத்தினால் தாங்கள் சொன்னபடி ஸமான பதத்வ பரிஷ்காரம் சரியாகாது. இதே நம் அபிப்ராயம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீ:- குருகளே, "विद्वेसत्यारम्यमाणोविधिः नियमायभवति" என்னும் பரிபாஷாவினால் முந்தின ஸூத்ரத்தினால் ஸித்தித்திருப்பதினால் இந்த ஸூத்ரம் நியமபரமென்று சொல்லுகிறோம். நியம சரீரமானால் "पूर्वपदे परलौ ताभ्यां परस्य न कारस्य संज्ञायामेवणत्वमिति" முதலிலிருக்கும் "ரே ஃபு"ம் விகாரங்களினால் பரமான இரண்டாவது பதஸ்தமான "ந" காரத்திற்கு "ணத்வம்" வரவேண்டுமானால் संज्ञा இருந்தால் தான் என்று "गंधर्वगार" என்பதில் முன் ஸூத்திரத்தினால் "णत्व"ம் நிவாரணமாகும். ஆகையால் எந்த தோஷமும் இருப்பதில்லை. இந்த ப்ரகாரமும் நாராயணசப்தத்தில் எந்த விதத்திலும் "णत्व"ம் ப்ராப்தமானாலும் இந்த நியம பரஸூத்ரத்தினால் ணத்வம் நிவாரணமாகிறது. ஆகையால் எந்த தோஷமும் இருப்பதில்லை. இந்த ப்ர்காரமும் நாராயண சப்தத்தில் எந்தவிதத்திலும் ணத்வம் வராது.

ஸ்ரீ:- (புன்னகையுடன்) தீக்ஷிதரே, உமது வாதம் சரியானதல்ல. இருக்கட்டும். தாங்கள் இப்பொழுது நாராயண சப்தத்தில் எந்த விதத்திலும் "णत्व"ம் வரக்கூடாது என்று சொன்னீர்களல்லவா? முதலில் நாம் இப்பொழுது தங்களை அதிலேயே கேள்வி கேட்கிறோம்.

தீ:- ஆஹா, அவசியம் கேட்கலாம்.

ஸ்ரீ:- தாங்கள் சொன்னது யோக வ்ருத்தியினால் சிவ பரத்வே நாராயண சப்தத்தில் ந காரத்திற்கு "ண"த்வம் வருவதில்லையென்று தாத்பர்யமா? அல்லது விஷ்ணுபரத்வே "ணத்வ"ம் வருவதில்லையென்னும் உத்தேசமா?

தீ:- (அனுமானித்து) முதல் பக்ஷமென்று சொன்னால்...?

ஸ்ரீ:- (சிரித்து) ஆத்யபக்ஷமானால் அது நமக்குச் சம்மதம் நமது மனோரத ரூபமான விருக்ஷம் பழம் கொடுத்தாயிற்று.

தீ:- (அவஸர அவஸரமாக) இல்லை, இல்லை. இரண்டாவது பக்ஷமென்கிறேன். அதற்கு என்ன சொல்லுகிறீர்?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீ:- தீக்ஷிதரே, இந்த இரண்டாவது பக்ஷத்தில் நாராயண சப்தத்திற்கு விஷ்ணுவில் संज्ञा இருப்பதினால் இந்த நியமத்தினால் ணத்வம் நிஷேதம் வராததாகையால், "पूर्सपदा त्संज्ञायामगः" என்னும் ஸூத்ரத்தினால் ணத்வம் வருவதனாலும் நாராயண சப்தம் விஷ்ணுபரமே தவிர சிவபரம் அதெப்படியாகும்? சிவபரமாகாது.

தீ:- ஸ்ரீபாதங்களவரே, தாங்கள் "पूर्वपदात्संज्ञायामगः" என்னும் ஸூத்ரத்தினால் "णत्व"ம் வருகிறது, ஆகையால் நாராயண சப்தம் விஷ்ணு பரமேதான் தவிர சிவபரமாகாது என்று சொல்லுகிறீர்களல்லவா?

ஸ்ரீ:- ஆம்.

தீ:- அப்படியானால், ஸ்வாமி, எங்கே சற்று ஸூத்ரார்த்தத்தை விளக்கி அதுபோலவே அதிவ்யாப்தி மற்றும் அஸம்பவங்களைப் பரிகாரம் செய்யுங்கள். பார்க்கலாம்!

ஸ்ரீ:- (புன்னகையுடன்) ஆகட்டும் தீக்ஷிதரே, இங்கு க்வனியுங்கள் "पदं शब्देच वाक्ये च" என்று அபிதான மிருப்பதினால் (வாசகம்) "पद" சப்தம் "शब्द" பரமானது समानं एक..... अखंडपदं शब्दः तसिम्न्" என்று அதிகரண ஸப்தமி. அதுபோலவே "न" காரம் अखंड மான பதத்தில் இருக்கும் பொழுது அந்த "न" காரத்திற்கு ணத்வம் வருவது என்று ஸூத்ரார்த்தம் பதத்திற்கு अखंडत्वम सांव्यवहारिकदलद्वया घटितत्वं प्रकृतिप्रत्यय रूपदलद्वयोपेतமான "मातृ भोगीण" என்னும் பதத்திலிருக்கும் ந காரத்திற்கு ணத்வம் வருவதற்காக सांव्यवहारि कत्व विशेषणத்தைப்போட வேண்டும். இதைப்போலவே नार-अयन-பதங்கள் सांव्यवहारिक மானதால் நாராயண சப்தம் सांव्यवहारिकदलद्वय घटितமாயிற்று. ஆனபடியினால் शिव परत्वे, "अट - कुप्वाड्नुंव्यवायेऽपि" என்னும் ஸூத்ரத்தினால் ணத்வம் வருவதில்லை. வேறு ஸூத்ரத்தினாலும் ணத்வம் வராது. ஆதலினால் தீக்ஷிதரே என்றைக்கும் நாராயண சப்தம் சிவபரமாகாது.

தீ:- (தலையை ஆட்டி) நல்லது ஸ்ரீயவரே தமது விளக்கம் கிரமம் வெகுமனோஹரமாயுள்ளது. ஆனால் ஒரே குறை.

ஸ்ரீ:- அது என்ன தீக்ஷிதரே?

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


தீ:- இல்லை ஸ்வாமி, இவ்வளவு அழகாக, அனுபவத்துடன் வித்வத்பூர்ணமாக வாதிக்கும் தாம் நாராயண சப்த சிவபரமென்று சொல்லிவிடும். அப்பொழுது பாருங்கள். உங்கள் வாதமெல்லாம் ஸம்பூர்ணமானதும் என்னாலும் மதிக்கத் தகுந்ததாகிறது. தாங்கள் அதொன்று செய்யாமலிருப்பதே தம்மிடமிருக்கும் பெரியகுறை. கலகலவென்று சிரிப்பு ஹஹ்ஹஹ்ஹ!

ஸ்ரீ:- (புன்னகையுடன்) தீக்ஷிதரே, அதே பேச்சு தங்களுக்கும் பொருந்துமல்லவா? ஹஹ்ஹஹ்ஹ! சிரிப்பு. இருக்கட்டும் இனி என்ன சொல்லப்போகிறீர்?

தீ:- ஸ்வாமி தாங்கள் மிகப்பிடிவாதக்காரரப்ப. இருக்கட்டும். ஸ்ரீபாதங்களவரே, வேறொரு ரீதி சொல்லலாமல்லவா?

ஸ்ரீ:- அதென்ன? சொல்லிவிடும் கேட்கலாம்!

தீ:- இப்பொழுது பாருங்கள், "षट् प्रश्नोपनिषद्" த்திலிருக்கும் "संमुद्रायण," "पुरुषायण," சப்தங்களிலுள்ள ந காரத்திற்கு ணத்வத்தைச் சொல்ல வேண்டும. மற்றும் அந்த ப்ரயோகங்களுக்கு ஸாதுத்வத்தை (साधुत्व)ச் சொல்ல வேண்டும். இல்லையா? அதைப்போலவே நாராயண சப்தத்திற்கு சிவபரத்வத்திலும் णत्वम् மற்றும் साधुत्वम् வரலாமல்லவா?

ஸ்ரீ:- இதென்ன தீக்ஷிதரே, இப்படிச்சொல்லுகிறீர்? அவைகள் "छांदस प्रयोग"ங்களல்லவா? அங்கு எந்த விஷயத்திற்கும் இடமே இல்லையே! அப்படிச் சொல்வதானால் "मातृभोगिण" பதத்தைப்போல அந்தப்பதங்களுக்கும் லோகத்தில் ப்ரயோகம் வரவேண்டியிருக்கும். மற்றும் நாராயண சப்தத்திற்கு மஹேச்வரனில் ப்ரயோகமிருப்பதில்லை.

தீ:- (சற்றுயோசித்து) நாராயண சப்தத்திற்கு சிவனில் ப்ரயோகமில்லை என்று தாங்கள் சொன்னீர்கள். ஆனால் "त्रयंबके देवि "नारायणि नमोऽस्तुते" என்னும் வைதிக ப்ரயோகமிருக்கிறதல்லவா?

ஸ்ரீ:- ஆம் இருக்கிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தீ:- பிறகு "सिद्धं नस्समीहितं" !

ஸ்ரீ:- அதெப்படி?

தீ:- "नारायणि" ப்ரோயகமுள்ளது. ஆனால் அங்கு ஸ்ாக்ஷாத் நாராயண சப்தம் சிவபரமாக ப்ரயோகிக்கப்படவில்லை. இருந்தாலும் கௌரிதேவிக்கு நாராயணி என்னும் ப்ரயோகமிருப்பதினால் நாராயணியின் பதிநாராயண என்று சொன்னால் சிவபரமே ஆனதாக ஆயிற்றல்லவா!

ஸ்ரீ:- (புன்னகையுடன்) தீக்ஷிதரே, உம்மைப்போன்றவரே இந்த மார்க்கத்தைப் பின்பற்றலாமா? இல்லை தீக்ஷிதரே, நாராயணியின் பதி நாராயணன் என்றால் லோகத்தில் ராஜனின் பத்னிக்கு "மஹிஷி" என்னும் ப்ரயோகமிருக்கிறது என்ற காரணத்தினால் மஹிஷியின் பதியை, "மஹிஷ" என்று அழைப்பது முடியுமா?

ஸ்ரீயவரின் சமத்காரபூர்ணமான இந்தப் பேச்சைக் கேட்டுப் பண்டிதர்கள், சபைத்தலைவர் முசுமுசுவென்று சிரிக்கவாரம்பித்தனர். தீக்ஷிதர் தலையைச் சொரிந்து கொண்டு சிரித்துவிட்டார்.

தீ:- பரவாயில்லை ஸ்வாமி, தாங்கள் மெதுவாக எமது சிவனை "மஹிஷ" மாக்க எவ்வளவு நாட்களாக ஸமயம் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்?

ஸ்ரீ:- சாந்தம் பாபம், தீக்ஷிதரே, ருத்ரதேவனை நாம் மிகமிக கௌரவிக்கிறோம். எமது ஸித்தாந்தத்தில் விஷ்ணு பக்தாக்ரேஸரென்று சிவனுக்கு மிகப்பெரிய இடம் உள்ளது.

தீ:- (வாதத்தைத் தொடர்ந்து) "शारण्ये" என்னும் ப்ரயோகத்தில் கௌரிதேவியில், "நாராயணி" என்றுப்ரயோகம் இருக்கிறது. பும்யோக விவக்ஷா செய்தால்தான் "पुंयोगादाख्यायां" என்னும் சூத்ரத்தினால் "ङीष्" வரவேண்டும். காரணம் அங்கு ப்ரக்ருதியினால் நாராயண சப்தம் சிவப்ரமென்று அவச்யம் சொல்ல வேண்டும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீ:- அந்த ஸூத்ரத்திலிருக்கின்ற "योग" பதத்திற்கு சம்பந்தமென்று அர்த்தம். அந்த சம்பந்தம் (தம்பதிபாவம்) பதி-பத்னியர்களுடையதே ஆக வேண்டும் என்ற நியமமெதுவுமில்லை. ஜன்ய-ஜனகபாவம் (தகப்பன்-மகன்) ஆகவிருக்கலாம். ஆகையால் நாராயணால் ஜன்யள் (உத்பன்னளாகுபவள்) என்று அர்த்தம் சொல்லலாம். அதைப்போல் நாராயண சப்தம் சிவபரமாகாது. நாராயணனால் உத்பன்னமானவள் என்று சொல்லாமல் அங்கு பதி-பத்னி (தம்பதி-பாவம்) பாவத்தையே விவக்ஷா செய்வதானால் "प्राक्कैकेयीतो भरत स्ततो भूत" என்னும் भट्टिय ப்ரயோகமே நல்லதல்லதாக வேண்டியிருக்கும். கேகயனின் புத்திரி என்னும் அர்த்தத்தில் "कैकया" என்று ப்ரயோகம் செய்திருக்கிறார்கள். பதி-பத்னி பாவமே விவக்ஷா செய்ய வேண்டுமென்றால் அது இங்கு பாதிக்கப்படும். ஆகையால் இங்குகூட ஜன்ய ஜனகபாவத்தை விவக்ஷா செய்ய வேண்டும் என்ற பிறகு நாராயண சப்தம் எப்படி சிவபரமாகக்கூடும் தீக்ஷிதரே?

தீக்ஷிதரும் ஸபையோவரும் ஸ்ரீயவர்களின் நிகரற்ற வ்யாகரண சாஸ்திரத்தில் நிபுணத்துவத்தைப் பாராட்டி மகிழ்ச்சியினால் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

தீ:- (சிரித்துக்கொண்டு) ஸ்ரீயவர்கள் இன்று என்னுடைய எந்த வாதத்தையும் நிலைக்கவிடுவதில்லையென்று தோன்றுகிறதே! உம் இருக்கட்டும். சிவனின் ஸர்வோத்தமத்வத்தை வேறொரு ரீதியில் ஸாதித்துவிடுகிறேன்.

ஸ்ரீ:- மகிழ்ச்சி, நடக்கட்டும்.

தீ:- ஸ்வாமி, கூர்ம புராணத்திலும், சிவ ஸஹஸ்ரநாமத்திலும் சிவனில் நாராயண சப்தத்திற்கு ப்ரயோகம் காணப்படுகிறது. கோர்ச்ர்திகளைப் போல் புராணங்கள் சக்தி க்ராஹகமாகையினால் நாராயண சப்தத்திற்கு சிவனில் "संज्ञा" சொல்ல வேண்டியிருப்பதினால் पूर्वपदात्संज्ञायामगः என்னும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸூத்ரத்தினால் "णत्व"ம் வரலாமாகையினால் "नारायणशब्द"ம் சிவபரமாகலாம். இதற்கென்ன சொல்லுவீர்கள்?

ஸ்ரீ:- (புன்சிரிப்புடன்) தீக்ஷிதரே, நாராயண சப்தம் விஷ்ணு பரமென்று இப்பொழுது நிர்ணயிக்கிறோம்.

தீ:- (சிரித்து) ஓஹோ! அப்படியா?

ஸ்ரீ:- ஸ்ரீசனிச்சை! இதைக்கேளும் தீக்ஷிதரே! தாங்கள் சொன்ன கூர்ம புராணாதிகளில் "दंत्य"ம் உபபதமாக இருக்கின்ற "नारायण" சப்தம் காணுகிறதே தவிர, "मूर्धन्योपपद" மான "नारायण" சப்தத்திற்கு சிவனில் ப்ரயோகம் காணப்படுவதில்லை யாகையால் அந்தப் புராணாதிகளினால் நாராயண சப்தத்திற்கு சிவனில் "संज्ञा" ஸித்திக்காது, மற்றும் "मूर्धन्योपपद" மான நாராயண சப்தத்திற்கு ப்ரயோகம் காணப்பட்டிருந்தாலும் "संपदाधिक्ये पुरोहितोयं राजा संवृतः" என்ற ப்ரகாரம் நாராயண சப்தம் சிவனில் ஔபசாரிகமென்று சொல்லலாம். இதனால் நாராயண சப்தத்திற்கு சிவனில் संज्ञा ஸித்திக்காது. இதைப்போலவே, "एक वृत्ति गोचरः सर्वैर्व्यवहित्यमाणः शब्दः संज्ञेत्युच्चते", அதாவது ஒருவஸ்துவில் அநேகரினால் வ்யவஹரிக்கப்பட்ட சப்தத்திற்கு அங்கு संज्ञे உண்டென்று சொல்ல வேண்டும். இப்படிச் சொல்லுவதில், "सर्वादीनि सर्वनामानि" என்ற இடத்திலும் கூட "णत्व"ம் வரவேண்டியிருக்கும்! இன்னும் நாராயண சப்தம் விஷ்ணுவினில் அநேகரால் ப்ரயோகிக்கப்பட்டதாகக் கண்டுள்ள தேதவிர சிவனில் ப்ரயோகிக்கப்பட்டதாக காணப்படுவ தில்லை. ஆகையால் நாராயண சப்தத்திற்கு சிவனில் "संज्ञे" இருப்பதில்லையாதலினால் "न" காரத்திற்கு "णत्व"ம் வராது. எந்த விதத்திலும் நாராயண சப்தம் சிவபரமாவதில்லை யாகையினாலும் நாராயண சப்தம் விஷ்ணுபரம்தான் (நாராயண பரமே) ஆவதினால் நாம் வாத ஆரம்பத்தில் சொன்ன ப்ரகாரம் ஸர்வவேதப்ரதி பாத்யனும், ஸகல குணபரிபூர்ணனும், ஸர்வ தேவ வந்த்யனும், ஆன ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்வதந்த்ரனும் மற்றும் ஜகஜ்ஜன்மாதி காரணனும் ஆனதினால் அவனே ஸர்வோத்தமன் என்று நிருபணமாயிற்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இவ்வாறு அநேக ப்ரமாணங்கள், உதாரணங்கள் கொடுத்துத் தமது வாதத்தை ஸ்ரீயவர்கள் தங்குதடையின்றி நிருபிக்கவும் சபையோரெல்லோரும் ஸ்ரீயவர்களின் அபூர்வமான அனுவாதம் மற்றும் திறமையையும் கண்டு பாராட்டத் தொடங்கினர். தீக்ஷிதர் எதுவும் சொல்லத் தோன்றாமல் தாம் விகாரமற்ற மனதினால் ஸ்ரீயவர்களின் பாண்டியத்வத்தைப் பாராட்டிப் புன்முறுவலுடன் எழுந்து நின்று ஸ்ரீயவர்களுக்கு நமஸ்கரித்து, "ஸ்வாமி, இப்பொழுது தங்களுக்குத் திருப்தியாயிற்றா? உம், சிவனிச்சை இவ்வாறிருந்தால் நானென்ன செய்வது? எவ்வளவானாலும் தாங்கள் பரமஹம்ஸாச்ரமத்தினர். இதோ எனது வணக்கத்தை ஏற்று ஆசீர்வதியுங்கள். மந்த்ராக்ஷதை அளிக்க வேண்டும்! இப்பொழுது போய்விட்டு மற்றொரு முறைவந்து தர்சனம் செய்கிறேன்" என்றார்.

ஸ்ரீபாதங்களவர் தீக்ஷிதரின் விசாலமான இதயம், பொறாமையின்மை, பாண்டித்யம், அன்பு மற்றும் தம்மிடத்திலுள்ள நம்பிக்கை முதலியவைகளை மனப்பூர்வமாகப் பாராட்டி விசேஷ மரியாதையுடன் பலமந்த்ராக்ஷதை அருளினார். ஜனங்கள் ஸ்ரீயவர்கள் மற்றும் தீக்ஷிதரின் பரஸ்பர நட்பையும் தாராள மனப்பான்மையையும் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். வித்வான்களின் சமூகம் "அஜேயவிஜயீந்திரருக்கு வெற்றி, ஸ்ரீமத்வ மதக்காவலருக்கு வெற்றி" என்று ஜய கோஷங்களை எழுப்பினர். பிறகு அக்ஷய த்ருதீயாவையொட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வித்வத் சபையின் காரிய கலாபங்களைத் தொடர்ந்து ஸ்ரீயவர்கள் ஸ்ரீமூலராமரின் பூஜைக்கு எழுந்தருளினார்.

53. **भविष्य कथन चातुर्य – எதிர்காலத்தில் நிகழப்போகும் சம்பவத்தை முன்பே சொல்லும் திறமை.**

ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமியின் சித்திரை விழாவைப்பற்றிக் கும்பகோணத்தின் ஸர்வ தேவாலயாதிபதிகளான ஸ்ரீவிஜயீந்திர குருவர்யரைக் கலந்து ஆலோசிக்க அர்ச்சகர்கள் அதிகாரிகள், வித்வத் சமாஜத்தின் ப்ரமுகர்கள், நகரத்தினர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீமடத்திற்கு வந்துள்ளனர். ஸ்ரீகளவர்கள் அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறார். பாருபத்திதாரர் வந்து ஸ்ரீயுவருக்கு, "மஹாஸ்வாமி, தஞ்சாவூரின் ஆஸ்தான வித்வானொருவர் தங்கள் தரிசனத்திற்காக வந்திருக்கின்றார்'' என்று விக்ஞாபித்தார். ஸ்ரீபாதங்களவர் அவரை அழைத்து வரச்சொன்னார். சற்று நேரத்தில் பாருபத்திதாரர் ஒரு தேஜஸ்விகளான ப்ராம்மணனுடன் வந்தார். அந்தப் பண்டிதர் ஸ்வாமிகளுக்கு நமஸ்கரித்து, "ஸ்வாமி, நான் கேரள தேச ப்ராம்மணன். என்னை ப்ரபஞ்ஜன சர்மாவென்று சொல்லுகின்றனர். அநந்த சயனத்தின் (திருவனந்தபுரத்தின்) அரசர், ''ஜ்யோதிர் மார்த்தாண்டன்" என்னும் விருதளித்து என்னைக் கௌரவித்துள்ளார். ஜ்யோதிஷம், ரமலு (பகடைக்காய் போட்டுப் பலன் சொல்லும் ஜோசியம், பகடைஜோசியம் எங்களின் வம்ச பரம்பரைவித்தை. ப்ரச்னபாகத்தில் நான் நிபுணன். துண்டீர மண்டலத்தில் குடியேற வேண்டுமென்று விரும்பி தஞ்சாவூருக்கு வந்து தங்கியுள்ளேன். வித்தைக்களை ஆதரிக்கின்ற தஞ்சாவூர் அரசன் ஆஸ்தான பண்டிதராக ஏற்றுக்கொண்டு என்னைக் கௌரவித்திருக்கிறார். தங்களின் பாண்டித்யத்தின் அற்புதங்களைக் கேள்விப்பட்டு தரிசனத்திற்காக வந்துள்ளேன். அநேக சாஸ்திரங்களில் தங்களுடன் வாதித்துப் பல பேர்கள் ஜயிக்கப்பட்டிருக் கிறார்களாம், ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் இதுவரை தங்களுடன் யாரும் போட்டிக்கு வரவில்லையென்று தெரிந்தது. ஸர்வ சாஸ்திர விசாரதரென்னும் தமது கீர்த்திக்கு அது ஒன்றினால் குறை வரலாகாதென்று யோசித்து அந்த நல்ல சந்தர்ப்பத்தைத் தங்களுக்கு அளிக்க வந்துள்ளேன்'' என்று விக்ஞாபனம் செய்தான்.

ப்ரபஞ்ஜன சர்மாவின் பேச்சின் ரகஸியத்தையறிந்து ஸ்ரீயவர்கள் புன்சிரிப்பு செய்து, "வெகுமகிழ்ச்சி, சர்மா அவர்களே, நம்மீது உமக்குள்ள

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நல்லபிப்ராயத்தைக் கண்டு மகிழ்ச்சி. ப்ரச்னவிபாகத்தில் நம்மைப் பரீக்ஷிக்கத்தானே வந்திருப்பது? என்றார்.

ப்ரபஞ்ஜன சர்மா ஆச்சரியத்துடன் ப்ரச்ன விபாகத்திலேயே தங்களைப் பரீக்ஷிப்பதற்காக வந்ததென்னமோ உண்மை. அதைத் தாங்கள் எவ்வாறு அறிந்தீர்? என்று கேட்கவும் ஸ்ரீயவர்கள், "ரமலு, ஜ்யோதிஷ, ப்ரச்ன பாகங்களில் நிபுணரான நீங்கள் இந்தவிதமாகக் கேட்பதைக் கண்டு ஆச்சரியமாகிறது. இருக்கட்டும், சர்மா, ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் எந்த பாகத்திலாவது வேண்டுமானாலும் பரீக்ஷிக்கலாம்'' என்று விடையளித்தார்.

ப்ரபஞ்ஜன:- மகிழ்ச்சி ஸ்வாமி, தங்களின் பாண்டியத்தின் பரீக்ஷை சுலபமாக நடைபெற ஒரு வழி ஒன்றிருக்கிறது. தாங்கள் ஒப்புக் கொள்வதானால்?.....

ஸ்ரீகளவர்:- அது என்ன? சொல்லிவிடுங்கள்.

ப்ர:- இப்பொழுதுள்ள முகூர்த்தத்தின் மீது இன்று அல்லது நாளை நடக்கக்கூடுமான எதிர்கால நிகழ்ச்சியை முடிவு செய்து சொல்லும் வித்தையில் நம்மிருவரின் பரீக்ஷையாகட்டும். இதற்குத் தாங்கள் சம்மதிக்கிறீர்களா?

ஸ்ரீ:- சர்மா அவர்களே, சரியான மார்க்கத்தையே தெரிவித்திருக்கிறீர். நம்மிருவரில் யார் ஜோதிட சாஸ்திரத்தில் நிபுணரென்பதை முடிவு செய்ய அனுகூலமாகும்படி இப்படிச் செய்யலாம். நாளைக்கு நடக்கப்போகும் விஷயத்தை நாமிருவரும் எழுதி இந்தச் சபையோரிடம் ஒப்படைத்துவிடுவோம். நாளை மாலையில் இவர்கள் சபையில் அதைப்படித்துச் சொல்லட்டும். அப்பொழுது நம்மிருவரின் பாண்டித்யத்தின் தீர்ப்பு ப்ரத்யக்ஷமாக வெளிப்படும். ஆகலாமல்லவா?

சர்மாவிற்கு ஸ்ரீயவர்களின் பேச்சைக் கேட்டுப் பரமானந்தமாயிற்று. ப்ரச்னபாகத்தில் தமக்கு நிகரில்லையென்று நம்பியிருந்த அவர் நாளை தமக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வெற்றி நிச்சயம் என்று நம்பிவிட்டார். ஸ்ரீகளவரின் உத்தரவின் படி வாயிற்காப்போன் எழுதுவதற்குத் தேவையான எழுதுகோல் முதலியவைகளைக் கொண்டு வந்து வைத்தான். சர்மா ஒரு மூலையில் உட்கார்ந்து அப்போதைய முகூர்த்தத்தைக் குறித்து அநேகவிதமாகக் கணக்குப்போட்டு வருங்கால நிகழ்ச்சியை எழுதவாரம்பித்தார். ஸ்ரீயவர்களும் நடக்கப்போகும் நிகழ்ச்சியை எழுத ஆரம்பித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் இருவரும் எழுதி முடித்தனர். ஸ்ரீயவர்கள் தாம் எழுதினதை ப்ரமுகநகரத்தின்ரொருவரிடம் கொடுத்தார். சர்மாவும் கொடுத்தார். அந்த ருரஹஸ்தர் ஒரு அழகான பையில் அவை இரண்டையும் வைத்து சீல் வைத்து மறுநாள் மாலையில் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார். ஸ்ரீகளவர் உத்தரவின்படி வித்யாபீடத்தில் ப்ரபஞ்ஜன சர்மாவிற்கு ஸகலவித வஸதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீகளவர் மாலை தீபாராதனைக்குப் புறப்பட்டார்.

காலையில் 10 மணியிருக்கும். ஸ்ரீமடத்தில் வெகு வைபவம். தஞ்சாவூரின் அரசன் சவ்வப்ப நாயகர், அவருடைய சகோதரன் சின்ன சவ்வப்ப, ராஜகுமாரன் அச்யுதப்ப நாயகர் முதலானோர் வந்துள்ளனர். ராஜகுமாரன் ஸ்ரீகளவருக்குப் பாதபூஜை செய்து கொண்டிருக்கிறான். வித்வான்களின் கூட்டம், பிரமுக ருக்ஹஸ்தர்கள், அரசாங்க அதிகாரிகள், யாவரும் வீற்றிருக்கின்றனர். ஸ்ரீகளவரின் இரு பக்கமும் நின்று ராஜ சகோதரர்கள் சாமரம் வீசிக்கொண்டிருக்கின்றனர். ராஜகுமாரன் அச்யுதப்ப நாயகர் பக்தியுடன் பாதபூஜை செய்து விலை மதிக்க முடியாத நவரத்தினங்கள், தங்க நகைகள், வஸ்திரங்கள் அர்ப்பித்து, தயாராக வந்துள்ள கிராமதான தாமிர சாஸனத்தை ஸ்ரீயவர்களின் பாதாரவிந்தங்களில் அர்ப்பித்து நமஸ்கரித்து விக்ஞாபித்தான்.

அச்யுத:- பூஜ்ய குருவர்யரே, தங்களின் கருணையின் புத்திரனான நான் எனது பெயர் நிலைக்கும்படி தமது சேவை செய்ய வெகு நாட்களாக ஆவல் கொண்டிருந்தேன். பூஜ்ய தந்தை எனது அபிலாஷை நிறைவேற இங்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


என்னை அழைத்து வந்துள்ளார். வெகு நாளைய விருப்பம் இன்று நிறைவேறிற்று. பாதஸேவகன் தங்களுக்குக் கொடுக்கும் அரிவிலிமங்கலம். *(அச்யுதப்ப ஸமுத்ரம்) கிராமதானத்தை ஏற்றுக்கொண்டு அனுக்ரஹிக்குமாறு ப்ரார்த்திக்கிறேன்.

சவ்வப்ப சகோதரர்கள் குமாரனின் குருபக்தியைக் கண்டு மகிழ்ச்சியுடனிருக்கின்றனர். இருவரின் கண்களில் நீர் ததும்பியது. பேச நாவெழவில்லை. ஆயினும் தழுதழுத்த குரலில் ராஜ சகோதரர்கள் விக்ஞாபித்தனர், "குருதேவா, குமாரன் தங்களுடைய அனுக்ரஹத்தினால் பிறந்தான். வம்சத்தின் கீர்த்தியை ப்ரகாசப்படுத்தப் புத்திரனே பிறப்பான் என்று முன்பு தாங்கள் அனுக்ரஹித்தது உண்மையாயிருப்பதை இன்று கண்ணாரக் காணுகின்றோம். ராஜ குமாரனின் வெகுதினங்களின் விருப்பத்தை நிறைவேற்ற நேற்று மாலை தீர்மானித்து கிராமதான சாஸனத்தை எழுதிக்கொண்டு இங்கு வந்தோம். குமாரன் தமது கிருபைக்குப் பாத்திரனானான். அவனது எதிர்கால உன்னதி-மங்களங்கள் தம்மைச் சேர்ந்தவை. குருஸந்நிதியில் அதிகம் சொல்லச் சக்தரில்லை. குமாரன் அர்ப்பித்துள்ள கிராமதானத்தை ஏற்றுக்கொண்டு அனுக்ரஹிக்கக் கோருகிறோம்."

ஸ்ரீகளவர்கள் மனமார அச்யுதப்பனின் தலையைத் தடவிக்கொடுத்து ஆசீர்வதித்துக் கொண்டே இவ்வாறு சொன்னார். "குமாரா! உனது தெய்வபக்தி, குருபக்தி, தர்ம சிரத்தைகளைக் கண்டு நமக்குப் பரமானந்தமாயிற்று. "धर्मो रक्षति रक्षितः" என்னும் வசனம் எல்லாக் காலத்திலும் நினைவிலிருக்கட்டும். ஜகத்தில் தர்மத்திற்கு சமானமானது வேறெதுவுமில்லை. ராஜர்கள் தர்மத்தில் அக்கரையுடனிருந்தால் ப்ரஜைகளும் தர்மமார்க்கத்தைக் கடைபிடிப்பார்கள், அதனால் தேசத்தில் சுபிக்ஷம், அமைதி, ஸமாதானம் முதலியவை நிலைக்கும். தேவதைகள் சந்தோஷமடைந்து சன்மங்களமுண்டாக அனுக்ரஹிப்பார்கள். இந்த உத்தம மார்க்கத்தைப் பின்பற்றியே சவ்வப்ப பந்துக்கள்

---

*Epigraphica Indica. Vol. XII-1913-14
- Arivilimangalam Plates Srirangaraja-I
Inscription of the Madras Presidency.
Mysore Archaeological Report - 1944

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ப்ரஜைகளுடைய அன்புக்குப் பாத்திரரானவர் களென்றும், தர்ம ரக்ஷகர்களென்றும் பெயர் பெற்றுள்ளனர். அவர்களுடைய மார்க்கத்தை நீயும் பின்பற்றுவது உண்மையில் பாராட்டத்தக்கதாகும். ஸ்ரீமூலராமசந்திரர் மிகவும் திருப்தியடைந்துள்ளார். கேள்-தன்னுடைய விசேஷமான ஸாந்நித்யமுள்ள ஸத்புத்திரனையே உனக்கு மூலராமன் கருணைபுரிவார். உனது எதிர்கால புத்திரன் ஸ்ரீராம சந்திரரின் அனுக்ரஹத்தினால் அவனைப்போலவே தைர்யம், உதாரகுணம், ப்ரஜா நன்மை, ஸத்யம், நியாயம், தர்மம், சிரத்தை முதலிய நற்குணபூர்ணனாக நாயக வம்சத்தினரின் கீர்த்தி திக்குகளிலெல்லாம் பரவும்படி செய்வான். அவன் காலத்தில் வித்தை கலைகளுக்குத் தஞ்சாவூர் தாயின் ஸ்தானமாகும். பண்டிதருக்கு அடைக்கலம் கொடுப்பவனாக அகண்ட கீர்த்தியை அளிப்பான்".

ராஜ ஸகோதரர்களும் அச்யுதப்ப நாயகரும் ஸ்ரீயவர்களின் அனுக்கிரஹ பூர்ணமான பவிஷ்ய வாணியைக்கேட்டு ஆநந்தத்தினால் நிறைந்திருந்தனர். பக்தியுடன் ஸ்ரீகளவர்களுக்கு நமஸ்கரித்து, "அனுக்கிரஹம் பெற்றோம்'' என்று தெரிவித்தனர். ஸ்ரீயவர்கள் நேரமாகிவிட்டதால் பூஜாராதனைக்கு எழுந்தருளினார்.

சாயங்காலம் 5 மணி, ஸ்ரீமடத்தில் நூற்றுக்கணக் கானவர்கள் கூடியிருக்கின்றனர். இன்று ஸ்ரீகளவரும் ப்ரபஞ்ஜன சர்மாவும் எழுதிவைத்த பவிஷ்யத்தின் (வரப்போகும்) உண்மை-பொய்களின் மற்றும் ஜ்யோதிஷ சாஸ்திரத்தின் பாண்டித்யத்தின் நிர்ணயமாகப் போகும் செய்தி ஊரில் பரவியிருந்தது. ஜனங்கள் ஸ்ரீயவர்களின் ஜோதிட சாஸ்திரத்திறமையை அறிவதற்காக ஆர்வம் கொண்டுள்ளனர். தஞ்சாவூரரசன் தமது ஆஸ்தான பண்டித ப்ரபஞ்ஜன சர்மாவே ஸ்ரீய்வர்களின் போட்டியாளர் என்றறிந்து அஸமாதானமடைந்த போதிலும் ஸ்ரீயவரின் ஜோதிட சாஸ்திர பாண்டித்யம் அவர் மூலமாக வெளிப்பட்டிருப்பது என்பதையறிந்து சமாதானமடைந்து ஸ்ரீகளவரின் ஸந்நிதியில் உட்கார்ந்திருந்தார். ப்ரபஞ்ஜன சர்மாவும் அமர்ந்துள்ளார். நகரப்ரமுகர் பவிஷ்ய (எதிர்கால நிகழ்ச்சி) எழுதி வைத்திருந்த பையைக் கொண்டு வந்து ஸ்ரீயவர்களின் முன்வைத்து நமஸ்கரித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீகளவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்த பண்டிதரையழைத்துப் பையிலிருக்கும் பவிஷ்ய வசனத்தை வெளியே எடுத்துக் கொடுக்கும்படி முதலில் சர்மாவினுடைய ஓலையையும் பிறகு தான் எழுதியிருந்த ஓலையையும் படிக்கும்படி உத்தரவிட்டார். பண்டிதர் ப்ரபஞ்ஜன சர்மாவின் ஓலையைக் கையிலெடுத்து படிக்க ஆரம்பித்தார். அதில் சர்மா இவ்வாறு எழுதியிருந்தார்.

"நாளை காலையில் ராஜஸம்பந்திகளொருவர் ஸ்ரீய்வர்களுக்கு தானபத்திரத்தை ஸமர்ப்பிப்பார்: இது ஸத்யம்".

பவிஷ்யம் ஸ்பஷ்டமாக (தெளிவாக) இல்லாதபோதிலும் ஸத்யமானதாயிருந்தது. சபையோர் ப்ரபஞ்ஜன சர்மாவின் ஜ்யோதிஷ சாஸ்திரம் பாண்டித்யம், பவிஷ்ய நிர்ணயம் இந்தத் திறமைகளைக் கண்டு புகழ்ந்தார்கள். ஸ்ரீகளவர்கள் புன்னகையுடன், "பண்டிதரே, நமது ஓலையையும் படித்துவிடும்'' என்றார். ஸ்ரீயவர்களென்ன பவிஷ்யம் எழுதியிருப்பாரோ என்னும் ஆர்வத்தினால் சபையோர் நிச்சப்தமாக வீற்றிருந்தனர். பண்டிதர் படிக்க ஆரம்பித்தார். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

''ப்ரபஞ்ஜன சர்மா நாளைக்கு நமக்கு ராஜஸம்பந்திகளொருவர் தான பத்ரத்தை வழங்கப்போகிறார் என்று பவிஷ்ய நிகழ்ச்சி எழுதியிருக்கிறார். உண்மை. நாளை நமக்குத் தஞ்சாவூரின் ராஜகுமாரர் க்ராமதானம் செய்து தாமிர சாஸனத்தை ஸமர்ப்பிக்கப்போகிறார். நாளை நமது இந்த பவிஷ்ய ஓலையைப்படித்து முடிக்கும் வேளையில் தஞ்சாவூரிலிருந்து ப்ரபஞ்ஜன சர்மாவின் நண்பரொருவர் வந்து அவருக்குப் புத்திரன் பிறந்த சுப சமாசாரத்தைத் தெரிவிக்கப்போகிறார். இது ஸத்யம்".

ராஜ ஸகோதரர்கள், ராஜகுமாரன், சபையோர் ஆகியோர் ஸ்ரீகளவர் எழுதிய பவிஷ்யத்தை (எதிர்கால நிகழ்ச்சியை)க்கேட்டு ஆச்சரியமடைந்தனர். ப்ரபஞ்ஜன சர்மாவோ திக்ப்ரமையடைந்தார். அதே சமயத்தில் ஜனங்களின் கூட்டத்தில் வழி ஏற்படுத்திக்கொண்டு நடுவயதான ப்ராம்மணன் ஒருவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

முன்வந்து சர்மாவைப் பார்த்து, "ஸ்வாமி, சர்மா அவர்களே, மகிழ்ச்சிகரமான செய்தி. தங்களுக்கும் புத்திரன் பிறந்திருக்கிறான். நான் இங்குவரும் விஷயமறிந்து உங்கள் வீட்டினர் வந்து தங்களுக்கு இந்தச் சுப செய்தியைத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள்" என்றார். இந்த செய்தி கேட்டு ஜனங்கள் ஸ்ரீயவர்களின் ஜோதிட சாஸ்திர ப்ரவீணத்வத்தைக் கண்டு ஆனந்தம் மீறி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ப்ரபஞ்ஜன சர்மா ஸ்ரீவிஜயீந்திரரின் பாதகமலத்தில் நமஸ்காரம் செய்து தழுதழுத்த குரலில், மஹாஸ்வாமி, ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் எனக்கு நிகரில்லையென்று கர்வமடைந்திருந்தேன். தாங்கள் இன்று அதை நிவாரணம் செய்து விட்டீர்கள். தாங்கள் சாக்ஷாத் தேவகுருவின் அபராவதாரம்! ஸ்வாமி நான் எழுதின பவிஷ்யத்தைக் காட்டிலும் ஸ்பஷ்டமாகத் தாங்கள் எழுதியுள்ளீர்கள். இதல்லாமல் எனக்கு புத்ரோத் பத்தியான மங்கள விஷயத்தை எழுதி பவிஷ்யத்தைச் சொல்லும் ஜோதிடனின் பவிஷ்யத்தையே சொல்லி ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் தமக்குள்ள அனுபவமுதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளீர். தமது பாண்டித்யத்தின் முன் நான் கேவலம் அற்பன். உண்மை. தாங்கள் ஸகல வித்யாசக்ரவர்த்திகளே ஆவீர். இதோ தங்களுக்கு எனது கோடி நமஸ்காரங்கள்" என்று சொல்லி ஸ்ரீயவர்களுக்கு மற்றொருமுறை நமஸ்கரித்தார்.

ஸ்ரீபாதங்களவர் ப்ரபஞ்ஜன சர்மாவை வித்வானைக் கௌரவிக்க வேண்டிய முறையில் கௌரவித்து அனுப்பினார். ராஜஸகோதரர்கள் மற்றும் ராஜகுமாரன் ஸ்ரீயவர்களின் புதிய வெற்றியினால் மகிழ்ச்சியடைந்து, ஆசிர்வாதம் பெற்றுத் தஞ்சாவூருக்குப் பிரயாணமானார்கள். ஸகல ஜனங்களுக்கும் ஸ்ரீயவர்கள் மந்த்ராக்ஷதை அளித்தார். எல்லோரும் ஸ்ரீகளவரைப் பாராட்டிக் கொண்டே தங்கள் இல்லம் சென்றனர்.

## 54. ஸாரஸ்வத தர்மபீட ஸ்தாபனசார்யர்.

ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் தலைமையில் கும்பகோணத்தின் ஸமஸ்கிருத வித்யாபீடத்தின் வருடாந்திர விழா விஜயீந்திர தீர்த்தரின் சிறப்பான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வழிமுறையில் வைபவத்துடன் நிறைவேறியுள்ளது. வித்வத்ப்ரபஞ்சத்தில் பெயர் பெற்ற கும்பகோணத்தின் வித்யாபீடத்தின் வருடாந்திர விழா அகண்ட பாரதத்தின் பண்டிதர்களுக்கு ஒரு பெரிய வசீகரமானது. வருடத்திற்கொருமுறை கும்பகோண நகரவாஸிகளுக்கு பாரததேசத்தின் வெவ்வேறு மாகாணங்களிலிருந்து வரும் பண்டிதர்கள், கவிகள், அஷ்டாவதானி, சதாவதானிகள், பாடகர்கள் - வாத்யகாரர்கள் முதலிய கலைஞருடன் கலந்து கூடி ஸரஸ்வதி விலாஸ உற்சாகிகளாய் மகிழ்ச்சியின் மிகுதியால் ஆடிப்பாடி மகிழும் பாக்யம் கிடைத்துக் கொண்டிருந்தது. அவ்வாறே பாரத நாட்டின் மூலை மூலைகளிலிருந்து வரும் பண்டிதர் - கவிகளுக்கு தங்கள் பாண்டித்யத் திறமைகளை வெளிப்படுத்துவதற்குத் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்துக் கொண்டிருந்ததால் ஆயிரக்கணக்கான வித்வான்களுக்குக் கும்பகோணத்தின் வித்யாபீடத்தின் வருடாந்திர விழாவில் பங்கு கொள்ளுவது ஒரு பெருமைக்குரிய விஷயமாகியிருந்தது.

வைபவ பூர்ணமாக நடைபெறும் வருடாந்திர விழாவிற்கு இந்த வருடம் தேச விதேசங்களிலிருந்து பண்டிதர்கள், கவிகள், கலைஞர்கள், ராஜப்ரதிநிதிகளையும் தவிர இரண்டு தர்ம பீடாதிபதிகளும் வந்து பங்குகொண்டது ஒரு சிறப்பு அம்சமாகவிருந்தது. காசி மற்றும் கோமாந்தகத்திலிருந்து வந்துள்ள தேஜஸ்விகளும் வித்யா விசாரதருமான அந்த பீடாதிபதிகள் கும்பகோணத்தின் நகரத்தினரின் மனதை வெகுவாக ஆகர்ஷித்துள்ளனர். அவர் "ஸாரஸ்வத தர்மபீட ஸ்தாபனா சார்ய" என்னும் பெருமைக்குப் பாத்திரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் சிஷ்யராக இருப்பது நகரத்தாருடைய ஆர்வத்தைத் தூண்டுவதற்குக் காரணமாயுள்ளது என்னலாம். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் சிஷ்யரான கௌடஸாரஸ்வத ப்ராம்மண வகையைச் சேர்ந்த அந்த யதீச்வரரின் அந்தப் பரம்பரையின் மற்றும் மடங்களின் இதிஹாஸம் கதாநாயகரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் மேன்மையைப் பிரகாசிக்கச் செய்வதால் அதை இங்கு நிரூபித்திருப்பது தவறாகாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

*ஆரியர்களுடன் பாரத நாட்டிற்குக் குடியேறியவரென்று சொல்லப்படுகின்ற.* இந்த ப்ராம்மண சமூகத்தின் இதிகாசம் வெகுரஸ்மாயுள்ளது. ஸாரஸ்வத தேசமென்று பிரஸித்தி பெற்ற ராஜஸ்தானத்தின் ஸரஸ்வதி நதிக்கரையில் அநேக வேத. வேதாங்க பண்டிதோத்தமர்களான ப்ராம்மணர்கள் வஸித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் வாஸம் ஸரஸ்வதி தீரப்ரதேசமானதால் அவர்களுக்கு ஸாரஸ்வத ப்ராம்மணரென்று பெயராயிற்று. ஒரு பயங்கரப் பஞ்சகாலத்தின் கொடுமையினால் இந்த ப்ராம்மண வர்க்கத்தினர் ஆகாரம், உடை முதலிய வஸதிகளின் குறைவினால் திக்குத் தெரியாமல் தவித்து உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி பாரத நாட்டின் வெவ்வேறு ப்ரதேங்களில் குடியேற வேண்டியதாயிற்று. ராஜஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வந்த இந்த ப்ராம்மணர்களின் கூட்டம். வங்காளம் பீஹார் முதலிய இடங்களுக்குச் சென்று சேர்ந்தது. கௌட தேசத்தில் அவர்கள் பிறகு ப்ரஸித்தமடைந்ததினால் அந்த வர்க்கத்திய ஜனங்களுக்கு கௌட ஸாரஸ்வத''ரென்று பெயருண்டாயிற்று. இந்தக் கூட்டத்தின் இன்னும் சிலவர்கள் மங்களூர், அனந்தசயனம், கொச்சி, கோமாந்தக (கோவா) முதலிய இடங்களில் வந்து குடியேறினார்கள்.

இந்தக் கூட்டத்தினரைப் பற்றி அநேக கதைகள் பரவியுள்ளன. ஒரு கதைப்படி இந்த வர்க்கத்தினர் ஸாரஸ்வத முனி என்று சொல்லப்பட்ட ததீசிரிஷிகளின்

---

*பாரத நாட்டிற்கு வெளியிலிருந்து குடியேறி வந்தவர்களென்னும் வாதத்தை பாரதத்தின் ஸத்பரம்பரையில் அன்பும் மரியாதையுமுள்ளவர்யாரும் ஒப்புக்கொள்வதில்லை. பரதேசத்தவர்களுடைய ஆட்சியில் அவர்களுடைய வித்தை விமரிசன க்ரமங்களினால் தூண்டப்பெற்று அவர்கள் காண்பித்த பாதையைப் பின்பற்றி விமர்சனம் செய்து தற்காலத்தியவர்கள் (Modernists) நிச்சயித்திருக்கும் இந்த வாதத்தை இன்று சுதந்திர பாரதத்தின் நமது விமர்சக பண்டிதர்கள் மறு விமர்சனம் செய்து ஸரிப்படுத்த வேண்டியது அத்யாவசியமென்று நமது அபிப்ராயம்:- நூலாசிரியர்.

இன்று ஸ்ரீமத்வமதத்தின் ஒரு அங்கமாயுள்ள கௌட ஸாரஸ்வத ப்ராம்மண வர்க்கத்தின் இதிகாசாதிகளின் விஷயமாக பூரா (ஆதியோடந்தமாக) விமரிசை செய்த ஆராய்ச்சி அத்தியாவசியமானது. மாத்வ பண்டிதர்கள், விமரிசையாளர்கள், இந்தத் திசையில் முயற்சி செய்து அந்த வர்க்கத்தின்ரின் இதிகாச (வரலாற்றின்) விஷயத்தில் அதிக விவரங்களை வெளியிடுவார்களென விரும்புகிறோம். -நூலாசிரியர்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy


அனுக்ரஹத்தினால் வேத-வேதாங்க பாரங்கதர் (பண்டிதர்களாய்) யக்ஞம்-பிக்ஷை, பாடப்ரவசனங்கள் செய்து கொண்டு "ஸாரஸ்வதப்ராம்மண"ரென்று ப்ரஸித்திபெற்றிருந்தனர். ஸகல க்ஷத்ரிய குலங்களையும் நிர்மூலம் செய்து தேசத்தைத் தானம் செய்த பிறகு ஸ்ரீபரசுராமர் கோமாந்தகத்தைச் சமுத்திர பாகத்திலிருந்து மேலெடுத்து, அங்கு அநேக யக்ஞ-யாகாதிகளை நிறைவேற்றியபொழுது ஸ்ரீபரசுராமர் யக்ஞத்திற்காக அநேக கௌட ஸாரஸ்வதப்ராம்மண பண்டிதர்களை அழைத்தாரென்றும், அதன்படி கோமாந்தகத்திற்கு வந்த ஸாரஸ்வத ப்ராம்மணர்கள் ஸ்ரீபார்க்கவராமர் நடத்தின யக்ஞங்களில் பங்கு கொண்டு ஸ்ரீபரசுராமதேவரின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாய் கோமாந்தகத்திலேயே குடியேறிவிட்டதாக வேறொரு கதையினால் தெரியவருகிறது. *.

ஸ்ரீமன் மத்வாசார்யர் வைதிக ஸத்வைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் புனருத்தாரணம் செய்து த்வைத ஸித்தாந்த தத்வங்களின் ப்ரசாரத்திற்காக திக்விஜயத்தை மேற்கொண்டு கோமாந்தகத்திற்கு எழுந்தருளியபொழுது ஸ்ரீமதாசார்யரின் விசேஷ தேஜஸ்-வர்ச்சஸ் முதலியவைகளினால் வசப்பட்ட கோவாவின் சாரஸ்வத ப்ராம்மணர்கள் ஆசார்யவர்யரின் சிஷ்யத்வத்தை ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு ஸாரஸ்வத ப்ராம்மணரைச் சிஷ்யர்களாக ஏற்றுக்கொண்டபொழுது அந்த வர்க்கத்தவர்கள் பக்தி-மரியாதையுடன் அர்ப்பித்த 100க்கணக்கான வாழைப்பழங்களை உண்டு குடம் பாலைக் குடித்துத் தமது ஜீவோத்தமத்துவத்தையும், தானே 'வாயு தேவனென்றும், தமது வயிற்றில் ஜகத்தையே பஸ்மமாக்கவல்ல அங்குஷ்டப்ரமாணத்தையுடைய (கட்டைவிரல் பருமனுள்ள) அக்னி உள்ளது என்பதைக் காண்பித்தார் என்று ஐதீகமிருக்கின்றது. *

ஸ்ரீமதாசார்யர் இந்த ஸாரஸ்வத ப்ராம்மணர்களின் பக்தி, சிரத்தை, ஸ்ரீத்வைத தத்வத்திலுள்ள நம்பிக்கைகளைக் கண்டு மகிழ்ந்து அவர்களுக்கு

---

* "ஸ்ரீசுமத்வவிஜய"த்தில் ஆசார்யர் காண்பித்த அதிசயத்தைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. "अंगुष्टमात्रंजठरे प्रतिष्ठित"...." ஸ்ரீமத்வவிஜயம்".

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மந்த்ரச்முத்ராதாரணம், குருபதேசம், வைஷ்ணவ தீக்ஷையருளி தத்வோபதேசத்தினால் அவர்களை அனுக்ரஹித்துள்ளனராம். இதுபோல் ஆசார்யரின் சஞ்சாரக்ரமத்தில் மற்ற பாகங்களிலிருந்த கௌடஸாரஸ்வத ப்ராம்மணர்கள் ஆசார்யரின் சிஷ்யர்களானார்கள். அன்றிலிருந்து இந்த வர்க்கத்தினர் மாத்வ ஸமாஜத்தின் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வந்துள்ளனர்.

ஸ்ரீமதாசார்யருக்குப்பின் அவருடைய பட்ட சிஷ்யர்களும் மஹாஸமஸ்தானாதிபதிகளும் ஆன ஸ்ரீபத்மநாப தீர்த்தரே முதலானவரும் மற்றும் ஸ்ரீஜயதீர்த்தரும் பிறகு அந்த ஸத்பரம்பரையில் வந்த ஸ்ரீராம்சந்திர தீர்த்தரின் பட்டத்தின் சிஷ்யரும் ஸ்ரீமதாசார்ய ஸ்ரீமத்டீகாக்ருத்பாதரின் மஹாஸ மஸ்தானமான "பூர்வாதிமட"த்தின் வித்யா ஸிம்ஹாஸனாதீச்வரருமான ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் முதலியவர்களின் சஞ்சாரக்ரமத்தில் இந்த கோமாந்தக, மங்களூர், கொச்சி, திருவாங்கூர் (கேரளம்) காசி முதலிய பாகங்களிலிருந்த ஸாரஸ்வத ப்ராம்மணர்கள் இந்த மஹானுபாவர்களிடம் முத்ராதாரணம் - குருபதேசங்களை ஏற்றுக் கொண்டு அந்த மஹா பரம்பரையின் சிஷ்யர்களாய் அனுக்கிரஹிக்கப்பட்டனர்.

ஸ்ரீமதாசார்யரின் இந்த மஹாஸமஸ்தானத்தின் பரம்பரையில் மானஸபூஜாச்ரேஷ்டரான, ப்ரதிவாதி பயங்கரரும், க்ஞானபக்தி வைராக்யம் நிறைந்தவரான மற்றும் தபோமூர்த்திகளென்று உலகம் போற்றும் உத்தமரான ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் தமது தீர்த்தயாத்திரை க்ரமத்தில் இந்த ஸாரஸ்வத வர்க்கத்தின் ப்ராம்மணரில் விசேஷ அனுக்ரஹம் செய்துள்ளார். ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் சிஷ்யோத்தாரஸஞ்சாரக்ரமத்தினால் கும்பகோணத்திற்கு ப்ரிய சிஷ்யரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருடன் எழுந்தருளி அங்கு ஸம்ஸ்கிருத வித்யாபீடத்தை ஸ்தாபித்த பிறகு இரண்டு ஸ்ரீபாதங்களவரின் கருணைக்குப் பாத்திரரான நூற்றுக்கணக்கான கௌடஸாரஸ்வதப்ராம் மணர்கள் வங்காளம், பீஹார், கொச்சி, திருவாங்கூர், மங்களூர், கோமாந்தகம் முதலிய இடங்களிலிருந்து கும்பகோணத்திற்கு வந்து ஸ்ரீயவர்களின் வித்யாபீடத்தில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ந்யாய, மீமாம்ஸா, வ்யாகரணம் முதலிய சாஸ்திரங்களை ஸ்ரீமஹா ஸமஸ்தானத்தின் ஸம்பிரதாயக்ரமங்களை அனுஸரித்து தப்தமுத்ராங்கனம் குருபதேசம் பெற்று வேதாந்த சாஸ்திரத்தை உபய ஸ்ரீபாதங்களவரிடம் கிரமப்படி அத்யயனம் செய்து மஹா பாண்டித்யத்தைச் சம்பாதித்துச் சென்றனர்.

ஸ்ரீஸுரேந்திரரின் ஆணைப்படி ஸ்ரீவிஜயீந்திரர் உடுப்பியாத்திரை மேற்கொண்டு அங்கு ஸதீர்த்தரான ஞானிகுல முகுடமணிகளான ஸ்ரீவாதிராஜ தீர்த்தரினால் வெகுவாகக் கௌரவிக்கப்பட்டு மங்களூருக்கு வந்தபொழுது ஸ்ரீமஹாஸம ஸ்தானத்தின் சிஷ்ய கோடிகளைச் சேர்ந்த் ஸாரஸ்வத ப்ராம்மண வம்சத்தவர்கள் தங்கள் குல குருவை விசேஷ வைபவத்துடன் வரவேற்று ஸ்ரீமடத்தின் ஸம்ப்ரதாய முறையையனுஸரித்து ஸ்ரீமூலராமப்ரபுவின் பூஜாராதனை, பாத பூஜைகளினால் குருகளை சேவித்தது மாத்திரமல்லாமல் முல்கியில் தங்கள் வர்க்கத்தினர்களுக்காக நிறுவப்பட்ட தேவாலயத்தில் ஸ்ரீவிஜயீந்திரதீர்த்தரின் அம்ருத ஹஸ்தத்தினால் ஸ்ரீவேங்கடேச்வர் ஸ்வாமியின் பிரதிஷ்டை செய்து ஸ்ரீயவர்களின் அனுக்ரஹத்தைச் சம்பாதித்து ஆனந்தித்தனர்.*

பிறகு ஸ்ரீகளவர் கேரளத்திற்கு திக்விஜயம் செய்தபொழுது அநந்த சயனத்தில் மந்திரவாதியை ஜயித்த பிறகு மற்றும் கொச்சி முதலிய இடங்களைச் சேர்ந்த ஸாரஸ்வத ப்ராம்மணர்கள் பக்தி-மரியாதையுடன் கௌரவத்துடனும் வரவேற்று பூஜாராதனைகளை நிறைவேற்றினதுமல்லாமல் கொச்சியில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டினர். ஸ்ரீய்வர்கள் அவர்களின் ப்ரார்த்தனையின்படி ஸ்ரீமடத்தின் ஸம்ப்ரதாய க்ரமங்களுக்குத் தகுந்தவாறு கொச்சியில் சாதுர்மாஸ்ய விரதத்தைப் பூர்த்தி செய்தார். அதே சமயத்தில் ஸாரஸ்வத ஜனாங்கத ப்ரார்த்தனைப்படி கொச்சியில் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் ஸ்ரீகேசவ (ஸ்ரீநிவாஸ) ஸ்வாமியின் பிரதிஷ்டையைத் தன் கர கமலங்களினால்

---

*மங்களூர் ப்ராந்தியத்தின் முல்கி க்ராமத்திலிருக்கும் ஸ்ரீவேங்கடேச ஸ்வாமி கோவிலிருக்கும் சில சிலா சாஸனத்தினால் இந்த விஷயம் ஸ்பஷ்டமாகும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy


நிறைவேற்றினார்.* ஸாரஸ்வத வம்சத்தினர் இதே ஸந்தர்ப்பத்தில் தங்கள் குலகுருவான ஸ்ரீஸுரேந்திர விஜயீந்திர தீர்த்தரவர்கள் தூரதேசத்திலிருப்பதினால் தமது வர்க்கத்தினருக்கு யாத்ரா-குருபதேசம் முதலிய பாக்யம் நிரந்தரமாகக் கிடைக்காததால் ஸ்ரீமஹாஸமஸ்தானத்தின் தார்மிக அதிகாரமும் பரம்பரைக்குக் கட்டுப்பட்ட (நியமங்களுக்குக் கட்டுப்பட்ட) ஸாரஸ்வத ப்ராம்மணருக்காகவே ஒரு தர்ம பீடத் (மடம்)தை நிறுவிக்கொடுத்து அனுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்த பொழுது, ஸ்ரீவிஜயீந்திரர் தமது குருபாதரின் அனுமதியுடன் அவர்களுடைய அபிலாஷையை நிறைவேற்ற அனுகூலமாகுமென்று சொல்லியதனால் அந்த வர்க்கத்தின் ப்ரமுகர்கள் மற்றும் பண்டிதர்களும் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு விக்ஞாபனப் பத்திரிகையை எழுதி கும்பகோணத்திற்கு ப்ரதிநிதியுடன் அனுப்பினார். ஸ்ரீஸுரேந்திரர் அவர்களின் வேண்டுகோளைக் கேட்டு ப்ரிய சிஷ்யரான ஸ்ரீவிஜயீந்திரருக்கு "ஸாரஸ்வத வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பண்டிதரைத் தேர்ந்து அவருக்கு ஸந்யாஸாச்ரமமளித்து ஒரு மடத்தை நிறுவிக் கொடுக்க வேண்டுமென்று" ஸ்ரீமுகம் எழுதியனுப்பினார்.

குரு ஸுரேந்திரர் ஆணைப்படி ஸ்ரீவிஜயீந்திரர் முன்பு தம்மிடத்தில் (வித்யாபீடத்தில்) சாஸ்திர வித்யா பயின்ற உத்தம பண்டிதராயிருந்த ஒரு தேஜஸ்வீ பண்டிதரை ஸாரஸ்வத வர்கத்தினரின் அபிலாஷைப்படித் தேர்ந்து எடுத்து சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் பூர்த்தியான பிறகு அவரைக் காசிக்கு அழைத்துப்போய் அவருக்கு ஸன்யாஸம் கொடுத்து, "ஸ்ரீயாதவேந்திர தீர்த்தரென்னும் உபநாமத்தினால் மந்த்ரமுத்ராதாரண, குருபதேசாதிகளினால் அவரை ஸாரஸ்வத ப்ராம்மண வர்க்கத்தினரின் குருவாகச் செய்தார். மற்றும் ஸ்ரீஸுரேந்திரரின் ஆணையின்படி காசியில் கங்கா தீரத்தில் ஒரு மடம்

---

*Madras Arch. Report மேலும் சுமார் 1963-64ல் ஹிந்து பத்திரிக்கையின் ஒரு ஞாயிற்றுக்கிழமை ப்ரதியில் (Sunday edition) கொச்சியின் ஸ்ரீகேசவ ஸ்வாமி கோவிலைப் பற்றிப் பரிசயம் பற்றிய கட்டுரையில் இந்த விஷயம் மற்றும் ஸாரஸ்வத ப்ராம்மணர்களும் ஸ்ரீவிஜயீந்திர-ஸுதீந்திர தீர்த்தர் மற்றும் ஸ்ரீமந்த்ராலய ஸ்ரீபாதங்களவரைப் பற்றி ரஸமான விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. ஸ்ரீகாசி மடத்தவர் இந்த இதிகாசத்தை இப்பொழுதும் சொல்லுகின்றார்கள் [illegible]

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

நிறுவின பிறகு அதற்குக் காசி மடமென்று பெயர்சூட்டி ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் ஸ்ரீயாதவேந்திரரை அந்த மடத்திற்கு அதிபதிகளாக்கி" ஸ்ரீஸாரஸ்வத தர்ம பீடஸ்தாபனாசார்யரென்னும் புகழொடு ப்ரபலமானார்.

இதைப் போலவே கோமாந்தகத்தின் பர்த்தகாளி ஸ்ரீஜீவோத்தம கோவர்த்தன பீடத்திற்கும் விஜயீந்திரருக்கும் குரு-சிஷ்ய சம்பந்தமிருந்து அந்தப் பீடத்தவர்கள் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் சிஷ்ய பரம்பரையவர்களாக ஜகத்தில் பெயர்படைத்தனர்.*

இவ்வாறு ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் சிஷ்யர்களும் அவரால் நிறுவப்பட்ட ஸ்ரீகாசிமடம் மற்றும் ஸ்ரீபர்த்காளி ஜீவோத்தம கோவர்த்தன பீடங்களிரண்டும் பாரதநாட்டில் பிரஸித்தமாக ஸாரஸ்வதப்ராம்மண ஸமாஜத்தின் அத்யாத்மிக, நைதிக, தார்மிக மற்றும் ஸாம்ஸ்க்ருதிக (கலாசாரம்) மறுமலர்ச்சிக்குக் காரணமாய், கீர்த்தி பெற்றுள்ளன. இவ்வாறு ஆவிர்பவித்துப்ரசித்தமான காசி மடம் மற்றும் கோவர்த்தன பீடங்களின் அதிபதிகளே கும்பகோணத்தின் வித்யா பீடத்தின் வருடாந்திர விழாவில் பங்கு கொண்டு ஸ்ரீஸுரேந்திர - விஜயீந்திர குரு பாதங்களின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரராகியுள்ள பாக்யசாலிகள்!

---

*காசி மடத்தவர் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரே தமது மடத்தின் ஸ்தாபகரான குருவென்று இன்றைக்கும் தமது பீடத்தின் வரலாற்றைச் சொல்கின்றனர். *காசி மடத்தவர் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரே தமது மடத்தின் ஸ்தாபகரான குருவென்று இன்றைக்கும் தமது பீடத்தின் வரலாற்றைச் சொல்கின்றனர்.

*கோவாவின் ஸ்ரீபர்த்தகாளி ஜீவோத்தம கோவர்த்தன மடாதீசராக இன்றும் அந்தப் பீடத்தில் விளங்கும் ஸ்ரீபாதங்களவர்கள், ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் அலங்கரித்த ஸ்ரீமதாசார்யரின் மஹாபீடத்திற்கும் தமது மடத்திற்கும் ஆரம்பத்திலிருந்தே குரு-சிஷ்ய சம்பந்தமுண்டென்றும், தமது மடத்தின் மூல புருஷர் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் சிஷ்யரும், அவரிடமே சாஸ்திராத்யயனம் செய்தவருமானவரல்லாமல் கும்பகோணத்தில் நடந்த விஜயீந்திர, ஸ்ரீலிங்கராஜேந்திரர் மற்றும் ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர்களின் வாக்யார்த்த ஸந்தர்ப்பத்தில் குருகளான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் பரமாக வாதத்தில் பங்கேற்று விஜயீந்திரரின் விசேஷ அனுக்கிரஹத்திற்குப் பாத்திரரானாரென்னும் வரலாற்றைச் சொல்லுகின்றனர். காசிமடம், ஜீவோத்தம கோவர்த்தன மடம் மற்றும் ஸ்ரீவிஜயீந்திரரின் மஹாபீடங்களுக்குள்ள சம்பந்தத்தைப் பற்றி இன்று அதிகமாக விமர்சாத்மக அத்யயனம் தேவையாக உள்ளது. -நூலாசிரியர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஏழு நாட்கள் வரை வருடாந்திர விழாவின் ஒரு அங்கமாக நடந்த வாக்யார்த்தம், காவ்யாலங்காரப் போட்டிகள், மாணவர்களினால் வெவ்வேறு நிகழ்ச்சிகள், வைபவத்துடன் நடைபெற்றன. காசி மற்றும் ஜீவோத்தம கோவர்த்தன பீடாதீசர்கள் பங்கேற்று ந்யாய வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களில் தமது பாண்டித்யத்தைக் காண்பித்து பண்டிதர் குழாம், வைதிக, லௌகிக, நகர மஹாஜனங்களின் கௌரவத்திற்குப் பாத்திரரானவை களைக் கண்டு ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் முறைப்படி வித்தையைப் புகழ்ந்து பேசும்பொழுது தமது சிஷ்ய பரம்பரையின் அந்த பீடங்களுக்கு அதிக ஸ்தானம் மரியாதை கௌரவங்கள் உண்டாகும் வித்தில் செய்ய அந்த இரண்டு பீடாதிபதி களுக்கு முத்ராதிகாரம், உபதேசாதிகாரத்தையும் வழங்கினதல்லாமல் பீடாதிபத்யத்தின் சின்னமான நகாரி, மேளங்கள், குடை, சாமரம், பல்லக்கு, மேனா முதலான விருதுகளை அனுக்ரஹித்தார். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் தமது சிஷ்யரான அந்த இரு மடாதிபதிகளுக்கும் ஸ்ரீகுருஸுரேந்திரர் அருளின் விருதுகளுடன் வருடாந்திர விழா முடிவில் ஊர்வலம் ஏற்பாடு செய்து தமது சிஷ்யரிடம் அன்பு, உதார குணங்களையும் வெளிப்படுத்தினார், நகரத்தினர், பண்டிதர்கள், "ஸாரஸ்வத தர்ம பீடஸ்தாபனாசார்யருக்கு ஜயமாகுக" என்று விஜயீந்திரருக்கு ஜயகோஷம் எழுப்பினர்.

நகரவாசிகள், ராஜப்ரதிநிதிகள், பண்டிதர் குழாம், ஸ்ரீமதாசார்யரின் மஹாபீடத்தின் மகிமை, ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் மற்றும் அவரது பட்ட சிஷ்யரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் வித்வத் ஜனங்களிடம் மரியாதை, சிஷ்யரிடம் அன்பைக் கண்டு பாராட்டினர். வருடாந்திர விழா விமரிசையாக நன்றாக நடைபெற்றது. உற்சவத்திற்காக வந்திருந்த பண்டிதர்கள், மாணவர்கள், கவிகள், பாடகர்கள் கலைஞர்கள், நகர ப்ரமுகர்களுக்கு விசேஷ முறையில் சன்மானம் சம்பாவனைகள் கொடுக்கப்பட்டன. நாலைந்து தினங்களான பிறகு ஸ்ரீகாசிமடத்தின் ஸ்ரீயாதவேந்திர தீர்த்தர் மற்றும் கோவாவின் ஸ்ரீஜீவோத்தம ஸ்ரீகோவர்த்தன மடாதிபதிகளிருவரும், இரண்டு குருபாதங்களவரிடம் விடைபெற்றுத் தமது இரண்டு பீடங்களுக்கும் சிறப்பான வகையில் கௌரவம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஏற்படுமாறு விருதுகளையளித்து அனுக்ரஹித் ததற்காக ப்ரணதிபரம்பரா பூர்வமாகத் தமது நன்றியைச் சமர்ப்பித்து ப்ரயாணத்தைத் தொடர்ந்தனர்.

## 55. வைணிக விஜயம். வீணை வாசிப்பில் வெற்றி!

தஞ்சாவூரரசனான சவ்வப்ப நாயகர் ராஜ குடும்பத்துடன் ஸ்ரீவிஜயீந்திரரின் வருகையை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் கூடியுள்ளனர்.

ஜனங்களின்று இவ்வளவு உற்சாகத்தோடு வரவேற்பதற்குக் காரணமென்ன? ஸ்ரீவிஜயீந்திரர் தஞ்சாவூருக்கு எழுந்தருளுவது இதே முதல் முறையல்ல. ஆயினும் ஏன் இவ்வளவு வைபவம்! உண்மை. அதற்குக் காரணமில்லாமலில்லை. நான்கைந்து நாட்களுக்கு முன்பு யாரோ வடநாட்டைச் சேர்ந்த வாத்தியக் கலைஞர் விஜய யாத்திரைக்காகப் புறப்பட்டு சங்கீத கலைக்குத் தாய் வீடான தஞ்சாவூருக்கு வந்து தமது கலையினால் ஆஸ்தான பண்டிதர்களையெல்லாம் ஜயித்து விட்டிருக்கிறார். மஹாராஜரே அவருக்கு ஜயபத்திரிகை அளிக்கும் ஸந்தர்ப்பம் வந்துள்ளது. தஞ்சாவூரின் கௌரவம் தக்க வேண்டுமானால் அவரை ஜயித்தே ஆகவேண்டும். ஆஸ்தானத்தின் க்யாதி வாய்ந்த வாத்யகாரர்களெல்லோரும் ஜயிக்கப்பட்டிருக்கையில் அவரை ஜயிப்பவர் யார்? இத்தகைய ஸந்தேக நிலையில் மஹாராஜாவிற்கு ஸ்ரீவிஜயீந்திரரின் ஸகல கலாப்ரவீணத்வம் நினைவிற்கு வந்தது. தன்னை உய்வித்தவரும் குருவும் தஞ்சாவூர் ராஜ்யத்தின் நலன் விரும்புபவருமான விஜயீந்திரரே தன் கௌரவத்தைக் காப்பாற்றுபவரென்று ஆலோசித்து ஸகல விஷயங்களையும் விக்ஞாபனம் செய்து தஞ்சாவூருக்கு வந்து போகவேண்டுமென்றும், தன்னை அனுக்ரஹிக்க வேண்டுமென்றும் விண்ணப்பக் கடிதம் எழுதி ஸ்ரீயவர்களுக்கு அனுப்பினார். ஸ்ரீயவர்களும் வருவதாக அபயம் கொடுத்திருந்தார். இதெல்லாம் முன் நடந்ததை அறிந்திருந்ததால் ஜனங்களில் இவ்வளவு ஆர்வம்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீயவர்களின் வாஹனம் வந்து சேர்ந்தது மஹாராஜா பக்தி-மரியாதையுடன் வரவேற்று அலங்கரிக்கப்பட்ட அம்பாரியில் ஸ்ரீயவர்களை அமர்த்தி ஊர்வலம் நடத்தி வைபவத்துடன் அரண்மனைக்கு அழைத்து வந்தார். சந்திர சாலையில் ஸ்ரீயவர்களைத் தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தனிமையில் அரசன் ஸ்ரீயவர்களிடத்தில் நடந்த கலைப்போட்டிகளைப் பற்றி விக்ஞாபித்து அபயம் கோரினான். ஸ்ரீயவர்கள் புன்னகையுடன் "ஸ்ரீமூலராமனின் ஸேவகனுக்கு எங்கே பயம்? கவலை வேண்டாம். ஸ்ரீஹரியின் கருணையினால் உன்னுடைய பெயரோடு தஞ்சாவூரின் கீர்த்தி அமரமாகும். நாளைக்கே சபையை ஏற்பாடு செய்" என்று ஆணையிட்டார்.

இரவில் தீபாராதனையான பிறகு புலித்தோல் ஆஸனத்திலமர்ந்து ஸ்ரீயவர்கள் த்யானத்திலாழ்ந்து அமர்ந்திருக்கிறார். சற்று நேரமாயிற்று. ஸ்ரீகளவர் புன்சிரிப்புடன் "யாரங்கே?" என்றழைத்தார். "உடனே வெள்ளிக்கோல் ஏந்திய வாயிற்காப்போன் வந்து வணங்கி நின்றான். பாருபத்திதாரரை அழைத்து வரும்படி ஸ்ரீயவர்கள் ஆக்ஞாபித்தார். வந்து வணங்கின பாருபத்திதாரரைப் பார்த்து "மஹாராஜரிடம் போய் உத்தரதேசத்துக் கலாவிதருடன் போட்டியிட்ட ஆஸ்தான கலைஞரை நாம் காணவிரும்புவதாகத் தெரிவித்து அந்தக் கலாவிதர்களை அழைத்துவாரும்" என்றார். பாருபத்திதாரர் சற்றுநேரத்தில் கலைஞர்களுடன் வந்து ஸ்ரீயவரை வணங்கினார். ஸ்ரீயவர் போட்டி விஷயமாக அவர்கள் மூலம் அறிந்து ஆஸ்தானத்தின் நாகஸ்வரம் வேணு, ஜலதரங்கம், வாத்யக்காரர்களுடன் தனித்தனியாகத் தனிமையில் பேசி ஒவ்வொருவருக்கும் சில விஷயங்களை உபதேசித்து அனுப்பினார். அந்தக் கலைஞர்கள் ஆச்சரியத்துடன், "ஸ்ரீயவர்கள் நமக்கேன் இதை உபதேசித்தார்" என்றெல்லாம் யோசித்துச் சென்றனர்.

ஸ்ரீயவர்கள் ஓய்விற்காக படுத்திருக்கிறார். ப்ரிய சிஷ்ய குமார திம்மண்ணன் ஸ்ரீபாதங்களவரின் கால் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான். ஏதோ யோசித்து ஸ்ரீயவர்கள் சொன்னார், "குமாரா, மிகவும் ஆயாஸமாக உள்ளது. எங்கே, சற்று வீணை வாசித்து நம்மைச்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சந்தோஷப்படுத்து'' என்றார். திம்மண்ணாசார்யன் ஆனந்தத்துடன் வீணை வாசிக்க ஆரம்பித்தார். ஒரு கீர்த்தனையான பிறகு புன்னகையுடன் ஸ்ரீயவர்கள், "திம்மண்ணா, உனது வீணாவாதனம் கேட்டு நமக்கும் வீணை வாசிக்க வேண்டுமென்று ஆசையாக உள்ளதப்பா! ''எனலும் ஆனந்தத்துடன்,'' மஹாப்ரபோ, வெகு நாட்களாக நான் வேண்டிக்கொண்டிருந்தேன். இன்று என்மீது கருணை வந்தது என்று விக்ஞாபித்தான். ஆனால் ஒரு ஷரத்து. நீயும் நான் வீணை வாசித்ததைப் போலவே வாசிக்க வேண்டும்! உம். உன் தந்தை கனகாசலாசார்யரின் வீணையும் இங்கே உள்ளதல்லவா? அதை இங்கு கொடு" என்றார்.

திம்மண்ணன் வீணையை ஸ்ரீயவர்களிடம் கொடுத்து; ''ஸ்வாமி, தம்முடன் வாசிக்கும் யோக்யதை எனக்குள்ளதா?" எனலும். ஸ்ரீயவர்கள் சிரித்துக் கொண்டு, "திம்மண்ணா! உன்னில் பொதிந்து கிடக்கும் வித்தையை நீ அறியமாட்டாய். உம், எடுத்துக்கொள் வீணையை, என்னைப் பின்பற்று'' என்று ஆணையிட்டு ஹிந்தோள (மாலகம்ஸ) ராகத்தை வாசிக்க ஆரம்பித்தார். திம்மண்ணன் மகிழ்ச்சியுடனும் ஆச்சரியத்துடனும் விசேஷமானதும் சிறப்பானதுமான ஸ்ரீயவர்களின் வீணை வாசிப்பைக்கேட்டு அவரைப் போலவே தானும் வாசிக்க ஆரம்பித்தான். கருணாரஸம் நிரம்பிய ஹிந்தோளராகத்தை விளம்பம் மற்றும் மத்யம காலத்தில் விசித்திர மூர்ச்சனைகளுடன் ஒரு ஆவர்த்தனம் ஆலாபனையை வாசித்தார். திம்மண்ணனும் அதைப்போலவே வாசித்தான். ஸ்ரீயவர்கள், ''குமாரா இப்பொழுது வாசித்த ராகவிந்யாஸத்தில் சில குறைகள் உள்ளன. இது சரியான க்ரமமில்லை,'' என்று சொல்லி வெவ்வேறு ஸ்வர ஸங்கதி மூர்ச்சனவின்யாஸங்களின் மூலம் விளம்ப, மத்யம மற்றும் துரிதகதிகளில் விதவிதமாக ஹிந்தோள ராகத்தை வர்சித்து விளம்ப, மத்யம, துரிதகாலங்களின் பரஸ்பர ஸம்மேளனத்தை விசித்திரமாக வாசித்தார். திம்மண்ணனும் இதற்கு முன் கேட்டிராததும் அஸாதாரணமாயுள்ள ஸ்ரீயவர்களின் கலை நிபுணத்வத்தையும் கண்டு மெய்மறந்தான். ஸ்ரீயவர்கள் சொன்னார், "வாசி, குமாரா" பாலகன் திம்மண்ணன் சற்று பயத்துடன் பின்வாங்க ஸ்ரீயவர்கள் அன்புடன் தான் வாசித்த கிரமத்தைத்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

திம்மண்ணனுக்குக் கற்பித்துத் தம்மைப்போலவே வாசித்ததைக் கண்டு அவனது திறமைக்குத் தலையாட்டி மெச்சி," குமாரா, நாம் இப்பொழுது ஒரு புதிய முறையில் வீணை வாசிக்கப்போகிறோம், இந்த க்ரமம் தேவலோகத்தில் மாத்திரம் ப்ரசாரத்தில் நடைமுறையில் உள்ளது. பூலோகவாஸிகளுக்கு அது கிடைக்காது. முன்காலத்தில் நாரதாம்சரான ஸ்ரீபுரந்தர தாஸருடன் ப்ரஹ்லாத அம்சரான குருபாத சந்திரிகாராயர் ஸங்கீத சாஸ்திரத்தைப் பற்றி விமர்சிக்கும்பொழுது அன்புடன் இந்த தைவீக க்ரமத்தை நமக்கு உபதேசம் செய்து பயிற்சி செய்வித்தார். ஒருமுறை அல்லது இரண்டு முறை மாத்திரம் அப்படிப்பட்ட வாய்ப்பு வந்தபொழுது காண்பிக்க வேண்டும். நாம் இப்பொழுது இந்த க்ரமத்தைக் காண்பித்துக் கொடுக்கிறோம். நீ அதைக்கற்றுக் கொள். ஸ்ரீஸரஸ்வதியின் அனுக்ரஹம் உன்னில் இருப்பதால் அது உனக்குக் கைகூடும். இதனைக் காண்பிக்கும் வாய்ப்பு உனக்கு சீக்கிரத்திலேயே வரப்போகிறது" என்று சொல்லி வீணையைக் கையிலேந்தி விசித்ரமாக வாசிக்கத் தொடங்கினார். அந்த பரம அற்புதமான நாத வெள்ளத்தில் மூழ்கி மந்திரத்தால் கட்டுண்டவன் போல் தன்னை மறந்து அமர்ந்திருக்கிறான் திம்மண்ணாசார்யன். ஒவ்வொரு ஆவர்த்தனம், அதில் ஸ்ரீகளவர் காண்பிக்கும் மூர்ச்சனை, ஸ்வரஸம்யோஜனம், இவைகளைக் கேட்டு அவன் மெய் சிலிர்த்தது. ஸ்ரீயவர்கள் திம்மண்ணனுக்கும் சமிக்ஞை செய்தார். திம்மண்ணனும் குருவர்யரைப் பின்பற்றினான். முதன் முதலாக முடியாத காரியமென்று தோன்றினாலும் ஸ்ரீயவர்களின் கிருபாகடாக்ஷப் பார்வையினால் உடம்பில் அது ஏதோ ஒரு ப்ரபல சக்தி சஞ்சரிக்கத் திம்மண்ணன் தன்னுணர்வில்லாமலேயே குருவை எளிதாகப் பின்பற்றவாரம்பித்தான். சுமார் ஒன்றிரண்டு மணி நேரம் தொடர்ந்து பயிற்சி நடைபெற்ற பிறகு ஸ்ரீயவர்கள் திம்மண்ணனைக் கீழே இறக்கி, "திம்மண்ணா, ஜகத்தில் இனி உன்னை ஜயிப்பது யாருக்கும் முடியாத காரியம்! இந்த க்ரமத்தை நன்றாகப் பாடம் செய். நாளை ராஜ சபைக்கு வீணையுடன் நீ வரவேண்டும். நட, நீ இனி இளைப்பாறலாம்'' என்றார். திம்மண்ணன் ஸ்ரீயவர்களுக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "அனுக்ரஹிக்கப்பட்டேன் ஸ்வாமி" என்று விக்ஞாபித்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீயவர்கள் தனக்குச் செய்த விசேஷ அனுக்கிரஹத்தை நினைத்து ஆனந்தத்துடன் ஸ்ரீயவர்களிடம் விடைபெற்று திம்மண்ணன் சென்ற பிறகு ஸ்ரீகளவர் ஓய்வெடுத்துக் கொண்டார்.

தஞ்சாவூரின் அரச சபை இன்று ஜனங்களால் நிரம்பி வழிகிறது. மேடையின் மீது ஸ்ரீயவர்களுக்கு உயர்ந்த உத்தமமான ஆஸனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேடையின் எதிர்பக்கத்தில் விஸ்தாரமான வட்டமான மேடை. அதன்மீது உத்தரதேசத்துக் கலைஞர் மற்றும் ஆஸ்தான வித்வான்களும் தங்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்திருக்கின்றனர். சுற்றிலும் பக்கங்களிலும் பாடகர்கள், கலைஞர்கள், நகரப்ரமுகர்கள் அமர்ந்துள்ளனர். சிறிய பரிவாரத்துடன் ஸ்ரீயவர்கள் ராஜ சபையில் ப்ரவேசித்தார். மஹாராஜா ஸ்ரீயவர்களை வரவேற்று உத்தம ஆஸனத்திற்கு அழைத்து வந்தார். ஸ்ரீயவர்கள் ஆஸனத்திலமர்ந்தபிறகு மஹாராஜா, "தஞ்சாவூரின் கீர்த்தி கௌரவங்களைக் காப்பாற்ற நமது வேண்டுகோளுக்கிணங்கி உத்தராதி கலைஞருடன் நமது ஸ்ரீபாதங்களவர் போட்டியிடுவார்", என்று சொல்லி அமர்ந்தார். கைதட்டிச் சபையோர் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

வித்தையின் மதத்தினால் உன் மத்தனான உத்தராதி வாத்யக் கலைஞர் ஸ்ரீகளவர்கள் போட்டி யிடுவாரென்பதைக் கேட்டுத் தனக்குள்ளே சிரிக்க ஆரம்பித்தார். அவர்களில் ஒருவன் எழுந்து நின்று, "மஹாராஜா, இது என்ன கேலிக்கூத்து! ஜய பத்திரிகை எழுதிக்கொடுப்பதை விட்டுவிட்டு பாவம்! இந்த ஸந்நியாஸிகளை ஏன் அழைத்து வந்தீர்கள்? இவர் நம்முடன் போட்டியிட முடியுமா? நாங்கள் இவருடன் போட்டியிட மாட்டோம்" என்றான்.

ஸ்ரீகளவர்கள் ஒருமுறை சிரித்து, "உண்மை, நீங்கள் நம்முடன் போட்டியிட மாட்டீர்கள். கலைஞரே! நாமென்னமோ உம்முடன் போட்டியிடவரவில்லை" என்றார். மஹா ராஜாவானவர் ஸ்ரீயவர்கள் ஏன் இப்படிச் சொன்னார் என்று திக்ப்ரமையடைந்தார். ஸ்ரீயவர்களின் பேச்சைக் கேட்டு உத்திரதேசக் கலைஞர் மகிழ்ச்சியுடன், "இனியென்ன? மஹாராஜா, ஜய பத்திரிகை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


எழுதிக்கொடுங்கள்" என்று கூச்சலிட்டார். மஹாராஜா திக்குத் தெரியாதவனைப் போல் "குருவர்யரே, நேற்று தாங்கள் கொடுத்த அபயம் என்னவாயிற்று? என்று தாழ்மையுடன் ப்ரார்த்தனை செய்தார். ஸ்ரீவிஜயீந்திரர் புன்னகையுடன், "அபயம் கொடுத்திருக்கின்றோமே. என்றுதான் வந்துள்ளோம், அரசே," என்று பதில் சொல்லி , உத்தரதேசக் கலைஞரைப் பார்த்து, "கலைஞரே, நாம் போட்டியிடமாட்டோம் என்றதினால் மட்டும் ஜயபத்திரிகை ஏன் கொடுக்க வேண்டும்? நீங்கள் இன்னும் எல்லா ஆஸ்தான பண்டிதர்களையும் ஜயிக்கவில்லையே?" என்றார். இவ்வாறு சொல்லவும் உத்தரதேச பண்டிதர் அஹங்காரத்துடன், "இன்னும் ஆஸ்தானத்தில் யாராவது பாக்கி உண்டா?" என்றார். விஜயீந்திரயதிராஜர் சிரித்துக்கொண்டே, "இதோ ஆஸ்தானத்தின் பாலகலைஞ்னொருவன் இன்னும் பாக்கியாக இருக்கிறான்! குமார திம்மண்ண! போட்டிக்குத் தயாராகி, முன்னால் வா" என்று ஆணையிட்டார்.

16 வயதுடைய பாலகன் திம்மண்ணாசார்யனைப் பார்த்துச் சபையோர் அவனை உற்றுப் பார்க்க ஆரம்பித்தனர். உத்திராதி கலைஞர் சிரிக்க ஆரம்பித்தார். அவர்களில் ஒரு நிபுணன் எழுந்து, "என்ன? இந்தப் பையன் எங்களுடன் போட்டியிடுவானா? இதென்ன சிறுபிள்ளை விளையாட்டா? என்று கோபத்துடன் கேட்டான். ஸ்ரீக்ள்வர், "அமைதியாக இருங்கள் பண்டிதரே, வயதிற்கும் வித்தைக்கும் சம்பந்தமென்ன? உமக்கு அவ்வளவு பாண்டித்யமிருந்தால், இந்தக் குமாரனை ஜயித்துவிடுங்கள், பார்க்கலாம்" என்று சொல்லவும் அவன் கோபத்தினால், "ஓஹோ! அப்படியா? ஆகட்டும். ஆனால் என்னுடைய ஒரு நிப்ந்தனை! நான் வாசிக்கின்றபடியே எனது போட்டி வித்வானும் வாசிக்க வேண்டும். தவறினால் தோற்றவனாகக் கருதி ஜயபத்திரிகை தரவேண்டும்" என்றான். ஸ்ரீஸ்வாமி கள்வர்கள் "அப்படியே ஆகலாம்" என்று தலையசைத்துத் திம்மண்ணனை மேடைக்கு அனுப்பினார்.

ஸ்ரீகளவர் உத்தரவின்படி மேடையேறி வீணா வித்வான் எதிரில் வீணையேந்திக் கொண்டமர்ந்தான். எல்லோரும் சிறிய இளம் வயது பாலகன் போட்டியிடுகிறானென்று ஆச்சரியத்துடன் சற்றேனும் சத்தமில்லாமல் ஆர்வத்துடன் அமர்ந்திருந்தனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
உத்தராதி வைணிகன் (வீணை வித்வான்) கர்வத்துடன், "மால்கம்ஸ" (ஹிந்தோளம்) ராகத்தை ஆலாபனைக்கு எடுத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தான். "மாலகம்ஸ" ராகத்தை ப்ரதிவாதி வாசிக்க ஆரம்பித்த உடனே திம்மண்ணன் ஸ்தம்பித்தான். முதலாவது ஆவர்த்தனம் வாசிக்க ஆரம்பித்த பின் முந்திய இரவில் ஸ்ரீயவர்கள் தனக்குக் கற்றுக்கொடுத்த க்ரமத்தை நினைத்து உடல் சிலிர்த்தது. பக்தி நிரம்பி கண்ணீர் சொரிந்தது. ஸ்ரீயவர்கள் பக்கம் பார்த்தான் திம்மண்ணன். மூக்கின் மேல் விரலை வைத்து ஸ்ரீயவர்கள் பேசாமலிருக்கும்படி தெரிவித்தார். திம்மண்ணன் மகிழ்ச்சியினால் இன்றைய போட்டி அதில் எதிரி வாசிக்கும் ராக க்ரமங்களை அறிந்து முந்தின தினமே தனக்குத் தெரிவித்துக் கொடுத்த ஸ்ரீயவரின் மஹிமையைக் கண்டு வியந்து மனதிற்குள்ளேயே நமஸ்கரித்தான். முதலாவது ஆவர்த்தனத்தை வாசித்து உத்தராதி வைணிகன் கர்வத்தினால், "உம் இப்பொழுது நீங்கள் வாசியுங்கள்" என்றான். திம்மண்ணன் சிரித்த முகத்துடன் அநாயாஸமாக அவன் எப்படி வாசித்தானோ அப்படியே தானும் வீணை வாசித்தான். எதிரி வைணிகன் மயங்கினான். கேவலம் சிறிய பையன் சுலபமாக தன்னைப் போலவே வாசித்துவிட்டானே! என்ற கோபத்தினால் மிகக் கலைத்திறமையுடன் இன்னொரு ஆவர்த்தனம் வாசித்தான். திம்மண்ணனும் வாசித்தான். இவ்வாறு சுமார் ஒரு மணி நேரம் விசித்திரமாகப் போட்டி நடந்தது. ஒவ்வொரு ஆவர்த்தனத்தையும் திம்மண்ணன் வாசிக்க சபையில் கைதட்டல் ஆரவாரம் அமோகமாயிற்று. மஹாராஜா இந்த விசித்திரப் போட்டி, குமார திம்மண்ணனின் பாண்டித்யம் முதலியவைகளைக் கண்டு வியப்படைந்தார். அவருக்கு எல்லையில்லா மகிழ்ச்சியுண்டாயிற்று. உத்தராதி வைணிகன் தனது எல்லாத் திறமையையும் காண்பித்துவிட்டான். ஆனால் என்ன? திம்மண்ணனை ஜயிக்க முடியவில்லை. முகம் ஒளியிழந்தது. உடல் வியர்த்தது. இனி என்ன செய்வது என்று தோன்றாமல் பேசாமல் உட்கார்ந்து விட்டான். அப்பொழுது சபை முழுவதிலும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீயவர்கள் புன்னகையுடன், "வைணிக சிகாமணிகளே! உமது நிபந்தனை நிறைவேறிற்றல்லவா? உம். இப்பொழுது நமது நிபந்தனையைக் கேளும். இப்பொழுது நமது குமார திம்மண்ணன் வீணை வாசிப்பான். நீங்கள் அவன் வாசிக்கிறபடியே வாசிக்க வேண்டும்! அது முடியாத போனால் இதுவரை நீங்கள் பெற்றுள்ள ஜய பத்திரிகைகளையெல்லாம் தஞ்சாவூர் அரசனுக்கு அர்ப்பித்துத் தோல்வியுற்றேன் என்று சரணாகதியடைய வேண்டும்" என்று சொல்லி "குமாரா திம்மண்ணா! உம். ஆகட்டும் வாசி! என்று ஆணையிட்டார்.

திம்மண்ணன் முந்தின நாளன்று சுவாமிகள் தானே வாசித்துத் தனக்குக் கற்பித்த "ஹிந்தோள" ராகத்தை விளம்ப மத்யம) துரித காலங்க்ளில் விசேஷத்திறமையுடன் வாசிக்க ஆரம்பித்தான். இந்த அபூர்வ ஆலாபன க்ரமத்தைக் கேட்டு ஜனங்கள் யாவரும் ஆனந்த மேலீட்டினால், "அற்புதம், அற்புதம்" என்று பாராட்டத் தொடங்கினர். உத்தராதி கலைஞர் அந்தச் சிறுவனின் அற்புதமான பாண்டித்யத்தைக் கண்டு பயந்தான். தானும் வாசிக்க முயற்சித்து அபஸ்வரம் வரவே வீணையைக் கீழே வைத்து விட்டுத் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

வைணிகனை ஜயித்த பிறகு, மற்ற கலைஞரைப் பார்த்து, "நீர் எந்த ஆஸ்தான கலைஞரை ஜயித்தீர்களோ, மறுபடியும் அவர்களே உங்களுடன் போட்டியிடுவார்கள்", என்று சொல்லவும், ஆஸ்தான வாத்யகாரர்கள் ஸ்ரீயவர்களின் ஆணைப்படி போட்டிக்குத் தயாரானார்கள். உத்தராதி கலைஞர்கள், "ஒருமுறை தோற்றவர்கள் மறுபடியும் நம்மை ஜயிக்க முடியுமா! சரி, ஆகட்டும். என்று கர்வத்துடன் தாங்களும் தயாரானார்கள். உத்தரதேசத்திய ஜலதரங்க (ஷனாய்) நாதஸ்வரம், வேணு (புல்லாங்குழல்) வாத்ய கலைஞர்கள், "திலாங், பீம்ப்ளாஸ் (ஆபேரி) "பூபாலி" (மோஹனம்) ராகங்களில் தங்கள் இணையற்ற கலைத்திறமையைக் காண்பிக்கவும், முந்தின நாளன்று ஸ்ரீயவர்கள் ஆஸ்தானவித்வான்களுக்கு உபதேசித்துக் கற்பித்த முறையில் உத்தராதி கலைஞர்கள் போட்டியிடத் தொடங்கியதைக் கண்டு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஆச்சரியமடைந்தனர். மற்றும் ஸ்ரீயவர்களுக்கு மனதிலேயே நமஸ்கரித்துத் தாங்களும் அமோகமாக வாசித்து எதிர் வாதிகளை எளிதில் ஜயித்து விட்டனர். சபையோர் இதென்ன விசித்திரமென்று ஆச்சரியமடைந்தனர். மஹாராஜரோ தான் கனவு காணுகிறேனோ அல்லது எச்சரிக்கையாக இருக்கிறேனோ என்று மயங்கினான். உத்தராதி கலைஞர்கள் இதேன் இப்படியாயிற்று? நம்மிடம் தோற்றவருக்கு இப்படிப்பட்ட பாண்டித்யம் எவ்வாறு வந்தது? என்று கவலையிலாழ்ந்து உட்கார்ந்தனர். ஜனங்களெல்லோரும் இதெல்லாம் ஸ்ரீகளவர்களின் "அற்புதச் செயல்கள்" என்று ஜயகோஷம் செய்தனர்.

ஸ்ரீவிஜயீந்திர குருபாதர் திம்மண்ணனைப் பார்த்தும் புன்னகை செய்து ஏதோ சமிக்ஞை செய்து அபயஹஸ்தம் காண்பித்தார். திம்மண்ணனின் சரீரத்தில் மின்சாரம் பாய்வது போலாயிற்று. முகத்தில் அபூர்வ ஒளிவீசிற்று. இருந்தாற்போல அவனுடைய கைவிரல்கள் வீணையின் தந்திகளின் மீது விசித்ர ரீதியில் ஓடத்தொடங்கிற்று. இதுவரை கேட்டிராத எல்லாரையும் மந்திரத்தில் கட்டுப்பட்டவர்களைப் போல் செய்து உடலில் மயிர்க் கூச்சலைடுக்கச் செய்யும், வர்ணிக்க முடியாத நாத. . . அலை, வீணையிலிருந்து புறப்பட்டு சபா மண்டபத்தையே வியாபித்து விட்டது! சபையோர் பரம மங்களகரமான அந்த கந்தர்வ கான மழையில் மூழ்கி ஒன்றும் தெரியாத ஸமாதி நிலையை யடைந்து உட்கார்ந்துவிட்டனர். மெய் மறந்து திம்மண்ணன் வீணையை வாசித்துக் கொண்டிருக்கிறான். கண்களில் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. ஆஸ்தான ஸங்கீத வித்வான்கள், உத்தரதேசத்திய கலை நிபுணர்கள் வாழ்க்கையில் முதல் முறையாக கேட்டுக் கொண்டிருக்கும் அந்தத் திறமை மிகுந்த, வித்வத் பூர்ணமான வாசிப்பினால் பைத்தியம் போல் ஆனார்கள். ஒவ்வொருவர் முகத்தினின்றும் ஆஹா, அமரகானம், தேவலோகத்தின் கானமே பூமிக்கு இறங்கி வந்துள்ளது; அற்புதம், அற்புதம்! இதயங்களிலிருந்து குமுறுகிறது மகிழ்ச்சி ஆரவாரம்!

---

*என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் நான் இப்பொழுது கேட்டுக் கொண்டிருப்பது அந்த காந்தார க்ராமத்தைத்தான்! அதை இந்தச் சிறுவன் எவ்வாறு அறிந்தான்! இவன் அநேகமாக தேவாம்சனாக இருக்க வேண்டுமல்லவா?" என்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

இந்த விசித்திர கானத்தைக் கேட்டுக் கொண்டே அமர்ந்திருந்த ஆஸ்தானத்தின் வயது முதிர்ந்த ஸங்கீத வித்வான் ஒருவர் பக்கத்திலமர்ந்திருந்த ஸங்கீத-ஸாஹித்ய விசாரத மித்திரரொருவரைப் பார்த்து, "ஸ்வாமி, இது பூலோகத்து வித்தையல்ல. இது தேவலோகத்தின் கானம்! நமது குருவர்யர்", பூலோகத்தில் ஷட்ஜமத்யம க்ராமங்கள் மாத்திரம் நடைமுறையிலுள்ளன. காந்தார க்ராமமாத்திரம் தேவலோகத்தவருக்கு விட்டு வைக்கப்பட்டுள்ளது. நாரத மஹரிஷிகள் தேவலோகத்தில் அதை நடைமுறையில் கொண்டுவந்ததினால் அது தேவதைகளுக்கு மாத்திரம் தெரிந்துள்ளது".*[1]

சங்கீத-சாஸ்திர-கோவிதரான அந்த வித்வான் வியப்படைந்து, "உண்மை, இது தேவகானம் தான் என்பது உறுதி! கேட்டீர்களா? நந்தா, விசாலா, ஸுமுகி, சித்ரா, சித்ரவதி, ஸுகா மற்றும் ஆலர்பா என்னும் காந்தார க்ராமத்தின் ஏழு மூர்ச்சனங்களின் வகைகளை [2] வாசித்துக் கொண்டிருக்கிறானே இந்தச் சிறுவன்! அற்புதம்! என்று சொல்லிக் கொண்டிருக்கையில் மற்றொரு கான நிபுணர், "நாமே பாக்யசாலிகள்! ஆஹா! இந்த அமரஸங்கீதத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் நமது வாழ்க்கை இன்று ஸார்த்தகமாயிற்று. தேவாம்சரான பூஜ்ய விஜயீந்திர முனிகளின் கிருபைக்குப் பாத்திரனாக உள்ள இந்த பாலகன் கந்தர்வாம்சனாகத்தான் இருக்க வேண்டும். தன்ய திம்மண்ணசார்யர், நீ அமரனாக வேண்டும்" எனப்பாராட்டினர் சபையோர்.

ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கைகூப்பி அமர்ந்து விட்டனர். திம்மண்ணன் வீணை வாசிப்பதை நிறுத்திவிட்டு எழுந்து நின்று ஶ்ரீயவர்களின் பாதங்களின் மீது தலைவைத்து வணங்கினான். ஶ்ரீயவர்கள் புன்னகை செய்து, ''ஏசு!'' திம்மண்ணா மஹாவித்வானாகி யிருக்கிறாயே! ஶ்ரீஹரி வாயுகள் உனக்கு மங்களமுண்டாக அருள்புரியட்டும்" என்று அவனை ஆசீர்வதித்து "அரசே, சபையோரே, ஸகல வித்தைகளின் லக்ஷியம் பகவத்ப்ராப்திதான் ஆகியுள்ளது. பகவந்தனின்

1. "षड्ज मध्यम नामासौ ग्रामो गायंति मानवाः । सतु गांधारनामानं सलभ्यो देवयोनिभिः ॥ गांधार ग्राम माचष्ट दिविर्त नारदो मुनिः । प्रवर्तते देवलोके ग्रामो सौ महीतले ॥"
2. "नंदा, विशाला, सुमुखी, चित्रा, चित्रवती, सुखा । आलापाचेति गांधारा ग्रामे स्वैस्सप्त मूर्छनाः ॥ तारस्वरों प्रयोक्तव्याः देवतास्त्वेन मोदिताः ॥"

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அனுக்ரஹத்தைப் பெற்று உயர்வதற்காக அநேக மார்க்கங்கள் உள்ளன. அவைகளில் அதிமுக்யமானது தத்வ சாஸ்த்திரம். அதே தத்வ சாஸ்திரத்திற்கு மூலமான வேதங்களில் ஸாமவேதத்தில் சொல்லப்பட்ட ஸங்கீதம் புருஷார்த்தத்திற்கு ஸாதனமாயுள்ளது. சங்கீதத்தைச் சிலர் அசட்டை செய்து பார்க்கின்றனர். அது தவறு. கேளுங்கள், "नादोपासन या देवताः विष्णु ब्रह्म महेश्वराः भवंत्युपा सिता नूनं तस्मादेते तदात्मकाः" அதாவது ஸ்ரீஹரி, சதுர்முகப்ரம்மன், ருத்ர தேவர்கள் நாதத்தினால் உபாஸிக்கப் படுபவராகையினால் ஸங்கீதத்தின் மஹிமை வர்ணனைக்கப்பாற்பட்டது.

"நிஷ்காமமாக ஸங்கீதத்தின் மூலம் ஸ்ரீஹரியை சேவித்து அவனது அனுக்கிரஹத்தினால் மோக்ஷாதிகளைப் பெறலாம்" என்று ப்ரமாணம் உள்ளது. "त्रिवर्गफलदाः सर्वे ज्ञान यज्ञ तपादयः, एको संगीत विज्ञानं चतुर्वग फ़लप्रदं । हरी शादौ स्तुतौ धर्मः धन कामौ नृमादितः, निष्कामनानुष्ठानाच्च मोक्षदाप्नोत्य संशंया ।" அதாவது ப்ரபஞ்சத்தில் தானம்-யக்ஞும் மற்றும் ஜபங்களினால் முதல் மூன்று புருஷார்த்தங்கள் (தர்மம், அர்த்தம், காமம்) கிடைக்கப்பெறுகின்றன. நாதோபாஸனை யினால் சதுர்வித புருஷார்த்தங்களும் கிடைக்கின்றன. ஸ்துதிரூப நாதோபாஸனையினால், ஸ்ரீவிஷ்ணு சிவாதிகளின் ஸ்தோத்ரம் தர்மத்தையும், ராஜாக்கள் ரசிகஸ்ரீமந்தர் களினால் அர்த்த-காமங்களைய்யும் அதே நிஷ்காமனோ பாஸனையினால் மோக்ஷத்தை இது பெற்றுத் தரக்கூடிய சக்தியுள்ளது. ஸ்ரீமதாசார்யரின் ஸத்தத்வங்கள் உபதேசிக்கும் மார்க்கத்தில் ஸாதனம் செய்து கொண்டு நிஷ்காமபக்திக்கு நாத்த்தைக் கலந்து ஸ்ரீஹரி ஸர்வோத்தமத்வாதி நிஸ்சித க்ஞானத்தினால் உபாஸனை செய்தால் ஸ்ரீஹரியின் அனுக்ரஹத்தினால் நிரந்தரமான சுகம் பெறுவதற்கும் நாதோபாஸனம் ஸாதகமாக இருப்பதினால் ஸங்கீத சாஸ்திரத்தின் மூலமாகவும் உயர்ந்த நிலையை அடைய இடமுள்ளதால் அதை அசட்டை செய்யக்கூடாது. நமது குமார திம்மண்ண சங்கீத சாஸ்திரத்தில் மஹா பண்டிதனாக இருப்பதைப் போல் ஸத்வைஷ்ணவ சித்தாந்தத்திலும் அனுபவம் பெற்ற பண்டிதனாக இருக்கிறான். தஞ்சாவூர் ஸகல வித்தைகளுக்கும் தாய்வீடாக உள்ளது. மஹாராஜா அவற்றிற்கு அடைக்கலம் கொடுத்துள்ளார். ஆகையினால் தான் இப்பேர்பட்ட அபூர்வமான வாய்ப்புகள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
(நிகழ்ச்சிகள்) எல்லோருக்கும் கிடைக்கின்றன. இதே ரீதியில் நமது மஹாராஜர் ஸகல வித்தைகளுக்கும் அடைக்கலம் தருபவராய் கீர்த்தியடையட்டும் என்று ஆசிர்வதிக்கிறோம்" என்று உரையருளினார்.

தஞ்சாவூரதிபதி ஆனந்தமடைந்து எழுந்து நின்று, "இன்று தஞ்சாவூரின் கீர்த்தியை பால பண்டித திம்மண்ணாசார்யர் காப்பாற்றிவிட்டார். ஸ்ரீயவர்களின் அனுக்ரஹத்தினால்" என்றெல்லாம் பாராட்டிப்பேச, திம்மண்ணாசார்யர் எழுந்து நின்று, "அரசரே, கலைஞர் பெருமக்களே, இன்றைய வெற்றிக்குக் காரணம் நானில்லை. அது எனது திறமையுமில்லை. இது ஸ்ரீபாதங்களவருடைய மஹிமைதான்". நேற்று இரவு ஸ்ரீயவர்கள் இன்று நான் போட்டியிட்ட "மாலகம்ஸ்" (ஹிந்தோளம் ராகத்தை இந்த உத்திரதேசத்தின் வீணைவித்வான் வாசித்த க்ரமத்தைப் போலவே தாமே ஸ்வயம் வாசித்து; அதைப்போலவே வாசிப்பதில் எனக்குப் பயிற்சியளித்து அனுக்ரஹித்ததல்லாமல், இன்று இந்தக் கலாவிதரெங்கு தவறு செய்தனரோ அவைகளை எல்லாம் கற்றுக் கொடுத்து அதே ராகத்தில் விசேஷங்களுடன் விளம்பம், மத்யம முதலிய காலங்களில் வாசிக்கும் விதத்தைக் காண்பித்து எனக்குப் பயிற்சியளித்தார். இப்பொழுது வாசித்த காந்தாரக்ராம மற்றும் மூர்ச்சனைகளைச் சொல்லிக்கொடுத்து, "இது தேவலேக ஸங்கீதம். சமயம் வரும்பொழுது வாசித்துக் காண்பி" என்று சொல்லி அருளியிருந்தார். ஆனால் ஸ்ரீயவர்கள் இதை எனக்கு ஏன் கற்றுக்கொடுத்தாரென்பதா கட்டும், இன்று நான் போட்டியிட வேண்டு மென்றாகட்டும். எனக்கு அப்பொழுது தெரியாது. மற்றும் இதுவரையிலும் தெரியவில்லை. ஸ்ரீயவர்கள் இன்று "இந்த வைணிகருடன் போட்டியிடு" என்று எனக்கு ஆணையிட்டபொழுது நான் உண்மையாக பயந்திருந்தேன். ஆனால் இந்த வீணைக் கலைஞர், "மாலகம்ஸ" ராகத்தை ஆரம்பித்த உடனே அது நேற்று ஸ்ரீகளவர்கள் நேற்று காண்பித்த க்ரமத்திலேயே முதல் ஆவர்த்தனம் வாசித்த பிறகோ, எனக்குண்டான ஆச்சரியம் ஆனந்தங்களுக்கு எல்லையே இல்லை. ஸ்ரீகளவர்கள் அபரோக்ஷ ஞானிகள். அதுபோல உத்தரதேசத்திய வீணாவித்வான் வாசிக்கும் ராகங்களை, அவர்கள் வாசிக்க முடியாத அபூர்வக்ரமத்தை எனக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
அன்புடன் ஏன் கற்பித்தார் என்று எனக்கு இப்பொழுது தெரியவந்தது. ஸ்ரீயவர்களின் அனுக்ரஹத்தினால் அவர் கற்பித்ததை எல்லோருடைய முன்னிலையில் இன்று ஒப்பித்தேன். அவ்வளவு தான். இன்றைய வெற்றி ஸ்ரீயவர்களுக்கே உரியது. எனக்கு வாய்ப்பைக் கொடுத்து உய்வித்து கீர்த்தியைப் பெற்றுத்தந்த எனது குரு ஸார்வபௌமருக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். நீங்கள் யாவரும் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்'' என்று சொன்னான்.

திம்மண்ணாசார்யன் இவ்வாறு சொன்ன உடனே, ஆஸ்தான வித்வான்கள் யாவரும் எழுந்து நின்று, "ஆச்சரியம்! எங்களுக்கும் இதே அனுபவமாயிற்று!! நேற்று ஸ்ரீகளவர்கள் எங்களுக்கும் உபதேசித்திருந்தார். இந்தக் கலைஞர்கள் போட்டியில் ஸ்ரீயவர்கள் கற்றுக்கொடுத்த ராகங்களையே ஆரம்பித்தபொழுது எங்களுக்கு ஆச்சரியமாயிற்று. ஸ்ரீயவர்களின் தயவினாலேயே தோல்வியுற்ற நாங்கள் மறுபடியும் ஜயித்தோம். ஸகலகலா வல்லவரான ஸ்ரீயவர்களே நமது ராஜ்யத்தின் கௌரவத்தைக் காப்பாற்றினவர்'' என்று சொல்ல எல்லோரும் ஸ்ரீயவர்களைப் புகழ்ந்து ஜயகோஷங்களெழுப்பினர். மஹாராஜாவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஸங்கீதக்கலைஞர் ஒருவர் எழுந்து நின்று "ஸ்வாமி, சங்கீதமென்றால் சேர் என்ன விலை என்று கேட்பவர்களுக்குச் சங்கீத சாஸ்திரம் நான்கு வித புருஷார்த்தங்களுக்கு ஸாதனமென்பதை, அதனால் மோக்ஷாதிகளை ஸாதித்துக் கொள்ளலாமென்பதை நன்றாகத் தாங்கள் மனதில் பதியவைத்து ஸங்கீத சாஸ்திரத்தின் மகத்துவத்தை எடுத்துக்காட்டி அனுக்ரஹித்தீர்கள். இதற்காக எங்களின் ஆனந்தமான நமஸ்காரங்கள்'' என்று சொல்லி ஸ்ரீயவர்களுக்கு நமஸ்கரித்தார். உத்தர தேசக்கலைஞர் ஸ்ரீயவர்களின் மகிமை, அற்புதமான பாண்டித்யத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அவர்களில் போட்டியிடாத ஸாரங்கி வாசிப்பவன் எழுந்து, "மஹாராஜா இப்படிப்பட்ட மஹா மகிமையுள்ள ஸ்ரீபாதரின் நாமத்தை நான் தெரிந்து


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
கொள்ளலாமா! என்று கேட்கவும் மஹாராஜர்! விஜயீந்திரருக்கு வெற்றி"! கலைஞரே, இதே எங்கள் குருபாதரின் பவித்ரமான நாமம்" என்றார்.

ஸாரங்கி வாத்ய பண்டிதன் ஸ்ரீயவர்களின் பெயரைக்கேட்டு ப்ரமையுடன் ஓடிவந்து ஸ்ரீயவர்களின் பாதங்களில் தலைவைத்து மன்னிக்க வேண்டும் மஹாஸ்வாமி, குருதேவா தாம்தான் ஸ்ரீவிஜயீந்திரரென்று நமக்குத் தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் போட்டியே போட்டிருக்க மாட்டோம்'' என்றான். மஹாராஜா ஆர்வத்துடன் இதென்ன இப்படிச் சொல் லுகிறீர்! என்று கேட்க, அவன், "அரசே, இவர் நமது குர்வர்யர்" என்றான். ராஜா கேட்டார், "ஸ்ரீகளவர் உமது குருவா? என்று. அவன் சிரித்துக்கொண்டே சொன்னான், ஆகலாம் ஸ்வாமி. இவர் எமது குருவே. கேளுங்கள் முன்பு ஒருமுறை தான்சேன் வம்சத்தைச் சேர்ந்த ஸாக்ஷாத் தான்சேனின் சிஷ்யனான ஜயபூரின் ப்ரஸித்த கவாய் ஒருவர் ஸ்ரீயவர்களுடனே போட்டியிட்டு தோல்வியுற்று ஸ்ரீயவர்களின் சிஷ்யனாகியிருந்தார். அவருக்கு ஸ்ரீயவர் ''தீபக்'' ராகத்தைப் பாடி தீபங்களை ஏற்றிக் காண்பித்துள்ளார். "அம்ருத வர்ஷிணி ராகத்தைப் பாடி மழைபெய்வித்துக் காட்டினராம்! ஸ்ரீயவர்களின் சிஷ்யத்வம் ஏற்றுக்கொண்ட பிறகு அவர் அபூர்வ பாண்டித்யம் பெற்று உத்தரபாரதத்திலெல்லாம் உத்தம பண்டிதனென்னப்பட்டார். அவரே எனது வித்யாகுரு. அவர் ஸ்ரீயவர்களுடைய மகிமையை அவ்வப்போது வர்ணித்துச் சொல்வது வழக்கம். எனது குருவின் குருபாதரான இவர் எனக்கும் குருவல்லவா? ஸ்ரீயவர்களின் தரிசனம் செய்ய வேண்டும் என்று வெகு ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இவரே அவர் என்று தெரிந்திருக்கவில்லை. இன்று ஸ்ரீயவர்களின் தரிசனம் செய்து நான் தன்யனானேன்'' என்று சொல்லிக் கண்ணீர் விட்டு ஸ்ரீபாதங்களவருக்கு வணங்கி, "குருதேவா, தெரியாமல் நடந்த குற்றத்திற்கு மன்னித்து என்னை உய்விக்க வேண்டும்" என்று வேண்டினான்.

ஸ்ரீயவர்கள் மந்தகாசத்துடன் அவரைச் சமாதானப்படுத்தி மஹாராஜனினால் அவர்கள் எல்லோரையும் விசேஷமாகக் கௌரவப்படுத்தினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மஹாராஜா வித்வான்கள் முன்னிலையில் புதிய ஆஸ்தான கலைஞரான பாலகன் திம்மண்ணாசார்யருக்கு ரத்னம் பதித்த தோடாக்கள் அணிவித்து, "பாலசரஸ்வதி" என்னும் அபூர்வமானதும் சிறப்பானதுமான விருதை அளித்துக் கௌரவித்தார். ஸ்ரீயவர்களுக்கு பக்தியுடன் விலைமதிக்கவொண்ணாக் காணிக்கைகளை அர்ப்பித்து திருதார்த்தனானார். ஸ்ரீயவர்கள் பிறகு சில தினங்கள் அரசனின் விருந்தினராக இருந்து விட்டு பரிவாரத்துடன் கும்பகோணத்திற்கு ப்ரயாணமானார்.

56. விஷம் குடித்து விஜயமடைதல்

"கர்லை அனுஷ்டானாதிகளை முடித்துவிட்டு விஜயீந்திர குருவர்யர் த்வைத ஸித்தாந்த தத்வோபதேசம் செய்து கொண்டு சபையில் வீற்றிருந்தார். அதே சமயத்தில் வெள்ளிக் கோலேந்திய சேவகன் வந்து விக்ஞாபனம் செய்தான்:- "விஜயமாகட்டும், பராக், காசி தேசத்தைச் சேர்ந்த பண்டிதரொருவர் ஸ்ரீயவரின் தரிசனத்திற்காக வந்துள்ளார்" என்றான். ஸ்ரீயவர் புன்னகையுடன் "சீக்கிரம் அவரை இங்கே அழைத்துவா" என்று உத்தரவிட்டார், வாயில் காப்பவன் அழைத்து வந்த தேஜஸ்வியான சுமார் 40 அல்லது 50 வயதுள்ள ப்ராம்மணர் ஸ்ரீயவர்களைப் பார்த்தார். அந்த ப்ராம்மணர் குருபாதரை நமஸ்கரித்து, "ஸ்வாமி, தங்களுடைய நிகரற்ற பாண்டித்யம், வாதிதிக் விஜயம், ஸகலகலா நிபுணத்வம், க்ரந்தமியற்றும் திறமை, மற்றும் யார் வேண்டுமானாலும் வந்து போட்டியிடலா மென்னும் சவால்களைக் காதால் கேட்டு மகிழ்ச்சி யடைந்துள்ளேன். என்னை கங்காதர சர்மா என்பர். காசி எனது வாசஸ்தலம், நவத்வீபத்தில் தர்க்கம் மீமாம்ஸா முதலியவைகளையும், த்வாரகையில் வேதாந்தத்தையும், 12 வருடங்கள் கற்று விந்திய ப்ரதேசத்தில் தர்க்கம் மீமாம்ஸா முதலியவைகளையும், த்வாரகையில் வேதாந்தத்தையும், 12 வருடங்கள் கற்று விந்திய ப்ரதேசத்தில் விஷவைத்திய சாஸ்திரத்தைப் பயின்றுள்ளேன். வாத மல்லரும், மஹா பண்டிதருமான அப்பய்ய தீக்ஷிதருடன் வாதம் செய்து ஸ்ரீஹரியே ஸர்வ சப்த வாச்யனென்று ஸ்தாபித்ததாகக் கேள்விப்பட்டுத் தம்முடனே வாதம் செய்ய வந்துள்ளேன். என்னை வாதத்தில் ஜயித்தால் தான் உமது கீர்த்தி நிலைக்கும். ஸர்வ சப்த வாச்ய ஸ்ரீகௌரீசனான சிவன்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அவனே பரப்ரம்மம். இதை நிரூபிப்பதே எனது லக்ஷியம். இதற்குத் தாங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? என்று கேட்டார்.

ஸ்ரீயவர்கள்:- (புன்னகையுடன்) மிக்க மகிழ்ச்சி. கங்காதர சர்மா அவர்களே, காசியிலிருந்து சாக்ஷாத் கங்காதரனான முக்கண்ணனே நம்மைப் பரீக்ஷிக்க வந்துள்ளது போலத் தோன்றுகிறது. உமது வருகை, உம் வாதம் ஆரம்பமாகலாமல்லவா? அப்படியே இந்த வாதத்திற்கு நமது நண்பரான தீக்ஷிதரும் வந்தால் நல்லது. அதாவது வாதம் களைகட்டும் (பாருபத்திகாரர் பக்கம் திரும்பி) சீக்கிரம் அப்பய்ய தீக்ஷிதரை இங்கு வரவழையுங்கள்" என்று ஆணையிட்டார்.

ஸ்ரீயவர்களின் உத்திரவுப்படி தீக்ஷிதருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அங்கு கூடிய சபையோர், இது ஒரு அபூர்வமான சந்திப்பு இன்றைய வாதத்தைப் பார்த்துதான் போகவேண்டுமென்று உற்சாகத்துடன் இருந்தனர். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திரர் புன்னகையுடன் வந்து ஸ்ரீகளவர்களுக்கு வணங்கி அமர்ந்தார்.

ஸ்ரீயவர்கள்:- (புன்சிரிப்புடன்) தீக்ஷிதரே, வரவேண்டும்! நம் இருவருடைய வாத விஷயத்தைக் கேட்டு காசியிலிருந்து இந்த கங்காதர சர்மா வாதிக்க வந்துள்ளார். நம்மிருவருக்கும் நடந்த வாதத்தின் விஷயத்தையே இவரும் தேர்ந்து எடுத்துக் கொண்டுள்ளார். இந்த வாக்யார்த்தத்திற்குத் தாங்களிருந்தால்தான் களை தீக்ஷிதரே! அதனால் தான் சொல்லி யனுப்பினோம்.

தீக்ஷிதர்:- (மகிழ்ச்சியுடன் கங்காதர சர்மாவுடன் க்ஷேம சமாசாரம் பேசி) ஸ்வாமி, சர்மா மிகமிகப் பிடிவாதக்காரரர்! அத்துடன் நல்ல வாதமல்லரும் கூட. இவருடன் வெறுமனே ஏன் போட்டி?

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீயவர்கள்:- போட்டிக்கென்றே ஸ்ரீஹரி ஸ்ருஷ்டித்திருப்பது போலிருக்கிறது. என்ன செய்வது தீக்ஷிதரே?

தீக்ஷிதர்:- (கிண்டலாக) இல்லை ஸ்வாமி, தாங்கள் ஏன் ஸவால் விட்டீர்கள்? அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும், அவ்வளவுதான். அதாவது இந்தக் கஷ்டங்களெல்லாம் தானாக நீங்கிவிடும். (சிரித்துக்கொண்டு) இல்லையா ஸ்வாமி!

ஸ்ரீயவர்கள்:- (தீக்ஷிதரின் உட்கருத்தையறிந்து சிரித்துக்கொண்டு) தீக்ஷிதரே, மிக புத்திசாலியல்லவா தாங்கள்! பலே. கடைசியில் ஏதாவது உபாயத்தினால் நம், ப்ரதிக்ஞையைக் கைவிடும்படி செய்வதற்கு எவ்வளவு ஆர்வமுள்ளவராயிருக்கிறீர். கேளுங்கள், ஸ்ரீகாசிநாதனின் ஸாக்ஷியாகச் சொல்லுகிறோம். ஸகல குணபரிபூர்ணனும், ஸகல ஜகஜ்ஜன் மாதிகாரணனும், ஸர்வ தேவர்களால் பூஜிக்கப்படுபவனும், தோஷரஹிதனுமான ஆனந்தமயனுமான ஸ்ரீஹரியே பரப்ரம்மன். மற்றவர்கள் யாவரும் அவனுடைய அடியார்கள். கண்ணிற்குத் தென்படும் ஜகத்து ஸத்யமானது. ஜீவர்கள் பரஸ்பரம் வேறானவர்கள், அந்த பேதம் பாரமார்த்திகமானது. அவனது ப்ரஸாதத்தினாலேதான் ஜீவன் உய்விக்கப்படுவான். இதையே சகல ச்ருதிகள், புராணங்களின் ஸாரம். இந்தத் தத்துவம்தான் நமது மந்த்ரம், இதன் ஜபமே நமது ஜீவனம், இதன் ஸாதனைக்காகவே நமது வாழ்க்கை ஒதுக்கப்பட்டிருக்கிறது! இதை எதிர்க்கும் சக்தி எதுவாயிருந்த போதிலும், இந்த தத்வோபாஸனையினால் பெற்ற சக்தியைக் கொண்டு நாம் எதிர்ப்போம், மற்றும் நம் ஸித்தாந்தத்தை நாம் ஸ்தாபிப்போம். இதற்கு இன்று நாமே சாமான்யச் சுலபமாக ஜயிக்கப்போவதே சாக்ஷி.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீயவர்கள் தீர கம்பீர வாக்யத்தைக் கவனித்து சபையோர் நிசப்தமாயினர். ஸ்ரீயவர்களின் திறமையை அறிந்துள்ள தீக்ஷிதர் ஆனந்தமடைந்தார் தீக்ஷிதர் சிரித்துக்கொண்டே, "ஸ்வாமி நான் தங்களை இவ்வளவு கிளராவிட்டால் வாதத்தில் எவ்வாறு களைகட்டும்"? என்றார்.

கங்காதர சர்மா (சற்று கோபித்தவராய்) "உம், வெறும் வாய் வீச்சினால் என்ன ப்ரயோஜனம்? ஸ்ரீயவர்களே, தம்முடைய திறமையை வாக்யார்த்தத்தில்லவா காண்பிக்க வேண்டும்? என்று சொல்லி வாதத்தை ஆரம்பித்தார். முதலில் "சிவ" பதத்தை நிர்ணயம் செய்து, வேதம், புராணம், இவைகளின் ப்ரமாணமான உதாரணங்களைத் தந்து, சிவனே பரப்ரம்மமென்றும், ஸர்வ சப்த வாச்யனென்றும், நிருபணம் செய்து, அநேகவிதமாக விஷ்ணுபரமான எல்லா சப்தங்களுக்கும் சிவபரமாக அர்த்தம் சொல்லி வாதத்தை அலங்கரித்தார். கங்காதர சர்மாவின் புத்திசாலித்தனம் மற்றும் வித்வத் பூர்ணமான வாதத்தைக் கேட்டு சபையோர் தலை ஆட்டினர். ஸ்ரீயவர்களும் மகிழ்ந்தார். தீக்ஷிதரைக் கேட்க வேண்டுமா? மகிழ்ச்சி மிகுதியினால் "ஆனந்தம், ஆனந்தம்"! என்று உணர்ச்சி வசப்பட்டு மெச்சினார்.

ஸ்ரீபாதங்களவர் கங்காதர சர்மாவைப் புகழ்ந்து அவர் சொன்ன ஒவ்வொரு விஷயத்தையும் அனுவாதம் செய்ததல்லாமல் பூர்வ பக்ஷத்திற்குச் சாதகமானதும் சர்மா சொல்லாமலிருந்த விஷயங்களையும் வேதம் மற்றும் யுக்தி மூலமாகவும் வெவ்வேறு ரீதியில் ப்ரதிவாதம் செய்து அதற்குத் தமது புத்திசாலித்தனமான, நிருபணம் செய்யும் முறையினால் ஆமோதித்து, பூர்வபக்ஷத்தை மிகத்திறமையினால் பிரகாசப்படுத்தினார். தீக்ஷிதர் ஸ்ரீயவர்களுடைய விசித்திர வாதத்தைக் கேட்டு மெய்மறந்து, "அற்புதம்" என்றார். சபையோர், "இதென்ன ஸ்ரீயவர்கள் சர்மாவின் வாதத்தையே பலப்படுத்தி விட்டாரே! இனியென்ன? என்று ஆர்வத்துடனிருக் கின்றனர். தீக்ஷிதர் ஸ்ரீயவர்களை விசித்திர பக்தி உணர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. தாம் ஆமோதிக்காததைக் கூட ஸ்ரீயவர்கள்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

எவ்வளவு விசேஷத்துடன் எடுத்துரைத்திருக்கிறார் என்று கங்காதர சர்மா சித்திரப்பதுமை போல். உட்கார்ந்து விட்டார்! சற்று நேரமான பிறகு சர்மா ஆனந்த மிகுதியினால் "ஸ்ரீகளவர்களே இன்னும் வாதமே செய்ய இடமில்லை எனது வாதத்தையே தாங்களும் என்னைவிட அதிகமாகவே எடுத்துரைத்து ஸ்தாபித்து விட்டீரே!" என்றார்.

ஸ்ரீகளவர்:- (புன்முறுவலுடன்) சர்மா அவர்களே, இதுவரை நாம் செய்தது பூர்வபக்ஷத்தைப் புகழ்ந்து மற்றும் ஆமோதித்தோம். இப்பொழுது கண்டனம் மற்றும் நமது சித்தாந்த ஸ்தாபனம் செய்யப்போகிறோம்.

இவ்வாறு சொல்லி ஸ்ரீகளவர் தீக்ஷிதர் பக்கம் புன்னகை செய்து பார்த்தார். எச்சரிக்கை கொண்டவரைப்போல "இப்படியா" என்றார். ஜனங்களெல்லோரும் ஆச்சரியத்துடனும் ஸமாதானத் துடனும் பெருமூச்சுவிட்டனர்.

பிறகு, ஸ்ரீகளவர் இதற்கு முன் என்றும் கையாளாத நூதன முறையில் மிக அனுபவமிக்க அனுவாதம் செய்து (விளக்கம் செய்து) ஸ்ரீநாராயணனே பரப்ரம்மன், அவனே ஸர்வ சப்த வாச்யன் என்பதை நிரூபித்து, அதற்கு ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் முதலிய ப்ரமாணங்களை உதாரணம் காட்டி விளக்கி சர்மாவின் எல்லாவிதங்களையும் தான் புகழ்ந்து ப்ரபலமான பூர்வ பக்ஷத்தையும், நூற்றுக்கு நூறு கண்டனம் செய்து, தமது வாதத்தை ஆமோதித்தார். (ஆதரித்தார்) ஸ்ரீயவர்களின் அற்புதமான வாதத்திறமையைக் கண்டு சர்மாவிற்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆயினும் பிடிவாதத்துடன் மறுபடியும் மறுபடியும் வாதித்தாலும் அதெல்லாவற்றையும் ஸ்ரீகளவர்கள் சுலபமாக நிராகரித்துவிட்டார். இனி என்ன செய்யவேண்டுமென்று தோன்றாமல் பதில் கூறாமல் அமர்ந்துவிட்டார். சபையோர் ஸ்ரீயாவர்களுக்கு ஜயகோஷத்தினால் மகிழ்ச்சி தெரிவித்தனர். தீக்ஷிதர் அன்புடன் ஸ்ரீயவர்களைப் பார்த்துச் சிரித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தனது காரியம் ஸாதிக்காததைக் கண்டு கோபமடைந்த சர்மா கர்ஜனை செய்தார். - "ஸ்வாமிகளே, நான் இதைப் பொறுக்கமாட்டேன்! சிவனே பரப்ரம்மன், ஸர்வ சப்தவாச்யனும் அவனே! இதற்கு விரோதமாகச் சொல்லுகிறவர்களை நான் உயிருடனிருக்கவிடமாட்டேன்!. இது எனது சபதம்" என்றார். ஸ்ரீயவர்கள் சிரித்து, "சர்மா அவர்களே, நீங்கள் சொன்னது உண்மை. நீங்கள் வந்துள்ள உண்மையான காரணத்தை இப்பொழுது சொன்னீர்கள் உண்மை. நம்மை உயிருடனிருக்க விடக் கூடா தென்றல்லவா. நீங்கள் வந்திருப்பது, எங்கே வெளியே எடுங்கள் நம்மை அழிக்கக் கொண்டு வந்த அதி பயங்கரமான எரிக்கும் சக்தியுள்ள விஷத்தை! நீங்கள் விஷவைத்தியரல்லவா? பாவம்! நமக்கு விஷம் கொடுக்க நீங்கள் வந்துள்ளீர்களென்பது உமது வருகையிலேயே தெரிந்து கொண்டோம். உம். எடும் பாலில் கலந்து கொண்டு வந்துள்ள விஷத்தை,'' என்று சொல்லவும் சபையோரெல்லாரும் இதென்னவென்று பயந்துவிட்டனர். தீக்ஷிதர் மிக்க நொந்து போனார்.

கங்காதர சர்மா அட்டகாசத்துடன், "ஆம் ஸ்வாமி, தங்களுக்கு விஷம் கொடுக்கவே வந்துள்ளேன். தொன்று தொட்டு பாரத நாட்டினிலே ஸ்திரமான நம் தத்வங்களைத் தாங்கள் தாக்கி ஹிம்ஸிப்பதை நான் பொறுக்க முடியுமா? ஆகையால் கீர்த்தி சரீரமுடைய தங்களை அழித்துவிட நினைத்தேன். அது நிறைவேறவில்லை. என்னால் அதைச் செய்ய முடியவில்லை. அதற்கென்றே கொண்டு வந்துள்ள தம்முடைய உயிரைக் குடிக்கும் விஷம்! தாங்கள் ஸகல சாஸ்திரக் கலைகளில் பண்டிதராயிற்றே பாவம்! எங்கே உமக்குச் சாமர்த்தியமிருந்தால் இந்த விஷத்தைக் குடித்து ஜயமடையுங்கள், பார்க்கலாம்" என்று தாம் கொண்டு வந்த விஷம் கலந்த பாலை முன்னால் எடுத்துக்காட்டினார். ஜனங்களில் ஒரே கெடுபிடி, ஆரவாரம். தீக்ஷிதர் கங்காதரரின் பேச்சைக்கேட்டு வெட்கப்பட்டுக் கோபத்தினால் சர்மாவை திரஸ்காரம் செய்தார். அவருடைய மோசக்காரத்தனத்திற்கு வெகுண்டார்.

ஸ்ரீகளவர்கள் கம்பீரமாக பதிலளித்தார்:- சர்மா அவர்களே உம்க்கும் நம்து தீக்ஷிதருக்கும் எவ்வளவு வித்தியாசம்! பார்த்தீர்களா? நம்முடன் அநேக தடவைகள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வாதித்துத் தோற்ற போதிலும் தீக்ஷிதர் தமது தாராள மனப்பான்மையுடன் நம்மோடு நட்புடனும் அன்புடனும் நடந்து கொண்டுள்ளார். மற்றும் தனது உயர்ந்த எண்ணங்களினால் அவர் எனது மதிப்பிற்குறிய ஆப்த நண்பனாகிவிட்டார். ஆனால்.... தாங்கள்? கேவலம் தத்வாபிமானத்திற்கு வசமாகி; கர்வம், த்வேஷ புத்தியால் மதம் பிடித்தவராய், அவைகளுக்கு அடிமையாகித் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக, பிறர் உயிரைக் குடிக்கவும் தயாராய், மனிதத் தன்மையையே இழந்துவிட்டீர்கள். இது மிகமிக வருந்தத்தக்க விஷயம். தத்வ சாஸ்திரம் ஒரு தனிப்பட்டவரின் சொத்தல்ல. ஆகமம் எண்ணிலடங்காதவைகள். அதற்கு எந்த க்ரமத்தில் அர்த்தம் செய்ய வேண்டுமென்பதை சாஸ்திரம் சொல்லும் முறையினால் விமரிசை செய்து ஆலோசிப்பதற்கு ஜிக்ஞாஸுகளுக்கு அறிவாளிகளுக்கு அல்லது அறிய விரும்புபவருக்கு உரிமை உள்ளது. அதன்படி தத்வ ஆராய்ச்சி நடந்து உண்மையான தத்வத்தை உலகத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு எந்தவிதமான தடையுமில்லை. ஆனால் நல்ல வழியில் செய்யப்பட வேண்டும்.

"தத்வ சம்பந்தமாக அபிப்ராய பேதம் வரலாம். அது இயற்கை. தங்கள் தங்களுடைய தத்வஸாதனைக்காக வாதம் செய்யலாம்; தோற்கலாம் அல்லது வெற்றியடையலாம். வெற்றி - தோல்விகள் ஈச்வரன் வசத்திற்குட்பட்டது. அது அங்கேயே முடிந்துவிட வேண்டும். முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும். அதல்லாமல் வாதத்தில் தனி மனிதன் மீது த்வேஷம், வெறுப்பு முதலியவை ஆரம்பித்து விட்டால் அது மிகமிக வருந்தத்தக்கது. அது நமது ப்ராம்மணீகத்திற்கு அபாயம்! இதை மாத்திரம் நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். நமக்கும் உமக்கும் தத்வத்தில் அபிப்ராய பேதமிருப்பினும், நாமும் நீங்களும் ஒரே தேசத்தில் ஒரே சாஸ்திர வேதங்களில் நம்பிக்கை வைத்து வைதிக தர்மத்தை வளர்க்க தீக்ஷை எடுத்துக் கொண்டுள்ளோம். நமது முக்ய நோக்கம் வேறானாலும் ப்ராம்மண தத்வத்தை ரக்ஷிப்பது, கலாச்சாரம், தர்மம் முதலியவைகளின் ப்ரசாரங்களில் நாமெல்லோரும் ஒன்றே. தாங்கள் எமக்கு விஷம் கொடுக்க வந்தீர்கள் என்பதற்காக நாம் இவ்வாறு சொல்லவில்லை. நாம் சொல்லவில்லையா காசி விச்வநாதனே நம்மைப் பரீக்ஷிக்க வேண்டி வந்தது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

போலுள்ளார் என்று! இப்பொழுதும் எனது எண்ணம் அதுவேதான். ஸமுத்ரத்தைக் கடையும் சமயம் வாயு தேவனின் அனுக்ரஹத்தினால் ஆலகால விஷத்தையே குடித்து, விஷகண்டன் (நீலகண்டன்) என்று பெயர்பெற்ற வைஷ்ணவ ச்ரேஷ்டனான அந்த சம்புவே மனோநியாமகனானபடியினால் உம்மைத் தூண்டி விஷத்தையனுப்பியுள்ளார். இதேன் தெரியுமா? என்னை அழித்துவிடவல்ல! நாம் வாதித்ததே உண்மையான அபிப்ராயமென்று ஆமோதித்து தான் வைஷ்ணவ ச்ரேஷ்டன் என்று இரண்டாவது முறை நிரூபிக்கவே! உம், எங்கே, கொடுங்கள் உமது விஷத்தை! அந்த விஷகண்டனின் கிருபையினால் உமது விஷத்தைக் குடிக்க முடியும் என்ற தைரியம் நமக்குள்ளது. குடிப்பவர் யார்? குடிக்க வைப்பவர் யார்? எல்லாம் ஸ்ரீஹரியின் இச்சை! என்றருளினார்.

சர்மாவின் தலையில் இடி விழுந்தாற்போலாய் விட்டது. தாம் விஷம் கொண்டு வந்த விஷயம் அறிந்து தெரிவித்த ஸ்ரீகளவரின் மகிமைக்கு வியப்படைந்தார். அப்பொழுதுதான் அவருக்கு ஸ்ரீகளவர்கள் மஹா அபிரோக்ஷ க்ஞானிகளென்று தெரிந்தது. தனது அஞ்ஞானத்திற்காக வெட்கமடைந்து சர்மா ஸ்ரீகளவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "மஹா அபராதமாயிற்று ஸ்வாமி, மன்னிக்க வேண்டும். தாங்கள் அபரோக்ஷ க்ஞானிகள், வாதமல்லர். ஞானிகளுக்கெல்லாம் உத்தமர் உதாரஹ்ருதயமுள்ள மஹான். கருணைக்கடல், நான் கேவலம் பாமரன். உம்மீது கெட்ட எண்ணத்துடன் விஷம் கொடுக்க வந்த நான் மஹாபாவி; குற்றத்தை மன்னித்துக் காப்பாற்றுங்கள், என்று கண்ணீர் மல்கக் கதறினார்.

சற்றேனும் விகாரமற்ற மனதுடன் ஸ்ரீயவர்கள் சொன்னார்.

"சர்மா அவர்களே, நீங்கள் விஷம்கொண்டு வந்தீர்களென்று எமக்கு உம்மிடம் கோபமில்லை. ஜீவ ஸமுதாயம் அஸ்வதந்திரர்களல்லவா? அந்த ஜகந்நாடக ஸூத்ரதாரியின் கைப்பொம்மைகளல்லவா நாம் எல்லோரும். அவன் ஆட்டி வைக்கிறபடி நாம் ஆடித்தானே ஆக வேண்டும். வேறு என்ன செய்ய முடியும்! உமது தபஸும் ஹானிகரமானது என்றறிந்து பச்சாத்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தாபத்தினால் நீங்கள் உம்மை விடுவித்துக் கொண்டீர்கள் உண்மை. ஆனால் நாம் செய்த சபதத்திலிருந்து நாம் எப்படிப் பின்வாங்க முடியும்?

"संभावितस्य चाकीर्तिर्मरणादतिरिच्यते" என்று உபதேசிக்கவில்லையா ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா? கௌரவசாலியான மனிதனுக்கு லோகத்தில் அபகீர்த்தி மரணத்தைக் காட்டிலும் பெரியதல்லவா? இப்பொழுது நாம் உமது ப்ரார்த்தனையின்படி குடிக்காமல் விட்டால், நமது சவால் அர்த்தமில்லாமல் போவதுடன் நாம் அபகீர்த்திக்கு ஆளாக நேரிடும். சபதத்தை மீறினவனென்னும் அபகீர்த்திற்கும் ஆளாகி ஜீவித்திருப்பதைக் காட்டிலும் ப்ரதிக்ஞையைக் காப்பாற்றிக் கொள்ள மடிவதிலேதான் ஸுகம்! ஸ்ரீஹரியின் இச்சை எப்படியோ அவ்வாறு நடக்கட்டும். கொடுங்கள் உமது விஷத்தை", என்று சொல்லி ஸ்ரீயவர்கள் பலவந்தமாக சர்மாவின் கையிலிருந்த விஷத்தின் கிண்ணத்தை ஏடுத்துக் கொண்டு குடித்தே விட்டார் விஷத்தை!!

ஜனங்கள் ஆரவாரம் செய்ய ஆரம்பித்தனர். ஸ்ரீயவர்கள் புன்னகை செய்து கண்ணை மூடிக்கொண்டு மனக்கண்களால் ஸ்ரீஹரியைப் பார்த்துக்கொண்டே த்யானத்தில் ஆழ்ந்தார். சற்று நேரம் கழிந்தது. பயங்கர விஷம் தனது வேலையை ஆரம்பித்தது. ஸ்ரீகளவர்களின் ஒளிமயமான தேகம் கருத்தது. ஆனால் முகத்தில் மாத்திரம் ஸாத்வீக ஒளி (தேஜஸ்) வீசுகிறது. உடம்பு வியர்த்துக் கொட்டியது. ஜனங்கள் யாவரும் சொல்லொணாத் துயரத்திலாழ்ந்து திடுக்கிட்டு இமை கொட்டாமல் ஸ்ரீகளவரையே உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றனர். ஸ்ரீயவர்களின் முகத்திலிருந்து ஸ்ரீபகவந்தனின் ஸ்தோத்திரரூபமாக கம்பீரமான (அர்த்தகர்ப்பமுள்ள) அர்த்த புஷ்டியுள்ள கவிதை ப்ரவாஹம் புறப்பட்டது. ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மனைத் துதித்து,

"श्रीषोडश बाहु नृसिंहाष्टकम् ॥
भूखंडं वारणांडं परवरविरटं डंप डंपोरुडंपं ।
डिं डिं डिं डिं डिंडिंषं दह मपि वह मैर्झपझंपैश्च झंपैः ॥
तुल्यास्तुल्यास्तु तुल्याःधुमधुम धुमकैः कुंकुमांकैः कुमांकैः ।
एतत्ते पूर्णयुक्तं अहरह करहः पातु मां नारसिंहम् ॥१॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



भूभूद्भू भृदभुजंगं प्रलयरववरं प्रज्वलदज्वालमालम् ।
खर्ज्जर्जं खर्जदुर्जं खखचखचक चित्खार्ज दुर्जर्जयंतम् ॥
भूभागं भोग भागं गगग गगगनं गर्दमृत्युग्रगंडम् ।
स्वच्छं पुच्छं स्वगच्छं, स्वजन जननुतः पातुमांनारसिंहम् ॥२॥

येनाभ्रं गर्जमानं लघुलघुमकरो बाल चंद्रार्कदंष्ट्रो ।
हेमां भोजं सरोजं जट जट जटिलो जाड्यमानस्तु भीतिः ॥
दंतानां बाधमानां रवगट खगटवो भोज जानुस्सुरेंद्रो ।
निष्प्रत्यूहं सराजा गह गह गहतः पातुमां नारसिंहम् ॥३॥

शंखं चक्रं च चापं परशु मशमिषं शूल पाशां कुशास्त्रं ।
बिभ्रंतं वज्रखेटं हलमुसलगदा कुंत्य मत्युग्र दंष्ट्रम् ॥
वंदे प्रत्येक रूपं परपद निवसः परतु मांनारसिंहः ॥४॥

पादद्वंद्वं धरित्री कटिविपुल तरो मेरुमध्व्यूड्वमूरुम् ।
नाभि ब्रह्मांड सिंधुः हृदयमपि भवो भूतविद्वत्समेतः ॥
दुश्चक्रांकं स्वबाहुं कुलिशनखमुखं चन्दसूर्याग्नितेत्रम् ।
वक्त्रं वहिन्सु विद्युत्सुरगण विजयः पातु मां नारसिंहः ॥५॥

नासाग्रं पीतगंडं परबल मथतं बद्ध केयूर हारम् ।
रौद्रं दुंष्ट्राकरालं अमितगुणगणं कोटिसूर्याग्नि नेत्रम् ॥
गांभीर्यं पिंगकाक्षं भृकुटित विमुखं षोडशार्धार्धबाहुम् ।
वंदे भीमा दटहासं त्रिभुववविजयः पातु मां नारसिंहः ॥६॥

केकेनृसिंहाष्टके नरवरसदृशं देवभीत्वं गृहित्वा ।
देवन्द्यो विप्रदंदं प्रतिवचन पयायांयन प्रत्यनैषीः ॥
शापं चापं चखड्गं प्रहसिद वदनं चक्रचक्रीच केन ।
ओमित्ये दैत्य नादं प्रकच विविदुषा पातुमां नारसिंहः ॥७॥

झं झं झं झं झकारं झष झष झषितं जानु देशं झकारम् ।
हं हं हं हं हकारं हरितकहह सायं दिशेवं वकारम् ॥
वं वं वं वं वकारं वदनदलिततं वाम पक्षं सुपक्षं ।
लं लं लं लं लकारं लघुवण विजयः पातुमां नारसिंहः ॥८॥

भूत प्रेत पिशाच यक्षगणशः देशांत दुश्चाटना ।
1. चोर व्याधि पहज्ज्वरं भयहरं शत्रुक्षयं निश्चयं ॥
संध्याकालजपं तमष्टकमिदं तद्भक्ति भूर्वादिभिः ।
2. प्रहलादेव वरो वरस्तु जयिता सत्पूजितां भूतये ॥९॥

முன்பு தனது ஸர்வோத்தமத்தை ஸ்தாபிப்பதற்காகப் போராடின ப்ரஹலாதனுக்கு அவன் தந்தை விஷம்

---

1. पाठांतर - चोरव्याधि भयापहं विपद्हरम् ।
2. श्रीविजयींदविरचित श्री नृसिंहाष्टकम् ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

குடிக்கக் கொடுத்தபொழுது அவனை விஷத்தின் கொடுமையிலிருந்து காப்பாற்றி ஸ்ரீஹரி ப்ரஹலாதனுக்குக் கீர்த்தியளித்தபடி, கலியுகத்தில் ஸ்ரீஹரியின் ஸர்வோத்மத்வத்தை நிலைநாட்டப் போராடி வருகின்ற ஸ்ரீவிஜயீந்திரரும் விஷம் குடித்து ஹரிபக்தியின் மகிமையைக் காண்பித்தாரென்ற கீர்த்தியை அளிப்பதற்காகவே போல, ஸர்வக்ஞரின் ஸித்தாந்தம் தான் தனது அபிப்ராயமென்று விஷகண்டனின் (பரமசிவன்) அந்தர்யாமியான நரஹரியே தனது பக்தனான விஜயீந்திரரை விஷபாதையினின்று காப்பாற்றினானோ என்பது போல விஷபாதையினால் கருப்பான ஸ்ரீகளவர் சரீரம் கொஞ்சமாக சிவக்கத் தொடங்கிற்று. ஸ்ரீகளவரின் சரீரம் முதலிலிருந்தவாறே தேஜஸ்ஸுடனும் காந்தியுடனும் விளங்கிற்று. ஸ்ரீகளவரின் முகம் என்னும் ஆகாயத்தில் நகை (சிரிப்பு) என்னும் சந்திரன் ஒளிவீச ஆரம்பித்தான். ஸ்ரீயவர்கள் கண் திறந்தார். இந்த அற்புதத்தை ஜன சமுத்திரம் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் கண்டு பூரித்தது. ஸ்ரீயவர்கள் இனிமையான குரலில் சாந்தமாக சர்மாவைப் பார்த்து இவ்வாறு சொன்னார்:- "சர்மா அவர்களே! இதோ பார்த்தீரா, ஸ்ரீவிஷகண்டன் மற்றும் அவனது ஸ்வாமியான ஸ்ரீஹரியின் அனுக்ரஹத்தால் உமது விஷத்தைக் குடித்துப் பிழைத்து விட்டோம். நமது சபதம் நிறைவேறிற்று. இதிலிருந்தாவது உமக்கு ஸ்ரீகௌரீசனின் மதம் எதுவென்று தெரிந்ததா? இருக்கட்டும், இனிமேலாவது இந்தமாதிரிக் காரியங்களில் இறங்காதீர்கள். எல்லோரிடமும் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ளுங்கள்; கீர்த்தியையடையுங்கள், உமக்கு மங்களமுண்டாகட்டும் என்றாசிர்வதித்தார். தீக்ஷிதர் எழுந்து வந்து ஸ்ரீயவர்களை வணங்கி ஆனந்தக் கண்ணீர் பெருக "மஹாப்ரபோ, தாங்கள் உண்மையில் எமது சிவனின் கருணைக்குப் பூர்ண பாத்திரர். ஸ்வாமி, அதிகம் எதுவும் சொல்லத் தோன்றவில்லை. நீர் மஹாமஹிமை வாய்ந்தவர்! தங்கள் தகுதியோ அல்லது திறமையையோ எங்களால் அறிய முடியாது ஸ்வாமி. தாங்கள் நடித்த நாடகத்தினால் நாங்கள் தன்யனானோம். தங்கள் பாதஸ்பர்சத்தினால் இந்த பூமி பரிசுத்தமானது. ஸ்வாமி எனது ப்ரார்த்தனை ஒன்று உள்ளது தயவு செய்து சர்மா அவர்களை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

மன்னித்து அனுக்ரஹிக்க வேண்டும்" என்று சொல்லவே ஸ்ரீயவர்கள் புன்னகையுடன், தீக்ஷிதரே, நாம் தான் விஷத்தைக் குடித்தோம் என்று உங்களுக்கு ப்ரமையா? உம். அந்த விஷத்தையருந்தி நாம் பிழைக்க முடியுமா என்ன? நாம் எங்கே? நமது யோக்யதை என்ன? கருணா மயமான அந்த நரஹரி எப்படியும் தன்து பக்தரை ரக்ஷிப்பானென்பதற்கு நாம் ஒரு எடுத்துக்காட்டு. அவ்வளவு தான்! அவனுடைய அபார அனுக்கிரஹம் எப்படிப்பட்டதென்பதை பூஜாகாலத்தில் உங்களுக்குக் காண்பிக்கிறோம். விஷம் அருந்தியது நாமல்ல அவனே!" என்று சொல்லவும் ஸகலரும் ஆர்வத்துடன் அதை அறிய விரும்பினர். ஸ்ரீயவர்கள் கங்காதர சர்மாவை வஸ்திராபரணங்கள் கொடுத்துக் கௌரவித்து அனுக்ரஹித்தார். ஜனங்களின் ஜயகோஷம் வானைப் பிளந்தது.

ஸ்ரீயவர்களின் பூஜாகாலத்தில் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியின் முகவஸ்திரத்தை எடுத்துவிட்டுக் கையில் எடுத்துக் கண்நிறையப் பார்த்துவிட்டு த்யானித்து ஆனந்தக் கண்ணீர் வர்ஷித்தார். அவர் தீக்ஷிதருக்கும், சர்மாவிற்கும், கூடியிருந்த ஜனங்களுக்கும் சுவாமியைக் காண்பித்தார். என்ன ஆச்சரியம்! இதுவரை சிவப்பு நிறத்தில் கண்டுவந்த ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியின் கழுத்து கருப்பாக உள்ளது! முந்தின நாளன்று சிவப்பு நிறமாயிருந்த அவரது கழுத்து கருப்பாகியுள்ளது.*

ஜனங்கள் யாவரும் ஸ்ரீயவர்களிடம் சுவாமி காட்டிய வாத்ஸல்யத்தை (அன்பை)க்கண்டு "ஆஹா, தயாளு பக்தரின் ரக்ஷணைக்காக விஷத்தையா குடித்தாய்? பக்தரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதில் உனக்கு எவ்வளவு அக்கறை? உனது உபாஸகராக, உன்னை அடைந்த நமது ஸ்ரீகளவரே தன்யர்! விஷம் குடித்து வெற்றிபெற்ற விஜயீந்திர குருகளின் பாதஸேவை செய்யும் புண்யம் ஸம்பாதித்த நம் ஜீவனமே ஸார்த்தகமாயிற்று" என்றெல்லாம் ஸ்ரீயவர்களைக் கொண்டாடினார்கள்.

---

*இன்றைக்கும் கும்பகோணத்திலுள்ள ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி கழுத்து விஷம் குடித்ததினால் கருப்பானதை யார் வேண்டுமானாலும் காணலாம். - நூலாசிரியர்.

CC0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஷோட ஹஸ்தபாஸ (16 கைகளையுடைய) ஸ்ரீந்ருசிம்மாஷ்டகம்

பூ$_4$க$_2$ண்ட$_3$ம் வாரணாண்ட$_3$ம் பரவரவிரடம் ட$_3$ம்ப ட$_3$ம்போரு ட$_3$ம்பம் டி$_3$ம் டி$_3$ம் டி$_3$ம் டி$_3$ம் டி$_3$டி$_3$ம் ப$_3$ம் த$_3$ஹமபிவஹமைர் ஜ$_4$ம்ப ஜ$_4$ம்பைஸ்ச ஜ$_4$ம்பை:

துல்யாஸ்துல்யாஸ்து துல்யா: து$_4$ம து$_4$ம து$_4$மகை: குங்குமாங்கை: குமாங்கை:

ஏதத்தே பூர்ணயுக்தம் அஹரஹகரஹ: பாதுமாம் நாரஸிம்ஹம்: || 1 ||

பூ$_4$ப்$_4$ருத் பூ$_4$ப்$_4$ருத் பு$_4$ஜங்க$_3$ம் ப்ரளயரவவரம் ப்ரஜ்$_3$வலத்$_3$ஜ்$_3$வாலமாலம் |

க$_2$ர்ஜ$_3$ர்ஜ$_3$ம் க$_2$ர்ஜ$_3$துர்ஜ$_3$ம் க$_2$க்$_2$ச க$_2$சக$_2$ சித்க$_2$ர்ஜ$_3$து$_3$ர்ஜ$_3$ர் ஜ$_3$யந்தம் ||

பூ$_4$பா$_4$க$_3$ம் போ$_4$க$_3$பா$_4$க$_3$ம் க்$_3$க$_3$க$_3$ க$_3$க$_3$க$_3$ளம் க$_3$ர்த$_3$ம்ருத்யுக்$_3$ர க$_3$ண்ட$_3$ம் |

ஸ்வச்ச$_2$ம்புச்ச$_2$ம் ஸ்வக$_3$ ச்ச$_2$ம் ஸ்வஜ$_3$ன ஜனனுத: பாதுமாம் நாரஸிம்ஸம் ||2 ||

யேனாப்$_4$ரம் க$_3$ர்ஜ$_3$மானம் லகு$_4$லகு$_4$மகரோ பா$_3$லசந்த்$_3$ரார்க்க த$_3$ம்ஷ்ட்ரோ |

ஹேமாம் போ$_4$ஜ$_3$ம் ஸரோஜ$_3$ம் ஜ்$_3$ட ஜ$_3$ட ஜ$_3$டிலோ ஜா$_3$ட்$_3$யமான ஸ்துபீ$_4$தி: ||

த$_3$ந்தாம்னாம் பா$_3$த$_4$மானாம் க$_2$க$_3$ட க$_2$க$_3$டவோ போ$_4$ஜ ஜா$_3$னுஸ்ஸுரேந்த்$_3$ரோ |

நிஷ்ப்ரத்யூஹம் ஸராஜா$_3$ க$_3$ஹ க$_3$ஹ க$_3$ஹத: பாதுமாம் நாரசிம்ஹம்: (3) சங்கம் சக்ரம் சசாபம் பரசுமசமிஷம் சூலபாசாங்கு சாஸ்த்ரம் | பி$_3$ப்$_4$ரந்தம் வஜ்$_3$ரகே$_2$டம் ஹலமுஸல க$_3$தா$_3$ குந்த்ய மத்யுக்$_3$ர் த$_3$ம்ஷ்ட்ரம் || ஜ்$_3$வாலாகேசம் த்ரிநேத்ரம் ஜ்$_3$வலத$_3$னல நிப$_4$ம் ஹாரகேயூரபூ$_4$ஷம் |

வந்தே$_3$ ப்ரத்யேக ரூபம் பரப$_3$ நிவஸ: பாதுமாம் நாரஸிம்ஹ. || 4 ||

பாத$_3$த்$_3$ வந்த்$_3$வம், த$_4$ரித்ரீ கடிவிபுலதரோ மேருமத்$_4$வ் யூட்...ரும் |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



நாபி$_4$ர் ப்$_3$ரம்மாண்ட$_3$ஸிந்து$_4$: ஹ்ருத$_3$யமபி ப$_4$வோ பூ$_4$தவித்$_3$வத்ஸமேத: ||

து$_3$ஸ்சக்ராங்கம் ஸ்வபா$_3$ஸூம் குலி சநக$_2$முக$_2$ம் சந்த்ர ஸூர்யாக்$_3$னி நேத்ரம் |

வக்த்ரம் வன்ஹிஸ்து வித்$_3$யுத்ஸூரக$_3$ண விஜ$_3$ய: பாதுமாம் நாரஸிம்ஹ: || 5 ||

நாஸாக்ரம் பீனகண்டம் பரபலமதனம் பத்தகே யூரஹாரம் ரௌத்ரம் தம் ஷ்ட்ராகராம் அமித குணகணம் கோடி ஸூர்யாக்நி நேத்ரம் |

காம்பீர்யம் பிங்களாக்ஷம் ப்ருகுடிதவிமுகம் ஷோடர்த்தார்த்த பாஹூம் |

வந்தே பீமாட்டஹாஸம் திரியு வனவிஜய: மாது மாம் நாரசிம்ஹம் ||| 4 ||

கேகே ந்ருஸிம்ஹாஷ்டகே நரவரஸத்$_3$ருசம் தே$_3$வ பீ$_4$த்வம் த்$_3$ருஹித்வா ||

தே$_3$வந்த்$_3$யோவிப்ரத$_3$ந்த$_3$ம் ப்ரதிவசன பயாயாம் யனப்ரத்யனைஷீ: ||

சாபம் சாபஞ்ச க$_2$ட்க$_3$ம் ப்ரஹஸித$_3$ வத$_3$னம் சக்ரசக்ரீசகேன

ஓமித்யே தைத்$_3$யநா$_3$தம் ப்ரகச விவிது$_3$ஷா பாதுமாம் நாரஸிம்ஹ: || 7 ||

ஜ$_4$ம் ஜ$_4$ம் ஜ$_4$ம் ஜ$_4$ம் ஜ$_4$காரம் ஜ$_4$ஷ ஜ$_4$ஷ ஜ$_4$ஷிதம் ஜா$_3$னுதே$_3$சம் ஜ$_4$காரம் |

ஹம், ஹம், ஹம், ஹம் ஹகாரம் ஹரிதகஹஹஸாயம் தி$_3$சேவம்வகாரம் ||

வம், வம், வம், வம் வகாரம் வத$_3$னத$_3$லிதம் வாம பக்ஷம் ஸூபக்ஷம் |

லம் லம் லம் லம் லகாரம் லகு$_4$வண விஜ$_3$ய: பாதுமாம் நாரஸிம்ஹ: (8)

நாஸாக்$_3$ரம் பீன க்$_3$ண்ட$_3$ம் பரப$_3$ல மத$_2$னம் ப$_3$த்$_3$த$_4$கேயூரஹாரம் |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ரௌத்₃ரம் த₃ம்ஷ்ட்ராகராலம் அமித கு₃ணக₃ணம் கோடிஸூர்யாக்₃ நிநேத்ரம் ||

கா₃ம்பீ₄ர்யம் பிங்க₃லாக்ஷம் ப்₄ருகுடித விமுக₂ம் ஷோட₃ சார்தா₄ர்த₄ பா₃ஹும் ||

வந்தே₃ பீ₄மாட்டஹாஸம் த்ரிபு₄வன விஜ₃ய: பாதுமாம் நாரஸிம்ஹ: || 6 ||

பூ₄தப்ரேத பிசாச யக்ஷக₃ணச: தே₃சாந்த து₃ஸ்சாடனா|

சோரவ்யாதி₄ மஹஜ்₃ஜ்₃வரம் ப₄யஹரம் சத்ருக்ஷயம் நிஸ்சயம் ||

ஸந்த்₄யா காலஜ₃பம் த₃மஷ்டகமித₃ம் தத்ப₄க்தி பூ₄ர்வாதி₃பி₄: |

ப்ரஹலாதே₃வவரோ வரஸ்து ஜ₃யிதா ஸத்பூஜி₃தாம் பூ₂த₄யே || 9 ||

பாடபேதம். சோரவ்யாதி₄ப₄யாபஹம் விஷஹரம்

ஸ்ரீ விஜயீந்திர தீர்த்தரினால் இயற்றப்பட்டது ஸ்ரீந்ருஸிம்ஹாஷ்டகம்.

குறிப்பு:- ஸமஸ்கிருதப் பயிற்சி இல்லாதவர்களுக்கு இதைப்படிக்க உதவும் வகையில் ஒவ்வொரு ச்லோகத்திலும் வந்துள்ள சமஸ்கிருத எழுத்துக்களை (தமிழிலில்லாத எழுத்துக்களை)த்தெரிந்து கொள்ள 2,3,4 என்ற எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எண்கள் கொடுக்கப்படாத சொற்கள் தமிழிலுள்ளபடியே உச்சரிக்கலாம். க, ச, ட, த, ப, ங, ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ஷ, ஸ, ஹ, ள இவைகள் தமிழிலும் உபயோகத்தில் உள்ளன. ஆனால் கீழ்க்கண்ட எழுத்துக்கள் சற்று அழுத்தி உச்சரிக்க வேண்டும். கூடியவரை உச்சரிப்பு விதம் கொடுக்கப்பட்டுள்ளது. ஸமஸ்கிருதம் தெரிந்தவர்களை மேற்படி ஸ்தோத்திரத்தைப் படிக்கச் சொல்லிச் சில தடவைகள் காதால் கேட்டால் தானே சரியாக வந்துவிடும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ஸமஸ்க்ருதம்: ख, छ, घ, झ, ठ, ढ, थ, ध, फ, ब, भ, श, ज्ञ, ग, ञ,
ड, द

II

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க$_2$ | = kha (க்ஹ) | க$_3$ | = | ga as in கர்வம் | |
| ச$_2$ | = chha (ச்ஹ) | ஜ$_3$ | = | Ja as in (ஜபம்) | |
| ட$_2$ | = tha (ட்ஹ) | ட$_3$ | = | Da as in (படம்) | |
| த$_2$ | = thha (த்ஹ) | த$_3$ | = | த as in (பதம்) | |
| ப$_2$ | = pha (ப்ஹ) | ப$_3$ | = | Ba as in (தபலா) | |
| ப$_2$ | = Bha | | | | |
| க$_4$ | = Gha | श | = | as in சக்தி | |
| ஜ$_4$ | = Jha | ष | = | ஷ as in விஷம் | |
| ட$_4$ | = Dha | ज्ञ | = | க்ஞ as in க்ஞானம் | |
| த$_4$ | = Dhha | त्र | = | த்ர as in பவித்ரம் | |
| ப$_4$ | = Bha | ஹ | = | as in மஹான் | |

## 57. ஆகர்ஷணவித்தையில் திறமை

ஸ்ரீவிஜயீந்திரயதிவர்யர் "சந்த்ரிகா" பாடத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். நூற்றுக்கணக்கான ஜனங்கள் சிஷ்யர்கள் சிரத்தை-பக்தியுடன் யதிசந்திரரின் முகத்தாமரையின்று அநாயாஸமாகத் தங்குதடையின்றி புறப்படும் "சந்திரிகா" என்னும் கங்கையின் உயர எழும் அலைகளில் மிதந்து ஆனந்தம் மிகுந்தவராயுள்ளனர். அதாவது ஸ்ரீயவர்களின் உபதேசத்தைக் கேட்டுத் தன்னை மறந்து ஆனந்தத்தில் மூழ்கியுள்ளனர். காலையில் சுமார் 10 மணியிருக்கும். ஒரேமாதிரி நடந்துள்ளது. ப்ரவசனம் மஹாஸமஸ்தானத்தின் பூஜைக்குச் செல்ல வேண்டிய சமயத்தையறிவிக்கும் நகாரி, வாத்யம் முழங்க ஆரம்பித்தது. ஸ்ரீயவர் இருப்பிடம் விட்டு எழுந்து புறப்பட வேண்டும். அதற்குள் மடத்தின் ஸர்வாதிகாரி, பாருபத்திகார்ரும் அவசரமாக ஓடிவந்து ஸ்ரீகளவரை வணங்கி நின்றனர். அவர்கள் முகம் வாடியிருந்தது. இருவரும் பயந்து நின்றிருக்கின்றனர். ஏதோ சொல்ல ப்ரயத்தனம் செய்கின்றனர். பேச்சே வரவில்லை - நா தழுதழுத்தது. கை கால்கள் நடுங்குகின்றன. அவர்களின் நிலைமையைக் கண்டு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

புன்னகையுடன் ஸ்ரீகளவர்கள் ஏன் இவ்வளவு பயப்படுகிறீர்கள்? ஸ்ரீமடத்தின் க்ரந்தங்கள் வைக்கப்பட்டிருக்கும் அறையிலுள்ள கிரந்தங்கள் களவாடப்பட்டிருப் பதைச் சொல்லத்தானே நீங்கள் வந்துள்ளீர்கள்? என்றார். திருட்டு சமாசாரத்தை எவ்வாறு சொல்வதென்று தத்தளித்துக் கொண்டிருந்த அவர்களுக்கு ஸ்ரீயவர்களே அந்த விஷயத்தைச் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்டனர். அபரோக்ஷ க்ஞானிகளான ஸ்ரீகளவர்களுக்குத் தெரியாத விஷயம் ஏது? இதற்கு முன் எத்தனையோ தடவைகள் இப்படிப்பட்ட அனுபவம் தமக்காகவில்லையா? சற்று சமாதானத்துடன் ஸர்வாதிகாரிகள் விக்ஞாபித்தார்கள். "ஆம், மஹாஸ்வாமி, ஸர்வக்ஞரின் சித்தத்திற்குத் தெரியாதது என்ன இருக்கிறது? ஆனால் களவு போன முறை விசித்திரமாக உள்ளது. சுவரில் கன்னமிட்டுக் கள்வர்கள் உள்ளே நுழைந்திருக்கின்றனர். ப்ராசீன க்ரந்தங்கள் யாவும் அப்படியே உள்ளன. ஆனால்....

சிரித்துக்கொண்டே ஸ்ரீயவர்கள் சொன்னார், "ஆனால் என்ன? நாம் எழுதிய க்ரந்தங்களின் பெட்டி மாத்திரம் களவாடப்பட்டுள்ளது. அவ்வளவு தானே? என்றார். கூடியிருந்த ஜனங்கள் யாவரும் துக்கத்துடனும் ஆச்சரியத்துடனும்," என்ன? ஸ்ரீயவர்களின் க்ரந்தங்கள், அந்த க்ரந்த ரத்னங்களா! காணாமற் போயினவா? ஆச்சர்யம்! இது உண்மையா? என்று உணர்ச்சி வசப்பட்டுக் கேட்டனர். பாருபத்திதாரர், "ஆம் ஸ்வாமி, ஸ்ரீபாதங்களவர்கள் சென்ற பத்துப் பன்னிரண்டு வருடங்களாக இயற்றியுள்ள எவ்வளவோ கிரந்தங்கள் பெட்டியுடன் இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டன. எங்களுக்கு என்ன செய்வது என்று தோன்றவே இல்லை. எவ்வாறு களவாடப்பட்டது? இப்படிப்பட்ட நீசத்தனமான காரியத்திலிறங்கியவன் யார்? என்பதே ப்ரச்சினையாகவுள்ளது? எங்களது அஜாக்ரதையினால் இது நடந்துள்ளது. சுவாமிகள் மன்னித்துக் காப்பாற்ற வேண்டும். மற்றும் இனி என்ன செய்ய வேண்டுமென்பதற்கு உத்தரவிட வேண்டும்" என்று விக்ஞாபித்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தனர் ஸ்ரீயவர்கள் சற்றேனும் சஞ்சலமடையாமல், "உம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
இருக்கட்டும், மத்தியானம் இந்த விஷயத்தைப் பற்றி யோசிக்கலாம்'' என்று சொல்லிப் பூஜைக்கு எழுந்தருளினார்.

மடத்தில் ஸ்ரீகளவர் இயற்றிய க்ரந்தங்கள் களவாடப்பட்ட விஷயம் நொடிப்பொழுதில் கும்பகோண நகரமெங்கும் பரவிவிட்டது. ஸ்ரீவிஜயீந்திரரிடம் மனமார பக்தி செய்யும் கும்பகோணத்தின் ஜனங்களுக்கு இதனால் மிக்க வருத்தமுண்டாயிற்று. அநேகர் மனம் நொந்து கும்பல் கும்பலாகக் கூடிப் பேசத் தொடங்கினர். ''எந்தப்பாவி இப்படிப்பட்ட ஈனத்தொழிலைச் செய்திருக்கலாம்? ஒன்றா இரண்டா? நூற்றுக்கணக்கான க்ரந்தங்கள்; அவைகள் எப்படிப்பட்ட க்ரந்தங்கள்? ஸாமான்யமானவையா அவை? கடந்தகாலம், வருங்காலம், மேலும் தற்காலத்திய பண்டிதோத்தமர்களாலும் கண்டனம் செய்ய முடியாதவையாயிற்றே! ஸித்தாந்த ஸ்தாபகமானவைகளல்லவா அவைகள்? அபூர்வமான பத்ததி (க்ரமம்)யுடன் அலங்கரிக்கப்பட்ட வாத க்ரந்தங்கள்! மத்வ ஸித்தாந்தத்திற்கு எப்படிப்பட்ட நஷ்டம்! இது மா பெரும் அநியாயம். பத்திருபது வருஷத்திய ஸ்ரீயவர்களின் தவத்தின் பலனல்லவோ இவைகள்! பாரத நாட்டின் அணிகலமான அநிதஸாதாரணமான ஸபரஸ்வதி தாண்டவமாடும் இலக்கிய மேடையே அழிந்து விட்டதோ என்னும்படியுள்ளது! தத்வ சாஸ்திரத்திற்கு எவ்வளவு பெரியபேரிடி? இனி என்ன கதி? என்று பலவாறாகக் கவலை கொள்ள ஆரம்பித்தனர். கண்ட இடங்களிலெல்லாம் இதே பேச்சு. பலர் மடத்திற்கு வந்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கவும் ஆரம்பித்தனர்

மாலை நேரம் விஜயீந்திரர் மடத்தின் தாழ்வாரத்தில் ஆஸனத்திலமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றிலும் அநேக வித்வான்கள் - மாணவர்கள் - நகரப்ரமுகர்கள் நிரம்பியுள்ளனர். ஸ்ரீயவர்கள் மத்தியானம் இதைப்பற்றிப் பேசலாமென்று ஏற்கனவே சொல்லியிருந்தாரல்லவா? என்ன சொல்வார்? இனி என்ன செய்ய வேண்டியது முதலிய விஷயங்களை யோசித்துக் கொண்டிருக்கின்றனர் ஜனங்கள். அதே சமயத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திரர் வந்து ஸ்ரீயவர்களுக்கு வணங்கி அமர்ந்தார். தீக்ஷிதரின் முகம் வாடியிருந்தது. ஸ்ரீயவர்களிடம் விஞ்ஞாபித்தார்.
CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தீக்ஷிதர்:- மஹாஸ்வாமி, இதென்ன நான் கேள்விப்படுவது உண்மையா? ஸ்ரீகளவர்களின் க்ரந்தங்கள் களவாடப்பட்டுவிட்டனவாமே? மனம் சஞ்சலமடைந்துள்ளது ஸ்வாமி. அதனால் தான் உண்மை விஷயமறிய ஸந்நிதிக்கு ஓடிவந்தேன் ஸ்வாமி.

ஸ்ரீயவர்கள்:-உண்மை தான் தீக்ஷிதரே, நேற்றிரவு இந்த வேலை நடந்துள்ளது. மேல் நடக்க வேண்டியதைப்பற்றி இப்பொழுது யோசனை செய்து கொண்டிருக்கிறோம். நமது உழைப்பெல்லாம் வீணாகவல்லவா போய்விட்டது!

தீக்ஷிதர்:-(தமாஷாக) இதுவரை ஸ்ரீயவர்கள் காரியங்களெல்லாம் வீணாயிற்று. நமது சித்தாந்தமே உறுதியானாற்போலத் தோன்றுகிறது. அப்படியானால்? இல்லையா ஸ்வாமி?

ஸ்ரீயவர்கள்:- (வேடிக்கையாக) க்ரந்தங்கள் போனால் என்னவாயிற்று தீக்ஷிதரே! பஞ்சாங்கம் தொலைந்து போய்விட்டால் என்ன? நக்ஷத்திரங்களில்லையா? நாம் இருக்கிறோமல்லவா? உமக்கு ஆனந்தமாயிருக்க வேண்டுமல்லவா?

தீக்ஷிதரின் கண்ணிலிருந்து கண்ணீர் பெருகிற்று. துக்கத்துடன் சொன்னார்:-

தீக்ஷிதர்:-வேடிக்கைக்கு இது சமயமா ஸ்வாமி! எனது இதயத்தில் உண்டாகின்ற வேதனையை ஸ்ரீயவர்கள் அறியவில்லையா? இவ்வாறு ஹாஸ்யம் செய்யலாமா? களவின் விஷயம் கேட்ட உடன் எனக்கு இடிவிழுந்ததைப் போலாயிற்று. எனக்குண்டான துக்கம்-கலக்கம் உமாபதிக்குத்தான் தெரியும்! குருபாதரே, அநேகவருஷங்களின் தமது தபோபலன், மத்வ ஸித்தாந்தக் கோவிலின் உருக்காலான (Steel) கோட்டையைப் போலிருந்து அபூர்வமான க்ரந்தங்கள் நஷ்டமானால் ஸித்தாந்தத்திற்கு எப்படிப்பட்ட பயங்கர அடிவிழுந்துள்ளது என்பதை நானறிவேன். க்ரந்தமியற்றுதல் என்பது சிறுபிள்ளை விளையாட்டா என்ன? அதன் கஷ்டமென்னவென்பதை நானும் அறிவேன். வாழ்க்கையில் ஒரு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

க்ரந்தம் இயற்றுவதே மிகக் கடினமாயிருக்க, அப்பப்பா, நூற்றுக்கணக்கான க்ரந்தங்கள் தாங்கள் எவ்வாறு இயற்றினீரோ, எப்பொழுது எழுதினீர்களோ, அந்தப் பரமசிவனுக்குத்தான் தெரியும். ஸ்வாமி, அப்படிப்பட்ட க்ரந்த ரத்னங்கள் களவாடப்பட்டிருக்கும்பொழுது கவலையற்று இவ்வாறு உட்கார்ந்திருப்பது சரியா? ஏதாவது செய்து அந்த க்ரந்தங்களைக் கண்டு பிடித்தேயாக வேண்டும். இதை விக்ஞாபிக்கவே நானிங்கு வந்தேன் ஸ்வாமி.

தீக்ஷிதர் இவ்வளவு கலக்கத்துடன் சொன்னதைக் கேட்டதும் புன்னகையுடன் அவருக்கு விடையளித்தார்.

ஸ்ரீ:- உண்மைதான் தீக்ஷிதரே, "विद्वानेव विजानाति विद्वज्जन परिश्रम" அல்லவா? உங்களுக்கு நம்மிடத்தில் எவ்வளவு நட்பும், அன்பும்! நமது க்ரந்தங்களின் திருட்டுப்போனதை ப்ரதிவாதிகளான வேறு யாராவதாயிருந்தால் வெகுவாக மகிழ்ந்திருப்பார்கள்! ஆனால் தாங்கள் அதற்காக வருந்துகிறீர்கள். உம்மைப்போன்ற உதாரகுணம் படைத்தவர்கள் கிடைப்பது துர்லபம்! உம். இருக்கட்டும் தீக்ஷிதரே! நீங்கள் இப்பொழுது ஏன் வந்துள்ளீர்கள் என்பது எனக்குத் தெரியும்! (ஸ்ரீயவர்கள் இவ்வாறு சொல்லி தீக்ஷிதரின் முகத்தைப் பார்த்து சிரித்தார்).

தீ:- (ஆச்சரியத்துடன்) உம். ஏன் வந்திருக்கிறேன்? அப்படியானால் அதைத் தெரிவிக்கலாமே, ஸ்வாமி!

ஸ்ரீ:- எல்லா சாஸ்திரங்களிலும் நமது பரீக்ஷை முடிந்து விட்டது! 62 கலைகளில் வெவ்வேறு வாதிகளினால் பரீக்ஷை நடைபெற்றது. ஒன்றிரண்டு பரீக்ஷைகளைத் தாங்கள் ஸ்வயம் பார்க்கவில்லை. அந்தக் கலை நமக்கு வருமோ வராதோ என்று நேரில் உறுதிப்படுத்திக்கொண்டு போகத்தானே வந்திருக்கிறீர்கள்? தீக்ஷிதரே!

ஸ்ரீ: அப்பய்ய தீக்ஷிதருக்கு அத்யாஸ்சர்யமுண்டாயிற்று. தமது மனத்திலிருப்பதை ஸ்ரீயவர்கள் சொன்னவுடன் ஆச்சரியமாகாமலிருக்குமா என்ன? தீக்ஷிதரென்ன

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸாமான்யரா? ஷட் சாஸ்திரகோவிதர் மற்றும் 62 கலைகளில் பண்டிதர். ஆனால் தீக்ஷிதருக்கு ஆகர்ஷண-விஸர்ஜனம் என்னும் 64 கலைகளிலடங்கிய இந்த இரண்டும் தெரியாது.

ஸ்ரீயவர்களுக்கு இந்த இரண்டு கலைகளும் தெரியும் என்பது தீக்ஷிதருக்குத் தெரியும். முன்புதான் இயற்றின கிரந்தங்களைத்தாம் மிக ரஹஸ்யமாக-பத்திரமாக வைத்திருந்தாலும் ஸ்ரீயவர்கள் இந்த ஆகர் ண விஸர்ஜன கலையின் உதவியால் தமது க்ரந்தங்களைப் பெற்று அதற்குக் கண்டனம் எழுதி விஸர்ஜன வித்யா சகாயத்தினால் தாம் வைத்திருந்த இடத்திலேயே இருக்கும்படி செய்து கொண்டிருந்த அனுபவம் அவருக்கு உண்டாயிருந்தது. ஆனால் அந்த வித்தையின் திறமையைத் தானே கண்ணாரக் காணவில்லை. இன்று ஸ்ரீயவர்களின் திருட்டுப்போன க்ரந்தங்களை அந்த வித்தையின் வலிமையினால் மறுபடியும் பெற்றுக்கொள்வாரென்பதை புத்திக்கூர்மை படைத்த தீக்ஷிதர் நன்றாக அறிந்திருந்தார். அதனாலேயே அந்த கலாவல்லமையைக் கண்டு மகிழவே வந்திருந்தார். ஸ்ரீயவர்கள் நமது உண்மையான எண்ணத்தைத் தெரிவித்துவிடவும் தீக்ஷிதர் சிரித்துக்கொண்டே சொன்னார்.

தீ:- ஓஹோ! என்ன இது? நமது மனஸ்ஸிலும் கூடத் தாங்கள் ப்ரவேசிக்கிறாற் போலிருக்கிறதே?

ஸ்ரீ:- அது வைஷ்ணவ ச்ரேஷ்டனான, மனோநியா மகனுமான முக்கண்ணனின் சிவபெருமானின் அனுக்ரஹவிசேஷம்! நாம் சொன்னது உண்மையா இல்லையா தீக்ஷிதரே?

தீ:- இருக்கலாம் ஸ்வாமி. அதில் தவறெதுவுமில்லையே? (புன் சிரிப்புடன்) நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம். அந்த வித்யையைப்பார்த்த உடனேயே எனக்கென்னமோ அது வரப்போவ தில்லை. உம் தைரியமாகக் காண்பிக்கலாம். தமது அந்த கலைத்திறமை நானும் கண்டு மகிழ்வேன்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீயவர்கள் சிரித்த முகத்துடன், தீக்ஷிதரே, உமது விருப்பப்படியே ஆகட்டும் என்று சொல்லிக் கண்ணைமூடி த்யானத்திலாழ்ந்தார். ஸ்ரீயவர்களின் உதடுகள் மெல்ல மெல்ல அசையத்தொடங்கின. ஸ்ரீயவர்கள் ஏதோ மந்திரத்தை ஜபிக்கிறார். சற்று நேரம் கழிந்தது. எல்லோரும் ஸ்ரீயவர்கள் என்ன அதிசயம் நிகழ்த்துவாரோ என்று இமை கொட்டாமல் உற்று நோக்கிக் கொண்டுள்ளனர். இருந்தாற்போல் ஆகாயத்தில் ஏதோ சத்தம் உண்டாயிற்று. பார்த்தால் ஆச்சரியம்! அந்தரிக்ஷத்தில் (ஆகாய வெளியில்) ஒரு பெரிய மரப்பெட்டி எந்த ஆதாரமுமில்லாமல் பறந்து வருகிறது! அதோ வந்துவிட்டது பெட்டி! மெதுவாகக் கீழே இறங்குகிறது. ஸ்ரீயவரின் முன் வந்து விழுந்தது அந்தப் பெட்டி! ஆச்சரியம், அதிசயம், அற்புதம், பரமாச்சரியம்! என்று ஜனங்கள் பலத்த குரலில் சத்தம் செய்கின்றனர். தீக்ஷிதர் தமது கண்களைத்தாமே நம்பமுடியவில்லை! தீக்ஷிதரின் வாயினின்று அற்புதம், அதிசயம் 'என்ற உணர்ச்சி வசப்பட்ட பலத்த குரல் எழுந்தது.

ஸர்வாதிகாரிகள், பாருபத்திதாரர், மகிழ்ச்சியினால் நர்த்தனம் செய்யவாரம்பித்தனர். இந்தப் பெட்டி தான் ஸ்வாமி, தமது க்ரந்தங்கள் வைக்கப்பட்ட பெட்டி! 'என்றனர். ஸ்ரீயவர் தமாஷாக, பெட்டி இதுவாகவே இருக்கலாம், அதற்குள் க்ரந்தங்கள் உள்ளனவோ இல்லையோ பாருங்கள், என்றார் பாரபத்திதாரர் பெட்டியின் கதவைத் திறந்து க்ரந்தங்களிருப்பதைக் கண்டு சமாதானமடைந்து பெருமூச்சுவிட்டனர். ஒவ்வொன்றாக க்ரந்தங்களைப் பார்த்து வெளியே எடுத்தனர். ஸ்ரீயவர்களின் அதுவரையியற்றியிருந்த பனை ஓலையில் எழுதப்பட்ட 104 க்ரந்தங்கள் (ஸ்வதந்த்ர க்ரந்தங்கள்) யாவும் இருந்தன. ஒன்றாவது போகவில்லை.

தீக்ஷிதர் ஆனந்தக்கண்ணீர் பெருக, "மஹா ஸ்வாமி நானே தன்யன், இப்பேர்ப்பட்ட எங்குங்காண முடியாத அபூர்வ நிகழ்ச்சியை, ஸ்ரீயவர்களின் வித்தை, கலைத் திறமை, மகிமைகளைக் கண்ணாரக் கண்டு ஆநந்த பரவசமானேன். வெகு நாளைய எனது ஆசை இன்று நிறைவேறியது!" என்று ஸ்ரீயவர்களுக்கு நமஸ்கரித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஜனங்களுக்குண்டான ஆனந்தத்திற்கு எல்லையேயில்லை. அது வர்ணிக்க முடியாததாகும். இந்த அற்புதச் செயலைக் கண்டு மயிர்க்கூச்சலிட்டது. இதயம் பொங்கியது.

தீ:- பூஜ்யரே, க்ரந்தங்கள் என்னமோ கிடைத்துவிட்டன. ஆனால் ......

ஸ்ரீ:- இன்னுமென்ன தீக்ஷிதரே?

தீ:- இப்படிப்பட்ட நீசத் தொழிலைச் செய்தவர் யாரென்று தெரியவில்லையே?

ஸ்ரீ:- க்ரந்தங்கள் கிடைத்துவிட்டனவல்லவா? போதும் விடும் யார் களவாடியிருந்தாலென்ன?

தீ:- அப்படியல்ல ஸ்வாமி. இது மன்னிக்க முடியாத குற்றம்! பணம், பொன் முதலியவைகளை அபகரித்திருந்தால் அது வேறு விஷயம். இது தத்வ சாஸ்த்திரத்திற்கு கலாச்சாரத்திற்கு தர்மத்திற்கே தீங்கு விளைவிக்கக்கூடிய மாபெருங்குற்றம். துரோகம்! ஆகையினால் இந்த பயங்கர க்காரியத்தைச் செய்தவருக்குத் தண்டனை அளித்தேயாகவேண்டும்.

ஸ்ரீ:- (புன்னகையுடன்) போகட்டும் விடுங்கள் தீக்ஷிதரே. பாவம், அந்த முட்டாள்கள் இப்பொழுதே தங்கள் காரியம் வெற்றிபெறாததையறிந்து, க்ரந்தங்கள் மறுபடியும் எமது கைக்குக் கிட்டிவிட்டதையும் அறிந்து பயத்தினால் ஊரையே விட்டுப் புறப்பட்டுவிட்டனர். அவர்கள் மறுபடியும் இந்தத் திசையில் தலைகாட்டப் போவதில்லை. ஏதோ த்வேஷ புத்தியினால் செய்தனர். இப்பொழுது அவர்களுக்கு பச்சாத்தாபமும் ஆகியுள்ளது. அவர்களை மன்னித்து விடுவதே உத்தமமானது.

தீ:- "अति सर्वत्र वर्जयेत्" என்றபடி உதார குணத்திற்கும் ஒரு எல்லை வேண்டாமா? தாங்கள் இப்படியே செய்து கொண்டிரும். உமது உதாரகுணம் ஒரு நாள் தொந்திரவு கொடுக்காமலிருக்காது. உம், போகட்டும் விடுங்கள். அந்தப்பாவிகளைத் தண்டிக்க உங்களுக்கு விருப்பமில்லாத போது, நானென்ன செய்வது. திருட்டுப்போன க்ரந்தங்கள் தற்சமயம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

கிடைத்தனவே! அதுவே போதும் ஸ்வாமி! நான் போய் வருகிறேன். எனக்கு இனி இங்கே என்ன வேலை? (சிரிக்கின்றனர்)

ஸ்ரீ:- அப்படியானால் என்ன அர்த்தம் தீக்ஷிதரே! நீங்கள் எப்பொழுது வேண்டுமென்றாலும் வந்துகொண்டே இருக்க வேண்டும். அப்படியானால்தான் எனக்கு மகிழ்ச்சி!

தீ:- (நமஸ்கரித்து) ஸ்ரீயவர்களிடமிருந்தும் மந்த்ராக்ஷதை பெற்று "மகிழ்ச்சி, ஆகட்டும் ஸ்வாமி. தற்சமயம் விடை கொடுங்கள், என்று சொல்லித் தனது இல்லம் சென்றார்.

## 58. அமானுஷ அற்புதம் (Super human Miracle)

கும்பகோணத்தில் ஸ்ரீவிஜயீந்திர குரு ஸார்வபௌமர் ஸ்ரீமன் மத்வ நவமி மகோற்சவத்தை இன்று பிரமாதமான வைபவத்துடன் நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த மகோற்சவம் வித்வான்களுக்கும் பண்டிதர்களுக்கும் அம்ருதரஸ விருந்து போலானது. நானா தேசங்களிலிருந்து தர்க்கம், வேதாந்தம், வ்யாகரணம்-மீமாம்ஸா முதலிய சாஸ்திர ப்ரவீணர்கள் வந்து நிரம்பியுள்ளனர். எல்லோரும் தத்தம் சாஸ்திரத்தில் பாண்டித்யபத்தைக் காண்பித்து, ஸ்ரீ பாதங்களவரால் கௌரவிக்கப்பட விருப்பத்துடனிருக்கின்றனர். அநேக கவிபுங்கவர்கள் சமத்காரமான (ரஸமான) விதவிதமான விருத்தங் களினாலும் அலங்காரங்களினாலும், உணர்ச்சியுள்ள கவிதைகளை இயற்றி ஸ்ரீயவர்களின் முன்னிலையில் இனிமையான குரலில் பாடி அர்ப்பித்துக் கொண்டுள்ளனர். ஸ்ரீயவர்கள் ஒருமுறை தலையசைத்தால் போதும்! தங்கள் ஜன்மம் ஸார்த்தகமென்று அவர்கள் எண்ணுகின்றனர். இந்தப்பட்ட மகோற்சவத்தில் (Convocation) பங்கேற்றவர்களே தன்யர்.

வழக்கம்போல் காலை வித்வத் சபை நடந்து; சாஸ்த்ரார்த்த விஷய சர்ச்சைகள், வாக்யார்த்தம் யாவும் நடந்தேறின. கவிகள் ஸ்ரீமதாசார்யர், ஸ்ரீடீகாசார்யர், ஸ்ரீசந்திரிகாசார்யர், முதலானவர்களின் மகிமையைப் பாராட்டி வர்ணித்துக் கவிதைகளியற்றி, ஸ்ரீயவர்களின் ஸந்நிதானத்தில் படித்து க்ருதார்த்தரானார்கள். ஸ்ரீசுமத்வ

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விஜயத்தை மிக வித்வத்பூர்ணமாக அனுவாதம் செய்து ஸ்ரீமடத்தின் புராணீகர் மங்களம் செய்வித்தார். ஸ்ரீபாதங்களவர் ஸ்ரீமதாசார்யரின் பாவ சித்திரம் மற்றும் ஸர்வ மூல க்ரந்தங்களை அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீமடத்தின் அம்பாரியில் அமர்த்தி, யானையின் மீது ஊர்வலத்தைத் துவக்கி வைத்தார். கும்பகோணத்தின் முக்ய தெருக்களில் ஸகல, விருதுகள், வாத்யங்கள் வேத கோஷம் முழங்க ஜயகோஷங்களுக்கிடையே புறப்பட்டு மறுபடியும் ஸ்ரீமடத்திற்கு வந்தடைந்தது.

ஸ்ரீயவர்கள் ஸ்ரீமூலராம ஸ்வாமியின் பூஜைக்குத் தயாராக இருந்தார். ஆயிரக்கணக்கானவர்கள் சுவாமி தரிசனத்திற்காக ஒன்று கூடியுள்ளனர். பண்டிதர்கள், பிரமுக நகரவாஸிகள், மாணவர்கள் முன்னால் அமர்ந்து பக்தி சிரத்தையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

கலசபூஜை, பீடபூஜை, ஆவரண பூஜைகள் முடிந்தன. இனி அபிஷேகம் ஆரம்பமாக வேண்டும். ஸ்ரீயவர்கள் தமது வயிற்றைப் பார்த்துக் கொண்டு சிரிக்கவாரம்பித்தார். பக்கத்திலேயே அமர்ந்திருந்த ஸ்ரீகளவர்களின் அன்புக்குப் பாத்திரரான பண்டிதர் ஒருவர் கேள்வி கேட்பதைப் போல் ஸ்ரீயவர்களைப் பார்த்தார். ஸ்ரீயவர்களும் பதில் சொல்வதைப்போல் தனது ஆள்காட்டி விரலினால் தன்து வயிற்றைக் காட்டிப் புன்னகை செய்தார். பண்டிதருக்குப் புரியவில்லை. கேட்டே விட்டார்? "மன்னிக்க வேண்டும் மஹா ஸ்வாமி, தாங்கள் வயிற்றைப் பார்த்துக் கொண்டு சிரித்ததென்னவோ? எனது கேள்விக்கு மறுபடியும் வயிற்றையே காண்பிக்கின்றீரல்லவா ஸ்வாமி! எனக்கு ஒன்றும் புரியவில்லை" என்று சொன்னார். "ஸ்ரீயவர்கள் சிரித்த முகத்துடன், உம். இன்னும் சற்று நேரத்திற்குள் அர்த்தமாகும் ஆசார்யரே! என்றார். சுற்றிலும் அமர்ந்திருந்தவர்கள் இது என்னவென்று பார்க்கவே, ஸ்ரீபாதங்களவரின் வயிறு பெருத்துக்கொண்டே பெரிய மண்பானையைப் போலாய்விட்டது! ஸ்ரீபாதர் சிரித்துக்கொண்டே இருக்கிறார். எங்கு வயிறு வெடித்துவிடுமோ என்ற அளவுக்கு உப்பிவிட்டது. ஜனங்கள் யாவரும் ஒரே கலக்கத்துடனும் பயத்துடனும் ஸ்ரீயவர்களுக்கு ஏதாவது அபாயமேற்பட்டு விடுமோவென்று தவிக்கின்றனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீயவர்கள் பண்டிதரைப் பார்த்து, "இப்பொழுது புரிந்ததா. பண்டிதரே! என்றார். பண்டிதர் ஒன்றும் தோன்றாமல் "பூஜ்யரே, இதென்ன விபரீதம்! ஏன் இப்படி ஆயிற்று? ஸ்ரீமூலராமரின் பூஜைக்கு விக்னமானால் என்ன செய்வது" என்று விக்ஞாபனம் செய்யவும், "சிச்சி, பண்டிதரே, இதற்கேன் இவ்வளவு பயப்படுகிறீர்? இது நம்மீதுள்ள த்வேஷத்தினால் அறிவிலியொருவன் செய்துள்ள சூழ்ச்சி! ஹிம்சை செய்யும் மாந்திரீகனைக் கொண்டு ஒரு த்வேஷி வயிற்றில் தண்ணீர் நிரம்பும்படி செய்துள்ளான். நாம் அழிந்துபோக வேண்டுமென்ற எண்ணத்துடன் அவன் இவ்வாறு செய்திருக்கிறான். சமுத்திரத்தையே வற்றவைத்த மஹாப்ரபு மூலராமர் சேவைக்கு இந்த அற்ப ஜலம் விக்னம் உண்டாக்கவல்லதா என்ன? இந்த ரகுராமனின் தயவிருந்தால் - அவன் கிருபையால் நூறு யோஜனை விஸ்தீர்ணமான சமுத்திரத்தைத் தாண்டிய ஸ்ரீஅஞ்ஜனாகுமாரரவதாரரான ஸ்ரீமதாசார்யரின் கிருபையினால் இந்த ஸாமான்ய மந்திரவாதியின் ஜலத்தை நாம் தாண்டமுடியாதா? இவ்வாறு சொல்லி ஸ்ரீயவர்களின் பக்கத்திலிருந்த காவல்காரனை அழைத்து" மடத்துத் தோட்டத்தில் வாழை மரங்களிருக்கின்றனவே எவ்வளவுள்ளன? என்றார்.

பாவம் அந்த வாயிற்காப்போன் ஸ்ரீயவர்களின் கேள்விக்கும் பதில் சொல்ல முடியாமல் திக்பிரமையடைந்து நின்றிருந்தான். ஸ்ரீகளவர் மறுபடியும் சொன்னார், "உம் நூற்றுக்கணக்கான வாழை மரங்களுள்ளன. பார், நீ இப்பொழுதே அங்கு போய், ஒவ்வொன்றாக மரங்களை வெட்டிக்கொண்டேபோ, உம், நட"!

வாயிற் காப்போன் ஸ்வாமிகளின் ஆணையின்படியே மடத்தின் தோட்டத்திற்கு ஓடினான். தோட்டக்காரனிடமிருந்து ஒரு வெட்டுக்கத்தி வாங்கி ஒரு வாழை மரத்தை வெட்டினான். ஆச்சரியம்!! வாழை மரத்திலிருந்து ஊற்று ஊற்றுகளாக தண்ணீர் பாய ஆரம்பித்தது. வாயிற்காப்போன் ஆர்வத்துடன் மற்றொரு மரத்தை வெட்டினான். அதிலும் இதேபோல் ஜலம் வெளிவர ஆரம்பித்தது. நான்கைந்து மரங்களை வெட்டினான். வெட்டின மரங்களிலெல்லாம் நீர் ஊற்று வந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

கொண்டேயிருக்கிறது. அவன் ஸ்ரீயவர்களிடம் தெரிவிக்க ஓடிவந்தான். ஆச்சரியம்! பெரிய மண்பானையைப் போலிருந்த ஸ்ரீயவரின் வுயிறு முதலிலிருந்ததைப்போலவே ஆய்விட்டது. ஜனங்களெல்லாம் வெகு ஆர்வமுடனிருந்தனர். வாயிற் காப்போன் நடந்த விவரத்தை விக்ஞாபித்தான். ஸ்ரீயவர்கள் புன்னகை செய்தார்.

இவைகளெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் வாயிற் காப்பவன் சொன்ன விஷயத்தைக்கேட்டு ஒரே ஆச்சரியமயமாய்த் தோட்டத்திற்கு ஓடினார்கள். பார்த்தால், வாழை மரங்களிலிருந்து தண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகி ஓடுகிறது! ஆஹா என்ன விசித்திரமான அதிசயம்! ஸ்ரீயவர்கள் வயிறு உப்பினால், இங்கு வாழை மரத்தை வெட்டினால், தண்ணீர் ஊற்று போலக் கிளம்பி ஓட, அங்கு ஸ்ரீயவர்களின் உதரம் பழையபடி ஆய்விட்டதே!! ஸ்ரீயவர்களெப்பேர்ப்பட்ட மஹாத்மா! எவனோ துஷ்டன் ஸ்ரீயவர்களை அழிக்க முயற்சி செய்திருக்கிறானே? அவன் மஹாபாபி! ஆஹா! மஹானுபாவரான ஸ்ரீயவர்களின் மீதே கைவைக்கத் துணிந்த துரோகிகளும் உள்ளனரே! சூரியனின் உக்கிரமான ஒளியைக் கிழிந்த துணியால் மறைக்க முயற்சி செய்த முட்டாளின் விருப்பம் நிறைவேறுமா என்ன?" என்று பலவாறு பேசிக்கொண்டு ஜனங்கள் மறுபடியும் ஸ்ரீமடத்தை அடைந்தனர்.

ஸ்ரீபாதங்களவர் விகாரமற்ற மனதுடன் ஸ்ரீமூலராமனின் பூஜையை நிறைவேற்றினார். அலங்கார ப்ராம்மணர்களின் போஜனமான பிறகு ஸ்ரீயவர்கள் எல்லோருக்கும் தீர்த்த ப்ரஸாதம் வழங்கினார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் பூரிபோஜனமாயிற்று. இரவு தீபாராதனைக்கு விசேஷ சம்பாவனைகள் வழங்கினார். எல்லோருக்கும் பல மந்த்ராக்ஷதையும் வழங்கப்பட்டது.

மத்தியானம் நடந்த அற்புத விஷயத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளும் விருப்பத்துடன் சில பண்டிதர்கள் ஸ்ரீயவர்களுக்கு வணங்கி இவ்வாறு கேட்டனர். "மஹாஸ்வாமி, தங்களை மந்த்ரோச்சாடனத்தினால் அழிக்க முயன்ற கயவன் யார்? ஏன் செய்தான்? அதைத் தாங்கள் எவ்வாறு அறிந்தீர்கள்?"

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீயவர்கள் புன்னகையுடன், "ஸ்ரீஹரியின் தயவினால் இத்தகைய ஸாமான்ய விஷயத்தையறிவதில் ஏதும் சிரமமில்லை. முன்பு நம்மிடம் தோல்வியுற்ற மந்த்ர யந்த்ர - விஷயங்களில் பாரங்கதனான ஒருவன் மாத்திரம் தான் தோல்வியடைந்ததினால் மனதிற்குள்ளேயே நம்மை த்வேஷித்துக் கொண்டிருந்தான். மற்ற வேளைகளில் நமக்கு எவ்வித அபாயத்தையும் செய்ய முடியாமல், இன்று பூஜா காலத்தில் ஒன்றிரண்டு மணி நேரம் தனிமையிலிருப்பதினால் நமக்கு ஜலோதரம் (மஹோதரம்) ஏற்படும்படி மந்த்ரோச்சாடனம் செய்தான். இதனால் நாம் அழிந்துவிடுவோம் என்பது அவனது எண்ணம்! அதனாலேயே நமது அழிவைக் கண்ணாரக் காணுவதற்காக அவனும் இன்று பூஜையைப் பார்க்கும் பாசாங்கு செய்து வந்திருந்தான். பாவம்! தன் காரியம் பலித்துவிட்டதென்று நினைக்கும்பொழுதே ஸ்ரீஹரியின் கருணையினால் அந்த ஆபத்துப் பரிகாரமானதால் ஏமாற்றமடைந்து ஓடியே போய்விட்டான். இனி அவன் இத்தகையத் தீய காரியங்களில் இறங்கமாட்டான். இது உறுதி. இது மாத்திரமா? பச்சாத்தாபமடைந்த அவன் இப்பொழுது இங்கேயே வரப்போகிறான்", என்று சொன்னதுதான் தாமதம், ஒரு சாத்தான் ஓடிவந்து ஸ்ரீயவரின் பாதத்தில் விழுந்து "மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும், மஹாப்ரபோ, நீசனாகிய என் குற்றத்தை மன்னித்துக் காப்பாற்ற வேண்டும். மஹாபாவியான நான் மஹாத்மாவான தங்களை அழிக்க முயன்றேன். அற்பனான எனது துஷ்ட மந்த்ரப்ரயோகத்தினால் தம்மைப் போன்ற மஹாத்மாக்களுக்கு என்ன ஆகும்? இந்த அற்புதத்தைக் கண்ணாரக்கண்ட நான் பச்சாதாப அக்னியினால் தஹிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். தம்மிடம் அடைக்கலம் புகுந்துவிட்டேன். மன்னியுங்கள்" என்று ப்ரார்த்தனை செய்தான்.

ஸ்ரீயவர்கள், "அய்யா, இன்று இவ்வாறு நடக்க வேண்டுமென்று இந்திரேசனின் ஸங்கல்பப்படி நடந்துள்ளது. உன்மீது நமக்குக் கோபமில்லை? ஆனால் உனக்கு இது மாத்திரம் நாம் உபதேசிக்க விரும்புகிறோம். இனிமேலாவது இத்தகைய தீய காரியங்களிலிறங்காதே. உனக்கு மங்களமுண்டாகட்டும் என்று விடைகொடுத்து அவனுக்கும் சம்பாவனை மந்திராக்ஷதை வழங்கி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அனுக்ரஹித்தார். அந்தச் சாத்தாளி ஸ்ரீயவர்கள் தன்மீது காண்பித்த கருணை, அனுக்ரஹத்தினால் திருப்தியடைந்து அவரிடம் விடைபெற்றுச் சென்றான்.

பண்டிதர்கள் ஸமூகம் ஸ்ரீயவர்களின் விசால் இதயம், அமைதி, கருணை, இவைகளைக் கண்டு ஆனந்தமடைந்து, ஆஹா, இதல்லவா மஹாத்மாக்களின் லக்ஷணம்! உதாரகுணத்திற்கு நமது ஸ்ரீயவர்களே சரியான எடுத்துக்காட்டு. இப்படிப்பட்ட வித்வான்களைப் போஷிக்கும் உத்தம குணம் படைத்தவரும், உதார குணமுள்ளவரும் மஹா மகிமை நிறைந்தவருமான ஸ்ரீயவர்களை அடைந்துள்ள நாமே தன்யரானோம்! என்றெல்லாம் ஸ்ரீபாதங்களவரின் குணங்களைப் புகழ்ந்து பாராட்டினர்.

## 59. புதிய ஜகத்குரு

ஸ்ரீசாலிவாஹன சக 1497 யுவ நாம ஸம்வத்ஸரம், சைத்ர சுக்ல த்ரயோதசியன்று கும்பகோணத்தின் வித்யாமடத்தில் விசேஷ வைபவம். தஞ்சாவூரின் யுவராஜா சின்ன சவ்வப்ப நாயக்கர் வேண்டிய பரிவாரங்களுடன் வந்துள்ளார். பண்டிதர்கள், கவிகள், நகர மக்களின் ஜனத்திரள் ஏராளமாகக் கூடியுள்ளனர். ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருடன் உயர்ந்த ஆஸனத்தை அலங்கரித்துள்ளனர். அவருடைய வலப்புறம் மிக்க அழகுள்ளவனும் தேஜஸ்வியுமான 14-15 வயதுள்ள பாலகன் அமர்ந்திருக்கிறான்.

ஸ்ரீவிஜயீந்திரர் குருவர்யரின் ஆக்ஞைப்படி சபையோரைப் பார்த்து இவ்வாறு சொன்னார்:- "தர்மாபிமானிகளே, யுவராஜரே, ஸ்ரீமதாசார்ய பீடாதிபதியான நமது குரு பாதருக்கு பூஜ்யரான ஸ்ரீசந்திரிகாசார்யர் இன்றைக்கு 46 வருடங்களுக்கு முன் நம்மை அர்ப்பித்தார். குருபாதரின் தண்ட பல்லட மந்த்ர முத்ராதாரண - குருபதே சாதிகளினால் நம்மை சிஷ்யராக ஏற்றுக் கொண்டு இந்த மஹாபீடத்திற்கு அதிபதிகளாக்கினர். அன்றிலிருந்து குருபாதரின் சேவை செய்து கொண்டே வந்துள்ளோம். இந்த சந்தர்ப்பத்தில் சில விஷயங்களையெல்லாம் சொல்ல வேண்டியதாகியுள்ளது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

க்ஞான ப்ரசாரத்திற்காக ஸ்ரீஹம்ஸநாமக பரமாத்மனிலிருந்து ஆரம்பமாகி ஸனகாதிகளினால் ஸ்ரீஅச்யுதப்ரேக்ஷாசார்யரவர்கள் வரையும் வளர்ந்து வந்த இந்த ஸத்பரம்பரை ஸ்ரீவாயு பகவானின் அவதாரமான ஸ்ரீமத்வாசார்யரினால் ஒரு விசேஷ ஸ்வரூபத்தை அடைந்தது. ஸ்ரீமதாசார்யர் க்ஞான கார்யத்திற்காக அவதரித்த ஸ்ரீவேதவியாஸரின் சேவை செய்வதற்காக அவதாரம் செய்த ஜீவோத்தமர். அவருடைய இந்த பரம்பரையானது பலவகையில் கார்யங்களைச் செய்து நாட்டில் தத்வக்ஞானம்-தர்ம ப்ரசாரங்களைச் செய்து ஈச்வரனின் அஸ்தித்வத்தை (இருக்கையை) ஸ்தாபனம் செய்ய வேண்டும் என்ற மகத்தான நோக்கத்துடன் அநேக பண்டிதோத்தமர்களுக்கு பரமஹம்ஸாச்ரமம் கொடுத்தருளினார். அவர்களில் ஸ்ரீபத்மநாப தீர்த்தர் பட்டத்தின் சிஷ்யரானார். ஆசார்யர் பதரிகாச்ரமத்திற்கு திக்விஜயம் செய்த பிறகு ஸ்ரீபத்மநாப தீர்த்தர் வித்யாஸிம்ஹாஸனத்தை அலங்கரித்தார். அவருடைய இந்த பரம்பரையில் ஸ்ரீஜயதீர்த்தர் ஸ்ரீமதாசார்யரின் த்வைத பாஷ்யங்களுக்கெல்லாம் "டீகா" க்ரந்தங்களியற்றி த்வைத ஸித்தாந்தத்தை நன்றாக நிலைநாட்டினார். அவருடைய சிஷ்யரான ஸ்ரீவித்யாதிராஜர் ஸித்தாந்த ஸ்தாபன ப்ரஸாராதிகள் இன்னும் உத்தமமான முறையில் நடைபெற வேண்டுமென்று ஸ்ரீராஜேந்திரர் ஸ்ரீகவீந்திரர் என்னும் இரு ப்ரகாண்ட பண்டிதர்களை ஆசார்ய ஸிம்ஹாஸனாதிபதிகளாக்கினார். ஸ்ரீராஜேந்திர தீர்த்தரின் பரம்பரை "பூர்வாதி மடம்" என்ற பெயரினால் ப்ரஸித்தியாயிற்று. அந்த மஹாபீடத்தில் குருபாதரான ஸ்ரீசந்த்ரிகாசார்யர் அமர்ந்தார். ஸ்ரீகவீந்திர தீர்த்தரின் பரம்பரை "தக்ஷிணாதி மடம்" என்று பிரஸித்தமாகி அவருடைய சிஷ்யரான ஸ்ரீராமசந்திர தீர்த்தரின் பட்டசிஷ்யரான ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தரினால் ஹிமாலயம் முதல் ராமேச்வரம் வரையில் பிரசித்திபெற்றது. அந்த மஹா பீடத்தில் நம்முடைய இந்த குருபாதர் அமர்ந்துள்ளார்கள்.

நாம் இந்த பீடத்திற்கு ஸந்யாஸம் பெற்ற சிஷ்யராகவே வந்ததினால் குருபாதருக்கு ஆச்ரமம் கொடுக்க வேண்டிய அவகாசமிருக்கவில்லை. இந்த இரண்டு மஹா பீடங்களில் வித்தியாஸமில்லாம

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விருந்தாலும் தொடர்ந்து ந்யாஸ விச்சேதமில்லாமல் நடந்து வந்துள்ள ஹம்ஸநாமக பரமாத்மாவின் இந்த க்ஞான பரம்பரையில் ஸ்ரீகுருபாதரான ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் காலத்தில் ந்யாஸவிச்சேதமாயிற்றென்ற அவதூறு வராமல் அந்த ஸத்ஸம்ப்ரதாய பரம்பரை தங்குதடையின்றி வளர்ந்து வந்து ஸ்ரீகுருபாதருக்கு அகண்ட கீர்த்தி வரவேண்டுமென்ற அபிப்ராயத்தினால் நாம் மற்றொருவருக்கு ஆச்ரம தானம் செய்து அந்த ஸத்ஸம்ப்ரதாயத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று குருபாதரிடம் அநேக முறைகள் விக்ஞாபனம் செய்துள்ளோம். ஸ்ரீஹரி வாயுகளின் ப்ரேரணைப்படி ஸ்ரீகுருவர்யர் நமது அந்த அபிலாஷையை இன்று நிறைவேற்றச் சம்மதித்து நம்மீது பரமானுக்ரஹம் செய்துள்ளார்கள். குருபாதருக்கும், நமக்கும் பூர்வாச்ரம பந்துக்களும் பவித்ர ஷாஷ்டிக குலத்திலவதரித்த சிறிய வயதிலேயே வித்யாவினய ஸம்பன்னரும், திறமை வாய்ந்த கவிகளும், ந்யாய வேதாந்தம் முதலிய சாஸ்திர நிபுணரும் ஆகியுள்ள இந்த நாராயணாசார்யருக்கு குருபாதர் இப்பொழுது பரமஹம்ஸாச்ரமத்தை அளித்து இருக்கின்றார். ஸ்ரீநாராயணாசார்யர் இந்த பீடத்தின் மஹத்தான பரம்பரையை வளர்த்து சக புருஷராய் விளங்கப்போகிறார். குரு சிஷ்யரான நம்மில் நடந்து வந்ததைப் போலவே இனிமேல் நமது சிஷ்யராகப் போகும் இவரிடத்திலும் நடந்து கொண்டு ஸ்ரீஹரி வாயு குருகளின் அனுக்ரஹத்திற்கு நீங்கள் பாத்திரராக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் குருபக்தி - உதார ஹ்ருதயம், மஹா ஸமஸ்தானத்தின் ஸத்ஸம்ப்ரதாய ரக்ஷணையில் அவருக்குள்ள தீக்ஷை, முதலிய அஸாதாரணமான குணங்களைக் கண்டு ஸகலரும் ஜயகோஷத்தினால் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

ஸ்ரீஸுரேந்திரர் மந்தஹாஸத்துடன் "ப்ரிய சிஷ்ய ஸ்ரேஷ்டரின் ப்ரார்த்தனையை கௌரவித்து இந்தப் பவித்ர பீடத்தின் உத்தம ஸத்பரம்பரை - ஸம்ப்ரதாயம் இவைகளைக் காப்பதற்காக நாம் இப்பொழுது ஸ்ரீநாராயணாசார்யருக்கு பரமஹம்ஸாச்ரமம் பல மந்த்ராக்ஷதை உங்கள் எல்லோரின் முன்னிலையிலும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அனுக்ரஸிக்கின்றோம். ப்ரிய சிஷ்யர் சொன்ன பிரகாரம் நாராயணாசார்யர் மஹா ஸமஸ்தானத்தின் கீர்த்தியை எல்லா இடங்களில் வளர்ப்பார் என்பதில் ஸந்தேகமில்லை. ஏனென்றால் யதிகளாகப் போகும் இவர் ப்ரிய சிஷ்யரின் சிஷ்யராக அவரது போஷணையில், மார்க்க தர்சனத்தில் (வழியைப் பின்பற்றி) நடந்து வருவதினால் அந்த விஷயத்தில் நமக்கு பூர்ண நம்பிக்கையுள்ளது. இந்த மஹாபீடத்தின் பரம்பரை - சம்ப்ரதாயங்களுக்குப் பங்கம் வ்ரலாகாது, ந்யாஸவிச்சேதம் நமது காலத்திலாயிற் றென்னும் அபகீர்த்தி நமக்கு ஏற்படக்கூடாது என்னும் நிலையை உண்டுபண்ணி ப்ரிய சிஷ்யரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் தமக்குள்ள குருபக்தி, உதாரகுணம், ஸம்ப்ரதாய நிஷ்டையின் உச்ச கட்ட நிலையை வெளிப்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட சிஷ்யோத்தமரை அடைந்துள்ள நாம் உண்மையாகவே தன்யர். யுவராஜரே, வித்வான்களே, ஆஸ்திக மஹாஜனங்களே, குரு சிஷ்யரான நம்மில் பக்திசிரத்தையுடன் நடந்து கொள்வதைப்போலவே இப்பொழுது நாம் ஆச்ரமமளிக்கப்போகும் வருங்கால ஜகத்குருகளான நாராயணாசார்யரிடத்திலும் நடந்து கொண்டு ஸ்ரீமூலரகுபதி, வேதவ்யாஸர் ஸ்ரீமதாசார்யர் டீகாக்ருத்பாதர் முதலானவர்களின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரராக வேண்டும்" என்று சொல்லி, மங்கள வாத்யம் முழங்க, வேத கோஷங்களுக்கிடையே ஸ்ரீநாராயணா சார்யருக்கு பரமஸம்ஸாச்ரம் பல மந்த்ராக்ஷதைகளருளி அனுக்ரஹித்தார். சபையோர் ஜயகோஷம் செய்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

யுவ ஸம்வத்ஸரம், சைத்ர சுக்ல சதுர்தசி - ஸ்ரீவித்யா மடத்தில் வெகு வைபவத்துடன் மகோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஜனக்கூட்டமே நிறைந்துள்ளது. ஸ்ரீநாராயணாசார்யர் ஸம்ப்ரதாயப்படி விதிப்படி சந்நியாஸாச்ரமத்தை ஏற்றுக்கொண்டு ஸ்ரீகுரு ஸந்நிதானத்தில் கைகூப்பி நின்றிருக்கிறார். வாத்யங்கள் முழங்குகின்றன. காதுகளுக்கினிய மந்தஸ்வரத்தில் வேதகோஷம் நடந்து கொண்டிருக்கின்றது. பண்டிதர்கள் மத்வ விஜயபாராயணம் செய்து கொண்டிருக்கின்றனர். நூதன யதிகள் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு பாதபூஜை செய்து பக்தி பாவத்துடன் ஸாஷ்டாங்க நமஸ்காரம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

செய்தார். ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் அவருக்கு மந்த்ர முத்ராதாரணம், ப்ரணவ மந்த்ரோபதேசம், முதலியவை செய்து "ஸ்ரீஸுதீந்திர தீர்த்த"ரென்று நாமகரணம் செய்தார். பிறகு அவரைக்கொண்டு விஜயீந்திர தீர்த்தருக்குப் பாதபூஜை செய்வித்து, அவராலும் மந்த்ர-முத்ராதாரணம் ப்ரணவம் முதலிய மஹா மந்திரங்களை உபதேசம் செய்வித்தார். பிறகு இரண்டு ஸ்ரீகளவர்களும் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் கையைப்பிடித்து சபா மண்டபத்திற்கு விஜயம் செய்தார்கள். உத்தமமான முறையில் அலங்கரிக்கப்பட்ட மூன்று பீடங்கள் அங்கு வைக்கப்பட்டன. மத்தியிலுள்ள வித்யாசிம்மாசனத்தில் ஸுதீந்திர தீர்த்தரை அமர வைத்து ஸம்ப்ரதாயப்படி குரு ஸுரேந்திரரின் ஆணைப்படி ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் "ஸ்ரீஸுதீந்திர தீர்த்த"ரென்னும் மஹாஸம்ஸ்தானப் பெயரினால் அவருக்கு ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் செய்தார்.

ஜனங்களின் ஜயகோஷத்தினிடையே ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர், ஸுரேந்திர தீர்த்தர் மற்றும் விஜயீந்திர தீர்த்தர் அவர்களுக்கும் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கைகூப்பிக் கொண்டு வித்யாபீடத்திலமர்ந்து, சிறிய தானாலும் ஸமஸ்கிருதத்தில் ஸரளமானதும், அழகாகவும், சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடியும், அலங்க்ருதமான குருபக்தியை ப்ரேரணை செய்யும் மற்றும் வித்வத்பூர்ண உபதேச உரை நிகழ்த்தி, "எனது எல்லா வகைகளிலும் அபிவ்ருத்தி பரம குருகள் மற்றும் குருவர்யரின் அனுக்ரஹத்தையே பொறுத்துள்ளன. அவர் காட்டும் வழியில் அவரது ஆணையைச் சிரஸாவகித்து நடப்பதில் மாத்திரம் நான் ஸமர்த்தனாயிருக்கிறேன். எனது ச்ரேயஸ்; அன்பு இவைகள் அவரையே சேர்ந்தவை. எனக்கு உபதேசகராகவும், வழிகாட்டியாகவும் எல்லாம் ஆகிய குருபாதர் என்னை அனுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்து எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லி ஸ்ரீவிஜயீந்திரரின் பாதகமலங்களின் மீது சிரம் வைத்து வணங்கினார். ஸ்ரீஸுரேந்திர ஸ்ரீவிஜயீந்திரரின் கண்ணில் ஆனந்த பாஷ்பம் பெருகிற்று. நாதழுதழுத்த குரலில் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர், ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் கைகளை ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் கைகளில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வைத்து, "இவரை உமக்கு ஒப்பித்துள்ளோம். உமது சிஷ்யரான இவரது கீர்த்தி உம்மைச் சேர்ந்தது*" எனது மனத்தின் விருப்பத்தை நிறைவேற்றுங்கள். குருபக்தர்களில் மேன்மையானவர் என்ற கீர்த்திக்குப் பாத்ரராகியுள்ளீர்கள்'' என்று ஆக்ஞாபித்தார். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் கைகூப்பிப் புன்னகையோடு, "குருவின் ஆணையைச் சிரஸாவகித்துள்ளோம்" என்று நமஸ்கரித்து பீடத்தில் அமர்ந்தார். த்ரேதாக்னிகளைப் போல் காணுகின்ற முனித்ரயர்களைக் கண்டு தார்மிகர்கள் ஆனந்த பரவசமடைந்தனர்.

சின்ன சவ்வப்ப நாயகர் தஞ்சாவூரரசரின் சார்பாகப் புதிய ஜகத் குருவிற்குப் பாதகாணிக்கை சமர்ப்பித்தார். பிறகு விதவிதமான வித்யா நிறுவனங்கள், தார்மிக நிறுவனங்களின் ப்ரதிநிதிகள், நகரப்ரமுகர்கள், பாதகாணிக்கையை அர்பித்தார்கள். அதே சமயம் கன்னட சக்ரவர்த்தி ஸ்ரீரங்கராயரின் பிரதிநிதி வந்து முனித்ரயர்களுக்கு வணங்கி ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு சக்ரவர்த்தி அனுப்பிய அன்பளிப்பையும் காணிக்கையையும் அர்ப்பித்து ஸ்ரீவிஜயீந்திரருக்கு சக்ரவர்த்தி அனுப்பிய விக்ஞாபன பத்திரத்தைச் சமர்ப்பித்து, "சிஷ்யப்ர சிஷ்யருடனே ஸ்ரீஸுரேந்திர தீர்த்த குருபாதர் பெனுகொண்டாவிற்கு விஜயம் செய்து சக்ரவர்த்தியின் சேவையை ஏற்றுக்கொண்டு போக வேண்டுமென்று "ப்ரார்த்தனை செய்துள்ள விஷயத்தைத் தெரிவித்தார்.

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் குருகளின் ஆக்ஞைப்படி ஸகலருக்கும் பல மந்த்ராக்ஷதையருளினார். பிறகு ஸ்ரீபாதங்களவருக்கு இதற்கு முன் கண்டிராத வகையில் ஊர்வலம் நடந்தேறியது. அந்த திவ்ய மங்களகரமான மஹோத்ஸவத்தை கண்ணாரக் கண்ட ஸஜ்ஜனர்கள் தாங்களே தன்யரென ஆனந்தத்தினால் நர்த்தனம் செய்தனர்.

---

"सुरेन्द्रः संप्रदाप्तन्यासविच्छेद भीरुकः ॥
सुधींद्र न्यास :पित्वा तं विजयींद्र करे ददौ" ॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## 60. ராஜ ஸன்மானம் - வித்வத்ஜனரக்ஷணை

கன்னட நாட்டின் தலைநகரம் பெனுகொண்டாவில் இன்று அபூர்வமான வைபவம். கர்நாடக ஸாம்ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக தமது தவத்தையே தாரை வார்த்து அனுக்கிரஹித்த ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் 97 வயதான தம்முடைய குருவான ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் மற்றும் சிஷ்யரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருடனே தலைநகருக்கு விஜயம் செய்துள்ளனர். அதனால்தான் இவ்வளவு வைபவம் கோலாகலம்.

விஜயநகரத்தின் ராமராயர் ரக்கஸதங்கடி யுத்தத்தில் வீரஸ்வர்க்கமடைந்து, விஜயநகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு ராமராஜரின் சகோதரரான வீர திருமலராயர் மற்றும் வெங்கடாத்ரி, சக்ரவர்த்தியான ஸதாசிவராயரையும் ராஜபரிவாரங்களையும் பத்திரமாக பெனுகொண்டாவிற்கு அழைத்து வந்து அதையே தலைநகராக்கி ஸாம்ராஜ்யம் இடையூறின்றி நடைபெறும் வண்ணம் செய்து பெருமை கொண்டார். ஸதாசிவராயர் காலஞ்சென்ற பிறகு எல்லோரின் விருப்பப்படி வீர திருமலராயர் சக்ரவர்த்தியாகி நாட்டில் அமைதி-சுகம்-சமாதானம் நிலை நாட்டினார். அவருக்குப் பின் ராஜகுமாரனாயிருந்த 2வது ரங்கராஜர் கன்னட ஸாம்ராஜ்ய சிம்மாஸனமேறினார். ஸ்ரீரங்கராஜர் மஹாவீரர், சத்ருக்களுக்கு சிம்ம சொப்பனமாகவும், ப்ரஜைகளின் அன்புக்குப் பாத்திரராகவும், வித்யா, கலை ப்ரியராகவும், சனாதன தர்மம் மற்றும் கன்னட நாட்டின் கலாசாரத்தின் ஒளிமயமான பரம்பரையைக் காப்பாற்றிக் கொண்டு வந்து கன்னட ஸாம்ராஜ்யத்தின் கீர்த்தி எல்லாவிடங்களிலும் பரவுமாறு செய்தார். அவருடைய ஆஸ்தானத்தில் பண்டிதர்கள், கவிகள், பாடகர்கள், மற்ற இதர கலைஞர்களுக்கு எப்பொழுதும் வரவேற்பு இருந்தது.

முன்பு விஜயநகரத்திலிருந்து புறப்பட்டபொழுது ஸ்ரீவிஜயீந்திர குருவர்யர் திருமலராயர் முதலிய மூத்த ராஜகார்ய ப்ரவீணர்கள் மற்றும் ராஜபக்த சேவகர்களைக் கன்னட நாட்டிற்கு வரப்போகும் கோரவிபத்தைத் தெரிவித்து, எச்சரிக்கை செய்து காலாகாலத்தில் விஜயநகரத்திலிருந்து புறப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு சக்ரவர்த்தியையும் ராஜ பரிவாரத்தையும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்றும் பிறகு அதனால் நன்மை ஏற்படுமென்றும் யோசனை கூறியிருந்தார். கன்னடிகரின் துர்பாக்யத்தினால் பிறகு ஸ்ரீயவர்களின் பவிஷ்யவாணி சத்தியமாகிப் பலித்தது. ஸ்ரீயவர்களின் யோசனையின்படி திருமலைராயர் தஞ்சாவூரின் ப்ராந்தியத் தலைவனான ஸ்ரீசவ்வப்ப நாயக சகோதரர்கள், மதுரையின் விச்வநாத நாயகர் முதலானவர்களான கன்னட சாம்ராஜ்யத்தின் நலனை விரும்புவோர்களின் உதவியினால் சக்ரவர்த்தியுடன் சந்திரகிரிக்கு வந்து, பிறகு பெனுகொண்டாவிற்கு வந்து குடியேறி அதைத் தலைநகராக்கிக் கொண்டனர். ஸ்ரீவிஜயீந்திரதீர்த்தரின் தக்க சமயத்தில் அளித்த உபதேசத்தினால்தான் மூழ்கும் தறுவாயிலிருந்து ஸாம்ராஜ்யம் மற்றும் தலைதூக்கும்படி ஆயிற்றென்பதை நன்றாக அறிந்திருந்த திருமலைராயர் அந்த உபகாரத்திற்கு நன்றி செலுத்துவதற்கு விரும்பி முயற்சித்த போதிலும் சில காரணங்களினால் அது கைகூடவில்லை, இதை அறிந்திருந்த ஸ்ரீரங்கராஜர் தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் திட்டம் போட்டுக்கொண்டிருக்கையிலேயே ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு ஆச்ரமம் கொடுக்கும் விஷயம் பற்றி ஸ்ரீகளவர்களிடமிருந்து ஸ்ரீமுகம் வந்து சேர்ந்தது. சக்ரவர்த்தி அந்த விழாவிற்குக் காணிக்கையுடன் ப்ரதிநிதியை அனுப்பி முனித்ரயர்களைத் தலைநகருக்கு வரும்படி அழைத்து விக்ஞாபனப் பத்திரிகை அனுப்பியிருந்தார். தஞ்சாவூரரசரின் நிர்ப்பந்தத்தினால் ஸ்ரீகுருவர்யர் மற்றும் சிஷ்யர்களுடன் விஜயீந்திரர் பெனுகொண்டாவிற்கு விஜயம் செய்தார். சக்ரவர்த்தி குருத்ரயர்களை என்றும் கண்டிராத முறையில் வரவேற்றார்.

சாலிவாஹன சகா 1497வது யுவ நாமஸம்வத்ஸரம், ஆஷாட சுக்ல ப்ரதம துவர்தசி, திங்கட்கிழமையன்று ஆங்கிலக் காலண்டர்படி 20-6-1575யன்று ராஜாவின் அரண்மனையில் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் ஸ்ரீமூலராமரின் பூஜாராதனை செய்துவிட்டு, தீர்த்த ப்ரஸாத விநியோகம் செய்து, பிக்ஷை ஏற்று, ப்ராம்மண ஸுவாஸிநிகளின் ஸந்தர்ப்பணை நடத்தின பிறகு ஊர்வலமாக ஸ்ரீராமரின் கோவிலுக்கு சிஷ்ய-ப்ரசிஷ்யருடன் ஸகல விருதுகளுடன் ராஜமரியாதைகளுடன் விஜயம் செய்து சுபா மண்டபத்தில் அலங்கரிக்கப்பட்ட விசேஷ ஆஸனத்திலமர்ந்தார்.
CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீபாதரின் முன்புறம் முத்தினாலான சிம்மாசனத்தில் ஸ்ரீரங்கராஜர் அமர்ந்துள்ளார். மண்டலாதிபதி சேனாதிபதி-நகரப்ரமுகர்கள், வித்வான்களின் சமூகம், அவரவர்களுக்குரிய ஸ்தானங்களில் அமர்ந்துள்ளனர், சக்ரவர்த்தியின் ஆணைப்படி சின்ன செவ்வப்பநாயகர் சபையில் நின்று பேச ஆரம்பித்தார்.

"தர்மாபிமானிகளே, கன்னட வீரபுங்கவரே, சக்ரவர்த்தியவரின் வேண்டுகோளின்படி சிஷ்ய-ப்ரசிஷ்யருடன் பூஜ்ய ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் குருவர்யர் தலைநகருக்கு விஜயம் செய்து மஹாப்ரபுவின் ஸேவையை ஏற்றுக் கொண்டு அனுக்ரஹித்துள்ளார். இந்த குருபாதரின் ப்ரிய சிஷ்யரான, பரம பூஜ்யருமான கன்னட நாட்டின் வளர்ச்சிக்காகவும் மலர்ச்சிக்காகவும் தனது தவத்தை தாரை வார்த்த த்யாக சீலரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் நமது நாட்டிற்குச் செய்துள்ள மஹோபகாரத்தை நாம் என்றுமே மறக்க முடியாது. இவ்வாறு உபகாரம் செய்த நமக்கு அளித்த பூஜ்ய மூத்த ஸ்ரீபாதங்களவரின் ஸேவை செய்வது ஓர் மாபெரும் பாக்கியம். அது எல்லோருக்கும் கிட்டாதது. இந்த மஹான் 97 வருஷங்களின் தமது பூர்ண ஆயுட்காலத்தில் மூன்று முறை நிரசன வ்ரதத்தினால் பூப்ரதக்ஷிணம் செய்து (நிரசனவ்ரதம் - போஜனம் செய்யாமல்) க்ஷேத்திரங்களையும், தீர்த்தங்களையும் புனிதப்படுத்திய மஹாதபஸ்வி! தமது மானஸ பூஜையின் மஹாமஹிமையினால் கன்னட ஸாம்ராஜ்யத்தின் ராஜ்ய குருவர்யராயிருந்து ஸ்ரீவ்யாஸராஜயதீந்திரரையே வியப்படையச் செய்த பாவன மூர்த்திகளிவர். ஸகல வித்தைகளுக்கும் இருப்பிடமும் தாயைப்போன்றவருமான இம்மாஹானுபாவர் ஜகன் மங்களத்திற்காகவே வாழ்க்கையை அர்ப்பணம் செய்து கொண்டே ஸத்யம்-தர்மம்-ஸத்ஸம்ப்ரதாயங்களின் ரக்ஷணையைப் பணயம் வைத்து நாட்டின் ப்ரஜைகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் சக்ரவர்த்தி ஸ்ரீரங்கராயர் கன்னட மக்களின் நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டு 50 தொழில்களினாலும், அக்ரஹார வீடுகளினாலும், வாபிகள், கிணறுகள், தடாக வஸதிகளாலும், ஸம்பத்தினால் நிறைந்த தஞ்சாவூர் தேசத்திலிருக்கும் "நாவலாறு அல்லது ராமசந்திரபுரம்" என்னும் பெரிய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
கிராமத்தைத் தானம் செய்ய விரும்பியுள்ளார். ஸ்ரீபாதங்களவர் அதை ஏற்று கன்னட சாம்ராஜ்யத்தின் நன்மை ஏற்படும் வகையில் வாழ்த்த வேண்டுமென்று சக்ரவர்த்தி மற்றும் ப்ரஜைகளின் பரமாக ப்ரார்த்திக்கிறோம்.

ஜனங்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தின் நடுவே, ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் புன்னகையுடன் சக்கிரவர்த்தியை நோக்கி இவ்வாறு சொன்னார்:- அன்புள்ள சிஷ்யரான ஸ்ரீரங்கராஜரே, உமது குருபக்தியைக் கண்டு நமக்கு ஆச்சரியமாவதற்கில்லை; ஏனென்றால் நமது-உமது இந்த குரு-சிஷ்ய சம்மந்தம் இன்றையதோ, நேற்றையதோ அல்ல! அரவீடிவம்சத்தினருக்கும் நமது ஸமஸ்தானத்திற்கும் வெகுகாலமாகவே குருசிஷ்ய சம்மந்தமிருந்து வந்துள்ளது. குரு-பக்தி உமது வம்சத்தின் சிறப்பு அம்சம். *ஆங்கில காலண்டர்-20-6-1575

அதைப்போலவே வீரம், பராக்ரமம் முதலியவைகளில் பெயர்பெற்ற உமது வம்சத்தைத் தொன்றுதொட்டு கன்னட நாட்டின் மேன்மைக்காக உழைத்துக் கொண்டு வந்துள்ளது. சாளுவநரஸ நாயக்கர்-நரஸிம்மராயர் ஸ்ரீகிருஷ்ணதேவராயரின் காலத்தில் உமது வம்சத்தினர் ஆன ராமராஜர் ஸ்ரீக்ருஷ்ணதேவராயரின் உதயகிரியின் மீது படையெடுப்புக் காலத்தில் தோளோடு தோள் கொடுத்து நின்று போராடி ப்ரதாபருத்திரதேவனை ஜயிப்பதற்குக் காண்பித்த வீரபராக்ரமங்களைக் கண்டு ஆனந்தித்துச் சக்ரவர்த்தி தனது கௌரவத்திற்குத்தக்க முறையில் விருதுகளை அளித்து அவரைக் கௌரவித்தார். ஸஞ்சாரக்ரமத்தில் நாம் விஜயநகரத்திற்கு வந்தபொழுது உமது பாட்டனாரான ராமராஜர் கிருஷ்ணதேவராயரின் ப்ரேரணையின்படி இன்றைக்குச் சுமார் 62 வருடகாலத்திற்கு முன், அதாவது கிறிஸ்து ஆண்டு 1435வதில், ஸ்ரீமுகநாம ஸம்வத்ஸரம்! ஸ்ரீராமநவமியன்று விஜயவிட்டல் ஸ்வாமி கோவிலில் ஸ்ரீமூலராமரின் மஹா அபிஷேக உற்சவத்தை நடத்தி மிகச்செழிப்பான

---

1. Mysore Arch. Report, 1944 (Copper plate No. 23)

1. ஆங்கில காலண்டர் - 15-4-1513

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பூமிகளைக் கொண்ட ஆறுபெரிய கிராமங்களை மயூரக்ஷேத்திரத்தில் ஒரு அழகான மடத்தை நமக்கு [2] தானமாகக் கொடுத்து கௌரவித்தார். அந்த தர்ம வீரருக்கு அத்துடன் திருப்தியாகவில்லை. அன்றே இன்னும் சில கிராமங்களை நமது ஸமஸ்தானத்திற்கு தானம் செய்து [3] தனது உதாரகுணம் மற்றும் குருபக்தியினால் எல்லோருடைய கௌரவத்திற்கும் பாத்திரரானார். அந்த மஹாபுருஷரின் பேரனான மருமகன் ராமராஜரே ப்ரிய விஜயீந்திர தீர்த்தரின் சிஷ்யனாகி அவரை "ரத்னாபிஷேக"த்தினால் கௌரவித்து கிராம-பூமிகளை வழங்கி அனுக்ரகத்திற்குப் பாத்திரரான விஷயம் ஸகலரும் அறிந்ததே. அந்த ராமராஜரின் இளைய சகோதரரான திருமல மஹாராஜரின் புத்திரரான நீங்கள் இன்று கன்னட நாட்டுச் சக்ரவர்த்தியாகி அமர்ந்துள்ளீர்கள். இன்னென்ன? தர்மபுத்தி, குருபக்தி, வீரம், உதாரகுணம் முதலிய உத்தம குணங்கள் உம்மிடத்தில் குடிகொண்டிருப்பதில் எந்தவிதமான ஆச்சரியமுமில்லை! அது உமது வம்சத்தின் குணமாக உள்ளது. ஒரு அற்புதமான சமாசார மென்னவென்றால் பாட்டனார் மற்றும் ப்ரபௌத்திரர் களால் க்ராம-பூமிகளை நாமே ஏற்றுக் கொள்ளும் யோகம் ஸ்ரீஹரி கருணையினால் கிடைத்தது! உமது தர்ம சிரத்தை, குருபக்தி முதலியவைகளைக் கண்டு மகிழ்ச்சியடைந்துள்ளோம். நமது உபாஸனாமூர்த்தியான ஸ்ரீமூலராமர் உமக்கு எல்லாவித மங்களங்களையும் அருளிக் காப்பாற்றட்டும்".

ஸ்ரீரங்கராயப்ரபு ஸ்ரீகளவரின் வசனாம்ருதத்தைப் பானம் செய்து ஆனந்த பரவசராகி பக்திபூர்வகமாக சிரம் தாழ்த்தி வணங்கி, "ஸ்ரீபூஜ்யபாதங்களவரைப் போல தபஸ்வியான குருவின் ஸேவை செய்கின்ற பாக்யம் கிடைத்ததற்குக் காரணம் எமது பூர்வீகரின் தபஸ்ஸின் பலன். சுவாமி, அனுக்ரஹம் பெற்றேன். நான் இப்பொழுது தமக்கு அர்பிக்கப்போகும், "நாவலூரு அல்லது ராமசந்திரபுரம்" என்னும் மஹாக்ராம தானத்தை ஏற்றுக்கொண்டு நமது பூர்வீகர்களுக்குப் பரத்தில் மங்களமுண்டாக அனுக்ரஹம் செய்யுமாறு

2. Mysore Arch. Report, 1944 (Copper plate No. 25)
3. Mysore Arch. Report, 1944 (Copper plate No. 24)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ப்ரார்த்திக்கிறேன்" என்று விக்ஞாபித்து ஸங்கல்ப பூர்வகமாக ஹிரண்யோதகத்துடன் தாரைவார்த்து கிராம தானம்[1] செய்து ஸ்ரீபாதங்கள்வர்களுக்கு பணம், பொன், வஸ்திரம் ஆபரணங்கள் முதலியவற்றை சமர்ப்பித்தார்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் குருபாதரின் ஆக்ஞைப்படி ஸ்ரீரங்கராயர் தானம் கொடுத்த 50 தொழில்களுள்ள மஹாக்ராமத்தில் ஸ்ரீமடத்திற்கு 7 தொழில்களை மாத்திரம் வைத்துக் கொண்டு மீதி 43 தொழில்களை அக்ரஹாரத்திலுள்ள வீடுகளை 20 வித்வான்களுக்குத் தானம் செய்து அந்தப்பண்டிதரின் வம்சத்தினவர்கள் வம்சபரம்பரையாக எந்தத் தடையுமின்றி பாட ப்ரவசனம் செய்து கொண்டு ஸமஸ்கிருத மொழி, பற்பல சாஸ்திரங்களைத் தலைமுறை தலைமுறையாய்த் தொடர்ந்து கற்பித்து நடந்து வரும் வகையில் ஏற்பாடு செய்வதற்காக ஸ்ரீஸுரேந்திர குருபாதரவர்கள் விரும்பியுள்ள விஷயத்தைச் சபையில் விளம்பரப்படுத்தி தானங்களைப் பெறத்தகுதியான 20 வித்வான்களின் பட்டியலைச் சக்ரவர்த்தியிடம் கொடுத்து அதை அனுஸரித்துத் தாமிர சாஸனம் செய்விக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.[2]

சக்ரவர்த்தியவர்கள், மண்டலாதிபதிகள், வித்வான்கள், நகரத்தினர் ஸுரேந்திர தீர்த்தரின் தாராள மனப்பான்மை, வித்தை-வித்வான்களின் ரக்ஷணை, சாஸ்திர ப்ரசாரத்தில் அவருக்குள்ள தீக்ஷை முதலியவைகளைக் கண்டு மகிழ்ந்து ஸ்ரீகளவர்களை வெகுவாகக் கொண்டாடினர்கள்.

ஸ்ரீரங்கராஜ மஹாப்ரபுவின் உத்தரவின்படி மஹாகவி சபாபதிகளின் புத்திரராத ஸ்வயம்பு கவிகள் உடனே தான பத்திரத்தை ச்லோக ரூபத்தில் இயற்றி அளித்தார். சக்ரவர்த்திகள் அதை ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்குச் சமர்ப்பித்து அனுக்ரஹமடைந்தார்.

பிறகு சக்ரவர்த்தி ஸ்ரீரங்கராஜர் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருக்கு தங்க ஆஸனம் மற்றும் பீதாம்பரம், ரத்னாபரணங்களை, ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு

1. Mysore Arch. Report, 1944 (Copper plate No. 21)
2. க்ருஹதானபட்டியலை அடுத்த பக்கத்தில் காண்க

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ராஜத்வத்தைத் தெரிவிக்கும் வெண்கொற்றக்குடை-தங்கச் சாமரங்கள் பீதாம்பரம், முத்து மாலைகள் முதலியவற்றைக் காணிக்கையாக் ஸமர்ப்பித்தார். கண்களுக்கும் மனதிற்கும் பேரானந்தம் தருகின்ற அந்த மங்கள மஹோற்சவத்தைக் கண்டு ஸஜ்ஜனர்கள் மகிழ்ந்தனர்.

2, தானங்களின் பட்டியலை அடுத்த பக்கத்தில் காண்க.

சக்ரவர்த்தியின் வேண்டுகோளுக்கிணங்கித் தலைநகரில் நான்கைந்து நாட்கள் தங்கியிருந்துவிட்டு சிஷ்யப்ரசிஷ்யருடன் ஸ்ரீஸுரேந்திரர் கும்பகோணத்திற்குப் ப்ரயாணமானார்.

2. வேதவேதாங்க பாரங்கதர்களான த்ரிமதத்திய ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் வ்ருத்தி (தொழில்) அக்ரஹார க்ருஹதானம் செய்த விவ்ரம் வருமாறு:

| சாகை | கோத்ரம் | தகப்பனார் பெயர் | தானம் பெற்ற பண்டிதர்களின் பெயர் |
|---|---|---|---|
| 1 யாஜுஷம் | ஆத்ரேய | திருமலபட்டர் | சென்னபட்டணம் திருமலபட்டர். |
| 2 ரிக் | பாரத்வாஜ | ஸஹவாஸி குருசரண | லக்ஷ்மி நாராயண பண்டிதர் |
| 3 " | " | விட்டல தாஸர் | ஆனந்தபட்ட ஸுதீ |
| 4. " | உபமன்யு | அனந்தபண்டிதர் | கோவிந்தாசார்யர் |
| 5 " | கௌதம | நாராயணபட்டர் | கிரிபட்டர் |
| 6 சுக்லயஜுர் வேதம் | காத்யாயன | திம்மரஸர் | கோனப்ப பண்டிதர் |
| 7 யாஜுஷம் | பாரத்வாஜ | அல்லிம பட்டர் | திருமலபட்டர் |
| 8 ரிக் | " | தேவண்ணபட்டர் | தேவண்ணபட்டர் |
| 9 யாஜுஷம் | ஸரித்ஸ | திருமலாசார்யர் | தேவபூஜா ஸ்ரீநிவாஸஸுரி |
| 10 " | " | " | வேங்கடார்யர் |
| 11 " | ஸ்ரீவத்ஸ | குருராயர் | வெங்கடபண்டிதர் |
| 12 ரிக் | ஆத்ரேய | கோபீநாதபட்டர் | கோனேரிபட்டர் |
| 13 " | வசிஷ்ட | ராகவப்பட்டர் | ஓபலபட்டர் (ஹோபலபட்டர்) |
| 14 யாஜுஷம் | கௌதம் | கனகாசலபட்டர் | வீணேதிம்மண்ண பட்டர் |
| 15 ரிக் | " | திம்மரஸர் | வெங்கடய்ய |
| 16 " | கோவசிஷ்ட | விட்டல் | திம்மரஸ |
| 17 யாஜுஷம் | காச்யப | திம்மரஸ | வெங்கடஸுதீ |
| 18 " | கௌசிக | ரங்கப்பட்ட | உதயம்பட்டர் |
| 19 " | " | கொண்ஜுபட்ட | திருமலபட்டர் |
| 20 " | " | திம்மரஸ | வெங்கடப்ப |


CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 61. ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் நிர்யாணமும் (முக்தி)

### ஸ்ரீஸுதீந்திரதீர்த்தரின் அப்யுதயமும் (அபிவ்ருத்தி)

ஸ்ரீரங்கராயனினால் எங்குங்கண்டிராத கௌரவத்தைப் பெற்று ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் சிஷ்ய-ப்ரசிஷ்யருடன் ஸ்ரீரங்கமார்க்கமாகப் புறப்பட்டு ராமேச்வர யாத்திரையை முடித்துக்கொண்டு மதுரைக்கு விஜயம் செய்தார்.

மதுரையின் விச்வநாத நாயக்கரின் குமாரன் க்ருஷ்ணப்பநாயகர் ராஜ வைபவத்துடன் மூன்று யதீச்வரர்களையும் வரவேற்றான். அரண்மனைக்கருகிலுள்ள ஸ்ரீமடத்தில் ஸ்ரீயவர்கள் தங்கினார். மறுநாள் அரண்மனையில் யதிச்ரேஷ்டர்களின் உபசாரத்திற்கேற்பாடு செய்த நாயகர் பாதபூஜை செய்து ஸ்ரீமூலராமசந்திரரின் தரிசனம் தீர்த்தப்ராஸதம் இவைகளினால் புனிதனாகி குருவர்யருக்குக் காணிக்கை ஸமர்ப்பித்து தன்யனனான்.

அதிகவ்ருத்தாப்பியத்தினால் . . தளர்ந்துள்ள ஸ்ரீஸுரேந்திரர் வெகுகாலம் ஸஞ்சாரம், ஓய்வில்லாத நிகழ்ச்சிகளினால் மிகக் களைப்படைந்து நோய் வாய்ப்பட்டார். விஜயீந்திர-ஸுதீந்திரர் இடைவிடாது குருபாதருக்கு ஸேவைசெய்து கொண்டு மருந்துகள் கொடுத்து எல்லாவித உபசாரங்களையும் கவனித்தார்கள். ஆயினும் ஸ்ரீயவர்களின் ஆரோக்கியத்தில் எந்த மாறுதலும் காணப்படவில்லை. ஸுரேந்திரர்,"औषधं जान्हवी तोयं वैद्यो नारायणो हरिः" என்னும் திட நம்பிக்கையுடன் மருந்தை நிறுத்திவிட்டார். விஜயீந்திரர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், "ஸ்ரீஹரியின் ஸங்கல்பப்படியாகட்டும்" என்று அருளிவிட்டார்.

ஸ்ரீசாலிவாஹன சக ஆண்டு 1497 யுவ நாமஸம்வத்ஸரம் புஷ்ய சுக்ல ஏகாதசி (17-12-1575) சுமார், ஸ்ரீஸுரேந்திரர் வெகு உற்சாகத்துடனிருந்தார். மிகப்பலவீனராக இருந்தபோதிலும். அன்றைய மஹாஸமஸ்தான பூஜையை தானே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். விஜயீந்திர-ஸுரேந்திரர் இருபக்கங்களிலமர்ந்து பூஜாராதனையில் உதவி செய்து கொண்டு ஸேவையிலீடுபட்டிருக்கின்றனர். இந்த அபூர்வ

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பவித்ரமான காக்ஷியைக்கண்டு தார்மிக ஸமூகம் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கியுள்ளனர். பூஜை முடிந்தது. ஸ்ரீமூலராமசந்திரரைக் கையில் ஏந்தியபொழுது ஸுரேந்திரரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. வயோதிக தபஸ்வியின் முகத்தில் ஸாத்வீக தேஜஸ் காணுகிறது. ஸ்ரீமூலராமரையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு ப்ரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார். எவ்வளவு நேரமாயினும் சுவாமியைப் பட்டு வஸ்திரத்தில் வைத்துச் சுற்ற மனம் வரவில்லை. கடைசியில் ஒருமுறை பெருமூச்சுவிட்டு சுவாமியைப் பெட்டியில் வைத்தார். ஸ்ரீதிக்விஜய-ஜயராமரை பெட்டியில் வைத்த பிறகு தன் கையினாலேயே பூஜிக்கப்பட்ட விஜயவிட்டலரைக் கையில் ஏந்தி வெகுநேரம் தழுதழுத்த குரலினில் ப்ரார்த்தித்து சுவாமியின் பாதத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டுவிட்டுப் பெட்டியில் வைத்துவிட்டார். அதைக்கண்ட விஜயீந்திரர் முகத்தில் ஒளிமங்கிற்று. ஸுதீந்திரரும் மடத்தின் மற்றவர்களும் தானே பெட்டியில் வைத்து மூடாத விஜயவிட்டலரை இன்று ஏன் குருபாதர் அவ்வாறு செய்தாரென்று தெரியாமல் வியந்தனர். தீர்த்தம் பெற்றுக் கொண்டபிறகு விஜயீந்திர ஸுதீந்திரரை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி ஆணையிட்டார்.

நொந்த மனதுடன் விஜயீந்திரர் "குருவர்யரே, தாம் இன்று விஜயவிட்டலரைப் பெட்டியில் வைத்ததைக் கண்டு எங்களுக்குப் பயமாயுள்ளது. நாம் ஏதாவது குற்றம் செய்துள்ளோமென்று நம்மைத் துக்கத்தின் குறியாக்க விரும்பியுள்ளீரா? வெகுகாலமாகத் தமது புனிதமான ஸாந்நித்யத்தில் நம்மைக் காப்பாற்றும் அபய வசனம் அளிக்கும் வரைத் தமது பாதத்தை விடப்போவதில்லை" என்று குருவின் பாதங்களின் மீது சிரஸை வைத்துக் கண்ணீர்விட ஆரம்பித்தார். ஸுரேந்திரர் ப்ரியசிஷ்யர் விஜயீந்திர ஸுதீந்திரர்களை ஆலிங்கனம் செய்துகொண்டு தலைமீது தன் அம்ருத ஹஸ்தத்தை வைத்து, "ப்ரிய விஜயீந்திரரே, ஸ்ரீஹரியின் ஸங்கல்பத்திற்கு விரோதமாக ஆசரிப்பது அவனது தாஸனுக்கு பூஷணமல்ல. நீங்கள் கவலைப்படக் கூடாது. ப்ரிய ஸுதீந்திரரின் ஸகல அபிவிருத்திகும் நீங்களே பொறுப்பு. நமது மஹாஸம்ஸ்தானத்தின் கீர்த்தி கௌரவங்கள் நான்கு

In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

திசைகளிலும் பரவுமாறு செய்த உம்மைப் போன்ற சிஷ்யோத்தமரை அடைந்த நாமே, பாக்யசாலிகள்! தன்யர்! நமக்கு இனி எந்த விருப்பமுமில்லை, பயமுமில்லை. லக்ஷியத்தை அடைந்து நாம் யசஸ்விகளாயுள்ளோம். ஸர்வமும் அறிந்த தாங்களே இவ்வாறு கவலைப்படுவது சரியில்லை. ஸ்ரீஹரி தமக்கு ஸமஸ்த ஸன்மங்களங்களையும் அருளட்டும். நமது ஆசிர்வாதம் தங்களுக்கு எப்பொழுதும் உள்ளது! தாங்கள் இனி ஸுதீந்திரருடன் ஓய்வு எடுத்துக் கொள்ளச் செல்லுங்கள். இன்றைய ஜாகரண ஸேவையை நாமே நடத்துகிறோம் என்று ஆக்ஞாபித்தார். குருபாதரின் உறுதியான நிர்ணயத்தை அறிந்த விஜயீந்திரர் குருவர்யரின் ஆணையை மீற முடியாமல் குருபாதருக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து மனமில்லாத போனாலும் ஸுதீந்திரருடன் ஓய்வெடுத்துக் கொள்ளப்புறப்பட்டார்.

ஸ்ரீஸுரேந்திரர் சபா பவனத்திற்கு எழுந்தருளி ஆஸனத்திலமர்ந்தார். மடத்தின் பண்டிதர்கள் ப்ராகவத கதா அனுவாதம் செய்தனர். மான் தோலின் மீது அமர்ந்து மானஸ பூஜாவில் முதிர்ந்த அனுபவியான யதீந்திரர் கண்மூடி மூடாமல் இதயக் கோவிலில் பகவந்தனை அமர்த்திக் கண்ணாரக் கண்டு கொண்டே மானஸ பூஜாக்ரமப்படி அவனைப் பூஜித்துக் கொண்டு கையில் ஸ்ரீதுளசி மணியை ஏந்திக் கொண்டு ப்ரணவ மந்திரத்தை ஜபிக்க ஆரம்பித்தார். பாகவத ப்ரவசனம் முடிந்தது. தாஸர்கள் தொட்டில் பூஜாஸேவையை ஆரம்பித்தார்கள். ஸ்ரீநரஹரி தீர்த்தர், ஸ்ரீபாதரார்ஜர், ஸ்ரீசந்திரிகாசார்யரின் அபூர்வ தேவரநாமங்களையும், ஸுளாதிகளையும், உகாபோகங்களையும் இனிமையான குரலில் பாடிக்கொண்டு நர்த்தன ஸேவை செய்யத் தொடங்கினர். பரமாத்மாவின் அமர சரித்திரங்கள், பல லீலா விநோதங்களை நடித்துக்காட்டி நடனம் புரிந்து கொண்டிருக்கும் ஹரிதாஸர்களின் பரவசத்தில் மூழ்கியிருந்த ஜனங்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. ஸ்ரீயவர்களின் கையில் உள்ள ஜபமாலை சுற்றிக்கொண்டேயிருக்கிறது. இன்றென்னமோ ஸ்ரீயவர்களின் முகத்தில் அபூர்வமான காந்தி வீசுகிறது. கம்பீரமான முகம், ஸாத்வீக தேஜஸ் சிரித்த முகத்துடன் விளங்கும் ஸ்ரீயவர்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஏகாதசி திதி முடிந்து த்வாதசி திதி ஆரம்பமாயிற்று. இருந்தாற்போல் ஸ்ரீயவர்களின் கையிலிருந்து துளசி மணி கீழே விழுந்தது. ஸ்ரீகளவர்களின் முகத்திலிருந்து "நாராயண நாராயண" என்னும் பகவந் நாமஸ்மரணை வெளிப்பட்டது. மின்னலைப்போல் பளிச்சென்று ஒரு ஒளி ஜனங்களை எச்சரிக்கை செய்தது. ஸ்ரீகளவர்களின் முகம் வலதுபுறம் சாய்ந்துள்ளது. ஜனங்கள் திகிலடைந்தனர். பலத்த ஸ்வரத்தில் ஜனங்கள் செய்த "நாராயண, நாராயண" என்று ஓசை அமைதியான சூழ்நிலையை மற்றும் நிசப்தத்தைப் பிளந்து கொண்டு எங்கும் வியாபித்தது.

98 வருஷங்கள் பூர்ண ஆயுட்காலத்தில் வ்ரத நியமங்களுக்குட்பட்டு பரிபூர்ணமான பரமஹம்ஸாச்ரம தர்ம பரிபாலனமென்ற அக்நி பரிக்ஷையில் வெற்றி பெற்றவராய், 71 வர்ஷங்கள் கொண்ட நீண்டகாலம் மஹா சமஸ்தானத்தை ஆண்டு, க்ஞான-பக்தி-வைராக்யம் மற்றும் தவத்தை லோக நன்மைக்காகவே அர்ப்பணித்து, ஜகத்தின் மக்களைக் காப்பாற்றி, மூன்று முறை நிரசன வ்ரதம் கைகொண்டு தீர்த்த க்ஷேத்திரயாத்திரைகளினால் பூப்ரதக்ஷிணம் செய்த ஒரே தீரயதி புங்கவரெனப் புகழ்பெற்று, மானஸ பூஜா செய்து பகவத்ஸாக்ஷாத்காரம் செய்து கொள்வதில் தனக்கு நிகரில்லாதவராக விளங்கி, எல்லோராலும் மதிக்கப்பட்டு, ஸ்ரீவிஜயீந்திர-சுதீந்திரரைப் போன்ற ஜகத் பிரஸித்தமான சிஷ்யரத்னங்களை அடைந்து சேவிக்கப்பட்டவராய், கடைசியில் கமலாகாந்தனான ஸ்ரீஹரியின் ஸங்கல்பப்படி சாலிவாகன சகா 1497வது யுவ நாம ஸம்வத்ஸரம் புஷ்ய சுக்லத்வாதசி (18-12-1575) புதன் கிழமை ஸ்ரீஹரி தினத்தன்று தமது அவதார காரியத்தைப் பூர்ணமாக்கி ஸ்ரீஹரி மந்திரத்திற்கு எழுந்தருளினார். தேவாம்ச ஸம்பூதரான மஹாமஹிம ஸுரேந்திர தீர்த்த குருபுங்கவர்.

ஸ்ரீஸுதீந்திரருடன் குருபாதரின் விஷயமாகவே பேசிக்கொண்டு அமர்ந்திருந்த ஸ்ரீவிஜயீந்திரருக்கு ஆகாயத்தைப் பிளக்கும் "நாராயண" ஸ்மரண ஓசையைக்கேட்டு இதயம் நடுங்கிற்று. வீணாதிம்மண்ண பட்டர் ஓடிவந்து மூத்த ஸ்ரீபாதங்களவர் ஹரிபுரத்திற்கு யாத்திரை செய்த விஷயத்தைத் தெரிவித்தார். அதுவரை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அடங்கிக்கிடந்த துக்கம் கட்டுக்கடங்காமல் வெளிப்பட்டது. அடக்க முடியாத துக்கத்தினால், "ஹே குருதேவா! நமக்கு இனி யார் கதி? என்றெல்லாம் என்னென்னமோ சொல்ல ஆரம்பித்து விட்டார். கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஓடிற்று, ஸுதீந்திரரின் துக்கத்திற்கோ அளவேயில்லை. பண்டிதர்கள், மடத்தின் பரிவாரத்தவர்கள் எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் கூட விஜயீந்திரர் சமாதானமடையவில்லை. தாயை இழந்த மகனைப்போல் விக்கி விக்கி அழ ஆரம்பித்தார். குருவர்யரின் சிஷ்யாபிமானம், சுசீல குணம், முதலிய நற்குணங்களை நினைத்து நினைத்து சோகத்தில் மூழ்கினார்.

பகவதிச்சைக்கு எதிராக யார் என்ன செய்ய முடியும். மஹாஸ்வாமி? சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள் என்று பக்கத்திலிருந்த பண்டிதர்கள் ஸ்ரீயவர்களைத் தேற்ற ஆரம்பித்தார். விஜயீந்திரர் பெருமூச்சுவிட்டு, "உம், பூஜ்ய குருவர்யரின் மகத்துவம், அவரது வியோக துக்கத்தின் அறிவு, நம்ம இதயத்தின் வேதனை உமக்குத் தெரிந்திருந்தால் இவ்வாறு சொல்லமாட்டீர். நாம் தாய் தந்தைகளைக் கண்டதில்லை. பால்யத்திலிருந்தே குருபாதர் ஸ்ரீசந்திரிகா சார்யரின் போஷணையில் வளர்ந்த நமக்கு அந்த இன்பமயமான உறவு தெரிந்தது. அவர்தான் தந்தை, தாய், பந்து, உறவினர் எல்லாமாக ஆகியிருந்தார். அவர் நம்மை ஸ்ரீகுருபாதருக்கு அர்ப்பணித்த சமயம், அவரைவிட்டு வரும்பொழுது துக்கம் குடலையே கத்தரித்துக் கொண்டு வருவது போலாயிற்று. இருப்பினும், குருபாதர் ஸகலவிதங்களிலும் நமது பொறுப்பைத் தன்மீது சுமந்து ஏற்றுக்கொண்டு அந்த துக்கத்தை மறைத்து அன்புடன் காப்பாற்றி வந்தார். இன்றைக்கு 47 வருடங்களாக நமக்கு எல்லாமாகி ஆத்யாத்ம ஜகத்தில் நம்மை ஒருவராகச் செய்து விட்டு ஹரிமந்திரத்தை யடைந்துவிட்டார். குருவர்யர் நம்மிடம் வைத்த அன்பு அபிமானம், நமது அபிவ்ருத்திக்காகச் செய்துள்ள த்யாகம் இவைகளை நினைத்தால் குடலை அறுத்துக்கொண்டு துக்கம் குமுறுகிறது. உயிருக்குயிராக நம்மைக் காப்பாற்றி வந்தவர், அந்த மஹானுபாவர் அவர். ஜகத்தில் குருவைவிட உத்தமமானவர் யாருமே இல்லை! குருவர்யரின் ஸத்ஸங்கம், பாதசேவை, எல்லோருக்கும் கிடைப்பதரிது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பூர்வ ஜன்மத்தில் சம்பாதித்த புண்ய விசேஷத்தினால் 47 வருட காலம் அகண்டமாய்த் தொடர்ந்து அவருடைய தெய்வீக ஸாந்நித்யத்திலிருக்கும் பாக்யம் நமதாக இருந்தது. நீண்ட காலம் அவரைச் சேவிக்கும் பாக்யம் நம்முடையதென்ற பெருமை நமக்கிருந்தது. அவரது கிருபாகடாக்ஷம் நமக்கு வஜ்ர கவசமாக இருந்தது. நமது எல்லா வெற்றிகள், ஸாதனைகள், நாம் எல்லோராலும் கௌரவிக்கப்பட்டது, ஸ்ரீசம்பத்துக்களுக்கும் அந்த மஹானுபாவரின் ஆசீர்வாதம், கருணை, உற்சாகங்களே காரணமென்று நாம் வாயார விளம்பரமாக விக்ஞாபனம் செய்ய முடியும்! அவரில்லாத வாழ்க்கை ஸாரமற்றதாகிவிட்டது! அப்பேர்ப்பட்ட அன்பு நிறைந்த ஸ்வபாவமும் உதார குணமுள்ளவரும் சிஷ்யப்ரியரான பூஜ்யரின் பிரிவு நம்மை பயங்கரதுக்கமென்னும் அக்னியில் வாட்டிக்கொண்டிருக்கிறது. ஊஹூம்! இந்த துக்கத்தின் வேதனையை நாம் பொறுத்துக்கொள்ள இயலவில்லையே! அந்தோ! குருவர்யரே, நமக்கினி யார் ரக்ஷகர்? உபதேசகர் வழிகாட்டி வேறு யாருள்ளனர்? என்றெல்லாம் புலம்பி துக்கித்தார்.

ஆஹா! விஜயீந்திரரின் குருபக்தி எப்பேர்ப்பட்டது? உண்மை. ஸ்ரீவிஜயீந்திரர் குருபக்திக்கு எடுத்துக் காட்டாவார். குருவர்யரென்றால் என்ன பொருள்? அவருடைய ஸ்தானமானங்கள் யாவை? அவரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? அவருடைய அனுக்ரஹமே எவ்வாறு தமக்குத் தாரகம், “हरौ रूष्टे गुरुस्त्राता गुरौ रूष्टेनकश्चन” என்னும் மஹா மந்திரத்தை நன்றாக அறிந்த உண்மையான சிஷ்யராகி, சிஷ்யரென்றால் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டவே ஒருவேளை அவதரித்தாரோ என்பதைப் போலுள்ள ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் குருஸேவை, சுச்ரூஷை, கீழ்ப்படிதல் முதலிய குணங்களினால் அவரது அனுக்ரஹத்திற்குப் பாத்திரராகி, குருவினனுக்ரஹ பலத்தினாலேயே ஜகத்தில் துர்வாதி திக்விஜயம் முதலியவைகளினால் அஜேயர் (ஜயிக்க முடியாதவர், ஜீம पदअपदवपड्समत्रः என்ற விருது பெற்று ராஜாதி ராஜர்கள், சக்ரவர்த்திகளினால் உலகம் போற்றும் மஹான் என்ற விருதைப்பெற்று தமது ஸகல அபிவ்ருத்திக்கும், ஸாதனைகள், கீர்த்திகளெல்லாம் குருபாதரனுக்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கிரஹத்தினால் கிடைத்தவை என்று வாழ்க்கையில் மனதில் பதியவைத்துக் கொண்டிருந்ததினால்தான் அவருக்கின்று குருவின் பிரிவு பொறுக்க முடியாமலிருப்பது இயற்கையே!

கடைசியில் ஒருமுறை விஜயீந்திரர் தம்மைத் தாமாகவே சற்று சமாதானப்படுத்திக் கொண்டு கண்ணீரும் கம்பலையுமாக அடக்கமுடியாத வேதனையை அடக்கிக் கொண்டு இருந்த ஸுதீந்திரரைச் சமாதானப் படுத்தி மேற்கொண்டு குருவின் ஸேவையைக் கவனிக்கும்படி ஆக்ஞாபித்தார்.

மூத்த ஸ்ரீபாதங்களவர்கள் நாராயணனின் திருவடியடைந்த செய்தியைக் கேட்டு மதுரையின் பிரமுக சிஷ்யர் கூட்டம், ஆஸ்திகர்கள், நகர ப்ரமுகர்கள், ஸ்ரீபாதங்களின் கடைசி தரிசனத்திற்காக ஸ்ரீமடத்திற்கு விரைந்தனர். மதுராதிபதி குருவர்யரின் நிர்யாணமானதற்கு தனது துக்கத்தைத் தெரிவித்து ராஜ புரோகிதரை ராஜ மரியாதைகளுடன் அனுப்பி வைத்தார். நூற்றுக்கணக்கான பண்டிதர்கள், சிஷ்யர்கள் மடியுடன் குருவர்யரின் புனித சரீரத்திற்கு சுத்த ஜலத்தினால் அபிஷேகம் செய்து அலங்கரித்து புஷ்பங்களினால் அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் அமர்த்தினார்கள். ச்ரோத்திரியர்கள் கீதாபாராயணம் செய்து கொண்டிருக்கையில், ஹரிதாஸர்கள் நர்த்தனம் செய்ய, ராஜ மரியாதை, வாத்யங்கள் முழங்க வைகைநதி தீரத்திலுள்ள தோப்பில் தயாரிக்கப்பட்டுள்ள ஒதுக்கப்பட்ட இடத்திற்கு ஊர்வலமாக வந்து மஹா ஸமஸ்தானத்தின் வழக்க முறைகளைப் பின்பற்றி வைதிக விதிமுறைப்படியும் ஸ்ரீஸுரேந்திரரின் புனித சரீரத்தை அடக்கம் செய்து ப்ருந்தாவனம் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீவிஜயீந்திரர் ஸுரேந்திரருடன் நதியில் ,ஸ்நானம் செய்து ப்ருந்தாவனத்தினருகில் அன்றைய மஹா ஸமஸ்தான பூஜையை நிறைவேற்றி, பூஜையான பிறகு ஸ்ரீமூலராமாதி விக்ரஹங்களை குருவர்யரின் ப்ருந்தாவனத்தின் மீது அமர்த்திக் கனகாபிஷேகம் செய்து மஹாமங்கள ஹாரதியெடுத்து வழக்க முறைப்படி குருகளின் மீது சரமச்லோகமியற்றி தழுதழுத்த குரலில் வாசித்தனர்.

"यश्चकारोपवासेन त्रिवारं भूप्रदक्षिणं
तस्मै नमो यतींद्राय श्री सुरेन्द्र तपस्विने"॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

குருவர்யரின் மஹா ஸமாராதனையை அதிக சிரத்தை-பக்திகளினால் நிறைவேற்றி அதன் அங்கமான வித்வத் ஸபையை நடத்திப் பண்டிதர்களுக்கு விசேஷ சம்பாவனை முதலியவைகளை அளித்து ஸ்ரீவிஜயீந்திரர் எல்லோருடைய கௌரவத்திற்கும் அன்பிற்கும் பாத்திரரானார்.

மஹா ஸமாராதனை முடிந்த மறுநாள் ஸுதீந்திரருடன் தனிமையில் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு அமர்ந்திருக்கிறார். ஸ்ரீவிஜயீந்திரர் வீணா திம்மண்ண பட்டர் வந்து குருமார்களிருவருக்கும் நமஸ்கரித்து ஊருக்குப் புறப்பட அனுமதி கோரினார். விஜயீந்திரர் புன்னகையுடன்! க்ருஹஸ்தனான பிறகு மடத்தை லக்ஷியம் செய்யாமலிருப்பதைப்போல் தோன்றுகிறது. மனைவி வந்தாளென்று மடத்தை மறந்துவிட்டாயா? உனது இந்தக் குற்றத்திற்குத் தண்டனை கொடுக்க உள்ளோம். இனி பிறகு குடும்ப ஸஹிதனாக மடத்திலேயே இருந்து நமது ப்ரிய சிஷ்யரின் யோகக்ஷேமத்தைப் பார்த்துக்கொண்டு அவரது ஸந்நிதியிலேயே இருக்க வேண்டும். இதுவே நாம் உனக்குக் கொடுக்கும் தண்டனை! இல்லையா திம்மண்ணா! நம்மவர்கள் வேறு யாரிருக்கின்றனர்? சொல்லு! நன்மை கோருபவரும் பந்துக்களுமான உன்னைப்போன்றவர் தூரத்திலிருப்பது மடத்தின் நன்மையை உத்தேசித்து அவ்வளவு நல்லதல்ல. பத்னி ஸஹிதம் நீ மடத்திலேயே இருக்க வேண்டுமென்று எமது விருப்பம். உனக்கு எல்லாவிதத்திலும் வஸதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். சம்மதந்தானே? என்று சொல்லவும் திம்மண்ணாசார்யர் தலை வணங்கி "உத்திரவு" என்று மாத்திரம் சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டார்.

இருபத்து நான்கு வயதான மிக சுறுசுறுப்பான தேஜஸ்வியும், வித்யாவினயஸம்பன்னருமான திம்மண்ண பட்டர் வாத்மல்லர். அவரது திறமைகளை சபைகளிலெல்லாம் கவனத்தில் வைத்து அவருடைய பாண்டித்யத்தினால் ஆகர்ஷிக்கப்பட்ட ஸ்ரீஸுதீந்திரருக்கு அவர் தமது குருவிற்குப் பரம ப்ரீதி பாத்திரரென்பதை யறிந்து உடனே அவரைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள விருப்பம் அதிகமாயிற்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சிஷ்யரின் இங்கிதத்தையறிந்த விஜயீந்திரர் புன்னகையுடன், திம்மண்ணர் உங்களுக்கும் நமக்கும் பூர்வாச்ரம பந்துகளாக வேண்டும். பாண்டித்யத்திற்குப் பெயர்பெற்ற ஷாஷ்டிக வம்சத்தின் "वीरगुद्दे" என்ற கனகாசலபட்டர் நமது கூடப்படித்தவர். விஜயநகரத்தின் கிருஷ்ணதேவராயர் கனகாசலபட்டரின் தகப்பனாராகிய கிருஷ்ணபட்டரிடம் வீணை வாசிக்கக் கற்று அவருக்குக் குருதக்ஷிணையாக முத்துமாலை முதலியவைகளை வழங்கி *ஸம்பாவனைகள் கொடுத்திருந்தார். விஜயநகரத்தின் வீழ்ச்சிக்குப்பிறகு அடைக்கலமிழந்த அநேக பண்டிதர்களுடன் கும்பகோணத்திற்கு வந்த கனகாசலபட்டர் குருபாதரின் அடைக்கலம் பெற்று மடத்திலேயே தங்கிவிட்டார். திம்மண்ணனின் வித்யாப்யாஸத்தின் பொறுப்பை குருபாதர் நமக்கு ஒப்புவித்தார். திம்மண்ணன் ந்யாய மீமாம்ஸா-வ்யாகரணம் முதலிய சாஸ்திரங்களை ஸுதாந்தவேதாந்த சாஸ்திரங்களையும் அத்யயனம் செய்தான். சதுஸ் சாஸ்திரத்தில் நிபுணத்வம் பெற்றதைப்போல் வீணைவாசிப்பதிலும் ப்ரகாண்ட பாண்டித்யத்தைப் பெற்ற திம்மண்ணன் 12 வயதிலேயே ஒருமுறை தஞ்சாவூரின் கௌரவத்தைக் காப்பாற்றி ப்ரசித்தி பெற்றான். குருபாதரின் ஆணைப்படி அவனுக்கு உத்தம குலத்திற் பிறந்த குணவதியான கோபிகாம்பா என்னும் கன்னிகையுடன் திருமணம் செய்வித்தோம். திம்மண்ணன் பத்னியுடன் காவேரிப் பட்டணத்தில் கிருஹஸ்த ஜீவனம் நடத்துகின்றான். இந்த ஊரிலுள்ள நெருங்கிய உறவினர்களின் வீடுகளுக்கு வந்த திம்மண்ணன் நாம் இங்கு தற்சமயம் வந்திருப்பதையறிந்து வந்திருக்கிறான். திம்மண்ணனுக்கும் நமது மஹாஸமஸ்தானத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென்று நமது பெரும் விருப்பமாயுள்ளது. ஆகையால் வருங்காலத்தில் நமது ஸ்மஸ்தானத்தின் கீர்த்தி வளரவிருக்கிறது. அந்த ரகசியத்தை இன்னொருமுறை அறிவிக்கிறோம். பாதியில் நின்றிருக்கும் திம்மண்ணனின் வேதாந்த அத்யயனம் உங்கள் மூலம் நடைபெற வேண்டும் என்பது நமது நோக்கம்! என்று தெரிவித்தார். ஸுதீந்திரர் தாழ்மையுடன்

उपदिश्य स कृष्णभूपालेर्निजगांधर्व कलांकलमगृहनात्
घन मौक्तिक गुच्छहारपूर्वां विरदालीं गुरुदक्षिणापदेशात् ॥

- श्री राघवेंद्रविजय ॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

"ஆக்ஞை" என்று விக்ஞாபித்தார். அன்றிலிருந்து திம்மண்ணபட்டர் ஸுதீந்திரருக்கு மிக வேண்டியவனாகவும் மெச்சத் தகுந்தவனாகவுமானான்.

நான்கைந்து நாட்களான பிறகு விஜயநகரத்திலிருந்து ஸ்ரீயவர்கள் அரசனிடமிருந்து அழைப்பு வந்தது. ஸ்ரீஸுரேந்திரரின் ப்ருந்தாவனம், கலா மண்டபம் இவைகள் கட்டப்படவேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருந்ததினால் அதற்காக விஜயீந்திரர் மதுரையில் தங்கி சிறிய பரிவாரத்துடன் ஸுதீந்திரை ஹம்பிக்கு அனுப்பினார்.

சிறிய ஸமஸ்தானத்துடன் புறப்பட்டு ஸ்ரீஸுதீந்திரர் சீக்கிரமாக ஸஞ்சாரம் செய்து கொண்டு யுவ வருடம் மாகக்ருஷ்ண ஏகாதசியன்று ஹம்பிக்கு வந்து ஸ்ரீரகுநந்தன தீர்த்தரின் ப்ருந்தாவன ஸந்நிதியில் முகாம் போட்டார். ஏகாதசி-த்வாதசி பூஜாராதனையை அங்கேயே நிறைவேற்றினார். மத்யானம் ராஜப்ரதிநிதி, ராஜ புரோஹிதர், ஆஸ்தான பண்டிதர்கள் ராஜ கௌரவத்துடன் வந்து ஸ்ரீகளவர்களை ஊர்வலத்தில் விஜயவிட்டல ஸ்வாமி கோவிலுக்கு அழைத்துவந்தனர். வாயிலில் சக்ரவர்த்தி ரங்கராஜன் குருவர்யரை பக்தியுடன் வரவேற்றார். க்ஷேம லாபங்கள் விசாரித்த பிறகு ராயர் ஸ்ரீயவர்களின் மூலம் மூத்த ஸ்ரீபாதங்களவரின் நிர்யாணமான விஷயத்தைப் பற்றிய விவரங்கள் யாவையும் அறிந்து தனது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்தார். லோக விஷயங்களைப் பற்றிப்பேச்சு வார்த்தைகளான பிறகு "ஸ்ரீயவர்களுக்கு நமஸ்கரித்து" குருவர்யரே, நாளை ஸ்ரீபம்பாபதியின் ஸந்நிதியில் சேவகன் (நான்) அளிக்கும் அதிதி உபசாரத்தையும் கிராம தானத்தையும் ஏற்றுக்கொண்டு தயவு செய்யவேண்டும்" என்று வேண்டினார்.

ஸ்ரீயவர்கள்:- ராஜன், சில மாதங்களுக்கு முன்பு நம்மையும் இரு குருபாதங்களவர்களையும் பெனு கொண்டாவிற்கு வரவழைத்து அங்கு மூத்த ஸ்ரீபாதங்களவர்களுக்கு கிராம தானம் செய்ததல்லாமல் குருவர்யர் நம்மை

* Mysore Arch. Report - 1994 for 139 Note 22.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அதிகமாக கௌரவப்படுத்தினாரல்லவா? இப்பொழுது ஏன் மறுபடியும் கிராமதானம்?

ஸ்ரீரங்கராயர்:-(வினயத்துடன்) ஸ்வாமின், இது ஹரி சித்தம்! ஸ்ரீவிருபாக்ஷர் கனவில் தோன்றித் தங்களை வரவழைத்துக் கௌரவப் படுத்துமாறு ஆணையிட்டார். அவருடைய ஆணையை நிறைவேற்றி அவர் கருணைக்கு நான் பாத்திரனாக அனுக்ரஹிக்க வேண்டும்.

ஸ்ரீயவர்கள் வேறு வழியின்றி சம்மதித்தார். ராயர் உத்தரவு பெற்று பல மந்திராக்ஷதை பெற்று அரச மாளிகைக்குச் சென்றார்.

சாலிவாஹன சகா 1497 யுவ வருஷமாக-கிருஷ்ணபக்ஷ த்ரயோதசி, சனிக்கிழமை (28-1-1576) யன்று பம்பாபதி ஸந்நிதியில் சிவராத்ரி மகோற்சவம் வைபவத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்ரீவிருபாக்ஷ ஸ்வாமியின் தர்சனம் செய்து புனிதராய்க் கொண்டிருக்கின்றனர். மாலை ஆறு மணி சமயம். கன்னட நாட்டரசன் இரண்டாவது ரங்கராஜர் - மஹாராணி - அமாத்யர்கள் - சேனைத் தலைவன் - ராஜ பந்துக்கள், ராஜபுரோகிதர் முதலானவர்கள் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சற்று நேரத்திற்கெல்லாம் சிறிய பரிவாரத்துடன் ஸ்ரீயவர்களின் வாகனம் வந்து சேர்ந்தது. ஸ்ரீயவர்களை ராயர் கௌரவத்துடன் வரவேற்றார். ஸ்ரீயவர்கள் புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்தார். ராஜ புரோகிதர் ஸங்கல்ப பூர்வகமாக கிராமதான தாமிர சாஸனத்தை மஹாராஜரின் ஆணைப்படி கம்பீரமான குரலில் படிக்க ஆரம்பித்தார். பிறகு ஸ்ரீரங்கராயர் 1. பச்சினஹாளு 2. க்யாட 3. யடவாள 4. செஞ்சலு 5. அரளே ஹள்ளீகளென்னும் ஐந்து கிராமங்களை கிருஷ்ணார்ப்பண பூர்வகமாக ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு தாரை வார்த்து தானம் செய்தார். மேலும் தாமிர சாசனம் ஜோடி சால்வைகள், முத்து மாலை,* கணக்கற்ற தங்க நாணயங்களையும் ஸமர்ப்பித்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். ஸ்ரீயவர்கள் ராயனின் தர்ம சிரத்தை, உதார குணங்களைக் கண்டு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மகிழ்ச்சியடைந்து நல்லமுறையில் சில உபசார வார்த்தைகள் சொல்லி ஸ்ரீவிருபாக்ஷனின் தர்சனம் செய்து முகாமிற்குத் திரும்பினார்.

சில நாட்கள் மஹாராஜனின் விருந்துபசாரங்களை ஏற்று விடைபெற்று ஸ்ரீபத்மநாப தீர்த்தர், ஸ்ரீஜயதீர்த்தர், ஸ்ரீகவீந்திரர், ஸ்ரீசந்த்ரிகா சார்யரவர்களின் ப்ருந்தாவனங்களை தரிசித்து பூஜாராதனை ஹஸ்தோதகம் முதலியவைகளை நிறைவேற்றி சஞ்சாரக் கிரமப்படி கும்பகோணத்திற்கு ப்ரயாணமானார். மதுரையில் குருவர்யரின் ப்ருந்தாவனமும் சிலாமண்டபம் கட்டுவிக்கும் காரியங்களின் ஏற்பாடுகள் செய்து விட்டுக் கும்பகோணத்திற்கு திக்விஜயம் செய்து வந்திருந்த ஸ்ரீவிஜயீந்திரர் கன்னட ஸாம்ராஜ்யாதிபதி சக்ரவர்த்தியினால் அபூர்வ கௌரவங்கள் மேலும் மான்யங்களைச் சம்பாதித்துக் கொண்டு வந்த ப்ரிய சிஷ்யரை பரமானந்தத்துடன் வரவேற்றார்.

ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் பிருந்தாவனஸ்தராய் நான்கு ஐந்து வருஷங்கள் கழிந்தன. இந்த நாட்களில் சிஷ்யார்ஜனம், தீர்த்த க்ஷேத்ராதிகளை கைக்கொள்ளாமல் கும்பகோணத்திலேயே தங்கி ப்ரிய சிஷ்ய ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் அத்யயனத்தில் மிகுந்த அக்கரை கொண்டிருந்தார். தங்குதடையின்றி பாட ப்ரவசனங்கள் நடந்து நியாய மீமாம்ஸாதி சாஸ்திரங்களில் முதலிலேயே பாரங்கதராகவிருந்த ஸுதீந்திரர் ந்யாய-மீமாம்ஸா - வ்யாகரண சாஸ்திரங்களின் உயர்ந்த கிரந்தங்கள் மற்றும் த்வைத வேதாந்தத்தின் உயர்ந்த க்ரந்தங்களைப் பயின்று கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு நாளும் இரவும் பகலும் "மேலும் மேலும் பாடம் ஆகிக்கொண்டுள்ளது. புத்திக் கூர்மையுள்ளவரும் மேதாவியும் நிகரற்ற திறமை சாலிகளுமாயிருந்தபடியால் ஸ்ரீஸுதீந்திரர் குர்வனுக்கிரஹத்தினால் ந்யாய மீமாம்ஸா - வ்யாகரண - வேதாந்த சாஸ்திரங்களிலுள்ள எல்லா கடினமான க்ரந்தங்களையும் எளிதாகத் தமதாக்கிக் கொண்டு அதாவது அவைகளில் கரைகண்டு, நான்கு சாஸ்திரங்களிலும் தனக்கு இணையில்லாத பண்டிதராகி, குருவையே ஆச்சரியப்பட வைத்தார். ஜகத்பிரசித்த வித்யா சக்ரவர்த்தியே மனப்பூர்வமாகத் தமது ப்ரதிநிதியைத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



தயாரித்திருக்கையில் ஸ்ரீவிஜயீந்திரரின், ப்ரகாண்ட பாண்டித்யம், சுறுசுறுப்பு அபூர்வமான திறமை, வாக்வன்மைகள் ஸுதீந்திர தீர்த்தரிடம் குடிகொண்டதில் ஆச்சரியமெதுவுமில்லை. அனுதினமும் நடைபெறும் ப்ரதிவாதி திக்விஜயத்தில் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் பங்கேற்று வாக்யார்த்தங்களின் நமது இணையற்ற அறிவை ப்ரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறார். பூர்வ பக்ஷங்களை ஆயாஸமின்றி நிராகரித்து ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பதில் ஸுதீந்திரர் காட்டும் திறமை, சாமர்த்தியம், முதலியவைகளைக் கண்ட ப்ரதிவாதிகள் தலையாட்டி மெய்மறந்து மஹா வாதமல்லரென்று ஸுதீந்திரரைக் கொண்டாடுவதைக் கண்டு ஸ்ரீவிஜயீந்திரரும் வியப்புடைந்தாரென்ற பிறகு ஸ்ரீஸுதீந்திரரின் பாண்டித்யம் முதலியவைகளைக் கணக்குப்போட எப்படித்தான் முடியும்?

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் ஸகலகலா நிபுணத்வம், ஸகல சாஸ்திர பாரங்கள் தம், நிர்வகிக்கும் திறமை, வாக் வல்லமை, விஷயங்களை நிருபிக்கும் சக்தி, ப்ரமாணம், உதர்ரணபூர்வகமாகத் தனது பக்ஷத்தைப் பலப்படுத்துவதில் காண்பிக்கும் புத்திசாலித்தனம், மஹா வல்லமை இவையெல்லாம் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரிடம் ப்ரதிபலித்திருப்பதைக் கண்டு கும்பகோணத்தின் பண்டித சமூகம், தர்மாபிமானிகள், ஆனந்த பரவசமடைகின்றவராயிருக்கின்றனர். தேசவிதேசங்களிலிருந்து வரும் எழுத்தாளர்கள் கவிகளோ ஸ்ரீஸுதீந்திரரை ஸுரஸரஸ்வதியின் அபராவதாரமென்றே பாவித்திருந்தனர். ஸ்ரீஸுதீந்திரரின் முகாரவிந்தத்தினின்று காவ்யகங்காம்ருதபானம் செய்ததினால் உண்டாகும் ஆனந்தத்தினால் மெய்மறந்து கவிகள் ஒருபுறம் நர்த்தனம் செய்தால், மற்றொருபுறம் அவரது வேதாந்தோபதேசங்களினால் புனித ஹ்ருதயமடைந்த தார்மிகர் ஸ்ரீயவர்களை மனமாரப் பாராட்டி இப்படிப்பட்ட குருவையடைந்த நாமே தன்யரென்று பாவிக்கின்றனர். சிஷ்யரின் இந்த முன்னேற்றம், எந்த குருவின் இருதயத்தை மலரச் செய்யாமலிருக்கும்? மகிழ்ச்சியடையச் செய்யாமலிருக்கும்! குருபாத ஸ்ரீஸுரேந்திரரின் ஆக்ஞையைப் பாலனம் செய்வதில் தனது லக்ஷியம் நிறைவேறுவதைக் கண்டு பரமானந்தமடைந்தவராயிருக்கிறார். சிஷ்யரை அரை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

நொடிப்பொழுதும் விட்டுப்பிரிவதில்லை. சிஷ்யரிடத்தில் அவ்வளவு அதிக அன்பு! ஸ்ரீஸுதீந்திரரோ குருகள்தான் தமக்கு எல்லாம் என்றறிந்து அவரிடம் அபாரபக்தி, சிரத்தை செலுத்தி; ஸதா அவருடைய மங்களகரமான ஸந்நிதியிலிருந்து கொண்டு சேவைகளினால் அவரை த்ருப்தி செய்து பவித்ரமான இருதயம் படைத்தவராகியுள்ளார். இந்த குரு-சிஷ்யரின் அபார அன்பு, இன்பமயமான உறவுகளைப் பார்த்து ஜனங்கள் குருவென்றால் விஜயீந்திரர், அவருக்குத் தக்க சிஷ்யரென்றால் ஸுதீந்திரர் என்று கொண்டாடி இரு ஸ்ரீபாதங்களின் தர்சனம் உபதேசாதிகளினால் க்ருதார்த்தர்களாகியுள்ளனர்.

## 62. பண்டித போஷணம் (பண்டிதர்களுக்கு ஆதரவு)

பாரத நாட்டில் இன்று ஸமஸ்கிருத மொழி, வைதிக வித்யா, தர்மம், கலாசாரங்களுக்காக வாழ்க்கையையே ஒதுக்கி வைத்து விவித சாஸ்திரங்களில் ப்ரவீணரான தற்சமயம் இருந்து வரும் மஹான்களால் அங்கீகரிக்கப்பட்ட பண்டித மணிகள் தொன்றுதொட்டு வரும் சாஸ்திரங்களின் பாடப்ரவசன பரம்பரையை அபிவிருத்தி செய்து கொண்டு வருவதற்கு மிக முயற்சி செய்து உழைத்து வருகின்றனர். ஆதரவில்லாமல், பணக்கஷ்டமென்னும் அவல நிலைக்காளாகி அவர்களுடைய வாழ்க்கை நிர்வாகத்திற்கு வழிதெரியாமல் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த ஒரு இதயத்தை உருக்கச் செய்யும் காட்சியைப் பாரதத்தின் எல்லா பாகங்களிலும் நாம் காண முடிகின்றது.

முன்னாட்களில் சமஸ்கிருத மொழி, பலவிதக் கலைகள், கலைகளில் அனுபவம் பெற்ற பண்டித மணிகளுக்கு ராஜாதிராஜர்கள், சக்ரவர்த்திகள் ஆதரவு காட்டி விசேஷ முறையில் அவர்களைப் போஷித்து வந்தார்கள். வித்வான்களுக்கு ஆதரவளித்து அவர்கள் கவலையின்றி வாழ்வதற்கு உதவி செய்து பாடப்ரவசனங்களின் மூலம் வருங்கால பண்டித சமூகத்தைத் தயார் செய்வதற்கு வசதி செய்து பாரதத்தின் அந்த மாபெரும் வித்யா பரம்பரையைத் தலைமுறை தலைமுறையாக அபிவ்ருத்தியாகும் வகையில் ஏற்பாடு செய்வது தங்கள் கடமையென்று முன் காலத்திய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



அரசர்கள் உணர்ந்திருந்தனர். அதனால்தான், தர்க்க வ்யாகரண -- காவ்ய - நாடக அலங்காரம் முதலிய ஸாஹித்ய சாஸ்திரங்களில் ஆயிரக்கணக்கான க்ரந்தங்கள் இயற்றப்பட்டு அமோகமான ஸாஹித்யம் (இலக்கியம்) வளர்ந்தது. பாரத நாட்டின் கீர்த்தி தேசவிதேசங்களில் விளங்கிற்று. தத்வம், தர்மம், கலை, கலாசாரங்களுக்குப் பாரதம் பிறப்பிடமாய் விளங்கிற்று!

ஆங்கிலேயரின் அடிமைத்தளைகளிலிருந்து விடுபட்டுப் பாரதம் இன்று சுதந்திரமடைந்துள்ளது. மக்களாட்சியாகித் தனது முன்னேற்றம் எல்லாத் துறைகளிலும் ஏற்பட்டு வளர்ச்சிப் பாதையில் நடைபோட்டுக் கொண்டுள்ளது. தேசத்தில் பல தொழில்களின் முன்னேற்றத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் தண்ணீரைப் போல் செலவாகிக் கொண்டு வருகின்றன. ஆயினும் பாரத தேசத்திற்கு எல்லாவிதத்திலும் பெருமை தரும் ஸமஸ்கிருத மொழி, சாஸ்திரங்களின் விஷயத்தில் மாத்திரம் எந்த முயற்சியும் சரியான முறையில் நடைபெறவில்லையென்று வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியதாக உள்ளது.

தர்மரஹித (Secular State) மதச்சார்பற்ற பாரதத்தில் முஸ்லீம், கிறிஸ்துவ, பௌத்த மதங்களின் மறுமலர்ச்சி ப்ரசாரங்களுக்கு விசேஷ முறையில் அனுகூலங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் ஹிந்து மதம் அதற்கு மூலமான (வேரான) ஸமஸ்கிருத பாஷை, வெவ்வேறு சாஸ்திரங்களின் முன்னேற்றம், ப்ரசாரத்திற்கு மாத்திரம் இடமில்லாததாகியுள்ளது. ஹிந்து மதத்தின் சர்வஸ்வமான வைதிக வித்யா ஸமஸ்கிருத பாஷை தேசத்திற்கு ஒரு சாபமென்று ஒரு அல்க்ஷியப்போக்கு (Neglect) ஆணவம் வளர்ந்து வருகிறது. இன்று நமது அரசு நிர்ணயித்துள்ள த்ரிபாஷா ஸூத்ரமே (Three Language Formula) இதற்குப் பெரிய உதாரணமாக உள்ளது. அப்படியானால் பாரதத்தின் திவ்ய பரம்பரையின் ஸங்கேதமான பழைய சாஸ்திரங்கள் அதற்காக வாழ்க்கையையே ஒதுக்கின பண்டிதர்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படும் வகைதான் என்ன?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பாரத நாட்டின் கீர்த்திபெற்ற பரம்பரையை வளரச் செய்து கொண்டு வருவதற்காகப் போராடிக் (Struggling) கொண்டு வரும் புறக்கணிக்கப்பட்டவர்களுள் ஸ்ரீதியுள்ளவர்களின் சில அங்கீகரிக்கப்பட்ட பண்டிதமணிகளைக் காப்பாற்றவும் போஷிக்கவும் தற்சமயம் ஆங்காங்கு முயற்சி நடப்பது மங்கள ஸூசகமாயுள்ளது. இந்தத் திசையில் முயற்சி நடந்திருப்பது புதியதொன்றுமில்லை. சுமார் 500 வருடங்களுக்கு முன்னமேயே தீர்க்கதரிசிகளான (farsighted) நமது பூர்வீகர்கள் பண்டிதர்களின் ரக்ஷண்ண போஷணைக்காக உழைத்து அநேக முறையில் ஏற்பாடுகள் செய்திருப்பது கண்டு வருகிறது. தக்ஷிண பாரதத்தில் அந்த வகையில் போற்றத்தகுந்த காரியம் செய்த கீர்த்தி ஸ்ரீமதாசார்யரின் ஸத்பரம்பரைக்குச் செலுத்தப்பட வேண்டும்.

ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர், ஸ்ரீபாதராஜர், ஸ்ரீவ்யாஸராஜ குருஸார்வ பௌமர், முதலானோர் த்ரிமதத்தின் பண்டித வர்க்கத்தின் போஷணைக்காக விசேஷமாக உழைத்தனர். அந்த திவ்ய பரம்பரையில் வந்த ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர் பண்டிதர்களை ரக்ஷிப்பதற்காக எடுத்துக் கொண்ட போற்றத்தகுந்த முயற்சியின் விஷயம் இந்த நூலின் 60வது அத்யாயத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீஸுரேந்திரரைப் போலவே பண்டிதர்களின் போஷணைக்காக வெகுவாக உழைத்து நல்ல ஏற்பாடு செய்தவரென்றால் கதாநாயகரான விஜயீந்திர தீர்த்தர் மற்றும் அவருடைய சிஷ்ய, ப்ரசிஷ்ய பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர், ஸ்ரீமந்த்ராலய ப்ரபு, ஸ்ரீஸுமதீந்திர தீர்த்தர் முதலான மஹான்களே கதாநாயகரான ஸ்ரீவிஜயீந்திர யதி வரேண்யர் வைதிக வித்யாப்ரசார, பண்டிதர் கூட்டத்தினரின் ரக்ஷணை போஷணைகளுக்காகச் செய்த மஹத்காரியத்தைப் பற்றி வர்ணிக்கும் ஒரு மஹத்தான ஒரு சந்தர்ப்பத்தை இந்த அத்யாயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலிவாஹன சக ஆண்டு 1502வது விக்ரம வருஷத்தின் கார்த்திக சுக்ல பௌர்ணமி (22-10-1580) சனிக்கிழமையன்று சந்திர க்ரஹணமானபடியினால் கும்பகோணத்திலுள்ள காவேரி நதி தீரத்திலுள்ள ஸ்ரீமடத்தின் "புராணமண்டப"த்தில் விஜயீந்திர தீர்த்தரின் வர குமாரரரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருடன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஜபதபானுஷ்டானத்தில் ஆழ்ந்திருக்கின்றார். சந்திர க்ரஹணமாதலால் மஹாராணி ஸ்ரீமூர்த்தாம்பாள் புத்ர பௌத்திரர்களுடன் தஞ்சாவூரதிபதி ஸ்ரீசவ்வப்ப நாயகர் கும்பகோணத்திற்கு வந்து க்ரஹணமானதால் ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு ஸ்ரீவிஜயீந்திரரின் தரிசனத்திற்காக வந்திருக்கிறான். நவக்ரஹ பூஜை தானாதிகளைச் செய்தபிறகு நாயக பரிவாரத்துடன் வந்து ஸ்ரீயவர்களை நமஸ்கரித்து நின்றான். ஸ்ரீகளவர் சிரித்த முகத்துடன் க்ஷேம லாபங்களை விசாரித்தார். மஹாராஜா ஸ்ரீகளவருக்கு நமஸ்கரித்து விக்ஞாபனம் செய்தான்.

சவ்வப்ப:- குருவர்யரே, முன்பு யுவராஜ அச்யுதப்ப நாயகன் ஸ்ரீஸந்நிதிக்கு அரவிலிமங்கலம் (அச்யுதப்ப சமுத்ரம்) என்னும் கிராமத்தைத் தானம் செய்த ஸந்தர்ப்பத்தில் நமது ராஜ வம்சத்தின் கீர்த்தி கௌரவங்களை நன்றாக ப்ரகாசிக்கச் செய்யும் ஸத்புத்திரன் பிறப்பானென்று யுவராஜனுக்கு வரதானம் செய்தீர்கள். தமது ஆசீர்வாத பலத்தினால் அச்யுதப்ப நாயகனுக்கு ஸத்புத்திரன் பிறந்தான். அந்தக் குழந்தைக்கு தாங்கள் தெரிவித்தபடி ரகுநாத நாயகனென்று பெயர் சூட்டினோம். இவையெல்லாம் குருபாதருக்குத் தெரிந்ததே. தங்களனுக்ரஹத்தினால் பிறந்த குமாரன் ரகுநாதன் மூன்றாவது வருஷத்தில் காலடி வைத்துள்ளான். நமது பௌத்ரன் தங்களது கருணையினால் நல்ல கீர்த்திபெற்று விருத்தியடைய வேண்டுமென விரும்பியுள்ளோம். அதற்காக நான் அர்ப்பிக்கப்போகும் நான்கு கிராம தானத்தை இந்தச் சந்திர க்ரஹண புண்ய காலத்தில் ஏற்றுக் கொண்டு குமார ரகுநாதனை ஆசீர்வதிக்க வேண்டுமெனப் பாதசேவகனின் தாழ்மையான கோரிக்கை என்றான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விஜயீந்திரர்:- (புன்னகையுடன்) ராஜன், நீங்கள் எவ்வளவு தானம் செய்தபோதிலும், சேவை செய்தாலும் த்ருப்தியே அடைய வில்லையெனத் தோன்றுகிறதே? உமது குருபக்தி ஸாதாரணமானதல்ல. மடத்தின் கஜானாவிலுள்ள ரத்னம் மற்றும் தங்க நகைகளும் பணமும் மஹாராஜரின் உதாரகுணத்தைப் பறைசாற்றும் ப்ரத்தியக்ஷமான உதாரணமாகியுள்ளன. இதல்லாமல் வித்யாபீடத்தின் நிர்வாகத்திற்கு நீங்கள் செய்யும் உதவி மற்றும் ஸேவைகளுக்கோ எல்லையே இல்லை! இவ்வளவு செய்தும் திருப்தி யடையவில்லையா அரசே?

சவ்வப்ப:- (வினயமாகத் தலைவணங்கி) மஹா ஸ்வாமி, தாங்கள் என்னைப் புகழுவது எனக்கு வெட்கமாயுள்ளது. நான் தங்கள் பாதஸேவகன். எனது சொத்தெல்லாம் ஸ்ரீ யவர்களின் கருணையினால் கிடைத்தவையல்லவா? எனது எல்லாவித பெருமைக்கும் கீர்த்திக்கும், முன்னேற்றத்திற்கும் குருவர்யரின் ஆசீர்வாதந்தான் காரணம் என்பதை இந்த ராஜ்யம் அறிந்துள்ளது. பாத ஸேவகனான நான் ஏதாவது ஸேவை செய்திருந்தால் அதன் புண்யம் தங்களைச் சார்ந்தது. "ಕೆರೆಯ ನೀರನು ಕೆರೆಗೆಚೆಲ್ಲಿ" (குளத்தின் தண்ணீரைக் குளத்திற்கு அர்க்யம் கொடுப்பது போல) தங்களுடைய பொருளைத் தங்களுக்கே தானம் செய்து தங்களிடமிருந்து வரம்பெற்றுள்ளேன். அவ்வளவுதான்! ஸ்வாமி, கிருபை கூர்ந்து குமாரன் ரகுநாதனின் கீர்த்திக்கும் முன்னேற்றத் திற்கும் தானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

---

(Epigraphica Indica - Vol. XII Mysore Archalogical report 1944 Inscription No 26 P 113)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வி:- அப்படியே ஆகட்டும் அரசே! நமது நிபந்தனைக்கு நீங்கள் சம்மதித்தால் தானத்தை ஏற்றுக்கொள்வோம்!

சவ்வப்ப:- (மகிழ்ச்சியுடன்) ஆக்ஞை, குருதேவா! குமார ரகுநாதன் நம் ஸுதீந்திரரின் சிஷ்யனாக வேண்டும். அவன் எனது சிஷ்யரின் சிஷ்யனாகி சமஸ்கிருத பாஷையில் நிபுண வித்வானாக வேண்டும். காவ்யம், நாடகம், அலங்காரம் முதலிய சாஸ்திரங்களில் உத்தம பண்டிதனெனப் பெயர்பெற வேண்டும், கீர்த்திபெற வேண்டுமென்பதே நமது நோக்கம். பண்டிதனான அரசனே வித்வான்களைப் போஷித்து ரக்ஷிக்க வல்லவனாவான். "विद्वानेव विजानाति विद्वज्जन परिश्रमं ।" இல்லையா மஹாராஜா?

ஸ்ரீயவர்களின் வசனங்களைக் கவனத்துடன் கேட்டு சவ்வப்ப நாயகர், யுவராஜ அச்யுதப்ப நாயகர் மற்றும் ராஜ பரிவாரத்தினருக்குப் பரமானந்தம் உண்டாயிற்று. இளைய ஸ்ரீபாதங்களவரின் சிஷ்யனாகப்போகும் பாக்யம் குமாரனுக்குத் தானாக வந்தடைந்ததினால் அவர் புளகாங்கிதமடைந்தார். அச்யுதப்ப நாயகர் தனது குமாரனை இரு ஸ்ரீபாதங்களவரின் பாதங்களடியில் உட்காரவைத்து, "தன்யனானேன் மஹா ஸ்வாமி! தமது நிபந்தனை நமது வம்சத்தின் மீது ஸ்ரீயவர்களுக்குள்ள அனுக்ரஹத்தைக் காட்டுகிறது என்று உணருகிறோம். உண்மையாக இது குமாரனின் பாக்ய உதயம்" என்று ஆனந்த பாஷ்பம் சொரிந்து விக்ஞாபித்தான்.

விஜயீந்திரர் அழகுமிக்க மூன்று வயதுடைய ரகுநாத குமாரனின் தலைமீது தனது வரத ஹஸ்தத்தை வைத்து ஆசிர்வாதம் செய்து, குமாரனை ஸ்ரீஸுதீந்திரருக்கு அளித்து சிரித்துக்கொண்டு, "உம், அழைத்துக் கொள்ளுங்கள். உமது சிஷ்ய ச்ரேஷ்டனை? இவனுடைய வளர்ச்சி, முன்னேற்றம் இவைகளின் பொறுப்பு உம்மைச் சேர்ந்தது" என்றார். ஸுதீந்திரர் குமாரனின் சிரசின் மீது அபயஹஸ்தம் வைத்து ஆசிர்வதித்து, "குருவர்யரின் ஆணையைச் சிரசாவகிக்கிறோம்" என்று சொன்னார். பிறகு பாருபத்திதாரரை அழைத்து மடத்தின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பொக்கிஷத்திலிருந்து ஒரு முத்து மாலையும் சால்வையும் தரவழைத்துக் குமாரன் கழுத்தில் தானே அணிவித்து, சால்வையைப் போர்த்தி அன்போடு தலையைத் தடவிக்கொடுத்தார்.

விஜயீந்திரர் சிரித்த முகத்துடன் மஹாராஜன் பக்கம் திரும்பி, "பார்த்தீரா, நமது ஸுதீந்திரருக்குச் சிஷ்யனின் மீது இப்பொழுதே எவ்வளவு அன்புள்ளது" எனவும் சவ்வப்பநாயகர் மகிழ்ச்சியுடன், "உண்மை தான்; மஹாஸ்வாமி, இளைய ஸ்ரீபாதங்களவர் குமாரனை இப்பொழுதே சந்தித்து கௌரவித்தது வருங்காலத்தை முன்னுரைத்த குருவர்யரின் வாக்கு ஸத்யமாகப் போகிறது என்பதைத் தெரிவிக்கிறது. இரண்டு ஸ்வாமிகளுடைய கிருபைக்குப் பாத்திரனான ரகுநாதன் உண்மையிலேயே பாக்யசாலி" என்று தழுதழுத்த குரலில் விக்ஞாபித்தான்.

பிறகு ராஜ புரோஹிதர் சொன்ன பிரகாரம் ஸங்கல்பம் சொல்லி ராணி மூர்த்தாம்பாவுடன் கூடிக்கொண்டு 1) கோட்டூர் 2) குள்ளூர் 3) பல்ல 4) ரகுபகட்டே என்னும் செழிப்பான நான்கு கிராமங்களைத் தாரைவார்த்து ஸ்ரீயவர்களுக்குத் தானம் செய்து தாமிர சாஸனத்தையும் பத்தாயிரம் தங்க நாணயங்களுடன் ஸமர்ப்பணம் செய்து நமஸ்கரித்தனர்.*

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் சவ்வப்ப நாயகர் அளித்த நான்கு கிராமங்களில் கோட்டூரு க்ராமத்தை பத்துப்பதினைந்து ந்யாய வேதாந்த சாஸ்திர கோவிதரான பண்டிதர்களுக்கு ஒவ்வொரு ஆயிரம் தங்க நாணயங்களுடன் வ்ருத்தி கல்பன பூர்வகமாக (தொழில் ஏற்படுத்திக் கொடுத்து) தானம் செய்தார். ஸ்ரீபாதங்களவரின் வித்யா போஷணையின் தீக்ஷை, உதார குணங்களை ஜனங்கள் பாராட்டினர்.

தஞ்சாவூரரசன் சிரித்த முகத்துடனே, "குருதேவா! சற்று நேரத்திற்கு முன் நான் நல்ல உதார குணமுள்ளவன், தான சீலனென்று என்னைப் புகழ்ந்தீர்கள். ஆனால் ஸ்வாமி தங்களுடைய உதாரகுணம், முதலிய நற்குணங்களைக் கண்டு நான் எவ்வளவு அற்பன் எனும்

* Epigraphica Indica - Vol XII No. 26.
Mysore Archological Report - 1944 Inscription P. 113

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

உணர்வு என்னில் உண்டாகிறது. பண்டிதரின் ஸம்ரக்ஷணை போஷணைகளில் தங்களுக்குள்ள அன்பு, தீக்ஷைகள்; (வ்ரதங்கள்) இவைகளைக் கண்டு வாய் பேச முடியாதவனாக இருக்கின்றேன். தங்களைப் போன்ற குருபாதரைப் பெற்றுள்ள நானே தன்யன்!'' என்று புகழ்ந்தான்.

விஜயீந்திர குருவர்யர், "அரசே, வைதிக வித்யா ப்ரசாரம், பண்டிதர்களைப் போஷித்துக்காப்பது, அவர்களைக் கௌரவிப்பதே நமது மஹா ஸமஸ்தானத்தின் முக்கிய லக்ஷியம் அதை நாம் நடத்த உதவி செய்யாவிடில் கடமையைப் புறக்கணித்தவர் களாவோம். குருபாதரான ஸ்ரீசந்திரிகா க்ருத்பாதரும் மற்றும் குருச்ரேஷ்டரான மூத்த ஸ்ரீபாதங்களும் நமக்கு ஆக்ஞாபித்திருப்பது சிலவற்றை மாத்திரமே அகாதமாயுள்ளது. நாம் இப்பொழுது நிறைவேற்றியிருப்பது. நம் முன்னோர்கள் கடுமையாக உழைத்து வளர்த்து வந்துள்ள அமர பாஷை, வைதிக வித்யா, ஆயிரக்கணக்கான வருடங்கள் மேலும் வளர்ந்து முன்னேற்றமடைந்து தேசத்தின் ஜனங்களின் ஐஹிக ஆமுஷ்மிக முன்னேற்றத்திற்குச் சாதனமாக வேண்டியுள்ளது. ஜனங்களின் கல்வியின் தரம் உயர்ந்து வெகுகாலம் வரை நமது சாஸ்திரங்கள் வாழ வேண்டியிருக்கின்றன. அதை அமலாக்கும் தீரர்கள் நமது பண்டிதர்கள். வைதிக வித்யாவையும், பாட ப்ரவசனாதிகளின் மூலம் கீர்த்தியடைந்து வருங்காலத் தலைமுறைக்கு உதவும் பண்டிதர் சுகத்துடனும் ஸந்தோஷத்துடனிருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை வசதியுள்ளதாக அமைய வேண்டும். அவ்வாறு அமைந்தால்தான் இந்தப் புனிதமான கார்யத்தை அவர்கள் நிர்வாகம் செய்ய முடியும். இன்றைக்கென்னமோ உம்மைப் போன்ற உதாரகுணம் படைத்தவரும், பண்டிதர்களை ஆதரிப்பவர்களாகவுள்ள அரசர்களுடைய அடைக்கலம் அவர்களுக்குக் கிடைத்துள்ளது, உண்மை. ஆனால் வருங்கால நிலைமையை நினைத்தால் தேஹம் நடுங்குகிறது. பரமாத்மாவின் விருப்பத்திற்கு எதிராக எவரும் நடக்க முடியாது. ஆயினும் நமது கடமையைச் செய்யத்தான் வேண்டுமல்லவா? வருங்காலத்தைக் கவனத்தில் வைத்துக்கொண்டு நாம் இன்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

எச்சரிக்கையுடன் நல்ல நிகழ்ச்சிகள் நடத்தத் திட்டம் போடவேண்டும். அது குருபீடத்தின் பொறுப்பும் ஆகும். நமது கடமையை நிறைவேற்றுவதில் நீயும் ஒருவகையில் பங்கேற்று உதவிசெய்துள்ளாய். பண்டிதர்களின் போஷணையின் இந்த உத்தம காரியத்தின் பலன் உனக்கும் சேரும்" என்று உபதேசித்தருளினார்.

சவ்வப்ப:- (கைகூப்பி) தன்யனானேன் குருதேவா, தமது பண்டித பராமரிப்பு முறையைக் கண்டு ஸ்ரீயவர்கள் எனக்கு ஒப்புவித்த மற்றொரு விஷயம் நினைவிற்கு வந்தது ஸ்வாமி. முன்பு அச்யுதப்ப நாயகர் தமக்குத் தானம் செய்த அச்யுதப்ப ஸமுத்திரம் (அரவிலி மங்கலம்) கிராமத்தை நிரந்தரமாக நடத்திக்கொடுக்க வேண்டுமென்று நான் சக்ரவர்த்தி ஸ்ரீரங்கராயரை வேண்டிக்கொண்ட சமயம் ஸார்வபௌமர் தங்களைப் பெனு கொண்டாவிற்கு அழைத்து வந்து ஸ்ரீசகா 1499வது தாது வருஷத்திய ஆஷ — சுக்ல த்வாதசி, திங்கட் கிழமையன்று (1577 A.D.) அந்தக் கிராமத்தையே மற்றொரு முறைதானே *தமக்குத்தானம் செய்த

---

(i) Inscriptions of Madras Presidency.
(ii) Mysore Arch. report - 1994.
(iii) The Aravidu Dynasty of Vijayanagaram.

"In 1574. at the request of Sevvappa Naika, Ranga I granted the village of Arivilimangalam to Madhwa Guru Vijayindra Tirtha. The grant had been made by Prince Achyuta, but now the formal sanction from Vijayanagara Emperor was obtained - Page 287 (iv) தாமிர சாஸனத்தின் முக்கிய பாகம் மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. " ஸ்ரீராஜாதிராஜ தேஜஸ்வி ஸ்ரீராஜபரமேச்வர ..... सोऽयं श्रीरंगराज क्षितिपति तिलको रत्नसिंहासनस्थः कीर्त्या नीत्या निरस्यन् नृगनग नहुषानप्यनन्या मयान्यान् । असेतोरासु मेरोरवनिसुरनिवः स्वैरमाचो दांदे रायं चाल्यौ चलंवादखिल हृदय मावर्जयराज्यं प्रशास्ति ॥ तस्नग हयपोवीन्दुगणिते शकवत्सरे धातु संवत्सरे मासे चा षाढनामनि । सोमवारेष्यनुराधा तारकसंयुते दिने ॥ शुक्ल पक्षेच पुण्यायां प्रथमा द्वादशी तिथौ । पेनु (क्ल) कुण्डा (दे) श रामचन्द्रस्य सन्निधौ ॥ पदवाक्यप्रमाणज्ञ शेमुषी जितवादिने । मध्वाचार्यमतो ध्यान संधरतर वर्हिणे । श्रीरामचंददेवस्य दिव्य श्रीपादसेवने ॥ सर्वशास्त्र प्रसूनार्थ सौरभ्य सरसक्षिने । मायावादि मतच्छेद कोलहल मरोक्तये । सुरेन्द्रतीर्थ श्रीपादहस्त पद्मसुजन्मने । विजयीन्द्र सुतीर्थाय विष्णु पर्याय मूर्तये ॥ चोळमंडल राज्यस्थं कावेर्यादक्षिणेस्थितं..... खयातारुमोलि मंगळग्रामस्य प्रति नामकं । अच्युतप्प समुद्राख्यं षष्ठिवृत्ति मिरन्वितं । कुमाराच्युत भूपेन दत्तपूर्वं विशेषतः । आचंद्रार्कमिमंग्रामं विदित्सवः । वीर श्री चवपभूपस्य विज्ञप्तिमनुपालयन् ।.....

श्रीरंगराय देवेंद्रः श्री धनेशोमहायशाः । सहिरण्य पयोधारा पूर्वकं दत्तवान् मुदा । प्रतिगृह्य च तं ग्रामं विजयीन्द्रो द्विजेन्द्र (राट्) सास । तयथादस्वस्य च पुण्याय चेव्वप्पाच्युत भूपेन्द्रयोः वृत मन्त्रोत्र लिखयंते विप्रा वेदांतपारागाः । अप्पल भट्टस्य स्वतः शाडिल्यान्वय संभवः । सोमभट्टो वह वृतश्च वृत्तित्रय मिकरनुवो ॥

Epigraphica Indica Vol. XII p.358.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பொழுது, தாங்கள் அந்தக் கிராமத்தை வித்வான்களுக்குத் தானம் செய்ய விரும்பியபொழுது சக்ரவர்த்தி அதன்படியே தாமிர சாஸனத்தை எழுதிக்கொடுத்த விஷயம்.

ஸந்நிதிக்கு தெரிந்துள்ளதே. அந்த ஸந்தர்ப்பத்தில் 60 தொழில்களுள்ள அந்த கிராமத்தை 23 பாகங்களாகப் பிரித்து உத்தம க்ருஹங்களுடன் கூடிய அக்ரஹாரத்தை நிர்மாணம் செய்யும் காரியத்தை எனக்கு ஒப்புவிக்கப்பட்டது. ஸ்ரீகளவர்களின் அனுக்ரஹத்தினால் அந்தக் காரியங்களெல்லாம் இப்பொழுது முடிந்து விட்டன. குருபாதர் எப்பொழுது வேண்டுமானாலும் கிராம அக்ரஹாரங்களை ப்பண்டிதர்களுக்கு ஒப்புவிக்கலாம் என்ற செய்தியை ஸந்நிதானத்தில் அறிவிக்க ஆனந்தப்படுகிறேன்.

மஹாராஜரின் பேச்சைக்கேட்டு -விஜயீந்திரருக்கும் பரமாநந்தமாயிற்று. தமது ஆணையைச் சிரத்தையுடன் நிறைவேற்றிய நாயகனை மனப்பூர்வமாகப் பாராட்டி கார்த்திக க்ருஷ்ண பஞ்சமி தினத்தன்று அச்யுதப்ப ஸமுத்ரத்திற்குத்தான் விஜயம் செய்வதாயும் அக்ரஹாரத் தொழில் ஒப்புவிக்க ஸகல ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று அன்று யுவ்ராஜரை அவசியம் அனுப்ப வேண்டுமென்று ஆக்ஞாபித்தார். தஞ்சாவூர் அரசன் ஸ்ரீயவர்களின் ஆணைப்படியே எல்லா ஏற்பாடுகளும் செய்வதாக விக்ஞாபித்து விடைபெற்றுச் சென்றான்.

விக்ரம ஆண்டின் கார்த்திக க்ருஷ்ண பஞ்சமி குருவாரம் அச்யுதப்ப ஸமுத்திரம் (அரவிலிமங்கலம்) கிராமத்தில் பெரிய வைபவம் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் சிறிய பரிவாரத்துடன் 23 ஜன பண்டிதர்களுக்கு அக்ரஹார-வ்ருத்தி தானம் காரியத்தை அமல்படுத்துவதற்கு எழுந்தருளியுள்ளார். தஞ்சாவூரின் யுவராஜா அச்யுதப்ப நாயகர் சிறிய ராஜ பரிவாரத்துடன் வந்து எல்லா ஏற்பாடுகளையும் கௌட குல வேலையாட்களைக் கொண்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான். 23 அழகான முற்றங்களுடன் கூடிய வீடுகள் மாவிலைத் தோரணங்களினால் அலங்கரிக் கப்பட்டுள்ளன. வைதீகர்கள் க்ரஹப்ரேவேசாங்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மானவாஸ்து ஹோமம், புண்யாஹவாசனம் முதலிய வைதிக விதிகளை நிறைவேற்றின பிறகு மங்கள வாத்யங்கள் முழங்க ஸ்ரீகளவரே தானே பங்கேற்று 23 ஜன பண்டிதர்களின் க்ருஹப்ரவேச மகோற்சவத்தை நிறைவேற்றி பட்டு, பீதாம்பரம், சால்வைகள், பத்ரம், பழம் புஷ்பங்கள் தக்ஷிணைகளுடன் ஒவ்வொரு பண்டிதருக்கும் ஸங்கல்ப பூர்வகமாக தொழில் மற்றும் க்ருஹதான பத்திரத்தையும் அனுக்ரஹித்தார். பண்டிதர்களின் மகிழ்ச்சிக்கோர் எல்லையேயில்லை. ஸ்ரீயவர்கள் அச்யுதப்ப நாயகனின் வித்யா கலைக்குத் தரும் ஆதரவையும், உதார குணத்தையும் கொண்டாடித் தனது நன்றியைத் தெரிவித்தார். ஸ்ரீயவர்கள் அந்த ஸந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு, ''பண்டிதர்கள் தேசத்தின் கண்களைப் போன்றவர்கள். அவர்கள் பாரத நாட்டின் மேன்மையான பரம்பரை, வைதிக வித்யா, தர்ம-கலாசாரங்களின் அடையாளங்கள். அவருடைய வாழ்க்கைப் பாதையை எளிதாக்குவது அரச தர்மம், பீடாதிபதிகளின் கடமை. நமது கடமையை நிறைவேற்ற ஸ்ரீஹரி வாயுகளின் அனுக்ரஹம் கிடைத்ததற்கு நமக்குப் பரம ஸந்தோஷமாகியுள்ளது. இப்பொழுது பண்டிதர்கள் மீது மாபெரும் பொறுப்பைச் சுமத்தியுள்ளோம். வேத சாஸ்திரங்கள் க்ஷீணமடையாமல் பாடப்ரவசனத்தில் கவனமும் ஆர்வமும் செலுத்தி பண்டிதர்கள் வைதிக வித்யாவை வளர்த்துக் கொண்டு போவதற்குத் திறமை சாமர்த்தியமுள்ள பண்டிதர்களைத் தயார் செய்ய வேண்டும். இந்த ஒரு காரியத்தை விட உத்தமமானது வேறு எதுவுமில்லை. நம் பண்டிதர்கள் தங்களது கடமையில் எச்சரிக்கையுடனிருந்து அந்தக் காரியத்தில் அவர்கள் கீர்த்தியடைவார்களென்னும் நம்பிக்கை நமக்குண்டு. ஸகலருக்கும் ஸ்ரீமூலராமப்ரபு மங்களமுண்டாக்கட்டும்'' என்பதாக உபதேச உரை நிகழ்த்தி ஸகலருக்கும் பல மந்திராக்ஷதையருளினார்.

அன்று மூலராமசந்திரரின் பூஜாராதனை, தீர்த்தப்ரஸாதம் ஸந்தர்ப்பணைகளான பிறகு ஸ்ரீபாதங்களவர் அச்யுதப்ப நாயகனுக்கு விடைகொடுத்தனுப்பினார். நான்கைந்து தினங்கள் அரவிலி மங்கலத்தில் தங்கிவிட்டுப், பிறகு ஸ்வாமிகள் கும்பகோணத்திற்கு விஜயம் செய்தார். (தொழில் சம்பந்தமான பட்டியலை அடுத்த பக்கத்தில் காணலாம்)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரினால் அக்ரஹார – வ்ருத்திதானம் பெற்ற த்ரிமதத்தின் பண்டிதரின் விவரம்.

| ந. | தானம்பெற்ற பண்டிதர் | தகப்பனார் பெயர் | கோத்ரம் | சாகை | க்ருஹங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஸோமபட்ட | அப்பலபட்ட | சாண்டில்ய | ரிக் | 3 |
| 2. | கேசவபட்ட | சன்னிபட்ட | விச்வாமித்ர | ரிக் | 3 |
| 3. | வேங்கடபட்ட | லக்ஷ்மணபட்ட | பாரத்வாஜ | யஜுர் | 3 |
| 4. | சங்கரநாராயணீந்த்ர | வாரணாசி | அகஸ்த்ய | யஜுர் | 3 |
| 5. | ரங்கநாத | நாராயணபட்ட | கௌசிக | யஜுர் | 3 |
| 6. | ராமபட்ட | அப்பாகுட்டி | நிதர்வகாச்யப | ரிக் | 3 |
| 7. | திருமலபட்ட | ஹொன்னிபட்ட | வசிஷ்ட | ரிக் | 3 |
| 8. | தானப்பய்ய | நரஸணதாஸ | பாரத்வாஜ | ரிக் | 4 |
| 9. | ஹஸ்தகந் திருமலய்ய | எல்லம்பட்ட | பாரத்வாஜ | யஜுர் | 5 |
| 10. | பாகவதம் வெங்கடய்ய | சூர்யநாராயண மர்க்கி | கௌசிக | யஜுர் | 4 |
| 11. | க்ருஷ்ணபட்ட | - | ஹரித்ஸ | யஜுர் | 2 |
| 12. | சத்ரசாஸ்திரி | பெருமள | - | யஜுர் | 2 |
| 13. | ராமயார்ய | நைனார்ய | ஆத்ரேய | யஜுர் | 2 |
| 14. | நைனார்ய | - | - | - | 2 |
| 15. | நரஸம்பட்ட | பின்னநரசய்ய | காமகாயன விச்வாமித்ர | ரிக் | 2 |
| 16. | பாணீச்வர | நரஸம்பட்ட | கௌண்டின்ய | யஜுர் | 2 |
| 17. | சூர்யநாராயணபட்ட | கிணூர் | - | - | 2 |
| 18. | கோனேரி பட்ட | உபாத்யாய | பாரத் | யஜுர் | 2 |
| 19. | ராமதீக்ஷித | - | வாஜ | யஜுர் | 2 |
| 20. | நாஹரி | நாராயணபட்ட | ஹாரீத | யஜுர் | 2 |
| 21. | திருவாயூர் ஸூர்யநாராயண | - | - | - | 2 |
| 22. | ராமண்ணய்ய | ஸரஸ்வத்ய | ஆத்ரேய | யஜுர் | 2 |
| 23. | த்யாகஸமுத்ரம் வெங்கடாத்ரி | | | | 2 |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

## 63. ப்ராரப்தகர்ம போகம்

வைசாக சுக்ல பௌர்ணமி கும்பகோணத்தில் இன்று காவேரி நதி தீரத்தில் எங்கு பார்த்தாலும் ஜனக்கூட்டம். ஆயிரக்கணக்கில் ஜனங்கள் கூடியிருக்கின்றனர். ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர் ப்ரிய சிஷ்யர் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருடன் எல்லாவிருதாவளிகளுடன் வ்யாஸ பூர்ணிமா ஆகையினால் காவேரிக்கு விஜயம் செய்துள்ளனர். அநாயாஸமாக ஸ்ரீபாதங்களவருடன் காவேரியின் மங்களமுண்டுபண்ணும் ஸ்நானம் இரு ஸ்ரீயவர்களின் அம்ருத ஹஸ்தத்தினால் தண்டோதக ப்ரோக்ஷணம்! இப்படிப்பட்ட நல்ல வாய்ப்பை யார்தான் இழப்பார்கள்? அதனால்தான் காவேரி தீரத்தில் இவ்வளவு ஜனத்திரள்!

வெய்யிற் காலமானதால் காவேரி மெலிந்து ப்ரவாஹம் செய்து கொண்டிருக்கிறாள். அதாவது நீரோட்டம் குறைவாக உள்ளது. விசாலமான நதியின் மணல் வெண்மையாக சோபித்துக் கொண்டிருக்கிறது. நதிக்கரையிலுள்ள ஸ்ரீமடத்தின் புராண மண்டபத்தில் ஸ்ரீயவர்களின் பூஜைக்குச் சுத்தப்படுத்தி அலங்கரிக்கப் படுகிறது. வேத பண்டிதர்கள் இனிமையான குரலில் வேதபாராயணம் செய்து கொண்டிருக்கின்றனர். வேத வேதாங்க பாரங்கதர்கள், வித்வான்கள், திறமையுள்ள வேலையாட்களினால் அழகுபெறும் அந்த ப்ராம்மண சமூகத்தை ஒன்றாக ஏககாலத்தில் பார்ப்பதே கண்ணிற்கு ஒரு விருந்தாகும்.

அமைதியான சூழ்நிலை! உஷாகால சமயம். காலை ஜாமத்தின் குளிர்ந்த காற்று லேசாக வீசிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீயவர்கள் ஸாந்நித்ய விசேஷத்தினால் அந்த இடமெல்லாம் புனிதமாயுள்ளது. இரண்டு ஸ்வாமிகளும் காவேரியில் இறங்கினர். எல்லோரும் ஸ்ரீயவர்களைச் சுற்றி நின்றிருக்கின்றனர். விதிப்படி ஸங்கல்பமாயிற்று. தண்டத்தைப்பிடித்து ஸ்ரீயவர்கள் ப்ரார்த்தனை செய்ய ஆரம்பித்தார். ஒரே மனதுடன் எல்லோரும் கைகூப்பி நின்றிருக்கின்றனர். ஸ்ரீயவர்கள் ஹரி நாமஸ்மரணை செய்துகொண்டு நீரில் முழுகினார். "ஸ்ரீமதானந்த தீர்த்த பகவத் பாதாசார்ய கோவிந்தா, கோவிந்த" என்று கோஷித்துக்கொண்டு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


யாவரும் ஸ்நானம் செய்து கொண்டிருக்கின்றனர். எல்லோருக்கும் இரண்டு ஸ்வாமிகளும் தண்டோதக ப்ரோஷணம் செய்து கொண்டிருக்கின்றனர். தூரத்தில் ப்ராம்மணரொருவர் நின்றிருக்கிறார். ஸ்ரீகளவரின் பார்வை அந்தப் பக்கம் திரும்பியது. ஸ்ரீயவரின் முகம் மலர்ந்தது. அங்கு நின்றிருந்த ப்ராம்மணர் வேறுயாருமில்லை. ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர்! ஸ்ரீவிஜயீந்திரர் கைகாண்பித்து அவரை அழைத்தார். தீக்ஷிதர் அருகில் வந்த உடனே சொன்னார்.

விஜ:- ஏன் தீக்ஷிதரே, நமது தண்டோதகம் வேண்டாமா?

தீக்ஷிதர்:- (மெதுவாகப் பக்கத்தில் வந்து) ஸ்ரீயவர்கள் ''ஸர்வ வ்யாபி'' என்று தோன்றுகிறது. எங்கேயோ தூரத்திலிருந்து என்னைக் கண்டுபிடித்து விட்டீரே?

வி.- ''ஸ்ர்வ வ்யாபி'' ஸ்ரீஹரியொருவனே தீக்ஷிதரே! நாம் அவனுடைய தாஸர். உம். தேஜஸ்விகளாத உம்மைத் கண்டுபிடிப்பது ஒரு கஷ்டமா என்ன? உம்மை மறக்க முடியுமா என்ன?

தீக்ஷிதர்:- (சிரித்துக்கொண்டே) ஆமாம், ஆமாம்! என்னைத் தாங்கள் எப்படி மறப்பீர்கள்? ஊஹூம்! முடியவே முடியாது. கையில் தண்டம் பிடித்திருக்கிறல்லவா? அதற்காக!!

வி:- (புன்னகையுடன்) என்ன? தண்டோதகமா? அப்படியானால் தண்டோதகப்ரோக்ஷணம் வேண்டாமா?

தீ:- தண்டோதக ப்ரோக்ஷணமா? அல்லது தண்டப்ரயோகமா? (அடியா?) நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளதென்று நான்கு அடி கொடுக்க யோசித்துள்ளீரா? எப்படி. ஹஹ்ஹ.

வி:- உம். தாங்கள் விரும்பியதைக் கொடுக்க நாம் தயார். எதை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளலாம். ஹஹ்ஹஹ உம்மை அடிப்போமா தீக்ஷிதரே? அடிப்பவர் அழைத்துப் பக்கத்தில் கூப்பிட்டா அடிப்பார்கள்? நீரே சொல்லும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தீ:- (கெட்டியாகக் கைதட்டிக் கொண்டு) அதுதான் ஸ்வாமி உமது விசேஷத்வம்! இப்பொழுது யாரும் கிடைக்கவில்லையென்று தெரிகிறது. அதற்காக என்னைக் கிளறுகின்றீர்களோ? மறுபடியும் மறுபடியும் நான் ஒருவன்தானா உமக்கு அகப்பட்டேன்! மேலும் அடிவாங்கினாலும் பிழைத்திருப்பவன்! ஆகட்டும் உங்கள் கையினால் அடிபெறுவ்தற்குப் பாக்கியம் செய்திருக்க வேண்டும் ஸ்வாமி! தாங்கள் என்ன செய்தாலும் அது என் பார்க்யம். தண்டோதக ப்ரோக்ஷணத்தினால் எனது பாபங்களைப் போக்குவீரா அல்லது தண்டப்ரஹார்ரத்தினால் என் தேகத்தில் அடங்கியுள்ள வித்யா கர்வத்தை பங்கம் செய்வீரோ? ஆகட்டும் ப்ரஹாரம்!' தயாராக உள்ளேன். (கைகூப்பி நின்றார்).

வி:- (மந்தஹாஸத்துடன்) தற்சமயம் தண்டோதக ப்ரோக்ஷணமாகட்டும். பிறகு நீங்கள் விரும்பினால் அதுவும் ஆகட்டும். (தீக்ஷிதருக்கு தண்டோதகப்ரோக்ஷணம் செய்து தண்ணீரிலிருந்து மேலெழுந்து) தீக்ஷிதரே, உமது விசால இதயம், நட்பைக் கண்டே உம்மிடத்தில் நமக்கு இவ்வளவு சொந்தம். நெருங்கிய உறவு, உரிமை. பாருங்கள் தங்களை அடிக்கடி காணாதிருந்தால் நமக்கென்னமோ வெறுப்பாக உள்ளது. (disgust) வாருங்கள், வாருங்கள். எப்படியிருந்தாலும் வ்யாஸ பௌர்ணமி பூஜாதிகளைப் பாருங்கள். ப்ரஸாதம் பெற்றுக் கொண்டு ஶ்ரீவ்யாஸரின் ஶ்ரீமதாசார்யரின் அனுக்ரஹத்திற்குப் பாத்ரராகலாம்!

தீக்ஷிதர் இரண்டு ஸ்வாமிகளுடன் சிரித்துக் கொண்டே போனார். பக்கத்திலிருந்து பண்டிதரொருவர் ஶ்ரீயவர்களும் தீக்ஷிதரும் விநோதமாகவும் நகைச்சுவையுடனும் கூடிய விவாதத்தைக் கேட்டு, ஆச்சர்யத்தினால் தமது பக்கத்திலிருந்த பண்டிதரைக் கேட்டார்! ஆசார்யரே, ஶ்ரீகளவரும் - தீக்ஷிதரும் பரஸ்பரம் விரோதமான தத்வப்ரசாரகர்கள். பரஸ்பர வாத விவாதம் கண்டனம் - மண்டனங்களைச் செய்பவர்கள்! இருந்தாலும் இருவருக்கும் எப்படி இவ்வளவு நெருங்கிய நட்பு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஏற்பட்டது? இது முடியுமா? எனக்கோ அதிக ஆர்வமாக உள்ளது. இவர்களின் நடத்தை. ஆசார்யர் சிரித்துக் கொண்டே சொன்னார். "அதே சாஸ்திரிகளே, இவரிருவரிடமும் உள்ள சிறப்பான அம்சம் தத்வ விஷயம் நடக்கும்பொழுது ஒவ்வொருவரும் புலிகளைப் போலிருப்பார்கள். பிடிவாதமாக வாதிப்பார்கள். இப்படியிருந்தாலும் இருவருக்கும் தத்வத்தில் அபிப்ராய பேதங்களிருந்தாலும் தனிப்பட்ட முறையில் வெறுப்போ த்வேஷம் இவைகளில்லை! அவ்வாறு இருக்க வேண்டுமென்பதே அவர் அபிப்ராயம். அதன்படியே இருவரிடத்திலும் நம்பிக்கை ஏற்பட்டு வந்துள்ளது. இவர்களிருவரும் ஒவ்வொரு சமயம் வேடிக்கையான வாதவிவாதம் செய்வார்கள். அப்பொழுது பார்க்க வேண்டும் வேடிக்கையை. ச்லேஷ, த்வந்த் வார்த்தங்களினால் ரஸமாக நடந்த அந்த வாக்குவாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியாது. ஆசார்யரின் பேச்சைக்கேட்டு அந்தப் பண்டிதர்"*, ஆச்சரியம், அபூர்வம் என்று சொல்லி வியந்தார்.

---

*அநேக ஸந்தர்ப்பங்களில் ஸ்ரீவிஜயீந்திரர் மற்றும் தீக்ஷிதரும் மனோஹர அர்த்தமுள்ள (சாடுச்லோகம்) மூலமாக தங்கள் தங்கள் வித்யா சாமர்த்யத்தை, புத்திசாலித்தனத்தை சமத்காரத்தைக் காண்பித்திருந்தனர். பூர்வார்த்தம் விஜயீந்திரருடையதானால், உத்தரார்த்தம் (முதல் பாதி - இரண்டாவது பாதி) தீக்ஷிதருடையதாயிருக்கும்! தீக்ஷிதர் முதலில் சொன்னால் சுவாமிகள் அடுத்த பாதியைச் சொல்வார். இவ்வாறு எவ்வளவு சாடுச்லோகங்கள் (चाटु श्लोक) மூலம் இருவரும் போட்டியிடுவார்களாம். ஒவ்வொன்றிலும் விஜயீந்திரர் ஜயித்துக் கொண்டிருப்பதைக் கண்டு நிருத்தரர் ஆகிவிடுவாராம் (மௌனமாகி) இவரிருவர்களின் அந்த "சாடுச்லோகங்க்ள்" 400க்கும் மேலிருந்தனவாம் மேலும் 50 வருஷங்களுக்கு முன் வரையிலும் நூற்றுக்கணக்கானவர்கள் அவைகளைச் சொல்லிக் கொண்டிருந்தனரென்று கும்பகோணத்திய சாரங்கபாணி கோவிலின் விருத்தாப்பிய அர்ச்சகரும் நாமும் அதைப்பற்றிக் கேட்டபொழுது (1947ல்) அந்த விஷயத்தைச் சொல்லி ஐந்து ஆறு ச்லோகங்களை மாத்திரம் நமக்கு எழுதிக்கொடுத்தார். அதை இந்த நூலில் சில இடங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளன. பூர்வீகர்கள் அந்த சுலோகங்களை எழுத்து மூலமாக பத்திரப்படுத்தியிருந்தால் தீக்ஷிதரிரைப் பற்றியும் ஸ்ரீயவர்களைப் பற்றியும் அநேக விஷயங்கள் அநேக விஷயங்கள் வெளிப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

-நூலாசிரியர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

இரண்டு ஸ்ரீகளவர்களும் காவி வஸ்திரங்களை அணிந்து ஆன்ஹிகத்திற்கு (காலை அனுஷ்டானம்) உட்கார்ந்தனர். பக்தர் கூட்டம் மற்றும் பண்டிதர்கள் சுற்றிலும் உட்கார்ந்துள்ளனர். ஸ்ரீயவர்களின் எதிரில் தீக்ஷிதர் அமர்ந்திருந்தார். விஜயீந்திரரின் முகம் ஏனோ கம்பீரமாயிற்று. தமக்குத்தாமே பேசிக்கொண்டிருக்கிறார். "ஸ்ரீஹரே, இது உனது ஸங்கல்பமா? ஆகட்டும். உனதிச்சைக்கு விரோதம் செய்வது ஆகக்கூடிய காரியமா என்ன முராரி? ப்ராரப்த கர்மத்தை அனுபவித்தே தீரவேண்டும். தேவா, உனது சித்தத்தின்படி ஆகட்டும். உம், வா ப்ராரப்தமே!" என்றார்.

ஸ்ரீவிஜயீந்திரரின் தேஹம் குளிர் ஜ்வரம் வந்தவரைப்போல் நடுங்க ஆரம்பித்தது. ஸுரேந்திரர், சுற்றிலுமுள்ளவர்களும் மற்றும் தீக்ஷிதரும், ஸ்ரீகளவர் ஏன் இவ்வாறு ஏதேதோ சொல்லுகிறார்? இதன் ரகஸ்யம் என்னவாக இருக்கலாம்? ஏன் இவ்வாறு நடுங்கிக்கொண்டிருக்கின்றார்? என்று ஆச்சரியப்படுகிறார். தீக்ஷிதரால் பொறுக்க முடியவில்லை. கேட்டேவிட்டார்! ஏன் ஸ்ரீகளவர்கள் நடுங்கிக் கொண்டிருக்கின்றீர்கள்? தமக்குத் தாமே ஏதோ ஹரி சித்தம், அனுபவித்தே தீரவேண்டும் என்று சொன்னீர்களே, அதென்ன ஸ்வாமி?

ஸ்ரீகளவர்:- ப்ராரப்தம் தீக்ஷிதரே, ப்ராரப்தம்!!

தீக்ஷிதர்:- ஒன்றும் புரியவில்லையே, ப்ரார்ப்தமா? யாருக்கு? தாங்கள் ஏன் ப்ராரப்தமேவா" என்றீர்கள்?

ஸ்ரீ:- இன்னாருக்கு? எனக்கே!! ப்ராரப்தகர்மம் எதிரில் வந்து நின்றால் இன்னென்ன செய்வேன்? ஸ்ரீஹரி சித்தமென்று அழைத்தேன்.

தீ:- (ஆச்சரியத்துடன்) மன்னிக்க வேண்டும். புரியவில்லை. ஸ்ரீகளவருக்குமா ப்ரார்ப்த கர்மம்? அதுவும் அறுபத்து நான்கு கலா வல்லவரான தமக்கா? ப்ராரப்த கர்மம் வந்து நின்றிருக்கிறது? எந்த உருவத்தில் ஸ்வாமி?

ஸ்ரீ:- (சிரித்து) இதோ இந்த சாதுர்த்திக ஜ்வரரூபமாக! இன்றிலிருந்து இதை அனுபவிக்க வேண்டுமென நமது தலையெழுத்து. ஹரி சித்தம். அனுபவித்தேயாக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வேண்டும். அதனால் அழைத்து அதை ஏற்றுக் கொண்டேன். ஸ்ரீஸுதீந்திரர் பயமடைந்து ஸ்ரீயவரின் சமீபம் வந்து அவர் கையைப்பிடித்துக் கொண்டு, "குருவர்யரே! இதென்ன இவ்வாறு சொல்ல ஆரம்பித்துள்ளீர்கள்? இதற்குப் பரிஹாரமே இல்லையா? நமக்குப் பயமாகவுள்ளது" என்றார். ஸ்ரீவிஜயீந்திரர் சிஷ்யர் முதுகைத் தட்டிக்கொடுத்து, "நீங்கள் ஏன் பயப்பட வேண்டும். இதனால் தொந்தரவு எதுவுமில்லை. அதை அனுபவிக்கத்தான் வேண்டும்" என்றார்.

தீ:- (துக்கத்தினால்) சீச்சீ தங்களைப் போன்ற மஹாத்மாக்கள் கூட ப்ராரப்த கர்மத்தை அனுபவிக்க வேண்டுமோ?

ஸ்ரீ:- யாரானாலென்ன? அது யாரையும் விட்டதல்ல. மகிழ்ச்சியுடன் இதை நான் அனுபவிப்பேன்.

தீ:- என்னமோ மனம் கலவரமடைகிறது துக்கமாயுள்ளது. இதனால் ஸ்ரீயவர்களின் பாடப்ரவசனம் - ப்ரசாரம் முதலிய காரியங்களுக்குத் தொந்தரவாகுமல்லவா? இதற்குப் பரிகாரமே இல்லையோ?

ஸ்ரீ:- (புன்னகையுடன்) இளகிய மனதுடையவரான உமக்கு வ்யாகூலமாவது இயற்கை! கவலை வேண்டாம், தீக்ஷிதரே, நமது எல்லா காரியங்களும் வழக்கம் போல் நடக்கும். அதற்கு எந்த இடையூறும் ஏற்படாது.

தீ:- அப்படி என்றால்....!

ஸ்ரீ:- பாடப்ரவசனம், பூஜாராதனை, வாத விவாதம் முதலியன காலங்களில் இந்த சாதுர்த்திக ஜ்வரம் பாதிக்காது. விட்டுப்போகும். நமது ஓய்வு சமயத்தில் இதை அனுபவிப்போம்!

இவ்வாறு சொல்லி ஸ்ரீகளவர்கள் எழுந்து ஸ்கவஸ்திரத்தைப் பிடித்துச் சற்று நேரம் த்யானித்து பிறகு அதைத் தமது முன்னால் வைத்தார். ஆச்சரியம்! அதிசயம்! ஸ்ரீயவர்களின் கர வஸ்திரம் அல்லாட ஆரம்பித்தது! ஸ்ரீயவர்கள் ஜ்வரத்தைக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கரவஸ்த்ரம் அனுபவிக்கிறது! ஸ்ரீகளவரின் நடுக்கம் ஏன் நின்றுவிட்டது? விஜயீந்திர யதீந்திரர் புன்னகையுடன் நல்ல சித்தத்துடன் ஆஸனத்திலமர்ந்து கண்ணை மூடிக்கொண்டு ப்ரணவ மந்திரத்தை ஜபிக்க ஆரம்பித்தார்!! ஸ்ரீஸுதீந்திரரின் முகத்தில் புன்னகை வர ஆரம்பித்தது. தீக்ஷிதர் இந்த அதிசயத்தைக் கண்டு திடுக்கிட்டார். இதுவும் ஸ்ரீயவர்களின் புதிய அற்புதமென்று அறிந்து ஸ்ரீயவர்களுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து" அற்புதம்! அற்புதம்! என்றார்.

நடுங்கிக் கொண்டிருக்கும் கர வஸ்திரத்தையும், த்யானத்திலாழ்ந்துள்ள சாந்த மூர்த்தியான ஸ்ரீயவர்களின் முகத்தையும் கண் கொட்டாமல் பார்த்து தமது எதிரில் நடந்த இந்த அற்புத மஹிமையால் பரவசராய் ஜனங்கள் ஸ்ரீயவரைப் புகழ ஆரம்பித்தனர்.

ஸ்ரீயவர்கள் தியானத்திலிருந்து விழித்து, பூஜைக்குப் போனார். கர வஸ்த்ரம் நடுங்கிக் கொண்டே இருக்கிறது!! பூஜை முடிந்தது. வ்யாஸ பூஜை முடிந்தது. புராணமான பிறகு எல்லோருக்கும் தீர்த்த ப்ரஸாதம் அருளி ஸ்ரீயவர்கள் எழுந்து நின்று கர வஸ்திரத்தைக் கையில் பிடித்தார். சாதுர்த்தக ஜ்வரம் ஸ்ரீயவர்களைப் பீடித்தது! ஜ்வரத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தாலும் புன்னகையுடன் சிஷ்யருடன் பல்லக்கிலமர்ந்து மடத்திற்கு எழுந்தருளினார்.

## 64. காலச் சக்கரம் சுழன்றது

கிறிஸ்து ஆண்டு 1580லிருந்து 1610 வரையில் சுமார் 30 வருஷ வித்தியாசத்தில் தக்ஷிண பாரதத்தின் அரசியல் க்ஷேத்திரத்திலுண்டான மாபெரும் மாறுதல் கவனிக்கத்தக்க விஷயம். விஜயநகரத்திய கர்னாடக ஸாம்ராஜ்யத்தின் ஏக சக்ராதிபத்தியத்தில் உன்னதியில் பராகாஷ்டத்தை (சிகரத்தை) எட்டியிருந்த தக்ஷிண பாரதம், அதிலும் கன்னட நாடு, ரக்கஸதங்கடி யுத்தத்தின் பலனாக விஜயநகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சின்னாபின்னமடைந்தது. கன்னட ஸாம்ராஜ்யத்தின் படைத்தலைவர்கள், மண்டலாதிபதிகள், ராஜ்யங் களெல்லாம் சுதந்திரமடைந்துவிட்டன. நூற்றுக்கணக்கான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பாளையக்காரர்கள் தங்கள் சிற்றரசுக்களை ஏற்படுத்திக் கொண்டனர் (Chieftains) மதுரை, தஞ்சாவூர், முதலிய மண்டலாதிபதிகள் சேனைத் தலைவர்கள், அரசர்கள் சுதந்திரராக விளங்கினாலும் விஜயநகரத்தின் மேன்மையான பரம்பரையின் சதாசிவ, திருமல, ஸ்ரீரங்கராஜர்களுக்கு நன்மை விரும்புபவர்களோ அல்லது நண்பராகவோ மிஞ்சின சக்ரவர்த்திகளைக் கௌரவத்துடன் கவனித்தனர். சுமார் 1580ல் கோல்கொண்டா சுல்தானுடன் நடந்த யுத்தத்தில் தேசத்துரோகிகளின் சூழ்ச்சியினால் ஸ்ரீரங்கராஜர் கைதியாகி அப்பொழுது நடந்த ஒப்பந்தத்தின்படி கன்னட தேசத்தின் அநேக பாகங்கள் கோல்கொண்டாவின் வசமாயின. தலைநகரமாயிருந்த பெனுகொண்டாவின் சில பாகங்களை யவனர்கள் கபளீகரம் செய்தனர். கோல்கொண்டாவின் வசமான பாகத்தை மறுபடியும் ஜயிக்க வேண்டும் என்ற கவலையினால் சுமார் 1586ல் ஸ்ரீரங்கராஜர் சகோதரரான ஸ்ரீராமராயர் மரணமடைந்ததினாலும், அவருடைய பிள்ளைகளிருவரும் (3வது ஸ்ரீரங்கராஜர், 2வது வெங்கடபதி) பாலகர்களாயிருந்ததினால் எல்லோருடைய அபிப்ராயப்படி வீர வெங்கடபதி மஹாராஜர் கன்னட ஸாம்ராஜ்ய சிம்மாசனமேறித் தலைநகரைப் பெனுகொண்டாவிலிருந்து சந்திரகிரிக்கும் பிறகு ஸ்ரீவேலூருக்கும் மாற்றி ராஜ்ய பாரம் செய்யத் தொடங்கினார். வெங்கடபதிராயரின் கடைசிக் காலத்தில் சுமார் 1610-12ல் மைசூரின் ராஜ ஒடெயர் ஸ்வதந்திரமடைந்து தானே கன்னட சக்ரவர்த்தியென்று கோஷித்தார்.

ஸ்ரீவீரவெங்கடபதி மஹாராஜர் ப்ரபல பராக்ரமசாலியும் ராஜ தந்திரி நிபுணர், மேலும் ஜனங்களின் அன்புக்குப் பாத்திரரான படியினால் வித்யாவிற்கு ஆதரவாளராகவுமிருந்தார். அவர் காலத்தில் கன்னட ஸாம்ராஜ்யம் தக்ஷிண பாரத முழுவதும் பிரக்யாதி பெற்றிருந்தது. பண்டிதர்கள், கவிகள், ஸங்கீத வித்வான்கள், கலைஞர்கள் மேலும் மத பீடாதிபதிகளுக்கும் கல்ப விருக்ஷம் போலிருந்தார். அவரது உதாரகுணம் வித்யா ஆதரவு முதலிய நற்குணங்கள் உலகம் போற்றும்படியாக இருந்தன. சக்ரவர்த்தி அச்யுதராயரின் அனுக்ரஹத்தினால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ராஜ்ய ஸ்தாபனம் செய்து சுதந்திரமாக இருந்தாலும் கன்னட ஸாம்ராஜ்யத்திற்கு அதீனராயிருந்த தஞ்சாவூரின் செவ்வப்ப, சின்ன செவ்வப்ப, அச்யுதப்ப, ரகுநாத நாயகர்கள் கடைசி வரை எஜமான பக்தியுடனிருந்தது. வரலாற்றுச் சிறப்புமிகுந்ததாயிருந்தது. கதாநாயகரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் மற்றும் அவரது பட்ட சிஷ்யரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரைத் தங்களை உய்விக்க வந்த குருவர்யரென்று கருதி நம்பி அவருடைய நல்லுபதேசத்தின்படி நடந்து எல்லாவிதங்களிலும் அபிவிருத்தியடைந்த தஞ்சாவூரின் நாயகர்கள் ஸ்ரீவிஜயீந்திர ஸுதீந்திர தீர்த்தர்களினால் ப்ரேரிக்கப் பட்டவராய் சக்ரவர்த்தி வெங்கடபதிராயரைப் போலவே தங்களது ராஜசபையில் பண்டிதர்கள், கவிகள், சங்கீத கலைஞர்கள் முதலான கலைஞர்களுக்கும் மற்றும் மதகுரு பீடாதிபதிகளுக்கும் உதார குணத்துடன் இடம் கொடுத்து ரக்ஷித்தார். அதனால் புகழும் அடைந்தார்.

30 வருடங்களிடைவெளியில் தஞ்சாவூர் ராஜ்யத்திலும் நடந்த அநேக சம்பவங்கள் இந்தக் கதையுடன் சம்பந்தப்பட்டவைகளாயிருப்பதால் அவைகளை இங்கு விவரிப்பது உசிதமானது.

தஞ்சாவூரின் நாயக ராஜ்ய ஸ்தாபகரான சவ்வப்ப நாயகர் வயதானவராகிவிட்டபடியால் ராஜ்யாதிகாரம் ராஜகுமாரன் அச்யுதப்ப நாயகருக்கு ஒப்பித்து சகோதர சின்ன சவ்வப்பனைக்கு மன்னார்குடி ப்ராந்தத்தின் ராஜ்யாதிபதியாக்கி கும்பகோணத்தில் ஸ்வகுரு ஸ்ரீவிஜயீந்திர ஸுதீந்திர தீர்த்தரின் புனிதமான ஸந்நிதானத்தில் அத்யாத்ம சிந்தனையில் காலங்கழித்துக் *கொண்டிருந்தான். சில காலத்திற்குப் பிறகு ஸ்வர்க்கவாஸியானான். ராஜகுமாரன் அச்யுதப்ப நாயகன் சிம்மாஸனமேறி தர்ம நெறியைப் பின்பற்றி அரசாட்சி செய்யத் தொடங்கினான்.

அச்யுதப்ப நாயகனின் மகனான ரகுநாதநாயகன் தந்தை மற்றும் சிறிய தாத்தா சின்ன சவ்வப்ப நாயகரின் மேற்பார்வையில் யுத்த கலை, அரசியல் தந்திரம் முதலிய

---

Aravidu dynasty of Vijayanagaram.
"सोयं चव्वप्प भूपालः दत्वानुजाय वै ॥ कुंभकोणेस्वयं राजावासं चक्रे तपश्चरन् ॥"
Mysore Arch Report - 1944 P.121

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


எல்லா விஷயங்களிலும் நிபுணனாகத் தொடங்கினான். பால்யத்திலேயே புத்திக்கூர்மையுள்ள ரகுநாத நாயகன் ஸமஸ்கிருதம், கன்னடம், ஆந்திர பாஷைகளில் நல்ல தேர்ச்சி பெற்று சுமார் 8-10 வருஷகாலங்களில் குரு ஸுதீந்திரரின் அனுக்ரஹத்தினால் காவியம், நாடகம், அலங்காரம் முதலிய சாஸ்திரங்களிலும், தர்க்க-வ்யாகரணம் முதலிய சாஸ்திரங்களிலும் நல்ல தேர்ச்சிபெற்றுப் பாண்டித்யமும் அடைந்து குருவர்யருக்குக் கீர்த்தி உண்டாக்கும் சிஷ்யனாக ஆனான். ஸ்ரீஸுதீந்திரரின் காவ்யரசனா சக்தியின் திறமைகள் ரகுநாதனிலும் குடிகொண்டன. இதைப்போலவே வீணை திம்மண்ண பட்டர் முதலிய கியாதிபெற்ற சங்கீத சாஸ்திர கோவிதரின் அனுக்ரஹத்தினால் ரகுநாத நாயகன் ஸங்கீத சாஸ்திரத்தில் அபார பாண்டித்யத்தைப் பெற்றான். ரகுநாத நாயகன் காவ்யமியற்றும் திறமை அவனுடைய 16வது வயதிலேயே வெளிப்பட்ட சந்தர்ப்பம் மனோஹரமாயுள்ளது.

ஸ்ரீஸுதீந்திரரிடம் குருகுல வாஸத்தை முடித்து சில நாட்களிலேயே ராஜ சபையில் நடந்த கவிதைப் போட்டியில் பங்கேற்ற ராஜகுமாரன் ரகுநாத நாயகன் நான்கைந்து மணிநேரத்தில், "பாரிஜாதஹரணம்" என்ற சிறிய காவ்யத்தையே இயற்றிப் பண்டிதர்களை ப்ரமிக்கச் செய்தான். போட்டியில் பங்கு கொண்ட பத்துப் பன்னிரண்டு யுவ கவிகளின் க்ருதிகளைப் பரிசீலித்த நடுவர்கள் ரகுநாதனின் க்ருதியே உத்தமமானதென்று தீர்ப்புக் கூறினர். அச்யுதப்ப நாயகருக்கு மகனின் இந்த காவ்யரசனா திறமையினால் பரமானந்தமுண்டாயிற்று. சபையோர் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் சிஷ்யனின் ப்ரகாண்ட வித்வத்தைக் கண்டு மகிழ்ந்து, "ஸ்ரீவிஜயீந்திர குருவர்யரின் பவிஷ்யவாணி ஸத்யமாயிற்றென்று" கோஷித்தனர். ரகுநாத நாயகன் காவியப்போட்டியில் வெற்றி வாகை சூடிய விஷயம் அறிந்து ஸ்ரீஸுதீந்திரர் ஆனந்தமடைந்தார்.

1594ம் வருடம் மத்தியிலேயே அச்யுதப்ப நாயகர் காலமாகிவிட்டபடியினால் சின்ன சவ்வப்ப நாயகர் சிலகாலம் ராஜ்ய பாரத்தை நிர்வகித்துப் பிறகு ஸ்ரீவிஜயீந்திர-ஸுதீந்திர தீர்த்தரின் ஆணையின்படி 18 வயதான ரகுநாத நாயகனை தஞ்சாவூரின் ராஜ்ய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிம்மாஸனத்தில் அமரச் செய்து பட்டாபிஷேகத்தை நல்ல முறையில் வைபவத்துடன், சாம்ராஜ்ய ப்ரதிநிதி மற்றும் மித்திர ராஜரின் முன்னிலையில் நிறைவேற்றினான் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் தம்முடைய ஸாந்நித்யத்தினால் உத்ஸவத்திற்கு விசேஷப் பெருமையளித்து நல்லுபதேசங்களினால் ரகுநாத பூபாலனை ஆசிர்வதித்தார். ரகுநாத பூபாலனின் வேண்டுகோளின்படி அவனது ஆட்சியில் ராஜகுருவாக இருந்து ராஜ்யத்தின் எல்லாத்துறைகளின் முன்னேற்றத்திற்காகத் தமது தவத்தை அர்ப்பணிப்பதாக அபயமளித்தார். வாலிபனான ரகுநாத பூபாலன் சில வருஷங்களிலேயே சின்ன செவ்வப்ப நாயகனின் நிரந்தரமான முயற்சியினால் வீரனாகவும், யுத்தக்கலை, நியாயத்துறை, அரசியல் தந்திரங்களில் அனுபவம் பெற்றுத் திறமைபடைத்துப் பிற நாட்டரசர்களுக்குப் பயம் ஏற்படும்படி தேசத்தின் முன்னேற்றத்தைச் சாதித்து, ப்ரஜைகளின் அன்புக்குப் பாத்திரனாய் பிறருக்கு எடுத்துக்காட்டாகு (Ideal King) க்யாதியடைந்தான்.

ரகுநாத பூபாலன் வீரபராக்ரமசாலியாகவும் எதிரிகளுக்குப் பயத்தை உண்டாக்குபவனாக இருந்ததைப் போல கன்னட ஸாம்ராஜ்யத்தின் உண்மையான நண்பனாகவும், அதன் நன்மையில் அக்கரை கொண்டவனாகவும் மிருந்தான் என்பதற்கு அநேக சம்பவங்கள் இன்று வெளிப்படுகின்றன.

போர்ச்சுக்கீசியரின் சூழ்ச்சியிலகப்பட்ட நேபாள ராஜா ரகுநாத பூபாலனின் உதவியை நாடினபொழுது அவனது விருப்பப்படி சேனையுடன் புறப்பட்டு ரகுநாதபூபாலன் யுத்தத்தில் போர்ச்சுகீஸியரை முறியடித்து மறுபடியும் அவர்கள் தலைதூக்காத வகையில் துரத்தி "ஜாப்னா" யாழ்ப்பாணத் தீவை நேபாள ராஜாவிற்கு மீட்டுக்கொடுத்து அந்த அரசாங்கத்திற்குக் கீழ் செயல்படும்படிசெய்து "விஜயவிக்ராந்தன்" என்னும் விருதைப் பெற்றான்.

பிற்காலத்தில் கன்னட நாட்டுச் சக்ரவர்த்தியாயிருந்த வெங்கடபதி மஹாராஜா ஸ்வர்க ப்ராப்தியடைந்த பிறகு உண்மையான உரிமையாளரான இம்மடி ஸ்ரீரங்கராஜரை ஸாம்ராஜ்ய சிம்மாஸனத்திலமர்த்துவதற்கு லக்ஷ்மண

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நாயகன் போராடிக் கொண்டிருக்கையில் ப்ரபலமாக இருந்த ஜகராயன் முதலியவர்களுடன் யுத்தம் செய்ய வேண்டி ஏற்பட்ட ஸந்தர்ப்பத்தில் இம்மிடி ஸ்ரீரங்கனின் ரக்ஷணையின் பொறுப்பை ஏற்று அவனைத் தனது தலைநகரில் கௌரவத்துடன் காப்பாற்றினதல்லாமல் ஸகல சேனையுடன் எஜமான பக்தன்ான லக்ஷ்மண நாயகனுக்கு (எச்சம நாயகன்)த்தோளோடு தோள் கொடுத்து நின்று யுத்தம் செய்து வஞ்சகர்களை நிர்மூலம் செய்து இம்மிடி ஸ்ரீரங்கராயனைச் சிம்மாஸனத்தில மர்த்திப் பட்டாபிஷேகம் செய்வித்தான். மேற்சொன்ன இரண்டு எடுத்துக்காட்டுகள் ரகுநாதனின் பராக்ரமத்திற்கு எஜமான பக்திக்கும் உத்தமமான உதாரணங்களாகும்.

ரகுநாத பூபாலன் ஸமஸ்கிருத கன்னட ஆந்திர பாஷைகளில், தர்க்க வ்யாகரண - ஸாஹித்ய சாஸ்திரத்தில் உத்தம வித்வானாக இருந்ததைப் போல் அஷ்டாவதான - சதாவதான வித்தைகளிலும் திறமையுள்ளவனாயிருந்தான். ஸ்ரீஸுதீந்திரரைப் போன்ற "வித்யாசக்ரவர்த்தி"களின் சிஷ்யனான ரகுநாத பூபாலனின் பாண்டித்யம் தக்ஷிணதேசத்தில் இல்லங்கள்தோறும் பரவியிருந்தது. அவன் இயற்றிய அநேக ஸமஸ்கிருத, கன்னட, ஆந்திரக் கட்டுரைகள் (Essays) அவனது பாண்டித்யத்திற்கு அமர சாக்ஷிகளாகவுள்ளன. அவன் எழுதிய ஆந்திர க்ரந்தங்களில் ராமாயணம் மிகப் பிரசித்தமாக உள்ளது. அதனைப்படித்து ரஸித்தானந்தித்த மதுரவாணி என்னும் ஸமஸ்கிருத கவயித்ரி (பெண்கவி) அதை ஸமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தாள். நாயகரின் அற்புத நற்குணங்களினால் பிரேரிக்கப்பட்டு ராமபத்ராம்பா என்னும் சமஸ்கிருத கவயித்ரி, "ரகுநாதப்யுதய" (रघुनाथाभ्युदय) என்னும் நூலை இயற்றி ஸமஸ்கிருத பண்டித சமூகத்தினரின் புகழுக்குப் பாத்திரரானதல்லாமல் ராஜனினாலும் கௌரவிக்கப் பட்டாள். ஆஸ்தானத்தின் ப்ரஸித்த கவியான க்ருஷ்ணயஜ்வ (க்ருஷ்ணாத்வரீ) கவி "रघुनाथ भूपालियु" (ரகுநாத பூபாலி என்னும் ஆஸ்தான அலங்கார க்ரந்தத்தை எழுதினார். அது பின்பு ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் "ஸாஹித்ய

---

ரகுநாத பூபாலன் இயற்றிய பலக்ரந்தங்களில் 10-12 க்ரந்தங்கள் மாத்திரம் கிடைத்துள்ளன

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸாம்ராஜ்ய"மென்னும் உன்னதமான வ்யாக்யானத்தினால் பாரத தேசத்தின் வித்வத் ப்ரபஞ்சத்தில் புரட்சியை யுண்டுபண்ணிற்று.

ரகுநாத பூபாலனின் ஆஸ்தானம், பண்டிதர்கள், கவிகள், ஸங்கீத மணிகள், பற்பல கலைஞர்கள் முதலானவர்களின் இருப்பிடமாக விளங்கியது. ஸங்கீத சாஸ்திர வித்வானான பூபாலன் ஸங்கீத கலைக்கு ஆதரவு கொடுத்தது மாத்திரமல்லாமல், "ஸங்கீத சபா" என்னும் உன்னதமான ஸங்கீத க்ரந்தத்தை இயற்றினான். மற்றும் "ஜயந்தசேன" முதலிய ராகங்களை "ராமானந்த" முதலான புதுத்தாளங்களை, தனது பெயரினால் ஒரு மேள (தந்திரீவாத்யம்) தந்தி வாத்யத்தைக் கண்டுபிடித்து எல்லா ப்ரஸித்த ராகங்களையும் அந்த வாத்யத்தில் வாசிப்பதற்கு அனுகூலம் செய்து கொடுத்து கர்னாடக ஸங்கீதத்திற்கு அன்று தக்ஷிண பாரதத்தில் ஆதாரத் தூண் என்று பெயர் பெற்று கீர்த்தியடைந்தான்.

30 வருஷ காலத்தில் ராஜாங்க மேடையில் அநேக நிகழ்ச்சிகள் நடந்ததைப் போல வித்யா மற்றும் தார்மிக திசையிலும் அநேக நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அவைகளில் இந்த வரலாற்றிற்குச் சம்பந்தப்பட்ட ஒரு விசேஷ நிகழ்ச்சியை இங்குப்ரஸ்தாபிப்பது உசிதம். அதே ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திரரின் கடைசிக் காலத்தில் நடந்த நிகழ்ச்சி.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருடன் வாதம் செய்த ப்ரகாண்ட பண்டிதர்களுள் முதன்மையான ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் ஸ்ரீவிஜயீந்திரருடன் நெருங்கிய நட்புகொண்டு இருவரின் தத்வ விஷயங்களில் அபிப்ராய பேதம் ஒன்றைத்தவிர பரஸ்பரம் ஹ்ருதயபூர்வகமான இனிய சம்மந்தத்தை வளர்த்துக் கொண்டு பரம ஆப்தர்களாகி தாராள மனப்பான்மையுள்ள இதயத்துடன் நடந்து கொண்டிருந்த பல அநேக சந்தர்ப்பங்களை இந்த வரலாற்றில் வெவ்வேறு அத்யாயங்களில் முன்னமே விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் தமது ஆயுள் காலத்தின் முடிவு சமீபித்துள்ளதை நினைத்து அந்தக் கடைசி நாட்களில் விஜயீந்திரரின் புனித சாந்தமான ஸந்நிதியில் கழித்துவந்தார். தீக்ஷிதரின் உடல்நலம் கொஞ்சங்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கொஞ்சமாக ஒவ்வொரு நாளும் க்ஷீணமடைந்து வந்தது. ஒரு நாள் தீக்ஷிதர் தனது சொந்தக்காரரை விஜயீந்திரரிடம் "தனது க்ருஹத்திற்கு வந்து தம்மை ஆசிர்வதித்துப் போகவேண்டும்" என்று செய்தி சொல்லியனுப்பினார். ஸ்ரீயவர்கள் "அவசியம் மறுதினம் காலை வருவோம்" என்று சொல்லியனுப்பினார்.

மறுநாள் விஜயீந்திரர், மடத்தின் புரோஹிதர், வாயிற்காப்பவன், ஒன்றிரண்டு பண்டிதர்களும் பல்லக்கில் தீக்ஷிதரின் வீட்டிற்கு விஜயம் செய்தார். மிகவும் சக்தியுற்று நோய்வாய்ப்பட்டிருந்த தீக்ஷிதர் இருவர் உதவியுடன் வீட்டின் வாசற்படியினருகில் வந்து ஸ்ரீயவர்களை வரவேற்றுத் தனது தனியறைக்கு அழைத்துச் சென்றனர், ஸ்ரீயவர்கள் ஆஸனத்திலமர்ந்த பிறகு பழம், புஷ்பம், காணிக்கைகளை ஸ்ரீயவர்கள் முன்வைத்து நமஸ்காரம் செய்துவிட்டு உட்கார்ந்தார். சற்று நேரம் ஒருவரும் ஒன்றும் பேசாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தனர். கடைசியில் பெருமூச்சுடன் துக்கத்துடன் சொன்னார்.

"தீக்ஷிதரே, எவ்வளவு சோர்ந்து போய்விட்டீர்கள்! நல்ல முறையில் மருந்துகள் உட்கொள்ளுகிறீறா?

மருந்ழ உட்கொண்டதில் எந்த பலனுமில்லை ஸ்வாமி, எமன் என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறான்.

"சாந்தம், சாந்தம், அமைதியுடனிரும். அவ்வாறு சொல்லாதீர்கள் தீக்ஷிதரே! ஸ்ரீஹரியின் அனுக்ரஹத்தினால் சீக்கிரமே குணம் காண்பீர்கள்..."

தங்கள் ஆசீர்வாதம் மற்றும் சிவபெருமானின் விருப்பம் போலாகட்டும். எனக்கு அந்த பயம் இல்லை. ஒரு விஷயம் குருவர்யரே, ஒருவேளை நான் மரணமடைந்தால் தங்களுடன் வாதம் செய்ய வல்லவர் உள்ளனரா? இனிமேல் யாருடன் வாதம் செய்வீர்?

தீக்ஷிதரின் பேச்சைக் கேட்டு ஸ்ரீயவர்களுக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று. அவ்வுருடைய கண்களில் நீர் ததும்பியது. பெருமூச்சு விட்டு ஸ்ரீயவர்கள் சொன்னார்.

எப்பேற்பட்ட வார்த்தைகள் தீக்ஷிதரே! தாங்கள் ஆரோக்யமாயிருந்தால் மகிழ்ச்சியுடன் வேண்டுமானால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மற்றும் வாக்யார்த்தம் செய்ய முடியும். ஆனால்...ஊஹூம் தங்களைப் போன்ற மஹாமல்லருடன் வாதித்த பிறகு வேறுயாருடனும் வாதம் செய்ய நமக்கு விருப்பமில்லை.

கலகலவென்று சிரித்து தீக்ஷிதர் சொன்னார். "குருபாதரே, அப்படியா?" வாதம் செய்தால் நம்முடன் மாத்திரம்" என்று தங்கள் பேச்சைக் கேட்டு எனக்குப் பெரிய பெருமையாயுள்ளது. தாங்கள் உண்மையாக உதார ஹ்ருதயம் படைத்த வித்வன் மணிகள் ஸ்வாமி. தங்களுடன் வாதம் செய்த நான் தன்யனென்று உணறுகிறேன் ஸ்வாமி. றேன் ஸ்வாமி. விளையாட்டு போதும் ஸ்வாமி, தங்களுடன் வாதம் செய்த நான் தன்யனென்று உணறுகிறேன் ஸ்வாமி. விளையாட்டு போதும் ஸ்வாமி தங்களை ஏன் அழைத்திருக்கிறேன் தெரியுமா? "தங்கள் மனதிலிருப்பது எனக்கு எப்படித்தெரியும் தீக்ஷிதரே?" "ஓஹோ, அப்படியா? பாவம்! தங்களுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? அநேக தடவைகள் என் மனத்திலிருப்பதை நான் சொல்வதற்கு முன்னமே தெரிவித்த தங்களுக்கு இந்த விஷயம் மாத்திரம் தெரியவில்லையா? உம். இருக்கட்டும் ஸ்வாமி எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?

"அதென்ன சொல்லுங்கள் தீக்ஷிதரே, நமது ப்ரீதிபாத்திரரான தங்களுக்காக எது வேண்டுமானாலும் செய்யமுடியும".

"உண்மைதான், தாங்கள் எனக்காக எது வேண்டுமானாலும் செய்யத் தயாரென்பது நான் அறிவேன். அதனால்தான் தம்மிடம் சொல்லுகிறேன். ஆனாலும்... சந்தேஹம் நிஜமாக உதவி செய்வீர்களா?"

"அவசியம்! அது என்ன சொல்லுங்கள்," ஸ்வாமி ஸத்யமாகச் சொல்லுங்கள், எந்த ரீதியில் உபாஸனை செய்தால் நான் உத்தாரமாக முடியும்? எனது அந்திம காலத்தில் நான் உபாஸனை செய்ய வேண்டிய தத்வமெது? அத்வைதமா அல்லது த்வைதமா?

தீக்ஷிதரின் வார்த்தைகளைக் கேட்டு விஜயீந்திரரின் ஹ்ருதயம் நடுங்கிற்று. யார் ஜகத்தில் அத்வைத வித்யாசார்யரென்று ஜகத் விக்யாதராய் அத்வைத ஸித்தாந்தத்தின் ஆதார ஸ்தம்பம் (தூண்) என்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சொல்லப்பட்டாரோ, அத்வைத சைவாத்வைத தத்வப் பிரசாரத்தைப் பலமாக ஆமோதிப்பதற்கும் நிலைநாட்டுவதற்கும் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்து நூற்றுக்கணக்கான அனுபவமும் பெருமையும் நிறைந்த க்ரந்தங்களை இயற்றி வெகுவாக மதிப்பிற்குறியவராகியிருந்தாரோ, அப்பேர்ப்பட்ட தீக்ஷிதர் கடைசிக்காலத்தில் எந்தத் தத்வங்களை உபாஸிக்க வேண்டுமென்று ப்ரதிவாதிகளிடத்தில் முதன்மையானவரான தம்மிடம் கேட்கின்றார்!! தீக்ஷிதரின் கேள்வி ஸ்ரீகளவர்களின் இதயத்தைக் கலக்கிவிட்டது. தீக்ஷிதரின் அந்தக் கேள்வியின் உட்கருத்து, உணர்ச்சி, மனவேதனை, அஸஹாய மனநிலை, தீனநிலை, தீர்மானங்கள், நிம்மதியற்ற நிலை இவை யாவும் ஸ்ரீயவர்களின் இதயத்தைத் தொட்டுவிட்டன. மேலும் தீக்ஷிதரின் நிர்மலமான இதயத்தை வெளிப்படுத்தியது ஸ்ரீவிஜயீந்திரர் அவருக்குத் தம்மிடமுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை, கௌரவங்களைப் புரிந்துகொண்டு உணர்ச்சிவசப்பட்டார். கண்ணீர்பெருகிற்று. நா தழுதழுத்தது. தீக்ஷிதரின் கைகளைத் தன் கரங்களால் பிடித்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

தீக்ஷிதரே! நம்மை எப்படிப்பட்ட இக்கட்டான நிலைமையில் சிக்கவைத்து விட்டீர்? தாங்கள் நமது பதிலைக்கேட்டு அதன்படி நடக்க உறுதி செய்துள்ளீர்களென்பது உமது கேள்வியே அறிவிக்கிறது. நாமிருவரும் வாதி - ப்ரதிவாதிகளாகப் பலமுறை வாதம் செய்துள்ளோம். மற்றும் ஸ்ரீஹரியின் கிருபையினால் நமது கீர்த்தி வளர்ந்தாலும் நாமிருவரும் நண்பர்களாகவே நடந்து கொண்டிருக்கிறோம். " हितं मनोहारि च दुर्लभं वचः" என்னும் மஹாகவி பாரவியின் வசனம் தாங்கள் அறியாததா? வேறு யாராவது கேட்டிருந்தால் நாம் அவருக்கு கொடுக்கும் பதிலே வேறு. ஆனால் தங்களுக்கு அவ்வாறு சொல்லத் தயாராக இல்லை. நமது பக்ஷத்தின் அபிப்ராயம் சொல்லுகிறோம், கேளுங்கள் தீக்ஷிதரே, நாம் த்வைத ஸித்தாந்த ஸ்தாபகர். ஸ்ரீவிஷ்ணுபக்தர். தாங்கள் அத்வைதம், சிவா த்வைதம் இவ்வைகளின் தத்வ ப்ரசாரகர். அதற்காகப் போராடின தீரர்! உமது ஹ்ருதயத்தில் சோமசேகரன் குடி கொண்டுள்ளான். தாங்கள் உமாபதியின் ஆராதகர். தற்சமயம் தத்வ விசாரம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அநாவசியமானது. நமது ஸித்தாந்த தத்துவங்கள், சம்ப்ரதாயங்களில் நம்பிக்கை நமக்கிருப்பதுபோல உமது தத்வம், ஸம்ப்ரதாயங்களில் உமக்கும் நம்பிக்கை திடமாக இருக்க வேண்டுமென்பதே எனது விருப்பம்! அதுதான் தங்களுக்குப் பெருமை. இவ்வளவு தான் நாம் சொல்ல முடியும்!!

சக்தியற்றவராயிருந்த போதிலும் ஸ்ரீகளவர்களின் பேச்சைக்கேட்டு மெய்சிலிர்த்தது தீக்ஷிதருக்கு தொண்டை அடைத்தது. கண்ணினின்றும் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. திடீரென்று எழுந்து தீக்ஷிதர் ஸ்ரீகளவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "ஆஹா, மஹாஸ்வாமி, தாங்கள் எப்பேர்ப்பட்ட கருணை உள்ளம் படைத்தவர், எத்தகைய நன்மைகோரும் நண்பர்! உண்மையாகவே தாங்கள் தாராள குணமுள்ளவர். அதனால் என்மனம் உங்களையே நாடுகிறது. இந்த உமது மஹத்தான குணத்தினாலேயே ஜகத்து தங்களை மஹாமஹிமரென்று கொண்டாடுகிறது. மகிழ்ச்சி, மிக்க மகிழ்ச்சி ஸ்வாமி, தங்கள் உபதேசப்படியே ஆகட்டும்" என்று மற்றொரு முறை நமஸ்கரித்து ஸ்ரீயவர்களைக் கௌரவித்து அனுப்பினார்.

நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் ஸ்ரீவிஜயீந்திரர் மத்தியானம் சிஷ்ய மண்டலியுடன் பேசிக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் நகரத்தின் பிரமுகர் ஒருவர் வந்து ஸ்ரீயவர்களை வணங்கி "ஸ்வாமி, அப்பய்ய தீக்ஷிதர் ஸ்வர்க்கவாஸிகளானார்'' என்று செய்தி வந்துள்ளது. ஸ்ரீயவருக்குத் தெரிவிக்க வந்திருக்கிறேன்" என்றார். ஸ்ரீயவர்களுக்கு இடிவிழுந்தார் போலாயிற்று. ஸ்ரீயவர் கண்ணிலிருந்து கண்ணீர் பெருகிற்று. தீக்ஷிதரின் பாண்டித்யம், வாதத்திறமை, க்ரந்தமியற்றும் திறமை, இன்பமான நட்பு, ஸதாசாரங்களை நினைத்து ஸ்ரீயவர்கள் தீக்ஷிதரின் மரணத்திற்காக மிக்க துக்கமடைந்தார். சபையோர் பிரதிவாதியின் மரணத்திற்காக துக்கிக்கும் ஸ்ரீயவர்களின் விசால ஹ்ருதயம், உணர்ச்சியைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள்.

அப்பய்ய தீக்ஷிதர் ஸ்வர்கவாஸியான பிறகு ஸ்ரீயவர்கள் அதிகநேரம் தனிமையிலே காலங்கழிக்க ஆரம்பித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



கிறிஸ்துவ ஆண்டு 1595க்குள் பாரதத்திலுள்ள மற்றும் தம்முடன் பல சாஸ்திரங்கள், 64 கலைகளில் போட்டியிட்டு வாதம் செய்த எல்லா வாதிகளையும் ஜயித்திருந்தார்.

பாரத நாட்டிலெல்லாம் சஞ்சாரம் செய்து பர்வாதிகளின் கர்வத்தை அடக்கி விஜய பரம்பரையே நிறைநிறுத்தி வந்தார்! சங்கீதம், சிற்பம், சித்திர கலைகளைத் தவிர கருமான் (இரும்பு வேலைக்காரன்) தோல் வேலை, குயவன் (மண்பாண்டம் செய்யும் கலை) நெசவுக்கலை மரவேலை (தச்சுக்கலை) விஷ வைத்தியம், அக்நி ஸ்தம்பம், ஜலஸ்தம்பம், பொற்கொல்லன் நகைவேலை முதலிய எல்லாவித வித்தையிலும் பெயர்பெற்ற கலைஞர்களை அநாயாஸமாகத் தோல்வியுறச் செய்து அக்ண்ட கீர்த்தியை நிலைநாட்டினார். ஸ்ரீவிஜயீந்திரர், த்வைத ஸித்தாந்தற்கிருந்த இடையூறுகளெல்லாவற்றையும் நிவாரணம் செய்து மத்வ மதம் நிரந்தரமாகித் தங்குதடையின்றி நடந்துவரும் வகையில் உழைத்து, குருபாதரான ஸ்ரீசந்திரிகாசார்யர் மற்றும் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் ஆக்ஞையை நிறைவேற்றினார். அதுபோலவே சுமார் 1595ம் வருடம் ஸ்ரீவிஜயீந்திரர் வித்யாபீடம் மற்றும் மஹாஸமஸ்தானத்தின் அதிகப் பொறுப்பை ப்ரிய சிஷ்யர் ஸுதீந்திரருக்கு ஒப்புவித்து ஸதாஸர்வதாபகவத்யானம், ஜபம், தவம், கிரந்தங்கள் இயற்றும் புனித்மான காரியங்களில் ஈடுபட்டு காலம் கழிக்கத் தொடங்கினார்.

## 65. ஸிம்ஹகிசோர (இளஞ்சிங்கம்)

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் வழியைப் பின்பற்றி அவரது பரமானுக்ரஹத்தினால் முன்னேற்றப் பாதையில் நடைபோட்டு வந்த ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் கிறிஸ்து ஆண்டு சுமார் 1586லிருந்து 1614 வரையில் மஹத்தான கீர்த்தி கௌரவங்களைப் பெற்றிருந்தார். அது ஸுதீந்திர தீர்த்தரின் கீர்த்தி சிகரத்தையெட்டிய காலம் எனலாம்.

1. चचार पृथ्वीं सर्वां सिंहः क्षुद्र मृगे ष्विव शास्त्रज्ञा मूकतां प्राप्तः विजयींद पुरस्तदा ॥ ब्राह्मणानजयत्सर्वांस्तर्क मीमंस वादकान् । दैवज्ञान् भिष जो महान् मांथिनश्यास्त्र पारगान् ॥ सर्वान् विजित्य सर्वत्रपत्रलेखन मार्गतः । ये ये जनाः येष्य निद्यास्तेते तेन विपिर्जिताः ॥ सर्वान् विजिन्यसर्वत्र चचार पयनो यथा ॥
- श्री विजयींद्रविजयकाव्य ।

2. दर्शयामास विद्याश्च नाना कारा चतीश्वरः । चर्म (स्वर्ण) कारा नजन् कुमकारांश्च नापिता का ॥ गायकान् गान निपुणान वादकान्वाद्यसेवितान् । पुलिंदान् सूत्रकर्मज्ञान् लोहकर्म विशारदान् ॥ नानाँ क्रीडपरानन्यान् वंशस्वमवरानथ । सर्वक्रीडनकानन्यान् जिगाय परविद्यया ॥ असंख्याता जिता वादयुद्धे वै बहुशत्रवाः ।
- विजयींद्रविजय ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீமதாசார்யரின் மஹாஸமஸ்தானாதிபதிகளான ஸ்ரீமத் விஜயீந்திர தீர்த்தரின் வர குமாரரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் குருவர்யரைப் போலவே அவரது விசேஷானுக்ரஹ பலத்தினால் பரமஹம்ஸ குலஸரோவரத்தின் ராஜஹம்ஸமாய் ஸாத்விக மதாந்தகார (இருளைப் போக்கும்) நிராகரண ஸஹஸ்ரகிரணராய் (சூரியனாக) ஆர்த்தஜன கல்ப விருக்ஷமாய், ஏழை பங்காளராய் பக்தமார்க்க சிந்தாமணியாய், ஸகலகலா காமதேனுவாய், ஆஸ்திக மத தத்வங்களுக்குப் பிறந்த இடமாய், விளங்கி, தேவலோகத்திலிருந்து பூமியிலவதரித்து வந்த வைதீக வித்யா பாகீரதியை ஆகாய கேசரம் (சடை) போல் சிரசில் தாரணம் செய்து லோக கல்யாணத்திற்காக உயர்ந்த அலைகளோடு காணப்படும் அந்த அமர வித்யா தரங்கிணியை (அலை) நானாமுகமாக (சிஷ்யரின் முகமாக) வெளிப்படுத்தி ஜகத்தின் மரியாதையென்ற கீர்த்தி சந்திரிகையினால் (நிலவு) திசைகள் தோறும் பிரகாசப்படுத்தினார்.

மத்வ ஸித்தாந்தம் மாத்திரமல்ல நிகில வித்வத் ப்ரபஞ்சமே ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரால் உபகாரம் அடைந்தது. பாஷ்யகாரர் - டீகாகாரர் - மற்றும் டீகாகாரர் முதல் டிப்பணிகாரர் (ஸ்ரீவ்யாஸராஜர்) இவர்களின் மத்ய பாகத்தில் த்வைத ஸித்தாந்த ரக்ஷணை, போஷணை, மேலும் ப்ரசார கார்யங்களில் ஸ்ரீபத்மநாப - நரஹரி - மாதவ - மற்றும் ஸ்ரீஅக்ஷோப்ய தீர்த்தர் முதலானோர்; மேலும் ஸ்ரீகவீந்திர - ராஜேந்திர - விபுதேந்திர - ஸ்ரீபாதராஜ - ஸ்ரீவ்யாஸராஜ தீர்த்தர் முதலானோர் அந்த மஹத்வபூர்ண பாத்ரங்களை வஹித்தனரோ, அதைப்போலவே முதல் டிப்பணிகாரர் (ஸ்ரீவ்யாஸராஜர்), த்வைத ஸித்தாந்த டிப்பண்யாசார்ய ஸார்வபௌமர் (வருங்கால - ஸ்ரீமந்த்ராலயப்ரபு) இவர்களின் இடையே அதே மஹத்வ பூர்ண பாத்திரத்தை வகித்து, ரக்ஷண - போஷண - ப்ரஸரணாதிகளினால் மத்வஸித்தாந்தத்தை சூரிய சந்திரர்களுள்ள வரை நிரந்தரமாக நிலைத்திருக்கும் வகையில் உழைத்த கீர்த்தி, ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் மற்றும் அவரது ப்ரிய சிஷ்யரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கும் செல்லும். இந்த ஒரு முந்தின நிலைமையை மனத்தில் பதியவைத்துக் கொண்டு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



சிந்தித்தால் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரினால் த்வைத ஸித்தாந்தத்திற்குக் கிடைத்துள்ள மஹா உபகாரம் நன்கு புரியும்.

வாதி திக்விஜய - க்ரந்த நிர்மாணயுகமெனப்பட்ட 16-17வது நூற்றாண்டில் ப்ரபலமான பரவாதிகளி னிடையில் வாழ்ந்து, "தத்வவாதம்" மதத்தைக் காப்பாற்றிக் கொண்டு வரும் புனிதமான பொறுப்பை ஸ்ரீவிஜயீந்திர குருபாதரின் அனுக்ரஹ கவசத்தையணிந்து மிகமிக கீர்த்திவானாக நிர்வகித்த ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் உபகாரத்தின் நன்றிக்கடனை எவ்வளவு ஜன்ம மெடுத்தாலும் மாத்வர்களினால் தீர்த்துக்கொள்ள இயலாது.

அத்வைத விசிஷ்டாத்வைத வாதிகள் ராஜ ஆஸ்தானங்களில் விசேஷமான ஸ்தானம், கௌரவங்களைப் பெற்று, ராஜாக்களின் ஆதரவு பெற்று, அந்த பலத்தினால் பலம் பெற்று, ப்ரபலராய், வ்யாகரண - மீமாம்ஸ கௌசல்யத்தின் வர்ணம் தீட்டி தமது க்ரந்தங்களையும் வாதங்களையும் புஷ்டியடையச் செய்து தங்கள் மதப்ரசாரம் செய்து கொண்டு நான்கு திசைகளிலி ருந்தும் த்வைத மதத்தின் மீது பயங்கரத் தாக்குதல் ஆரம்பித்தபொழுது மேருமலையைப் போல அசையாமல் நின்று ஸ்திரமாகவும் கம்பீரமாகவும் அந்த எல்லா வகையான தாக்குதல்களையும் எதிர்த்துப் போராடி, வ்யாகரண - மீமாம்ஸாநயங்களின் மின்னலின்ால் தமது வாதம் மற்றும் க்ரந்தங்களை ஒளிபெறச்செய்து செய்து பரம ஸித்தாந்தத்தை குருவர்யரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரைப் போலவே உயர்த்தின பெருமை முதன்மையான தீரர் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரைச் சேரும்!!

இன்றுபோல் ஏதோ ஒரு சாஸ்திரத்தில் அற்ப சொற்பம் ப்ரவேசமிருந்தவர்கள் (படித்தவர்கள்) எல்லோரும் ப்ரக்யாத பண்டிதரைப் போல நடிப்பது அந்தக் காலத்தில் ஸாத்யமில்லை. அன்று ஒவ்வொரு க்ராமத்திலும் கர்ம நிஷ்டரான (உழைப்பாளிகளான) *ப்ராம்மணரின் வீடுகளிருந்தன. அந்த வீடுகளில்

ग्रामे ग्रामे सद्ब्राह्मणानां सहस्राम् । गेहेगेहे पंडिताएव सर्वे ॥ ग्रामे ग्रामेऽध्यापका जाता मात्राः । गेहे गेहे सर्व शास्त्रागमानां ॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

- श्री राघवेंद्र विजयः ।

https://archive.org/details/@muthulakshmi_academy


பிறந்ததினாலேயே ஸகல சாஸ்திரங்களிலும் திறமைபெற்ற வித்வன் மணிகள் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேசதேசங்களிலும் இருந்தனர்.

இவ்வாறு பண்டித உத்தமர்களால் நிரம்பியிருந்த காலத்தில் அவர்களெல்லோரையும் எதிர்த்து ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பது இக்காலத்திய ஜனங்கள் அறிந்திருப்பது அவ்வளவு எதிதில்லை. அதாவது பாண்டித்யயுகத்திலேயே தமது நிகரற்ற அறிவு, தேஜஸ், திறமை, க்ஞான - பக்தி - வைராக்ய - வாதவித்யா சாதுர்யம் - க்ரந்தமியற்றும் திறமை - பாடப்ரவசனத்தில் நிபுணத்துவும் முதலியவைகளினால் ராஜா - மஹாராஜா - சக்ரவர்த்திகளால் விசேஷமான கெளரவமடைந்து நிகில வித்வத் ப்ரபஞ்சத்தினால், "வித்யா சக்ரவர்த்திகள்" என்று மதிக்கப்பட்டு த்வைத விஜயதுந்துபியை முழங்க வைத்த யுக புருஷர் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர்.

वाक्ये पदे पार्दविलोच्य चोक्तौ
व्यासीय शास्त्रे च कृतान् प्रबंधान् ।
आस्तां बुधाः श्रोतु मशेषमेषा
वाख्या स्वसमाख्या यदि पंडितोऽसौ ॥

என்று ஸ்ரீவிஜயீந்திர க்ரந்த ரசனையில், க்யாதி பெற்றவராயிருந்தது போல அவருடைய பட்ட சிஷ்யரான ஸ்ரீஸுதீந்திரரும் கூட ந்யாய வேதாந்த - மீமாம்ஸா மற்றும் வ்யாகரண சாஸ்திரங்களில் ஸாரகர்பிதமான ப்ரபந்தங்களை இயற்றி, "நிகில வித்யா சக்ரவர்த்தி" என்னும் தமது விருதை நிரூபித்தார்.

ஸ்ரீஸுரேந்திர விஜயீந்திர தீர்த்தர்களிருவரின் சிஷ்யத்வத்தை வகித்து அவர்களுடைய பூர்ணானுக்ரஹத்திற்குப் பாத்திரரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரிடம் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் சக்தி, காந்தி, தவம், மற்றும் க்ஞான - பக்தி - வைராக்யம் முதலியவைகளும்; ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் துர்வாதி நிக்ரஹத்திறமை, ஸகல வித்தைகளில் நிபுணத்வம், க்ரந்தமியற்றும் நிபுணத்துவமும் ஒன்றாகச் சேர்ந்து அவருக்கு அபூர்வமான தனிப்பெருமை, அஸாதாரண கீர்த்திகளைப் பெற்றுக் கொடுத்து அவர் பெயர் ஸாரஸ்வத ப்ரபஞ்சத்தில் குறையாததும் நிரந்தரமானதற்குக் காரணமாயினவென்று தாராளமாகச் சொல்லலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



வெகுகாலம் கும்பகோணத்தில் வசித்திருந்ததினால் குரு சிஷ்யர்கள் சிஷ்யரின் முன்னேற்றம் அபிவிருத்திக்காக ஏழு எட்டு வருடகாலம் சஞ்சாரம் செய்யப்போகவில்லை. பாரதத்தின் வெவ்வேறு பாகங்களிலுள்ள மஹா ஸமஸ்தானத்தின் சிஷ்யர்கள் - தார்மிகர் "திக்விஜய சஞ்சாரம்" மேற்கொண்டு தங்களை அனுக்கிரஹிக்க வேண்டுமென்று அடிக்கடி விக்ஞாபனங்கள் செய்ய ஆரம்பித்தினால் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் ப்ரிய சிஷ்யரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரை லோக கல்யாணத்தின் பொருட்டு சஞ்சாரம் செய்து வரும்படி அனுப்பினார். ஸ்ரீஸுதீந்திரர் குருவாக்ஞைப்படியே அகண்ட பாரதத்திலெல்லாம் மின்னல் வேக சஞ்சாரம் மேற்கொண்டு பரவாதி திக்விஜயம் - ஸித்தாந்த ஸ்தாபனம் - தீர்த்தக்ஷேத்திர சேவனம், சிஷ்யர் மற்றும் பக்தரைப் புனிதராக்கிக் கொண்டு ராஜ -மஹாராஜா - சக்ரவர்த்திகளினால் கௌரவிக்கப்பட்டு கீர்த்தி ஸம்பாதித்தார்.

உத்தர பாரத ஸஞ்சாரத்திலிருக்கும்பொழுது ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் வித்யா - தேஜஸ் - திறமைகளைக் கேள்விப்பட்டு ஆகர்ஷிக்கப்பட்டவராய் குவாலியர் மஹாராஜா ஸ்ரீயவர்களைத் தலைநகருக்கு வரவேற்று அழைத்து கௌரவப்படுத்தினான். அப்பொழுது ராஜஸ்தானத்தில் ந்யாய வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களில் மாபெரும் வாக்யார்த்தம் நடைபெற்று ஸ்ரீகளவர் ஆஸ்தானத்தின் ஸகல பண்டிதர்களையும் ஜயித்தார். இதனால் மஹாராஜனுக்கு ஸ்ரீசுதீந்திரரிடம் விசேஷபக்தி - கௌரங்கள் உண்டாயின. மஹாராஜ ஸ்வாமிகளை ராஜகுருவாக்கிக் கொண்டு தங்கமயமான சிம்மாஸனம் செய்வித்து வித்வத் ஜனங்களின் முன்னிலையில் அவரைச் சிம்மாஸனத்திலமர்த்திக் கனகாபிஷேகம் செய்து "திக்விஜய வித்யா சிம்மாஹனாதீச்வரர்" என்னும் விருதளித்து வெண்கொற்றக்குடை முதலியவைகளால் கௌரவித்து க்ருதார்த்தரானான்.

---

*ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்திலுள்ள குவாலியர் மஹாராஜரின் ஸமஸ்தானத்தின் ராஜ முத்திரையுடன் கூடிய விருதாவலி பத்திரங்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சிலகாலம் குவாலியரில் வசித்து ஸ்ரீஸுதீந்திரர் உத்தர பாரதம் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஸஞ்சாரம் செய்து ஆங்காங்கே ராஜா மஹாராஜாக்களினால் கௌரவிக்கப் பட்ட மந்திர முத்ராதாரணம்; குருபதேசம், ஸ்வாமி தர்சனம் முதலியவைகளினால் சிஷ்யர்களைப் புனிதராக்கி உத்தர பாரத திக்விஜயத்தை வெற்றிகரமாக முடித்து தக்ஷிண பாரதத்திற்குத் திரும்பினார்.

தக்ஷிண பாரத ஸஞ்சாரத்திலிருந்த ஸ்ரீயவர்கள் வேலூருக்கு விஜயம் செய்தார். அச்சமயம் கர்நாடக சக்ரவர்த்தியாக் இருந்த ஸ்ரீவீரவெங்கடபதி மஹாராஜா வேலூரில் அரசு புரிந்து வந்தான். கன்னட சாம்ராஜ்யத்தின் நன்மைக்காக உழைத்த ஸ்ரீவிஜயீந்திரரின் பட்ட சிஷ்யரைச் சக்ரவர்த்தி கௌரவத்துடன் வரவேற்று உபசரித்தான். ராஜ சபையில் அநேக ப்ரபல பண்டிதர்களிருந்தனர். ஸ்ரீயவர்களுக்கு அவர்களை எதிர்க்கும் ஸந்தர்ப்பம் ஏற்பட்டது. ஸ்ரீயவர்கள் ஆஸ்தான பண்டிதர்கள் யாவரையும் வாதத்தில் எளிதாக வென்றார். அப்பொழுதே ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் அநேக ஸாரமுள்ள க்ரந்தங்களை இயற்றியிருந்தார். அந்த அபூர்வ க்ரந்தங்களின் மகத்துவத்தையும் ஸ்ரீயவர்களின் வாத வித்யாத் திறமைகளையும் கண்டு மகிழ்ச்சியடைந்த வெங்கடபதி மஹாராஜர் தனது ஆஸ்தான பண்டிதர்களை ஸ்ரீயவர்கள் ஜயித்ததற்காக விஜய சங்கம் முதலான கௌரவங்களை அர்ப்பித்தான். மற்றும் முன்பு விஜயநகரத்தின் மருமக ராமராஜர் ஸ்ரீவிஜயீந்திரருக்கு ரத்னாபிஷேகம் செய்தது போல தானும் பெரியளவில் அவரைக் கௌரவிக்க நிச்சயித்து வித்வான்கள் மந்திரிகள் நகர ப்ரமுகர்களின் முன்னிலையில் ஸ்ரீயவர்களை சிம்மாசனத்திலமரச் செய்து "ரத்னாபிஷேகத்தை" செய்து அநேக விருதுகளையும் விலைமதிக்கவொண்ணாத ரத்னாபரணங்களையும் அர்ப்பித்துக் கிருதார்த்தனானான்.

(a) Vijayindra was succeeded by Sudheendra. He was also a great Scholar and travelled all over the country controventing the teachings of other religion. He conquered all his opponents at court Emperor Venkatapathyraya and was presented by sovereign with the Coach and other emblems of victory.

---

1. Aravidu Dynasty of Vijaya Nagaram P. 518
2. Sources of Vijayanagaram History by Rev. Henry Heras.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் தக்ஷிண பாரதத்திலெல்லாம் மின்னல் வேகத்தில் ஸஞ்சாரத்தைத் தொடர்ந்து நடத்தி அநேக ராஜா - மஹாராஜர்கள், பாளையக்காரர்களின் ஆஸ்தான பண்டிதர்களை வாதத்தில் ஜயித்து அரசர்களினால் கௌரவமடைந்தார். இவ்வாறு ஸ்ரீயவர்களைக் கௌரவப்படுத்தினவர்களில் இக்கிரிய வெங்கடப்ப நாயகன், மைசூரின் நஞ்சராஜ ஒடையர், ஹதிநாட சீமையின் இம்மிடி ராமராஜர், கார்க்களத்தின் ஒன்றாவது பைரவன், மதுரை கிருஷ்ணப்ப நாயகன், கொச்சி திருவாங்கூரின் வர்மா, மற்றும் இதர பாளையக்காரர்கள் முக்கியமானவர்கள். சிதம்பரத்தின் சைவ தேவாலயத்தில் கோவிந்தராஜனை ப்ரதிஷ்டை செய்து கியாதி பெற்றான் செஞ்சி க்ருஷ்ணப்ப நாயகன். பிரதிஷ்டை செய்த சமயத்திலேயே சிதம்பரத்திற்கு திக்விஜயம் செய்த ஸ்ரீஸுதீந்திரரை விசேஷ முறையில் கௌரவித்தான். இதுபோல் ச்ரவண பெளகோளத்தின் ஜைன மடத்தின் சாருகீர்த்தியின் சிஷ்யர் ஸ்ரீயவர்களின் வ்யாகர்ண - மீமாம்ஸாதி சாஸ்திர நிபுணத்வைக் கண்டானந்தித்து விசேஷமாக மரியாதை செய்தது கவனிக்கத்தகுந்தது. இப்படி வாதி திக்விஜயம் ராஜாதி ராஜர்களினால் அனிதரஸாதாரண - கௌரவ - விருது பாவலிகளைச் சம்பாதித்து கும்பகோணத்திற்குத் திரும்பி யருளின ப்ரிய சிஷ்யரைக் கண்டு ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் ஆனந்த பரவசமானார். ஸ்ரீஸுதீந்திரர் தான் ஸம்பாதித்துக் கொண்டு வந்த வாதி திக்விஜய ஜய பத்திரிகைகளையும், விருதாவளிகளையும், திக்விஜய வித்யாசிம்மாஸனம், கிராம பூமி தானத்தையும் அதற்குரிய பத்திரத்தையும் மற்ற யாவையும் குருபாதரின் பாத கமலங்களில் ஸமர்ப்பித்தார். ஸ்ரீவிஜயீந்திரர் ஜகத்தில் மஹா கீர்த்தியையும் கௌரவத்தையும் ஸம்பாதித்துக் கொண்டு வந்த சிஷ்யரைக் கண்டு ஒரே மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்.

---

(c) "पवित्रश मेषपरांचितन्वर संचारतो दिग्वि जयापदेशात् । श्री वेंकटक्ष्मा परिणी यमक्षे वादेनविद्वे विबुधान् विजित्य ॥ समेत्यशंखादिमपैत्र विहर्तुं नृपाद मुष्पादपि, सहाजायाः ॥

- श्री राघवेंद्राविजयः

Vijayindra succeeded Surendra as teacher. He was well versed in several arts (Vidyas) and was honoured by Emperor Ramaraya with bathing in jewels (Ratnabhisheka) for his scholarship. The emperor also presented him with several villages.
- Sourced of Vijayanagar History.

व्यापूतावय हृद्यामित कविरचनाधारुचातुर्य हृष्यत्कर्नाट क्षोणिपाल प्रतिपद रचितानेक रत्नाभिषेकः ॥

-- श्री गुरुगुणस्तवनं

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

கும்பகோணத்தின் ஜனங்கள், வித்வான்களின் மண்டலி ஸ்ரீஸுதீந்திரரைச் "சிம்மகிசோரர்" (இளம் சிங்கம்) என்று வர்ணித்து விஜயீந்திரருக்குத் தக்க சிஷ்யரென்று பாராட்டினர்.

தனது குருபாதர் பார்த தேசத்தின் எல்லா ப்ரதிவாதி வித்வான்களை தமது வாத வல்லமையினால் ஜயித்து ரர்ஜாதிராஜர்கள் மாத்திரமல்லாமல் கன்னட சக்ரவர்த்தி வெங்கடபதி மஹாராஜரினால் ரத்னாபிஷேகம் முதலிய அஸாதாரணமான கௌரவம் பெற்று வந்தருளிய விஷயம் அறிந்து தஞ்சாவூரின் அரசன் ரகுநாத பூபாலனுக்கான ஆனந்தம் இவ்வளவு என்று கணக்கிடமுடியாதது. அவரது திக்விஜயம் தனக்கும் மற்றும் தனது ராஜ்யத்திற்கும் மாபெரும் பெருமை என்று உணர்ந்து இப்படிப்பட்ட பூஜ்ய குருவைத் தானும் ஸன்மானிக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் ரகுநாத பூபாலன் ஸ்ரீயவரைத் தஞ்சாவூருக்கு அழைத்துக் கொண்டு போய் வெகு சிறந்த முறையில் கௌரவித்தான். அதே சமயத்தில் ஸ்ரீயவர்களின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரரான கிருஷ்ணயஜ்வ கவிதான் இயற்றிய "ரகுநாத பூபாலியம்" என்னும் அலங்கார க்ரந்தத்தை ராஜ சபையில் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் ஸந்நிதியில் வாசிக்க விரும்பினான். ராஜனின் விருப்பப்படி ஸ்ரீஸுதீந்திரர் தலைமையில் பத்துப் பன்னிரெண்டு தினங்களில் ரகுநாத பூபாலியத்தை வாசித்து நிறைவேற்றப்பட்டது. க்ரந்தம் மிக அர்த்தகர்ப்பமுள்ளதாயிருந்ததினால் அதற்குத் திறமையான பண்டிதரினால் வியாக்யானம் எழுதப்பட்டது. அதைப்படித்துப் பாரத நாட்டின் ஸாரஸ்வத ப்ரபஞ்சத்தில் அந்த மஹாக்ரந்தம் நிரந்தரமான சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதாக எல்லாப் பண்டிதர்களும் அபிப்ராயப்பட்டனர். ஸ்ரீஸுதீந்திரரும் அதை ஆமோதித்துள்ளார்.

"ரகுநாத பூபாலனிய"த்திற்கு வியாபகமாக வ்யாக்யானம் எழுதி அதின் மஹத்துவத்தை வெளிப்படுத்த வல்லவர் யாரென்ற விஷயம் யோசிக்கப்பட்டது. அலங்கார சாஸ்திரம் மற்றும் ந்யாய-வேதாந்த - வியாகரணம் முதலிய சாஸ்திரங்களில் நிபுணரான பாண்டித்யம் பெற்றவரினால்தான் அந்தக் காரியம் முடியுமென்று பண்டிதர்களனைவரும் தீர்மானித்தனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

அன்றைய வித்வத் ப்ரபஞ்சத்தில் அந்த மகத்தான காரியத்தைச் செய்வதற்கு ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் ஒருவரே ஸமர்த்தரென நிர்ணயம் செய்து கிருஷ்ணயஜ்ஞகவி மற்றும் இதர பண்டிதர்களும் ஸ்ரீயவர்களிடம் அந்த வஷயத்தைப் பற்றி ப்ரார்த்தித்தனர். ஸ்ரீயவர்கள் எந்த பதிலும் தராமல் மௌனமாயிருந்தார். ரகுநாத பூபாலன் ஸ்ரீயவர்களை வ்யாக்யானம் செய்து கொடுத்தனுக்ரஹிக்கும்படி மறுபடியும் மறுபடியும் வேண்டினான். சிஷ்யனின் வேண்டுகோளுக்கு மனமிரங்கி ஸ்ரீயவர்கள், "ஸ்ரீகுருபாதரின் ஆக்ஞை பெற்று அவர் சம்மதித்தால் மகிழ்ச்சியுடன் வ்யாக்யானம் செய்வதாக" அபயமருளி மூலக்ரந்தத்துடன் கும்பகோணத்திற்கு எழுந்தருளினார்.

ஸ்ரீவிஜயீந்திர குருவிடம் ஸகல விஷயங்களையும் தெரிவித்துத் தனது கடமை என்னவென்று கோரினார் சிஷ்யர். ஸ்ரீவிஜயீந்திரர் சற்று யோசித்தபிறகு நாஸ்துதியை பீடாதிபதிகள் செய்யலாகாதாயினும், நரபதியில் ஸ்ரீவிஷ்ணுவின் ஸாந்நித்யமிருப்பதினாலும் ரகுநாத பூபாலன் தமது ஆசீர்வாதம் மேலும் ஸ்ரீமூலராமனின் அனுக்ரஹத்தினால் பிறந்து ஸ்ரீஸுதீந்திரரின் சிஷ்யனாயிருப்பதினாலும் "ரகுநாத பூபாலனியத்"திற்கு "தத் குணாலங்கார" ரீதியினால் வ்யாக்யனம் இயற்றலாம் என்று ஆக்ஞாபித்தார். இந்த சந்தோஷச் செய்தியைத் தஞ்சாவூரரசனுக்கு ஸ்ரீமுகத்தின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. மஹாராஜா பரமானந்தத்தினால் திருப்தியடைந்தான்.

ஸ்ரீசுதீந்திர தீர்த்தர் குருபாதரின் அனுமதிபெற்று சுபமுகூர்த்தத்தில் ரகுநாத பூபாலனின் ப்ரார்த்தனைப்படி "ரகுநாத பூபாலனீயம்" அந்த அலங்கார க்ரந்தத்திற்கு மிக விஸ்தாரமானதும் பொருட்சுவை மிகுந்ததுமான, "ஸாஹித்யஸாம்ராஜ்யம்" என்னும் மஹாவ்யாக்யானத்தை இயற்ற ஆரம்பித்தார். நான்கைந்து மாதங்களில் க்ரத்தை வெற்றிபெற இயற்றி ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் தஞ்சாவூரதிபதிக்கு அந்த நற்செய்தியைச் சொல்லி

---

येन श्री रघुनाथ भूमिपतिना संप्रार्थितस्तन्मदे
वत्सादृग्विजयींद्र संयमिमणेः षड्दर्शनी दर्शिनः ।
शिष्यो व्याकुरुते सुधींद्र यतिराट् कृष्णाध्वरींद्रोदितं
ग्रंथं तद्गुण.संपुरं रसगुणालंकार झुंकारितं

- साहित्यसाम्राज्यं ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

யனுப்பினார். ரகுநாத பூபாலன் பரமானந்தத்தில் மூழ்கினவனாய் அந்த மஹாவ்யாக்யான வெளியீட்டிற்கு ஒரு பெரிய சபையை ஏற்பாடு செய்தான். பாரத நாட்டின் எல்லா பாகங்களிலிருந்தும் கவிகள், மஹா பண்டிதர்கள் முதலானோர் அந்த மஹா சபைக்கு வந்தனர். ராஜனின் வேண்டுகோளின்படி, ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் வ்யாக்யான க்ரந்தத்துடன் தஞ்சாவூருக்கு விஜயம் செய்தார். மஹாராஜா பக்தி - மரியாதையுடன் குருவர்யரை வரவேற்று ராஜ வைபவத்துடன் ராஜ சபைக்கு அழைத்து வந்தான். சுமார் 15 நாட்கள் வரை வித்வத் சபையில் ஸாஹித்ய விமர்சனம் நடைபெற்றது. ஸமஸ்த பண்டிதவர்க்கம் அஸாதாரணமான அந்த சொற்சுவை பொருட்சுவை நிறைந்த ப்ரபந்தம் ஸர்வோத்தமமான நூல் என்பதாக பண்டித் ப்ரபஞ்சத்திற்கு அது ஒரு பெரிய காணிக்கை என்று மனமாரப் புகழ்ந்தனர். மூலகாரரான க்ருஷ்ணயஜ்வ கவிகளுக்கும் ரகுநாத பூபாலனுக்கும் அபார சந்தோஷமாயிற்று. தனது பெயர் சந்திர சூரியர் உள்ளவரை நிரந்தரமாக விளங்கும்படி செய்த தனது குருபாதருக்குத் தனது நன்றியைத் தெரிவிப்பது ரகுநாத பூபாலன் ஸ்ரீசுதீந்திர தீர்த்தருக்கு அனன்யஸாதாரணமான முறையில் ''கனகாபிஷேகம்'' செய்து விலைமதிக்க வொண்ணா தங்கம், வெள்ளி நாணயங்களையும் காணிக்கையாக அளித்துப் பூஜித்தான்.

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரைப் போலவே அநேகமாக எல்லா சாஸ்திரங்களிலும் உத்தம க்ரந்தங்களை இயற்றி பாரத நாட்டின் வித்யா

---

अतुल विविध विद्वन्मंडलीलाल्यमानः
प्रभुमणि रघुनाथ प्रौढ भूपाल केन ।
निहितनिखिल विद्वन्मौलि पादस्सुधींद्रः
परजन दुरवापं प्राप हेमाभिषेकं ॥

- श्रीराघवेंद्रविजय : ।

वादे नित्यं वैरि विद्वज्जय श्री राजास्थाने प्रापिता मां त्वयीति
व्याख्या व्याघार्कनृपस्य महां रंगस्थानं निर्ममे श्री सुधींद्र : ॥

- श्री राघवेंद्र विजयः ।

व्यासेनोक्तां व्याकरोघद द्वितीयस्कंधं प्रायो दुर्गमे काव्यरम यं ।
मौलेरग्रे मौक्तिकं वन्ममोसीत् ॥

- श्री राघवेंद्रविजयः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

பொக்கிஷத்தை நிரப்பி அழகுபடுத்தினார். அவர் இயற்றிய "आपस्तंभ शुल्भ सूत्रप्रदीप, समासशक्ति निर्णय, ब्रह्मसूत्र अधिकरण न्यायमाला,", ஸ்ரீசந்திரிகாராயரின் தர்க்க தாண்டவ வ்யாக்ய "सद्युक्ति रत्नाकर" முதலான அவருடைய நூல்கள் வித்வன் மண்டலியின் மதிப்பைப்பெற்றவை ஸ்ரீயவரின் தர்க்க தாண்டவ வியாக்யானம் வீணாபாணியின் (ஸரஸ்வதியின்) நர்த்தன மேடையாகக் காணப்பட்டது. இவைகளல்லாமல் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் ''சந்திரிகா'', ''ந்யாய ஸுதா'' "தத்வப்ரகா"சிகா, "தத்வோத்யோத" முதலான (चन्द्रिका न्यायसुधा, तत्वप्रकाशिका, तत्वोद्योत) க்ரந்தங்களுக்கு இயற்றின உத்தமமானதும் விஸ்தாரமானதுமான வ்யாக்யானங்கள் அன்றைய வித்வத் ப்ரபஞ்சத்தை வியப்படையச் செய்தன. ஆனால் மாத்வர்களின் துர்பாக்யத்தினால் அந்த க்ருதிரத்னங்கள் இன்று கிடைக்கவில்லை. மிகக் கஷ்டமானதும் ஆழ்ந்த பாகவத த்விதீய மற்றும் ஏகாத க்ரந்தங்களுக்கு ஸ்ரீயவர்கள் இயற்றிய வ்யாக்யானம் ஸுரஸரஸ்வதியின் கிரீடத்தின் சிகரத்தில் ப்ரகாசிக்கும் முத்தும்ணியைப்போல விளங்கியது.*

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் ஸாஹித்ய சாஸ்திரத்தின் "दृश्य, श्राव्य'' என்னும் இந்த இரண்டு பாகங்களிலும் ஜகத் பிரஸித்தியை (மதிப்பை)ப் பெற்ற க்ருதிகளை இயற்றி ஸாமான்யமாக மாத்வர்களுக்கு ஸாஹித்யத்தில் (இலக்கியத்தில்) ஞானமில்லையெனும் அவதூரை நிரந்தரமாகப் பரிகாரம் செய்தார். ஸ்ரீயவர்களின் 1.अमृताहरण 2. श्रीव्यासराजभ्युदय 3. श्रीविजयींद्रहमरादर्श 4. वैराग्य तरंग முதலிய உத்தமமான காவ்யங்கள் 5. दयालु शतक 6. शतापराध सूत्र முதலிய ஸ்தோத்ர க்ரந்தங்கள் 7. सुभद्रापरिणय 8. सुभद्रा धनंजय முதலிய நாடகங்கள் 9. अलंकार मंजरी 10. अलंकार निकष (मजूंषा?) 11. साहित्य साम्राज्य முதலிய வித்வான்களின் பெருமதிப்பிற்குரிய மிக நிபுணத்வமுள்ள அலங்கார

---

शिष्यः श्री विजयींद्रसंय मिमणीः षड्दर्शनी दर्शिनः
यत्कारुण्य समेधि ताखिल कलोत्कर्षः सुधीन्द्रो यतिः ।
निर्मात्सर्य गुणोल्लसत्सुम नसां मोदाय लक्ष्मीपते :
प्रीत्यै मध्वमुनी शितुर्वितनुते सद्युक्तिरत्नाकरे ॥

- तर्कतांडव व्याख्या सद्युक्ति रत्नाकर

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

[2]க்ரந்தங்கள் ஸுரபாரதிக்கு விஹாரம் செய்ய உத்யானவனமாயிற்று. கத்ய பத்யாத்மக (வசனம் கவிதை) [3] நிர்மாண வித்தையில் (गद्य पद्यात्मक निर्माणविद्या) முதன்மை பெற்றுள்ள [3] ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் குருபாதங்களவர் ஸாஹித்ய ஸேவையை பாரதீய காவ்ய மேடையில் நர்த்தனம் செய்வித்து விட்டார்!! அக்காலத்திய க்ஞானிகள், கவிகள், வித்வான்கள் ஸ்ரீயவர்களின் பாண்டித்யம், அதிசய மஹிமைகளைக் கண்டு, மிக்க மகிழ்ச்சியடைந்து புளகாங்கிதராய் அவருடைய நல்ல குணங்கள், வித்யா, தபஸ், உதாரகுணம் முதலிய ஸத்குணங்களை வர்ணித்துத் தலைசிறந்த கவிதை, காவ்யம், [4]அலங்கார க்ரந்தங்களில் மனமார மெய் மறந்து பாராட்டியுள்ளார்கள்! மஹாமஹிமரான ஸ்ரீகளவரை அன்றைய அந்தப் பண்டிதபாமரர்கள், ''வித்யா சக்ரவர்த்தி'', ''ஷட்தர்சனாசார்ய'', கவிஸார்வ பௌமசிகாமணி", "கவி கண்டீரவ" (विद्या चक्रवर्ति, षड्दर्शनाचार्य, कवि सार्व भौम शिखामणि, कवि कंठीरव) என்றெல்லாம் பாடிப்பாடிக் கொண்டாடினதில் ஆச்சரியமில்லை!

## 66. நண்பகலிலேயே சூரியன் மறைந்தான்.

பீஜப்பூர் அரண்மனையில் அபூர்வமான வைபவம், ப்ரஜைகள் ஆனந்தமிகுதியினால் उद्धारकमहा महिम (புனிதப்படுத்தும் மஹான்)ருக்குக் கௌரவமளிக்கும்

---

1. "अलंकार मंजरी" க்ரந்தத்தில் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் தமது குருபாதரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரையே நாமகரணன்னாக வைத்துக் கொண்டு லக்ஷ்யமாக உதாரணம் கொடுக்கிறார். சப்த மற்றும் அர்த்தாலங்காரம், இவைகளைக் காட்டும்பொழுது திருஷ்டாந்தமாக ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரை எடுத்துக்காட்டும் முறை மனோஹரமாயுள்ளது. ஸ்ரீவிஜயீந்திரரின் வெவ்வேறு அதிசய மஹிமைகளை அலங்கார மஞ்சரியில் காணலாம்.

2. "........ नर्मारामं नाटकं चित्रगाद्यं" - श्री राघवेंद्रविजयः

3. "सुधीन्द्रयोगिनं सेवे साधुसत्कृत संपदं ।
सगद्य पद्य निर्माणविद्यायाः प्रथमंपदम् ॥"

இவ்வாறு ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் துர்வாதி திக்விஜயம், ஸித்தாந்த ஸ்தாபனம், கிரந்த மியற்றுதல், சௌஷஷ்டிகலா கௌசல்ய (चौषष्टिकला कौशल्यप्रदर्शन) ப்ரதர்சனம், அதி அற்புத மகிமை, அதிசயங்கள் நிகழ்த்துவது முதலான ராஜர்களால் கௌரவம், வித்வான்களால் கௌரவம் இவைகளைப் பெற்று பரம பூஜ்ய குருபாதரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் பாத ஸேவையிலேயே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு விளங்கினார்.

Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விழாவில் பங்கு கொள்ள வந்துள்ளனர். ஆஸ்தான சபா மண்டபத்தில் ஜனங்கள் நிரம்பி வழிகின்றனர். எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. ஆஸ்தான மண்டபத்தின் மேடை மீது வெகு அழகாக அலங்கரிக்கப்பட்ட தங்க பீடத்தில் ஒளிவீசும் முகத்தையுடைய ஒரு மூர்த்தி காணப்படுகிறது. தெய்வீக ஸௌந்தர்யம், கண்ணியமான உருவம், காஷாய உடை, துளசி மற்றும் கமலாக்ஷமாலை அணிந்துள்ள அந்த திவ்ய புருஷரின் பிரகாசமான முகத்தில் வீணாபாணி ஸரஸ்வதி தேவியின் ஸாந்நித்யம் குடிகொண்டுள்ளது. அந்த கண்ணியமான மஹா புருஷரின் அழகுமிகுந்த முகத்தாமரையில் மின்னலைப்போல் பளிச்சென்று மின்னி மறையும் புன்னகை சந்திரனின் நிலவை வெட்கமடையச் செய்கிறதைப்போல் காணப்படுகிறது. பரவாதிகளின் முகத்தை மங்கவைக்கும் அழகான தினமணியின் காந்தியுடன் போட்டியிடுவதைப் போலுள்ள அந்த தெய்வீக ஒயியைக் கண்டு மெய்சிலிர்த்து ப்ரஜைகள் பக்தி-சிரத்தையுடன் அந்த மஹானை வணங்கிக் கொண்டிருக்கின்றனர். தேஜஸ்வியான அந்தப் பரம மங்கள மூர்த்திதான் பரம பூஜ்ய ஸ்ரீவிஜயீந்திர யதிபுங்கவரின் பட்டசிஷ்யரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர்கள்!

பன்னிரெண்டு வருஷ காலம் பஞ்ச காலத்தினால் களைத்து வாடி வதங்கிய தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டு தமது வேண்டுகோளின்படி பீஜப்பூருக்கு எழுந்தருளி

---

4. ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரையே லக்ஷியமாக வைத்துக் கொண்டு கவியொருவர் அலங்கார க்ரந்தமொன்றை இயற்றியுள்ளார். ஆரம்பத்தில் "ஸ்ரீமத்ஸுதீந்திர - "श्रीमत्सुधीन्द्र संयमीपुंगवगुण कथनपुं खित गरिम्णः । ललितानुदाहरामिश्लोकानकृतिलोकविरचित श्लाघान् ॥" என்று சப்தம் செய்திருக்கிறார். அந்த க்ரந்தத்தில் ஸ்ரீஸுதீந்திரரின் குணங்களை கவி வெகு நன்றாக வர்ணித்திருக்கிறார். ஸ்ரீயவர்களை "समाधि" நிருபண காலத்தில் வர்ணித்திருக்கும் ஒரு உதாரணம் பாருங்கள்.

"अथ प्रथम समुच्चय प्रतिद्वंद्वितया समाधिर्लक्ष्यते" - सौकर्य यदि कार्यस्य कारणांतर सन्निधेः । कार्यस्य संयगाधात्स रसमाधिरितीर्यते ॥ यत्रै कस्मिनूकारणे कार्यसाधनाय प्रवृत्तेसति काकतालीय यदन्यदपि कारण मागत्य तत्कार्य सुकरं करोति समाधिरिति व्यपदिश्यते । यथा -

धीरश्रीमत्सुधीन्द्र प्रति (व्रति?) वर धनदः किन्नरी गीतिभुत्व - ध्वान क्रीडापदानं सदपि निशयमन्नंतरीण्वा कुलोपि । मूर्धनः कंपैर्मुदेव प्रमदमभिनयनं श्रीमते सोऽयमक्षोः । तत्कालोत्तंसि मौलिप्रग विरलरजः पातचे रश्रु पूदैः ॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ராஜ்யத்தின் தானியக் களஞ்சியத்தில் தானிய லக்ஷ்மியை ஆவாஹனம் செய்து தபோசக்தி (மந்திர சக்தி)யின் விளைவாகத் தானியங்கள் அக்ஷயமாகும்படி (நிறையும்படி) செய்து, ஏழு நாட்கள் உபவாஸ வ்ரதத்தினால் ஜபதபானுஷ்டானங்கள், பாராயணங்கள், பகவதாராதனாதிகளினால் மூன்று நாட்கள் வரை தொடர்ந்து மழை பெய்வித்து ஜனங்களுக்குப் புத்துயிரளித்து தனது ராஜ்ஜியத்தைப் பஞ்சத் தாண்டவத்திலிருந்து விடுவித்து ப்ரஜைகளை மரண வலையிலிருந்து காப்பாற்றி ரக்ஷித்த ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரை பீஜப்பூர் ஆலி அதில்ஷா இன்று கௌரவவிக்கப்[1] போகிறான்! அதனால்தான் ராஜ அரண்மனையில் அப்படிப்பட்ட வைபவம்.

மந்திரி, யுத்த வீரர்கள், சேனாதிபதிகளுடன் சுல்தான் ஸ்ரீயவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து ஸ்வாமிகளை ஸேவிக்கத் தயாராக இருக்கிறான். வாத்யங்கள் முழங்குகின்றன. புரோகிதர்கள் மந்திரம் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். ஆதில்ஷா தனது முதன் மந்திரியான கனச்யாமராயனினால் குருபாதருக்கும் பாத்பூஜை செய்வித்து விலைமதிக்க வொண்ணாத ரத்னாபரணங்கள், பணம் தங்கம் மற்றும் வஸ்திரங்களை "ஜகத்குரு" என்னும் அனிதர ஸாதாரண விருதைச் சமர்ப்பணம் செய்து கிருதார்த்தனானான். அத்துடன் ஜகத்குருவென்று தெரிவிக்கும் வெண்கொற்றக்குடை, சாமரம், சௌரி, பகல் தீவட்டிகளை, யவன ராஜ்யத்தின் அஸாதாரண விருதுகளான பச்சைக்குடை, ஒட்டகத்தின் மீது அடையாளம், நகாடா, அம்பாரி முதலிய அரசு மரியாதைகளை ஸமர்ப்பித்தான். புகழ்பாடும் சாரணர்கள் ஜயகோஷம் செய்து கொண்டிருக்கையில் பீரங்கி ஸலாம் முழங்கியது. சுமங்கலிகள் இனிமையான குரலில் மங்கள கீதங்கள் பாடிக்கொண்டு ஸ்ரீயவர்களின் பாதகமலங் களுக்கு மங்களஹாரதி எடுத்தனர். அந்த அபூர்வமான வைபவங்களைக் கண்டு ஸகலரும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினர். ஸ்ரீபாதங்களவர் சிரித்த முகத்துடன் ஆசீர்வாதங்கள் செய்தருளினார்.

---

1. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடத்தின் புஷ்ஹா அமல்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஆதில்ஷாவிற்குத் தன்னுடைய ஆப்த மந்திரியான கனச்யாமராயர் ஸ்ரீயவர்களின் சிஷ்யராக வேண்டுமென்ற விருப்பமிருந்தது. தனது விருப்பத்தைத் தெரிவிக்க கனச்யாமராயரை அருகில் அழைத்து இவ்வாறு சொன்னார்:-

ஆதில்ஷா:- அன்புள்ள திவானவர்களே, ஸ்ரீஸ்வாமிகள் பெரிய மஹான். தாங்கள் அவரது சிஷ்யராக வேண்டுமென்பது நமது விருப்பம்.

கனச்யாம்:- மன்னிக்க வேண்டும் ஜஹாம்பனாஹ்! அது முடியாத காரியம்.

ஆதில்:- (ஆச்சரியமடைந்து) அது ஏன் திவானவர்களே?

கன:- மழை பெய்விப்பது, தானியக் களஞ்சியத்தில் தானியம் நிரப்புவது, இவை ஸாமான்யமான மகிமைகள் இவைகளினால் மாத்திரம் நான் அவருடைய சிஷ்யனாக முடியாது. நானிவருடைய சிஷ்யனாக வேண்டுமானால் அவர் அஸாதாரண மகிமை காண்பிக்க வேண்டும்! இவரால் முடிந்தால்... பார்க்கலாம் ஹுஜூர்.

கனச்யாமராயரின் பேச்சைக் கேட்ட ஆதில்ஷா கோபமடைந்தான். சபையோர் இதைக்கண்டு பிரமித்தனர். மஹாத்மாவிற்கு அபசாரமாயிற்றென்று தர்மானுயாயிகள் கோபமடைந்தனர். இவையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீயவர்கள் புன்னகை செய்து இவ்வாறு கூறினார்.

ஸ்ரீ:- திவானவர்கள் ஒருவேளை "தமது பெயருடையவன் செய்யும் காரியங்களைச் செய்ய நம்மால் முடியுமோ, முடியாதோ என்று சந்தேகப்படுவதைப்போல் தெரிகிறது!

ஸ்ரீயவர்களின் வசனத்தில் அர்த்தம் உடனே யாருக்கும் புரியவில்லை. சபை சற்று நேரம் மௌனமாயிற்று. கனச்யாமராயர் பீஜப்பூரின் திவானாக இருந்ததைப்போல நல்ல உழைப்பாளி, உத்தம பண்டிதனும் மஹாபுத்திசாலியுமானவர். ஸ்மார்த்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ப்ராம்மணனான அவனுக்கு ஸ்ரீயவருக்கு ஆதில்ஷா செய்த மரியாதைகள் அவ்வளவாக இஷ்டமில்லை. ப்ரபு சுல்தான் மற்றும் பிரஜைகளின் விருப்பத்திற்கு எதிராக ஒன்றும் சொல்ல முடியாமல் அரைமனதுடனேயே விழாவில் பங்கேற்றிருந்தான். ஏதாவது ஒரு காரணம் கிடைத்தால் ஸ்ரீயவர்களைப் பரீக்ஷைக்குள்ளாக்கி அவமதிப்பதற்காகத் திட்டம் போட்டுக்கொண்டிருந்த அவனுக்கு, "ஸ்ரீயவர்களின் சிஷ்யராகுங்கள்" என்று சுல்தான் சொன்னது தனது மனதில் போட்ட திட்டத்தை அமுலாக்க வாய்ப்புக் கிடைத்தது போல் ஆயிற்று. ஸ்ரீயவர்களை வணங்கி:-

கன:- ஸ்வாமி, தாங்கள் மஹாத்மா என்பது உண்மை. நான் தங்களுடைய சிஷ்யராக வேண்டுமென்றால் நான் சொல்லும் அஸாதாரணமான மிகக் கடினமான காரியத்தைச் செய்து காண்பித்தால் எனது குடும்ப ஸஹிதமாக தங்கள் சிஷ்யனாகத் தயாராக உள்ளேன். அது செய்ய முடியாவிட்டால்,.... "சிஷ்ய சமூக சஹிதம் அத்வைதிகளாக வேண்டும்" என்னும் தம்து உட்கருத்தை, "அது முடியாவிட்டால்...?" என்று பொருள்படும்படியாகத் தெரிவித்துள்ளார்! மகிழ்ச்சி. "பகவானே நாம்" என்று அர்த்தமாகும்படி தெரிவித்துள்ளார். "நாமே ஈஸ்வரன்" என்று உபாஸனை செய்பவர்கள் நாம் அல்ல! நாம் ஈஸ்வரனல்ல! நாம் ஈச்வரனின் தாஸர்கள்!! நமது ஸகலமும் அந்த மஹாமகிமையுள்ளவனின் வசம்! அவன் ஆட்டிவைத்தபடி ஆடும் சுதந்திரமற்ற கைப்பொம்மைகள். ஸ்வதந்திரரான "நாம் செய்கிறோம்" என்று சொல்வதோ அல்லது, "நாம் மஹாத்மா" என்று சொல்லிக்கொள்ளுவதற்கு நமக்கு யோக்யதையில்லை. தேசத்தின் மக்களின் விபத்தை விலக்கியவர் மஹா மஹிமரான ஸ்ரீஹரியே தவிர நாமல்ல நமது குருபாதரின் அனுக்ரஹத்தினால் அது ஸாத்யமாயிற்று. ஸ்ரீஹரி நமது மூலமாக ஜனங்களைக் காப்பாற்றினார். அந்த தேவாதி தேவனின் கருணையிருந்தால் எத்தகைய அஸாத்ய காரியமும் சுலபமாக ஸாத்யமாகிவிடும்! ஸ்ரீவிஜயீந்திர குருபாதர் நம்மை இங்கு இப்பொழுது அனுப்பும்பொழுது, "பீஜாப்பூர் தேசத்தின் பக்த

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஜனங்களுக்கு நன்மை ஏற்பட வேண்டியுள்ளது. தாங்கள் அங்கு அந்தக் காரியத்தை முடிக்க வேண்டும். அங்கு உமது தத்வ பரீக்ஷை நடைபெற இருக்கிறது. தைரியமாகக் கடமையை நிறைவேற்றுங்கள். ஸ்ரீஹரிவாயு உம்மைக் கொண்டு அந்த மாபெரும் செயலைச் செய்து நிகரற்ற கீர்த்தியை உமக்கு அளிக்கப் போகிறார்கள்" என்று ஆக்ஞாபித்து ஆசீர்வதித்து அனுப்பியுள்ளார். குருபாதரின் வசனங்களின் கருத்து தலைநகருக்கு வந்ததுமே தெரிந்தது. இப்பொழுது திவானவர்களில் நிபுணத்வம் குருபாதரின் பவிஷ்ய வசனத்தை உறுதியாக்கிவிட்டது. சரி. கனச்யாமரே! நீங்கள் ஒப்பும்படியான காரியம் எது என்பதைத் தெரிவித்துவிடும். குருபாதரின் ஆசீர்வாத பலத்தினால், ஸ்ரீஹரி வாயுகளின் அனுக்ரஹத்தினாலும் அதை நிறைவேற்ற முயற்சி செய்வோம்.

கன:- யதிச்ரேஷ்டரே, நமது ராஜ்யத்திற்கு தாங்கள் செய்துள்ள மாபெரும் உதவிக்கு நாம் நன்றியுள்ளவராக இருக்கின்றோம். மஹாப்ரபு (சுல்தான்) நான் தங்களது சிஷ்யனாக வேண்டுமென்று விரும்பியுள்ளார். அது எனது சொந்த விஷயம்! குரு-சிஷ்ய சம்மந்தம் அதிகார பலத்தினாலோ அல்லது பலவந்தமாகவோ ஏற்படுவது முடியாத காரியமல்லவா? மனப்பூர்வமாய் நான் தமது சிஷ்யனாக வேண்டுமானால் நடுப்பகலில் தாங்கள் ஸூர்ய பகவானை ஒரு நொடிப்பொழுது மறைத்து இருட்டாகும்படி செய்யவேண்டும்! அதைச் செய்வதற்குத் தங்களுக்குச் சக்தியிருந்தால் ஜகத்தில் தாங்கள் உத்தம குருவென்றும் மஹாத்மாவென்றும் ஒப்புக்கொண்டு தங்கள் சிஷ்யனாகிறேன். ஸ்வாமி, இது தங்களுக்குச் சம்மதமா?

கனச்யாமரின் பேச்சைக் கேட்டு சபையோர் திக்பிரமை பிடித்தவர்கள் போலானார்கள். இது எப்படிப்பட்ட விஷப்பரீக்ஷை? இவ்வாறு ஸ்ரீயவர்களை இக்கட்டான நிலைமையில் சிக்கவைத்தது நியாயமா?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy


ஒருவேளை ஸ்ரீயவர்கள் அக்காரியத்தைச் செய்யாவிட்டால்.... யதீச்வரருக்கு அவமானம் ஏற்படுமல்லவா? ராஜ்யத்திற்கு வேறு எந்த ஆபத்து நேருமோ என்றும் கவலை ஏற்பட்டு ஒன்றுமே தெரியவில்லை.

ஸ்ரீ:- (புன்னகையுடன்) கனச்யாமரே, உமது சவாலை ஏற்றுக்கொண்டுள்ளோம். ஸ்ரீஹரி வாயுகளின் கிருபையினால், குருவர்யர் பாதானுக்ரஹ பலத்தினால் நாளை நண்பகலில் உமது மனவிருப்பம் நிறைவேறும்! ஸர்வ வ்யாபியான ஸ்ரீஹரி பக்தரின் மானத்தைக் காப்பாற்ற சக்தியுள்ளவன்!

தீர-கம்பீர வாணியினால் உத்தரம் கொடுத்த ஸ்ரீயவர்களின் அம்ருதம் போல் இனிய பேச்சைக்கேட்டு சபையோர் மகிழ்ந்தனர். ஆதில்ஷாவின் முகம் ப்ரகாசமடைந்தது, மகிழ்ச்சியால் ஸ்ரீயவர்களை வணங்கி, குருவர்யரே, தங்களது கிருபை நம்மீது வெகுவாக உள்ளது. நமது திவான் தம்மை விஷமப் பரீக்ஷைக்கு இலக்காகச் செய்தமைக்கு நாம் வருந்துகிறோம். நம்மை மன்னித்தருள வேண்டும். ஸ்வாமி தாங்கள் திவான்வர்களின் பேச்சுக்கு, "ஒருவேளை, திவான் தனது பெயர் கொண்டவரின் கார்யத்தை திறமையுள்ளவரோ அல்லவோ என்று சந்தேகம் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது" என்றீர்கள். அதன் அபிப்ராயம் நமக்கு விளங்கவில்லை. தயவுசெய்து குருபாதங்கள் அதை விளக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன் என்று விக்ஞாபித்தான்.

ஸ்ரீ:- ஸுல்தானவர்களே உமது திவான்ஜி அவர்கள் பெயர் "கனச்யாம்" என்பதல்லவா?

சுல்:- ஆம் ஸ்வாமி.

ஸ்ரீ:- கனச்யாம் என்பதிலுள்ள 2வது பகுதி "ச்யாம்" என்பதல்லவா?

ஆதில்:- (ஆச்சரியத்துடன்) உண்மை!

ஸ்ரீயவர்கள்:- (புன்னகையுடன்) "ச்யாம்" என்றால் "கிருஷ்ண" என்று பொருள் "நாமோத்தர க்ருதகார்ய" மென்றால் கிருஷ்ணனால் செய்யப்பட்ட காரியம் என்ற கருத்து.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கிருஷ்ணன் செய்த கார்யமெது? ஸைந்தவவத காலத்தில் பக்தனான அர்ஜுனனின் சபதத்தை உண்மையாக்க ஸுதர்சன சக்ரத்தினால் ஸூரியனை மறைத்தது! அல்லவா? நம்முடைய அபிப்ராயம் இது "கிருஷ்ணனைப்போலவே சூரியனை மறைப்பதற்கு நம்மால் முடியுமோ முடியாதோ என்று மந்திரி ஸந்தேகிக்கிறார்" என்றார். இதுதான் அதன் ரகசியம்! அந்த கிருஷ்ணனின் கிருபையினால் அது எளிதாக நிறைவேறும் என்ற நம்பிக்கை நமக்குள்ளது!

ஸ்ரீயவர்களின் பேச்சைக்கேட்டு வியப்படைந்த சுல்தானின் முகம் மலர்ந்தது. கனச்யாமராயனின் முகம் மங்கிற்று. தனது இதயத்தின் எண்ணத்தை அதை ஸாதிக்கத்தான் ஸ்ரீஹரி தயவினால் ஸமர்த்தர் என்னும் விஷயத்தைத் தான் கேள்வி கேட்பதற்கு முதலிலேயே, "ஸூத்ரப்ராய"மாக ஸ்ரீயவர்கள் தெரிவித்தாலும் அதைப் புரிந்து கொள்ளாமல் மகாத்மாவைப் பரீக்ஷிக்க முயற்சி செய்த தனது புத்தியின்மைக்காக கனச்யாமராயர் நொந்து கொண்டார். மஹாதபஸ்விகளான ஸ்ரீயவர்களின் சாபம் எங்கே பீடிக்குமோ என்ற பயத்தினால் தத்தளித்தான். உடனே ஸ்ரீயவர்களின் பாதத்தில் விழுந்து மன்னிப்புக் கோரினான். "பகவத் ஸங்கல்பப்படி நடந்த காரியத்திற்காகக் கவலைப்படக் கூடாது" என்று இனிய பேச்சுக்களினால் அவனைச் சமாதானப்படுத்தி மறுநாள் தாம் சொன்னபடி கனச்யாமராயனின் மனவிருப்பத்தை நிறைவேற்றுவதாக உறுதிகொடுத்து ஸ்ரீயவர்கள் தனது இருப்பிடத்திற்கு எழுந்தருளினார்.

மத்தியானம் 12 மணி வேளை. சூர்ய பகவான் உக்ர தேஜஸ்ஸுடன் காணப்படுகிறான். ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் முகாம் செய்திருந்த வீட்டின் முன்னால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியுள்ளனர். ஆதில்ஷா பிரதமமந்திரி கனச்யாம், மற்றும் அரசாங்க முக்கியஸ்தர்கள் ஸ்ரீயவர்கள் சூரியனை மறைக்கும் அற்புதத்தை அதிசயத்தைக் காண ஆர்வத்துடன் இருக்கின்றனர். கனச்யாமராயர் தனது புத்தியீனத்தின் பலனாக என்னென்ன தீமைகள் உண்டாகுமோ என்ற பயத்தினால் விழித்துக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

கொண்டமர்ந்திருக்கிறான். ஸ்ரீயவர்களைப் போன்ற அபரோக்ஷ க்ஞானிகளை பரீக்ஷைக்கு இலக்காக்கிய கனச்யாமராயனை நிந்தித்துக் கொண்டு, ஸ்ரீஸுதீந்திரர் தமக்கு அருளிய மாபெரும் உபகாரத்தை வர்ணித்துக் கொண்டு ஸ்ரீயவர் இந்த விஷம பரீக்ஷையில் வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்று மனதிற்குள் பகவானைப் ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் ஸ்ரீதிக்விஜயராமரின் பூஜாராதனை முடித்துவிட்டுத் தனது ஆராத்ய மூர்த்தியான கருடவாஹன ஸ்ரீலக்ஷ்மி நாராயணரின் பாதங்களைப் பிடித்துத் திடபக்தியுடன் ப்ரார்த்தனை செய்கிறார். பகவந்தனின் அசிந்த்யற்புத சக்தி, பக்தபராதீனத்வம், அவருடைய அமர சரிதாம்ருத ஸ்தோத்ரம் ஸ்ரீயவர்களின் முகத்தினின்று வெளிப்படுகிறது. மஹாமந்த்ரங்களின் ஜபம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஸ்ரீயவர்கள் தன்னைமறந்து பகவானை மனக்கண்ணினால் பார்த்துக்கொண்டு சூர்யாந்தர்யாமியான ஸ்ரீலக்ஷ்மி நாராயணனை ஏகாக்ரசித்தத்துடன் த்யானித்துக் கொண்டிருக்கிறார். அரைமணி நேரம் கழிந்தது, ஒரு மணி நேரம் ஆயிற்று. ஆகாயத்தில் தினமணி ஜகஜ்யோதியாக ப்ரகாசித்துக் கொண்டியிருக்கிறான். ஜனங்கள் இனி என்ன நடக்குமோ என்ற ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருக்கையில் சூரியரின் தீக்ஷ்ணமான வெப்பம் மெல்ல மெல்லக் குறைய ஆரம்பித்தது. அஸ்தமன காலத்திய மங்கலான ஒளியுடன் காணப்பட்டான் ஸூர்ய பகவான். ஜனங்களோ ஆச்சரியத்துடனும் வியப்புடனும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அந்த அதிசய நிகழ்ச்சியை (Miracle)!! ஆஹா! என்ன ஆச்சரியம், என்ன அதிசயம்! இருந்தாற்போல் கார் முகில்கள் கவிழ்ந்து கொண்டு சூர்யன் முழுவதுமாக மறைந்தேவிட்டான்!! பாகவதோத்தமரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் பக்திக்கும், தவத்திற்கும் ஸூர்யாந்தர்யாமியாக வீற்றிருந்து அவனுக்கு தேஜஸ்ஸை அருளுபவனான ஸாக்ஷாத் ஸ்ரீஹரியே கண்முன் வந்து நிற்கும்பொழுது ஸ்ரீஹரியின் ஸங்கல்பத்தின் படியே நடக்கும்படியான சூர்யனும் நடந்து கொள்ளத்தானே வேண்டும்? தனது உபாஸகரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் வாக்கை உண்மையாக்க வேண்டி சூர்யாந்தர்கத நாராயணன் தனது காந்தியை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நொடிப்பொழுது மறைத்தான். பகவான் தினகரன் ஸ்ரீயவர்களின் தவத்திற்கு மெச்சி ஒரு நொடிப்பொழுது மறைந்தான்.*

ஸ்ரீயவர்கள் காண்பித்த அதிசயத்தை (Miracle)க்கண்ணாரக் கண்ட ஜனங்கள் குருவைப் பாராட்டி ஜயகோஷங்கள் எழுப்பினர். ஆதில்ஷாவின் மகிழ்ச்சிக்கோ எல்லையேயில்லை. கனச்யாமராயர் ஒரே ஆச்சரியத்தினால் மூழ்க அவன் இதயம் நடுங்கவாரம்பித்தது. கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. ஸ்ரீயவர்களின் மஹா மஹிமையைக் கண்டு அவரிடம் விசேஷ பக்தி-சிரத்தையுடன் கனச்யாமராயர் தனது மதத்தின் வெளி வேஷத்தை வெளிப்படுத்தி ஸ்ரீயவர்களின் சிஷ்யனாகத் தயாராகிவிட்டான். இருந்தாற்போல் ஸூர்யபகவான் மறுபடியும் ஜோதிமயமாய் விளங்கி ஜனங்கள் கண்ணிற்குக் காணப்பட்டார். சுல்தான் கனச்யாமருடன் ஸ்ரீயவர்களின் இருப்பிடத்திற்கு ஓடினர். தியான நிஷ்டை கலைந்து சிரித்த முகத்துடன் அமர்ந்திருந்த ஸ்ரீயவர்களுக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து கனச்யாமராயர் "மஹானுபாவரே, க்ஞானிச்ரேஷ்டரே, தவப்புங்கவரே, தங்கள் மகிமையைக் கண்டு உலகமே வியப்பிலாழ்ந்துள்ளது. அற்பனான எனது வசனத்தை (சவாலை) நிறைவேற்றித் தமது ஸாத்வீக தைவீ சக்தியைக் காண்பித்து எனது அக்ஞான இருளை நீக்கிவிட்டீர்கள். இந்த தீனனின் குற்றத்தை மன்னித்தருள வேண்டும். தங்களைப் போன்ற பகவத் பக்த சிரோமணிகளும், தபோநிதிகளும் இருப்பதனாலே தான் அந்நாட்களிலிருந்தே ஜகத்தின் நன்மை தங்கு தடையின்றி உண்டாகிக் கொண்டுள்ளது. இனியும் உண்டாகும். தமக்கு நிகரான மஹாத்மாவை நான் இதுவரை கண்டதில்லை. தமது பாதசேவகனாக விரும்பும் என்னைச் சிஷ்யனாக ஏற்றுக் காப்பாற்ற வேண்டும்" என்று விக்ஞாபித்தான்.

சிரித்த முகத்துடன் ஸ்ரீபாதங்களவர்கள், "மந்திரியவர்களே! உம்து புகழுக்குப் பாத்திரர் நாமல்ல. இந்த மஹா துர்லபமான, நினைத்துக்கூடப் பார்க்க

*ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிமடத்திலுள்ளப் புராதன "ஷஹா-அமல்"லிலிருந்து எடுக்கப்பட்டது. பட்டப்பகலில் நண்பகல் அமாவாஸையைப் போலாயிற்று!

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


முடியாத அதிசயமான காரியத்தைச் செய்தவனான தயா சமுத்திரரான ஸ்ரீஹரி! அந்த லீலாமானுஷ விக்ரஹனின் கணக்கிலடங்காத லீலைகள், நம்மால் நினைத்துப் பார்க்கமுடியாத அல்லது அற்புத சக்திகளை நினைத்தால் இது ஒரு புல்லுக்குச் சமானம். அதாவது இது ஒன்றுமேயில்லை என்று சொல்லலாம்! ஜகந்நாடக சூத்திரதாரியான ஸ்ரீஹரி காண்பித்த "பக்த பாந்தவ்யம்" நாடகத்தில் நாம் ஒரு சிறிய பாத்ரம் (Character) அவ்வளவு தான்! ஸ்ரீஹரி வாயுகள் மற்றும் நமது ஸ்ரீகுருபாதரனுக்ரஹமே இதற்குக் காரணம். நாம் அவருடைய தாஸர். இதில் நம்முடைய செயல் ஒன்றுமே இல்லை" என்றார்.

நிரஹங்கார மூர்த்திகளான ஸ்ரீகளவர்களுக்குத் தண்டம் சமர்பித்துக் கைகூப்பி நின்றான் மந்திரி கனச்யாமராயர் ஆதில்ஷா ஸ்ரீயவர்களின் மகிமையை மனமாரப் புகழ்ந்து தனது திவான்ஜியவர்களைச் சிஷ்யராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ப்ரார்த்தனை செய்து "ஆனே ஹொஸூர்"* இந்த க்ராமங்களெல்லாம் ஸ்ரீமடத்திற்கு நடந்து கொண்டிருந்த ஆனேஹொஸரு

---

*"ஷமா அமல்" - ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் மடம் நஞ்சன்கூடு. ஆனேஹொஸூர் கிராமத்தைப் பக்த சிரத்தையுடன் ஸ்ரீயவர்களுக்குத் தானமளித்து நமஸ்கரித்துக் ஸ்ரீமடத்தைச் சேர்ந்தது ஒரு தவறு. இந்த விஷயம் வாசகர்களின் பரிசீலனைக்காக இங்கு கொடுக்கப் பட்டுள்ளது. சுமார், கிறிஸ்து ஆண்டு 1513ல் விஜயநகரத்திற்கு விஜயம் செய்த சுரேந்திரரை ஸ்ரீகிருஷ்ணதேவராயர் பக்தியுடன் வரவேற்றார். ஸ்ரீஸுரேந்திர விஜயவிட்டல ஸ்வாமி தேவாலயத்தில் ஸ்ரீசக ஆண்டு 1435ல் ஸ்ரீமுக வருஷம் சைத்ரசுக்ல, 9, மங்கள வாரம் (15-4-1413) ஸ்ரீராமநவமி மகோற்சவத்தை நடத்தினார். பூஜாகாலத்தில் வந்திருந்த சக்ரவர்த்தி கிருஷ்ணதேவராயரின் ஆப்தரும், ப்ரதானியும், அமருமகன் ராமராஜனின் தாத்தாவுமான

ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் தேஜஸ் மஹிமை, தவம், பாண்டித்யம் முதலிய அதிசயங்களுக்கு வசமாகி அவரிடம் குருத்வ புத்தியுடன் ராமநவமியின் தினம் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்குப் பிறகு தமது பூர்வீகர் ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்குத் தானமாகக் கொடுத்திருந்தது ஏதோ காரணத்தினால் கைதப்பிவிட்ட ஆனே ஹோசூர் என்னும் கிர்ாமம் மற்றும் மயூர க்ஷேத்திரத்தில் ஒரு பெரிய மடம் இவையிரண்டையும் அத்துடன் புதிதாக 2. லேபகிரி 3. சிருகாபுர 4. மல்லாபுர 5. ஹொன்னமட்டி மற்றும் 6. ஹெரகல்லு என்னும் கிராமங்களை (Mysore Archaeological report 1944. for 100 Inscription No.24) த்தான்ம் செய்து ஸ்ரீகளவர்களின் அனுக்ரஹத்திற்குப் பாத்ரனானான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



கிராம 1565ல் விஜயநகர வீழ்ச்சிக்குப் பிறகு ஸ்ரீமடத்தின் கைவிட்டுப்போய்விட்டது. அதையே ஆதில்ஷா ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு மறுபடியும் தானம் செய்தான்.

அதே ஸந்தர்ப்பத்தில் பிறகு ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தருக்கு கிறிஸ்து ஆண்டு சுமார் 1490ல் விஜயநகரத்தில் முந்தின அரசர் (ஸ்ரீநரசிம்மராஜர்) ஸங்கம க்ஷேத்திரத்தில் தானமாகக் கொடுத்த ஸ்ரீமடத்தின் கைதப்பிப்போன "சிக்ககுள்ளி" என்னும் கிராமத்தை சக்ரவர்த்தி கிருஷ்ணதேவராயர் முன்பு தமது பூர்வீகர்தானம் செய்த எல்லையையே எழுதிவைத்து ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தரின் பெயருக்குத் தாமிர சாஸனம் எழுதுவித்து தான் ப்ராதபருத்திர கஜபதியை ஜயித்து வந்த ஞாபகார்த்தமாக அதையும் புகழ்ந்து ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்குத் தான பூர்வகமா வசப்படுத்திக் கொடுத்த விஷயத்தை இங்கு நினைக்க வேண்டியுள்ளது. (Mysore Archacological Report 1944, for 71. Inscription No.20) இன்றைக்கும் அந்த கிராமம் ஸ்ரீமடத்தின் ஆதினத்திலிருப்பது கவனிக்கத் தக்கது. என்னும் சிராமத்தைப் பக்தி-சிரத்தையுடன் ஸ்ரீயவர்களுக்கு தானமளித்து நமஸ்கரித்தான்.

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் பரிவாரஸஹிதனான கனச்யாமராயருக்கு வைஷ்ணவ தீக்ஷயளித்து முத்ராதாரணம் குருபதேசம் முதலியவைகளால் அவனைச் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். கனச்யாமராயர் ஸ்ரீயவர்களுக்குப் பாத பூஜை செய்து அநேக பூமிகளைத் தானமாக வழங்கிப் புனிதனானான்.* ஸ்ரீபாதங்கள் சொற்ப காலம் பீஜாபுரத்திலிருந்து விட்டு சஞ்சாரக்ரமத்தில் கும்பகோணத்திற்கு எழுந்தருளினார். முஸல்மானான ஆதில்ஷாவின் ராஜ்யத்தில் அபார மஹிமையைக் காண்பித்து யவன ராஜனினால் கௌரவம் பெற்று, "ஜகத்குரு" விருதினால் அலங்கரிக்கப்பட்டவராய் வந்துள்ள அன்புள்ள சிஷ்யரை ஆலிங்கனம் செய்து கொண்டு, ஸ்ரீவிஜயீந்திரர் பரமானந்த பரவசமானார். ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் குருஸேவையில் ஈடுபட்டார் காலச்சக்கரம் சுழலவாரம்பித்தது.

*பீஜப்பூர் ஆதில்ஷாவின் மந்திரியான கனச்யாமராயனின் பேரனான 2வது கனச்யாமராயனும் பிறகு வெகு ப்ரஸித்தமடைந்து ஸ்ரீமடத்திற்கு சேவை செய்த விஷயம் ஸ்ரீமடத்தின் ஷஹா அமல் லிலிருந்து வெளிப்படுகிறது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஒவ்வொரு வருஷத்தைப் போல ஸ்ரீமடத்தில் ஸ்ரீராம நவராத்திரி உற்சவம் மிக வைபவத்துடன் நிறைவேறிக் கொண்டுள்ளது. ஒன்பது நாட்களாகத் தினந்தோறும் சாஸ்திரார்த்த விஷயம், வாக்யார்த்தம், ஸ்ரீராம கதைப்ரவனம் முதலிய கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மதுரையிலிருந்து ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்ஹாசார்யரென்னும் வித்வன்மணிகள் தன் சிஷ்யர்களுடன் வந்து பங்கேற்றிருப்பது இந்த வருஷத்தின் சிறப்பு அம்சம். இரண்டு ஸ்ரீபாதங்களவரின் ப்ரிய சிஷ்யரான ஸ்ரீவீணா திம்மண்ணாசார்யரின் மருமகனே *ஸ்ரீலக்ஷ்மி நாராயணாசார்யர் ஸ்ரீகுருராஜரின் பூர்வாசிரமத் தமக்கையான ஸ்ரீவெங்கடாம்பாதேவியின் பதி. திம்மண்ணபட்டர் காலமான பிறகு அவரது மூத்த மகனான குருராஜாசார்யர் ஸ்ரீவெங்கடேச்வரனின் வரபலத்தினால் பிறந்த சகோதரன் வெங்கடநாதனுக்கு உபநயனம் செய்வித்து லக்ஷ்மி நரசிம்மாசார்யரிடமே வேங்கடநாதனையனுப்பியிருந்தார். ஆசார்யர் 15-16 வருடங்கள் வயதிலேயே வெங்கடநாதனைப் பெரிய பண்டிதனாகச் செய்திருந்தார். ஸ்ரீகளவரின் ஆக்ஞைப்படி ஸ்ரீவேங்கடநாதாசார்யரை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார். தங்கப்பதுமை போன்ற ப்ரமசுந்தரமானவரும், தேஜஸ்வியாயும், வினயம் முதலிய நற்குணங்களுடன் கூடியவராயும், வித்யாவிசாரதருமான வேங்கடநாதர் இரண்டு ஸ்ரீகளவர்கள் மனதை மிக அதிகமாக ஆகர்ஷித்துள்ளார்! நியாய சாஸ்திர, வேதாந்தம் முதலியவை அவருடைய பாண்டித்யத்தைக் கண்டு ஸ்ரீகளவர்களே மகிழ்ச்சியடைந்தாரென்றால் ம்ற்றவர்கள் அதைச் சொல்லவும் வேண்டுமா என்ன? வேங்கட நாதனைக் கண்டதுதான் உடனே ஸ்ரீவிஜயீந்திரரின் ஹ்ருதயம் மலர்ந்தது. ஏதோ சொல்ல முடியாதபடி மனதிற்குள்ளேயே ஆனந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார் ஸ்வாமி. அவனது திவ்ய உருவம், கம்பீரமான தோற்றம், கண்யமான தனிச்சிறப்பு அம்சம், தனது குருபாதரான சந்திரிகாசார்யரை நினைவூட்டுகிறது!

ஸ்ரீசகா 1536வது ஆனந்த நாம ஸம்வாஸரம், சைத்ர சுக்ல நவமி, புதன் கிழமை (9-3-1614) ஸ்ரீமடத்தில் ஸ்ரீராமநவமி மகோற்சவம் ஆனதால் சதுர்யுக மூர்த்தியான

* ஸ்ரீகுருராஜரின் பூர்வாசிரமத்தமக்கையான வெங்கடாம்பா தேவியின் பதி.

CC0. Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீமூலராம சந்திர ஸ்வாமி, மற்றும் இதர மஹா ஸமஸ்தானத்தின் ப்ரதிமைகளுக்கு மஹாபிஷேகம் நடைபெருகிறது. 97 வயதான ஸ்ரீவிஜயீந்திர குருபாதர் பக்திபரவசராய் பஞ்சாம்ருதாபிஷேகம் செய்து கொண்டிருக்கிறார். ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் குருபாதரின் பக்கத்திலமர்ந்து உதவிசெய்துகொண்டு ஸேவை செய்து கொண்டிருக்கிறார். மன்னார்குடியிலிருந்து சின்ன செவ்வப்ப நாயகர் குடும்ப ஸமேதராக வந்து ஸ்வாமி தர்சனம் செய்து கொண்டு மெய்மறந்து வீற்றிருக்கிறார். மஹாபிஷேகம் முடிந்து ஸ்ரீமூலராமருக்கு ஸ்ரீவிஜயீந்திரகுருவர்யர் கனகாபிஷேகம் மற்றும் மஹாமங்கள ஹாரதியை எடுத்து ஸகலருக்கும் ஸ்வாமி தரிசனம் செய்வித்தார்.

சின்ன செவ்வப்ப ஸ்ரீகளவர்களுக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து தான் அளிக்கப்போகும் தானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீகளவர்களைப் ப்ரார்த்தனை செய்தான். விஜயீந்திரர் புன்னகையோடு அரசே உமது வம்சத்தவர்களுக்கு எவ்வளவு சேவித்தாலும் திருப்தியே இல்லையென்று தோன்றுகிறது! நீங்களே அபாரமாகச் செய்துள்ளீர்கள். இப்பொழுது இன்னும் ஏன்? என்றார். அரசன் கைகூப்பி, "குருதேவா! எனது வாழ்க்கையில் இதுதான் முதல் தடவைதானம் செய்வது. அனுக்ரஹம் செய்து சேவகனின், விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று விக்ஞாபனம் செய்தான். ஸ்ரீகளவர், ராஜன், உனது விருப்பத்தின்படியே ஆகட்டும்" என்று சிரித்தார்.

சின்ன செவ்வப்ப நாயகர் தலைநகரிலிருந்து தயாரித்துக் கொண்டு வந்த இரண்டு தாமிர சாஸனங்களை பழம், புஷ்பம், காணிக்கைகள் முதலியவைகளை ஸ்ரீகளவர்களின் முன்னால் வைத்து ஸங்கல்ப பூர்வகமாக தஞ்சாவூர் சேத்தில் காவேரிக் கரையிலுள்ள உத்தமான தானியங்கள் விளையும் ஒரு பெரிய வ்ருத்தியை கும்பகோணத்தில் மடத்திற்கு ஒட்டினாற்போல் காவேரி நதியின் தீரத்திலுள்ள இரண்டு வேலி நிலங்க (தோட்டம்)ளைத் தானம் செய்து ஸ்ரீயவர்களின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பரமானுக்ரஹத்திற்குப் பாத்திரமானார்.[2] ஸ்ரீயவர்கள் அரசனின் தர்மச்சிரத்தைக்கு மெச்சி ஆசீர்வதித்துப் பல மந்திராக்ஷதையருளினார். மத்தியானம் மஹாஸமஸ்தான பூஜை, தீர்த்தப்ரஸாதம், பூரிபோஜனம் முதலியவை நிறைவேறின.

அன்றிரவு தீபாரதனையான பிறகு வித்வத் சபையில் ஸ்ரீபாதங்களவர் வந்திருந்த வித்வான்கள், பண்டிதர்கள் முதலியோருக்கு உபதேசம் செய்து உற்சவத்திற்காக வந்த பண்டிதர்கள், மாணவர்கள் முதலானவர்களுக்கு விசேஷ சம்பாவனைகள் அளித்து கௌரவித்தார். ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மாசார்யர் மற்றும் ஸ்ரீவெங்கடநாதருக்கு மஹாவித்வான்களுக்கு அளிக்கப்படும் கௌரவத்தையும் விசேஷ சம்பாவனைகளையும் அனுக்ரஹம் செய்தார். பிறகு வைதிக, லௌகீக, நகரத்திய ப்ரமுகர்கள் ஸ்ரீயவர்களின் அம்ருத ஹஸ்தத்தினால் பல மந்த்ராக்ஷதை பெற்றனர்.

அன்றிரவு குரு-சிஷ்யரிருவர் மாத்திரம் ஏகாந்தமாகக் கூடிப்பேசிக் கொண்டிருக்கையில் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் கேட்டார் - "ப்ரிய சிஷ்யரே அநேக வர்ஷங்களுக்கு முன்னமே மதுரையில் நமது திம்மண்ணாசார்யரை உங்களுக்குப் பரிசயம் (அறிமுகம்) செய்து வைத்தபொழுது ஒரு ரகசியத்தைச் சமயம் வந்தபொழுது தெரிவிப்பதாகச் சொல்லி இருந்தோம். உங்களுக்கு நினைவிருக்கிறதா?"

ஸுதீந்திரர்:- ஆம், குருதேவா!

விஜயீந்திரர்:- திம்மண்ணாசார்யரின் இரண்டாவது புத்திரன் வெங்கடநாதனை கண்டீரல்லவா? அந்த மஹானுபாவனால் நமது மஹாஸமஸ்தானத்தின் கீர்த்தி கௌரவங்கள் சூரிய சந்திரர்கள் உள்ளவரை வளரவுள்ளன. அது மாத்திரமல்ல; கலியுகத்து ஜனங்களை உய்விக்கவே ஸ்ரீவெங்கடேச்வரனின் வரபலத்தினால் பிறந்திருக்கிறான். வெங்கடநாதன்! அவன் மீது எப்பொழுதும் உமது த்ருஷ்டி (பார்வை)யிருக்க வேண்டும்.

---

1. Mysore Archaelogical report 1944 Pg.121 inscription No. 27
2. Mysore Archaelogical report 1994 Pg. 127 inscription No. 28

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அவனே வருங்காலத்தில் இந்த மஹா ஸமஸ்தானத்தின் வாரிசாக வேண்டுமென்று நமது விருப்பம். அவனுடைய அவதாரம் அதற்காகவே என்று தெரிந்து கொள்ளுங்கள்.

ஸுதீ:- (ஆச்சர்யம், ஆனந்தம், குதூகலத்தினால்) குருபாதரின் ஆணையைத் தலையால் ஏற்றுக் கொண்டோம். ஆனால் ஸ்வாமி, தங்களுடைய இவ்வளவு அன்புக்குப் பாத்திரனான அந்த வேங்கடநாதன் யார் குருதேவா? இந்த மஹா ஸமஸ்தானத்தின் அதிபதியாக வேண்டியே அவதரித்திருக்கிறாரென்று தாங்கள் அருளியதின் ரகசியமென்னவோ? விவரமாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

விஜ:-(புன்னகையுடன்) அவன்! அவன் யாரென்று நினைத்தீர்கள்! அதே உமக்குப்பின்னால் தெரிவிப்பதாகச் சொன்ன ரகசியம்! நாம் இப்பொழுது தெரிவிக்கப் போகும் ரகஸியத்தை எல்லாவிதத்திலும் காப்பாற்றிக்கொண்டு வரவேண்டும். வெளியில் தெரியலாகாது!

அபரோக்ஷ க்ஞானிகள் ஒன்று கூடி முன்பு ஒருமுறை விஜயநகரத்தில் பேசிக்கொண்டிருந்தனர். சுமார் 80 வருஷங்களுக்கு முன் நடந்த விஷயம் இது. நம்மை ஸ்ரீஸுரேந்திர குருபாதருக்கு குருவர்யர் ஸ்ரீசந்திரிகாசார்யர் அர்ப்பித்த தினத்தில் நடந்தது. இன்றுகூட அந்தக் காட்சி நமது கண்ணிற்குக் கட்டுப்பட்டதைப் போலுள்ளது. ஸ்ரீகுருபாதரான சந்திரிகாசார்யர் ஸ்ரீஸுரேந்திர குருவர்யர், மித்திரர்களான. ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள், தாஸச்ரேஷ்டரான புரந்தர தாஸர், பக்தர்களில் முதன்மையான ஸ்ரீகனகதாஸர் அன்று தனிமையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் பவிஷ்யம் (வருங்கால நிகழ்ச்சி) ஒன்றை ஸ்ரீசந்திரிகாசார்யர் சொன்னார்.

ஸுதி:-(ஆர்வத்துடன்) குருதேவா, அது என்ன வருங்கால சம்பவமோ?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விஜ:--நமது குருபாதர் அன்று நம்மைப்பார்த்துப் புன் சிரிப்புடன் இவ்வாறு சொன்னார். "ப்ரிய விஜயீந்திரரே, நாம் மற்றொருமுறை அவதரிக்கப் போகிறோம். ஸ்ரீமூலராமனின் பூஜை, க்ரந்தமியற்றுதல், தர்மத்தை நிலைநாட்டுதல், லோகத்திற்கு நன்மை செய்வதே. அதன் லக்ஷியம்" வெங்கடநாதன் யாரென்று கேட்டீர்களல்லவா? அந்த நம்ம குருபாதரே வெங்கடநாதராக அவதரித்துள்ளார்! அவனைப் பார்த்த உடனேயே நாம் இதை அறிந்து கொண்டோம்! நீங்கள் எப்படிப்பட்ட பாக்கியசாலிகள்! ஆஹா! நமது குருபாதரின் இறுதி அவதாரரான வெங்கட நாதனைச் சிஷ்யராகப்பெறப் போகும் பெரும் பாக்யம் உம்முடையது! உண்மையாக உம்மைப்போன்ற புண்ய புருஷர் ஜகத்தினில் வேறுயாருமில்லை!!

ஸ்ரீவிஜயீந்திரர் ஆனந்தக் கண்ணீர் பெருக்கி நா தழுதழுத்த குரலில் அருளிய வசனத்தைக் கேட்டு ஸ்ரீஸுதீந்திரர் மெய்மறந்தார். ஆனந்த சாகரத்தில் மூழ்கி குருபாதருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து "தன்யனானேன் குருதேவா! தங்களது ஆணையைச் சிரத்தில் தாங்கி நிறைவேற்றுகிறேன்" என்று விக்ஞாபித்தார்.

## 67. ஸ்ரீஸுதீந்திரருக்கு மஹா ஸமஸ்தானதிபத்யம்

ஸ்ரீசாலிவாஹன சக ஆண்டு 1536வது ஆனந்த நாமஸம்வத்ஸரம், ஜ்யேஷ்ட, கிருஷ்ண பக்ஷம், தசமீ (10) புதன் கிழமை வித்யா பீடத்தில் ஸுதீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர்கள் 20வது சந்திரிகா ப்ரவசனம் மங்கள மகோற்சவத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார். ஸமஸ்கிருத வித்யாபீடத்தின் நூற்றுக்கணக்கான ஜனங்கள் பண்டிதர்கள் மாணவர்கள் லௌகிக, வைதீக தர்மாபிமானிகள் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் வித்யாவைபவத்தைக் கண்டானந்திக்க வந்துள்ளனர். ஸ்ரீகளவர்களிடதிலேயே இருந்து சந்த்ரிகா, ந்யாயாம்ருத, தர்க்கதாண்டவ, ந்யாய ஸுதா முதலிய க்ரந்தங்களை

---

* ஆங்கில வருடம் சுமார் (25-6-1614)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நான்கைந்து முறை அத்யயனம் செய்து பாண்டித்யம் பெற்ற அநேக பண்டித மாணவர்களும், தற்பொழுது 20-25 ஜன அனுபவி மாணவர்களும் ஸ்ரீகளவர்களின் எதிரில் அவரைச் சுற்றித் தங்கள் தங்கள் க்ரந்தங்களுடன் அமர்ந்துள்ளனர். ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் தங்குதடையின்றி அனுபவ முதிர்ந்த முறையில் வித்வத் பூர்ணமாக தீரகம்பீர முகபாவத்துடன் இன்று ஒருமுறை சந்திரிகா அனுவாதம் (விளக்குதல்) செய்து கொண்டிருக்கிறார். சந்த்ரிகாவின் மீது தற்காலத்தவர்கள் செய்யக்கூடிய எல்லாவித பூர்வபக்ஷ ஸந்தேகங்களுக்குத் திறமையுடன் சமாதானம் சொல்லிக் கொண்டே ஸித்தாந்த ஸ்தாபனம் செய்து கொண்டிருக்கிறார். ஸ்ரீஸுதீந்திரரின் வலப்புறம் வித்யாபீடத்தில் அமர்ந்துள்ள ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் சிஷ்யர் செய்து கொண்டிருக்கும் அனிதர ஸாதாரணமான அனுவாதத்தைக் கேட்டுக்கொண்டே அவருடைய வித்வத்தின் திறமையினால் மெய்மறந்துத் தலையசைத்துக் கொண்டு நடுநடுவே ஆனந்தத்தைத் தெரிவிக்கும் மகிழ்ச்சியுணர்வை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஆஹா! எத்தகைய இனிய குரல்! என்ன நிகரற்ற வ்யாக்யானம்! ஸ்ரீவிஜயீந்திரரையே மெய்மறக்கச் செய்வதென்றால் ஸுதீந்திரரின் பாண்டித்யம் எவ்வளவு பரிபூர்ணமானதாயிருக்க வேண்டும்? ஸுதீந்திரரின் அழகான முகத் தாமரையென்னும் நாடகமேடையில் வீணாபாணியான ஸரஸ்வதியே நிலா வெளிச்சத்தில் நடனம் செய்கின்றனளோ என்று சொல்லும் வகையில் காணப்படுகிறது அந்தப்பரம மங்களகரமான காட்சி!

பலத்த கரகோஷத்திடையே மகிழ்ச்சி ஆரவாரம் இதன் நடுவே ஸ்ரீஸுதீந்திரர் அனுவாதம் முடித்து ஸ்ரீவிஜயீந்திரருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். விஜயீந்திரர் விசியரை ஆலிங்கனம் செய்துகொண்டு ஆனந்த பரவசமானார். "சந்திரிகா" அத்யயனம் செய்து மங்கள உத்ஸம் செய்த சிஷ்ய மண்டலி ஸுதீந்திரருக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து தங்களை அனுக்கிரஹித்ததற்காக நன்றியைத் தெரிவித்தனர். ஸ்ரீவிஜயீந்திரர் திக்விஜய வ்யாஸ பீடம், சால்வை ஜதை, முத்தாரங்களையும் ஸ்ரீஸுதீந்திரருக்கு ஆசீர்வதித்து வெகுமானமாக அளித்தார். ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் தம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிஷ்யர்களுக்கு விசேஷ வஸ்திராபரணங்களை அளித்தார். மங்கள மஹோற்சவம் முறைப்படி நல்லவிதமாக நிறைவேறிற்று. அநேக பண்டிதர்கள், நகரத்தினர், தர்மாபிமானிகளும் இரண்டு ஸ்வாமிகளின் மகிமைகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். தமது சிஷ்யர் ஸகலருடைய அன்புக்குப் பாத்திரமாயிருப்பதைக் கண்டு ஸ்ரீவிஜயீந்திரர் வெகுவாக மகிழ்ச்சியடைந்தார்.

அன்று நண்பகலில் மஹா ஸமஸ்தானத்தின் பூஜையை குருபாதரின் ஆணைப்படியே ஸ்ரீஸுதீந்திரரே நிறைவேற்றினார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் ப்ராம்மண ஸுவாஸினிகளுக்கு மங்களத்தின் பொருட்டு ஸந்தர்ப்பணை மற்றும் தாராளமாக தக்ஷிணைகள் வழங்கப்பட்டன.

அன்றிரவு ஏகாந்தத்தில் (தனிமையில்) ஸ்ரீவிஜயீந்திரர் த்யான நிஷ்டையில் அமர்ந்துள்ளார். குருபாதரின் எதிரில் கைகூப்பி விஜயீந்திரன் முகத்தையேப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருக்கிறார். ஸ்ரீஸுதீந்திரர் அன்று விருத்தாப்பியரான தபஸ்விகளான ஸ்ரீவிஜயீந்திரரின் முகத்தில் என்னமோ ஒரு விசேஷ காந்தி, ஸாத்விக தேஜஸெல்லாம் ஒன்றாகி அவருடைய முகத்தில் குடிகொண்டு தாண்டவமாடுகின்றது. சிரித்த முகத்துடன் த்யானத்தில் மூழ்கியுள்ள குருபாதரைப் பார்த்துக் கொண்டிருந்த ஸுதீந்திரர் ஆஸன சுத்தி பூர்வகமாகித் தானும் கண்மூடி தியானத்திலீடுபட்டார். த்யானத்தில் மெய் மறந்த விஜயீந்திரருக்குத் தமது இதயத் தாமரையில் ப்ரம்மாண்டோதர புண்டரீகாக்ஷனும், வனமாலையினால் அலங்கரிக்கப்பட்டவனும், சதுர்புஜ மூர்த்தியுமான ஸ்ரீலக்ஷ்மி நாராயணனின் தரிசனமாயிற்று! ஸ்ரீகளவர் முகத்தில் சிரிப்பு. மின்னல் மின்னிற்று. இதயம் புளகாங்கிதமடைந்தது அந்தி திவ்ய விக்ரஹனாரை மாலிங்கித மார்பனான ஸ்ரீநாராயணனின் பரம மங்களகர ரூபத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே பகவத் ரூபம் மறைந்து ஸ்ரீமதாசார்யரின் மூன்று அவதார ரூபங்கள் தென்பட்டன. கண்கூசுகின்ற விசித்திர காந்தியுடன் கூடிய அந்த ஸ்ரீமதாசார்யின் உருவமானது தம்மை ஆசீர்வதிப்பது போல் உணர்ச்சி அனுபவம் ஏற்பட்டது! ஸ்ரீயவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மூடின கண்களுடன் ஆசார்யரின் பாத கமலங்களை பார்த்துக் கொண்டிருக்கையில் அந்த மகிமை பொருந்திய உருவம் மறைந்து அவரிருந்த இடத்தில் ஸ்ரீஸுரேந்திர தீர்த்தர், ஸ்ரீசந்த்ரிகாராயர் இருவரும் கண்ணுற்றனர். ஸ்ரீயவர்கள் மெய்சிலிர்த்தது. அதிசய மிகுதியினால் கண்ணீர் பெருகிற்று. மனதிலேயே இரு குருபாதங்களையும் துதித்துக் கொண்டிருக்கிறார். இன்று தான் கிடைக்கப்பெறாத லாபம் கிடைத்துள்ளது! பரமானுக்ரஹமாயுள்ளதே என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். இருந்தாற்போல் அகஸ்மாத்தாக இரு குருபாதர்களும் புன்னகையுடன் தம்மைக் கைகாட்டி அழைப்பதாக அனுபவமேற்பட்டது! உண்மை. ஸ்ரீஸுரேந்திர - ஸ்ரீசந்திரிகாசார்யர்கள் ப்ரஸன்ன மனதுடன் தம்மை அழைக்கின்றனர்!! திடீரென்று கண் திறந்தார் விஜயீந்திரர். யாருமில்லை! ஸுதீந்திரர் மாத்திரம் கைகூப்பி எதிரில் அமர்ந்துள்ளார். அவர் கண்ணிலிருந்து ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகுகிறது!

ஸ்ரீஸுதீந்திரர் த்யானத்திலிருந்து விழித்தார். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இருவர் கண்களிலும் கண்ணீர் பெருகுகிறது. ஒருவரும் பேசமுடியவில்லை. தொண்டை அடைக்கின்றது. சற்று நேரமாயிற்று. விஜயீந்திரர் ஆர்வம் கொண்டவரைப் போலக் கேட்டார்., "இதென்ன, உமது கண்களிலிருந்து கண்ணீர்!" ஸுதீந்திரர் உணர்ச்சி வசப்பட்டு குருபாதரின் ச்ரணங்களைப்பிடித்துக் கொண்டு, "குருவர்யரே! தங்கள் கண்ணில் ஏன் கண்ணீர்!? குருபாதரின் ஸேவை வெகுகாலம் செய்யும் பாக்யம் தனக்கில்லாமற் போகுமோ என்னும் பயம்! துக்கத்தினால் சக்தியற்றவனாகவும், தீனனாகவும் உள்ளேன். மஹாப்ரபு! ஸ்ரீஹரி வாயுகள், மற்றும் இரண்டு குரு பாதங்களவர்களின் த்ரிசனம் செய்யும் பாக்யம் தங்கள் கிருபையினால் இன்று எனக்குக் கிடைத்தது, ப்ரபோ! நான் தன்யனானேன்! குருதேவா! என்றார்.

தம் பரமானுக்ரஹத்தினால் அபரோக்ஷ க்ஞானிகளில் முதன்மையானவரெனப்பட்டு பகவந்தனின் கிருபைக்குப் பாத்ரராகவிருக்கும் ப்ரிய சிஷ்யரின் வசனங்களைக் கேட்டு, விஜயீந்திரருக்கு எந்த வகையிலும் ஆச்சரியமுண்டாக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வில்லை. மகிழ்ச்சியுடன் அன்போடு ஸுதீந்திரரின் உடலைத் தடவி "நாமெல்லோரும் ஸ்ரீஹரியின் தாஸர்கள், அஸ்வதந்த்ரர்கள், அவன் "अयेच्युतो गुरुद्वारा" என்பதைப்போல இரு குருபாதங்களவர்களின் மூலமாக எனக்கு ஆக்ஞாபித்திருக்கிறான். அவனது விருப்பம் குருபாதரின் ஆக்ஞையை நிறைவேற்றுவதுதானே நம்முடைய கடமை. உம், நமக்கு இனி எந்த யோசனையுமில்லை, சென்ற 15 வருஷங்களாக வாதி திக்விஜயம், ஸித்தாந்த ஸ்தாபனம், பாடப்ரவசனம், கிரந்தமியற்றுவது, முதலிய ஸத்காரியங்களால் ராஜாக்களினால் கௌரவம், சிஷ்ய-பக்தர்களினால் கௌரவங்கள், பெற்று விளங்கிக் கொண்டிருக்கும் நீங்கள் ஸ்வதந்த்ரமாக வித்யா ஸாம்ராஜ்யத்தை ஆளுவதற்கு அருகதையும் ஸமர்த்தராகவுமிருக்கின்றீர்களென்பது நாம் நன்றாக அறிந்துள்ளோம். ஸ்ரீ குருபாதரின் பூர்ணானுக்ரஹம் உங்களுக்கு இருக்கிறது. நமது ஆசீர்வாதமோ ஸதா-ஸர்வதா உங்களுக்கு அங்கரக்ஷகனாக உள்ளது. இனிமேல் ஸ்ரீமதாசார்யரின் மஹா ஸமஸ்தானத்தின் கீர்த்தி கௌரவங்கள் உம்மால் அதிகரிக்கப் போகின்றன என்னும் நம்பிக்கை நமக்குள்ளது. நமக்குக் குருவர்யரின் "करे" (அழைப்பு) வந்துவிட்டது! இனி நமது அவதாரத்தின் கார்யம் முடிந்துவிட்டது. த்ரயோதசி சுபதினத்தன்று ஸகலர்களின் முன்னிலையில் மஹா ஸம்ஸ்தானத்தின் (சம்பூர்ண) முழுப்பொறுப்பையும் உமக்கு ஒப்புவித்துவிட்டால் க்ருத க்ருத்யனாவோம். மஹாஸமஸ்தானத்தை ஒப்புக்கொண்டு நமக்குப் பிறகு வெகுகாலம் த்வைத ஸித்தாந்த ப்ரஸாரத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வந்து வைதிக வித்யா, ஸநாதன தர்மங்களை நன்றாகச் சிறப்பாகப் பிரசாரம் செய்து வரவேண்டும்" என்று உத்தரவிட்டார்.

குருபாதரின் வசனங்களைக் கேட்டு ஸுதீந்திரருக்கு அளவுக்கு மீறிக துக்கமுண்டாயிற்று. அந்தப் புனிதமான தபோமூர்த்திகளின் ஸாந்நித்யம் தமக்கு இனி இல்லாமற்போய்விடுமே என்று அவர் மனம் குழப்பமடைந்தது, திகிலடைந்தது. கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் விழ ஆரம்பித்தன. பெருமூச்சு விட்டு விக்ஞாபித்தார். "குருவர்யரே! தலையிருக்கும் போது வாலாட்டலாமா? வழி காட்டியாகிய தங்களது

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸாந்நித்யத்தில் சில வருடங்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்றிருக்கும் என் மீது எப்படிப்பட்ட மாபெரும் பொறுப்பைச் சுமத்த எண்ணிவிட்டீர்கள்! நான் அதற்கு ஸமர்த்தனா? மேலும் இப்பொழுதேன் அந்தக் காரியத்திற்கு அவஸரம்? இன்னும் சில வருடங்கள் கழியட்டும்".

ஸ்ரீவிஜயீந்திரர் புன்னகையுடன், "எத்தகைய பேச்சு தங்களது? நீங்கள் அந்தப் பெரிய பொறுப்பை வகிக்கத் திறமையுள்ளவர் மட்டுமல்ல; அது பகவத் ஸங்கல்பம்! ஸ்ரீமதாசார்யரின் பெரும் இச்சை, குருபாத ஸ்ரீஸுரேந்திர தீர்த்தரின் ஆணை! நமது பூர்ண ஆசீர்வாத அனுக்ரஹம் உமக்கிருக்கும் பொழுது கவலை எதற்கு? அந்தந்தக் காலங்களில் நமது உபதேச-வசனங்கள் உமக்குக் கடமையை உணர்த்தும். குருவர்யரின் "அழைப்பு" வந்தபிறகு நமக்கு இன்னென்ன வேலை? நமது கடமை பூராவாக முடிந்துவிட்டது. உங்களது கடமையைச் சீக்கிரம் முழுமனதுடன் நிறைவேற்றதாயுள்ளது. த்ரயோதசி தினம் எல்லோரின் முன்னிலையில் உமக்கு வேதாந்த ஸாம்ராஜ்யத்தின் முழுப்பொறுப்பை ஒப்புவிக்கப் போகிறோம்" என்றெல்லாம் உபதேசித்தார்.

ஆயினும் ஸுதீந்திரர் அதற்கு அநேக விதத்தில் தமது விருப்பமின்மையைத் தெரிவிக்கவும் விஜயீந்திரர் சிஷ்யருக்கு அன்போடு வகை வகையான உபதேசம் செய்து ஒப்புக் கொள்ளும்படி செய்தார். பிறகு குரு-சிஷ்யர்கள் வெகுநேரம் மஹாஸமஸ்தானத்திற்குச் சம்மந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி பேசிவிட்டுக் கடைசியில் பளுவான மனதுடன் ஓய்வெடுக்கச் சென்றார்.

மறுநாட்காலை ஸ்நானம் ஆன்ஹிகங்களை முடித்த பிறகு ஸ்ரீவிஜயீந்திரர் மடத்தின் அதிகாரிகளை வரவழைத்து ப்ரிய சிஷ்யருக்குத் திரயோதசியன்று மஹா ஸமஸ்தானத்தின் முழுப்பொறுப்பை ஒப்புவிக்கப் போகும் விஷயத்தைத் தெரிவித்து அதற்குச் சகலவிதமான ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்தரவளித்தார், கணக்காளரை வரவழைத்து தஞ்சாவூரரசர் ரகுநாத நாயகர், அவனது சின்ன தாத்தா, சின்ன சவ்வப்பநாயகர், சக்ரவர்த்தி வெங்கடபதி மஹாராஜா, குவாலியர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மஹாராஜா ஸிந்தே முதலான ராஜா மஹாராஜாக்களுக்கு ஸ்ரீமுகங்கள் (கடிதங்கள்) எழுதுவித்துப் பிரதிநிதிகளுடன் அனுப்புமாறு உத்தரவிட்டார்.

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு மஹா ஸமஸ்தானத்தை ஒப்புவிக்கப்போகும் விஷயம் காட்டுத் தீ போன்று கும்பகோண நகரமுழுவதும் பரவிவிட்டது. ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் இருந்தாற்போல் இப்படி ஏன் தீர்மானம் செய்தார்? என்பது யாருக்கும் புரியவில்லை. ஜனங்கள் விதவிதமாக ஊகிக்கலானார்கள். ஸ்ரீவிஜயீந்திரரிடத்தில் அபாரமான பக்தி-சிரத்தை வைத்துள்ள நகர மக்கள், இந்தச் செய்தி கேட்டு வருந்தினார்கள். ஸ்ரீகளவர் 97 வயதாகியுள்ள வராயிருந்தாலும் நல்ல திடகாத்திரராக உள்ளார். இப்படியிருக்க இந்தத் தீர்மானத்தை ஏன் மேற்கொண்டாரென்று எல்லோரும் மிக்க வேதனை அடைந்தனர். ஸ்ரீயவர்கள் ஒருமுறை முடிவு செய்தால் என்றும் அவர் அதிலிருந்து பின் வாங்குவதில்லை என்பதையறிந்திருந்த ஜனங்கள் அந்த விஷயத்தை ஸ்ரீகளவர்களிடம் பிரஸ்தாபிக்கத் தைரியமில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் ஏதோ குழப்பம், வேதனை; தங்களுக்குள்ளே பேசிக் கொள்ளுகின்றனர். எங்கு கண்டாலும் இதே பேச்சு!

ஸ்ரீசக ஆண்டு 1536வது ஆனந்த நாம ஸம்வத்ஸரம், ஜ்யேஷ்ட கிருஷ்ண த்ரயோதசி சனிக்கிழமை ஆங்கில வருஷம் சுமார் 28-6-1614 ஸ்ரீவித்யா மடத்தில் ஒரே ஜனநெருக்கம்! ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு மஹா ஸமஸ்தானாதிபத்தியத்தை ஒப்புவிக்கப் போகிறாரென்னும் செய்தி கேட்டுக் கும்பகோணத்தின் ஜனங்கள் அனைவருமே அங்கு சேர்ந்துள்ளனர். தஞ்சாவூரின் மஹாராஜா ஸ்ரீரகுநாத பூபாலர், சின்ன செவ்வப்ப நாயகர், விசேஷ அழைப்பின் பேரில் வந்துள்ளனர். மாந்துளிர், புஷ்பங்கள் முதலியவற்றால் ஸ்ரீமடம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வாத்யங்கள் முழங்குகின்றன. வைபவத்துடன் அலங்கரிக்கப்பட்ட விசாலமான சபா மண்டபத்தின் நடுவே திக்விஜ வித்யா சிம்ஹாஸனம் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. ஸார்வ பௌமத்வத்தைத் தெரிவிக்கும் வெண்கொற்றக்குடை வித்யா பீடத்தின் மேலே அலங்கரிக்கிறது. வித்வான்கள்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


புரோஹிதர், மடிதிகாரிகள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு இரு ஸ்ரீகளவர்களின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.

ஸ்ரீவிஜயீந்திரர் காலை ஆன்ஹீகம் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஸ்ரீஸுதீந்திரருடன் சபா பவனத்திற்குள் நுழைந்தார். எல்லோரும் மரியாதையுடன் எழுந்துநின்று இரண்டு ஸ்வாமிகளுக்கும் ஜயகோஷம் செய்தனர். சிரித்த முகத்துடன் ஸ்ரீவிஜயீந்திரர் வந்து கொண்டிருந்தால் ஸ்ரீஸுதீந்திரர் கம்பீரமான முகத்துடன் வந்து கொண்டிருக்கிறார்! இரண்டு ஸ்ரீபாதங்களவர்களும் வித்யாபீடத்தின் முன் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பீடங்களை அலங்கரித்தனர். எல்லோரும் நமஸ்கரித்து அமர்ந்தனர். ரகுநாத பூபாலன்-சின்ன சவ்வப்ப நாயகர் இரு ஸ்ரீகளவர்களுக்கும் வணங்கினர். புன்னகையுடன் ஸ்ரீவிஜயீந்திரர் க்ஷேமலாபங்களை விசாரித்தார். அரசன் வாடின முகத்துடன் ஸ்ரீகளவர்களிடம் விக்ஞாபித்தான்:- "குருபாதரே! தமது தீர்மானம் எனது மனதையே கலங்கச் செய்துள்ளது. அகாலத்தில் ஸ்ரீகளவர்கள் தீர்மானம் செய்யும்படி என்ன ஆயிற்று? வெகுகாலம் இரண்டு ஸ்ரீகளவர்களுடைய தரிசனம், உபதேசாம்ருதங்களினால் புனிதராக விரும்பும் நமக்குத் தங்களது முடிவு மனதில் குழப்பம், வேதனையையுண்டு பண்ணியுள்ளது. குருவர்யரிடத்தில் இவ்வாறு விக்ஞாபனம் செய்த அதிகப்ரஸங்கித் தனத்திற்கு மன்னித்தருள வேண்டும்".

ஸ்ரீவிஜயீந்திர குருவர்யர் மென்மையான, இனிமையான வசனங்களினால் பூபாலனைச் சமாதனப்படுத்தி தீர்மானமான குரலில் சொல்ல ஆரம்பித்தார். "பரம ப்ரிய ராஜபந்துக்களே, பண்டிதர்களே, நண்பர்களான கும்பகோண புரவாஸிகளே, நமது அவதார காரியம் முடியும் காலம் நெருங்கியுள்ளது. உண்மை, நாம் திடகாத்திரராக உள்ளோம்! ஸ்ரீஹரியின் கருணையினால் மனத்தின் விரும்பும் காலம் வரை ஜீவிப்பது ஸாத்யம். ஆனால் நாம் அவ்வாறு விரும்புவதில்லை. நாம் ஸ்தந்திரரல்ல. ப்ரமாத்மாவின் ஸங்கற்பத்திற்குத் தலைவணங்குவதே அவனுடைய தாஸரின் லக்ஷணம். ஜகத்தில் நாம் ஒருவரென்று சொல்லிக்கொள்ளும்படி செய்த அந்த ஜகந்நாடக ஸுத்ரதாரிக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மற்றும் நமது இரண்டு குருபாதங்களவர்களுக்கும் நாம் சேவகர். நமது இந்த முடிவுக்கு அந்த மஹானுபவர்களே காரணம். முன்பு ஸ்ரீஹரியின் ஸங்கற்பப்படி, ப்ரேரணைப்படிச் சில மகத்தான கார்யங்களை நிறைவேற்றுவதற்காக இரண்டு குருபாதர்களும் நமக்கு ஆக்ஞாபித்திருந்தனர். அவர்களின் அனுக்ரஹத்தினால் அந்தத் திசையில் லக்ஷியத்தை எட்டிவிட்டோமென்னும் நம்பிக்கை நமக்குள்ளது. நேற்று நமது குருபாதரிடமிருந்து நமக்கு "அழைப்பு" வந்துள்ளது! குரு ஆக்ஞைப்படி நடப்பதே நமது லக்ஷியம் மற்றும் கடமை. அதன்படிக்கே இன்று இந்த வித்யா ஸாம்ராஜ்யத்தின் ஸம்பூர்ண பொறுப்பை நமது அன்பிற்குறிய சிஷ்யரான ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு ஒப்புவிக்க முடிவு செய்து உங்கள் யாவரையும் இந்த மகோற்சவத்தில் பங்கேற்க அழைத்துள்ளோம். நாம் இப்பொழுது ப்ரிய சிஷ்யருக்கு மஹாஸம்ஸ்தானாதி பத்யத்தை ஒப்புவிக்க உள்ளோம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என்று நினைக்கிறோம். நம்மிடத்தில் எந்த வகையில் அன்புடனும், பக்தி - சிரத்தையுடனும் நடந்து கொண்டு வந்தீர்களோ, இனி நம் சிஷ்யரிடத்திலும் அதே முறையில் நீங்கள் நடந்து கொள்வதினால் நமக்கு எல்லையற்ற மகிழ்ச்சியுண்டாகும்.

தர்மாபிமானிகளே! "अपि सर्वं जीवितमल्पमेव" என்னும் காடகோபனிஷத் வசனத்தின்படி மானவர் (மனிதர்) எத்தனை வருஷங்கள் ஜீவித்திருப்பினும் அது சொற்பந்தான் என்று தோன்றும். இன்னும் வெகுகாலம் ஜீவிக்க வேண்டுமென்னும் ஆசை வளர்ந்து கொண்டே போகும். ஜீவிக்கும் ஆசைக்கு ஆரம்பமுமில்லை, முடிவுமில்லை. ஆனால் என்றாவது ஒரு நாள் மனிதன் இந்த லோகத்தின் வ்யவஹாரங்களை முடிக்கத்தான் வேண்டுமல்லவா? ஸ்ரீஹரியின் ஸங்கற்பத்திற்கு எதிர் யாரிருக்கின்றனர்? குருபாதரின் ஆக்ஞாபாலனம், வைதிக வைஷ்ணவ ஸத்தத்வப்ரசாரம், ஸ்ரீமதாசார்யரின் சேவை - இதோ, மது வாழ்க்கையின் லக்ஷியமாகவிருந்தது. இதுவரை அதில் ஹரி குருகள் நமக்குக் கீர்த்தியை அருளியிருக்கின்றனர். இனி நமது காரியம் முடிந்தது. அதனால் தான் பகவந்தன் குருபாதரின் மூலம் நமக்கு "அழைப்பு" விடுத்துள்ளார்கள். அதை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்று நிறைவேற்றுவோம். இதற்காகக் கலங்குவது,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



வேதனைப்படுவது, உசிதமல்ல. அவ்வாறு செய்தால் அது பகவதிச்சைக்கு விரோதம் செய்வதைப் போலாகும். நமது தீர்மானத்தை நீங்கள் யாவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும். நமது ஸுதீந்திரரிடத்தில் நம்மைக் கண்டு அவரது ஸேவை செய்யுங்கள். அவரது உபதேசப்படி நடந்து கொள்ளுங்கள். அதனால் உங்களுக்கு எல்லா மங்களங்களும் உண்டாகும்.

நரேந்திரா! நீ ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் வித்யா விசியனும் அந்தரங்க பக்தனுமாக இருக்கிறாய். வித்தைக்கு ஆதரவாளனும், ஹரி குருபக்தனும், நமது ஸமஸ்தானத்தின் முக்கிய சிஷ்யனும் ஆன உனக்கு நமது ஸமஸ்தானத்தில் உன்னுடைய குருவான ஸுதீந்திரரிடத்தில் பக்தி அன்பு இவைகளால் நடந்துகொள் என்று நாம் சொல்லத் தேவையேயில்லை. அது உனது இயற்கையான குணமாக உள்ளது. நீங்களெல்லோரும் ஸ்ரீமதாசார்யரின் பீடத்திற்கு என்றும் போல நடந்து கொண்டு ஸ்ரீஸுதீந்திர தீர்த்தருக்கு ஸகலவிதமான ஒத்துழைப்பைத் தந்து த்வைத ஸித்தாந்த ப்ரசாரத்தை இடைவிடாமல் நடைபெற உதவியாளராகவும் கீர்த்தி உள்ளவர்களாகவும் விளங்க வேண்டும். உங்களுக்கு மங்களமுண்டாகட்டும் என்று ஆசியருளினார். பலத்த கரகோஷங்கள், ஜயகோஷங்களினால் தமது மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தினர், சபையோரனைவரும்.

மங்கள வாத்யம் முழங்க, பண்டிதர்கள் வேத கோஷம் செய்ய, ஸ்ரீவிஜயீந்திரரின் ப்ரிய சிஷ்யரான ஸுதீந்திர தீர்த்தரை அன்புடன் திக்விஜய சிம்மாஸனத்தில் அமரச் செய்து ஸம்ப்ரதாய ப்ரகாரம் தானே ஸ்வயம் தங்கப் பாத்திரத்தில் ரத்னம், முத்து மற்றும் தங்க நாணயங்களை நிரப்பி ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு ரத்னாபிஷேகம் செய்து, மஹா ஸமஸ்தானத்தின் க்ரந்த பொக்கிஷம், ஸ்ரீமூலராமாதி விக்ரஹங்களடங்கிய பெட்டியின் சாவிகள், வித்யா மடத்தின் முத்திரை (Seal) முதலியவைகளை ஸ்ரீஸுரேந்திரருக்கு ஒப்புவித்து ஆனந்த பாஷ்பம் சொரிய மனமார (நிறைந்த மனதுடன்) ஸுதீந்திரரின் சிரசின் மீது வரதஹஸ்தம் வைத்து ஆசிர்வதித்தார் கையோடு மஹா ஸமஸ்தானாதி பத்யத்தைத் தெரிவிக்கும் பீரங்கி ஸலாம் முழக்குவித்தார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தாள ஸ்துதி பாடகர்கள் மஹா ஸமஸ்தானத்தின் விருதுகளைக் கோஷித்தனர். ஹரிதாஸர்கள் நர்த்தனம் செய்து கொண்டு தம்பூராவைப் பிடித்து பாடத்தொடங்கினர். கவிகள் இரு ஜகத்குருகளின் மஹிமைகளை புதிய உற்சாகத்துடன் வர்ணித்து "ஆசுகவி" (உடனடி கவிதைகள்) இயற்றிப் பாடினர். ஸுமங்கலிகள் முத்தின் ஆரதிகதலாரதிகளை எடுத்தனர் பண்டித மண்டலி பொரி, புஷ்பங்கள் வர்ஷித்தனர். எங்கு பார்த்தாலும் வைபவம், கொண்டாட்டம், மகிழ்ச்சி ஆரவாரம், கேட்கிறது. ஆஹா! அந்தப் பரம மங்களகரமான வைபவம் வர்ணனைக்கப்பாற்பட்டது. அந்தப் பரம மங்களமான காட்சியைக் கண்டவர்களே, புண்யாத்மாக்கள், அவர்களே தன்யர்கள்!

த்வைத ஸாம்ராஜ்ய வித்யா சிம்மாஸனத்தின் முழுப்பொறுப்பை வகித்த ஜகத்குரு ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் ஸ்ரீபாதங்களவரை அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது அம்பாரியிலமர்த்தி ஸகல விருதுகளுடன், வாத்ய வைபவமும் வேத கோஷமும் முழங்க தஞ்சாவூரரசன் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் மறுபடியும் மறுபடியும் ஜகத் குருகளின் ஜயகோஷம் செய்த கொண்டு ஊர்வலத்தைப் பின்பற்றினர்.

## 68. ஸ்ரீவிஜயீந்திரரின் உபதேசம்

ஸ்ரீ ஸுதீந்திர தீர்த்தரின் ஊர்வலம் இங்கு வைபவத்துடன் முடிந்ததும் வித்யா மடத்தில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் சிஷ்யர்கள் சிரத்தையுடனும் பக்தியுடனும் கைகூப்பி ஸ்ரீவிஜயீந்திரரின் இறுதித் தத்வோபதேசம் கேட்க ஆர்வத்துடன் அமர்ந்துள்ளனர்.

சிஷ்ய மண்டலியை நோக்கி ஸ்ரீகளவர்கள், "ஆஸ்திக சிகாமணிகளே, நாம் இப்பொழுது உங்களுக்கு உபதேசம் செய்யும் பிரகாரம் நடந்து கொள்வதனால் உங்களுக்கு ஏற்படும் பாவங்களின் பலன் உங்களையணுகாது. மேலும் அதன்படி கடைப்பிடித்து வந்தால் உங்களுக்கு மங்களமும் புண்யமும் கிடைப்பதல்லாமல், ஜனன மரணமற்ற, ஸகல ஜீவரின் கடைசி லக்ஷியமான நிரந்தர சுகம் (மோக்ஷம்) அடைவீர்கள். ஒரு பக்தன் - யதிராஜரே! தமது உபதேசாம்ருதத்தினால் புனிதரான யார் தான் அந்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சாசுவத ஸுகத்தை அடையவில்லை? பரம மங்களகரமான வசனரூபி கங்கையின் அலைகளில் மூழ்கி புனித ஹ்ருதயமடைந்த நமக்கு கேட்டவைகளனைத்தும் மறுபடியும் மறுபடியும் தங்களுடைய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது தான் எங்கள் விருப்பம். ஸ்வாமி, பரம கருணாகரரான தாங்கள் இப்பொழுது மாத்திரம் நம்மிடத்தில் ஏன் கிருபை செய்யாமல் இருக்கிறீர்கள்? எங்களது ஸ்வரூபத்தை உய்விக்கும் குரு ச்ரேஷ்டரான தங்களை விட்டு அகன்று நாங்கள் வாழ முடியுமா?

மற்றொரு பண்டிதர்:- தேசிக ஸார்வபௌமரே! எங்களுக்கு ஒரு சந்தேகம். ஸ்வாமி, தாங்கள் இதுவரை ப்ரதிவாதிகளால் கண்டனம் செய்வதற்கரிய யுக்தி ராசிகளினால் சோபிக்கும் க்ரந்த ரத்னங்களை இயற்றியும், வாதத்தின் அநேக ப்ரகாண்ட பண்டிதர்களை ஜயித்தும் காப்பாற்றிய இந்த த்வைத ஸித்தாந்த வித்யாராஜ்ய லக்ஷ்மியை மேலும் மேலும் காப்பாற்றிக் கொண்டு வெற்றி நடைபோடுவதற்கு யார் வல்லவர்? ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் மஹா பண்டிதர், ஸகல வித்யா ப்ரவீணர், திறமை வாய்ந்தவர், முதன்மைபெற்ற (அக்ர கண்ய) உண்மை. ஆயினும் தங்களைப் போன்றே இந்த மாபெரும் பொறுப்பை நிர்வாகம் செய்ய வல்லவரா? அது மாத்திரமல்ல, குருவர்யரே, இன்று தானே தாங்கள் ஸுதீந்திரருக்கு மஹா ஸமஸ்தானத்தை ஒப்புவித்திருக்கிறீர்கள். இன்னும் சிலகாலம் அவருக்கு வழிகாட்டிக் கொண்டு அவராலும் மற்றும் எங்களாலும் ஸேவையை ஏற்றுக்கொண்டு ஏன் எங்களைச் சந்தோஷப்படுத்தக் கூடாது?

ஸ்ரீ:- (புன்னகையுடன்) உத்தம பக்தர்களே, நம்மிடத்திலுள்ள எல்லையற்ற பக்தியினால் நீங்கள் இன்று இவ்வாறு சொல்லுகின்றீர்களென்பதை நாம் அறிவோம்! சாஸ்த்ரார்த்த ஸாரத்தை அறிந்து நமது சிஷ்யராயுள்ள நீங்களே இவ்வாறு சொல்லலாமா? "जातस्यहि ध्रुवोमृत्युः" என்பதை நீங்கள் அறியாததா என்ன? என்றாவது ஒரு நாள் அழியப் போகின்றன தேகம் நஷ்டமாவது உறுதி. அது தவிர்க்க முடியாதது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

"अशोच्यानन्व शोचस्त्वं प्रज्ञा वादांश्च भाषसे । गतासूनगतासूंश्च नानं शोचंति पंडिता: ॥ देहिनोऽस्मिन् यथा देहे कौमारं यौवनं जरा । तथा देहान्तर प्राप्ति र्धीरस्तत्र न मुह्यति ॥" என்னும் கீதாசார்யனின் உபதேசத்தை மறந்து விட்டீர்களா?

அழியப் போகின்ற சாரம் நஷ்டமாகிறதேயென்று க்ஞானியானவன் வருத்தப்படலாகாது. ஸாதனை பூர்த்தியான பிறகு ஸ்ரீரமாரமணனின் விருப்பத்தின்படி தேகவியோகம் முதலியன தவிர்க்க முடியாதவை. புத்திசாலியானவன் அதற்காக வருந்தக்கூடாது. நமது வியோகமாகப் போகிறது என்று நீங்கள் துக்கப்படுவது சரியல்ல. ஸ்ரீஹரியின் ஸங்கற்பப்படி என்றாவதொரு நாள் அது நடந்து தானேயாக வேண்டும்? அவ்வாறிருக்கையில் அது இனிமேலானாலென்ன அல்லது இன்றே ஆனாலென்ன? மற்றும், நமது ப்ரிய சிஷ்யரான ஸுதீந்திரர் நம்மைப்போலவே நமது ஸித்தாந்தத்தை உத்தமமான முறையில் நிர்வாகம் செய்வாரோ, மாட்டாரோ என்றும் சந்தேகத்திற்கு இடமேயில்லை. இந்த பீடத்திற்கு ஸாமான்யர்கள் வரமுடியாது. ஸ்ரீஸுதீந்திரரோ ஸகல வித்யா நிபுணர், ஸத்குணத்திற்கிருப்பிடமானவர். த்வைத தத்வப்ரஸாரம் தீக்ஷையினால் கட்டுப்பட்டவர். அவர் ஒருவர்தான் இந்த மாபெரும் காரியத்தை ஸாதிப்பதில் வல்லவர்.

மேலும் நமது இந்த ஸித்தாந்தம் அனாதியானது. ஸாக்ஷாத் ஹம்ஸநாமக பரமாத்மனிலிருந்து பரம்பரையாக விடாமல் தொடர்ந்து பரமஹம்ஸச்ரேஷ்டர்களின் சேவையைப் பெற்று வந்துள்ள இந்த நமது வேதாந்த ஸாம்ராஜ்யம் வித்யாலக்ஷ்மியின் ரக்ஷணையின் பொறுப்பு ஸாக்ஷாத் ஸ்ரீநாராயணனுக்கேச் சேர்ந்தது. இந்த வேதாந்த வித்யாராஜ்ய லக்ஷ்மி ஸாமான்யமானவளல்ல. ஸ்ரீமந்நாராயணனவதாரரான ஸ்ரீபாதராயணரினால் மறுபடியும் தோன்றி ஸ்ரீமதாசார்யரே முதலான குரு ச்ரேஷ்டர்களினால், போஷிக்கப்பட்டவளாய், ஸ்ரீடீகாக்ருத்பாத ஸ்ரீவிபுதேந்திராதி குருகளினால், அபிவ்ருத்தியடைந்தவளாய், நமது குருபாதரான ஸ்ரீஸுரேந்திர தீர்த்த - ஸ்ரீசந்திரிகாசார்யர்களின் ஆதரவில் நிகில வித்வத் ப்ரபஞ்சத்தில் பிரகாசத்துடன் விளங்கி நம்மிலிருந்து இதுவரையிலும் சேவையை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஏற்றுக்கொண்டிருக்கின்றாள். இவ்வாறு தங்குதடையின்றித் தொடர்ந்து சேவை பெற்றுக் கொண்டிருக்கும் அந்த மஹாமகிமையுள்ளவள் நமது ஸுதீந்திர தீர்த்தராலும் சேவிக்கப்படுபவள். இந்த வித்யா லக்ஷ்மியின் சேவைக்கு சாந்தி, இந்த்ரிய நிக்ரஹம், வினயம், தைரியம், உதாரகுணம் முதலியன முக்ய ஸாதனங்கள். அவை நம் ப்ரிய சிஷ்யரிடத்தில் பரிபூர்ணமாக விருப்பதினாலும் இதற்கு மேல் நமது ப்ரஸாதமென்னும் மாபெரும் ஸாதனம் அவருக்கிருப்பதினாலும், வெகுகால்ம் அவர் கீர்த்திவானாக வேதாந்த வித்யாராஜ்ய லக்ஷ்மியை போஷிக்கவருவார். இவ்வளவே அல்ல, அவர் காலத்தில் அவள் இதைக்காட்டிலும் அதிசயமாக போஷிக்கப் பட்டவளாய், பெயர் பெற்று விளங்குவாள். ஸ்ரீராமசந்திரர் அவரால் நல்ல முறையில் பூஜைகொள்ளப் போகிறார்! இன்னும் அதிகமாக என்ன சொல்ல வேண்டும்? ப்ரிய சிஷ்யரே, நம்து ஸ்ரீஸுரேந்திரரை நீங்கள் அனுஸரித்து அவரைப் பின்பற்றி நடந்து கொண்டால் நமது மஹாஸமஸ்தானம், வித்யாபீடங்களின் கார்ய நிர்வாகத்தில் அவருக்கு உதவிசெய்து மங்களமடைவீர்கள். நம்மிடத்தில் உமக்குப் பக்தியிருந்தால் அதே நீங்கள் நமக்கு அர்ப்பிக்க வேண்டிய குருகாணிக்கை!

ஒரு நகர ப்ரமுகர்:- குருவர்யரே, ஜயிக்க முடியாத தம்மைப் பேச்சில் ஜயிப்பது நம்மாலாகுமா என்ன? நமது சந்தேகங்களுக்கெல்லாவற்றிற்கும் தாங்களே பதில் சொல்லி எங்களைப் பேசமுடியாமல் செய்துவிட்டீர்கள்! யோகிராஜரே, எல்லாம் சரி; ஆனால்... எங்களுக்கு ஒரே ஒரு குறை.

ஸ்ரீ:- அதென்ன குறை?

ஒரு பண்டிதர்:(குறுக்கே பேச ஆரம்பித்து) ப்ரதி தினமும் தமது உபதேச அம்ருத பானத்தினால் த்ருப்தர்களாகும் எங்களுக்கு இனி அந்த பாக்யம் கிடைக்காதே? அந்த துக்கத்தை எவ்வாறு சகிப்பது?

ஸ்ரீ:- நமது ஸ்தானத்தில் அந்தக் காரியத்தை நமது ஸுதீந்திரர் நன்றாகவே நிர்வாகம் செய்வார். (சிரித்து) உம், உமது அபிப்ராயம் புரிந்தது!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

நீங்கள் இப்பொழுது நமது உறுதி உபதேசத்தைக் கேட்க விரும்புகிறீர்களல்லவா? ஆகட்டும், அதைப் பூர்த்தி செய்வோம்!

(எல்லோரும்) மகிழ்ச்சியுடன், மஹாஸ்வாமி, தன்யரானோம். நடக்கட்டும்.

ஸ்ரீ:- கம்பீரமான வாணியில் சேதனாசேன வர்க்கத்தில் துக்கம் முதலியவைகளுக்குப் பங்குள்ளவர்கள் சேதன வர்க்கம். இந்தச் சேதன வர்க்கத்தில் பரமாத்மா தோஷரஹிதன், குணபூர்ணன், ஸ்வதந்திரன், ஸர்வ சக்தியுள்ளவனாதலால் அவனுக்கு அதனுடைய சம்மந்தமே இல்லை. பரமாத்மாவைவிட்டு மற்ற சேதனங்களுக்குத் துக்கம் முதலியவ்வைகளுண்டு, "अदु:खमितरत्सर्वं जीवा एव तु दु:खिनः । तेषांदु:ख श्रुतिरेषा प्रवर्तते ॥"-துக்கத்தை அனுபவிக்க வேண்டிய ஜீவர்களின் துக்கத்திலிருந்து விடுபடுவதற்காக ஸாதன மார்க்கத்தைக் காண்பிப்பதற்கு ச்ருதிபுறப்பட்டுள்ளது என்று மேல்சொன்ன ச்ருதியே சொல்லுகிறது. ஸாத்விக-ராஜஸ-தாமஸ என்று சேதனர்கள் மூன்று வகை. ஸாத்வீக ஜீவர்கள் (அதிகாரிகள்) ச்ருதியில் சொல்லப்பட்ட க்ரமத்தினால் தத்தம் யோக்யதையை அனுஸரித்து ஸாதன ஸம்பத்தைப் பெற்று மங்களத்தை அடைய வேண்டும். ஜீவர்கள் எவ்வாறு மூன்றுவிதமோ, அதைப்போலவே ஸுகமும் மூன்று விதமாக உள்ளது. "यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम् । तत्सुखं सात्विकं प्रोक्तं आत्मबुद्धि प्रसादजम् ॥ विषयेंद्रिय संयोगाद्यत्तदग्रे अमृतोपमं । परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतं , यदग्रे चानुबंधे च सुखं मोहनमात्मनः । निद्रालस्य प्रमादोत्थं तत्तामस मुदा हृतं" இவ்வாறு ஸாத்விக-ராஜஸ-தாமஸ பேதத்தினால் சுகம் மூன்று விதமென்று பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் உபதேசித்துள்ளார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஒரு சிஷ்யன்:-யதிபுங்கவரே! இந்த மூன்று வித சுகங்களில் எது உத்தமமானது?

ஸ்ரீ:- மூன்றுவித சுகங்களில் அதிகாரி ஸாத்விக சுகத்தையே விரும்ப வேண்டும். அதே அவனுடைய லக்ஷியமாக இருக்க வேண்டும். இந்த ஸாத்விக ஸாதனை மனுஷ்ய ஜன்மத்தில் தான் ஸாத்யம். 84 லக்ஷம் ஜீவ யோனிகளில் மான வஜன்மம் பரம உத்தமமானது "मनु अववोधने" தாது (धातु) வினின்று சித்தமான மானவ சப்தவாச்யமான இந்த தேஹம் க்ஞான ஸாதனமானதால் இந்த தேஹம் இருக்கும்பொழுதே அதிகாரி ஜீவனானவன் தன் லக்ஷியத்தை எட்டும் உபாயத்தை யோசித்து அனுஷ்டானம் செய்ய வேண்டும். "कुर्वन्नेवेहकर्माणि" என்று உபநிஷத்தில் சொல்லியுள்ளபடியும், "नियतं कुरु कर्मत्त्वं कर्मज्यायोह्य कर्मण । शरीरमात्रापिचते न प्रसिध्येद कर्मणः ॥ स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धं लभतेनरः ॥" என்பதாக யாதவ குல பூஷணனான ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசித்திருப்பதைப் போல் தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை ஆசரிப்பதில் கண்ணும் கருத்துமாக இதய சுத்தியைச் சம்பாதிக்க வேண்டும்.

"धृतिः क्षमा, दयाऽस्ते यंशौचमिंद्रिय निग्रहः । धीर्विद्या सत्यमक्रोधों दशकं धर्मलक्षणं ॥" என்பதாக கர்மத்தைப் பத்துவிதமாகச் சொல்லியிருக்கின்றனர். இந்த்ரிய நிக்ரஹம் மிகமிக அவசியம். கடோப நிஷத்தில் சொல்லியிருப்பதைப் போல் இந்திரிய நிக்ரஹமில்லாத பக்ஷத்தில் மானவன் கெட்டவழியில் சென்று அதோகதியை அடைவான். காமாதி 6 சத்ருக்கள் எப்பொழுதும் விழிப்புடனிருந்து கொண்டு மனுஷ்யனைப் பலவந்தமாகக் கெட்டவழிக்கு இழுத்துக் கொண்டு போய்விடுவார்கள். இந்த விஷயத்தில் புத்திசாலியானவன் எப்பொழுதும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

எச்சரிக்கையாயிருக்க வேண்டும். காமம் முதலியவைகளுக்கு அடிமையாகாமல் அவைகளை ஜயித்த பக்ஷத்தில் மனுஷ்யனுக்கு மங்களம் ஏற்படுவதில் சந்தேகமில்லை. இவ்வாறு பவித்ரஹ்ருதயனான பிறகு அதிகாரி பரமாத்மாவின் குணங்களை நிரூபிக்கும் சாஸ்திரத்தை யோக்ய குருமுகத்தினால் அத்யயனம் செய்ய வேண்டும்.

சாஸ்த்ர யோனித்வாதிகரணத்தில் "ऋग्यजु स्सामाथर्वाश्च भारतं पंचरात्रकं । मूलरामायणं चैव शास्त्र मित्यभिधीयते ॥ यच्चानुकूलमेतस्य तच्च शास्त्रं प्रकीर्तितं । अतोन्यो ग्रंथविस्तारोन्यैव शास्त्रं कुवर्त्म वत् ॥" என்று ஸ்ரீமதாசார்யர் வசனமருளியிருக்கும் பிரகாரம் ரிக் முதலிய வேதங்கள், சாஸ்திரங்கள் ஆகும். அவைகளினாலேயே பரமாத்மா தெரியப்படுபவன்."नावेद विन्मनुतेदं बृहंतं" "औपनिषदः पुरुषः" என்றெல்லாம் ப்ரமாணங்கள் சொல்லுகின்றன. இந்த ரிகாதிகளின் சரியானபடி அர்த்தமாக வேண்டுமானால், "ப்ரம்ம ஸூத்ரங்களைச் சரணடைய வேண்டும். முக்தியோக்யரின் உத்தாரத்திற்கு (உய்விப்பதற்கு) ஸாதனமான ரிகாதிகளின் உண்மையான அர்த்தத்தைத் தெரிவிப்பதற்கே கருணைக்கடலான ஸ்ரீபாதராயணர் ப்ரம்ம ஸூத்ரங்களை இயற்றியுள்ளார். இந்த ஸூத்ர ப்ரதிபாத்யன் யாயானுக்ருஹத வேதாதிகள் தான் அக்ஷர வித்யாதிகரணமானதால், பரவித்யையெனப் படுகிறது. ஸ்ரீபாதராயணரின் ஸூத்ரங்களுக்குச் சரியாக, அவருடைய அபிப்ராயத்தையே தெரிவிக்கும் அர்த்தத்தை நிரூபித்து, அனாதியான வைதிக த்வைத தத்வ ரகசியத்தை முக்தியோக்யரான நல்ல ஜீவர்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்றே நமது ஸ்ரீமதாசார்யர் அவதரித்தார். ஸ்ரீமதாசார்யர் ஸ்ரீபாதராயணரின் சிஷ்யத்வம் அடைந்து அவரது முகத்தினின்றே ஸூத்ரார்த்தத்தையறிந்து வாஸுதேவபரதத்வ ப்ரமுக பரமபரமேய ப்ரதிபாதகம், பூத-பாவி-பவிஷ்யஜ் ஜனங்களினால் தூஷிப்பதற்கு முடியாததுமான 37 மூல க்ரந்த ரத்னங்களை இயற்றி த்வைத ஸித்தாந்தத்தை புனருஜ் ஜீவனப்படுத்தி, முக்தியோக்ய ஸஜ்ஜனர்களுக்கு சன்மார்க்கத்தைக் காண்பித்து மாபெரும் உபகாரம் செய்துள்ளார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஆகையால் ப்ரிய தர்மாபிமானிகளே, ஆசார்யரின் தத்வ வாதமே ஆத்மோத்தாரத்தை விரும்பும் ஸகல ஸஜ்ஜனர்களினால் உபாஸனை செய்வதற்குத் தகுந்தது.

ஒரு பக்தன்:- மன்னிக்க வேண்டும் மஹா ஸ்வாமி, ஸ்ரீமதாசார்ய தத்வ சாஸ்த்ரத்தில் அப்பேர்ப்பட்ட மகத்துவம் என்ன இருக்கிறது. சொல்லியருள வேண்டும்.

ஸ்ரீ:- (தலையாட்டி) நல்ல கேள்வி! ஆஸ்திக சிகாமணிகளே! கேளுங்கள், ப்ரம்ம ஸூத்ரங்களின் மற்ற பாஷ்யங்களுக்கும் நமது ஸ்ரீமதாசார்யரின் பரம மங்களகரமான பாஷ்யங்களுக்கும் பெரும் வித்தியாசமுள்ளது. நம் ஆசார்யரின் பாஷ்யம் மிகச் சிறப்பானது. ஸ்ரீமதாசார்யர் தனது எல்லா க்ரந்தங்களிலும் ஸ்ரீமந்நாராயணன் அநந்த கல்யாண குண பரிபூர்ணன், நினைத்துக் கூடப்பார்க்க முடியாத அற்புத சக்திபடைத்தவன், ஸர்வஸ்வதந்த்ரன், தோஷரஹிதன், ரமாருத்ரேந்திராதிகளினால் வணங்கப்படுபவன், இந்த ப்ரம்மாண்டத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாராதி (படைத்தல், காத்தல், அழித்தல்) எட்டுவித காரியங்களை அவன் வசமானவை. அவனது விருப்பப்படியே அவைகள் நடைபெறுகின்றன. ஜகத்து பாரமார்த்திகமான ஸத்யம். ஜீவ-ஈச்வரன் ஆதி பஞ்சபேதங்கள் ஸத்யம் - முதலிய ப்ரமேயங்களை அநேக ச்ருதி - ஸ்ம்ருதி புராணம் முதலியவைகளின் ப்ரமாணங்கள் கொடுத்து, உபக்ரம் முதலிய ஆறுவித தாத்பர்யலிங்காதிகளினாலும், ச்ருதி முதலிய ஆறு ப்ரமாணங்களினாலும், மிக நிபுணத்துவத்துடன் நிருபித்துள்ளார். தாம் சொல்லும் அர்த்தம் ஸ்ரீவேதவ்யாஸருக்குப் பரம ஸம்மதமென்று காண்பிக்க அவரால் இயற்றப்பட்ட புராணாதிகளின் சம்மதத்தைக் கொடுக்கின்றார். நமது ஆசார்யரைத் தூஷிப்பது என்றால் ஸ்ரீபாதராயணரைத் தூஷிப்பது தான் என்று கொள்ள வேண்டும். "सूत्रार्थो वर्ण्यते यत्र पदैस्सूत्रानुकारिभिः । स्वपदानिच वर्ण्यते भाष्यं भाष्यविदो विदुः" என்னும் பாஷ்ய லக்ஷணம் நம் ஆசார்யருடைய பாஷ்யத்திலேயே பரிபூர்ணமாக உள்ளது என்பதை ஆலோசிப்பவர்கள் கண்டுகொள்ளலாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy


பக்த சிரேஷ்டர்களே "रताहशे पतिरीडयस्य विणो: गुणोत्कर्षज्ञातरि या हशे स्यात् ॥" என்ற ப்ரமாண வசனப்படி தனது குணங்களின் உத்தமத்வைத்தை ஜகத்தில் பறைசாற்றும் ஸ்ரீமதாசார்யரிடத்தில் பர்மாத்மாவிற்கு பரம ப்ரீதி உள்ளது. ஸ்ரீஹரியினிடத்தில் ஸ்ரீமதாசார்யருக்குள்ள உபாதியில்லாத பரம பக்தி வர்ணிக்க முடியாதது. "तेषांज्ञाने नित्य युक्तः, एक भक्तिर्विशिष्यते ॥ ज्ञानीत्वा त्मैव मेमतं" ॥ "प्रियो हि ज्ञानि नोत्यर्थं अहं स चममयः ॥" என்றெல்லாம் கீதையில் பகவந்தனே சொல்லியிருப்பதால் க்ஞானிகளிடத்தில் பரமாத்மாவிற்கு பரம ப்ரியம். அப்பேர்ப்பட்ட க்ஞானிகளில் முதன்மையானவர் ஸ்ரீமதாசார்யர். நமது ஆசார்யர் க்ஞானத்திற்கு முக்யத்துவம் கொடுத்துள்ளதைப் போல் கர்மத்திற்குக் கொடுக்க வில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். அது அக்ஞான முகமென்று தான் சொல்ல வேண்டியுள்ளது. ஏனென்றால் ஆசார்யர் கர்மானுஷ்டானத்திற்கு மகத்துவம் கொடுத்துள்ள அளவு வேறு எதற்கும் கொடுக்கவில்லை. ஸகல கர்மங்களையும் விஷ்ணுவின் ப்ரேரணையினால் அவனது ப்ரீத்யர்த்தமாக செய்கிறேன் என்று சங்கல்பம் செய்து, நிஷ்காமகர்மத்தைச் செய்ய வேண்டும் அவர் உபதேசித்திருக்கிறார். கர்மானுஷ்டான மகத்துவத்தைத் தெரிவிப்பதற்காகவே, "सदाचारस्मृति" (ஸதாசாரஸ்ம்ருதி) முதலான க்ரந்தங்களை இயற்றியுள்ளார். ஆனால் கர்மத்தின் மூலமாகவே மோக்ஷம் கிடைக்கும் என்னும் மதத்தை அவர் ஒப்புக்கொள்ளுவதில்லை. அதனாலேயே அதைக்கண்டனம் செய்துள்ளார். "कर्मणा ज्ञानमातनोति ज्ञाने ना मृती भवति" என்னும் மதம்தான் ஆசார்யரின் மதம். அதிலும் கூட க்ஞானம் ஸாக்ஷாத் முக்தி ஸாதனமாகாது பரோக்ஷ க்ஞானத்தினால் பகவதபரோக்ஷம், பகவந்தனிடம் பக்தியின் மூலம் பரமாத்ம ப்ரஸாதம், பிறகு மோக்ஷம் என்று பரம்பரையாக ஸாதனமென்று நிரூபித்துள்ளார். இப்பேர்ப்பட்ட உத்ததமமான ஸ்ரீமதாசார்யரின் தத்வ சாஸ்திரமே ஜீவனின் உத்தாரத்திற்கு உதவியாகவுள்ளது.

ஸ்ரீமதாசார்யர் தமது எல்லா க்ரந்தங்களிலும் ஸ்ரீமன் நாராயணனே ஸர்வோத்தமனென்று கோஷித்துள்ளார். அது அவரது வசனம் மாத்திரமல்ல, ஸகல வேதம், ஸ்ம்ருதி, புராணம் முதலியவை ஸ்ரீவிஷ்ணுவே ஸகல முமுக்ஷுக்களினால் (மோக்ஷம் விரும்புபவர்கள்)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


உபாஸிக்கப்படும் ஸர்வோத்தம தேவதை என்று சொல்லுகின்றன. அதையே ஸ்ரீமதாசார்யர் வலியுறுத்தியுள்ளார். "एको नारायणा सीन्न ब्रहमा न चशंकरः नारायण इदमग्र आसीन्न ब्रहमा नेशानः अग्निर्व देवानामवमो विष्णुः परमः यस्य प्रसादत्पर मूर्तिरूपाद स्मात्सं सारान्मुच्यते नापरेण, नारायणोऽसौ परमो विचिंत्यः मुमुक्षुभिः कर्मपाशाद मुष्मात्, इंद्रियेभ्यः पराह्यर्था सा काष्ठा सा परागतिः द्वाविमौ पुरुषौ लोके ....... प्रथितः पुरुषोत्तमः, मत्तः पर तरं नान्यत्किचिदस्ति धनंजय यं काम ये तं नमुग्रंकृणोमि तं ब्रहमाणं तमृषिं तं सुमेधां । मम यो निरप्स्वा अंतः समुद्रे, तमेवं विदित्वा अमृतत्वमेति, मोक्षमि च्छेज्जनार्दनात् परमो विष्णु पुरे वैकः तदज्ञानं मोक्ष साधनं, नास्ति नारायण समं व भूतं न भविष्यति, हरिः सर्वोत्तमस्साक्षात् । सर्व धर्मान् परित्यजय मामेकं शरणं व्रज ॥"

இவையெல்லாவற்றையும் தெளிவாகப் புரிய வைக்க ஸ்ரீபாதராயணர், "सत्यं सत्यं पुनस्सत्यं उद्धृत्य भुजमुच्यते । वेदाश्शास्त्रांत्परं नास्ति न दैवं केशवात्परं ।" என்று சபதம் செய்து கோஷம் செய்து முமுக்ஷு ஜீவர்களின் கடமை என்னவென்பதை, "आलोड्य सर्वशास्त्राणि विचार्य च पुनः पुनः । इदमेकं सुनिष्पन्नं ध्येयो नारायणस्सदा" என்னும் அமரவாணியினால் தெள்ளத்தெளிவாக உபதேசம் செய்துள்ளார். ஆகையால் தான் ஸ்ரீபாதராயண ஸ்வாமியின் பரம ப்ரீதி பாத்திரரும் முக்ய சிஷ்யரும், ஜீவோத்தமரும், ஜகத்ப்ராணரும், பாவன பவமானாம்ச ஸம்பூதருமான நம்ம ஸ்ரீமதாசார்யர், "विष्णोः सर्वोत्तमत्वं च सर्वदा प्रतिपादय" என்று "யதிப்ரணவ கல்பத்தில் சிஷ்ய பரம்பரையின் யதிகளுக்கும், ஸகல ஸஜ்ஜீவர்களுக்கும் உபதேசித்துள்ளார். ஜகத்திற்கு ஆதி குருகளான ஸ்ரீபாதராயணரின் சிஷ்யராதலினாலேயே ஸ்ரீமதாசார்யருக்கு ஸ்ரீவிஷ்ணு ஸ்ஸர்வோத்தம ப்ரதிபாதனையில் அவ்வளவு தீக்ஷை!

ப்ரிய சிஷ்யரே, ஐஹிக ஆமுஷ்மிக கல்யாணத்தை விரும்பும் ஸஜ்ஜனர்கள் நமது ஆசார்யரின் உபதேசத்தின்படி நடந்தால் ஸகலரும் புனிதமாவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதாவது மோக்ஷம் பெறுவதற்குத் தகுதியுடன் உயர்வீர்கள். கருணைக்கடலான நமது ஆசார்யர் நல்ல ஜீவர்களின் கடமையை எவ்வளவு அழகாகத் தெளிவாக த்வாதச ஸ்தோத்திரத்தில் போதித்துள்ளார். கேளுங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

कुरु भुंक्ष्व च कर्मनिजंनियतं हरिपाद विनम्रधिया सततं, हरिरेव परो हरिरेव गुरुः हरिरेव जगत्पितृ मातृगतिः । न ततोऽस्य परं जगदीड्यतमं परमात्परतः पुरुषोत्तमतः । तदलं बहुलोक विचिंतनया प्रवणं कुरु मान समीशमदे । यततोऽपि हरेः पदसंस्मरणे सकलं ह्यघमाशु लयं व्रजति । स्मरणात्तु विमुक्ति पदं स्फुटमेष्यति तत्किमपाक्रियते । शृणुतामलसत्यवचः परमंशपथेरिति मुच्छ्रित बाहुयुगं । न हरेः परमो न हरेस्सदृशः परमात्सतु सर्व चिदात्मगणात् ॥"

ப்ரிய தர்மாபிமானிகளே, ஸதா ஸ்ரீஹரியின் பாத கமலங்களில் மனதைச் செலுத்தி பரமாத்மாவிற்கு ப்ரீதியாகட்டும் என்று ஸ்ரீஹரியே அந்தர்யாமியாயிருந்து ஸகல காரியங்களைச் செய்பவன், செய்விப்பவன் மற்றும் போதிக்கச் செய்பவன், அந்த ஸ்ரீமந்நாராயணனே ஸர்வோத்தமன், அவனே ப்ரபஞ்சத்திற்கு குரு, தகப்பன், மற்றும் தாய் என்னும் நிச்சயமான புத்தியுடன் உங்களில் ஒவ்வொருவருக்கும் விதித்திருக்கும் வர்ணாச்ரமதர் மோசிதமான கர்மாக்களை அவசியம் செய்யுங்கள், அனுபவியுங்கள், மிகமிக ச்ரேஷ்டனும் புருஷோத்த மனுமான ஸ்ரீஹரியைக் காட்டிலும் துதிப்பதற்கு அருகதையுடையவன் ஜகத்தில் வேறு எதுவுமேயில்லை. லௌகிக வ்யாபாரங்களில் மூழ்கிக்கிடப்பது இனிபோதும், பந்தனத்தில் சிக்கிவைக்கும் இந்த லௌகிக வ்யாபாரங்களில் (உலக சுகங்களில்) ஈடுபடுவதை விட்டு எப்பொழுதும் உங்கள் மனது ஸ்ரீலக்ஷ்மிபதியின் சரண கமலங்களில் செல்லட்டும், பக்த பந்துவான ஸ்ரீமந்நாராயணனின் ஸ்மரணை செய்வதற்கு ப்ரயத்னம் செய்தால் கூடப்போதும், ஸகல பாவங்களும் பரிஹாரமாகும் என்ற பிறகு ஸதா ஸ்ரீஹரியை த்யானிப்பவர்களுக்கு உத்தமான சாசுவதமான (நிரந்தரமான) சுகம் கிடைப்பதில் ஸந்தேகமென்ன? ஆகையினால் ஸஜ்ஜனர்களே, உத்தமமான பலனின் ஸாதனமான ஸ்ரீலக்ஷ்மிகாந்தனின் ஸ்மரணையை ஏன் அலக்ஷியம் செய்கிறீர்கள்? கண்டிப்பாக ஸ்ரீஹரியின் பாத ஸ்மரணையை விடாதீர்கள்.

பக்த ஜனங்களே, தோஷரஹிதமானதும் ஸத்யமுமான நமது இந்த வார்த்தைகளைக் கேளுங்கள். நாம் இரண்டு புஜங்களையும் மேலே உயர்த்தி சப்த பூர்வகமாகச் சொல்லுகிறோம், கேளுங்கள். ஸ்ரீஹரி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஒருவனே ஸமஸ்த சேதன ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் அதி உத்தமன். இப்படிப்பட்ட ஸர்வோத்தமனான ஸ்ரீமந்நாராயணனின் கதாச்ரவணம், அவனது பாதபூஜை, அர்ச்சனை, கமலாகாந்தனின் தத்வங்களின் அத்யயனம், அப்ராக்ருதனும் ஆனந்தம்யனுமான அந்த மஹாமஹிமனின் த்யானம், சிந்தனைகளே உமது வாழ்க்கையின் மூச்சாக இருக்கட்டும்! நமது இந்த உபதேசத்தின்படி நடந்தால் உங்கள் எல்லோருக்கும் மங்களமுண்டாகும்.

## 69. அவதாரத்தின் ஸமாப்தி

தம்முடைய உபதேசத்தை முடித்துக் கொண்டு ஸ்ரீவிஜயீந்திரயதிபுங்கவர் இவ்வாறு சொன்னார்:- பக்த சிரேஷ்டர்களே! நம் ஆசார்யர் என்ன உத்தரவிட்டிருக்கிறாரோ அதையே உங்களுக்கு நாம் உபதேசித்துள்ளோம். இதே உங்களுக்கு நமது மங்களகரமான இறுதி உபதேசம். இதன்படி உபாஸனை செய்து ஸகலவித மங்களங்களுக்கும், மேன்மைக்கும் பங்கு கொள்ளுங்கள். ஆஸ்திகர்களே, நமது அவதாரத்தின் முடிவு சர்வ மங்கள கிதையைப் பாடுவோம். அழியக்கூடிய இந்த நம் பௌதீக சரீரம் மறைந்துவிடப் போகிறதென்று துக்கப்படக் கூடாது. எமது மறைவிற்குப் பிறகு மேல் நடக்க வேண்டிய காரியங்களை மஹா ஸமஸ்தானத்தின் பரம்பரையாய் வந்துள்ள கிரமப்படி நிறைவேற்ற நமது சிஷ்யோத்தமரிடத்தில் தெரிவித்து, அவருக்கு உதவியாக இருந்து அந்த உங்கள் கடமைகளை நிறைவேற்றுங்கள். நாம் இப்பொழுது த்யானத்தில் ஈடுபடுவோம். நம் த்யானத்திற்குப் பங்கம் விளைவவிக்காதீர்கள், ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மனிலிருந்து வேறுபடாத ஸ்ரீமூலராம சந்திரர் உங்களுக்கு ஸன்மங்களமுண்டாக்கட்டும். ஓம் நமோ நாராயணாய!!

அநந்த கல்யாண குண பரிபூர்ணனும், தோஷரஹிதனும், லீலாமானுஷ விக்ரஹனும், ஸர்வஸ்வாமியும், ஜகந் நாடக சூத்ரதாரனும் ஆன ஸ்ரீமந்நாராயணனின் "லீலாவிலாஸ்" நாடகத்தில் ஸ்ரீமத்வஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்யரென்னும் ப்ரமுக பாத்திரத்தை ஏற்று நடித்த ஸ்ரீமத்விஜயீந்திர தீர்த்த குருஸார்வபௌமர் ஜகந்நாடக மேடையிலிருந்து விலக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

விரும்பிக் கண்மூடி த்யானத்தில் ஆழ்ந்து லய சிந்தனை செய்யத் தொடங்கினார். சற்று நேரத்திலேயே ஸ்ரீகளவர்களின் தேகம் ஸ்வர்ண காந்தியுடன் விளங்கியது. பரம ஸாத்விக தேஜஸ் முகத்தில் ஒளிவீசிற்று. ஸ்ரீகளவர்களின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே பக்த-சிஷ்யர்கள் கைகூப்பிக் கண்ணீர்விட்டுக் கொண்டு அமர்ந்துள்ளனர்.

ஸ்ரீகளவர்களின் முகத்தாமரையினின்று "நாராயண, நாராயண" என்னும் ஸ்ரீஹரியின் பவித்ர நாமம் வெளிவந்தது. அப்பப்பா? அது என்ன காந்தி! இருந்தாற்போல் பெரிய சத்தமாய் ஏக காலத்தில் அநேக சூர்யர்கள் உதித்த அளவு மாபெரும் ப்ரகாசம் உண்டாயிற்று. ஸ்ரீபாதங்களவரின் யோக சக்தியினால் ப்ரம்பரந்திரம் வெடித்தது. அபூர்வ தேஜஸ் ஒன்று மின்னி மாயமானது!! "நாராயண" என்னும் மஹா மந்த்ரோச்சாரணையுடன் ஸ்ரீவிஜயீந்திர குருவரேண்யர் தமது ஆத்ம புஷ்பத்தை பரமாத்மனின் சரண கமலத்தில் சமர்ப்பித்து விட்டார்!! ஜனங்கள் யாவரும் தங்கள் கண்ணெதிரில் நடந்த அற்புதத்தைக் கண்டு மெய்மறந்து பக்தி மேலீட்டினால், "நாராயண, நாராயண" என்று உரக்க கோஷித்தனர். ஸ்ரீயவர்களின் பிரிவைத் தாங்க முடியாமல் அழத் தொடங்கினார்கள்.

"ஐயோ, த்வைத ஸாம்ராஜ்ய சூர்யன் அஸ்தமித்துவிட்டானே! உலகம் போற்றும் ஜகத்குரு மறைந்து போய்விட்டாரே! தெய்வமே, யதிஸார்வ பௌமரே, மஹா மஹிமரே, நமக்கு இனி யார் கதி? தங்களது அன்புள்ள கும்பகோண புரவாஸிகளை விட்டு அகன்று விட்டீரே? எங்களுக்கு நன்மை-தீமைகளை எடுத்துச் சொல்ல, உபதேசிக்க இனியாருள்ளனர்? வித்வத் ப்ரபஞ்சத்தின் சந்திரனே! பண்டிதர்களுக்கு இனி யார் ஆதரவு தரப்போகிறார்கள்? அந்தோ நாங்கள் இந்த வேதனையைத் தாங்க முடியும்? யோகிராஜரே! இந்த தாஸர்களின் வந்தனையை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆஹா, மஹாஸ்வாமி, "அஜேய" ரென்னும் தங்களது விருதைக் கடைசி காலத்தில் கூடக் காண்பித்து விட்டீரே! மரணத்திற்காகக் காத்திருக்காமல் தானே மகிழ்ச்சியோடு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஆத்மார்ப்பணம் செய்து "அஜேய" ரென்னும் விருதுடனே ஸ்ரீஹரியின் பாத சேவைக்கு வைகுண்டத்திற்கு விஜயம் செய்த ஸ்ரீவிஜயீந்திர குரு ஸார்வ பௌமரே! தாங்கள் உண்மையில் அஜேயரே தான். ஆம்!! என்று பலவாறு ஜனங்கள் விஜயீந்திர யதிவர்யரின் குணங்களைப் புகழ்ந்து கொண்டு மறுபடியும் மறுபடியும் வந்தனை செய்தனர்.

நொடிப்பொழுதில் இந்த விஷயம் காட்டுத் தீயைப் போல் எங்கு பார்த்தாலும் பரவலாயிற்று. இந்தப் பயங்கரச் செய்தியைக் கேட்ட ஸுதீந்திர தீர்த்தருக்குத் தலையில் இடி விழுந்தாற் போலாய் மெய்மறந்து போனார். தொண்டை அடைத்தது. கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிற்று. இந்திரியங்கள் யாவும் ஒரு நொடி செயலற்றதாய்விட்டன. துக்கம் மேலீட்டினால், "உலகம் போற்றும் மஹாப்ரபு நம்மை விட்டு அகன்ற பிறகு நமக்கினி ஏன் இந்த ஊர்வலம், வைபவம், கொண்டாட்டம்! என்று வேதனையடைந்து அம்பாரியை விட்டுக் கீழிறங்கி ஊர்வலத்தை உடனே நிறுத்தும்படி ஆணையிட்டுக் கால் நடையாக ஓட ஆரம்பித்தார். வாத்தியங்களின் முழக்கம் நின்றுவிட்டது. ஒரு நொடிக்கு முன்னிருந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் மாயமாக மறைந்தன! எல்லோருடைய முகங்களும் கருத்தன. ஹாஹாகாரம் செய்து கொண்டு கண்ணீர் பெருக ஜனங்கள் ஸ்ரீயவர்களைப் பின் தொடர்ந்தனர்.

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் கும்பேச்வரன் தேவாலயத்தின் முற்றத்திலமர்ந்து குழந்தைகளைப் போல் விம்மி விம்மி அழத் தொடங்கினார். பண்டிதர்கள், நகரவாசிகள், மடாதிகாரிகள் ஸ்ரீகளவர்களுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். ஆயினும் ஸ்ரீயவர்களுக்குச் சமாதானமாகவில்லை. ஸ்ரீயவரிருந்து இடத்திற்கு மடத்திலிருந்து ஓடிவந்த ப்ரமுகர்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் உபதேசம், செய்தி, யோக சக்தியின் பலனாக "நாராயண" ஸ்மரணை பூர்வகமாக பரந்தாமத்திற்கு எழுந்தருளிய அற்புதங்களை எல்லாம் மனமார வர்ணித்து சொன்னவைகளெல்லாம் கேட்டுக்கொண்டே! ஸ்ரீஸுதீந்திரர், "ஐயோ, குருவர்யரே! கடைசி வரைத் தங்களுடைய பிடிவாதத்தையே சாதித்து நம்மை அநாதனாக்கி விட்டீர்களே? மஹாஸ்வாமி, நமக்கினி யார் கதி? என்றெல்லாம் சொல்லி வருந்தினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மடாதிகாரிகள், பண்டிதர்கள், ப்ரமுக நகரவாசிகளை அழைத்து இனி நடக்க வேண்டிய குரு ஸேவையின் புனித கடமையைச் செய்ய ஸகல ஏற்பாடுகளும் செய்ய ஆணையிட்டார்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் கடைசி தரிசனம் பெற்று, குருபக்தியை ஸமர்ப்பிப்பதற்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்ரீமடத்திற்கு வந்து கொண்டிருக்கின்றனர். ஸ்ரீவிஜயீந்திர ப்ருந்தாவன யாத்திரைக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தாயிற்று. மூடின கண்களுடன் இதய மந்திரத்தில் பரமாத்மாவை சாக்ஷாத்காரம் செய்து கொண்டு, ஸ்ரீஹரியின் பாதத்தாமரைகளில் மனதை நிலைநிறுத்தி த்யான யோக பரமானந்தத்தில் ஈடுபட்டு இருப்பதைப் போலவே காணுகின்றார்; ஸ்ரீயவர்களின் முகத்தில் ஒளிவீசும் புன்னகை!! தெய்வீக சம்பத்து உருவெடுத்தாற்போல் காணுகின்ற ஸ்ரீகளவரின் சாந்தமான முகத்தில் பளிச்சிடும் ஒளி காணப்படுகிறது. உலகம் போற்றும் உத்தமரான அந்த குருராஜரின் தரிசனம் செய்து கொண்டு ஸகல ஜனங்களும், பக்தி மேலீட்டினால் ஜயகோஷம் செய்து கொண்டு கண்ணீரால் நிறைந்த கண்களுடன் குருவர்யரை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். தஞ்சாபுரத்தின் ரகுநாத பூபாலன், சின்ன செவ்வப்ப நாயகர் முதலிய ஸ்ரீயவர்களின் நெருங்கிய பக்தர்களின் துக்கத்திற்கு எல்லையேயில்லை! ஸகல ராஜ மரியாதைகள், ஸ்ரீமடத்தின் விருதாவளிகள், வாத்ய வைபவம், பண்டிதர்களின் பாராயுணம், வேத வித்துக்களின் வேதகோஷம், ஜனங்களின் ஜயகோஷம், தாஸர்களின் ஸமூகத்தினரின் பதங்கள், ஸுளாதிகள் பாடப்பட்டு, நர்த்தனங்கள் ஸஹிதம், ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் புனிதச்சடலம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. எல்லோரும் குருபாதரின் குணாதிசயங்களை வர்ணித்துக் கொண்டே, அவருடைய குணங்களைப் பாராட்டுகின்றனர். ஊர்வலம் க்ஷேத்ர மூர்த்தியான ஸ்ரீலக்ஷ்மி நாராயணர் ஸந்நிதியையடைந்தது. அந்த ஸ்வாமியின் எதிர்ப்புறத்தில் ஸம்பிரதாயப் பிரகாரம் ஸ்ரீயவரின் புனித சரீரம் ஸ்தாபிக்கப்பட்டு, ப்ருந்தாவன ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. எல்லோருடைய இதயத்தையும் உருகச்செய்யும் அந்தக் காட்சியை வர்ணனைசெய்ய செய்யவும் முடியுமா என்ன?

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ப்ருந்தாவனம் நிர்மாண சமயத்தில் ஜனங்கள் எழுப்பிய ஜயகோஷம் ஆகாயத்தைப் பிளக்கும் போல் இருந்தது! ஜகத்குருவர்யர் ப்ருந்தாவன ப்ரவேசமான விஷயத்தை ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரிடம் அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் பண்டித மண்டலியுடன் காவேரி தீரத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீவிஜயீந்திரர் ப்ருந்தாவனஸ்தரான இடத்தில் வந்தார். ஸ்ரீகுருகளின் ப்ருந்தாவனத்திற்கு எதிரில் அன்றைய மஹாஸமஸ்தான பூஜை நடைபெற்றது. பூஜாராதனையான பிறகு தங்கத் தாம்பாளத்தில் ஸ்ரீமூலராம, ஸ்ரீதிக்விஜயராம, ஸ்ரீஜயராம ஸ்வாமிகளை வைத்துக் கொண்டு குருவர்யரின் ப்ருந்தாவனத்தின் பக்கம் நடந்தார் ஸ்ரீஸுதீந்திரர். ப்ருந்தாவன தரிசனமான உடனே அடக்கிக் கொண்டிருந்த துக்கம் பொங்கிற்று. கண்ணீர் விட்டுக் கொண்டே ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து ப்ருந்தாவனத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தார். சற்று சமாதானப்படுத்திக் கொண்டு ஸ்ரீமூலராமாதி விக்ரகங்களை வைத்துக் கனகாபிஷேகம், மஹாமங்களஹாரதி எடுத்து நமஸ்கரித்தார். ஸ்ரீஸுதீந்திரர் நா தழுதழுக்க ஸ்ரீகுருபாதர் மீது

"भक्तानां मानसांभोज भानवे काम धेनवे ।
नमतां कल्प तरवे विजयींद्र गुरुवे नमः ॥"

என்னும் சரம ச்லோகத்தை இயற்றி ஸ்துதித்தார்.

இவ்வாறு சுமார் கிறிஸ்து ஆண்டு 1517ல் ஸ்ரீசந்த்ரிகாசார்யரின் வரபலத்தினால் பிறந்து, அவராலேயே வளர்க்கப்பட்டு, ஸன்யாஸியாய், அவரிடமே ஸகல சாஸ்த்ரங்களையும் அத்யயனம் செய்து ஸ்ரீஸுரேந்திர தீர்த்தருக்கு ஸ்ரீவ்யாஸராஜரால் அர்ப்பணம் செய்யப்பட்டு, ஸ்ரீமதாசார்யரின் மஹா ஸமஸ்தானத்திற்கு ஒப்புவிக்கப்பட்டு முத்ராதாரணம், குருபதேசம் பெற்று "ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர்" என்னும் உப நாமத்தினால் அதிபதியாய் குரு ஸுரேந்திர தீர்த்தரின் ஸேவை செய்து கொண்டே அவரது வழியைப் பின்பற்றி ஸகல துர்வாதிகளை வென்று, நிகரற்ற க்ரந்தங்கள் இயற்றுவதன் மூலமாக த்வைத ஸித்தாந்தத்தை வேரூன்றச் செய்து, அநேக மஹா மஹிமைகளைக் காண்பித்து, ராஜாதி ராஜர்களால் கௌரவத்திற்கு மாபெரும் பாத்திரராகி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீமந்தாசார்யரின் வித்யாஸிம்மாஸனம் ஏறி 45 வருடங்கள் குரு ஸேவை செய்து பிறகு, கிறிஸ்து ஆண்டு 1614 வரையிலும் மஹா ஸமஸ்தானாதிபதிகளாயிருந்து ப்ரிய சிஷ்யர் ஸ்ரீஸுரேந்திரரினால் சேவிக்கப்பட்டு ஸ்ரீஹரியின் சங்கல்பப்படி தமது அவதார கார்யத்தை ஸமாப்தி செய்து பரம பூஜ்ய ஸ்ரீவிஜயீந்திர குருவரேண்யர் அகண்ட கீர்த்தி பெற்று யுக புருஷரென்ற கியாதியும் பெற்று அமரரானார்.

## 70. உபஸம்ஹாரம் (முடிவுரை)

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர் பக்தி, சிரத்தையுடன் பூஜ்ய குருபாதரான விஜயீந்திர தீர்த்தரின் மஹா ஸமாராதனை உற்சவத்தை வெகு வைபவத்துடன் நிறைவேற்றினார். ஸ்ரீவிஜயீந்திர குருவர்யர் பிருந்தாவன ப்ரவேச செய்தியறிந்து நூற்றுக்கணக்கான பண்டிதர்கள், மாணவர்கள், கவிகள், ப்ரமுக சிஷ்யர்கள் கும்பகோணத்திற்கு வந்து மஹா ஸமாராதனையில் பங்கு கொண்டு குருசேவையினால் கிருதார்த்தரானார்கள்.

ஸ்ரீஸுதீந்திர தீர்த்தரின் தலைமையில் வித்வத் சபை நடைபெற்று ஸகல சாஸ்திரங்களில் வாக்யார்த்தம், விசார்-விநிமயம் வெகு கண்யமான முறையில் நடந்தேறின. கவிகள் ஸ்ரீவிஜயீந்திரரின் மஹிமை, அற்புதங்கள் பலவாறாக வர்ணித்துக் கவிதைகள் இயற்றிச் சபையில் வாசித்து எல்லோரையும் மகிழ்வித்தனர். ஒவ்வொரு நாளும் ஸ்ரீமூலராமரின் பூஜை, ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் பிருந்தாவன பூஜை முதலியவைகள் பத்துப்பதினைந்தாயிரம் ப்ராம்மண ஸுவாஸினியர்களுக்கு ஸந்தர்ப்பணையும் நடந்தேறியது.

குருபக்தனான தஞ்சாவூரரசன் குருபாதரின் மஹா ஸமாராதனை, வித்வத் சபைகளில் பங்கேற்று பணம், பொன் முதலியவைகளினால் சேவை செலுத்தினார். ஸ்ரீஸுதீந்திர தீர்த்தர், பண்டிதர்கள், மாணவர்கள், கவி-ஸங்கீத வித்வான்கள் ஹரிதாஸர்களுக்கு விசேஷமாக உதார ஸம்பாவனை அளித்தனர். மஹா ஸமாராதனை நன்கு புகழத்தக்க முறையில் நடைந்தேறியது.

ஸ்ரீஸுதீந்தர தீர்த்தர் குருபாதரின் ஆணைப்படியே மஹா ஸமஸ்தானம், வித்யாபீட நிர்வாகத்தை மிகச் சிறந்த முறையில் நடத்திக் கொண்டு, சிஷ்யர்-பக்தர் சூழாம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


இவர்களுடைய சேவையும் ஒத்துழைப்பும் பெற்று ஸ்ரீமதாசார்யரின் திக்விஜய வித்யாஸாம்ராஜ்யத்தில் வீற்றிருந்த பரவாதி திக்விஜயம், ஸித்தாந்த ஸ்தாபனம், பாட ப்ரவசனம், க்ரந்தமியற்றுதல் முதலியவைகளைச் செய்து கொண்டு லோக நன்மைக்காகத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டு யுக புருஷரென்று எல்லோராலும் கௌரவிக்கப்பட்டும் போற்றப்பட்டும் விளங்கினார்.

முற்றிற்று:

ஸ்ரீவிஜயீந்திர குர்வந்தர்க தயாரதிரமண முக்ய ப்ராணாந்தர்கத ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேச்வர ப்ரியதாம்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பண மஸ்து

## அனுபந்தம்-1

कुबरे इव दाता सः क्षमया पृथिवीसमः ।
प्रलयाग्नि समः क्रोधे धैर्येऽसौ हिमवानिव ॥
धर्मास्सत्येष धीमानहिरिव वचसा भूसुराणां सभायां *
जेता भीमेव वादे पवन इव गतौ संपदि श्रीरिहेयः ।
दाता ज्ञाताच सर्वानहि पतिशयनं पूजयंस्तोषयंश्च
लोके स्सर्वेस्स पूज्यो भुवि मनुजवरैर्मानितोभून्मुनींद्रः ॥
एतन्माहात्म्य मतुलं मूलरामार्चनोद्भवम् ।
तथैव मध्वरामार्चा पूजावैभव संभवं ॥"

ஸ்ரீவிஜயீந்திரரின் தனிச்சிறப்பு

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் குபேரனைப்போல் கொடைவள்ளல். பூமியைப் போலப் பொறுமைசாலி. அவைதிகமான, அதர்ம, பகவத் வேஷிகளைக் கண்டபொழுது அவரது கோபம் ப்ரளய அக்நியைப் போன்றிருந்தது. இமயமலையைப் போன்ற தைரியசாலி கள், யுதிஷ்டிரரைப் போன்ற சத்திய சீலர். ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனை ஒத்த வாக்வல்லமை படைத்தவர், வைராக்ய மஹாமேரு, வெற்றி காணுவதில் அங்காரகனை ஒத்த பராக்ரமி. பூஸுரர்-பூபதிகளின்

---

पाठ भेद ॥ भूपतीनां सभायां ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

சபைகளில் வாதம் மற்றும் க்ஞான விஷயத்தில் வாயு பகவானைப் போலத் திறமைசாலி, ஐச்வர்யத்தில் ஸம்பத்தின் அதி தேவதையான லக்ஷ்மியைப் போல் பூர்ணர், உத்தமமான கொடைவள்ளல். ஸர்வ சாஸ்திரங்களில் கரை கண்டவர், ஸ்ரீசேஷசாயியான ரமாரமணனைப் பூஜித்துத் திருப்தியடையச் செய்து ஸகல லோகங்களிலும் எல்லோராலும் பூஜிக்கப்பட்ட ஸ்ரீவிஜயீந்திர முனீந்திரர் ஜகத்தினில் மனுஷ்யோத்தமரென்று பாராட்டப்பட்டவர். இப்படிப்பட்ட மஹாமஹிமை அவருக்கு ஸ்ரீப்ரம்ம தேவனால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீமூலராமசந்திரர், மற்றும் ஸ்ரீஸர்வஜ்ஞகரார்ச்சித (ஸ்ரீமன்மத்வாசார்யரின் கர கமலங்களினால் பூஜை கொண்ட) ஸ்ரீதிக்விஜயராமரின் பூஜா பலனால் கிடைக்கப்பெற்றது - என்று "விஜயீந்திர விஜய" நூலாசிரியர் ஸ்ரீவிஜயீந்திரரின் மஹிமையின் அதிசயத்தைப் பல முனைகளில், தனிச்சிறப்பை சித்தரித்துள்ளார்.

ஸ்ரீவிஜயீந்திரர் வைதிக ஸத் தத்வங்கள், தர்மம், கலாசாரங்களை ரக்ஷிப்பது, போஷிப்பது (வளர்ப்பது) ப்ரசாரம் முதலியவைகளினால் வேரூன்றச் செய்த மஹானுபாவர். அவருடைய நிகரற்ற பாண்டித்யம், திறமைகள் பல முனைகளிலும் விளங்கியது. "ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ர, வைதிக மத ஸ்தாபனாசார்யர்" என்ற அவரது விருது முற்றிலும் பொருந்தும். 16வது நூற்றாண்டில் அவரது கீர்த்தி அழிவில்லாததும் குறைவற்றதுமாயிருந்தது. அன்று 64 கலைகளிலும் அவரை நிகர்க்க யாருமே இருக்கவில்லையென்று தாராளமாகச் சொல்லலாம்.

ஸ்ரீவ்யாஸராஜ குரு ஸார்வபௌமரின், ஸ்ரீஸுரேந்திரயதிச் சக்கரவர்த்திகளைப் போன்ற உலகம் போற்றும் உத்தமர்களால் தயாரிக்கப்பட்ட விஜயேந்திரரின் தனித்தன்மை (தனிச்சிறப்பு) பல முறைகளிலும் பிரசித்தியடைந்திருந்தது. ஏறக்குறைய 97 வருஷங்கள் பூர்ணாயுளில் அவரது ஸாதனைகள், அவர் செய்த நிகரற்ற காரியங்கள் விமரிசை செய்யும்பொழுது அந்த யுகபுருஷரின் உத்தமமான தனிச்சிறப்பு (ஒருவரிடமும் காணப்படாத, துர்லபமான) தனிச்சிறப்பு நமது இதயச் சுவரில் நன்றாகப் பொறிக்கப்படும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

வெவ்வேறு மதங்களின் மோதல்களில் சிக்கிய ஹிந்து மதம், ஸநாதன தர்மம், கலாசாரங்களை எல்லாவிதமான தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றிப் போஷித்து வந்த மஹாத்மா அவர். நாட்டின் முன்னேற்றத்திற்காக அவர் செய்த தவம் உழைப்பு, சேவை, த்யாகங்கள் என்றென்றும் நினைக்கத் தகுந்தவை. சகல சாஸ்திரங்கள் கலைகளிலும் தனக்கு நிகரில்லாத பாரங்கதரான அவர் வைதிக ஸத்வைஷ்ணவ ஸித்தாந்த ஸ்தாபனத்திற்காக அத்வைத-சைவாத்வைதம் முதலிய அநேக மதப்ரசாரகரான வாத மல்லர்களுடன் நடத்தின வாக்யார்த்த-வாதம் வரலாற்று ப்ரசித்தி பெற்றவை. ஸமஸ்கிருத மொழி, வேத வேதாந்தங்களின் ஸகல சாஸ்திரங்களின் ப்ரசாரத்திற்காகக் கும்பகோணத்தில் அவர் ஸ்தாபித்த ஸமஸ்கிருத மஹாவித்யாபீடம் தக்ஷிண பாரதத்தில் நாடெங்கும் பிரஸித்தியடைந்தது. விசாலமான மனப்பான்மை, தாராள குணங்களுள்ளவர், எல்லோரிடத்திலும் கண்யமாகப் பழகுபவர். க்ஞானம் - பக்தி - வைராக்யம் நிறைந்தவரான ஸ்ரீவிஜயீந்திரர் தமது இந்த்ரிய நிக்ரஹ, விரத நியமங்கள், ஸதாசாரங்களினாலும் உலகத்திற்கு எடுத்துக்காட்டாக (ஆதர்ச புருஷராக) விளங்கினார். ஸ்ரீயவர்களின் ஸத் ஸம்ப்ரதாய தீக்ஷை வித்யா - ப்ரசாரம், வித்வான்களுக்கும் அடைக்கலமென்று வந்தவர்களுக்கும் அடைக்கலம் கொடுத்துப் போஷிக்கும் உதாரகுணமானது. அவருக்கு உலகம் போற்றும் உயர்ந்த மரியாதையைப் பெற்றுத்தந்தன. த்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்டிப் பாதுகாக்கும் பொருட்டு அவர் இயற்றிய 104 ஸாரகர்ப்பிதமான அனுபவபூர்வமான க்ரந்தங்கள் இன்றும் த்வைத ஸித்தாந்த மாபெரும் கோவிலின் கலசங்களைப் போல் விளங்குகின்றன. ஸ்ரீவிஜயீந்திரர் குருபக்தி-சிஷ்யரிடம் அன்பு, பக்தவாத்ஸல்யம், மனித குலத்தின் உய்விற்காக வேண்டிப் பேரவா, லோக நன்மைக்காக தீக்ஷை இவைகளினால் உலகமே போற்றும் மஹானானார். அந்தக். காலத்திய எல்லா ராஜா மஹாராஜாக்கள் - சக்ரவர்த்திகள் ஸ்ரீயவர்களின் சேவை தங்களுடைய மற்றும் நாட்டின் மறுமலர்ச்சிக்கும் முக்கிய காரணம் என்று நம்பி அவருடைய ஆலோசனைகள் - உபதேசம் பெற்று அதன்படியே பின்பற்றி பலமுனைகளிலும் முன்னேற்றம் கண்டனர். ஸ்ரீயவர்களின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


காலத்தில் ஸ்ரீமதாசார்யவர்களின் மஹா சமஸ்தானம் பலவிதங்களிலும் முன்னேற்றம் கண்டது. ப்ராம்மண சமூகம் காப்பாற்றப்பட்டது. த்வைத சித்தாந்தம் சூர்ய சந்திரர்களுள்ள வரை ஸ்திரமாக்கப்பட்டது. ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் வழிகாட்டி, உபதேசம் செய்ததன் பலனாக பாரத மக்கள் நீதிநெறி, ஆன்மீகம் மேலும் தார்மீகப் பாதையில் முன்னேறினர். இந்த எல்லாவிஷயங்களும் முன்பு இருந்த நிலைமையைப் பொறாமையில்லாத நோக்கத்துடன் ஆலோசித்தால் ஸ்ரீவிஜயீந்திரரின் தைவீக தனிச்சிறப்பு நன்றாக விளங்கும்.

ஸ்ரீவிஜயீந்திரர் அவதரித்தது ஒரு பரிவர்த்தன காலத்தில் (Period of transition) என்று சொல்லலாம். ஆஸ்திக மதம் உதயமாய் அது வேரூன்றி வெகுகாலமாய் விட்டிருந்தாலும், நாஸ்திகர்கள் இன்னும் அவ்வப்போது தலை தூக்கி ஆஸ்திக மதத்தின் மீது தாக்குதல்கள் நடத்திக் கொண்டு தானிருந்தனர்.

இந்திரியங்களுக்கப்பாற்பட்ட வஸ்துவே கிடையாது, ஈச்வரன் - தர்மம், ஸ்வர்க்கம் - நரகம் - பாவ - புண்யம், இவைகளெல்லாம் மனிதரால் ஏற்படுத்தப்பட்டவை எல்லாம் ப்ரமை, ஏமாற்றம். "भस्मी भूतस्य देहस्य पुनरागमनं कुतः?" பரலோகம், புனர் ஜன்மங்கள கட்டுக்கதை, இறந்து போன பிறகு தேகத்தைச் சுட்டுவிட்ட பிறகு மறுபடியும் ஜன்மமென்றால் என்ன அர்த்தம்? இவையெல்லாம் வெறும் ப்ரமை. இருந்தவரைக்கும் (உயிருள்ள வரை) சுதந்திரமாக இஷ்டம் போல் உண்டு - தின்று - குடித்து சுகத்தையனுபவிக்க வேண்டும். அதுதான் மனிதரின் லக்ஷியம்!'' என்றெல்லாம் ஜனங்களைத் தன்பக்கம் வசப்படுத்திக்கொள்ளும் மோஹமான சார்வாக மதம்; எல்லாம் சூன்யமென்று சொல்லி அபௌருஷேயமான வேதங்களை நிராகரித்து பௌத்த - ஜைன மதங்கள் ப்ரபலமாகிக் கடைசியில் ஈச்வரனின் - வேதங்களின் அஸ்தித்வத்தின் (இருக்கையையே) அஸ்திவாரத்தையே அசைக்க ஆரம்பிக்கவே, மற்றொரு இடத்தில் ஆஸ்திக மதங்களுக்குள்ளேயே பரஸ்பர மோதல்கள் அக்காலத்தில் தொடர்ந்து நடந்து வந்தன. ஆஸ்திக வாதிகளுக்குள்ளும், பகவந்தனின் அனந்த குணங்களை வேறுபடுத்தி அவனுக்கு இவ்வளவு குணங்கள்தான் என்று வரையறுத்துக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கொண்டிருந்த தர்க்க சாஸ்திர பண்டிதர்கள், வேத ப்ராமாண்ய பக்ஷத்தினராயிருந்தும் கூட கர்மாக்களுக்கு ப்ராமாண்யத்தைக் கொடுத்து, "கர்மமே ப்ரம்மன்" என்று சொல்லி க்ஞான மார்கத்தையே நிராகரித்துக் கொண்டிருந்த மீமாஸம்கர்கள் தங்கள் தங்கள் மதங்களைப் பலமாக ப்ரசாரம் செய்து கொண்டிருந்தனர். வேத ப்ராமாண்யத்தை ஒப்புக் கொண்டு பகவான் - ஸ்வர்க்கம் - நரகம், புண்ய - பாவங்களை அங்கீகரித்திருந்தாலும் கூட, பகவந்தனை நிராகார - நிர்குணனென்றும், கண்ணுக்குத் தெரியும் ஜகத்தையே பொய்யென்றும், வெறுந் தோற்றமென்றும், ஜீவனுக்கும் - ஈச்வரனுக்கும் பேதமில்லையென்றும், எல்லாம் மாயா கல்பிதமென்று சொல்லும். அத்வைதவாதிகளும், ப்ரஸித்த ப்ரம்மா விஷ்ணு சிவனைத் தவிர நான்காவது சிவனிருக்கிறான் என்று சொல்லிச் சிவ ஸர்வோத்த மத்துவத்தை வெளிப்படுத்தும் (தெரிவிக்கும்) சைவாத்வைத மதஸ்தினர் ஒருவிதத்தினால் வைதிக தத்வத்திற்கே பேரடி கொடுத்துக் கொண்டிருந்தனர். வைஷ்ணவ மதங்களில் ஜீவேச்வர பேதம், தாரதம்யம், ஜகத்ஸத்யம் முதலியவைகளை ஒப்புக் கொண்டிருந்த போதிலும், முக்தியில் ஜீவ ப்ரம்மனுக்கு ஆனந்தத்தில் தாரதம்யமில்லையென்று சொல்லும் விசிஷ்டாத்வைத வாதிகளுடைய மதமும் ஸஜ்ஜனர்களின் மனதிற்கு அவ்வளவு பிடிக்கவில்லை. வேதத்திலிருந்து புறக்கணிக்கப்பட்ட (Out Cast) சக்தி - மதம்.... [illegible] கணநாயக, கணபதிகளின் பரதத்துவத்தைப் போதிக்கும் மதம், இன்னும் வேறு மதங்களும் அன்று தலைதூக்கியிருந்தன.

இவ்வாறு வெவ்வேறு மதங்களுக்குள் ஒன்றுக்கொன்று மோதல், வாத விவாதங்களிலகப்பட்டு, எந்த மதம் நம்மை உய்விக்கக் காரணமாகும் என்பதை அறிய முடியாமல் ஜனங்கள் பாமரர்கள், குழம்பிக் கொண்டிருந்தனர். இவையெல்லாவற்றிற்கும் கலசம் வைத்ததாற்போல் க்ஷுத்ர தேவதா உபாஸனை (துஷ்ட தேவதைகளின் உபாஸனை) அதாவது மந்த்ர-யந்த்ரங்கள் செய்யும் அற்ப சக்தியின் பலத்தினால் அக்ஞானிகளான பாமர ஜனங்களைத் தமது இந்திரஜால-மஹேந்திர ஜாலங்களினால் வசப்படுத்திக் கொண்டு சில துஷ்ட மாந்திர்கர்கள் ஸமூகத்திற்கு நஷ்டமுண்டுபண்ணும்

CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

காரியங்களில் ஈடுபட்டிருந்தனர். இதல்லாமல் ஹிந்து மதத்திற்கு ஆதரவுள்ள ஆதாரஸ்தம்பமான விஜயநகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு தக்ஷிண பாரதத்தில் ஹிந்துக்களின் உயிருக்கும் மானத்திற்கும் ஆபத்துண்டாயிருந்தது. வெற்றியின் வெறியினால் யவனர்கள் ஹிந்துக்களின் உயிருக்குயிரான தேவாலயங்களைத் தாக்கிப் பயங்கர நிலையை உருவாக்கினர். இப்பேர்ப்பட்ட ஒரு மாறுதல் நேரத்தில் தான் ஸ்ரீவிஜயீந்திரர் அவதரித்துச் செயல்படத் தொடங்கினார்.

மேல் சொல்லப்பட்ட எல்லாவிதமான புயல்களுக்கும், போராட்டத்தின் நடுவே தைரியமாக நின்று நாலாபக்கங்களிலிருந்து வரும் தாக்குதல்களை எதிர்த்து ஸநாதன வைதிக மதம், ஹிந்து தர்மம், த்வைத ஸித்தாந்தம், மற்றும் ஹிந்துக் கோவில்களைக் காப்பாற்றி உண்மையான தத்துவங்களை, ஸர்வ ஜீவர்களுக்கும் நன்மை செய்யும் தர்மங்களைப் போதித்து, ஜனங்களை ஸன்மார்க்கத்தில் நடைபோடும்படி மிகமிக முக்கியமான பொறுப்பைச் சுமக்கவல்ல தேவாம்ச சம்பூத மகாத்மா ஒருவரின் அவதாரம் அன்று தவிர்க்க முடியாததாயிற்று: பாரதீய ஜனங்களின் மீது பரமாத்மா கருணை காட்டினாரோ என்னும்படியாக மஹாமஹிமை பொருந்திய ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் அவதாரம் ஆயிற்று. பாரதத்தின் தத்வ - சாஸ்த்ர - தார்மீக ப்ரபஞ்சத்தின் பாக்ய - சூரியன் உதயமானான்! அப்படிப்பட்ட மஹத்தான கார்யம். ஸ்ரீவாயு க்ண (ருஜு கண)த்தவரால் தான் ஸாத்யமே தவிர வேறொருவரால் முடியவே முடியாது. ஆகையினால் ஸ்ரீவிஜயீந்திரர் வாயுகண (ருஜு கண)த்தைச் சேர்ந்தவரென்பதற்கு எந்தவிதமான தடையுமில்லை.* இந்த விஷயத்தை மனதில் வைத்துக் கொண்டு ஸ்ரீவிஜயீந்திரரின் நிகரற்ற அமர சரித்திரத்தின் பக்கங்களைப் புரட்டினால்; மனதில் முதலிலேயே உறுதி

*ஸாமான்யமாக யதிகளின் ப்ருந்தாவனத்தின் முன் வாயு தேவனிருப்பது வழக்கம். வாயு கணத்தைச் சேர்ந்த யதிகளின் முன்பு ஸ்ரீஹரியிருப்பது வழக்கம். நமது மாத்வயதிகளில் ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்ரீவாதிராஜர் இவர்கள் ருஜுகணஸ்தரென்று கௌரவிக்கப் படுகின்றனர். அதன்படியே அவருடைய ப்ருந்தாவனத்தின் முன்பாக மற்ற யதிகளைப் போல் வாயு தேவனில்லாமல் ஸ்ரீஹரி ப்ரதிமைகளிருப்பது கவனிக்கத்தக்கது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

செய்து கொண்ட அபிப்ராயம் "என்று தூஷிக்கப்படாதவனாய் (அதாவது Preconcured notion) என்னும் குற்றத்திற்காளாகாமல் விமரிசித்தால் ஸ்ரீவிஜயீந்திரரின் மகிமை அகாதமான, கடமையைச் செய்யும் சக்தி, பல முனைகளில் தனிச்சிறப்பு (அவரே அவருக்கு நிகர்) பாண்டித்யத் திறமை, லோக நன்மையிலீடுபாடுகள் யாவும் உள்ள உள்ளங்கை நெல்லிக்கனி போல் அந்த மஹாத்மாவினால் பாரதநாடு, மக்கள், தத்வம், தர்மம் கலைகளாகவுள்ள அபாரமான உபகாரம் புரியும். இவ்வாறு பல வகையில் உபகாரம் செய்த ஸ்ரீவிஜயீந்திர குருச்ரேஷ்டரை யார்தான் மறக்க முடியும்? பாரத நாட்டின், குறிப்பாகக் கன்னட நாட்டின் மத்வ மதத்தின் வரலாற்றில் அந்த மஹானின் ஸ்தானம் மிகமிக முக்கியமானதும் மதிப்பிற்குரியதும் அமரத்வம் பெற்றதுமல்லாமல் அவரது அமர சரித்திரம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அம்சமாகும் என்று தாராளமாகச் சொல்லலாம்.

## அனுபந்தம்-2

### (1) ஸ்ரீவிஜயீந்திரரின் காலம்:

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் கிறிஸ்து ஆண்டு பதினாறாம் நூற்றாண்டின் 20வது வருடத்திலிருந்து 17வது நூற்றாண்டில் 20வது வருடங்கள் வரையில், அதாவது ஏறக்குறைய 97 வருடகாலம் வாழ்ந்து, தமது தபம், வித்யா, மஹிமைகளினால் அகண்ட பாரத நாட்டின், சிறப்பாக தக்ஷிண பாரதத்தின் மக்களுக்கு நன்மை செய்தார். ஸ்ரீவிஜயீந்திரரின் காலத்தை முகவுரையில் அத்தாட்சி மூலம் விஸ்தாரமாக விவேசனம் செய்து நிச்சயிக்கப்பட்டிருப்பதினால் அதைப்பற்றி இங்கு மறுபடியும் சர்ச்சை செய்வது அஸ்வாபாவிகமென்று கருதுகிறோம். மொத்தமாக ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் கிறிஸ்து ஆண்டு 1517லிருந்து 1614 வரையில் வாழ்ந்தார் என்று சொல்வதில் தடையில்லை.

### (2) ஸ்ரீவிஜயீந்திரரின் கார்ய க்ஷேத்ரம்:

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் தீர்த்த க்ஷேத்திர யாத்திரையை மேற்கொண்டு அகண்ட பாரதம் முழுவதும் ஸஞ்சாரம் செய்து தீர்த்த க்ஷேத்திர ஸேவை, தர்மப்ரசாரம், பகவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


மூர்த்திகளின் தரிசனம், பரவாதி திக்விஜயம் த்வைத ஸித்தாந்த ஸ்தாபனம், வித்வான்களைப் போஷிப்பது, ஆதரவளிப்பது, ஸ்ரீமூலராம ஸ்வாமியின் தரிசனம் செய்வித்தல் தீர்த்த ப்ரஸாதமளித்தல், மந்த்ர முத்ராதாரணம் செய்தல், தத்வ உபதேசம் செய்தல் முதலிய புனித கார்யங்களைச் செய்து சிஷ்ய-பக்தர்களைப் புனிதர்களாக்கி, லோக நன்மைகள் முதலிய மாபெரும் காரியங்கள் செய்தாலும் முக்கியமாக அவருடைய சுறுசுறுப்பான கார்யகலாபங்கள் கன்னட ஸாம்ராஜ்யத்தின் நிர்வாகியான தஞ்சாவூர் ஜில்லாவின் பக்கத்திலுள்ள கும்பகோண க்ஷேத்திரத்தில் ஸ்ரீவிஜயீந்திரர் தமது வாழ்க்கையின் பெரும் பாகத்தைக் காசியைவிட அதிகமாக் கும்பகோணத்திலேயே கழித்தார். கும்பகோணத்தையே தனது கார்ய க்ஷேத்திரமாகச் செய்து கொண்டு ஸ்ரீவிஜயீந்திர குருவர்யர் தமது வித்யா குருகளான ஸ்ரீசந்திரிகாராயரின் ஆணைப்படி கும்பகோணத்தில் மாபெரும் ஸம்ஸ்கிருத வித்யாபீடம் நிறுவி வாழ்க்கையின் இறுதிவரை அது பாரதம் முழுவதும் பிரக்யாதி பெறும்படி செய்து, உத்தமமான முறையில் மதிப்பிற்குரிய வித்யா பீடத்தை நிர்வாகம் செய்து கொண்டு வந்து ஆயிரக்கணக்கானவர்கள் ஷட்தர்சனங்கள், சதுஸ் சாஸ்திரங்களில் சிறந்த பண்டிதராகிய பாரதத்தின் வைதிக வித்யைகள், ஸமஸ்கிருத மொழி, தர்மங்களை இடையூறின்றித் தொடர்ந்து நடத்திக் கொண்டு செல்ல உதவி செய்து மாபெரும் உபகாரம் செய்தார். கணக்கற்ற பரவாதிகளுடன் வாதங்கள், திக்விஜயங்கள், நூல் இயற்றுவது, 64 கலைகளின் திறமைகளைக் காண்பித்தல், பாட ப்ரவசனங்கள் முதலியன வெகுவாக நடந்தன. கும்பகோணத்திலேயேதான் என்று சொல்லலாம். வித்தைக்குப் பிறந்த இடம் என்று சொல்லப்பட்ட கும்பகோணம் ஸ்ரீவிஜயீந்திரரின் கார்யக்ஷேத்திரமாக ஜகத்தில் விளங்கிற்று.

---

"अन्यक्षेत्र कृतं पापं पुण्य क्षेत्रेविनश्यति । पुण्यक्षेत्र कृतं पापं वारणास्यां विनश्यति । वारणासी कृतं पापं कुंभकोणेविनश्यति । कुंभकोण कृतं पापं कुंभकोणे विनश्यति ॥"

அன்ய க்ஷேத்திரத்தில் செய்த பாவம் புண்ய க்ஷேத்திரத்தில் போய்விடும் புண்ய க்ஷேத்திரத்தில் செய்த பாவம் காசியில் போய்விடுகிறது. காசி க்ஷேத்திரத்தில் செய்த பாவம் கும்பகோணத்தில் போய்விடுகிறது. கும்பகோணத்தில் செய்யும் பாவம் கும்பகோணத்தில் போய்விடுகிறது.

CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


(3) அவர் காலத்திலிருந்த பரவாதிகளும் பண்டிதர்களும்:

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருடன் வெவ்வேறு சாஸ்திரங்களில் நூற்றுக்கணக்கான பரவாதிகள் (வாதமல்லர்கள்) வாதம் செய்துள்ளார்கள். அவர்களில் ஸ்ரீந்ருஸம்ஹாச்ரம முனிகள் ஸ்ரீமதுஸூதன ஸரஸ்வதி முனிவர், அத்வைத வித்யாசார்யரும் சைவாத்வைத மதாசார்யருமான ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர், வ்யாகரண சாஸ்திர கோவிதரான பட்டோஜி தீக்ஷிதர், தர்க்க சாஸ்திர நிபுணரான ஸ்ரீமுரளிதர பட்டர், காசி ஸ்ரீகங்காதர சர்மா, ஸ்ரீப்ரபஞ்ஜன சர்மா, சைவ சந்நியாஸிகளான ஸ்ரீலிங்கராஜேந்திரர், நவத்வீப பண்டிதர்கள், பௌத்த ஜைனமத பண்டிதர்கள், அகமர்சன தாதாசார்யரே முதலானவர்கள் ப்ரமுகர்கள்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் வாழ் நாட்களில் ஒன்றில்லாவிடில் இன்னொரு விதத்தில் அவருடன் தொடர்பு கொண்ட மதிப்பிற்குரிய, அவரால் ஜயிக்கப்பட்ட,அனுக்ரஹிக்கப்பட்ட, போஷிக்கப்பட்ட மஹா பண்டிதர், கவிகள் கணக்கற்றவர்கள் உள்ளனர். அவர்களில் இனி சில வித்வான்களை மேலே விவரிக்கப்படுகிறது.

பக்ஷதரமிச்ர, வித்யாதரர், பஸவாபட்ட, வல்லபாசார்யர், அநந்தபட்டர், ஸோமநாதர், வனமாலிமிச்ர, தரங்கணீ ராமர்சார்யர், லக்ஷ்மி நரசிம்ஹாசார்யர், க்ருஷ்ணபட்டர், திம்மண்ண பட்டர், எம்மேபஸவ, அம்பலராமராய, க்ருஷ்ணபட்ட, ஸ்ரீரங்கதேசகர், அஹோபில வெங்கட தாதாசார்யர், பிக்ஷாமடத்தின் ஈக்ஷணசிவ, அகோரசிவ, சபாபதி, ஸ்வம்பு, காம கோடி, கணபார்ய, ராஜநாத, க்ருஷ்ண கவி, க்ருஷ்ணயஜ்வ, ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர்: ரத்னகோடி தீக்ஷிதர். மஹாகவி ரத்னகேடி தீக்ஷிதர் கண்டீகோட்டயின் பிங்காளிஸூரண, ஸங்கணநாயக, ராமானுஜய்ய, வெங்கடபட்ட, தோஸூரிகோனேரிகவி, எம்பபெருமானு ஜீய்யங்கார், பராங்குசவான், சடகோபஜீய்யங்கார், மஹாசார்ய, அநந்த சிவாசார்யர், பொன்னம்பல சிவாசார்யர், ச்ரவண பௌகோளாவின் சாருகீர்த்தி, சிதம்பர மடத்தின் சிதம்பர குரு ஹைஹன மாஸிவய்ய, குரு ஆநந்த நாமா சிவய்ய பெண்டாரு, திருமலபட்ட,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy
ஸஹவாஸி குருசரண, விட்டலதாஸ, அனந்த பண்டித, நாராயணபட்ட, திம்மரஸ, அல்லிமபட்ட, தேவண்ணபட்ட, குருராய, கோபிநாதபட்ட, ராகவபட்ட, கனகாசலபட்டர், ரங்குபட்டர், கொஞ்ஜுபட்ட, ராயஸம் வேங்கடகவி, குணஸூரி, ஸோமபட்ட, கேசவபட்ட, சங்கர நாராயணேந்த்ர, ரங்கநாத, ராமபட்ட, தானப்பய்ய, ஹஸ்தகம், திருமலய்ய, பாகவதம் வெங்கடய்ய், சக்ரசாஸ்திரி, ராமயார்ய, நைனார்ய, நரஸம்பட்ட, கோனேரிபட்ட, ராமதீக்ஷிதர், நரஹரி, வேங்கடாத்ரி முதலானவர்கள் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் ஸமகாலத்தவர்கள்.

(4) சமகாலத்திலிருந்த பீடாதிபதிகள்:

ஸ்ரீவிஜயீந்திரரின் காலத்தில் அத்வைத விசிஷ்டாத்வைத மற்றும் சைவ மத, இன்னும் இதர மதப் பீடாதிபதிகளிருந்தனர். ஆனால் அவர்களின் பெயர்கள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் சாஹித்யம் நமக்குக் கிடைக்காததால் அவர்களின் பெயர்களையும் தெரிவிப்பதற்கு இடமில்லை. இதைப்போல மாத்வ பீடாதிபதிகளிலும் உடுப்பியின் அஷ்ட மடங்கள் ஸ்ரீஸுப்ரம்மண்ய மடம், ஸ்ரீமாதவ தீர்த்த மடம், கோகர்ண பர்த்காளிய மடம் முதலான தர்ம பீடாதிபதிகளின் பெயர், அவர்களின் காலம் முதலிய விஷயங்கள் கிடைக்காத போதிலும் கீழ்க்கண்ட பீடாதீச்வரர்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் சமகாலத்தியவரென்று தைரியமாகச் சொல்ல முடியும்.

ஸ்ரீமதாசார்யரின் மஹா ஸமஸ்தானாதிபதிகளான ஸ்ரீராஜேந்திர தீர்த்தரின் பரம்பரையின் ஸ்ரீமத்வ்யாஸ ராஜகுரு ஸார்வபௌமர், ஸ்ரீநிவாஸ தீர்த்தர், ஸ்ரீராம தீர்த்தர், ஸ்ரீஅக்ஷோப்ய தீர்த்தரின் கிளையின் பரம்பரையின் கூட்லி ஸ்ரீஅக்ஷோப்ய தீர்த்த ஸமஸ்தானத்தின் ஸ்ரீநாராயணயதிகள், ஸ்ரீநிவாஸ தீர்த்தர், ஸ்ரீஸோதே மடத்தின் ஸ்ரீவாதிராஜ தீர்த்தர், ஸ்ரீஉத்தராதி மடத்தின் ஸ்ரீரகூத்தம தீர்த்தர், ஸ்ரீபண்டாரிகேரி மடத்தின் ஸ்ரீரகுபதி தீர்த்தர், ஸ்ரீதாமோதர தீர்த்தர், வல்லபா சார்யர், ஸ்ரீகாசி மடத்தின் ஸ்ரீயாதவேந்திர தீர்த்தர் முதலிய பீடாதிபதிகள் ஸ்ரீவியாசராஜரின் ஸன்யஸ்த சிஷ்யரான கேசவாதியதிகள், ஸ்ரீகோவிந்த ஒடெயர் முதலான பரமஹம்ஸர்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் சமகாலத்தவர்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

(5) அன்றைய (அ,சுகள்) ராஜ்யங்கள்:

ஸ்ரீவிஜயீந்திரரின் காலத்தில் தில்லி, க்வாலியர், விஜயநகரம், வாரங்கல், (கஜபதி), மதுரை (பாண்டிய) தஞ்சாவூர் (சோள), அநந்த சயனம், கொச்சி, மைசூர், பீஜப்பூர், கோல்கொண்ட பீடார் முதலிய பஹமினி ராஜ்யங்கள், செஞ்சி, வேலூர், இக்கேரி, கௌதி, கார்க்கள, காமகெட்டி முதலிய பதினாறு ராஜ்யங்கள் மற்றும் சிற்றரசுக்கள் பாளேபட்டுகள் அந்தந்த தேசங்களின் ராஜா-மஹாராஜாக்கள், சக்ரவர்த்திகள் ஏதோர் ஒருவகையில் ஸ்ரீவிஜயீந்திரரிடமிருந்து உபகாரம் பெற்று அவர் சேவை செய்து அனுக்ரஹிக்கப்பட்டனர்.

(6) சமகாலத்திய அரசர்கள்-சக்ரவர்த்திகள்:

தில்லியின் அக்பர் (1556-1605) ஜஹாங்கீர் (1605-1629) முதலான முகலாய சக்ரவர்த்திகள், கிருஷ்ணதேவராயர் (1509-1530), அச்யுதராயர் (1530-1542) ஸதாசிவராயர் (1542-1567), மருமகன் ராமராயர் (1542-1565), திருமலராயர் (1568-1572), முதலாவது ஸ்ரீரங்கராஜர் (1572-1586) வீரவெங்கடபதிராய (1586-1614) முதலிய விஜயநகரத்தின் கன்னடச் சக்ரவர்த்திகள், விஜயநகரத்தின் சிற்றரசரான தஞ்சாவூரின் சின்னராஜர், செவ்வப்ப நாயகர், சின்ன செவ்வப்ப நாயகர், அச்யுதப்ப நாயகர், ரகுநாத பூபாலன், மதுரையின் விச்வநாத நாயகர், குமார கிருஷ்ணப்ப நாயகர்கள், அநந்த சயனத்தின் உதய மார்த்தாண்டவர்மன், முதலிய ராஜ மஹாராஜர்கள் இதுபோலவே செஞ்சியின் ஸூரப்ப நாயகர், வேலூரின் சின்னபொம்ம, இக்கேரியின் வெங்கப்ப நாயகர், மைசூரின் தேவராஜ நஞ்சராஜ, கண்டீரவ ஸரஸ்ராஜ, ஒடெயர்கள், ராஜகுமார திம்மய்ய தேவ, மற்றும் விட்டலதேவ (மருமகன் ராமராஜரின் சகோதரன்) கௌதியின் வெங்கடப்ப நாயக, பகினாறின் சேனாபதி தேவப்ப கௌட, கஸ்தூரி மதகரிநாயக, பெண்ணுருரு பெரிய எர்ரமநாயக, ஸோதேயன் நாயகன் முதலான ராஜர்கள் மற்றும் பாளேகாரர்கள், சேனாபதிகள், விஜயீந்திர சமகாலத்தியவராக இருந்து பலவகையில் ஸ்ரீயவரின் சேவை செய்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


அனுக்ரஹமடைந்தனர்.* மேற்கண்ட மஹாராஜ சக்ரவர்த்திகள் ஸ்ரீவிஜயீந்திரரின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரராய் அவரை அநேகவிதத்தில் கௌரவித்து, சேவித்து கௌரவம் பக்தி முதலானவைகளினால் பார்க்கப்பட்ட விஷயம் இந்தக் கதாபாகத்தில் ஆங்காங்கு தகுந்த இடங்களில் பொருந்துவதைப் பார்க்கலாம். இதனால் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் திறமை எவ்வளவு பரவியிருந்தது, நாட்டின் எல்லா முனைகளின் முன்னேற்றத்தில் அவர் எப்பேர்ப்பட்ட மகத்துவ பூர்ணமான பாத்திரம் வகித்திருந்தாரென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கி அவர்மீது விசேஷ கௌரவ புத்தி உண்டாவதன்றி அத்தகைய மாபெரும் மஹானைப் பெற்ற விஷயம் பெருமைக்குரியது.

## அனுபந்தம்-3

### ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் க்ரந்தங்கள் (நூல்கள்)

த்வைத ஸித்தாந்தத்தின் ஆதாரத்தூண் எனப்பெயர் பெற்று, நூலாசிரியராகி, பாடப்ரவசனங்களினால் கியாதிபெற்று, அநேக மஹாமகிமை பொருந்திய பெரியோர்களே ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவரின் க்ரந்த ரசனைத் திறமை மேலும் நிபுணத்துவத்தை உள்ளதை உள்ளபடியே விவரிப்பதற்கு ஸாத்யமில்லை யென்று கோஷித்திருக்கும்பொழுது, அற்ப புத்தியுள்ள நாம் அவைகளை விமரிசிக்கப் புறப்பட்டால் நகைப்புக்கிடமாகும்! ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் க்ஞானம், தபஸ், வாதசைலி, திறமைகளெல்லாம் எவ்வளவு அனிதஸாதாரணமோ அதுபோலவே அவரது காவ்யங்கள்

*நமக்குக் கிடைத்த அளவு ஸாஹித்ய ப்ரமாணங்களினால் தாமிர் சாஸன, தான பத்திரங்கள், மற்றும் இதர அரசு தஸ்தாவேஜுகள், ப்ரமாண கிரந்தங்களின் ஆதாரத்தினால் மேற்கண்ட விவரத்தைக் கொடுத்துள்ளோம். இதல்லாமல் உத்தர தக்ஷிண பாரதத்தில் இன்னும் அநேக ராஜ்யம் பாளே பட்டுகளிருந்து அநேக தர்மாபிமானிகளான வீரபுருஷர்கள் ஸ்ரீவிஜயீந்திரரின் சமகாலத்தவராயிருந்து அவரது அனுக்ரஹத்திற்குப் பாத்திரராயிருந்தனரென்று ஊகிக்க இடமுண்டு. -நூலாசிரியர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

(Essay) ப்ரணய நிபுணத்வம், பாண்டித்யம், சாதுர்யங்கள் அஸாதாராணமானவை; வித்வன் மணிகளால் மதிக்கப்பட்டுள்ளனவென்று தாராளமாகச் சொல்லலாம்.

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் த்வைத ஸித்தாந்தத்தின் மீது மாத்திரம் கட்டுரைகள் எழுதியவரல்ல; அவர் ந்யாய, மீமாமஸா, வ்யாகரணம் ஜோதிடம் முதலிய சாஸ்திரங்களிலும் அபூர்வ க்ருதிகளை (நூல்களை) இயற்றி உலகம் போற்றும் மதிப்பைப் பெற்ற புண்யாத்மா இது மாத்திரமல்ல; அத்வைத விசிஷ்டாத்வைத சாஸ்திரங்களிலும் கூட தமக்குள்ள அஸாதாரண பாண்டித்யத் திறமைகளை பரமதங்களின் மீது அவருக்குள்ள கௌரவத்தைத் தெரிவிப்பதற்கு க்ரந்தங்களை இயற்றி பரமதஸ்தர்களாலும் புகழப்பட்டாரென்றால் இன்னும் அவருடைய நூல் இயற்றும் திறமையைப் பற்றி அதிக விவரம் சொல்லவா வேண்டும்!!

"ஸ்ரீராகவேந்திர விஜயம்" ஆசிரியர் ஸ்ரீவிஜயீந்திர குருபாதரின் கட்டுரை எழுதும் திறமையை வெகு அழகாக இவ்வாறு விவரிக்கிறார்.

वाक्ये पदे पाद विलोचनोक्तौ
व्यासीय शास्त्रे च कृतान् प्रबंधान् ।
आस्ताबुधः श्रोतुमशेष

"மீமாம்ஸா, வ்யாகரண, தர்க்க சாஸ்திரம் முதலியவை மற்றும் பாதராயணரின் வேதாந்த சாஸ்திரம், (பாரத புராணங்களும் கூட) முதலியவைகளில் ஸ்ரீவிஜயீந்திர யதிகள் எவ்வளவோ க்ரந்தங்கள் இயற்றியுள்ளார். மனிதனின் ஆயுள் நூறு வருட அளவிற்குள்ளிருப்பதினால் எந்தப் பண்டிதனும் ஸ்ரீவிஜயீந்திரருடைய ஸகல க்ரந்தங்களின் பாடப்ரவசனம் செய்ய முடியாதவன். அவ்வளவு அகாத-எண்ணற்றவைகள் அவைகள்! அவ்வளவுதூரம் போவானேன்? ஸ்ரீவிஜயீந்திரரியற்றியுள்ள எல்லா க்ரந்தங்களின் பெயர்களை மொத்தமாக எண்ணிக்கைக் கிரமமாகச் சொல்லவல்ல தீரர் யாருள்ளனர்? ஒருவேளை ஸ்ரீவிஜயீந்திரரின் எல்லா க்ரந்தங்களின் பெயர்களை யாராவது சொல்ல முடிந்தவரானால் அப்படிப்பட்டவரை உத்தம பண்டிதரென்று தைரியமாகச் சொல்லலாம்!!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீ விஜயீந்திரரின் க்ரந்தங்களின் பெயர்களை மாத்திரம் சொல்ல முடிந்தவரை உத்தம பண்டிதரென்று சொன்னால், அவருடைய க்ரந்தங்களைப் பாடப்ரவசனம் செய்யவல்லவர் மஹா பண்டிதரென்று சொல்லவும் வேண்டுமா? அவ்வாறிருக்கு அப்படிப்பட்ட மஹா ப்ரபந்தங்களை (கட்டுரைகளை) இயற்றிய அந்த மஹானுபாவரின் பாண்டித்யத்தின் அளவு (எல்லை)களை ஊகிப்பதற்கு இயலாததாக இருக்கையில் இவ்வளவுதான் என்று மார் தட்டிச் சொல்லும் தீரர்க்ள் இன்று யாருள்ளனர்?

ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் த்வைத ஸித்தாந்த மொன்றின் சம்பந்தப்பட்டது மாத்திரம் 104 ஸ்வதந்திரமான ப்ரபந்த ரத்னங்களை இயற்றியிருப்பதல்லாமல் ஸ்ரீமதாசார்யரின் எல்லா க்ரந்தங்களுக்கும் டீகாக்களுக்கும் கணக்கற்ற விளக்க உரைகளும், ஸ்ரீசந்திரிகாராயரின் எல்லா க்ரந்தங்களுக்கும் டிப்பணிகள் (விளக்கங்கள்) அவைகளைப் புகழும் க்ரந்தங்களும், ந்யாய-மீமாம்ஸா வ்யாகரணம் முதலிய சாஸ்திரங்களில் உத்தமமான க்ரந்தங்களும், இன்னும் மந்த்ர ஸ்தோத்திரங்களை இயற்றி பாரத தேசத்தின் ஸரஸ்வதி தேவியின் பொக்கிஷத்திற்கு அபாரமான கொடை வழங்கியுள்ளார். ஸ்ரீவிஜயீந்திரரின் ஒவ்வொரு க்ரந்தமும் மேருமலை போலுள்ளன. அவரது திறமை வாய்ந்த ப்ரபந்தங்கள் ஒவ்வொன்றும் த்வைத ஸித்தாந்த ஸ்தாபனத்தின் மைல் கற்களாகவுள்ளன. அவருடைய உத்தமமான க்ருதிகள் த்வைத ஸித்தாந்தத்தின் தகர்க்க முடியாத கோட்டைகளாக உள்ளன. த்வைத ஸித்தாந்தத்தில் இதுவரை கிடைக்கும் கிரந்தங்களின் மொத்தத்தில் விஜயீந்திர க்ரந்தங்களே மூன்றில் ஒரு பங்காகலாம் எனலாம். த்வைத ஸித்தாந்தத்தில் பீடாதிபதிகளின் கூட்டத்தில் ஸ்ரீவிஜயீந்திரரெழுதிய அவ்வளவு க்ரந்தங்கள் எழுதியவர் வேறு யாருமில்லையென்று பறைசாற்றிச் சொல்லலாம். இவ்வாறு அபூர்வ க்ரந்தங்களை இயற்றி மத்வ ஸித்தாந்திற்கு ஏற்பட்டிருந்த இடையூறுகளை நிவாரணம் செய்து ஸித்தாந்தத்தைக் காப்பாற்றி, நன்கு போஷித்து சூர்ய சந்த்ராதிகளுள்ள வரை நிலைநிற்கச் செய்த அந்த மஹானின் அபார உபகாரத்தை மாத்வ சமூகம் என்றும் மறக்கவே முடியாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி களவரின் திக்விஜய ஸிம்ஹாஸனாதீச்வராயிருந்த பரம பூஜ்ய கீர்த்திபெற்ற ஸ்ரீமத் ஸுயமீந்திர தீர்த்தரின் ஆணைப்படி ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் முதலான ப்ராசீனாசார்யரின் க்ரந்தகளைச் சேகரிப்பது, ஆராய்ச்சி வெளியீட்டுக்களுக்காக 1945ல் நஞ்சன்கூடில் ஸ்தாபிக்கப்பட்ட "ஸ்ரீபரிமள ஆராய்ச்சி க்ரந்தப்ரகாச்னம் (புத்தக வெளியீடு) மந்திரத்த"த்வரின் அயரா உழைப்பினால் எவ்வளவோ வெளிவராத க்ரந்தங்கள் சேரிக்கப்பட்டன, ப்ரகாசன. மந்திரத்தின்" ஸ்ரீஸுமதீஸுயமீந்திர க்ரந்த" பண்டார், ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி களவர்களின் மடத்தின் "ஸரஸ்வதி க்ரந்த பண்டார்", மைசூர், தஞ்சாவூர், மதராஸ், ஹைதராபாத், அனந்த சயனம், கொச்சி முதலிய இடங்களிலுள்ள அரசினர் ப்ராச்ய சம்சோதன க்ரந்தாகார், ஸ்ரீகுருராஜரின் பூர்வாச்ரமவமி சத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளிலுள்ள நூல் நிலையங்கள், உடுபி, கும்பகோணம், ஸ்ரீரங்கம் முதலிய இடங்களிலுள்ள வைதிக, லௌகிகரின் வீடுகளிலுள்ள நூல் நிலையங்களின் பரிசீலனையினால் இதுவரை ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் க்ரந்தங்களின் விவரத்தை இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளது.

**ஸ்ரீவிஜயீந்திர க்ரந்தங்கள்**

1. ப்ரம்ம ஸுத்ர பாஷ்ய டீகா டிப்பணி தத்வ மாணிக்யபேடி.
2. ப்ரம்ம ஸுத்ர ந்யாய ஸங்க்ரஹ *இந்த க்ரந்தத்தை பரிமள வித்யா மந்திரத்திலிருந்து கொடுக்கப் பட்டுள்ளது.
3. (ப்ரம்ம ஸுத்திரத்தைப் பற்றிய) நயமுகுர.
4. (ப்ரம்ம ஸுத்திரத்தைப் பற்றிய) நயன மஞ்ஜரி.
5. ப்ரம்ம ஸுத்ர அதிகரண ந்யாயமாலா.
6. அதிகரண மாலா.
7. அதிகரண ரத்னமாலா.
8. ந்யாய மௌக்திக மாலா.
9. அத்வைத சிக்ஷா.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


10. அப்பய்ய கபோல சபேடிகா.
11. தூரீய சிவகண்டனம்.
12. பேத வித்யாவிலாஸ.
13. மத்வஸித்தாந்த ஸாரோத்தார.
14. மத்வ தந்த்ர முக பூஷணம்.
15. மத்வாத்வ கண்டகோத்தார
16. மீமாம்ஸா நயகௌமுதீ.
17. நய சம்பகமாலா
18. சைவ ஸர்வஸ்வ கண்டனம்.
19. வாக்வைகரீ.
20. வாத மாலிகா.
21. ந்யா யாத்வ தீபிகா.
22. ச்ருதி தாத்பர்ய கௌமுதீ.
23. ச்ருத்யர்த்தஸார:
24. ஸர்வ ஸித்தாந்த ஸாரஸாரவிவேக (ஸ்ரீராயர மடப்ரகாசன.)
25. ந்யாயாம்ருத டிப்பணீ ஆமோத.
26. ந்யாயாம்ருத ந்யாயமாலா.
27. ந்யாயாம்ருத ஜைமினீய ந்யாயமாலா.
28. ந்யாயமாலா.
29. தாத்பர்ய சந்த்ரிகா வ்யாக்யா ந்யாயமாலா.
30. சந்த்ரிகோதஹ்ருதந்யாய விவரணம்.
31. தார்த்பர்ய சந்த்ரிகா பூஷணம்.
32. தர்க்க தாண்டவ வ்யாக்யா ஸத்யுக்தி ரத்னாவலி.
33. சக்ரமீமாம்ஸா.
34. பரதத்வப்ரகாசிகா.
35. உபஸம்ஹார விஜய.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


36. நாராயண சப்தார்த்த நிர்வசனம்.

37. ராமானுஜீயமதரீத்யா ஸூத்ரார்த்த (சாரீரக மீமாம்ஸா)

38. ப்ரமாணாலக்ஷண டீகாவ்யாக்யான.

39. கதாலக்ஷண டீகாவ்யாக்யா.

40. தத்வஸங்க்யான டீகாவ்யாக்யா.

41. தத்வோத்யோத டீகாவ்யாக்யான கூடபாவ ப்ரகாச.

42. விஷ்ணு தத்வ நிர்ணய டீகாவ்யாக்யா.

43. மாயவாத கண்டன வ்யாக்யா.

44. மித்யாத்வானுமான கண்டன வ்யாக்யா.

45. உபாதிகண்டன வ்யாக்யா.

46.47 அவசிஷ்ட ப்ரகரண, க்ரந்த வ்யாக்யாகளு.

48. ப்ரமாண பத்ததி வ்யாக்யா.

49. குசோத்யகுடார.

50. பட்டோஜி குட்டனம்.

51. அனுபாஷ்ய டிப்பணி.

52. பதார்த்த ஸங்க்ரஹ.

53. ப்ரணவதர்ப்பண கண்டனம்.

54. பேத சிந்தாமணி.

55. பேதப்ரபா.

56. பேதாகம ஸூதாகர:

57. பேத ஸஞ்சீவினி:

58. லிங்க மூலான்வேஷண விசார:

59. விரோதோத்தார:

60. விஷ்ணு பாரம்ய.

61. ஸன்மார்க்க தீபிகா.

62. ஸித்தாந்த ஸாராஸார விவேசனம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

63. ந்யாயாம்ருத குர்வாமோத:

64. ந்யாயாம்ருத மத்ய மாமோத:.

65. கிதாதாத்பர்ய நிர்ணயவ்யாக்யா.

66. கிதாவ்யாக்யான.

67. கிதாக்ஷரார்த்த.

68. பிஷ்ட பசுமீமாம்ஸா.

69. ந்யாய தீபிகா டிப்பணி.

70. கிதாபாஷ்ய ப்ரமேய தீபிகா டிப்பணி.

71. ஆனந்ததாரதம்ய வாதார்த்த:

72. கர்ம நிர்ணய வ்யாக்யா.

73. ந்யாய ஸுதாடிப்பணி-பிந்து:

74-83. தசோபநிஷத்பாஷ்ய டீகாடிப்பணிகள்.

காவ்ய நாடகங்கள்

84. ஸ்ரீவ்யாஸ ராஜ விஜய:

85. சுபத்ரா தனஞ்ஜய:

86. உபயக்ரஹ (க்ரஸ்த?) ராஹூதய:

ஸ்தோரங்கள்.

87. துரிதாபஹார ஸ்தோத்ர

88. ஸ்ரீந்ருஸிம்ஹஸ்துதி

மேற்சொன்ன க்ரந்தங்களில் ஒன்றிலிருந்து 42 மற்றும் 48, 90-91 இவ்வாறு 45 க்ரந்தங்கள் ஸ்ரீபரிமள ப்ரகாசன மந்திரிரத்தின் ஸ்ரீஸுமதி ஸுயமீந்திர க்ரந்த புஸ்தகாலயத்திலும், மற்றவை இதர அரசு தனியார் புஸ்தகாலயங்களிலும் உள்ளன. சில மற்ற க்ரந்தங்கள் முதலான விவரங்களினால் தெரிவிக்கப்பட்ட க்ரந்தங்கள் இதுவரை ஆராய்ச்சியினால் கிடைக்கும் க்ரந்தங்கள் 88க்கும் அதிகமானவை. இன்னும் மற்ற க்ரந்தங்களாகட்டும், அவைகளின் பெயர்களாகட்டும், இன்னும் கிடைக்காமலிருப்பது மாத்வர்களின் துர்பாக்யம்! நம் அக்கரையின்மையால், ஸ்ரீவிஜயீந்திரரின் எவ்வளவோ

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


க்ரந்த ரத்னங்களின் மீது அலக்ஷியமாயிருந்ததினால் ஸாரஸ்வத பொக்கிஷத்திற்கு அபூர்வ நஷ்ட மேற்பட்டுள்ளதென்று துக்கத்தினால் சொல்ல வேண்டியுள்ளது. "பரிமள ப்ரகாசன மந்திரம்" ஸ்ரீவிஜயீந்திர க்ரந்தங்களை வெளியிடுவதற்காக உற்சாகத்துடன் முயற்சித்துக் கொண்டிருந்தாலும் அதற்குச் சரியான உற்சாகம், உதவியில்லாமல் காரியம் தடைபட்டுள்ளது. அரசு, தர்ம பீடங்கள், உதார குணமுள்ள தர்மாபிமானிகளுடைய உற்சாகம் உதவி-உத்துழைப்பு கிடைத்தால், கிடைத்துள்ள க்ரந்தங்களாவது வெளியிடப்பட்டு நவீன காலத்துப் பண்டிதர்கள் மத்வ சித்தாந்தத்தின் மீது சுமத்தும் தோஷம் தூஷணை

## श्रीविजयीन्द्रकृतग्रंथः ।

1. ब्रह्मसूत्रभाष्यटीकाटिप्पणि तत्वमाणिक्य पेटी
2. ब्रह्मसूत्रन्याय संग्रहः *
3. (ब्रह्मसूत्र) नयमुकुरः
4. (ब्रह्मसूत्र) नयनमंजरी
5. ब्रह्मसूत्र अधिकरणन्यायमाला
6. अधिकरण माला
7. अधिकरण रत्नमाला
8. न्याय मौक्तिकमाला
9. अद्वैतशिक्षा
10. अप्पय्यकपोलचपेटिका
11. तुरीयशिवखंडनं *
12. भेदविद्याविलासः
13. मध्वसिद्धंतसारोद्धारः
14. मध्वतंत्रमुखभूषणं
15. मध्वाध्वकंटकोद्धारः
16. मीमांसानय कौमुदी
17. नयचंपकमाला
18. शैवसर्वस्वखंडनं *
19. वाग्वैखरी

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


20. वादमालिका
21. न्यायाध्वदीपिका
22. श्रुतितात्पर्य कौमुदी
23. श्रुत्यर्थसारः
24. सर्वविद्वांवसारा सारविवेकः
25. न्यायामृतटिप्पणी आमोधः
26. न्यायामृत न्यायमाला
27. न्यायामृत जैमिनीय न्यायमाला
28. न्यायमाला
29. तात्पर्य चन्द्रिका व्याखया न्यायमाला
30. चंद्रिकोदाहृत न्यायविवरणं
31. तात्पर्य चन्द्रिका भूषणं
32. तर्कतांडव व्याखया सद्युक्तिरत्नावलिः
33. चक्र मीमांसा
34. परतत्व प्रकाशिका
35. उपसंहार विजयः
36. नारायण शब्दार्थ निर्वचनं
37. रामानुजमतरीत्यासूत्रार्थः (शारीरिक मीमांसा)
38. प्रमाण लक्षण टीका वाखयान
39. कथा लक्षण टीकाव्याखयान
40. तत्वसंखयान टीकाव्याखयान
41. तत्वोद्योत टीकाव्याखयान गूढ भाव प्रकाशः
42. विष्णू तत्वनिर्णय टीका व्याखयान
43. मायावाद खंडन व्याखयान
44. मिथ्यात्वानुमानखंडन वयाखयान
45. उपाधि खंडन व्याखयान
46-47. अवशिष्ट प्रकरणग्रंथ व्याखयान
48. प्रमाणपद्धति व्याखयान
49. कुचोद्य कुठार
50. भट्टोजी कुट्टानं
51. अणुभाष्यटिप्पणि
52. पदार्थ संग्रहः

CC-0. Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


53. प्रणवर्पणखंडनं
54. भेद चिंतामणिः
55. भेद प्रभा
56. भेदागाम सुधाकरः
57. भेदसंजीवनी
58. लिंगमूलान्वेषणविचारः
59. विरोधोद्धार
60. विष्णु पारंम्य
61. सन्मार्ग दीपिका
62. सिद्धयंत सारासर विवेचनं
63. न्यायामृतगुर्वा मोदः
64. न्यायामृतमध्य मामोदः
65. गीतातात्पर्य निर्णय व्याखया
66. गीता व्याखयान
67. गीताक्षरार्थः
68. पिष्ट मशु मीमांसा
69. न्याय दीपिकाटिप्पणि
70. गीता भाष्य प्रमेयदीपिका टिप्पणि
71. आनंद तारतम्य वादार्थः
72. कर्मनिर्णय व्याखया
73. न्याय सुधाटिप्पणी - विंदुः
74-83. दशोमतिषद्भाष्य टीकाटिप्पणि
84. श्री व्यासराजविजयः
85. सुभद्रा धनंजयः काव्यनाटक
86. उभयग्रह (ग्रस्त) राहूदय
87. दुरितापहार स्तोत्र *
88. श्री नृसिंहस्तुतिः स्तोत्र

களை எளிதாக நிவாரணம் செய்து த்வைத ஸித்தாந்த ஸ்தாபனம் செய்வதற்குப் பண்டிதருக்கு மிக்க உபகாரம் ஆவதில் சந்தேகமில்லை. மடாதிபதிகள், அரசு, தாரான குணமுள்ள தனவான்கள், இனிமேலாவது தேசத்தின்

CC0 In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


சொத்தான இந்த அபூர்வ க்ருதிகளின் வெளியீட்டில் உற்சாகம் காட்டுவார்கள் என்று விரும்புவோம் மற்றும் நம்புவோம்.

362ம் பக்கத்தில் இந்தக்குறியின் 2வது ப்ரம்ம ஸூத்ர ந்யாய ஸங்க்ரஹம், 12வது பேத வித்யாவிலாஸ், 18வது சைவஸர்வஸ்வ கண்டனம், 362வது பக்கத்திலுள்ள 35வது உபஸம்ஹார விஜய, 364வது பக்கத்திலுள்ள் 87வது துரிதாபஹார ஸ்தோத்ரம் மற்றும் 88வது ஸ்ரீந்ருஸிம்ஹஸ்துதி: மற்றும் 363வது பக்கத்தில் கண்ட 34வது க்ரந்தம், "பரத்வப்ரகாசிகா" என்னும் க்ரந்தங்கள் ஸ்ரீ "பரிமள க்ரந்தப்ரகாசன" மந்திரத்திலிருந்து வெளியாகியுள்ளன. 362 பக்கத்திலுள்ள 12வது "துரீய சிவகண்டனம்" என்னும் க்ரந்தம் அச்சர்வதற்குத் தயாராக உள்ளது. 363வது பக்கத்தில் கண்ட "தத்வோத்யோத டீகா" வ்யாக்யா "கூடபாவ ப்ரகாசத்தை ஸ்ரீபண்டாரிகேரி மடத்தவர் அச்சிட்டுள்ளனர். அதற்கு ஸ்ரீவிஜயீந்திரரின் ஒரு "டிப்பணியை" ஸ்ரீபரிமள க்ரந்த ப்ரகாசன மந்திரத்தவர்கள் கொடுத்துள்ளனர்.

## அனுபந்தம்-4

# (I) श्रीविजयींद्रगद्यं ।

अस्तिखलु जगति वन्दनरतिकंन्दल दतिबन्धुर मतिसिन्धुरपतिमन्थरगतिसिंन्धुरदर गंधिलगण्डस्थलनिष्यन्दद मन्द मदकबंध गुणबंधि तेंदिंदिरसंदोहझंक्रियालंक्रियाजंजंनदहंक्रियासाधा रणेतरत्तोरणवितर्दिकांतरविहरणाराज्यमानशुकशारिका निकरनिजागद्यमान संततसहवासवासयात वेदान्तपातं जलगौतमीय जैमिनीय सिद्धान्त संमाननीयः, गन्धवाहजवातिसन्धानधौरेयगन्धर्ववरकुलव्याकुलपुरोदेशसैन्धवाधी शानविश्राणितानेकमाणिक्यगणखचितसिंहासनोच्चलित घृणिपटलकपटपदपरिचरणकरणागतमनुजदृष्टिदोषावरणवरणः, प्रत्यर्थिपार्थिव धूर्वहगर्वसर्वंकषसर्वसर्वंसहासहायपरिजनपरिवृटत मनुजपतिवितीर्णमुक्तावितानविभाविभावितसत्वगुणसहवा सः सेवासकुतुकभावावनितलदेवापरिमित वामाजनसभाजननीराजननवीनभाजनसंतप्त हयंगवीन संस्पर्शदर्शितनिजावमर्शराहित्यदीपकपट रजोगुणपावकपरिभ्रमनि जापगमशपथविवरीकरणसंस्पृशदं जनमिष तमोगुणविदूरः, नास्तिककुलतिमिरनिराकरणसहस्राकिरणः, प्रथममुदाहरणमास्तिकानां परिणतसुकृतानिखिलजनशरणनिजचरण परिचरणकरणनिपुण परिणतसुकृतानिखिलजनशरणनिजचरण परिचरणकरणनिपुण धरणिसुरगणमणिमकुटतटघटितहरिहयमणिकिरणसरणिसमभिवृतपद-

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


किसलयविजितमसलकुलपरिवृतसरसिजनिकररुचिः, अचिर रुचि रुचिरतर । सिचय । निचय, विजयचण तनु किरण, विबुधजन भरण, मुख गुण गण, विभव विधूत, कनक धराधरः । वन्दारुजन, वृन्दावन मन्दार, वृंदारक संदोह, वंदित, इंदिरारमण, पादारविन्द, द्वंद्व वन्दन, कन्दलितानन्द, तुंदिलः । निरंतर पर विद्याव्याकरण, मुखाशेषतन्त्र व्याकरण, समसमय सत्वर । समुदित्वर, कुन्दकलिका कान्त, दन्त पालिका कांति संतति मिष विनिस्सृत, मानस निवसत असमान, सरसि जासन, विलासिनी विरचित, लोस्येनेव, तत्काल परवशाते वासि विसरः । निरंतर निरतिशय कुशेशय निलय जनककथा सुधाध्ययन तयेव, विहित निरशन व्रतस्य, अमित कर्मन्दि समिति विहित, यमनियमाद्याचरण रत, यतिराज राजस्य, सुरेंद्रगुरोः करसरसीरुह, समुदभवः । गणनातीत, गंभीर, गुणसांद्रः । कुवलय चनद्रो विजयींद्रोनाम संयमींद्रः ॥

॥ इति विजयींद्रगद्यं संपूर्णम् ॥

## ஸ்ரீவிஜயீந்திர கத்யம்

அஸ்தி கலு ஜகதி வந்தனரதி கந்தலு ததிபந் துரமதி ஸிந்துர பதி மந்தரததி ஸிந்துர துரந்தர கந்தில கண்டஸ் தல நிஷ்வ்யந்த த மந்த மதக பந்த குணபந்தி தேந்திரிந்திரஸ்ந் தோஹஜமங் க்ரியாலங்க ரியாஜஞ்ஜன தஹங்க்ரீயா ஸாதாரணேதர தோரண விதர்தி காந்தர விஹரண ராராஜ்யமான சுகஸாரிகா நிகர நிஜாகத்யமான ஸந்தத ஸஹவாஸ வாஸனாயாத வேதாந்த பாதஞ்ஜல கௌதமீய ஜைமினிய ஸித்தாந்த ஸம்மானனீய:

கந்தவஹ ஜவாதி ஸந்தான தௌரேய கந்தர்வ வரகுல வ்யாகுல புரோதேச ஸைந்தவாதீசான விச்ராணிதானேக மாணிக்ய கண கசித ஸிம்ஹா ஸனோச்சலித க்ருணிபடல கபடபத பரிசரி சரண கரணாகத மனுஜ த்ருஷ்ணி தோஷாவரண வரண:

ப்ரத்யர்த்தி பார்த்திவ தூர்வஹ கர்வஸர்வங்கஷ ஸர்வஸர்வம் ஸஹா ஸஹாய பரிஜன பரிவ்ருத மனுஜ பதிவிதீர்ண முக்தாவிதான விபா விபாவித ஸத்வகுண ஸஹவாஸ:

ஸேவாஸகுதுக பாவாவனிதல தேவா பரிமித வாமாஜன ஸபாஜன நீராஜன நவீன பாஜன ஸந்தத ஸந்தப்த ஹய்யங்கவீன ஸம்ஸ்பர்ச தர்சித

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


நிஜாவமர்சராஹித்ய தீபக படராஜோகுண பாவக பரிப்ரம நிஜாபகம சபத விவரீகரண ஸமஸ்ப்ருச தஞ்ஜன மிஷ தமோகுண விதூர:

நாஸ்திக குல திமிர நிர்ராகரண ஸஹஸ்ரகிரண: ப்ரதம முதாஹரண மாஸ்திகானாம்:

பரிணத ஸுக்ருத நிகிலஜன சரரண நிஜசரண பரிசரணகரண நிபுண தரணீஸுர கண மகுடதட கடித ஹரிஹயமணி கிரண ஸரணி ஸமபிவ்ருதபத கிஸலயவிஜித பஸலகுல பரிவ்ருத ஸரஸிஜநிகர ருசி:

அசிர ருசிருசிரத்ர ஸிசய நிசய விஜயசண தனுகிரண விபுதஜன பர்ண முககுணகண விபவ விதூத கனகதராதர:

வந்தாருஜன வ்ருந்தாவன் மந்தார வ்ருந்தாரக ஸந்தோஹ வந்திதேந்திர்ராரமண பாதாரவிந்த த்வந்த்வ வந்தன கந்தகலிதாநந்த துந்தில:

நிரந்தர பரவித்யா வ்யாகரண முகாக்ஷே தந்த்ரவ்யாகரண ஸமஸமய ஸ்த்வரஸ முதிதகுந்த கலி காகாந்த தந்தபாலிகாகாந்தி ஸந்ததிவினிஸ்ருத மானஸ நிவஸதஸமான ஸ்ரஸிஜாஸன விலாஸினீ விரசிதலாஸ்யேனேவ தத்கால பரவசாந்தே வாஸிவிஸர:

நிரந்தர நிரதிசய குசேசயநிய யஜனக கதா ஸுதாதயன ஸுஹிததயேவ விஹித நிரசனவ்ரதஸ்ய அமிதகர்மந்திஸமிதி விஹித யமநியமாத்யா சரணரதயதி ராஜராஜஸ்ய ஸ்ரீஸுரேந்திரகுரோ: கரஸரஸிருஹ ஸமுத்பவ: கணநாதீதகபீர குணஸாந்த்ர: குவலய சந்த்ரோ விஜயீந்த்ரோநாம ஸம்யமீந்த்ர:

இதி ஸ்ரீமத்கவி ஸார்வபௌம சிகாமணி, கவிகண்டீரவாத்ய மந்த பிருதப்ருந்த விபூஷித ஸ்ரீமத்ஸுதீந்த்ர தீர்த்த ஸ்ரீபாத விரசித "ஸுபத்ரா பரிணய நாடககாந்தர்கதம் ஸ்ரீவிஜயீந்திர கத்யம். வாசகர்கள் மேற்கண்ட விஜயீந்திர கத்யத்தைப் படித்து ஆனந்தமடைய உதவும் வகையில் ஸமஸ்கிருதம் கற்காதவர்களுக்காகவே தமிழிலும் அப்படியே எழுதி, அதை உச்சரிக்கும் விதமும் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழில் இல்லாத எழுத்துக்களுக்கு மாத்திரம் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அதன் விவரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

க, ச, ட, த, ப, ர, ற, ங், ஞ, ண, ம, ன, ய, ர, ல, வ, ள, ஸ, ஹ, க்ஷ, ஜ, ஷ இவைகள் தமிழில் உள்ளபடியே வடமொழியிலும் உச்சரிக்கலாமென்பது வாசகர்களுக்குத் தெரிந்ததே. ஆனால் கீழ்க்கண்ட எழுத்துக்கள் (அதாவது எண்ணிக்கையுடன் கூடியவைக)ளை உச்சரிக்கும் முறை கீழ்வருமாறு.

வடமொழி எழுத்துக்களான ख ग घ छ झ ठ ड ढ थ द ध फ ब भ श त्र ज्ञ இவைகளுக்குத் தமிழ் எழுத்துக்களின் கீழ் இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்படி எழுத்துக்களை உச்சரிக்கும்முறை 56வது அத்யாயத்தில் ந்ருஸிம்ஹாஷ்டகத்தின் இறுதியில் விளக்கப்பட்டுள்ளது.

## (2) श्री विजयींद्र स्तोत्रम् ।

श्रीमध्व जयराजेन्द्र विबुधेन्द्रार्य वंशजम् ।
सुरेन्द्रकर संजातं विजयींद्र गुरुंभजे ॥१॥

नये शब्दमये पूर्वनये वेदशिरश्चये
न्यायेच चतुरध्याये धिये काय विशुद्धये ॥२॥

षड्वारं व्यासराजेंदु मुखाच्छ्रुत्वा विशेषतः ।
मध्वशास्त्रार्थ सारं तु व्याचक्षाणं निजान् प्रति ॥३॥

नवकृत्वोन्याय सुधां व्यासतीर्थ पयोनिधेः ।
उद्धृत्य पीतवंतंच नाकीन्द्रमिव सन्नुतम् ॥४॥
खगेन्द्र स्कंद मारूढं ुपगूढं स्वजायया ।
गाढं नारायणं प्रौढं भजमानं दृढं सदा ॥५॥

श्रीरामं हनुमत्कामं कामकोटि मनोरमम् ।
सव्यासं रक्षसां भीमं सेवमानं दघूत्तमम् ॥६॥

उपास्य नारसिंहंच सुपापि कृतपीडनं ।
अपास्य दूरतो धीरमपार महिमा करम् ॥७॥

जयप्रदं मंत्र जातं जपंतं जपतो वरं ।
जगन्नाथं जगत्यांच तिगदंतं जगद्गुरुम् ॥८॥

जितषड् वैरिणं मोद कारिणं दोष हारिणम् ।
कारणं सर्व विद्यानां शरणं चरणं जुषाम् ।९॥

सदयं धीमयं ध्येयं सुखो पायं निनर्मयं ।
पूत कायं गतापायं नजेयं विगतामयं ॥१०॥

जित्वा वादे वीर शैव गुरुं विस्तृत तन्मठं ।
अपहृत्येह संवासंकृतवंतं सतां हितम् ॥११॥

दुर्वाद्य पेय रचित ग्रंथारण्य विनष्टने ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


चतुस्संख्याधिकशत ग्रंथाधीनां प्रचोदकं ॥१२॥

चतुःष्टष्टि कलाविद्या पूर्णयिमिति वंदिभिः ।
राज मार्गे घोष्यमाणं श्रीमध्वमत वर्धतं ॥१३॥

सुन्दरे कुंभकोणाख्ये पुरे मंदर सन्निभे ।
वृन्दावने राजमानं सेवकानो सुरद्रुमम् ॥१४॥

समुद्रं चोर्ध्व पुंड्रांकं समुदं सुगुणैरलम् ।
सुभद्रंवचसांनित्यं विनिद्र विकसन्मुखम् ॥१५॥

वातातपादिजंदुःखं धिक्कुर्वतं धिया धिकं ।
तपंतं मनसां मुख्यं कुर्वंतं सुधियां सुखं ॥१६॥

यद्बृंदावन मृत्तीर्थयानं पाप विमोचनम् ।
नयनं पुण्यराशीनामयनं संपदां च तम् ॥१७॥

सुरधेनोरिवानेक सेवकेष्ट सुवर्षिणः ।
प्रपद्ये राघवेंद्रार्य गुरोरपि परं गुरुं ॥१९॥

विजयींद्र गुरुस्तोत्रंतदभ्क्तेन कृतं हृदा ।
यःपठेत् सभयान्मुक्त सर्वत्रविजयीभवेत् ॥२०॥

वच श्री तुलसीमाला सेढमाधव निर्मिता ।
गुरुणा विजयींद्रेण ध्रियतां सुध्रिणे हृदा ॥२१॥

इति श्री लक्ष्मी नृसिंह पुत्र श्रीसेतु माधव सरि विरचिन
श्रीविजयींद्र स्तोत्रं संपूर्णं

॥ श्री कृष्णार्पणमस्तु ॥

4) ஸ்ரீ விஜயீந்திரருக்கு நினைவுச் சின்னம் நிறுவுவதின் அவசியம்:

பாரத தேசத்தில் இன்று சமூக, அரசியல், கல்வித் துறைகளில் சேவை செய்தவர்களுக்கு நினைவுச் சின்னம் நிறுவுதல் வழக்கமாயுள்ளது. கிராமம், தாலூக்கா, ஜில்லா மட்டத்தில் உழைத்தவர்களுக்கும், நினைவுச் சின்னங்கள் எழுப்பப்படுகின்றன. இன்னும் மாநிலங்கள், தேசிய மட்டங்களில் சேவை செய்தவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவப்படுகின்றன. இவைகள் ஸகஜமாயுள்ளன.

இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் ப்ரஸித்திபெற்ற தியாகிகளுக்கும் அல்லது உதவிபுரிந்தவர்களுக்கும் இவ்வாறு நினைவுச் சின்னங்கள் அமைத்திருக்கும்பொழுது அகண்ட பாரதம் தக்ஷிணபாரத மட்டத்தில் தேச முன்னேற்றத்திற்காக, வைதிக-தத்வ-தர்ம-கலாசாரங்களைக்

CC-0: In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


காப்பாற்றி வளர்ப்பதற்காக ஸனாதனஹிந்து சமூகம், ஆஸ்திக மதங்களின் உயர்வுக்காக, மக்களின் ஸகலவித முன்னேற்றத்திற்காகவும் தமது க்ஞானம் மேலும் தவத்தையே அர்ப்பணித்து அபாரமான த்யாகம் செய்து அயராது உழைத்து மாபெரும் உபகாரம் செய்து அமரரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த ஸ்ரீபாதங்களவர்களின் உபகாரத்தை நினைப்பதற்கு அவருக்கும் ஒரு நினைவுச் சின்னம் இதுவரையிலும் நிறுவாமலிருப்பது மிகமிக வருந்தத்தக்க விஷயம்.

16வது நூற்றாண்டில் முகம்மதியர் படையெடுப்பு, தக்ஷிண பாரதத்தின் அரசர்களின் பரஸ்பர மோதல்கள், வெறுப்பு, பொறாமைகளினால் ஹிந்து மதம், ஸனாதனதர்மம், வைதிக ஸத்தத்வங்களே ஆபத்துக்குள்ளாகி அழிந்து போகுமோ என்னும் அச்சமுண்டாகியிருந்த நிலையில், அவைகளைக் காப்பாற்றுவதே ஒரே லக்ஷியத்திற்காக நிறுவப்பட்ட விஜயநகரத்தின் கன்னட ஸாம்ராஜ்யம், அதைப்போலவே, சோழ, பாண்டிய, சேர ராஜ்யங்களின் ஒற்றுமை, பரஸ்பர நட்பு, சகோதரத்துவம், அமைதி நிறுவுதல் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், அந்தந்த ராஜா - மஹாராஜாக்கள் - சக்ரவர்த்திகளுக்கு நல்லுபதேசங் களையும், மந்திராலோசனைகளும் சொல்லி வழிகாட்டி ஹிந்து ஸாம்ராஜ்யம், தர்மம், மதங்களின் பலவகைகளிலும் எல்லாத் துறைகளிலும் நன்மைசெய்து மாபெரும் உபகாரம் செய்தருளிய உலகம் போற்றும் மஹான் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர்.

அவர் ஸகல சாஸ்திரங்களின் அத்யயன ப்ரசாரத்திற்காகக் கும்பகோணத்தில் ஸமஸ்கிருத வித்யாபீடத்தை ஸ்தாபித்து 80 வருடங்களின் தனது வாழ்நாட்களில் அது அகில பாரதத்திலும் பிரஸித்தியடையும்படி செய்து "ஸத்வித்யா" களையும் போஷித்தவர் எனப் பெயர்பெற்றவரானார். 64 கலைகளில் நிபுணரான ஸ்ரீவிஜயீந்திரர் எவ்வளவோ கலைஞர்களுடன் போட்டியிட்டுத் தனது கலாவல்லமையையும் அவைகளின் மேன்மையையும் உலகமறியும்படி காண்பித்தார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


கும்பகோணத்தில் தனது செல்வாக்கை நிலைநாட்டித் தமது பாண்டித்யம், திறமை, இந்த்ரஜால மந்த்ர சக்தியின் பலத்தினால் ஆஸ்திக மதத்தைப் பின்பற்றும் பக்தர்களை ஜயித்து வைதிக மதத்தவர் தலைதூக்க முடியாமற் செய்த சைவ சந்நியாஸிகளுடன் பதினோரு நாட்கள் வாதம் செய்து அவரைப் பதில் சொல்லாதபடி செய்து தமது ஸாத்விக மந்த்ர சக்திக்கு எதிராக சைவ சந்நியாஸிகளின் அற்ப மந்திர சக்தியும், இந்திர ஜாலவிதத்தையும் தலை தூக்காமல் சக்தியற்றுப்போகும்படி செய்து ஆஸ்திக மதத்தை நிலைநாட்டின மஹிமை பொருந்தியவர் விஜயீந்திரர்.

மக்களின் ஆத்யாத்மிக, தார்மீக, கலாச்சார சம்மந்தப்பட்டதும், நேர்மை, சமூகம் முதலியவைகளின் முன்னேற்றத்திற்காகத் தனது தவத்தையே தாரைவார்த்த கருணாமூர்த்திகளான ஸ்ரீவிஜயீந்திரர் வைதிக் ஸத்வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு ஏற்பட்ட இடையூறுகளை நிவாரணம் செய்வதற்காக மாபெரும் திறமை வாய்ந்த பண்டிதர்களுடன் வாதம் செய்து, விஜய துந்துபியை முழக்கி (வெற்றி முரசொலித்து) த்வைத ஸித்தாந்தம் சூரிய சந்திரர்களுள்ளளவும் நிலைத்திருக்கும்படி செய்தார். இன்றும்கூட மாத்வர்கள் த்வைத ஸித்தாந்த பாட ப்ரவசனங்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு ஊர்த்வபுண்ட்ரங்களை அணிந்துப் பெருமையுடன் தலைநிமிர்ந்து நடைபோடும்படி செய்துள்ள கீர்த்தி விஜயீந்திரரைத்தான் சாரும்.

தர்க்கம் - வ்யாகரணம் - மீமாம்ஸா, வேதாந்தம் முதலிய சாஸ்திரங்கள், கா்வ்ய - நாடக - அலங்காரம் முதலிய ஸாஹித்ய சாஸ்திரங்கள் நூற்றுக்கு மேல் அபூர்வ கிரந்தங்கள், மேருமலைச் சிகரத்தை ஒத்த கிரந்தங்களை இயற்றி பாரத நாட்டின் ஸரஸ்வதி பண்டாரத்தை (அதாவது நூலகத்தை) நிரப்பி அதை அலங்கரித்தார்.

இவ்வாறு பல துறைகளில் தக்ஷிண பாரதத்தில் (தென்னாட்டில்) நாடு, மொழிகளுக்காக மாபெரும் உபகாரத்தைச் செய்துள்ள மஹா புருஷரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் ப்ருந்தாவன ப்ரவேசம் ஆகி சுமார் 373 வருடங்கள் கழிந்துவிட்ட பிறகும் கூட இன்னும் அவரது உபகாரத்தை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

நினைத்து நன்றியைச் செலுத்துவதற்காக ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவாமலிருப்பது தென்னாட்டிற்கே (தக்ஷிண பாரதத்திற்கே) ஒரு பெரிய குறையென்றால் தவறாகாது.

இப்பொழுதாவது ஆஸ்திகப் பெருமக்கள், அரசு அதிகாரிகள், வித்வான்கள், மதகுருமார்கள், பீடாதிபதிகள் ஸ்ரீவிஜயீந்திரர் நினைவு தேசத்தில் நிரந்தரமாக நிலைக்கும்படி செய்ய கலாத்மகமானதும், வைபவம் நிறைந்ததும், தேசத்திற்குப் பெருமையும் கௌரவமும் அளிக்கவல்ல ஒரு உத்தமமான நினைவுச் சின்னம் நிறுவுவது மிக அவசியமும், கடமையுமாயுள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறோம்.

வைதிகமதம் மற்றும் ஸாஹித்யம் முதலியவற்றிற்கு ஆபத்து வந்தபொழுது ஸ்ரீவிஜயீந்திரர் எந்த சைவ ஸந்நியாஸிகளை வாதத்தில் ஜயித்து பணயமாக வைக்கப்பட்ட அந்த "சைவமடத்தை" வாதஷாத்தின்படி வசப்படுத்திக் கொண்டு அந்த மடத்தில் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியை ப்ரதிஷ்டை செய்து, தமது வாழ்க்கையின் இறுதிவரை எங்கு வசித்திருந்தாரோ அந்த சைவ மடத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து, அங்கு "ஸ்ரீவிஜயீந்திர விஜயமந்திரத்தை" கலாபூர்வமாக நிர்மாணம் செய்வித்து, ஸ்ரீந்ருஸிம்ஹஸ்வாமியின் கோவிலை ஜீர்ணோத்தாரணம் செய்து, இப்பொழுது ஸ்ரீவிஜயீந்திரரின் ப்ருந்தாவனமுள்ள இடத்தில் பூஜிக்கப்படும் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியை அங்கு மறுபடியும் ஸ்தாபனம் செய்து, வித்யாபீடத்தின் அறிகுறியாக ஒரு ஸமஸ்க்ருத பாடசாலை, ஆராய்ச்சிக்குழு, நூல் நிலையங்களை நிறுவி, நல்லமுறையில், எல்லோராலும் புகழத் தகுந்த முறையில் நடைபெறும் படி ஏற்பாடு செய்ய வேண்டும். "விஜயமந்திர"த்தில் விஜயீந்திரர் தானே நிர்மாணம் செய்த அழகான கலைச் சிற்பங்களையும், அவரது க்ரந்த ரத்னங்களையும் மற்றும் அவரது மஹிமை விசேஷத்வத்தை நினைவுபடுத்துகின்ற அவருடைய அமர சரித்திரத்தை எடுத்துரைக்கும் அழகான சித்திரங்களை எழுதச்செய்து, அவைகளை அங்கு காட்சி தரும்படி மக்கள் அதைப்பார்த்து மகிழுமாறு செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் அதே ஒரு நினைவுச் சின்னமாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஸ்ரீவிஜயீந்திரரின் அந்தஸ்திற்கும் கீர்த்திக்கும் தக்கவாறு தக்ஷிண பாரதத்திற்கே பெருமை என்று சொல்லுமளவிற்கு நினைவுச் சின்னத்தை நிறுவும் புனித்மான காரியத்தில் ஸகல வைதிக மதஸ்தர்களும், தர்மபீடாதிபதிகளும் பங்கேற்று அது அமலுக்கு வருமாறு ஏற்பாடு செய்து நாட்டிற்கும், மொழிக்கும் மாபெரும் உபகாரம் செய்த மஹானுபாவருக்கு நன்றியைச் செலுத்தி கிருதார்த்தராக வேண்டுமென்று ஸகலரிடமும் விக்ஞாபனம் செய்ய விரும்புகிறோம்.

ஸ்ரீவிஜயீந்திர கீர்த்தி சந்திரிகை (கீர்த்தியான நிலா ஒளி) ஜகத்திலெல்லாம் ப்ரகாசிக்கட்டும்.

(5) ஸ்ரீவிஜயீந்திரரின் புகழாரங்கள்:

ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரரும், துவைத மதத்திற்கு விரோதமாய் நின்ற இடையூறுகளை நிவாரணம் செய்தவரும், க்ஞான குலத்திற்குச் சிகரம் போன்றவரும், "ஜயிக்கப்பட முடியாதவரும்" ஆன பரம பூஜ்ய ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் மஹாமஹிமையுள்ள க்ஞான பக்தி வைராக்யங்களையும், பல க்ஞானிகளும், கவிகளும் - மஹான்களும் பாடிக்கொண்டிருக்கின்றனர். இந்தப் புகழினால் ஸ்ரீவிஜயீந்திரரின் மகத்துவம் அதிகரிக்கும் என்னும் எண்ணத்தினால் அவர்கள் அதைப்புகழவில்லை தமது வாக் சுத்தி, மற்றும் நன்றியுடன் செலுத்துவதற்காக அந்த மஹாத்மாவை மனம் தொடும்படியாக காவ்யரூபமாக கவிதை மற்றும் துதிரூபத்தில் புகழ்ந்துள்ளனர்.

ஸ்ரீவாதீந்த்ர தீர்த்தர்:

चातुर्यैका कृतिं यश्चतुरधिकशतग्रंथरत्नप्रणेता
धूताराति प्रबंधस्फुर विदित चतुः षष्टि विद्या विशेषः ।
सोयं नःश्री सुरेन्द्र व्रतिवरतन योऽद्वैतशैवा सहिष्णुः ।
पुष्णातु श्री जयींद्रस्त्रिभुवन विदितः सर्वतंत्रस्वतन्त्रः ॥

श्री गुरुगुणस्तवनं

திறமையே உருவமெடுத்து வந்தவரான, 104 நிகரற்ற ஸ்வதந்த்ர க்ரந்த ரத்னங்களை இயற்றி, பரவாதிகளின் க்ரந்தங்களைக் கண்டனம் செய்த 64 கலைகளில் மிக்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ப்ரவீணரான; சைவ மற்றும் அத்வைதங்களை சகிப்புத் தன்மையுடன் நோக்கியவரான, ஸ்ரீஸுரேந்திர தீர்த்த யதிசிரோமணிகளின் வரகுமாரருமான, மூன்று லோகங்களிலும், "ஸர்வ தந்த்ர ஸ்வதந்திரர்" முதலிய கௌரவங்கள் பெற்று ப்ரக்யாதி பெற்றவரான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் நம்மைக் காப்பாற்றும்.

ஸ்ரீகுருகுணஸ்தவனம்.

மஹாகவி நாராயணாசார்யர்:- महाकवि नारायणाचार्यः ।

"चतुः षष्टिकला विद्याजुषे विद्वन्महोमुषे ।
जयीन्द्रज्योतिये कुर्मा वंदनानियशोजुषे ॥"

- श्री राघवेन्द्र विजय महाकाव्य ।

(ஸ்ரீராகவேந்தர விஜயமஹா காவ்ய)

"विद्वन्मणि" सेतुमाधव सूरिः ।("வித்வன்மணி" சேது மாதவஸுரி)

"जित्वा वादे वीरशैवगुरुं विस्तृत तन्मठं
अपकृत्येह संचासं कृत्वंतं सतांहितं ॥
दुर्वाद्यप्पय्यरचित ग्रंथारण्य विनष्टने ।
चतुस्संख्या धिकशत ग्रंथादीनां प्रचोदकम् ॥
चनुःषष्ठि मला विद्या पूर्णोऽयमितिवंदिभिः ॥
राजमार्गे घोष्यमाणं श्रीमध्वमतवर्धनं ॥"

श्रीविद्वत्कुलतिलक राजपुरोहित मध्वाचार्य ।:-
(ஸ்ரீவித்வத்குல திலக ராஜ புரோஹித மத்வாசார்யர்)

"चचार पृथिवीं सर्वा सिंहः क्षुद्रमृगेष्पिव ।
शास्त्रज्ञा मूकतां प्राप्ताः जयींद्रपुरतस्तथा ॥
ब्राहमणा नजनयन् तर्क मीमांस वादकान् ।
द्वैवज्ञान् भिषजो भट्टान् मायिनश्यास्त्रपारगान् ।
य ये जना वेद्य विद्यारते ते तेन निराकृताः ।
सर्वान् विजित्य सर्वत्र चचार पवनो यथा ॥"

- श्री विजयींद्र विजयकाव्य

(ஸ்ரீவிஜயீந்திர விஜய காவ்ய)

ஸ்ரீஸுமதீந்திர தீர்த்தர்:-

"स्तौमि श्री विजयीन्द्र संयमिवणि प्रौढ तवाडौकित
प्रज्ञागंधवह प्रभंजन भरोदर्वैक भास्वद्धुराम् ।
यति स्फूर्तिमिह प्रजत्यभिटधत्यानंदमाच्छादय
त्याशाचकमहो विभाति रुचिराकारा चिरं द्योतते ॥

- श्रीसुमतींद्रतीर्थरु

श्रीं मधुधाराकार कर्ता

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


जनु र्जनुरनारतं जाति चातुरी चातुरी
मतिर्मतिरखंडिता सदसि मौखरी मौखरी ॥
कृतिः कृतिरितो जना श्रुणुत पांडिती पांडितीम् ।
जयींद्र विजयींद्र सच्चरित वंदिकर्मंदिनाम् ॥"

-अलंकार मंजरी व्याख्या

வெற்றி கொள்ளுவதில் மேன்மையான ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் யதார்த்தமான சரித்திரத்தைப் புகழுகின்ற நம்மைப்போன்ற பரமஹம்ஸரின் ஜன்மமே உத்தமமான ஜன்மம்! ஸ்ரீவிஜயீந்திரரின் வித்யா, (ஹார்த்தகம்) திறமை, ஸாமர்த்தியம்! ஸாமர்த்யமே அவருடைய கண்டனம் செய்யப்பட முடியாதப்பட மதியேமதி! ராஜசபை, வித்வத் சபைகளில் அவர் காண்பித்த பாண்டித்ய (மேவாக்வன்மை) பாண்டித்யம்! அவருடைய கத்யபத்யாத்மக (உரைநடை - கவிதை) காவிய மயமான, அவருடைய அமர க்ரந்தங்களே க்ரந்தங்கள்! அவரது பாண்டித்யமே பாண்டித்யம்! ஸஜ்ஜனர்களே, அப்பேர்ப்பட்ட ஸ்ரீகுருவர்யரின் பாண்டித்ய பூர்ண உபதேசங்களையே எப்பொழுதும் கேட்டு, உங்களது காதுகளை ஸார்த்தகப்படுத்திக் கொள்ளுங்கள் (புனிதப்படுத்திக் கொள்ளுங்கள்).

ஸ்ரீஸுதீந்திர தீர்த்த: श्री सुधींद्रतीर्थரவர்கள்

सजयति यतिचद्रः सहितेशास्त्रसांद्र :
सततगलिततंद्रः सद्यशा श्रीग्रेजयींद्रः ।
जहि हि निजजयाशा जाग्रदायासलेशा-
ज्जड यदाधिनिदेशाज्जात हर्षा द्दिगी शाः ।

- अलंकारमंजरी

சோம்பல் முதலிய தோஷமற்றவரான யதிச்ரேஷ்டரான, ஸாஹித்ய - வேதாந்தம் முதலிய வெவ்வேறு சாஸ்திரங்களில் பரிபூர்ண பண்டிதரான மாபெரும் கீர்த்தியுடன் விளங்குகின்ற ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் வெற்றிவாகை சூடி ப்ரகாசமடைந்திருக்கிறார். அகையால், மூடவாதியே! ஸ்ரீவிஜயீந்திரரை ஜயிக்க வேண்டுமென்ற அற்பப்ரயத்னத்தையும் தீவிரமான விருப்பத்தையும் விட்டுவிடு! அது முடியாத காரியம். எந்த ஸ்ரீவிஜயீந்திரரின் தங்குதடையின்றி ப்ரவாஹத்தைப் போல் பொழியும் உபந்யாஸத்தை தேவேந்திரரே முதலான திக்பாலகர்கள் கேட்டு மகிழ்வரோ, மற்றும் எந்த யதிகளின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ஆக்ஞையின்படி நடக்க ராஜாதி ராஜாக்களே எப்பொழுதும் தயாராகக் காத்திருக்கின்றனரோ, அப்படிப்பட்ட வித்யா சக்ரவர்த்திகளை நீ எவ்வாறு ஜயிக்க முடியும்?

"विजयींद्रसभास्तारे त्वय्यर्के प्रतिपद्यते ।
तारत्वं प्रसभास्तारे विमतोऽप्रतिपद्यते ॥"

- अलंकारमंजरी ।

"सुभद्रापरिणय" ग्रंथ कर्ता:-

इंद्रो- गोत्र भिद्दिंदुराश्रीतकलानाशः शियोविश्रुत -
स्थाझुर्लोक विलाकनः कुवलयद्वेपी, विषेन्मिश्रितः ।
श्रेषो, नीरिधिरेष दारदजतिः धाता सुरासेवितः
त्रैलोकये विजयींद्र योगिसदृशंतस्मान्नमन्यामहे ॥

ஜகத்தில் ச்ரேஷ்டரென்று பிரஸித்தியடைந்த 'ப்மஹானுாவர்கள் அநேகருள்ளனர். இந்திரன், சந்திரன், சூர்யன், ருத்ரன்,ஸமுத்ரம், ஆதிசேஷன், ப்ரம்மா முதலியவர்கள் எல்லோராலும் மதிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களில் குற்றங்குறைகளும் இருக்கிறபடியால் அவர்களைவிட தோஷமற்றவரும் குணவானுமான ஸ்ரீவிஜயீந்திரர் ச்ரேஷ்டரென்று கவிகள் இந்த மேற்கண்ட பதத்தில் காரணத்துடன் வர்ணித்துள்ளார்.

இந்திர தேவன் மூன்று லோகத்திற்கும் அதிபதி. ஆனால் அவர் கோத்ர (பர்வத கோத்ர வம்சம்) பேதிகள். சந்திரன் தன்னைச் சரணடைந்த கலையின் (=காந்தி, வித்யா) நாசமுள்ளவன், மற்றும் களங்கமுள்ளவன்: ஸுர்யன் குவலய த்வேஷி (நீல கமலத்திற்கு எதிரி.) (குவலய=ப்ரபஞ்சம்) ருத்ரதேவன் சிவன் ஸ்தாணு (மந்த காய்ந்தமரம் தூண்) என்று சொல்லப்படுகிறார். ஸமுத்ரராஜன் விஷத்தை உண்டாக்கினவன் (விஷத்திற்குப் பிறப்பிடம்) எனப்படுகிறான். ப்ரம்மதேவன் ஸுரா (தேவதைகள், மது) பானம் செய்பவர். ஆகையால் இவ்வாறு அநேக தோஷங்களுடன் கூடிய இவரெல்லோரையும் விட கோத்ர ஸம்வர்த்தகரும் (ரக்ஷகரும்) வித்யா (கலை) யைப்போஷிப்பவரும், களங்கமற்றவரும், உலகை மகிழ்விப்பரும், நிபுணரும், ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனைக் காட்டிலும் வாக்வன்மை படைத்தவரும், அம்ருதரும், ஸுராபானம் செய்தவரல்லாத

CC-0. In Public Domain: Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



போதிலும் ஸுரஸேவிதரும் (தேவதைகளினால் சேவிக்கப்பட்டவரு)மான ஶ்ரீவிஜயீந்திர தீர்த்தரைப் போல மஹாமஹிமையுள்ளவரை மூன்று லோகங்களிலும் வேறுயாரையும் காணவில்லை! ஶ்ரீவிஜயீந்திரருக்கு சமமானவர்கள் மூன்று லோகங்களிலும் வேறு யாருமில்லையென்று கவிகள் ச்லேஷலங்காரத்தினாலும் உத்ப்ரேக்ஷாலங்காரத்தினால் ஸ்தோத்ரம் செய்துள்ளனர்.

அத்வைத ஸித்தாந்தத்தின் ஆதார ஸ்தம்பமென்று சொல்லப்படும், மஹாபண்டிதரும், நூலாசிரியரும், ப்ரபல்மான வாதமல்லருமான ஶ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் ஶ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் ஸித்தாந்த ஸ்தாபனத்திறமை, க்ரந்தமியற்றும் ஆற்றல் மேலும் வாதத்திறமைகளையும் கண்டு ஆனந்தமடைந்து வெளிப்படையாகச் சொன்ன வசனங்களைக் கேளுங்கள்:-

"जयींद्रयोगिरूपतोऽवतीर्ण एषपूर्णधी :"

ஆஹா, ஶ்ரீபூர்ண போதரென்று கியாதிபெற்ற ஶ்ரீமன் மத்வாசார்யரே தமது மதத்தை உயர்த்துவதற்கு ஶ்ரீவிஜயீந்திரர் உருவத்தில் மறுபடியும் அவதரித்து வந்திருக்கிறார்!!

ஶ்ரீஅப்பய்ய தீக்ஷிதரைப் போன்ற உத்தம பண்டிதரும் அத்வைத வித்யாசார்யரின் இந்த ஒரே ஒரு வசனம் போதாதா ஶ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் மஹிமா கீர்த்தியைப் பிரகாசிக்கச் செய்வதற்கு?

இவ்வாறு ஶ்ரீவிஜயீந்திரரை அநேக மஹான்கள் பற்பல வகைகளில் கொண்டாடியுள்ளனர். க்ரந்த கௌரவ பயத்தினால் அவைகளெல்லாவற்றையும் விட்டுவிட்டு ஶ்ரீமத் ஸுதீந்திர தீர்த்த ஶ்ரீபாதங்களவரின் ஒரு கவிதையைத் தெரிவித்து ஓய்வு பெறுகிறோம்.

"भ्राम्यंतो बहुदोषपपत्सुरधुरोद्भविस्वभावा
बूध्वं माध्वमतोपगुंभपटुभोन्मेषोवचोविभ्रमैः बुधा
भव्यः कोऽपि गुरुर्भवे दभुवि पुरो भावी नु भूतोभवत्
भोविद्योपपदो पशोभि विभवा पत्यु प्रभृतोपमः ॥

- अलंकार मंजरी

வெவ்வேறு தேசங்களில் ஸஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் அபூர்வ பாண்டித்யங்களினால் பூர்ணமானவரைக் கண்டு புகழும் ஸ்வபாவமுள்ள; ஸாரா ஸார, தர்க்க விதர்க்கங்களில் [illegible]ளான

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

பண்டிதர்களே! தமது நிகரற்ற வாக்வன்மையினால் மத்வஸித்தாந்த ப்ரதிஷ்டாபனத்தில் திறமைமிக்கவரான, அஸாதாரண புத்தியின் மேன்மேலும் வளர்ச்சியென்றுள்ள "வித்யாபதி" என்னும் விருதினால் சோபிக்கும் வைபவமுள்ள, பாண்டித்யம் முதலிய குணக்குன்றாகவும் ஜகத் பிரஸித்திபெற்றவராகவுமுள்ள ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தருக்குச் சம்மான குருச்ரேஷ்டர் முன்பும் தற்சமயத்திலும் மேலும் வருங்காலத்திலும் வேறொருவர் யாராவது குருவாவதற்கு அருகதை பெற்றுள்ளார்களா சொல்லுங்கள்? உண்மை, கண்டிப்பாக ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தரைப் போல் குருஸார்வபௌமர் வேறொருவரில்லை.

இன்று உலகம் போற்றும் மஹிமைபெற்றுள்ள ஸ்ரீமத்விஜயீந்திர தீர்த்த பரமஹம்ஸ சக்ரவர்த்திகள் பாரததேசத்தின் மக்களுக்கு க்ஞானம் - பக்தி - வைராக்யம் முதலியவைகளைக் கருணை செய்து, வைதிக ஸத்வைஷ்ணவ தத்வங்களில் அபாரமான நம்பிக்கை கௌரவங்களை, அவரிடத்தில் உறுதியாக வைத்து ஸன்மார்கம் காட்டி ஸகலவித ஸன்மங்களங்களை உண்டுபண்ணிக் காப்பாற்றட்டும் என்று ப்ரார்த்தனை செய்து "அஜய்ய விஜயீந்திரருக்கு ஜய ஜய" என்ற ஜய கோஷத்துடன் மங்களம் பாடுவோம்.

ஸ்ரீமத்ஸுயமீந்திர, ராகவேந்த்ர, விஜயீந்த்ர தீர்த்த குர்வந்தர்கத ஸ்ரீபாரதீரமண முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீமல்லக்ஷ்மி வேங்கடேச ப்ரியதாம்.

"ஸ்ரீகிருஷ்ணார்ப்பண மஸ்து"

## पुस्तक विज्ञानं

## (BIBLIOGRAPHY)

"अजय्यविजयीन्द्रर" கிரந்தம் இயற்றும்பொழுது பரிசீலித்த கிரந்தங்கள்

### ஸமஸ்கிருதம்

| | ग्रंथ | ग्रंथकर्ता |
|---|---|---|
| 1. | श्री विजयेंद्रविजय काव्य | श्री मध्वकवि |
| 2. | श्री राघवेंद्रविजय महाकाव्य | कविकुललवाग श्रीनारायणाचार्य |
| 3. | श्री गुरुगुणस्तवं | श्री वादींद्रतीर्थ |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


| | | |
|---|---|---|
| 4. | श्री राघवेंद्रमठगतार्चागतिक्रमः | श्री वादींद्रतीर्थ |
| 5. | श्री विजयींद्रस्तोत्रम् | श्री सेतुमाधवसूरि |
| 6. | श्री अलंकारमंजरी | श्री सुधींद्रतीर्थ |
| 7. | साहित्यसाम्राज्यं | श्री सुधींद्रतीर्थ |
| 8. | सुभद्रापरिणयनाटकम् | श्री सुधींद्रतीर्थ |
| 9. | मधु धारा | श्री सुमतींद्रतीर्थ |
| 11. | अलंकारनिकषः | |
| 12. | भेद विद्याविलास | श्री विजयींद्रतीर्थ |
| 13. | उपसंहार विजयत | श्री विजयींद्रतीर्थ |
| 14. | शैव सर्वस्व खंडनं | श्री विजयींद्रतीर्थ |
| 15. | मध्वाध्व कंटकोद्धारः | श्री विजयींद्रतीर्थ |
| 16. | अप्पयद्य कपोल चपेटिका | श्री विजयींद्रतीर्थ |
| 17. | न्यायमौक्तिकमाला | श्री विजयींद्रतीर्थ |
| 18. | नारायण शब्दार्थनिर्वाचनं | श्री विजयींद्रतीर्थ |
| 19. | तुरीयशिवखंडनं | श्री विजयींद्रतीर्थ |
| 20. | श्रुत्यर्थसारः | श्री विजयींद्रतीर्थ |
| 21. | श्रुतितात्पर्य कौमुदी | श्री विजयींद्रतीर्थ |
| 22. | सिद्धांत सारसार विवेचनं | श्री विजयींद्रतीर्थ |
| 23. | परतत्व प्रकाशिका | श्री विजयींद्रतीर्थ |
| 24. | विष्णु पारम्य | श्री विजयींद्रतीर्थ |
| 25. | न्यायाध्वदीपिका | श्री विजयींद्रतीर्थ |
| 26. | श्रीनृसिंहस्तुतिः | श्री विजयींद्रतीर्थ |
| 27. | दुरितापहारस्तोत्रं | श्री विजयींद्रतीर्थ |
| 28. | भेदधिक्कारः | श्री नृसिंहाश्रम मुनि |
| 29. | उपक्रमपराक्रमः | श्री अप्पयय दीक्षितरु |
| 30. | मध्वमतमुखमर्दनंश्री अप्पयय दीक्षितरु | |
| 31. | मध्व मतविध्वंसनं | श्री अप्पयय दीक्षितरु |
| 32. | शिवकर्णामृतं | श्री अप्पयय दीक्षितरु |
| 33. | शिवतत्वविवेकः | श्री अप्पयय दीक्षितरु |
| 34. | न्यायामृताद्वैतसिद्धिः | श्री मधुसूदनसरस्वती (श्री.म.म.अनंतकृष्ण शास्त्री Edition) |
| 35. | न्यायामृततरंगिणी | श्री रामाचार्य |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


| | | |
|---|---|---|
| 36. | न्यायामृतामोदः | श्रीविजयींद्रतीर्थ |
| 37. | अद्वैततत्त्व सुधा | श्री म.म. अनंतकृष्णशास्त्री |
| 38. | श्री मन्यासुधापरिमलप्रसरः | श्रीविद्यारत्नं आचार्य वेंकोबाचार्य |
| 39. | द्वैताध्वकंटकोद्धारः | डा.आर.नागराजशर्मा M.A., Ph.D. |
| 40. | परत्वभ्रमनिरासनक्षत्रमाला | डा.आर.नागराजशर्मा M.A., Ph.D. |
| 41. | श्रीमन्यायसुधा | श्री जयतीर्थमुनि |
| 42. | परिमलः | श्रीमंत्रालय श्रीमादंगळवरु |
| 43. | सद्युक्तिरत्नाकरः | श्रीसुधींद्रतीर्थरु |
| 44. | श्री व्यासयोगिचरितम | श्री सोमनाथकवि |
| 45. | कवि सार्वभौमकविताकौशल्यं | राजा श्री गुरुराजाचार्यरु |

कन्नड

| | | |
|---|---|---|
| 46. | गुरचरित्रे | डा.हुलिवेदव्यासाचार्य M.A., Ph.D. |
| 47. | हरिदास कर्णाटक | डा.हुलिवेदव्यासाचार्य M.A., Ph.D. |
| 48. | हरिदास साहित्य | विद्यारत्नं श्री आर पंचमुखि M.A., |
| 49. | कर्णाटक भक्तविजय | श्री बेकूरु केशवदासरु |
| 50. | श्री राघवेंद्रविजय (विस्तार) | श्री बेकूरु केशवदासरु |
| 51. | षाष्ठिकमहापुरुषरु | श्री वेदटद अनंतकृषणाचार्यरु |
| 52. | षाष्ठिक नामावलि | श्री राघवेंद्र कवि |
| 53. | सारस्वत परिणय | श्री राघवेंद्र कवि |
| 54. | शहा अमल | श्री राघवेंद्रस्वामि मठदप्राचीन इतिहासादि सूचक कागद पत्रगळु |
| 55. | श्री हरिदासर कृतिगळु | (श्री पुरंदर दासरु, विजयदासरु, जगन्नाथ दासरु, गोपालदासरु, मोहन दासरु, श्रीविजयींद्ररु तरंगिणीरामाचार्यरु, श्रीवादींद्ररु, गुरु पुरन्दरदासरु, नरहरि अंकित दासरुमोदला दवर अप्रकाशिक अपूर्व कृतिगळिरुव ग्रंथ, श्री गोरेबाळ हनुमंतरावमत्तु हरिदासभूषणं श्री टी.के. वेणुगौमालदासरल्लि ईग्रंथगळिवे |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



## English


| | | |
|---|---|---|
| 55 | Epigraphica Indica Vol. XII | |
| 56 | Epigraphica Vol. XIII | |
| 57 | The Aravidu Dynasty of Vijayanagaram. | By Rev. Henry Heras S.J.M.A., |
| 58 | Sources of Vijayanagaram History. | By Sri.S. Krishnaswamy Iyengar, the Madras University Historical Series. |
| 59 | Inscriptions of the Madras Presidency Vol.2. | By Sri.V. Rangacharya M.A., Lt., |
| 60 | Vol-3 | —— |
| 61 | Vijayanagara Sex Centenary commemoration Volume. | —— |
| 62 | Studies in the history of the Third Dynasty of Vijayanagaram. | By Sri.N. Venkataramanayya M.A., Ph.D. |
| 63 | Arivilimangalam Plates of Srirangaraya II and Sri.T.S. Sastry, Tanjore. | By Sri T.A. Gopinatha Rao M.A., Kuppuswamy |
| 64 | The religion of the Vijayanagar House. | Ind. Ant. XLIV |
| 65 | Mysore Archaelogical Report 1944. | —— |
| 66 | A history of Dwaita school of Vedanta and its Literature Vol.I & II | By Dr.B.N.K. Sharma, M.A., Ph.D. D.Lit. |
| 67 | Sri Vijayindra Theertha | " " |
| 68 | Sri.Sudheendra Theertha | " " |
| 69 | Reign of Realisim | By Dr.R.N. Sharma, M.A., Ph.D. |
| 70 | Vyasayogi Charita Introduction. | By Sri.B. Venkola Rao |
| 71 | Copper Plates and | (At Sri. Raghavendra Swamy Mutt |
| 72 | Dana Shasanas and other records. Mutt. | Nangourgud. |


CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



## ஸ்ரீ விஜயீந்த்ர மஹிமாதர்ச

(கன்னட பதங்கள்)

ராகம்: சங்கராபரணம் தாளம்-

கரவொட்டி பேடுவே குரு விஜயீந்த்ர ।
நெரெநம்பித பகுதன காயோ தொரெயே (ப)

கரகரீ பவஸாகரதி முளுகுதிஹே ।
பொரெவரின் னொப்பரனரியே குருவே (அ.ப.)

தரணியொளு பூ! ஸுரோத்தமரல்லி ஜனிஸி ।
ஸக்ரமதி விப்ரத்வவ வஹிஸி ।।
குரு வ்யாஸ முனிராயர பாதக்கெரகி ।
குரு மத்வாக மார்க்கவ க்ரஹிஸி ।।

மரளி எரடு நால்கு பாரி சாஸ்திரகளர்த்த । க்ரஹிஸி
தாருணியொளு சரிஸி ।
அரதூரமாடி பொரெவ ப்ரபு ஸலஹென்ன ।
நிருதநானெரகுவே நின்ன சரணவக்ரஹிஸி (1)

பாகவதாக்ரேஸர குரு ஸுரேந்த்ர முனி கரபதும ஸஞ்ஜாத ।
யோகிவர்யரே! நிம்ம பாதஸேரித ஜனரகவ களெவ நிர்பீத ।।

போகிபூஷணனே பரதைவவெம்பா
துர்வாதிகள டுகெத்த க்யாத ।
ராகவேந்த்ரர பரம குருவே நிம்மய
பாத நெரெநம்பிதே நிம்ம தூத (2)

சதுரதிகசதக்ரந்த விரசிஸி துர்மதி
லிங்கண்ணன கெத்து மடவ ।
சதுரதிக ஷஷ்டி வித்யா நிபுணனே। ரதிபதி
பிதகர்ப்பிஸுவ ।।

க்ஷிதியொளு பதிதபாவன ரகுபதியே
ஸர்வோத்தமனெந்து வாதிஸுவ ।
ததுவேசர பதிபித ஜயலகுமீ
பதிநரசிம்ஹனர்ச் சிஸுவ (3)

மேற்கண்ட பதத்தில் ஸ்ரீவிஜயீந்திரரின் மகிமை சொல்லப்பட்டுள்ளது. ஸ்ரீவ்யாஸராஜரிடம் சிஷ்யராயிருந்து ஸகல சாஸ்திரங்களையும் 64 கலைகளும் கற்று, தபஸ்வி ஸுரேந்திர தீர்த்தரால் விஜயீந்திரரென்ற

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

நாமம்பெற்று அவருடைய சிஷ்யராய், 104 கிரந்தங்கள் இயற்றி ஹரிஸர்வோத்தமத்தைச் சூர்ய - சந்திரர்கள் உள்ளவரையும் நிலைநிற்கச் செய்த மஹா தபஸ்வியென்பதாகக் கொண்டாடி வணங்குகிறார் கவிபுங்கவர்.

2

ராகம்:- ஆனந்த பைரவி தாளம்

எதுர்யாரோ யதிகெ ஸமன் யாரோ(ப)
பதநம்பிதவர பொரெவ அஸ்மத் குருவிகெ(அ.ப.)

ஜீவான்யத்ப்ரம்ஹனெந்து பேளுவுதக்கெ। ஜன்மாதி சாஸ்த்ர யோனிலக்ஷணத்வயவெந்து ॥ ஈவித போதிஸி பொரெவந்த குருவ । இன்யாவர காணெ நா ஈக்ஷிதியொளகெ (1)

தத்ரான்யத்ரான்யத்ரைவ உபயத்ர சப்த । சதுஷ்டய அதரொளு நாமலிங்க ॥

புத்ரகெ பேளுவந்ததி த்வைவித்யவ । சித்தக்கெ பருவந்தே பேளித விஜயீந்த்ரகெ (2)

மொதலு பாததி அன்யத்ர ப்ரஸித்த நாம। லிங்காத்மக நாம மூரல்லு பயத்ரா ॥ பதவ பஜிபஜய நரஸிம்ஹனே ச்ருதிலிங் । காதி அன்யத்ரைவ ப்ரஸித்தனெம் பரிகெ. (3)

இந்தப் பதத்தில் விஜயீந்திரருக்கு நிகர் யாருமில்லை. அவ்ரைச் சரண் புகுந்தவரை அவசியம் ரக்ஷிப்பார் என்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

ராகம்: நாதநாமக்ரியா தாளம்: ஜம்பை

விஜயீந்த்ர । ராஜகுருராஜா திராஜ மஹாராஜ சிரோரதன (ப)

பஜிஸுவே நிம்ம । பாதாம்புஜவ பிடதே நித்ய த்யஜிஸதே பாலிஸென்ன (அ.ப)

க்ஷோணியொளு வரகும்ப । கோணியொளு ஸாரங்க

பாணிபாதாம்புஜவ । தேனிஸி துர்வாதிகாளுர ஹிண்டுகள । வாணீலி தரிதியல்லோ (1)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

மானினி மணி । துர்மான திந்தலிபந்து காமபூரை ஸென்னலு ॥

மௌனி குலோத்தம்ஸ । தேனிஸிபுஷ்பதி । மானபங்க மாடிதெயல்லோ (2)

வாதி ஸம்பந்த துர்வாதி லிங்கண்ணன । பேதிஸி அவன மட ॥

ஸாதிஸி ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரனாத । லக்ஷ்மி தவகர்ப்பிதயல்லோ (3)

மாரன சரதிக்கரிஸி மஹ । காவேரிய தீரதல்லி ஸேரிஸேவிபரிஷ்ட । பூரைஸி காச்யப । தீர ததடதல்லிருவே (4)

அஜபவாதிபனாத । விஜயலக்ஷ்மி நர்ஸிம்ஹன பஜிஸுத ।

ஸுஜன வந்தித நம்ம । குருமத்வராயர மதஸம்ஸ்தாபகரே (5)

இந்தப்பதத்தில் கவி விஜயீந்திரரின் அற்புதச் செயல்களை வர்ணிக்கிறார். துர்வாதிகளை வென்றது. ஜிதேந்திரியரென்பதை நிரூபித்துக்காட்டியது. லிங்கராஜனை வாதில்வென்று அவனது மடத்தை வசமாக்கிக் கொண்டது மற்றும் மத்வ மதத்தை நிலைநாட்டினது இவைகளை வர்ணித்து வணங்குகிறார்.

4

ராகம்:- காம்போதி தாளம்: ஜம்பை

விஜய மூருதி பொரெயோ விஜயீந்த்ர யதிவர்ய
விஜயநகரேசனுத பாதபங்கஜனே (ப)

காவேரி தடநிகட கும்பகோணாவாஸி
சைவயதிமத்தேப பஞ்சானன (அ.ப)

பரம குரு ஸ்ரீமதானந்த தீர்த்தோத்யான
பரசாஸ்த்ர வெம்ப ஸத்ஸாரஸதி விஹரிஸுவ
பரமஹம்ஸனே யம்ம பகிஸதலனவரத
பரவாதி ஜயவீயோ நரஹரிய ப்ரியனே (1)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


ஹத்ஹத்து நால்கு லத் க்ருதிகளனு விரசிஸி
மித்யவாதவ முறித ஸத்ய சீல யதீந்த்ரா ।
மத்த காசினியரம் கண்ணெத்தி நோடதலே
சித்தேசனம் கெலிதெ ஸுத்தலூ காயெம்ம (2)

பந்தவனு தொட்டு அப்பய்ய தீக்ஷிதரெம்ப
மத்துவாதிய ஜயிஸி மத்வமத ரக்ஷிஸிதே ।
பதிதபாவன நம்ம கமலே சநங்க்ரியனு
துதிஸுத்தலனவரத பகுதரனு பொரெயுதிஹெ (3)

புனித கும்பகோண க்ஷேத்திரம், காவேரி தீரத்தில் ப்ருந்தாவனஸ்தராக உள்ள விஜயீந்திர தீர்த்தரின் குணகானம் செய்து, புகழ்பாடி அவரைத்தேடி வரும் பக்தர்களையும் தன்னையும் உய்விக்க வேண்டுமென வினயத்துடன் ப்ரார்த்தனை செய்கிறார் கவி.

श्री गुरुभ्योनमः ।

चातुर्यैकाकृतियैः चतुरधिक शतग्रन्थरत्न प्रणेता
धूताराति प्रबंधः स्फुटविदित चतुष्षष्टि विद्यविशेषः ।
सोयंनः श्री सुरेन्द्र व्रतिवर तनयोऽद्वैतशैवासहिष्णुः
पुष्णातु श्रीजयीन्द्रःत्रिभुवन विदितः सर्वतंत्र स्वतंत्रः ॥

गुरुगुणस्तवं ।

ஸ்ரீவாதீந்திரர் துதிக்கிறார். எந்த விஜயீந்திரர் திறமையையே உருவாகக் கொண்டவரோ, 104 சிறந்த க்ரந்த ரத்னங்களை இயற்றியவரோ! எதிரிகளின் க்ரந்தங்களைக் கண்டனம் செய்தவரோ, 64 கலைகளில் நிபுணரோ, அப்பேர்ப்பட்டவரும், ஸுரேந்திர தீர்த்தர் என்னும் யதிபுங்கவரின் குமாரரும் அதாவது சிஷ்யரும், அத்வைதம் சைவம் முதலிய மதங்களைச் சகிப்பவரோ, த்ரிலோகங்களிலும் பிரஸித்தமானவரோ.. ஸர்வ சாஸ்திரங்களில் பிறரின் அபேக்ஷயில்லாதவரோ அப்பேர்ப்பட்ட காந்தியுள்ள விஜயீந்திரர் நம்மைக் காப்பாற்றிப் போஷிக்கட்டும்.

श्री विजयीन्द्र गुरुस्तोत्रः ॥

स्वांक रमा मणी राजत्-गात्रशोभा मनोहरम्
पतत्रि ग्रामणी व्यूढ भुजारूढ हरिं भजे ॥१॥

भूयिष्ठबुद्धि गुरुशास्त्र पयोब्धिचन्द्रं
मायाविद्मर्ततमः प्रकरोष्ण भकानुम ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

पादोपसेवि जनमंडल नाकभोगं
श्रीमज्जयीन्द्र गुरुवर्य महंनमामि ॥२॥

श्रीमज्जयींद्रोऽमित दान लक्ष्मी
निवास भू रक्षतु मां अजस्त्रम् ।
सुरीनद्रं विज्ञेय महानुभाव :
वाग्धोरणी निर्जित मायिसंघः ॥३॥

श्रीराम पदांबुज सेवनाप्त संपत्ति भूमाश्रित कामधेनुः ।
श्रीमज्जयीन्द्रोऽनिशमाप्त कामं करोतु कर्मंदिजनाधिमौलिः ॥४॥

नाकीयरत्नं निजभक्तफाले
श्रीमज्जयीन्द्राऽमित चित्स्वरूपः ।
पापालि भूमीधरदान शंपा
धारा निलिंपेन्द्र गुरुर्गुरुर्नः ॥५॥

श्रीमज्जयींद्राऽमित साधु संघ
संसृत्यरण्यावलि वायुमित्रम् ।
समग्र नीचग्रह शासकोऽव्यात्
दुरत्यय प्रत्यय सागरालिः ॥६॥

यत्पादां बुरुहावने जनवनं प्रीतस्सदाऽनेकसत्
गंगाद्यंबु अवगाहलब्ध सुकृत व्रातो भवेत् तंभजे ।
उत्सार्यमित तापधूति निपुणो वंद्यांगना पुत्रदो
नाना देश नृपालि मौलिधरणी देवैःसदाराधितः ॥७॥

यत्पाद धूलिं परिलिप्त शरीरिणोये
यत्पादं लोकनं विधूत समस्त कल्काः ।
यत्पाद सार रुह वर्णनचीर्णवाकाः
तदृष्टिः अज्ञजन दुर्मति दावदावः ॥८॥

श्रीव्यासराज पदपंकज मत्त भृंगः ।
श्रीमत्सुरेन्द्र यति वंश विशालमुक्ता ।
श्रीमत्सुधीन्द्र यति नेतृ गुरुर्जयीन्द्र :
इष्टं प्रदो भवतु मे सततं प्रभुस्सः ॥९॥

श्रीमध्वागम दुग्धाब्धि चन्दिरो विलयीशिता ।
समस्त तंत्र विन्मौलिः पापान्मुक्तं करोतुमाम् ॥१०॥

गोचरीकृत गोविन्दः दूरीकृत तदात्मजः ।
मनीषितार्थ दाताऽन्यो विजयीन्द्रान्न वर्तते ॥११॥

कृपा प्रत्यय वादान्य वाकप्रावीण्य मुखांकितः ॥
निग्रहानुग्रहस्वैरी विजयीन्द्रान्न वर्तते ॥१२॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


मायावादीन्द्र सारंग केसरिन् विजयीशितः ।
समोऽस्ति लोके नान्यस्ते न भूतो न भविष्यति ॥१३॥

भक्तिज्ञान सुपुत्रायुः संपत् श्रद्धा तितिक्षुताः ।
सर्वशास्त्र मनीषांचदत्वा रक्षतु हंसराट् ॥१४॥

विस्मृत्यज्ञान दारिद्य संतापामितरोगजान् ।
हर्यक्ष कुल संजातान् दोषान्मे विजयीशितः ॥१५॥

दूरयित्वा तु तित्यं मां रक्ष संकीर्तनात् बहून् ।
परवादि जया मन्दा नन्द तुन्दिल वृष्मक ॥१६॥

ओं नमो विजयींद्राय इत्यष्टाक्षर मंत्रतः ।
जप्यते भाव्यते वापि येनेष्टार्थ सिद्धये ॥१७॥

नार्या वापि नरे णापि गृहिणा च सुभक्तिना ।
ऐहिकामुष्मिकान्सर्वान् प्राप्यार्थान्मोदते ह्यासौ ॥१८॥

गणनातीत माहात्म्यो विजयीन्द्रयतीश्वरः ।
चतुष्षष्टि कला पूर्णो रुजो मुक्तं करोतुमाम् ॥१९॥

पुण्यक्षेत्राकरोदभूत पुण्यावाप्त्यै करोम्यहम् ।
तव वृन्दावनमभि प्रदक्षिणशतं विभो ॥२०॥

तव वृन्दावन वनं प्रोक्ष्ये मूर्ध्नि सदाऽनघ ।
पुण्यामरसरिन्मुख्य सिन्धुस्नानफलाप्तये ॥२१॥

समस्तेप्सित विद्ध्यर्थं नमस्कुर्वे जयींन्द्रते ।
तव संस्मरणं सर्वं शास्त्रार्थ प्रति पत्तये ॥२२॥

संसार कर्दमो दन्वत्-उन्मज्जन्तं जयीशितः ।
उद्धरस्व कृपादृष्टिं अविलंबं वितीर्य माम् ॥२३॥

विजयीन्द्रगुरुस्तोत्रं सादरं यः पठेन्नरः ।
तस्योदरगतादोषाः नाश मेष्यन्ति असंशयः ॥२४॥

हरिविहीनो नरो दृङ्मान् अवागपि भवेदगुरुः ।
स्तुतेरस्याः प्रभावेन विजयीन्द्र यतीशितुः ॥२५॥

यस्यं वृन्दावनं प्राप्य विकलांधिर्नरोपि यः ।
स्तुत्यानया प्रकुर्वीत नमनं सप्रदक्षिणम् ॥
जांघिकस्तस्य भवेदस्य यतिनेतुः प्रभावतः ॥२६॥

योऽब्जेनोपल्पवे चैव तिष्यादित्यादि संगमे ।
अत्युत्तममिदं स्तोत्रं अष्टोत्र सहस्रकम् ॥
सादरं यो जपेदस्य ग्रहबाधा न जायते ॥२७॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

स्तुति मेतां पठन्योवै वृन्दावन समीपके ।
प्रदीपं ज्वलयेत् तस्यज्ञान पुत्रप्रदोहृयसौ ॥२८॥

परवादि परा भूति भक्तिज्ञानादि संपदाम् ॥
वृद्धिस्स्यात् विजयीन्द्रस्य स्तवनात् नात्र संशयः ॥२९॥

लुण्ठकोरग पृथ्वीश पुण्डरीकादि पीडता ।
प्रभावेन स्तुतेरस्याः न भवंति अत्र निर्णयः ॥३०॥

भक्तहृत्पं कजार्काय नमन्नाक धरारुहे ।
भजतांस्वर्गज गवे विजयीन्द्रायते नमः ॥३१॥

माद्यदप्पय्य मातंग गर्वनिर्वापिण क्षमः ।
श्रीजयीन्द्र मृगेन्दोमे हदगुहावसथो भवेत् ॥३२॥

भक्तानां मान सांमोज भानवे काम धेनवे ।
नमतां कल्पतरवे जयीन्द्र गुरुवे नमः ॥३३॥

इति श्री विजयीन्द्रार्य गुरुपादाभ्यनुज्ञया ।
कृतंस्तोत्रं संपूर्ण विजयीन्द्र गुरोः शुभम् ॥३४॥

। शुभम् ।

॥ इतिश्री विजयीन्द्र गुरुस्तोत्रं संपूर्णं ॥

॥ श्री कृष्णार्पणमस्तु ॥

## चतुष्षष्टि कला *(64 கலைகள்)*

### *புருஷர்களின் கலைகள்.*

*1. இதிஹாஸ க்ஞானம் 2. ஆகமாதி க்ஞானம் 3. காவ்ய க்ஞானம் 4. அலங்கார க்ஞானம் 5. நாடக் க்ஞானம் 6 காயகத்வம் 7. கவித்வம் 8. காம சாஸ்திர க்ஞானம் 9. தேச பாஷாக்ஞானம் 10. தேதபாஷாலிபி க்ஞானம் 11. லிபிகர்ம 12. லிபிவாசகம் 13. அபதானம் 14. ஸ்வர சாஸ்த்ர க்ஞானம் 15. சாகுன் சாஸ்திர ஞானம் 16. ஸாமுத்ரிக சாஸ்திர க்ஞானம் 17. ரத்ன சாஸ்திர க்ஞானம் 18. ரதகதி கௌசலம் 19. அச்வகதி கௌசலம் 20. மல்ல சாஸ்திர க்ஞானம் 21. ஸுதகர்ம 22. விருஷதோஹதம் 23. கந்த வாதம் 24. தாது வாதம்*

---

*पदे पदान्तरं गत्वा करौ चलनवर्जितौ ।
वाचा स्तोत्रं हृदिध्यानं चतुरंगा प्रदक्षिणा ॥

*ப்ரதக்ஷிணம் நான்கு அங்கங்களைக் கொண்டது 1. அடிமேல் அடி எடுத்து வைத்தல் 2. கைகள் அசையாமலிருத்தல் 3. வாக்காலும் துதிப்பது 4. மனதில் த்யானம்.*

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


25. ஸ்வன்யாவாதம் 26. ரஸவாதம் 27. ஜால வாதம் 28. அக்னி ஸ்தம்பம் 29. கடக ஸ்தம்பம் 30. ஜல ஸ்தம்பம் 31. வாசஸ்தம்பம் 32. வயஸ்தம்பம் 33. வச்யம் 34. ஆகர்ஷணம் 35. வித்வேஷணம் 36. உச்சாடனம் 37. மாரணம் 38. காலவஞ்சனம் 39. பயஸிப்லவன சாதுர்யம் 40. பாதுகாஸித்தி 41. ம்ருத்ஸித்தி 42. கடிகாஸித்தி 43. இந்திர ஜாலம் 44. நரதிருஷ்டி வஞ்ஜனம் 45. நரத்ருஷ்டி வஞ்சனம் 46. ஸ்வர வஞ்சனம் 47. மணிஸித்தி 48. மந்த்ர ஸித்தி 49. ஔஷத ஸித்தி 50. சோரகர்ம 51. வ்ருத்ரலோஹாச்மம்ருத்தாரு வேணுவர் மக்ரியைகள் 52. அஞ்சன க்ரியைகள் 53. அத்ருச்யகரணி 54. தூரகரணி 55. ம்ருகயாரதி 56. வாணிஜ்யம் 57. பாசுபால்யம் 58. க்ருஷிகர்ம 59. ஆஹவகர்ம 60. லாவகுக்குடமேஷாதி யுத்தகாரண கௌசல்ம்.

ிவரம்.

பதினெட்டு புராணங்கள், ராமாயணம், மஹாபாரம், க்ஷேத்ர மாஹாத்மியங்கள், ப்ராசீனமான ஊர்க் கதைகள், அந்தந்த ஜாதியர்களின் ப்ரஸித்தமான கதைகள் முதலியவைகளை அறிந்திருத்தல். 2. வேதங்கள், உபநிஷத்துகள், பாஞ்சராத்ராகமம், சைவாகமம் முதலிய தந்த்ர க்ரந்தங்கள் ந்ருஸிம்ஹ தாபனி அத்யாத்ம ஸம்ஹிதை முதலான சம்ஹிதைகள் முதலான வைதிக க்ரந்தங்களின் க்ஞானம் இருத்தல் 3 ப்ராசீனமான பல காவ்யங்களைப் பற்றி அறிந்திருத்தல், சுயம் கவிதை செய்யுவும், காவியங்களை இயற்றவும் அறிந்திருத்தல் 4 இம்மாதிரியே அலங்கார சாஸ்திரங்களில் அறிவு இருத்தல் 5 இம்மாதியே 10 வகையுள்ள நாடக சாஸ்திரங்களின் அறிவு 6 சங்கீத சாஸ்திரத்தின் அறிவிருப்பதோடு ஸ்வயம் சாஸ்த்ரீயமாய் பாடுபவராயிருப்பது 7. ஸமஸ்கிருதத்தில் பலவகைக் கவிதைகளை இயற்றும் திறமை. 8. காம சாஸ்திரத்தின் நுட்பங்களின் அறிவு. 9. ஸமஸ்கிருத பாஷையில் இவ்வளவு திறமையிருப்பதோடு தமிழ், கன்னடம், மஹாராஷ்டரம் முதலிய மொழிகளைப் பேச அறிந்திருத்தல். 10. அந்தந்த பாஷைகளை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

அந்தந்த பாஷை எழுத்துக்களில் எழுதவும் படிக்கவும் அறிந்திருத்தல். 11. பலவகையாய் எழுத்துக்களை எழுத அறிந்திருத்தல். 12. கிறுக்கு எழுத்துக்களையும் பழைய ஓலைச்சுவடி முதலியவைகளிலுள்ள பலவகைப் புத்தகங்களையும் படிக்கத் தெரிந்திருத்தல். 13. பரிசுத்தமான ஆசரணைகள் கொண்டிருத்தல். 14. வேதங்களில் ஸ்வரங்களான உதாத்தம் அனுதாத்தம் ஸ்வரிதம் இவைகளையும் ஸங்கீதத்தின் ஸப்த ஸ்வரங்களையும், வேறுவகையான ஜீவ ஸ்வரம், வர்ண ஸ்வரம் முதலான 16 வகைகளையும் நன்கு அறிந்திருத்தல். 15 ஜலத்திலும், தரையிலும் ஆகாயத்திலும், தென்படும் சகுனங்களின் க்ஞானம் பலவகை அகஸ்மாத்தாய்க் காதிற்படும் சப்தங்கள், பேசப்படும் வார்த்தைகள். தொடச் செய்யப்படும் வஸ்துக்கள், இவைகளால் சூசிக்கப்படும் சம்பவங்களை அறிதல் 16. ஸ்த்ரீ புருஷர்களின் சரீர பிம்பம் இவைகளின் அங்கங்கள் வர்ணங்கள் முதலானவைகளால் அவர்களின் விருத்தங்களை அறிதல், ரேகா சாஸ்திரம் மச்சங்களின் அறிவு, சுழிகளின் அறிவு முதலான ஸமுத்திரனால் வர்ணிக்கப்பட்டிருக்கும் ஸாமுத்திரிகாசாஸ்திரத்தின் அறிவு 17. நவரத்தினங்களின் குண தோஷங்களின் க்ஞானம் 18. ரதங்கள் முதலான வண்டிகளை நன்கு ஓட்டும் க்ஞானம் 19. குதிரை முதலான வாகனங்களை ஓட்டும் க்ஞானம் 20. சிம்மம், வியாக்ரம், யானை முதலானவைகளின் நடைபோடத் தெரிதல். மல்யுத்தத்தில் யுத்தத்தில் செய்யப்படும் பலவகை ப்ரஹாரங்கள், ப்ரமாணங்கள் முதலானவைகளை யறிந்திருத்தல். 21. பக்ஷ்யம், போஜ்யம் பேயம், சோஷ்யம், லேஹ்யம் முதலான போஜனங்களையும் ஸப்தவித பாகங்களையும், அடுப்பு மூட்டுதல், பத்துதேய்த்தல் வரையில் சமையல் சம்மந்தமான எல்லா காரியங்களையும், பாக சாஸ்த்திர விதியையும் அறிந்திருத்தல். 22. மரம், செடி முதலியவைகளின் சாஸ்திர ஞானம் அவைகளை வளர்த்துப் பயனளிக்கச் செய்தல் முதலானவைகளை அறிந்திருத்தல். 23. இருபத்திஎட்டு வகை கந்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


பாஷாணத்தின் ப்ரயோகாதிகளை அறிந்திருத்தல். 24. கைரிகாதி தாதுக்களின் பரீக்ஷை ப்ரயோகாதிகளை அறிந்திருத்தல், தங்கம் முதலான தாதுக்களின் சுரபாதிகளின் அறிவு 25 குரல்களை மாற்றிப் பேசுதலின் அறிவும் பலவகைக் குரல்களால் நபர்களை அறிந்து கொள்ளுதல். 26. பாதரஸங்களைக் கட்டுதல், அவைகளின் ப்ரயோகம் முதலியவைகளின் அறிவு. 27. த்ராவகங்களின் அறிவு. 28. அக்னி ஸ்தம்பம். 29. கத்தி விளையாட்டும் அதன் மீது படுத்தல் முதலியவைகளைச் செய்யும் திறமை. 30. ஜலத்தின் மீது நடப்பது, படுப்பது முதலியவை. 31. சத்துருக்களின் பேச்சை ஸ்தம்பிக்கச் செய்ய அறிந்திருத்தல். 32. ஒருவன் மேலே வளரவொட்டாமல் அந்த வயதை ஸ்தம்பிக்கச் செய்தல். 33. வசீகரணம், தனக்கு சுவாதீனமாக்குதல். 34. தன் பின்னே தொடரச் செய்தல், ஆகர்ஷணம். 35. உச்சாடனம், ஓடிவிடச் செய்தல். 36. தன்னைக் கொல்லவருபவரைக் கொல்லுதல். 37. ஒருவரை ஒருவர் த்வேஷிக்கச் செய்தல். 38. பகலை இரவாக்கிக் காண்பித்தல். 39. ஜலத்தில் நீந்துதல் முதலிய திறமைகள். 40. ஜலத்தின் மீதும் பாதுகையுடன் நடத்தல். 41. மண்ணால் வஸ்துக்களைச் செய்தல் முதலான மிருத்தின் ஸித்தி. 42. கால அளவை ஸ்வாதீனம் செய்து கொள்ளுதல் இஷ்டப்படி மணியையும் பொருளையும் காட்டுதல். 43. இந்திர ஜால வித்தை. 44. மானிடக் கண்ணை மறைக்கும் மை வேலைகள். 45. பார்வை ஏமாரச் செய்தல். 46. பலவகைச் சப்தங்களைப் போட்டு ஏமாற்றுதல். 47. கருட மணி, நாகமணி முதலியவைகளின் அறிவும் அதன் ப்ரயோக ஞானமும். 48. மந்திரங்களின் சித்தி நிச்சயமாய் அந்தந்த பலன்களை உண்டாகச் செய்வது. 49. ஔஷதங்களின் அறிவும் அவைகளின் ப்ரயோக சித்தியும். 50. கள்வத்தனம், யாவரும் கண்டுபிடிக்க முடியாத ரீதியில் ஆச்சரியமாக எப்படித் திருடுவது என்பதை அறிந்திருந்தால். 51. தாமிரம், வெள்ளி முதலான உலோஹங்கள், தகரம் துத்தநாகம், முதலான தகடுகள், மூங்கில் பிரம்பு, முதலானவைகள், மரம், கல், சாந்து,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/muthulakshmi_academy

முதலானவைகள், இவைகளால் சித்திர் வேலைப்பாடுகள் செய்தல். 52. பலவகை அஞ்ஜனங்களைத் தயாரித்தல். 53. கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோதல். 54. இதர வஸ்துக்களை மறையச் செய்தல். 54. வெகுதூரம் போகச் செய்தல். 55. வேட்டையாடுதல். 56. வியாபாரத் தொழிலறிவு. 57. மேய்ச்சல் ஞானம். 58. பயிரித்தொழில் அறிவு. 59. யுத்தம் புரியும் ஞானம். 60. ஆடு, கோழி, புறா முதலானவைகளைச் சண்டையிடச் செய்தல்.

51வதும் 60வதுமான கலைகளின் அடங்கியவைகளின் 4 ப்ரபேதங்கள், தனிக்கலைகளாகக் கொண்டால் ஆக இந்த 64 கலைகள். இவைகளை அந்தந்த சாஸ்திரத்தின்படி அறிந்திருக்க வேண்டும்.

மேற்கண்ட 64 கலைகளைக் கும்பகோணவாசிகளின் மாபெரும் சபையில் விளக்கி ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர் லிங்காயதர்களின் குருவை "நான் சொன்னதைத் திருப்பிச் சொல்லும். அல்லது இந்த 64 கலைகளின் பெயர்களையாவது சொல்லும் என்று கேட்டார். லிங்கராஜேந்திரர் பேசாமல் எழுந்து மடத்தினுள்ளே போய்விட்டார்.

## ॥ श्री विजयीन्द्राष्टोत्तर शतनामावलिः ॥

1. ओं भूयिष्ठ नुद्धि गुरुशास्त्र पयोब्धि चुद्रायनमः ।
2. ओं मायविदुर्मतः प्रकरोष्ण भानवे नमः ।
3. ओं पादोपसेविजन मंडल नाक भोगायनमः ।
4. ओं अमितद्वान लक्ष्मी निवास भुवे नमः ।
5. ओं सूरीन्द्र विज्ञेय महानुभावाय नमः ।
6. ओं वाग्घोरणी निर्जित मादि संघाय नमः ।
7. ओं श्री राम पादांबुज सेवनाप्त संपत्ति भूमाश्रित कामधेनवे नमः ।
8. ओं कर्मंदि जनाधि मौलये नमः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


9. ओं निजभक्त फलनाकीय रत्नाय नमः ।

10. ओं अमित चित्स्वरूपाय नमः ।

11. ओं पापालि भूमीधरदान शंपाधारायै नमः ।

12. ओं निलिंपेन्द्र गुरवे नमः ।

13. ओं अमित साधु संघ संसृत्य रण्यावलि वायु मित्राय नमः ।

14. ओं समग्र नीचग्रह शासकाय नमः ।

15. ओं दुरत्यय प्रत्यय सागरालये नमः ।

16. ओं स्वपादांबुरुहावने जनवन प्रीतानां सदगंगा द्यांबु-अवगाहनालब्ध सुकृतव्रात दात्रे नमः ।

17. ओं उत्सार्यामित ताप धूति निपुणाय नमः ।

18. ओं वन्ध्यांगना पुत्रदाय नमः ।

19. ओं नानादेश नृपालिमौलि धरणी देवैः सदाराधिताय नमः ।

20. ओं स्वपाद धूलि परिजिप्त शरीरि भक्तवर्गाय नमः ।

21. ओं स्वपाद लोकन विधूत समस्त भक्त कलकाय नमः ।

22. ओं स्वपाद सार रुह वर्णन चीर्ण वाक भक्त वर्गाय नमः ।

23. ओं अज्ञजन दुर्मतिदाव भूतस्वभक्त दृष्टये नमः ।

24. ओं श्रीव्यासराज पद पंकज मत्त भृंगाय नमः ।

25. ओं श्रीमत्सुरेन्द्रयति वंश विशाल मुक्ता फलाय नमः ।

26. ओं श्रीमत्सुधींद्रयति नेत्रु गुरवे नमः ।

27. ओं इष्ट प्रदाय नमः ।

28. ओं प्रभवे नमः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

29. ओं श्री मध्वागम दुग्धाब्धि चंद्राय नमः ।

30. ओं समस्त तंत्रविन्मौलये नमः ।

31. ओं गोचरी कृत गोविन्दाय नमः ।

32. ओं दूरी कृत तदात्मजाय नमः ।

33. ओं मनीषीतार्थदात्रे नमः ।

34. ओं कृपा प्रत्यय वादान्य वाक्प्रावीण्य मुखांकिताय नमः ।

35. ओं निग्रहानुग्रहस्वैरिणे नमः ।

36. ओं मायावादीन्द्र सारंग केसरिणे नमः ।

37. ओं भूतभविष्यद्वर्तमान कालेषु असमाय नमः ।

38. ओं भक्तिज्ञान सुमुत्रादि संपत्प्रदात्रे नमः ।

39. ओं विस्मृत्यज्ञान दारिद्र्यादि दोषदूर कृते नमः ।

40. ओं परवादि जयामन्दातंद तुंदिल वर्ष्मकाय नमः ।

41. ओं श्रीविजयीन्द्राष्टाक्षर मंत्र जापकानां ऐहिका पुष्मिक फल प्रदात्रे नमः ।

42. ओं गणनातीत माहात्म्याय नमः ।

43. ओं चतुःषष्टि कला पूर्णाय नमः ।

44. ओं स्ववृन्द्रावन प्रदक्षिणकर्तॄणां पुण्यक्षेत्र यात्रा फल प्रदाय नमः ।

45. ओं मूर्ध्निस्ववृन्दावन वन प्रोक्षणं कर्तॄणांपुण्यामर सरित्स्नान फलदात्रे नमः ।

46. ओं स्वनमस्कर्तॄणां समस्तेप्सित दात्रे नमः ।

47. ओं स्वसंस्मरण वतां सर्वशास्त्रार्थ ज्ञान दात्रे नमः ।

48. ओं संसार कर्दमोदन्वत् उन्मज्जदुद्धारकाय नमः ।

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


49. ओं स्वस्तोत्र पाठकानां उदरगत रोगनाशकाय नमः ।

50. ओं दृग्विहीनानां दृगदात्रे नमः ।

51. ओं उवाचां गुरुत्व दात्रे नमः ।

52. ओं विकलांधीणां जांधिकत्व प्रदाय नमः ।

53. ओं ग्रंह बाध परिहार काय नमः ।

54. ओं स्ववृंदावन समीपे प्रदीपज्वलन कर्तृणां ज्ञान पुत्र प्रदाय नमः ।

55. ओं स्वस्तति कर्तृणां परवादि जयादि संपदृद्धि कराय नमः ।

56. ओं लुण्ठकोरग पृथ्वीश पुण्डरीकादि पीडनघ्ने नमः ।

57. ओं भक्त हृत्पंकजार्काय नमः ।

58. ओं नमन्नाक धरारुहे नमः ।

59. ओं भजतां स्वर्गज गवे नमः ।

60. ओं माद्यदण्यय मातंग गर्व निर्वापणक्षम मृगेंद्राय नमः ।

61. ओं भक्तानां मानसां भोज भानवे नमः ।

62. ओं भजतां काम धेनवे नमः ।

63. ओं नमतां कल्पतरवे नमः ।

64. ओं चातुर्यैका कृतये नमः ।

65. ओं चतुरधिकशत ग्रंथरत्न प्रणेत्रे नमः ।

66. ओं धूताराति प्रबंधाय नमः ।

67. ओं स्पुटविदित चतुष्षष्टि विद्या विशेषाय नमः ।

68. ओं श्री सुरेन्द्रव्रतिवरतनयाय नमः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

69. ओं अद्वैत शैवासहिष्णवे नमः ।

70. ओं त्रिभुवन विदिताय नमः ।

71. ओं सर्वतंत्र स्वतंत्राय नमः ।

72. ओं षड्वारं व्यासराजेंदुमुखात् श्रुत मध्वशास्त्र साराय नमः ।

73. ओं श्री व्यासतीर्थ पयोनिधेः नवकृत्वःन्यायसुधां उद्धृत्य पीतवते नमः ।

74. ओं श्री मध्वाचार्य मतोद्यान संचरत्तर बर्हिणे नमः ।

75. ओं मायावादि मतोच्छेद कोलाहल भरोक्तये नमः ।

76. ओं सत्वगुण सहवासाय नमः ।

77. ओं तमोगुण विदूराय नमः ।

78. ओं नास्तिक कुल तिमिर निराकरण सहस्रकिरणाय नमः ।

79. ओं आस्तिकानां प्रथमोदाहरणाय नमः ।

80. ओं विबुधजन भरण मुख गुण गण विभवाय नमः ।

81. ओं विधूतक नकधरा धराय नमः ।

82. ओं वन्दारुजन वृंदावन मंद्राराय नमः ।

83. ओं इंदिरारमण पादारविंद द्वन्द्व वन्दनकंदालितानंद तुन्दिलाय नमः ।

84. ओं विहित निरशन व्रताय नमः ।

85. ओं गणनातीत गंभीर गुण सांद्राय नमः ।

86. ओं कुवलय चन्द्राय नमः ।

87. ओं विजयनगराधीश रचित रत्नाभिषेकाय नमः ।

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


88. ओं तंजा पुराधीश सभालंकाराय नमः ।

89. ओं तद्विश्राणित ग्रामवते नमः ।

90. ओं दिगन्त विश्रांत विमलकीर्ति चन्द्रिकाय नमः ।

91. ओं षड्दर्शनाचार्य वर्याय नमः ।

92. ओं निखिलविद्या चक्रवर्तिने नमः ।

93. ओं सकलयतिकुल तिलकाय नमः ।

94. ओं पुष्पित श्रीमध्वसिद्धांत शाखिने नमः ।

95. ओं कुंभगोणक्षेत्र निलयाय नमः ।

96. ओं पराजित वीर शैव गुरवे नमः ।

97. ओं विस्तृत तन्मठामहर्त्रे नमः ।

98. ओं कश्यप सरस्तीर वासाय नमः ।

99. ओं श्रीवादिराज सखाय नमः ।

100. ओं श्रीराघवेंद्र परम गुरवे नमः ।

101. ओं श्रीविष्णुतीर्थेति दीक्षानामवते नमः ।

102. ओं श्रीमत्परमहंस परिव्राजकाचार्याय नमः ।

103. ओं पदवाक्य प्रमाण पारावार पारीणाय नमः ।

104. ओं श्रीमद्वैष्णव सिद्धांत प्रतिष्ठापनाचार्य नमः ।

105. ओं श्रीमन्मध्वचार्य मुखय संस्थानाधीश्वराय नमः ।

106. ओं श्रीमन्मूलराम पादपद्माराधकाय नमः ।

107. ओं श्री विजयींद्र गुरुसार्वभौमाय नमः ।

108. ओं भक्ताभीष्ट फल प्रदस्वामिने नमः ।

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

ओं तत् सत्

## ॥ श्रीमद्विजयीन्द्र तीर्थ मंगळाष्टकम् ॥

## ஸ்ரீமத் விஜயீந்திர தீர்த்த மங்களாஷ்டகம்

वंशे श्रीमति हंसनामक महालक्ष्मीपते रागते
मध्वाचार्य परंपरा परमहंसैः संततं शोभिते ।
राजन् सिंह इवाधि कन्दरमहो वेदांत सिंहासने
वन्द्य श्रीविजयींद्रतीर्थ गुरुराट् कुर्याज्जगन्मंगलम् ॥१॥

வம்சே ஸ்ரீமதி ஸம்ஸநாமக மஹாலக்ஷ்மிபதே ராகதே
மத்வாசார்ய பரம்பரா பரமஹம்ஸை: ஸந்ததம் சோபிதே
ராஜன்ஸிம்ஹ இவாதிகந்தர மஹோ வேதாந்த ஸிம்ஹாஸனே
வந்த்ய: ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்த குருராட்குர்யாஜ்ஜகன் மங்களம் (1)

தாத்பர்யம்:- அன்னபக்ஷியாக அவதரித்து ஸாதுக்களுக்கு ஞானோபதேசம் செய்தவர் ஸ்ரீலக்ஷ்மி பதியான ஸ்ரீமந்நாராயணன். அந்தப் பரம பரிசுத்தமான ஞானிகளின் வழியில் அவதரித்தவர் ஸ்ரீமன் மத்வாசார்யர். அந்தப் பரம்பரையில் தோன்றிய மகான்களால் அவரது வம்சம் அலங்கரிக்கப்பட்டது. அதில் உதித்துத் தனது குஹையில் கம்பீரமாக வீற்றிருக்கும் சிம்ஹம் போல், வேதாந்த ஸாம்ராஜ்ய ஸிம்ஹாஸனத்தில் சோபித்தவர் ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகள். நமஸ்கரிக்கத் தகுந்த அவர் அகில உலகிற்கும் மங்களத்தை அருளட்டும்.

श्रीरामांघ्रि पयोरुहेऽनवरतं भक्तिं परामुद्वहन्
कृत्वा पूजनमाश्रमोचित जपं तीर्थप्रसादादिकम् ।
भक्तेभ्यो वितरन् पुनः फल महामन्त्राक्षतां सर्वदाम् ।
वन्द्य श्री विजयीन्द्रतीर्थ गुरुराट् कुर्याज्जगन्मगळं ॥२॥

ஸ்ரீராமாங்க்ரி பயோருஹே அநவரதம் பக்திம் பராமுத்வஹன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



க்ருத்வாபூஜன மாச்ரமோசித ஜபம் தீர்த்த ப்ரஸ்ாதாதிகம்

பக்தேப்யோவிதரன் புன: பல மஹா மந்த்ராக்ஷதாம் ஸர்வதாம்

வந்த்ய: ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்த குருராட்குர்யாஜ்ஜகன் மங்களம் (2)

தாத்பர்யம்:- அவர் ஸ்ரீராமசந்த்ரரின் சரணாரவிந்தங்களை இடைவிடாது பரம பக்தியுடன் தியானப்பவர். ஸந்நியாஸிக்குரிய ப்ரணவஜபம் செய்து, பூஜைகளைச் செவ்வனே நிறைவேற்றித் தமது பக்தர்களுக்குத் தீர்த்தம், ப்ரஸாதம் இவைகளை அளித்து முடிவில் ஸகல அபீஷ்டங்களையும் அளிக்கவல்ல மந்த்ராக்ஷதை, பழம் இவைகளை வழங்குவார். அந்த வணங்கத்தகுந்த ஸ்ரீவிஜயீந்த்ர ஸ்வாமிகள் அகில உலகத்திற்கும் மங்களத்தை அருளட்டும்.

श्रीमन्मंगळनायिका वरबलात् श्रीलिंगराजेंद्रकं

जित्वा शैव मतेऽप्रतीक विदुषं प्रौढेन्द्रजालेऽपिच ।

सस्नेहादर माननं बहुददत् संभावनां प्राहिणोत्

वन्द्यः श्री विजयींद्रतीर्थगुरुराद कुर्याज्जगन्मंगळम् ॥३॥

ஸ்ரீமன் மங்கள நாயிகா வரலாத் ஸ்ரீலிங்கராஜேந்த்ரகம்

ஜித்வாசைவமதே அப்ரதீக விதுஷம் ப்ரௌடேந்த்ர ஜாலேஅபிச

ஸஸ்நேஹாதரமானனம் பஹு்தத் ஸம்பாவனாம் ப்ராஹிணோத்

வந்தய: ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த குருராட் குர்யாஜ்ஜகன் மங்களம் (3)

தாத்பர்யம்:- கும்பகோணத்தில் க்ஷேத்ர மூர்த்தியாய் ப்ரகாசிக்கும் ஸ்ரீமங்களாம்பிகையின் அருளால் ஸ்ரீலிங்கராஜேந்திரர் என்ற சைவ மதத்தில் ஈடு இணையற்ற பண்டிதரை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy


வாதத்தில் வென்றார். முதிர்ந்த இந்திரஜால வித்தையிலும் அவரை மிஞ்சினார் என்றாலும், அவரிடம் ஸ்நேகம் பாராட்டி, ஆதரவுடன் கௌரவித்து நிறைய ஸன்மானங்களைக் கொடுத்தனுப்பினார். அப்பேர்ப்பட்ட வணக்கத்திற்குரிய ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகள் அகில உலகத்திற்கும் மங்களம் அருளட்டும்.

शैवाद्वैतमत प्रवर्तक इति ख्यातं च विद्वन्मणिं
जित्वाप्पय्य दीक्षितं बहुविधं संमान्य मान्यंमुदा ।
यस्तं स्वात्म समं सखाय मकरो दाजीव मन्यादृशं
सोयं श्रीविजयींद्रतीर्थ गुरुराद् कुर्याज्जगन्मंगळम् ॥४॥

ஶைவாத்வைத மத ப்ரவர்த்தக இதிக்யாதம்ச வித்வன் மணிம்

ஜித்வாப்பய்ய தீக்ஷிதம் பஹுவிதம் ஸம்மான்ய மான்யம்தா

யஸ்தம் ஸ்வாத்ம சமம் ஸகாய மகரோதா ஜீவ மன்யாத்ருசம்

ஸோயம் ஸ்ரீ விஜயீந்த்ர தீர்த்த குருராட் குர்யாஜ்ஜகுன் மங்களம் (4)

**தாத்பர்யம்:-**

ஶைவாத்வைத மதத்தை ஸ்தாபித்து, மிக்க புகழோடு திகழ்ந்தவர் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரவர்கள். அவர் மஹாபண்டிதர். அவரையும் விஜயீந்திரர் வாதத்தில் வென்றார். என்றாலும் மதிப்பிற்குரிய அவரைப் பலவிதத்திலும் கௌரவித்ததல்லாமல் அவரது ஆயுள் உள்ளவரையிலும் அவரைத் தமது உயிர்த்தோழராக ஆக்கிக் கொண்டார். இந்த கௌரவம் வேறுயாருக்கும் கிடைக்கவில்லை. அப்பேர்ப்பட்ட ஸ்ரீ விஜயீந்திர தீர்த்தர் அகில உலகத்திற்கும் மங்களம் அருளட்டும்.

श्री भट्टोजि मखीति विश्रुतमलं शाब्देऽजयत्पण्डितम्
यः पीताम्बर पंचलोह प्रतिमानिर्माण शिल्पेष्वपि ।
वीणा वेणु सुवादने कुमुजगार श्रेण्यां पृथड्.नाटने
नेता श्री विजयींद्रतीर्थ गुरुराद् कुर्याज्जगन्मंगळम् ॥५॥

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ஸ்ரீபட்டோஜி மகிதி விச்ருதமலம் சாப்தே அஜயத் பண்டிதம்

ய:பீதாம்பர பஞ்சலோஹ ப்ரதிமாநிர்மாண கில்பேஷ்வபி

வீணாவேணு ஸுவாதனே குபுஜகான் ச்ரேண்யாம் ப்ருதங்நாடனே

ஜேதா ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்த குருராட் குர்யாஜ்ஜகன் மங்களம் (5)

தாத்பர்யம்:-

ஸ்ரீபட்டோஜி தீக்ஷிதர் என்ற மிகவும் புகழ் படைத்த இலக்கணப் புலவரை வாதத்தில் வென்றார். (இவையெல்லாம் அவர் கல்வியின் மேன்மையைக் காட்டுகின்றன) இனி அவர் கலைகளிலும் வல்லவர் என்பதைக் காட்டும் அவரது வெற்றிகளைப் பார்ப்போம்)

பீதாம்பரம் நெய்தல், பஞ்சலோஹ ப்ரதிமைகளை வார்த்தல், சிற்பக்கலை, ஒளிவீசும் நவரத்ன பதக்கம் கட்டுதல், வீணை வாசித்தல், ஆரூடம் (ஜோதிடம்) முதலிய கலைகளில் அந்தந்தக் கலைகளில் வல்லுனர்களுடன் மோட்டியிட்டு வெகு எளிதில் வென்றார். குழல் ஊதினார். அதற்குச் சரியாக வெவ்வேறு ராகத்திற்கு ஆடுவதற்குப் பழக்கப்பட்ட பல்வேறு கொடிய விஷப்பாம்புகள் வரிசையாக நின்று ஆனந்தமாக ஆடின.

विभ्राजन्नवरत्न भूषण विनिर्माणे तथाज्योतिषे
यश्चेत्यादि कलाविदो लघुजयन् संभावयन् तानपि ।
मोडी संज्ञ कुमन्त्रकूट दलने क्रूराभिचारे शठान्
जिग्ये श्री विजयीन्द्रतीर्थ गुरुराट् कुर्याज्जगन्मंगलम् ॥६॥

விப்ராஜன் நவரத்ன பூஷண விநிர்மாணே ததாஜ்யௌதிஷே

ய:சேத்யாதி கலாவிதோ லகுஜயன் ஸம்பாவயன் தானபி

மோடீஸம்க்ஞ மந்த்ர கூட தலனே க்ரூராபிசாரே சடான்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



ஜிக்யே ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்த குருராட் குர்யாஜ்ஜகன் மங்களம் (6)

தாத்பர்யம்: கொடூரமான மந்திரவாதியால் வைக்கப்பட்ட பயங்கரமான மோடியைத் தன் சீடன் மூலமாகவே எடுத்தார். அவரைக்கொல்ல எண்ணி துர்மந்திரம் ஜபித்த மந்திரவாதி தோற்று ஊரையே விட்டு ஓடிவிட்டான்.

शत्रोराप्य विषंनिपीय जरयन् कुर्वन् नृसिंहस्तुतिं
काले राडूहिते पराक्रम कृतो विद्रावयन् दुर्भटान् ।
श्रीकुंभेश्वर, शार्ङ्.ग पाणि मुखंसददेवालयान् लीलया
रक्षन् श्री विजयीन्द्रतीर्थ गुरुराट् कुर्याज्जगन्मंगळम् ॥७॥

சத்ரோராப்ய விஷம் நிபீய ஜாயன் குர்வன் ந்ருஸிம்ஹஸ்துதிம்

காலேராட்ரஹிதே பராக்ரம க்ருதோவித்ராவயன் துர்படான்

ஸ்ரீகும்பேச்வர, சார்ங்கபாயி முகஸத்தேவாலயான லீலயா

ரக்ஷன் ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்த குருராட் குர்யாஜ்ஜகன் மங்களம் (7)

தாத்பர்யம்:- தம்மைக் கொல்வதற்கென்றே விஷத்தைக் கொண்டு வந்திருந்த ஒரு புலவர் அதை வெளியே எடுக்கவே பயப்பட்டார். இதை ஞான த்ருஷ்டியாலறிந்த நம் ஸ்வாமிகள் அவரிடமிருந்து விஷத்தைத் தாமே வாங்கி உண்டு ஸ்ரீநரசிம்ம ஸ்தோத்திரத்தை இயற்றி, த்யானித்துக் கொண்டே, அக்கொடிய விஷத்தையும் ஜீரணித்து விட்டார்.

தஞ்சை மன்னர்கள் சத்துருக்களை விரட்ட வெளியே சென்றிருந்த சமயம், யவனர்களின் குதிரைப்படை கும்பக்கோணத்தைத் தாக்கி தேவாலயங்களை அழிக்க வந்தது. அந்தத் தாக்குதல் வெற்றிபெறாமல் நிலைகுலைந்து ஓடும்படி செய்து விட்டார். தமது யோக சக்தியினால், தம் மந்திர ஜப பலத்தாலேயே அஹிம்ஸை மார்க்கத்தில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy



அவர்களை விரட்டியடித்தார். இப்படியாக வெற்றி கண்டு ஸ்ரீ ஆதி கும்பேச்வரர், ஸ்ரீசாரங்க பாணி ஸ்வாமிகளின் தேவாலயங்களைக் காப்பாற்றினார். அந்த ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகள் அகில உலகத்திற்கும் மங்களம் அருளட்டும்.

जामात्रा वरकृष्णदेव नृपतेः रत्नाभिषेक्तो मुदा
संराजा विजयाखयम्यनगरे श्रीरामरायेणयः ।
कावेरीश्रित कुंभघोण नगरे वृन्दावने राजते
वन्द्य श्री विजयीन्दतीर्थ गुरुराद् कुर्याज्जगन्मंगळम् ॥८॥

ஜார்மாத்ரா வரக்ருஷ்ணதேவந்ருபதே; ரத்னா பிஷிக்தோ முதா

ஸம்ராஜா விஜயாக்ய ரம்யநகரே ஸ்ரீராமராயேணய:

காவேரி ச்ரித கும்பகோண நகரே ப்ருந்தாவனே ராஜதே

வந்த்ய ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்த குருராட்கு யாஜ்ஜகன் மங்கள (8)

தாத்பர்யம்:

புகழ்பெற்ற ஸ்ரீக்ருஷ்ணதேவராய மன்னரின் மாப்பிள்ளையான சக்ரவர்த்தி ஸ்ரீராமராயர், விஜயநகரம் எனும் அழகிய கர்நாடக ராஜ்யத் தலைநகரில் இவருக்கு நவரத்னாபிஷேகம் செய்து மகிழ்ந்தார். அந்த மகான் ஸ்ரீவிஜயீந்திர தீர்த்த ஸ்வாமிகள், இன்னும் காவேரிக்கரையில் அமைந்துள்ள கும்பகோண நகரத்தில், ப்ருந்தாவனத்தில் ப்ரகாசிக்கிறார். அவர் ஸகல ஜகத்திற்கும் மங்களங்கள் அருளட்டும்.

इति श्रीविजयीन्द्रार्य गुरुराद् कृपया कृतम् ।
अप्पणाचार्य कविना नवीनेन यथामति ॥९॥

तदभक्तानां इहपर श्रेयसे मंगळाष्टकम् ।
रसज्ञानां च साधूनां जेजीयेत ददन्मुदम् ॥१०॥

இதிஸ்ரீவிஜயீந்திரார்ய குருராட்க்ருபயா க்ருதம்
அப்பணாசார்ய கவினா நவினேன யதாமதி (9)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

தத்பக்தானாம் இஹபர ச்ரேயஸே மங்களாஷ்டகம்
ரஸக்ஞானாம் சஸாதுனாம் ஜேஜீயேத்ததன்முதம் (10)

இவ்விதம் குருச்ரேஷ்டரான ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகளருளால், நவீன காலத்திய அப்பணாசார்யன் என்ற கவியினால், தன் புத்திக்கு எட்டியவரை, இந்த மங்களாஷ்டகம் இயற்றப்பட்டது.

இது ஸ்வாமிகளின் பக்தர்களுக்கு இஹ பரகீர்த்தியை அளிக்கவல்லது. இதை ஸாதுக்களான ரஸிகர்கள் ரஸிப்பார்களாக. எங்கும் ஆனந்தம் நிலவட்டும்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

# PAGE-WAR ERRORS AND THEIR CORRECTIONS

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| (அட்டைக்கவரில் | | | கடைசிப் பக்கம் | ஆங்கிலம்) |
| | 2 | 7 | reinfoce | reinforce |
| | 3 | 1 | begote | begoted |
| | 4 | 2 | unforgetable | unforgettable |
| 1 | | 11 | ராஜா | ராஜ |
| 2 | | | 66–சூரியனை | சூரியன் |
| 11 | | 4 | श्रीमत्मरि | श्रीमत्परि |
| 11 | 1 | 15 | வித்யர, பத்தராத | வித்யா பத்தாதரும் |
| 19 | | 1 | மங்கண்டு | மங்கண |
| | | 17 | நவ | நவமி |
| 20 | 2 | 6 | என்றும் | என்னும் |
| 28 | | கடைசி | கர்னாட | கர்நாடக |
| | | | **அத்யாயம் I** | |
| | | | **கதாபாகம்** | |
| 4 | 2 | 5 | பவித்ரமானதுமான ............. | பவித்ரமானதுமான வம்சத்தில் |
| 47 | 1 | 6 | இருதயதி | இரு யதி |
| | 2 | 5 | தரித்த | தரிசித்த |
| 77 | 6 | 2 | व्रहलाड | व्रहमांड |
| | | | व्रह वै वर्त | व्रहम वैवर्त |
| | | 3 | चा, व्राहनं | चं, व्राहमं |
| | | 4 | आगनेयं | आग्नेयं |
| 81 | 3கடைசி | | விருப்பத்தால் | மிருப்பதால் |
| 82 | 2 | 11 | गरकं | गरलं |
| 84 | கடைசி | 1 | ஸிரண்யா | ஹிரண்யா |
| 85 | கடைசி | 15 | व्रहनाणा | व्रहमनाणा |
| 86 | 4 | 4 | நடவே | நடுவே |
| 88 | | கடைசி | परपंधाम | परंधाम |
| 89 | 5 | 2 | तस्मिर्म शैद्रे | तस्मिन् रौद्रे |
| 91 | 1 | 3 | व्रहनाणमिंद्रं | व्रहमनाणा मिंद्रं |
| 92 | 2 | 8 | अहप्ययवतारेषु | अहमप्यवतारेषु |
| 94 | 1 | 8 | வாத்தில் | வாதத்தில் |
| 95 | 3 | 1 | ஆரம்பித்தான் | ஆரம்பித்தார் |
| 96 | 2 | 2 | வல்லனர் | வல்லுனர் |
| 99 | 1 | 3 | ருறுத்தது | கருத்தது |
| 99 | 3 | 10 | सर्वैरदृ | सर्वैरहमेव |
| 99 | 3 | 11 | तदवहना | तदव्रहमा |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 99 | | 11 | दृद्रो | दरूद्रो |
| 100 | 1 | 2 | दमेकं | इदमेकं |
| 100 | 1 | 2 | नाररयणः | नारायण |
| 101 | | கடைசி | கொடுத்து | கொடுத்த |
| 103 | 1 | 25 | நிதாமன | நிதான |
| | | 28 | தேவலயாதி | தேவாலயாதி |
| 104 | 1 | 1 | மிருது | விருது |
| 106 | 1 | 6 | भूयिष्ठंते | भूयिष्ठांते |
| 108 | 1 | 2 | ஸத்தத்வை | ஸத்தத்வத்தை |
| 111 | 1 | 5 | போடிகரும் | போஷகரும் |
| 117 | 2 | 24 | ஸுரேந்திரல் | ஸுரேந்திரர் |
| 121 | கடைசி | 3 | கொடியும் | நொடியும் |
| 124 | | 2கடைசி | அனுக்ரஹத்தினார் | அனுக்ரஹித்தார் |
| 125 | கடைசி | 4 | க்ருபாத் | குருபாத |
| 126(Foot-note) | | | रभिषेकतुमारभत | अभिषेकतुमारभत |
| 128 | 3 | 1 | दृभाश्च | दभाश्य |
| 128 | 3 | 8 | செல்ல | வெல்ல |
| 129 | 1 | 1 | भाजतं | भाजनां |
| 130 | 3 | 7 | பௌமகிக்கு | பௌமருக்கு |
| 130Foot note | | 2 | विद्यसु | विद्वासु |
| 130 | ,, | 4 | जक्ष्मी | लक्ष्मी |
| 138 | 1 | 16 | என்றால் | என்றார் |
| 140 | 3 | 3 | கிருதார்த்த | க்ருதார்த்தரான |
| 141 | 2 | 11 | பாடரவசன | பாடப்ரவசன |
| 142 | 2 | 8 | பூப்ரதக்ஷிணை | பூப்பிரதக்ஷிணத்திற் |
| 145 | | 2 | invoicible | invincible |
| 146 | 2 | 11 | அனுக்ரஹு | அனுக்ரஹத்தினால் |
| 151 கடைசி வரி | | | விக்ரஸம் | விக்ரஹம் |
| 157 | 1 | 5 | வ்யது | வலது |
| 160 | 2 | 9 | invinible | invincible |
| 161 | 1 | 13 | நாயகருக்கு | நாயகர் |
| 161 | 2 | 14 | ப்ரவு | ப்ரபு |
| 163 | 1 | 2 | வ்ருஷ்காதி | வ்ருக்ஷாதி |
| | ,, | 6 | அரித்த | அர்த்த |
| | 1 | 18 | ஆகமம்த்தை | ஆகமத்தை |
| | 1 | 24 | ப்ரமாண்யதா | ப்ராமாண்யத்தை |
| 164 | 1 | 2 | யாவற்றிலும் | யாவராலும் |
| 164 | 1 | 4 | தேசங்கா | தோஷசங்கா |
| 164 | 2 | 3 | ^ | செய்யப்பட்டவை என்று |
| 164 | 2 | 5 | हृष्ट | दृष्ट |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 164 | 4 | 2 | ^ | प्रत्यभिज्ञं |
| 165 | 1 | 2 | ப்ரமாணம்மே | Omit |
| 165 | 1 | 2 | ப்ரமாணம் | ப்ரமாணமே ப்ரமாணம் |
| 165 | 1 | 3 | पल्वः | पल्लवः |
| 165 | 1 | 4 | बाह्मे | बाह्यमे |
| 165 | 5 | 5 | பாயாதி | பாபாதி |
| 166 | 2 | 4 | ப்ரஸார | ப்ரஸரண |
| 167 | 1 | 1 | प्रारा | प्राग |
| 167 | 3 | 15 | இப்படி | இப்பொழுது |
| 169 | 4 | 2 | दृष्ट्वैव | दृष्टवैव |
| 170 | 1 | 3 | இன்று நம்ப முடியுமா | Omit |
| | 5 | 1 | போஷக்கான | போஷாக்கான |
| 173 | (Sanskrit) | 1 | हयवुवन् | हयवुवन् |
| | | | हास्माकं | हयस्माकं |
| | | 2 | विजितें द्रियः | विजितेंद्रियः |
| | | 4 | तिवारय | निवारय |
| | | 5 | नपिन | नेऽपिन |
| | | 6 | वैधृवं | वैधृवं |
| 177 | 1 | 7 | சூன்யா: | சூன்ய: |
| 177 | | 7 | ஸம்மந்மதன | ஸம்மந்தேன |
| 177 | | 14 | முத்கா: | முக்தா: |
| 177 | 2 | 12 | நாராயுண | நாராயன |
| 179 Foot Note | | 2 | तुक्लस्यागंध | तुलस्यागंध |
| | | 3 | विज्ञान कलुपा | विज्ञान कलया |
| 181 | 2 | 2 | விட்டிருந்தால் | விட்டிருந்ததால் |
| 181 | 3 | 10 | போலேயே | போலவே |
| 182 Foot-Note | | 2 | इतुक्ते | इत्यक्ते |
| 202 | 1 | 7 | mentral | neutral |
| 206 | 1 | 1 | என்மற | என்ற |
| 212 | 2 | 29 | மத்வேஷ | மதத்வேஷ |
| 218 | 2 | 15 | றென்று | றென்ற |
| 232 | 3 | 8 | प्रकपूरदभूः | ऋकपूरदभूः |
| 232 | 3 | 10 | रेथ्या | रथ्या, रथ्यादिभिः என்னும் ரூபம் ஸாது வாதத்தினால் டீகாசார்யர் என்று......... |
| 237 | 1 | 26 | சுயசந்தோர்ஷத்தை | சுபசந்தேசத்தை |
| 243 | 3 | 6 | காரியத்தில் | காரியத்தை |

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 275 | 2 | 20 | காப்பற்றும் | காப்பாற்றும் |
| 277 | கடைசி | 2 | सर्वा | सवा |
| 279 | 3 | 15 | புத்திம் | புத்தி |
| 279 | 6 | 1 | ன்று | என்று |
| 280 | 3 | 4 | व्रहनधर्मिक | व्रहनधर्मिक |
| 280 | 3 | 4 | जडादि | जडाति |
| 281 | 1 | 4 | ஞ் | ரு |
| 285 | 3 | 10 | प्रतिं | प्रति |
| | | 11 | रिक्तस्वे | रिक्तत्वे |
| 286 | | 14 | ஸவ | ஸ~கா |
| | கடைசி | 8 | विदधाति | विदधाति |
| 287 | | 17 | अजोहये | अजेहये |
| | கடைசி | 5 | प्रंमा | प्रमा |
| 288 | | 19 | திபுமர்த்த | தி:– புமர்த்த |
| | | கடைசி | நிந்தரா | நிந்தா |
| 290 | | 9 | सत्ययो | सत्यमे |
| 293 | 3 | 1 | प्रचा | प्रजा |
| 295 | | 7 | साध्श्यर्मकदेश | सादृश्यमेक |
| 296 | | 30 | ஸாக | ளாக |
| 298 | 1 | 4 | வியாதி वियददि | \ வியதாதி वियदादि |
| | 2 | 1 | नायर | नापर |
| 301 | 2 | 8 | उभेत्त | लभेत् |
| | கடைசி | 1 | नहय, त्रानो | नहय, त्रानू |
| | | | अनुयाचा | अंनुयाजा |
| 302 | | 20 | பஞ்சபேமீ | பஞ்சமீ |
| 303 | | 1 | परमार्थाखिय | परमार्थाखय |
| 306 | 1 | 6 | गतित्वेत | गतित्वेन |
| 310 | 5 | 6 | अधः | अंधः |
| 311 | | 6 | प्रधोनं | प्रधानं |
| 312 | 3 | 8 | सुदूरधावव | सुदूरधावन |
| 313 | 2 | 6 | मग्ति | मग्नि |
| | 2 | 12 | வாத | மான |
| 318 | 2 | 4 | जगद्व्यापरा | जगद्व्यापारा |
| | கடைசி | | மான | அபாத்யமான |
| 320 | 3 | 4 | गर्च्छन् | गच्छन् |
| | | 6 | ज्व | Sव |
| | 4 | 6 | मथाहमयं | यथाहृययं |
| 322 | 2 | 13 | आयुक्ते | आमुक्ते |
| 323 | 1 | 3 | बाधश्चेनास्ति | बाधश्चेन्नास्ति |
| 333 | 2 | 14 | பாம்பாட்டிக் | பாம்பாட்டி |
| 336 | 2 | 3 | வந்து | வந்தது |

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 339 | 1 | 3 | विव | शिव |
| 340 | 5 | 8 | नाराण | नारायण |
| 341 | 6 | 4 | निमित्रा | निमित्ता |
| | | 7 | वान | गान |
| 358 | 1 | 11 | ருரஹஸ்தர் | க்ருஹஸ்தர் |
| | 2 | 7 | ருக்ஹஸ்தர்கள் | க்ருஹஸ்தர்கள் |
| 366 | 1 | 1 | மந்த்ரச் | மந்த்ர |
| | 1 | 379 | Read this para after the next para (p.380) | |
| 381 | 1 | 7 | सिता | सीता |
| | 2 | 5 | संशंया | संशयः |
| 383 | 2 | 20 | ஆனந்தமான | அநந்தமான |
| 388 | 2 | 4 | வாக்யார்த்தத்தில்லவா | வாக்யார்த்தத்திலல்லவா |
| 393 கடைசி | | 3 | डिंडिंपं | डिंडिंबं |
| 394 | | 9 | र्शखं | शंखं |
| 394 | | 15 | line omitted | ज्वाला केशंत्रिनेत्रं ज्वलदनलनिभंहार केयूर भूषं। |
| 6வதுstanza 1st line | | | मथतं | मथनं |
| Stanza 7 வரி 3 | | | पिंगकाक्षं | पिंगलाक्षं |
| Stanza 9 வரி 2 | | | पहज्ज्वर | महज्ज्वरं |
| 398 Stanza 5 | | 3 | ஸ்வபர்ஸும் | ஸ்வபாஹும் |
| 400 | | வரி 8 | $ப_2$ Bha | Omit |
| 402 | 2 | 19 | ஸபரஸ்வதி | ஸரஸ்வதி |
| 426 | 2 | 7 | ப்ராஸதம் | ப்ரஸாதம் |
| 438 | 2 | 2 | பாரங்கள்தம் | பாரங்கதம் |
| 448 | கடைசி வரி | | க்ரஹப்ருேவே | க்ருஹப்ரவேசாங்க |
| 464 | 2 | 3 | சக்தியுற்று | சக்தியற்று |
| 465 | 2 | 7 | றேன் | Omit றேன் |
| 468 | 2 | 3 | நிறை | நிலை |
| 469 | 2கடைசி வரி | | ப்திய | பதிய |
| 471 | 2 | 4 | எதிதில்லை | எளிதில்லை |
| 473 | 1 | 4 | பட்ட | பட்டு |
| last para | | 2 | Controventing | Controverting |
| 474Foot Note | | 1 | वमक्षे | समक्षे |
| | | 2 | सहाजायाः | सहयजायाः |
| கடைசி வரி | | | क्षोणिपाल | क्षाणिपद |
| 476Foot Note | | 2 | सम्यमिचणेः | सम्यमियणेः |
| 478 | 2 | 7 | विजयींद्रहमरिदर्श | विजयींद्रमहिमादर्श |
| | | 8 | शतापरा | शतापराधसूत्र |
| | | 11 | मजूंषा | मंजूषा |
| 479Foot Note | | 2 | गाद्यं | गद्यं |
| | | 3 | निर्माप्य | निर्माण |

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| | | 3 | फ्दर्शन | प्रदर्शन |
| 480 Foot Note | | 9 | संयगाधात्स | संयगाद्यात् |
| | | கடைசி | मूर्धनः | मूर्ध्नः |
| 481 Foot Note | | | புஷஹா | ஷஹா |
| 485 | 3 | 6 | விஷமப் | விஷப் |
| 487 | 1 | 5 | விஷம | விஷப் |
| 489 | | 4 | ஒரு தவறு என்பதை | கைவிட்டுப் போய்விட்டது என்று படிக்கவும் |
| 489 | | 11 | அமரு | மரு |

489 Foot Note 11 வரியில் தாத்தாவுமான ஸ்ரீ ராமராஜன் என்று படிக்கவும்:

489 2 வது பாரா கடைசியில் பாத்திரனானான். (என்பதுடன்) மற்றும் அன்றே மற்றொரு தாமிர சாஸனத்தின் மூலம் 1. தொளலி, 2. கம்மாரகட்டெ, 3. சிக்கமொரட என்னும் 3 கிராமங்களை (Mysore Archeological report, 1944, P. 100, Inscription No.24) தானம் செய்து ஸ்ரீயவர்களின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரனானான்.

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 490 | 2 | 12 | Archacological | Archeological |
| 492 | 1 | 3 | பெருகிறது | பெறுகிறது |
| 496 | 3 | 4 | விசியரை | சிஷ்யரை |
| 497 | 3 | 17 | அந்தி திவ்ய விக்ரஹனாரை | அப்படியே அந்த திவ்ய விக்ரஹனான ரமாலிங்கித |
| 502 | 3 | 10 | ஸ்தந்திர | ஸ்வதந்திர |
| 503 | 2 | 12 | இதோமது | இதே நமது |
| 504 | 2 | 2 | விசியனும் | சிஷ்யனும் |
| 504 | 3 | 6 | ஸுரேந்திர | ஸுதீந்திர |
| 504 | 3 | 10 | ஸுரேந்திர | ஸுதீந்திர |
| 507 | 1 | 3 | मुह्यप्ति | मुह्यति |
| 508 | 1 | 16 | ஸ்ரீ ஸுரேந்திரரை | ஸ்ரீ ஸுதீந்திரரை |
| 512 | 3 | 28 | पदेस्सूत्र्यानु | पदेस्सूत्रानु |
| 513 | 1 | 1 | प्रति | प्रीति |
| 513 | 1 | 8 | स चममयः | च मम प्रियः |
| 513 | 1 | 20 | வேண்டும் | வேண்டும் என்று |
| 513 | 1 | 32 | உத்ததம | உத்தம |
| 514 | 1 | 6 | पराहचर्या | पराहृयार्था |
| | | | काषठा | काष्ठा |
| 514 | 2 | 11 | सर्वोत्र | सर्वोत्त |
| 515 | 1 | 6 | मुच्छित | मुच्छूत |
| 516 | 2 | 17 | விளைவவி | விளைவி |
| 518 | 3 | 6 | ஸ்ரீயவரிந்து | ஸ்ரீயவரிருந்த |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/details/@muthulakshmi_academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

https://archive.org/ @muthulakshmi_academy

''ஸ்ரீராகவேந்த்ர குருவம்ச பூஷண-வித்யாதி ராஜ' ிருதுகள் பெற்ற ஸ்ரீ ராஜா S. குருராஜாசார்யர் ஸ்ரீராகவேந்த்ர ஸ்ாமிகளின் பூர்வாச்ரம வம்சத்தில் தோன்றிய பாக்சாலிகளாவார். ஸ்ரீ மத்வாசார்யரின் மஹாஸதானாதிபதிராயிருந்த ஸ்ரீசுயமீந்திர தீர்த்தரின் பூர்வாச்ரம் இரண்டாவது புத்திரர். ஆசார்யர் ந்யாய-வேதாந்த-ஸாஹித்யம் முதலிய சாஸ்திர பாரங்கதர், உத்தமமான கவிஞர், நூலாசிரியர் மற்றும் சசொற்பொழிவாளர், சமஸ்க்ருதம், கன்னடம் மொழிகளில் இவர் 30-35 நூல்களை இயற்றி அவை எல்லோருடைய போற்றுதலையும் பெற்றுள்ளன. 1945-ல் இவர் ''ஸ்ரீபரிமள ஸம்சோதன மற்றும் பிரசுர மந்திரம்' என்னும் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து புராதன சாஸ்திர விஷயமான நூல்களை ஆராய்ச்சி, பிரசுரம், அச்சிட்டு வெளியிடல் முதலியவைகளில் ஈடுபட்டு இதுவரையில் 85-90 சமஸ்கிருத- கன்னட நூல்கள் வெளியிட்டுள்ளார். 34 வருடங்களாக ''பரிமள'' என்னும் கலாச்சாரக் கன்னட மாதப்பத்திரிகை பிரசுரித்து பரத நாட்டின் தத்வம், தர்மம், கலாச்சாரம் ஸ்ரீகுருராஜரின் மகிமை, ஸம்ஸ்கிருத, கன்னட, மொழி பிரசாரம் செய்து வருகின்றார்.

ஆசார்யரின் பாண்டித்யம் முதலயிவைகளினால் திருப்தியடைந்துள்ள அநேக மடங்கள், கல்வி, தார்மீக, கலாச்சார நிறுவனங்கள் இவருக்கு அநேக வித்வத் கௌரவங்கள் அளித்து கௌரவப் படுத்தியுள்ளனர். மத்திய, கர்நாடக ராஜ்ய அரசினர் ஸ்ரீகுருராஜாசார்யரை உத்தம பண்டிதரென ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவர் ''கமலேச'' என்னும் நாமாங்கிதத்துடன் இயற்றியுள்ள அநேக கன்னட ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள் ஜனரஞ்சகமாய் த்க்ஷிண பாரதத்தின் பிரஸித்திபெற்ற பாடக வித்வான்கள், விதுஷிகள் பாடிப் பல பேர்களை மகிழ்வித்துள்ளனர். இவருடைய அநேக க்ருதிகள் டேப் ரிகார்டு செய்யப்பட்டு எவ்வளவோ பேர்களை மகிழ்வித்துள்ளன.

ஸ்ரீராஜா குருராஜாசாரியார்யரின் பாண்டித்யம், நூலியற்றும் திறமைக்கு இந்த ''அஜய்ய விஜயீந்திரர்'' மற்றும் ''கலியுக கல்பதரு'' கந்தரங்கள் நம் கண்முன் சாக்ஷியாக விளங்குகின்றன.

*Published by :*

*Sanchalak :*

**SRI SUYAMI RAGHAVENDRA RESEARCH CENTRE**

**Nanjangud - Bangalore. Ph: 9945348633**

CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy